அமுத சுரபி

1992

51-1

பொருளடக்கம்

Supplement to Amudhasurabi Nov. '92 Issue



அமுதசுரபி


தீபாவளி மலர் '92

அமுதசுரபி 45 ஆவது தீபாவளி மலர்

விலை ரூ. 35/-

நவம்பர் 1992 இதழின்
சிறப்பு இணைப்பாக வெளிவருகிறது.

எங்கள் தமிழ் மொழி
எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
—பாரதியார்.



வண்ணத்தில்....

ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன். பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா. மலர் ஆஃப்செட் அமைப்பு : சிவகுமார். கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன் எம்.ஏ.பி.எல்.ஐ.ஆர்.டி.எஸ்.

மலரை அழகுபடுத்திய ஓவியர்கள் : அமரர் 'சில்பி', கோபுலு, ஸுபா, வினு, மாயா, ஜி.கே.மூர்த்தி, உமாபதி, மாருதி, ராமு ஜெயராஜ், மணியன் செல்வன், அரஸ், ஸி.ஏ. ராமச்சந்திரன், விகு, சுதர்ஸன், சிவகுமார், உதய், குமார், பி.எம்.ரோஸ், ஸ்கார்ப்பியோ, கலைமதி, கவி

சென்னையில் உள்ள ஆர்.ஜே.பிராசஸ் ஆப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் : ஆர். ஜனார்த்தனன். ஸ்ரீராம் டிரஸ்ட் சார்பில் வெளியிட்டவர் : ஏ.வி.எஸ். ராஜா. நிர்வாக அலுவலகம் : 145, லிங்கிச் செட்டி தெரு, த.பை.எண். 5043, சென்னை - 600 001, தொலைபேசி எண் : 5228545





போட்டோ : பாணால் வி. ராஜாராம்













அமுதசுரபிதீபாவளிமலர்'92 தவக்கனல் சுடர்விடும் குரு போட்டோ : யோகா



ஓவியர் அமரர் சில்பி　　காஞ்சி காமாட்சி　　அமுதசுரபி தீபாவளி மலர் '92

கீதை உபதேசித்த கண்ணபிரான்



ஜகத்குரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

பகவான் ஸ்ரீமன் நாராயணன் இந்த உலகை காக்கும் கடவுளாக இந்துமத நூல்கள் கூறுகின்றன. அதனால் தேவலோகம் முதல் பூலோகம் வரை உள்ள ஜீவராசி முதல் தேவர்கள்வரை கஷ்டம் துன்பம் வரும்போது ஸ்ரீமன் நாராயணன் அவதாரம் எடுத்து அனைவரையும் காப்பாற்றுகிறார். இப்படி ஓர் அவதாரத்தில் பூமாதேவிக்கு மகனாகப் பிறந்தவன் நரகன். பகவானிடமிருந்து பிறந்தாலும் அவனுடைய செய்கைகள் எல்லாம் தேவதைகளுக்கும் பூலோகத்திலுள்ள அரசர்களுக்கும், மக்களுக்கும் துன்பம் கொடுக்கக்கூடிய வகையிலே அமைந்துவிட்டன. துன்பத்தைக் கொடுப்பவன் தன் மகனாக இருந்தாலும் அனைவரையும் காக்கும் கடமை கொண்ட பகவான் அவன் செய்த தவறுகளை மாத்திரம் எண்ணி அவனுக்கு சிக்ஷை அளித்தார். ஆனால் மரணத் தருவாயில் நரகாசுரனுக்கும் நல்ல ஞானம் ஏற்பட்டது. அவனுடைய தாயாரான பூமாதேவியும்கூட இருந்தாள். அவ்விருவருடைய ப்ரார்த்தனையின் பேரில் மனித வாழ்வில் அறியாமை விலகுவதற்கும் ஞானஒளி பெறுவதற்கும் காரணமாக தீப +அவளி = தீபாவளி புண்ய திருநாளாக அமைந்தது.

ஞானத்தைப் பெற்றவர்கள் அம்ருதநிலையை (அமுத நிலையை) அடைவார்கள். இந்த அம்ருதசுரபி தீபாவளி மலர் மூலமாக மனதிலே உள்ள அறியாமை அகன்று, வெளி இருளை அகற்றும் தீபாவளி அன்று தத்வஞானத்தை கீதையின் மூலம் உபதேசித்த கண்ணபிரானைப் ப்ரார்த்தித்து அருளைப் பெறுவோமாக.

'நாராயணஸ்ம்ருதி'

எழுத்தாளர்

சமூகத்தின் அங்கமாக இருப்பதால், அனைவரும் செய்யவேண்டிய கடமைகளுண்டு. அவற்றிற்கு மட்டும் உரிமையுள்ளவர் சமூகத்தின் உறுப்பினராவார். பெரும்பான்மையானவர் பெற்ற உரிமை இது.

சமூகம் பல நிலைகளில் உள்ளது. அதில் சிகர மான பகுதியில் அதன் தலைவர்களும், தொழில் அதிபர்களும், அறிஞர்களும், நீதிமான்களும், ஆன்மீக வாழ்வை மேற்கொண்டவர்களும், பேச்சாளர்களும், எழுத்தாளர்களும், சிந்தனையுடையவர்களும் உள்ள னர்.

அவர்களுள் எழுத்தாளர்கள் ஒரு பகுதி. பத்திரிகா சிரியர்களிலிருந்து, கதை எழுதுபவர்கள், பேராசிரி யர்கள், கட்டுரை ஆசிரியர்கள், புத்தகம் வெளியிட் டவர், பாட புத்தகம் எழுதியவர், இலக்கிய எழுத் தாளர், விஞ்ஞான எழுத்தாளர், புதிய கருத்தை உலகுக்குத் தன் எழுத்து மூலமாக வழங்குபவர், போன்ற பலவகை எழுத்தாளர்களுண்டு.

சமூகத்தின் சிகரத்தை எட்டிய அனைவரும் பிறப் பால் அத்தகுதி பெற்றவர் என்ற எண்ணம் நம் நாட் டிலும், உலகெங்கும் பரவியுள்ள கருத்து. அக்கருத்து பலம் இழந்து வருகிறது. சொந்த முயற்சியாலோ, அல்லது பயிற்சியாலோ அவர்களை உற்பத்தி செய்ய லாம் என்பது அன்னையின் கருத்து.

ஒரு நிமிஷமாவது பாட வேண்டும், ஒரு அடியை யாவது பாடிப் பார்க்க வேண்டும் என்ற உந்தல் இல்லாதவரில்லை என்று பாடகர்களிடையே ஒரு கருத்துண்டு. ஏதோ ஒரு சிறு அளவில் அதே கருத்தை எல்லாத் திறமைக்கும் சொல்லலாம்.

ஒருவருக்கு ஓரளவு எழுதும் திறமையிருந்தால் அதை வளர்த்து அவரை ஒரு நல்ல எழுத்தாளராக உருவாக்க முடியும். ஆர்வம் இருந்தால் அத்திறமை யையும் உற்பத்தி செய்ய முடியும். முழு ஆர்வமும் போதுமான திறமையும் (Potential) வித்தாக உள்ள வரை நல்ல் எழுத்தாளராக உருவாக்க முடியும் என்ற கருத்துக்குரிய விபரங்களை இங்கு எழுதுகிறேன்.

அடிப்படையில் தன் மனத்திலுள்ள கருத்தைத் தெளிவாகப் பிறரிடம் சொல்லும் திறமை அனை வருக்கும் இருப்பதில்லை. அதற்குரிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டால், வேர்த்து விறுவிறுத்துப் போகும். அதையே எழுத வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டு விட்டால் அதை ஒரு தண்டனையாக நினைப்பவர் பலருண்டு. சர்க்காரில் உயர் அதிகாரியாக இருந்தவ ருக்கு ஒரு பக்கம் கடிதம் எழுதத் தயக்கம். இரண்டு முறை எழுதிப்பார்த்துப் பிறகே எழுதுகிறார். அவர் பெற்ற பட்டம் உயர்ந்தது, வகித்த அதிகாரம் பெரி யது. என்றாலும் எழுத்து அவருக்குச் சிம்ம சொப்ப னம். இது விதி விலக்கல்ல. பெரும்பான்மையான வரிடம் இதுவே விதி.

முக்கியமான நேரம் வந்துவிட்டால், எழுத வேண் டிய நிர்ப்பந்தம் உணர்ச்சிவசப்பட்ட நேரத்தில் ஏற்பட்டு விட்டால், இதுபோன்ற சாதாரண மனிதருக்கு எழுத்துத்திறமை சிறப்பாகப் புறப்பட்டு ஆச்சரியப் படுத்துவதுண்டு. அரசியல் தலைவன் சதிக்குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனையை எதிர்பார்த்து ஜெயிலிலிருக்கின்றான். படிப்பறிவில்லாத அவன் தங்கை எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி உயர்ந்த இலக்கியமாக இருந்ததை அவன் கண்டு திகைத்தான்.

ஓர் உலகறிந்த ஸ்தாபனத்தில் இரண்டாம் நிலை யில் இருக்கும் இருவர் ஸ்தாபனத்தின் செல்வாக்கை தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதில் போட்டி யிடுகின்ற சமயம். தலைவர் அலுவலகத்தில் எந்தப் பதவியும் இன்றி எல்லாக் காரியங்களையும் தானே செய்பவர் அதில் ஒருவர். அவர் வெளியூர் சென்றார். அங்கு நல்ல வரவேற்பு. வரவேற்றவர்களுக்கு ஸ்தா பன விஷயங்கள் தெரியவில்லை என்று தெரிந்ததும், தன்னை ஸ்தாபனத்தின் தலைவர் என்றே அவர் சொல்லிவிட்டார். தலைவரே வந்திருக்கின்றார் என்ற வுடன், முக்கிய பத்திரிகை நிருபரை அழைத்தார்கள். பேட்டி ஏற்பாடு செய்தனர். ஸ்தாபனத்தைப் பற்றிய முக்கிய கேள்விகளைக் கேட்டார் நிருபர். சரளமாகப் பதில் சொல்லிவிட்டார். ஸ்தாபனத் தலைவரின் பேரில் பேட்டியிருப்பதால், பத்திரிகையில் பெரிய அளவில் போட்டு விட்டார்கள்.

அவருடைய எதிரிக்குத் தாய்மொழியே எழுத வராது. ஆங்கிலம் அதைவிடச் சிரமம். எதிரியின்

'கர்மயோகி'

பொய்யை மறுத்தால் எதிர்ப்பு, விரசமாகும். மறுக்கா விட்டால், தான் கட்டிக் கொண்டிருக்கும் சாம்ராஜ்யத் திற்கு ஆபத்து. பத்திரிகைக்கு மறுப்பு எழுத வேண்டும். கார சாரமாக இருக்கக் கூடாது. உண்மை வெளிவர வேண்டும். தன் பெயர் வரக்கூடாது. போட்டியை வெளிப்படையாக்கக் கூடாது? என்ற மனப் போராட்டம் மிகுந்து அவர் அப் பத்திரிகைக்கு எழுதிய ஆங்கிலக் கடிதத்தைப் படித்தவரெல்லாம் விஷயத்தைப் பற்றியே கவலைப்படவில்லை. "இவ ரால் இவ்வளவு நிதானமாக உயர்வாக ஆங்கிலம் எப்படி எழுத முடிந்தது?" என்று மட்டும் கேட்டனர்.

சூழ்நிலையின் நிர்ப்பந்தம் உணர்ச்சிக்கு எழுத்து வடிவம் கொடுத்து எழுத்தாளரை உற்பத்தி செய்யும்.



அதுபோன்ற சூழ்நிலை நாட்டில் ஏற்பட்ட நேரம் ஏராளமான எழுத்தாளர்கள் உற்பத்தியாவார்கள். இன்று நம் நாடு அதுபோன்ற நிலையிலுள்ளது. எழுத்துத்திறமை வித்தாக உள்ளவர்கள் எழுத முயன்றால் எழுத்தாளர்களாக மாறுவார்கள்.

ஒருதலைமுறையில் கல்வி பரவினால், அடுத்த தலைமுறையில் அதிகமான அளவு சுதந்திரத்தைச் சமூகம் நாடும் என்பது கொள்கை. ஒரு சமூகம் நீண்ட நாளாகத் தான்பெற்ற உயர்ந்த பண்பை (Culture) பேணி வளர்த்தால், இலக்கிய மறுமலர்ச்சி செய்யுள் வடிவத்தில் எழும். விவசாய அபிவிருத்தியால் உபரி வருமானம் சமூகத்தில் சேகரமானால், அடுத்த தலைமுறையில் தொழில் வளம் ஏற்படும். தொழில் அளவுகடந்து பரவுதலாலேயோ, அல்லது எந்தக் காரணத்தாலோ சமூகம் வளர்ந்து விரிவடைந்தால் இலக்கியம் உரைநடையாக உற்பத்தியாகும் என்பது சமூக வளர்ச்சித் தத்துவம்.

தொழில் வளர்ச்சியாலும், கல்வி அபிவிருத்தியாவதாலும், பிறநாட்டுத் தொடர்பாலும், வளமை பெருகுவதாலும், சுதந்திர உணர்வு வளர்வதாலும், நம் நாட்டில் சமூகம் விரைந்து வளர்ந்து, சிறந்து பரவுகின்றது. இது எழுத்தாளர்கள் ஆயிரமாயிரமாக உற்பத்தியாகும் தருணம். சமூகத்தின் இலக்கிய இலட்சியம் ஏற்படும் நேரம். அதுவும் எழுத்துத் திறமை ஓரளவு உள்ளவர் எழுத முயன்றால் அது பலிக்கும் நேரம். நாட்டில் புதிய விதமான பத்திரிகைகள் ஏற்பட்டுள்ளன. புதிய மேடைப் பேச்சு பாணி இருப்பது, முப்பது வருஷமாக உருவாகியிருக்கிறது. எல்லா வகையான எழுத்திலும், புதிய நடை தன்னை உற்பத்தி செய்ய முயல்கிறது. புத்தகங்கள் அபரிமிதமாக வெளிவருகின்றன. கருத்துகளும், சொற்களும் உற்பத்தியாகும் நேரம் இது.

கடந்த பத்து ஆண்டுகளில் பிரபலமான எழுத்தாளர்களின் சரித்திரம் நான் சொல்வதை நிரூபிக்கும். நாம் பிறப்பில் எழுத்துத் திறமை பெற்றில்லாவிட்டால் எழுத வராது என்ற எண்ணம் பலருக்குத் தடையாக இருக்கும். *A writer is born, not made*, எழுத்தாளனை உற்பத்தி செய்ய முடியாது. பிறப்பில் அமைய வேண்டும் என்ற பழைய கருத்து உண்மையில்லை என்று இன்றுள்ள பல எழுத்தாளர்களின் வாழ்வை ஆராய்ந்தால் விளங்கும். அத்துடன் பிறப்புரிமையால்தான் வர வேண்டும் என்பது இராஜவம்சத்தின் உரிமை. அது உலகை விட்டுப் போய் நூறு, இருநூறு ஆண்டுகளாகி விட்டது. அதன் சாயலாகச் சங்கீதம், விளையாட்டு, தொழில், விஞ்ஞானம் பிறப்போடு வருவது என்பதை உலகம் இல்லை என்று ஆயிரக்கணக்கான நபர்களுடைய வாழ்வில் நிரூபித்து விட்டது. இன்று உலகில் அது ஒரு மூடநம்பிக்கையாக இருக்கிறது. முதலில் எழுத்தாளராக விரும்புபவர் அந் நம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டும்.

மனிதனுக்குத் திறமை தெளிவு பெற (Surface endowments) மேலெழுந்த வாரியான சமூக சந்தர்ப்பங்களை முன்பு சொன்னேன். ஆழ்ந்த நிலையில் உள்ளவையுண்டு. ஜெர்மனி தத்துவத்திற்குப் பெயர் போன நாடு. ரோமாபுரி கிருஸ்துவ மதத்தின் அஸ்திவாரம். கிரீஸ் உலக நாகரீகம் உற்பத்தியான இடம். ஸ்பெயின் சென்ற நூற்றாண்டில் பெரிய சாம்ராஜ்

யத்தை ஏற்படுத்திப் பெரும் செல்வம் பெற்ற நாடு. இந்த நாடுகளில் இலக்கியம் இந்த நூற்றாண்டில் தழைப்பதற்கு அங்குள்ள மக்களின் மனதில் ஆழத்தில் தெய்வ வழிபாடு, செல்வ வளம், உயர்ந்த இலட்சியங்கள், சாம்ராஜ்யப் பெருமை இருப்பது காரணம்.

இந்தியா ஆன்மீகம் வளர்ந்த நாடு. இந்த நாட்டு ரிஷிகளும், முனிவர்களும், மனித உடலைத் தாங்கி நடமாடியதால் இன்று நம்முடலில் ஆன்மீக ஒளி நிறைந்துள்ளது என்கிறார் அன்னை. சம்ஸ்கிருதம் ஆன்மீக உண்மைகளை வெளிப்படுத்தும் அற்புதமான கருவி என்கிறார் அன்னை. ஆழ்வார் பாசுரங்களைப் பகவான் மொழிபெயர்த்தபொழுது (The Genius of Tamil) தமிழ் மொழியின் இலக்கிய நயஉயர்வை அடுத்த மொழியில் பெயர்க்க முடியாது என்கிறார். பழம் பெரும் பண்பு, சிறப்பு செறிந்த மொழியின் பாரம்பரியம், ஆன்மீக ஒளி நயம், சாம்ராஜ்ய பரம்பரை நமக்குண்டு என்பதால், அவற்றை நாம் முக்கியமாகக் கருதி அவற்றை நம்முள்ளிருந்து வெளிக்கொணர முயன்றால், முயல்பவருக்குக் கிடைப்பது இலக்கியப் புதையல். எழுத்தாளராக முயலும் அவர் வெற்றி பெறுவார் என்பது திண்ணம்.

இது நம் நாட்டின் பெருமை. மேலை நாடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் நாட்டில் அன்றாட வழக்கில் பொய் மலிந்துள்ளது. மலிந்துள்ள பொய்யை அறவே விலக்க முன்வருபவர் வாழ்வில் நாட்டின் பழம்பெரும் புதையலும், இன்றைய சிறப்பும் இணைந்து அவர் உள்ள துறையில் அவரை அளவுகடந்து உயர்த்தும். எழுத்தாளனாக வேண்டும் என்பது ஒரு குறிப்பிட்ட இலக்கு. அதனால் ஒரு சிறிய இலட்சியம். அவர் வாழ்வில் பெரிய இலட்சியமானாலும், நாட்டின் சூழ் நிலையில் இது சிறியது. எனவே அவருக்கு நிச்சயம் கிட்டும்.

மேலும் நாம் கருத வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. இது பூரண உண்மையாகாது. ஆனால், ஒரு முக்கிய உண்மை அதில் பொதிந்துள்ளது. சென்ற நூற்றாண்டில் முதன்மையாக இருந்தவர்களை விட, இந்த நூற்றாண்டில் முதன்மை பெற விரும்புகிறவர்களுக்கு அதிக வெற்றி கிடைக்கும் என்பதே அக்கூற்று. ஐரோப்பா முழுவதும் 19ஆம் நூற்றாண்டில் எல்லோரும் ஏற்றுக்கொண்ட கருத்துப்படி ஒருவர் எந்தத் துறையில் சிறப்படைய வேண்டுமானாலும், அவர் அரச குடும்பத்தையோ அல்லது உயர்ந்த குடும்பங்களையோ சார்ந்தவராக இருக்க வேண்டும். இந்த எண்ணம் பரவலாக இருந்ததால், மற்றவர்கள் சிறப்பு என்பது நமக்கில்லை என்று ஒதுங்கினார். இந்த நூற்றாண்டில் அது மாறியது. தலைகீழாக மாறியது. இந்த நூற்றாண்டில் விஞ்ஞானம், சங்கீதம், தொழில் நுணுக்கம், பேச்சு, எழுத்து போன்றவற்றில் சிறந்து விளங்கிய ஐயாயிரம், ஆறாயிரம் பேர்களில் உயர் குடும்பத்தைச் சோந்தவர்கள் வெகு சிலரே. சதவீத கணக்காக எடுக்க முடியாது. மேலும் சொல்லப் போனால் ராஜ வம்சங்கள் நிறைந்த ஐரோப்பாவை விட்டு இப் பெருமைகள் எளிய மனிதர்கள் நிறைந்த மற்ற நாடுகளுக்குப் பெரும்பாலும் போய்விட்டது.

ஒரு காலத்தில் உயர்ந்தவர்கள், உண்மையுடையவர்களாக இருந்தால், அவர்களுடைய உயர்வு தோற்றத்தாலல்லாது ஜீவனுள்ள உயர்வாக இருந்தால், அது

உலகை வெல்வோம்

பால. நடராஜன்

ஒன்றுக்கு இரண்டாக மொழியைக் கற்போம்
ஓயாமல் அதைநன்றாய் படித்துக் கற்போம்
சென்றேநாம் பன்னாட்டுக் கலைகள் யாவும்
சேர்த்தேநாம் கொண்டிங்குக் குவித்தே நிற்போம்.

அன்றேநம் பாரதியும் அழகாய்ச் சொன்னான்
அந்தச்சொல் மறவாமல் துணிந்து நிற்போம்
என்றென்றும் மகிழ்வாய்நாம் இருந்தே வாழ
எளிதாக அச்செயலை ஏற்றுச் சிறப்போம்.

ஜாதிகள் ஒழிப்போம்! சண்டைகள் புரியோம்!
சமத்துவம் காண்போம்! சரித்திரம் படைப்போம்!
பாதியில் வந்த ஜாதியை மதியோம்!
பாரதம் சிறக்கப் பணிகளைச் செய்வோம்!

அடுத்த தலைமுறையிலும், நூற்றாண்டிலும் அதிகமாகச் சிறந்து விளங்கும். நடைமுறையில் வீரன் ஒருவன் அரசனானால், அவனது சந்ததியில் வீரமில்லாதவர்கள் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பார்கள். அதனால் தோற்றம் முன்னிற்கும். நாட்டின் அரசியல் சூழ்நிலை மாறியவுடன் தோற்றம் கரைந்து மறைந்துவிடும்.

சென்ற நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கியவர்கள் இந்த நாட்டில், இன்று முதன்மையாக இருக்க முடியாது. அவர்களுக்குப் பயன்பட்ட அன்றைய தோற்றம், இன்று தோல்வியைக் கொடுக்கும். அன்று பின்தங்கியவர்கள், இன்று முன்னுக்கு வர முயன்றால், இவர்களுக்குப் பழைய தோற்றம் தடையாக இருக்காது. புதிய சூழ்நிலை சாதகமாக இருக்கும். ஆர்வம் உள்ளவர்க்கு அன்று சமூகம் எதிரியாக இருந்தது. இன்று ஆர்வமுள்ளவரைச் சமூகம் ஆதரிக்கும். அவர்கள் மனத்தில் உண்மையிருந்தால் அதிகப் பலன் கிடைக்கும். தோற்றத்தை நாடாதவர்க்கு பலன் அதிகம். அன்று பின்தங்கியவர்க்கு இன்று பலன் அதிகம். மனத்தின் ஆழத்தில் தெய்வபக்தியுள்ளவர்க்குப் பலன் ஏராளம்.

ஓரளவு எழுத்துத் திறமை வித்தாக உள்ள ஒருவர் முழுஆர்வம் உடையவராக இருந்து, நாட்டிலுள்ள இன்றைய சூழ்நிலை சாதகமாக இருப்பதை உணர்ந்து, மனத்தைத் தோற்றத்தில் செலுத்தாமல், உண்மையான திறமையை வளர்க்க விரும்பினால், அவரது நிலை, சமூகச் சூழ்நிலை, நாட்டுக்குத் தேவையான எதிர்கால நடப்பு, இன்றைய சமூக நடைமுறைகள் அனைத்தும் அவருக்குப் பேருதவியாக இருக்கும்.

அவரே அன்னை பக்தரானால், அவர் இலட்சியம் அளவுகடந்து அடுத்த உயர்ந்த நிலையில் நாட்டின் உச்சகட்டத்திலாவது அல்லது நாடு கடந்த அளவிலாவது தவறாது பலிக்கும்.

எழுத்து என்பது அடிப்படையில் ஒரு கலை. தனிப்பட்ட மனிதனுக்குத் திறமையாகத் தோன்றும் எழுத்து, சமூகத்திற்கு ஒரு கருவி. ரோடு என்பது நமக்குச் சௌகரியம் தருவது. சமூகத்தில் ரோடு முதற் காரணமாக ராணுவ நடமாட்டத்திற்காகவும், அடுத்தபடியாக நிர்வாகத்திற்காகவும், வணிகத்திற்காகவும் பயன்படும் கருவி, ரோடில்லாமல் சர்க்கார் இல்லை. ரோடு ஜடமான கருவி. எழுத்து அறிவு பூர்வமான கருவி, எழுத்தில்லாமல், இன்றைய சமூகம் இல்லை. கல்வியைச் சமூகம் உலகத்திற்கு எழுத்தில்லாமல் கொடுக்க முடியாது. நிதி வழங்க முடியாது. தன் கொள்கைகளை மக்களுக்கு அறிவிக்க முடியாது.

ஆனால் எழுத்து அடிப்படையில் ஒரு கலை. தன் மனத்திலுள்ள கருத்தை எழுத்து மூலம் உலகுக்கு அறிவிக்க முயல்பவன் எழுத்தாளன். எழுத்தைக் கலையாகப் பயன்படுத்துபவர் சிலர். கருவியாகப் பயன்படுத்துபவர் அதிகம். பேராசிரியர், வக்கீல், ஆன்மீகத் தலைவர்கள், பத்திரிகை ஆசிரியர்களுக்கு எழுத்து ஒரு கருவி. கருவியாகப் பயன்படுத்துவதையும் அவர்கள் கலையாக வளர்த்துள்ளார்கள்.

கவிஞன் எழுத்தை கலைநயம் வாய்ந்த கருவியாகப் பயன்படுத்துகின்றான். உரைநடை அறிவை விளக்கம் செய்யும். காவியம் உள்ளத்தைத்திறந்து மனிதனை உயிர்ப்பிக்கும். பாரதி தான் எழுதியவற்றையெல்லாம் வசனமாக எழுதியிருந்தால், அதற்கு இவ்வளவு சக்தியிருந்திருக்காது. அழியாக் காவியமாக இன்றும் மக்கள் மனதில் தேசபக்திப் பாடல்களும், கண்ணன் பாட்டும் நிறைந்திருக்கும் காரணம், அது காவியமாக இருப்பதால்தான்.

சமீபத்தில் நோபல் பரிசு பெற்ற வில்லியம் கோல்டிங் என்பவர் கதை இன்றும் உயிருள்ள எழுத்தோவியமாகத் திகழ்கிறது என்கிறார். மக்களுக்கு ஒரு செய்தியைச் சமூகம் வழங்க கதையைவிட சிறந்த கருவியில்லை என்கிறார். ஒரு கல்யாண வீட்டில் மொட்டை மாடியில் குழந்தைகளும் பெரியவர்களும் படுத்திருந்தனர், குழந்தைகள் அமெரிக்காவிலிருந்து வந்த இளைஞனை அணுகி கதை சொல்லும்படிக் கேட்டனர். அவருக்குக் கதை தெரியாது. கதை சொல்வது கிராமிய பழக்கம் என்று கருதிக் கேலி செய்தார். ஓர் ஓரத்தில் படுத்திருந்த கிழவர் குழந்தைகளைக் கதை சொல்வதாகக் கூப்பிட்டார். குழந்தைகள் அவர் சொல்லும் கதையை கேட்கும் ஆர்வத்தைப் பார்த்த இளைஞன் சிரித்தான். எப்படி அவ்வளவு ஆர்வம் வந்தது என்றறிய தானும் கதையைக் காது கொடுத்துக் கேட்டான். தன்னையறியாமல் எழுந்து கிழவரருகே சென்று குழந்தை போல் கதை கேட்டான். அவனுக்குப் பேரார்வம் வந்துவிட்டது. கிழவருக்குத் தெரிந்த எல்லாக் கதைகளையும் சொல்லச் சொன்னான். அவர் போல் கதை சொல்பவர்களை அணுகி அநேக கதைகளைச் சேகரித்து அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் புத்தகமாக வெளியிட்டுள்ளார். கதைக்குரிய கவர்ச்சி பெரியது.

பாட்டு உணர்ச்சியை உருக்குவதுபோல் எழுத்து அறிவைத் தெளிவுபடுத்தும், கல்வி நாகரிகத்திற்குரிய கருவி என்பதுபோல் எழுத்து மனிதனை நாகரிகமடையச் செய்யும் கருவியாகும்.

அன்னை இந்தியா வந்தவுடன் (*Indians are great story tellers*) இந்தியர்கள் கதை சொல்லும் திறனைக் கண்டேன் என்றார். எழுத்தாளராக நாம் முனைவது மனத்தில் அறிவின் எழுச்சியை, கிளப்புவதாகும். அது ஜீவனின் மலர்ச்சிக்குரிய வித்து. ஓம்

விடியலும் உண்டா?

டாக்டர் ச. சவகர்லால்

தவறுகள் நியாய மாகிச்
　　சாதனை படைக்கும்; வென்ற
தவறுகள் ஊர்வ லம்போய்ச்
　　சந்தியில் முழங்கும்; நீதி
கவலையே யின்றிக் கண்ணைக்
　　கட்டியே தூங்கும்; இந்த
அவலமே நடப்பா யாகும்
　　அவனியில் விடிய லுண்டா?

வேலியே பயிரை மேயும்
　　வேதனை திகழும்; பெண்ணின்
தாலியே சுருக்காய் மாறிச்
　　சாவினை நிகழ்த்தும்; கெட்ட
காலிகள் கூட்டுச் சேர்ந்தே
　　காரியம் முடிக்கும்; நாளும்
போலிகள் வெல்லு மிந்தப்
　　பூமியில் விடிய லுண்டா?

சத்தியம் குத்துப் பட்டுச்
　　செத்திடும்; தர்ம மிங்கே
நித்தமும் வெட்டுப் பட்டு
　　நடுங்கிடும்; நேர்மை நாட்டில்
சுத்தமாய்த் துடைக்கப் பட்டுத்
　　துவண்டிடும்; நியாயம் நாளும்
கத்தியே ஒடுங்கும்; இந்தக்
　　காசினி விடிய லுண்டா?

காந்திகள் நெஞ்சைப் பாவக்
　　குண்டுகள் துளைக்கும்; வஞ்சம்
'ஏந்திகள்' நெஞ்சம் மாலை
　　ஏந்தியே சிரிக்கும்; சூழ்ச்சி
மாந்துவோர் வாழ்க்கை நாளும்
　　மகிழ்வினில் செழிக்கும்; தாயோர்
சாந்தியே இன்றி நையும்
　　சகத்தினில் விடிய லுண்டா?

அரை வயிறு

விக்கிரமன்

மணி 1.30. பகல் உணவுக்காக வழக்கம்போல் நாங்கள் கான்டீன் உணவு அறையில் கூடுவோம். விசாலமான கூடத்தில் பல மேஜைகள். ஒவ்வொரு மேஜையைச் சுற்றி ஆறு நாற்காலிகள்.

அன்றைய 'சிறப்பு' உணவு வகைகளை ஒருமுறை நோட்டம் விட்டு, 'ஸர்வரிடம்' தேவைகளைக் கூறுவோம். ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்த மானவற்றிற்கு 'ஆர்டர்' செய்வோம். ஒருவர் வடை, மற்றொருவர் நெய் தோசை, இன்னொருவர் இட்லி, நான்காவது நண்பர் பூரி மசாலா – ஐந்தாவது தயிர்வடை என்று. ஆறாவது நண்பர் பதி வழக்கம்போல் தலையை ஆட்டி விடுவார்.

அலுவலக 'ஃபைலிங்' குமாஸ்தா பதிக்குச் சம்பளம் குறைவு. தேவை அதிகம். நாள்தோறும் விதவிதமான உடை அணிந்துவரும் எங்கள் எதிரே, நாள்தோறும் தோய்த்து அணிந்து வரும் பதியிடம் அநுதாபம் உண்டு. ஆனால், பதி மிகவும் ரோசக்காரர். தன் ஏழ்மையை ஒருவரிடம் வெளிப்படுத்த மாட்டார். தேவையைத் தெரிவிக்க மாட்டார். மாதக் கடைசியில் எங்கள் பற்றாக் குறையை மற்றவர்களிடம் கடன் வாங்குவதன் மூலம் சரி செய்து கொள்வோம். இதுவரையில் பதி பத்து பைசாக்கூடக் கடன் கேட்டதில்லை.

"தினமும் தயிர் சாதம் மட்டுமே கொண்டு வருகிறீர்களே பதி, அதுவும் குழந்தை 'டிபன்பாக்ஸ்' போன்று சின்னஞ் சிறியதில். எப்படிப் போதும்?" என்று நாங்கள் கேட்டிருக்கிறோம்.

பதி சிரித்துக் கொண்டே சொல்வார் : "இது என்ன வயிறா குதிரா? காலையில் ஒன்பது மணிக்கு மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டு வருகிறேன். பன்னிரண்டு மணிக்கு அலுவலகத்தில் டீ தருகிறார்கள். ஒன்றரை மணிக்கு இந்தத் தயிர் சோறு போதாதா? அரை வயிற்றுக்கு மேல சாப்பிடக் கூடாது என்று என் அப்பா சொல்லியிருக்கிறார்."

"அப்படியென்றால் சிறு வயது முதல் அப்படித்தானா?"

"ஆமாம், பழகிவிட்டது. உடம்புக்குத் தெம்பாக இருக்கிறது. செலவும் மிச்சம்".

பதியின் அநுபவப் பேச்சைக் கேட்டு நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வோம். வயிறா குதிரா? என்ற அவர் பேச்சு எதிரொலிக்கும்... "பதி, நீங்கள் சொல்வதை நாங்கள் நம்ப முடியாது. உங்களுக்குப் போதுமான வருமானம் இல்லை. அதனால்தான் கல்யாணமும் செய்து கொள்ளவில்லை. வருமானம் போதாது. அதற்குப் பெயர் சிக்கனம் என்று சொல்லி விடாதீர்கள். அப்பா சொல்லிக் கொடுத்த பழக்கம் என்று அப்பாவை இழுக்காதீர்கள். அரை வயிறு சாப்பிட்டால்தான் ஆரோக்கியம் என்று 'நல்லுபதேசம்' வழங்காதீர்கள்" என்று நண்பர்கள் அனைவரும் அவரை ஒரு தடவை மடக்கினோம்.

அசட்டுச்சிரிப்புடன் பதி அங்கிருந்து போய்விடுவார். அவருடைய குடும்ப நிலையை அறிய ஆவல் கொண்டோம். அலுவலக வேலைக்காரர்கள், லி'ஃப்ட் மேன், ஸ்வீப்பர் என்று பலரிடம் பதியின் குடும்ப நிலையை அறிய முயன்றோம். முடியவில்லை.

நண்பர் ஒருவர் ரிடையர் ஆனார். அவருக்குப் பிரிவு உபசார விருந்துக்கு ஏற்பாடுசெய்தோம்.

பதினைந்து பேர்கள் ஒரு நீளமான மேஜையின் இருபுறமும் அமர்ந்தோம். புகழ்ப் பரணி, மாலை மரியாதை பேச்சு என்று நேரம் ஓடிக் கொண்டிருந்தது. பதினைந்து பேரும் ஆளுக்கு ஐம்பது ரூபாய் வசூலித்து அந்த விழாவை நடத்துகிறோம்.

பதியிடம் கேட்டபோது, "இது போன்ற விழாக்களில் எனக்கு நம்பிக்கை இல்லை" என்று சொல்லி நழுவப் பார்த்தார்.

ஆனால் நாங்கள் விடவில்லை. "உங்கள் பங்கை நாங்களே செலுத்தி விடுகிறோம். எங்களோடு நீங்கள் 'பார்ட்டியில்' கலந்து கொள்ள வேண்டும். உயர்தரமான மெனு. இதுவரையில் நீங்கள் ருசித்திராத ஸ்வீட்! தவறாமல் வந்து விடுங்கள்" என்றோம்.

பதி வரமாட்டார் என்றுதான் நினைத்தோம். கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு பதி வந்துவிட்டார். கையில் ஒரு பை. சரியான உணவு இல்லாததால் களையற்ற முகம். சோர்வு.

அடுத்து இருப்பவரிடம் நேரம் என்ன என்ன என்று கேட்டுக் கொண்டே இருந்தார். உதட்டளவு புகழ் மாலையை ஒவ்வொருவரும் வழங்கி சில ஜோக்குகளைச் சொல்லி சிரிக்கவைக்க முயன்று கொண்டிருந்தார்கள்.

பதி என் அருகே வந்தார். ஸார் ஏழுமணிக்குக் கட்டாயம் 'நான் ஓரிடத்தில் இருந்தாக வேண்டும். நான் புறப்படுகிறேன். எனக்கு அனுமதி கொடுங்கள்' என்றார். குரலில் பரபரப்பு குறைவு. எனக்கே அவரைப் பார்க்கப் பரிதாபமாகஇருந்தது.

"பாவம், இன்றைய விருந்தை இவர் சாப்பிட வேண்டும்என்பதற்காகத்தானே 'பார்ட்டி' செலவை நண்பர்கள் பங்கிட்டுக் கொண்டோம். சாப்பிடாமல் போகிறாரே" என்று வேதனையடைந்தோம்.

"ச....ரி..." என்று அரைமனத்துடன் சொன்னேன். ஆனால் என் நண்பர் முடியவே முடியாது எனக்கூறி விட்டார். கூட்டம் இன்னும் சிறிது நேரத்தில் முடிந்துவிடும் என்று அவர் சொன்னார்.

விருந்து தொடங்கியது. ஸ்வீட், வடை, கிச்சடி, தோசை, என்று பதி எதிரே தட்டுத்தட்டாக வந்தன.

அவர் அருகே அமர்ந்திருந்த நான் கேட்டேன் : "பதி, ஏன் இப்படி மௌனமாக உட்கார்ந்திருக்கிறீர்கள்?"

"உங்களுக்குத்தான் தெரியுமே ஸார், நான் அரை வயிற்றுக்கு மேல் சாப்பிட மாட்டேன் என்று. 'சூப்' சாப்பிட்டேன் அதுபோதும்" என்றார்.

"என்னய்யா இது, இவற்றை 'வேஸ்ட்' செய்யப் போகிறீர்களா? நீங்கள் சாப்பிடாததற்காக பில்லில் கழித்துக் கொள்ளமாட்டார்கள். உங்களுக்காக நாங்கள் பணம் கொடுத்திருக்கிறோம், தெரியுமா?" என்று சற்றுக் கோபமாகக் கூறினேன். மற்றவர் கேட்காதபடி பேசினோம்.

பதி சிரித்தார். 'என் பங்கை வீணாக்கக் கூடாது; அவ்வளவுதானே?' என்று கூறிய அவர் கண நேரத்தில் தட்டில் இருந்தவற்றைக் கைவசம் கொண்டு வந்திருந்த பையில் எடுத்துப் போட்டுக் கொண்டார். பீடாவையும், பழத்தையும் எடுத்துக் கொண்டார். எதிரே உள்ள காபியைக் குடித்தார்.

"ஏன், இந்தக் காபியையும் பையில் ஊற்றிக் கொள்வதுதானே" என்று எரிச்சலுடன் கூறினேன்.

"அரைவயிறு நிரப்ப வேண்டாமா?" முதலில் 'சூப்' கால்வயிறு. காபி கால் வயிறு "என்றார் அசட்டுச் சிரிப்புடன்.

"சீ, இவனும் ஒரு மனுஷனா? அரைவயிறு சாப்பிடுவது என்பது இருக்கட்டும். இவற்றை எல்லாம் பையில் எடுத்துப் போட்டுக் கொண்டு யாருக்குக் கொடுக்கப் போகிறார்?" என்று நான் நண்பர்களிடம் கூறினேன்.

"எனக்கு என்னவோ பதியிடம் சந்தேகமாயிருக்கிறது. ஆள் பெரிய வேஷதாரி" என்றார் மற்றொரு நண்பர்.


"எனக்குச் சந்தேகம்தான். அதனால் தான் அவரைத் தொடர்ந்து ஒருவரை அனுப்பினேன். அவர்வீடு எங்கே? அவர் உண்மை நிலை என்ன என்று அறிந்துவருமாறு சொல்லியிருக்கிறேன்" என்றேன். பதியின் முகமூடியைக் கிழித்துவிட எனக்கு ஒரு வெறி.

பதியைப் பின் தொடர்ந்துச் சென்ற நண்பர் வந்து சொன்னார் :

அவர் சொன்ன செய்தி எனக்கு வியப்பைத் தரவில்லை. நான் நினைத்து வைத்திருந்தது சரிதான்.

பதி திருவல்லிக்கேணியில் உள்ள சந்தில் ஒரு வீட்டிற்குள் சென்றார். அந்த வீட்டிற்குள் இவர் நுழைந்தவுடன் கலகலப்பான சப்தம் சிரிப்பு. தான் கொண்டுவந்திருந்த தின்பண்ட வகைகளை அவர் கொடுத்திருக்கிறார். 'இன்னொரு ஸ்வீட் வாங்கி வந்திருக்கக்கூடாதா?" என்ற குரல். ஒரு பெண்ணினுடையது.

"பார்த்தாயா, நான் நினைத்தது சரிதான். பதிக்கு இன்னொரு 'வீடு'



இரண்டு வீட்டை நிர்வகிக்க வேண்டுமென்றால் எப்படிச் செலவைச் சமாளிப்பது; அதனால் 'அரைவயிறு' நாடகம் நடத்துகிறார். 'அரைவயிறு ஆரோக்கியமானது' அப்பா சொன்னார் என்றெல்லாம் பொய் ஏன் சொல்கிறார். இவர் முகமூடியைக் கிழிக்க வேண்டும். இவர் இரட்டை வாழ்க்கையை அம்பலப் படுத்த வேண்டும்" என்று கர்ஜித்தேன்.

அன்று மாலை அவருக்குத் தெரியாமல் நாங்கள் பின் தொடர்ந்தோம்.

திருவல்லிக்கேணியில் உள்ள சந்திற்குள் பதி நுழைந்தார்.

தெருவிலே விளக்கு வெளிச்சம் இல்லை. வீட்டிலும் அப்படியே. மின்சார விளக்கு வசதியும் இல்லை. ஓ! சின்ன வீட்டை யாருக்கும் தெரியாமல் அமைத்திருக்கிறதா இந்த 'அரைவயிறு!'

கூடத்துக் கட்டிலில் ஒரு பெண் படுத்திருந்தாள். பதி அவள் அருகே போய் அமர்ந்தார். கைப் பையிலிருந்து, ஏதோ சில பொருள்களை எடுத்து வைத்தார்.

ஒரு சாத்துக்குடி, சில மாத்திரைகள். மருந்துப்பாட்டில், ரொட்டி.

"கமலம், இப்பொழுது உடம்பு எப்படி இருக்கிறது. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தை நாளைக்கு எப்படியும் வாங்கி வருகிறேன். சுந்தர் வேலைக்குப் போகிறானா! இருநூறு ரூபாய்ச் சம்பளம் போதாதுதான். ஏதோ ஒரு மருந்துச் செலவுக்காவது ஆகும். கமலம் கண்ணு தூங்கி விட்டாளா? அவ முகத்தைப் பார்க்கவாவது நாராயணன் வரமாட்டானா என்றுதான் நான் தினந்தோறும் எதிர்பார்க்கிறேன். கடவுள் கண் திறப்பார்" என்று பதி தழதழத்த குரலில் கூறினார்.

படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்த கமலம் மேல்லப் பேசினாள். நீண்ட நாள்களாக ஆஸ்துமா வியாதியால் அவள் அவதிப்படுகிறாள் என்பது அவள் மெலிந்த உடலைப் பார்த்தவுடனே தெரிந்தது.

"பதி, உங்கள் அண்ணா என்னையும் குழந்தைகளையும் நிர்க்கதியா விட்டு விட்டுச் சென்றபிறகு நீங்கள் மட்டும் காப்பாற்ற முன்வராமலிருந்தால் நானும் என் குழந்தைகளும் செத்த இடம் புல் முளைத்திருக்கும். தம்பி, என்னை உங்கள் தாயாகவே மதித்துக் காப்பாற்றி வருகிறீர்கள். அதற்காக நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளாமல் காலந்தள்ளி வருகிறீர்கள். உங்கள் உடம்பு நாளுக்கு நாள் மெலிந்து வருகிறது. கடவுள் கண்திறப்பார். சுந்தர் சம்பாதிக்கத் தொடங்கி விட்டான். விடிவு காலம் வந்து விடும்" என்று கமலம் மெல்லிய குரலில் பேசினாள். மூச்சு வாங்கியது. இரண்டு தடவை வெந்நீர் குடித்தாள்.

வெளியே நின்று கொண்டிருந்த நாங்கள் ஒருவரையொருவர் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டோம். 'அரைவயிறு' சாப்பிட்டு, அண்ணியைக் காப்பாற்றும் பதியின் உள்ளம் புரிந்தது. வெட்கித் தலை குனியாமல் வேறு என்ன செய்ய முடியும்.

பயிரே பட்டினி

கவிஞர் வீ. செ. கந்தசாமி

ஏர்உழவன் கண்ணீரைச் சிந்தி நின்றான்
ஏனய்யா பட்டினியா இன்றும் என்றேன்
கார்காத்த குடியினிலே பிறந்த ஏழை
கண்ணீரைத் துடைத்திட்டே கழறு கின்றான்

என்மக்கள் மாடுகளும் என்னைப் போலே
இன்றுவரை பட்டினியைப் பொறுத்துக் கொண்டோம்
இன்றோஎன் பயிர்பச்சை எங்களைப் போல்
எதிர்கொள்ளும் பட்டினிக்கே அழுவேன் என்றான்

"பயிருக்கே பட்டினியா , வியப்பே" என்றேன்
பதைத்தெழுந்த விவசாயி பகர லானான்
உயிர்காக்கும் பயிர்களுக்குப் போட்டு வந்த
உரவிலையை உயர்த்திவிட்டார் அதனால் இன்று

பொட்டாசு டிஏபி யூரியாவைப்
போன்றஉரம் போனஇடம் தெரிய வில்லை
எட்டாதே உரத்தின்விலை உயர்ந்த தாலே
என்னாலே உரம்போட இயல வில்லை

பட்டினியால் பயிரெல்லாம் வாட லாச்சே
பார்த்தேநான் கண்ணீரை வடிக்க லாச்சே
பட்டினியால் நானிருந்தால் பரவா யில்லை
பயிர்களுக்கும் இன்றந்த நிலைவந் தாச்சே

இத்தனைநாள் பட்டினியால் நானி ருந்தேன்
என்பதனால் நானதற்குப் பழகிப் போனேன்
சத்தளிக்கும் உரமின்றிப் பயிர்கள் வாடும்
சங்கடத்தை எங்கேபோய்ச் சொல்வே னப்பா?

கருத்தில் பூத்த மலர்கள்


★ முகத்தில் புன்னகை
அகத்தில் அன்பு
நிலைத்து நின் றால்
அனைத்தும் அடைவாய்!

★ அன்பினால் முகம் மலர்ந்து
அக மகிழ்விப்பதே
இன்புற நமக்கு
ஏற்றதோர் நல்வழி!

★ நல்லதைச் சொல்
நல்லதைச் செய்
நல்லதை நினை
நல்லதே நடக்கும்!

★ ஆண்டவன் ஒருவன்
அகத்தின் விளக்கு
அறிந்தபின் இல்லை
சுமைகள் நமக்கு!

— சீனிவீரப்பன்





பாரதி – பாரதிதாசன்

கவிக்கொண்டல் சுப்பிரமணியம்
டி. இராசதேவன்

பாரதி பாரதிதாசன் என்போர்
பாலித்த பாட்டால் உலகுய்யும்
"ஆரது?" என்போரே சற்றே நிற்பீர்
அறிவுக் கொளுத்திப் பிறகு செல்வீர்!
சீரது அவர்தம் தமிழின் தொண்டு
சிறப்பது அவர்தம் சமூகத் தொண்டு!
வாரும் வாரும் வந்துதமிழ் உண்டு
வண்டாய் மாறுக தமிழ்த்தேன் மொண்டு!

வயிற்றுக்குச் சோறிட வகை செய்தார்
வாழும் வகையினைப் பயிர் செய்தார்!
பயிற்றுக் கல்வியைத் தினம் தந்தார்
பாரே உயர்ந்திட வழிசெய்தார்!
கவிதை கொணர்ந்தார், ககனம் அளக்க
காகிதமும் மணக்கவே கவிதை யாத்தார்!
உயிர்க்கும் உணவாய் பலதும் தந்தார்
உன்னத மொழியால் உலகு ஆண்டார்!

கண் ஒளியால் உலகாளும் காமாட்சி!

வித்வான் வே. லட்சுமணன்

காஞ்சித் தலமதிலே கொலு விருக்கும் தாயே!

கருணைக் கடலே!

பத்ம பீடத்தில் அமர்ந்து ஸ்ரீ சக்ர நாயகியாய்

அருள்பாலிக்கும் தெள்ளமுதே!

வேண்டுவோர் வேண்டும் வரத் தினை

வாரி வழங்கும் கற்பகமே!

நின் திருவடி வணங்குகின் றோம்.

நீ எழுந்தருளி இருக்கும் திருத் தலம் வரலாற்றுப் புகழ் பெற்றதன் தத்துவமே நின் திருவிழிப் பார்வைதான் அல்லவோ!

அண்ட சராசரங்கள் அனைத் தும் இயங்குவது உன் கடைக்கண் நோக்கினால் அல்லவோ!

உன்னைக் காமாட்சி என்று அழைப்பதன் உட்பொருளை ஞானி யர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

க என்றால் பிரம்மா என்றும்,

அ என்றால் திருமால் என்றும்,

ம என்றால் மகேஸ்வரன் என்றும்

பொருள் கண்டு, இம்மூவரை யுமே திருக்கண்களாகக் கொண் டவள் நீ என்று அல்லவோ சொல்லுவார்கள்!

திருமூர்த்திகளையும் அட்ச மாக, கண்ணாகக் கொண்டு, நின் அடியவர்களுக்குக் கருணை புரி கின்ற, நின் பேராற்றலைப் பேசாத பக்தர்கள் உண்டோ? உணராத ஞானியர்கள் உண்டோ? நிதர்சனமாகக் கண்டு அனுபவி யாத சித்தர்கள் இந்த உலகில் உண்டோ?

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் எனப்படுகின்ற முத்தொழிலையும் செய்கின்ற மும்மூர்த்திகளையும் நின் இரு கண்ணொளியில் பிரதிபலித்து, மும்மூர்த்திகளின் ஏக மூர்த்தியாக, ஏகப் பரம் பொருளாக இந்த ஜகத்தையே ரட்சிக்கும் ஜகத்ஜனனீ அல்லவோ நீ!



ஓவியம்: அமரர் 'சில்பி'

'நகரேஷு காஞ்சி' என் பார்களே! இந்த மாபெரும் சிறப்பு இந்த மாநகருக்கு வாய்த்தது நீ தேர்ந்தெடுத்து வீற்றிருக்கும் காம கோட்டம் அங்கு அமைந்ததனால் அல்லவோ!

பிறவிப் பிணிகளை நீக்கி, அன்போடும், அருளோடும் தாய் போன்று ஞானப்பால் தனை ஊட்டி, மாயையாகிற பந்தத்தி லிருந்து விடுபடச் செய்து, முக்தி என்னும் பேரின்பத்தை வழங்கு கின்ற ஆதிபராசக்தி அல்லவோ நீ!

உலகியல் வாழ்வுக்குக்கூட, என்னென்ன செல்வம் வேண் டுமோ அத்தனையையும் வழங்கி, அன்பு மழை பொழிந்து, வந்து சரணடைவோர் அனைவரையும் வாழ்வாங்கு வாழச் செய்து, முடிவில் ஞானப் பிரகாசத்தை நெஞ்சத்தில் நிறைத்து, ஆனந்த மோன வெளிக்கு அழைத்துச் செல்லும் அற்புதமான ஆற்றல் படைத்த ஆதிநாயகி அல்லவோ நீ!

கவின்மிகு காஞ்சி மாநகரத் தில் உள்ள ஆலயங்களின் கோபு ரங்கள் அனைத்துமே நின் ஆலயத்தையே நோக்கும் வகையில் நடுநாயகமாக அமர்ந்து, எட்டுத் திக்கிலும் கருணைப் பார்வை யைச் செலுத்தி, தஞ்சமடைந்தோர் அனைவருக்கும் அபயம் அளித்து ஆறுதல் கூறி, அறம் வளர்க்கும் நாயகி அல்லவோ நீ!

நின் பொற்பாதங்களைச் சர ணடைந்தால் எப்பாவமும் தீர்ந்து விடுமே!

நின்னுடைய அருளின் தோற்ற மாக, ஆழ்ந்த பக்திக்கனியாக, ஆதி சங்கர பகவத்பாதரின் அவ தாரமாக நின் நாமத்தையே அல்லும் பகலும் ஜபித்துக் கொண்டு ஞானமும், மோனமும், சத்தியமும், தர்மமும் ஒன் றிணைந்த தியாக மூர்த்தியாக, அகில உலகமும் வழிபடுகின்ற ஞான குருவாக ஒளிர்கின்ற காஞ்சி மாமுனிவர் வாழ்ந்து கொண்டிருக்கும் வளமிக்க இந்தப் புனித காலகட்டத்திலே, சாமானி யர்களாகிய நாங்களும் வாழ்கின்ற பேற்றைத் தந்த வரப்பிரசாதி அல்லவோ நீ!

யார் எது வேண்டினாலும் கை உயர்த்தி ஆசீர்வதித்து, நின் அருளின் ஒளிக்கிரணங்களைத் தம் கரத்தின் மூலம் வீசிக் கொண்டு, ஜோதித் திருவுருவாய் ஒளி வீசும் அந்த முனிசிரேஷ்டரின் திருவுருவத்தில் நின் திருவருட் பொலிவை அல்லவா நாங்கள் காணுகின்றோம்.

மூர்த்தி, தீர்த்தம், தலம் எனப்படும் முச்சிறப்புகளுக்கும் உரிய முக்தித் தலமாம் காஞ்சியம் பதியிலே எத்தனை அருட்சக்தி களுடன் நீ எழுந்தருளியிருக்கி றாய் என்பதை எடுத்துரைக்க எழுத்துகள் போதுமோ? எண் ணங்கள் போதுமோ?

ஒளி வடிவத்திலும் வரிவடி வத்திலும் எந்த வகையிலும் பொறித்து ஒரு முடிவு காண முடியாத வகையில் எல்லை கடந்த அகண்ட ஒளிப்பிழம்பாய், நாதப் பிரும்மமாய் வீற்றிருக்கும் நின் திரு முகாரவிந்தங்களைக் கண்டும், கமல பாதங்களைச் சேவித்தும் இப்பிறவி எடுத்ததன் நோக்கத்தைப் புரிந்து கொண்டு

கனவெள்ளி கனவே!

இலந்தை சு. இராமசாமி

ஐந்தாண்டுகட்கு மேலாயிற்று சுற்றுலா
யாதும் இதுவரை போகவிலை
இந்திய நாட்டை முழுவதும் கண்டிட
எண்ணியே ஒருதிட்டம் நான் வகுத்தேன்.

திட்டத்தை நெஞ்சத்தில் ஓடவிட்டுச் சற்றே
தின்ற களைப்பிலே கண்ணயர்ந்தேன்
வெட்டிடும் மின்னல்கள் சுட்டிடும் வெண்பனி
வேந்து மலையதன் மீதிருந்தேன்.

முட்டும் பனிநதி ஓடத்திலே - ஒரு
மூத்த துருக்கர் இசைகொடுக்க
வட்டமிட்டுக் காஷ்மீர் வனப்பையெலாம் ஒரு
வண்டு தேனுண்ணுதல் போல் குடித்தேன்.

ஐந்துநதி பாயும் தீரத்திலே எழில்
அற்புதப் பொற்கோயில் சுற்றுக்குள்ளே
வந்தனை செய்தபின் சீக்கிய மக்கள்
வயிற்றுக்குச் சோறிட உண்டு வந்தேன்.

வெய்யில் அனுமதி வேண்டி நிற்க இருள்
வீங்கும் அசாமியக் காடுகளில்
கையில் ஒளிவிளக் கேந்தி நதிகளின்
காலடி ஓசை செவிமடுத்தேன்.

கட்டம் பலப்பல வட்ட வளைவுக்குள்
கங்கை நதியை வளைத்திருக்க
வட்ட நிலவு நதிக்குள் அலைந்திடும்
வாரணாசியிலே நான் குளித்தேன்

வீட்டுக்காரி தொண்டை வீணையின் மீட்டல்
விழியை அதட்டிடக் கண்விழித்தேன்
நீட்டிய செய்தித்தாள் மேயத் தொடங்கினேன்
நெஞ்சக் கனவு நொறுங்கியது.

பொற்கோயிலுள்ளே ஓர் போர்க்களமாம் யாரும்
போக முடியாதாம்; காஷ்மீரிலே
அற்பக் கடத்தல் பயங்கர வாதிகள்
ஆயிரம் ஆயிரம் ஆயிரமாம்

அன்னிய நாட்டுக்குப் போவ தெளிதாக
ஆகிவிட்ட இந்த நாளினிலே
என்னரும் இந்திய நாட்டினில் இந்தியர்
எல்லோரும் அன்னியர் ஆகிவிட்டார்

காஞ்சிபுரம் பட்டைக் கோவண மாக்கியே
கந்தலாய்க் கட்டி மகிழுகிறோம்
ஊஞ்சல் துருவினை யார் நீக்கப் போகிறார்
உத்தரம் இன்னும் உளுக்கவில்லை.

நின்னை வழிபடுவோர்க்கு நின் பார்வையால் கிடைக்க முடியாத பேரின்பம் ஏதும் உண்டோ?

அன்னையே! அனைத்துத் தெய்வங்களின் ஏகத் திருவுருவே!

எங்கள் உள்ளத்தில் என்றென்றும் நீ நிலைத்திருக்க வேண்டும் அம்மா!

எங்கள் நாவிலிருந்து நின் திருநாமம் எப்போதும் ஒலிக்க வேண்டும் அம்மா!

குறையென்று எதையும் நாங்கள் கூறத் தேவையின்றி, நித்தியமான நிறைவு எதுவோ அதை நீ வழங்க வேண்டும் அம்மா!

சத்தியத்தின் பெருவழியில் சென்று, அன்புப் பெருவெளியில் நாங்கள் பக்திச் சிறகு விரித்துப் பறக்க வேண்டும் அம்மா!

குழந்தையை ஈன்றெடுத்த தாய் குறிப்பறிந்து, குறிப்பிட்ட நேரத்தில் அந்தக் குழந்தைக்குத் தேவையானதைத் தருவதற்கு ஓடிவரும் வேகத்தைக் கண்டிருக்கிறோம் அம்மா! நீ ஓடி வரவேண்டாம்! நாங்கள் உன்னைத் தேடி வருகின்றோம். எங்களுக்கு என்ன தேவையோ அதனை நீயாகவே அறிந்து, நின் திருவுளப்படி வாரி வழங்க வேண்டும் அம்மா!

இந்தக் குழந்தைகளின் வேண்டுகோள் இது ஒன்றுதான் அம்மா!

அதற்கு உன்னுடைய கடைக்கண் பார்வை ஒன்றே போதும் தாயே!

அந்த ஓரப்பார்வையில் எங்கள் கலி ஓடிவிடும்; எங்கள் வாழ்வு மலர்ந்துவிடும். எங்கள் இல்லத்திலும் உள்ளத்திலும் தீப ஒளி வீசி நிற்கும். இது சத்தியம் அம்மா!

அணுவளவும் அசைக்க முடியாத இந்த ஆழ்ந்த நம்பிக்கையின் அடித்தளத்தில் எங்கள் வாழ்வின் இலட்சியத்தை வளரச் செய்வதும் நின் பொறுப்புதான் அம்மா!

நின் திருவடி மீண்டும் வணங்குகின்றோம்.

ஓம்

உலா வரும் சுற்றுலா

பெ. சிவகாமி

சுற்றுலா என்பது இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஒன்று அல்ல. மேலை நாடுகளில் முதல் உலகப் போருக்கு முன் இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்ந்த செல்வந்தர்கள் ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிப் பார்த்து வருவது வழக்கமாக இருந்தது. பெரும்பாலும் பெருமைக்கும், பகட்டுக்கும் மேற்கத்திய நாட்டுச் செல்வந்தர்கள் இத்தகைய ஆடம்பரப் பயணங்களை மேற்கொண்டனர். இதனைப் "பெரும் பயணம்" (Grand Tour) என்றனர். போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லாத அந்த நாளில் இத்தகைய பயணங்களைச் சாதாரண மக்கள் மேற்கொள்ள முடியாத ஒரு நிலை. அதனால்தான் சுற்றுலா தனவந்தர்களின் பொழுதுபோக்கு என்ற வழக்கு ஏற்பட்டது.

ஆனால், இரண்டு உலகப் போர்களுக்குப் பின் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. பொதுவாக வருமானம் பெருகி விடுமுறையும் கிடைக்க வழி ஏற்பட்டது. போக்குவரத்து வசதிகள் நிறைய உண்டாயிற்று. ஏறக்குறைய இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் சுற்றுலா கோட்பாடு உலக மக்களிடையே பரவ ஆரம்பித்தது. கடந்த 40 அல்லது 50 ஆண்டுகளில் சுற்றுலா வேகமாக வளர்ந்து இன்று உலகில் எண்ணெய்த் தொழிலுக்கு அடுத்த படி, இரண்டாவது பெரிய தொழிலாக வளர்ந்துள்ளது.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் சுற்றுலா அண்மைக் காலத்தில் தோன்றிய ஒரு வழக்கமல்ல. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே நாகரிக மேம்பாட்டுடன் வாழ்ந்தவர்கள் நமது முன்னோர்கள். அரசர்கள் தனது நாட்டு மக்கள் நலன் காக்க நாடுகாண பயணங்கள் மேற்கொண்டனர். ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்டு தார்மிக வாழ்க்கை வாழ்ந்த நமது மன்னர்களும் முன்னோர்களும் கோயில்களுக்குக் கூட்டம் கூட்டமாக யாத்திரை மேற்கொண்டனர். இன்றைய தேசிய நெடுஞ்சாலைகள் பெரும்பாலும் அந்தக் காலத்தில் ராஜபாட்டைகளாக விளங்கியவைதான். இன்றும்கூட இந்த நெடுஞ்சாலைகளின் ஓரம் ஆங்காங்கே கல்மண்டபங்களும் அதன் அருகில் சிறிய குளங்களும் இருப்பதைக் காணலாம். இவை அரசாங்க வேலையாக செல்பவர்களும் யாத்ரீகர்களும் தங்கி ஓய்வு எடுக்கக் கட்டப்பட்டவை.

இந்த யாத்திரை செல்லும் பழக்கம் இன்று சுற்றுலாவாக வளர்ந்துள்ளது. அன்று பயணிகள் தங்க சத்திரங்கள் கட்டினார்கள். இன்று சுற்றுலாப் பயணிகளுக்கு ஓட்டல்கள் கட்டுகின்றோம்.

நமது நாட்டில் சுற்றுலா வளர்ச்சியில் சுதந்தரத்திற்குப் பின் தனிக்கவனம் செலுத்த ஆரம்பித்தோம். தமிழகத்தில் இருபது ஆண்டுகளாகச் சுற்றுலா வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி வருகிறோம். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு வயது இருபது ஆகிறது. ஆரம்பத்தில் முக்கிய சுற்றுலா மையங்களில் தங்கும் விடுதி கட்டினால் போதும் என்று கருதப்பட்டது. இன்று சுற்றுலா ஒரு தொழிலாகக் கருதப்படுகிறது. நட்சத்திர ஓட்டல் கட்ட, சிற்றுண்டிச் சாலைகள் அமைக்க, சீர்வளி பேருந்துகள் வாங்க, பொழுதுபோக்கு வளாகம் அமைக்க, மின்தடை ஏற்படாமல் இருக்க மின்ஆக்க ஜெனரேட்டர்கள் வாங்க இன்னும் இது போன்ற சுற்றுலா வளர்ச்சிப் பணிகளுக்கு அரசு சலுகைகள் வழங்குகிறது.

அண்மையில் நமது மாண்புமிகு முதல்வர் தமிழ் நாட்டிற்கென சுற்றுலா கொள்கை விளக்கக் கையேடு வெளியிட்டுள்ளார். இதில் மேற்குறிப்பிட்ட தொழில் சலுகைகளோடு கலாசாரப் பாரம்பரிய நகரங்களின் மேம்பாட்டிற்கும் சிறப்புச் சுற்றுலாப் பகுதிகள் மேம்பாட்டிற்கும் இன்றும் இதுபோல பல சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேம்பாட்டிற்கும் முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இன்று சுற்றுலா வளர்ச்சி என்றால் சாலைவழி "மோட்டல்" என்று சொல்லப்படும் தங்குமிட வசதி செய்தல், இளைஞர் விடுதி கட்டுதல், உல்லாசப் படகு போன்ற பொழுதுபோக்கு வசதி, கைவினைப் பொருள் விற்க வசதி, சாகசச் சுற்றுலா மேம்பாடு, போக்குவரத்து வசதி, குடிநீர் வசதி, சுற்றுப்புறச் சூழல் தூய்மை காத்தல் என சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. நமது நாட்டைப் பொறுத்தவரை அன்றைய யாத்திரை தான் இன்றைய சுற்றுலாவின் முன்னோடி என்று கூறினார். இந்த யாத்திரைப் பயணங்களை ஊக்குவிப்பதில் தற்போது தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. "யாத்திரைச் சுற்றுலா" மேம்பாட்டுத் திட்டத்தில் தமிழகத்தில் இராமேசுவரம் மேம்பாட்டிற்குத் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. இராமேசுவரம் போன்ற நாடு தழுவிய முக்கிய யாத்திரைத் தலங்களில் எல்லாம் யாத்திரை மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு என்ன என்ன வசதிகள் தேவையோ அவை அனைத்தையும் செய்து கொடுப்பதே இதன் நோக்கம்.

தற்போதைய தமிழக அரசின் சுற்றுலாக் கொள்கை சுற்றுலா வளர்ச்சியில் தனியாருக்கு முதலிடம் வழங்க வேண்டும் என்பதே. அரசு மட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் போன்ற பொது நிறுவனங்களால் ஓரளவுக்குத்தான் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்ற முடியும். அதோடு நாளும் வளர்ந்து வரும் சுற்றுலா நம் எல்லோருடைய வாழ்விலும் அன்றாடம் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்படுகிறது. சுற்றுலா வளர்ச்சி பின்தங்கிய பகுதிகள் பொருளாதார மேம்பாட்டிற்கும், மக்களின் சமுதாய கலாசாரப் பண்பாட்டு வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்பிற்கும் வகை செய்கிறது. நாடு தழுவிய அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது.

இவ்வளவு முக்கியம் வாய்ந்த சுற்றுலா தமிழகத்தில் நல்ல முறையில் வளர சுற்றுலாத் தலங்களைத் தூய்மையாக வைத்திருக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறு இல்லாமல் நடந்து கொள்ளவும், அவர்களை வரவேற்று இன்முகம் காட்டி உபசரிக்கவும் வேண்டும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பண்பாட்டு மரபில் வந்தவர்கள் நாம். செல்விருந்து ஓம்பி வரும் விருந்து காத்து வள்ளுவன் வழிநின்று ஒரு முறை வந்தவர் மீண்டுமொருமுறை, பலமுறை வருமளவு ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும்.

தீபங்களின் ஊர்வலங்கள்

கொல்லங்குடி உடையப்பன்

ஒளிவீசும் வண்ணவண்ணத் தீபங்கள்
ஊரெங்கும் மின்னலிடி ஊர்வலங்கள்
துளியிருளும் துரத்தி வெல்லும் ஒளிவெள்ளம்
துள்ளிமகிழ் சிறுவருள்ளம் கொள்ளை கொள்ளும்

வானவில்லை யார்வளைத்து ஒடித்துவிட்டார்
வண்ண வண்ண ஒளிதெறிக்க வெடிக்கவிட்டார்
தேனெனவே தித்திப்புப் பல படைத்தார்
சிறுவரெலாம் தின்று மனம் சிரிக்க வைத்தார்.

அடுத்தடுத்து வரப்போகும் அணிவிழாக்கள்
அத்தனைக்கும் தீபமேற்றும் திறப்பு விழா
வடக்கினிலே புதுவருடம் பிறக்கும் விழா
வரும் நாட்கள் வளம்சுரக்க வணங்கும் விழா

கார்த்திகை மார்கழி பொங்கலென்று
கழனியெலாம் விளைந்து கதிர் பசிதுடைக்கும்
சீர்வளரத் திருவிழாக்கள் தினந்தொடரும்
தீபாவளி முதல் நலங்கள் நிலம் படரும்

வளர்காற்று சூறாவளி தணிந்தினிமேல்
மனம்குளிர மழைபொழியும் தினம் புவிமேல்
குளம்நிறையும் பயிர்வளரும் நிலம் விளையும்
குறைகளையும் பிணிவறுமை போயொழியும்

உடுத்துவண்ணப் புத்தாடை இன்பவிழா
ஒற்றுமையை வளர்த்துவரும் இந்தியவிழா
கொடுத்து வாங்கி வாழ்த்தி மகிழ் குடும்பவிழா
குமரிமுதல் இமயம்வரை தீபவிழா

சிக்கனம்

கோவூர் இசைதாசன்

வான்மழையின் சிக்கனந்தான் தூறலாகும்
வரிப்புலியின் சிக்கனமே பூனை யாகும்
தேன்கூட்டின் சிக்கனந்தான் பூக்க ளாகும்
தேங்காயின் சிக்கனமே இளநீ ராகும்
வான் நிலவின் சிக்கனம்கூன் பிறையே யாகும்
வால்உடும்பின் சிக்கனமே பல்லி யாகும்
மீன்வலையின் சிக்கனந்தான் தூண்டி லாகும்
மிச்சத்தின் சிக்கனமே சேமிப் பாகும்.

தெய்வீகக் காதல்!

கவிஞர் மோத்திதாசன்

முருகன் திருக்கோயில் மணிமுழக்கம் - எந்தன்
முத்தமிழ்ப் பாவையிவள் கண் மயக்கம்
திருமால் மருகன்வள்ளி வழி நடக்கும் - இந்தத்
தெய்வீகக் காதலிலே உறுதி இருக்கும்!

நான்கும் அணிந்திருக்கும் நங்கை அல்லவா - அந்த
நாயகி தமிழ்க்குலத்து மங்கை அல்லவா
மாண்பு காக்கும் தமிழ் மாட்சி அல்லவா - வீர
மறவர் குலத்துதித்த காட்சி அல்லவா!

அன்பும் அறனும்இல் வாழ்க்கை அல்லவா - குறட்
பண்பும் பயனும்மனப் பந்தம் அல்லவா
இன்பம் இனித்திருக்கும் இதயம் அல்லவா - இரு
உள்ளம் இணைந்திருக்கும் கதையும் சொல்லவா!

குருஜி ஹரிதாஸ்கிரி ஸ்வாமிகள்



அண்ணாமலையார் கோயிலுக்குத் தினசரி செல்லும் பழக்கத்தைக் கொண்டிருந்தவர் லட்சுமி அம்மாள். இவருடைய கணவர் அண்ணாஜி ஆர்க்காடு நவாப் குடும்பத்தினரிடையே மிகுந்த மரியாதைக்குரியவராகத் திகழ்ந்தார்.

நவாப் குடும்பத்தினரால் நாட், ராவ் முதலிய கௌரவ பட்டங்களைப் பெற்றவர் அண்ணாஜி. லட்சுமி அம்மாளின் வேண்டுதலுக்கு இணங்க அண்ணாமலை அருளால் குழந்தை ஒன்று பிறந்தது. குழந்தைக்கு ஹரி நாராயண சர்மா என்று பெயர் வைத்தாகள். நாராயணன் ஒரு வித்தியாசமான குழந்தை என்பதைப் பிறப்பிலேயே காட்டி விட்டான். எல்லாக் குழந்தையும் 10 மாதத்தில் பிறக்கும் என்றால் நாராயணன் தன் தாயின் வயிற்றில் இருந்த காலம் 12 மாதங்கள்.

நாராயணனின் வாழ்க்கைப் பாதை சீராகச் சென்று கொண்டிருந்தபோதுதான் அந்தச் சம்பவம் திருப்பு முனையாக அமைந்தது. அம்மை நோயால் கஷ்டப்பட்ட நாராயணன் இனி தேறுவது கஷ்டம் என்ற முடிவுக்குப்பெற்றோர் வந்தனர்.

முப்பது வயது இளைஞன் நாராயணனை ஞானானந்த கிரி ஸ்வாமிகளின் காலடியில் கொண்டு வந்து தபோவனத்தில் போட்டனர். பகவான் போடுகிற முடிச்சை சரியான நேரத்தில் சரியானவர்களால்தானே அவிழ்க்க முடியும்? ஏற இறங்க ஒரு பார்வை பார்த்தார் ஞானானந்தர். "இவனுக்கு அம்மை சரியாகிவிடும். இனி இவன் இங்கேயே இருக்கட்டும்" என்று சொல்லி விட்டார்.

1954 ஆம் ஆண்டு ஞானானந்தர் ஸ்வாமிகள் தபோனவத்தை நிறுவி அங்கேயே அருளாசி செய்து கொண்டிருந்தார். அந்தத் தபோவனத்தில்தான் மேற்கண்ட நிகழ்ச்சி 1962 ஆம் ஆண்டு நடைபெற்றது. அம்மை நோய், அதைத் தொடர்ந்து வந்த டைபாய்டு இரண்டும் தணிந்து முற்றும் துறந்த முனியானார் ஹரிதாஸ் கிரி. ஹரி நாராயணன் என்பது ஹரிதாஸ் கிரியின் பூர்வாஸ்ரமப் பெயர். தன்னுடைய குருநாதராலேயே 'தாசர்' என்றும் 'குருஜி' என்றும் அழைக்கப்பட்டார் ஹரிதாஸ் கிரி.

1947 ஆம் ஆண்டு தேகவியோகமாகி மகா சமாதி அடைந்தார் ஞானானந்தர். ஞானானந்தருக்கு ஏற்ற சிஷ்யராய் - அவர் வழியில் பராம்பரியமிக்க நமது கலை, கலாசாரம், பண்பாடு இவைகளை இறை பணி மூலம் செய்து வருகிறார் ஹரிதாஸ் கிரி ஸ்வாமிகள்.

ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், மராத்தி, ஹிந்தி, கன்னடம், தமிழ் என்று பல்வேறு மொழிகள் ஸ்வாமிகளுக்குத் தெரியும். எனவேதான் இவர் நடத்தும் உபந்நியாசங்களில் எல்லா மொழிப் பாடல்களும் தாளம் தப்பாமல் தானே கட்டுப்பட்டு வருவதோடு சபையோரையும் கட்டுப்படுத்தி விடுகிறது. இசையின் மூலம் இந்து மதத்தின் கருத்துகளைப் பரப்பி வருகிறார் ஹரிதாஸ் கிரி ஸ்வாமிகள்.

சுவாமி ஞானானந்த கிரியின் சீடரான இவர் குமரி முதல் இமயம் வரை பாரத நாடெங்கும் சென்றதோடு மட்டுமல்லாமல் சிங்கப்பூர், மலேசியா, லண்டன், அமெரிக்கா என்று பல வெளிநாடுகளுக்கும் சென்று இந்து மதத்தை, அதன் வாழ்வியல் நெறிமுறைகளைப் பரப்பி வருகிறார். இவருக்கு அயல் நாடுகளிலும் பக்தர்கள் உண்டு.


தமிழ், சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் நானூறுக்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இவர் இயற்றியுள்ளார்!

காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள தென்னாங்கூர் என்னும் (தக்ஷிண ஹாலாஸ்யம்) இடத்தில் தன் குருநாதரின் அருளாசியுடன் ஓர் ஆச்ரமத்தை கட்டி வருகிறார். ஞானானந்த நாம சங்கீர்த்தன மண்டலி, ஞானானந்த சேவா சமாஜம் போன்றவை இவரால் உருவாக்கப்பட்ட ஸ்தாபனங்கள்.

— சாந்தினிசங்கர நாராயணன்

த்வைத மார்க்கம் அருளிய ஸ்ரீமத்வாச்சாரியார்

ஓவியம் : ஜி.கே. மூர்த்தி



அவதார மகான் ஸ்ரீ மத்வா சாரியார், ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத் என்று அருள் பாலித்துத் தாம் அந்த பக்தி மார்க்கத்தில் பரவசமடைந்து, த்வைத மார்க்கத்தை உலகறியச் செய்து, தமது ஸ்தூல வடிவிலேயே இறைவனுடன் கலந்து சூட்சும வடிவம் எய்திய பெருமான் ஆவார்.

ஸ்ரீ வாயு தேவனின் அவதாரமாவார் ஸ்ரீ மத்வர். (முதல் இருவரான ஸ்ரீ அனுமன், வாயு புத்ரரான ஸ்ரீ வீமனை அடுத்து அவதாரமாகப் பக்தர்களால் போற்றப்படுபவர் ஸ்ரீ மத்வர்).

கர்நாடக மாநிலத்தில் உடுப்பிக்கு அருகாமையில் உள்ள பாஜக க்ஷேத்தி ரத்தில் கி.பி. 1238 இல் திருஅவ தாரம். பரம பவித்திரமான ஸ்தலமாகக் கருதப்படும் உடுப்பியில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திரு மூர்த்தத்தை ஸ்தாபித்த பெருமான். தலைமுறைகள் தொடர்ந்து வர ஸ்ரீ பரந்தாமனுக்கு இடைவிடாமல் பூஜாக்கிரமங்கள் நிகழ எட்டுத் திருமடங்களை நிறுவிய உலகோத்தமர்.

ஸ்தூல வடிவிலிருந்து சூட்சம வடிவில் ஸ்ரீ பகவானுடன் இவர் இண்டறக் கலந்த சுபநாளை மத்வ நவமியாகக் (கி.பி. 1317) கொண்டாடி வருகிறார்கள் த்வைத மார்க்கத்தைப் பின்பற்றி வரும் ஸ்ரீ மத்வரின் பரம பக்தர்கள்.

ஸ்ரீ மத்வ மகா புருஷரின் சித்தாந் தங்கள் வேதாகம, புரான, இதிகாச அடிப்படையில் அமைந்தவை.

★ ஒரே பகவான்; அவர்தாம் ஸ்ரீ மகாவிஷ்ணு.

★ ஸ்ரீ விஷ்ணுவே பூ மண்டலம், அண்ட பகிரண்டம் உட்பட பிரபஞ்சங் களை உருவாக்கிய பகவான். அண்டப் பெருவெளியில் இயங்கும் ஒன்றுக் கொன்று வேறுபடும் ஸ்தூல – சூட்சும சிருஷ்டிகளில், ஜட வஸ்துக்களும் சேரப் படைத்துள்ளவர் ஸ்ரீ விஷ்ணுவே.

★ தேவர்களில் வரிசைக் கிரம முக்கியத்தை ஏற்படுத்திக் கொடுத் திருக்கும் பகவான், பூமண்டலத்தில் உள்ள மனிதர்கள் இந்த வரிசைக் கிரமத்திலேயே அந்தந்த தேவதை களுக்கு ஆராதனைகள் புரிய வேண்டும். பகவானே ஏற்படுத்திக் கொடுத்த நியமம் இது.

★ ஸ்ரீ லக்ஷ்மி, ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ வாயு ஆகியோர் ஆராதனை புரியும் தலைமைப் பீடத்தை ஸ்ரீ விஷ்ணுவே அலங்கரிக்கிறார்.

★ நமது செயல்பாடுகள், நித்திய கர்மங்கள் அனைத்தும் ஸ்ரீ விஷ்ணு வுக்கே அர்ப்பணமானவை. மோட்ச சாதனை பெற 'த்வைதம்' காட்டும் மார்க்கம் இதுவே. இதுவன்றி தாமே முக்திப் பேறு பெறலாம் என்பது மானிடருக்கு ஏற்புடையதாகாது.

மானிடர் தமது நித்திய கர்மானுஷ் டானங்களில் பெரியோரிடம் மரி யாதை, எளியோரிடம் இரக்க சிந்தனை யுடன் கூடிய தொண்டுள்ளம் கொண்டு வாழ்க்கை நடத்துவது மிக முக்கியம்.

அவதார மகான் ஸ்ரீ மத்வாசாரியார் சுவாமிகளின் வரிசையில் ஸ்ரீ ஜயதீர்த்தர், ஸ்ரீபாதராஜர், ஸ்ரீ வியாசராஜர், ஸ்ரீ வாதிராஜர், ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் ஆகியோர் தோன்றி, தங்கள் குருநாதர் ஸ்ரீ மத்வாசாரியார் சுவாமிகளின் அருள் மார்க்கமான 'த்வைத மார்க்கத்தின்' தெய்விக வளர்ச்சியை உலக உய்வுக்காக நிலை நாட்டினார்கள். ೦

ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமிகள்

ஓவியம் : ஜி.கே. மூர்த்தி

காணும் பக்தர்களுக்கு அவர்கள் கருதும் தெய்வத் திருக்கோலத்தில் காட்சி தந்து, இன்றும் திருவருள் பாலிக்கும் அந்த ஞானச் செல்வர் – 1965 ஆம் ஆண்டில் தமது இருபத்து மூன்றா வது பிராயத்திலேயே, மைசூரின் சாமுண்டீஸ்வரி மலையின் அடிவாரத் தில் ஆசிரமம் அமைத்து, தம் உயிர் வாழ்வை, உயர் வாழ்வுக்கு அர்ப்பணித்த ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமிகள் ஆவார்.

கர்நாடக மாநிலத்தில் அர்க்காவதி, குப்தகாமினி, காவேரி ஆகிய புனித நதிகளின் சங்கமத் தலமான 'மேகதாடு' எனும் குக்கிராமத்தில் நரசிம்ம சாஸ் திரி – ஜெயலட்சுமி தம்பதியருக்கு 22.5.42இல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர் 'சத்திய நாரா யணா' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

சத்திய நாராயணாவுக்கு 1959இல் உபநயனம் நடந்தேறியது. பள்ளிப் படிப்பை ஒருவாறு முடித்து, ஞான தாகத்தில் அருளாளர்களைச் சந் திப்பது, அவர்கள் கூறும் அருள் நெறிகளின் வழியே தமது நாள்வழி நடைமுறைகளை அமைத்துக் கொள் வது, நான்மறையின் நூன்முறைகளை – வந் திக்கச் சென்னி, வாழ்த்துதற்கு வாய், சிந்திக்க நன்னெஞ்சு, செவி மடுக்க இருகாது என உயர் வாழ்வில் நாட்டம் கொண்டிருந்த சத்திய நாராயணா, ஒருநாள் ஸ்ரீஅவதூதகுரு

என்றும் ஞானி ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றான். சத்திய நாராயணாவின் பக்குவம் அறிந்த ஸ்ரீ அவதூத குரு தீட்சையளித்தார். தீட்சாநாமமாக 'சச்சிதானந்தா' எனும் பெரும் பெயர் பெற்று, முழுக்க முழுக்க அருள் நெறியில் தமது வாழ்வைக் கரைத்துக் கொண்டான் சத்திய நாராயணா!

தமது அன்னையாரை முதல் குருவாகவும், ஸ்ரீ அவதூத குருவை இரண்டாம் குருவாகவும் கொண்ட சச்சிதானந்தர், ஆன்மீகச் சிந்தனைகளைக் குறிப்பாக ஸ்ரீதத்தாத்ரேயர் நெறிகளைச் சிறக்கச் செய்யவும், பரப்பக் கருதியும் 1966இல் மைசூர் சாமுண்டீஸ்வரி மலை அடிவாரத்தில் நஞ்சன்கூடு சாலையில் ஒரு தெய்வீக ஆசிரமத்தை உருவாக்கினார். அண்மையில் இந்த ஆசிரமம் 'ஹனுமத்துவாரா' எனப்படும் மிகுந்த வேலைப்பாடு கொண்ட நுழைவாயில், 'மருத்துவ சாலைகள்' வெளிநாட்டினர் தங்குவதற்கேற்ற 'காட்டேஜ்'களை 'பக்திமாலா அலுவலகம்' 'அச்சகம்' 'நூல்நிலையம்' ஆகியவை கொண்ட பிரம்மாண்டமான கட்டட அமைப்பைப் பெற்றுள்ளது. இவைகளுக்கு மேல் திகைப்பூட்டும் 'யுனிவர்சல் பிரேயர் ஹால்', 'ஸ்ரீதத்தாத்ரேயர் ஆலயம்' ஆகியவை அமைக்கப் பெற்றுள்ளன. யுனிவர்சல் பிரேயர் ஹாலுக்கு மேல் அமைந்துள்ள மிகப் பெரிய, பூர்ண கும்ப வடிவில் அமைந்துள்ள கலசம் வடிவ வனப்பும், புனித அமைப்பும் கொண்டு காண்போரைக் கவர்ந்து இழுக்கிறது! யுனிவர்சல் பிரேயர் ஹாலுக்கு அருகே ஒரு கல்யாண மண்டபம் உள்ளது. சுமார் 1000 பேர் அமர்ந்து உணவு ஏற்கக் கூடிய வகையில் 'ஜெயலட்சுமி மாதா அன்ன பூர்ண மந்திரம்' வடிவம்கொண்டுள்ளது. நாள்தோறும் பல நூறு பேர்களும், திருவிழாக் காலங்களில் பல்லாயிரம்



பேரும் இங்கு அன்னத்தைத் தானமாகப் பெறுகின்றனர். ஆம், இது சச்சிதானந்தரின் தாயார் திருப்பெயரில் அமைந்த அன்னதான ஹால். வெளியிலிருந்து ஆசிரமத்திற்கு வருகை புரிபவர்களுக்கென பொருளார்ந்த திருப்பெயர்களுடன், 'ரா-ம-சங்கர' குடீரம் அமைக்கப் பெற்றுள்ளது. ரா-என்றால் ராமானுஜரையும், ம-என்றால் மத்வாச்சாரியரையும், சங்கர-என்றால் சங்கராச்சாரியரையும் குறிப்பிட்டுக் காட்டக் கூடிய குடீரங்கள் இவைகள். ஆசிரமத்தில் 'கோசாலா', 'வேதபாடசாலை' 'யோகாஸ்ரமம்' ஆகியவையும் இடம் பெற்றுள்ளன. ஆசிரமத்தின் அமைப்பை அறிகிற போதே, அதன் ஆன்மீகத் தொண்டின் பரப்பை, ஆழத்தை ஒருவாறு உணர்ந்து கொள்கிறோமல்லவா?

ஸ்ரீகணபதி சச்சிதானந்த சுவாமிஜி என அடியார்களால் அழைக்கப்பெறும் ஞானச் செல்வர், ஐந்தாண்டுகளில் 16 தத்தத் திருத்தலங்களையும், ஒரு தத்த காசியையும், ஒரு தத்த ராமேஸ்வரத்தையும், டெல்லியில் நவநாத க்ஷேத்திரத்தையும் நிமாணித்துப் பக்தர்களின் ஒருமித்த போற்றுதலைப் பெற்றுள்ளார். மைசூர், புரதொட்டூர், பெங்களூர், அனந்தப்பூர், விஜயவாடா, பொம்மைபர்த்தி, ஆகிவீடு, நியூசிவீடு, ஹைதராபாத், கண்டிகுண்டா, ஆலப்புழை, மேகதாட்டு, மங்கினிபுடி ஆகிய ஆந்திர, கர்நாடக, கேரளத் திருத்தலங்களிலும், தமிழ்நாட்டில் கடைமலைப் புத்தூர், (அச்சிறுபாக்கம் அருகே) வேளச்சேரி (தரமணி 100 அடி இணைப்புச் சாலை அருகே) ஆகிய திருவிடங்களிலும் ஆசிரமங்களை அமைத்து ஸ்ரீசுவாமிஜி ஆன்மீகத் தொண்டினைப் பெரு விளக்கமாக்கி வருகின்றார்.

ஸ்ரீசக்கரத்தை இருப்பிடமாகக் கொண்ட அன்னை திரிபுரசுந்தரி, சிவசக்தி ஐக்கிய ரூபிணியாகத் திகழ்கிறார். ஸ்ரீசக்கரத்தை ஆழ்ந்து நோக்குங்கால், அதில் மேல் நோக்கியுள்ள நான்கு முக்கோணங்கள் சிவ சக்கரத்தையும், கீழ் நோக்கியுள்ள ஐந்து முக்கோணங்கள் சக்தி சக்கரத்தையும் குறிப்பிடுவன. ஸ்ரீசக்கர அமைப்பே சிவசக்தி ஐக்கிய வடிவை விளக்குவதாக அமையப் பெற்றுள்ளது. ஞானச் செல்வர் ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமிஜி, நாள்தோறும் அதிகாலை வேளையில் 'ஸ்ரீசக்கர பூஜை' நிகழ்த்தாமல் எந்தவொரு பணியையும் தொடங்குவதில்லை.

ஞானச்செல்வர் ஸ்ரீ ஸ்வாமிஜி 29 முறை வெளிநாடுகளுக்கு ஆன்மீக யாத்திரை செய்து வந்துள்ளார். உலகளாவிய அளவில் ஞானச் செல்வருக்கு அன்பர்கள், சீடர்கள் உள்ளனர். அறன் அறியவும், ஆன்ற பொருள் அறியவும், இன்பின் திறன் அறியவும் வெளிநாடுகளிலிருந்து ஸ்ரீ சுவாமிஜியைத் தரிசிக்க அன்பர்கள் வந்த வண்ணம் உள்ளனர். பல வெளிநாடுகளில் ஞானபோத சபைகளும், தத்த யோக கேந்திரங்களும் அமைந்துள்ளதோடு, மேற்கிந்தியத் தீவுகளில் தாத்தாத்ரேயர் ஆலயங்களும் கட்டப் பட்டுள்ளன. ॐ


தவத்திரு சீதாராம சுவாமிகள்

ஓவியம் : ஜி.கே. மூர்த்தி

இராமநாதபுரத்தில் பெரிய வைணவக் குடும்பத்தில் பிறந்து கலியுகத்தெய்வமாம் ஸ்ரீ கோவிந்தனால் ஆட்கொள்ளப்பட்டவர் ஸ்ரீ ஸீதாராம ஸ்வாமிகள். சிவபெருமானின் திருநட்சத்திரமான திருவாதிரையில் பிறந்து 'திருவோணத்தானின்' சேவைக்காகத் தன்னையே ஆத்ம நிவேதனமாய் அர்ப்பணித்து ஜாதி மத பேதமோ, சிவவிஷ்ணு பேதமோ கடுகளவும் இல்லாதபடி அன்பே தானாகி, 'அனைத்தும் ஒன்றே' என்ற உயரிய தத்துவத்தின்படி மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற நிலையின் படி அடுத்தவர் துன்பத்தைத் தானே ஏற்று, துக்கம் தீர்ந்து சோர்வு என்பதேயில்லாமல் மனம், வாக்கு செயலால் ஒன்றுபட்டு ஒளியாய் பிரகாசிக்கிறார். இவரின் பத்தினியாரும் அக்கால

ரிஷி பத்தினியாய் பதிசேவையே தன் வாழ்வின் குறிக்கோளாய் அவரின் சேவையே கோவிந்த னுக்குத் தான் செய்யும் பூஜை என அனைவருக்கும் அன்னை யாய், தந்தையாய் இருந்து வரு கின்றனர்.

'இறைவன் முன் யாவும் சமம். தெய்வங்களுக்குள் பேதம் தேவை யில்லை' என்ற உண்மையை எடுத்துக் காட்டவே இறைவனால் அனுப்பப்பட்ட அவதார புருஷர் இவர் என்பதை ஊர்ஜிதமாக்கும் சம்பவங்கள் ஏராளம். இதில் ஒன்று, மனதால், எண்ணங்களால் சதா சர்வகாலமும் இரண்டறக் கலந்து நிற்கும் தென் திருப்பதி யாம் திருமலை வையாவூர் அலர்மேல் மங்கா சமேத ஸ்ரீ ப்ரசன்ன வேங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் இவரின் முயற்சி யால் ஸ்ரீ சிவனின் இராத்திரியான சிவராத்திரியில் இரவு முழுவதும் கண்விழித்து விசேஷ பஜனைகள் செய்து இறைவனை வழிபடுவது ஒன்றே இதற்குச் சான்று. மக் களை நல்வழிப்படுத்த அவர்கள் மனதில் பக்தியைப் பயிரிட ஸ்ரீ கோவிந்தனின் ஆக்ஞைப்படி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் 1976 இல் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ நிகேதனம் என்ற பெயரில் ஒரு பெரிய அறநிலை யத்தைத் தோற்றுவித்தார். இங்கே தேடி வரும் அடியவர்க்கெல்லாம் ஒளியைக் காட்டி மன அமைதி தந்து குறை தீர்த்து அனுப்பி வைக்கும் அதிசயம்தான் என்ன! 'பகைவர்க்கும் அருள்வாய்' என்ற படி அவர்களிடமும் கருணை கொண்டு தாயாகி நிற்கும் அற்புதம் என்ன. இவர் நடத்தும் அற்புதங்கள் ஒன்றா இரண்டா? அதிகாலை 5 மணியிலிருந்து பக்தர்கள் கூட்டம்




வரத்தொடங்குகிறது. எம் பெருமான் கோவிந்தன் இவர் வடிவிலே ஆட்கொண்டு பேசும் பெருமானாய் ஒவ்வொரு வியா ழனும் சனியன்றும் பக்தர்களுக்கு அருள் வாக்கிட்டு நிற்கிறார். இதேபோல் வருடம் ஒருமுறை கார்த்திகை மாதம் முழுவதும் வியாழன் சனியன்று ஆஞ்சநேயர் ஆட்கொண்டு பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். இதைக் கண்டு களிக்க வெளிநாட்டிலிருந்து இதற்காகவே வரும் பக்தர் கூட்டம் ஏராளம்.

இந்த அறநிலையம் மூலமாக ஸ்ரீ ஸீதாராம ஸ்வாமிகள் செய்யக் கூடிய திருப்பணிகள் ஏராளம். இதில் முக்கியமானது தென் திருப்பதி எனும் திருமலை வையாவூர் வாழும் அலர்மேல் மங்கா சமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாளின் திருப் பணி, எந்த ஒரு திட்டத்தையும் பெருமாளின் உத்தரவைப் பெற்ற பின்பே செயலாக்குவது ஸ்ரீ ஸ்ரீநிவாஸ நிகேதனத்தின் கடமை யாய் இருந்து வருகிறது. ஸ்ரீநி வாஸ நிகேதனத்திற்கு அன்பர்கள் சமர்ப்பிக்கும் சிறுசிறு காணிக் கைகள்கூட வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுச் சீரான வழியில் அவ்வாலயத்திற்கும் நல்ல காரி யங்களுக்கும் பயன்படுத்தப்படு கின்றன.

இந்த திருமலை சென்னையில் இருந்து சுமார் 75 கி.மீ. தொலை வில் வேடந்தாங்கல் போகும் வழியில் இருக்கிறது. எவ்வளவோ வைஷ்ணவத் தலங்கள் இருந்தும் வராகக்ஷேத்ரம் எனச் சிறப்பாகச் சொல்லப்படும் ஆலயங்கள், வட வேங்கடமான திருப்பதி, அடுத்து தென் திருப்பதி என சொல்லப் படும் திருமலை வையாவூர் இவ்விரு ஆலயங்களில் மட்டுமே வராகர் சன்னிதி, முன்னால் துவஜஸ்தம்பம் (கொடி மரம்) உள்ளது. தவிரவும் இந்தப் பெரு மானைத் தரிசிப்பதன் மூலம் நான்கு யுக பகவானையும் ஒரு சேரத் தரிசிக்கும் பாக்கியமும் கிடைக்கும்.

— லலிதா ரவீந்திரன்

தவத்திரு காசி விசுவநாத ஞான தேசிக சுவாமிகள்



கோவிலூர் ஆதீனத் திருமடா லயம் செட்டிநாட்டின் காரைக் குடி நகரத்திலிருந்து மேற்கே.

"பழைய ராஜாக்கள் மறைந்து, வெள்ளைக்கார ஆட்சி ஏற்பட்ட பிறகு, பழைய ராஜாக்கள் செய்து வந்த வேத போஷணைகளையும், திருக்கோயில் திருப்பணிகளை யும் நடத்திக் கொடுத்தவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டிமார் தான்!" எனக் கருத்துத் தெரிவித்த ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சங்கராச் சாரிய சுவாமிகள் (பெரிய வர்கள்) "நாட்டுக் கோட்டை செட்டிமாருக்குச் சமய உணர் வும், கொடை உள்ளமும் இயல் பாகவே அமைந்துள்ளன" எனக் கூறி மகிழ்ந்தார்கள்.

சுவாமிகள் மகிழ்ந்து போற்று மாறு, நாட்டுக்கோட்டை நகரத் தார் பெருமக்களைத் தெய்வத் திருப்பணிகளில் ஊக்குவித்த வர்கள், உரிய வழியுணர்த்தி உயர் நலம் பெற்றிட ஆக்குவித்த வர்கள் கோவிலூர் ஆதீனத் தலைவர்களே ஆவர்!

மதுரை நெடுஞ்சாலையில் ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் உதய காலத்தில் அருட்செல்வர் முத்துராமலிங்க ஞான தேசிகரால் உருவாக்கம் பெற்ற கோவிலூர் ஆதீனம், சிருங்கேரித் திருமடத்தின் அருளாளர்களைக் குருஸ்தானமாகக் கருதி வருவது குறிப்பிடத்தக்கது. ஆதீனத்தை நிறுவிய அருட்செல்வர் முத்துராமலிங்க ஞானதேசிகரின் குருமூர்த்தியாக விளங்கிய தவத்திரு உகந்தலிங்க ஞான சுவாமிகள், சிருங்கேரி ஆதி சங்கராச்சாரிய சுவாமிகளின் மரபில் வந்த அருளாளர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றியவர்கள். எனவே கோவிலூர் ஆதீனத்தை நிறுவிய பெருமான் குரு ஸ்தானமாகச் சிருங்கேரியைக் கொண்டார்கள்.

அருட்செல்வர், ஆதீனக்குரு முதல்வர் தவத்திரு முத்துராமலிங்க ஞான தேசிகர், வேதாந்த சாத்திரங்கள் பதினாறையும் கசடறக் கற்ற ஞானப் பெருஞ்செல்வராகத் திகழ்ந்தார்கள். பேரருளும், பெருங்கருணையும் கொண்டு ஞானமூர்த்தியாக விளங்கிய அப் பெருமான், ஆன்மிக அன்பர்களின் அகங்களையெல்லாம் ஆட்கொண்டு, உய்யும் வழி உணர்த்திய காரணத்தால், மக்கள் அப்பெருந்தகையை 'ஆண்டவர்' என அழைத்து மகிழ்ந்தனர்.

கோவிலூர் ஆண்டவருக்குப் பின், 'துறவு ஆண்டவர்' என மக்களால் சிறப்பித்துப் பேசப்பெற்ற அருணாசல தேசிக சுவாமிகள் திருமடத்தின் இரண்டாவது பீடாதிபதியாக வீற்றிருந்து, ஞானச் செல்வராகவும், தியாக மூர்த்தியாகவும் திகழ்ந்து, அடியவர் தொண்டில் அளவிலா ஈடுபாடு கொண்டிருந்தார்கள்.

ஆண்டவர் பெருமானிடம் பன்னிரண்டு ஆண்டுகள் சாஸ்திர தோத்திர நூல்களைத் தொடர்ந்து பயிலும் பேறு பெற்ற தேவக்கோட்டை சிதம்பரம், செந்தண்மை பூண்டு, சிவம் பெருக்கும் ஞானியராய், துறவு மேற்கொண்டு, 'கருணாநிதி சுவாமிகள்' எனும் தெய்வத் திருநாமத்துடன் கோவிலூர் ஆதீன மூன்றாம் குருமூர்த்தியாய்த் திகழ்ந்தார்கள். தவத்திரு கருணாநிதி சுவாமிகளின் அருளாட்சியில் கோவிலூர் வேதாந்தத் திருமடம் தூய தொண்டாலும் தொழத்தக்க திருப்பணிகளாலும் மிகு புகழ் பெற்று, மேன்மை அடைந்தது. வாழையடி வாழையென வந்தருள் பாலித்த, கோவிலூர் ஆதீன பீடாதிபதிகளின் வரிசையில் பதினொன்றாவது மடாதிபதிகளாய் 1986 அக்டோபர் 16 ஆம் நாள் அருளாட்சி மேற்கொண்ட தவத்திரு காசி விசுவநாத ஞான தேசிக சுவாமிகள் திருமந்திரம், சித்தர் திருப்பாடல்களில் ஆழ்ந்த பற்றும் புலமையும் 'கற்பதும், கேட்பதும் முருகப் பெருமானின் அற்புதம் பொற்பதம் அடையும் பொருட்டே" எனத் தமது இளமைக் காலம் முதலாகவே கந்தனிடம் கனிந்த பக்தி கொண்டு; எந்த நேரமும் முருகப் பெருமானின் திருநாமத்தை மறவாத மனமுடையவர்கள். வாழ்த்துகிறபோது சுவாமிகளின் திருவாக்காய் வெளிப்படும் "தேவி! தேவி!" எனும் மந்திரச் சொற்கள், வணங்குவோர் வாழ்வில் மகத்தான மாற்றங்களை உருவாக்கி; மலர்ச்சியூட்டும் அருட் சொற்களாய் ஓங்கி ஒளிவீசி வருகின்றன

முறையாகத் துவராடை பூண்டு, காசி விசுவநாத ஞானதேசிகர் எனும் திருநாமம் பெற்று, கடந்த ஆறு ஆண்டுகளாகக் கோவிலூர் வேதாந்தத் திருமடத்தின் பீடாதிபதியாக வீற்றிருந்து அருள் பாலித்து வரும் சுவாமிகள் சமயத் தொண்டிலும், சமூக சேவையிலும் மக்கள் போற்றும் மகா சந்நிதானமாக விளங்கி வருகின்றார்கள். அண்மையில் பொற்கிழிக் கவிஞர் காசிஸ்ரீ அரு. சோமசுந்தரத்தை அமைப்பாளராகக் கொண்டு, மாதந்தோறும் சுவாமிகள் நடத்தி வரும் 'சிந்தனைப் பூங்கா' - காரைக்குடிப் பகுதில் வாழும் இலக்கிய, சமய, சமுதாயச் சான்றோர்களின் சங்கமமாகத் திகழ்ந்து வருகின்றது. நகரத்தார் பெருமக்களுக்கும், கோவிலூர் திருமடத்திற்கும் உள்ள தொடர்பு சுவாமிகளின் அருளாட்சியில் நெருக்கம் பெற்றுள்ளது.

உ

என்னுள் ஒரு மாற்றம்

ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்


இரு சிறகுகள் முளைத்த
பறவையைப் போல
சிந்தையில் நான் உணர்ந்தேன்.
ஒரு பால்வெளி வானில்
நான்வலம் போகச்
சிறகுகள் தனையசைத்தேன்.

ஒரு மெல்லிய தென்றல்
காற்றெனை மெல்லத்
தழுவிய சுகம் உணர்ந்தேன்
அது சொல்லிய சேதிகள்
ஆயிரம் ஆயிரம்
காவியம் போல் மகிழ்ந்தேன்.

ஒரு குவளையில் இருந்த
மதுவினைக் குடித்த
போதையை நான் உணர்ந்தேன்
என் புலம்பல்கள் யாவும்
பாடல்கள் ஆயின
பாவலன் நான் மலர்ந்தேன்.


சில பூக்களை அள்ளித்
தெளித்தது போலப்
பரவசம் நான் அடைந்தேன்
என் மேனியில் பன்னீர்
மேவிய நிலையில்
மனமோ குளிர்வடைந்தேன்.

அட! இத்தனை மாற்றம்
என்னுள் நிகழ்ந்தது
எப்படி என நினைத்தேன்
சிறு நூலிடை மாதவள்
நூலென என்னுடன்
இழைந்தபின் என்றுணர்ந்தேன்.



தவக்கனல் சுடர்விடும் குரு

போட்டோ : யோகா



ஸ்ரீ ஸத்யஸாயி பாபா

ஸத்குரு நாதன் பற்றி ஸத்யஸாயிநாதன்

“காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவாளிடமே ஈடுபட்டிருந்த ரா.க., ஸ்வாமி ஸ்ரீ ஸத்யஸாயியிடமும் ஈடுபாடு கொண்டது எப்படி? ஸ்வாமி பற்றிப் பெரியவா அவரிடம் என்ன சொல்லியிருப்பார்?” என்றறிவதில் அநேகம் ஸாயி பக்தர்களுக்கு மிகுந்த ஆர்வம்.

ஆயினும், எத்தனையோ பக்தர்களின் பரம அந்தரங்க அநுபவங்களைக் கேட்டறிந்து, அவர்கள் அநுமதித்தால் அவற்றுக்கு எழுத்துருவும் தந்து வரும் என்னை எதுவோ ஒன்று இவ்விஷயமாக எழுதவிடாமல் தடுத்து வந்திருக்கிறது.

சிறப்பு மலர் எதற்கேனும் விஷயதானம் செய்யவிருக்கிறேன் என்று தெரியவரும்போது அந்த ஸாயி ஸஹோதரர்களில் சிலர், “இந்தத் தடவையாவது அந்த விஷயம் எழுதித்தானாக வேண்டும். லாங் ட்யூ!” என்பார்கள்.

“‘மேலிடத்து’ சங்கல்பம் எப்படியோ அப்படி ஆகட்டும்” என்று சொல்லி முடித்து விடுவேன்.

மலர் வந்தபின் இந்தத் தடவையும் ஏமாற்றந்தான் என்று சோதரர்கள் காண்பார்கள். விடாமல் அடுத்த முறையும் கேட்டுக் கொள்வார்கள். வற்புறுத்துவார்கள்.

இதில் ஓர் அம்சம் எனக்கு வேதனையும் வியப்பும் உண்டாக்கும். ஸ்வாமியை’ பற்றி மஹா பெரியவாள் என்ன அபிப்ராயப்படுகிறார்களென அறிவதில் ஆர்வம் காட்டுபவர்களில் நூற்றுக் கொருவர்கூட மஹா பெரியவாளைப் பற்றி ஸ்வாமியின் கருத்து என்னவென்று கேட்டதில்லை! இத்தனைக்கும் இவர்களெல்லோரும் முதற்கண் ஸ்வாமி பக்தர்கள்தாம். அதாவது, எந்தப் புராண, இதிஹாஸத்திலும் கண்டிராத அளவுக்குப் பிரத்தியக்ஷமாக ஸ்வாமி தங்களுக்கே தரும் அருட்காப்பை நிறைய அநுபவித்திருப்பவர்கள். அப்படியிருந்தும் அவர்கள் மனத்தின் ஒரு மூலையில் பெரியவாள் அவரை அங்கீகரிக்கிறாரா என்ற கேள்வி இருந்துகொண்டே இருக்கிறது! அந்த அங்கீகார முத்திரை ஸ்வாமியின் ஸ்வாமித்வத்தை அறுதியிட்டு உறுதி செய்ய அவசியம் என்ற எண்ணமும் அந்த மூலையின் மூலையில் ஒளிந்திருக்கிறது! விளக்கடியிலேயே இருப்பவர்கள் அதற்கு வெளிச்சமிருப்பது ஸர்வ நிச்சயந்தானா என்று இன்னொரு விளக்கைக் கொண்டு நிரூபித்துக் கொள்ள விரும்புகிறார்களே என்ற வேதனை!

ஆனால் வேதனையோடு முடியவில்லை. ஓர் உவகை வியப்பும் இதில் காண்கிறேன். ஸாயி பக்தர்களாகவே தங்களைக் கருதுவோரும் தாங்கள் வழிபடும் நாயகனுக்கு ஒருவரது நற்சான்றை எங்கேயோ ஓரிழை விரும்புகிறார்களென்றால் அந்த ஒருவரான மஹா பெரியவாள் அனைவருக்குமே எப்படி மஹா மஹா பெரியவர்களாக இருக்கிறார்கள் என்பதில் வியப்பு! ஆன்மிக உலகில் ஸுப்ரீம் கோர்ட்டாக அவர்கள் இருப்பதற்கு இதைவிட என்ன வேண்டும்?

ஸுப்ரீம் கோர்ட் என்பதில் இன்னொரு பொருத்தம். ஸுப்ரீம்தான் ஆயினும் அந்தக் கோர்ட்டார் சொந்தமாகப் புதுச்சட்டம் செய்து அதன் அடிப்படையில் தீர்ப்பளிப்பதில்லை. முன்னமே செய்து வைத்துள்ள சட்டங்களைத்தான் துலா முள் இம்மியும் கோடாமல் நுணுகப் பின்பற்றித் தீர்ப்பளிக்கிறார்கள். தர்ம பீடமொன்றில் “ஆஃபீஸ்” பார்க்கும் தாமும் அவ்வாறே தர்ம சாஸ்திரச் சட்டங்களையும், அவற்றை அநுஸரித்து மேன்மக்கள் கடைப்பிடித்து வந்துள்ள ஸம்பிரதாயத்தின் விதிகளையும், அத்வைத சாஸ்திரக் கோட்பாடுகளையும், ஸ்ரீமடத்தின் மரபுகளையும் பின்பற்றித்தான் முடிவுகள் கூறலாமேயன்றி சொந்த முடிவு என்று எதுவும் எடுக்க அதிகாரம் பெற்றிருக்கவில்லை என்று ஸ்ரீ மஹா பெரியவாள் அடக்கக் கருவூலமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். எடுத்துக் காட்டிய உண்மைக்கு உயிர் கொண்ட எடுத்துக்காட்டாக நீண்ட நெடிய பீடாதிபத்தியத்தில் விளங்கியிருக்கிறார்கள். அவரவரும் சொந்தமாக முடிவெடுக்கும் சுதந்தர யுகத்தில், ஜகத்குரு என்ற உன்னத ஸ்தானத்திலிருப்பவர் சாஸ்திர ஸம்பிரதாய முடிவே முடிவு என்று சரணாகதி செய்துள்ள எளிமை தான் எவ்வளவு பெருமை வாய்ந்தது?

பொதுவாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் தமக்கு ஏற்பட்ட மரபு வழிகளைத்தான் நூறு சதமும் ஒப்பி, ஒட்டிப் பேசுவார். ஆயினும் தனியாருக்கு அந்தரங்கமாக உபதேசிக்கையில் அவ்வொரு ஜீவனுக்கு மட்டும் அவர் குருவாக நிற்பாராதலால், அவ்வொருவரின் கர்மத்தைப் பொறுத்து வழி கூறுகையில் தமது சட்டக் கட்டுக்களைத் தளர்த்திக் கொள்வதும் உண்டு. இவ்விதத்தில், ஆசார சாஸ்திர முறைகளை முற்றிலும் நடத்தியவர்களாகச் சொல்வதற்கில்லாத ராமகிருஷ்ணர், ரமணர், அரவிந்தர் போன்றோரது அடியார்களுக்கும் ஸ்ரீ மஹா பெரியவாள் உய்நெறி உபதேசித்ததுண்டு. ஆனால்

ரா. கணபதி

பொதுப்படப் பேசுகையில் இம் மஹாபுருஷர்களின் உயர்வைக் குறிப்பிடுவதுண்டெனினும், அவர்கள் காட்டிய மார்க்கங்களின் சிறப்பைச் சொல்வதுண்டெனினும், முடிமணியான ஆசாரியரெனில் அது சங்கர பகவத் பாதர்தாம், முடிவான மார்க்கமெனில் அது சங்கரர் புத்துயிர் பெய்தளித்த ஸநாதன தர்மாசாரந்தான் என்றே நாட்டுவார்.

"நானா ஆசைப்பட்டு மனுப் போட்டு இந்த ஆஃபீஸுக்கு வரலை. கொஞ்சங்கூட லாயக்கில்லாதபோது எதுவோ ஒண்ணு பிடிச்சு இழுத்துண்டு வந்து இதிலே ஒக்காத்தி வெச்சிருக்கு. இன்னமும் அதுக்கான லாயக் ஸம்பாதிச்சேனான்னு கேள்வியாத்தான் இருக்கு! ஆனாலும், நாமா பண்ணிக்காம அதுவா லபிச்ச விஷயம் - அப்படித்தான் ஒரு ஆக்ஞை இருந்து நடத்தி வெச்சிருக்கு என்கிறதாலே, 'நமக்கா ஸொந்த அபிப்ராயம்னு எதுவும் இருக்கப்படாது; இந்த ஆஃபீஸுக்குன்னு என்ன சட்டதிட்டம் உண்டோ, அந்தப்படிதான் பண்ணனும்'னு தெரிஞ்சுக்கற அளவுக்கு அந்த ஏதோ ஒண்ணு கண்ணைத் திறந்து விட்டிருக்கு. அதனாலே, முடிஞ்ச மட்டும் அப்படிப் பண்ணிக் கொண்டு போகப் பிரயத்னம் பண்றேன்" என்று அமரருள் உயக்கும் அடக்கத்துடன் அவர் கூறியதுண்டு.

ஸ்ரீ மஹா பெரியவாள் ஜகத்குருவாகப் பேசும்போது, நடக்கும்போது, 'சுயம்', 'சொந்தம்' என்ற எதுவுமேயின்றி சாஸ்திர ஆசாரங்களிலேயே அத்வைதமாக ஐக்கியமாயிருப்பவர். அதனால் தான் அவர் கூறுபவை அவர் வகிக்கும் 'ஆஃபீஸை' உத்தேசித்து மட்டும் கூறியதாயில்லாமல் அந்தரங்க ஆழுறுதியுடன் கூறும் மந்திர மொழிகளாக விளங்குகின்றன.

'ஏதோ ஒண்ணு' என்று அவர் சொல்லும் பராசக்தி ஜகத்குருவாக அவரை நிறுத்துகையில் சாஸ்திர ரூபமாக அவரது இதயத்தில் நின்று பேச்சுவிக்கிறாள். அவளே அவரைத் தனித்தனி ஜீவர்களுக்குக் குருவாக நிறுத்துகையில் காருண்ய ரூபமாக நின்று, சாஸ்திரக் கட்டை இளக்கியும் பேச்சுவிப்பதுண்டு.

இந்த ஜகத்குரு - ஜீவகுரு பாகுபாட்டிற்கு ஓர் அற்புத உதாரணம் பார்க்கலாம். அவரைப் பேச்சுவிக்காமல், கடும் மௌனத்திலேயே காருண்யம் காட்டுவித்த உதாரணம்.

1907 - இல் பெரியவாள் பீடாதிபத்தியம் ஏற்ற போதிலும் காஞ்சியிலுள்ள ஸ்ரீ மடத்தில் முதல் வியாஸபூஜை செய்தது 1953 -இல்தான். அதனைச் சேர வந்த சாதுர்மாஸ்யத்தின் போதும், அது முடிந்த பிற்பாடுங்கூட, பல மாதங்கள் மௌனம் பூண்டிருந்தார். அதில் பெரும் பாகம் காஷ்ட மௌனம் - அதாவது சிறிய அசைவும் இல்லாமல் கட்டையைப் போல் சமைந்திருப்பார்.

இச் சமயம் பார்த்து பர்மாவைச் சேர்ந்த ஒரு கோடீச்வரர் தரிசனத்திற்கு வந்தார். பௌத்த மதத்தில் தீவிர அநுஷ்டானமுள்ள அவருக்கு ஆன்மியமாக ஒரு சங்கை. அது பெரியவாளாலேயே தீரும் என்று ஸமிக்ஞை பெற்றுத்தான் காஞ்சிக்கு வந்திருக்கிறார். பெரியவாளானால் கண்ணும் கொட்டாமல், மூச்சு விடுகிறாரா என்றுகூடத் தெரியாமல் சிலையாக இருக்கிறார்!

பர்மியர் கூறியதை அவர் காதில் வாங்கிக் கொண்டதாகவே திருக் குறிப்புக் காணோம்.

பர்மியரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்.

அந்நாள் ஸ்ரீமட மானேஜர் ஸி.எஸ். விச்வநாதையர் வெள்ளை மனத்துடன் சொல்வார்: "என்னால் தான் பொறுத்துக் கொள்ள முடியவில்லை! விஷயம் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில் அந்த பர்மாக்காரன் எத்தனை ஏக்கமும் துக்கமுமாயிருக்கிறானென்று ஒரு பக்கம். இன்னொரு பக்கம், கோடீச்வரனாயிருக்கிறானே, வந்த காரியம் அநுகூலமானால் நம்ம கஜானாவை ரொப்பிவிடுவானே; இந்த 'யஜமான'ரானால் இப்படிப் பண்ணுகிறாரே என்று! எத்தனையோ முட்டிக்கொண்டு பார்த்தேன். ஒன்றும் அந்த காஷ்டத்திடம் பலிக்கவில்லை!"

தவித்து வேண்டிவந்த சந்தேக நிவாரணத்தைப் பெறாமலே பர்மியர் ஊருக்குத் திரும்ப வேண்டிய நேரமும் வந்தது. பெரியவாள் ஸந்நிதியில் இருந்த அளவும், தம்மை அவர் கவனித்ததாகத் தெரியாவிட்டாலும், அந்த ஸாந்நித்தியமே தமக்கு ஒரு பெரும் சாந்தியூட்டியதாக ஸ்ரீமடத்தினரிடம் அந்த பர்மியர் கூறிக் கடைசியாக ஒரு தரிசனம் செய்யச் சென்றார் - மடத்தின் கஜானாவையும் ஓரளவு நிரப்பிவிட்டு.

பெரியவாள் நேராக அவரை நோக்கினார். பல காலமாகப் புறப்பொருள் எதையும் உற்று நோக்காதிருந்த திருநயனங்களில் சூரியனின் ஒளியும் சந்திரனின் குளுமையும் கலந்து நிர்த்தமிட்டன.

பர்மியர் பரவசரானார். அழுதார், சிரித்தார்! ஆடினார், பாடினார்! பன்முறை பணிந்தெழுந்தார்.

சரேலெனப் பெரியவாளை மிகவும் ஸமீபித்து அவருடைய காதோடு காதாக ஏதோ விம்மி விம்மிக் கூறினார்.

பல காலமாக நெகிழாதிருந்த திரு அதரங்கள் தாமரை மலர்வதைப்போலத் திருநகை புரிந்தன.

பூமியில் கால் பாவாமலே பர்மியர் ஆனந்தமாக அகன்றார். அவருடைய இதய கஜானா நிரம்பிவிட்ட இறும்பூது!

மாதங்கள் கடந்து பெரியவாள் பேச்சுலகுக்குத் திரும்பினார்.

ஸ்வாதீன பக்தர்கள் சிலர், அன்று பர்மியர் அழுது, சிரித்து, ஆடிப் பாடும்படி என்ன நேர்ந்தது என்று அவர் சொல்லித்தானாக வேண்டுமென்று அடம் பிடித்தனர்.

அவரும் அதற்கு மேல் அடம் பிடித்தார் - அது பற்றிச் சொல்வதில்லை என்று!

"அவனுக்கு என்ன ஆச்சுன்னு எனக்கு எப்படித் தெரியும்? அவனையே போய்க் கேட்டுக் கோங்கோ!" என்றார்.

"ஸரி, பெரியவா காதுலே அவர் என்னமோ சொல்லி, பெரியவா அதை அங்கீகாரம் பண்ணிண்டு சிரிச்சேளே! அதுவாவது என்னன்னு பெரியவா சொல்லலாமே!" என்றார் அவர்களில் ஓர் அதிஸ்வாதீன அடியார்.

"அதுவா?" என்ற பெரியவாள் சட்டென்று விஷயத்தைக் கொட்டிவிட்டார், குறும்பு கொப்புளிக்க: "பொழுது விடிஞ்சா, பொழுது போனா நான் யாரைக் கண்டனம்

பண்றேனோ, அந்த புத்தரைச் சொல்லி, 'அவர் நீதான்!'ன்னுட்டுப் போயிட்டான்!"

சங்கர மடத்தின் ஜகத்குருவாக இருந்துகொண்டு எவரைக் கண்டிருக்கிறாரோ அவராகவே தரிசனமும் உள்ளுபவமும் தருகிறார் ஒரு தனி ஜீவனுக்கு குருவாகும்போது!

❁

இத்தனை பீடிகைக்குப் பிறகு ஸ்வாமி பாபா விஷயத்திற்கு வரலாம். சாஸ்திர தர்ம விதிகளை வெகுவாகச் சிலாகித்தேதான் ஸ்வாமி பேசுகிறார். தம்மிடம் வரும் கடும் ஆசாரக்காரர்கள் அக்கடுமையையே தொடரவுங்கூட அவர் ஊக்கியிருக்கும் உதாரணங்கள் உண்டு. ஆனாலும் நடைமுறையில் அவர் செய்வதில் பல சாஸ்திர - ஸம்பிரதாய விதிகளுக்கு மிகவும் மாறாக உள்ளன. எனவே இவற்றின் மெய்க் காவலுக்கே உள்ள பீடத்தின் அதிபரிடமிருந்து என்ன பொதுக் கருத்து எதிர்பார்க்கக் கூடும்?

போதாததற்கு 'மிராகிள்' வேறு! அற்புதம் ஆற்றிய ஸித்த புருஷர் சிலரைப் போற்றிப் பெரியவாள் பேசுவதுண்டுதான். ஆனால் ஸ்வாமி பக்தர்களோ அவர் செய்வது ஸித்து வகையைச் சேர்ந்ததல்லவென்றும், அது ஸாக்ஷாத் தெய்வ சக்தியே என்றும் நம்புகிறோம். அவதாரக் கண்ணன் அற்புதம் செய்தது போலவே இது எனக் கருதுகிறோம். உலகறியக் கடந்த ஐம்பத்திரண்டு ஆண்டுகளாக எவ்வித சமய - யோக அநுஷ்டானமும் இல்லாமல் ஸ்வாமி அற்புதங்களுக்கு மேல் அற்புதமாகப் புரிந்து வருவதால் அவர் தெய்விக சக்தி பொருந்திய அவதாரம் என்று உறுதி கொண்டிருக்கிறோம். தெய்வமாக் கருணையாகவே தெரியும் அவரது அதிசயப் பிரேமை நம் உறுதியை மேலும் ஆழங்காற்படுத்துகிறது.


ஆனால் 'கோர்ட்டா'ருக்கு ஆதாரமான சட்டப் புத்தகப்படி அவதாரத்தை நிர்ணயிப்பதென்றாலோ? ஆகம, புராணாதிகளில் அவதாரம் பற்றிக் கூறியிருப்பதில், வைதிக சாஸ்திர ரக்ஷணைக்காகவும், குறிப்பாக வர்ணாசிரமங்களை நிலை நாட்டவுமே அவதாரம் நிகழ்வதாகச் சொல்வதைத் தானே ஸ்ரீமட மரபு பிரமாணமாகக் கொண்டிருக்கிறது? முக்கியமாக சங்கர பகவத்பாதர் இப்படித்தானே அவதார லக்ஷணம் கூறியிருக்கிறார்?

ஆகையால் ஜகத்குரு பெரியவாளிடமிருந்து ஸ்வாமி பற்றி அவரது அடியார்கள் என்ன எதிர்பார்ப்பதற்கிருக்கிறது?

"அதிருக்கட்டும். ஜகத்குருவாக அவர் ஸ்வாமியின் ஸ்வாமித்துவம் பற்றிப் பொதுக் கருத்து சொல்வதற்கில்லாமலே இருக்கட்டும். ரா.கவின் ஜீவகுருவாக ஏதேனும் தனிக்கருத்துச் சொல்லியிருக்கக் கூடுமே, அது என்ன?" என்கிறீர்களா?

இப்படிக் கேட்டால் - ஜீவலோகத்தில் ஒருவருக்குச் சொன்னது மற்றவர்களுக்குப் பொருந்தும் என்று சொல்வதற்கில்லையே!

இதற்கு அமுத்தமான சான்று நேரில் கண்டிருக்கிறேன். சித்தப்பிரமை பிடித்த ஒரு மத்திம வயதுக்காரரை மந்திராலயம் அழைத்துச் செல்லப் பெரியவாள் ஒரு குடும்பத்தாருக்கு அநுமதி



எங்கே வள்ளுவர்?

ஆர். பி. சாரதி

எங்கே வள்ளுவர் இருக்கின்றார்?
எங்கும், என்றும், தேடுகிறேன்!

இருக்கின்றார் அவர் நூலகத்தில்,
இனிக்கின்றார் அவர் இதழில் எலாம்!

படத்தில் பளிச்சென ஒளிர்கின்றார்,
பாடத்திலும் அவர் மிளிர்கின்றார்!

வானொலியில் அவர் குரல் ஒலிதான்,
வண்ணப் பெட்டியில் குறள் ஒளிதான்!

சிலையாய் வெயிலில் காய்கின்றார்,
செல்கின்றார் அவர் பேருந்தில்!


சொற்பொழிவில் அவர் முழக்கந்தான்,
சுவரொட்டியில் அவர் சிரிப்புத்தான்!

அஞ்சல் தலையிலும் அவர் சிக்கி,
அடி பட்டுப்பட்டுத் தேய்கின்றார்!

உதட்டில் அவரை ஏற்றிடுவார்
உளத்தில் என்று போற்றிடுவார்?

வாக்கில் மட்டும் வாழ்ந்திடுவார்
வாழ்வில் என்று கலந்திடுவார்?

வாழ்வில் வள்ளுவம் வருநாளில்
வடிப்போம் அவர்க்கொரு கவிக்கோயில்!



தந்து, பிரஸாதமளித்து, ஆசீர் வதித்து அனுப்பினார். அதே சமயம், அதே கோளாறு கொண்ட தம்பியை உடன் அழைத்துவர முடியாமல், தான் மட்டும் பெரியவாளிடம் விண்ணப்பித்துக் கொள்வதற்காக வந்திருந்த ஓர் அண்ணன் காரரிடம், "அவாளுக்குச் சொன்னது உனக்கில்லை! நீ அங்கேயெல்லாம் எங்கேயும் தம்பியை அழைச்சுண்டு போகவேண்டாம்!" என்றார். (வேறு பரிஹாரமும் சொல்லாமல், அநுபவித்துத் தீர்க்கட்டும் என்று 'கோடி காட்டி' விட்டதாக நினைவு).

ஆக, ஒருவருக்குச் சொன்னதைச் சகலருக்கும் ஆக்குவதற்கில்லையோ என்று தோன்றுகிறது!

இந்த விளக்கம் அல்லது குழப்பம் ஒருபுறமிருக்க, இந்த விஷயம் பற்றி எழுதுவதற்கு உட்தூண்டுதல் இல்லாமல் மனம் மௌனம் சாதிப்பதுதான் உண்மையான காரணம். என்றேனும் அந்த உட்தூண்டுதல் ஏற்பட்டு எழுத வைத்தாலும் மிக்க மகிழ்ச்சியே!

தற்போது தூண்டுதல் 'ரிவர்ஸில்'தான் இருக்கிறது - ஸ்வாமிகளைப் பற்றி ஸ்வாமி என்ன சொன்னாரென்று விவரிப்பதில்! *

எனக்குத் தெரிந்த அளவில் பெரியவாள் பற்றி ஸ்வாமியின் கருத்தென்னவென்று அறிவதில் மிக்க ஆர்வமாயிருந்தவர் 'யூனிகெம்' ஆர். நாகராஜன். அவர் உள்ளுருகிய ஸாயிக் காதலுக்கும், உயரிய நட்புப் பண்புக்கும் இலக்கியமாயிருந்தவர். ஸ்வாமியிடம் நெருக்கமாக, தாயிடம் குழந்தையாகப் பழகும் பேறு பெற்றவர். ஆயினும் எதனாலோ பெரியவாள் விஷயம் கேட்க முடியாமல் தொண்டையில் ஒரு அடைப்பான் போட்டுவிடுமாம்.

மதிப்பிற்குரிய இலக்கிய கர்த்தரும், பின்னாளில் ஸாயிக் கல்லூரிகள் பல்கலைக் கழக அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்ட போது அதன் முதல் துணை வேந்தராக இருந்தவருமான ஸ்ரீ வி.கே.கோகாக்கிடம் நாகராஜனுக்கு நல்ல பழக்கமுண்டு. எனவே அவரிடம் தம்முடைய ஆர்வ வினாவைத் தெரிவித்து, அவ்விஷயத்தில் அவருக்கு ஸம்மதமிருந்தால் அவருடைய வினாவாகவே ஸ்வாமியிடம் ஸமர்ப்பிக்கக் கோரினார்.

பெரியவாள் குறித்து ஸ்வாமியின் கருத்தை அறிய கோகாக்

அது வரை எண்ணவில்லை. ஆயினும் வேறு சில மஹாபுருஷர்களை அவர்களது அடியார்கள் அவதாரமாகச் சொல்வது பற்றி ஸ்வாமியிடம் கேட்க எண்ணியிருந்தாராம். பெரியவாளையும் இப்போது அந்த லிஸ்டில் சேர்த்துக் கொள்வதாக நாகராஜனிடம் கூறினார்.

ஸ்வாமியிடம் வினாக்களுக்கு விடை பெறும் வாய்ப்பு கோகாக்குக்கு விரைவிலேயே கிடைத்தது.

ஸ்ரீராமகிருஷ்ணரை அவரது திருநாமத்தில் அமைந்த மடத்தினர் இறைவனவதாரமாகவே கூறுவது பற்றி அவர் ஸ்வாமியிடம் கேட்டார்.

"ஏன், இதில் என்ன கேள்வி; அவர் அவதாரந்தான்" என்றார் ஸ்வாமி.

ஸ்வாமியிடம் வருமுன் கோகாக் ஸ்ரீ அரவிந்தர், அன்னை ஆகியோரது அத்யந்த சீடராயிருந்தவர் எனவே, சட்டென ஒரு குதூஹலம் ஏற்பட, அவர்களைப் பற்றிக் கேட்டார்.

"அவதார், அவதார்" என்றார் ஸ்வாமி.

"ரமணர்?"

"அவருந்தான்!"

"காஞ்சீபுரம் 'எல்டர்' சங்கராசார்யர்?"

"அவதார்".

ஸ்வாமியே தொடர்ந்தார்: "ஸகல மார்க்கங்களையும் உத்தரணம் செய்வதற்காக பகவந்தன் நர ரூபத்தில் வருவது ஸமஷ்டி அவதாரம். அது தவிர, ஒவ்வொரு மார்க்கத்திற்கென அவன் தன்னுடைய அம்சத்தால் அப்படி வருவது வ்யஷ்டி அவதாரம். இவ்வாறாக, ராமகிருஷ்ணர் பக்திக்கு; அரவிந்தரும் 'மத'ரும் யோகத்திற்கு; ரமணர் ஞானத்திற்கு; காஞ்சி சங்கராசார்யர் கர்மாவுக்கு" [2].

கோகாக் : "முதல் மூன்று புரிகிறது. ஆனால் அத்வைத (ஞான மார்க்க) பீடாதிபதியைக் கர்மாவுக்குச் சொல்வது புரியவில்லை".

ஸ்வாமி : "கர்மா என்றால் சாஸ்த்ரீய கர்மாநுஷ்டானம். சங்கர மடங்களின் ஸ்வாமியார்கள் அத்வைத விஷயமாகச் சொல்வது வித்வத் ஸதஸ் போன்றவற்றில் தான். பொது ஜனங்களுக்கென்று வரும்போது அவர்கள் அத்வைதம் சொல்வது ரொம்பக் குறைவு; அங்கே தர்ம சாஸ்திர அநுஷ்டானங்களைத்தான் நிறையச் சொல்வார்கள். அதில் ஸ்வாமிக்கு வருத்தங்கூட! ("Swami said he was not happy about it" என்று கோகாக் கூறியதையே 'வருத்தம்' என்று ஆக்கியிருக்கிறது – வேறு பொருத்தமான வார்த்தை தோன்றாத வருத்தத்தோடு! இந்த விளக்கத்திற்குக் காரணம், பிற்பாடு பெரியவாளின் "கவலை" பற்றி ஸ்வாமி கூறப்போவதில் தெரியும்). சாஸ்திர விதிகளின் படியே நடக்கும்படி உபதேசிப்பது சுலபம். ஆனால் நிகழ்காலச் சூழ்நிலையில் அதை நடத்திக் காட்டுவது ஜனங்களுக்குக் கஷ்டம். உபதேசிப்பவர்களுக்கும் மற்றவர்களைவிடக் கடுமையான விதிகள் இருக்கின்றன. அவற்றை அவர்கள் அப்படியே கடைப்பிடிக்கிறார்களா என்று பார்த்தால், பொதுவில் அவர்களும் அசாஸ்திரீயமாகத்தான் அநேகம் செய்ய வேண்டியிருப்பதாகத் தெரியும். இந்த விஷயத்தில் குறையே சொல்ல முடியாமல் ஸ்வச்சமான உதாரணமாக இருப்பது (Perfect example) காஞ்சி பெரிய சங்கராசார்யர்தான்".

இவ்வாறு கூறிய ஸ்வாமிக்கு அந்த ஆசார்யருக்கான சாஸ்திரப் பிரமாணங்களின்படி தாம் அவதாரமில்லை என்றும் தெரியாமலா இருக்கும்?

(தனிப்பட்ட சிலருக்கு மட்டும் உய்வுதர 'வ்யக்திநாத'னாகவும் உலகினரனைவருக்கும் உய்வுதர 'லோகநாத'னாகவும் இறைவன் அவதரிப்பது பற்றியும் கோகாக்கிடம் ஸ்வாமி கூறினாராம்.)

*

பெரியவாளைக் கர்ம மார்க்க அவதாரமென ஸ்வாமி சொன்னதால் ஞான மூர்த்தமாகக் கருதவில்லை என்று ஆகிவிடுமா? இல்லை. எதிர்பாராத ஒரு ஸந்தர்ப்பத்தில் பெரியவாளை "அத்வைத ஸ்வரூபம்" என்றே ஸ்வாமி சொல்லக் கேட்கும்



மஹா பாக்கியம் அடியேனுக்கே கிட்டியிருக்கிறது.

என் தாயும் நானும் புட்டபர்த்திக்குப் புறப்பட்டோம். எங்களுக்குத் தெரிந்த ஒரு பெண்மணி ஸ்வாமிக்குக் கடிதம் கொடுப்பதாகச் சொன்னாள். சொந்த விஷயமாகவே தீர்க்கவொண்ணாத இடர்ப்பாடு ஏற்பட்டாலன்றி ஸ்வாமிக்குக் கடிதம் கொடுக்கத் தயங்குபவன் நான். பிறருக்காக அப்படிச் செய்வதை அவர் உவப்பாரா என்று அஞ்சவே செய்பவன். எனவே யோசித்தேன். ஆனால் தயா தாட்சிண்யங்களுக்கு ஓர் உருவாயிருந்த என் தாயார் கடிதத்தை வாங்கி வைத்துக் கொண்டாள். 'அவளுடைய கஷ்டம் நமக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் இந்த உபகாரங் கூடப் பண்ணாமலிருக்கலாமா?" என்றாள்.

'அவளுடைய கஷ்டம்' என்னவென்றால் ஸ்வாமியிடம் அவளுக்குப் பொங்கிய பக்திதான்! இதில் கஷ்டம் என்னவெனில், அவளுடைய கணவருக்குப் பெரியவாள் ஒருவரிடந்தான் நம்பிக்கை, ஈடுபாடு எல்லாம். அவரிருக்கும்போது இன்னொருவரை நினைப்பதே அடாத செயல் என்று மனைவியை ஏசினார். ஸ்வாமி சென்னைக்கு வரும்போது கூட தர்சனத்திற்குப் போகக்கூடாதென்று தடுத்தார். தாபம் தாளாது தான் பெண்மணி ஸ்வாமிக்கு முறையிட்டுக் கடிதம் எழுதியது.

புட்டபர்த்தி அடைந்தோம். 'ஸ்வாமிக்கே எல்லோர் கஷ்டமும் தெரியும். ஆகையால் நாம் பிறருக்காக அவரிடம் ஒன்று செய்வதை அவர் ரஸிக்காமலிருக்கலாம். இன்டர்வ்யூ கொடுத்து ஆற அமரப் பேசினாரானால் வேணுமானால் கடிதத்தைக் கொடுக்கலாம். 'தர்சன் லைனில் வேண்டாம்!" என்று அம்மாவிடம் சொன்னேன்.

"இன்டர்வ்யூ கிடைக்கும், கிடைக்காது! யாருக்குத் தெரியும்? தரிசனத்தின்போதேதான் கொடுத்துப் பார்க்கப் போகிறேன்" என்றாள் அவள் விடாப்பிடியாக.

அப்படியே அன்று மாலை பிரசாந்தி நிலயத்தில் ஸ்வாமி தரிசன ஸஞ்சாரம் செய்துவரும்போது அவள் கடிதத்தை நீட்ட, ஸ்வாமி பேட்டிக்கு அழைத்து விட்டார்!

அந்தப் பெண்மணி விஷயமாகத்தான் பேட்டியே தொடங்கிக் கடகடவென்று பேசிப் போனார். "அந்தம்மா, பாபம்! 'ஸ்வாமி', 'ஸ்வாமி'ன்னு ஒரே தாபம்! ஹஸ்பென்டா? 'சங்கராசார், சங்கராசார்'ங்கறாரு! சொல்றாரே கண்டா (தவிர) அந்த சங்கராசாரையாவது ஸரியாப் புரிஞ்சுகொண்டாரா? அவரு யாரு? அத்வைதம் சொல்ற சங்க்ராசார் அநேகம் பேரு இருந்திருக்காங்க. இவரு சொல்றது மட்டுமில்லை - அத்வைத ஸ்வரூபம்! இல்லை? அந்த அத்வைதத்திலே (தம்மையே தொட்டுக் காட்டிக் கொண்டு). இதுவும் அத்வைதம் (ஐக்கியம்)னு புரிஞ்சுக்கற . பக்குவம் அந்தம்மா பர்த்தாவுக்கு இல்லே. பரவாயில்லே. ஒரு நாள் புரிஞ்சுப்பாரு. ரெண்டு பேரும் ஸ்வாமி கிட்டே நிறைய வருவாங்க. அந்தம்மா கிட்டே சொல்லுங்கோ..."

ஆம், அப்புறம் சிறிது காலத்திலேயே அப் பெண்மணியின் கணவரும் ஸ்வாமியின் பரம பக்தரானார். இருவரும் ஸ்வாமியிடம் அடிக்கடி சென்று ஏராளமான அருள் அறுவடையும் பெறலாயினர்.

எனக்கும் அவர்களால் எப்பேர்ப்பட்ட அறுவடை! ஸ்வாமியின் திருமுகம் பொங்க, கண்கள் மின்ன, "சங்கராசார்... அத்வைத ஸ்வரூபமே! அந்த அத்வைதத்திலே இதுவும் அத்வைதம்" என்றது இன்றும் கண்முன் தோன்றி, காதில் ரீங்காரமிட்டு, கருத்துக் குருத்தைச் சிலிர்க்க வைக்கிறது!

❋

என் 'ஸ்வாமி' நூலின் ஆங்கில ஆக்கத்துக்குப் பிரசாந்தி நிலய சஞ்சிகையின் ஆசிரியரான அறிஞர் - கவிஞர் - அரிய பக்தர் ஸ்ரீ கஸ்தூரி அணிந்துரை அனுப்பி இருந்தார். ஸாயி ராமனின் வால்மீகி என்று அவரைச் சொல்லலாம். "ஸாயி ராம! நீ ஸமானமெவரு?" என்ற கருத்துக் கொண்ட தியாகையர் என்றும் சொல்லலாம். எனவே அவருடைய அணிந்துரையில் பெரியவாளைக் குறிப்பிடுவாரென்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் குறிப்பிட்டிருந்தார். அதுவும் எப்படி? பெரியவாளின் உயர் பெரும் மாண்பினை உளமாரக் கூறி! "ரிஷிகள் எனும் ஹிமாலயத் தொடர் வரிசைகளுள் எவரையும் விதிர் விதிர்க்கச் செய்யும் உன்னதச் சிகரங்களில் ஒன்றாக மதிக்கப்பெறும் காமகோடி பீட மஹா சங்கராசார்யர்" என்ற அற்புதமான சொற்கோவையில்!

அடுத்த முறை அவரைச் சந்தித்தபோது இவ்விஷயமாக அவரைப் போற்றிக் கூறினேன்.

"பெரியவா, சின்னவா யாரைப் பத்தியும் அபிப்ராயம் சொல்ல நமக்கு என்ன தெரியும்? எல்லாம் நம்ம ஸ்வாமி அபிப்ராயந்தான்!" என்றார்.

❋

பிரசாந்தி நிலயவாசினியான ஒரு மாது. அவருக்குப் பெரியவாளைத் தரிசிக்க வேண்டுமென்று மிகவும் ஆவல் எழுந்தது. ஸ்வாமியிடம் அப்படிச் சொல்லி அநுமதி கேட்பது தவறோ என்று பயப்படவும் செய்தார்.

சென்னை சென்று குடும்ப விவகாரங்கள் சிலவற்றை முடித்து வருவதாகச் சொல்லி ஸ்வாமியிடம் அநுமதி கேட்டார்.

ஸ்வாமி குமின் நகையுடன், "காஞ்சிபுரம் போய் சங்கராசார் யாரை நல்லா தரிசனம் பண்ணிக் கொண்டு வா!" என்று சொல்லிக் கை நிறையப் பணமும் கொடுத்து அனுப்பி வைத்தார்!

❋

புகழ் மிக்க ஒரு தம்பதியர் வெகு காலமாகப் பெரியவாளின் பரம பக்தர்களாக இருப்பவர்கள். பிற்பாடு ஸ்வாமியிடமும் மிக்க பக்தி பூண்டனர். அவர்களிடம் பெரியவாளைப் பற்றி ஸ்வாமி விசாரிப்பதுண்டு. அவர்களுக்குப் பிரச்னைகள் இருந்த ஒரு ஸமயம் பெரியவாள் மிகவும் அக்கறையுடன் அது தீர உபாயங்கள் வகுத்துக் கொடுத்து ரக்ஷித்திருந்தார். இது பற்றித் தம்பதியரில் கணவராயிருப்பவர் ஸ்வாமியிடம் சொல்கையில், உணர்ச்சியெழுச்சி

யோடு, "எங்களைப் பற்றிப் பெரியவா அவ்வளவு கவலைப் பட்டிருக்கிறார்!" என்றார்.

ஸ்வாமி அவரை இடைமறித்துப் பளிச்சென, "கவலை இல்லே! கருணை!" என்று ஆழ்பொருளோடு 'எடிட்' செய்தார்.

(பெரியவாள் 'கவலை'ப்பட மாட்டாரெனில் ஸ்வாமியும் 'வருத்த'ப்பட மாட்டார்தானே?)

என்றேனும் ஒரு காலத்தில் எல்லாப் பணிகளிலிருந்தும் விடுபட்டு ஏகாந்த வாழ்வு மேற்கொள்ள வேண்டும் என்று அம்மனிதர் அவ்வப்போது சொல்வார். அத்யந்தமான இரு நண்பர்களைக் குறிப்பிட்டு அவர்கள் தங்களுக்கு இருக்கை உதவ எப்போதும் சித்தமாக இருப்பதாகவும் கூறுவார்.

ஸ்வாமியிடமும் இவ்விஷயமாக அவர் ஆரம்பித்தார். "எல்லாத்தையும் ஒரு நாள் விட்டுட்டு பீஸ்ஃபுல்லாப் 'புறப்பட்டுப் போகணும்'னுதான் ஆசை. அதுக்கு ரெண்டு இடம் இருக்கு..."

ஸ்வாமி குறுக்கிட்டுச் சொன்னார்: "ஒன்று காஞ்சிப் பெரியவரு; இன்னொண்ணு ஸ்வாமி".

இதை அந்த பக்தர் நினைவு கூரும் போதெல்லாம், "நான் ஏதோ லோக மட்டத்திலே ரெண்டு பேரை நெனச்சா ஸ்வாமி ஒரே தூக்காத் தூக்கிட்டார்!" என்பார்.

*

சில ஆண்டுகளுக்கு முன் எனக்குக் கழுத்தில் தாங்க முடியாத ஒரு வலி உபத்ரவித்துக் கொண்டிருந்தது. அது பற்றி ஸ்வாமியிடம் விஞ்ஞாபித்தேன். பரிஹாரம் செய்யாமல் – சொல்லக் கூடச் சொல்லாமல், 'டயக்னோஸிஸ்' மட்டும் கூறி ஸ்வாமி நிறுத்திவிட்டார். வேண்டுமென்றே தான் அப்படிச் செய்திருக்க வேண்டும்.

ஏனென்றால், பல ஆண்டுகளுக்கு முன் இதே தொந்தரவு எனக்கு உண்டானபோது பெரியவாளிடம் நான் முறையிட, அவர் என்ன 'டயக்னோஸிஸ்' கூறினாரோ அதையேதான் இப்போது ஸ்வாமியும் கூறியிருந்தார். அப்போது பெரியவாளும் பரிஹாரம் சொல்லவில்லை. "அதுவே ஸரியாயிக்கட்டும். நீ அதை ரொம்ப கவனிக்காதே!" என்றுதான் சொல்லியிருந்தார். அப்புறம், அவரது சூக்ஷ்ம அருள் உட்பாய்ந்ததாலேயே இருக்க வேண்டும், சரியாகவும் ஆயிற்று.

காஞ்சி காமாட்சி

வ. நித்தியானந்தம்

காஞ்சி மாநகர் வாழ்பவளே!
காமாட்சி எனும்பேர் கொண்டவளே!
நெஞ்சிற்கு நிம்மதி தருபவளே!
நேர்மை வழிசென்றால் அருள்பவளே!
அழகின் வடிவிலே நிற்பவளே!
அடியார் குறைகளைத் தீர்ப்பவளே!
மழலைகள் சொல்லாய்த் திகழ்பவளே!
மமதை கொண்டால் அழிப்பவளே!
சிங்க வாகனமதில் வலம்வருபவளே!
சிறந்தோர் கனவில் செல்பவளே!
மங்கலமாய் என்றும் விளங்குபவளே!
மனதை நாளும் தொடுபவளே!
தேவைகளைப் பூர்த்தி செய்பவளே!
தேவர்களை மனிதர்களைக் காப்பவளே!
சேவை செய்வோரைப் பார்ப்பவளே!
சேரும் பாவங்களை ஓட்டுபவளே!

ஆனால் சில ஆண்டுகளுக்கு அப்புறம் இப்போது மீண்டும் உபாதை தலையெடுத்திருந்தது. ஸ்வாமியிடம் விண்ணப்பித்தால், அன்று பெரியவாள் சொன்ன டயக்னோஸிஸையே திரும்பச் சொல்லி, அதோடு நிறுத்திக் கொண்டு வேடிக்கை பார்க்கிறார்!

"முன்னே பெரியவாளும் இதையேதான் சொன்னா" என்ற நான், "நிவர்த்திக்கு ஸ்வாமி ஒண்ணும் சொல்லலியே!" என்று வேண்டினேன்.

"அப்போ பெரியவா என்ன சொன்னா?" என்று ஸ்வாமி கேட்டார்.

சொன்னேன்.

ஸ்வாமி திருமுகத்தில் கூடுதலான ஒரு பிரகாசம் திகழ, "அந்தப் பெரியவா சொன்னதையேதான் இந்தப் பெரியவாளும் சொல்றேன்" என்றார்!

அந்த – இந்த என்று வேறுபடுத்தாதே என்பதுபோல, ஒளி நயனங்களில் நயமான குறும்பு மிளிர்ந்தது!

அப்புறம் அந்த உபாதை எப்படி நிரந்தரமாக விலகிற்று என்பது தனிக் கதை.

*

பிரசாந்தி நிலயத்திலேயே 'ஸெட்டில்' ஆகிவிட்டாலென்ன என்று ஒரு சமயம் மிகவும் ஆவலாயிருந்தது. ஆனாலும் 'தெய்வத்தின் குரல்' பணியின் நினைவு வந்து அதற்கு அணை போடும். 'நமக்கே கஷ்டப்பட்டால்தான் புரியும் விதத்தில் இத்தனை கிறுக்கலாகவும், நூதன 'ஷார்ட் - ஹான்ட்' ஆகவும், அரைகுறை மேற்கோள்கள் கொண்டதாகவும் ஏராளமான விஷயம் பெரியவாளின் உபந்நியாஸங்களிலிருந்தும், அதைவிட அதிகமாக உரையாடல்களிலிருந்தும் சேகரித்து வைத்திருக்கிறோமே! நம்மையன்றி யாரும் இந்தத் தங்கச் சுரங்கத்தை அகழ்ந்து, பெரியவாள் தந்த செல்வத்தை உலகுக்கு உரிமையாக்க முடியாதபடி வைத்திருக்கிறோமே! இதைப் பூர்த்தி செய்யாமல் பர்த்திவாஸத்திற்குப் போவது சரியா? நூலகங்களில் புத்தகங்கள் பார்த்தும், பண்டிதர்களை ஆலோசனை கலந்தும், மற்றும் செய்ய வேண்டியவற்றைச் செய்தும் இக்குறிப்புகளை ரூபம் செய்யச் சென்னைதானே ஏற்ற இடம்? முக்கியமாக, அச்சக வேலையை இங்கேயிருந்தால்தானே உடனுக்

குடன் முடித்துத்தர முடியும்?' என்று யோசிப்பேன்.

அப்போது பர்த்தி செல்ல வாய்த்தது.

ஸ்வாமி அங்கேயே வந்து ஸெட்டில் ஆகும்படியாக அருளாணை பிறப்பித்தார்! நான் விண்ணப்பிக்காமல் அவரே அப்படிக் கூறினார்!

அவர் அழைப்பு விடுத்ததன் அன்புப் பாங்கு! உள்ளம் பொங்கிற்று!

ஆனாலும் பொங்கும் பாலைத் தணிக்க ஊற்றும் நீராகத் 'தெய்வத்தின் குரல்' நினைவும் வந்தது. சொல்லலாமா, கூடாதா என்று கூடவே குடைச்சலும்!

அதே விநாடி ஸ்வாமி கேட்டார் "இப்போ என்ன எழுதிக் கொண்டிருக்கிறது?"

அப்...பா என்று ஆசுவாஸமடைந்தேன். அவரே கேட்டபின் தாராளமாகச் சொல்லலாம்தானே? 'தெய்வத்தின் குர'லில் அப்போது மேற்கொண்டிருந்த பகுதியின் தொகுப்பு வேலை பற்றிக் கூறினேன்.

மடை திறந்தாற்போல அப்போது ஸ்வாமி மணிக்குரலில் கூறிய மணிமொழிகள்!

"ஆதி சங்கரரு எத்தனையோ ஸெஞ்சுரி முன்னாடி இருந்துட்டுப் போயாச்சு. அப்பறம் அவரு பேரு வெச்சுக்கொண்டு எத்தனையோ பேரு வந்தாச்சு. ஆனா அவரு ஹ்ருதயத்தை ஸெண்ட் பெர்ஸெண்ட் ரிஃப்ளெக்ட் பண்ணிப் பேசறவரு, பண்றவரு காஞ்சி பெரிய சங்கராசார்தான்! அவரு சொல்றது நீ நல்லா 'ஸிஸ்டம்' பண்ணி, செஞ்சுகொண்டு வரே! நீதான் அதைக் 'கன்டின்யூ' பண்ண முடியும். நல்லா செஞ்சுப் பூர்த்தி பண்ணு! மெட்ராஸிலே இருந்தாத்தான் அந்தக் கார்யம் நடக்கும்... (என் இதயத்தைத் தொட்டு) இதுதான் 'ரியல்' ப்ரசாந்தி நிலயம்; ஸ்வாமி எப்பவும் இதுலே இருக்கறது. ஸ்வாமி(யைப் பற்றிய) 'புக்ஸ்', வேறே 'புக்ஸ்' நீ எழுதறதையெல்லாம்விட ஸ்வாமிக்கு ப்ரீதி நீ இந்த சங்கராசார் 'புக்ஸ்' எழுதறதுதான். 'ஃப்யூச'ர்லே ஸநாதன தர்மா என்ன (என்று) 'ரெஃபர்' பண்றதுக்கு இதுதான் 'கெய்டா' இருக்கப் போறது. நல்லா நடக்கும். ஸ்வாமி க்ருபா பூர்ணமா இருக்கு".

ஆஹா! நூறு சதமும் சங்கர ராகவே ஸநாதன தர்மத்தை எடுத்தியம்புபவர் பெரியவாள் தானாம்! ஸ்வாமியைக் குறித்த நூல்களையும்விட ஸ்வாமிக்கே உவப்பானது 'தெய்வத்தின் குரல்' தானாம்!

இதன் பின்னர், கட்டுரைகளாக ரூபம் பண்ணவே இயலாதென்று நான் கழித்துக்கட்டவிருந்த ஏராளமான குறிப்புகளும் ரூபம் பெறுவதற்கு அக்கிருபா சக்தி தோன்றாத் துணை புரிந்து வருகிறது! தொகுப்புப் பணியும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

*

நூலைத் தொகுப்பவன் ஓரளவேனும் நூல் வழி நிற்கவேண்டும் என்பதில் ஸ்வாமியின் அக்கறையைப் பாருங்கள்.

என் தாய் மறைந்தபின் மாதந்தோறும் சடங்கு செய்யத்தான் வேண்டுமா என யோசித்தேன். அவளுக்காக எத்தனை பிதுர் கடன் செலுத்தினாலும் கடன் தீராதுதான். ஆனாலும் நான் யோசித்ததற்குச் சில காரணங்கள் உண்டு. ஒன்று, அந்தத் தியாகியே தனக்காக எதுவும் செய்ய வேண்டாம்; அப்படிச் செய்வதானால் சிராத்த நாளன்று ஒரு ஏழைப் பெண்மணிக்கு முடிந்ததைக் கொடுத்தால் போதும் என்று சொல்லியிருந்தது. இன்னொன்று, அவள் பிதுர்லோகம், புனர்ஜன்மம் ஆகியவற்றைக் கடந்து பரமாத்மாவிலேயே சேர்ந்திருக்கக் கூடியவள் என்பதில் எனக்கிருந்த திட நம்பிக்கை. எதற்கும் ஸ்வாமியைக் கேட்டு விடலாமென எண்ணினேன்.

புட்டபர்த்தி சென்றேன். பேட்டியும் பெற்றேன். ஸ்வாமி தமது திருவாயாலேயே அம்மா தம்மோடு "'மெர்ஜ்' ஆயாச்சு" என்று கூறக் கேட்டு உருகி நின்றேன்.

"அப்படியானால் அம்மாவுக்குச் சிராத்தாதிகள் செய்ய வேண்டியதில்லைதானே?" என்று கேட்டேன்.

உடனே ஸ்வாமி கூறிய பதில் ஆச்சரியமளிப்பதாக இருந்தது. பிதுர்கடன் தேவைப்படும் பலரது குடும்பத்தாரிடங்கூட, "அப்படிச் சடங்காகத்தான் செய்ய வேண்டுமென்றில்லை. போனவர் நினைவில் நாராயண சேவை (ஏழையருக்கு அன்னம் பாலிப்பு) செய்தாலும் சரியே" என்று ஸ்வாமி கூறி, அவர்கள் அவ்வாறே செய்து வருகிறார்கள். அப்படியிருக்க இப்போது ஸ்வாமி, "அம்மாவுக்கு இதெல்லாம் வேண்டாம்தான். ஆனா லோக ரீதிக்கு வேணும் உங்க 'ஃபாமிலி' பத்ததி எப்படி? அதெல்லாம்விட, நீ சங்கராசார் (உபதேசங்கள்) எழுதறே; ஞாபகம் வெச்சுக்கோ! அதனால முடிஞ்ச மட்டும் சாஸ்திர மார்க்கமாவே போ. மத்தவங்க ரொம்ப அசாஸ்திரீயமா பண்றதுலேயும் 'அஸோஷியேட்' ஆகாதே! நல்லதை நெனச்சு, சாஸ்திர பூர்வமா ஒண்ணு பண்ணினா அதனால நம்ப அம்மா அப்பா 'பெனிஃபிட்' ஆகாட்டாலும் எங்கேயாவது, யாராவது கண்டிப்பா 'பெனிஃபிட்' ஆவாங்க' என்ற அமர வாசகத்தைக் கூறினார்.

*

முன்னாள் ஸாயி பல்கலை (அந்தஸ்து)க் கழகத் துணைவேந்தருடன் ஸ்வாமிகள் பற்றி ஸ்வாமி கருத்துகளைத் தொடங்கினோம். இந்நாள் துணைவேந்தருடன் நிறைவு செய்யலாம்.

1991 யுகாதி சமயம் பர்த்தி சென்றபோது துணைவேந்தர் ஸ்ரீ எஸ். ஸம்பத்தைச் சந்தித்தேன். அவர் சொன்னார்: "ஸ்வாமி நேற்றைக்குக்கூடப் பெரியவாளைப் பற்றிச் சொன்னார். பரம உத்தமமான ஸந்நியாஸத்திற்கு இக்காலத்திலும் ஒருவரைக் காட்டுவதென்றால் அது காஞ்சீபுரம் பெரிய சங்கராசார்யர்தான் என்று சொன்னார்".

*

தனது திவ்விய சக்தியை மறைத்துக் கொண்டு, சாஸ்திரங்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்ட ஆதரிச மானுடனாகவே வாழ்ந்து காட்டிய ஸ்ரீராமனின் மகிமையை அற்புத சக்தனும், அதி சுதந்திரனுமான கண்ணன் மகிழ்ந்து மொழிவது போல... ஸத்குரு நாதன் குறித்து ஸத்யஸாயிநாதன் கூறுவது!

ம் →

இராமாநுசர்



டாக்டர் ஆ. பத்மநாபன், இ.ஆ.ப.. (ஓய்வு)

தமிழகத்தில் ஆழ்வார்கள் வளர்த்த பக்தி இயக்கத்தைத் தொடர்ந்து வைணவத்தைத் தனி நெறியாகவும் மக்களுக்கு நெருங்கிய சமயமாகவும் வளர்த்த பெருமைக்குரியவர் இராமாநுசர். இந்தப் பணியை மேற்கொண்டு நூற்றிருபது ஆண்டுகள் தமக்கென வாழாது பிறர்க்கெனவே வாழ்ந்த இராமாநுசரின் வாழ்க்கை சோதனைகளும் சாதனைகளும் நிறைந்தது. 'உலகம் மாயை' என்னும் கொள்கையை ஏற்க மறுத்து 'உலகம் உண்மை' எனக் கொண்டு அனைத்துயிர்களும் இறையன்பில் இணைந்து இன்புறவும், இறையடியார்களுக்கு அடியவராகத் தொண்டாற்றுவதே பிறவிப் பயன் எனக் கருதவும் உதவும் நெறியே வைணவம் என்பதனை நிலைநாட்டிய இராமாநுசர் தம் காலத்திய சமயத் தத்துவங்களையெல்லாம் நன்கறிந்த பேரறிஞராகத் திகழ்ந்தார். அதே நேரத்தில் எளிய மக்களும் எளிதில் உணரும் வகையில் பக்தி நெறியை அறிமுகப்படுத்தி ஒன்றே குலமென அனைவருடனும் இணைந்து வாழ்ந்த மனிதநேயப் பண்பாளராகவும் விளங்கினார். வடமொழி வேத, வேதாந்தக் கருத்துகளையும் தமிழில் ஆழ்வார்கள் பாடிய பக்திப் பாடல்களையும் இணைத்த பெருமையும் இராமாநுசருக்கு உரியது.

உடலுக்குள் உயிர் போல ஆருயிர் அனைத்திற்குள்ளும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன் என்னும் விளக்கமளித்ததால், 'உலகோர் இறைவனைக் கண்ணெதிரே காணும் ஞானம் பெற உதவிய அண்ணல் இராமாநுசன்' எனப் போற்றப்படுகின்றார் இராமாநுசர்.

சமயம் என்பது தனிமனிதர் கடைத்தேற்றத்திற்கே என்று அமைந்து விட்டதை மறுத்து மக்கள் அனைவரும் உய்வதற்குப் பயன்படும் வகையில் இராமாநுசர் சமயத்தைச் சமூகச் சார்புடையதாக்கினார். இதனால் ஆண் பெண் எனும் பால் வேறுபாடுகளும் குலத்தாலும் சமூக நிலைகளாலும் அமைந்த ஏற்றத்தாழ்வுகளும் கடந்த சமத்துவம் மலர வழி பிறந்தது. இந்த வகையில் இராமாநுசர் தம் காலத்தில் நிலவிய சமய, சமூகக் கோட்பாடுகளில் தம்மால் முடிந்த திருத்தம் செய்த சீர்திருத்தக்காரர் என்றே கூறலாம்.

தாம் கருதிய இந்தக் கோட்பாட்டினை நடைமுறைப்படுத்தும் வகையில் கோயில் வழிபாட்டு முறைகளை ஒழுங்குபடுத்தினார். கோயிலை மையமாகக் கொண்டு மக்கள் குடியிருப்பினை அமைத்தும், இறைப்பணிக்கு அவரவர் ஆற்ற வேண்டிய கடமைகளை நியமித்தும், வழிபாட்டின்போது மக்கள் இணைந்து நின்று பக்திப் பரவசத்தோடு மக்கள் மொழியில் அமைந்த பாசுரங்களைப் பாடச் செய்தும் அனைவரையும் ஒருங்கிணைத்தார். அவ்வாறே தாம் சென்ற இடங்களிலெல்லாம் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கருதாமல் அனைவரையும் அடியார்களாக ஏற்று அவர்கள் வழியே அறப்பணிகளும் ஆலயப் பணிகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்தார். கோயில்களைச் சார்ந்து சமய நூற் பயிற்சிக்காகப் பள்ளிகளும், நூலகங்களும் ஏற்பட்டன. சமயச் சொற்பொழிவுகள் இசையோடு கலந்து 'காலட்சேபங்களாக' அமைந்தன. நாட்பூசைகளும், சிறப்புத் திருவிழாக்களும் மக்களைக் கவரும் வகையில் நடத்தப்பட்டன. இதற்குக் கலை நிகழ்ச்சிகளும் பயன்பட்டன.

தமிழிலுள்ள சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் 'மாயோன் வழிபாடு', ஆழ்வார்கள் காலத்தில் தனி நெறியாக மலர்ந்தது. சமண, பௌத்த சமயங்களின் வளர்ச்சியால் வீழ்ச்சியுற்றிருந்த வைதிக நெறியை நிலைநிறுத்த எழுந்த பக்தி இயக்கத்தின் விளைவாகக் கிடைத்தவை ஆழ்வார்கள், நாயன்மார்களின் பக்திப் பாடல்கள். இவற்றுள் ஆழ்வார்களின் பாடல்களோடு வேத, வேதாந்த நூல்கள் குறிப்பிடும் செய்திகளையும் ஆதாரமாகக் கொண்டு அமைந்த சமயம் 'விசிஷ்டாத்வைதம்' என்னும் வைணவ சமயமாயிற்று. தமிழ் வடமொழி ஆகிய இருமொழி நூற்களை ஆதாரமாகக் கொண்டதால் இச்சமய நெறி 'உபய வேதாந்தம்' எனப்பட்டது.

தமிழகத்தில் தோன்றிய முதல் பக்தி இயக்கத்தின் விளைவாகச் சோழர் பேரரசு அமைந்தது. பக்தி இயக்கக் காலத்தில் ஒருங்கிணைந்து வாழ்ந்த மக்களிடையே காலப்போக்கில் வேற்றுமைகள் மலிந்து சமய உண்மைகளை மக்கள் மறந்த நிலையில் இராமாநுசர் தோன்றினார். சடங்குகளுக்கும் சமய வழக்குகளுக்கும் முதலிடம் அளித்து 'மதம் மக்களுக்காகவே' என்பதை மறந்த காலத்தில் வேதாந்த நூல்களுக்கு உரைநடையில் விளக்கமளித்த இராமாநுசர், ஆழ்வார்களின் பாடல்களில் பொதிந்துள்ள உயரிய கருத்துகளை வெளிப்படுத்தத் தமிழ்ப் பாசுரங்களுக்கு விரிவான உரைகளை எழுத வைத்து மக்களிடையே பரப்பினார். கி.பி. 1017 முதல் கி.பி. 1137 வரை நூற்றிருபது ஆண்டுகள் வாழ்ந்த இராமாநுசர் தம் பணியைத் தலைமேற்கொண்டு காஷ்மீரம் உட்பட இந்திய நாட்டின் திக்கெட்டும்

பயணம் செய்து பக்தி நெறியைப் பரப்பினார். இதன் விளைவாக இடைக்காலப் பக்தி இயக்கம் எழுந்தது.

இராமானுசர் பரப்பிய உணர்ச்சி நிரம்பிய பக்தி நெறியே வடநாட்டில் பிற்காலத்தில் இறைவனோடு மக்களை அன்பினால் பிணித்த மூன்றாவது பக்தி இயக்கம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது. மொகலாயர் ஆட்சியில் சமயத்துறையில் அமைதியின்மை ஏற்பட்டு நாடு சிதறிய காலத்தில் இந்த இயக்கம் மக்கள் இயக்கமாக மாறியது. சகோதர நேயம், தன்துயர் காணாமல் பிற உயிர்களின் துயரங்களுக்கு இரங்குதல், எல்லோரும் வாழ இறைவனை வேண்டுதல், தன்னை முழுமையாக இறைவனுக்கே ஆட்படுத்திக் கொள்ளுதல், உலகுயிர் அனைத்தையும் இறைவனின் வடிவமாகக் கருதுதல், சாதி, குலம், பிறப்பால் வந்த வேற்றுமைகளை வெறுத்துக் கண்டித்தல் ஆகிய பண்புகள் இந்த இயக்கத்தின் விளைவாக மக்களிடையே பரவின. வாழையடி வாழையாகப் பல சான்றோர்களும், அருளாளர்களும் இந்தப் பண்புகளை வளர்த்துக் காத்து வந்துள்ளனர்.

வடநாட்டில் இராமானந்தர் பதினான்காவது நூற்றாண்டில் சடங்குகளையும், கண்மூடி வழக்கங்களையும் கண்டித்து இராமனைப் பக்திப் பேருணர்வோடு வழிபடுவதை அறிமுகப்படுத்தினார். வேற்றுமைகள் கடந்த சமூக தருமத்தை வலியுறுத்திய அவர் வழியில் கபீர் முதலியோர் தோன்றினார். ஜெய தேவரின் 'கீத கோவிந்தம்' பக்திப் பரவச இலக்கியமாக மலர்ந்தது. வங்க நாட்டில் கிருஷ்ண சைத்தன்யரின் வைணவம் இராதாகிருஷ்ண வழிபாடாகப் பரவியது. இறைவனை நாயகனாகக் கொண்டு அவனது அன்புக்காக உயிர்கள் ஏங்கிடும் நாயக நாயகி பாவ உணர்வாக அமைந்த இலக்கியப் போக்கும் இதனால் அமைந்தது. இந்தப் போக்கு வங்க இலக்கியங்களுக்கு உயர்வை அளித்தது. மராட்டிய மாநிலத்தில் நாமதேவர், ஏகநாதர், துக்காராம், இராமதாஸ், சோகாமேளர் ஆகிய பக்தர்கள் இந்தப் பக்தி இயக்கத்தின் விளைவாகத் தோன்றியவர்களே. சமுதாயத்தில் கடைநிலையில் இருந்தவர்களும் பண்பட்ட கடவுள் வழிபாட்டை மேற்கொண்ட சமூக விளைவு இதனால் ஏற்பட்டது. பக்தர் இராமதாஸ் சிவாஜிக்கு மனவுர்த்தை வளர்த்து மாவீரனாக்குவதற்கும் அதனால் பின்னர் பல அரசியல் விளைவுகள் ஏற்படவும் இந்த பக்தி மார்க்கமே காரணமாகும். குருநானக் தேவர் வளர்த்த சீக்கிய நெறி இராமானுசரின் தத்துவச் சாயல் கொண்டது. காந்தியடிகள் தமது பிரார்த்தனைக் கூட்டங்களில் விரும்பிப் பாட வைத்த நரசி மேத்தாவின் 'வைஷ்ணவ ஜனதோ' பாடல் இராமானுசர் தமது வாழ்நாளின் இறுதியில் தம் சீடர்களுக்கு உபதேசித்த அருளுரைகளின் பதிவாகவே அமைந்தது எனலாம்.

இராமானுசரின் வாழ்க்கை வரலாறும், பிற இந்திய ஞானியர், அருளாளர் வாழ்க்கையைப் போலவே முழுமையாகக் கிடைக்கவில்லை. எனினும் அவர் வாழ்வோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் அவர் சமயத் தத்துவங்களைக் கற்றுணர்ந்த பேரறிஞராக, இறைவனின் அழியா அழகில் முழு மனத்தோடு ஈடுபட்டுப் பக்திப் பரவசமுற்ற பக்தராக, பக்தியினால் இணைந்த அன்பர் கூட்டத்தின் தலைவராக வேற்றுமைகளைக் கடந்து தொண்டர்களுக்குத் துணை நின்ற அடியவராக விளங்கியதைக் காட்டுகின்றன. நம் காலத்தில் விவேகானந்தரைப் போல சமயத்திலும் சமூகத்திலும் சீர்திருத்தங்களைப் புகுத்தி மக்கள் அனைவரையும் இறையன்பர்களாக ஆக்கும் பணியைப் பல துன்பங்களுக்கிடையே நிறைவேற்றி வெற்றி கண்டவராக இராமானுசர் விளங்கியதையும் அவை காட்டுகின்றன.

இராமானுசர் கி.பி. 1017 இல் காஞ்சிபுரத்தை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் ஆசூரி கேசவ சோம யாஜிக்கும் காந்திமதி தேவிக்கும் மகனாகப் பிறந்தார். இராமனை நிழலெனத் தொடர்ந்து பற்றற்ற தொண்டு புரிந்த இலக்குவனைப் போல வைணவத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் எனக் கருதிக் குழந்தைக்கு 'இறையாழ்வான்' எனப் பெயரிட்டனர். இதுவே பின்னர் 'இராமானுசன்' என வழங்குவதாயிற்று. இராமானுசர் தம் வாழ்நாள் முழுதும் இறைவனின் தொண்டிற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இன்பம் கண்டார். தாம் பெற்ற இன்பம் பிறரும் பெறுவதற்குத் தமது பணியைக் 'கைங்கர்யம்' எனப் பெயரிட்டு விளக்கியதோடு அன்பர்கள் அனைவரையும் இந்தப் பணிக்கு ஆளாக்கிப் பேரின்பம் காண வைத்தார்.

இராமானுசர் இளமையில் காஞ்சிபுரத்தை அடுத்த திருப்புட்குழி என்னும் ஊரிலிருந்த யாதவப் பிரகாசரிடம் கல்வி கற்றார். வேதாந்தக் கொள்கையினரான தமது ஆசிரியரின் சமய நூல் விளக்கத்தால் மன நிறைவு பெறாத இராமானுசர் தமது நினைவாற்றலாலும் அறிவு நுட்பத்தாலும் தமக்குரிய தத்துவ நெறியை அறிந்து கொண்டார்.

தமது பதினாறாவது வயதில் தஞ்சம்மாள் என்னும் பெண்மணியை மணந்தார் இராமானுசர். இராமா




நுசரின் வாழ்க்கை நோக்கிற்கும் பரந்த மனப போக்கிற்கும் இசைவாக வாழ இயலாதவராக இருந்த தஞ்சம்மாளின் போக்கு இராமாநுசருக்குத் துயரத்தை அளித்தது. மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளைக் கருதி இழிவுபடுத்திய மனைவியின் ஜதீகப் போக்கும், யாவரையும் சமமெனக் கருதி அதைச் செயலிலும் கடைபிடித்த இராமாநுசரின் சமரச நோக்கும் முரண் பட்டன. எனவே இராமாநுசர் தமது முப்பதாவது வயதில் தமக்குரிய உலகியல் சொத்துகளையெல்லாம் தஞ்சம்மாளுக்கு அளித்துத் தாய் வீட்டிற்கு அனுப்பி விட்டுத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

இளமைத் துடிப்பும், நெடிய உருவமும், ஞானப் பொலிவும், கொள்கை உறுதியும் கொண்ட இராமா நுசர் மடத்தில் தங்கி வைணவத்தைப் பரப்பும் பணியைத் தொடங்கினார். துறவிகள் பலர் அவருக்குச் சீடர்களாயினர். அவர்களுள் தனது பெருஞ்செல்வங்களையெல்லாம் ஏழை எளியோர்க்கு வாரி வழங்கித் துறவு பூண்ட கூரேசரும் அவரது மனைவியும் இராமாநுசருக்கு முன்பு குருவாக இருந்த யாதவப் பிரகாசரும் அடங்குவர். துறவிகளாம் யதிகளுக்குத் தலைவரான இராமாநுசர் 'யதிராசர்' எனப் பெயர் பெற்றார்.

இதற்கிடையில் திருவரங்கத்தில் வைணவ ஆசாரிய பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ ஆளவந்தார் காஞ்சி புரத்திற்கு வருகை தந்திருந்தபோது இராமாநுசரின் அறிவுத் திறனையும், தோற்றப் பொலிவையும், கடவுட் பணியையும் நேரில் கண்டு அவர் தமக்குப் பின் திருவரங்கத்தில் ஆசாரியராக ஆக வேண்டும் என விரும்பி இருந்தார். அந்த விருப்பத்தை நிறைவேற்ற அவர் அனுப்பிய அழைப்பை ஏற்று துறவறம் ஏற்றிருந்த இராமாநுசர் திருவரங்கம் சென்றபோது ஸ்ரீ ஆளவந்தார் மறைவுற்றதால் அவரது பூத வுடலையே காண முடிந்தது. ஆளவந்தார் தம் வாழ்நாளில் நிறைவேற்ற விரும்பிய விருப்பங்களை இராமாநுசர் நிறைவேற்றி வைக்க முடிவெடுத்தார். அதற்கு முன் திருவரங்கம் கோயில் பணிகளை ஒழுங்குபடுத்தி ஆலயத்தைச் சீர்படுத்தினார். கோயிலைச் சுற்றிப் பூஞ்சோலைகளை அமைத்தார். நாள் தோறும் பூசையின்போது வேதங்களோடு திவ்வியப் பிரபந்தப் பாடல்களை ஓதுவதைக் கட்டாய மாக்கினார். புராணக் கருத்துகளை விளக்க நாட்டிய நிகழ்ச்சிகளும் காலட்சேபங்களும் நடத்த ஏற்பாடு செய்தார். கவர்ச்சி மிக்க கோயில் விழாக்கள் வாயிலாக மக்களைத் திரளச் செய்தார். இப் பணிகளால் வைணவ வளர்ச்சி ஓர் இயக்கமாக மக்களிடையே பரவியது.

கோயில் பணிகளைச் செய்வதற்குத் தம் சீடர்களின் குலம், கோத்திரம் என்னும் வேறுபாடு கருதாது பல்வேறு பணிகளைச் செய்ய வைத்தார். வேட்டுவர் குலத்தைச் சேர்ந்த உறங்காவில்லியைத் தம் தலைமைச் சீடராகக் கொண்டார். காவிரியில் நீராடித் திரும்பி வரும்போது உறங்காவில்லியின் தோள் மீது கையிட்டுக் கொண்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இதனால் இராமாநுசரிடம் கோபம் கொண்டிருந்த பிராமணச் சீடர்களுக்கு உறங்கா வில்லி இந்தச் சிறப்புக்குத் தக்கவர் என்பதை அவருடைய பக்திப் பெருக்கை எடுத்துக்காட்டி விளக்கினார். ஸ்ரீ ஆளவந்தாரின் சீடர்களுள் ஒருவ ரான மாறனேர் நம்பி தீண்டாதோர் குலத்தைச் சேர்ந்தவர். அவருக்கு இருந்த தீராத நோயின் காரணமாக ஊருக்கு வெளியே இருப்பிடம் கொண்டு வாழ்ந்து வந்தார். அவருக்குப் பெரிய நம்பி உணவு கொண்டு போய் கொடுத்து வருவதை இராமாநுசர் அறிந்தார் இந்த வழக்கத்தை வைதிக பிராமணச் சீடர்கள் எதிர்த்துப் பெரிய நம்பியை விலக்கி வைத்தபோது அவர்களைக் கண்டித்துத் திருத்தினார்.

இராமாநுசரின் சமத்துவப் போக்கிற்கு இன்னொரு செய்தியையும் குறிப்பிடுவர். திருவரங்கத்திற்கு வெளியே வாழ்ந்த தீண்டாதார் வகுப்பைச் சார்ந்த பக்தர் ஒருவர் ஆழ்வார்களின் பாடல்களைப் பாடி மகிழும் செய்தியை இராமாநுசர் அறிந்தார். நீராடப்



போகும்போது இந்தப் பாடல்களைச் செவி மடுத்துக் கேட்டு வந்த இராமாநுசர் ஒரு நாள் தம் சீடர்களை முன்னே அனுப்பிவிட்டுப் பக்தர் குடிலுக்குள் நுழைந்து பல மணி நேரம் உடனிருந்து பாடலைக் கேட்டுப் பரவசமுற்றார்.

முன்வினைப் பயனாகவே பிறப்பில் உயர்வும் தாழ்வும் அமைகிறது என்பதை ஏற்க மறுத்தார், இராமாநுசர். இந்த நம்பிக்கையால் மனிதரின் ஊக்கம் குன்றுவதையும் எல்லோருக்கும் கருணை பொழியும் இறைவனின் குணத்திற்கு மாறாக இந்த அமைப்பு இருப்பதையும் கண்ட இராமாநுசர் இறைவனின் பக்தியில் ஈடுபட்டு முக்தி அடைவதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு என்பதைத் தெளிவாக்கினார். திருப்பாணாழ்வாரின் பெருமையை உணர்ந்து அவரைத் திருவரங்கம் கோயிலுக்குள் பிராமணர்கள் தோளில் சுமந்து சென்ற வரலாற்றை எண்ணி உருகினார், இராமாநுசர். இன்ன குலம், கோத்திரம் என்பது தெரியாதவர்களாக வாழ்ந்து பாடல்களைப் பாடிய ஆழ்வார்கள் பக்திப் பெருக்கால் மனம் கலந்து நின்ற நெறியைத் தம் காலத்தில் மக்களுக்கு அறிமுகப்படுத்திச் செயல்பட வைத்தார்.

திருவரங்கம் ஆசாரியார் ஸ்ரீ ஆளவந்தார் உயிருடன் இருந்தபோது சமய உண்மைகளைத் தம் ஐந்து சீடர்களிடம் உபதேசம் செய்து வைத்திருந்தார். அவர்களுள் திருக்கோட்டியூர் நம்பிகளிடம் 'ஓம் நமோ நாராயணா' என்னும் திருமந்திரத்தின் விளக்கத்தைக் கேட்டறிய இராமாநுசர் விரும்பினார். ஓர் ஆண் இன்னோர் ஆணுக்கு மட்டும் சொல்லி இரகசியமாகக் காப்பாற்றி வந்த திருமந்திரப் பொருளை இராமாநுசருக்குச் சொல்லத் திருக்கோட்டியூர் நம்பி மறுத்து வந்தார். இராமாநுசரும் தம் முயற்சியில் குன்றாமல் பதினெட்டு முறை திருக்கோட்டியூருக்கு நடந்த பின்பு மனமிரங்கிய திருக்கோட்டியூர் நம்பி மந்திரத்தின் உட்பொருளை வேறு எவருக்கும் சொல்லக் கூடாது என்ற உறுதிமொழியைப் பெற்று அதனை மீறினால் நரகம் புக நேரும் எனத் தண்டனையையும் தெரிவித்துத் திருமந்திர விளக்கம் செய்தார்.

திருமந்திர விளக்கமறிந்த இராமாநுசர் அதன் பயனாகத் தாம் மட்டுமே சுவர்க்கம் செல்லும் பேறு பெறுவதை விரும்பாதவராக அதனை எல்லோருக்கும் சொல்லிக் கேட்டோரெல்லாம் சுவர்க்கம் செல்வதையே விரும்பினார். அதனால் தான் ஒருவன் மட்டுமே நரகம் செல்வதும் சிறந்தது என முடிவெடுத்தார். இதன்படி அடுத்த நாள் திருக்கோட்டியூர் கோயில் கோபுரத்தின் மீதேறி நின்று அனைவரையும் கூவி அழைத்து திருமந்திரப் பொருளை யாவரும் கேட்க விளக்கியுரைத்தார். இதைக் கேட்ட மக்கள் இராமாநுசரின் தியாக உணர்வையும், பரந்த நோக்கத்தையும் பாராட்டிப் புகழ்ந்தனர். பின்னர் தமது முடிவைத் திருக்கோட்டியூர் நம்பியிடத்திலும் விளக்கினார். தனக்கென வாழாது மக்கள் அனைவரும் உய்யும் நெறியைக் காட்டிய இராமாநுசரைக் கட்டித் தழுவி அவரைச் சீடராகக் கொண்டமைக்கு நம்பி உள்ளம் பூரித்தார்.

இந்த நிகழ்ச்சிகளால் புகழின் உச்சியில் நின்ற இராமாநுசர் நாடெங்கும் பயணம் செய்து பக்தியையும் அன்பர் கூட்டத்தையும் பெருக்கிக் கொண்டு வந்தார். கூரத்தாழ்வானோடு காஷ்மீரம் சென்று வியாசரின் பிரம்ம சூத்திரத்திற்குப் போதாயனரின் விளக்கவுரையைப் படித்து வந்தார். அதை அடிப்படையாகக் கொண்டு விரிவுரை எழுதி 'பாஷியக்காரர்' என்னும் சிறப்பினைப் பெற்றார். கூரத்தாழ்வானின் இரு பிள்ளைகளுக்கும் பராசரபட்டர் - வியாஸபட்டர் என்னும் பெயர்களைச் சூட்டினார். தமது தாய்மாமன் திருமலை நம்பியின் மகனைத் தம் ஞானப்புதல்வனாக ஏற்று அவரை நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு வியாக்கியானம் எழுத வைத்தார். இந்த வகையில் இராமாநுசர் தமது குரு ஸ்ரீ ஆளவந்தாரின் மூன்று விருப்பங்களையும் நிறைவேற்றிய மனநிறைவு பெற்றார்.

இராமாநுசர் நாட்டின் பல இடங்களுக்கும் சென்று வைணவத்தை விளக்கியுரைத்துப் பலரைச் சீடர்களாக்கி வந்தார். இராமாநுசரின் புகழைக் கேட்டு அக்காலத்தில் சோழ நாட்டை ஆண்டு வந்த மன்னன் முதலாம் குலோத்துங்கன் பொறாமை கொண்டான். இராமாநுசரின் சமத்துவக் கொள்கையை விரும்பாதவர்களின் தூண்டுதலும், அவனது கோபத்தைப் பெருக்கியது. இதனால் இராமாநுசரின் உயிருக்கு ஆபத்து எனக் கருதிய சீடர்கள் அவரைச் சோழ நாட்டை விடுத்து வெளியேற வேண்டினர். அதனை ஏற்று இராமாநுசர் நீலகிரி மலைகளின் வழியாக நாடு கடந்து தற்போதைய கர்னாடகத்திலிருந்த ஒய்சள நாட்டுத் தொண்டனூரை அடைந்தார். அங்கு ஆட்சி செய்து வந்த மன்னன் பிட்டி தேவனை வைணவனாக்கி விஷ்ணுவர்த்தன ராயன் எனப் பெயரிட்டார். பின்னர் இராமாநுசர் மேல் கோட்டைக்குச் சென்று பலரை வைணவராக்கி மடங்களை ஏற்படுத்தினார். மேல் கோட்டை திருநாராயணபுரம் என வழங்கப் படலாயிற்று. அங்கு எழுப்பிய கோயிலுக்குள் தீண்டாதோர் நுழைந்து வழிபாடு செய்வதற்கும் இராமாநுசர் ஏற்பாடு செய்தார். 'தீண்டாதார்' என்னும் பெயரை ஒழித்துத் 'திருக்குலத்தார்' எனப் பெயரிட்டார். தொண்டனூரில் ஏரியை அமைத்து மக்கள் யாவரும் வேற்றுமை கடந்து அதில் நீரருந்தவும் செய்தார். இருபதாண்டுக் காலம் திருநாராயணபுரத்தில் வாழ்ந்த இராமாநுசர் தமது எண்பதாவது வயதில் மீண்டும் திருவரங்கத்திற்கு வந்து கி.பி. 1137 இல் 120 ஆவது வயதில் மறைந்தார்.

இராமாநுசர் தம் மறைவுக்கு முன்னரே திருவரங்கத்தில் கோயில் பணிகள் தொடர்ந்து செம்மையாக நடைபெறுவதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தார். தம் மறைவைக் கருதி அழுதவர்களுக்கு, "மரணமென்பது உடலின் அழிவே; ஆத்மாவென்பது அனைவரிடத்தும் கலந்தே இருப்பதால் பிரிவென்பது இல்லை. அனைத்து உயிர்களின் உடலாக இறைவன் இருப்பதால் இறைவனை நம்புவோர் துயருறத் தேவையில்லை. எனவே பரிபூரணனுக்கும் அவனது அடியார்க்கும் தொண்டு செய்து ஒழிவில் காலமெல்லாம் இறைவனுடன் உறையும் வகை தேடிக் கொள்க" என உரைத்தார். இறுதியாக இராமாநுசர், "உண்மை வைணவன் அருள் நெறியில் நின்று ஆண்டவனுக்கும் குருவுக்கும் அடியார்க்கும் அடியவராக இருந்து தொண்டு செய்தல் வேண்டும்; வைணவர்களை இன்ன சாதி என்று நினைப்பதே அவர்களை இழிவு

அடுத்தொரு பிறவி என்றிருந்தால்

தேவகி முத்தையா எம்.ஏ., எம்.ஃபில்

அடுத்தொரு பிறவி என்றிருந்தால் அருஞ்ஜாதிப்பூவாய்ப் பிறப்பேனா
ஆனந்தக் கூத்தன் திருவடியில் குஞ்சித பாதமாய் மலர்வேனா

மற்றொரு பிறவி என்றிருந்தால் வலம்புரிச் சங்காய்ப் பிறப்பேனா
எம்பெருமான் அமிர்தகடேசர் அபிஷேக தீர்த்தத்தைச் சுமப்பேனா

இனியொரு பிறவி என்றிருந்தால் இன்சோலைக் கரும்பாய்ப் பிறப்பேனா
ஈடில்லா கருணைக் காமாட்சி கைக்கோதண்டமாய்க் கொலுவிருப்பேனா

உயர்ந்ததொரு பிறவி என்றிருந்தால் மாணிக்கக் கல்லாய்ப் பிறப்பேனா
உமையவள் அகிலாண்டேஸ்வரியின் தாடங்கத்தினில் மிளிர்வேனா

மீண்டும் பிறவி என்றிருந்தால் முத்தாய்ப் பவளமாய்ப் பிறப்பேனா,
திருக்கடவூர் மயில் அபிராமி திருமிடற்றில் ஆரமாய்த் தவழ்வேனா

அருந்தவப் பிறவி என்றிருந்தால் உருத்திராட்ச மாலையாய்ப் பிறப்பேனா
தவமுனிவர் காஞ்சிப் பெரியவரின் சிரத்தினில் அமர்ந்து மகிழ்வேனா.

இணையற்ற பிறவி என்றிருந்தால் வில்வத் தளிராய்ப் பிறப்பேனா
தருமைக் குருமணி திருக்கரத்தால் சொக்கநாதர் திருவடி தொடுவேனா,


புனிதப் பிறவி என்றிருந்தால் சந்தன மரமாய்ப் பிறப்பேனா
புதுப்பெரியவர் தினமும் பூஜை செய்யும் சந்தன மேருவாய் அமர்வேனா


தனி ஒரு பிறவி என்றிருந்தால் தாமரை மலராய்ப் பிறப்பேனா
பாலப் பெரியவர் திருக்கரத்தால் திரிபுரசுந்தரி அடி சேர்வேனா

எத்தனை பிறவி எடுத்தாலும் எத்தனை முறை நான் பிறந்தாலும்
என்னை நாளும் ஆண்டருளும் அம்மையப்பர் திருவடி சேர்வதொன்றே
தவமாய் நானும் வேண்டுவனே நாளும் நானும் காத்திருப்பேனே!


படுத்துவதாகும்; தன்னைப் போலவே பகைவனையும் கருதி அன்பு செய்தல் வேண்டும். வைணவன் பிறர் துயர் கண்டு இரங்கி அதைத் தீர்க்க முயல்வான்" எனக் கூறி மறைந்தார்.


உலகுயிர் அனைத்தையும் இறைவனின் வடிவங்களெனக் கருதி அனைவரும் உய்யும் வகையில் தொண்டு செய்து இன்புறுமாறு கூறிய இராமாநுசரின் போதனைகள் அனைவர்க்கும் பொதுவானவை. இராமாநுசர் ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பக்தி நெறியின் வாயிலாகச் சமுதாயமும், சமூகமும் முன்னேற வேண்டுமெனவும், அதற்காகச் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமெனவும் முற்பட்டவர். அவர் தாம் வாழ்ந்த காலத்திற்கேற்ப பக்தி நெறியின் மூலம் சமூகச் சமத்துவத்திற்கும் சகோதர நேயத்திற்கும் பெரிதும்பாடுபட்ட மகானாவார்.











ஒரு திரைக் காவியம் உருவாகிறது

கட்டுரை படங்கள்: யோகா



குன்றூரின் அழகான பச்சைப் பசேல் என்ற மலைகளுக்கிடையே அமைதியான நிலப்பரப்பில் தனிமையில் அமைந்த பங்களா ஒன்று. அந்தப் பங்களாவை ஒட்டியுள்ள பூங்காவில் நின்றுகொண்டு எந்தப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும் தேயிலைத் தோட்டங்கள் அமைந்த கண்ணைக் கவரும் அழகிய மலைகளின் அமைப்புகள். பங்களாவை ஒட்டி ஒரு 'விண்ட் மில்' (wind mill) அதாவது மின்சாரம் இல்லாத பகுதிகளில் காற்றாடி விசிறியைச் சுழலவிட்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மிஷின்கள் பொருத்தப்பட்ட அமைப்பு. அந்தப் பங்களாவைச் சுற்றி சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட பலதரப்பட்ட மக்கள் மிகத் தீவிரமாகத் தங்களது பணிகளில் அங்கே ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். என்னதான் அங்கே நடக்கிறது என்கின்ற ஆவலுடன் எட்டிப் பார்த்தால் சினிமா படப்பிடிப்பு, அதாவது





ரத்தினம் தேங்காய் மீது கற்பூரத்தை வைத்து ஏற்றி கேமராவுக்குப் பூஜை செய்கிறார். கேமரா இயக்குநரான பி. கண்ணன் பயபக்தியுடன் கேமரா அருகே நின்று சாமி கும்பிட்டுத் தொழிலை ஆரம்பிக்கிறார். 'நிழல்கள்' படத்தில் இருந்து டைரக்டர் பாரதிராஜாவின் எல்லாப் படங்களுக்கும் தொடர்ந்து கேமராவை இயக்கிக் கொண்டிருப்பவர் பி. கண்ணன். அந்தக் காலத்தில் மிக வும் பிரபலமான பழம்பெரும் டைரக்டர் பீம்சிங் புதல்வர்களில் ஒருவரான கண்ணன், சினிமா கேமராவைக் கையா ளும் மிகச் சிறந்த திறமைசாலிகளுள் ஒருவர். பாரதிராஜா படங்களுக்கு மட்டுமே தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் இவர், படப்பிடிப்பு இல்லாத நாட்களில் குன்றத்தூரில் உள்ள தங்கள் குடும்பப் பண்ணையில் விவசாயத்தைக் கவனித்து வருவதாகப் பெருமிதத்துடன் கூறினார். ஒவ்வொரு படத்திலும் ஒரு லைட்டிங் முறையை ஏற்படுத்தி வித்தியாசமான கோணங்களில் காட்சிகளைப் படம் பிடித்து வரும் கண்ணன் மிகவும் அமைதியானவர். கண்ணனுக்கு டைரக் டர் பாரதிராஜா காட்சி அமைப்பை விளக்க ராஜாவும், குஷ்புவும் உற்சாக மாகப் பாடல் பாடி நடிக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டன. வித்தியாசமான வேடத்தில் குஷ்புவை இந்தப் படத்தில் 'வீரத்திருமகளாக' காட்டி இருப்பதாக டைரக்டர் பாரதிராஜா கூறினார்.

பாரதி ராஜாவின் இயக்கத்தில் இரு பத்தி ஆறாவது படமாக உருவாகிக் கொண்டிருக்கும் 'கேப்டன் மகள்' படத்தை உருவாக்குவதில் அங்கிருந்த அத்துணைபேருமே முழுமுச்சுடன் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு நடிகைகளில் 'சூப்பர் ஸ்டாராக'த் திகழ்ந்து கொண்டிருக்கும் 'குஷ்பு' முதன் முறையாக இப்படத்தில் (பாரதி ராஜாவின் இயக்கத்தில்) நடித்துக் கொண்டிருக்கிறார். மற்றும் நெப்போலியன், 'கடலோரக் கவிதை கள்' ராஜா, லிவிங்ஸ்டன், இயக்குநர் ஜி.எம். குமார் ஆகியவர்கள் டைரக் டரைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். டைரக்டர் பாரதிராஜா, அன்று எடுக்க விருக்கும் காட்சியைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்.

'எந்தப் பெண்ணிலும் இல்லாத
ஒன்று...
ஏதோ, அது ஏதோ உன்னிடம்
இருக்கிறது
அதை அடையாமல் விடமாட்டேன்
அதுவரை உன்னைத் தொடமாட்டேன்'

என்ற வைரமுத்து வரிகளை 'அம்சலேகா' இசையமைப்பில் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாடி இருக்கும் பாடலை நாகராவில் திரும்பத் திரும்ப ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பாடல் காட்சியில் குஷ்புவும் ராஜாவும் எப்படி நடிக்க வேண்டும் என்பதையும் விவரித்துக் கூறிக் கொண்டிருந்தார் டைரக்டர்.

காலை ஒன்பது மணிக்குப் படப் பிடிப்பு ஆரம்பிக்கும் அறிவிப்பாக பாரதி ராஜா யூனிட்டின் பழம்பெரும் சிப்பந்தி







தமிழக திரையுலகிற்கு வித்தியாசமான பல வெற்றிப் படங்களைத் தந்ததோடல்லாமல் ராதிகா, விஜயசாந்தி, ரேகா, ரதி, சுகன்யா, அருணா, 'நிழல்கள்' ரவி போன்ற திறமையான நடிக நடிகையர்களையும் பாக்கியராஜ், மனோஜ் குமார், மணிவண்ணன், மனோபாலா போன்ற திறமையான டைரக்டர்களையும் உருவாக்கித் தந்த பெருமை பாரதிராஜாவுக்கு உண்டு. ஆனால் அந்த நினைப்பு சிறிதும் இல்லாமல் 'லைட் மேன்' முதல் உதவி இயக்குநர் வரை எல்லோரிடமும் எவ்வளவு சகஜமாகப் பழகி 'ஜோக்' அடித்து வாய் விட்டுச் சிரித்து செட்டில் இயங்கிக் கொண்டிருக்கிறார் என்பதே மிகவும் சிறப்பான விஷயம். நடிகர்களுக்கு அவர் காட்சியை விவரித்து நடிப்பு சொல்லிக் கொடுக்கும் பாங்கே அலாதியானது. இவர் ஒரு நடிகராக திரையுலகிற்கு அறிமுகமாகி இருந்தாலும் ஒரு தலைசிறந்த நடிகராக பிரகாசித்திருப்பார் என்றும் எண்ணத் தோன்றுகிறது. இவர் எதிர்பார்க்கும் 'ரீ ஆக்ஷன்' நடித்துக் கொண்டிருக்கும் நடிகர்களிடம் வரவில்லை என்றால் உடனே உணர்ச்சிவசப்பட்டு விடுகிறார். ஆனால் அடுத்த சில நிமிடங்களிலேயே சாந்தமாகி விடுகிறார். இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட நடிக நடிகையர்களாகட்டும் தொழில் நுட்பக் கலைஞர்களாகட்டும் மோதிரக் கையால் குட்டுப்பட்டவர்கள்தான். அவர்களது பிற்கால வாழ்க்கை மிகவும் பிரகாசமாக இருப்பதைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம்.

பாடல் காட்சிக்குப் பிறகு ஒரு சண்டைக் காட்சி எடுக்க வேண்டி இருந்தது. குஷ்பு வில்லனுடன் சண்டை போடுவதாக அமைப்பு. 'டூப்' நடிகையைப் போட்டு அந்தக் காட்சியை எடுக்கலாம் என்று டைரக்டர் கூறினார். ஆனால் குஷ்பு டைரக்டரிடம் தானே அந்தக் காட்சியில் நடிப்பதாகக் கூறி முன்வந்து அந்த குறிப்பிட்ட காட்சியில் சிறிதும் தயக்கம்










இல்லாமல், பயமில்லாமல் சிறப்பாக நடித்து டைரக்டரின் பாராட்டைப் பெற்றார். குஷ்பு நான்கு வயதில் இருந்தே திரையில் நடித்துக் கொண்டிருப்பவர். முதலில் ஹிந்தியில் குழந்தை நட்சத்திரமாக நடிக்க ஆரம் பித்து பின்பு தெலுங்கு மற்றும் கன்னட திரையுலகில் நுழைந்து சில வெற்றி களையும் பல தோல்விகளையும் சந் தித்துப் பின் தமிழ்த் திரையுலகில் அறி முகமாகி தற்போது நிரந்தர இடத்தை அடைந்து 'சூப்பர் ஸ்டார்' (நடிகை களில்) என்கின்ற பெயரையும் பெற்று பிஸியாக இயங்கிக் கொண்டிருப்பவர். எல்லாவித மோட்டர் வாகனங்களையும் அநாயசமாக ஒட்டும் குஷ்பு குதிரைச் சவாரி செய்வதிலும் வல்லவராகத் திகழ்வதாக செட்டில் எல்லோரும் பாராட்டுகிறார்கள். ஆங்கிலம், ஹிந்தி, உருது, தெலுங்கு, கன்னடம், தமிழ் என்று எல்லா மொழிகளையும் சரளமாகப் பேசுகிறார். பாரதிராஜா வைப் போலவே குஷ்புவும் யூனிட்டில் எந்தப் பாகுபாடும் இல்லாமல் எல்லோ ருடனும் சகஜமாகப் பேசிப் பழகுவது சம்பந்தப்பட்ட டெக்னீஷியன்கள் ஓர் உந்துதலுடன் இயங்க ஏதுவாக இருக் கிறது.

பத்திரிகையாளராக இருந்து, தற் போது பாரதிராஜாவின் அசோசியேட் டைரக்டராக இந்தப் படத்தில் பணி யாற்றிக் கொண்டிருக்கும் சித்ரா லட்சுமணன் ஏற்கனவே பல படங்களை தயாரித்ததோடல்லாமல், 'கமல் நடித்த 'சூரசம்ஹாரம்' போன்ற படங்களைத் தனிப்பட்ட முறையில் டைரக்ட் செய்தவரும்கூட. அவர் குஷ்புவுக்கு வசனங்களை சொல்லிக் கொடுக்கும் போதெல்லாம் உடனே குஷ்பு அதை புரிந்துகொண்டு வசனங்களை சொல்லி நடித்து காட்டும்போது வேற்று மொழி பெண் இவ்வளவு சிறப்பாக தமிழ் வசனங்களை உச்சரித்து நடிக்கிறாரே என்கின்ற பிரமிப்பு நம்முள் ஏற்படு கிறது. மதிய உணவு இடைவேளைவரை குன்னூர் பங்களாவில் படப்பிடிப்பு நடந்தது.

உணவு இடைவேளையில் டைரக் டரும், குஷ்புவும் மற்ற நடிகர்களும் எந்தவிதப் பாகுபாடும் இன்றி மற்ற தொழில்நுட்ப கலைஞர்களுடன் சரிசம மாக அமர்ந்து உணவருந்திய காட்சி மனதைத் தொடுவதாக இருந்தது. சாப்பிடும் சாப்பாட்டிலும் எந்தவித பேதம் இல்லாமல் லைட்மேன் முதல் டைரக்டர் வரை ஒரே மாதிரியான ஆனால் சிறப்பான சாப்பாடு வகைகள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன.

மதிய உணவு முடிந்தது. யூனிட் மொத்தமாக நான்கு வேன் ஆறு கார் ஆகியவற்றில் புறப்பட்டு ஊட்டிக்கு சற்று ஒதுக்குப்புறத்தில் உள்ள 'லவ்டேல்' என்கின்ற இடத்தில் உள்ள 'ராணி பங்களாவை' அடைந்தது. இந்த ராணி பங்களா ஓர் அற்புதமான






இயற்கை சூழலில் அமைந்து இருக்கிறது. 'பாம்பே டையிங்' குடும்பத்திற்குச் சொந்தமான இந்தப் பங்களாவில் நுழைந்ததுமே டைரக்டர் பாரதிராஜா அந்தப் பங்களாவின் சுவர்களில் தொங்கிக் கொண்டிருந்த பழம்பெரும் ஓவியங்களைப் பார்த்து ரசித்து வியந்து போனார். இந்தப் பங்களா கட்டி நூற்றிரண்டு வருடங்கள் ஆகின்றன என்று அவரிடம் அங்குள்ளவர்கள் விவரித்த போது பிரமித்துப் போனார். இந்த பங்களாவில் பகல் மூன்று மணிக்குத் தொடங்கிய படப்பிடிப்பு இரவு இரண்டு மணி வரை தொடர்ந்து நடைபெற்றது. குஷ்பு, நெப்போலியன், ராஜா, லிவிங்ஸ்டன், டைரக்டர் ஜீ.எம். குமார் ஆகியவர்கள் சேர்ந்து நடிக்கும் பல காட்சிகளைப் படமாக்கினார் டைரக்டர் பாரதிராஜா. குஷ்புவுடன் இணைந்து இந்தப் படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடிப்பதை மிகவும் பெருமையாகக் கூறினார் நெப்போலியன். பாரதிராஜாவால் 'புது நெல்லு புது நாத்து' படத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் பல படங்களில் வில்லனாக நடித்துப் புகழ் பெற்றிருப்பவர் நெப்போலியன். தற்போது பல படங்களில் கதாநாயகனாகவும் நடித்துக் கொண்டிருப்பதாகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். படப்பிடிப்பு நடக்கும் நேரம் தவிர இடைபட்ட நேரங்களில் தாங்கள் தனித்தனியாக விரைவில் டைரக்டர் செய்யவிருக்கும் படத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டே இருந்தார்கள். இந்தப் படத்தில் டைரக்டர் பாரதிராஜா கேட்டுக்கொண்டதற்கிணங்க முதன் முறையாக திரையில் தோன்றி நடிப்பதாக டைரக்டர் ஜி.எம். குமார் கூறினார். 'அறுவடைநாள்' வெற்றிப் படத்தை டைரக்ட் செய்து மிகவும் பிரபலமானவர் இவர்.



கால்வருட பரிட்சை விடுமுறை என்பதால் படப்பிடிப்பு பார்க்கவென்று வந்திருந்த டைரக்டர் பாரதிராஜாவின் மகன் மனோஜ் மற்றும் மகள் ஜனனி படப்பிடிப்பு நடக்கும் பங்களாவில் எல்லோருடனும் அன்பாகப் பழகிக் கொண்டிருந்தார்கள். 'படிப்பு முடிந்ததும் எந்தத் துறையில் ஈடுபட ஆசை,' என்று மனோஜைக் கேட்டபோது "படிப்பு முடிந்ததும் என் தந்தையிடம் உதவியாளனாக்ச்சேர்ந்து டைரக்ஷன் துறையைக் கற்றுக்கொண்டு நானும் ஒரு சினிமா டைரக்டராகப் புகழடைய வேண்டும் என்பதுதான் என் ஆசை" என்று கூறினார் அந்தப் பதினாறு வயது இளைஞர்.



"பாவேந்தர் கண்ட பாரதியார்"

டாக்டர் கி.வேங்கடசுப்பிரமணியன்

"ஓர் ஊருக்கு ஒரு நாட்டுக்கு உரியதான ஒற்றைச் சாண் நினைப்புடையவரல்லர், பாரதியார் உலக கவி" என்று பாரதியைப் பன்னோக்குப் பாவலராகப் பாருக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் பாரதிதாசன் தலையாயவர். பாரதியாரோடு பத்தாண்டுகள் பழகி அவரது உள்ளும் புறமும் உணர்ந்தவர் அவர்தம் தாசன். "பாரதியாரின் பண்புகளைப் பாவேந்தர் கூறிடக் கேட்டால் புது உலகம் காண விழைபவர்களின் அகமெல்லாம் மகிழும்" என்பார் பேரறிஞர் அண்ணா. அவ்வாறு தம்முடைய கண்களிலே புத்தொளி வீசிடும்படியாகப் பாவேந்தர் கண்ட பாரதியைக் காண்பதே இக்கட்டுரையாகும்.

புரட்சிக் கவிஞர் பாரதி ஒரு தாசனைப் படைத்தார். அந்த மாணவனோ குருவுக்கே இமயப் பெருமை சேர்த்து அவரது உயரத்துக்கு விசுவரூபம் எடுத்து நின்றான்.

தமிழ்மொழித் தலைவன்

ஒவ்வொரு நாட்டிலும் மாற்றங்கள் நிகழவேண்டியிருப்பின் சான்றோர்களும், மகான்களும் தோன்றி மறுமலர்ச்சியை ஏற்படுத்துவர். பைந்தமிழ்ப் பாவலன், மகாகவி பாரதி தோன்றியபோது நாடு இருந்த நிலையை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் பாவேந்தர். தமிழகப் பண்டைய வரலாற்றைப் பார்ப்போம். நாட்டில் கொலைகள் மிகுந்திருந்த காலகட்டத்தில் உயிர்க்கொலை செய்வது பாவச் செயல் என்ற கருத்தை வலியுறுத்தச் சமண சமயம் தோற்றம் பெற்றது. தங்களுக்கு மட்டுமே முக்தி உரியது என்ற குறுகிய எண்ணத்தோடு அதை மக்களுக்குப் போதிக்காமல் மதத்தலைவர் சிலர் வாழ்ந்தபோது முக்தியை எல்லா மதத்தவர்களும் அடையும் வண்ணம் மந்திரங்களை எங்கும் ஒலிக்கச் செய்வதற்காகத் தமிழ்நாடு தாம் பெற்ற அருந்தவப்பயனாக ஒரு ஒப்பற்ற இராமானுசரை ஈன்றெடுத்தது. துருக்கர், கிருத்துவர், இந்து என்று மூன்று பிரிவினரும் மதத்தால் வேறுபட்டிருப்பினும் மொழியால் - உணர்வால் தமிழர்களே என்பதை உணராமல் தம்முள் சண்டையிட்டுக் கொண்டிருந்தபோது எல்லா மதங்களும் ஒன்றே என்னும் சமரசத்தைப் போதிக்க ஒரு மாபெரும் வள்ளலார் இராமலிங்க அடிகளை ஈன்றது. தமிழகத்தில் இராமானுசரும், வள்ளலாரும் தோன்றியதைப் போலவே மேலை நாடுகளில் காரல் மார்க்ஸ், ரூசோ, வால்டேர் தோன்றி மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். இவர்களைப் போலவே "பசி ஏற்பட்ட பொழுது உணவு கிடைத்தது என்று சொல்லும்படியாகத் தமிழ்நாட்டில் தமிழ் நிலைகுன்றியிருந்த காலத்தில் அறிஞர்கள் எதிர்பார்த்தபடி பாரதியார் தமிழ் மக்களிடையே தோன்றினார்". (ஆறுமுகம் அன்பு, (தொ.ஆ), கவிஞர் பேசுகிறார், பக் 14).

பாரதியார் வாழ்ந்த காலம் தமிழர்கள் வறுமையுற்றிருந்த காலம்; அவ்வறுமையினை நீக்கவல்ல மருந்தாக ஒருவன் தோன்றமாட்டானா என்று மக்கள் எண்ணி ஏங்கிக் கொண்டிருந்த காலம்; தமிழுலகம் அத்தகைய ஒருவன் தேவை தேவை என்று கதறிய காலம்; தமிழர்களின் உயிருக்கு நிகரான தமிழ்மொழியின் நிலையானது, ஏற்றம் பெறாமல் தாழ்வுற்று இருந்த காலம். இக்காலத்தில் கண்ணிருந்தும் நோக்காமல் குருடர்களாய்த் தமிழர்கள் வாழ்ந்தபோது ஒளிகாட்டும் சுழல் விளக்காகப் பாரதி தோன்றித் தமிழுக்கு ஏற்றமளித்தார்.

"தமிழகம், தமிழுக்குத் தரும் உயர் வரிக்கும்
தலவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்".

[பாரதிதாசன் கவிதைகள் 2 ஆம் தொகுதி : ப.72] என்று பாரதியின் தோற்றத்தைப் பாவேந்தர் பாடுவார்.

பாவேந்தர் கண்ட இரவிவர்மா பரமசிவம்

தமிழ்மொழிக்கு ஏற்றமளித்த தானைத்தலைவனைப் பாரதிதாசன் எப்போது, எங்குக் கண்டார்? பாரதியின் நண்பர் வேணுவின் இல்லத் திருமணம். திருமணப் பந்தலில் பலர் குழுமியிருந்தனர். அவர்களுள் ஒருவர் தனித்துக் காட்சியளித்தார். நோக்கியபோதே நல்லதொரு தோற்றத்துடன் காணப்பட்ட அவரைப் பாரதிதாசன் இரவிவர்மா கண்ட பரமசிவமாகக் கண்டார். பின்னர்தாம் பாரதி என்பதை உணர்ந்தார். அதற்கு முன்பே பாரதியை அவருடைய எழுத்தால் இனம் கண்டவர் பாவேந்தர். புதுவை மண்ணில் வாழ்ந்த பலர் பாரதியார் வெளியிட்டிருந்த சுதேசகீதங்களைத் தேசிய முழக்கமாக விடுதலை முழக்கமாக முழங்கினர். பாவேந்தர், பாரதியின் நண்பரான குவளைக் கண்ணனின் மூலம் அவருடைய நூல்களால் ஈர்க்கப்பெற்று எழுச்சி பெற்றார்.

புதுநெறிகாட்டிய பாவலன்

பாரதியாரின் நட்புறவு ஏற்பட்ட பின்னர் அவருடைய படைப்புகள் பாவேந்தரை ஏற்றம் பெறச் செய்தன.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தைக் கண்ட பொழுது "அக்கையெழுத்துப் பிரதி தம்முள் பெரிய மாறுதலை உண்டாக்கியது" என்றும், "பாரதியார் புத்தகம் நம்மைப் புதியதோர் உலகில் சேர்த்தது" என்றும் கூறுகின்றார். முப்பதாண்டுகள் வரைக்கும் பாரதிதாசனின் பாடல்கள் கடவுள் அருளைப் பெறுவீர் என்று கூறிக் கொண்டிருந்தன. பாரதி தோன்றி தம்மை மாற்றியதை -

"பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுவதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிர மணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை, புதுநடை காட்டினார்".

(புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனார் வாழ்த்து, 'கவிஞரும் காதலும்').

பாரதிதாசன் மேலும் கூறுகிறார்,

பாரதி காட்டிய புதுமுறை புதுநடை பற்றி :-

"பாரதியாருடைய தொடர்பு ஏற்படுவதற்கு முன்பு நான் தமிழாசிரியனாக இருந்தேன். அவரது தொடர்பு என்னுடைய பாநெறியில் ஒரு புதிய போக்கை ஏற்படுத்தியது. தம் கண்ணெதிரில் காணப்படும் மக்களின் தேவைகளைப் பாரதியார் பாடினார். அது என்னுடைய மனத்தைக் கவர்ந்தது. பிறகே என்னுடைய பாக்கள் அரசியல், சமுதாயம், மொழி ஆகிய பல்வேறு துறைகளில் உள்ள குறைநிறைகளை உருப்படியாக எடுத்துக் காட்டத் தலைப்பட்டன. இவ்வகையில் நான் பாரதியாருக்கு மிகவும் கடமைப்பட்டவன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பாவேந்தரின் மதிப்பீடு

பாரதியாரின் கவிதைத் தன்மையை அழகுபட மதிப்பீடு செய்தவர் பாரதிதாசன். பைந்தமிழ்த் தேர்ப்பாகனாக - செந்தமிழ்த் தேனீயாக - சிந்துக்குத் தந்தையாக - புதிய அறம் பாடவந்த அறிஞனாக - மறம் பாட வந்த மறவனாகக் கண்டார். மேலும் தமிழ்க்கவிதையில் - உரைநடையில் தனிப்புதுமை சுவையூட்டம் தந்து பெறுதற்கரிய பெரும் புகழினைப் பெற்ற பாரதி பகையை நடுங்கச் செய்யும் வல்லமை மிக்கவர் என்றார் பாவேந்தர்!

"பண்டைய தமிழ்நடை இன்றைக்கு வேண்டாம்
பலர்க்கும் புரியப் பாடுங்கள் என்றால்
நொண்டி நடக்கும்பண்டிதர் நடைதான்
நூலுக்கு வேண்டும் என்றார்கள் - அந்தப்
பகை நடுங்கச் செய்த பாரதி!"

(தேனருவி, பக் - 95-96)

என்று சொல் புதிதாய்- சுவை புதிதாய் எளிய நடையில் பொருள் விளங்கக்கூடிய சொற்களால் பாரதி மாகவிதை படைத்ததைக் குறிப்பிடுவார் பாவேந்தர். எங்கள் பாரதியின் வாய் திறந்தால் அச்சமென்னும் பேய் ஓடிவிடும் என்பார் இவர். எழுத்தில் சிங்க ஏற்றின் குரலைப் பாய்ச்சுகின்றான் பாரதிக் கவிஞன் என்று தன்னுடைய குருவைப் பலபடப் பாராட்டி மகிழ்வார் குருவையும் மிஞ்சக் கூடிய சீடர்.

"எல்லையற்ற ஆதரவும், பொருளாதாரமும், மிக்கிருந்த போதில் சேக்சுபியர், விக்டர்யூகோ, டால்ஸ்டாய், இரவீந்தர் போன்றோர் தம்முடைய சொந்த நாட்டிற்காகப் பாடுபட்டு மக்களை மேன்மையுறச் செய்தனர். ஆனால் பாரதி சமூகத்தில் மக்கள் நடைப்பிணங்களாக வாழ்ந்த காலத்தில், தான் வறுமைப் பிடியில் உழன்று கொண்டிருந்த போதும், மக்களுக்கு இன்தமிழ் உணர்வினை ஊட்டி அவர்களை எழச் செய்தவர்". (பாரதிதாசன் மகாகவி பாரதியார், ப. 24).

பாரதியின் கவிதையில் ஊற்றெடுத்து ஓடிவரும் இன்தமிழ் உணர்வினைக் கம்பன்கூட எழுப்பியதில்லை என்பவர் பாவேந்தர். கவிச்சக்ரவர்த்தி இராஜகாவியம் பாடினார். ஆனால், பாரதியோ மனித காவியம், மண்ணில் கிடந்த வீணை பற்றிய காவியம் பாடினார் என்பார் பாவேந்தர். அவரது குருபக்தி அளவற்றது. பாரதிதாசன் கூறுவதைக் கேளுங்கள் :

"பன்னீ ராயிரம் பாடிய கம்பனும்
இப்பொது மக்கள்பால் இன்தமிழ் உணர்வை
எழுப்பிய துண்டோ? இல்லவே இல்லை! "

(பாரதிதாசன் கவிதைகள். இரண்டாம் தொகுதி பா-75)

காப்பியக் கவிஞரான கம்பனைக் காட்டிலும், மக்கள் கவிஞரான பாரதியே தமிழுணர்வை அதிகம் ஊட்டியவர் என்று கூறுகின்றார் இவர். தன்னுடைய படைப்பில் உருவாக்கப்படும் பாத்திரங்களைக் கூறுமிடத்தும் எங்கும் பாரதியையே காண்கின்றார். காதலன் ஒருவன் தன்னுடைய காதலியைப் பாராட்டுகின்றபோது,


"மாண்புகழ்ப் பாரதி தமிழ் போன்ற சொல்லாள் இன் சொல்லாள் திண்டாடும் எனக்கின்ப வழிகாட்ட வல்லாள்! (பாரதிதாசன் கவிதைகள், நான்காம் தொகுதி,

என்னே குருபக்தி - என்னே சொல்லாட்சி என நாம் ஆனந்தக்கூத்தாடலாம்.

பாரதி உள்ளம்

பாரதியின் கவிதையினை மதிப்பீடு செய்தவர், அவருடைய உள்ளத்தையும் படம் பிடித்துக் காட்டுகின்றார். பாரதியின் உள்ளம் தூய உள்ளம்; அன்புள்ளம்; இந்த உலக மக்களெல்லாம் ஒன்றேயாம் என்று எண்ணும்படியான உள்ளம். பாரதியின் பெரிய உள்ளத்தைப் பார்த்திடுவீர்கள் என்கிறார் பாவேந்தர். எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு எல்லோரும் சமமென்பதுறுதியாச்சு என்ற மிகப்பெரிய உள்ளம் அது என்கிறார். சுதந்திரம் நாட்டுக்கன்று; முதலில் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். அமுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெற்றுவிட்டனர். இனி நாமெல்லோரும் சமானமாக வாழ்ந்து காட்டுவோம் என்று சிந்தித்துச் செயலாற்றிய தொண்டுள்ளம் கொண்டவர் பாரதி. ஆம் சாதியென்னும் கொடுமையை அஞ்சா நெஞ்சத்துடன் விரட்டியடித்தார். ஊருக்கு உபதேசம் என்றில்லாமல், சாதி ஒழிக்கப் பாடுபட வேண்டும் என்று பிறர்க்கு அறிவுறுத்தியதோடல்லாமல் அதனைத் தம் வாழ்விலும் கடைபிடித்தவர். அதன் மூலம் பிறருக்கு வழிகாட்டியாக விளங்கிய திறம்மிக்கவர்.

"மேலவர் கீழவர் இல்லை - இதை
மேலுக்குச் சொல்லிட வில்லை
நாலு தெருக்களின் கூட்டில் - மக்கள்




நாலா யிரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர் என்று சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்"

(பாரதிதாசன் கவிதைகள், 2 ஆம் தொகுதி - பாரதி உள்ளம் ப.80) என்ற பாரதியின் சாதி எதிர்ப்புக் கொள்கையை நமக்குக் காட்டுவார் இவர். பாரதி மக்களிடையே உள்ள சாதி வேரைக் கிள்ளிவிட வேண்டும் என்றார். அந்த வேரைக் கிள்ளிவிட்டால் அது மீண்டும் துளிர்த்தாலும் துளிர்த்துவிடும். எனவே, அந்த வேரை அடியோடு பொசுக்கி அழித்

→

பெரிய மனிதன்



பட்டுக்கோட்டை
ராஜேந்திரன்

இன்று நானோர் பெரும்பொறுப்பில்
இருக்கும் பேறு பெற்றுள்ளேன்
என்னில் அதற்(கு) அடிப்படைதான்
என்ன என்றால் - அன்றோர்நாள்
சின்னஞ் சிற்றிடைப் பெண்ணொருத்தி
சினத்தால் விட்ட ஓர்அறைதான்!
என்னைப் பார்த்(து) அவள் சிரித்திருந்தால்
என்றோ நான்கெட் டழிந்திருப்பேன்!

இப்போது நானோர் உயர்பதவி
ஏற்ற மகிழ்வில் திளைத்துள்ளேன்;
எப்படி, எதனால், நீஉயர்ந்தாய்
என்றால் - கல்லூரிப் பருவத்தில்,
செப்புச் சிலைபோல் தெரிந்தவளைச்
சொக்க வைக்க நான்முயல,
அப்போது தன்கால் அணியாலே
அவள்என் மேல்வைத்த முத்திரையால்!

நல்ல கணவர் மட்டுமல்ல;
நல்ல தந்தையும் ஆகிவிட்டேன்!
சொல்இதன் ரகசியம் எனக்கேட்டால் -
'ஜொள்கேஸ்' ஆன நான்ஓர்நாள்
மெல்ல ஒருத்தியை இடிக்கப்போய்,
மொத்துப் பட்டேன்; அவள்காறி
'சல்'லென முகத்தில் துப்பியபின்,
சகலமும் மறந்தேன்; மாறிவிட்டேன்!

இந்தஎன் இன்றைய பெருமைக்கே
இப்படிப் பலப்பல இளம்மயில்கள்
சொந்தக் காரர்கள் ஆவார்கள்;
சர்வமும் அவர்கள் எனக்களித்த
அந்தத் தண்டனை யாலேதான்!
அவர்கள்எல் லோரும் இசைந்திருந்தால்,
இந்த மனிதன் 'எய்ட்ஸ்'சோடு
எப்போதோ போய்ச் சேர்ந்திருப்பான்!

தொழிக்க வேண்டும் என்று பாவேந்தர் விழைந்தார். சாதி இதற்கு முன்பு இருந்ததில்லை இனியும் இருக்க வேண்டாம் என்றவர் பாரதி. இதேபோன்று முன்பு பல கவிஞர்களும், பெரியோர்களும் கூறியிருக் கின்றனர். அவை யாவும் மூலையில் கிடக்கின்றன. ஆனால் பாரதி கூறியதை அப்படியே மூலையில் தூக்கி எறிந்துவிட முடியுமா? முடியாது என்று முழக்கமிட்டு நாமும் அவர் கூறியதை ஏற்றுக் கடைப்பிடிப்போம் என்று கொள்கை முழக்கமிட்டவர் பாவேந்தர்.

பாரதி உலககவி

இறுதியாக பாரதி உலககவி அல்லர் என்று கூறி "அய்யர் கவிதைக்கு" இழுக்குக் கற்பிக்கின்றவர் களைத் தம் கூரிய பேனா முனையால் தாக்குகின்றார் பாவேந்தர். "அழகொளி சேர் பாரதியார் கவிதை தன்னை அறிந்திலதே புவி என்றால், அது புவிமேற் குற்றம்" என்று சாடுவார். கிராமியம் நன்னாகரிகம் பாடி வைத்தார்; கீர்த்தியுறத் தேசியம் சித்திரித்தார்; சராசரம் சேர் லௌகீகத்தை நன்றாய்ச் சொன்னார்; எனவே, உயிருள்ள வரைக்கும் பாரதி பாரத நாட்டு வீரர்; பாரதி பாரத நாட்டுத் தலைவர்; பாரதி பாரத நாட்டுக் கவிஞர் என்று கூறி அவர் உலககவி; சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க்கின்ற செம்மை நலம் எல்லாவற்றையும் அவர்பால் கண்டோம் என்று தாம் கண்ட பாரதியை உலகுக்குக் காட்டுகின்றார்.

"காடுகமழவந்த கற்பூரச் சொற்கோ
நீடுதுயில் நீக்கப்பாடிவந்த நிலா"

என்ற பாரதியாரைப் பற்றிய பாவேந்தரின் வரிகள், மனத்தைக் கொள்ளை கொள்வன. திரு.வி.க. பாவேந்தர் பற்றிக் கூறுவார்: "குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும், பாரதிதாசனின் பாட்டும் இனிக்கும்" என்பார்.

குருவா, சீடனா என்று பார்த்தால் பகவான், இராமகிருஷ்ணரும், விவேகானந்த அடிகளும் போல் பாரதியும், பாவேந்தரும் அமைகிறார்கள்.

இருவரின் கொள்கையும் "இருந்தமிழே உன்னால் இருந்தேன், இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" என்ற தமிழ்விடுதூதுக் கொள்கைதான்.

தமிழில்லாத தமிழ்நாடு என்ன நாடு? என்பதே இருவரின் ஏக்கமும். பாவேந்தர் கூற்றைப் பாருங்கள்:

"சூடாத மலரானேன்
ஆடாத அரங்கானேன்
தமிழற்ற நாடானேன்
தலையற்ற உடலானேன்"


(கலங்கும் காதலி)

எனவே அன்னை நிவேதிதா பகவான் பரமஹம்சரை யும், அவர்தம் ஒப்பற்ற சீடரையும் பற்றிக் கூறியதே பாரதிக்கும் அவர் தாசருக்கும் பொருந்தும் என நான் நினைக்கிறேன்". "They are like the convex & concave of one and the same circle, one came of the Seperated from the other" இதுதான் உண்மை. ௸

மனோபாவங்களை மாற்றிக் கொள்ளுங்கள்!

டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி





சமீபத்தில் என்னுடைய நெடுநாளைய நண்பர் ஒருவரைப் பார்த்தேன். மனிதர் எதிலும் குறை காண்பவர். ஏதாவது ஒரு சாமான் வாங்கி இருந்தீர்களானால் 'வேறு ஒன்றை வாங்கியிருக்கலாம்' என்று சொல்லுவார். நண்பர்களையோ, அரசியலையோ பேசும்போது கடுமையாக – உணர்ச்சிவசப்பட்டு – தாக்குவார். இதனால் இவருக்கு நண்பர்கள் குறைவு.

"பிறரது குறைகளை எல்லாம் எப்படித் தெளிவாக உங்களால் புரிந்துக் கொள்ள முடிகிறது?" என்று நாசுக்காகக் கேட்டேன்.

"நான் ஒரு பேராசிரியர். மாணவர்களுடைய விடைத்தாளைத் திருத்துபவன். விடைகளில் எங்கே தவறிருக்கிறது என்பதைத்தான் தேடுவேன். அதுவே என் பழக்கமாகிவிட்டது. வீட்டில்கூட அலுவலகத்தில்கூட – என்னால் எதிலும் குறையைத்தான் பார்க்க முடிகிறது" என்றார்.

மற்றொரு பத்திரிகை விமர்சகருக்கும் இதே பிரச்னைதான்.

"உங்கள் கட்டுரைக்காகவே நான் பத்திரிகை வாங்குகிறேன். எப்படி உங்களால் குடைந்து குடைந்து பார்த்து, எதிரியைச் சவுக்கால் அடிக்க முடிகிறது?" என்றேன்.

"நான் வழக்கறிஞனாகச் சட்டம் படித்தவன். சட்டம் படிக்கும்போதே அதில் எங்கே ஓட்டை இருக்கிறது என்று பார்த்தே படிப்பேன். இது ஒரு வக்கிர புத்தி என்று நீங்கள் சொல்லலாம். எதிர்க்கட்சி வக்கீல் பேசுகிறார் என்றால் அதில் எங்கே ஓட்டைகள் இருக்கின்றன என்று பார்த்து மடக்குவேன்.

"இப்படிக் குறை கண்டுபிடிப்பது மிகுந்த திருப்தி அளிக்கிறது. அவர்களைவிட நான் புத்திசாலி என்றாகிறதல்லவா?" என்றார்.

மனோபாவம் எப்படி ஏற்படுகிறது என்பதைப் பாருங்கள்! மனோபாவம் தவறுகளை – குறைகளைத் தேடும் வேலையாக முதலில் துவங்குகிறது. நாளடைவில் நமது சிந்தனை முறை – எண்ண ஓட்டம் – இப்படி எதிலும் குறை காண்பதாக அமைகிறது. இத்தகைய எண்ண ஓட்டம், நாளடைவில் மனப்பழக்கமாகி விடுகிறது.

மனப்பழக்கம்தான் செயலைத் தூண்டுகிறது; செயலிலும் அந்தப் பழக்கம் ஏற்டுகிறது. மனோபாவம் என்பது ஒரு விஷயத்தை எண்ணங்களால் அணுகும் முறை.

ஒரு சம்பவத்தை நான் கூறிவிட்டு அந்தச் சம்பவத்தை " ஒரு வாய்ப்பாகக் கருதுங்கள்" என்று கூறினேனானால் உடனே உங்கள் மனம் அதை வாய்ப்பாகக் கருதிச் சிந்திக்கத் துவங்குகிறது. இந்தக் குறிப்பிட்ட அணுகுமுறையை உபயோகிக்கிறது. இதே அணுகுமுறையைத் தொடர்ந்து

பார்ப்பனவற்றில் எல்லாம் கடைப்பிடிப்பீர்களானால் அதே உங்கள் மனோபாவமாக - மனப் பழக்கமாக மாறிவிடுகிறது.

மனோபாவம் என்பது "குறைப்படுவதில், குறை காண்பதில்" மட்டுமே வெளிப்படுகிறது என்பதில்லை.

நமது நண்பர்கள் சிலர் சுயலாபத்திற்காகப் பழகக் கூடும். நம்மை உபயோகிக்கக் கூடும். அதற்காகவே நம் நட்பை இவர்கள் பெறுவதிலும் பெற்றுக் காப்ப திலும் - கவனமாக இருப்பார்கள். இது மனோ பாவமாக அவர்களிடம் ஊறி விடுகிறது. இந்த அணுகுமுறை அவர்களுக்குக் கைவந்த கலை.

சிலருக்கு எதிலும் ஆர்வமிருக்காது. இவர்கள் வாழ்க்கைச் சம்பவங்களால் அடிபட்டு விரக்தி மனோபாவத்தை வளர்த்துக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களைப் பொது வாழ்வில் அதிகம் நீங்கள் காணக்கூடும். "எல்லாம் மோசம். இந்த நாடு பாழாகிக் கொண்டிருக்கிறது. யாரும் இதைக் காப் பாற்ற முடியாது" என்று புலம்புவார்கள். விரக்தி மனோபாவம்.

சிலர், தான் தவறு செய்திருந்தாலும் அதை மறந்துவிட்டுப் பிறர்மீது பழிபோடுவார்கள். பிறர் மீது பழிபோடுவதையே ஒரு மனோபாவமாக வளர்த்துக் கொண்டிருப்பார்கள். ஆசிரியர் சங்கக் கூட்டம் ஒன்றில் ஓர் ஆசிரியர் எழுந்து கல்லூரியின் பிரச்னை யைக் கூறினார் - எல்லோரும் சொல்லப்பயந்து கொண்டிருந்ததை! முதல்வர் எழுந்தார். இந்தப் பிரச்னைக்கு ஆசிரியர்தான் காரணம் என்று பழியைத் திருப்பிப் போட்டார். சில மாதங்களில் ஆசிரியரை வீட்டுக்கு அனுப்பினார். இத்தனைக்கும் அந்த ஆசிரியர் என்ன சொன்னார் தெரியுமா?

"பிரச்னைகளுக்கு வழிகாண்பதற்குப் பதிலாக யாரைப் பலிகடாவாக ஆக்கலாம் என்பதுதான் உங்கள் அணுகுமுறையாக இருக்கிறது!" என்றார். முதல்வர், அவரையே பலிகடாவாக்கினார்! தனது அணுகுமுறையை நிரூபித்தார்!

சிலருக்குப் பிறருடன் பழகுவதில் கூச்ச மனோ பாவம். சிலருக்கு எதையோ பறிகொடுத்ததுபோன்ற சோக மனோபாவம். சிலருக்கு எப்போதுமே வேலை செய்யாமல் நெளுவெடுக்கும் மனோபாவம். சில ருக்குப் பயந்த மனோபாவம்.

இந்த மனோபாவங்களெல்லாம் எப்படி ஏற்பட்டன, அவற்றை எப்படிப் போக்கலாம் என்று யோசித்தோ மானால் - சில பயிற்சிகளை மேற்கொண்டோமானால் நிச்சயமாக இவற்றிலிருந்து மீண்டு வரமுடியும்.

வெற்றியும் தோல்வியும், பயமும் தைரியமும், சோகமும் மகிழ்வும் - நாம் மனத்தை எப்படிப் பழக்கப்படுத்தி இருக்கிறோம் என்பதைப் பொறுத் தவை. எதிலும் வெற்றியைக் காண, சந்தோஷத்தைக் காண, துணிவைக் காண நாம் மனத்தைப் பழக்கிக் கொள்ள முடியும். "மனோபாவத்தை மாற்றிக் கொள்ளுங்கள் வெற்றி காண்பீர்கள்!" என்றுதான் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள், மனவியல் அறிஞர்கள்.

வாழ்க்கைக்குத் தேவைப்படும் பலவித மனோ பாவங்கள் இருக்கின்றன. மனவியல் அறிஞர்கள் ஆராய்ந்து எடுத்துக்காட்டியுள்ள சில மனோபாவங் களைப் பார்க்கலாம்:

1) சாதனை மனோபாவம் அல்லது வெற்றி மனோபாவம் (ACHIEVEMENT MOTIVATION) : டேவிட் மெக்கிளல்லண்ட் என்ற ஹார்வர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் சுமார் 25 ஆண்டுகள் ஆராய்ந்து இதைக் கண்டுபிடித்தார். இப்போது வெற்றி பெற விரும்புபவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறார். "வெற்றியடைய வேண்டும் என்கிற ஆசை எல்லோ ரிடமும் இருக்கிறது. அந்த ஆசையைப் பலப்படுத்தி னோமானால் சாதனை எளிதாகும்; அதிகமாகும்" என்பதுதான் அவர் கருத்து.

வெற்றியடைய விரும்புபவர்கள் எதிலும் நல்ல தையே பார்க்கிறார்கள். எதையும் முடியக்கூடிய காரியமாகவே மனத்தில் உருவாக்குகிறார்கள். தொழி லால் வெற்றி பெற்றோரை ஆராய்ந்ததில் அவர்கள் எதில் வெற்றி வாய்ப்பு அதிகமாக இருக்குமோ அதையே தேர்ந்தெடுக்கிறார்கள். வெற்றி மனோ பாவம் கொண்டவர்கள் சிறிய சிறிய காரியங்களாக எடுத்து அதில் சாதனை நிகழ்த்தித் தங்கள் வெற்றி மனோபாவத்தை வலிமைப்படுத்திக் கொள்கிறார்கள். இதுதான் அவரது கண்டுபிடிப்பு.

மேஜைமீது கை வைத்துக்கொண்டு உட்கார்ந் திருக்கும் ஓர் இளைஞனின் படத்தைக் காட்டி இது பற்றி ஒரு கதை எழுதுங்கள் என்று அவர் பயிற்சி தருகிறார்.

பலர் பலவிதமாகக் கதை எழுதுகிறார்கள். ஒருவர் காதல் கதை, மற்றொருவர் சோகக்கதை, இன்னொரு வர் ஏமாற்றக்கதை என்று விதவிதமான கதைகளை எழுதுகிறார்கள். கடைசியில் மெக்கிளல்லண்டு சொல் கிறார். "நான் பதிலை முன்பே சொல்லித் தருகிறேன் - உங்களுக்கு. நீங்கள் வெற்றி பெற வேண்டுமானால் அந்த இளைஞன் சாதிப்பதுபோலக் கதை எழு துங்கள். அவன் வெற்றியடைவது போலக் கதை எழு துங்கள். ஏனெனில் உங்களிடம் வெற்றி மனோபாவம் வேண்டும் வெற்றி பெற. ஆகவே எதைப் பார்த் தாலும் வெற்றி நோக்குடனேயே அணுகுங்கள்" என்கிறார்.

2) எதையும் வாய்ப்பாக்கும் மனோபாவம் : எட்வர்டு டிபானோ என்பவர் மிகப்பெரிய சிந்தனையாளர், எழுத்தாளர், நிர்வாக ஆலோசகர். அவர் "மாறுபட்டு சிந்திக்கும் முறைதான் புதியன கண்டுபிடிக்கும் மனோபாவத்தை உண்டுபண்ணுகிறது" என்று விளக்க மாகப் பல நூல்கள் எழுதி இருக்கிறார். டிபானோ கூறுகிறார் :"வெற்றி அடைபவர்கள் எதிலும் வாய்ப் பைப் பார்க்கிறார்கள். எனவே எதைப் பார்த்தாலும் அதில் வாய்ப்பைத் தேடுங்கள்."

ஒரு கருங்கல்லைக் கருங்கல்லாகப் பார்க்கா தீர்கள். ஒரு சிற்பமாகப் பாருங்கள். சிற்பமாக விற் றால் அதிக விலை போகும். அல்லது கருங்கல்லை மெல்லிய தகடுகளாக அறுத்துப் பாலிஷ் போட்டு விற்றால் கருங்கல்லைவிட நூறு மடங்கு விலை போகும். தடைக் கல்லைக்கூடப் படிக்கல்லாகக் கருதுங்கள். தடைக் கல்லின்மீது காலை வைத்து மேலே ஏறிச் செல்லுங்கள் என்கிறார்.

அமெரிக்காவில் வாஷிங்டன் மாநிலம். அங்கே ஓர் எரிமலை வெடித்துத்தீப்பிழம்பைக் கக்கியது. மைல் கணக்கில் சாம்பல் படர்ந்து மேடிட்டது. அங்கே முன்பு குடியிருந்த ஒரு மனிதன் திரும்பி வந்தான். சாம்பலை எடுத்தான். "பனிமலைச் சாம்பல் லேசானது. உலக அதிசயம். உங்கள் வீட்டில் இருக்கிறதா?" என்று விளம்பரம் செய்தான். உலகம் பூராவையும் எரிமலைச் சாம்பலை விற்பனை செய்தான்! மற்றொருவன் அதை நல்ல உரமாக விற்பனை செய்தான். மற்றொருவன் அந்த லேசான சாம்பல் தூளை உபயோகித்துப் புதிய லேசான செங்கற்களைத் தயார் செய்தான்.

தடை என்பது நாம் நினைக்கிறவரை தடைதான். அது தடையல்ல என்று எண்ணும்போதுஅது நம்மைக் காக்கும் குடையாக மாறிவிடும்! எல்லாம் மனோ பாவம்தான்.

3) தோல்வியைச் சமாளிக்கும் மனோபாவம் : தோல்வி இல்லாத வாழ்வு கிடையாது. தோல்வி ஓர் அனுபவம். அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் சிலர் தோல்வி வந்தவுடன் பின்னோக்கிச் சிந்திப்பார்கள். "இதற்கு முன் மூன்று முறை இப்படித்தான் ஆகியது. எப்போதுமே நான் இப்படித் தான்; நான் தோல்வியாளன் " என்று முடிவு கட்டு வார்கள்.

நாம் தோல்வி கண்டோம் என்பது உண்மை. ஆனால் "நாம் தோல்வியாளன்" என்பது உண்மை யல்ல.

"இந்த முறை தோற்றேன்; அவ்வளவுதான்! அடுத்தமுறை நான் வெற்றி பெற முடியும்" என்று எண்ணி முயல வேண்டும்.

இதைத்தான் மார்ட்டின் செலிக்மன் என்ற பெனிசில்வேனியா பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் "தோல்வியைப் புறங்காணும் மனோபாவம்" என்று விரிவாக எழுதுகிறார்.

தோல்வி ஏற்படும்தான் வாழ்வில். யார் சொன்னார்கள் உங்கள் வாழ்வு எப்போதும் 45 டிகிரி கோணத்தில் நேர்கோடாக மேலே மேலே ஏறிக் கொண்டு போகுமென்று?

அது உண்மையல்ல. வாழ்வில் இன்பமும் உண்டு துன்பமும் உண்டு; வெற்றியும் உண்டு தோல்வியும் உண்டு. "துன்பத்தையும் தோல்வியையும் கண்டு கலங்குகிறோமா அல்லது அதை மீறிச் சமாளிக்க முயல்கிறோமா?" என்பதுதான் கேள்வி.

அந்தத் தோல்வியைத் 'தாற்காலிகத் தோல்வி' என்று எடுத்துக்கொள்ளும் மனோபாவத்தை வளருங் கள் என்கிறார் செலிக்மன்.

நண்பர்களே! உங்கள் மனோபாவம்தான் வெற்றி யின் பாதை. நல்ல எண்ண ஓட்டங்களைப் பழக்க மாக மாற்றுங்கள். எதிலும் வெற்றியைக் காணும் மனோபாவம், எதிலும் வாய்ப்பைப் பார்ப்பது, எந்தக் கஷ்டத்திலும் அதை மீறிவரும் தன்மையுடன் அணுகும் பழக்கம் - வெற்றி உங்கள் கையில்!



விதியை மாற்றும் வலிமை வேண்டும் - என்றும்
மின்னு கின்ற இளமை வேண்டும்
புதிய நாற்றுப் பொலிய வேண்டும் - என்றும்
புகழின் ஊற்று விளைய வேண்டும்.

பார்த்த தென்றும் நினைவில் வேண்டும் - கொள்ளும்
பழக்கம் தன்னில் கனிவு வேண்டும்
சேர்த்து வைக்கும் திறமை வேண்டும் - அந்தச்
செல்வம் உதவி புரிய வேண்டும்.

பெருமை கொள்ளும் பெயரும் வேண்டும் - வாய்
பேசும் பேச்சில் உயர வேண்டும்
உரிமை கொள்ளும் உறவு வேண்டும் - அதில்
உலகை ஆளும் நிறைவு வேண்டும்.

குறியை நோக்கிச் செல்ல வேண்டும் - கொண்ட
கொள்கை என்றும் வெல்ல வேண்டும்
வெறியின் நோக்கம் தள்ள வேண்டும் - அன்பு
விழியின் பார்வை கொள்ள வேண்டும்.

தட்டிக் கேட்கும் துணிவும் வேண்டும் - செயல்
சத்தியத்தில் முனைய வேண்டும்
விட்டுக் கொடுக்கும் மனமும் வேண்டும் - கொண்ட
வினையை முடிக்கப் பணிவும் வேண்டும்.

உளியைப் போல செதுக்க வேண்டும் - பண்பில்
ஒழுக்கம் என்றும் பதிக்க வேண்டும்
ஒளியை என்றும் போற்ற வேண்டும் - அதை
உள்ளந் தன்னில் ஏற்ற வேண்டும்!

மதிஒளி

உலகம் தழுவிய சிவவழிபாடு



டாக்டர் நா. மகாலிங்கம்

சூரியனைத்தான் 'சிவன்' என்று ஆதிமக்கள் வழிபட்டார்கள். தினசரி காலையில் சிவப்பாகத் தோன்றி, மாலையில் சிவந்த பிழம்பாக மறைகிற பொருளைச் 'செம்பரிதி' என்றார்கள். பரிதி என்றால் சூரியன்.

சூரிய வழிபாடு உலகமெங்கும் இருந்திருக்கிறது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் எகிப்தை ஆண்ட பாரோவ அக்னாடன் சூரியனே தெய்வம் என்று நம்பினான். பழைய கோயில்கள் இருந்த ஊரையே துறந்து சென்றான். ஒரு புதிய தலைநகரை ஏற்படுத்தினான். அங்கே சூரியனுக்கு ஒரு கோயில் கட்டி, புதிய சூரிய வழிபாட்டு முறையையே ஏற்படுத்தினான்.

"சூரியனையே ஆதி மக்கள் வணங்கினார்கள்; அதுவே உலகம் பல்கிப் பெருகக் காரணமாக இருக்கிறது" என்று அக்னாடன் நம்பினான். இன்று அதுதான் உண்மை என்று நிரூபணமாகி விட்டது.

நம் நாட்டிலே முன்பு இருந்த சூரிய வழிபாடுதான் இப்போது பொங்கல் பண்டிகையாகி இருக்கிறது. சூரிய குலம், சூரிய வம்சம் என்றெல்லாம் ஏற்பட்டது. இராமன் சூரிய குலம்; சோழ சக்கரவர்த்திகள் சூரிய குலத்தவர்கள்.

தமிழ் மக்கள் உள்ளதை உள்ளபடியே ஏற்றுக் கொள்பவர்கள். அவர்கள் இஷ்டத்துக்கு சூரியனுக்குப் பெயர் சூட்டவில்லை. அது எப்படிச் சிவப்பாக இருக்கிறதோ, அப்படியே பெயரிட்டார்கள். சிவந்திருக்கிற பொருள் சிவன் ஆகிற்று.

எகிப்து நாட்டு மன்னன் அக்னாடன் காலத்து மக்கள் போல, ஆதி தமிழர்களுக்குப் பின் வந்தவர்களும் இந்தச் சூரியனின் பெருமைகளைப் புறக்கணித்தார்கள். சிலப்பதிகாரம் 'ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்' என்று முழங்கும் வரை தமிழன் சூரியனை மறந்தே போய்விட்டான் - ஆனால் இன்றும் தமிழர்களில் ஒரு பகுதியினர் சூரிய வழிபாட்டைச் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் தினசரி முதலில் வணங்கி வரும் தெய்வம் சூரியன்தான்.

இந்தியாவில் சூரியனுக்குக் கோயில் எழுப்பித்தார்கள் பல மன்னர்கள்.

'சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான் என்றும், 'செவிகாள் கேண்மின்களோ சிவன் எம்இறை' என்றும், திருநாவுக்கரசர் பாடியிருக்கிறார்.

சிவனையே நம் முன்னோர்கள் இறைவனாகக் கருதி வந்தனர். காரணம் அதுவே படைப்புக்குக் காரணமாக இருக்கிறது என்று நம்பியதுதான்.

சிவனின் வாகனமாக அவர்கள் அமைத்தது நந்தி என்கிற ரிஷபத்தைத்தான். ஆதியில் மனிதனின் நெருங்கிய நண்பனாக இருந்து அவனுக்காக உழைத்த மிருகம் காளையும், பசுவும் ஆகும்.

நந்தியைப் பிற்காலத்தில் கோயிலில் முதல் இடத்திலேயே வைத்தார்கள்.

சிவன் என்கிற தமிழ்ப் பெயரே, சம்ஸ்கிருதத்தில், வேதத்தில் 'ருத்ரா' என்று ஆகியது. 'ருத்ரா' என்றால் சிவப்பாக இருக்கும் ஒன்று என்றே பொருள்.

எகிப்திய கடவுளான அம்மானின் வாகனம்கூட நந்திதான். கிரேக்கர்களின் கடவுள் பெயர் சிவஸ். இது சிவனிலிருந்து வந்த சொல் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அம்மான் என்பதுகூட நல்ல தமிழ்ச் சொல்தான்.

அம்மானே! பெருமானே! என்றெல்லாம் நாயன்மார்கள் சிவனைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "இந்திய கோயில்களில் உள்ள சிவலிங்கத்தைப் பார்த்தால் எகிப்தியரின் பாஹ்லாஸ் போலவே இருக்கிறது" என்கிறார் ஏ. கிராபவுண்ட் என்கிற ஆசிரியர்.

பாபிலோனில் சிவவழிபாடு இருந்திருக்கிறது. அங்கே அவர்களுடைய கடவுளுக்கு 'எல் சடை' என்றே பெயர் வழங்கி வந்தது. 'எல்' - என்ற சொல்லுக்குச் சூரியன் என்பதுதான் பொருள். சூரியனைத்தான் சிவன் என்று ஆதி மக்கள் வழங்கி வந்தனர். சிவனைச் செஞ்சடையோன் என்று நாம் சொல்கிறோம்.

பாபிலோனில் கிடைத்த மண் பலகை சாஸனங்களில் 'சிவன்' என்ற வார்த்தை காணப்படுகிறது.

அமெரிக்காவில் கொலாரடோ நதியின் வானளாவிய கூரை ஒன்றில் ஒரு சிவன் கோயில் இருப்பதைப் பற்றிய செய்தியை 1937ஆம் வருஷத்து 'காவல் கேட்' என்கிற லண்டன் இதழ் வெளிப்படுத்தியது.

இந்தக் கொலாரடோ நதிப் பிரதேசம் வெகுகாலம் வரை வெளி உலகிற்குத் தெரியாமலே இருந்தது. 1858ஆம் ஆண்டில் தான் இந்தப் பிரதேசத்தில் தங்கம் இருப்பது தெரிந்தது. டென்வர் என்கிற ஊரை அடுத்த சமவெளிக்கு மக்கள் ஓடினார்கள். பிரமாண்டமான மலைகளை அறுத்துக் கொண்டு அதல பாதாளத்தில் கொலாரடோ நதி ஓடுவதைக் கண்டார்கள்.

வெள்ளையர்கள் இங்கே வருவதற்கு முன் இரண்டு இந்திய இன மக்கள் இங்கே வாழ்ந்திருக்கிறார்கள்.

அவர்கள் இந்த மலையில் அமைத்த கோயில் சிவன் கோயில். ஆனால், இன்று அந்தச் சிவன் கோயில் அங்கே இல்லை. அது அமைந்திருந்த பெரிய பாறை மட்டும் இருக்கிறது.

தூரத்திலிருந்து பார்த்தால் அது நம் திருச்சி மலைக்கோட்டை போலவே இருக்கிறது. மேலே உச்சிப்பிள்ளையார் கோயில் இல்லாவிட்டால் எப்படி சிராபள்ளிமலை இருக்குமோ அப்படியே அது இருக்கிறது. தாயுமானசாமி கோயில் போலவே அதன்மேல் பகுதியும் இருக்கிறது.

சிவன் கோயில் எங்கே போயிற்று என்று தெரியவில்லை. ஆனால் அந்த இடத்தைச் சிவன் கோயில் என்றுதான் குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள். "பத்தாயிரம் வருஷத்துக்கு முன் இருந்த கோயில்" என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் உறுதியாகச் சொல்கிறார்கள்.

கொலாரடோ மலை அமெரிக்காவின் மிகப் பெரிய ஏழு மலைகளில் ஒன்று. அதிலுள்ள இந்தச் சிவன் கோயில் மலையை அமெரிக்க மியூஸியம் மற்றும் இயற்கைச் சரித்திரப் பிரிவைச் சேர்ந்த விஞ்ஞானிகளே கண்டு பிடித்தார்கள். கண்டுபிடித்ததும் - "இழந்த உலகத்தையே கண்டுபிடித்து விட்டோம்" என்று குதூகலித்தார்கள்.

"இரண்டு லட்சம் ஆண்டுகளாகக் கொலாரடோ நதியின் அரிப்பினால் ஏற்பட்ட 90 அடி உயர 'கன்யான்' களில், உட்பகுதியில் அரை சதுரமைல் பரப்பளவில் பெரிய பீடபூமி மீது இந்தச் சிவன் கோயில் காணப்பட்டதாக 1937ஆம் ஆண்டில் லண்டனில் வெளியான 'நியூஸ் ரிவ்யூ' வெளியிட்டிருக்கிறது.

"லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் நாலாபுறமும் பெருவெள்ளம் சூழ்ந்தபோது உலகிலே மிருகங்களுக்குப் புகலிடம் அளித்த உயர்ந்த இடங்களில் இதுவும் ஒன்றாக இருக்கலாம்" என்று 1937ஆம் ஆண்டில் 'டைம்ஸ் ஆஃப் சிலோன்' இதழ் எழுதியது.

"கொலாரடோ சிவன் கோயில் பழங்கால இந்துக்களின் கலாசாரத்தைச் சேர்ந்தது" என்று 'நியூஸ் ரெவ்யு' கூறியது.

அப்போது கொலாரடோ நதி இத்தனை பெரிய 'கான்யான்' களை ஏற்படுத்தாதிருக்கலாம். மலை அடிவாரத்திலேயே பூமி மட்டத்திலேயே அது ஓடியிருக்கலாம்.

எப்படியானாலும் குறைந்தது பத்தாயிரம் ஆண்டு காலத்தையாவது கொண்டது இந்தச் சிவன் கோயில்.

தென் அமெரிக்காவில் உள்ள அடர்ந்த காடுகளில் மேலும் பல இந்துக் கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மெக்ஸிகோவில் இன்றும் இந்திய கலாசாரத்தைக் காட்டும் கோயில்கள் இருக்கின்றன.

கிரீஸ் தீவிலும் சிவன் என்கிற பெயருடைய ஓர் ஊர் இருந்திருக்கிறது; ஆசியாமைனரிலும் சிவாஸ் என்கிற பெயரில் ஓர் ஊர் இருந்திருக்கிறது.


மேற்கு ஆசிய மக்கள் தங்கள் ஆண்டின் மூன்றாவது மாதத்திற்குச் 'சிவன்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

"சிவ தத்துவமே, மனிதகுலம் முழுமையிலும் ஒரு காலத்தில் பரவி இருந்தது. தூர தூரப் பிரதேசங்களிலும், நாடுகளிலும், மூலமே தெரியாத நாடுகளிலும், தாங்கள் செய்து வந்த சடங்குளின் பொருளையும் உணராத இனங்களிலும் அது வியாபித்து நிற்கிறது" என்கிறார் பாட்டர்ஸன் என்கிற ஆராய்ச்சியாளர்.

ஜப்பானின் பழைய கடவுள்களில் ஒன்றின் பெயர் 'சிவோ', ஷிகாரிகளின் தெய்வமும் சிவன்தான்.

எகிப்தியர்களும், ரோமானியர்களும், கிரேக்கர்களும் 'பிரியாபஸ்' என்ற சிவலிங்க வடிவத்தில் உள்ள கடவுளையே வழிபட்டு வந்தனர்.





இஸ்ரவேலர்கள் என்கிற இஸ்ரேலியர்கள் ஆதியில் சிவலிங்கங்களையே வழிபட்டார்கள்.

சிவலிங்க வழிபாட்டில் ஒரு காலத்தில் 'பலி' இடுதலும் நடந்திருக்கிறது.

அந்த நாளில் சிவலிங்கத்தின் முன் பலிபீடம் இருந்தது. அதில் சாம்பிராணி போட்டார்கள். மாதத்தின் மத்திய நாட்களில் நேர்த்திக்காரர்கள் பலிகளைச் செலுத்தினார்கள். இஸ்ரேலியக் கோயில்களில் ரிஷபம், கன்று உருவில் முக்கிய வழிபாட்டுப் பொருளாக இருந்தது. அந்த மாதத்தின் மத்திய நாள்தான் அமாவாசை.

இஸ்ரேலியர்களின் சிவலிங்க, கன்று வழிபாடுகளே, பிற்காலத்தில் கிறிஸ்துவத்தில் சிலுவையாக நுழைந்தது. சிலுவையின் கீழ் நீண்ட பகுதியை முக்கால்வாசி பூமிக்குள் புதைத்து விட்டால் லிங்கமாகிவிடும்.

ரோமானியர்கள் சிவலிங்கச் சின்னங்களைப் பிரான்ஸில் பரப்பினார்கள். இன்றும் பிரான்சில் மாதாக் கோயிலில் சிவலிங்கச் சின்னங்களைக் காணலாம்.

அலக்ஸாண்டிரியாவில் நடந்த திருவிழாவில் 129 முழ உயரமுள்ள சிவலிங்கம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டதாக எழுதியிருக்கிறான் தாலமி. கிரீஸில் சிவலிங்கத்தை நகர்வலம் கொண்டு வரும் பழக்கம் இருந்திருக்கிறது.

அயர்லாந்தில் கிறிஸ்துவக் கோயில்களில் சிவலிங்க வடிவங்கள் காணப்படுகின்றன. அயர்லாந்து மக்கள் கிறிஸ்துவர்கள் ஆவதற்கு முன்னால் 14ஆம் நூற்றாண்டு வரை சிவலிங்க வழிபாட்டையே செய்து வந்தனர். லிதுவேனியர்களும் சிவலிங்க வழிபாடுதான் செய்து வந்தார்கள்.

இதாலியில் இன்றும் கிறிஸ்துவக் கோயில் விழாக்களில் பழைய சிவலிங்க வடிவங்கள் காணிக்கையாகச் செலுத்தப்படுகின்றன. சிவலிங்க வழிபாட்டில் நம்பிக்கையுள்ள மக்களை, அவர்களுடைய பழக்க வழக்கங்களோடேயே கிறிஸ்துவம் அங்கே ஏற்றுக் கொண்டுவிட்டது.


அங்கே பெரிய திருவிழாவின்போது பலவிதமான அளவுகளில் 'பாலாஸ்' வடிவ மெழுகுவத்திகளை விற்கும் சிறு கடைகள் வந்து குவிகின்றன. ஆயிரக் கணக்கில் அவை வாங்கப்பட்டு கோயிலுக்குள் ஏற்றி வைக்கப்படுகின்றன.

சிவலிங்க வழிபாடு இந்தியாவிலிருந்து எதியோபியாவுக்கும், எதியோபியாவிலிருந்து எகிப்துக்கும், எகிப்திலிருந்து ஆசியாமைனருக்கும், கிரீசுக்கும் பரவிற்று என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

திபேத்திலும், ஜப்பானிலும், மெக்ஸிகோ,பெரு, ஹைட்டி முதலிய நாடுகளிலும் சிவலிங்க வழிபாடே நடந்து வந்தது!

ஸ்பானிஷ்காரர்கள் அமெரிக்கா சென்றபோது அவர்களுக்கு முன்பே அங்கே சிவலிங்க வழிபாடுகள் நடைபெறுவதைக் கண்டார்கள். அமெரிக்காவும் இதற்கு விதிவிலக்கல்ல; டஹோமியில் 'எலங்பா' என்ற சிவலிங்கம் இருந்தது.

இதாலிய, கிரேக்க தெய்வம் 'பக்கஸ்'. கிரேக்க மொழிகளில் 'பக்கஸ்' என்றால் சிவன் என்றுதான் பொருள். ரிஷபமும், புலியும் அவருக்குப் பிரியமான வாகனங்கள். புலித்தோல் உடுத்தி; திரிசூலம் ஏந்திய கடவுள் இவர். 'கெபன்', 'கெடா' என்று தங்கள் தெய்வங்களை அவர்கள் அழைத்தார்கள்.





கெமோஸ், மொலோச், மொதோக், ஆதேனியஸ், சிபாஸியஸ், பகேநாஸ் என்கிற பெயர்களில் ஆசியா மைனரில் வணங்கப்பட்ட தெய்வங்கள் எல்லாம் சிவ லிங்கமே.

மெக்காவில் இப்போதுள்ள தாபா கல்லும் ஆதியில் வணங்கப்பட்ட தெய்வக் கல்லே. அது சதுர வடிவ மாக இருக்கிறது. அதன் நடுவில் முன்பு சிவலிங்கம் இருந்திருக்க வேண்டும்.

இசுலாமும், கிறிஸ்துவமும், பழைய மக்களின் நம்பிக்கையை முற்றிலும் அழித்து விடுவது அசாத் தியம் என்று கண்டு, அவற்றின் தவிர்க்க முடியாத சின்னங்களை வேறு உருவில் தம்முள் ஏற்றுக் கொண்டுவிட்டன.

சிவலிங்கம் பல்வேறு உருவில் உலகெங்கும் இருந்திருக்கிறது. அந்தந்த இடத்து மக்களின் கைத் திறன் வளர்ச்சிக்கு ஏற்ப அது அமைந்து இருந்தது. ஆதியில் அமைந்ததைக் கைத்திறனில் முன்னேறிய பின்னரும் அப்படியே வைத்துக் கொண்டார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிவலிங்கம் தோன்றிவிட்டது. அதனால் அது தோன்றிய இடத்தில் மக்களின் கைத்திறத்திற்கு ஏற்ப அதன் உருவம் அமைந்திருந்தது. ஒரு குறிப்பிட்ட வடிவம், அமைப்பு என்று இல்லாமல், பல இடங்களிலும், சிவலிங்கக் கல் நீண்டதாகவும், குட்டையாகவும், அடி பெருத்தும், மேல் சிறுத்தும், பீடம் இன்றியும், பீடத்துடனும் சில இடங்களில் ஓர் ஆள் உயரமும் - இப்படி பல்வேறு வடிவங்களில் இருக்கிறது.

நாம் பிள்ளையாரை மணலிலும் பிடித்து வைக் கிறோம்; வீட்டுப் பண்டிகைகளில் மஞ்சளிலும் பிடித்து வைக்கிறோம். மாவிலும் பிடித்து வைக் கிறோம். பிள்ளையார் என்கிற நினைப்புக்கு ஓர் உரு வம் தருவதுதான் அப்போது முக்கியமாக இருக் கிறது. சகல லட்சணங்களுடன் கூடிய பிள்ளையார் தான் வீட்டுச் சடங்குகளுக்குத் தேவை என்று நாம் கருதுவது இல்லை.

"இந்தியாவின் சிவகணமான காளையே செமிட்டி யரின் காளைவடிவான தெய்வம். செமிடி மதங்களில் காளையுடன் சம்பந்தப்படாத தெய்வமே கிடையாது. கிரேக்கக் கடவுள் டையோனிஸ் காளையே. அவர்கள் காளையைப் 'பொபஸ்' என்றார்கள்.

தெரபோவம் என்கிறவர் பெத்தல், டாய் என்கிற இரு இடங்களில் உள்ள கோயில்களில் காளைக் கன்றுகளைக் கல்லில் உருவாக்கிவைத்தார்.

எகிப்தியர்களிடமிருந்து தங்களைக் காத்த கட வுளாகவே காளையை இஸ்ரேலியர்கள் கருதினார்கள்.

இங்கிலாந்தில் ஒரு கோயிலில் காளை நிஜமாகவே இருந்தது. குழந்தைப் பேறு இல்லாத பெண், குழந்தை பெற விரும்பினால், அவளையும் இந்தக் காளையை யும் ஊர்வலமாக அழைத்துச் செல்வார்கள். பின் னால் குருமார்கள் பாடிக்கொண்டே வருவார்கள். ஊர்வலம் கோயிலுக்கு வந்து சேர்ந்ததும் காளையை அதற்கு உரிய கோயில் மைதானத்தில் கொண்டு போய் விட்டு விடுவார்கள். காளையுடன் சென்றால் பெண் கருத்தரிப்பாள் என்று நம்பினார்கள்.

அந்தக் கோயிலுக்குள் ஒரு பரிசுத்தக் கல் மூலஸ் தானத்தில் இருந்தது. அதைக் காளையுடன் வந்த பெண் அந்தக் கல்லை வழிபடுவாள்.

இந்த விவரங்களை 'தி மதர்ஸ்' என்ற நூலில் காணலாம்.

மொகஞ்சதாரோவில் காளைச் சின்னம் கிடைத் திருக்கிறது. ஹரப்பாவிலும் காளைச் சின்னம் பொறித்த மிகப் பழைய காலத்து நாணயங்கள் கண் டெடுக்கப்பட்டிருக்கின்றன.

மத்திய தரைக்கடலைச் சூழ்ந்த எல்லா நதி களிலுமே காளை, சிவன், சின்னங்களும், வழிபாடு களும் நிறைய இருந்திருக்கின்றன.

காளை மீது சத்தியம் செய்யக்கூட மக்கள் அஞ்சி னார்கள். அங்கே 'ஸ்ராடாஸ்' என்ற பெயரில் காளை வணங்கப்பட்டது.

உலகின் எல்லாப் பகுதிகளிலும் சிவலிங்கம் காளை - சம்பந்தப்பட்ட ஏதாவது ஒன்று கண்டுபிடிக் கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் அது இருந்திருக்கிறது.

சிவ வழிபாடு நடைபெற்று வந்த காலத்தில் உலகம் இன்று போல தூர தூரமாகப் பிரிந்து கிடக்கவில்லை. எல்லாம் ஒரே கோளமாகவே இருந்தன. மக்கள் தொகையும் மிகமிகக் குறைவு. ஊர்களும் அதிகம் கிடையாது. காடுகளே அதிகம். போக்குவரத்துக்கு உரிய சாலை முதலிய சாதனங்கள்கூட அதிகம் கிடையாது.

ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சிவ வழிபாடுதான் இருந்தது என்று பழைய வரலாற்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள்.

அதன் பின்னரே, சிவ வழிபாட்டை மேற்கொண்டு வந்த மக்கள் வாழ்ந்த லெமூரியா கண்டம் கடலில் மூழ்கியது. லெமூரியா கண்டத்தில் இருந்த மக்கள் உலகத்தின் பல பாகங்களில் சென்று குடியேறி னார்கள்.

அதன் பின்னும் இரண்டு மூன்று ஊழிகள் ஏற்பட்டு விட்டன.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு ஊழி கட்டாயம் இருந்திருக்கிறது. அந்தப் பழைய லெமூரியா கண்டத்தின் தமிழ் மக்களே சிவ வழிபாட்டை உலகமெங்கும் கொண்டு சென்றார்கள். போகிற இடத்தில் எல்லாம் சிவலிங்கத்தை நிறுவி னார்கள்.

இந்த வரலாற்று உண்மைகளை ஞானயோக ஆற்றலால் நன்கு அறிந்து இருந்த ஞானசித்தர் ஆகிய திருமூலர் :

"சிவ சிவ என்கிலர் தீவினை ஆளர்
சிவ சிவ என்றிட தீவினை மாளும்"

என்று திருமந்திரத்தில் பாடிப் பரவி இருக்கிறார்.

நட்சத்திரம்

தீயரசர் மோகன்



பள்ளியிலிருந்து வீட்டிற்குள் நுழைந்த எட்டு வயதுக் குழந்தை புயலாக மாறினாள். கையிலிருந்த புத்தகப் பை பறந்து விழ, புத்த கங்கள், சிலேட்டு எல்லாம் வெவ் வேறு திசைகளில் சிதறின. பெட்டி திறந்து... வெளியில் உருண்ட பலப்பக் குச்சி துண்டுகளாகத் தெறித்தது. சுவரின் பக்கம் திரும்பி முழங்காலில் முகம் புதைத்த வாசுகி விசிக்க ஆரம் பித்தாள். சத்தம் கேட்டுச் சமை யலறையிலிருந்து வெளியில் வந்த செல்விக்கு அந்தப் பிஞ்சு மனதில் பூகம்பம் உருவான காரணம் புரியவில்லை. விசித்துக் கொண் டிருந்த மகளின் தலையை ஆதுர மாகக் கோதினாள்.

"ஒண்ணும் வேண்டாம் போ" வெடுக்கென அவள் கையைப் பிடுங்கி எறிந்தாள் வாசுகி... "நா இப்படி அழுறதுக்குக் காரணம் யார் தெரியுமா? நீங்கதான். எல்லாம் உங்களாலேதான் வந்தது. பாருங்க. கணக்குப் பரீட்சையிலே என் மார்க்கைப் பாருங்க" அடி வயிற்றிலிருந்து ஆத்திரம் பீறிடக் கத்தினாள் வாசுகி.

"இவ்வளவுதானா! எங்கிட்டே சந்தேகம் கேட்டா சொல்லிக் கொடுக்கறேன்". செல்வி சமாதானமாகப் பேசியபடி வாசுகியை நெருங்கினாள்.

ஆனால் வாசுகியின் மனம் சமாதானம் அடையவில்லை. "பொய் சொல்லாதீங்க. நா எப்ப புத்தகத்தை எடுத்துகிட்டு வந்தாலும் மனசு சரியில்லை... அழுகை... அது ஒண்ணுதான் உங்களுக்குத் தெரிஞ்சது. எல்லாருக்கும் அப்பா இருக்காங்க; சொல்லிக் கொடுக்கறாங்க... அப்பாவைப் பத்திக் கேட்டா அதுக்கும் பதில் அழுகைதான். நான் யார்கிட்டே போய் படிப்பேன்... இப்ப சொல்லுங்க. எனக்கு யார் இருக்காங்க? பசங்க எல்லாம் என் மார்க்கைப் பார்த்துட்டு எப்படி கேலியா சிரிச்சாங்க தெரியுமா? நா போமாட்டேன். ஸ்கூலுக்குப் போமாட்டேன்" கதறியபடி முழங்காலிட்டுக் குனிந்தவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அவள் திமிறலையும் மீறி அவளை இறுக அணைத்துக் கொண்டாள் செல்வி. அவள் கண்ணில் வாசுகி மட்டும் படவில்லை. இதேபோல் குமுறிக் கொண்டு சிதறிய தன்னையே கண்டாள். தான் ஒடிந்துபோன அந்த நாட்கள் நினைவுக்கு வந்தன. நினைப்பில் அதுவே ஊன்றிவிட, மனம் அந்த நாட்களை நோக்கிச் சிறகடித்துப் பறந்தது.

மரத்தடியில் செல்வி முழங்காலில் முகம் புதைத்து விசித்துக் கொண்டிருந்தாள். பள்ளி இறுதி வகுப்பில் அடி எடுத்து வைத்திருந்த அவள் அந்த நிமிடம் பச்சிளங்குழந்தையாக மாறி விசித்துக் கொண்டிருந்தாள். பள்ளியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த குமரேசனுக்கு அவளை இனங்கண்டு கொள்ள முடிந்தது. வகுப்பில் கூட்டிற்குள் சுருங்கும் புழுவாகத் தினம் தினம் அவன் பார்வையில் படாமல் பதுங்கிக் கொள்ளும் அவளை, அவள் மருண்ட பார்வையைப் பார்த்துப் பழகிய மனம் அழுது கொண்டிருந்த அவளை இனம் கண்டு கொண்டது. அருகே சென்றவன்... "செல்வி! ஏன் இப்படித் தனியா அழுது கொண்டிருக்கே! வீட்டிலே யாருக்காவது உடல் நலமில்லையா?"

அவனைக் கண்டவுடன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். "இல்லீங்கய்யா! கணக்கு பரீட்சையில ஃபெயிலாட்டேங்க" திக்கித் திணறி வார்த்தைகள் வந்தன.

"அவ்வளவுதானே! பயத்தை விட்டுப் பெரியவங்க கிட்டே கணக்குப் படிச்சா எல்லாம் சரியாப் போவுது". கணப் பொழுதில் பிரச்சனைக்குத் தீர்வு சொன்ன அவனை நோக்கிய அவள் ஈனசுரத்தில் சொன்னாள்.

"பெரியவங்க... வீட்டிலே அப்படி யாரைத் தேடுறது? இருப்பதோ ஒரே அம்மா. அவங்களுக்கு அடுப்புக்கரியும் சமையலும்தான் உலகம்".

"அப்ப பிரச்னையை எங்கிட்டே விடு. தினம் பள்ளிக்கூடம் விட்டதும் இந்தக் கல்லிலே காத்திரு. நா வீட்டுக்குப் போகும் வழியிலே உனக்கு வீட்டுப்பாடம்... அன்றைய பாடம் எல்லாத்திலேயும் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறேன்".

பாவாடை நுனியால் கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்ட செல்வி தலையை வேகமாக ஆட்டினாள். வீட்டை நோக்கி நடந்த அவள் மனத்தில் அந்த நிலவையே எட்டிப் பிடித்த திருப்தி இருந்தது.

அன்றிலிருந்து மழை - வெயில் - குளிர் மாறி மாறி எது வந்த போதும் அவர்கள் மரத்தடி வகுப்பு நடக்கத் தவறியதில்லை. பள்ளி இறுதிப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்த நேரம். ஒரு வாரமாகக் குமரேசன் பள்ளிக்கே வராதது செல்விக்கு மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது.

தயங்கித் தயங்கிக் கணக்கு ஆசிரியரின் வீட்டைக் கண்டு பிடித்துக் கதவைத் தட்டினாள். கதவைத் திறந்த அவரைப் பார்த்தபோது அவளுக்கு அதிர்ச்சி பந்தாகத் திரண்டு எழுந்தது. ஒரு வாரத்தில் அடையாளம் தெரியாத அளவு கண்களில் சோர்வு - கலக்கம். உடல் உருக்குலைந்து இருப்பதைப் பார்த்தபோது அவள் மனம் உருகியது.

"பரீட்சை வருது... பாடஞ் சொல்லிக் கொடுக்க நீங்க வரலை... சந்தேகம். அதான்... நானே வந்தேன்" வார்த்தைகள் திக்கித்திக்கி விட்டு விட்டு வந்தன.

"வா! உள்ளே வா!" என்ற ஆசிரியரைத் தொடர்ந்து உள்ளே நுழைந்தாள். அவள் மனத்தில் பரீட்சையில் நல்ல மதிப்பெண்களைப் பெறும் ஒரே நோக்கம்தான் தேங்கி இருந்தது. தனியாக அறையில் வசிக்கும் ஆசிரியரும் ஒரு ஆண் என்ற எண்ணமே தலை தூக்கவே இல்லை. ஆனால் பருவத்தின் தலைவாசலில் அடி எடுத்து வைத்திருக்கும் அவளது அழகு, தனிமை, ஜுரவேகத்தின் சூடு எல்லாமாகச் சேர்ந்து அவன் மனத்தில் சலனத்தை உருவாக்கின. உரிமையோடு கையைத் தொட்ட அவனிடமிருந்து நெருப்பின் சூடு பட்டது போல் விலகி நின்றாள் அவள். அப்போதுதான் தான் தனியாக அங்கே வந்ததே தவறென்பதை உணர்ந்தாள். அவளிடம் ஆசிரியருக்குள்ள மதிப்பு இன்னும் அவள் மனத்திலிருந்தது. அதிர்ச்சிக்கு ஆளானதில் குமுறிய மனம் கொட்ட நினைத்தாலும் அவன் மேல் அவள் வைத்திருந்த மதிப்பு தடுத்தது. அதற்குப் பிறகு பரீட்சை வர அவள் அவன் கண்ணில் படவே இல்லை.

மனம் இயங்கும் வரை அதிலுள்ள உணர்ச்சி துடிப்புகள் அடங்கும் வரை இயந்திரகதியில் இயங்குவது சாத்தியமல்ல என்று நினைத்தான் அவன். அவனுக்கு... அவள் தலமறைவாக மௌனம் சாதித்தது வியப்பாகவே இருந்தது. ஒருநாள் வழக்கம் போல் பள்ளியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த நேரம் அவள் கல்லில் அமர்ந்து... கற்களை... தூர வீசிக் கொண்டிருந்தாள்.

"மனசைக் கட்டுப்படுத்தாதது தப்பா இருக்கலாம். ஆனா... உள்ளே எழும் உணர்வுகளை உண்மையா சொல்லிவிடறதைத்தான் நா நம்பறேன். உன்னை மாணவி

யாக மட்டும்தான் நினைச்சிருந்தேன் ஒரு காலகட்டம் வரை. ஆனா என் கஷ்டத்துக்கு ஈடுகொடுக்க நீ துடித்த துடிப்பு... உங்கிட்டே பிடிப்பை உருவாக்கிடுச்சு. என்னன்னு பாக்கறியா? ஜுரமாக் கிடந்தவனைத் தேடி வந்து ஆறுதலாப் பேசினியே! அதைத் தான் சொல்றேன். உன் சுமைகளைத் தாங்கிய நான் உன்னைப் பற்றிப் படரும் கொழுக் கொம்பாக நினைக்கறேன். இதுதான் இன்றைய நிலை. இதைச் சொல்ல நான் வெட்கப்படலை".

அவனைத் திரும்பிப் பார்த்தாள். "உண்மையை நீங்க போட்டு உடைக்கும்போது நானும் பொய் சொல்ல விரும்பலை. உங்க உணர்வுகளுக்கு எதிரொலி என் உள்ளத்திலும் இருக்கு. ஆனா எனக்கு உறவுன்னு சொல்லிக்க இருப்பது ஒரு அம்மாதான். பழைமையான பழக்க வழக்கத்திலே ஊறின அவளால் காதல் - கலப்பு மணம் - இதையெல்லாம் புரிஞ்சுக்க முடியாது. நமக்குள்ள உரிமை இருக்கணும்னா முறையா வந்த உறவால மட்டும்தான் இருக்க முடியும். அந்த உறவு அம்மாவை மீறி எப்படி உருவாக முடியும்கிறது எனக்குப் புரியலை".

அவள் பேச்சைக் கேட்ட அவனுக்கு அவள் தன் நெருக்கத்துக்கு ஏங்குவது புரிந்தது. "நடக்கும். அதை என் கையில் விட்டுவிடு" என்றவன் வேகமாக நடந்தான்.

பரீட்சையில் கணக்கில் வாங்கியிருந்த நல்ல மதிப்பெண்களை அவனிடம் காட்ட வேண்டுமென அவள் துடித்தாள். அவனைத் தேடிச் செல்ல அவளுக்குள் பெண்மைக்கே உரித்தான இயல்பான தயக்கம் எழுந்தது. கண்ணை மூடிக்கொண்டு கடவுள் சந்நிதியில் நின்றிருந்தபோது வேறு எவரும் அங்கு இல்லை. சந்திக்க சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுக்கக் கடவுளைக் கண்மூடி வேண்டியவள் கழுத்தில் மலரின் ஸ்பரிசம் பட திடுக்கிட்டு விழித்தாள். மின்னல் வேகத்தில் அவள் வேண்டுகோள் பலித்திருந்தது. அவள் எதிரில் நின்றிருந்த குமரேசன் அவள் கழுத்தில் பூ மாலையைப் போட்டிருந்தான். நிமிடத்தில் நடந்து முடிந்து விட்டதை நினைத்தபோது அவள் நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது. கண்களில் நீர் திரண்டது.

"பரீட்சையில் நீ நிறைய மார்க் வாங்கி இருப்பதற்கு என் இதய பூர்வமான பரிசு. உறவு வந்து விட்டது. இனி உரிமையோடு தொடலாமில்லையா?" என்றவன் அவள் கைகளை அழுந்தப் பற்றினான்.

"இப்படி எப்படி நான் வீட்டுக்குப் போவேன்?".

"இனி உன் வீடு வேறு... என் வீடு வேறாக எப்படி இருக்க முடியும்? என்கூடக் கிளம்பு வா..." அவளின் இறுகப் பற்றிய கை பயத்தில் சில்லிட்டிருப்பது அவனுக்குப் புரிந்தது.

அம்மாவை நேரிடையாகச் சந்திக்கத் துணிவில்லாத அவள் கடிதம் மூலம் தெரியப்படுத்தி இருந்தாள். தன் வாழ்க்கைக்கு அச்சாணியாக இருந்த ஒரே மகள் தன்னைவிட்டுப் போனதில் அந்தத் தாய் மனம் முறிந்து மூச்சு அடங்கியது.

→



'அட்சய பாத்திரம்' போட்டோ: பாணால் வி. ராஜாராம், தஞ்சாவூர்

அந்த ஊரை விட்டே மாற்றலாகிப் போய்விட்ட செல்வியின் காதில் செய்தி எட்டியபோது, அதிர்ச்சி தாங்காமல் அடிவயிற்றைப் பிடித்துக் கொள்ள மட்டும்தான் அவளால் முடிந்தது. வயிற்றில் வளரும் கருதான் அம்மாவின் நினைவால் வாடும் அவளுக்கு ஒரே துணை.

வாசுகி பிறந்து கைகளிரண்டில் அள்ளி எடுத்த போதெல்லாம் தன்னை வாரி எடுத்து வளர்த்த அம்மாவின் நினைவு அவளுக்கு வந்தது. ஒரு வயதுக் குழந்தையான வாசுகி அப்பாவின் மார்பில் புரண்டு விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போதுதான் வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்க, செல்வி... போனாள். தந்தியுடன் ஒருவன் நிற்க கையெழுத்து போடுவதற்குள் கைகால் நடுங்கியது. அவன் கையில் கொடுத்த தந்தியில் இருந்த வாசகம் அரைகுறையாக அவள் கண்களில் பட்டது.

"அப்பா உடம்பு சீரியஸ்... அம்மா தகவல் கொடுத்திருக்காங்க" தயங்கியபடியே அவன் சொன்னபோது அவள் அந்தத் தந்தியை வாங்கிப் பரபரப்புடன் படித்தாள்.

உறவுகளே அற்றுப் போன நிலையில் அவள் மனத்தில் பசுமை படர்வதுபோல் அந்த உறவு ஒரு உணர்வை ஏற்படுத்தியது.

"உடனே கிளம்புங்க! இத்தனை நாள் தள்ளி வைச்சவங்க தழைந்து வருவது ஒரு நல்ல சகுனமாவே எனக்குத் தோன்றுது". அவள் அன்று இரவே அவனை அனுப்பத் தயாரானாள். அவன் முகத்தில் முத்து முத்தாக அரும்பியிருந்த வியர்வையைப் புடைவைத் தலைப்பால் ஒற்றியவள் பெட்டியில் துணிமணிகளை அடுக்கித் தயார் செய்ய உள்ளே போனாள். பெட்டியின் அடியில் அவ்வப்போது போட்டு வைத்திருந்த அஞ்சு ரூபாய், பத்து ரூபாய் நோட்டுகளைப் பிரித்துப் படிய வைத்துக் கையில் அடுக்கியவள் எண்ணத் தொடங்கினாள்.

அவள் பின்னால் வந்து நின்றவன், "உன்னையும் குழந்தையையும் தனியே விட்டு விட்டு எப்படி செல்வி போவது?" தயங்கியவனுக்குத் தைரியம் சொல்லும் வகையில் அவள் பேசினாள். வரப்போவது அந்த நிமிடம் அவளுக்குத் தெரிந்திருந்தால் அவளே அப்படி வழி அனுப்பி இருக்க மாட்டாளோ என்னவோ?

குமரேசன் போனதிலிருந்து வாரக் கணக்கில் தகவல் எதுவும் இல்லை. பள்ளியில் சென்று விசாரித்தபோது அவன் வேலையை ராஜினாமா செய்துவிட்ட விவரம் தெரிந்தது.

பெட்டிக்கடியில் வைத்திருந்த தந்தியிலிருந்த விலாசத்திற்குக் கடிதமெழுதித் திரும்பி வந்துவிட்டபோது தான் ஏமாந்து நிற்பதை உணர்ந்தாள். போலீஸில் தகவல் சொல்லப் போனபோது கல்யாணமானதற்கான அத்தாட்சி எனக் கேட்டபோது அவள் கையில் குழந்தை வாசுகியைத் தவிர வேறெதுவுமே இல்லை. வாழ்வைக் கொடுத்ததாக நினைத்த மாலை இன்று கழுத்தை உறுத்தும் கத்தியாக... அவள் வாழ்வைப் பலிவாங்க வந்த அரிவாளாக அவள் மனத்தில் பட்டது. கலங்கி நின்ற அவளைக் கண்டவர் கேலியாகப் பார்த்தபோது அவள் நாளுக்கு நாள் தனக்குள் முடங்கிப் போனாள். ஒடிந்து, தொய்ந்த மனம் அதற்குப் பின் நிமிரவே இல்லை. கண்ணிலிருந்து வழிந்த கண்ணீர் சூடாகக் கையில் பட்டுத் தெறிக்க அவள் தன் நிலைக்கு வந்தாள்.

அழுத கறை கன்னங்களில் காய்ந்திருக்க வாசுகி அவள் கையில் தூங்கிப் போயிருந்தாள். அந்தக் குழந்தைக்காக, தொய்ந்த அவள் நிமிர்ந்தே ஆகவேண்டும் என்ற வேகம் அவளுள் எழுந்தது. அவள் நிலையைப் புரிந்து அவளுக்குக் கைகொடுக்கக் கூடிய ஒரே மனிதரான தெருக்கோடியிலுள்ள வக்கீல் குமாஸ்தா வீட்டை அடைந்தாள். அவர் சொல்லியபடி உயர்நீதி மன்றத்துக்குப் பெட்டிஷன், ஒன்றை விவரமாக எழுதி அனுப்பி இருந்தாள்.

தத்தளிக்கும் அவள் வாழ்வைக் கரை சேர்க்கும் ஒரே துடுப்பாக அவள் கருதியது அந்தப் பெட்டிஷனைத்தான். நீதிபதியின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு குமரேசன் நீதிமன்றத்துக்கு வந்தபோது அவள் உள்ளத்தில் நம்பிக்கை ஒளி பிரகாசமாகத் தலைதூக்கியது. ஆனால் தோன்றிய வேகத்தில் மின்னலாக அந்த நம்பிக்கை மறைந்தது. அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் இடியாக அவள் தலையில் இறங்கின.


அவளைத் தெரியவே தெரியாதென ஆரம்பத்தில் சாதித்தவன் அவளுடன் நெருங்கிப் பழகியதைப் பல மணிநேர குறுக்கு விசாரணைக்குப் பின் ஒப்புக் கொண்டான். ஆனால் அவள் துணையாக நாடிய சட்டமே அவள் வாழ்வில் குறுக்குச் சட்டமாகக் குறுக்கிட்டது. சட்டப்படி அவன் அவளை ஏற்க இயலாது. காரணம் அவன் முறையாக, சட்டபூர்வமாக இன்னொரு பெண்ணை மணந்திருந்தான்.

கடலில் இறங்கிக் குளிக்கப் போனவள்... உப்புத் தண்ணீர் மூக்கில் ஏறி மூச்சுத் திணற... உள்ளுக்குள் எரிச்சல் ஏற்படுவது போன்ற உணர்வை எட்டிப் பிடித்தாள்.

அந்த நிலையில் அவள் வாழ்வில் துணையாக, துடுப்பாக நின்றது வாசுகிதான். அவளைக் கைவிட்ட நிலையிலும் அவன் தந்த குழந்தையின் எதிர்காலத்துக்குப் பதில் சொல்லியே தீர வேண்டுமென்ற நீதிபதியின் வார்த்தைக்கு இணங்க... அவன் வாசுகியின் பெயரில் இருபத்தைந்தாயிரம் ரூபாயை வங்கியில் சேர்ப்பித்திருந்தான். அவள் வாழ்க்கையின் கணக்கை முடித்திருந்த அவன் வாசுகியின் பெயரில் புதிய கணக்கை வங்கியில் துவங்கி இருந்தான்.

அவள் வாழ்வைத் திருப்பித் தர முடியாத நிலையிலும் நீதிபதி அவள் வாழ்வில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தி இருந்தார். அன்று வரை இழந்துவிட்ட அவன் துணையை, நழுவிப் போன மணவாழ்வை நினைத்து அழுது வந்த செல்வி அன்றிலிருந்து ஒரு முடிவுக்கு வந்தாள். தூசியாக நினைத்துத் தன்னை உதறியவனை நினைத்து இனி அழுவதில்லை என முடிவு செய்தவளுக்கு இன்று கைகோத்து நடக்க இரு பிஞ்சுக் கரங்கள் காத்திருக்கின்றன. அவள் தலை நிமிர்ந்து வாழ்வாள்... அந்தப் பூப் போன்ற பிஞ்சு மனத்தில் பசுமை படர வாழ்வாள். அவளை உதறிய அவன் செயலை மீறி ஒளிரும் நட்சத்திரமாக... விளக்காக அவள் என்றும் வாழ்வாள்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க (வாழ்வும் தொண்டும்)



முனைவர் சி. பாலசுப்பிரமணியன்

தோற்றுவாய்

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றித் தமிழ் வளர்த்த பெரியார்கள் நிரலில் இடம்பெறு பவர்களுள் திரு.வி.கல்யாணசுந்தரனார் அவர்களும் ஒருவர். எளிய குடும்பத்திலே பிறந்தவர்; எளிமை யைத் தம் வாழ்நெறியாக வகுத்துக்கொண்டவர்; சிறந்த எழுத்தாளர்; கேட்பார்ப் பிணிக்கும் பொழி வாளர்; அறநெறி பிறழாச் சிந்தனையாளர்; அரசியல் தொண்டர்; தொழிலாளர் தலைவர்; கொள்கை வீரர்; தனக்கென வாழாத் தகைமையாளர்; அஞ்சா நெஞ் சத்தினர்; கருத்தொளி பரப்பும் கதிரவன்; காந்திய நெறியினர்; இத்தகு பீடுசால் பெருமையும், வீறும் மிக்க தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் அவர் ஆற்றிய பணிகளைப் பற்றியும் இவண் கருதுவோம்.

தோற்றம்

1883 ஆம் ஆண்டு சூன் திங்கள் 28 ஆம் நாள் துள்ளம் என்ற ஊரில் சோழிய வேளாண் மரபில் தோன்றி யவர். இவர் தந்தை திரு. விருத்தாசல முதலியார் அவர்கள். தாய் சின்னம்மாள் அவர்கள். இவர் தாய் இவரின் தந்தைக்கு இரண்டாம் மனைவி. பெற் றோர்க்கு இவர் ஆறாவது மகன். பெற்றோர் இவரைச் செல்லமாகச் சின்னசாமி என்ற பெயரால் அழைப்பர்.

கல்வி

முதன் முதலில் 'ஆயர்பாடி பிரைமரி பாடசாலை யில்' இவரது துவக்கப் பள்ளிக் கல்வி தொடங்கியது. இப்பாடசாலையில் மூன்றாம் வகுப்பில் படித்த போது 'வாழைமரம்' என்ற ஒரு கட்டுரை எழுதி முதற்பரிசு பெற்றார். பின்னர் தம் நான்காம் வகுப் பினை வெஸ்லி கல்லூரியில் தொடர்ந்தார். இரண் டாண்டுகள் உடல்நலக்கேடு காரணமாக இவரால் தொடர்ந்து படிக்க இயலவில்லை. 1898 ஆம் ஆண்டில் மீண்டும் வெஸ்லி கல்லூரியிலேயே தம் நான்காம் வகுப்பினைத் தொடர்ந்தார். அப்போது தமிழ் இலக் கணத்தில் சுவை ஏற்படும் வண்ணம் செய்தவர் நான் காம் வகுப்பாசிரியராக இருந்த தேவதாஸ் அவர் களின் மனைவி. 'ஐந்தாம் பாரம்' படிக்கும்போது தம் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் கதிரைவேற் பிள்ளை அவர்களிடம் மிக்க ஈடுபாடு கொண்டார்.

கதிரைவேற் பிள்ளை அவர்களிடம் மிக்க ஈடுபாடு கொண்ட இவர் அவரது சொற்பொழிவுகள் அனைத் திலும் தவறாமல் கலந்து கொள்வார். அவரிடம் இவர் கொண்ட அன்பே நீதிமன்றத்தில் அவருக்குச் சார்பாகச் சாட்சிசொல்ல வைத்தது. 'ஆறாம் பாரம்' செலக்ஷன் தேர்விலே தோல்வியைத் தேடித் தந்தது. என்றாலும் இவர் மனம் தளரவில்லை. இத்துடன் இவருடைய பள்ளிப்படிப்பு முற்றுப்பெற்றது.

படிக்கும் காலத்தில் ஆசிரியர்களின் அன்பைப் பெற்றார். விளையாட்டில் விருப்பம் மிகுதி. ஆடல் பாடல்களில் தம் உள்ளத்தை இழக்கும் இயல்பினர். ஓவியம், இசை முதலிய கலைகளிலும் ஆர்வம் உண்டு. இயற்கையில் ஈடுபாடு மிகுதி.

தமிழ்க் கல்வி

தம் பள்ளிப் படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைக்க நேர்ந்ததே ஒழிய படிப்பையே தம் வாழ்க்கையிலிருந்து ஒதுக்கிவிடவில்லை. கதிரைவேற் பிள்ளையிடமே பெரியபுராணமும், யாப்பிலக்கணமும் கற்றார். அவர் இறந்தபோது இவர் உற்ற துயரத்திற்கு எல்லையே இல்லை. சோமசுந்தர நாயகர் எழுதிய கண்டன நூல்களைக் கற்று சைவ சித்தாந்த நுட்பங்கள் பலவற்றை அறிந்தார். மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரிடம் 'திருவருட்பயன்', 'சிவப்பிரகாசம்' முதலிய நூல்களைக் கற்றார். சிவப்பிரகாசத்தைக் கற்றுத்தந்தபோது 'சிவஞான சித்தியார்', 'சிவஞான போதம்' முதலிய நூல்களின் கருத்துகளையும் தெளிவித்தார். இராயப்பேட்டையில் வாழ்ந்த சபாபதி நாவலரின் மாணவர் திருக்குறள் சிதம்பர முதலியாருடன் கலந்து திருக்குறள் படித்தார். மறைமலை அடிகளுடன் தொடர்பு கொண்டு அவ்வப்போது தம் ஐயங்களை அகற்றிக் கொண்டார். சென்னை 'செயிண்ட் எப்பாஸ் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்' தேவப்பிரகாசப் பண்டிதரிடம் கம்பராமாயணமும், வில்லிபாரதமும் படித்தார்.

எங்கெல்லாம் தமிழ்ப் பெரியார் உள்ளனரோ, அங்கெல்லாம் அவர்களைத் தேடிச் சென்று அவ்வத் துறை வல்லுநர்களுடன் பழகி எல்லாத்துறை அறிவையும் ஒருங்கே பெற்ற பெருந்தகையாளர் எனும் நிலையை அடைந்தார்.

1905 ஆம் ஆண்டு தம் பெரிய தந்தையாரின் மகன் இராஜா முதலியாரின் வற்புறுத்தலுக்கு இணங்கி இராயப்பேட்டை 'கமர்ஷியல் ஸ்கூலில் சேர்ந்து 'புக் கீப்பிங்' பயின்று தேர்ச்சி பெற்றார்.

பன்மொழிப் புலவர்

வேதாந்த நூல்களைப் பயின்றவர்; உபநிடதக் கருத்துகளைத் தெளிந்தவர்; ஜைன சித்தாந்தக் கருத்துகளை அறிந்தவர்; தெலுங்கு மொழி இலக்கியத்தில் ஈடுபாடு மிக்கவர்; திருக்குரான் அறிவும் இவருக்கு உண்டு. பள்ளியில் பயிலும் காலம்வரை முறையாக ஆங்கிலம் கற்ற இவர் அதற்குப் பின் சொற்பொழிவுகளைச் செவிமடுத்தும், நூல்கள் பலவற்றைப் பயின்றும் இன்னும் பல்வேறு வகைகளிலும் தம் ஆங்கிலப் . புலமையை வளர்த்துக் கொண்டார். சுருங்கக்கூறின் இவர் ஒரு பன்மொழி அறிஞர் ஆவர்.

பணி

தம் குடும்ப வறுமை காரணமாகவும், மேலும் பள்ளிப்படிப்பைத் தொடர இயலாத நிலையினாலும் இவர் தம் தமையனாரின் விருப்பத்திற்கு இணங்கி உழைத்துப் பொருளீட்டி தம் குடும்பத்தை வறுமைப் பிணியிலிருந்து விடுதலை செய்ய விழைந்தார்.

முதன் முதலில் பின்னி கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். ஆங்கு இவர் கண்ட சூழ்நிலை பிற்பகலிலேயே வேலைக்குச் செல்ல விடாமல் தடுத்தது. அங்கிருந்து நீங்கிய பின்னர் இராயப்பேட்டை வடிவேல் முதலியார் அவர்கள் துணையுடன் 'ஸ்பென்சர் கம்பெனி' விளம்பரத் துறையில் சேர்ந்தார். 1906 ஆம் ஆண்டு இவரிடம் அமைந்திருந்த 'புக் கீப்பிங்' பயிற்சி இவருக்குப் பதவி மாற்றத்தை அளித்தது. இப்பணியில் இவருக்கு மிகுதியான ஓய்வு கிடைத்தது. அப்போதெல்லாம் நூல்கள் பலவற்றைப் பயின்றும், கட்டுரைகள் எழுதியும், கவிதை எழுதியும் தம் காலத்தைக் கழித்தார். இக்காலத்தில்தான் தன் நெஞ்சில் வாழும் ஆசிரியப் பெருந்தகை கதிரைவேலரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி முடித்தார். 1908 இல் விபினசந்திர பாலர் என்பவரின் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கிளர்ந்தெழுந்து சுதேசி இயக்கக் கொள்கைகளைப் பற்றிக் கருத்துப் பரப்பியபோது அக்கம்பெனி மானேஜிங் டைரக்டர் விடுத்த எச்சரிக்கை இவரை வேலையிலிருந்து நீங்கிக்கொள்ளுமாறு செய்தது..

அச்சகப் பணி

1908 வரை 'ஸ்பென்ஸர் கம்பெனி'யில் பணியாற்றிய இவர் அங்கிருந்து வெளியேறியபின் தம் தமையனாரின் உதவியுடன் 'உமாபதி குருப்பிரகாசம்' என்ற பெயரில் ஓர் அச்சகத்தினைத் தோற்றுவித்துப் பெரிய புராணத்தைத் தம் குறிப்புகளுடன் வெளியிட்டார். திருமந்திரப் பதிப்பும் இக்காலத்தில்தான் வெளி வந்தது. போதிய வருவாய் இன்மை காரணமாகவும், போட்ட முதலையும் இழந்ததன் காரணமாகவும் அச்சகம் வேறொருவர்க்கு உடைமையாகியது.

ஆசிரியர் பணி

அச்சகப் பணிக்குப் பின் இவரது ஆசிரியப் பணி தொடர்ந்தது. 1910 ஆம் ஆண்டு ஆயிரம் விளக்குப் பகுதியில் ஆதிதிராவிடர்களுக்கென நடத்தப்பெற்ற நடுத்தரப் பள்ளியில் டானியல் சிங் என்பவரின் வற்புறுத்தலுக்கு இணங்கி அங்கு 'முதல் பார'ஆசிரியராகச் சேர்ந்தார். ஆறு ஆண்டுகள் இங்குப் பணியாற்றினார். இக்கல்லூரியில் பணியாற்றத் தொடங்கிய இரண்டாம் ஆண்டில் 1912 ஆம் ஆண்டில் இவர் கமலாம்பிகை அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்று இல்லறக் கோயிலில் நுழைந்தார். கமலாம்பிகை அம்மையாரை நாயகியாகப் பெற்ற நான்கு ஆண்டுகளில் வெஸ்லி கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் பொறுப்பினை அணிசெய்த இவர் 1917 ஆம் ஆண்டில் நாட்டுப்பணி இவர் உள்ளத்தைக் கவர்ந்ததன் காரணமாக அக்கல்லூரியிலிருந்து விலகினார். தம் நாளில் அக்கல்லூரியில் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவிய பெருமை இவருக்கு உண்டு. இவர் இக்கல்லூரியில் வேலை செய்தபோது இவரிடமிருந்து தமிழ்ப்புலமையையும், 'புக்கீப்பிங்' பயிற்சியையும் அறிந்த தலைமையாசிரியர் அதற்கென ஒரு தனி அமைப்பை 'வெஸ்லியன் தொழில்நுட்பக் கழகம்' என்ற பெயரில் ஏற்படுத்தி 'புக்கீப்பிங்' கற்பிக்க வழிவகை செய்து கொடுத்தார்.

இதழாசிரியர் பணி

1917 ஆம் ஆண்டு 'வெஸ்லி கல்லூரியிலிருந்து விலகியபின் 'சென்னை மாகாண சங்க உறுப்பினர் விழைவின் பேரில் சுப்பராய காமத், குமாரசாமிச் செட்டியார் இருவரும் இணைந்து அமைத்த 'பிரிட்டிஷ் இந்தியா' என்னும் அச்சகத்தில் தோற்றம் பெற்ற 'தேசபக்தன்' என்னும் பெயரிய இதழின் ஆசிரியர் ஆனார். 'தேசபக்தனில்' இவர் எழுதிய கட்டுரைகளின் சில பின்னாளில் தேசபக்தமிர்தம் என்ற பெயரில் நூல் வடிவம் பெற்றன. செய்தித்தாள்களில் அயல்

மொழி ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த காலம் அது. திரு.வி.க. அவர்கள் இதழாசிரியராக ஆன பிறகு அயல்மொழி ஆட்சியை ஒழித்துத் தமிழ்மொழிக்கு அந்த இடத்தைத் தேடித்தந்தார். தமிழில் பேசினால் தமக்கு இழுக்கு என்று கருதி வந்த அரசியல் தலைவர்களுக்குத் தமிழின் அருமையை அறிவுறுத்தி தமிழில் அவர்களைப் பேசும்படிச் செய்த பெருமை சுந்தரனார்க்கே உரியது. அரசாங்க அதிகாரிகளும் அஞ்சும்வண்ணம் எழுத்துவன்மை கொண்டிருந்த திரு.வி.க. அவர்களைத் 'தேசபக்தன்' உலகத்திற்குக் காட்டிக்கொண்டிருந்தான். தொழிலாளர் இயக்கம் தோன்றக் காரணமாக இருந்தவர்களில் 'தேசபக்தன்' இதழும் ஒன்று.

'தேசபக்தன்' இதழாசிரியராக இருந்தபோது அதாவது 1918 இல் இவரது இல்லறக் கோயிலின் தீபம் அணைந்தது. இல்வாழ்க்கையில் இருள் சூழ்ந்தது.

1919 ஆம் ஆண்டில் 'தேசபக்தன்' அரசியல் சூழ்ச்சிகளால் அலைப்புண்டான். இதன் காரணமாகச் சுப்பராய காமத்துக்கும் சுந்தரனார்க்கும் ஏற்பட்ட நெஞ்சப்பிளவு இவரைத் தேசபக்தனிலிருந்து விலகிக்கொள்ளுமாறு செய்தது. 1920 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஏழாம் நாள் இவர் இதழாசிரியர் பணியிலிருந்து விலகினார். இவருக்குப் பின்னர் அப்பொறுப்பை ஏற்ற வ.வே.சு. ஐயர் தேசபக்தனில்,

'ஸ்ரீமான் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் அலங்கரித்த பத்திராசிரிய ஸ்தானத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அவரது சொல்வன்மையும், தீரமும், நேர்மையும், கலங்காமையும், பாரபட்சமின்மையும் அவசியம் நேர்ந்தபோது காட்டிய நிர்த்தாட்சண்யமும் பத்திராசிரியத் தொழிலுக்கே பூஷணங்களாக விளங்கின. அவருடைய அருங்குணங்களிற் சிலவேனும் என் வியாசங்களில் தோன்றுமாறு தமிழணங்கு திருவருள் புரிக' எனக் குறிப்பிட்டிருந்தார்.

நடைபெற்ற போரின் காரணமாக உலகமே அலைப்புண்டபோது இதழ்ச் சட்டங்கள் பல தோன்றி இதழுலகத்தைக் கலக்கத்திற்குள்ளாக்கியது. எனவே, சுந்தரனார் நவசக்தியை நிறுத்திவிட எண்ணியபோது அவ்விதழுடன் தொடர்பு கொண்டிருந்த 'இராதாமணி அம்மையார்' அதனை ஏற்று நடத்துவதாகக் கூறவே, 1941 ஆம் ஆண்டு, ஆண்டுப் பிறப்பன்று அவர் பொறுப்பிற்கு வந்தது.

கட்சிப்பணி

1917 ஆம் ஆண்டிற்கு முன் 'இதழ்' வாயிலாகவும், சொற்பொழிவு வாயிலாகவும் காங்கிரஸ் கட்சிக்குப் பணியாற்றிய இவர் 1917 ஆம் ஆண்டு முதல் வெளிப்படையாகப் பணிபுரியத் தொடங்கினார்.

1917 இல் காங்கிரஸ் இயக்கத் தலைவர் அன்னி பெசன்ட் அம்மையாரைச் சிறைவைத்ததற்கு அரசாங்கத்திற்கு எதிராக நடந்த கண்டனக் கூட்டங்களில் கலந்துகொண்டார்.

1919 ஆம் ஆண்டில் ரௌலட் சட்ட மசோதா சட்டமான பின் காந்தியடிகள் விடுத்த அறிக்கைப்படி ஏப்ரல் ஆறாம் நாள் நோன்பு நாளாகக் கொண்டாட வேண்டி ஆங்காங்கே சொற்பொழிவுகள் நிகழ்த்தி

னார். இதே ஆண்டில் இதே திங்களில் பஞ்சாப் படுகொலையைக் கண்டிக்க நடந்த கிளர்ச்சியில் ஈடுபட்டார். பஞ்சாப் படுகொலை பற்றி எழுந்த 'ஏப்ரல் 1919' என்ற மொழிபெயர்ப்பு நூலுக்கு முன்னுரையும் வழங்கியுள்ளார்.

காங்கிரஸ் சார்பாகவும், சுயராச்சியக் கட்சியின் சார்பாகவும் ஊத்தங்கரை, அருப்புக்கோட்டை, உடுமலைப்பேட்டை முதலிய இடங்களில் நடந்த தாலுக்கா மாநாடுகளிலும், வடார்க்காடு, தென்னார்க் காடு, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் நடந்த மாவட்ட மாநாடுகளிலும் கலந்து கொண்டார்.

1925 ஆம் ஆண்டு நவம்பர் 21, 22 ஆம் நாள்களில் காஞ்சியில் நடைபெற்ற இரண்டுநாள் மாநாட்டிற்கும் தலைமை வகித்தார். காங்கிரஸில் நடந்த ஊழல் களைக் கண்டு மனம் பொறாமல் இந்த ஆண்டு இறுதி யில் காங்கிரஸ் செயற்குழுவினின்றும் விலகினார். என்றாலும் தொடர்ந்து காங்கிர்ஸ் தொண்டராக இருந்து வந்தார் என்று எழுதிய குறிப்பு சுந்தரனாரின் திறமைக்குத் தக்கதோர் எடுத்துக்காட்டு. இவர் விலகியபிறகு நாட்டில் தேசபக்தனின் உலா சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது.

இவர் தேசபக்தனிலிருந்து நீங்கியபோது இவர்தம் நண்பர்களும், இவரிடம் அன்புகெழுமிய தொழிலாளர் களும் ஒன்றுசேர்ந்து பொருள் திரட்டி அச்சுக்கூடம் ஒன்றை வாங்கி அரசாங்கப் பதிவுபெற்று, கல்யாண சுந்தரரை அச்சகப் பொறுப்பாளர் ஆக்கினார். 'சாது அச்சுக்கூடம்' எனப் பெயரிய அவ்வச்சகத்தின் பொறுப்பாளரான சுந்தரனாரும் அன்றுமுதல் சாது முதலியார் என அழைக்கப்பட்டார்.

'சாது அச்சகப்' பொறுப்பை ஏற்ற சில நாட்களில் நவசக்தி தோற்றம் பெற்றது. தேசபக்தனிலிருந்து விலகிய மூன்றாம் மாதத்தில் நவசக்தி இதழ் ஆசிரியரானார் சுந்தரனார். தேசபக்தனை நாளித ழாக வெளியிட்டவர் நவசக்தியை வார இதழாக வெளியிட்டார். பல்வேறு துறைகளுக்கும் நவசக்தி புகலிடம் கொடுத்தது. மூன்று ஆண்டுகள் வாரப் பதிப்பாக வெளிவந்த நவசக்தி பெரியார் ஈ.வே.ரா. அவர்களின் முயற்சியால் 1923 - முதல் வாரம் மும் முறைப் பதிப்பாக வெளிவந்தது. ஓராண்டுக் காலம் இது தொடர்ந்தது. பின்னர் இதற்குக் காரணமாக இருந்த ஈ.வே.ரா. அவர்கள் சிறை சென்றபோது மும்முறைப் பதிப்பு நலிவுற்றதால் அது நிறுத்தப் பெற்றது. மீண்டும் வாரப்பதிப்பாக வந்தது.

1930 ஆம் ஆண்டில் இராசகோபாலாசாரியார், கே. பாஷ்யம் இவர்களின் வற்புறுத்தலால் உப்புச்சத்தி யாக்கிரக அறிக்கையில் கையொப்பம் இட்டதன் காரணமாக நவசக்தி ஆறுமாத காலத்திற்கு வெளிவராமல் இருந்தது.

இதற்குப் பின்னர் வெளிவந்த நவசக்தியின் போக்கு இவருக்கு மனநிறைவை அளிக்காத காரணத் தால் மீண்டும் திங்களிதழாக வெளியிடப்பட்டது. அப்போதெல்லாம் நவசக்தியில் சமயக் கட்டுரைகளே மிகுதியான இடத்தைப் பெற்றன.

நான்காண்டுகளுக்குப்பின் 1934 இல் மீண்டும் வாரப்பதிப்பாக வெளிவந்தது.

தொழிலாளர் நலப்பணி

ஸ்பென்ஸர் கம்பெனியில் பணியாற்றியபோதும், தமிழாசிரியராகப் பணியாற்றியபோதும் தொழிலாளர் நல உணர்வு இருந்தது. இவ்வுணர்வு முதன் முதலில் 1918 இல் மார்ச் இரண்டாம் நாள் "வேங்கடேச குணாமிர்த வர்ஷணி' சபையின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர்க்கென்று ஒரு சங்கம் வேண்டும் என்பதை உணர்த்தியபோது வெளிப்பட்டது. உணர்ந்த தொழிலாளர்களின் விடாமுயற்சியாலும், இவர்தம் அரிய உழைப்பாலும் 1918 ஏப்ரல் இருபத் தேழாம் நாள் சென்னைத் தொழிலாளர் சங்கம் தோற்றம் பெற்றது.

இவர்தம் பொழிவினால் விழித்தெழுந்த பல்வேறு துறைத் தொழிலாளர்கள் பலரும் தத்தமக்கெனத் தனித்தனியே சங்கம் கண்டனர். இங்கு எழுந்த தொழிற்சங்கங்கள் வடநாடு பல தொழிற்சங்கங் களைக் காண வகை செய்தது.

1920 ஆம் ஆண்டு மார்ச் இருபத்தொன்றாம் நாள் ஏற்பட்ட தொழிலாளர் மத்திய சங்கத்திற்கு இவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எல்லாத் தொழிலாளர் சங்கங்களும் மத்திய தொழிலாளர் சங்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தன. தலைவராக இருந்த காலத்தில் தொழிலாளர்களுக்குப் பொருளா தார உணர்ச்சியையும், உரிமை உணர்ச்சியையும் ஊட்டி எழுச்சிபெறச் செய்தார்.

1921 ஆம் ஆண்டு நடைபெற்ற தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் இவர் ஆற்றிய தொண்டு அளவிடற் கரியது.

1923 ஆம் ஆண்டில் தம் உடல் தம்மோடு ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியதனால் தம் பொறுப்பை வேறொருவர்க்கு அளித்துவிட்டுத் தொழி லாளர் தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். ஆனால் தொழிலாளர் நிர்வாக உறுப்பினராகத் தொடர்ந்து இருந்துவந்தார்.

1935 ஆம் ஆண்டு மீண்டும் மத்திய சங்கத் தலைவர் ஆனார். அப்போது தொழிலியக்கங்களைப் பற்றித் தொழிலாளருக்கு எடுத்துக்காட்டி அவர்களுக்கு ஊக்கம்ஊட்டிவந்தார்.

சமயப்பணி

இவர் சமயப் பொதுமை நோக்குடையவர். கதிரை வேற்பிள்ளை அவர்களிடம் தொடர்பு கொண்டிருந்த வரை சைவ சமய ஈடுபாடு மிக்கவராகவே காணப் படுகின்றார். அவர் காலத்திற்குப் பின்னரே எம்மத மும் தம்மதம் என்று எண்ணும் உயர்ந்த மனப்பான்மை கொண்டு துலங்கினார்.

1908 ஆம் ஆண்டில் திருவல்லிக்கேணி 'சிவனடியார் திருக்கூட்டச் சபை'த் தலைவராக இருந் தார். அப்போது பெரிய புராணச் சொற்பொழிவுகள் பலவற்றை நிகழ்த்தினார்.

1911 ஆம் ஆண்டில் சென்னை விக்டோரியா மண்டபத்தில் ஜெ.எம். நல்லசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற சைவசித்தாந்த மகா சமாச ஆண்டு விழாவில் சைவன் எவன் என்னும் பொருள் பற்றிப் பேசினார்.

1912 ஆம் ஆண்டில் காஞ்சியில் அப்பர் கொள்கை பற்றிப் பேசியவர் தூத்துக்குடியில் சைவசித்தாந்த சபையில் மறைமலையடிகளுடன் சைவச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

1913 ஆம் ஆண்டு வேலூரில் சிவஞானபோதம் என்னும் பொருள் பற்றிப் பேசியவர் தூத்துக்குடி, சைவசித்தாந்த சபையில் மறைமலையடிகளுடன் சைவப் பொழிவினைப் பொழிந்தார்.

1915 ஆம் ஆண்டு புதுப்பாக்கம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய பக்தஜனசபைத் தலைவரானார்.

1924, 29 ஆம் ஆண்டுகளில் பூவாளூர் சைவ சித்தாந்தச் சபையின் தலைமைப் பொறுப்பினை வகித்தார்.

1934 ஆம் ஆண்டு திருவதிகையில் நடந்த சமரச ஆண்டு விழாவில் தலைமை உரை ஆற்றினார். சைனத்துக்கும் சைவத்துக்கும் உள்ள தொடர்பினை நன்கு எடுத்துரைத்தார்.

1934-38 வரை பாலசுப்பிரமணிய பக்தஜன சபைத் தலைவராக இருந்தார். இவருடைய சைவச் சொற்பொழிவுகள் சீர்திருத்த முறையிலேயே அமைந்தது.

கதிரைவேற் பிள்ளை அவர்கள் வரலாற்றில் அமைந்த திருமால் வாழ்த்துப் பாடலும், தமிழ்நாடும் நம்மாழ்வாரும், திருமால் அருள் வேட்டல் என்ற நூல்களும், அருகசமயத்துக்கும் சைவசமயத்திற்கும் உள்ள ஒருமைப்பாட்டை விளக்கும் 'சித்தமார்க்கம்' என்னும் நூலும், கிறித்துவக் கருத்துகள் பலவற்றை உள்ளடக்கிய கட்டுரைத் தொகுப்பு நூலான முடியா? காதலா? சீர்திருத்தமா?என்ற நூலும் இவர்தம் சமயப் பொதுமைக்குச் சான்று பகர்வன.

நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைநடை வரலாற்றில் இடம்பெறுபவர் சிலர். செய்யுள் வரலாற்றில் இடம்பெறுபவர் சிலர். இரண்டு துறையிலுமே இடம் பெறுபவர் சிலர். அந்தச் சிலரில் திரு.வி.க. அவர்களும் ஒருவராவர். உரைநடையில் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி அணிசெய்த இவர் செய்யுளில் ஏறத்தாழப் பதினைந்து நூல்களை இயற்றித் தமிழன்னையை அணி செய்துள்ளார். உரைநடை நூல்களில் சில, இதழாசிரியராக இருந்தபோது கட்டுரைகளாக வெளிவந்தவற்றின் தொகுப்புகள். சில சொற்பொழிவுகள் வடிவம் பெற்றதால் உருவானவை. கட்டுரைகளாக வெளிவந்தவற்றுள் சில பின்னாளில் சில பகுதிகள் சேர்க்கப்பட்டு நூல் வடிவம் பெற்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூல். தேசபக்தனில் 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற பெயரில் வந்த ஒரு பகுதி 1921 இல் ஐம்பத்தொரு பக்கங்களில் நூலாக வந்தது. இதுவே பின்னர் 1926 இல் ஐந்நூறு பக்க நூலாக மலர்ந்து அவர்தம் புலமைக்கும் எழுத்தாற்றலுக்கும் சான்றாகத் துலங்குகிறது.

1. என்கடன் பணி செய்து கிடப்பதே (1921), 2. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் (1921), 3. நாயன்மார் திறம் (1922), 4. முருகன் அல்லது அழகு (1927), 5.சைவத்தின் சமரசம் (1924), 6. தமிழ்த்தென்றல், 7. தமிழ் நூல்களில் பௌத்தம், 8. கடவுள் காட்சியும் தாயுமானாரும், 9. இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், 10. சைவத்திறவு, 11. தமிழ்நாடும் நம்மாழ்வாரும், 12. இமயமலை அல்லது தியானம், 13. சித்தமார்க்கம், 14. இந்தியாவும் விடுதலையும், 15. நாயன்மார் வரலாறு, 16. சீர்திருத்தம் அல்லது இளமைவிருந்து, 17. பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம், 18. உள்ளொளி, 19. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள், 20. பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி, 21. சமரதீபம், 22. நினைப்பவர் மனம், 23. ஆலமும் அமுதமும், 24. சைவசமய சாரம் முதலியன இவர்தம் உரைநடை நூல்கள்.

1. உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல், 2. திருமால் அருள் வேட்டல், 3. பொதுமை வேட்டல், 4. கிறிஸ்துவின் அருள்வேட்டல், 5. புதுமை வேட்டல், 6. சிவனருள் வேட்டல், 7. கிறிஸ்து மொழிக்குறள், 8. இருளில் ஒளி, 9. இருமையும் ஒருமையும், 10. அருகன் அருகே அல்லது விடுதலைவழி, 11. பொருளும் அருளும், 12. மார்க்ஸியமும் காந்தியமும், 13. சித்தந் திருத்தல் அல்லது செத்துப் பிறத்தல், 14. முதுமை உளறல் என்பன இவர்தம் செய்யுள் நூல்கள்.

தமிழ்நடை

பேச்சு நடையை ஒத்தது இவருடைய எழுத்து நடை. உயர்ந்த மிடுக்கோடு உணர்ச்சிகளை ஊட்டி மக்களைத் தட்டி எழுப்பும் நடை. கருத்தும் உணர்ச்சியும் பின்னிப் பிணைந்து காணப்படும் நடை. இவரது நடையில் புதுச் சொல்லாக்கங்கள் ஒளிரும். பிற மொழிச் சொற்கள் ஒளியினை இழக்கும். சிறிய சொற்றொடர்களில் சீரிய கருத்துகள் பொலிவுறும். இவர்தம் நடையில் ஆங்காங்கே சங்க இலக்கியச் சார்பும் தென்படும். பீடும், மிடுக்கும், எழுச்சியும், கிளர்ச்சியும், வீறும் வீரமும் பெற்ற நடையிலேயே தம் எழுத்துகள் வடிவம் பெற்றது என்பதை அவரே தம் வாழ்க்கை வரலாற்றில் கூறுகின்றார்.

முடிவு

தமிழ் மகனாகப் பிறந்து நாட்டுக்கும் வீட்டுக்கும் ஆற்றவேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்து முடித்த இவர் 1943 ஆம் ஆண்டில் மணிவிழாவையும், 1953 ஆம் ஆண்டில் எழுபதாம் ஆண்டு நிறைவு விழாவையும் கண்ட இவர் - தம் இறுதிக் காலத்தில் புறக்கண்ணொளியை இழந்து மிக்க துன்பத்திற்கு ஆட்பட்டு 1953 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள்

'மன்னா உலகத்து மன்னுதல் குறித்துத்
தம் புகழ் நீறிஇத்'

தாம் மாய்ந்தார். இவர் மறைவைக் கேட்டு இதழ் உலகம் இரத்தக் கண்ணீர் வடித்தது. தமிழ் உலகம் கண்ணீர்க் கடலில் தத்தளித்தது. இவர் மறைவு கேட்டு வருந்தியவர் பலர்.

நிறைவுரை

எளிய குடும்பத்திலே பிறந்து வெண்ணிற ஆடைத் துறவியாய் - பண்பாட்டின் உருவமாய் - உணர்வால் தமிழனாய் - சிந்தனையால் கணியன் பூங்குன்றனாய் - காந்தியின் அடிப்பொடியாய் - 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாய் வாழ்ந்து சென்ற திரு.வி.க. அவர்களின் தொண்டு அளத்தற்கரியது.



கரை சேராப் படகுகள்

பி.வி.ஆர்

வீடு சிறிய வீடு. அந்தக் காலத்தில் கட்டிய வீடு. நாலாயிரம் சதுர அடி நிலப் பரப்பில் சற்று உள்ளே தள்ளி நின்ற வீடு. சுற்றிலும் தென்னை, மா, ஒரு பலாவும்கூட. முன்புறத்தில் ரோஜா, மல்லிகை, பவழமல்லி என்றால், பின்புறத்தில் ஒரு கறிவேப்பிலை மரம். இரு கொத்தமல்லிப் பாத்திகள். மூன்று மிளகாய்ச் செடிகள். ஆடியில் விதைத்த வெண்டை மற்றும் கத்தரி விதைகள் முளைவிட்டுச் செடிகளாகிப் பூவும் பூத்துவிட்டன. ஒரு சிறு பந்தல். அதில் புடலை. காய்களின் நுனிகளில் சிறு கற்கள். கிடைத்த ஒரு சிறு பகுதியில் ஆசைக்காக வைத்த தக்காளி.

அன்றும் கே.எஸ். வரதன் அதிகாலையில் எழுந்து தெருக்கோடி தானியங்கி பால் பூத்திலிருந்து மூன்று அரை லிட்டரை ஏந்தி வாங்கி வந்து காஸ் அடுப்பில் வைத்தார். புறப்படுவதற்கு முன்பே போட்டு வைத்திருந்த காப்பி இப்போது ஃபில்டரிலிருந்து அடிப்பாத்திரத்துக்கு முழுதும் வந்தாகிவிட்டது. எடுத்துப் பீங்கான் கிண்டியில் ஊற்றினார். மனத் திருப்திக்கு ஏற்றபடி கள்ளிச்சொட்டுபோல கொட்டி இரண்டாவது முறையாகக் காப்பித் தூளைக் கசக்கிப் பிழிய இன்டாலியம் வாலையில் தண்ணீர் வைத்தார். இரண்டாவது ஜ்வாலையில் பால் கொதித்தது. ஒரு ஜ்வாலை அணைந்தது. அவருடைய முக்கால் தம்ளர் காப்பி தயாராக அதை மெல்ல மெல்ல ருசிக்கலானார். பாதிக் குடிக்கையில் தண்ணீரும் கொதிக்க ஃபில்டரில் மெதுவாக எடுத்து ஊற்றினார். அவருக்குக் காப்பி திடமாக இருக்கக் கூடாது. இரண்டாவதில் நிறைய, முதலில் கொஞ்சம் என்ற கலப்பில் நிறைய பால். நிறைய சர்க்கரை. அவருக்கு காப்பி சற்றுத் தூக்கலாக, குடித்தபிறகும் நாக்கில் உலவும் ருசியாக இருக்க வேண்டும். அவர் குடிக்கும் திரவத்துக்கு அவரால் காப்பி என்று பட்டம் சூட்ட முடியவில்லை. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு மாதிரியான ருசி! ஊணும் உறக்கமும் ஒத்தார்க்கு ஒத்தபடி.

அவர் சமையலறையிலிருந்து வெளியே வரும்போது அவள் குளியல் அறையில் இருந்தாள். கிழமை செவ்வாய். எண்ணெய் ஸ்நானம்.

ஹாலுக்கு வந்தார்.

'ஹிந்து' இருந்தது.

பார்த்தார். சில பத்திகளை மேலோட்டமாகப் படித்தார். நடுப்பக்கத்தில் மதுலிமாயியின் கட்டுரை இருந்தது. பிற்பகல் சாவதானமாகப் படிக்க வேண்டும். கடிகாரத்தைப் பார்த்தார், ஆறரை.

தொடர் கதையில் பத்தாவது அத்தியாயத்தை எழுத உட்கார வேண்டும். நேற்று இரவே மேஜை மீது வெள்ளைத் தாள்களையும் பேனாவையும் தயாராக வைத்தாகிவிட்டது. என்ன எழுதுவது என்பதையும் யோசித்து மனத்தில் ஏற்றியாகிவிட்டது. அவருடைய நாற்பது ஆண்டு எழுத்துத் துறை அனுபவத்தில் கண்ட ஒரு மகத்தான உண்மை, கதைக்கு மூலப்பொருள் தேடுவதில் உள்ள சிரமமும், கிடைத்துவிட்டால் எழுதுவதில் உள்ள சுலபமும்தான். கடந்த பல ஆண்டுகளாக அவர் கதைக்கான கருவைத் தேடிப் போவதில்லை. கருக்கள் அவருடைய காலடியில் தினசரி விழுந்து கொண்டே இருக்கின்றன. நாளிதழ்களில் செய்திகள், பஸ்ஸில் விழும் உரையாடல்கள். பார்வைகள், கோயிலில் கேட்கும் விஷயங்கள். எல்லாமே கதைகளுக்கு அஸ்திவாரங்கள்.

கே.எஸ்.வி. எழுத ஆரம்பித்தார்.

சாரதா குளித்து விட்டு வெளியே வந்தாள். ஈரமான கேசம் ஒரு மலையாளத் துவாலையினுள் அடைக்கலம். வயது ஐம்பத்தைந்து ஆகிவிட்ட போதிலும் முகம் பளபளப்பு. நெற்றியிலாவது ஓரிரு சுருக்கங்கள் இருக்கக் கூடாதா? ஊஹூம். புருவங்களில் மத்தியில் நெற்றியில் கீழ்ப் பகுதியில் அனாதிகாலமாய்ப்


பதிந்து வரும் குங்குமத்தின் முத்திரை.

அறைக்கு வந்தாள்.

வீட்டில் கட்டிக் கொள்ள வென்றே ரங்காச்சாரி புடைவைகள் பல இருந்தன. இன்று மஞ்சள் சுங்குடி. அரக்குக் கலர் பார்டர். அவளைப் பொறுத்தவரை எல்லா நாட்களும் ஒரு போலத் தான்.

அவள் சுங்குடியைக் கட்டி முடித்துவிட்டு நெற்றியில் குங்குமத்தையும் இட்டுக் கொண்ட பிறகு கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். ஆறு பவுன் கனத்தில் தாலிக் கயிறும் இரண்டு பவுன் எடையில் சிவலிங்கம் ஏறிய திருமாங்கல்யமும் முகத்தை அடித்தன. இது ஆபரணமல்ல. ஓர் அடையாளம். ஒரு சின்னம். ஆனால் முப்பது ஆண்டுகளாகக் கழுத்தில் தொங்குகிறதே இது அசம்பாவிதம் அல்லவோ? ஆனால் என்ன செய்வது?

"உருகாத வெண்ணெயும் ஓர் அடையும் நான் தருவேன்; என் கணவர் என்றென்றும் பிரியா



பதினெட்டு முழம் கட்டி முப்பது ஆண்டுகளாகிவிட்டன. முதன் முதலாகக் கூறை. அதன்பின் கார்த்திகை தீபம். பங்குனி நோன்பு. மாமியார் மாமனார் சிரார்த்தங்கள். மற்றபடி பதினெட்டு முழத்துக்கு இடமில்லை. இப்போதும் ஆண்டுதோறும் கார்த்திகைத் தீபம் வருகிறது. பங்குனி நோன்பு வருகிறது. சிரார்த்த தினங்கள் வருகின்றன. ஆனால் எதுவும் முப்பது ஆண்டுகளாக அவளைப் பாதிக்கவில்லை. மனசாட்சியை உலுக்கவில்லை.

திருக்கச் செய்" என்று கூறிப் பங்குனியில் அவள் சரடு கட்டிக் கொள்வதில்லைதான். இது வீட்டினுள் நடக்கிற ஒரு சின்னஞ் சிறு சடங்கு. மனைவிகளுக்கு மட்டும் காலம் காலமாக ஆண்கள் ஆணையிட்ட சடங்கு. எந்த ஆண் தன் மனைவி என்றென்றும் பிரியாமல் இருக்க ஒரு சடங்கை ஜென்மத்தில் ஒரு தடவையாவது செய்கிறார்? ஆரம்ப நாட்களில் அவனுக்கு அவளுடைய உடல் வேண்டும். பரம்பரை விருத்திக் கடனை முடித்த பின் அவனுக்கு அவள் ஒரு பணிப்பெண். வேலைக்காரி. சமையற்காரி. இன்னும் வயதாகி அவள் தள்ளாடும்போது அவள் ஒரு செவிலி; ஒரு தாய்! பெண்ணின் கதைச் சுருக்கமே இதுதானே?

சாரதா மெல்ல வெளியே வந்தாள்.

அசம்பாவிதம் என்று பட்டாலும் அதை எடுத்துப் பெட்டியில் வைத்து இழுத்து மூடி மறைக்கவும் மறக்கவும் அவளால் முடியவில்லை. அவள் தெய்விகமாக அதை நினைக்கவில்லை. தாம்பத்தியமே அசிங்கப் பட்டுப் போன பிறகு, தாலிக்கு எப்படி தெய்விகம் இருக்க முடியும்? அவருடைய இயலாமைக்குக் காரணம் இந்தத் தெரு; இந்தப் பேட்டை; இந்த ஊர். கணவன் என்று ஒருவன் பெயரும் புகழுமாய் நாட்டில் உலா வருகையில் அவள் எப்படிக் கழுத்தும் காதும் நெற்றியும் மூளியாய் நிற்க முடியும்?

சமையலறைக்கு வந்தாள்.

இன்று என்ன செய்வது? பாலக்காட்டுக்காரன். பாலக்காட்டுக்காரி. நாள் விட்டு நாள் சாம்பார். நாள் விட்டு நாள் மிளகூட்டல். நடுவே ஒருநாள் மோர்க் குழம்பு. திடீரென்று என்றாவது வத்தல் குழம்பு தலை நீட்டும்.

இன்று என்ன!

நேற்று மிளகூட்டல்.

அப்போது முறைப்படி இன்று சாம்பார்தானே!

திடீரென்று ஒரு வெறுப்பு புதராய் மனத்தைத் தாக்க அவள்



அரிசியை மட்டும் களைந்து குக்கர் பாத்திரத்தில்போட்டாள்.

வத்தல் குழம்பு.

வாட்டின அப்பளம்.

இந்த முப்பது ஆண்டுகளில் இது நன்றாயில்லை, இதுக்கு உப்பு அதிகம், வேறு காய்கறி இல்லையா என்ற பேச்சுக்களே எழுந்ததில்லை. எதைச் சமைத்தாலும் சமைத்து வைத்ததைத் தாமே எடுத்துப் போட்டுக் கொண்டு, சாப்பிட்ட தட்டையும் தேய்த்துக் கழுவி, சாப்பிட்ட இடத்தைத் துடைத்து விட்டு மவுனமாகச் செல்லுகிறவர் வத்தல் குழம்பை ஏசவா போகிறார்?

முப்பது வருட மவுனம்.

அவருடைய இருபத்தைந்தாவது வயதில் திடீரென்று ஒரு நாள் துவங்கிய மவுனம்.

ஒரு பிரபல பத்திரிகையில் ஒரு சிறுகதை தேடித் தந்த வெற்றி தான் அடிப்படைக் காரணமா, அல்லது அதன் விளைவாய் எங்கிருந்தோ வந்த அந்த ஒருத்தி தான் காரணமா!

சாரதா சமையலறையில் இயந்திரமாக இயங்கினாலும் மரத்துப் போன மனத்திலும் நினைவுகள் ஒண்டிக் கொண்டு தான் இருந்தன. அவ்வப்போது நீறு பூத்த கனலைக் கொழுந்து விட்டு எரிய விசிறுவதுபோல விசிறிக் கொண்டுதானிருந்தது.

சாரதவின் தகப்பனார் வரதனை ஒரு அரசு அலுவலகத்தில் நானூறு ரூபாய் சம்பளம் வாங்கும் மனிதனாகத்தான் பார்த்து அவனை அவனிடம் ஒப்படைத்தார். ஏதோ சில பத்திரிகைகளில் சில கதைகளை எழுதியவன் அவன் என்ற பிரக்ஞையே இல்லை. ஏன், நிச்சயதார்த்தத்துக்குப் பிறகுதான் அவளுக்கே தெரிந்தது. அக்கணம் அவளுள் பீரிட்ட பெருமிதம் ஐந்தே ஆண்டுகளில் ஆவியாய் மறைந்துவிட்டது. கணவனே ஒரு மூன்றாம் மனிதனாகிவிட்ட பிறகு யார் எங்கே என்ன எழுதி என்ன புகழும் பிரபலமும் அடைந்தால் அவளுக்கு என்ன?

ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் அவள் உறுதியாக இருந்தாள்.

வீட்டின் நான்கு சுவர்களுக்கிடையில் மட்டும்தான் அவள் அவனுடைய மனைவி இல்லை. வீட்டில் மட்டும்தான் கார்த்திகை தீபமும் நோன்புச் சரடும் இல்லை. வீட்டுப் படியை விட்டு வெளியே வரும்போது அவள் ஒரு எழுத்தாளருடைய மனைவி. ஓர் அரசு அதிகாரியின் துணைவி. வீட்டில் பிட்டர் (BITTER) பிட்டர் ஹாஃப் என்றால், வெளியே பெட்டர் (BETTER) ஹாஃப்தான். இருவருக்குமே இந்த ஏற்பாடு-மவுனமாகப் பரஸ்பரம் செய்து கொண்ட ஏற்பாடு - போலித்தனமாக இருப்பினும், வீட்டின் நாற்றம் தெருவில் வீசக் கூடாது என்ற உறுதியோடு அவள் இது வரையில் இருந்துவிட்டாள். அவருடைய பெற்றோர் அண்ணன்கள் தங்கைகள் யாருமே முகர்ந்தும் அறியாதபடி நாற்றத்தை அடக்கி வைத்திருக்கிறாள்.

வீட்டில் வேலைக்காரி கிடையாது. செய்தி வெளியே செல்ல வாய்ப்பு இல்லை. இரு பக்கத்து உறவினர்கள் வரும்போது, இருவருமே நடிப்பில் சிவாஜியையும் சாவித்திரியையும் மிஞ்சினார்கள்.

சமையலறை வேலை முடிந்து அவள் வெளியே வந்தாள். ஹாலில் ஊஞ்சலில் உட்கார்ந்தாள். கண்ணாடியைப் புடைவைத் தலைப்பால் ஒரு தடவைக்கு இரு தடவையாகத் துடைத்து விட்டு, அன்றைய 'ஹிந்து' வை எடுத்தாள். பிரித்தாள். அறையில் அவர் இன்னும் எழுதிக் கொண்டிருந்தார். எப்போது வெளியே வருவார் என்று அவருக்கு மட்டும்தான் தெரியும்.

திடீரென்று ஒரு குரல் வாயிற் பக்கத்திலிருந்து வந்தது.

"வணக்கம், மிஸஸ் வரதன்."

"ஓ, சடகோபனா வாங்க".

கதர் வேட்டியும் ஜிப்பாவுமாக, அழகாக மடித்த மேல் வேட்டி தொங்க, கையில் தோல் பையுடன் சடகோபன் ஹாலினுள் பிரவேசித்து, சோபாவில் அமர்ந்தார்.

"கொஞ்சம் இருங்க. காப்பி கொண்டு வர்றேன்" சாரதா ஊஞ்சலிலிருந்து இறங்கினாள்.

"வேண்டாம்மா... இப்பத்தான் ஜட்ஜ் ராமண்ணா வீட்ல சாப்பிட்டேன். சார் இருக்காரா!"

"எழுதிட்டிருக்கார். கூப்பிடவா?"

"வேண்டாம்மா. டிஸ்டர்ப் செய்ய வேண்டாம். நாளை மறு நாள் - வியாழக்கிழமை ராணி சீதை ஹாலில் பாராட்டு விழா இருக்கு இல்லியா... அது பத்திப் பேசத்தான் வந்திருக்கேன்..."

"புதுசா ஏதானும் இருக்கா, சடகோபன்?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லே. அஞ்சரை மணிக்கு வண்டி வரும். ராமண்ணா ஏழரைக்குள்ளே விழாவை முடிச்சுட முடியுமான்னு கேட்டார். வரதன் சார் பத்து நிமிஷங்களுக்கு மேலே பேசமாட்டார்னு சொல்லிட்டேன். என்னுடைய வரவேற்புப் பேச்சு அஞ்சே அஞ்சு நிமிஷம்தான். அதற்கு அப்புறம் அவர் இவர்ன்னு பலபேர் பொன்னாடை போர்த்துவாங்க. பூச்செண்டு கொடுப்பாங்க. மொத்தம் நாலே நாலு எழுத்தாளர்களும் நாலே நாலு பத்திரிகை ஆசிரியர்களும் தான் பேசுவாங்க. ஆளுக்கு அஞ்சு நிமிஷம். ஜட்ஜ் பத்து நிமிஷம்."

"சரி, சொல்லிடறேன்."

"விழாவுக்கு அப்புறம் விருந்து."

"சரி."

"ஹாங், ஒண்ணு சொல்ல மறந்துட்டேன். எப்படி நான் இவ்வளவு முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்துட்டேன். வரதன் சாருடைய நாற்பது ஆண்டு எழுத்துப் பணியை முன்னிட்டு நாற்பது சவரன் பரிசாக அளிக்கிறோம்."

"சவரனாகவேவா?"

"ஆமாம். முப்பது சவரனை ஒருத்தியே கொடுத்துட்டா. பாக்கி நாங்க நிதி சேர்த்து வாங்கினது."

"சொல்லிடறேன்."

"இங்கிலீஷ் காலண்டர்ப்படியும் பஞ்சாங்கம் பிரகாரமும் வரதன் சாருக்கு ஏற்கனவே அறுபது ஆயிடுத்து. அவருக்கு என்ன கொள்கையோ லட்சியமோ அதை வைதிகமாகவும் கொண்டாடிக்கலே. லௌகிகமாகவும் கொண்டாட ஏற்பாடு செய்யலே."

"ஆமாம்."

"சார், இவ்வளவு பிரபலமான எழுத்தாளரா இருந்தும் அவர் ஒரு பரிசுக்கும் வேட்டையாடப் போகலே. வர்றது தானா வரட்

டும்னு இருக்கார். இதனாலேயே தான் நாங்க ஒரு ஸ்பெஷல் குழு அமைச்சு அவரைக் கௌரவிக்கறதுன்னு முடிவு செஞ்சோம்."

"ரொம்ப சந்தோஷம்".

திடீரென்று கே.எஸ்.வி. ஹாலினுள் பிரவேசித்தார்.

"அடடா சடகோபனா வா... வா..."

"நான் அப்பவே வந்துட்டேன் சார்!"

"என்ன சமாசாரம்".

"பார்த்துச் சொல்லிட்டுப் போலாம்னு வந்தேன். அஞ்சரை மணிக்கு கார் அனுப்பறோம்."

"கார் எதுவும் வேண்டாம்ப்பா. 29 C,23 A எல்லாம் இருக்கு. குளத்தில ஏறினா ஜெமினியில இறங்கிடலாம்."

"இந்த ஒரு நாளாவது..."

கே.எஸ்.வி. சிரித்தார்.

"முப்பத்தஞ்சு வருஷம் ஆபீசுக்கு பஸ்லதான் போனேன். எத்தனையோ மீட்டிங்குகளுக்கு வந்திருக்கேன். கார்லேயா வந்து போனேன்?"

"ரொம்பப் பிடிவாதம் பிடிக்கறீங்க, வரதன் சார்."

"வியாழக்கிழமை நாங்க ராணி சீதை ஹாலில் ஆறு மணிக்குள்ளே இருந்தால் போதும் இல்லியா?"

"அது போதும் சார்... இருந்தாலும்.."

"வேற விஷயம் ஏதானும் இருந்தா சொல்லு, சடகோபா."

"பணமுடிப்பு கொடுத்தா நீங்க வாங்கிக்க மாட்டீங்கன்னு எங்களுக்கெல்லாம் தெரியும், அதனால..."

"அதனாலே..."

"உங்க நாப்பது வருஷ இலக்கியப் பணியை முன்னிட்டு நாப்பது சவரனை ஜட்ஜ் ராமண்ணா வழங்கறார்."

"மாவாத் திங்க மாட்டான் வரதன், பணியாரமா இருந்தா அள்ளி அள்ளிக் கொட்டிப்பான்னு நினைச்சீங்களாக்கும்?"

"நோ, நோ. அப்படியெல்லாம் இல்லை சார். போன மாசம் எங்க குழு மீட் பண்ணினப்ப ஒரு மெம்பர், தானே முப்பது சவரன் தர்றதாக வாக்களித்தார். மிச்சம் பத்து சவரனை நாங்க எல்லாரும் நிதி திரட்டி..."

"இன்னிக்கு சவரன் என்ன விலை விக்கறது தெரியுமா? அதோ ஊஞ்சல் மேல ஹிண்டு இருக்கு. பாரு."

"தெரியும் சார்".

"ஒரு கிராம் முன்னூத்து எண்பது ரூபா. எட்டு கிராம் ஒரு சவரன். எட்டு எட்டு அறுபத்து நாலு, ஆறு, எட்டு மூணு இருபத்து நாலு... மூவாயிரத்து நாப்பது. நாப்பது சவரனுக்கு என்னாறது, சடகோபா? இரு... இரு..."

"லட்சத்து இருபத்தோராயிரத்து அறுநூறு சார்"

"கரெக்ட்... எனக்கு எதுக்கு சவரன்? பணம்? சென்ட்ரல் கவர்ன்மென்ட்ல முப்பத்தஞ்சு வருஷம் குப்பை கொட்டினதுக்கு இப்ப பென்ஷன் ரெண்டாயிரத்து முன்னூறு வர்றது. ரிடயரானதும் பிராவிடன்ட் பணம், கிராடியுட்டி, மூணுல ஒரு பங்கு பென்ஷனை ரொக்கமாக்கியது எல்லாமா மூணரை லட்சம் வந்தது. இருக்க

சொந்த வீடு. கதைகள்ளே இன்னமும்பணம்வந்துட்டிருக்கு... எனக்கு எதுக்கு சடகோபா, லட்சத்து இருபத்தோராயிரத்து அறுநூறு?"

"உங்க இலக்கியம் ஒரு கோடி பெறும்சார்!"

"அப்ப அந்த ஒரு கோடியைக் கொடுங்க... இதப்பாரு, நாளன்னிக்கு நான் யாரையும் அவமானப்படுத்தப்படாது என்கிற ஒரே காரணத்துக்காக இந்த நாப்பது சவரனை ஒரு கையால வாங்கி இன்னொரு கையால அள்ளி விட்டுடுவேன்".

"அள்ளி விடுவீங்களா? யாருக்கு சார்?"

"ஏழைக்கிழங்கள் தங்கற விடுதிகளுக்கு. சிவானந்தா தர்ம ஸ்தாபனத்துக்கு. இன்னும் எத்தனையோ இருக்கு..."

"உங்க இஷ்டம்".

"ஒரு சின்ன உதவி மட்டும் செய் சடகோபா!"

"சொல்லுங்கோ, காத்திருக்கேன்".

"இப்படி நான் அள்ளி வீசப் போற விஷயம் நாளை மறுநாள் வரை யாருக்கும் தெரியப்படாது. நீ மூச்சு விடப்படாது."

"மூச்சு விடமாட்டேன் வரதன் சார்".

"விஷயம் வெளியே வந்ததுன்னு தெரிஞ்சுது, நான் விழாவுக்கே வரமாட்டேன். அப்படி வந்தாலும் ஒரு பரிசும் வாங்கிக்க மாட்டேன்... என் வைராக்கியம் பத்தி உனக்குத் தெரிஞ்சதுதான்!"

"சரிசார்."

"அப்ப நீ புறப்படு... உன் குரல் கேட்டு எழுதறதை நிறுத்திட்டு வெளியே வந்தேன்."

"அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன் வரதன் சார். வரேம்மா."

"ஒருநிமிஷம்".

"என்ன சார்?"

"யார் அந்த இடியட், முப்பது சவரனைத் தர்றது?"

"ஒரு லேடி மெம்பர் சார். உங்களுக்கு அவளைத் தெரிய பிரமேயம் இல்லை. ஆனா பெரிய ரசிகை. உங்க எழுத்துன்னா உசிர்."

"பெயர் இல்லாத ரசிகை யாக்கும்!"

"நிர்மலா சாரநாதன்னு பேரு."

பெயரே ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த சாரதாவை மின்சாரமாகத் தாக்க, அவள் பல நிமிடங்களுக்கு உயிரற்றவளாகப் போனாள்.

அவள் மீண்டும் கண் விழித்துப் பார்த்தபோது ஹால் நிசப்தத்தில் உறைந்து போயிற்று.

நிர்மலா சாரநாதன் உயிருடன் கண்முன் வந்தாள். முப்பது வருடங்களுக்குப் பிறகும் தலையிடுகிறாளா?

நினைவுகளே ஒரு போர்க்களத்தை உருவாக்க, சாரதா களத்தின் நடுவே, கண்கள் அனல் கட்டிகளாகத் தகிக்க நின்றாள்.

1962

ஜூன், முதல் ஞாயிறு.

காலை மணி பத்து.

இருபத்தைந்து வயது சாரதா சமையலறையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள்.

வாசலில் யாரோ நின்று கொண்டிருப்பதை, மின்மணி அறிவித்தது.

சாரதா வேலையை நிறுத்தி விட்டுச் சென்றாள்.

கதவைத் திறந்தாள்.

"வாங்கோ..."

"நீங்கதான் மிஸஸ் கே. எஸ்.வி...இல்லே..."

"ஆமாம், உள்ளே வாங்கோ"

"நீங்க ரொம்ப அழகா இருப்பீங்கன்னு கே.எஸ்.வி சொல்லியிருக்கார். அவர் சொன்னதுக்கும் மேலே அழகாயிருக்கீங்க.."

"உட்காருங்க:

"இந்த ஊஞ்சல்லே?"

"ஷ்யூர்."

"கே.எஸ்.வி இருக்காரா?"

"இல்லியே?"

"இல்லையா? இருப்பேன்னாரே... எங்கே போயிட்டார் திடீர்னு..?" ஏமாற்றம் முகமெல்லாம் வியாபித்தது.

"கார்த்தால ஆபிஸ்லேந்து அவரோட ஆபீசர் வந்து அழைச்சுட்டுப் போனார்."

"எப்ப வருவார்?"

"சொல்லலே..."

"நான் தாம்பரத்திலேர்ந்து வரேன்."

"வந்ததுதான் வந்தீங்க, இப்ப ஒரு வாய் காப்பி குடியுங்க. வீட்ல நிறைய பத்திரிகைகள் இருக்கு. படிச்சிட்டிருங்க. நான் உள்ளே சமையலை முடிச்சுட்டு வரேன். அவர் வந்ததும் எல்லாருமா உட்கார்ந்து சாப்பிடலாம்."

"நான் மூணு மணிக்குள்ளே வீடு திரும்பியாகணும். இல்லாமல் போனா அம்மா வறுத்து எடுத்துடுவா".

"நீங்க இன்னும் உங்க பேரைச் சொல்லலே..."

"உங்கபேர் சாரதான்னு எனக்குத் தெரியும். கே.எஸ்.வி சொல்லிருக்கிறார். என் பேரு நிர்மலா, நிர்மலா சாரநாதன்."

"சாரநாதன் என்ன பண்றார்?."

"ரிடயராகி வீட்ல உட்கார்ந்திட்டிருக்கார்!" சொல்லிவிட்டுச் சிரித்த நிர்மலா, "அவர் என் அப்பா" என்றாள்.

"கணவர் பெயர்னு நினைச்சேன்".

"நான் இப்ப ஒண்ணு சொன்னா உங்க நெஞ்சில ஒரு பூகம்பம் வெடிக்கும்."

"என்ன சொல்லுங்க..."

"வேண்டாம். வந்த இடத்தில நான் உங்க மனசைப் புண்படுத்தமாட்டேன்".

"ஏதோ விஷயம் இருக்குன்னு தெரியறது. ஆனா நீங்க சொல்லமாட்டீங்க. பரவாயில்லே. அவர்ட்ட கேட்டுக்கறேன்."

இதற்குப் பிறகு சாரதா உள்ளே சென்ற இரண்டு நிமிடங்களில் காப்பியுடன் திரும்பி வந்தாள்.

"வேளை கெட்ட வேளையில காப்பி!" சிரித்துக் கொண்டே தம்ளரை வாங்கிக் கொண்டாள் நிர்மலா.

ஒரு மணிக்கு இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

"நீங்க. கே.எஸ்.வி.யோட, 'கரை சேராப்படகு' கதை படிச்சிருக்கீங்களா?" என்று கேட்டாள் நிர்மலா.

"இல்லை".

"இல்லியா... என்ன அற்புத மான கதை... ஆமாம், நீங்க அவ ரோட கதைகள் படிக்கறது உண்டு இல்லியா?"

"எப்பவானும்".

"ஏன்?"

"காரணம் என்னன்னு சொல் றது, நிர்மலா... கதைகள் படிக் கறதில அவ்வளவா ஈடுபாடு இல்லே. நான் ஒரு சமையலறைத் தவளைன்னு வைச்சுக்குங்களேன்."

நிர்மலா பதில் பேசாமல் சாப்பாட்டில் கவனம் செலுத்தி னாள்.

பிறகு,

"உங்க ஹஸ்பண்ட் கதை எழுதறதில மன்னன்னா, சமை யல்ல நீங்க மன்னி!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

மூன்றரை மணிக்கு வரதன் வந்தான்.

"நான் சாப்பிட்டாச்சு, சாரதா."

"ரொம்ப சரி."

"நிர்மலான்னு ஒருத்தி வந்திருந் தாளா?"

"வந்திருந்தாளே? உங்களுடைய பரமானந்த விசிறி! காப்பி குடிச்சா, உங்க கதைகளுக்கு அஷ்டோத்திர சகஸ்ரநாம அர்ச் சனையெல்லாம் செஞ்சா. நன்னா ஒரு பிடி பிடிச்சுச் சாப்பிட்டு, எனக்குச் சமையலறை மன்னின்னு ஒரு பட்டமும் சூட்டினா."

"ஏன் ஒரு மாதிரியா பேசறே, சாரதா?"

"எத்தனை நாளா சிநேகம்?"

"ஏன்?"

"தெரிஞ்சுக்கணும்னு ஒரு சின்ன ஆசை"

"ஆறுவருஷமா".

"அதாவது நம்ப கலியாணத் துக்கு முன்னாலிருந்தே!"

"ஆமாம்!"

"எப்படிப்பட்ட சிநேகம்?"

"நீ நினைக்கற மாதிரி இல்லே".

"நான் என்ன நினைக்கிறேன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"வக்ரமா நினைக்கிறேன்னு தெரியறது."

"எனக்கு அவளைப் பிடிக் கலே".

தவறில்லை!

வேலூர் ம. நாராயணன்

சொல்லும் சொல்லில் தவறில்லை - அவை
வெல்லும் சொற்கள் தாமென்றால்
அள்ளும் உறவிலும் தவறில்லை - அவர்க்கு
ஆபத் துதவிடும் பண்பிருந்தால்
வில்லாய் வளைவதும் தவறில்லை - கணை
வீணரை மட்டுமே வீழ்த்துமென்றால்
முள்ளாய்ப் பொலிவதும் தவறில்லை - சுய
மரியா தைக்கிடர் வருமென்றால்...!

புலியாய்ச் சீறுதல் தவறில்லை - அற்பப்
புழுக்கள் நம்மைச் சீண்டுகையில்
நிலையில் தாழ்வதும் தவறில்லை - பொது
நீதியை நாட்டில் நாட்டுகையில்
தலைதாழ் வதுவும் தவறில்லை - முறை
தவறிய காட்சிகள் காணுகையில்
கலைகள் அழிவதும் தவறில்லை - மக்கள்
கருத்தினைக் குருடாய் மாற்றுகையில்...!

வாரீர் வாரீர்!

பூங்கோவன்

புதுமையெலாம் வரவேற்போம் நாட்டி லெங்கும்,
புத்தொளியாம் அறிவொளியை வளர்ப்போம் வாரீர்!
முதுமைதனை விடைகொடுக்கும் இளமை காலம்,
முன்னேற்றம் அடைவதற்கு வழியைக் காட்டும்!
பதுமையாக இல்லாமல் செயல்பு ரிந்தே
பண்புடனே அறம் வளர்ப்போம் வாரீர்! வாரீர்!

விஞ்ஞான முன்னேற்றம் கண்ட தாலே
வியக்கின்ற சாதனைகள் இன்னும் காண்போம்!
அஞ்சாமல் அவனியிலே புதுமை தன்னை
அயராமல் செய்திடுவோம் வெற்றி கொள்வோம்!
நெஞ்சார ஒற்றுமையைக் கடைப்பி டித்து
நேசத்தை வளர்த்திடுவோம் அமைதி கொண்டே!
துஞ்சாமல் துவளாமல சுறுசு றுப்பாய்
தூயச்செயல் செய்திடுவோம் வாரீர்! வாரீர்!

"சரி".

"இனிமே இங்கே வரப்படாது".

"சொல்லிடறேன்."

"ஆனா வெளியே நீங்க ரெண்டு பேரும் சந்திச்சிப்பீங்க, இல்லே?"

"சந்திக்கற வாய்ப்பு ஏற்படறப்ப சந்திச்சுக்குவோம்."

"அவ என்ன பண்றா?"

"இங்கிலீஷ் லிட்டரேச்சர்ல எம்ஃபில், ஐ.ஏ.எஸ் பாஸ் பண்ணினா. வேலையில சேரலே. பணம் இருக்கு. ஒரே பெண்!"

"அவ ஒண்ணு சொல்ல வந்தா. ஆனா, என் நெஞ்சில பூகம்பம் வெடிக்கும்னு சொல்லிப் பேசமாலே இருந்தா."

"அப்படியா?"

"அது என்ன பூகம்ப விஷயம்?"

"பெரிசா ஒண்ணுமில்லே. அவ அப்பா என் அப்பாவைப் பார்க்க வந்தா. எதுக்கு? சம்பந்தம் பேச."

"ஒகோ!"

"நான் உட்பட எல்லோருமே வேண்டாம்னு வைச்சுட்டோம்!"

"ஏனாம்?"

"சாதாரண மிடில் கிளாசுக்கும் ரொம்பப் பெரிய பணக்காரக் குடும்பத்துக்கும் ஒத்து வரா துன்னு."

"அதான் காரணமா?"

"ஆமாம்."

"அதுக்கு அப்புறமும் இவ ளோட உங்களுக்கு என்ன பேச்சு."

"ஒரு எழுத்தாளன் ஒரு ரசிகை."

"என் காதுல பூ சுத்தறீங்களா?"

"நம்பினா நம்பு, நம்பாமப் போனால் போ!"

"வெறும் சிநேகிதம்தானா... இல்லே..."

"நான் ஆபீஸ்ல இருக்கிறப்ப நீ இங்கே வீட்லே சரியாத்தான் இருக்கியா?"

"என்ன கேள்வி கேட்டுட்டீங்க?"

"நீஎன்மேல சந்தேகப்படலாம்; நான் படக்கூடாதோ?"

சாரதா பதில் சொல்ல முடியாமல் அவனைக் கண்களால் எரித்தாள்.

இதன் பிறகும் ஒரு சில தடவைகள் நிர்மலா வந்து போனாள். உள்ளூற வெகுண்டாலும் வெளியே உபசாரம் செய்தாள் சாரதா.

பாம்பு என்று மிதிக்கவும் முடியவில்லை. பழுதை என்று தாண்டவும் இயலவில்லை.

ஓர் அவசர காரியமாக அம்மா அப்பாவுடன் மன்னார்குடிக்குச் சென்ற சாரதா திடீரென்று இரவு ஒரு மணிக்கு வீடு திரும்பினாள். அடை மழை. இறக்கி விட்ட கார் நகர்ந்து சென்றுவிட்டது. அப்பா அம்மாவுக்கு இறங்கி ஓரிரு நிமிடங்கள் பெண் வீட்டில் தங்கக்கூட நேரமில்லை.

சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே காம்பவுண்டு கேட்டைத் திறக்கும்போதுதான் ஒரு கார் நிற்பதை அவள் கண்டாள்.

நிர்மலாவின் வண்டி!

அவள் ஊரில் இல்லாத சமயத்தில், அவள் இரவு ஒரு மணிக்குத் திரும்பமாட்டாள் என்ற எண்ணத்தில் வரதன் தன் இஷ்ட தேவதையை வரவழைத்திருக்கிறான்!

அவள் மின்மணியை அழுத்த இரண்டு அல்லது மூன்று நீண்ட நிமிடங்களுக்குப் பிறகு வரதன் வந்தான்.

"சாரதா, நீயா?"

"என்னை எதிர்பார்க்கலே இல்லே?"

"இல்லே. மன்னார்குடியிலிருந்து எப்பப் புறப்படுவேன்னு நீ சொல்லலியே?"

"நான் வரமாட்டேன்னு மட்டும் நல்லாத் தெரிஞ்சு வைச்சிருக்கீங்க, இல்லே!"

"சாரதா, நீ என்ன சொல்றே?"

"நான் என்ன சொல்றதுக்கு இருக்கு... அதோ அவ இருக்காளே..."

"நடந்தது தெரியாமல் பேசாதே சாரதா..."

"மிஸ்டர் கே.எஸ்.வி உங்க ஒய்ஃப் சந்தேகப்படறதிலேயும் நியாயம் இருக்கு. மிஸஸ் சாரதா..."

"எனக்கு உன்னோட பேச இஷ்டமில்லே... மொதல்ல வெளியே போ!"

நிதானமாக வரதன் பேசினான்.

"நிர்மலா அஞ்சு மணிக்கு வந்தா. ஆறரை மணிக்கு ஆரம்பிச்ச மழை அடை மழையாக் கொட்டித்து. நின்னுடும் நின்னுடும்னு காத்திருந்தா. நிக்கலே... பத்து பதினொன்று ஆச்சு. தன்னந்தனியே தாம்பரம்வரை காரை ஓட்டிட்டுப் போகப்படாதுன்னு நான்தான் அவளை இங்கேயே தங்கச் சொன்னேன்..."

"கதையில வர்ற மாதிரி சூழ்நிலையோ? வெளியே சோன்னு மழை. தன்னந்தனியாக இருக்கிற நிலை. மனைவி இல்லாத அதிருஷ்டம். ஒரு ரசிகையுடன்..."

மறுகணம்.

'பளார்' என்ற சத்தம் கேட்டது.

சாரதா கன்னத்தைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளக்கூட இல்லை.

அன்று அவன் அவளைத் தொட்டதோ, தீண்டியதோ அதுதான் கடைசித் தடவை.

மறுநாள்.

அவள் தூங்கவில்லை இரவு முழுதும். நிர்மலா புறப்பட்டுச் சென்றதும், அவளை வாசல் வரை சென்று வரதன் வழி அனுப்பியதும் அவளுக்குத் தெரியும்.

"இனிமே நான் உங்க மனைவி இல்லை."

"சரி."

"நீங்க என் புருஷன் இல்லை."

"சரி."

"ஆனா நான் விவாகரத்து கேட்க மாட்டேன்."

"சந்தோஷம்".

"இனிமே நாம மட்டும் வீட்ல இருக்கிறப்ப நமக்குள்ள எந்தப் பேச்சும் இருக்கப்படாது."


"இராது."

"ஆனா வெளியே உங்க மானம் போகும்படியா நான் எதுவும் செய்யமாட்டேன்.

எனக்குச் சோறு போட்டு, துணி கொடுத்துக் காப்பாத்தறது உங்க கடமை. அதுக்குப் பிரதியா உங்களுக்குச் சமைச்சுப் போடறது என் கடமை. இதுக்கு மேல நம்ப தாம்பத்தியத்தில எதுவும் இல்லே."

"புரியறது."

இத்துடன் அவளுடைய இல்லற வாழ்க்கை முடிந்தது.



இப்போது 1992

முப்பது ஆண்டுகள்.

ஒரு பெரிய பாராட்டு விழா.

அதே நிர்மலா அவரை இன்றும் விடவில்லை. இத்தனை ஆண்டு களாக அவர்கள் எங்கெங்கெல் லாம் சந்தித்துக் கொண்டார்களோ, எப்படி எப்படியெல்லாம் சல்லா பித்துக் கொண்டார்களோ, யாருக்குத் தெரியும்?

அவர் அளித்த இன்ப நாட் களுக்கு அவள் நாளை மறுநாள் சன்மானம் அளிக்கப் போகிறாள்.

சன்மானத்தின் மதிப்பு?

முப்பது சவரன்.

ஆனால் சாரதா இழந்துவிட்ட வாழ்க்கையின் நஷ்டத்தை எப்படி மதிப்பிடுவது? அவள் யாரைப் பழி வாங்கினாள்? கணவனையா? அல்லது தன்னைத்தானேயா?

வியாழக்கிழமை வந்தது. காலை பத்து மணிக்குச் சாரதா ஊஞ்சலில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு கார் வந்து நின்றது.

டிரைவர் கதவைத் திறந்துவிட முன் ஸீட்டிலிருந்து ஒரு எண்பது வயதுக்காரரும், பின் ஸீட்டி லிருந்து ஒரு எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட ஒருத்தியும் இறங்கி னார்கள்.

யார்?

அவர்கள் மெதுவாக முன்னேறி வர, வரவேற்க சாரதா ஆயத்த மானாள்.

"வாங்க... வாங்க உள்ளே.."

"நாங்க யார்னு உங்களுக்குத் தெரியாதும்மா. இவ அமிர்தம். நான் சாரநாதன். கே.எஸ்.வி. யையும் உங்களையும் நேர்ல பார்க்கணும்னு என் பொண்ணு ரொம்ப ஆசைப்பட்டா. கே.எஸ்.வி. இருக்காரா?"

"டெலிபோன் பில் கட்டப் போயிருக்கார்... உங்க பெண் எங்கே?"

"கார்ல".

"வரச்சொல்லுங்க".

பெரியவர், அருகே நின்ற டிரை வரைப் பார்த்து, "சின்னம்மாவை அழைச்சுட்டு வாப்பா" என்றார்.

சாரதா முப்பது ஆண்டுகளாக இல்லாத ஆர்வத்துடன் பார்த்தாள்.

கார்க் கதவு திறந்தது.

டிரைவர் டிக்கியிலிருந்து ஒரு சக்கர நாற்காலியை எடுத்துக் கதவு அருகே வைத்துவிட்டு, இரு கைகளையும் விரித்தான்.

அவனுடைய கைகளுக்குள் ஒரு தலை நரைத்த பெண்மணி ஒரு சில விநாடிகள் மாட்டிக் கொண்டு, அதன்பிறகு மிகவும் லாகவமாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். முகத்தில் அன்று அலர்ந்த புஷ்பம் போல புன்னகை.

நிர்மலாவுக்கு என்னவாயிற்று? சாரநாதன் ஒரே மூச்சில் கதையைச் சொல்லிவிட்டார்.

"முப்பது வருஷத்துக்கு முன்னே இந்த வீட்லேர்ந்து கார்ல புறப் பட்டா. பல்லாவரத்தில ஆக்ஸி டெண்ட். பிழைச்சதே புனர் ஜென்மம். வாழ்க்கையே வீல்சேர்ல தான். இடுப்புக்குக் கீழே முப்பது வருஷமா உசிர் இல்லே!"

அதிர்ச்சியிலிருந்து அவள் விடு வித்துக் கொள்ளும் முன் நிர்மலா ஹாலுக்கு வந்துவிட்டாள்.

"எப்படி இருக்கே சாரதா? கே.எஸ்.வி. எப்படி இருக்கார்? அப்பா, ரெண்டு பேரையும் பார்த்து முப்பது வருஷமாச்சு. என்னால இவளுக்கு ஒரு பெரிய சோதனையே உண்டாச்சு, தெரி யுமா... ஆனாலும் கே.எஸ்.வி.யும் இவளும் இன்னமும் இணை பிரியாம இருக்காங்கன்னு தெரி யறது. கே.எஸ்.வி. சார் எங்கே சாரதா?"

சாரதா பார்த்தாள்.

சக்கர நாற்காலி.

அதில் புன்னகை பூத்து அமர்ந் திருக்கும் அவளையொத்த வயதில் ஒருத்தி.

சாரநாதனும் அமிர்தமும் சோபாவில் உட்கார, கண்கள் கலங்க சாரதா நிர்மலா அருகே வந்தாள்.

"அவர் வெளியே போயிருக்கார். இப்ப வந்துடுவார்!"

"நான் முதன் முதலா வந்தப் பவும் அவர் வீட்ல இல்லை. முப்பது வருஷத்துக்கு அப்பறம் அவரைப் பார்க்கலாம்னு வந்தப் பவும் அவர் இல்லை! என் ராசி. நல்ல ராசி!" என்று சொல்லிச் சிரித்த நிர்மலா, "சாரதா வா, அந்த ரூமுக்குப் போகலாம்!" என்றாள்.

"நான் வீல் சேரை..."

"அவசியமில்லே... கைக்கு உசிர் இருக்கு."

அறை வந்தது.

"சாரதா! நான் ஒண்ணு சொல்லுவேன், நம்புவியா?"

"நம்புவேன்".

"நீ நினைச்ச மாதிரி எங்க ளுக்குள்ளே எப்பவுமே எந்தத் தப்புமே நடந்ததில்லே. சத்தியம்..."

கண்களிலிருந்து நீர் வழிய சாரதா, "நம்பறேன், நிர்மலா!" என்றாள்.

"இப்பத்தான் எனக்குத் திருப் தியா இருக்கு!"

நிர்மலாவாவது ஒரு சக்கர நாற்காலியில் உட்கார்ந்து வாழ்க் கையை ஓட்டி வருகிறாள்! ஆனால் அவள்! இருவருடைய வாழ்க்கை கள் முடமாகக் காரணமாகி விட்டாளே?

என்றுமேயில்லாத ஆர்வத்துடன் சாரதா, தன் கணவர் கே.எஸ். வரதனுக்காகக் காத்திருந்தாள். ●●

மேலட்டை விளக்கம்: குன்றக்குடி பெரியபெருமாள்

வள்ளியை மணம் புரிய வந்த திருக்கோலம்

மூவிரு முகங்கள், முகம் பொழி விழிகள், தேவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள், சேவல், மயில், திருக்கைவேல் இவை எவையுமின்றி,

தவ வேடத்துடனும், தள்ளாடும் கிழ வடிவத்துடனும், சிவகுமரன் முருகப் பெருமான் தென்மலைக் காட்டிலே தோன்றினான்!

எதற்காக?


இந்த வினாவிற்குரிய விடையினை ஏழே சொற்களில் எடுத்தியம்பி இன்புறுகின்றான் மகாகவி பாரதி!

"வேடர் கனியை விரும்பியே – தவ
வேடம் புனைந்து திரிகுவான்"

ஆம், வேடர் கனியாகிய வள்ளி நாயகியை விரும்பி மணம் புரிய வந்த முருகப் பெருமான் – வேடம் புனையவும் செய்தான்! வேங்கை மரமாகவும் நின்றான்! வேழத்தையும் வரவழைத்தான்! கூடவும் வள்ளி நாயகியைக் கொள்ளவும் வந்த குமரப் பெருமான் ஆடிய திருவிளையாடலை, அருளிய திருவருள் கூடலைக் கவிஞானி கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தின் நிறைவில் கனிந்த தமிழால் காட்சிப்படுத்துகிறார். காட்சி கந்தவேளின் கருணையைக் காட்டுகிறது! கதையோ கடவுட் தன்மையின் அருமையை ஊட்டுகிறது!

வளம் செறிந்தது தென்மலைக் காடாகிய வள்ளிமலை. வேடர் குலத்து நம்பிராஜன் வள்ளிமலைக்கு வேந்தன். வேந்தன் நம்பிராஜன் தாய்வழி பத்தும், தந்தை வழி பத்தும், தான் ஒன்றுமாக இருபத்தொரு தலைமுறைகளாக மலைக் கடவுளாகிய மால்மருகன் முருகப் பெருமானைத் தொழுது போற்றிக் குலதெய்வமாகக் கொண்டிருப்பவன். அவனுக்கு ஆண் மக்கள் சிலர் இருந்தனர். பெண் ஒன்றும் இல்லையே எனப் பெரிதும் கவலை கொண்டிருந்தான் வேந்தன் நம்பிராஜன்.

கந்தவேளின் கருணையால், நம்பிராஜன் வள்ளிக்கிழங்கு தோண்டிய பள்ளத்தில் வனப்புமிக்க பெண் குழந்தை ஒன்று அழுது கொண்டிருப்பதை ஆவலோடு கண்டான். 'ஆகா இது



முருகப் பெருமானின் திருவருளே' என நினைத்து, நெகிழ்ந்து, குழந்தையை வாரி எடுத்து, மாறி மாறி முத்தம் கொடுத்து, அருகே நின்ற மனைவியிடம் அளித்து மகிழ்ந்தான். வள்ளிக் கொடிகளுக்கருகே கிடந்ததால், குழந்தைக்கு 'வள்ளி' எனப் பெயரிட்டுக் களித்தான் வேந்தன் நம்பிராஜன்.

வள்ளி வளர்ந்தாள். பருவம் அடைந்தாள். குல வழக்கப்படி தினைப் புனம் காத்தாள்.

வள்ளி நாயகிக்குத் திருவருள் புரிய வேண்டும் எனத் திருவுளங் கொண்ட முருகப் பெருமான், மானுட வடிவம் பூண்டார். வீரக் கழல் அணிந்து, வில்லும் அம்பும் கொண்டு ஒரு வேடனைப் போல, தணிகை மலையினின்றும், வள்ளிமலைக்குச் சென்று, நாயகியார் காவல் காக்கும் தினைப் புனத்தை அடைந்தார்! வள்ளி நாயகியின் அருகில் சென்றார்; வள்ளியின் அழகை வானளாவப் புகழ்ந்து பேசினார்.

முருகப் பெருமான் எப்படிப் பேசியிருப்பாரெனக் கற்பனை செய்து பார்த்தான் கவிராஜன் மகாகவி பாரதி. 'வள்ளிப் பாட்டு' என இரு பாடல்களை இசைப்பாடல்களாக உருவாக்கி அளித்துள்ளான், முருகப் பெருமான் பாடுவது போல!

"எந்த நேரமும் நின்
மையல் ஏறுதடீ
குறவள்ளி, சிறு கள்ளி" –
இது ஒரு பாடலின் பல்லவி!

"உனையே மயல்
கொண்டேன் – வள்ளீ
உவமையில் அரியாய்,
உயிரினும் இனியாய்" – இது
இரண்டாவது பாடலின் பல்லவி.

என்ன பாடியும், எப்படிப் பாடியும் வள்ளி நாயகி முருகப் பெருமானைக் கனிவோடு பார்க்கவும் இல்லை! பணிவோடு பதில் கூறவும் இல்லை. பெருமான் வள்ளிநாயகியைச் சற்றே பயமுறுத்தத் தொடங்கினார். இதனைக் கவிஞானி கச்சியப்ப சிவாச்சாரியார் சுவையோடு பாடி அருளியிருக்கிறார்.

"மொழியொன்று புகலாய் ஆயின்,
முறுவலும் புரியாய் ஆயின்
விழியொன்று நோக்காய் ஆயின்,
விரக மிக்கு உழல்வேன் உய்யும்
விழியொன்று காட்டாய் ஆயின்,
மனமும் சற்று உருகாய் ஆயின்
பழியொன்றும் நின்பால் சூழும்
பராமுகம் தவிர்தி" என்றான்.

முருகப் பெருமான் விரக தாபத்தால் வள்ளி நாயகியை விதம் விதமாகப் புகழ்ந்தும், போற்றியும், பயமுறுத்தியும் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், வேடர்குலத் தலைவன் வேந்தன் நம்பிராஜன் தம் பரிவாரங்கள் சூழ அங்கு வந்தான். வேடனைப் பார்த்த வேலவன் ஒரு வேங்கை மரமாக நின்றார்!

வேந்தன் நம்பிராஜன் மகளுக்குத் தேனும், தினைமாவும், கிழங்குகளும் தந்தான். அங்கே நின்ற வேங்கை மரத்தைப் பார்த்து, "ஆமாம் இது என்ன புதிதாக ஒரு மரம்?" என வினவினான்.

"இது இப்போதுதான் இங்கு தோன்றியது. ஆனால் நிழல் தருகிறது!" என்றாள் வள்ளி.

"அப்படியா? நிழல் தரும் இந்த வேங்கை மரம் இங்கேயே நிற்கட்டும்"

எனச் சொல்லி, பரிவாரங்களுடன் நம்பிராஜன் தினைப்புனத்தை விட்டுத் திரும்பிச் சென்றான்.

வேங்கை மரம் ஓர் அழகிய கட்டிளங்காளையாக மாறுட உருவம் கொண்டது. ஆம் முருகப்பெருமான் வாலிப வடிவம் கொண்டு வள்ளியை நெருங்கி, காதல் மொழி பேசி, உள்ளம் உருகினார். இப்போது வள்ளிநாயகியின் உள்ளம் சற்றே இளகத் தொடங்கியது.

"தங்களைப் பார்த்தால் உயர் குலத்துப் பிறந்தவராகத் தெரிகிறது! தாங்கள், தாழ்ந்த குலமாகிய குறவர் குலத்தில் பிறந்த அடியாளை விரும்பலாமா? புலி பசித்தாலும் புல்லைத் தின்னாதே!" என்றாள் வள்ளி நாயகி.

தம்மிடம் வள்ளிநாயகி பேசிவிட்டதை எண்ணிப் பெரிதும் முருகப் பெருமான் மகிழ்ந்திருந்த வேளையில் மீண்டும் நம்பிராஜன் அங்கு வருவதைக் கண்ணுற்ற வள்ளி, "அதோ என் தந்தை வந்து கொண்டிருக்கிறார். நீங்கள் இங்கே இருப்பது ஆபத்தாகப் போய் விடும். இங்கிருந்து நீங்கள் உடனே ஓடிப்போய்விடுவது நல்லது" எனக் குழைந்து கூறினாள். முருகப் பெருமான் உடனே தவ வேடம் கொண்ட தள்ளாடும் கிழவர் ஆனார்.

வந்த வேந்தன் நம்பிராஜன் நின்ற முதியவரின் நிலை கண்டு பணிந்து, "பெருமானே! முனிவரே! தாங்கள் இந்த மலையை நாடி வந்த காரணம் என்னவோ?" எனப் பணிவாக வினவினான்.

திருநீறு அளித்து நம்பிராஜனை வாழ்த்திய முதிய முனிவர்,

"கிழப் பருவம் நீங்கி, இளமைப் பருவம் பெற்றுக் கொள்ள தீர்த்தமாட வந்தோம்! குமரித் தீர்த்தத்தில் நீராடிக் குமரனாய் ஆகிட நினைத்திட்டோம்!" என விடை பகர்ந்தார்.

"அப்படியா? நல்லது முனிவரே! என் மகள் வள்ளி இங்கே தனியாகத்தான் இருக்கிறாள். அவளுக்கு நல்ல துணையாகி நலம் கூட்டுக!" என்றான் நம்பி.

"துணையாவோம். வள்ளிக்குத் தனிமை போக்கி இனிமை சேர்ப்போம்" எனக் கூறி வள்ளி நாயகியைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினார் முருகப் பெருமான்.

"அம்மா, முருகன் திருவருளாலே வந்திருக்கும் இந்தப் பெரியவர், உனக்குத் துணையாக இருப்பார்!" எனக் கூறி, புனத்திலிருந்து போய்விட்டான் நம்பிராஜன்.

முதியவராய் முனிவராய் நின்ற முருகப் பெருமான் "பெண்ணே பசிக்கிறதே!" என்றார். வள்ளி நாயகி தேனும் தினைமாவும், தேர்ந்த கனிகளும் கொடுத்தாள். முருகன் அவைகளை உண்டு கொண்டிருக்கும்போதே விக்கினார். விக்கலுக்கிடையே 'வேண்டும் தண்ணீர்' என்றார்.

மலையிலிருந்த சுனைக்கு, முதியவரைக் கைப்பிடித்து அழைத்துச் சென்றாள் வள்ளி. தண்ணீர் அருந்திய தணிகாசலப் பெருமான், "பசியும் அடங்கியது! தாகமும் தீர்ந்தது! ஆனால் மோகம் வந்துவிட்டதே! வள்ளி! எட்டுத் திசையும் ஒளிர்ந்திடும் காலை இரவியைப் போன்ற முகத்தாய்! உன்னை முத்தமிட்டுப் பல முத்தமிட்டு மோகம் தீர்த்திட வேண்டும்!" எனக் காதல்வெறி கொண்டு பேசத் தொடங்கினார்.

கலங்கிப் போனாள் வள்ளி நாயகி! கடுஞ் சினம் கொண்டாள்.

"என்ன சொன்னீர் பெரியவரே! வயதிற்குத் தகுந்த பேச்சு வேண்டாமா? வரம்பு கடந்து பேசுகின்றீரே? நரம்புகள் சுருங்கி, நரை வந்தபோதும் உமக்கு நல்லுணர்வு வரவில்லையே?" எனப் பெரியவரின் பிடித்திருந்த கரத்தை உதறிவிட்டு, சற்றே முன்னே வேகமாக நடக்கத் தொடங்கினாள் வள்ளி நாயகி.

முன்னே செல்லும் வள்ளியைத் தன்னிடம் ஓடிவரச் செய்யக் கருதினார் கந்தவேள்.

தம் தமையனார் விநாயகப் பெருமானை உள்ளுருக வழிபட்டு உதவி செய்ய வந்திடுமாறு பிரார்த்தித்தார் முருகப் பெருமான். தம்பியின் வேண்டுதலை ஏற்ற விநாயகப் பெருமான், மதம் பிடித்த வேழமாக, மலையும் மண்ணும் நடுங்க, வள்ளிக்கு எதிரே அங்கம் குலுங்க ஓடி வந்து அருளினார்.

மத யானையைப் பார்த்த வள்ளி மருண்டாள்! மனம் கலங்கினாள்! உடல் படபடக்க முதியவராக நின்ற முருகப் பெருமானை நோக்கி ஓடி வந்தாள்! வெறுத்து ஒதுக்கிய விருத்த முனிவரை வேண்டித் தழுவினாள்! "என்னை யானையிடமிருந்து காப்பாற்றும்" என ஓலமிட்டாள்!

இத் திருக்காட்சி – மலரின் அட்டையில் சித்திரமாகி நம் சிந்தையைக் கவர்கிறது! இல்லையா? ஓவியச் சித்தர் கோபுலு, முதியவராய் நிற்கும் முருகப் பெருமானைத் தாவிப் படரும் குலக்கொடி வள்ளியை, மேவி வருகின்ற மத யானையைத் திருக்காட்சியாக்கித் தெய்விகக் காட்சியாய் மாட்சிபெற வைத்துள்ளார்! ஆறு விழிகளில் தோன்றும் மூன்று பார்வைகளை ஆற்றல் மிக்க தம் தூரிகையால் வேறுபடுத்திக் காட்டும் வித்தகம் – ஓவியச் சித்தரின் உயரிய முத்திரை! யானையின் கண்களில் வெறிப்பையும், வள்ளியின் விழிகளில் அர்ப்பணிப்பையும், முதியவர் கண்களில் அருள்பாலிப்பையும் காட்டுகின்ற அருமை – ஓவியச் சித்தர் கோபுலு பெற்றுள்ள தனிப் பெருமை!

மாறுவேடத்திலிருந்த ஆறுமுகச் செவ்வேள், தமது இயல்பான திருக் கோலத்தை வள்ளிநாயகிக்குக் காட்டி அருளினார்.


வேட்டுவர் குலத்தின் தவப்பயனாய் அவதரித்த வள்ளி நாயகி, வேலவரின் கரம் பிடித்து, தன் தவப்பயன் பெற்றாள். தனிப் பெருந் தலைவராகிய கந்தப் பெருமான் தனக்கு மருகராகும் பேறு பெற்ற நம்பிராஜன் பெரிதும் மகிழ்ந்தான்.

முருகப் பெருமான் வள்ளிநாயகியுடன் தனிகை மாமலைக்கு வந்து சேர்ந்தார். தேவ தச்சனால் முன்னரே அங்கு அமைத்திருந்த அழகுத் திருக் கோயிலில், உலகம் உய்ய வள்ளி நாயகியுடன் எழுந்தருளினார்.

"ஆறிரு தடந்தோள் வாழ்க!
அறுமுகம் வாழ்க வெற்பை
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்க சீர் அடியார் எல்லாம்".

என முருகப் பெருமானைப் போற்றியுரைத்துத் தீபாவளிப் பெருநாளில் பெருமானின் கருணைத் திருவருளைப் பெற்றுப் பெருவாழ்வு பெறுவோம்.

தமிழகத்தில் ஓர் த்வைத மார்க்க ஆசிரமம்



● ஸ்ரீமத் பத்மநாப தீர்த்த சுவாமிகள்

ஜகத்குரு ஸ்ரீமத் மத்வாசார்ய சுவாமிகள் நிறுவிய த்வைத சித்தாந்த அருள் மார்க்கத்தில் சுவாமிகளின் அருட் பரம்பரையில் தொடர்ந்து வந்து உலகுய்ய, அவரது சித்தாந்தத்தைப் பரப்பிய சன்மார்க்க சீலர்களாம் பெரியோர், மகத்தான அருளாளர்கள்.

சுவாமிகளின் சீட பரம்பரை மிகப் பெருமை வாய்ந்தது. ஸ்ரீமத் பத்மநாப தீர்த்த சுவாமிகள் இவ்வரிசையின் முதற் பெருமைக்குரியவர். இந்த அருள் வரிசையில் எட்டாவது பீடத்தை அலங்கரித்தவர் ஸ்ரீமத் ஸ்ரீபாதராஜ சுவாமிகள்.

ஸ்ரீபாதராஜ சுவாமிகள் த்வைத மார்க்கத்தின் முக்கியத்துவத்தையும் பெருமையையும் பக்தி மார்க்கத்தில் இணைத்து, 'ஹரிதாஸ சன்மார்க்கம்' என்ற அமைப்பை ஸ்தாபித்து, கடந்த 500 ஆண்டுக் காலமாக இந்த சத்சங்கப் பரம்பரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஸ்ரீபாதராஜ சுவாமிகளின் நேர் சீடரான ஸ்ரீ வியாசராஜ சுவாமிகள் ஹரிதாஸ சன்மார்க்கப் பெருமார்க்கத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டார். (இன்று 'இஸ்கான்' (ISCON) அமைப்பு இந்த சன்மார்க்கத்துக்குப் பெருந் துணையாக இருந்து செயலாற்றி வருகிறது)

இந்தத் தெய்விகப் பரம்பரையில் வந்த அவதார மகான் - மந்த்ராலய மகான் - ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் ஆவார். காமதேனு என்றும் கற்பக விருட்சம் என்றும் பக்தர்களால் போற்றப் படுபவர் ராகவேந்திரர்.

தெய்விக த்வைத மார்க்கப் பரம்பரையில் 35 ஆவது பீடத்தைத் தற்போது அலங்கரிக்கும் பீடாதிபதி ஸ்ரீ விஞ்ஞான நிதி தீர்த்த சுவாமிகள் ஆவார். தற்போது பீடாதிபதியான சுவாமிகள், பக்தி மார்க்கப் பணிகளுடன், சமுகநலப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டு அருந் தொண்டாற்றி வருகிறார்.

சுவாமிகளின் இத்தொண்டுக்கு மகுடமாகத் தமிழகத்தில் த்வைத மார்க்க அருள் ஆசிரமம் சென்னையை அடுத்த தாம்பரம் நகரிலிருந்து இரு கிலோ மீட்டர் தொலைவில் "ஸ்ரீஹரிபாத ஸ்ரீ ஸ்ரீபாதராஜ ஹரிதாஸ ஆசிரமம்" ஒன்றை நிறுவ சுவாமிகள் திட்டமிட்டு ஆக்கப்பூர்வமான பூர்வாங்க அலுவல்கள் தொடங்கப்பட்டுள்ளன. பெருங்களத்தூர் இரயில் நிலையத்துக்கு அருகில், தெற்கு நெடுஞ்சாலையை ஒட்டி இந்த அருள் ஆசிரமம், ஐந்து ஏக்கர் நிலப் பரப்பளவில் பெரிய அளவில் அமைந்து சமுகத் தொண்டாற்றப் போவது மகிழ்ச்சியான செய்தி. நிலத்தில் பாதி அளவு த்வைத மார்க்கத்தில் ஈடுபாடு கொண்ட ஒரு பக்தரால் அன்பளிப்புச் செய்யப்பட்டதாகும்.

ஆசிரமத்தில் த்வைத மார்க்க அருளாளர்கள் ஸ்ரீ பத்மநாப தீர்த்தர், ஸ்ரீ ஜயதீர்த்தர், ஸ்ரீ ஸ்ரீபாதராஜர், ஸ்ரீ வியாசராஜர், ஸ்ரீ வாதிராஜர், ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் ஆகியோரின் பிருந்தாவன ஸ்தாபனங்கள் இலங்கும்.

வேத பாடசாலை, இந்திய கலாசாரப் பாடல்கள், வகுப்புகள், ஆயுர்வேத, சித்த மருத்துவத்துறை மையம் முதலியவை அமைய இருப்பதுடன் -

சமுகநலப்பணி சிறக்க மக்கள் நல மையமும் செயல்பட உள்ளது.

மந்த்ராலய பகவான் விரும்பியவாறு, பாரதநாட்டில் பல ஸ்தலங்களில் பிருந்தாவன ஆசிரமங்கள் நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ள த்வைத பீடாதிபதிகள், இப்போது தென்னகத்தில் - தமிழகத்தில் அமையப் போகும் இந்த அருள் ஆசிரமத்தினால் மிகப் பெரும் பயன்களை அடையப் போவது இந்து மதத்தின் உயர்வுக்கு உன்னதமான எதிர்காலமாக அமையப் போகிறது.

பக்தி மார்க்கம் -

வேத சம்ரட்சணம் -

ஒழுக்க உயர்வு -

சமுக நலம் -

இவை அனைத்துடன், மருத்துவத் துறையில் ஆயுர்வேத, சித்த வைத்திய முறையில் ஈடுபட்டுள்ள பிரபல மருத்துவ நிபுணர்கள் 'சிரமதானமாக' ஆசிரமத் தொண்டில் ஈடுபட உள்ளார்கள்.

ஆசிரமத்தில் தங்கி அரும்பணி யாற்றி 'மூத்த மக்கள் மையம்' செயல் படப் போவது சிறப்பான ஒன்றாகும். முக்கியமாகச் சொல்வதானால், ஒவ்வொருவரும் தம் இல்லம் மாதிரியே ('Home away from Home") அமைய இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இதற்குரிய சகல வசதிகளும் ஆசிரமத்தில் ஏற்பட உள்ளன.

இப்போது பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் அருள் வழிகாட்டுதலுடன் உருவாக இருக்கும் ஸ்ரீ ஹரிபாத ஸ்ரீ ஸ்ரீவரத ராஜ ஹரிதாஸ ஆசிரமம் சார்பில் ஆன்மிகப் பெருமக்களுக்கு ஒரு விண்ணப்பமும் உண்டு. நன்கொடை எதிர்பார்ப்பு என்று இதைச் சொல்லாமல், இந்த மாபெரும் பணியில் பங்கேற்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு பக்தரும் தினசரி 25 பைசா சேமித்து, ஒரு மாதத்தில் ரு. 7.50 நன்கொடையை அளித்து வந்தாலே போதும். நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி: நெ. 2, இராமநாதன் தெரு, தி. நகர், சென்னை - 600 017. (ஆசிரமப் பெயருக்கு).

தமிழகத்தில் த்வைத மார்க்கம் செழித்தோங்க பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீ விஞ்ஞான நிதி சுவாமிகள் நிறுவ உள்ள அருள் ஆசிரமம் பகவான் ஸ்ரீ மத்வாசாரியார் சுவாமிகள் அருள் வெள்ளத்தில் ஒரு மாபெரும் அருள் இயக்கமாக உருவாக உள்ளது. ஸ்ரீ பகவான் விஷ்ணுவின் பேரருளால், சுவாமிகளின் எண்ணம் ஈடேறி, உலகுய்யவிருப்பது ஆஸ்திகப் பெருமக்களுக்குப் பெருமகிழ்ச்சி தருவதாகும். ○○

முதன் முறையாக.....

தொகுப்பு: கார்த்திகா

நீங்கள் செய்த முதல் பரபரப்பான புலன் விசாரணை எது என்று கிழக்கு செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டக் காவல் துறைத் தலைவர் திரு. டி. இராதாகிருஷ்ணன் ஐ.பி.எஸ். அவர்களிடம் கேட்டபோது...

1983-84 ஆம் ஆண்டு வாக்கில் நான் வேலூர் காவல்துறைப் பயிற்சியில் இருந்த நேரம். வேலூர் தாலுகா காவல் நிலையத்தில் இருந்தபோது அரியூர் அருகே ஒரு தோட்ட வீட்டில் ஒரு பெண்மணி கழுத்து அறுபட்டுக் கிடப்பதாகத் தகவல் வந்தது. அவளுடைய காது, மூக்கு ஆகியவையும் அறுபட்டு நகைகள் காணாமல் போயிருப்பதாய் முதல் அறிக்கை தரப்பட்டது. புலன்விசாரணை செய்யத் தொடங்கினேன். இறந்த பெண்ணின் கணவர் வேலூரில் ஒரு பெட்ரோல் விற்பனை நிலையத்தில் பணியாற்றி வந்தார். என் சார்நிலை அதிகாரிக்குக் கணவர் மீது சந்தேகம். ஆனால் எந்த வழக்கையும் பல கோணத்தில் விசாரித்த பிறகே முடிவுக்கு வரவேண்டும் என்பது என் எண்ணம். இறந்த பெண்மணிக்கு



இரு பெண்குழந்தைகள். மூத்த பெண்ணுக்கு ஏழு வயதிருக்கும். அதன் அதிர்ச்சியின் இறுக்கத்தைத் தளர்த்தி இனிப்பு வகைகள் வாங்கிக் கொடுத்து மெல்ல மெல்ல அதன் பேச்சிலிருந்து உண்மைகளை வரவழைத்தேன். கதிர்வேலு என்கிற இளைஞன் அந்தப் பெண்மணியின் தோட்டத்தில் வேலை செய்திருக்கிறான். சரியாக வேலைக்கு வருவதில்லை. வந்தாலும் வேலை செய்வதில்லை என்பதால் தன் கணவனிடம் சொல்லி வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார் அந்தப் பெண்மணி. சம்பவம் நடந்த அன்று இரவு அவன் ஒரு நண்பனுடன் வந்து கதவைத் தட்டியிருக்கிறான். கணவனும் வீட்டிலில்லாத நேரம். அவனைப் பார்த்து அதிர்ச்சியுற்ற அந்தப் பெண்மணி ஒரு அரிவாளை எடுத்து உள்ளிருந்தபடியே அவன்மீது வீசி விரட்டியிருக்கிறாள். சற்று நேரம் கழித்து மீண்டும் வந்து கதவைத் தட்டியிருக்கிறான். கோபத்தோடு கதவைத் திறந்த அந்தப் பெண்மணியைக் கதிர்வேலுவின் நண்பன் கீழே தள்ள கதிர்வேலு அவளுடைய கழுத்தை அறுத்துக் கொலை செய்துவிட்டு, காது, மூக்கு ஆகிய உறுப்புகளை அறுத்து நகைகளையும் வீட்டிலிருந்த இரு பெட்டிகளையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான். நள்ளிரவில் பாதித் தூக்கத்தில் இதைப் பார்த்துப் பயந்து அதிர்ச்சியுற்றிருந்த சிறுமியை விசாரித்ததும் ஒவ்வொன்றாக நினைவுபடுத்திக் கூறியதால் எதிரியை மற்ற குற்றவாளிகளுடன் ஆம்பூர் மலையிலும் பெங்களூர் அருகே பரணாவாத்திலும் நானே நேரிடையாகச் சென்று கைது செய்து பிடித்து வந்தேன். வேலூர் வட்டாரத்திலும் பத்திரிகைகளிலும் பரபரப்பாகப் பேசப் பட்ட இக்கொலை வழக்கைப் புலன்விசாரணை செய்து குற்றவாளிகளைப் பிடித்தது என் முதல் விசாரணை மட்டுமல்ல; எனக்குப் பெயர் வாங்கித் தந்த விசாரணையும் கூட.

நீங்கள் செய்த முதல் அறுவை சிகிச்சை எது? அப்போது எப்படிப்பட்ட மனநிலையில் இருந்தீர்கள் என்று குழந்தை மகப்பேறு மருத்துவ நிபுணர் டாக்டர் திருமதி டி.எஸ். ருக்மணி அவர்களிடம் கேட்டபோது...

"அப்போது எனக்கு 23 வயது. 1963 என்று நினைக்கிறேன். மருத்துவப் படிப்பை முடித்த கையோடு அரசுப் பணியையும் ஏற்றுக் கொண்டேன். சித்தூர் மாவட்டத்திலுள்ள மதனபள்ளி என்கிற சிற்றூரில் குடும்பநல மருத்துவராகப் பணியேற்றிருந்தேன். கருத்தடை அறுவை சிகிச்சைக்காக ஒரு பெண்மணி வந்தார். நகரத்தைப் போல அதிகமான மருத்துவர்களோ, செவிலியர் துணையோ இல்லாத நேரம். தயக்கமாகத்தான் இருந்தது. இருந்தாலும் இது சாதாரண அறுவை சிகிச்சை என்பதால் நம்பிக்கையோடும் தெளிவான துணிவோடும் ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழைந்தேன். ஆபரேஷன் செய்கிற உடம்புப் பகுதி மட்டும் மரத்துப் போக மருந்து செலுத்தப்பட்டது. என்னைக் காட்டிலும் மிகுந்த நம்பிக்கையோடும் துணிவோடும் அந்த நோயாளி இருந்தார். பிரசவித்த மூன்றாவது நாள். மிகுந்த ஒத்துழைப்பு தந்தார். சினைப்பையிலிருந்து கருப்பைக்குச் சினை முட்டைகளைக் கொண்டு போகும் இரு குழாய்களில் ஒன்று கிடைத்தது. அடுத்தது மிக நீண்ட நேரம் போராடிய பிறகே கிடைத்தது. அதுவரை என் மனநிலை படபடப்



பாகவும் பரபரப்பாகவும் இருந்தது. வேர்த்து விறுவிறுத்துப் போனேன். வேண்டாத தெய்வங்களில்லை. சற்று நேரம் கழித்து இரண்டாவது குழாய் கிடைத்தது. வெற்றிகரமாக ஆபரேஷனை முடித்துவிட்டு வெளியே வந்தேன். இப்போது எல்லாமும் பழகிவிட்டது. எந்தத் தயக்கமும் பரபரப்பும் இல்லை என்றாலும்கூட அந்த முதல் ஆபரேஷன் நிகழ்ச்சி நினைவுக்கு வரும். மனத்திற்குள்ளேயே சிரித்துக் கொள்வேன்.

தொழிற்சங்கத் தலைவராகத் திகழும் ஒருவர் தனது உறுப்பினர் ஒருவருக்காகப் போராடிப் பெற்ற ஓர் உரிமை அல்லது பெரும் பயன் குறித்து நினைத்துக் கொண்டால் எப்படியிருக்கும். முதன் முதலில் தான் போராடிப் பெற்ற ஒரு வெற்றியை ஸ்டேட் பாங்க் அதிகாரிகள் சங்கப் பொதுச்

செயலாளர் திரு. எம்.பாலகிருஷ்ணன் நினைவு கூர்ந்தார்.

"அப்போது நான் எங்கள் தொழிற் சங்கத்தில் இணைச் செயலாளர்தான். 86 ஆம் ஆண்டு வாக்கில் பத்திரிகைகளில் பரபரப்பான செய்தியாய் வெளிவந்த சம்பவம். சென்னை தம்புச்செட்டி தெருவில் உள்ள ஒரு தனியார் வங்கி அதிகாரி ஒருவர் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது சில கொள்ளைக்காரர்கள் உள்ளே நுழைந்து மிரட்டியும் துப்பாக்கியால் சுட்டும் சில லட்சங்களைச் சுருட்டிக் கொண்டு போய்விட்டனர். எதிர்த்துப் போரிட்ட திரு. ஞானசம்பந்தம் என்ற அதிகாரி சுட்டுக் கொல்லப்படுகிறார். வங்கி நிர்வாகம் ஆழ்ந்த அனுதாபத்தோடு ரூ. 15,000/- மட்டும் அளிக்க முன்வந்தது. அலுவலகத்தில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டாலும் அலுவலக நேரம் அல்லாததால் அதிகமாய் இழப்பீடு தரத் தயாரில்லை என்பதாய்க் கூறப்பட்டது. அப்போது மத்திய நிதியமைச்சராக இருந்த திரு. வி.பி. சிங் அவர்களோடு ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அவரிடம் இது குறித்துப் பேசி முறையீடு செய்தேன். உடனடியாக



இதை விசாரித்து இன்னும் அதிகமாக உதவித் தொகை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார். தொடர்ந்து நிதியமைச்சகம், வங்கி நிர்வாகம், நீதிமன்றம் என்றெல்லாம் அலைந்து கடிதப் போராட்டம் நடத்தி இரண்டு லட்சம் வாங்கிக் கொடுத்தேன். ஒரு அதிகாரியின் உயிருக்கு விலைமதிப்பில்லை. அது எவ்வளவு தொகை கொடுத்தாலும் ஈடுசெய்ய முடியாத இழப்பு என்றாலும் ஒரு மரியாதைகூட இல்லாதவாறு பதினைந்தாயிரம் என்றால் எப்படி...? கூட்டநெரிசலில், பஸ்ஸில், ரயிலில் மரணமுறுகிற சாதாரணப் பிரஜைகளுக்குக்கூட மிக அதிகமான தொகை அனுமதிக்கப்படுகிறபோது அலுவலகத்தில் தன் கடமையைச் செய்து கொண்டிருந்த ஒருவருக்கு மரணம் சம்பவித்தால் மிக அதிகமாகச் செய்வது நம் பொறுப்பல்லவா! நாங்கள் பெற்றுத் தந்த மிகப்பெரிய மரியாதையாக இதைக் கருதுகிறோம்.

'மக்கள் பணியே மகேசன் பணி' என மகிழும் உயர்ந்த மனிதர்கள் பலருண்டு. சாதிச் சங்கமென்றாலும் சமூக நலன் கருதும் சிறந்த அமைப்புகளில் ஒன்றான விஸ்வகர்ம கைவினைஞர்கள் சங்கக் காப்பாளர் விஸ்வகுல பூஷணம் திரு. கே.பி. சுப்பையன் தன்னுடைய இனத்திற்காகப் போராடிய அனுபவத்தை நினைவு கூர்கிறார். முதல் வெற்றி முழுமையான அனுபவம் என்பதாய் இதைக் கருதுகிறார்.

சமூகம், இனம் தொடர்பான சங்கங்கள் தமது சமூகத்திற்கு அநீதி இழைக்கப்படுகிற போதும் அவமதிப்பு நேர்கிறபோதும் கொதித்தெழுந்து போராடுவது இயல்பு. அது அவசியமான உணர்வு என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. மிகச் சிறந்த எழுத்தாளர் ஒருவருக்கு திடுமென்று திண்ணையில் உட்கார்ந்து மட்டுமே பேசக்கூடிய சில கொச்சையான விஷயங்கள் பத்திரிகையில் எழுதி தான் மிகவும் பரபரப்பாகப் பேசப்படவேண்டும், புகழ் பெற வேண்டும் என்கிற கெட்ட நேரத்து ஆசை வருகிறது. பொதுவான இடத்தில் பேசவே கூசுகிற சமாசாரங்களை எழுதி வேறு எழுத்தை அசிங்கப்படுத்துகிறாரே என்கிற அருவருப்பு அவர்மீது எனக்குண்டு. திடீரென்று ஒரு இதழில் விஸ்வகர்ம சமுதாயத்திற்கு அகௌரவம் வருகிற வகையில் ஒரு அசிங்கமான கதையை எழுதியதும், இதையும் இவரையும் இனிமேல் அனுமதிக்கலாகாது என்று கொதித்தார். அந்த இதழின் ஆசிரியர்



வருத்தம் தெரிவிக்கும்வரை எங்கள் சங்கங்கள் போராடின. அமைதியாக ஆனால் அழுத்தமாக இருந்து சமூக மக்கள் அனைவரும் போராடி வென்றோம். பத்திரிகைகளை எரித்தோம். அரசுக்கு எழுதினோம். போஸ்டர்களில் கண்டனம் தெரிவித்தோம். கூட்டங்கள் போட்டுக் கண்டித்தோம். ஆசிரியர் வருத்தம் தெரிவித்தார். கட்டுரையும் நிறுத்தப்பட்டது. இது எங்களுக்கு மட்டும் கிடைத்த வெற்றியன்று. எந்த ஒரு தனிப்பட்ட சமூதாயத்தையும் எவரும் இப்படி அருவருப்பாய் அசிங்கமாய் சித்தரிக்கலாகாது என்பதற்கு ஒரு எச்சரிக்கை என்ற வகையில் எல்லோருக்குமே கிடைத்த வெற்றி. விஸ்வகர்ம சமூதாய நலனில் என்னை ஈடுபடுத்திக் கொள்வதில் . கிடைக்கிற மகிழ்ச்சி, மனநிம்மதி வேறு எதிலும் எனக்கில்லை.

மிகச்சிறந்த வழக்கறிஞராகவும் தமிழ்நாடு பாண்டிச்சேரி வழக்கறிஞர்கள் சம்மேளனத்தின் தலைவராகவும் விளங்குகிற வழக்கறிஞர் திரு. ஆர். காந்தி அவர்கள் எத்தனையோ வழக்குகளை ஏற்று நடத்தியிருக்கிறார். வெற்றிமீது வெற்றி வந்து சேர்கிற அனுபவசாலி வழக்கறிஞரான தனக்கு ஏற்பட்ட முதல் வழக்கு அனுபவத்தை இவ்வாறு நினைவு கூர்ந்தார்.

"1964 ஆம் ஆண்டு வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்ட மறுநாள் நீதியரசர் திரு. கைலாசம் அவர்களுடைய கோர்ட்டில் நின்று கொண்டிருந்தேன். கொலை வழக்கு ஒன்றில் குற்றவாளிக்கு 10 ஆண்டு சிறை தண்டனை வழங்கப்படுகிறது. யாராவது இளம் வக்கீல் இவருக்காக வாதாடலாமே என்று நீதியரசர் வேண்டுகிறார். வழக்கு மன்றத்தைப் பார்க்க வந்த என்னை என் நண்பர்கள் உசுப்பி முன்னே தள்ளிவிட்டார்கள். குளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த ஒருவனைக் காப்பாற்ற கரையில் நின்று கொண்டிருந்த ஒரு பெரியவரைக் கூட்டம் தள்ளிவிட்ட கதையாக நான் தள்ளப்பட்டேன். இருந்தாலும் நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டேன். வழக்குக்கான கோப்புகளை வாங்கிக் கொண்டு ஒரு வாரம் அவகாசம் வாங்கிக் கொண்டேன். என்னுடைய சீனியர் வழக்கறிஞர் திரு. வி. இராமசாமி (தற்போது உயர்நீதி மன்ற நீதிபதி) அவர்களிடமும் நேரடி சீனியர் திரு. கே. வேங்கடசாமி (தற்போது உயர்நீதி மன்ற நீதிபதி) அவர்களிடமும் கலந்து பல மணி நேரம் வழக்கு குறித்த விவரங்களைப் படித்து வாதாடினேன். வழக்கு நீதியரசர் திரு. பி. இராமகிருஷ்ணன் அவர்கள் கோர்ட்டுக்கு வந்தது. எனக்கோ உதறல். ஆனால் நீதிபதி என்னை உற்சாகமூட்டி வாழ்த்தினார்.



ஏறத்தாழ இரண்டு மணிநேரம் வாதாடினேன். இரண்டு நாள் கழித்து தீர்ப்பு. அதுவரை என் மனத்துக்குள் நடந்த போராட்டம் சொல்லி மாளாது. தவித்துக் கொண்டிருந்தேன். அந்த தவிப்பே எனக்கொரு தண்டனையாய் இருந்தது. தீர்ப்பு நாளில் எதிரிக்கு தண்டனையைக் குறைத்து தீர்ப்பு வழங்கிய நீதிபதி நீதி மன்றத்துடன் ஒத்துழைத்தமைக்கும் அமைதியாக, நிதானமாக அழகாக வாதிட்டமைக்கும் பாராட்டி நன்றிகூறியபோது எனக்குப் பெருமை பிடிபடவில்லை. அடைந்த மகிழ்ச்சி இருமடங்காகியது. முதல் வழக்கே இலவசமாய் வாதாடிய வழக்கு. வரவு இல்லையென்றாலும் இத்தகைய பயன்கருதாத கைம்மாறு களுக்கு நீதிமன்றம் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கிற மரபில் நான் மகிழ்ந்து பெருமையுற்றேன்.

"மருத்துவம் படித்ததைவிட மனிதர்களைப் படித்த அனுபவம்தான் என் முதல் அனுபவம். மறக்க முடியாத அனுபவம். காசநோய், புற்றுநோய், தொழுநோய் இவை மட்டும்தான் மனிதனைப் பிடித்திருக்கிற நோயன்று. மனிதாபிமான மின்மைதான் மிகப்பெரிய நோய்" என்கிற புற்றுநோய் நிபுணர் புகழ்வாய்ந்த மருத்துவர் டாக்டர் விஜயசாரதி அவர்கள் தன் முதல் நோயாளியைப் பற்றிக் கூறுகிறார்.

"அப்போது நான் சென்னை பொது மருத்துவமனையில் வேலைக்குச் சேர்ந்திருந்தேன். ஒரு மாதத்திற்கு முன்பே அனுமதிக்கப்பட வேண்டிய நோயாளி ஒருவரை மிகத் தாமதமாக அழைத்து வந்திருந்தார்கள். பதினெட்டு வயது இளைஞன். அவனுக்கு லிம்போமா (கரளை) என்கிற புற்றுநோய் உடலெங்கும் கரளைக் கட்டிகள். முற்றிய நிலை. ஒரு மாதத்திற்கு முன்பு மருத்துவர்கள் சொன்னபோதே சேர்ந்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம். ஏழை விவசாயக் குடும்பம். நோயாளியைச் சேர்த்துவிட்டு ஊருக்குப் போய்விட்டார்கள். அந்த இளைஞன் என்னிடம் வேண்டிக் கொண்டான். "டாக்டர் எனக்கு உயிர்வாழ ஆசையில்லை. இனி அது சாத்தியமும் இல்லை. ஆனால் குறைந்தது பத்து நாட்களாவது நான் வாழவேண்டும். காப்பாற்றுங்கள்" என்று அழுதான். விசாரித்ததில் தெரிந்தது அவனுடைய மூத்த அண்ணனுக்கு பெரிய இடத்தில் மிகுந்த சீர் செனத்திகளோடு திருமணம் நிச்சயித்திருந்தார்கள். வீட்டில் ஒரு மரணம் நிகழ்ந்துவிட்டால் அபசகுனமாகும். திருமணம் நின்று போய்விடும். அண்ணனின் வாழ்க்கை பாழாகிவிடக்கூடாது என்பது அவனது ஆசையின் உள்ளார்த்தமாய் இருந்தது. ஆனால் விதி வலியதாயிருந்தது. வந்த இரண்டாவது நாளே விதி முடிந்தது. சாகப் போகிற நேரத்திலும் உடனிருந்த ஒருவரிடம் எனக்கு நன்றிகூறச் சொன்னதோடு இறந்து போன விவரத்தை அண்ணனுடைய திருமணம் முடிந்த பிறகு ஊருக்குச் சொன்னால் போதும் என்று கூறி அப்போதும் அண்ணனின் மண விழாவையே கண்ணில் நிறுத்திக் கண்டிருக்கிறான் அந்த இளைஞன். ஆனாலும் வீட்டுக்குத் தெரிவிப்பது கடமையாயிற்றே என்று என் சொந்தப் பொறுப்பில் ஒருவரை வீட்டுக்கு அனுப்பித் தகவல் தெரிவித்தேன்.



அவருடைய தந்தையார் மூத்த மகனின் திருமண உற்சாகத்தில் யாருக்கும் தகவல் தெரிவிக்காமலேயே சென்னையில் சவ அடக்கம் செய்யக் கூறிப் பணம் கொடுத்து அனுப்பி விட்டார். உடலில் நோயைச் சுமந்து கொண்டு சுகாதாரமான மனதோடு ஒருவன்; நோய் நொடியில்லாமல் ஆனால் ஆயிரம் நோய் நெஞ்சில் வைத்துக் கொண்டு சிலர். என் முதல் அனுபவம் மனிதாபிமானம் இல்லாத எவரும் நோயாளிகளே என்பதை உணர்த்திற்று. இன்னும் அந்த அதிர்ஷ்டமில்லாத இளைஞனை நினைத்தால் கண்களில் நீர் துளிர்த்து விடுகிறது. ○○

காற்றை வணங்கிடுவோம்


சக்திக்கனல்

காற்றை வணங்கிடுவோம்! - புதுக்
காற்றை வணங்கிடுவோம்!
ஊற்றுச் சுரக்கும் உயிர்க்கு மருந்தென
உள்ளம் இயங்க உயிர் இழை நூற்றிடும்

செங்கதிர் வாழ்க என்போம்! - வெய்யில்
தேனில் நனைந்திடுவோம்!
எம்மில் உயிர்ச்சுட ரேற்றி அமிழ்தென
எண்ணற்ற இன்பங்கள் தம்மைக் கொணர்ந்திடும்

மண்ணை வணங்கிடுவோம் - மழையெறும்
வள்ளலை வாழ்த்திடுவோம்!
கண்ணுக் கினிய மலர்கள் உணவு
கனிகள் வழங்கி இனிதுயிர் காத்திடும்

மேகத்தைப் போற்றிடுவோம் - இடியொடு
மின்னலை ஏற்றிடுவோம் - எம்
தாகத்தைப் போக்க மழை அருவி தந்து
தண்ணொளிப் பச்சைப்பட் டாடைகள் நெய்திடும்



ஒரு மெழுகுவத்தி அணைவதற்குள்

கவியரசு வைரமுத்து

இந்த
மெழுகுவத்தி அணைவதற்குள்
சொல்லிவிடு பெண்ணே

நீயும் என்னை
நேசிக்கிறாயா?

இல்லை இன்னும்
யோசிக்கிறாயா?
இந்த
மெழுகுவத்தி அழுகிறது

ஆனால்
ஒருபோதும் சத்தமிட்டு
ஒப்பாரி வைத்ததில்லை

என்
மெல்லிய காதலும்
மெழுகுவத்திதான்
அதில்
நெருப்பாய் இருப்பவள்
நீமட்டும்தான்

என்
ஒளியும் நீயே

என்
கண்ணீரும் நீயே

நீயும் என்னை
நேசிக்கிறாயா?

இந்த
மெழுகுவத்தி அணைவதற்குள்
சொல்லிவிடு பெண்ணே!

என்னை நானே
எரித்துக் கொள்கிறேன்

எரியும் போதே
சிரித்துக் கொள்கிறேன்

உன்னை நினைத்து
உருகிக் கொள்கிறேன்

உருகிக் கொண்டே
உன்னைக் கேட்கிறேன்

இந்த மெழுகுவத்தி அணைவதற்குள்
சொல்லிவிடு பெண்ணே

நீயும் என்னை
நேசிக்கிறாயா

இல்லை இன்னும்
யோசிக்கிறாயா?

காதல் என்பது
நிர்ப்பந்தமல்ல

உடல்கள் சேரும்
ஒப்பந்தமல்ல

அது
உயிரின் துடிப்பில்
பிறப்பதில்லையா

உனக்கும் என்போல்
துடிக்கவில்லையா?

இந்த
மெழுகுவத்தி அணைவதற்குள்
சொல்லிவிடு பெண்ணே!

நல்வார்த்தை சொன்னால்
நானிருந்து வாழ்வேன்

இல்லை
மெழுகுவத்தி அணைவதற்குள்
நான் அணைந்து போவேன்.



பாரதி சுராஜ்



நல்ல காலம் வரவேண்டும். நாட்டிலுள்ள தீமையெல்லாம், வீட்டிலுள்ள வறுமையெல்லாம் நீங்க வேண்டும். இதுதான் எல்லோருடைய விருப்பமும். இதை நாம் சொல்லாமல் பெரியவர் ஒருவர் சொன்னால் - அதிலும் மகாகவி ஒருவர் சொன்னால் அதற்கு மதிப்பு அதிகம்தானே!

மகாகவி பாரதியார் மனம் திறந்து பாடினார் "நல்ல காலம் வருகுது" என்று!

கவிஞர்களுக்குப் பாடுவதற்கு இந்தப் பொருள் தான் என்று இல்லை. எந்தச் சூழலிலும் அவர்களுக்குக் கவிதை பிறக்கும்.

புதுவையில், விடியற்காலையில் 'குடுகுடுப்பைக் காரர்' ஒருவரை அவர் பார்க்கிறார். 'எல்லோருக்கும் நல்ல காலம் வருகுது' 'நல்ல காலம் வருகுது' என்று சொல்லியே தன் காலத்தைத் தள்ளும் அவனது வாக்கிலிருந்தே கவிதை புறப்படுகிறது.

"குடு குடு. குடு குடு. குடு. குடுகுடு"

"நல்ல காலம் வருகுது! நல்ல காலம் வருகுது"

நல்ல காலம் வருவதென்றால் அதற்கான அறிகுறிகள் என்ன? எப்படி அது வரும்

"சாதிகள் சேருது. சண்டைகள் தொலையுது"

இந்த நல்ல காலம் வர யாரிடம் வரம் கேட்கிறார்!

"சொல்லடி, சொல்லடி. சக்தி மாகாளி

வேதபுரத்தாருக்கு நல்ல குறி சொல்லு"

வேதபுரம் - புதுவை மட்டுமல்ல - நம் தமிழகம் - பாரதம் முழுதும்தான்!

"தரித்திரம் போகுது; செல்வம் வருகுது

படிப்பு வளருது; பாவம் தொலையுது"

படிக்காமலிருப்பதே பாவம்தானே!

படிக்கத் தெரியாத பாமர மக்களை கொஞ்சம் படித்தவர்கள், அதிகம் படித்தவர்கள், ஏமாற்றி வாழும் அவலத்தைக் கவிஞர் பார்க்கிறார். நெஞ்சு பொறுக்காமல் பாடுகிறார்.

"படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்

போவான் போவான், ஐயோ! வென்று போவான்"

வியாபாரம் பெருக வேண்டும்.

"தொழில் பெருகுது" - *அதனால் வாழ்வது தொழிலாளியாக இருக்கவேண்டும்.* "தொழிலாளி வாழ்வான்".

"சாத்திரம் வளருது, சூத்திரம் தெரியுது

யந்திரம் பெருகுது; தந்திரம் வளருது

மந்திரமெல்லாம் வளருது! வளருது"

பாரதி, எவரையும் - அவர்கள் தான்பிறந்த இனத்தவராயினும் விட்டு வைக்கவில்லை. வயிற்றுப் பிழைப்புக்காகப் பண்டாரங்களாய்த் திரியும் சாமியார்களையும் சேர்த்தே பாடுகிறார். சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தூங்கி, கோழை வாழ்வு வாழும் அவர்களையும் சாடுகிறார்,

"சாமியார்க்கெல்லாம் தைரியம் வளருது

தொப்பை சுருங்குது? சுறுசுறுப்பு விளையுது"

குறும்பு இழையோடும் வரிகள்.

'அச்சம் தவிர்' என்று புதிய ஆத்திசூடி பாடியவரல்லவா?

"பயம் தொலையுது; பாவம் தொலையுது"

"சாத்திரம் வளருது' 'சாதி குறையுது"

சாதி குறையுது - *கவனிக்க வேண்டும். நான்கு ஜாதிகளை நாலாயிரமாக்கி, சாதிக்குச் சாதி சங்கம் அமைத்து சாதிகளை வளர்த்துக் கொண்டிருக்கும் சமுதாயத்தில் சாதிகள் குறையவாவது வேண்டாமா? சாதிவெறி தணிய வேண்டாமா?*

"நேத்திரம் திறக்குது! நியாயம் தெரியுது"

எதற்கெடுத்தாலும் பழைமை, பழைமையென்று பாவனை பேசும் சமுதாயம் அல்லவா?

"பழைய பயித்தியம் படீரென்று தெளியுது

வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது"


சக்தி பகவதியை நல்ல குறி சொல்ல வேண்டுகிறார் கவிஞர்.

"தர்மம் பெருகுது! தர்மம் பெருகுது!"

சாதிகள் சேர்ந்து, சண்டைகள் தொலைந்து, தரித்திரம் நீங்கி, செல்வம் பெருகி, படிப்பு வளர்ந்து, பாவம் அழிந்து, படித்தவன் சூதும் பாவமும் செய்யாமல், வியாபாரம் பெருகி, தொழில் வளம் நிறைந்து, தொழிலாளி மகிழ்ந்து, சாத்திரம் வளர்ந்து, சூத்திரம் தெரிந்து, யந்திரத் தொழில்கள் பெருகி, உண்மையான மந்திரங்கள் ஓதி, சோம்பல் சாமியார்கள் தொகை குறைந்து, பயமும் பாவமும் தொலைந்து, பழைய பயித்தியக்காரத்தனமான வழக்கங்கள் ஒழிந்து வீரம் வந்து மேன்மை கிடைத்து, தர்மம் பெருகும் "நல்ல காலம் வருகுது நல்ல காலம் வருகுது" *என்று கவிஞர் குரல் கொடுத்தார். இந்தத் தீபாவளி நன்னாளில் அந்த நல்ல காலம் வருக வென்று நாமும் வாழ்த்துவோம். வேண்டுவோம்.* ०ಿ

வண்ணப்படங்கள் : யோகா

கே. பாலசந்தர்



பாரதிராஜா



மணிரத்னம்



திரையுலக மும்மணிகள்

திரைப்படக் காவியம் படைப்பதில் இன்று மூன்று இயக்குநர்கள் முன்னணியில் இருக்கிறார்கள்.

திரைப்படப் பந்தய மைதானத்தில் இரண்டு குதிரைகள் சரி சமமாக ஓடிக்கொண்டிருந்தன. பின்னால் ஒரு குதிரை விரைந்து வருவதை மற்ற இரு குதிரைகளும் கண்டன. அவற்றை முந்திவிடுமோ என்று மற்ற இரண்டும் நினைத்ததுண்டு. ஆனால் அந்தக் குதிரை மற்ற இரண்டுடன் சரி சமமாக ஓடிக்கொண்டிருக்கிறது. மூன்றும் நல்ல திறமைசாலிக் குதிரைகள். ஜாதிக் குதிரைகள்.

மேலே குறிப்பிட்ட இந்தக் கருத்தைக் கூறியவர் இயக்குநர் திரு. பாரதிராஜா.

தமிழ் ரசிகப் பெருமக்களுக்கு நல்ல திரைக்காவியங்களை அளிக்கும் மூன்று இயக்குநர்களாக திரு. பாலசந்தர், திரு. பாரதி ராஜா, திரு. மணிரத்னம் – வண்ணப் படங்களைத் தீபாவளிமலரில் வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த ஆண்டு மூன்று இயக்குநர் திலகங்களின் திரைப்படங்கள் ரசிகர்களால் பெரிதும் பாராட்டப் பட்டன.







உச்சி முதல் பாதம் வரை



● ராஜஸ்தானிய உடையிலும், பிளாக் மெட்டல் (காரீயம்) White metal (வெள்ளீயம்) ஆபரணங்கள் அணிந்து காட்சி தரும் கல்லூரி மாணவிகள் நாராயணி, மகேஸ்வரி, புவனேஸ்வரி, மாதங்கி.

தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம், காஞ்சி காமாட்சி ஆலயம், கும்பகோணம் ராமஸ்வாமி ஆலயம் ஆகிய ஆலயங்களில் உள்ள தெய்வத் திருஉருவச்சிலைகளில் அன்னையை அலங்கரிக்கும் தோற்றத்தை மிக அற்புதமாக, இயல்பாக, கல்லைக் குடைந்து செதுக்கியுள்ளார்கள்.

அந்தக் கல்லில் தோன்றும் ஆபரணங்களின் பிரதிபலிப்பாகவே தங்கம் வெள்ளி முதலிய உலோகங்களைக் கொண்டும், சிவப்பு (கெம்பு) பச்சை, பலிச்ச வைரம் முதலிய ரத்தினங்களைக் கொண்டும் இந்த ஆபரணங்களைச் செய்கிறார்கள். இவற்றில் பிரதானமான இடத்தைப் பெறுவது கெம்பு என அழைக்கப்படும் சிவப்பு ரத்தினங்களே. நவ கோள்களால் ஏற்படும் பாதிப்புகளைப் போக்கவும், அருள் பெறவும் நவரத்தினங்களைக் கொண்டும் ஆபரணங்கள் செய்கிறார்கள். இத்தகைய வேலைக்குக் "குந்தன் வேலை" என்று பெயர். கேரளாவிற்கும், திருநெல்வேலிக்கும் இடையேயுள்ள "வடசேரி" என்ற கிராமத்திலிருந்து இந்த ஆபரணங்கள் செய்யப்பட்டு மற்ற மாநிலங்களுக்கும், அண்டை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆந்திராவில் ஹைதராபாத்திலும், ராஜஸ்தானத்திலும் குந்தன் வேலை பிரசித்தம்.



● பஞ்சாபியப் பாணி உடையில் மீனாகாரி நகைகளுடன் மிளிர்கிறார் மிருதுளா விஜயராகவன்.

பெண்களின் நெற்றி முகட்டிலிருந்து உச்சி முகடு வரை செல்லும் நெற்றிச்சுட்டி முகத்திற்கு வனப்பு சேர்த்து பார்ப்பவரை வசீகரிக்கிறது. தனி பலிச்ச வைரங்களாலும், சிவப்பு, பச்சை முதலிய ரத்தினங்கள் கலந்தும் நெற்றிச்சுட்டி செய்யப்படுகின்றன. முகப்பு வைத்துத் தங்கச் செயின் கோத்துப் போடும் சுட்டிகளுக்கு ஒத்தைச்சுட்டி என்று கூறுவர்.

அடுத்து வருவது நெற்றிச்சுட்டியை நாயகமாக வைத்து இடது வலது புறமாக விளங்கும் சந்திரப் பிரபை, சூரியப் பிரபைகளாகும் இவ்விரண்டு கோள்களால் (சந்திரன், சூரியன்) பெருமையும், புகழும் கிடைக்கும் என்ற கருத்தை வலியுறுத்த இதை அணிவிக்கிறார்கள்.

காதுமாட்டில் : பச்சை, சிவப்பு, பலிச்ச வைரம் முதலிய ரத்தினங்களைக் கொண்டும், முத்து, பவளம் முதலிய ரத்தினங்களைக் கொண்டும் காது மாட்டில்கள் செய்யப்படுகின்றன. காதுகளில் அகலமான மாட்டில்களை அணிவதால் செவிப்பறை பாதுகாக்கப்படுகிறது. திடீரென்று ஏற்படும் சத்தத்தால் ஏற்படும் ஒலி அலைகள் காதுகளில் உள்ள செவிப்பறையில் படாதவாறு தவிர்க்கப்படுகின்றன.

கர்ண வேதனம் : காதுகளில் அணியும் அணிகலன்களுக்காகக் "காது குத்துவதால்" ஞாபக சக்தியும், புத்திசாலித்தனமும் அதி





● கெம்பு, பச்சை, பலிச்சவைரங்கள் இழைத்த ஒட்டியாணம், கெம்பு பலிச்ச வைரங்கள் இழைத்த ஜடையலங்காரம் அணிந்து ஒயிலாகக் காட்சி தருகிறார் லாவண்யா.

● *Temple Jewellery* என அழைக்கப்படும் நகைகளால் தலைசாமான், சந்திரப் பிரபை, சூரியப் பிரபை, காதுமாட்டல் அணிந்து அழகாகக் காட்சி தருகிறார் கிருத்திகா மீனாட்சி.

ஆபரணங்களின் அணிவகுப்பைப் பற்றி தகவல் தந்து உதவியவர்கள் : பத்மஸ்ரீ சுதாராணி ரகுபதி திருமதி ஆஷா விஜயராகவன்

● இளநங்கையரின் இடுப்பழகை எடுத்துக்காட்ட வருவது இடுப்பு செயின். அணிந்திருப்பவர் ராதா.

● கைகளில் வங்கி அணிந்து களையோடு காட்சி தரும் பிரியா ராகவன்.





கரிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள்.

மூக்குத்தி, நத்து, புல்லக்கு முதலிய ஆபரணங்களை அணிவதால் அழகு மேலும் சேருகிறது.

மாங்காய் மாலை : சிவப்பு, பச்சை, பலிச்ச வைரம் இழைத்து, மாங்காய் போன்ற தோற்றத்தைக் கொண்டதால் மாங்காய் மாலை என பெயர் பெற்றது. பொதுவாகத் தங்கம் மேனியில் உராய்வதால் தேகம் காந்தி பெறுவதுடன் வனப்பும் அதிகரிப்பதால் ஆண்களும் தங்கத்தில் சங்கிலிகளை அணிய ஆரம்பித்தனர். அக்கால அரசர்களும் பதக்கங்கள், முகப்புகள் வைத்த பெரிய பெரிய ரத்தின ஹாரங்கள் முதலியவற்றை அணிந்து வந்தனர்.

ஒட்டியாணம் : ஒட்டியாணம் அணிவதை அந்தக் காலத்தில் ஒரு வழக்கமாகவே கொண்டிருந்தனர். ஒட்டியாணம் அணிவதால் முதுகில் உள்ள தண்டு வடம் உறுதியாக இருக்கவும் முதுகு கூன் விழாமல் நேராக இருக்கவும் உதவுவதோடு சிக்கென்று இடுப்பைப் பிடித்துக் கொள்வதால் சுவாசம் சீராக வந்து நுரையீரல் ரத்த ஓட்டம் சீராக இருக்க உதவுகிறது.

ராக்கொடி : ராக்கொடி முழுவதும் கெம்பு, பச்சை பலிச்ச வைரம் பதிக்கப்பட்டுவரும். தற்பொழுது அமெரிக்க டைமன்ட்கள் இழைத்தும் ராக்கொடிகள் தயாரிக்கிறார்கள். ராக்கொடியால் தலையில் உள்ள மெடுலா (முகுளம்) பகுதி பாதுகாக்கப்படுவதாகவும், மைக்ரேன் என்ற தலைவலி தடுக்கப்படுவதாகவும் அறிவியல் அறிஞர்கள் ஆராய்ச்சி பூர்வமாக அறிவித்துள்ளார்கள்.

வங்கி : சிவப்பு என அழைக்கப்படும் கெம்பு, பச்சை, பலிச்ச வைரம் என ரத்தினங்கள் இழைக்கப்பட்டு வங்கி தயாரிக்கப்படுகிறது. உறுதியான கம்பிகளை வளைத்து அதில் தங்கக் கவரிங் கொடுத்தும் வங்கி தயாரிக்கிறார்கள். இந்த மாதிரி நகைகளுக்கு வடசேரி பிரசித்தி பெற்றது.

வளையல்கள் : பச்சை, சிவப்பு, பலிச்ச வைரங்கள் இழைத்ததாகவோ, தனியான கெம்புகள் பதிக்கப்பட்டதுடன், தனியான அழகு பச்சைக் கற்கள் இழைத்ததாகவும், நவரத்தினங்கள் இழைத்ததாகவும் ரத்தினங்கள் விளங்கி வருகின்றன. முத்து, பவளம் இழைத்தும் வளையல்கள் விளங்குகின்றன.

மீனாகாரி நகைகள் : மீனாகாரி நகைகள் ராஜஸ்தானில் உள்ள பீகானீரில் செய்யப்படுகின்றன. இவ்வகையான நகைகளில் பட்டை தீட்டாத வைரங்கள் இழைத்தும், செயற்கைக் கற்கள் இழைத்தும் செய்யப்படுகின்றன.

ராஜஸ்தானில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் இத்தகைய நகைகளைக் காணலாம். இந்த நகைகளின் மதிப்பு ஆயிரம் ரூபாய் முதல் சில லட்சங்கள் வரையில் இருக்கும். இந்த நகைகளில் நல் முத்துக்களை அழகுக்கு அழகு சேர்க்கச் சேர்க்கிறார்கள். மீனாகாரி நகை சுமார் 2000 வருடங்களாகப் புழக்கத்தில் உள்ளன.

தங்கத்தினால் பூவேலை செய்யப்பட்டு வைரங்கள் இழைக்கப்பட்டு பதக்கங்களின் பின்புறம் எனாமல் வேலைப்பாட்டில் புராணங்களைப் பற்றிய சித்திரங்கள் வரைவதுண்டு. அதில் ரோஸ் கலரும், மயில் கழுத்துப் பச்சையும் மிகவும் பிரசித்தம். நெக்லெஸ்களைத் தவிர மோதிரம், தோடுகள், பதக்கம், மாலைகள் சாவிக் கொத்து, ஹிப் செயின் போன்ற விதவிதமான நகைகளும் மீனாகாரி வகைகளில் செய்யப்படுகின்றன.

பிளாக் மெட்டல் என அழைக்கப்படும் காரீயம் உலோகத்தால் செய்யப்படும் ஆபரணங்கள் தற்காலக் கல்லூரி மாணவிகளின் மனத்தை விட்டு அகலாதவையாக விளங்கி வருகின்றன. ஒரிசாவிலுள்ள புவனேஸ்வர், நாக்பூர் அருகேயுள்ள மிட்டாலியிலும் தில்லிக்கு அருகேயுள்ள நிஜாமாபாத்திலும் இவற்றை மிக அருமையாக, வேகமாக உற்பத்தி செய்கிறார்கள். காதணிகள், கைவளைகள், மோதிரங்கள், நெக்லெஸ்கள், செயின்கள் ஆகிய வகைகளும் பிரேஸ்லெட்களும் தயாரிக்கப்படுகின்றன.

மோதிரங்கள் : விரல்களுக்கு அழகு சேர்ப்பது மட்டுமின்றி, கைகளுக்கும் பொலிவைத் தருகின்றன. மிக விலை மதிப்பு பெற்ற வைரம், நவரத்தினம் முதலியவை பதிக்கப்பட்டும் பிளாட்டினம், தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் கொண்டும் செய்யப்படுகின்றன.


கொலுசு : பாதத்திற்கு அழகு சேர்க்கவும் கணுக்காலுக்கு உறுதி சேர்க்கவும் கொலுசு அணிகிறார்கள். ராஜ வம்சத்தினர் மட்டும் தங்கத்தினால் செய்யப்பட்ட கொலுசு அணிவார்கள். வெள்ளியில் கிரிஸ்டல் எனப்படும் செயற்கை மணிகள் இழைத்தும், எனாமல் வேலை செய்யப்பட்ட கொலுசுகளும் தற்காலத்தில் பெண்களால் விரும்பி அணியப்படுகின்றன.

பேட்டி - தங்கம்

வண்ணப்படங்கள்:
உத்ரா




● பிளாட்டினம், வைரம், தங்க மோதிரங்கள் விரல்களில் அணிந்து கவர்ச்சியாகக் காட்சி தரும் சிந்தாரி.



அருள் விழியால் ஆசி நல்கும் குரு

போட்டோ : யோகா



கருணைபொழியும் காமகோடிக் குரு

போட்டோ : யோகா

சொர்ணலட்சுமியின் தவறுகள்



ராத்திரிச் சாப்பாடு ஆயிற்று. பச்சைக்கற்பூரம் மணக்கிற பாக்குச் சம்புடத்தை அருணகிரிக்கு வசதியாக நகர்த்தி வைத்தாள் வடிவு. ஒவ்வொரு வெற்றிலையாய் எடுத்துக் கழுவி ஈரம் போகச் சின்ன டவலால் துடைத்து, புடைத்துக் கொண்டிருக்கிற நரம்புகளையும், காம்பு நுனியையும் கிள்ளி வாசனைச் சுண்ணாம்பு தடவி மடித்து நீட்டினாள்.

"சொர்ணத்துகிட்டே இருந்து லெட்டர் வந்தாப்பல இருந்ததே. படிச்சாப்பலயா..." என்றாள்.

இந்த வெற்றிலை உபசாரமெல்லாம் இதற்குத்தானா என்று

திலகவதி

எண்ணிக் கொண்டான் அருணகிரி. வாய் நிறைய இருந்த வெற்றிலைச் சாறு வழிந்துவிடாமல் மோவாயை உயர்த்திக்கொண்டு "ம்... ம்... படிச்சேன்" என்றான். சுவாரசியப்படாத அந்தக் கடிதத்தின் பேச்சு இப்போது ஏன் என்று அவன் சலித்துக் கொண்டதைக் காட்டின நெற்றி மையத்தில் படிந்த அவன் விரல்கள்.

"நல்லாயிருக்கா இது உங்களுக்கு? சொந்தத் தங்கச்சிக்காரி மேல அக்கறை வேணாமா? வூட்ல பொறந்த பொண்ணு கண் கலங்குனா நாம்ப நல்லா இருப்பமா... அவமேலதான் என்ன தப்பு? ஒவ்வொருத்தரு மாதிரி காதல் அது இதுன்னு போயி அவளாவா புருஷனைத் தேடிக்கிட்டா? நீங்கள்ளாம் சேர்ந்து பார்த்துப் பண்ணி வச்ச கல்யாணம் தானே...?"

அருணகிரி இரண்டு உள்ளங் கைகளாலும் காதுகளைப் பொத்திக்கொண்டான். அப்படியும் வடிவின் வார்த்தைகள் கேட்கத்தான் செய்தன.

"சொர்ணம் பாவம். அதிர்ஷ்டக் கட்டை. பெரியவங்களுக்காகப் பாக்காட்டாலும் புள்ளைங்களுக்காகவாவது பாக்கணும் இல்லியா?"

அருணகிரி வெற்றிலைச் சாற்றை மென்று விழுங்கினான்.

"யாரைச் சொன்னே அதிர்ஷ்டக் கட்டைன்னு? சொர்ணத்தையா? உன்னை மாதிரி அண்ணியைப் படைச்சிருக்கிற அதிர்ஷ்டம் காணாதா? விடு. என்னைச் சொல்லு. காலையிலே எழுந்து லொங்கு லொங்குன்னு ஓடி ரெண்டு பஸ் புடிச்சி ஆபீஸ் போய் தொண்ணூத்தியொம்பது வேலையையும் முடிச்சிகிட்டு எப்படா வீடு வந்து சேருவோம், எப்படா இந்தக் கட்டையைச் சாய்ப்போம்னு வந்தா இங்க சொர்ணத்தோட சோகத்தைப் பத்தின உன் பிரசங்கத்தைக் கேக்க வேண்டியிருக்குது பாரு..." அருணகிரி போர்வைகளை எடுத்து உதறினான்.

"அதுக்கில்லீங்க. சொர்ணத்தைப் பத்தித்தான் தெரியுமே அவளே ரோஷக்காரி. அவளால முடியாமத்தானே நமக்கு எழுதியிருக்கா...?"

"அதனால..."

"அதனால, சிரமத்தைப் பார்க்காம ரெண்டு நாளு லீவாவது போட்டு ஆலப்புதூர் போய் அவளைப் பாத்துட்டு வந்துடுங்க..."

"ஏதேது, சண்டை போட்டுக்கற அண்ணியும் நாத்தனாரும் இருக்கற வீட்டு ஆம்பளைங்களவிட நாத்தனார் மேல பிரியமா இருக்கற அண்ணி இருக்கற வீட்டு ஆம்பள பாடு திண்டாட்டமாயிருக்கும்போல இருக்கே. கைகேயி தசரதன்கிட்டே வரங்கேட்டாப்பலல்ல இருக்குது. பேச்சுக் குடுத்தாத்தான் தூங்க விடுவே போலிருக்கே... தேவியின் உத்தரவுப் பிரகாரமே போய் வர்றேன் தாயே, தூங்கவிடும்மா" அருணகிரி சிரித்தான்.

மேலுக்கு என்னவோ வேடிக்கையாகப் பேசிவிட்டானே தவிர அப்படியொன்றும் சுலபமாக எடுத்துக்கொள்ள முடியாத சங்கட நிலையைத்தான் சொர்ணத்தின் கடிதம் ஏற்படுத்தியிருந்தது. ஏதோ நிலபுலன்கள், வீடு என்று பூர்வீகமான சொத்தும் விவசாயமும் இருக்கிறதென்ற துணிச்சலில் தான் அவளை செல்லப்பாவுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார்கள். எதிர்ப்பைக் கண்டால் ஓட்டுக்குள் ஒடுங்கும் ஆமை போலச் சொத்துகள் ஒவ்வொன்றும் கண்ணுக்குத் தெரியாமல் போய் ஒழிந்தன. தாயாதிகள் நடத்திய நீண்டகால நிலுவையில் இருந்த வழக்கில் செல்லப்பா வீட்டாருக்கு எதிராகத் தீர்ப்பானதில் நிலமெல்லாம் போனது. அந்தக் கேசை நடத்த வாங்கிய கடனை அடைக்கத் தோப்பையும் வீட்டையும் விற்கவேண்டி வந்தது. இதனால் ஏற்பட்ட மனக்கஷ்டங்களை விரட்ட செல்லப்பா குடிப்பதற்கு வேறு பழகிக் கொண்டிருந்தான்.

அத்தனை விவரங்களையும் ஒரு கோடி காட்டி சொர்ணம் எழுதிய கடிதத்தைக் கண்டதும் அருணகிரியும் வடிவும் ஆலப்புதூர் போனார்கள். என்ன செய்வது என்று எல்லோருமாகச் சேர்ந்து பேசித்தான் செல்லப்பாவுக்கு ஒரு பெட்டிக்கடை வைத்துக் கொடுத்து விடுவது என்று முடிவு செய்தார்கள்.

பெட்டிக்கடை வைப்பதற்குச் சுலப முதல் போதும். மேலும் சோடா, பத்திரிகை, பலகாரம், கடலை உருண்டை, நெய் பிஸ்கட் என்று பலவற்றையும் உற்பத்தியாளர்களே கொண்டு வந்து போட்டுவிட்டுப்போய்விடுவார்கள். விற்பனை ஆகிவிட்டால் அதற்கான கமிஷன் கிடைத்துவிடும். விற்பனை ஆகாத பட்சத்தில் பொருளுக்கு அழிவில்லை. ஆகவே நஷ்டமே ஏற்படுவதற்கு வழியில்லாத தொழிலாக அது தெரிந்தது.

அருணகிரி அதுவரை சேமித்து வைத்திருந்த பணத்தோடு கடனோ உடனோ பட்டு ஒரு மாதிரியாகத் தங்கையின் கணவனைப் பெட்டிக் கடை முதலாளியாக்கினான். சொர்ணத்துக்கும் சந்தோஷம். எல்லாம் நல்லபடி நடந்தால், நாணயமான வாடிக்கைக்காரர்கள் கிடைத்தால் கடையை நாளடைவில் விஸ்தரிக்கலாம்; வெயில் காலங்களில் ஒரு ஷர்பத் கடை கூடப் போடலாம். காலப்போக்கில் பெரிய நகரங்களில் இருக்கிற டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் மாதிரி கூட இது வளரலாம். அவள் நம்பிக்கையோடு இருந்தாள். எல்லாச் சகுனங்களும் வெற்றியையும் வளர்ச்சியையுமே முன்மொழிந்தன.

ஆனால், நடைமுறை யதார்த்தம் வேறு மாதிரியாக இருந்தது. நடைபெறவே வாய்ப்பில்லாத அதிசயத்தைச் செல்லப்பா ஆறே மாதங்களில் நடத்திக் காட்டினான். கடையைத் துடைத்துக் காலி செய்துவிட்டு, பாட்டில்களையும், கடைச்சரக்கு வைக்கிற மரக் கூடுகளையும், பெட்டிக்கடைப் பலகைகளையும் வந்த விலைக்கு விற்றுவிட்டு வந்துவிட்டான்.

"ஊர்சனங்க நாணயம் பத்தாது. நம்பிக் கடன் குடுத்தா திருப்பித் தர்ரதே இல்லே. திருப்பிக் கேட்டா கடைப்பக்கம் வர்ரதே இல்லே" என்று என்னென்னவோ நொண்டிச் சமாதானங்கள் சொன்னான். அடிப்படையான விஷயமே அவனுடைய சோம்பலும் பொறுப்பின்மையும்தான். கடையைத் திறக்க வேண்டிய நேரத்தில் தூங்கினான். திறந்து வைத்திருந்த கடையிலும் சில சமயங்களில் தூங்கினான். சரக்கு வாங்கிப் போடுவது, வரவு செலவு பார்ப்பது, வாடிக்கைக்காரர்களிடம்

இங்கிதமாய்ப் பழகுவது எதுவுமே அவனுக்குச் சரிப்பட்டு வரவில்லை. நிலத்தைக் குத்தகைக் காரர்களிடம் விட்டுவிட்டு வீடு வந்து சேரும் தான்யத்தை வைத்தும் விற்றும் சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தூங்கியே வளர்ந்து சுகம் கண்ட உடம்புக்கு ஒரு நாளைக்குப் பத்துமணி நேரம், பன்னிரண்டுமணி நேரம் கடையில் உட்கார்ந்து வேலை பார்ப்பது என்பது கஷ்டமாக இருந்தது. சமயத்தில் நண்பர்கள் வசம் வியாபாரத்தை ஒப்படைத்துவிட்டு உள்புரையில் படுத்து விடுவான். அப்படி யாரும் வசமாக அகப்படவில்லை என்றால் கைக்குக் கிடைக்கிற பையன்களை உட்கார வைத்துவிட்டு ஒதுங்கிக் கொள்வான். உட்கார்ந்து கல்லாவைப் பார்க்கிற யாருக்கும் உழைப்புக் கேற்ற ஊதியம் தரத்தானே வேண்டும்? அதை இவனாகத் தராவிட்டாலும் அவர்களாக எடுத்துக் கொண்டு விடுவார்கள் இல்லையா?

கடைக்குச் சரக்கு வாங்கிப் போட்ட விதத்தில் பாக்கி இருக்கிற கடன் தான் கடை வைத்ததில் மிச்சம் என்று சொர்ணம் எழுதியிருந்தாள். அருணகிரி மறுபடியும் ஆலப்புதூர் போனான்.

"அண்ணா! அவரைச் சொல்லிப் புண்ணியமில்லை. எல்லாம் பானை புடிச்சவ பாக்கியம். வாழ்ந்து கெட்ட வம்சம்னு சும்மாவா சொன்னாங்க" என்று சொர்ணலட்சுமி மனம் உடைந்து எதையெதையோ பேசினாள்.

"நானும் நல்லா யோசனை பண்ணிப் பாத்துட்டேன் அண்ணா. அன்னன்னிக்கு வாங்கி விக்கற சரக்கா, என் கண் பார்வையிலே நடக்கற வியாபாரமா எதுனா நடத்தினாத்தான் பொளைக்க முடியும்..."

"என்னம்மா சொல்றே நீ? ஏதோ ராஜகுமாரி பந்தயம் வச்சாளாமே, 'எள்ளும் வாங்கணும், எண்ணெயும் வாங்கணும், எலையும் வாங்கணும் இதுக்குத் தந்த காசும் திரும்பி வரணும்'னு அந்த மாதிரி கண்டிஷனாயில்ல தெரியுது".

சொர்ணலட்சுமி விரக்தியாகச் சிரித்தாள். "அந்தப் பந்தயத்திலேயும் ஒருத்தன் ஜெயிக்கத்தானே ஜெயித்தான்".

அதுவரையில் அவள் மடியில் தலை வைத்து அமைதியாகப் படுத்துக் கொண்டிருந்த ஆறு வயதுப் பெண் சட்டென்று தலை உயர்த்தியது. "எப்படிம்மா ஜெயிச்சான்?" என்றது.

"படுடி பேசாம. உனக்கு இப்ப கதை சொல்றாப்பலவா இருக்கேன்? என் கதையே பெருசாயிருக்குது".

அருணகிரி, குழந்தையை இழுத்து மடியில் வைத்துக் கொண்டான். "சரி... இப்ப என்னதான் செய்யலாங்கறே?"

"இப்படியே வீட்டை ஒட்டினாப் பலவே ஒரு காய்கறிக்கடை போடலாமான்னு பாக்கறேன்" சொல்லும் போதே சொர்ணலட்சுமியின் கண்கள் நிறைந்தன. 'வேண்டாம் என்று மட்டும் சொல்லிவிடாதே' என்று அவள் பார்வை கெஞ்சியது. அருணகிரிக்கு வேதனையாக இருந்தது. வருஷாந்திரச் சிட்டை

அநியாய ஏலத்தில் எடுத்துக் கடை முதலுக்குக் கொடுத்துவிட்டுப் போனான். ஏதோ இதிலிருந்தாவது வியாபாரம் தழைத்துப் பெருகிப் பிரமாதமாய் வளர்ந்து தங்கையின் வேதனை எல்லாம் தீர்ந்தால் தேவலை என்று எண்ணிக் கொண்டான்.

அத்தனை சுலபத்தில் சொர்ண லட்சுமியின் துன்பங்கள் விடிவதாயில்லை. எண்ணி மூன்றே மாதத்தில், 'உடனே வரவும்' என்று அண்ணனுக்குத் தந்தி பாஷையில் எழுதியிருந்தாள். இந்தக் காய்கறி வியாபாரத்தில் என்ன விதத்தில் என்ன ரூபத்தில் சிக்கல் ஏற்பட்டிருக்க முடியும்? போன தடவை ஆனதுபோல செல்லப்பா இதில் தலையிட்டுக் குளறுபடிகள் செய்வதற்கான சாத்தியங்கள் எதுவும் இல்லையே!

சொர்ணலட்சுமியைப் பார்த்துப் பேசிய பிறகுதான் விஷயமே விளங்கியது. ஒரு விதத்தில் செல்லப்பாவைக் காய்கறி வியாபாரத்திலிருந்து ஒரேயடியாகக் கழற்றி விட்டதுதான் பிரச்னைக்குக் காரணமாகிவிட்டது. சமயத்தில் திருப்பத்தூர் அல்லது வாணியம்பாடி போய் மொத்த விலையில் காய்கறி வாங்குவதற்கெல்லாம்கூட சொர்ணலட்சுமியால் முடியுமா? இதைத் தவிரவும் அனுபவமும் தோல்வியும் வேறு சில உண்மைகளை வெளியே கொண்டு வந்திருந்தன. இந்த மாதிரி இடங்களில் ஜனங்கள் அப்படியொன்றும் கடைகளுக்குப் போய் காய்கறிகள் வாங்குவதில்லை. அவர்களுடைய சொற்பத் தேவைகளை வீட்டுத் தோட்டமும், வாசலில் நின்ற முருங்கையும், கிணற்றடிக் கீரைகளுமே நிறைவேற்றிவிட்டன. தப்பித்தவறி வாங்குபவர்களும்கூட ஏற்கனவே வாங்கிப் பழகிய பழைய கடைகளிலேயே வாங்கினார்கள். முதல் அழிந்துபோய் விடவில்லை என்றாலும் இதைத் தொடர்ந்து செய்வது வருமானத்துக்கு உரிய வழியாகத் தெரியவில்லை.

அருணகிரிக்கு சொர்ணலட்சுமியின் மேல் கோபம் வந்தது. இதே ஊரில் இத்தனை வருஷம் குடித்தனம் பண்ணியிருக்கிறாள். என்ன பயன்? இந்த ஊர்க்காரர்களின் பழக்க வழக்கம், குணம், போக்கு எதையும் தெரிந்துக் கொள்ளாமல் எதையாவது ஆரம்பித்துக் கைப் பணத்தைக் கரைக்கிறாள். செல்லப்பாவுக்கு மட்டும்தான் என்றில்லை, இவளுக்கும்தான் சாமர்த்தியம் போதாது. இருக்கிற சாமர்த்தியம் இருந்தால் அவனை உருப்படி பண்ணியிருக்க மாட்டாளா? ஒவ்வொருத்தி என்னவென்றால், அழகும் இல்லாமல் அம்மா வீட்டுச் சீரும் இல்லாமல் புகுந்த இடத்தில் என்ன போடு போடுகிறார்கள். புருஷனைச் சுண்டு விரலில் சுற்றிக்கொண்டு எப்படி ஆட்டம் காட்டுகிறார்கள்? சொர்ணலட்சுமிக்கு இது எதுவும் காணாது, அவ்வளவுதான். அருணகிரிக்குப் புருபுருவென்று வந்த ஆத்திரம் முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது. 'ஏதோ என்னால முடிஞ்சதைச் செஞ்சேன். இதுக்கு மேல அவங்கவுங்க பாடு' என்று உடைத்துச் சொல்லி விடுவதென்று தலை நிமிர்ந்தான்.

சொர்ணலட்சுமியின் இளைய மகன் தோட்டத்துப் புல்லை வளையமாக்கி நடுவே ஒரு சிறிய தும்பைப்பூவைச் செருகி அருணகிரியின் விரலில் மாட்டினான்.

"மாமா! நானே செஞ்சேன். கல்லு மோதிரம், வச்சிக்க" என்றான்.

எதிரே உட்கார்ந்திருந்த சொர்ணலட்சுமி முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுதாள். தலையைக் கவிழ்ந்தபடி தூணில் சாய்ந்து நின்று கொண்டிருந்தான் செல்லப்பா. முன்னைக்கு இப்போது இளைத்துக் கருத்திருந்தான்.

"சரிம்மா... நாலையும் யோசனை பண்ணி உம் புருஷன் கிட்டேயும் கலந்து பேசி எனக்கு விவரமா எழுது. வேற என்ன சொல்றதுன்னு எனக்குத் தெரியலை" அதற்கு மேலும் அங்கே இருந்தால் கடுமையாக வேறு எதையாவது சொல்லிவிடப் போகிறோம் என்று பயந்தவன் போல அருணகிரி விருட்டென்று கிளம்பி விட்டான்.

ஆடி மாரியம்மன் பண்டிகையைச் சாக்காக வைத்துக் கொண்டு சொர்ணம், அருணகிரியின் வீட்டுக்கு வந்தாள். அவன் காய்கறிகடை வைக்கக் கொடுத்த பணத்தில் மிஞ்சியிருப்பதோடு தன் நகைகளையும் வைத்துக் கொஞ்சம் பணம் புரட்டித் தள்ளு வண்டி வாங்கப் போகிறாளாம். "கடையைத் தேடி வந்து வாங்க மாட்டாத ஜனங்கள் நடுவே வியாபாரம் செய்ய வேறு என்ன வழி?" என்றாள்.

"நகையைக் கொண்டு தொலைச் சுடாத. தங்கம் விக்கற விலையில புதுசா ஒரு பொட்டுகூட வாங்க முடியாது" என்று வடிவு தன் சிறுவாட்டுப் பணத்திலிருந்து ஏதோ ஒரு தொகையைக் கொடுத்து அனுப்பினாள்.


அருணகிரி பட்டுக்கொள்ளாமல் விலகி நின்றான். இந்தத் தள்ளு வண்டி எங்கு கொண்டு போய் விடப்போகிறதோ என்று இருந்தது அவனுக்கு. அதை அவன் வடிவிடம் சொன்னதும் அவள்,

"அபசகுனம் மாதிரி, ஏன் ஒரு காரியம் ஆரம்பிக்கறப்பவே இப்படிப் பேசறீங்க?" என்று அவனைக் கடிந்து கொண்டாள். "ஏதோ கெட்ட நேரம். அடுத்தடுத்து ரெண்டு தடவையும் அப்படி ஆயிரிச்சி. அதுக்காவ எப்பவுமே அப்படியேதான் இருக்குமா?" என்றாள்.

"அடி! அசடே!" என்பதுபோல அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு மௌனியானான் அருணகிரி.

இவ்வளவுக்குப் பிறகுதான் இன்று மீண்டும் சொர்ணலட்சுமியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. அதை இலகுவாக எடுத்துக் கொள்ள எப்படி அவனால் முடியும்? மனசு உளைந்தது. ஒருவேளை தன் மேலும் தவறோ? சொர்ணம் இழுத்த இழுப்புக்கெல்லாம் போயிருக்கக் கூடாதோ? நடைமுறையில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர ஆலோசித்து முடிவுக்கு வராமல் போய்விட்டோமா? சொர்ணலட்சுமியின் கண்ணீருக்கு இளகியதுதான் பல வீனமோ? கொஞ்சம் கடுமையாகதான் நடந்து கொண்டிருந்தால், கொஞ்சம் கண்டிப்பாகச் சொல்லியிருந்தால் எல்லாம் பொறுப்புடன் நடந்திருக்குமோ என்று அவன் மனம் அலை எறிந்தது.

மனத்தைத் திடம் பண்ணிக் கொண்டு சொர்ணலட்சுமியிடம் தன் நெஞ்சில் பட்டதை அப்படியே சொல்லி விடுவதென்று அருணகிரி



இந்தத் தடவை ஆலப்புதார் போனான்.

" த பாரு சொர்ணம், வீணா அதிர்ஷ்டக்கட்டை அதிர்ஷ்டக் கட்டைனு புலம்பிக்கிட்டிருக்காதே. உழைப்பும் புத்திசாலித்தனமும் இருந்தா அதிர்ஷ்டம் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து கையைக் கட்டிகிட்டு சேவகம் பண்ணாதா? கடைகடையா பேப்பர் போட்டவன், சுக்குக்காபி வித்தவன், செருப்பு ரிப்பேர் பார்த்தவன்னு எத்தனையோ பேர் தங்களுடைய முயற்சியினாலே இன்னிக்குப் பெரிய கோடீஸ்வரங்களா, பெரிய புள்ளிங்களா ஆயிருக்காங்க தெரியுமா?"

சொர்ணம் கண்ணைத் துடைத்துக்கொண்டு தலை நிமிர்ந்தாள். "இப்ப நீ என்ன அண்ணா சொல்றே? நான் சரியானபடி உழைக்கலேங்கறியா? வந்ததும் வராததுமா என்ன நடந்துச்சிங்கறதைக்கூட விசாரிக்காம எதுக்கு இப்படிப் பொரிஞ்சு கொட்டறே?" சொர்ணம் மறுபடி அழுதாள்.

அருணகிரி உள்ளங்கையில் நெற்றியையும், புருவத்தையும் புதைத்துக் கொண்டான்.

"ஆமா... விசாரிக்கறாங்க... நான் இப்ப என்னத்தைச் சொல்லிட்டேன்னு உனக்கு இப்படி ஆத்திரம் வருது? எனக்கும் புள்ளைகுட்டி, கடன் அது இதுன்னு எத்தனை பிடுங்கல் இருக்கு... அதுக்கு நடுவுலேதான் நீ கேக்கறப்பவெல்லாம் நானும் பண்ணிக்கிட்டிருக்கேன். அதை வச்சுப் பெருக பண்ணலாம், உருப்படியாவலாம்னு இல்லியேன்னு..."

சொர்ணம் வெடுக்கென நிமிர்ந்தாள். அழுது சிவந்த கண்கள் அடிபட்ட வேதனையையும் ஆத்திரத்தையும் கொப்பளித்தன.

"சொல்லுண்ணா சொல்லு, கேட்டுக்கறேன். உத்த கணவனும் ஒரு நெல்லும் உண்டானா சித்திரம் போலக் குடித்தனம் செய்யலாம் பாங்க. எனக்கு அதுக்குக் கொடுத்து வைக்கலை. அப்புறம் எதுக்கு எனக்கெல்லாம் ரோஷம்? ஆயிரம் இருந்தாலும் அண்ணனும் அண்ணியும் அப்பா அம்மாவா ஆயிட முடியுமா? நானா அப்படி நெனச்சிகிட்டு உம்மேல எங்கஷ்டத்தையெல்லாம் சாட்டிப்புட்டேன், தப்புத்தான், நீயும் குடும்பஸ்தன். நீயும் புள்ளகுட்டிக்காரன். உனக்கும் கடன் உடன் இருக்குது. நடுவால எனக்கும் கேக்கறப்பவெல்லாம் பண்ணிட்டே. போதும்ணா போதும்... சொல்லிக்காட்டாதே எனக்குத் தாங்கலை" விம்மலுக்கும் விக்கலுக்கும் இடையே நெருப்புத் துண்டங்கள் சிதறின.

"சொர்ணம் நீயா எதையாவது எடுத்துக் கட்டிகிட்டுப் பேசாதே. இப்ப என்னத்தைச் சொல்லிக் காட்டிட்டேன் நானுங்கறே... புத்தியா பொழைச்சுக்கன்னு சொன்னது தப்பா?"

"உன்னைத் தப்பு சொல்ல முடியுமாண்ணா? எல்லாத் தப்பும் எம்மேலேதான். உன்னைப்பிடி என்னைப்பிடின்னு ஒரு வழியா தள்ளுவண்டி வாங்கியாந்து நிப்பாட்டினதும் இந்த மனுஷன் ஒரேடியா காணாமப் போயிட்டாரு. தள்ளுவண்டி தள்ளச் சொல்லுவாளோன்னு பயந்துட்டாரோ என்னவோ தெரியலை. பெங்களூர்ல பார்த்ததா எதிர் வீட்டம்மா தம்பி சொல்றான். என்ன பண்றதுன்னே எனக்குத் தெரியலை. இதையெல்லாம் உங்கிட்டயாவது சொல்லி ஆத்திக்கலாம்னா நீ இப்படிப் பேசறே. யாருமேல நான் தப்பு சொல்றது? நான் பொண்ணா பொறந்ததே தப்பு. இவ்வளவுக்கும் பின்னால உசுரை வச்சுகிட்டிருக்கறதும் தப்பு. ஆனா ஒண்ணு, என்னிக்கு இவ்வளவு பேச்சு ஆயிடுச்சோ இனிமே உன்கிட்ட எதுக்கும் வந்து நான் நிக்கமாட்டேன். நான் செத்தாக் கூட நீ வரத் தேவையில்லை..."

அருணகிரி, மடியிலிருந்த குழந்தையை இறக்கிவிட்டு பெருத்த சத்தத்துடன் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எழுந்தான்.


"அவ்வளவுதானே! பேசிட்டியா... பேசி முடிச்சிட்டியா. நானும் சொல்றேன் கேட்டுக்க... நான் செத்தாலும் நீ வராதே... இன்னியோடு இந்த அண்ணன் தங்கச்சி ஒறவே அத்துப் போயிடிச்சின்னு வச்சுக்க. இனிமே நீயாரோ நான் யாரோ".

எழுந்த வேகத்திலே கீழே கிடந்த தன் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளி வாசலை நோக்கி வேகமாய் நடந்தான் அருணகிரி.

"பார்த்துப் போண்ணா. வாசப்படி தலையில இடிச்சுடப் போவுது" சொர்ணலட்சுமியின் குரலில் பதற்றம் தெரிந்தது.

வெளியே இருந்து உரத்துச் சிரிக்கிற சத்தம் கேட்டது. ரிப்பேராகியிருந்த விளையாட்டு ரயில் வட்டப்பாதையில் ஓடத்தொடங்கியதைப் பார்த்தக் குழந்தைகள் ஆரவாரித்துக் கைகொட்டிச் சிரித்த சத்தம்.

அருணகிரி திரும்பி வந்து நாற்காலியில் உட்கார்ந்தான். ○○



பறங்கியரை எதிர்த்துப் போராடிய வீரவனிதையர்

சங்கரிபுத்திரன்

ராணி அப்பக்கா

கர்நாடக மாநிலத்தில் மேற்குக் கடற்கரையை ஒட்டிய சிறு ராஜ்யம் உள்ளல். ஆட்சி செலுத்தி வந்த ஹரியா அப்பக்கா என்ற மூதாட்டி மரணப் படுக்கையில் படுத்தபடி அடுத்த வாரிசும் தன் ஒரே மகளான அப்பக்கா தேவியிடம் அந்நியரான போர்த்துக்கீசியப் படைகளை எதிர்த்துச் சமாளிக்க முடியாமல் போன தன் நிலையைக் கூறினாள். அப்பொழுதே எதிரிகளை முறியடிக்கச் சபதம் செய்தாள் மகள். அவளது கணவன் "பங்காடி" என்ற பக்கத்து ராஜ்ய அரசன், கோழை. எதிரிகளைக் கண்டு பயந்து மண்டியிட்டு அவர்களுடன் உறவாடியவன். பெயர் வீர நரசிம்மன்.

தாய் இறந்து அரியணை ஏறியவுடன் "நான் அந்நிய நாட்டுக்கு அடிமை ஆகப் போவதில்லை. கப்பம் கட்ட மாட்டேன். மங்களூர் துறைமுகத்தைப் போர்த்துக்கீசியர் காலி செய்து ஓடும்வரை நான் ஓயப் போவதில்லை" என்று அவனிடம் கூறிவிட்டாள் அப்பக்கா தேவி. அவளது மகளை, அவள் விருப்பப்படி, பங்காடி ராஜ்யத்தைச் சேர்ந்த மங்களூரில் உள்ள லேகேசுவரர் கோயிலுக்குச் செல்ல அனுமதித்தாள். மகள் கோயிலில் "என் தாய் போர்த்துக்கீசியரை எதிர்த்துப் போராடும் வேள்வியில் வெற்றி பெற அருளுங்கள்" என்று வேண்டிக் கொண்டாள். இதை அறிந்த அவளது தந்தை மகளைச் சிறைப்பிடித்து அழைத்து வரக் காவலாளிகளை ஏவினான். ஆனால் ராணி அவளுடன் ரகசியமாக அனுப்பிய படைகள் அவளை மீட்டு வந்தன.

இந்தச் செய்தியை அறிந்த ராணி அப்பக்கா வெகுண்டாள். தன் கணவனே தனக்கு எதிராக இருக்கும் நிலைகண்டு வருந்தினாள். அவசரம் அவசரமாக வீரம் மிகுந்த ஓர் இளவரசனை மகளுக்கு மணம் முடித்து வைக்க ஆவல் கொண்டு அண்டை ராஜ்ய அரசர்களுடன் கலந்து ஓர் இளவரசனைத் தேர்ந்தெடுத்து மணமும் நிச்சயம் ஆகிவிட்டது. திருமணத்திற்கு அவளது கணவனைத்தவிர மற்ற அரசர்கள் வந்திருந்தனர். ஆனால் அவர்களும் இவளது நாட்டுப் பற்றுக்குத் துணை புரிந்து அந்நிய ஆதிக்கத்தை, அழிக்க மறுத்து விட்டனர். தன்னந்தனியளாகப் போரிடத் தயாராகிவிட்டாள் அப்ப்க்கா தேவி. "போவாளி" என்ற இடத்தில் இருந்த துர்க்காதேவி கோயிலுக்குச் சென்று திரும்பும்போது இவளையும் இவள் கணவன் சிறை பிடிக்க வழிமறித்தான். அப்போதும் இவள் படைகள் காப்பாற்றி அரண்மனைக்கு இவளைப் பத்திரமாக அழைத்து வந்தன. திரும்பியவுடன் ஒரு செய்தி காத்து இருந்தது.

கோழிக்கோட்டை ஆண்டுவந்த ஜமீன்தார் அனுப்பிய செய்தியில் அவரது ராஜ்யக் கப்பல்கள் அரேபியாவுக்கு வியாபார நிமித்தம் செல்லும்போது உள்ளல் ராஜ்யக் கப்பல்களும் செல்லலாம் என்று குறித்திருந்தார். ஆனால் மறுநாள் போர்த்துக்கீசியத் தூதுவர் கொண்டுவந்த உத்தரவில் தங்களுடன் தவிர மற்ற நாட்டினருடன் வியாபாரம் செய்யக்கூடாது என்ற செய்தியையும் வருடாந்தரக் கப்பம் செலுத்தப்படவில்லை என்று சுட்டிக் காட்டியும் தகவல் இருந்தது.

"உங்களுக்கெல்லாம் நாங்கள் கட்டுப்பட வேண்டியதில்லை. உங்களால் முடிந்ததைச் செய்து கொள்ளுங்கள்" என்று கூறித் தூதுவனைத் திருப்பி அனுப்பிவிட்டாள் ராணி அப்பக்கா தேவி.

சரக்குகளை ஏற்றிக்கொண்டு கோழிக்கோடு, உள்ளல் ராஜ்யக் கப்பல்கள் அரேபியா சென்று கொழுத்த லாபத்துடன் திரும்பிக் கொண்டிருந்தன. வழியில் அவற்றை மடக்கி அழிக்கும்படி தனது படைகளுக்குக் கவர்னர் கட்டளையிட்டான். ராணியின் நன்மதிப்பைப் பெற்ற உள்ளல் ராஜ்யக் கப்பல் தலைவன் போர்த்துக்கீசிய சண்டைக் கப்பல்களை எதிர்த்துப் போரிட்டுச் சுக்கு நூறாக்கித் தனது கப்பலைத் தவிர மற்ற எல்லாக் கப்பல்களையும் பத்திரமாக அனுப்பி வைத்தான். ராணி அப்பக்கா ஒரு தூதுவன் மூலம் தனது ராஜ்யக் கப்பல்களின் நஷ்டத்திற்கு இழப்பீட்டுத் தொகை கேட்டு கவர்னருக்கு ஓலை அனுப்பினாள். போர்த்துக்கீசியர் வெகுண்டு எழுந்து போருக்குத் தயாரான போது உள்ளல் ராஜ்யசேனை, கோழிக்கோடு கப்பல் சேனை இவை இணைந்து மங்களூர் துறைமுகத்தைப் பிடித்துத் தங்கள் ஆதிக்கத்திற்கு கொண்டு வந்தன. மங்களூர் கோட்டை உடைக்கப்

பட்டு அங்கே குவிக்கப்பட்டிருந்த செல்வங்களைக் கப்பலில் போட்டு உள்ளல் ராஜ்யத்திற்குக் கொண்டு வந்தன. போர்த்துக்கீசியப் படைகள் உள்ளல் கோட்டையைத் தாக்கிப் போரில் இறங்கின. ராணி அப்பக்காவும் சளைக்காமல் தனது படைகளை ஏவி விட்டு அவர்களை ஓட ஓட விரட்டி அடித்தாள். கேளடி அரசன் வெங்கடப்ப நாயக் என்பவனுக்கு மங்களூர் கோட்டையைப் பரிசாக அளித்தாள். பின்பு வந்த சிவப்பா நாயக் மங்களூரிலிருந்து போர்த்துக்கீசியரை அறவே ஒழித்தான். கணவனே எதிராக இருந்தும் சளைக்காமல் போரிட்டுப் பரங்கியனைப் பழி வாங்கிய வீராங்கனை ராணி அப்பக்கா தேவி.



பீகம் ஹஸ்ரத் மகல்

பெரும்பான்மையான எல்லா அரச குடும்பத்துப் பெண்மணிகளைப்போல அவளும் ஆடம்பர வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவள்தான். அரசவையில் நடக்கும் பாட்டையும், கூத்தையும் அழகுணர்ச்சியுடன் கேட்டும் பார்த்தும் வாழ்க்கையைக் கழித்தவள்தான். ஆனால் சந்தர்ப்பம் நிர்ப்பந்தித்த போது, இதுவரை அனுபவித்த அழகுணர்ச்சி ததும்பிய மனோநிலையைத் தள்ளி வைத்துவிட்டு வீரஉணர்ச்சிக்கு இடம் கொடுத்துத் தனது நாட்டின் தன்மானத்தைக் காக்க ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து ஆங்கிலேயருடன் போரிட்டு இந்தியா என்ற சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவள் அவள். ஆம், அந்த முஸ்லிம் பெண்மணி தான் பீகம் ஹஸ்ரத் மகல்.

1857ஆம் ஆண்டு சின்ஹட் என்ற இடத்தில் நடந்த போரில் இந்தியப் படைகள் வென்றன. அயோத்தி நாட்டுப் படைகள் லக்னோ நகரைக் கைப்பற்றின. வாஜீத் அலிஷா பதவி இறக்கம் செய்யப்பட்டார். அவரது வயது வராத பத்து வயது மகன் பிரிஜிஸ் குவாதர் பட்டம் சூட்டப்பட்டான். ஆனால் அவரது மனைவி பீகம் ஹஸ்ரத் மகல்தான் ஆளுநராக இருந்து ஆட்சி செலுத்தினாள்.

பைசாபாத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த அவள் அரசன் வாஜீத் அலிஷாவின் அரசவைப் பாடகியாக அரண்மனைக்குள் புகுந்து தனது அழகாலும், அறிவாலும், ஆற்றலாலும் அரசனின் மனத்திலும் இடம் பிடித்துப் பின்னர் "ராணி" என்ற பதவியையும் பிடித்தாள். ஷாவின் பதவி இறக்கத்தின்போது மற்ற மூத்த ராணிகள் யாரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன் வராததால் ஹஸ்ரத் மகல் பொறுப்பு ஏற்க நேரிட்டது. பதவி ஏற்றவுடன் முதலாண்டிலேயே தனது படைகளை வகைப்படுத்தித்தகுந்த பயிற்சிக்கு ஏற்பாடு செய்து ஆங்கிலப் படைகளை முறியடிக்க வழிவகுத்தாள். ஜமீன்தார்கள், தாலுக்காதாரர்கள், இவர்களைக் கூட்டி ஒற்றுமையை உபதேசித்து ஒரே கொடியின் கீழ் போராடி ஆங்கிலேயரை முறியடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினாள். நானாசாகிப் போன்றவர்களிடம் நேரடியாக சமுகமாகப் பேசி அவருடைய மக்களின் ஒத்துழைப்பையும் அன்பையும் பெற்றாள். பைஸ்வாரா ராஜா - பேணி மாதவ் பக்ஷி, மகோனா ராஜா திக் விஜயிங், சகஜன்பூர்கான் அலிகான், பைசாபாத்தின் ஆளுநர் மௌல்வி அகமதுல்லா ஷா, ராஜா மான்சிங், ராஜா ஜெய்லால் சிங் - இவர்கள் அனைவரின் நட்பைக் கோரிப் பெற்றுத் தனது ஆட்சிக்கு உறுதுணையாக்கிக் கொண்டாள். மக்கள் நலனைப் பிரதானமாகக் கொண்டு ஆட்சியை நடத்தினாள்.

ஆங்கிலேயப் படைகள் அணுகாத வண்ணம் லக்னோ நகரைச் சுற்றி கோட்டை கட்ட ஐந்து லட்சம் ரூபாய்களைச் செலவழிக்க உடனே அனுமதி வழங்கினாள். கோரக்பூர், அயோத்தியின் ஒரு பகுதி இவற்றைத் தானமாகக் கொடுத்து நேபாள அரசர் ராணா ஜங்க் பகதூர் நட்பைப்பெற ஆங்கிலேயர்கள் முயற்சி செய்கிறார்கள் என்ற தகவல் கிடைத்த உடனேயே கோரக்பூர், ஆஸம்கார், அர்ரா, சுப்ரா, பனாரஸ் மாகாணம் போன்ற பகுதிகளை "நான் கொடுக்கிறேன்" என்று ராணாவிடம் சாதுர்யமாகப் பேரம் பேசி ஆங்கிலேயரின் சூழ்ச்சியைச் சூட்டோடு சூடாக முறியடித்தாள். கான்பூரில் ஆங்கிலேயப் படைகளுடன் கலந்திருந்த இந்தியப் படைவீரர்களை ரகசியமாகச் சந்திக்க ஏற்பாடு செய்து அவர்களிடமிருந்து ஓர் உறுதிமொழியையும் பெற்றாள். அதாவது தனது படைகளை அவர்கள் ஆங்கிலேயப் படைகளின் சார்பாகப் போரில் சந்திக்க நேரிட்டால் குண்டுகள் இல்லாத துப்பாக்கியினைப் பயன்படுத்த வேண்டும் என்ற உறுதிமொழியைப் பெற்றாள். தேசபக்தி கொண்ட அச்சிப்பாய்களும் அதற்கு ஒப்புக் கொண்டார்கள்.

→



இவளது ஆட்சியின் நேர்மையையும், அந்நிய ஆட்சிக்கு அடிபணியா தன்மையையும் கண்ட ஆங்கிலேயர்கள் எத்தனை காலம் தான் பொறுப்பார்கள்? 1858ஆம் ஆண்டு பிப்ரவரி 25ஆம் தேதி போர் தொடுக்க ஆயத்தமானார்கள். வலுவான தேசபக்திமிக்க படையைக் கொண்டு போராடினாள். பீகம் தானே யானை மேல் ஏறிப் போர்க்களம் சென்று படை பலத்தைப் பார்யிட்டு ஊக்கமளித்தாள். ஆங்கிலேயர்கள் வென்றார்கள். லக்னோ நகரைத் தங்கள் வசமாக்கி முதல் நம்பர் எதிரி "பீகம் ஹஸ்ரத் மகல்" என்று அறிவித்து சிறைபிடிக்கக் காத்து இருந்தார்கள். ஆனால் இரவோடு இரவாகத் துணிச்சலுடன் ஒரு பெரும் படையுடன் காக்ரா நதியைக் கடந்து - பாய்ராச் மாவட்டத்தில் "பாண்டி" கோட்டையில் குடிபுகுந்தாள். பலதரப்பட்ட மக்களும் அங்கே அவளுக்கு உறுதுணை யானார்கள். 16000 பேர், 1500 குதிரைப்படைகள் அக்கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டிருந்தன என்று ஓர் அரசுக் குறிப்பு கூறியது. ஆங்கிலேயர்கள் லக்னோ வைச் சுற்றித் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தி வரும்போது பீகம் தன் படையுடன் அயோத்தியின் மற்ற பகுதிகளில் கலவரத்தை உண்டுபண்ணி இந்திய மக்களை ஒன்று சேர்த்து ஆங்கிலேயருடன் போரிட்டு அவர்களை நிலை குலையச் செய்தாள். ராணி விக்டோரியாவின் பிரகடனத்திற்குப் பின் பீகத்திற்கு அரச பதவியும் ஒய்வூதியமும் கொடுக்க முன்வந்து ஆசைவார்த்தை காட்டிப் பணியுமாறு கூறினர்.

ஆனால் பேகம் பணிய மறுத்து இளவரசன் பிரிஜிஸ் காதர் பெயரில் எதிர்ப்பிரகடனம் செய்து மக்களை உஷாராக இருக்குமாறும் ஆங்கிலேயர்களை நம்பி மோசம் போகவேண்டாம் என்றும் வேண்டிக்கொண்டாள். படைபலம் மிகுந்த ஆங்கிலேயர்களை எதிர்த்து முறியடிக்கவும் முடியாமல் ஆனால் அதே நேரத்தில் சரணடையவும் விரும்பாமல் ஹிமாலயக் காடுகளில் ஒளிந்து சில நம்பிக்கை மிகுந்த சிப்பாய்களுடன் கலந்து பேசி ஆங்கிலேயருக்கு அகப்படாமல் நேபாள மகாராஜாவின் ஆதரவில் அங்கே அடைக்கலம் புகுந்து காட்மண்டுவில் 1874ல் காலமானார். ●

வீராங்கனை சுல்தானா ரஸீயா

மக்களது நல்லெண்ணத்தை முழுதும் பெற்று அவர்களால் பெரிதும் விரும்பப்பட்டு சுமார் மூன்றாண்டு காலமே ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தாலும், 2000 ஆண்டு கால இடைக்கால இந்திய சரித்திரத்தில் டெல்லியைத் தலைநகராகக் கொண்டு இந்துஸ்தானத்தை ஆட்சி செய்த ஒரே பெண்ணரசி என்ற பெருமையைப் பெறுகிறார் சுல்தானா ரஸீயா என்ற முஸ்லிம் பெண்மணி.

அடிமை வம்சத்து இரண்டாவது அரசன் "இல்டாமிஷ்" என்ற சுல்தான் ஷம்ஷுதீன் அல்டாமிஷ்-ன் ஒரே (மூத்த) மகள்தான் அவள். விஷயத்தை உள்ளவாறு புரிந்து கொள்ளும் புத்தி கூர்மையும் தைரியத்துடனும் ஊக்கத்துடனும் செயலாற்றும் அறிவுத்திறனை இளமையிலேயே பெற்ற அவளை ஆட்சி பீடத்தில் ஏற்ற விழைந்த அவள் தந்தை மரணப்படுக்கையில், தனக்குப் பின் அவள்தான் ஆட்சிக்கு வரவேண்டும் என்ற உள்ளக்கிடக்கையை உயில் எழுதி வைத்தார். தனது மகன்களில் யாருக்கும் ஆட்சி செய்யும் தகுதியோ, திறமையோ இல்லை என்பதைப் புரிந்து கொண்டதின் விளைவே அந்த உயில்.



ஆனால் இந்த உயில் அரசனது மற்றொரு மனைவியான 'ஷாடர்க் கான்" என்ற அரசியின் உள்ளத்தில் பொறாமைத் தீயை மூட்டி. ஆமீர்களும் "மாலிக்"களும் கொண்ட நாற்பது பேரை உள்ளடக்கிய ஆட்சிக்குழுவுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்து அரசன் இல்டாமிஷ் கி.பி. 1236இல் இறந்தவுடன் பட்டத்திற்கு வராமல் செய்து அவளது மகன் "குத்புதீன் பிரோஸ்"க்குப் பட்டம் கட்டினாள். விடர்க் கான் ஒரு துருக்கிய அடிமை. அவள் அரசன் இல்டுமனை மயக்கிக் கள்ளத்தனமாகக் காதலித்துக் கூடி மணம் புரிந்தவள். பொறாமையும் சூழ்ச்சியும் அவள் உடன் பிறப்புகள். நிலைமைகளைப் புரிந்துக் கொண்ட ரஸியாவும் அப்போது நடப்பது நடக்கட்டும் என்று விட்டுக் கொடுத்து விட்டாள். இந்தச் சமயத்தில் ரஸியா விட்டுக் கொடுத்தது தவறு என்று மக்களில் பெரும்பான்மையருக்கும் ஆட்சிக் குழுவில் இருந்த அவளது விளையாட்டுத் தோழனும் காதலனுமான "இக்தியார் உத் அல்டூனியா"வுக்கும் வருத்தம்தான்.

பகட்டிலும் விலைமாதர்களின் உறவிலும் களிப்பு கொண்ட ருக்னீதனால் சரிவர ஆட்சி செய்ய இயலாமல் நாட்டில் பஞ்சமும் கலகமும் கொலைகளும் கொள்ளைகளும் மலிந்தன. ஆட்சிக் குழுவினர் உடனே அரசனின் மற்றொரு மனைவியின் மகன் குத்புதீன் என்பவனுக்குப் பட்டம் கட்ட முயற்சித்தபோது விடர்க் கான் அதை முறியடித்துக் குத்புதீனையும் அவன் தாயையும் கொலை செய்ய ஏற்பாடு செய்து வெற்றியும் பெற்றுவிட்டான். அவள் ரஸியாவைக் கொல்லத் திட்டமிட்டு அது பலிக்காமல் போகவே ஆத்திரம் கொண்ட தன் மகன் மூலம் ஆட்சியை மேலும் அலங்கோலப் படுத்தவே மக்கள் பொறுக்காமல் புரட்சி செய்து சுல்தானா ரஸியாவை ராணி ஆக்கி ஆட்சியை அவளிடம் கொடுக்கும் படி செய்து விட்டார்கள்.

தந்தை இல்டாமிஷ் இறந்து ஏழு மாதம் கழித்து கி.பி. 1236இல் ரஸியா சுல்தான் கைக்கு ஹிந்துஸ்தான் ஆட்சி வந்தது. ஷாடர்க் கானும் அவளது மகனும் விசாரணைக்குப் பின் தூக்குலிடப்பட்டனர். மக்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். மக்கள் நலன்கள் நன்கு கவனிக்கப்பட்டு படிப்படியாக ஒவ்வொரு துறையிலும் மேம்பாடுக்கான வழி வகுத்து ஆட்சி செய்யலானாள் ரஸியா சுல்தான். மற்ற மதத்தினரின் இன்னல் போக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 'ஜியா' வரி போன்றவை ஒழிக்கப்பட்டன. ஆனால் ஆட்சிக்குழுவில் இருந்த முகம்மது ஜுனதி (பிரதமர்) கியாசுதீன் பால்பன் போன்றவர்கள் இவளது நல்லாட்சியை வெறுத்துத் தங்களது தன்னலத்தைப் பெருக்கிக் கொள்ள மாகாண கவர்னர்களுக்குப் பொய்த் தகவல்களை அளித்துக் கலவரம் செய்யத் துவங்கினர். சுல்தானா ரஸியா இவர்களது சூழ்ச்சியை அறிந்தும் லட்சியம் செய்யாமல் சிலரை மாற்றியும் சிலரை நீக்கியும் ஆட்சி செய்தாள்.


அவளது விளையாட்டுத் தோழன் 'சர்ஹிந்த்' மாகாண கவர்னராக இருந்தான். ரஸியா ஓர் அபிஸீனிய வீரனான யாஹூத் என்பவனிடம் படைத்தளபதி பொறுப்பை ஒப்படைத்து வீரர்களை ஊக்குவித்தாள். அவனிடம் ரஸியா கள்ள நட்பு கொண்டிருப்பதாக ஒரு பொய்த் தகவலை அந்தத் தோழனான அல்டூனியாவிடம் கூறி அவன் தனது உறவை ரஸியாவுடன் முறித்துக் கொண்டு சுயாட்சிப் பிரகடனம் செய்யவே ரஸியா மனம் வருந்தி, காதலனானாலும் தவறு செய்தவனை விடக்கூடாது என்ற எண்ணத்தில் படை எடுத்தாள். ஆனால் போரில் வெற்றி பெறாமல் யாகூத் (படைத் தளபதி)தைப் பறி கொடுத்துக் கைதியானாள். அவள் காதலனே கைது செய்து விட்டதில் அவள் நிலை குலைந்து போகாமல் இருந்தாள். ஆனால் டெல்லியில் ஆட்சி பறிபோக ரஸியாவின் தம்பி பெஷ்ராம் சுல்தானாக முடிசூட்டப்பட்டு அவன் அல்டூனியாவை அவமானப்படுத்தவே உண்மையை உணர்ந்த அவன் ரஸியாவிடம் மன்னிப்புக் கேட்டு இருவரும் அப்பொழுதே திருமணம் புரிந்து கொண்டனர். இருவர் படைகளும் ஒன்று சேர்த்துக் கொண்டு டில்லிப் படைகளைப் போரிட அழைத்துப் போர் நடந்தது. ஆனால் காலம் கடந்துவிட்டது. டில்லியின் வலுவான படைகளின் முன் இவர்கள் படைபலம் வலுவிழந்து ஒருவர் பின் ஒருவராகப் போரில் இருவரும் மாண்டனர். அக்டோபர் 13,1240இல் சுல்தானா ரஸியா மரணம் அடைந்தார். அவளது சமாதி டெல்லியில் உள்ளது. ●



கிட்டூர் ராணி சென்னம்மா

இந்திய மண்ணில் சோப்பும் சீப்பும் விற்க வந்த ஆங்கிலேயர்களுக்கு ஆட்சியைப் பிடித்து ஆள ஆசை வந்துவிட்டது. குட்டி சமஸ்தானங்களில் ஆட்சி செலுத்திய ராஜாக்களில் சிலரை மிரட்டி அடிபணியச் செய்தும், சிலரைச் சலுகைகள் கொடுத்து அடிமையாக்கிக் கப்பம் கட்டச் செய்தும் வந்தார்கள். அப்படிக் கட்டுப்

படாதவர்களைப் படைபலம் கொண்டு தாக்கிப் போரிட்டு ஆட்சியை விஸ்தரித்தார்கள். ஒரு ராஜ்யத்தின் அரசருக்கு மகன் பிறக்காமல் அதனால் வாரிசு இல்லை என்ற நிலை ஏற்பட்டால் தத்து எடுத்து வாரிசு நியமிப்பது வழக்கம். அப்படி வாரிசு நியமிப்பதற்குக்கூட ஆங்கில அரசின் ஒப்புதல் பெற வேண்டும் என்பது அவர்களின் கோட்பாடு. ஆனால் ஒப்புதல் அளிக்காமல் அந்த ராஜ்யத்தைப் பிடித்து விடுவார்கள்.



இத்தகைய கோட்பாட்டை முதன் முதலில் எதிர்த்துப் போர்க்களம் புகுந்து வீர மரணம் எய்தியவள் ஒரு பெண். ஜான்சிராணி போர்க்களத்தில் குதிப்பதற்குச் சுமார் 36 ஆண்டுகட்கு முன்பே விழுப்புண் பெற்றவள், அந்நியனை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கியவள் - கிட்டூர் ராணி சென்னம்மாதான்.

பூனா-பெங்களூர் பெருவழிப் பாதையில் பெல்காம்-தார்வார் இடையில் உள்ள சிறிய நகரம்தான் கர்நாடக மாநிலத்திலுள்ள இன்றைய கிட்டூர். சுமார் 165 ஆண்டுகட்கு முன்னர் 'கீஜனஹள்ளி' என்ற பழம்பெயரைக் கொண்ட கிட்டூர் சமஸ்தானமாக இருந்தது. கி.பி. 1534இல் யூசப்கானின் உடைமையாகிப் பின்பு பீஜப்பூர் சுல்தான், திப்பு சுல்தான், ஹைதர் அலி, பிஜப்பூர் நவாப், ஹைதராபாத் நிஜாம் போன்ற முகலாயர்களால் ஆட்சி செய்யப்பட்டு, பின்பு மராத்தியர்களின் கைக்குப் போய் பின்னர் அல்லப்ப கௌடா, மாலவருத்ர கௌடா என்ற சர்தேசிகளின் (தளபதி) ஆட்சிக்குள் வந்தது. 1782இல் "மல்ல சர்ஜா" அரசுக்கட்டிலில் ராணி ருத்ரம்மாவுடன் அமர்ந்தார். ஒரே ஒரு மகன். பெயர் - சிவலிங்க ருத்ர சர்ஜா.

கக்டீ என்ற கிராமத்தலைவன் - தோனப்ப கௌடா மகள் - பதினாறு வயது - பெயர் சென்னம்மா காட்டில் புலி வேட்டைக்குச் சென்றாள். மல்லசர்ஜா சந்திப்பு - இரண்டாம் மனைவியாக - கிட்டூர் சமஸ்தான ராணி ஆகிறாள். சென்னம்மாவுக்கு ஒரே ஒரு மகன் - பஸவராஜு ஜானகம்மாவை மணந்து ஆண்வாரிசு இல்லாமல் இறப்பு - சிவலிங்க ருத்ரசர்ஜாவும் - வீரம்மாவை மணந்து வாரிசு இல்லாமல் இறக்கும் தருவாயில் - தத்து எடுத்து வாரிசு நியமிக்க வேண்டிய சூழ்நிலை. "சங்கொல்லி ராயண்ணா" என்ற சிறுவனைத் தத்து எடுத்து இறப்பதற்கு முதல்நாள் ராஜாவின் ஒப்புதல் கையெழுத்து வாங்கியாகி விட்டது.

சட்டப்படி ஒப்புதலுக்கு ஆங்கில அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. தகவல் அனுப்பியவர் ராணி சென்னம்மா. எதிர்பார்த்திருந்தபடி தனது மகனைத் தத்து எடுக்கவில்லையே என்ற கோபத்தால் கிட்டூர் வம்சம் கொன்னூர் மல்லப்ப ஷெட்டி சென்னம்மாவின் எதிரியாகி ஆங்கிலேயனின் கையாளாக ஆனான். மற்றொரு கங்காணி வெங்கட்ராவ் என்பவன். கிட்டூரைச் சுற்றிய பகுதியில் ஆங்கில ஆட்சியை விஸ்தரித்துக் கொண்டிருந்தவர்களுக்கு, சமயத்தை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு, பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி வாரிசு நியமனம் கைகொடுத்து "செல்லாது" என்று அடித்துக் கூறிவிட்டனர் - தார்வாரில் இருந்த ஆங்கிலேய அரசு பிரதம அரசியல் ஏஜண்ட் தாக்கரே - மற்றும் சாப்ளின் (புனாவிலிருந்த தக்காண கமிஷனர்).

ராணி சென்னம்மா பம்பாயிலிருந்த கவர்னர் எல்பின்ஸ்டோன் துரைக்கு அப்பீல் செய்தாள். அவரும் இதில் தலையிட விரும்பாததால் வேறு வழியின்றிப் போருக்குத் தயாரானாள்.

கோட்டையை முற்றுகையிட்டு உள்ளே நுழையத் தயாராக இருந்தது ஆங்கிலப்படை. கோட்டைக் கதவை மூட உத்தரவிட்டாள் ராணி. (23.10.1824) "24 நிமிடங்களுக்குள் கதவு திறக்கப்படா விட்டால் பீரங்கிகளால் திறக்கப்படும்" - கேப்டன் பிளேக் லெப்டினன்ட் டிக்கன் - இவர்களது எச்சரிக்கை.

திடீரெனக் கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டன. அச்சத்தால் அல்ல. கிட்டூர் ராஜ்ய வீரர்களின் நாட்டுப்பற்றை ஆங்கிலேயருக்குக் காட்டி அறிவுறுத்த. ஆங்கிலப் படைகள் பின்வாங்கல் - ராணியின் பிரதம மெய்காப்பாளன் சையத் பாலப்பா - தார்வார் கலெக்டர் தாக்கரேவைச் சுட்டு வீழ்த்தினான். சென்னம்மா தலைமையேற்று நடத்திய போரில் வெற்றி அவருக்கே இந்த முறை.

ஆங்கிலப் படைகள் சின்னாபின்னமாக்கப்பட்டன. எலியட், ஸ்டீவன்சன் என்ற தளபதிகள் சிறை பிடிக்கப்பட்டு பின்பு விடுவிக்கப்பட்டனர். ராணியின் நல்ல எண்ணத்தை ஆங்கிலேயர் புரிந்து கொள்ள மறுத்தனர். ஒப்புக்கொள்ள இயலாத நிபந்தனைகளுடன் தூது அனுப்பினான் ஆங்கிலேயன். ராணி மறுத்து விட்டாள். கோட்டையைச் சுற்றி மறுபடியும் ஆங்கிலப்படைகள் - சென்னை, பம்பாய், பெல்லாரி போன்ற பகுதிகளிலிருந்து ஏராளமான படைகள் - ஆயுதங்கள் - வாகனங்களுடன் - முற்றுகை - தாக்கரே இடத்தில் நியமிக்கப்பட்ட புதிய கலெக்டர் ஜான்மன்றோ தலைமை. வலிமை வாய்ந்த பெரும் படையின் முன் சின்னஞ்சிறு ராஜ்யம் ஈடு கொடுக்க முடியாமல் கிட்டூர் கோட்டை ஆங்கிலேயர் வசம். கொடி பறந்தது. மன்றோ பெற்ற விழுப்புண் சிறிது நாளில் அவன் உயிரைக் குடித்தது.

ராணி சென்னம்மாவும் மருமகளும் சிறை பிடிக்கப்பட்டு "பைல்ஹோங்கல்" என்ற இடத்தில் அடைக்கப்பட்டனர். 21.2.1829 அன்று உடல் நலக்குறைவால் ராணி சென்னம்மா மரணமடைந்தாள்.

வீராங்கனை சென்னம்மாவுக்கு விடுதலை பெற்ற இந்தியா நிறுவிய நினைவுச்சின்னம் தார்வாரில் ஓர் அழகிய பூங்கா மட்டும்தான். ஆனால் பாமரமக்கள் நாடகமாகவும், கூத்தாகவும், கதை கூறியும் அவள் நினைவைக் கர்நாடக மாநிலத்தில் போற்றுகிறார்கள்.

முடியும் என்னால் முடியும்

ராஜேந்திரகுமார்

மேஜைக்கு அப்பால் டாக்டர் விமலா அசையும் நாற்காலியில் அமர்ந்தவாறு - எதிரே நாற்காலியில் அமர்ந்திருந்தவர்களை நோட்ட மிட்டார்.

அம்மாள் முகத்தில் பணக்காரத்தனக் கோடுகளிருந்தன. கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பக்கத்திலிருந்த முப்பதைத் தொட்ட பெண்ணின் முகத்தில் பயம் தெரிந்தது. நிறைவாக மூச்சு முட்டப் பார்ப்பதும் பார்வையைத் தவிர்ப்பதுமாக இருந்தாள்.

எழுந்து போன டாக்டர் விமலா மீண்டும் ஒருதரம் டிஸ்ப்ளேயில் ஒளியைப் பரவிவிட்டுக் கறுப்பில் வெள்ளைக் கோலமான எக்ஸ்-ரேயைப் பார்த்தாள். பென்சிலை விட்டுத் தட்டி விட்டு வந்து அமர்ந்து மெலிதாக அசைந்தாள்.

"என்ன டாக்டர்?"

"கிட்னி ரெண்டும் பெய்லியர். உடனே டயாலிசிஸ் பண்ண வேண்டும்."

"பண்ணினால் குணமாயிடுமா டாக்டர்?"

"தற்காலிகமாக. வாரம் பதினைந்து நாளைக்கு டயாலிசிஸ் பண்ணித்தான் தற்காலிகமாகக் குணமாக்கலாம். ஒரு கிட்னியாவது மாற்றினால்தான் நிரந்தரப் பயன் கிடைக்கும்."

"ஆபரேஷன் செய்யணுமா டாக்டர்?"

"ஆமாம். கொஞ்சம் காலமாகும். சிறுநீரகம் கேட்டு விளம்பரம் செய்யணும். தானம் தரவர்றவங்க கிட்னி இவள் உடம்புக்குப் பொருந்துமான்னு பார்க்கணும். அப்புறம்தான் கிட்னி மாற்று ஆபரேஷன் செய்யணும். செலவு பிடிக்கும். கொஞ்சம் அதிகமாகவே பிடிக்கும்..."

"பரவாயில்லை டாக்டர். எத்தனை லட்சம் செலவானாலும் பரவாயில்லை. என் மகள் பூரணமாகக் குணமாகணும். பிஸி நடிகை. அவள் தேவை நாட்டுக்கு அவசியம். மொத்தம் நாற்பத்தாறு படங்களில் நடிக்கிறாள். பணம் முக்கியமில்லை."

"ஒரே குடும்பப் பந்தமானால் கிட்னி உடனே ஏற்றுக் கொண்டு விடும்".

"என் கிட்னியை எடுத்துக்குங்க டாக்டர்."

"அதுதான் பொருந்தாதுன்னு சொல்லியாச்சே... கிட்னி தானம் கேட்டு விளம்பரம் செய்து பார்க்கலாம்".

"விளம்பரம்னா?"

"பேப்பர், ரேடியோ, டி.வி. முயன்று பார்ப்போம். அதுவரை வெளியூர் படப்பிடிப்பை ஒத்துக்காம இருக்கிறது பெட்டர்."

"கூடிய சீக்கிரம் ஆபரேஷன் நடந்தாகணும். அதுவும் முக்கியம் டாக்டர். டயாலிசிஸ் பயங்கர வலி தாங்க முடியாதாமே."

"வலி இல்லாம வைத்தியம்கூட இருக்கா?"

சென்னைக் கடற்கரை மஞ்சளைக் குறைத்து சிகப்பைக் காட்டி இருட்டின் கருப்புக்கு வரவேற்பு கட்டியம் கூறிக் கொண்டிருந்தது. சாலையோர உயர உயரக் கட்டடங்களும், உல்லாசமான கார்களின் பின்பகுதியும், பின் ஸீட்டிலிருந்து எட்டிப் பார்த்துக் காரிய மின்றிக் குலைக்கும் பெரிய இடத்துச் செல்வங்களுமிருக்க - ஒதுக்குப்புறமாக மறைவிடம் தேடும் காதல் ஜோடிகளும், பெட்ரோமாக்ஸ் விளக்கின் ஒளியில் தள்ளு வண்டிகளின் டிங் டிங் மணியோசையும், சுரேந்திரனின் கவனத்தைக் கவரவில்லை. இருட்டில் மின்னிய கைக் கடிகாரம், டிஜிட்டல் நம்பரில் மின்னி மின்னி ஏழுரையைக் காட்டியது.

கண் கொள்ளுமட்டும் பார்வையைப் படர விட்டான்.

அவள் வரவில்லையென்று அறிந்ததும் மணலைத் தட்டி விட்டுக் கொண்டு எழுந்து நடந்தான்.

கண்ணகிசிலைக்கு நேரே போய்க் கூட்டத்தைக் கடந்து பஸ் நிலையத்தில் நின்று கொண்டான்.

பாரீஸிலிருந்து வந்த பஸ்ஸின் பின்பக்கம் பாய்ந்த கூட்டத்தின் பின்னால் நின்றான்.

முன்பக்கமாக இறங்கிய சாந்தி நின்ற நிலையிலேயே வழக்கமாக அமருமிடத்தைப் பார்த்து அவனில்லை என்று உணர்ந்து ஓடிப் போய் நகரவிருந்த பஸ்ஸின் பின்புறத்தில் தொற்றிக் கொண்டவள் அவன்மீதே மோதி "ஸாரி" என்றாள்.

"பரவாயில்லை சாந்தி" என்ற அவன் குரலுக்குத் திரும்பிப் பார்த்தாள்.

சரவணன்.

"எங்கே போயிட்டே?".

"கடைசி நிமிஷத்தில் மானேஜர் லெட்டர் டைப் பண்ணச் சொல்லிட்டார்."

அவன் வெறுப்புடன் திரும்பிய விதமே அவள் சொன்னதை நம்பவில்லை என்றது. அவள் இணைத்துக்கொண்ட விரல்களை விலக்கிக் கொண்டான்.

"என்னாச்சு?"

"ஆபீஸுக்குப் போன் பண்ணினேன். நீ மத்தியானம் லீவுன்னு சொல்லிட்டாங்க."

அவள் மவுனமாக நடந்து முன்னேறி அகில இந்திய வானொலி நிலைய நிறுத்தத்தில் இறங்கிக் கொண்டாள்.

அவனும் இறங்கிக் கேட்டான். "அப்படி எங்கேதான் போனாயாம்?"

"சொல்றேன். ஆனா இப்ப இல்லே. குட் பை".

எதிர்த் தெருவில் திரும்பி நடந்தாள்.

கொஞ்ச நேரம் அவள் போவ தைப் பார்த்துவிட்டு பஸ் ஸ்டாண் டுக்குத் திரும்பி நடந்தான்.

வீட்டுக்குள் போனபோது - ஊஞ்சலில் படுத்திருந்த தங்கை மீனா எழ முயல - கையசைத்து அவளைப் படுக்கச் சொல்லி அறைக்குள் போனாள். சல்வார் கமீஸை மாற்றிப் பழைய புடைவை யைக் கட்டிக் கொண்டாள்.

"காப்பிபோடவாடி?"

"வேணாம். மணி எட்டாச்சு. சாப்பாடே சாப்பிட்டுடறேன்".

"டாக்டரைப் பார்த்தியா?"

"உம்".

"சொல்லேன். அதை வேற நான் கேட்கணுமா?".

"உஸ். அவ காதில் விழப் போகிறது. டாக்டர்தானே? சொன் னார் ஹார்ட்லே வால்வு கெட் டிருக்காம். உடனே பைபாஸ் ஆப ரேஷன் பண்ணணுமாம்". கேட் டாள். "என்ன பதிலையே காணோம்?"

"பணம் எவ்வளவு செல வாகுமாம்!"

"மேஜர் ஆபரேஷன். எப்படியும் ஒரு லட்சம் ஆயிடும் என்றார். என்ன வாயை பிளந்துட்டே? பரவா யில்லை சமாளிக்கலாம்.

"லட்சமா? எப்படி? உன் நகை, என் நகை எல்லாத்தையும் வித்தா லும்கூட இருபதாயிரம் தேறா தேடி".

"வேற எதையாவது விக்க வேண்டியதுதான்".

அம்மா அதிர்ந்தாள். "பாவி. என்னடி சொல்றே?".

"உடனே தப்பாகத்தான் நினைக் கணுமா? போம்மா. போய் தட்டு வை. கை கால் அலம்பிட்டு வரேன். மீனா சாப்பிட்டாளா?"

"வேணாங்கறா."

"ஏய் மீனா. வெறும் வயத்தோட படுக்காதே. எழுந்து வாடி. கொஞ்சம் ரசம் சாதமாவது சாப்பிடு.."

சாப்பிடும்போது சொன்னாள். "கவலையை என்கிட்ட விட்டுட்டு நீங்க ரெண்டு பேரும் நிம்மதி யாயிருங்க."

"எல்லா விளம்பரமும் பண்ணி யாச்சு. பலன் ஏதாவது இருக்கா டாக்டர்?" நடிகையின் அம்மா கேட்டாள். "யாராவது முன் வந்தாங்களா?"

"நாலு பேர் வந்தாங்க. கிட்னி சரியில்லே, சரியா இருக்கிறவங்க பத்து லட்சம் கேட்கிறாங்க."

"பத்து லட்சமா?"

"ஏம்மா? ஏன்? என் உயிரை விடப் பத்து லட்சம்தான் பெரிசாப் போச்சா?"

"இல்லேடி ராசாத்தி. நீ சம்பாதிச்சதையெல்லாம் வீடு, நிலம்னு வாங்கிட்டோம். இப்ப அவசரத்துக்கு வித்தா அடிமாட்டு விலைக்குக் கேட்பாங்க. ஆறு லட்சம்கூடத் தேறாதே."

"சரி. காத்திருப்போம். நல்ல மனசு இருக்கிறவங்க யாராவது வராமலா போவாங்க."

"நீங்க சொல்றீங்க டாக்டர். டயாசிலிஸ் வலியையாவது பொறுத்துக்கலாம். அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு வந்து போறது தெரிஞ்சா பத்திரிகைக்காரங்க கன்னா பின்னான்னு எழுதுவாங்க. அந்த வேதனையைத்தான் பொறுத்துக்க முடியல்ல."


மறுநாள் விடிய விடிய அவசர மாகக் கிளம்பிய சாந்தியிடம் அம்மா சொன்னாள். "சாயங் காலமா கொஞ்சம் சீக்கிரமா வரயா?"

"ஸாரி. வேலையிருக்கு. வர முடியாது. ஏன்?"



என்னால் பிறந்த கவிதை வரிகள்
எனக்கே நினைவிலிலை
பின்னால் ஒருநாள் பிரசங்க மேடையில்
மேற்கோளாய் வரவும்
முன்னால் பிறந்த மூத்த மகள் என
முண்டெதிர் நின்றதுவே
தன்னால் கண்ணீர் பெருகிவழிந்தது
தற்பெருமை கொண்டேன்.

என்றோ விதைத்த விதையும் மழையால்
எழுமரம் ஆனதுபோல்
என்றோ தொடுத்த வார்த்தைக் கணைக்கணம்
எதிர்வரத் துணுக்குற்றேன்
இன்றோ மணமகள் ஆகியே கவிமகள்
இன்பம் துய்க்கின்றாள்.
நன்றாய் வாழ்கவே! நமக்கினி உரிமை ஏன்
நினைத்தேன் வந்துவிட்டேன்.



"மீனாவுக்குச் சீக்கிரம் குணமாகணும்னு வடபழனி முருகனுக்கு அபிஷேகம் பண்ணப் போறேன். அப்படியே அங்கே ஆஞ்சநேயர் மாரில வெண்ணெய் பூசப் போறேன்."

"செய்".

"செய்யின்னா நீ வரமாட்டியா?"

"நீ உன் வழியில அவளைக் குணப்படுத்தப் பாரு. நான் என் வழியில குணப்படுத்தப் பார்க்கறேன்."

"அப்ப நீ வரமாட்டே."

"நீ கடவுளை நம்பும்மா. நான் என்னை நம்பறேன்." கைப்பையைத் தோளில் மாட்டிக் கொண்டு கிளம்பினாள். "இன்னைக்கு ஆபீஸிலே புது மானேஜர் சார்ஜ் எடுக்கிறார். அநேகமா பார்ட்டி இருக்கும். வர நேரமாகலாம்."

ஆபீஸில் போன் அலறியதும் எடுத்தாள்.

"சரவணன் பேசறேன்."

"ஸாரி சரவணன். இன்னைக்குப் புது மானேஜருக்கு வெல்கம் பார்ட்டி இருக்கும் போலிருக்கு. நீ காத்திருக்க வேண்டாம்."

"இன்னைக்கு மட்டுமா? இல்லே என்னைக்குமேவா?"

"அதை நீயே தீர்மானம் பண்ணிக்க." போன் இணைப்பைத் துண்டித்தாள்.

மத்தியானமாகப் புது மானேஜர் கூப்பிட்டனுப்பினார்.

குறிப்பு நோட்டும், பென்சிலுமாகப் போய் நின்றாள்.

"லெட்டர் டிக்டேட் பண்ணக் கூப்பிடலலே. சர்குலர் பார்த்தியா?"

"பார்த்தேன் சார். தாஜிலே உங்களுக்கு வரவேற்பு. பார்ட்டி. என் மனப்பூர்வமான வாழ்த்துகள் சார்".

"இங்கேயே சொன்னால் எப்படி? பார்ட்டியில் பிரகாசம் தேவை. அங்கே வந்து சொல்லேன்".

"ஸாரி சார். நான் பார்ட்டிக்கு வர நிலையிலில்லை. வேற வேலை இருக்கு."

"அப்படி என்ன வேலை?"

"ஆஸ்பிடலுக்குப் போகணும்."

கண்ணடித்தார். "என்ன? கலைப்பா?"

முறைத்தாள். "ஒரு பெண் வரல்லேன்னு சொன்னா காரணத்தை ஆராயக் கூடாது. என் தங்கை ஹார்ட் பேஷண்ட். பைபாஸ் சர்ஜரிக்கு லட்ச ரூபாய் வரை தேவைப்படும். அதைச் சம்பாதிக்கப் போறேன்.

"என்ன சொல்றே?"

"எப்படி வேணுமானாலும் அர்த்தம் பண்ணிக்குங்க." கிளம்பினாள். "இனிமே ஆபீஸ் காரியத்துக்கு மட்டுமே உள்ளே கூப்பிடுங்க."

அந்த ஏ.ஸி. அறைக்குளிரிலும் வியர்த்துப்போன முகத்தை அவசரமாகத் துடைத்துக் கொண்டார் புது மானேஜர்.

அசையும் நாற்காலியில் அமர்ந்த நிலையில் மெலிதாக ஆடியவாறு சொன்னார் டாக்டர் விமலா. "உன் கிட்னி ரெண்டும் நல்லா ஆரோக்கியமாயிருக்கு. ரிப்போர்ட்டைப் பார்த்தேன். பிளட் குரூப்பும் அந்த நடிகையோட ஒத்துப் போனதினால, உன் கிட்னியை அவங்க உடம்பு ஒத்துக்கும்னுதான் நம்பறேன். சரி. எவ்வளவு பணம் எதிர்பார்க்கிறே கிட்னி தானத்துக்கு?"

"பணம் வாங்கிக் கொடுத்தால் அது வியாபாரம் டாக்டர். தானமில்லே."

"பணமே வேண்டாங்கறியா? அவ நடிகை. ஏதோ ஏழை பாழைன்னா நீ தானம் தருகிறதில அர்த்தமுண்டு. இவளுக்கு ஏன் இனமாகத் தரணும்? சும்மா கேளு."

"என் தங்கைக்குப் பைபாஸ் ஆபரேஷன் பண்ணியே ஆகணும்னு டாக்டர் சொல்லிட்டார். அந்த ஆபரேஷனுக்கு ஆகிற செலவை மட்டும் வாங்கிக் கொடுத்துடுங்க டாக்டர். அது போதும். என் கிட்னியைத் தானமாகத் தரேன். என் தங்கை ஆபரேஷனுக்கு அவங்களைத் தானம் பண்ணச் சொல்லுங்க டாக்டர்".

டாக்டர் வியப்புடன் பார்த்தார்.

"நான் எத்தனை நாள் லீவ் போடணும்? எத்தனை நாள் ஆஸ்பத்திரியிலயிருக்கணும்? ஒரு சின்ன உதவி."

"கேளும்மா".

"நான் கிட்னி தருகிறது என் அம்மாவுக்கும், என் காதலனுக்கும் தெரியாது. தெரிஞ்சா கொடுக்க விடமாட்டாங்க. ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரை வயத்து வலிக்கு அல்சர் ஆபரேஷன்னு நீங்க பொய் சொல்லணும். ஸோ நீங்களும் ஒரு தானம் செய்யணும் - பொய் தானம்."

நீருக்குள் காளிங்க நர்த்தனம்

கோகுலத்தில் காளிந்தி நதியைத் தானே ஆக்கிரமித்துத் தன்னிருபத்தினிகளுடன் உல்லாசமாகக் காலங் கழிக்கிறான் காளிங்கன். அவன் யாரையும் அண்ட விடாமல் பயமுறுத்தித் துரத்திய வண்ணமிருப்பான். அப்படியும் நீரைப் பருகவரும் பசுக்களைத் தன் விஷ ஜுவாலையால் கொன்று விடுவான். நீரையும் விஷமாக்கிவிடுவான். இதனால் இங்குள்ள பிராணிகளும், இடையர் குடும்பத்தினரும் மிகவும் வருந்துகிறார்கள்.

இடையர்குலச் சிறுவர்களுடன் பந்தாடிக் கொண்டுள்ள போது பந்து காளியன் உள்ள பக்கமாக நீரில் விழுந்து விட்டது. தன்னலம் கருதா கண்ணனும் உடனே ஆழமான நீரில் குதித்து விடுகிறான். வெகு நேரமாகியும் கண்ணன் நீரிலிருந்து வெளி வராததால் அவன் காளிங்கனால் விழுங்கப்பட்டு விட்டானோ என அஞ்சி இடைச் சிறுவர்கள் யசோதை நந்தகோபரிடம் ஓடிச் சென்று முறையிடுகிறார்கள். கோகுலமே நதிக்கரையில் ஒன்றாகக் கூடுகிறது. கண்ணன் எங்கே? தேடுகிறார்கள் பதைபதைப்புடன். நீருக்குள் என்ன நடக்கிறது என்பதை அறியாமல் திகைக்கிறார்கள்.

ஸ்ரீகிருஷ்ணன் நீருக்கடியில் என்ன செய்கிறான் என்பதை இவ்வோவியத்தின் மூலம் காணப் போகிறீர்கள். இதோ நீரினுள் நந்த கோபாலன் காளிங்கனை அடக்கி அவன் சிரம் மீதே நர்த்தனமாடும் திருக்காட்சியைக் கண்டு மகிழுங்கள்.



கண்ணனைக் கைகூப்பித் தம் நாதனின் தீச்செயலை மன்னித்து அவனைக் கொல்லாது விட்டு விடும்படித் தொழுது கெஞ்சுகின்றனர் காளிங்கனின் மனைவிகள். கருணைக் கடலாயிற்றே நம் கண்ணன். காளியனிடம் அவன் மேலும் அங்குள்ளோருக்கு எவ்வித் தீங்கும் செய்யமாட்டான் என்ற வாக்குறுதியைப் பெற்றுக் கொண்டு காளிங்கனை விடுவிக்கிறான்.


லோக நலனுக்காகத் தன்னை எளியவரும் மிகச் சுலபமாக அண்டி மகிழும்படி மாடுமேய்க்கும் இடையனாகத் தேவதேவன் திருமால் அவதரிக்கிறான் எனில் இறைவனின் உயர் நல மருளும் குணாதிசயத்தை வேதங்களாலும் வருணிக்க இயலாது.

இன்று உலகில் அநேக காளிங்கர்கள் தோன்றிப் பொது நிலத்தை அரசியல் பலத்தாலோ அல்லது முரட்டுத்தனமான தேக பலத்தாலோ ஆக்கிரமித்து ஆண்டு அனுபவிக்கிறார்கள். பொருட்களையும், பெண்களையும் தங்கள் ஏகபோக உடமைகளாக்கி அகங்கார, மமகாரங்களோடு எளிய மக்களைப் பயமுறுத்தியும், அவர்களைத் தங்களிடம் அண்டவிடாமலும் அவர்கள் விஷயத்தில் தலையிடுபவர்களைக் கொலையும் செய்து விடுகிறார்கள். மக்களை அச்சுறுத்தித் துன்புறுத்தும் இவர்களைக் காளிங்கர்கள் என்று ஏன் அழைக்கக் கூடாது? இவர்களது எண்ணங்கள், சொற்கள், செயல்கள் யாவுமே விஷதன்மையுடையதாக இருப்பதால் உலகுக்குத் தீங்கு செய்யப்படுவதாக உள்ளன.

இத்தகையவர்களைக் கடவுள்தான் அடக்கி உலகைக் காக்க வேண்டும். எப்படி? கண்ணன் ஒருவனேயானாலும்

சித்திரம், விளக்கம்: ஸி.ஏ.ராமசந்திரன்

இராச லீலையில் பல கண்ணன்களாகக் கோபியர்களுடன் கைகோத்து ஆடவில்லையா? அதுபோல் காளிங்க நர்த்தனன் ஒருவனேயானாலும் இக்கலிலீலையிலும் ஒவ்வொரு இதயத்திலுமுள்ள கண்ணன் சும்மாவா இருப்பான்? இங்குள்ள எல்லா எளியவர்களும் கண்ணன்களாக காளிங்கர்களை அடக்கக் காளிய நர்த்தனர்களாகிப் போராட்டத்தில் குதிப்பார்கள். மாற்றம் ஏற்படுகிறது. சீர்த்திருத்தம் உண்டாகிறது. தருமம் நிலைக்கிறது. நாட்டில் நலமே ஓங்குகிறது. இவ்விதமாக துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனமாம் தரும ஸம்ஸ்தாபனம் கண்ணனால் இன்றும், என்றும் அழகான காளியநர்த்தனங்கள் நடைபெற்றுக் கொண்டேயுள்ள அதிசயத்தையும் இரசிப்போமாக. ஃ





அமுதசுரபி தீபாவளி மலர் '92

நீருக்குள் காளிங்க நர்த்தனம்

ஓவியம் : ஸி.ஏ. ராமசந்திரன்



ஸ்ரீசங்கர விநாயகம்

சாந்தினி

திருவுங் கல்வியும் சீரும் சிறப்பும் உன்
திருவடிப் புகழ்பாடும் திறமும் நல்
உருவுஞ் சீலமும் ஊக்கமும் தாழ்வுறா
உணர்வுந் தந்தென துள்ளத் தமர்ந்தவா
குருவும் தெய்வமுமாகி அன்பாளர் தங்
குறை தவிர்க்கும் குணப் பெரும் குன்றமே
வெருவும் சிந்தை விலகக் கஜானனம்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே!

வள்ளலார் ராமலிங்க சுவாமிகள்.

திருச்சிராப்பள்ளி அருகே திருவானைக்கா (ஜம்புகேசுவரம்) என்ற தலம் இருக்கிறது. பஞ்சபூதத் தலங்களில் இதுவும் ஒன்றாகும். அன்னை அகிலாண்டேசுவரி கோயில் கொண்டுள்ள இத் தலத்தில் ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த விநாயகப் பெருமானின் சந்நிதி உள்ளது. விநாயகர்மீது ஆதி சங்கரர் பல துதிப்பாடல்களைப் பாடியுள்ளார்.

சங்கரர் காலத்தில் பாரதமெங்கும் மதச் சண்டைகளும், சமய விவாதங்களும் இருந்து வந்தன. அவற்றைப் பற்றிச் சிறிது எண்ணிப் பார்த்துத் திரும்பவும் திருவானைக்கா விநாயகப் பெருமானைத் தரிசிக்க வருவோம்.

சங்கரர் வாழ்ந்த காலம் குறைவு. அந்தக் குறைந்த காலத்தில் அவர் பாரதமெங்கும் திக் விஜயம் செய்து வந்தார். அப்போது பல மதங்களைச் சார்ந்தவர் களையும் இந்து மத ஆசாரியர்களையும் சந்திக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. மத ஒற்றுமை, இந்து தர்மம், பாரதக் கலாசாரம் எல்லாம் முறைகேடான வழிகளைப் பின்பற்றியதைக் கண்டார். அதனால் மனம் வருந்தினார்.

சங்கரர் இந்து மதத்திற்கே பெருமை தரும் அத்வைத சித்தாந்தக் கொள்கையைப் பாரதமெங்கும் அறியும்படிச் செய்தார். மேலும் இந்து மதக்கோட் பாடுகளை நன்கு ஆராய்ந்து, எல்லா தெய்வங்களும் ஒரே தத்துவத்தைச் சார்ந்தவைதான் என்று மக்க ளுக்கு எடுத்துக் கூறினார்.

இந்து மதத்தை ஆறு கோட்பாடுகளாக வகுத்தார். காணாபத்யம், (கணபதி), சௌரம் (சூரியன்), கௌமாரம் (முருகன்), வைணவம் (விஷ்ணு), சைவம் (சிவன்), சாக்தம்(சக்தி) என்று ஆறு சமயமாக வகுத்து 'ஷண்மத ஸ்தாபகர்' என்ற பெயரையும் பெற்றார். அதனால் அவருடைய புகழ் மேலும் வளர்ந்தது.

ஆறு தெய்வங்கள் மீது பல அற்புதமான துதிப் பாடல்களைப் பாடியுள்ளார். இன்றும் அவை பலரால் பாடப்பட்டு வருகின்றன.

சங்கரர் ஆறு மதக் கோட்பாடுகளை இந்து மதத்தில் புகுத்தியது புரட்சிகரமான முறை என்றே சொல்லலாம். மக்களும் ஏற்றுக் கொண்டு சங்கரரைப் பெருமைப்படுத்தினர்.

சங்கரர் காலத்திற்கு முன்பும், பின்பும் பாரதத்தில் சமயப் பூசல்களும், தர்க்க விவாதங்களும் இருந்தன.

தமிழகத்தில் பல்லவர் காலத்தில் இந்து மதத்திற்கு ஓர் ஏற்றமும், மதிப்பும் ஏற்பட்டன. குறிப்பாக வைண வத்திற்கும் சைவத்திற்கும் என்று கூறலாம்.

திருநாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் மற்றும் பல சைவ அடியார்களும் தோன்றினர். சைவத்திற்குப் பெரும் மதிப்பை ஏற்படுத்தித் தந்தனர். அது போன்று வைணவ அடியார்களும் தோன்றி வைணவத்துற்கும் பக்திச் சுவையை மக்களிடையே பரவச் செய்தனர். பௌத்தமும், சமணமும் தம் பொலிவை இழக்க ஆரம்பித்தன.

ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்று ஸ்ரீசங்கரரும் பல தலங்களுக்குச் சென்று மக்களுக்கு இந்து மதத்தின்பால் பக்தியையும் ஈடுபாட்டையும் ஏற்படச் செய்தார்.

சில தலங்களில் நடந்து வந்துள்ள தீய வழிபாடு களை நிறுத்தி முறையான நன்மை பயக்கக்கூடிய வழிபாட்டு முறைகளை வகுத்தார் சங்கரர்.

சக்தி தெய்வங்களின் தீய சக்தியைப் (உக்கிரகலை) போக்கி, வேத ஆகம முறைகளின்படி அருள் பாலிக்கும் சக்தி தெய்வங்களாக மாறச் செய்தார். மக்கள் அத்தெய்வங்களை வழிபட்டு நல்வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

மக்கள் அந்தக் காலத்தில் இன்றுபோலப்போதிய ஞானமும், கல்வி அறிவும் அற்றவர்களாக இருந் தனர். பழைய மூடபக்தியில் ஈடுபடுத்தித் தங்கள் வாழ்நாளை வீணடித்துக் கொண்டிருந்தனர்.

ஞானம் பெற்ற அறிவாளர்களும், தர்ம நெறி களுடன் வாழ்ந்த மத அடியார்களும் தோன்ற ஆரம்பித்தவுடன்தான் மக்களும் மனம் மாறி, அறிவு பெற ஆரம்பித்தனர்.

ஷண்மத ஸ்தாபன முறையில் அவற்றுக்குரிய தெய்வங்களுக்கு ஆலயங்கள் தோன்றலாயின.

'சங்கரர்' வகுத்தவற்றை மக்கள் ஏற்றுக் கொண்டனர்.

வட பாரதத்திலும் ஹர்ஷர், அசோகர் போன்ற மாமன்னர்களின் காலத்தில் பௌத்தம், சமணம் மற்றும் இந்து சமயமும் இருந்தன. மன்னர்கள் அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு மதங்களைத் தேர்ந்தெடுத்து ஆட்சி செய்தனர். அம் மாமன்னர்

வருவாயம்மா

ராகம் – மத்யமாவதி

தாளம் – ஆதி

பல்லவி

வரலக்ஷ்மி வருவாய் அம்மா

சகல ஸௌபாக்யம் தர – (வ)

சரணங்கள்

பரம குணாகரி பாவனி கௌரி

பங்கஜ லோசனி சங்கட ஹாரிணி – (வ)

ஸ்ரீ ஹரிப்ரிய மனமோகன சுந்தரி

சிருதஜன பாலினி சாந்தி நிவாஸினி – (வ)

நித்திய மங்களம் தந்திடும் லக்ஷ்மி

நின் பாதம் பணிந்து என்னாளும்

கொண்டாடுறோம் – (வ)

பாபநாசம் நீலாராமமூர்த்தி

காலத்தில் உலகம் புகழும்படியான பல கலைப் படைப்புகள் தோன்றலாயின.

காலப் போக்கில் அங்கும் மதச் சண்டைகளும், வேண்டாத சச்சரவுகளும், விவாதங்களும் எல்லாம் தோன்றி நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்தின.

தென்னகத்தில் வைணவ – சைவ – பௌத்த – சமண மதங்களும் ஒன்றுக்கொன்று சச்சரவுகளைத் தோற்றுவித்தும், மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதிலும் ஈடுபட்டன. பாரத வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் இந்த அவல நிலையை நன்கு அறியலாம்.

பலி போன்ற தீய வழிபாடுகளும் இருந்து வந்தன. மக்களும் இவ் வழிபாடுகளில் நம்பிக்கை வைத்துத் தெய்வ ஆராதனைகளைச் செய்தனர். நரபலி வரை மக்கள் மூட நம்பிக்கையில் தங்களை ஈடுபடுத்தினர்.

இவற்றுக்கெல்லாம் காரணகர்த்தாவாக இருந்தவர்கள் மதகுருமார்கள். இந்து மதத்தைச் சார்ந்த சைவம் பல வழிபாட்டு முறைகளில் ஈடுபட்டு வந்தது. காபாலிகம், பைரவம், சக்தி போன்ற பிரிவுகள் பல தவறான, அநாகரிகமான பக்தி முறைகளைக் கையாண்டு வந்தன.

எந்த மதமும் அதர்மத்தைப் போதிக்கவில்லை. ஆனால் அவற்றின் மதசாரியர்கள்தாம் பல தர்மத்திற்கு ஒவ்வாத வழிபாடுகளை நடத்தி மக்களைக் குழப்பிக் கொண்டிருந்தார்கள். இதனால் மதங்களுக்கு இழுக்குகள்தான் ஏற்பட்டன.

ஒரு கால கட்டத்தில் கொடூர வழிபாடுகள் மறையத் தொடங்கின. பௌத்தமும், சமணமும் சற்று வலிவு குன்றிய பின்னர், ஏறக்குறைய கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சைவமும், வைணவமும் வெளிப்படையாகவே வேறு வேறு மதங்களாயின. சைவ சித்தாந்தம் – விசிஷ்டாத்வைதம் என்று இரு பிரிவாக ஆயின.

சைவ சமயத்தைச் சைவ ஆசாரியர்கள், நாயன்மார்கள் போன்ற அடியார்கள் மக்களிடையே வளர்த்து வந்தனர். இதே போன்று ஆழ்வார்களும் வைணவத்தை மக்களிடையே பரப்பி வந்தார்கள்.

சைவத்தொண்டு செய்து வந்த திருநாவுக்கரசர் சைவம் – வைணவம் இரண்டும் ஒன்றே என்ற தத்துவத்தைத் தம் பாடல்கள் மூலம் தெரிவித்துள்ளார்.

இப்படியாகப் பாரத சமய வளர்ச்சியைப் பற்றிப் பல நூல்களாக எழுதிக் கொண்டே போகலாம்.

பாரதமெங்கும் சுற்றுப்பயணம் செய்து வந்த மகான் சங்கரர் நாட்டில் மத ஒற்றுமை இல்லை என்பதை நன்கு அறிந்து கொண்டார். இந்து மதத்திற்கு மறுமலர்ச்சி ஒன்றை ஏற்படுத்தி, 'ஷண்மத ஸ்தாபனம்' என்ற ஆறு மதக் கோட்பாடுகளை வகுத்தார். ஒவ்வொரு கோட்பாட்டிற்கும் ஒரு தெய்வத்தை ஸ்தாபித்தார். ஸ்ரீசங்கரர் தர்மம், ஒற்றுமை, பக்தி, கலாசாரம் போன்றவற்றை மக்களுக்கு உணர்த்தவே ஆறு தெய்வங்கள் கொண்ட ஷண்மத ஸ்தாபனம் செய்தார். மக்களும் பயன் பெற்றனர். இந்து மதத்திற்கு ஏற்றம் வந்து, மூடப்பழக்க வழக்கங்கள் குறைய ஆரம்பித்தன.

காபாலிகம், பாசுபதம், பைரவம் போன்ற பிரிவைச் சார்ந்த துறவிகள், சாமியார்கள் தீய வழிபாடுகளைச் செய்து வந்தனர். தர்மத்திற்கு ஒவ்வாத பல மந்திர தந்திர, யந்திர முறைகளைக் கையாண்டு பூசனைகளைச் செய்து வந்தனர். இவற்றை நம்பி மக்கள் ஏமாந்தார்கள்.

இச் செயல்களால் ஸ்ரீசங்கரருக்கு மனவேதனைகள் ஏற்பட்டன. மக்களை நல்வழியில் அழைத்துச் செல்ல சங்கரர் முயற்சி செய்தார். வெற்றியும் அடைந்தார்.

இப்போது நாம் திருவானைக்கா கோயிலுக்குச் செல்வோம். அங்கு கோயில் கொண்டுள்ள ஸ்ரீஅகிலாண்டேசுவரி சந்நிதிக்கு எதிரே விநாயகப் பெருமானைப் பிரதிஷ்டை செய்தார். அதற்கும் வரலாறு உண்டு.

காபாலிகர் போன்றவர்கள் தீய வழிபாட்டு முறைகளால் அன்னை அகிலாண்டேசுவரியை வழிபட்டு வந்தனர். அதனால் அன்னை உக்ரகலை (தீயசக்தி) அதிகமாகிப் பயங்கர தேவியாக ஆனாள்.

அன்னையை வழிபட மக்கள் பயந்தார்கள். உலகம் காக்கும் அன்னைக்கு இப்படி ஒரு சக்தியா ஏற்பட வேண்டும் என்று மனம் வருந்தி, அம்மன் சந்நிதிக்குச் சென்று தன் மனவேதனையை அன்னையின் திருவடிகளில் சமர்ப்பித்தார்.

பிறகு ஸ்ரீசங்கரர் விநாயகப் பிரானை நினைத்து, அவருடைய திருஉருவத்தை, அன்னையின் எதிரே ஸ்தாபனம் செய்தார். தேவியும் தனது உக்ரத்தைத் தணித்துக் கொள்ள ஆரம்பித்தாள். தன் மகனான விநாயகப் பெருமானைப் பார்த்த மாத்திரத்திலேயே அன்னைக்கு அருள் சுரக்க ஆரம்பித்தது. ஸ்ரீசங்கரரும் ஸ்ரீசக்ரம் பொருந்திய இரு செவி ஆபரணங்களை அணிவித்தார். அன்னை அகிலாண்டேச்வரியின் கோபம் (உக்ரம்) தணிந்தது. அருள்பாலிக்கும் தெய்வமாகத் திகழ்ந்தாள். 'தாடங்க ஸ்தாபனம்' என்று பெயர். தாடங்கம் என்பது காதணி என்ற பொருள். தன் எதிரே அமர்ந்துள்ள விநாயகரும், சங்கரரால் அணிவித்த தாடங்கங்களும் அன்னைக்கு மிக்க


ஸ்ரீ சங்கரர் பிரதிஷ்டை செய்த
விநாயகப்பெருமான்

மகிழ்ச்சியை ஏற்படுத்த கோபம் மறைந்துவிட்டது. மக்களும் அன்னைக்குப் பக்தியுடன் வழிபாடுகளை நடத்தி, அருள்பெற்று நலமாக வாழத் தொடங்கினார்கள். இவற்றையெல்லாம் கண்ட சங்கரர் மிக்க மகிழ்ச்சி அடைந்து தாம் ஸ்தாபனம் செய்த விநாயகர்மீது "கணேச பஞ்சரத்தினம்' என்ற 5 பாடல்களைப் பாடினார்.

சமீபத்தில் ஸ்ரீகாஞ்சி மடாதிபதியான சுவாமி ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அம்மனின் தாடங்கங்களைப் புதுப்பித்தார்கள். சங்கரர் வழி வந்த மதாசாரியர்களுக்கே அந்த உரிமை உண்டு என்று கூறுகிறார்கள்.

ஸ்ரீசங்கரர் விநாயகர் மீது பாடிய 'கணேச பஞ்சரத்தினம்' எனும் பாடல் இன்றும் பலரால் பாடப்பட்டு வருகின்றது. தினம் காலையில் ஒருமுறை இப்பாடல்களைச் சொன்னாலும் சரி, பாடினாலும் சரி, பெருமானின் கருணைக்குப் பாத்திரமாவார்கள் என்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவர்கள் கூறியுள்ளார்கள்.

அப்பாடல்களில் வரும் மூன்று வார்த்தைகள் கொண்ட ஒரு வார்த்தைத் தொகுதிக்கு ஸ்ரீ காஞ்சி பெரியவர்கள் விசேஷ விளக்கம் தருகிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள் :"ஸ்ரீஆதிசங்கரர் கணேசரைச் சிவனோடு ஒப்பிட்டுப் புகழ்கிறார். ஆதி சங்கரர் கணேசரைச் 'சங்கரம்' என்று அழைக்கிறார். 'சங்கரம்' என்ற சொல்லுக்கு நல்லதைச் செய்பவர், அல்லது மங்களத்தை அருள்பவர் என்று பொருளாகும். சிவபெருமானுக்குச் 'சங்கரம்' என்ற பெயரும் உண்டு என்பதை அறிவோம். கணேசரைச் 'சங்கரம்' என்று கூறும்போது, சிவபெருமானுக்குச் சமமாகக் கருதுகிறார் என்று கூறி உயர்த்திப் புகழ்கிறார்.

மேலும் விநாயகரும் நல்லதையே செய்கிறவர் தானே! எளிய பூசை செய்தாலும் மகிழ்ந்து அருள் புரிகிறவர் அல்லவா! பிறகு ஸ்ரீசங்கரபகவத்பாதாள் 'சங்கரம்' என்ற வார்த்தைக்குமுன் 'லோக' என்ற வார்த்தையைச் சேர்த்து 'லோக சங்கரம்' என்று கூறுகிறார். உலகத்திற்கு, அதாவது மக்களுக்கு நலம் புரிபவர் என்ற பொருளில் கூறுகிறார். அதோடு அவருடைய பக்தி நிற்கவில்லை. மேலும் அவ்விரு வார்த்தைகளுக்குமுன் 'சமஸ்த' என்ற வார்த்தையைச் சேர்த்து, 'சமஸ்த லோக சங்கரம்' என்று விநாயகப் பெருமானை மிகவும் புகழ்ந்து பாடுகிறார். எல்லா உலக மக்களுக்கும் நன்மைகளை அருள்பவர் என்று கூறுகிறார். 'சமஸ்த' என்று சொல்லுக்கு 'எல்லா' என்று பொருள். விநாயகப் பெருமான் உலகளாவிய நன்மைகளை அருளும் தெய்வம் என்று ஸ்ரீசங்கரர் கூறுகிறார். இதுபோன்று பிற சொற்களையும் ஆழ்ந்த பொருளுடன் பாடியுள்ளார் 'கணேச பஞ்சரத்தினம்' என்ற 5 பாடல்கள் கொண்ட தொகுப்பில் இந்த விளக்கம் ஸ்ரீ காஞ்சி பெரியவர்கள் அருளியது.

ஆக திருவானைக்காவிலுள்ள விநாயகப் பெருமான் ஆதி சங்கரரால் பாடிப் புகழ்பெற்ற பெருமானாவர். எப்போதாவது அத் தலத்திற்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்போது, அருள் புரியும் ஸ்ரீ சங்கர விநாயகனைத் தரிசித்து, அவருடைய அருளைப் பெறுவோமாக!

விஜயா

ஆர். சூடாமணி

வலது தோள் மேலாக்கு. கருநீல நிறம்.

கையிரண்டில் வாளிநீர், துடப்பம்.

சர்க் சர்க் சர்க் என்று தென்னந் துடப்ப இயக்கம் – கழிவறையில்.

வெளியே வருகிறாள். அவளிடம் லேசான அழுக்கு வாடை.

உள்ளே கழிவறையில் பீங்கான் பளபளக்க, பினாயிலின் சுத்த நெடி.

என் நாற்காலியும், புத்தகமும், வெள்ளாடையும் நேரம் தவறாத இரண்டாம் டோஸ் காப்பியும்...

தகிக்கின்றன.

எண்ணங்களில் மூழ்கி எழுந்த தலையைச் சிலுப்பிக் கொண்டு விஜயா பெருமூச்சுப் புகையை எழுந்து நின்றாள். கழிவறையிலிருந்து சின்னப்பொண்ணு வெளி வந்தபோது பார்த்துப் புன்னகைத்தாள்.

"அம்மா, காவாயெல்லாம் கழுவிட்டேன். குப்பையும் செத்தையும் அடச்சுகிட்டுத் தண்ணி போகாம எதுத்துகிட்டு நின்னிருந்திச்சா? துடப்பத்தாலகூடச் சரியா எடுக்க முடியலே. கையை இம்மா...ந்தூரம் உள்ள வுட்டு அடசலையெல்லாம் வெளிய எடுத்திட்டு நல்லா நாலு பக்கிட்டி தண்ணியை அடிச்சு ஊத்தி கிளீன் பண்ணிட்டேன். இப்ப தண்ணி நல்லா ஓடுது. இங்க பாத்ரூம், கக்கூஸ் எல்லாம் கூடச் சுத்தமா கழுவியாயிடிச்சு".

"உன் வேலை எப்பவுமே சுத்தம்தான் சின்னப்பொண்ணு".

சின்னப்பொண்ணு அடக்கமான பெருமையுடன் சிரிப்புச் சுவடு காட்டினாள். 'பார்! நீ ஒன்றும் எனக்குச் சும்மா சம்பளம் கொடுத்து விடவில்லை' என்கிற தன்மானம் ஒரு கம்பீரமான காட்சி.

"பினாயில் தீந்து போயிடிச்சு".

"அடுத்த வாட்டிக்குப் புது பாட்டில் வாங்கி வச்சிடறேன்".

"அப்ப நான் வாரேம்மா".

"இரு. கொஞ்சம் காப்பி குடிச்சிட்டுப் போவியாம்".

கக்கூஸ் கழுவுபவளுக்குக் காப்பி உபசாரம் செய்யும் பழக்கம் விஜயாவின் தாய்க்கு அடியோடு பிடிப்பதில்லை. ஆனால் உத்தியோகம் பார்க்கும் வளர்ந்த மகள் சில அதிகாரங்களைத் தானாகவே எடுத்துக் கொண்டு விட்ட பிறகு என்ன செய்வது?

"காப்பி போடப் போறியா? எனக்கும் கொஞ்சம்!" விஜயாவின் அண்ணன் – இரண்டாமவன் வந்தான். குரல் தங்கைக்கு. பார்வை சமையலறைக்கு வெளியே பின்கட்டுக் கதவிடை நின்றிருந்த சின்னப்பொண்ணுவின் இளமைக்கு.

காலையொளியில் கரும்பளிங்காய்ப் பளபளக்கும் உடல். சிலை என்ற உவமை பல பெண்களைச் சார்ந்து சார்ந்து பழசாகிச் சாரமற்றுப் போனபின் இவளில் பொருந்திப் புத்துயிர் பெற்று விட்டது போன்ற தோற்றம். சேலை தண்ணீராலும், ரவிக்கை வியர்வையாலும் நனைந்திருந்தன. முகம் திரும்பியிருந்தது. ஆனால் அந்தக் கழுத்தும், மார்பும், முதுகும், இடையும், கால்களும் சொல்லின: கவர்ச்சிக்கு முகம் தேவையில்லை என்று.

"எனக்கும் காப்பி!" பெரிய அண்ணாவும் வந்து தம்பி அருகில் நின்றான். தம்பியின் பார்வையே அவன் கண்களிலும்.

வெளிக் கதவருகில் சிலை வடிவம் கூசித் தனக்குள் சுருங்கிக் கொண்டது.

"நான் எல்லாருக்கும் காப்பி கலந்து எடுத்து வரேன். ரெண்டாம் டோஸ்தானே. என்ன அவசரம்? அப்படி ஹால்ல போய் உக்காருங்க ரெண்டு பேரும்" என்றாள் விஜயா சகோதரர்களிடம்.

"ஏன், நாங்க பாட்டுக்கு இங்கே இருக்கறதில் உனக்கென்ன கஷ்டம்?"

"சின்னப்பொண்ணு, நீ அந்தப் பக்கமாப் போய் கொஞ்ச நேரம் களைப்புத் தீர உக்காந்துக்க. காப்பி தயாரானதும் கூப்பிடறேன்" என்றாள் இப்போது விஜயா.

சின்னப்பொண்ணு நகர இருந்தபோது முதல் அண்ணன், "ஏய், கொஞ்சம் நில்லு. பாத்ரூம் சரியாக் கழுவிட்டியா?" என்றான் அவள் மேல் கண்களை மேலும் கீழும் ஓட்டியபடி.

பணிவாய்த் திரும்பி நின்று, "கழுவிட்டேன்ய்யா" என்றாள் சின்னப்பொண்ணு.

"குழாய்க்குக் கீழேல்லாம் ஒரே முட்டா வழுக்குது. ப்ரஷ் போட்டு நல்லாத் தேய்ச்சியா?"

"தேச்சேன்ய்யா".

"சின்னப்பொண்ணு, நீ அப்படிப் போய் உக்காரும்மா".

"எனக்கும் காப்பி!"

அப்பாவுமா!

"ஏய் சின்னப்பொண்ணு, ஃப்ளஷவுட்டுல ஹார்ப்பிக் மருந்து போட்டு கிளீன் பண்ணினியா?" என்று அப்பா கேட்டார் அவளையே பார்த்தபடி.

"அடாடாடா, உங்களுக்கேன் இந்தக் கவலையெல்லாம்?" என்று கடிந்தவாறு அம்மா வேகமாய் வந்தாள். "அவ வேலையை நான் மேற்பார்வை பார்த்துக்கறேன், நீங்க முதல்ல ஹாலுக்குப் போங்க. காப்பி அங்கே வரும்".

இன்னுமொரு கள்ளப் பார்வையுடன் அப்பா நகர்ந்தார்.

"ஏண்டி சின்னப்பொண்ணு, உன் அம்மா எப்போ திரும்பி வரா

வேலைக்கு?" என்று எஜமானியம்மாள் கேட்டாள்.

"சீக்கிரம் வந்துடுவாங்கம்மா".

"வந்துட்டா தேவலை..."

"சின்னப்பொண்ணு, காப்பி இந்தா. அந்தப் பக்கமாய்ப் போய் உக்காந்து நிதானமாய்க் குடி. நல்ல சூடாயிருக்கு".

விஜயா கொடுத்த தம்ளரை இரு கைகளாலும் வாங்கிக்கொண்டு நடந்து போனவளை இரு சகோதரர்களும் கண்களால் தொடர்ந்தார்கள்.

"பெரியண்ணா, சின்னண்ணா! எதிர் வீட்ல ஒரு தடிப்பயல் என்னையே முறைச்சு முறைச்சுப் பார்த்துகிட்டு நிக்கறான். அவனை என்ன செய்யலாம்? வெறும் தேய்ஞ்ச செருப்பு போதுமா இல்லே துடப்ப மரியாதையே செஞ்சிடலாமா? சின்னப்பொண்ணு கக்கூஸ் கழுவ வச்சிருக்காளே, அந்த மாதிரி ஒரு நல்ல துடப்பம்" என்றாள் விஜயா. அடுத்த கணம் அவள் சகோதரர்கள் அங்கு இல்லை.

"இந்த வயசில் உங்கப்பாவுக்குப் புத்தி போகுது பாரு..." என்று அம்மா முடிப்பதற்குள் விஜயா வெடித்தாள்.

"ஏன், பிள்ளைங்க செஞ்சா மட்டும் பரவாயில்லையா? லச்சிதானேங்கிற எண்ணம்தானே? அவள் உழைச்சுச் சம்பாதிக்கத்தாம்மா வந்திருக்கா. இவங்க அசிங்கப் பார்வைக்கு இலக்காகறதுக்கு இல்லை".

"அவம்மா சீக்கிரம் உடம்பு குணமாகி வந்துட்டால் நல்லாயிருக்கும்".

"நிச்சயம் சின்னப்பொண்ணுக்கும் அதேதான் தோணும்".

"கிழவி இப்படிப் படுத்திருக்க வேணாம்".

கிழவி. நாகம்மா உண்மையில் கிழவிதானா? அவள் வயது அவளுக்கேகூடத் தெரியாது. கிழவியோ இல்லையோ, கிழத்தோற்றம் கண்கூடு. அதுவே போதும் அம்மாவுக்கு ஆசுவாசமளிக்க.

நாகம்மாவை நாகம்மா என்று அழைப்பது விஜயா மட்டும்தான். (வீட்டில் மற்ற எல்லோருக்கும் அவள் பெயர் கிழவி). ஒரு நாள், சாக்கடை கழுவிவிட்டு அப்படியே பக்கத்தில் சுருண்டு படுத்துவிட்டவளை நெருங்கி, "உடம்புக்கென்ன நாகம்மா?" என்று நெற்றியைத் தொட்டுப் பார்த்தவளும் விஜயாதான்.

"பாபோய் தேவுடா! என்னைத் தொடாதீங்கம்மா!" தெலுங்கும் தமிழுமாய்க் கூவிக்கொண்டு சரேலென்று எழுந்து உட்கார்ந்தாள் நாகம்மா.

"ஏன் தொடக்கூடாது? நான் ஒண்ணும் வியாதிக்காரி இல்லையே! உடம்பு கொதிக்குதே நாகம்மா, டாக்டர் கிட்ட போனியா?"

அடுத்த தெருவிலிருந்த ஆஸ்பத்திரிக்குத் தானே அழைத்துப் போய் மருந்து வாங்கிக் கொடுத்தாள். பத்து நாள் வேலைக்கு வரவேண்டாம் என்றாள். வேலை செய்யாமல் கூலி வாங்க மறுத்த நாகம்மா, தான் குணமாகித் திரும்பும் வரை தன் மகள் வேலை செய்யட்டுமென்று அனுப்பி வைத்தாள். அவள் புருஷன் உயிரோடு இல்லை. சின்னப்பொண்ணு அவளுடைய இரண்டாம் மகளாம். பெரியவளைப் பெரியபொண்ணு என்று குறிப்பிடுவாள். அந்தப் பெண்களின் அசல் பெயர்கள் என்ன என்பது விஜயாவுக்குத் தெரியாது. இருவரும் சென்னையிலேயே பிறந்து வளர்ந்ததால் தாய் போலன்றி சுத்தமாய்த் தமிழ் பேசுவார்கள். பெரியவள் திருமணமாகி நகரின் வேறு பகுதிக்குப் போய்விட்டாள். சின்னவளுக்கு இன்னும் ஆகவில்லை.

கொல்லைப்புறச் சுவரையொட்டிக் குந்தி உட்கார்ந்து முகத்தைத் துடைத்தவாறே சூடான காப்பியை ஊதி ஊதி ஒவ்வொரு வாயாகப் பருகிக்கொண்டிருந்த சின்னப்பொண்ணுவை விஜயா சற்று எட்ட நின்று நோக்கினாள். அவள் இருப்பதை அறிந்தால் சின்னப்பொண்ணு காப்பி குடிப்பதை நிறுத்திவிட்டு எழுந்து நின்று மரியாதை தர ஆரம்பித்துவிடுவாள்.

இவள் எதற்கு எனக்கு மரியாதை தரவேண்டும்? எங்களுக்குள் என்ன வித்தியாசம்?

என் வயதுதான் இருக்கும் இவளுக்கும்.

நான் வீட்டுக்குள். மின் விசிறிக்கு அடியில். பிளாஸ்டிக் பிரம்பு நாற்காலியில். எவர்சில்வர் தம்ளரிலிருந்து காப்பி உறிஞ்சிக்கொண்டு.

இவள். கொல்லைப்புறத்தில். தரையில். அலுமினியத் தம்ளரிலிருந்து காப்பி குடித்தவாறு.

ஏன்?

வாழ்வின் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் நான் படைத்தவையல்ல. எனினும் இதுபோன்ற காட்சிகளைக் காணுந்தோறும் என்னுள் எழும் இந்த உணர்வு.

குற்ற உணர்வு.

ஏன்?

இருப்போர் ஒவ்வொருவருக்கும் இல்லாதவர்களைக் காணும்போது இந்த உணர்வுதான் வருமா?

நிம்மதியாய் காப்பி குடிப்பவளுக்கு இடைஞ்சல் இல்லாமல் மெல்ல வீட்டுக்குள் திரும்பி வந்தாள்.

நானும்தான் ஏன் அவளுக்குக் காப்பியை அலுமினியத் தம்ளரில் கொடுத்தேன்? எவர்சில்வர் தம்ளரில் கொடுத்திருக்கலாம்.

கொடுத்திருக்க வேண்டும்.

சாலையின் மாலைநேர நெரிசலில் வாகனங்களிடையே புகுந்து புகுந்து விஜயா பின்னல் ஊசலாட விரைந்து நடந்தாள்.

காலையில் அலுவலகம் கிளம்பும் போதிருந்த புத்துணர்ச்சி இப்போது திரும்பும்போது இல்லை. முகம் களைத்திருந்தது. தலைமுடி காற்றில் லேசாய்க் கலைந்திருக்க, கழுத்து வியர்வையை அவ்வப்போது கைக்குட்டை ஒற்ற, இடது தோளிலிருந்து முன்றானையும் வலது தோளிலிருந்து நீளமான வாரில் தோல் பையும் தொங்க, வீட்டை நாடும் விரைவில் செருப்பின் அடிப்பாகம் பட்பட்டென்று குதிகாலில் அறைய, வேலை பார்க்கும் இன்றைய நடுத்தர வர்க்கப் பெண்ணின் யூனிஃபார்மே இந்தத் தோற்றம்தான் என்பதுபோல் பஸ் நிறுத்தம் நோக்கி ஒட்ட நடையாய் விரைந்துகொண்டிருந்தாள்.

பஸ் நிறுத்தத்தில் கூரையின் கீழ் சுமாரான கூட்டம். அவளும் நின்றாள். கைக்கடிகாரத்தைப்

பார்த்தாள். காத்திருக்கும் வேளைகளில் கைக்கடிகாரத்தைப் பார்ப்பதும் மூச்சு விடுவது போன்ற ஒரு தொடர்ச்சியான செயல்தான்.

நடைபாதை மேல் பலர் கடந்து போனார்கள். தொலைவில் ஒரு போலிஸ்காரர் கையசைவில் வாகனங்கள் நின்று பாதசாரிகளின் சாலைக் கடப்புக்கு வழிவிட்டிருந்தன.



அருகே நடந்து செல்பவர்களில் பளிச்சென்று தெரிந்த அவள்...

சின்னப்பொண்ணு அல்லவா?

நாகம்மா உடல் தேறி வேலைக்குத் திரும்பி வந்து இரண்டு மாதமாகிவிட்டது. அதிலிருந்து சின்னப்பொண்ணுவைப் பார்க்கவில்லை. இப்போது திடீரென்று தெருவின் பொதுப் பின்னணியில் வெறும் இரண்டு மனிதர்களாக அவர்கள்.

ஏற்றத் தாழ்வில்லாமல்.

சமமாக.

சின்னப்பொண்ணு புதிதாய்த் தெரிந்தாள். சுருங்கி நிற்கவில்லை. துடப்பம் ஏந்தவில்லை. வலது தோள் மேலாக்கில்லை. சாதாரண முறையில் சேலை உடுத்திருந்தாள். பூப்போட்ட மஞ்சள் நிற நைலான் சேலை. அழுந்த வாரிப் பின்னிய கூந்தலின் உச்சியில் செம்பொன் கொத்தாகக் கனகாம்பரம். காலின் கருமையில் பளீரென்று மின்னும் வெள்ளிக் கொலுசு.

கண்கள் சந்தித்துவிட்டன. பரிச்சயமாய்ப் புன்னகைத்தால் அவளுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ என்று விஜயா தயங்கிய கணத்தில் அவளே மலர்ச்சியுடன் அருகில் வந்து, "நீங்களாம்மா! நல்லாயிருக்கீங்களா?" என்றாள்.

"இருக்கேன் சின்னப் பொண்ணு. நீ எப்படி இருக்கே?"

"நல்லாத்தாம்மா இருக்கேன்".

"எங்கேயோ அவசரமாப் போய்க்கிட்டிருக்கே போல் இருக்கு?"

"இங்க பக்கத்திலதான் என் அக்காளும் மாமனும் இருக்காங்க. அவங்ககூட சினிமாவுக்குப் போறேன்".

"என்ன சினிமா?"

சொன்னாள். "நீங்க பாத்தீங்களா இந்தப் படம்? புது ஹீரோ ரொம்ப நல்லா ஆக்ட் குடுத்திருக்காராமில்ல?"

"இருக்கும். நான் பார்க்கலே".

"எங்க போகு பஸ்ஸுக்கு நிக்கறீங்க?"

"வீட்டுக்குத்தான். ஆபீஸ் லேர்ந்து".

"இப்ப மணி என்னம்மா ஆவுது?" விஜயா பார்த்துச் சொன்னாள்.

"ஐயோ, அத்தினி லேட்டா? அப்புறம் டிக்கட் கெடக்காது. நான் வாரேம்மா".

"சரி சின்னப்பொண்ணு. போய் சந்தோஷமா படம் பாரு".

சிலை முதுகு காட்டி அகலத் தொடங்கியது.

"ம்... இதோ பார்? ஒரு நிமிஷம்".

கொலுசுப் பாதங்கள் நின்றன. சற்றே பொறுமையிழந்த குரல் "என்னம்மா?" என்றது.

"உன்னைச் சின்னப்பொண்ணுன்னு கூப்பிடறதுதான் தெரியும். உன் அசல் பேரென்ன?"

"விஜயா".

அவள் வேகமாய் நடந்து மறைந்தாள்.

பஸ் பெரும் சுமையுடன் வந்து சற்றுத் தொலைவில் நின்றது. மற்றவர்களுடன் விஜயாவும் ஓடிப் போய் ஏறினாள். கழுத்தைக் கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டாள்.

மனத்தினுள் தென்றலாய் ஒரு சுகம் விரவியிருந்தது. ஃ

அழகில் சிறந்த அனுராதபுரம் அமைதியிலாழ்ந்து நிலாக்காப்பியம் வரைந்து கொண்டிருந்தது.

ஆ! இந்த இலங்கைத் தலைநகராம் அனுராதபுரத்துக்கு வந்து எப்படியோ இரண்டாண்டுகள் கடந்துவிட்டன என்று பிரமிப்புடன் பெருமூச்சு விட்டார் சீன யாத்திரிகர் பாகியான். எத்துணைச் சுகமான சுந்தரப் பூமி அனுராதபுரம். வைதிகர்களுக்கெனப் பலப்பலக் கோயில்கள் இருப்பினும், பௌத்தத்துக்கென எழுப்பிய விகாரைகளும் வெள்ளரசுகளும் ஸ்தூபிகளும் அண்ணாந்து நோக்கின் அயர்ச்சியே மேலிடும்! அத்துணைக்கு அற்புதம்!

இலங்கை மன்னன் மகாநாமன், இந்த இரண்டாண்டுகளில் எவ்வளவுக்கு நேச பாவத்துடன் பழகி உபசரித்தான்; முடிவில் அவர் கேட்ட பரிசு... தரக்கூடிய பரிசா?

எவரும் தருவதற்கு இம்மியும் சம்மதியார். அவ்விதமிருக்க, மகாநாமன் இதயம் மகாசமுத்திரமே!

அப்போது...

காற்சதங்கையோசை மெல்லச் சிணுங்கித் தம்மை நோக்கி வருவதையுணர்ந்தார் பாகியான். யார் இந்த இரவு நேரத்தில்? அதுவும் பெண்வாடை...

மகாராணியாக இருப்பாளோ?

அல்லது... அல்லது... அந்த மகாராட்சஸி அருமைக் கணவன் உபதீசனைக் கொன்ற கொலை வெறிக்காரியாக இருப்பாளோ? மகாநாமன் அரசுக்கட்டிலேற அண்ணியார் கட்டிக் கொண்ட புண்ணியம்.

இது நமக்கேன்? அரசியல்! அரசியல் என்றாலே ஆபத்தை அடிவயிற்றில் கட்டிக் கொண்டிருப்பது தானே?

பாகியான் வருவது யார் என்று உற்றுக் கவனிக்கலானார்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கம் அது.

இலங்கைத் தலைநகரம் அனுராதபுரம், உலகப் புகழ்பெற்ற உல்லாசபுரம். பௌத்தமதத் தாதுவராகத்தான் பாகியான் ஒரு யாத்திரிகரைப்போல் அடியெடுத்து வைத்தார். ஆனால் அங்கே...

ஐயாயிரம் புத்த பிக்குகளின் புத்தகோஷம் 'சரணம் கச்சாமி' கேட்டு விதிர்த்துப் போனார். பௌத்தத்தைப் பரப்ப வந்தவர், மேலும் பௌத்தத்தை அறிய நேர்ந்தது கண்டு ஆச்சரியத்திலாழ்ந்தார்.

ஓ... இப்படி ஒரு மன்னன் - புத்தம் தழுவிய புரவலன் - நாவலந்தீவின் வட பாகத்தில் இல்லாமல் போனானே!

இருந்திருப்பின்?

தெற்கே தமிழகத்தில் புத்தம் சூரியனாய் புலரிகண்டிருக்கும். தமிழகம் எந்த மதத்தையும் வரவேற்கும். ஆனால் தழுவிக் கொள்ளாது. அது ஒரு வைதிக வாசல் என்று எண்ணிக் கொண்டார். இந்த மட்டில் இலங்கையிலாவது பௌத்த இதயம் இருக்கிறதே என்று ஏமமுற்றார்.

இந்த நிலையில்தான் அவருக்குக் காம இடுக்கண் என்று சொல்ல முடியாவிட்டாலும் கலை இடுக்கண் நேர்ந்தது. நேரக்கூடாத இடுக்கண்தான். துரதிஷ்டவசமாக நெஞ்சைத் துளைத்து மூளையில் குடிகொண்டுவிட்டது.

அன்று அரண்மனையில் மன்னன் மகாநாமனுடைய பிறந்த நாள்.

அனுராதபுரத் தலைநகரமே அழகுத் திருக்கோலம் பூண்டு மகிழ்ச்சியில் யாழ் மீட்டியது.

அரசு நர்த்தகி அமுதவல்லியின் அசைந்தாடும் ஓவியத்திருக்கூத்து. அது ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இருமுறையே நிகழும். சொல்லவேண்டுமா?

கொலுமண்டபம் குலுங்கி வழிந்தது.

மன்னன் மகாநாமன் அருகே பாகியான் அமர்ந்து காணப்பட்டார். அவர் இந்த அமுத நடனத்தைக் காணுவது மூன்றாம் முறையாகும். ஓ... அழித்தெழுதா அமுதசித்திரமே!

ஆடல் ஆரம்பமானது. பாடல் பதம் சொன்னது.. தேடல் சுற்றிக் கவனித்த கண்களிலெல்லாம் எதையெதையோ தேடியது.

அன்று என்றைக்கும் ஆடாத ஒரு தனி முத்திரையுடன் – தமிழ



ஒரு பிடி மணல்

டாக்டர் கோவி. மணிசேகரன்

கத்துக்கே உரிய மாதவி முத்திரையுடன், அங்கத்தை அசைத்து, அளகபாரம் சுழித்து, அங்கயற் கண்களில் ஆயிரமாயிரம் பாவனைகளை இசைத்து...

ஆ! இவள் அமுதவல்லியோ, அல்லது வேதம் சொன்ன அப்சரஸோ?...

இருபத்து நான்கு வயது, அறுபத்து நான்கு வயதையே மிதித்துத் துவம்சம் செய்தது என்றால் முப்பத்து நான்கு முண்டிதப் பிக்குவை மூச்சடைக்கச் செய்ததில் முனகுவதற்கு என்ன இருக்கிறது?

பிக்கு மயங்கலாமா? ஏன் மயங்கக் கூடாது? பிக்குகளின் தலைவரான புத்தரே ஒருகணம் அம்பபாலியின் அழகில் அசைந்து போனார் என்றால், யாத்திரிகனான பாகியான் எம்மாத்திரம்?

அவரது மூளையில் பல வேறுபட்ட அசைவுகள். இவளைச் சீனத்துக்குக் கொண்டு போய், இவளது இணையற்ற நடனத்தின் மூலம் பௌத்தக் கொள்கையைப் பரப்பினாலென்ன? உலகம் முழுவதும் நடன யாத்திரை செய்தால் என்ன?

ஆடல் முடிந்தது. அமுதவல்லிக்கு ஆபரணங்கள் வெகுமதியாய் அளிக்கப்பட்டன.

அப்போது -



அடுத்த வாரம் பயணப்பட விருந்த பாகியானுக்கு என்ன கொடுத்து அனுப்புவது என்கிற பிரச்னை எழுந்தது.

மந்திரிமார்களும் மற்றவர்களும் பௌத்தம் வளர மார்க்கங்களைக் கூற –

பாகியான் எழுந்து பணிவோடு கேட்டார்.

"மகாநாமா! நான் இலங்கையி லிருந்து எதையும் எடுத்துச் செல்ல விரும்பவில்லை. இந்த இரண்டு ஆண்டுகளாக நான் பௌத்தத்துக்குச் செய்த தொண்டின் காரணமாகப் பவித்திரமான ஒன்றை யாசிப்பேன். கொடுப்பாயா?"

மகாநாமனும், "பவித்திரமான தென்றால், எதை வேண்டுமானாலும் கேட்காமல் எடுத்துச் செல்லலாம் பாகியான்!"

"அமுதவல்லி தேவை!"

"அமுதவல்லி தேவை!..."

எங்கும் இக்குரல் எதிரொலிப்பது போன்ற பிரமை...

மகாநாமன் மயக்கமே கண்டு மருண்டுபோனான்.

பின்னர், அமுதவல்லியை ஏன் கேட்கிறோம் என்கிற விளக்கத்தைப் பாகியான் எடுத்துச் சொன்னார். பௌத்தம் வளர...

பௌத்தம் வளர என்றால், பௌத்தம் மறுக்கக்கூடாது. புத்த மதத்துக்கு அந்நாளில் இப்படி ஒரு புனித பூரணத்துவம் இருந்தது.

மகாநாமன் மறுக்கவில்லை.

நிலவில் இளைப்பாறிக் கொண்டிருந்த விருந்தினர் மாளிகையில், காற்சதங்கையோசைக் குரியவளை எதிர்பார்த்து எழுந்த பாகியான் வியந்து போனார்.

வருகை தந்தவள் மன்னனின் அண்ணன் மனைவி கொலைகார ராட்சஸியல்ல; மயிலன்ன நடம் புரியும் அப்ஸரஸ் அமுதவல்லி.

அமுதவல்லி, பாகியான்தம் பாதத்தில் விழுந்தாள். "தருமம் சரணம் கச்சாமி!"

"எழுந்திரு அமுதவல்லி!"

அமுதம் எழுந்தது. பிக்குவின் கண்களில் குமுதமாய்ச் சிரித்து மகிழ்ந்தாள்.

"சுவாமி! நானே இங்கு சிறைபட்ட பறவை! எனக்கு இன்னொரு சிறை தேவையா? அதாவது சீனத்தைச் சொல்லுகிறேன்!"

"நீ சிறைபட்ட பறவையா?"

"ஆம், பதந்த! நான் தமிழகத்துச் சோழ நாட்டுக்குரிய சொர்ணப் பதுமை. சோழநாடு இப்போது பாழும் காடாக இருக்கிறது. களப்பிரர் என்ற கொடியவர்பால் அகப்பட்டுச் சொகுசிழந்த நாடாக இருக்கிறது. களப்பிரர்களும் பௌத்தத்தைத் தழுவியர்கள். எனவே களப்பிர வரசன், மகாநாமன் ஆணைக்குட்பட்டு என்னை இங்கே அனுப்பி வைத்துவிட்டான். நான் ஆடலரசியாக இங்கு வாழ்ந்தாலும் அடிமையரசியாக இங்கில்லை என்பதை நன்றி பூர்வமாகச் சொல்லியே ஆகவேண்டும். மன்னர் மகாநாமன், நாகரிக நாயகராக என்னை நடத்துகிறார். ஆனால் தமிழகம் செல்லத் தப்பிக்க முயன்றால், தண்டனை காம தண்டனை என்று மட்டும் பயமுறுத்துகிறார்."

பாகியான் சிலைத்துப் போனார். மகாநாமன் இப்படி ஒரு மனிதத் தன்மையுடன் நடந்து கொண்டுவருகிறானா?

"அமுதவல்லி! என்னுடன் வந்தால் நானும் உன்னை நாகரிகமாகவே நடத்துவேன். என்னுள் முகிழ்த்த ஒரு குமிழி, நீ சொன்ன மகாநாமன் மந்திரம் கேட்டு உடைந்து போனது. உன்னை ஒரு கலாதேவதையாகவே நடத்துவேன்!"

"அங்கேயும் நான் ஒரு சிறைப் பறவைதானே? எனக்குத் தமிழக விடுதலை கிடைக்காதே! எனது தாய்ப்பூமியை முத்தமிட்டு வாழும் பாக்கியம் கிடைக்காதே! சீனம் வந்து எங்கோ இருக்கும் தமிழ் நாட்டை எண்ணி வருந்திச் சாவதைவிட, இங்கிருந்தே அருகிலிருக்கும் தமிழ்நாட்டுக் காற்றை யாவது சுவாசிப்பேன். என்னை இங்கேயே விட்டுச் செல்லக் கூடாதா?"

"முடியாது".


"இதுதான் உங்கள் பௌத்தமா? இதற்குப் பெயர்தான் புத்தரா?"

புத்தரா...?

அமுதவல்லி, தாரையிட்ட நீர்க் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"நான் புறப்படுகிறேன் சுவாமி!"

காற்சதங்கை வந்த வழி நோக்கி மெல்ல அசைந்து ஒலித்தது; சற்றுத் தூரம் சென்று திரும்பிப் பார்த்தது; கணீரென்று பேசியது.



நான் கவிதை எழுதுகிறேன்,
வேறு தொழில் தெரியாததால்!
விளக்கு தயார்...
வழிய வழிய – எண்ணெய்...
திரி நிமிர்ந்து நிற்கிறது...
ஆனால்
வெளிச்சம் எங்கே?
ஆண்டவனே!

"ஒரு வரம் சுவாமி! ஒரே வரம்!"

"என்ன பெண்ணே?"

"போகிற வழியில் உங்கள் மரக்கலத்தைத் தமிழ்க் கடலோரம் கொஞ்சம் நிறுத்துங்கள். நான் இறங்கிச் சென்று எனது மண்ணை மிதித்து வணங்கி, ஒரு கைப்பிடி மணலை என் மடியில் கட்டிக் கொண்டு திரும்புகிறேன். நிச்சய மாக ஏமாற்ற மாட்டேன். நான் ஏமாறும் தமிழ் ஜாதியைச் சார்ந்தவள்!"

அவளது கண்ணீருக்குப் பயன் கிடைத்தது.

இலங்கைக் கடற்கரையில் கூட்டமோ கூட்டம்.

சீன பௌத்த யாத்திரிகர் பாகியான், இரண்டாண்டு களுக்குப் பிறகு சீன நாடு நோக்கிப் பயணமாகிறார். வெறு மனே பயணப்பட்டால் இக்கூட்டம் வந்திருக்குமோ என்னமோ? ஆட லரசி, ஆடிவரும் பொன் விளக் கான அமுதவல்லியை அல்லவோ பரிசு என்ற பெயரால் கொள்ளை யடித்துச் செல்கிறார்!

மன்னன் மகாநாமன் மன மகிழ்வுடன் வழிகூட்டியனுப்பி வைக்கிறான்.

'இது தருமம்தானா?' என்பது போல கடலலைகள் 'கோ'வென்று சீறிப் பாய்ந்து வருகின்றன.

மன்னன் மகாநாமனிடம் கண்ணீருடன் விடை பெறுகிறாள் அமுதவல்லி. அப்போது அவள் சொன்னாள்: "மன்னர் பெருமானே! நான் இங்கு மகாநாமனரைப் பார்க்கவில்லை. மனிதரைப் பார்த்தேன். நீங்களே, புத்த புனிதர்!"

துவராடையுள் புகுந்து கொண் டிருந்த பாகியான், துலக்கமாகக் கவனிக்கிறார்.

மரக்கலம் புறப்பட்டது. அதில் இருநூறு வணிகர்கள் பயணப் பட்டுக்கொண்டிருந்தனர்.

கடல் வழியே பயணப்பட்டுக் கொண்டிருந்த மரக்கலம், தமிழ் நாட்டு நாகப்பட்டினம் மார்க்க மாகச் சென்று கொண்டிருந்தது.

அமுதவல்லி, பாகியானை நோக்குகிறாள். 'ஒரு பிடி மண லுக்கு அனுமதியளியுங்கள்' என்று அந்தக் கயல்விழிகள் கெஞ்சின.

பாகியானிடமிருந்து ஆணை பிறக்கிறது. "மரக்கலத்தை நாகைக் கரையில் சற்றே நிறுத்த லாம்".

ஆணையை மதித்து மரக்கல மீகாமனும், கலத்தைக் கரைதட்டி நிறுத்தி நங்கூரம் பாய்ச்சினான்.

அமுதவல்லி மட்டுமே மெல்ல இறங்கி, முதலில் பாகியானை வணங்கினாள். பிறகு நாகைக் கடற்கரை நாடிச் சென்று நின்றாள். அடுத்து கோவென்று அழுகிறாள். "என் மண்ணே! நான் சீன நாடு நோக்கிச் செல்கிறேன். என்னை அங்கு புதைக்கும்போது இதோ இந்தத் தமிழ் மண்ணை முதலில் போட்டுப் பிறகே சீன மண்ணால் மூடவேண்டும்!"

ஒருபிடி மணலை எடுத்து மடியில் கட்டிக் கொண்டு, மீண்டும் கலத்தையடைய திரும்பி நடக் கிறதுபோது...

பாகியான் பயணமாகிக் கொண்டிருந்த மரக்கலம் கடலில் மிதந்து சென்று கொண்டிருந்தது. கலத்தின் விளிம்பில் நின்று கொண்டிருந்த பாகியான், கை யசைத்துக்கொண்டிருந்தார்.

ஓ... எப்பேர்ப்பட்ட மானுடம்! மகாநாமனையும் மீறிய மானுடம்!

அமுதவல்லி, கரம்கூப்பி வணங்கி கண்ணீர் மல்கினாள். அவளது நா...

'தர்மம் சரணம் கச்சாமி' என்று ஜபித்துக்கொண்டது.



டாக்டர் கிருஷ்ண ஸ்ரீநிவாஸ்

ஒன்றும் தெரியவில்லையே!
ஒன்றும் புரியவில்லையே!

இறைவன் புவியில் விழ,
வாழ்க்கை துளிர்த்தது
அண்டம் எங்கும்
திரிகுண சேர்க்கையில்!
என் பாண்டம்
உடைந்து சிதற -

என் ஆவியோ
வெப்பம் தணிந்த மின்னல்!
வெளிச்சம் உரைந்த ஓடு!

தோன்றி மறைவதில்
வாழ்க்கை முடியவில்லை!
ஒவ்வொருவருக்கும்
ஒரு கணம் நிச்சயம் துளிர்க்கும்
அது மேரு சிகரத்திலோ...
பாதாள வீழ்ச்சியிலோ...

மனம் சிதறாமல்,
ஆர்வம் குன்றாமல்
சிந்தை உடையாமல்,
எழுந்து நின்று துடித்து ஓடி
வெற்றிவாகை எவரும் சூடலாம்!
சலனம்... சோதனை... தோல்வி...
எல்லாம் வீழ்த்தி விட்டு!

பகவான் ஸ்ரீ அரவிந்தரும் அன்னையும் செய்த பூரண யோகம் பக்தியுள்ள மனித நம்பிக்கையை ஏற்று செயல்படும் வகைகளை விளக்கும் தமிழ் நூல்கள்

- அவர்களது அவதார நோக்கத்தையும்

- மனிதனை தேடிவந்து அருள் வழங்கும் பாங்கையும்

- வாழ்வை புறக்கணிக்காமல் ஏற்கும் முறையையும்

- பிரார்த்தனைகளுக்குப் பதிலளிப்பதையும்

கட்டுரைகளாக தொகுக்கப்பட்டுள்ளன

அவை மஹாகவி பதிப்பகம்,2 ஜயசங்கர் தெரு,

மேற்கு மாம்பலம், சென்னை 6000 033., அமுதசுரபி . அலுவலகம், R-பால சுப்ரமணியம், 6 மாடல் ஹட்மெண்ட் ரோடு நந்தனம், சென்னை 600 035 என்ற இடங்களில் கிடைக்கும்.





நூல்கள் விவரம் :

1) அன்னை தரிசனம் I. 2) அன்னை தரிசனம் II. 3) அன்னையின் அருள். 4) எல்லாம் தரும் அன்னை. 5) பொன்னொளி. 6) அருளமுதம். 7) அன்னை பரா சக்தியின் அவதாரம். 8) புஷ்பாஞ்சலி. 9) அன்னையின் வாழ்க்கையும் வரலாறும். 10) நியாயங்கள் ஜெயிக்கட்டும். . 11) அதிர்ஷ்டம். 12) Mental Peace. 13) Luck. 14) Arulamudham. 15) Life and Teachings of Sri Aurobindo and the Mother. 16) ஆராதனை. [12,13,14,15 are in English. No 10 is story & No 16 is a collection of letters from devotees]

"ஸ்ரீ அரவிந்த அன்னை" என்ற மாத இதழ் சென்னையிலிருந்து வெளியிடப்படுகிறது.



மணக்குள விநாயகரும் மகாகவி பாரதியாரும்

வண்ண ஓவியம்: விஜு

பாரதிகாவலர் கே. ராமமூர்த்தி —

"அகரமென அறிவாகி உலக மெங்கும் அமர்ந்த..." என்று விநாயக புராணத்தில் காணும் வரிகள், உலகம் முழுவதும் விநாயகர் வழிபாடு தொன்றுதொட்டு நிகழ்ந்து வருவதை எடுத்தியம்பு கிறது. விநாயகர் என்ற சொல் லின் பொருள், தனக்குமேல் வேறொரு தலைவனில்லாதவர் என்பதாகும். ஆக, விநாயகரே எல்லாவற்றிற்கும் எப்போதும் முழு முதற்கடவுள் ஆகிறார்.

சீனநாட்டில் ஆறாவது நூற் றாண்டில் யானை முகக் கடவுள் திருஉருவும் உருவாக்கப்பட்ட தாகத் தெரியவருகிறது. "க்வான் ஷிடியிக்" என்பார்கள் அங்கே. ஜப்பானில் 9 ஆம் நூற்றாண்டில் கோபாதெய்சி என்பவர் விநாயகர் வழிபாட்டைத்தொடங்கினார்.'விநா யக்ஷா', 'க்வான்ஷன்ஷேர்' என்று வழங்கப்படுகிறது. பர்மாவில் 'மகாபினி' என்றும் கம்போடி யாவில் 'டர்ரா கணேஷ்' என்றும், மங்கோலியாவில் "தோத்கார் – அவுன்காகான்" என்றும், விநாய கருக்குப் பெயர்கள். மற்றும் சாவகம், பாலி, போர்னியோ, திபெத், சயாம், இந்தோனேஷியா நாடுகளிலும் தமிழர்கள் வாழும் பிற நாடுகளிலும் விநாயகர் வழி பாடு தொன்மையானதாகும்.

பாரதநாட்டில், விநாயகர் வழி பாட்டின் சிறப்பைக் கூறத் தேவை யில்லை. முத்கல புராணத்தில் 32 விநாயக மூர்த்திகளின் தியா னங்கள் சொல்லப்பட்டுள்ளன. ஸ்ரீமகா கணபதி ஷோடச ஸ்துதி மாலாவில் 16 பெயர்களுடைய விநாயகர்களை நிறங்களோடு ஐக்கியப்படுத்திக் கூறியுள்ளார்கள். ஔவையார் அருளிய விநாயகர் அகவல் பிரசித்தமானது. காசி யப முனிவரின் விநாயகர் கவச மும், அருணகிரியாரின் முக்தி விநாயக அகவலும், வள்ளலாரின் விநாயக தோத்திரங்கள் நான்கும் எல்லாரும் அறிந்தவையே.

சங்கரரின் கணேச பஞ்ச ரத்னம், கணேசபுஜங்கம் விநா யகர் வழிபாட்டில் குறிப்பிடத்தக்க துதிகளாகும். ஆதிசங்கரரின் ஷண்மத ஸ்தாபனமும் அந்த ஆறில் காணாபத்யம் என்கிற விநாயகர் வழிபாடும் சிறப்பானதாகும். காணாபத்ய ஆகமப்படி விநாயகர் பிரதிஷ்டை விக்னேச ஸ்தாபனவிதி என்ற நூலில் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. வடமொழி சுலோ கத்தில் "கோசேலக்ஷ்மி கண தீசம் புவநேசம் ச ஸாகரே" என்ற வாச கங்கள் உணர்த்துவது என்ன வென்றால் "சமுத்திரக் கரை அருகில் புவநேசம் என்ற கணபதி மூர்த்தத்தை பிரதிஷ்டை செய்ய வேண்டும்" என்பதாகும். நமது சாஸ்திரங்களில் விநாயகருக்கு 16 மூர்த்தங்கள் உண்டு என்று பேசப்படுகிறது. பால விக்னேசர் தொடங்கி ஊர்த்துவ கணபதி ஈறாக உள்ள அப் பதினாறு மூர்த் தங்களில் புவநேச விநாயகர் பதினான்காவதாகும்.

வேதபுரி, வேதபுரம் என்று வழங்கப்பட்டதே இன்று புதுவை

என்று அழைக்கப்படுகிறது. புதுவையில் அமைந்துள்ள மணக்குள விநாயகரும் மகாகவி பாரதியாரும் வரலாற்று நாயகர்களாகத் திகழ்கிறவர்கள். மணக்குள விநாயகர் எல்லாரும் வணங்கும் புவி நாயகராகவும் மகாகவி பாரதி அனைவரும் கொண்டாடும் கவி நாயகராகவும் விளங்குகின்றார்கள்.

புதுவைக் கடற்கரையைச் சார்ந்துள்ள மணக்குள விநாயகர் என்று வழங்கப்படுகின்ற இவ் விநாயகர் புவநேச விநாயகர் என்பதாக ஆதியில் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. வரலாற்று ஆசிரியர்கள் கி.பி. 15 ஆம் நூற்றாண்டிலேயே இக் கோயில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் என்று ஆதாரங்களுடன் விளக்குகிறார்கள். மணற்குள விநாயகர் என்பது மருவி மணக்குள விநாயகராயிற்று என்பர். "மணப் பொழில் கிடந்துறு வணப்புதுவை அம்பதி மணக்குள மகாதேவனே" என்று மணக்குள விநாயகர் பஞ்சரத்னக் கவிதை வரிகளில் காணலாம். கோவை ஆன்மாநுபூதிச் செல்வர் ஸ்ரீலஸ்ரீ நாகலிங்க ஸ்வாமிகள் இயற்றிய துதி இது. இவரே வேத புரீஸ்வரர் ஆலயத்து முருகன்மீது பதிற்றுப்பத்தந்தாதி பாடி., அதிலும் காப்புச் செய்யுள் மணக்குள விநாயகர்மீது பாடியுள்ளார்.

16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் பண்டிதர் சாமி பொன்னுப் பிள்ளை என்பவர் புதுவை மணக்குள விநாயகர் பதிகம் பாடியுள்ளதாக அறிய முடிகிறது. எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் 88 வரிகளில் பாடியுள்ள அதில் புவநேசர் என்பதற்கான குறிப்பு புலப்படுகிறது. புவனம் என்றால் உலகம் என்பதும், புவநேசர் என்றால் உலகுக்கு ஈசன். உலகினுக்குக் காரணம் என்பதாகும். சிறந்த தமிழ்ப் பண்டிதரான அவர் அப் பதிகத்தில் சிறப்பாக, "அனைத்துலகினுக்கோர் நிமித்த காரணனே, நற்கருணையங்கடலே கற்பகமே, செழுங்கரும்பே' புதுவையம்பதியில் வாழ் மணக்குள விநாயகனே" என எழுதியுள்ள கவிதை வரிகள் மணக்குள விநாயகர் புவநேச விநாயகர் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிவிக்கிறதாகக் கொள்ளலாம்.

ஆக, புவநேச விநாயகர் - வேத புரீஸ்வர புதுவை மணக்குள விநாயகர் என்பதை 1855இல் புதுவையில் வாழ்ந்த மகாவித்வான்கள் கோ. ராமானுஜ செட்டியார், சி. பங்காரு பத்தர், நா. வேங்கடாசல நாயக்கர், ஆ. வரதப்பிள்ளை, பண்டித துரைசாமி முதலியார் போன்றவர்கள் குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கத்தக்கதாகும். புதுவை நாராயணசாமி முதலியார் மணக்குள விநாயகர்மீது சில பாடல்கள் பாடியுள்ளதாகத் தெரிகிறது.

கி.பி. 1748 ஆம் ஆண்டில் புதுவை ஆனந்தரங்கம் பிள்ளை எழுதிய நாட்குறிப்பில் மணக்குள விநாயகர் ஆலயம் பற்றிய பல செய்திகள் உள்ளன. அவர் வசித்த பாக்குக் கிடங்குக்கு அருகே ஒரு கதவு இருந்ததாம். அதன் வழியே மணக்குள விநாயகர் கோயிலுக்குச் செல்ல வழியுண்டாம். அந்தப் பாக்குக் கிடங்கு தற்போது - உருமாறி (கலுவா மெம்பிரேன் என்ற வெளி நாட்டுக்காரருக்குச் சொந்தமாகி, அரவிந்த ஆஸ்ரமத்துக்குச் சொந்தமாகி, மாடி வீடாகி) விட்டது. புவநேசர் என்ற விநாயகர் ஆலயத்திற்கு அருகில் ஒரு குளம் இருந்ததாகவும் கடற்கரைக்கு மிக அருகிலே இருந்ததாகவும் மணலும் குளமும் புவநேச விநாயகர் என்பதைவிட மணக்குள விநாயகர் என்ற பெயருக்கு புகழ் சேர்த்தன எனலாம். இப்போது மணலோ, குளமோ இல்லை. ஆயினும் 250 ஆண்டுகளாக புதுவை மணக்குள விநாயகர் என்றே அழைக்கப்பட்டு வருகிறார்.

கி.பி. 1858இல் முத்துக்குமரன் என்பவர் இயற்றியுள்ள திரிபுர சுந்தரியம்மை பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்தத்தின் காப்புச் செய்யுளில் வேதபுரம் மணற்குள விநாயகர் என்று பாடியுள்ளார். புதுவை சுப்பு ராமசாமி முதலியாரின் எல்லையம்மன் பதம் என்ற நூலிலும் காப்புச் செய்யுளில் "பிணக் ககற்றி நல்லருள் செய்பீடார் புதுவை மணக்குள விநாயகனை வாழ்த்து" என்ற ஈற்றடி வெண்பாவில் அமைந்துள்ளது. புதுவை சோம சுந்தரம் பிள்ளை இயற்றியுள்ள ஸ்ரீமணக்குள விநாயகர் பதிகம் சைகோன் சின்னையா பிள்ளை அச்சுக்கூடப் பதிப்பு. அதில் சாற்றுக் கவியில் "மணற்குளத்து முக்கணற்கு" என்றும் எழுதியுள்ளார்.

"ஸ்ரீமணக்குள விநாயகர் சுப்ரபாதம்" என்பது அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் 48 வரிகளிலும், முதலில் சந்த விருத்தமாக 12 வரி, மங்களமாக 10 வரிகளிலும் அமைந்திருக்கிறது. அத் துதியில், "வள்ளலே மணக்குளத்தாய் நல்வடிவாக நிற்கே" என்றும் "மணக்குளத் திலுறையும் விக்னராஜனுக்கு மங்களம்" என்றும் பாடப்பட்டுள்ளது. சுப்ரபாதத்தை ஆக்கியவர் மகா மகோபாத்யாய உ.வே.சாமிநாதய்யரிடம் தமிழ் கற்ற வி.மு. சுப்ரமணிய ஐயர் என்பவராவர். 1884 இல் பிரசுரமாகியுள்ள வில்வ நல்லூர் (புதுவைக்கருகிலுள்ள ஊர்) கோகிலாம்பிகைமீது பாடப் பெற்றுள்ள வில்வ வனத்தந்தாதியிலும் முத்துக் குமாரக் கடவுள் பஞ்ச ரத்தினத்திலும் மணக்குள விநாயகரைக் காப்புச் செய்யுளில் வணங்கியுள்ளனர்.

ஸ்ரீமணக்குள விநாயக மூர்த்தி புதுவையைப் பாதுகாப்பவராக எழுந்தருளியிருக்கிறார் என்பது தெரிய வருகிறது. புதுவை காடாக இருந்தபோது குளக்கரையில் மகான் ஒருவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்க வேண்டும். பின்னர் முரட்டாண்டி என்பவரால் பூஜிக்கப்பட்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. முரட்டாண்டிச் சாவடி இன்றும் புதுவையில் இருப்பதைச் சான்றாகச் சொல்கிறார்கள். முரட்டாண்டிச் சுவாமிகள் மணக்குள விநாயகரை நாள்தோறும் பூஜித்து வந்தது புதுவைச் சரித்திரத்தில் பதிந்த ஒன்றாகும். முரட்டாண்டி சுவாமிகளுக்குப் பின்னர் மணக்குள விநாயகர் வரப்பிரசாதியாகவும் புதுவை மக்களின் முழுமுதல் நாயகனாகவும் ஆகிவிட்டார் எனலாம்.


ஜீவன்முக்தி பெற்ற அக்கா சுவாமி, சித்தானந்த சுவாமி, யாழ்ப்பாணம் கதிர்வேல் சுவாமி மற்றும் புதுவைத் தமிழ்ப் புலவர்கள் இந்த மணக்குள விநாயகர் மீது பாடல்கள் பாடிப்பாடி மணக்குள விநாயகரின் மகத்துவம் அதிகரித்துள்ளது. மகத்துவத்திற்குக் காரணமாக உள்ளது, அதண்டா அவிதானமாக எழுந்தருளியுள்ள முரட்டாண்டிச் சித்தர்

சுவாமிகளின் திருவருள்தான் என்று பெரியோர்கள் பலர் கூறி யுள்ளார்கள். புதுவையில் கண் கண்ட தெய்வமாகவும் அற்புத சக்தி வாய்ந்த மூலப் பொரு ளாகவும் மணக்குள விநாயகரைத் தொழுது வருகிறார்கள். அந்நிய ஆட்சியில்கூட இந்த விநாயகரைப் பெயர்த்துவிட எத்தனையோ பேர் அதிகாரம் மூலம் முயற்சி செய்தும் பலனளிக்காததுடன் அவர்களும் பணிந்து தொழுது வணங்கி வழிபடலாயினர்.. நித்ய பூஜைகளும் மாதாந்திர உற் சவங்கள் பிரம்மோத்சவம் எல் லாம் சிறப்பாக மணக்குள விநா யகருக்கு இன்றளவும் நடைபெற்று வருகின்றன.

இவ்வண்ணமான தொன்மைச் சிறப்பும் பாடல் பெற்ற பாத்தலச் சீரும்கொண்ட இவ் விநாயகரை 'மணக்குள விநாயகா, வான்மறைத் தலைவா" என்று விண்ணுயரப் பாடிப் பெருமை சேர்த்தார் மகா கவி சுப்ரமணிய பாரதியார். பாரதி 1908 முதல் 1918 வரை புதுவையில் வாழ்ந்த வரலாறு நாடறியும் - பாரதிக்குத்தம் குரு திலகர் வழியில் விநாயகர் ஈடுபாடு ஏற்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு. ஸ்ரீ அரவிந்தர், வ.வே.சு. ஐயர் ஆகியோரும் இங்கு வந்து வழிபட்டுள்ளனர். புதுவை யிலுள்ள மணக்குள விநாயகர்மீது பாரதி பாடியுள்ள விநாயகர் நான் மணி மாலை இலக்கியப் புதுமை யும்,தெய்விகப் புத்துணர்வும் கலந் தொன்றி அமைந்த வைரமணி மகுடமாகும். பாரதி காலந்தொட்டு மணக்குள விநாயகரின் பிரசித்தி மேலும் வியாபகமாயிற்று.

வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்ற நான்கு பாவினங்களிலும் பத்து பத்தாக நாற்பதுமாக 350 வரிகளில் பாரதியார் பாடியுள்ள பாங்கு பர வசமூட்டுவதாகும். இதில் அந் தாதி பாணியும் கையாளப்பட் டிருக்கிற நேர்த்தி விநாயகர் நான்மணி மாலையின் சீர்த்தியாகி மணக்குள விநாயகரின் கீர்த்தி களை விவரிக்கிற சொற்களஞ் சியமாக அமைந்துள்ளது. மணக் குள விநாயகரிடம் மகாகவி "நீயே சரணம் நினதருளே சரணம் சர ணம்" என்று மனமுருகி "நின்னா லியன்ற துணை புரிவாயேல் பொன்னால் உனக்கொரு கோயில்

விநாயகர் நான்மணி மாலை யிலிருந்து....



நமக்குத் தொழில் கவிதை

மகாகவி பாரதி


நீயே சரண நின தருளே சரணஞ் சரணம்
நாயேன் பலபிழை செய்து களைத்துனை நாடிவந்தேன்
வாயே திறவாத மௌனத் திருந்துன் மலரடிக்குத்
தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே.

செய்யுந் தொழிலுன் தொழிலே காண்;
சீர் பெற்றிட நீ யருள் செய்வாய்.
வையந் தனையும் வெளியினையும்
வானத்தையு முன் படைத்தவனே!
ஐயா, நான் முகப் பிரமா,
யானைமுகனே, வாணிதனைக்
கையாலணைத்துக் காப்பவனே,
கமலா சனத்துக் கற்பகமே.

எனக்கு வேண்டும் வரங்களை நீ
யிசைப்பேன் கேளாய் கணபதி,
மனத்திற் சலன மில்லாமல்,
மதியிலிருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின் மவுன
நிலை வந்திட நீ செயல்வேண்டும்.
கனக்குஞ் செல்வம் நூறு வய
திவையுந்தர நீ கடவாயே.

மேன்மைப் படுவாய் மனமே கேள்
விண்ணி னிடிமுன் விழுந்தாலும்,
பான்மை தவறி நடுங்காதே,
பயத்தா லேதும் பயனில்லை,
யான் முன் னுரைத்தேன் கோடிமுறை,
இன்னுங்கோடி முறைசொல்வேன்,
ஆன்மாவான கணபதியின்
அருளுண் டச்ச மில்லையே.

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சோரா திருத்தல்; - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்;
சிந்தையே, யிம் மூன்றுஞ் செய்.



புனைவேன்" என்று சாற்றுவது செம்மையாக இருக்கிறதன்றோ!

"மணக்குள விநாயகா, வான் மறைத் தலைவா" என்றும் "ஏழையர்க்கெல்லாம் இரங்கும் பிள்ளை" "வாழும் பிள்ளை" - "மணக்குளப் பிள்ளை" என்றும் "வாழ்க புதுவை மணக்குளத்து வள்ளல் பாத மணிமலரே" என்றும் 'மங்களக் குணபதி' மணக்குள கணபதி என்றும் நான்கு இடங்களில் மகாகவி குறிப்பிட்டு விளித்துப் பணிந்து புதுவை மக்கள் அனைவரையும் விநாயகரிடம் ஈர்த்திட்டார். புதுவை மணக்குள விநாயகர் காணாபத்ய ஆகமப்படி புவநேச விநாயகரல்லவா? உலகத்தை ரக்ஷிக்கும் விநாயகர் என்பதைக் கருத்தில் கொண்ட மகாகவி பாரதியாரும் "உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல்" என்று மொழிந்திருப்பது ஆழ்ந்து நோக்குதற்குரியதாகும்!


மணக்குள விநாயகர்மீது மகாகவி பாரதி பாடிய இந்த நான்மணி மாலை பல வகைகளில் தனிச் சிறப்புடையதாகும். அத்வைத நிலை கண்டால் மரணமுண்டோ என்று சுயசரிதையில் கேள்வி எழுந்ததற்கு இங்கு விடைகூறுவது போல, "மரணமில்லை என்றும் வாழலாம்" என்பதை "அமரத் தன்மை எய்தவும் இங்கு நாம் பெறலாம் இஃதுணர்வீரே" என்று முடியும் அகவற்பா முழுவதும் பக்திக் களஞ்சியமாகும். உட்செவி திறக்கும். அகக் கண் ஒளி தரும்... போன்ற சிந்தனையைத் தூண்டும் தெய்வீகக் காட்சிகளாகும் என்பதை வலியுறுத்த எழுந்த வரிகளாகும்.

உள்ளத்தைத் தொட்டு பக்திப் பரவச உணர்வைத் தரும் வரிகளைப் பாருங்கள், இதோ! "பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன், கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்" என்கிறான் பாரதி. சூட்சமமான இதய வேட்கை ஏதோ ஒரு தேடல் முயற்சியைத் தெரிவிக்கிறதல்லவா? ரிஷி, ஞானி, சித்தர் நிலைப்பட்ட வாசகங்களாக வடிவெடுத்துள்ள வரிசையைப் பாருங்கள். "உலகெலாம் காக்கும்" என்று மொழிந்ததில் திருப்தி இல்லை போலும் பாரதிக்கு! புவநேசர் விநாயகரல்லவா மணக்குள விநாயகர்? அதனால் மண் மீதுள்ள மக்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள் யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே' இன்புற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே செய்தல் வேண்டும்" என தேவதேவா என்றழைத்து புவநேச விநாயகர் என்பதை மனதிலிறுத்திய வண்ணமாக மணக்குள விநாயகர் சந்நிதியில் மகாகவி மண்டியிடுகிற மாண்புக்கு இணையுண்டோ!

அத்துடன் நின்றுவிடவில்லை பாரதி! மேலும் கவிதை நகர்கிறது. பூ மண்டலத்தில் அன்பும் பொறையும் விளங்க வேண்டுகிறான். துன்பம் மிடிமை. நோவு சாவு எல்லாம் நீங்கி சார்ந்த பல்லுயிரெல்லாம் வாழ்க என்று பாரதி கேட்டாலும் உடனே 'மணக்குள விநாயகர்' திருச்செவி கொண்டு திருவுளம் இரங்க பாரதியைப் பார்த்து, "அங்ஙனே யாகுக!" என்பதாக விநாயகர் அருளுமாறு வரம் வேண்டி மணக்குளத்து வள்ளல் பாதமணி மலரை பாரதி பணிகிறான். இதில் தத்துவமான சிகரம் என்ன தெரியுமா? கவிக் கோமான் "ஞானாகாசத்து நடுவே நின்ற நான் பூமண்டலத்தில் அன்பும் பொறையும் விளங்குக" என்பேன் என்று மொழிந்துள்ளவை மணக்குள விநாயகரின் ஆதித் திருநாமமான புவநேச விநாயகருடன் பொருந்தி நிற்கும் பக்தி நிலைப்பட்டதாகும். புவனத்ரயம் என்பதும் மண்ணும் விண்ணும் கொண்ட பிரபஞ்சமே புவனம் என்பதும் ஆழ்ந்து நோக்குதற்குரியதாகும்.


இன்னும் தீர்க்கமாக புவநேச நாயகரின் தரிசனம் மகாகவிக்கு அவர்தம் அகநயனங்களில் காட்சி பட்டிருக்கிறது போலும்! அதனால் தான் யுகங்கள் தோறும் விநாயகர் வெவ்வேறு உருவம், நாமங்களுடன் விளங்குகிறவர் என்கிற சரித்திர உண்மையை உள்ளுணர்ந்த நிலையில் மணக்குள விநாயகர் நான்மணிமாலையில் கலியுகம் வீழ்ந்து கிருதயுகம் மேவுக என்கிறார்! பூலோகத்தார் கண்முன்னே கிருதயுகத்தினைக் கொணர்வேன் என்றே பாடியுள்ளார்! இது தெய்வ விதியென்றும் உறுதியாக மொழிந்துள்ளார்.

முத்கல புராணத்திலும் நான்கு யுகங்களிலும் வெவ்வேறு உருவிலும் நாமத்துடனும் விநாயகர் விளங்குவார் என்று காணப்படுகிறது. புவனத்தின் ஈசனாகிய கடவுள்தான் புவநேச விநாயகரான மணக்குள விநாயகர். பிரளயத்தால் யுகங்கள் மாறினாலும் உருவமும் நாமமும் மணக்குள விநாயகருக்கு மாறினாலும் புவநேச விநாயகர் எல்லா யுகங்களிலும் விளங்குகிறவர் என்ற பேருண்மையை வெளிப்படுத்தவே மணக்குள விநாயகர் சந்நிதியில் மகாகவி, 'கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த விரதம் நான் கொண்டனன்" என்று பாடிக் காட்டிவிட்டு அந்த கிருத யுகத்திலும் இதே விநாயகரை (புவநேசர் என்பதால்) "சுடர் விநாயகர் தாளிணை" வாழியே என்றவாறு மணக்குள விநாயகர் நான்மணி மாலையில் மனநிறைவு ஊட்டுகிற வரிகள் என்றும் தெய்விக இசையை நம் செவிகளில் மீட்டும்.



ஓவியம் : வினு

அருள்மிகு ஸ்ரீமணக்குள விநாயகர்



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் போட்டோ : டி. ஆர். சீனிவாசன்



"உனக்கும் எனக்கும் மட்டும்"

லட்சுமி ராஜரத்னம்

"இதோ பாருங்கோ, எனக்கும் வயசாயிட்டே வரது. காசிக்குப் போகணும் போகணும்னு சொல்லிண்டே ரெண்டு மாமாங்கம் ஓடிப்போச்சு. போயி ஒரு இருபது இருபத்தஞ்சு நாள் தங்கிட்டு வரணும். சரினு சொல்லுங்க. இந்தத் தீபாவளிக்கு அங்கே கங்கா ஸ்நானம் பண்ற மாதிரி ஏற்பாடு பண்ணுங்க" என்று கங்கா சொன்னதும் கலகலவென்று நகைத்தார் சின்னஸ்வாமி.

வெளியில்தான் சிரிப்பே தவிர உள்ளுக்குள் சின்னக் கலக்கம் துள்ளாமல் இல்லை. "உன் பெயர் தான் கங்காவாச்சே! நீ எதுக்குக் காசிக்கெல்லாம் போகணும். அதையும் தவிர உனக்கு என்ன வயசாச்சு? அம்பது ஒரு வயசா? உன்னைப் பார்த்தா அம்பதுன்னு சத்தியம் பண்ணினாக்கூட யாரும் நம்பவே மாட்டா" என்று தாஜா பண்ணிப் பார்த்தார்.

கங்கா அசையவில்லை. "நான் காசிக்குப் போகணும். அதுவும் தீபாவளிக்கே போகணும். ஏற்பாடு பண்ணுங்கோ".

அவர் உள்ளத்தில் சரம் சரமாய் சதா வெடிக்கும் வெடிகளும், சர்ரென்று கிளம்பும் ஏரோப்ளேன் வாணமும் யாருக்குத் தெரியும்? அந்த அதிர்வு முகத்தில் தெரியக் கூடாது என்று முகத்தைத் திருப்பிய பொழுது, உள்ளறை கண்களில் பட்டது. மேலாடை போவது தெரியாமல் தூங்கும் விஜி ஆழ்ந்த தூக்கத்தில் புரண்டு படுத்தாள்.

வயது பதினைந்து என்று சொன்னால் நம்பவே மாட்டார்கள். அப்படி ஒரு வளர்ச்சி. முகத்தில் குழந்தைத்தனம் மாறவில்லை என்பதுடன் மனத்திலும், மூளையிலும் ஐந்து வயதுக் குழந்தையின் வளர்ச்சிதான்.

இவளைக் கட்டிக் காப்பதே கங்காவுக்குப் பெரிய வேலை.

"என்ன பாவம் பண்ணினமோ, இப்படி வந்து பிறந்திருக்கே" என்று சலித்துக் கொள்வாள்.

கங்காவா பாவம் பண்ணினாள்? மற்றவர்களின் பாவங்களைத் தன்னுள் அடைத்துக் கொள்ளும் கங்கா மாதாவின் பெயரைக் கொண்டவள் அல்லவா? பாவம் செய்தவர் அவரல்லவா?

கல்லூரிப் படிப்பை முடித்து விட்ட சமயம்... வேலை காத்துக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டு - ஜோர் செய்து கொண்டு இளமையின் இரகசியங்களைத் தேடும் மன அலைப்பில் உழன்று கொண்டிருந்த இளைஞன் சின்னஸ்வாமி. ஜாதகம் சரியில்லை என்று வயதைக் கடத்திக் கொண்டிருக்கும் அக்கா ஒருத்தி. அவளுக்கு ஈடாக நானும் வரட்டுமா என்று வளர்ந்து வரும் தங்கை ஒருத்தி.

இளசுகளின் மீது பார்வைத் தாவல்களைக்கூட விடுவதற்குப் பயம்... அப்பா இடுப்பு பெல்ட்டைத் தூக்கினால் முதுகுத் தோல் பட்டை பட்டையாகப் பிய்ந்து போய்விடும் என்று உணர்ந்த அனுபவம்... அப்பாவின் கட்டுப்பாட்டுக்குள் தண்டச் சோற்று எடுபிடியாக உட்கார்ந்திருந்த வேளையில்தான் அத்தையின் கடிதம் வந்தது.

சின்னஸ்வாமிக்குப் படிப்பு முடிந்து விட்டதால் அனுப்பி வைக்குமாறு கேட்டு அத்தை கடிதம் எழுதி இருந்தாள். அத்தையின் கணவர் ரிஷிகேசத்தில் பண்டாவாக (குருக்கள்) இருந்தார். குழந்தை குட்டி இல்லை. கணீரென்று மந்திரங்களைச் சொல்லும் இவர் காலடியில் யாத்ரீகர்கள் பணத்தைக் கொட்டி விட்டுச் செல்லுவார்கள்.

அப்பாவின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் ஆவேசம். "அப்பா, கொஞ்ச நாள் போயிட்டு வரேம்ப்பா" என்று சின்னஸ்வாமி கெஞ்சினான்.

→

அப்பா முள்ளு முள்ளாக நெருடும் தாடையைத் தடவிக் கொண்டார். அத்தையின் மைத்துனர்கள் டெல்லி அரசில் நல்ல பதவியில் இருப்பவர்கள். தன் மகனுக்கு ஒரு வேலை போட்டு வைக்க மாட்டார்களா? அத்தைக்கும் இதைக் குறிப்பிட்டு உரிமையாகக் கடிதம் எழுதிப்போட்டு மகனை அனுப்பி வைத்தார்.

புதிய ஊர்... புதிய சூழல்... மொழியைப் புரிந்து கொள்ளத் துடிக்கும் பிரயத்தனம். அப்பாவின் கட்டுப்பாடு இல்லை... மேலாடை இல்லாமல் பெண்கள் சுரிதாரில் சிக்கென்று போகும் அழகு... மிகவும் பிடித்துப் போயிற்று சின்னஸ்வாமிக்கு. அத்தை அவனை ஸ்வாமி என்று சுருக்கிச் செல்லமாகக் கூப்பிடுவதும் பிடித்தது.

அது தீபாவளி மாலை. விசேஷ பூஜைக்காக ஹரித்வார் வந்தார் அத்தையின் கணவர். கூட ஸ்வாமியையும் அழைத்து வந்தார். தீபஒளித் திருநாளில் கங்கா மாதா பொன்னாடை போர்த்தியது போல ஜொலித்தாள். தீபங்கள் நதியில் மென்னடை போட்டன. மாமா பூஜையில் இருந்தார்.

"மாமா, இப்படியே வேடிக்கை பார்த்துட்டு வந்துடறேன்".

மெல்லக் கரையோரமாகவே நடந்தான். வேடிக்கை பார்த்துக் கொண்டே போன ஸ்வாமி ஒரு பெண் நதியில் தீபத்தை விடுவதற்காகக் குனிய இவன் கால் தடுக்கி நதியில் விழுந்தாள். குப்புறப் படியில் விழுந்ததால் தலையில் அடிபட்டிருந்தது. அவளை அப்படியே தூக்கி நிறுத்திக் கைக்குட்டையால் துடைத்தான்.

அவள் தன்னைத் திட்டுவாளோ என்று பயந்தான். முத்துப் புன்னகையைச் சிந்தினாள். அவன் சொக்கிப் போனான். ஓடிப்போய் பால் வாங்கிக் கொண்டு வந்து பருக வைத்தான்.

"டாக்டர்கிட்ட போகலாமா?" என்று பயத்துடன் கேட்டான்.

"வேண்டாம். நானே வீட்டுக்குப் போயி பச்சிலை பத்துப் போட்டுக்குவேன். மூலிகை ரிஸர்ச் செண்டர்லதான் வேலை பார்க்கிறேன். என் பெயர் மஞ்சு".

"என் பெயர் ஸ்வாமி".

"என் வீட்டுக்கு வாங்களேன்" விலாசத்தைக் குறித்துக் கொடுத்தாள்.

— இப்படி ஆரம்பித்ததுதான் மஞ்சு - ஸ்வாமியின் உறவு. அத்தை வீட்டைப் பற்றிக் கூறவில்லை அவளிடம். தனியாக பேச்சலர்ஸ் குவாட்டர்ஸில் இருப்பதாகக் கூறினான்.

மஞ்சுவும் தனியாக இருந்தது வசதியாகப் போயிற்று. நான்கு மாத காலம் இந்த உறவு இனித்தது.

அன்று மஞ்சுவைப் பார்க்க வந்த பொழுது அவள் இனிப்பை நீட்டினாள்.

"என்ன விசேஷம் மஞ்சு?"

"கெஸ் பண்ணுங்களேன் பார்க்கலாம்",

"ஊஹூம்... என்னால முடியாதும்மா".

"ஏதாவது ஊகித்துச் சொல்லுங்களேன்".

"ப்ரமோஷன் கிடைச்சுதா?"

"நோ நோ..." பலத்த குரலில் மறுத்தவள், "நீங்க அப்பாவாகப் போறீங்க" என்றாள் சுருதி குறையாத ஆரவாரத்துடன்.

இது மகிழ்ச்சியா? யார் சொன்னார்கள்? நெஞ்சை ஏதோ ஒன்று அடைத்தது. இந்த உறவில் இப்படி ஓர் இடர் உண்டு என்று தெரியவில்லையே? அனுபவம் இல்லாத அவன் விழித்தான்.

"கழுத்துல ஒரு தாலியைப் போட்டுடுங்க".

இவள் என்ன சாதி? என்ன குலம்? என்ன கோத்திரம்? அப்பா இதை ஏற்றுக் கொள்வாரா? கல்யாணத்துக்கு முன்னாடியே கையில் குழந்தையா? அப்பா இதையும் ஏற்றுக் கொள்வாரா?

வீறு கொண்ட ஆண்மையிடம் அவள் உரிமையைக் கேட்ட பொழுது, அது வீம்பில் விசுவரூபம் கொண்டது. இது மஞ்சுவுக்குத் தெரியாத விசுவரூபம். தன் விசுவரூபத்தைத் தானே கண்டு அதனுள் சிறுத்து அடங்கிப் போய்விடும் அச்சத்தைக் கண்டு அவனே நடுங்கினான்.

அத்தையின் வீட்டிற்கு வந்ததுமே மூட்டை கட்டத் தொடங்கினான். அத்தைக்கு ஒரே ஆச்சர்யம். இந்தப் பிள்ளைக்கு என்ன வந்தது?

"ஏண்டா, ரிஸர்வேஷன் கிடைக்க வேண்டாமா?"

"டெல்லி போறேன். அங்கே பார்த்துக்கறேன்".

கிளம்பி விட்டான். மஞ்சு தேடுவாளே என்ற கவலை துளிக்கூட இல்லை. இந்த உறவுக்கு அவள் மட்டுமே காரணம் என்ற நினைப்பில் அவள் நினைவைத் துடைத்தான். ரயிலின் விரைவு தொலைவை அதிகப்படுத்த அதிகப்படுத்த மஞ்சு என்ற ஒருத்திக்கு இழைத்த கொடுமை கடுகாய்ச் சிறுத்து மறைந்து கரைந்தது.

சென்னை வந்ததுமே அப்பாவின் ஏற்பாட்டால் பெரிய வேலை ஒன்று கிடைத்தது. கங்காவைக் கைப்பிடித்தான். பிரமோஷன் அது இது என்று வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. பெரிய மகன் தியாகு லண்டனில் இருக்கிறான். சின்னவன் பாபு நியூஜெர்ஸியில் இருக்கிறான். கடைசிப் பெண் விஜிதான் ஒரு தண்டனையாக இப்படி நிற்கிறாள்.

வேலை விஷயமாக டெல்லி போக நேரும் பொழுதெல்லாம் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லித் தப்பித்துக் கொண்டு வந்திருக்கிறார். ஆனால் இப்பொழுது கங்காவிடம் தப்பிக்க முடியவில்லை. இப்பொழுதெல்லாம் மஞ்சுவின் ஞாபகம் அடிக்கடி வருகிறது. என்ன குழந்தை பிறந்திருக்கும்? ஆணா, பெண்ணா? மஞ்சு குழந்தையை அழித்திருப்பாளா? இல்லை, தானே அழிந்திருப்பாளா?

நினைவுகள்தான் சுமையாகச் சேர்ந்தன.

"கங்கா, காசி போகலாம்னு சொல்றியே... விஜியை யார்கிட்ட விடறது?" என்ற சந்தேகத்தைக் கிளறிப் பார்த்தார்.

"என்னிக்கு அலை ஓயறது, என்னிக்கு ஸ்நானம் செய்யறது? அவளையும் கூட்டிண்டே போக வேண்டியதுதான். சாகற வரைக்கும் விஜி எனக்குக் கால்கட்டுதான். அதுக்குப் பிறகு பகவான் விட்ட வழி".

சொன்னதுடன் நில்லாமல் மும்முரமாக ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தும் விட்டாள் கங்கா.

கங்காவின் ஆசைப்படியே தீபாவளி நன்னாளில் நிஜமாகவே குளிரக் குளிரக் கங்கை நதியில் நீராடினார்கள்.

"நான் இன்னிக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கேன்" என்றாள் கங்கா.

மனைவியின் ஆசைப்படி பித்ரு காரியங்களையும் முடித்தாகி விட்டது. ஹரித்வார், ரிஷிகேசம் போய் பழகிய இடத்தைப் பார்க்கலாமா? மஞ்சு இன்னும் அங்கேயே இருப்பாளா, என்ன? தன்னை அடையாளம் கண்டு கொள்வாளா?

அறைக்குப் போய் படுத்த பொழுதே சிலுசிலு வென்ற நடுக்கத்துடன் குளிர் எடுத்தது. கண் எரிந்தது. உடம்பு கணகணவென்று இருந்தது.

"கங்கா, ஜுரம் வரும்போல இருக்குடி".

கங்கா தொட்டுப் பார்த்துப் பதறினாள். கைவசம் இருக்கட்டும் என்று தயாராக முன்கூட்டியே வாங்கி வைத்திருந்த மாத்திரைகளைக் கொடுத்தாள்.

"ஜில்லுனு விடியற்கார்த்தால குளிச்சது ஆகல்லே போல இருக்கு" என்றபடியே தண்ணீரைக் கொடுத்தாள்.

இரவா! பகலா! இருட்டா! வெளிச்சமா? நாளா,வாரமா, மாதமா - புரியத்தான் இல்லை.

எங்கிருக்கிறார்... நாக்கில் ஏதோ விழுகிறது. தண்ணீரா, பாலா? தெரியவில்லை.

உயிரோடு இருக்கிறாரா? இல்லையா? அவரால் உணர முடியவில்லை. மெல்லக் கண் விழித்தபொழுது, "கண் விழிச்சுட்டார்" என்று கங்காவின் குரல் வெகு தொலைவிலிருந்து கேட்பது போல இருந்தது. கங்காவின் உருவம் மங்கலாகத் தெரிந்தது. அருகில் ஒரு வாலிபனின் முகம்...

கங்கா, பைத்தியக்காரி... கவலைப்பட்டுக் கொண்டு தியாகுவை வரவழைச்சுட்டாளா என்ன? லண்டன் கூப்பிடு தூரமாவா இருக்கு?



"தியாகு" நாக்குக் குழறியது. பெயர் குழைந்தது.

அந்த வாலிபன் துண்டை எடுத்து முகத்தைத் துடைத்தான்.

"நான் தியாகு இல்லை. டாக்டர் ரவி".

கங்கா சின்னஸ்வாமியின் கரத்தைத் தடவிக் கொடுத்தாள். "இந்த டாக்டர் நம்ம தியாகுவைப் போலவே இருக்கார் இல்லையா?"

"என்னோட நர்ஸிங் ஹோம்ல இருக்கீங்க. ஒரு வாரமா கண்ணைத் திறக்காத ஜுரம்". ரவிதான் சொன்னான்.

அருகில் சின்ன மேஜையில் மருந்துகளும், பழங்களும், தண்ணீர் நிரம்பிய ஜக்கும்.

துக்கமும், வேதனையும் அவரை அலைக்கழித்தன. தன்னை வைத்துக் கொண்டு கங்கா என்னமாய்த் தவித்தாளோ?

"நீங்க தெய்வம் மாதிரி காப் பாற்றினீங்க டாக்டர்". ரவி சிரித் தான். "வயசுல நான் ரொம்பச் சின்னவன். என்னை வா, போன்னே கூப்பிடலாம். நான் உங்க மகன் மாதிரி".

"ஆமாமாம்... நீங்க... ஸாரி... நீ என் மகன் தியாகு மாதிரியே இருக்கே".

கங்கா, நன்றி பொங்க ரவியைப் பார்த்தாள்.

ஸோம வாரம் என்று கங்கா காசி விஸ்வநாதர் கோயிலுக்குப் போயிருந்தாள். சின்னஸ்வாமி ஓய்வாகப் படுத்துக் கொண் டிருந்தார்.

"எப்படி இருக்கீங்க?"

"வா ரவி, நல்லா இருக்கேன். என்னைக் காப்பாற்றின புண்ணி யம் உனக்குத்தான். நீ உத்தரவு கொடுத்தா ஊருக்குக் கிளம்ப லாம்னு இருக்கேன்".

ஊசியைப் போட்ட ரவி, "தாராள மாப் போகலாம். ஊருக்குப் போய் நான் எழுதித் தந்த மாத்திரை மருந்துகளை எல்லாம் விடாம சாப்பிடணும்".

"சரி... சாப்பிட்டாப் போச்சு. உனக்கு எந்த ஊர் ரவி?"

"ஒரிஸ்ஸா... அம்மா பேர் மஞ்சு. அவங்கதான் என்னை வளர்த்து பெரிய டாக்டராக்கினாங்க". ஜன் னலைத் தாண்டி பார்வை படர்ந்தது.

நெஞ்சில் சின்ன படபடப்புத் தோன்றியது.

"அப்பாவும் ஒரிஸ்ஸாவா?"

இது வேற மஞ்சுவோ... அல்லது மஞ்சு தன் ஊர்க்காரரையே மணந்துகொண்டிருப்பாளோ?

ஹங்... என்று ரீங்காரமிட்ட ரவி, "அப்பா யார்னே தெரியாது. ஐ மீன் என்னைப் பொறுத்த வரைக் கும் தெரியாது. அவர் ஒரு மதராஸின்னு அம்மா சொல்லு வாங்க".

நெஞ்சின் படபடப்பு அதி கரித்தது.

"எங்கம்மா எத்தனை கஷ்டப் பட்டு வளர்த்தாங்க தெரியுமா? லட்சியத்தோட வளர்த்தாங்க. அவங்க நினைச்சிருந்தா என்னை அழிச்சிருக்கலாம். ஆனால் அப் படிச் செய்யல்லே. வேற யாரை யும் மணக்கவும் இல்ல. அப்பா யார்னே தெரியாத அவமானம் எனக்கு இருந்தாலும், என் தாயோட தியாகம் தெரியணும்னு தான் என்னைப் பத்திச் சொல்றேன்".

வழிந்த வியர்வையை ஒத்திக் கொண்டார் சின்னஸ்வாமி. ஜன்னலிலிருந்து பார்வையைச் சின்னஸ்வாமியின் மீது ஊன்றிய ரவி திடுக்கிட்டான்.

"ஸார், உங்களுக்கு ஏன் இப்படி வேர்க்கிறது?"

"ஒண்ணுமில்லே... ரொம்ப டயர்டா இருக்கு. உன் கதையைக் கேட்டதனால இருக்கலாம்".



"நான் ஒரு முட்டாள். உங்ககிட்ட போயி இதை எல்லாம் சொல்லி கிட்டு..." என்றவன், துண்டால் அவர் முகத்தைத் துடைத்தான்.

"ஸ்லீப்பிங் டோஸ் தரேன். நிம்மதியா தூங்குங்க. நான் உங்க ஒய்ப் வந்தப்புறம் என் ரூமுக்குப் போறேன்" என்றவன், நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து, புத்தகம் ஒன்றைப் புரட்டினான்.

"உனக்கு வேலை ஒண்ணும் இல்லையா?"

"ட்யூட்டி முடிஞ்சாச்சு. ரூமுக்குப் போக வேண்டியதுதான். பேசாம தூங்குங்க".

கண்களை மூடிக்கொண்ட சின்னஸ்வாமி பத்தே நிமிஷத் தில் தூங்கத் தொடங்கினார். மனத்தின் அயர்ச்சி, தூக்கத்தின் அழுத்தம் எல்லாம் முனக லாகியது.

ரயிலில் சின்னஸ்வாமி, கங்கா, விஜி மூவரும் வசதியாக அமர்ந்து கொண்டார்கள். முதல் வகுப்புப் பெட்டி என்றாலும், கங்கா உற வினர்களுக்காகச் சாமான்களை வாங்கி அடைத்துக் கொண்டிருந் தாள். சின்னஸ்வாமியின் மனம் நிம்மதியாக இருந்தது. ரவிக்கு அவர்தான் தன் அப்பா என்பது தெரியாதே! தன்னைக் காப் பாற்றியதற்காக உதவுவது போல அவனுடைய நர்ஸிங் ஹோம் வளர்ச்சிக்காக ஒரு லட்ச ரூபாய் நன்கொடை கொடுத்திருந்தார்.

பெற்ற மகனுக்குத் தனது கடமையைச் செய்த உணர்வு பூரண நிம்மதியைக் கொடுத்தது. விஜியைப் பார்த்தார். அம்மாவின் மடியில் நிம்மதியாகப் படுத்துக் கொண்டு விரல்களைப் பிரித்துப் பிரித்து எண்ணிக் கொண்டிருந் தாள். தான் பிராயச்சித்தம் பண்ணி விட்டதால் இவளும் குணமடைந்து விடுவாளோ?

படுக்கையை விரித்த கங்கா, "போர்வையைப் போர்த்திக் கோங்கோ. கைப்பைல மாத்திரை இருக்கு. போட்டுக்கோங்கோ" என்று நினைவுபடுத்தியவள், தண்ணீரை எடுத்து வைத்தாள்.

கைப்பையைப் பிரித்தார். இதென்ன புதுக் கவர்? எடுத்துப் பிரித்தார். கைகளில் சின்ன நடுக் கம். அவர் ரவிக்குக் கொடுத்த செக். இது எப்படித் தன் பையில்

வந்தது? மெல்ல கவரைப் பிரித்தார். ரவியின் கடிதம் இருந்தது.

“மதிப்பிற்குரிய ஐயா,

நான் தங்கள் மகன் என்பது தங்களுக்குத் தெரியும். தூக்கத்தில் என் அம்மாவின் பெயரைச் சொல்லி உளறியதால் எனக்குத் தெரிந்தது. உறவும் புரிந்தது. என்றாலும் தங்களை என்னால் அப்பாவாக ஏற்க முடியாது. ஏனென்பது தங்களுக்குத் தெரியும். ஏனென்றால் மலராக அணைத்த என் தாய்க்குத் தாங்கள் முள்ளாகி விட்டீர்கள்.

அன்னையின் வயிற்றில் இருந்த பொழுது என்னைக் குத்திய முள் தாங்கள். என் தாய்க்குத் தாங்கள் எதுவும் செய்யவில்லை. அவளுக்குத் தரும் ஜீவனாம்சத்தை அவள் இல்லாத காரணத்தால் எனக்குத் தருவதாகத் தோன்றுகிறது.

வழி தவறி வந்த காளை வந்த தடத்தில் உள்ள பயிரை மேய்ந்து விட்டதால் பயிருக்குத்தான் நஷ்டம். காளைக்குச் சேதமில்லை என்று காட்டிவிட்டீர்கள்.

பணத்தைக் கொடுத்து என் தாயாரின் வாழ்க்கைக்கு நஷ்டஈடு செலுத்த முடியாது. பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன்.

பூமிக்கு நான் வரக் காரணமாக இருந்தவரே, அந்த நன்றியைக் காட்டத் தங்களைப் பிழைக்க வைத்துவிட்டேன்.

அன்புடன்

ரவி.”

"என்ன கடிதாசி அது?" கங்கா கேட்டாள்.

"மருந்துச் சீட்டு".

இது மருந்துச் சீட்டா... பாவ மன்னிப்பா... அவரை உணர்த்திக் குத்த வைத்த ஈட்டியா?


விஜி தூக்கத்தில் புரண்டாள். சிரித்தாள்.

இந்தத் தண்டனையை ரவி புரிந்து கொள்ளவில்லையோ?

கண்ணீரைத் துடைத்துக் கொள்ள முடியாமல் தவித்தார் சின்னஸ்வாமி.

எந்த கங்கை இவர் பாவத்தைத் தீர்க்கப் போகிறாள் என்ற தவிப்பு இருப்பதைப் போல ரயில் கடக் கடக் என்று ஓடியது.

மதியடா உயிர்களை



பாளை இளமாறன்

கன்று : பூமியின் கருவறையில் புறப்பட்ட நாங்கள்
தாவரக் குடும்பமாய் தரையில் நின்று
மானுடம் காத்தோம்; மனிதனே எந்தன்
தந்தையர் மரத்தை வெட்டிய துரோகி நீ!

மனிதன் : அன்னையின் வயிற்றில் ஆளான போதே
உதிரச் சுவையை உணர்ந்தவர் நாங்கள்.
வளர்ந்தோம்; எங்கள் வாழ்க்கைக் காக
உங்களை வெட்டி ஊனினை வளர்ப்போம்.

கன்று : மருந்தும் தைலமும் மனிதனே எந்தன்
தந்தையர் மரங்கள் தந்தனர் உமக்கு
என்பதால் வாழ்கிறாய்; இழிந்த பிறவியே!
எம்-குலம் வளர்த்தால் இருப்பாய் உயிருடன்.

மனிதன் : மரத்தை வெட்டி மறியல் போரும்
காட்டை அழித்து கடத்தல் கொள்ளையும்
செய்வோம் என்றும்; செழித்து வாழ்வோம்.
உங்கள் உயிரென்ன உயர்வா எமக்கு?

கன்று : மதியா மனிதா! மாரியும் பொய்த்து
மண்ணும் வெடித்து மண்ணுயிர் எல்லாம்
உற்பத்தி இழந்து ஒடுங்கினர் எதனால்?
எங்களை அழிப்பதால் ஏற்படும் விளைவடா!

மனிதன் : அரசியல் நடத்த அன்புரு தெய்வத்தால்;
இனமதவேறுபாட்டால்; இனிய மொழியால்
எத்தனை உயிர்களை அழிக்கிறோம் தெரியுமா!
நீஎன்ன கொம்பு நிறுத்தடா வாயை!

கன்று : வெற்று மனிதா! வெளிச்சு வாசமாம்
பிராண வாயுவை நிறுத்திட நாங்கள்
நினைத்தால் போதும் மரணம் உனக்கு
மமதை வேண்டாம் மதியடா உயிர்களை.

இரையும் இறையும்

சு. சமுத்திரம்

காற்றில் ஏறி விண்ணைச் சாடும் அந்தக் காகம், இப்போது மண்ணில் கிடந்தது. வரிசை வரிசையாய் இருந்த கடைகளில் ஓர் இரும்புக் கடைக்கு அருகே வெட்ட வெளியில் ஓர் ஓரமாய்ப் போடப் பட்டுள்ள இரும்புச்சுருள் கம்பி களுக்கும், சரளைக்கல் குவிய லுக்கும் இடையே பள்ளத்தாக்கு மாதிரியான இடத்தில் 'தலை மறைவாய்'த் தவித்தது.

தள்ளாடும் முதுமையில், சதி ராடும் இளமையும், அல்லாடும் அலுவலகத்தில் ஆட்டம் போட்ட கல்லூரியும், நமக்கு விலகி நின்று வேடிக்கை காட்டுவது போல் அந்தக் காக்கைக்கும் ஓர் அனு பவம்; பட்டறியும் அனுபவம். அதன் அலகிற்குள் ஆயிரக்கணக் கில் சிக்கக்கூடிய தட்டாரப் பூச்சிகளில் ஒன்று, அதோ அந்தக் காக்கையின் தலைக்கு மேல் வட்டமிட்டுத் திரிகிறது. அதன் இறக்கை விரிப்பே இதற்கு ஒரு விஸ்வரூப மாயையாய்த் தோன்று கிறது. அதன் கால் நகங்களுக்குள் சிக்கித் தவிக்கும் வெட்டுக் கிளி களில் ஓர் அற்பக்கிளி, அந்தக் காகம் கொத்தும் தொலைவிலேயே துள்ளிக் குதிக்கிறது. ஆனாலும் அந்தக் காகம், மேலே பறக்கும் பூச்சியையும், கீழே திரியும் வெட்டுக்கிளியையும் இரையாகப் பார்க்காமல், 'இறையாகவே' பார்க் கிறது. வெள்ளைக் கொண்டையும் கருப்பு மேனியும் முரண்பாடாக, அந்த முரண்பாடே ஓர் அழகாக வும் தோன்ற, கால்களை அடி வயிற்றில் இடுக்கி வைத்துக் கொண்டு, ஆகாயத்தைத் துழாவி, இறக்கைகளை மேலும் கீழுமாய் அடித்தடித்து, அதன் களைப் பிலோ அல்லது உழைப்பின் அனுபவிப்பாகவோ அந்த இறக்கைகளை ஆடாமல் அசை யாமல் விரிய வைத்து அந்தரத் திலேயே 'சவாசனம்' செய்யும் அந்தக் காகம் இப்போது பழைய நினைவுகளை நினைத்துத் தன் னையே பரிதாபமாகப் பார்ப்பது போல் முகத்தைச் சுருட்டி வைத் துக் கொண்டது. பத்து நிமிடத் திற்கு முன்புவரை உயிரோட்டத் திற்குஇறக்கை கட்டி விட்டதுபோல் வெட்ட வெளியில் ஒரு கருப்புக் கட்டியாய் சுற்றி வந்த இந்தப் பறவை ஜீவன் சாய்ந்து கிடந்தது. தென்னை மரத்தில் முறிந்தும் முறியாமலும் எப்போது வேண்டுமானாலும் அற்றுப் போக லாம் என்பது மாதிரி அந்த மரத் தில் தொங்கிக் கிடக்கும் பச்சை ஓலைபோல, அதன் ஒரு பக்கத்து இறக்கை சரிந்து கிடந்தது.

இவ்வளவுக்கும், அந்தக் காகம் எச்சரிக்கையோடுதான் செயல் பட்டது. அந்த இரும்புக் கம்பிச் சுருளுக்கு அப்பால் கிடந்த, ஒரு போண்டாத்துண்டைச் சர்வ ஜாக் கிரதையாகத்தான் வட்டமிட்டது. அதன் அருகே உள்ள உரு மணல் குவியலில் பறக்கும் யத்தனத்துடன் தான் அதைப் பார்த்தது. பிறகு கர்ப்பிணிப் பெண்போல், பையப் பைய நடந்து, அந்த எச்சில் போண்டா எங்கேயும் போய்விடக் கூடாது என்று நினைப்பதுபோல் அதற்கு இரண்டு கால்களாலும் வேலியிட்டுக் கொண்டே மீண்டும் ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்து விட்டே, அதன் வாயலகு கொத்தத் துணிந்தபோது, அதன் ஒற்றைக் கண் கடைமுன்னால் நின்ற மனிதக் காலடிகளை அளவெடுத்துக் கொண்டுதான் இருந்தது. இதற் குள் கண்ணுக்கு அப்பால் தெரிந்த ஒரு சொறி நாய் வருவதற்குள், அந்தப் போண்டாவைக் கொத்திக் கொண்டு அப்படியே அங்கு மிங்குமாய் இன்னொரு தடவை பார்த்துக்கொண்டு தெற்கு நோக்கி நாற்பத்தைந்து டிகிரி சாய்வில் பறக்கப் போனது. நாலடிச்சரிவு உயரத்தில் பறந்துவிட்டது. ஆனால், ஒரு ஆறடி பக்கத்துச் சுவரில் இருந்த பூனை அதே நாற் பத்தைந்து டிகிரி சாய்வில் பாய்ந்தது. இந்த இரண்டிற்கும் இடைவெளி இரண்டே இரண்டு அடிதான். விநாடிக்குள் விநாடி யான நேரத்தில் அந்தக் காகம் அலறியடித்து மேற்குப் பக்கமாகப் பறக்கப்போனது. ஆனால் அப் போதுதான் ஓர்ஆசாமி, நாலைந்து கம்புகளை உயரவாக்கில் தூக்கிக் கொண்டு பயமுறுத்துவதுபோல் போய்க் கொண்டிருந்தான். இத னால் அந்தக் காகம் பின்பக்கமாய் உள்வாங்கி, அப்படியே ஆகா யத்தில் எம்பத்தான் போனது. ஆனால் அதன் அச்ச வேகத்தில் இரும்புக் கம்பிகளுக்குள் சிக்கிக் கொண்டது. அது அங்குமிங்கு மாகத் துடித்தபோது, கீழே குதித்த பூனை இப்போது அந்தக் காகம் எங்கேயும் போய்விடக் கூடாது என்ற நிதானத்தில் உருமக்கூட்ச் சோம்பல்பட்டு, நிதானமாய் முன் கால்களை நகர்த்தி நகர்த்திப், போட்டது. அது எச்சில் போண்டா எங்கேயும் போகாது என்பதுபோல் கால்களை வேலியாக்கிப் பார்த் ததே ஒரு பார்வை, அதே மாதிரி யான பார்வை.

அந்தக் காகம், இந்த ஆபத் தைப் புரிந்துகொண்டது போல், உடம்பை அங்கும் இங்குமாய் சுழற்றியது. இரண்டு கால்களை யும் இரும்புச்சுருள் வளையங் களுக்குள் அழுத்திப் பிடித்த படியே உடம்பைக் கரகாட்டக்காரி போல் அங்குமிங்குமாய் சுற்றி, அக்கம் பக்கத்து மனிதர்களைப் பரிதவிக்கப் பார்த்து அவர்களின் அசட்டையில் அசந்து, பிறகு உயிர் காக்கும் வேகத்தோடு என்ன செய்ததோ, ஏது செய் ததோ, கண்ணிமைக்கும் நேரத் தில் அந்தக் கம்பியிலிருந்து தன்னை விடுத்துக் கொண்டது. உடம்பை அங்குமிங்குமாய் சுற்றிச் சுற்றி இரும்புக் குவியலுக்கும் மண் குவியலுக்கும் இடையில் போய் விழுந்தது. ஆனந்தமாய் பறக்கப் போனது. அப்போதுதான், அதற் கும் தெரிந்தது. இந்தத் தப்பிப்பு ஒரு தாற்காலிக மரண விடுதலை

மட்டுமே. ஒரு மரணம் உடலிலிருந்து ஏற்படும் ஓர் உயிர் விடுப்பே அன்றி ஆன்ம விடுவிப்பு அல்ல என்பதை அந்தக் காகமும் புரிந்து கொண்டதுபோல் தலையாட்டியது. இப்போது, தான் காகம் இல்லை என்பதையும் கண்டுகொண்டது.

அந்தக் காகம், ஆகாயத்தையே அண்ணாந்து பார்த்தது. அங்கே நாலைந்து காகங்கள் வட்டமடித்தன. அவற்றைக் கரைந்து கரைந்து கூப்பிட வேண்டும் போன்ற ஓர் உணர்வு. பிறகு, 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பதுபோல், அவை அங்கே வந்து மாரடித்துக் கத்தி இது இருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுக்குமே அன்றி, இதை உய்விக்க முடியாது என்பதைப் புரிந்ததுபோல் சும்மாவே கிடந்தது. முன்பு ஒரு குடியிருப்பு அருகில் இன்னொரு காகம் இப்படிக் கிடந்தபோது, மற்றொரு காகம் அதன்மேல் உட்கார்ந்து அதன் கொண்டையைக் கொத்தியதும், இது அந்தக் காகத்தை விரட்டியதும் நினைவுக்கு வந்தது. ஆகையால் 'வாழ்ந்து கெட்டவர்கள்' தமது உறவுக்காரர்களைப் பார்க்கக் கூசி ஒதுங்கிக் கொள்வதுபோல் கூனிக்குறுகிக் கிடந்த அந்தக் காகம் திடீரென்று கத்தியது.

அந்த சரளைக்கல் மேட்டில் அதே பூனை. சுட்ட சங்கு நிறம்; இடையிடையே வெள்ளையும் ஊதாவுமான புள்ளிகள். கழுத்தில் கறுப்பு வளையம். நான்கு கால்களையும் ஒன்றாகக் குவித்துக் கொண்டு வாலை முன்பக்கமாய் சுருட்டி ஒரு யோகி மாதிரி உட்கார்ந்து கொண்டு அந்தக் காகத்தைக் கண்களால் தேடியது. நீண்ட நாட்களாக இந்தக் காகம் பார்த்திருக்கும் பூனைதான். பல தடவை அது மரத்தில் ஏறும்போது இதே இந்தக் காகம், அதன் மேல் தாழப்பறந்து, தனது நகக் கால்களால், அதன் தலையைப் பிராண்டியிருக்கிறது. சத்தம் போட்டு மற்ற பறவைப் பிராணிகளை உஷார்ப்படுத்தியிருக்கிறது. அவ்வப்போது அதன் முதுகைத் தட்டி, 'உன்னால் இப்படிப் பறக்க முடியுமா' என்பதுபோல் கேட்டிருக்கிறது. ஆனால், இப்போதோ... காலம் கலிகாலம்.

அந்தப் பூனை, இந்தக் காகத்தை இப்போது பார்த்துவிட்டது. அதன் அசைவில் இரண்டு கற்கள் உருண்டோடின. அது ஒரே பாய்ச்சலாய் பாய்ந்தது. அதனருகே நெருங்கியது. கால்களால் இழுத்துப்போட்டு அந்தக் காகத்தை வாயால் கவ்வ வேண்டியதுதான் பாக்கி. உடனடியாக, இதனைப் புரிந்துகொண்ட அந்த முடக் காகம், அங்குமிங்குமாய்ப் பார்த்துப் பார்த்து அரற்றியது. பிறகு, தத்தித் தத்தி, துள்ளித் துள்ளி எப்படியோ குதிபோட்டு நகர்ந்தபோது, எங்கிருந்தோ வந்த சொறி நாய், அந்தப் பூனையைத் தடுத்தது. இரண்டு எதிர்மறைகள் ஒரு நேர்மறையாக, அந்தக் காகம் அந்தக் கட்டடக் கடைப்படிகளில் லேசு லேசாய் குதித்து, ஒரு பிளாஸ்டிக் கடையின் முகப்பில் போய் நின்றது. அங்கேயும் இங்கேயுமாய் நடமாடிய மனிதர்களின் காலடிக்குள் சிக்காமல் தலையை வளைத்தும் உடம்பை நெளித்தும், அந்த பிளாஸ்டிக் கடையின் எல்லை காட்டும் தடித்த மடிப்புத் தளத்திற்கு நடந்தது. அந்தக் கடையில் பிளாஸ்டிக் குடத்தை ஒருத்தியிடம் காண்பித்துவிட்டு, அந்தக் காகத்தைப் பார்த்த ஒரு லுங்கிக்காரன், அதைக் காலால் இடறி, கையை ஓங்கினான். அதுவோ, இரண்டு கைகளாலும் மாரடித்தது. இதற்குள், இன்னொரு முண்டாசு பனியன், "பாவம் பறக்க முடியாம அடிபட்டுட்டு போல... வாயில்லா ஜீவன்... நாமா எதுவும் செய்ய வேண்டாம்" என்றான். இதற்குள் அந்தப் பூனை அதற்கு எதிரே ஒரு சிமெண்ட் தூணின் அருகே இதையே குறி வைத்துப் பார்த்தது. உடனே இந்தக் காகம் உள்ளே ஓடிப்போய் அந்தக் கடையின் சாத்திவைத்த கதவுக்கு மறைவில் போய் நின்று கொண்டது. அவ்வப்போது எட்டி எட்டிப் பார்த்து, அந்தப் பூனையை நோட்டமிட்டது. அதுவோ, அங்கேயே தவம் இருப்பது போல் இருந்தது.

ஆயிற்று... மஞ்சள் சூரியன் மங்கிப் போய் மெல்லிருள் பரவியது. மாநகராட்சியின் எரியாத் தெருவிளக்குகள் இருளுக்கு இருள் சேர்த்தன. கடைகளில் மங்கலாக எரிந்த விளக்குகள் மஞ்சள் வெயிலாய் அடித்தன. மனித நடமாட்டம் உச்சக்கட்டத்திற்குப் போய் ஓய்ந்தது. செவியையும், புவியையும் கிழிப்பதுபோல் பாய்ந்த வாகனங்கள் ஆடி அடங்கின. இதற்குள் கடை முதலாளி வந்துவிட்டார். வேலைக்காரர்களைத் திட்டியபடியே அவர்களை வெளியேறச் சொன்னார். கடிகாரத்தைக் காட்டி, 'இன்னுமா கடைய மூடலை' என்பது மாதிரி கத்தினார்; வேலையாட்களில் ஒருவன் வாசற் கதவை இழுத்தபோது இந்தக் காகம், வாசலில் வந்து நின்றது. கடை முதலாளி அதட்டினார்.

"இது எப்படிடா இங்க வந்தது?"


"பாவம்... ரெக்கை உடைஞ்சிட்டு போலிருக்கு. பறக்க முடியாம தவிக்குது... அதனால்தான் கடைக்குள்ளேயே..."

"ஒப்பன் கடைன்னா இப்படிச் சொல்வியா... முட்டாள். முட்டாள்... காக்கா வீட்டுக்குள்ளேயோ, கடைக்குள்ளேயோ வந்தா, சனீஸ்வரன் வந்த மாதிரி... சனியனைத் தூக்கி வெளியிலே போடு... இப்பத்தான் புரியுது. வழியில ஒரு நாளும் கேட்காத வரி ஆபிசரு இன்னைக்கு ஏன் மாமூல் கேட்டான்னு..."

அந்த லுங்கிப் பையன், பூவைப் பிடிப்பதுபோல், அந்தக் காகத்தை மெல்லப் பிடித்து அதைத் தூக்கிக் கடைக்கு அப்பால் இருந்த சமதளத்தில் விட்டுவிட்டு, கதவை பூட்டினான். வேலையாட்கள், முதலாளியோடு, போனபோது, அந்தக் காகம் கத்தியது. எதிரே இருக்கும் பூனையைப் பார்த்துவிட்டு அவர்கள் காலடியில் போய் விழுந்தது. அது, கடை முதலாளியின் காலடி என்பதால், அந்தக் காகம் எதிர்வேகத்தில் தள்ளப்பட்டது. இதற்குள், அவர்கள் போய்விட்டார்கள். மனித நடமாட்டம் அற்றுப் போய்விட்டது.

ஆகக்கூடியது எதுவும் இல்லை என்பதுபோல், அந்தக் காகம் கண்ணை மூடிக் கொண்டு சுவரோடு சுவராகச் சாய்ந்தது. அப்போது உறுமல் சத்தம். அந்தப் பூனை அடிமேல் அடியெடுத்து அதை நோக்கி வந்தது. அதைப் பார்த்துவிட்ட காகம், அந்தச் சொறி நாயையே ஒரு கடவுளாக அனுமானித்து, அது வர வேண்டும் என்று பிரார்த்திப்பதுபோல் தலையைத் தூக்கியது. அதற்குள் அந்தப் பூனை பாய்வது போலிருந்தது. அதன் சீற்றச் சத்

தம் அதன் காதில் காற்றில் மோதியது. இறக்கையின் பின்னலகில் ஏதோ ஒன்று உரசுவது போலிருந்தது. ஏற்கெனவே வலித்த புண்ணில் வேல் பாய்வது போலிருந்தது. அவ்வளவுதான்.



அந்தக் காகத்திற்கு எப்படி அந்த வேகம் வந்ததோ, தரைபட்ட இற்க்கையைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு அரற்றியபடியே ஓடியது. ஒரு தூண் மறைவில் போய் நின்றது. சிறிது நேரம்... சிறிதே சிறிது... அந்தப் பக்கமாகப் பூனையின் கண்கள் கலர் பல்ப் போல் மீண்டும் தோன்றவே அங்கிருந்து ஓடி, ஒரு செங்கல் அடுக்கிற்குள் நுழையப் போனது. அதற்குள் அந்தப் பூனை இன்னொரு பக்கமாய் வந்து தலையில் நகம் போடப் போவதுபோல் இருந்தது. உடனே, அந்த நகக் காலுக்குக் கீழே தலையை லாகவமாகக் குவித்து, பூனையின் வாலுக்குப் பின்னால் ஓடி ஒரு வைக்கோல் குவியலுக்குள் போய் தன்னை மறைத்துக் கொண்டு மூச்சுவிட்டது. அருகேயே அந்தக் குவியலின் ஒரு பகுதி அங்குமிங்குமாய் அசைவதைப் பார்த்த அந்தக் காகம், அங்கிருந்து பீறிட்டு, தத்தித் தத்திக் குதித்துக் குதித்து ஓடியது. உயிர் வலி, உடம்பு வலியைத் துரத்த, அது ஓடி ஓடி ஒரு மின்சாரக் கம்பத்தின் அருகே களைப்புத் தாங்க முடியாமல் லேசாய் தலையைச் சாய்த்தது. அதற்கு முன்னாலேயே அதை எதிர்பார்த்து அங்கு வந்தது போல் அந்தப் பூனை, இப்போது கோபாவேசமாகப் பார்த்தது. இதுதான் அதை வம்புச் சண்டைக்கு இழுத்ததுபோல், உறுமல் சத்தத்தை இரட்டிப்பாக்கி, புலி பதுங்குவதுபோல் பதுங்கி ஒரே பாய்ச்சலாய்...

அந்தக் காகத்திற்கு எங்கிருந்து அவ்வளவு அசுர பலம் வந்ததோ. எப்படித்தான் வந்ததோ. வாயு வேகத்தைவிட, ஒலி வேகத்தைவிட அதிகமான ஒரு வேகம். அதுதான் மனோவேகமோ? இறுதி வேகமோ? ஏதோ ஒரு வேகம். அந்த வேகம் அதை உயரத் தூக்குகிறது. ஏழடி உயரத்தில் அதைத் தூக்கி நிறுத்துகிறது. ஒடிந்த இறக்கையை ஒட்ட வைக்கிறது. பிறகு இருபதடி இடைவெளிவரை அதைப் பறக்க வைக்கிறது. மனம் அடிக்கடி மாறக் கூடியதுதானே? அந்தப் பூனையை இப்போது நினைத்துப் பார்க்கக் கூட அதற்குத் திராணி இல்லை. எங்கே நிற்கிறோம் என்று தெரியாமலே, அந்தப் பூனை, எங்கே நிற்கிறது என்பதை, இப்போது போன பயம் வட்டியும் முதலுமாய் திரும்பி வர, சுற்று முற்றும் பார்க்கிறது. ஒரு சின்னக் குச்சி பட்டதைக்கூடப்பூனையின் நகமோ என்று மீண்டும் கத்தியபடி உற்று நோக்கிவிட்டு, அது பூனை இல்லை என்பதால் எதிர்ப்புறத்தைப் பார்க்கிறது... என்ன அது?

சற்று நேரத்திற்கு முன்புவரை, அதற்கு எமபயம் கொடுத்த அந்தப் பூனை ஏதோ ஒரு எமச் சக்கரத்தில் சிக்கி, அந்த நடுச்சாலையில் சதைப் பிண்டமாய்க் கிடக்கிறது. காக்கைக்குப் புரிகிறது. சந்தேகமில்லை. லேசாய் நின்ற ஒரு மோட்டார் பைக், கர்ஜித்தபடியே பயணத்தைத் தொடர்கிறது.

அந்தக் காகம், அலகைச் சாய்த்துப் பார்க்கிறது.

அந்தப் பூனைச் சதை மேல் ஏறிக் கொள்கிறது. பிறகு வெறி பிடித்தது போல், அதைக் கொத்துக் கொத்தென்று கொத்துகிறது. அந்தக் காகம், கொத்திய சதையைத் தின்னவில்லை. ஆனாலும் கொத்திக் கொண்டே இருக்கிறது.



வானவெளியில் மிகப் பெரிய தீபாவளி வாணங்கள்!

வி. ராமமூர்த்தி, ஐ.ஏ.எஸ்.

பல் முளைக்காத பொக்கை வாய்க் குழந்தைப் பருவம் முதல் மீண்டும் பொக்கை வாய் வர நேரும் தாத்தா பாட்டி வயது வரை, தீபாவளிப் பட்டாசின் இன்பத்தை நாம் அனுபவித்து மகிழ்கிறோம். காரணம் இது : இருளை நீக்கும் ஒளியில் ஜீவன்களுக்கு இயற்கையாகவே வசீகரம் உள்ளது.

அதுவும் இருளினிடையே தோன்றி மறையும் தன்மையில் ஒளி உள்ள போது அதற்கு மதிப்புக் கூடுகிறது. அதனால்தான் மேகத்தில் புகுந்து வெளி வரும் நிலவின் விகஸிப்பும், மின்னலின் கீற்றும், வானவெளியில் இரவில் வாரி இறைத்த ரத்தினக் கற்கள் போலத் தோன்றி, ஓயாது கண் சிமிட்டும் தாரகைகளும், நம் கவனத்தில் அவ்வளவு தூரம் நிற்கின்றன; கவிதையிலும், இலக்கியத்திலும் நிலையாக இடம் பெறுகின்றன.

பகலில் தீபத்தையோ, பூ மத்தாப்பூவையோ ஏற்றுவதற்கு அவசியமும் இல்லை, அதில் இன்பமும் இல்லை! சூரியனை விடச் சந்திரனே தயாளத்தில் மிக்கவன் என்று ஒரு விதூஷகக் கவி வேடிக்கையாகப் பாடினாராம் - ஏனென்றால், தேவையில்லாத பகற் பொழுதில் ஆதித்தன் தன் ஒளியைக் கொட்டி வீணாக்குகிறான்; மதியவனோ ஒளி மிகத் தேவைப் படுகிற இரவிலே தன் கிரணங்களை வழங்குகிறான் -


"காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தினும் மாணப் பெரிது"

என்னும் வள்ளுவர் மறையின்படிப் பார்த்தால் சந்திரனின் சமய சஞ்சீவி உதவி தானே பல படிகள் உயர்வு!

எனவே தான் தீபாவளியின், "தீப" ஒளி மகத்துவத்தை ஐப்பசி மாதம் அமாவாசைக்கு முந்தைய சதுர்த்தசி நாள் இரவிலும், அமாவாசை நாளில் சூரியன் உதிப்பதற்கு முன்பு அமையும் பிரும்ம முஹூர்த்த கங்குல் வேளையிலும், மீண்டும் அன்று மாலை போனபின்பு வரும், சந்திரன் வானிலே தோன்றாத இரவுப் பொழுதிலும், பாரதப் புண்ணியப் பூமியெங்கிலும் ஒளியினைப் பெருக்கி நாம் பண்டிகை கொண்டாடுகிறோம். (வெறும் தீபத்திலிருந்து பல் வேறு விதமாய் ஒளி தரும் மத்தாப்பு வகைகள் தோன்றியிருக்க வேண்டும்; இந்தப் பரிமாண வளர்ச்சியில் "ஒளியுடன் எனக்கும் கொஞ்சம்!" என்று கேட்டு ஒலியும் மகிழ்ச்சியுடன் இடம் பெற்றுச் சேர்ந்து கொள்ள, சப்தமே பிரதானமான வெடி வகைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்).

நரகாசுரனை இருளின் பிரதிநிதியாயும், சத்திய பாமா சமேதராய் அவனைப் போரில் வென்ற ஸ்ரீ கிருஷ்ண பெருமானைச் சக்ரதாரி ஜோதியாயும் எண்ணி ஒளியின் வெற்றியைத் தீபாவளியன்று ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம்.

குழந்தைப் பருவத்தில் தொடங்கி நாம் வளர வளர பட்டாசு—மத்தாப்பு மோஹமும் நம்முடன் கூடவே வளருகிறது! கொஞ்சம் கொஞ்சமாக நெருப்பைப் பற்றியும் திடீர் சப்தத்தைப் பற்றியும் நம்முடைய பயத்தின் அளவு குறைகிறது. எனவே, வயது ஏற, ஏற, துணிச்சலாய் - ஏன், சில சமயங்களில் ஆபத்தான அசட்டுத் தைரியத்துடனும்கூட நாம் வெடிகளுடன், வாணங்களுடன் விளையாடுகிறோம். ஊசி வெடியிலிருந்து, யானை வெடி, லக்ஷ்மி வெடி வழியாய் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு வெடி என்றும், கலர் மத்தாப்பு, சின்னக்கம்பி மத்தாப்பு, நீளமான கம்பியில் மருந்திட்ட வெள்ளி வெடி மத்தாப்பு என்றும் சின்னப் பென்ஸிலிலிருந்து பெரியத் தரைச்



சக்கரங்கள், பெரிய பெரிய பூஞ்சட்டி வாணங்கள் என்றும் - பெரிது, பெரிது, இன்னும் மிகப் பெரிது... என்று நம் ஆவல், மனித ஆசைக்கே ஒப்புக் காட்டுப் போல, வளருகிறது!

வெடிகளையும், வாண வகைகளையும் நாம் விடுகின்றபோது நம்முள்ளே எழும் ஆற்றலின் விழைவுக்கும் திருப்தி நிறைவு ஏற்படுகிறது. ஆண்டு பூராவும் எங்கோ சிவகாசி, கோவில்பட்டியில் நாமறியா எண்ணற்ற சின்னம் சிறு குழந்தைகள் அரை வயிற்றுக்கும், கால் வயிற்றுக்கும் - உயிரையும் பறிக்கக் கூடிய ஆபத்தான சூழ்நிலைகளில் - வேலை செய்து தயாரித்த வெடிப் பொருள்களை நாம் கடையில் காசு கொடுத்து வாங்குகிறோம்; சேர்த்து வைத்துப் பெருமை கொள்ளுகிறோம்; தீபாவளி வேளையில் நெருப்பினால் கொளுத்தி அப்போது உண்டாகும் ஒளியையும், ஒலியையும் நாமே தோற்றுவித்த மாதிரி உணர்ந்து, படைப்புக் கடவுள் பிரம்மாவின் உவகையையே அடைகின்றோம்!

ஆனால் நம்மில் சிலர் நாமாக வெடியும், வாணமும் விடாவிட்டாலும், மற்றவர்கள் அவற்றை விடுவதை வேடிக்கை பார்த்து மகிழுகிறோம். நம்முடையதாகக் காசு கொடுத்து வாங்கி அடுக்காது, மற்றவர்கள் அப்படி வாங்கி, அடுக்கி வைத்து, அழகு பார்த்து, அவர்கள் கொளுத்தி மகிழும் வாண வேடிக்கைகளைப் பார்த்தே நம்மில் சிலர் இன்பம் கொள்கின்றோம்.

இந்தத் தன்மை நிறைய உடையவர்களும் ஆராய்ச்சி நாட்டம் நிறைந்தவர்களும், வருடத்தின் அனைத்து நாட்களிலும் - அந்த நாட்களின் தெள்ளிய வான் காட்டும் இரவுகளில் - தீபாவளியின் ஒளிமயமான வாண வேடிக்கையைக் காண முடியும்! யார் இந்த அரிய பெரிய பாக்கியத்துக்கு உரியவர்கள் என்கிறீர்களா? அவர்கள்தாம் வானியலுக்குத் தம் வாழ்வையும், ஓய்வு நேரத்தையும் முறையே அர்ப்பணித்துக் கொள்ளும் தொழில் ரீதி (professional) மற்றும் நாட்ட ரீதி (amateur) ஆராய்வாளர்கள்!

தெள்ளிய ஓர் இரவில் மேகங்கள் மறைக்காத வான விதானத்தில், நிலவொளி அதிகம் பரவாத நாட்களில், சாதாரணப் பார்வையுடன் நாம் கிட்டத்தட்ட ஈராயிரம் விண்மீன்களைப் பார்க்க முடிகிறது. சூரியனைச் சுற்றி நம்முடைய பூமி 365 1/4 நாட்களில் ஒரு பிரதிக்ஷணம் வருகிறது. இந்த ஓர் ஆண்டுக் காலத்தில் எல்லா இரவுகளும் தெளிவாய் உள்ளன, எல்லா இரவுகளிலும் நாமும் சோராமல், தவறாமல் வானை நோக்குகிறோம், என்று வைத்துக் கொள்ளுங்கள்! பூமியின் நீள்வட்டப் பாதையினால் வான் வெளியின் பலவேறு பகுதிகள் ஆண்டின் போக்கில் தென்படுமாதலால், உங்கள் வீட்டு மொட்டைமாடியிலிருந்து நீங்கள் பார்க்கும் எல்லா நக்ஷத்திரங்களையும் கணக்கிட்டு மொத்தம் பண்ணினால் 3,500-லிருந்து 4,000 வரையில் தேறும்! நாட்டரீதியில் வானியல் பயின்று, முதலில் பைனாக்குலர், அப்புறம் சின்ன டெலஸ்கோப், என்று கருவிகளைப் பயன்படுத்தினால், நீங்கள் பார்க்கக் கூடிய தாரகைகள் இன்னும் ஏராளம்! தொழில் ரீதி வானியலர் ஆகி, ஆராய்ச்சி நிறுவனங்களின் வசதிகளுடன் வானத்தைப் பார்ப்பீர்களானால், கோடானுகோடி கோடி நக்ஷத்திரங்கள் தென்படும். பூமியின் காற்று மண்டலத்திலிருந்து விடுபட்ட, அமெரிக்காவின் HUBBLE டெலஸ்கோப் மாதிரி ஒரு மிக நவீனக் கருவியின் துணை சேர்ந்தால் நீங்கள் பார்க்கக் கூடிய எண்ணிக்கையைக் கணக்கிட்டுக் கம்ப்யூட்டர்கள் அச்சிலே காட்ட, உலகில் உள்ள அனைத்து வகைக் காகிதமுமே போதாது! இவையெல்லாமும்கூட இன்று வரை விஞ்ஞானம் வளர்த்த மனித யத்தனத்தின் அளவிற்கெட்டிய படிதான்: இந்த யத்தனத்திற்குப் புலப்படும் இவ்வளவு பெரிய எண்ணிக்கையும் பிரபஞ்சத்தில் உள்ள நக்ஷத்திரங்களின் எண்ணிக்கையில் கோடானு கோடானு கோடானு கோடிக் கோடிக் கோடியில் ஒன்று - ஒரே ஒரு என்னும் பங்குதான்!...

சரி, வாணங்களுக்கு வருவோம் மீண்டும். கம்பி மத்தாப்பு வெடியிலிருந்து சிதறும் ஒரு துணுக்கு மாதிரி வானிலே நம் சாதாரணக் கண்களுக்கு இரவு வானில் தெரியும் ஒவ்வொரு நக்ஷத்திரமும் உண்மையில் ஒரு சூரியன்! தாரகைகள் பலவற்றைச் சுற்றி, நம்முடைய சூரியனுக்கு, புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்ட்யூன், ப்ளூட்டோ என்று அமைகிற மாதிரி - கிரகக் குடும்பங்கள் இருக்கலாம்.

தானே ஒரு தாரகையான நம் சூரியனின் விட்டம் 866,000 மைல்கள் என்று கணக்கிட்டுள்ளார்கள். நம் பூமியிலிருந்து 93,000,000 மைல்கள் தொலைவில் சூரியன் உள்ளது. சூரியனின் குடும்ப கிரஹங்களில் நம் பூமியின் விட்டத்தை ஒன்று என்று அலகு வைத்துக் கொண்டால், குடும்பத்தின் மாபெரும் "அண்ணா"வான வியாழ கிரஹத்தின் கோள விட்டம் கிட்டத் தட்ட 11 சூரியனின் விட்டம். இதே கணக்கில் தோராயமாக 109 அலகுகள்! ஹைட்ரஜனை ஹீலியமாக மாற்றும் அணு இயல் இயக்கத்தின் மூலம் சூரிய கோளம் ஏராளமாய் ஒளியையும், ரேடியோக் கதிர்களையும் உருவாக்கி உமிழ்கிறது - நாற்புறங்களிலுமாய். இந்த சக்திசாலையின் மையப் பகுதிகளில் வெப்ப நிலை 130,000,000 டிகிரி ஸென்ட்டிகிரேட்! அடுத்த கோடையில் கத்திரி வெயில் பகலில் 42 டிகிரி அளவைத் தொடுகையில், "நல்ல வேளை, நம்முடைய பூமி சூரியனுக்கு இன்னும் கொஞ்சம் அருகாமையில் அமையவில்லை" என்று எண்ணி சந்தோஷப்படுங்கள்!

எவ்வளவு பெரிய வானம் நம் சூரியன்! ஓய்ச்சல், ஒழிச்சல் இல்லாமல் ஒளியையும், வெப்பத்தையும் பெருக்கும் அது ஒவ்வொரு வினாடியும் 4,000,000 (நான்கு மில்லியன்) டன்கள் அளவு தன் அடர்த்தியை ஒளி, ரேடியோக் கதிர் - வெப்ப சக்தியாக மாற்றி வெளியே ரேடியோவிஷன் முறையில் அனுப்புகிறது.

மேலே உள்ள பாராவை நீங்கள் படிக்கும் மிகக் குறுகிய காலத்தில் சூரியனிலிருந்து 60 மில்லியன் டன்கள் எடை சக்தியாகி வெளியே போய் விட, அந்த அளவிற்குச் சூரியனின் பளு குறைந்துள்ளது! இந்த ரீதியில் ஒரு நிமிடத்தில் 60 வினாடி, ஒரு மணி நேரத்தில் 60 நிமிடங்கள், ஒரு நாளில் 24 மணி நேரம், ஓர் ஆண்டில் 365 1/4 ஓ 24 மணிகள் என்று கணக் கிடுகையில் ஓர் ஆண்டில் 365.25 X 24 X 60 X 60 X 4 மில்லியன், அதாவது முப்பத்தியொரு மில்லியன் மில்லியன் ஐந்நூற்று ஐம்பத்தேழு ஆயிரம், அறுநூறு டன்கள் (தலை சுற்றலைக் கொஞ்சம் குறைப்பதற்காக இங்கு மெட்ரிக் அளவில் மாற்றம் செய்யவில்லை!) சூரிய எடை சக்தியாகி ரேடியோவிஷன் மூலம் வெளியேறி விடுகிறது!

இந்த ரீதியில் எவ்வளவு காலமாக சூரிய வானம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது தெரியுமா? குறைந்த பக்ஷம் 4,5000 மில்லியன் (4500,000,000) பூமி ஆண்டு களாக இந்த எரிதழல் விளையாட்டு இடையூறோ, தடங்கலோ இல்லாமல் நிகழ்ந்து வந்துள்ளது என்று விஷயம் தெரிந்த வல்லுனர்கள் கையிலடித்துச் சொல்லுகிறார்கள்! "அடேடே, இப்படி ஒரே ஊதாரித்தனமாகத் தன் முதலைச் சூரிய கோளம் இழந்து வருகிறதே!" என்று கவலை தோன்றுகிறதா? அந்தக் கவலையை விட்டு விடுங்கள்! ஏனென்றால், ஒரு நூறு மில்லியன் ஆண்டுகளில் சூரியன் தன் பொருள் சொத்தில் ஒரு மில்லியனில் ஒரு பகுதி யைத்தான் செலவிடுகிறது! நம்முடைய சூரியனுக்கு ஆயுள் ரேகை பலமாகவே உள்ளது என்றும், இன்னும் 5,000 மில்லியன் ஆண்டுகளுக்கு அதற்கு மரண தசை வராது என்றும் வானியலர்கள் சொல்லுகிறார்கள்! ஆக இந்த 1992ஆம் ஆண்டு தீபாவளியிலிருந்து இன்னும் 5,000 மில்லியன் (5000,000,000) ஆண்டு களுக்குச் சூரியன் ஜீவித்து ஒளிருவதற்கு வாய்ப்புகள் பிரகாசமாகவே உள்ளன. மனித இனத்திற்குத்தான் அவ்வளவு தூரம் ஆயுள் கெட்டியா என்று சொல்ல முடியவில்லை!

சூரியனைப் பற்றி இவ்வளவு விலாவாரியாகத் தெரிந்து கொண்டதும் "ஆஹா, வானவெளியில் எவ்வளவு பெரிய வாணம்!" என்று அவசரப்பட்டு, அதற்குள்ளே மூக்கின்மேல் நீங்கள் விரலை வைக்க வேண்டாம்.

வானவெளியில் இன்னமும் எவ்வளவோ பெரிய பிஸ்தாக்களும், பிஸ்தாக்களுக்குப் பிஸ்தா ஆகும், வஸ்தாது வாணங்களும் உள்ளன.

பிரபஞ்சம் விரிக்கும் பட்டாசுக் கடையில் நம் முடைய சூரியன் ஒரு வெங்காய வெடி, அவ்வளவு தான்; அதற்காக நாம் அதிகம் நொந்து கொள்ளவும் வேண்டாம், வெங்காய வெடிக்கும் எளியவைய''ப் நிறையப் பொட்டு வெடிகள் உண்டே!

நம்முடைய சூரியனைப் போன்றே பரிமாணம் கொண்ட தாரகைகள் பிரபஞ்ச விஸ்தாரத்தில் நூற் றுக்குத் தொண்ணூறு சதவிகிதமாய் மண்டியுள்ளன; பாக்கிப் பத்து விழுக்காட்டிற்குள்தான் இதனைப் போலப் பன்மடங்கு வலிய பெரியவையும், இதைக் காட்டிலும் மிகச் சிறியவையுமாக நக்ஷத்திரங்கள் உள்ளன. ஆக, நம்முடைய கிரஹ மண்டலக் குடும்பத் தலைவர் ஒரு சராசரிப் புள்ளி!


இவரைக் காட்டிலும் சிறியவர்களை விட்டிடுவோம் - வாணங்களில் பெரிய வாணங்களைப் பார்ப்பது தானே நம்முடைய நோக்கம்?

நம்முடைய சூரியனை ஒப்பு வைத்து நோக்கினால், இதனைப் போல நூறு மடங்கும் இன்னும் பெரிய அளவுமுடைய சில தாரகைகள் பிரபஞ்ச வெளியில் உள்ளன. யோசித்துப் பாருங்கள்; சூரியனைப் போல 100 மடங்கு பெரிது என்றால் அத்தகைய கோளத்தின் விட்டமே 86,500,000 மைல்கள்! அன்ட்டாரிஸ் (ANTARES) என்று தாரகையின் கோளம் எவ்வளவு பெரிதென் றால் நம்முடைய சூரியனின் மையத்தில் தொடங்கி, புதன் சுற்றும் பாதையைக் கடந்து, சுக்ரனின் தடத்தையும் தாண்டி, நம்முடைய புண்ணிய பூமி கோளத்தையும் கடந்து செவ்வாய் கிரஹத்தின் ரஸ்தாவுக்கும் அப்புறம் போய் சில ஆயிரம் மைல் களைக் கொசுறாகச் சேர்த்துக் கொண்டால், அதன் விட்டம் அமையும்! அன்ட்டாரிஸ் "சிவப்பு பூத" (RED GIANT) வகை தாரகை; அதன் அளவு இவ்வளவு இம்மாம் பெரிது!

எவ்வளவு பெரிது என்று ஆகிருதியால் அளக்கை யில் பிரும்மாண்டமான பூதகணத் தாரகைகள் இருப் பதுடன், ஒளியை உமிழும் திறனிலும் நம் சூரியனிலும் மிகவும் சிறந்த நக்ஷத்திர உயர்வாளர்கள் உண்டு - அவற்றுள் சில நம்முடைய சூரியனின் சக்தியை சும்மா 1,000,000 (ஒரு மில்லியன், அதாவது பத்து லக்ஷம்) என்ற எண்ணால் பெருக்கினால் கிடைக்கும் ஆற்ற லுடன் ஒளிர்கின்றன. நீலம் தோய்ந்த வெண்ணிறமாய் ஒளிரும் இவற்றிற்கு ஓர் உதாரணம் ஒரையன் (ORION) அமைப்பில் உள்ள ஐயோட்டா (IOTA) ஆகும்.

நமக்குத் தெரிய வந்துள்ள தாரகைகள் அனுப்பும் ஒளியில் தெரியும் வண்ணத்தைக் கொண்டே அவை உமிழும் சக்தியை அளவிடலாம். வானவில்லின்





வர்ண ஜாலத்தில் ஊதாவும், நீலமும் உள்ள பகுதியில் ஒளிர்பவை மிகவும் சக்தி மிக்கவை (வெல்டிங் செய்யும் தொழிலாளரின் கருவி எழுப்பும் நிறத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்!) ஆரஞ்சம், சிவப்பும் தோன்றும் வானவில் பகுதி நிறங்கள் குறைந்த சக்தியை வெளியிடும் தாரகை வாணங்கள்.

நம்முடைய சூரியனின் ஆற்றல் எப்படி? இதன் ஒளி அதி தீவிர நீல வகையினதும் இல்லை, அணையப்போகும் சிவப்பின் தன்மையிலும் இல்லை - இரண்டுக்கும் இடையிலே உள்ள மஞ்சள் நிறமானது நம் இரவி - மங்களகரமான மஞ்சள்! ஆகிருதி வழியில் பார்த்தாலும் நம்முடைய சூரியன் பூதமும் (GIANT) இல்லை, குள்ள (DWARF) வேஷத்தில் "அப்பு"க் கமலும் இல்லை - நடுத்தர, மத்யமர் வர்க்கம்.

நம் சூரியனுக்கு ஆயுள் ரேகை கெட்டி என்பதற்கு இந்த மஞ்சள் நிறமே சுபசகுனம். வானவெளியில் சிவப்பாய் ஒளிர்ந்து காணும் தாரகைகளை வல்லுனர்கள் அந்திம நிலையில் உள்ள பேஷண்ட்டுகளை டாக்டர்கள் பார்ப்பது போலப் பார்ப்பார்கள். எந்நேரமும் ஆட்டம் 'க்ளோஸ்' ஆகலாம்!

இந்த இறுதி நிலை வருகையில் பல தாரகைகள் மஹோன்னதமாய் தீபாவளி கொண்டாடி நாடகத்தை முடிக்கின்றன! ஒளிப்பிழம்பான தாரகைக் கோளங்களின் ஆயுள் இயக்கம் பொதுவாக இரண்டு சக்திகள் ஒன்றுக்கொன்று ஈடுகொடுக்கும் 'உறவைப் பொறுத்தே அமைகின்றன. ஒரு புறம் கோளத்தின் பரப்பிலிருந்து ரேடியேஷன் மூலம் வெறித்தனமாய் நானாபுறமும் வெளியேறிக் கொண்டேயிருக்கும் ஒளியின் வேகம். இதற்கு மறுபுறமாய் கோளத்தின் மையத்தை நோக்கிப் பிற பகுதிகளைத் தன்பால் ஸதா இழுத்துக் கொண்டே இருக்கும் ஆகர்ஷண சக்தி. இவற்றின் சமநிலைப்பாடு தொடரும் வரையில் தான் தாரகை இருந்து கொண்டிருக்கும். உள் மையத்திலிருந்து ஈர்க்கும் ஆகர்ஷணத்தை மீறி மேற்பரப்பிலிருந்து கதிர்கள் பரவும் வேகம் அதிகமாகிவிட்டால் - கடைசித் தீபாவளியைக் கனஜோராகக் கொண்டாடிக் கதையை முடிக்க அந்த நக்ஷத்திரம் தயார் என்று அர்த்தம். அதன்பின் எக்கணமும் நக்ஷத்திரக் கோளம் வெளிப்புறமாய் வெடித்துச் சிதறிவிடும். இத்தகைய அந்திப் பிரகாசத்தை அடையும் நிலையில்தான் ஒரு தாரகை நோவா (NOVA) என்று அழைக்கப்படும் மாபெரும் வர்ணம் ஆகிறது.

நோவா என்ற பெயர் லத்தீன் மொழியில் பிறந்தது. "நவ" என்று வடமொழியிலும், "NEW" என்று ஆங்கிலத்திலும், உள்ள பதங்களுக்கு இணையானது. நாவலைத் தமிழில் புதினம் என்கிறோம் அல்லவா? NOVA-வைப் "புது விண்மீன்" என்று மொழிபெயர்க்கலாம். ஆனால் நாம் மேலே கண்ட சரித்திரத்தின்படி நோவா 'புதிய' தாரகையே அல்ல! நெடுங்காலம் வாழ்ந்து, இறுதிக் கட்டத்தில் பல கோடி மடங்கு பிரகாசமாய் வெடித்து எரிந்து, பிறகு மங்கி அடங்கிப் போவதே நோவா! (நோவாக்கள் அடங்கிய பின் ஒரு நக்ஷத்திரமாய்த் தொடர்வதும் உண்டு)

வெளி நோக்கிச் செல்லும் கதிர்களின் இழுப்பு சக்தி, மையத்து ஆதார ஆகர்ஷணத்தைவிட அதிகமாகும்போதும், வேறு காரணங்களினாலும், வானின் முடிவை எட்டும் விண்மீன் பொங்கும் பாலின் மேல் பரப்பு மாதிரியும், உட்புறத்திலிருந்து வெளிநோக்கி உப்புகிறது. ஓரளவைக் கடந்ததும், பல்லாயிரம் கோடி ஹைட்ரஜன் குண்டுகள் ஒரு சேர வெடிப்பது போல - டமால்!

இந்தச் சப்தம் நமக்குக் கேட்பதில்லை. ஆனால் விநாடிக்கு 1,86,000 மைல்கள் வேகத்தில் நாற்புறமும் பரவும் அந்த வெடிப்பின் ஒளி சாட்சியம் பூமியை எட்டும்போது, இங்கே வானுலாவும் கண்ணுடன் ஆராய்ச்சி செய்யும் அஸ்ட்ரானமர்களின் குலம் "இதோ, புதிதாய் ஒரு நோவா!" என்று கண்டு பிடிப்பின் மகிழ்ச்சியில் திளைக்கிறது. நம்முடைய பூமியான உலகம் முழுதும் செய்தி பரவுகிறது. இன்றைய டெலிவிஷன் யுகத்தில் நம் வீட்டிலேயே நாம், வானியல் வல்லுனர்கள் டெலஸ்கோப் வழியாகக் கண்டதைக் கலர்ப் படமாகவே காணலாம். "ஸ்டார்" விஷயமாகையாலும், வழக்கப்பிரகாரமாயும், ஸ்டார் டி.வி., ஸி.என்.என். எல்லாம் நோவா பற்றிய செய்தியைப் படமாகக் காட்டிய பிறகு மெள்ள மெள்ள, மெ-து-வா-ய் தூர்தர்ஷன்கூட இந்தக் காட்சியை ஒளிபரப்பக் கூடும்!

பல மில்லியன் ஆண்டுகளாய்ச்சீராகப் பரப்பின ஒளி முழுதையும் ஒருங்கிணைத்து ஒரு சில வாரங்களிலேயே வாரி இறைக்கின்றது நோவா. ஸூப்பர் நோவா வகை வெடிப்புச் சிதறல்கள்தாம் நோவா தோற்றும் வாணத்தை விடப் பெரிதானவை. அவை மிக மிக அரிதானவையும்கூட. அவற்றின் இலக்கணமும் கொஞ்சம் வேறானது.

நோவா வாண அதிசயத்துடன் இந்தத் தீபாவளி மலர் வரலாற்றை நிறைவு செய்வோம். வினாடிக்கு 2,500 மைல் போகும் வேகத்தில்நோவா ஆகிவிட்ட நக்ஷத்திரத்தின் எரியும் பொருள்கள் விண்வெளியில் சிதறுகின்றன. பல்லாயிர லக்ஷம், கோடிக்கணக்கான மைல்கள் பரவுகின்றன. சில நாட்கள், வாரங்கள், மாதங்கள் என்று வெடிக்கின்ற தாரகையின் கனபரிமாணத்தைப் பொறுத்து, இந்த அகண்ட வாண வேடிக்கை நிகழும். பிறகு எல்லாமே மங்கி விடும். தீபாவளிக்கு மறு நாள் தெருவில் குப்பையாகக் கிடக்கும் எரிந்து போன வாணங்களின் கருகிய பாக்கி மாதிரி எரிந்து போன நக்ஷத்திரத்தின் இருப்பும் அங்கே எங்கேயோ கிடக்கும்!

நோவா வாணங்களின் இந்த வரலாற்றில் கடைசியாக, தீபாவளியையும், கிறிஸ்துமஸ் பண்டிகையையும் இணைக்கும் ஒரு செய்தியையும் பார்ப்போம்.

ஏசு கிறிஸ்து காலத்திற்கு முன்பிருந்து ஒளியை வழிபட்டு வந்த மரபினரின் முன்னுதாரணத்தைப் பின்பற்றி, ஏசு பிறந்த திருநாள் (டிஸம்பர் 25ந்தேதி) ஒளிரும் புதிய நம்பிக்கை சகாப்தத்தின் துவக்கமாகக் கொண்டாடப்படலாயிற்று என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். இவர்களின் கூற்றின்படி, மத்திய கிழக்கில் ஜெருசலத்தின் அருகில் பெத்தலஹேம் கிராமத்தில் ஒரு மாட்டுக் கொட்டிலில் ஏசு பிறந்தது கி.மு. 5ஆம் நூற்றாண்டில்! அந்த உய்விக்கும் அற்புத ஜனனத்திற்கு முன்பிருந்தே, மூன்று பேரறிவாள வித்தகர்களை (MAGI) அது நிகழவிருந்த பெத்லஹேமிற்கு, கீழ்வானில் புதிதாய்த் தோன்றி அதீதமான பிரகாசத்துடன் ஒளிர்ந்த, ஒரு நக்ஷத்திரம் வழிகாட்டிற்று என்று விவிலியம் கூறும்.

அதே காலக் கட்டத்தில், அதாவது கி.மு. 5ஆம் ஆண்டிலும், கி.மு. 4ஆம் ஆண்டிலும் இரண்டு கண்கவர் நோவாக்கள் மத்திய கிழக்கு நாடுகள் பகுதிகளில் கீழ்வானில் தோன்றி ஒவ்வொன்றும் நெடுங் காலம் ஒளிர்ந்தன என்பதற்குச் சரித்திர ஆதாரங்கள் உள்ளன!

ஏசு கிறிஸ்து பிறந்தது உண்மை. அந்தத் தூய ஜனனம் கி.மு. 5 அல்லது 4இல் நிகழ்ந்திருக்கலாம். அப்படியெனில், மூன்று வித்தகப் பெருமக்களைக் கொட்டிலுக்கு வழி நடத்திச் சென்ற தாரகை ஒரு நோவாவாகவோ, இரண்டாகவோ இருந்திருக்கலாம்.


எங்கோ பிரபஞ்சத்தில் பல கோடானு கோடி மைல்களுக்கு அப்பால் ஒரு நக்ஷத்திரம் தன் இறுதித் தீபாவளியைக் கொண்டாடிய செய்தி பூமிக்கு வந்து சேர்ந்து கொண்டிருக்கும்போதே இங்கே பெத்தலஹேமில் ஒரு புதிய நம்பிக்கை நக்ஷத்திரம் பிறக்கிறது – "புனரபி ஜனனம், புனரபி மரணம்"!

ஆக, வானவெளியினை ஆச்சர்யம் தோய்ந்த பக்தியுடன் நோக்குங்கள். வருடத்திற்கு நாற்பது நோவாக்கள் சிறிதும், பெரிதுமாய்த் தோன்றுகின்றன என்கிறார்கள் வானியல் ஆராய்ச்சியாளர்கள். உங்கள் கண்களில் ஒன்று தென்பட்டால், தீபாவளியையும், கிறிஸ்துமஸையும்கூட அப்போது நினையுங்கள்! எங்கோ நம் உலகில் புதிதாய், புத்தரோ, ஏசுவோ, கண்ணனோ, நபிகள் நாயகமோ, மஹாவீரரோ தோன்றுவதைக் கூட அது உணர்த்தலாம்!

சுபம் உண்டாகட்டும். ஆமென். அல்லாஹு அக்பர். ததாஸ்து!

ஃ

கதிரொளிக் கனவு



என் கண்ணில் ஒளிவெள்ளம்
எப்போதும் சுழல்கிறது!
உன்நினைவில் நாள்தோறும்
நில்லாமல் உழல்கிறது!

பூப்பூவாய்க் கதிர்க்கனவு
பூரித்து விளைகிறது!
தாழ்ப்பாளாய் என்நெஞ்சு
கதிர்மூட விழைகிறது!

மதுராகம் இசையாகி
எனைவந்து சேர்கிறது!
புதுராகம் தேடிமனம்
வெளிவானம் செல்கிறது!

தங்கத்தில் வைரமென
தளிர்மேனி பின்னலாமா?
அங்கத்தில் கனிக்கொத்தை
அவசரமாய்த் தின்னலாமா?

வருஷங்கள் வந்துவந்து
வாலிபமும் போகலாமா?
புருஷன்நான் பூவை உன்
பூமாலை ஆகலாமா?

பாலா. இரமணி

ஒரு கதவு தட்டப்பட்ட போது...

கையில் பெரிய பெரிய சூட்கேஸ்களோடு - அந்த இரண்டு இளைஞர்களும் ஹோட்டலுக்குள் நுழையும்போதே ரிசப்ஷன் கௌண்டரில் நின்றிருந்த ஜீவா பார்த்து விட்டான். ஜீவா அந்த ஹோட்டலின் ரிசப்ஷனிஸ்ட்.

அந்த இரண்டு இளைஞர்களும் இருபத்தைந்து வயதுக்கு உட்பட்டிருந்தார்கள். இரண்டு பேர்க்குமே உயரமான, தேகாப்பியாச உறுப்புகள். சிலும்பின தலைமுடியும் - நாசிக்குக் கீழே கற்றையாய் மீசையும், சிகரெட் புகையில் குளித்துக் குளித்து நிக்கோடின் கறையோடு தெரிந்த உதடுகளும் - ஜீவாவுக்கு அவ்வளவு திருப்தியாய் இல்லை.

அவர்கள் இருவரும் கௌண்டரை நெருங்கி நின்றார்கள். ஜீவா அவர்களை அலட்சியமாய் பார்த்து "எஸ்" என்றான்.

"ஒரு டபுள் ரூம் வேணும்..."

"ஸாரி... ரூம் காலியில்லை. எல்லாமே ஃபுல்..."

இளைஞர்களில் ஒருவன் தன் இரு முழங்கைகளையும் மேஜையின் மேல் ஊன்றிக்கொண்டு மெல்லிய குரலில் சொன்னான். "எக்ஸ்க்யூஸ் மீ...! நாங்க இந்த மெட்ராஸுக்குப் புதுசு... சாயந்தரம் ஆறு மணியிலிருந்து - ஒவ்வொரு ஹோட்டலாய் ஏறி இறங்கினோம்... எங்கேயுமே ரூம் கிடைக்கலை... உறவுக்காரர் ஒருத்தர் இந்த மெட்ராஸில் இருக்கார்ங்கிற தைரியத்துல ஊர்லயிருந்து புறப்பட்டு வந்துட்டோம். ஆனா அவர் வீட்டைப் பூட்டிக்கிட்டு குடும்பத்தோடு திருப்பதிக்குப் போயிருக்கார். அவர் திரும்ப ரெண்டு நாளாகும்ன்னு பக்கத்து வீட்ல சொன்னாங்க... அவர் வர்ற வரைக்கும் நாங்க ஹோட்டல்லதான் தங்கியாகணும்... இப்பவே மணி பத்தாகப் போகுது... இந்த ராத்திரி நேரத்துல... ரூம் தேடி ஒவ்வொரு ஹோட்டலா அலைஞ்சு சலிச்சுட்டோம். ப்ளீஸ்... நீங்கதான் எப்படியாவது... அட்ஜஸ்ட் பண்ணி ரூம் போட்டுத் தரணும்..."

"ஸாரி... ரூம் இல்லையே...?"

"ப்ளீஸ்..."

அவர்கள் இருவரும் கெஞ்சிக் கொண்டிருக்கும்போதே - மேஜை மேல் இருந்த டெலிபோன் கிணுகிணுத்தது.

ஜீவா ரீஸீவரை எடுத்தான்.

"ஹலோ..."

மறுமுனையில் அந்த ஏரியா பீட் போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் சிவகுமார் பேசினார்.

"ஹோட்டல் கௌசிகாவா...? நான் இன்ஸ்பெக்டர் சிவகுமார்... பேசறேன்..."

ஜீவா பவ்யமானான்.

"சொல்லுங்க ஸார்... நான் ரிசப்ஷனிஸ்ட் ஜீவா..."

"ஜீவா... இன்னிக்கு ஹோட்டலோட அக்காமடேஷன் நிலவரம் எப்படி...?"

"எல்லாம் ஃபுல் ஸார்..."

"ஓர் என்கொய்ரி.."

"கேளுங்க ஸார்..."

"இன்னிக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு மேலே... உங்க ஹோட்டல்ல ரூம் எடுத்தவங்க எத்தனை பேர்ன்னு சொல்ல முடியுமா...?"

"யாரும் எடுக்கலை ஸார்... ரூம்ஸ் ஆல்ரெடி ஃபுல்"

"ஆர் யூ ஷ்யூர்...?"

"ஷ்யூர் ஸார்... ஏன் ஸார்...? என்ன விஷயம்...?"

"ஒண்ணுமில்லை... ஒரு மர்டர் விஷயமா... ரெண்டு பேரை சஸ்பெக்ட் பண்றோம்... பணத்துக்காக நடந்த கொலை அது... சந்தேகப்படற மாதிரி யாராவது ரெண்டு பேர்... உங்க ஹோட்டல்ல வந்து ரூம் எடுத்திருந்தாங்கன்னா.. வந்து விசாரிக்கலாமேன்னுதான் கேட்டேன்." இன்ஸ்பெக்டர் சொல்லச் சொல்ல -

ஜீவாவின் மூளைப் பிரதேசத்தில் ஒரு சிவப்பு விளக்கு எரிந்தது. 'இன்ஸ்பெக்டர் சிவகுமார் சொல்கிற அந்த இரண்டு பேர் இந்த இளைஞர்களாய் இருக்கலாமோ...? தலை முடியும், மீசையும், போட்டிருக்கிற ட்ரஸ்ஸும்... டீஸன்டான பேர்வழிகள் மாதிரி தெரியலையே...?"

ஜீவா ரீஸீவரில் "ஒரு நிமிஷம் ஸார்" - எனச் சொல்லி - ரிஸீவரின் வாயை இடதுகை விரல்களால் பொத்திக்கொண்டு எதிரில் நின்றிருந்த இளைஞர்களை ஏறிட்டான்.

"அந்த சோபாவில் உட்கார்ந்து ஓர் அரை மணி நேரம் வெயிட் பண்ணுங்க. ரூம் ஏதாவது காலியாகுதான்னு பார்ப்போம்..."

"தாங்க்...யூ..." அந்த இளைஞர்கள் இருவரும் மகிழ்ந்து போய் - சூட்கேசுகளைச் சுமந்து போய் - அறையின் மையத்தில் இருந்த சோபாவில் போய்ச் சாய்ந்தார்கள். ஆஷ் ட்ரேயை நகர்த்தி வைத்துக் கொண்டு - சிகரெட்களைப் பற்ற வைத்தார்கள்.

ஜீவா ரிஸீவரில் குரலைத் தாழ்த்திக் கொண்டான். "ஸார்! நடந்த மர்டர் சம்பந்தமா ரெண்டு இளைஞர்களையா சந்தேகப்படறீங்க...?"

"ஆமா..."

"அவங்க எப்படி இருப்பாங்கன்னு அடையாளம் சொல்ல முடியுமா?"

"அடையாளம் தெரியாது... ஆனா எதிர் பங்களாவில் இருந்தவங்க ரெண்டு இளைஞர்கள் சுவரேறிக் குதிச்சுப் போனதைப் பார்த்திருக்காங்க... சாயந்தர இருட்டுல முகம் அடையாளம் தெரியலை..."

ராஜேஷ்குமார்

"ஸார்... இப்ப இந்த ஹோட்டலுக்கு ரெண்டு யூத்ஸ் ரூம் கேட்டு வந்திருக்காங்க... ஆட்களைப் பார்த்தா எனக்கு நல்ல மாதிரியா படலை... ரௌடிஸ் மாதிரி இருக்காங்க... கையில பெரிசு பெரிசா ரெண்டு சூட்கேஸ்..."

மறுமுனையில் இன்ஸ்பெக்டர் பதட்டப்பட்டார்.

"ரூம் குடுத்துட்டீங்களா...?"

"ரூம் இல்லேன்னு சொல்லிட்டிருந்தேன்... உங்க போன் வந்தது. அவங்க ரெண்டு பேரையும் வெயிட் பண்ணச் சொல்லி சோபாவில் உட்கார வெச்சிருக்கேன்..."

"ஆட்களைப் பார்த்தா சந்தேகப்படற மாதிரியா இருக்கு...?"

"ஆமா ஸார்..."

"சரி... நான் அப்ப மஃப்டியில வர்றேன். ஆட்களை நான் நேர்ல பார்த்துட்டு அப்புறமா விசாரிக்கலாம்... நான் வர்ற வரைக்கும் அவங்களை உங்க பார்வையிலேயே வெச்சுக்குங்க..."

"எஸ்...ஸார்..."

ஜீவா ரிஸீவரை வைத்துவிட்டு வியர்த்த முகத்தைக் கர்ச்சீப்பால் ஒற்றியபடி ரிசப்ஷன் சோபாவில் உட்கார்ந்திருந்த அந்த இரண்டு இளைஞர்களையும் பார்த்தான். முகங்களில் யோக்யமான களையில்லை. தலைகளைக் குனிந்தபடி ஏதோ முணுமுணுப்பாய் பேசிக் கொண்டிருந்தார்கள். வருகிற போகிற ஆட்களைப் பார்வையால் சட்சட்டென்று அளந்தார்கள். கையிலிருந்த ஒரு சிகரெட் காலாவதியானதும் - இன்னொரு சிகரெட்டை உடனே பற்ற வைத்துக் கொண்டார்கள். சுவிங்கம் மாதிரி வாயில் எதையோ மென்றார்கள்.

பத்து நிமிஷம்கூட இல்லை.

இன்ஸ்பெக்டர் சிவகுமார் வந்தார். கதர் சட்டை, வெள்ளை வேஷ்டி, நெற்றியில் விபூதி கீற்று சகிதமாய் - ஜீவாவை நெருங்கினார். கௌண்டர் மேஜையின் மேல் கைகளை ஊன்றிக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டார்.

"சோபாவில் உட்கார்ந்திருக்கிற ஆட்களையா சொன்னீங்க?"

"ஆமா...ஸார்..."

"பசங்களைப் பார்த்தா சந்தேகம் வர்ற மாதிரியும் இருக்கு; வராத மாதிரியும் இருக்கு..."

"சும்மா கூப்பிட்டு விசாரிச்சுப் பாருங்க ஸார்".

"வேண்டாம்... விசாரிச்சா உஷாராயிடுவாங்க... இவங்களை ரகசியமாக கண்காணிச்சு... அப்புறமாத்தான் மடக்கணும்... ரூம் குடுத்துட்டீங்களா...?"

"இன்னும் இல்லை..."

"ரூம் காலியா இருக்கா...?"

"ஒரே ஒரு ரூம் இருக்கு...! அந்த ரூம் ஒரு பார்ட்டிக்காக ரிசர்வ் பண்ணி வச்சிருக்கு..."

"அந்த ரூமை அவங்களுக்குக் குடுங்க... அவங்க நடவடிக்கைகளை ஒருநாள் பூராவும் கண்காணிச்சா போதும்... ஆசாமிங்க எப்படிப்பட்டவங்கன்னு தெரிஞ்சுடும். நீங்க அவங்களைக் கூப்பிட்டு ரூம் அலாட் பண்ணுங்க. நான் இப்படி ஓரமா நின்னு ஆட்களை அப்ஸர்வ் பண்றேன்..."

இன்ஸ்பெக்டர் சிவகுமார் நகர்ந்து நின்று - கையில் வைத்திருந்த நாளிதழைப் பிரித்து வைத்துக் கொண்டார்.

ஜீவா சோபாவில் உட்கார்ந்திருந்தவர்களைக் கையசைத்துக் கூப்பிட்டான். "ஸார்... வர்றீங்களா...?"

வந்தார்கள். கைளில் இன்னமும் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது.

"எத்தனை நாள் தங்குவீங்க..."

"ரெண்டு நாள்..."

"அப்ப... நான் உங்களுக்குக் கொடுக்கப்போற ரூம் வேற ஒருத்



தருக்காக ரிசர்வ் பண்ணினது. அவர் எப்ப வேணுமின்னாலும் வரலாம். வந்தா நீங்க ரூமைக் காலி பண்ணிடணும்..."

"ஓ...கே...நோ ப்ராப்ளம்..."

ஜீவா லெட்ஜரைப் பிரித்து - பால்பாயிண்ட் பேனாவின் முனையைப் பிதுக்கிக் கொண்டான்.

"நேம்...ப்ளீஸ்"

"விட்டல் அண்ட் சிகாமணி"

"அட்ரஸ்...?"

விட்டலும் சிகாமணியும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டு - சில விநாடிகள் திணறி பின் இருவரில் ஒருவன் சொன்னான். நெம்பர் லெவன், மோட்டாணிக்கரா ரோடு, கொச்சி - 1".

"பர்ப்பஸ் ஆஃப் விஸிட்...?"

"பிஸினஸ்".

"அட்வான்ஸ் ஃபைவ் ஹண்ட்ரெட் ருபீஸ்..." ஒருவன் பர்ஸை அலட்சியமாய்ப் பிரித்து - ஐந்நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து மேஜையின் மேல் வைத்தான். ஜீவா அறை எண் 203க்குரிய சாவியை எடுத்து அவர்களிடம் நீட்டினான். "சொன்னது... ஞாபகம் இருக்கட்டும்... ரிசர்வ் பண்ணின நபர் வந்துட்டா... அந்த நிமிஷமே நீங்க ரூமைக் காலி பண்ணியாகணும்..."

"தாராளமா..."

ரூம் பாய் - லக்கேஜ்களை எடுத்துக்கொண்டு அறையை நோக்கி நடக்க, விட்டலும் சிகாமணியும் தொடர்ந்தார்கள். இன்ஸ்பெக்டர் சிவகுமார் ஜீவாவிடம் வந்தார்.

"பசங்களோட பேச்சையும் நடவடிக்கையையும் பார்த்தா சந்தேகமாத்தான் இருக்கு. நான் போய் மஃப்டியில் ஒரு கான்ஸ்டபிளை அனுப்பிச்சு வைக்கறேன். அவர் நாள் முழுக்க இங்கேயே இருக்கட்டும்... கண்காணிக்கட்டும்..."

ஜீவா தலையாட்டினான்.

அடுத்த அரைமணி நேரத்திற்குள் கான்ஸ்டபிள் ஒருவர் மஃப்டியில் வந்து சேர்ந்தார். நடுத்தர வயது. நறுக்கின நரை மீசை.

ஜீவாவிடம் கேட்டார்.

"அவங்க ரெண்டு பேரும் எந்த ரூம்ல தங்கியிருக்காங்க?"

"டு நாட்த்ரீ..."

"ரூமுக்குள்ள போனவங்க இன்னும் வெளியே வரலையே...?"

"வரலை..."

"அவங்க வெளியே கிளம்பினாங்கன்னா... ரூமுக்குள்ளே பூந்து திங்க்ஸைச் சோதனை போட்டுடலாம். ரூமுக்கு ட்யூப்ளிகேட் சாவி வெச்சிருக்கீங்கள்ள?"

"இருக்கு.."

ஜீவா சொல்லிக் கொண்டிருக்கும்போதே - மாடியிலிருந்து அந்த நபர் வேகமாய் இறங்கி வந்தார். பனியனும் லுங்கியும் அணிந்து இருந்தார். ஜீவா கேட்டான்.


"என்ன... மாணிக்கம் ஸார்... ஊருக்கு ட்ரங்க்கால் போட்டுப் பேசணுமா...?"


மாணிக்கம் வேகமாய் பக்கத்தில் வந்து குரலைத் தாழ்த்தினார். "ரூம் நெம்பர் 203இல் யார் தங்கியிருக்காங்க...?"

"ஏன் என்ன விஷயம்...?"

"என்கூட வாங்க... சொல்றேன்...."

ஜீவாவும் கான்ஸ்டபிளும் அவரைத் தொடர்ந்தார்கள். மாணிக்கம் தான் தங்கியிருந்த 202ஆம் எண் அறைக்குள் நுழைந்து - மெதுவாய் கதவைச் சாத்தினார். பின் பூனை நடை நடந்து, 202 எண் அறையையும் 203 எண் அறையையும் பிரித்த அந்த பாத்ரூம் சுவர் தடுப்புக்குப் பக்கத்தில் வந்து நின்றார்.





பக்கத்து அறையான 203இல் பேச்சுக்குரல்கள் கேட்டன. சற்றே கோபமான குரல்கள். பேச்சைச் செவிமடுக்கும்படி. கான்ஸ்டபிளிடமும், ஜீவாவிடமும் மாணிக்கம் சைகை செய்தார்.

இருவரும் அந்தச் சுவரின் தடுப்புக்குப் பக்கத்தில் போய் நின்று காதுகளுக்கு உன்னிப்பைக் கொடுத்தார்கள். கனமில்லாத பாத்ரூம் சுவர்க்கு அப்பால் இருந்து குரல்கள் கேட்டன. அந்த இளைஞர்களின் குரல்கள்.

"போலீஸ் நம்மை மோப்பம் பிடிச்சிடுவாங்கன்னு நினைக்கிறயா?"

"கண்டிப்பா..."

"உனக்கு ஏன் அந்த சந்தேகம்...?"

"என்னமோ தெரியலை... எம் மனசுக்கு அப்படி தோணிட்டே இருக்கு. சீக்கிரமே நாம இந்த ஊரைவிட்டுக் கிளம்பிடறது நல்லது..."

"முட்டாள்தனமா பேசாதே...! இந்நேரம் போலீஸ் பஸ்-ஸ்டேண்ட், ரயில்வே ஸ்டேஷன், செக்போஸ்ட் எல்லாத்திலும்... கண்காணிப்பைத் தீவிரப்படுத்தி இருப்பாங்க... நாம இப்ப வெளிய கிளம்பினா நிச்சயம் போலீஸ் கையில மாட்டிக் கொள்வோம்".

"அப்படீன்னா... எப்படித்தான் ஊருக்குப் போறது..."

"போலீஸ் அமளி ஓயற வரைக்கும் இங்கேயே தங்கிக்க வேண்டியதுதான்..."

"போலீஸ் அமளி இப்ப ஓயும்னு எம் மனசுக்குப் படலை... நாம ஒரு ... காரியம் பண்ணியிருக்கனும்".

"என்ன...?"

"ஆளை தீர்த்துக் கட்டினதும்... உடனே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் ஏதாவது ஒரு ரயில்ல ஏறி கிளம்பியிருக்கனும்.. பைத்தியக்காரத்தனமா இதே ஊர்ல இருந்துட்டோம்..."

"சரி... சரி... சொன்னதையே சும்மா சொல்லிச் சொல்லிப் புலம்பிட்டிருக்காதே...! அந்த விஸ்கி பாட்டிலை எடு... தாக சாந்தி பண்ணிட்டுத் தூங்குவோம்:

பக்கத்து அறையிலிருந்து அந்த இரண்டு இளைஞர்கள் பேசிக்கொள்ளும் வார்த்தைகள் துல்லியமாய் காதில் விழுந்து கொண்டிருக்க - ஜீவாவும் கான்ஸ்டபிளும் புன்னகையோடு பார்த்துக் கொண்டார்கள்.

"நாம கெஸ் பண்ணினது சரியாப் போச்சு..."

"வாங்க... ஆட்களை மடக்கிடலாம்..." கான்ஸ்டபிள் தன் மார்புப் பகுதியில் மறைவாய் வைத்திருந்த சிறிய ரிவால்வரைக் கையில் எடுத்துக் கொண்டார்.

வெளியே வந்து - 203 எண் அறைக் கதவைத் தட்டினார்கள்.

"டொக்..டொக்..."

கதவைத் தட்டியதும் - உள்ளே கேட்டுக் கொண்டிருந்த பேச்சுக் குரல்கள் சட்டென்று நின்றன. சில விநாடிகளுக்குப் பின் கதவு மெல்லத்திறந்தது. கான்ஸ்டபிள் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைய - விட்டலும் சிகாமணியும் திடுக்கிட்டார்கள். கான்ஸ்டபிள் கையிலிருந்த ரிவால்வரைப் பார்த்ததும் மிரண்டார்கள்.

"யார்...யார் ஸார்..நீங்க...?"

கான்ஸ்டபிள் உறுமினார். "ஏண்டா... ஒரு கொலையைப் பண்ணிட்டு... சாவகாசமா லாட்ஜ்ல வந்து ரெஸ்ட் எடுக்கிறீங்களா...? ரெய்ஸ் யுவர் ஹேண்ட்ஸ்?"

மறுபடியும் அந்த இரண்டு இளைஞர்களும் திடுக்கிட்டார்கள். "என்ன ஸார் சொல்றீங்க... நாங்க கொலை பண்ணினோமா...?"

"பார்... இந்த நடிப்பெல்லாம் வேண்டாம். நீங்க ரெண்டு பேரும் இவ்வளவு நேரம் பேசிட்டிருந்ததை... அட்சரம் பிசகாமே கேட்டுட்டோம்... இப்ப எனக்கு வேண்டியதெல்லாம் உண்மை. பங்கஜா காலனியில் கொலை பண்ணினது நீங்கதானே...?"

அந்த இளைஞர்கள் இப்போது மிரளாமல் புன்னகைத்தார்கள். கான்ஸ்டபிள் எரிச்சலாகிக் கத்தினார்.

"என்னடா சிரிக்கிறீங்க...?"

"பின்னே சிரிக்காமே என்ன பண்றது ஸார்? கொஞ்ச நேரத்துக்கு முந்தி நாங்க பேசிட்டிருந்ததெல்லாம் நிஜம்ன்னு நம்பிட்டீங்களா...?"

"நம்பாமே...?"

"ஸார்... நாங்க பேசினதெல்லாம் சினிமா வசனம்".

"சினிமா வசனமா...?"

"ஆமா... ஸார்... நாளைக்கு டைரக்டர்க்கு முன்னாடி பேசிக் காட்டிறதுக்காக வசனகர்த்தா எழுதிக் கொடுத்த வசனங்களைத் தான் நாங்க ரெண்டு பேரும் பேசி ஒத்திகை பார்த்திட்டிருந்தோம். நாங்க ரெண்டு பேரும் சினிமாவில நடிக்கிறதுக்காக...வீட்ல சொல்லாமே கொள்ளாமே ஊரைவிட்டு ஓடி வந்தவங்க ஸார்... பத்து நாளா ஸ்டுடியோ ஸ்டுடியோவா அலைந்தோம்... கடைசியில ரெண்டு பேர்க்கும் வில்லனோட அடியாட்களா நடிக்கிறதுக்கு சான்ஸ் கிடைச்சது... வில்லன் ரோலுக்கு ஏற்ற மாதிரி கிராப்பையும், மீசையையும் மாத்திக்கிட்டோம்... கையில பணம் இருந்தவரைக்கும் பெரிய ஹோட்டல்ல தங்கிட்டிருந்தோம்... பண இருப்பு கம்மியானதும் இது மாதிரியான சாதாரண ஹோட்டல்ல தங்கலாம்ன்னு..."


கான்ஸ்டபிள் இன்னமும் நம்பாமல் கேட்டார்.

"பேசினதெல்லாம் சினிமா வசனமா?"

"ஆமா ஸார்... வேணுமின்னா இந்த ஸ்க்ரிப்ட்டைப் பாருங்க" ஒருவன் கட்டிலின் மேலிருந்த ஸ்க்ரிப்ட்டை எடுத்து நீட்ட கான்ஸ்டபிளும் ஜீவாவும் அதை வாங்கிப் பார்த்தார்கள்.

சற்றுமுன் பேசிய வாசகங்கள் பூராவும் டைப் செய்யப்பட்டுத் தெரிய - ஜீவாவும் கான்ஸ்டபிளும் அசட்டுச் சிரிப்போடு - ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். ஃ

ஆயிரம் ஆண்டுத் தூக்கம் கலையுது!



கவியரசர் இளந்தேவன்

ஆயிரம் ஆண்டுத் தூக்கம் கலையுது
ஆர்த்தெழ வேண்டும் தோழர்களே.
ஆரும் இனிமேல் தூங்கிக் கிடந்தால்
அவர்கள் நிச்சயம் மூடர்களே!

பூமிக் குள்ளே நமது முகத்தைப்
புதைத்தது போதும் தோழர்களே!
புதுயுகம் காணப் புறப்பட வேண்டும்
பொங்கி எழுங்கள் தோழர்களே!

உருட்டப் பட்டோம் பகடைக் காயாய்
உருப்பட் டோமா தோழர்களே!
ஒவ்வோர் அரசியல் வாதியும் ஏறும்
ஒட்டகம் ஆனோம் தோழர்களே!

ஒட்டக முதுகில் உட்கார்ந் திருப்போன்
திட்டம் பெரியது தோழர்களே!
ஒட்டகத் துக்கும் திட்டம் உண்டென
உணரச் செய்வீர் தோழர்களே!

சமத்துவம் என்பது சமுதா யம்தரும்
பிச்சைச் சோறா தோழர்களே!
சாய்ந்து கிடப்பவன் ஓங்கி எழுந்து
சமைப்பது தானே தோழர்களே!

அடுத்தவர் மூலம் மோட்சம் கிட்டும்
என்பது பெரும்பொய் தோழர்களே!
அடிமைப் பட்டவன் விடுதலை என்பது
அவனவன் கைகளில் தோழர்களே!

சலுகை என்பது நாம்முன் னேறச்
சாதனம் தானே தோழர்களே!
சாசனம் என்றதை நம்பிட இருந்தால்
சத்திய மாய்நாம் கோழைகளே!

ஒற்றைக் கையால் உலகப் பந்தை
உயர்த்தப் பிறந்தோம் தோழர்களே!
ஒன்றாய்ச் சேர்ந்தால் விடுதலை நிச்சயம்
உண்மை உணர்வீர் தோழர்களே!



ஜய் ஜான்ஸிராணி

(நம் பாரத தேசத்து சுதந்தரப் போராட்ட வீராங்கனை ஜான்ஸி ராணி லட்சுமிபாய் வீரமரணம் அடைந்து 135 ஆவது ஆண்டினை நினைவுபடுத்தி அவ்வீர மங்கைக்கு அஞ்சலி செலுத்துவதே இச்சிறப்புக் கட்டுரையாகும்!)

1757 ஆம் ஆண்டு 'பிளாஸி' யுத்தத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் மூத்த அதிகாரியான கிளைவ் அடைந்த மாபெரும் வெற்றியின் பலனாக இந்திய மண்ணில் ஆங்கிலேயர்கள் தங்களது ஆட்சியை வலுவாக ஊன்றத் தொடங்கினர். தொடர்ந்து ஆங்கிலேயர் வட இந்தியாவில் பல சிற்றரசர்களின் ராஜ்ஜியங்களைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டு, அங்கு தங்களது பிரதிநிதிகளை நியமித்து ஆண்டனர். அந்நாளில் புனேயைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த "பேஷ்வா"க்களின் கடைசி மன்னனாக பாஜிராவும் தனது ஆட்சியை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்து விட்டுத் தனது சகோதரரான சிவாஜி அப்பாஸாகேப்புடன் வட இந்தியாவுக்குச் சென்றார். அவர்களோடு அவர்களது ஆப்த நண்பரான மோராபந்தும் தன் மனைவியோடு சென்று, அங்கு அப்பாஸாகேப்பிடம் ஒரு சாதாரண உத்தியோகம் பார்த்து வந்தார்.

வடக்கே சென்ற மோராபந்தின் மனைவி பாகீரதிக்கு 1835 ஆம் ஆண்டு நவம்பர் 19 இல் பிறந்த ஓர் பெண் குழந்தைக்கு "மனுபாய்" எனப் பெயரிட்டு அதனை மிக்க சீரும் சிறப்புடனும் வளர்த்து வந்தனர். ஆனால் குழந்தை மனுவுக்கு ஐந்து வயதாவதற்குள் அதன் தாயார் பாகீரதி திடீரென்று மரணம் அடைந்தாள். குழந்தைக்குத் தாயில்லாத கஷ்டம் எதுவுமே தெரியாமல் தகப்பனார் மோராபந்த் மிக்க அன்போடு வளர்த்து வந்தார். பேஷ்வா பாஜிராவும், அவளைத் தனது வளர்ப்பு மகன்களான நானாசாஹேப், ராவ்சாஹேப்புடன் தன் மகளைப் போலவே சமமாகப் பாவித்துப் பழகினார்.

பாஜிராவ் தன் வளர்ப்பு மகன்களுக்குக் குதிரை ஏற்றம் யானை ஏற்றம் மற்றும் உடற்பயிற்சிகளோடு இதர விளையாட்டுகளையும் கற்றுத் தர ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஒரு சமயம் சிப்பந்திகளில் ஒருவர் யானை ஏற்றம் பழகுவதற்காக ஒரு பெரிய யானையைக் கொணர்ந்து பாஜிராவின் இரு மகன்களுக்கும் பழக்கினார். இதனைக் கண்ட சிறுமி மனுபாய்க்கும் தானும் அவர்களைப்போல யானைமீதேறி அமர வேண்டுமென்ற ஆவல் மேலிட்டது. 'குடுகுடு'வென யானையின் அருகே ஓடினாள். இதனைக் கண்ட மோராபந்த் திடுக்கிட்டு மகளைத் தொடர்ந்து ஓடி அதட்டியபோதும், அச்சிறுமி நானாசாஹேப் போலவே யானையின்மீது உட்கார வேண்டுமென்று அடம் பிடித்தாள்.

"பாபு! நானும் அந்த யானை மேலே ஏறி உட்காரத்தான் போகிறேன்...!"

"கூடாது!"

"ஏன் கூடாது? 'நானா' மட்டும் ஏறி உட்காரலாமா? நான் மட்டும் கூடாதா?"

"நானா ஆண்பிள்ளை! அவன் வருங்காலத்தில் பெரிய ராஜாவாக வருவான். அதனாலே அவன் யானை மீது ஏறப் பழகிக் கொள்ள வேண்டும்!"

"நான் பெண்பிள்ளைதான்! நானும் வருங்காலத்தில் பெரிய ராணியாகத்தான் வருவேன். அப்போது மட்டும் என்னால் திடீரென்று எப்படி யானை மேலே ஏற முடியும்? அதற்காகத்தான் இப்போதே 'நானா'வைப் போல பழகிக்கொள்ள வேண்டாமா?"

இவ்விருவரின் தர்க்கத்தைக் கவனித்த பாஜிராவ் மகிழ்ச்சியோடு சிறுமி மனுபாயைக் கட்டி அணைத்து முத்தங்கள் தந்தபடியே, "மனு! நீ பெரிய ராணியாக வர உன்னை இப்போதே வாழ்த்துகிறேன்!" என்றதோடு நண்பர் மோராபந்திடம், "மோரா! குழந்தையைத் தடுக்காதே! எனது யானை பரமசாது! அவளை ஒன்றுமே செய்யாது!" எனக்கூறி அங்கிருந்த பாகனிடம் சைகையும் காட்டினார். பாகனும் யானையிடம் அதன் பாஷையில் ஏதோ கூறியதுமே, அந்தப் பெரிய யானையும் தனது காலை ஏணிப்படிகளைப் போலச் சாய்த்துக் காட்டியது. மிக்க மகிழ்ச்சியோடு சிறுமி "மனு"வும் அந்தப் பெரிய யானையின்மீது துள்ளித் துள்ளிக் குதித்தேறி யானையின்மீது உட்கார்ந்திருக்கும் நானாசாஹேப்பிற்கு முன்னால் அமர்ந்து தனது மெல்லிய குரலினால், "ஹை... ஹை..." எனக் கூறித் தட்டினாள். பாஜிராவ், "மோரா! 'மனு'வின் துணிச்சலே துணிச்சல்! அவள் வருங்காலத்தில் பெரிய பட்டத்து ராணியாகவும் வீரமங்கையாகவும் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எல்லாம் அந்த பவானியின் பேரருளே!" என இருகரங்களையும் குவித்து வணங்கினார்.

படிப்பில் மிக்கத் திறமையாக விளங்கிய மனுபாய், குதிரை

ரகமி

ஏற்றமும், யானை ஏற்றமும் நன்கு பழகினாள். அதோடு ஆண்களுக்கு இணையாக உடற்பயிற்சிகள், குஸ்தி, வாள்போர்களையும் நன்கு கற்று எல்லாத் தேர்வுகளிலுமே முதன்மையாக விளங்கினாள். தன் மகள், ஆண்களுக்குச் சரியாக ஆயுதங்களைக் கொண்டு சண்டைகள் செய்வது, ஒரு குதிரை மீதிருந்து மற்றொரு குதிரைக்கும், யானைமீதும் தாவுவது ஆகிய வற்றைக் கண்டு மகிழ்ந்தாலும், மகாராஷ்டிரப் பிராமண குலத்தில் பிறந்த தன் மகள் 'மனு'வை மணக்க எந்த மகாராஷ்டிர ஆண் மகனும் விரும்பமாட்டானே, இதற்கு என்ன செய்வது? என்ற பெருங்கவலையும் சூழ்ந்து கொண்டது. தவிர மகள் 'மனு'வினிடமுள்ள பிடிவாத குணத்தைத் திசைதிருப்ப, அவளுக்குத் திருமணம் செய்துவிட்டால், அதனால் அவள் குடும்பப்பெண்ணாகித் திருந்தக்கூடும் என்ற நம்பிக்கையில் மகளுக்குச் சோதிடர்கள் மூலம் வரன் தேடத் தொடங்கினார்.

மத்திய பாரதத்தில் புல்தேல் கண்டு மாகாணத்தில் ஜான்ஸி ஒரு சாதாரண நகரமாக இருந்தது. இதனைப் பெரும் நகரமாக்கி அங்கு மிக்க வலிமையான கோட்டையும் அதனுள் ஓர் அரண்மனையைக் கட்டி சிறப்பாக்கிய பெருமை மகாராஷ்டிர மன்னர்களில் ஒருவரான சிவராவ்பாவு என்பவரையே சாரும். அப்போது வடநாட்டில் ஆங்கிலேயர்கள் ஆங்காங்கு தங்களுக்கு வசமாக்கிய ராஜ்ஜியங்களிலெல்லாம் தங்களது அதிகாரங்களையே செலுத்தி வந்தனர். அதன்படியே சிவராவ்பாவுவும் ஆங்கிலேயரிடம் ஓர் உடன்படிக்கையில்தான் ஜான்ஸியை ஆண்டு வந்தார். அதோடு ஆங்கிலேயர்களின் உத்தரவின்றி சிவராவ்பாவுவினால் ஆட்சியை நடத்த இயலவில்லை. சிவராவ் பாவு காலமானபின், அவருடைய புதல்வரான கங்காதரராவ் 1838 ஆம் ஆண்டு ஜான்ஸிக்கு ஆங்கிலேயர் முன்னிலையில் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். கங்காதரராவும் பெயரளவிற்கு மன்னராக இருந்தாலும், இவரும் ஆங்கிலேயரின் உத்தரவின்றி சுயமாக எந்தச் செயலிலுமே அவரால் ஈடுபட முடியவில்லை. அதோடு ஜான்ஸியிலும் ஒரு பெரிய ஆங்கிலேயப் படையையும் வைத்து அதனையும் நிர்வகிக்க வேண்டிய நிர்பந்தங்களும் ஏற்பட்டிருந்தது. இருப்பினும் கங்காதரராவ் தனது ஆட்சியை மிகச் சிறப்போடு ஆள்வதைப் பற்றி, ஆங்கிலேயர்களே கண்டு மெச்சினர்.

சிறுமி மனுபாயின் அழகு, அவளது லட்சணங்கள் இவற்றைப் பற்றிச் சோதிடர் மூலம் அறிந்து கொண்ட கங்காதரராவ், மோராபந்த் தங்கியுள்ள ஊருக்குத் தனது சிப்பந்திகளை ராஜமரியாதைகளோடு அனுப்பி அவரது மகள் மனுபாயின் திருமண விஷயத்தை அறியும்படி கூறினார். தனது எட்டு வயதான தாயில்லாப் பெண்ணிற்கு ஜான்ஸி தேசத்து மன்னரே திருமணம் செய்து கொள்ள முன்வந்திருப்பதை எண்ணி மிக்க மகிழ்வோடு சம்மதித்து, மன்னர் அனுப்பிய ராஜமரியாதைப் பொருள்களையும் பெற்றுக் கொண்டார். 1842 இல் ஜான்ஸி மன்னரான கங்காதரராவுக்கும், மனுபாய்க்கும் திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. திருமணத்திற்குப்பின், முதன் முதலாக மாமனார் இல்லத்திற்கு வரும் புது மருமகளுக்குச் சம்பிரதாய முறைப்படி புதிய பெயரைச் சூட்டி அழைக்கும் விழாவில் மனுபாய்க்கு "லட்சுமிபாய்" எனப் பெயரையும் சூட்டிய பின்னர், ஜான்ஸி தேசத்து மன்னரான கங்காதரராவின் பட்டத்து மகிஷி என்றும் சிறப்போடு அழைத்தனர்.

திருமணம் முடிந்து எட்டு ஆண்டுகள் கழித்தே 1851 இல் ராணி லட்சுமிபாய்க்குப் பிறந்த ஓர் ஆண் குழந்தை மூன்று மாதங்கள் கூடப்பெற்ற தாயின் பாலைச்சீராக அருந்தாமல், திடீரென இறந்து விட்டது. இதனால் மிகுந்த துயரமும் வேதனையும் அடைந்த மன்னர் கங்காதரராவ், படுத்த படுக்கையானார். அதோடு தனக்கு இறுதிக் காலமும் நெருங்கி வருவதையும் நன்கு உணர்ந்த கங்காதரராவ் தனக்குப்பின் ஜான்ஸியை ஆட்சி புரிய சுமார் மூன்றே வயதான ஆனந்தராவ் என்ற சிறுவனைத் தனது சுவீகாரப் பிள்ளையாக ஆங்கிலேய அதிகாரி மேஜர் எல்லீஸ் துரை முன்பாகத் தங்களது குல வழக்கப்படி தத்தும் எடுத்துக் கொண்டார். இதன் பின்னரே கங்காதரராவ் ஆங்கிலேய மேலதிகாரிகளுக்கு தமக்குப்பின் ராணி லட்சுமிபாய் ஜான்ஸிக்கு தொடர்ந்து மகாராணியாகவும், சுவீகார மகன் ஆனந்தராவின் தாயாகவும் ஏற்கவேண்டுமென்று ஒரு விசேஷ விண்ணப்பம் மூலம் தெரிவித்திருந்தார். ஆனால் விண்ணப்பம் அனுப்பிய சில நாட்களுக்குள், கங்காதரராவ் திடீரென மரணம் அடைந்தார். அப்போது மனைவி ராணி லட்சுமி பாய்க்கு வயது பதினெட்டுதான்!

கங்காதரராவ் ஆங்கிலேய மேலதிகாரிகளிடம் விண்ணப்பித்துக்கொண்ட மனுவை மேஜர் மால்சோமி பரிசீலனை செய்வதற்குள் ஜான்ஸி மன்னர் கங்காதரராவ் மரணம் அடைந்த தகவலும் உடனுக்குடன் மேஜருக்கு எட்டியது. இந்தச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தியே ஆங்கிலேய மேலதிகாரிகள் கங்காதரராவின் மனுவை ஏற்காமல், உடனுக்குடன் தனது ஏஜண்டுகளை ஜான்ஸிக்கு அனுப்பி, அங்குள்ள ராஜாங்க கஜானாவை மூடி சீல் வைத்தும், அங்கு பலமான காவலும் போட்டனர். அதோடு ஜான்ஸி லட்சுமி பாய்க்கு அனுப்பிய ஓர் அவசர உத்தரவில், "ஜான்ஸி மன்னர் கங்காதரராவ் மரணம் அடைந்து விட்டதனால் இனி ஜான்ஸியின் ஆட்சி முறைகள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டதென்றும், ராணி லட்சுமிபாயும் அவளது சுவீகார மகன் ஆனந்தராவுடன் ஜான்ஸி கோட்டை அரண்மனையைக் காலி செய்துவிட்டு வெளியேற வேண்டும் என்றும், இதற்காக மகாராணிக்கு வருடத்திற்கு ஐயாயிரம் ரூபாய் மான்யமாக வழங்கப்படும்!" எனக் கூறப்பட்டிருந்தது.

தன் கணவர் இறந்த துக்கம் ஒருபுறம் வாட்ட, மறுபக்கம் ஆங்கிலேயரின் கடும் உத்தரவுமாகச் சேர்ந்து ராணி லட்சுமிபாயை வாட்டி வதைத்தது. இதற்குள் ஆங்கிலேய அதிகாரிகள் ராணி லட்சுமிபாயை உடனுக்குடன் ஜான்ஸி கோட்டை அரண்மனையைவிட்டு வெளியேறும்படி நிர்ப்பந்தித்தனர். கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த லட்சுமி பாயும், மகன் ஆனந்தராவுடன் கோட்டை அரண்மனையிலிருந்து வெளியேறி ஜான்ஸியிலேயே வேறொரு சாதாரண அரண் மனைக்குக் குடியேறினாள்.

புகழ்மிக்க ஜான்ஸி கோட்டை ஆங்கிலேயரின் வசமாகியது. தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட ஜான்ஸி தேசத்தை மீண்டும் தன்னிடமே ஒப்படைக்க வேண்டுமென்ற நீதிக்காக ராணி லட்சுமிபாய் இங்கிலாந்து நாட்டிலுள்ள கிழக்கிந்தியக் கம்பெனி மேலதிகாரிகளிடம் வாதாடி பிரபல வங்காள வக்கீல் ஒருவரைச் செலவு செய்து அந்நாட்டிற்கு அனுப்பினாள். ஆனால் அங்குள்ள அதிகாரிகளும் ராணிலட்சுமிபாயின் கோரிக்கையை நிராகரித்து, ஜான்ஸி பிரிட்டிஷாரின் ஆட்சியின்கீழ்தான் செயல்பட வேண்டுமென இறுதி உத்தரவைப் பிறப்பித்தனர்.

1806 ஆம் ஆண்டு வேலூர் சிப்பாய் கலகத்திற்குப் பின் சுமார் 50 ஆண்டு காலமாக வெள்ளையரின் கொடுமைகள் இந்தியருக்கு பல வழிகளில் மேன்மேலும் அதிகரித்தன. வடக்கே ராணுவத்தில் பணியாற்றும் இந்தியச் சிப்பாய்களுக்கு வழங்கப்பட்ட 'தோட்டாக்'களில் மிருகக் கொழுப்புகளைத் தடவித் தந்ததோடு சிற்சில சமயங்களில் கொழுப்புகள் அடைக்கப்பட்ட குப்பிகளின் அடைப்பான்களைச் சிப்பாய்கள் தங்களது பற்களால் கடித்துத் திறந்து, கொழுப்புகளைக் கைகளினால் எடுத்துத் தோட்டாக்களின் மீது தடவி உபயோகிக்க வேண்டுமெனக் கடும் உத்தரவிட்டனர். 1857 ஆம் ஆண்டு மார்ச் 29 இல் "மங்கள பாண்டே" என்ற இந்தியச் சிப்பாய் இந்த உத்தரவை எதிர்த்ததோடு, தனது சகதோழ சிப்பாய்களுடன் ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு பெரும் கலகத்தையே மூட்டினான். இக்கலகம் வெகு விரைவிலேயே பெருமளவில் நாடெங்கும் பரவி, ஆங்கிலேயர்களைக் 'கிடுகிடு'க்கச் செய்துவிட்டது. ஆங்கிலேய அதிகாரியான கர்னல் வீலர் இக்கலகத்திற்குக் காரணமான மங்கள பாண்டேவைக் கைது செய்து, அச்சிப்பாயை ஏப்ரல் 8 இல் தூக்கிலிட்டுக் கொன்றான். மங்கள பாண்டே தூக்கிற்குப் பின் இந்திய சிப்பாய்க் கலகம் மேலும் வலுத்தது. இக்கலவரம் ஜான்ஸி நாடுவரையில் எட்டியது.

அதே ஆண்டு ஜூன் 4 ஆம் தேதி "குருபக்ஷ்" என்ற ஹவில்தார் தலைமையில் திரண்டெழுந்த சிப்பாய்கள் வடக்கே ஆங்கிலேய அதிகாரிகளைச் சுட்டுத் தள்ளி அவர்களிடமிருந்த கொடிய ஆயுதங்களையும் கைப்பற்றினர். மிகப் பயங்கரமான கலகத்தைக் கண்ட ஆங்கிலேயர்கள் பயந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஜான்ஸி கோட்டைக்குள் ஓடி ஒளிய முயன்றனர். ஆனால் சிப்பாய்கள் தொடர்ந்து துரத்தியதோடு, கோட்டைக்குள்ளிருந்த இந்திய சிப்பாய்களுமே ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினர். ஜான்ஸியில் சிப்பாய்களினால் ஆங்கிலேய அதிகாரிகள் கடும் துயரம் அடைந்ததுமே, இனி சிப்பாய்களிடமிருந்து தப்பிக்க ராணி லட்சுமிபாய் தவிர வேறு வழியில்லை என ஆங்கிலேய அதிகாரிகள் தங்களைக் காப்பாற்றும்படி ராணி லட்சுமிபாயிடம் சென்று சரணடைந்து வேண்டினர். புண்ணிய பாரதத்தில் பிறந்த அந்தப் பெண்ணரசியின் உள்ளத்தில் இரக்கம் மேலிட்டது. ஆங்கிலேயர்களைக் கொல்ல வந்த சிப்பாய்களைத் தடுத்து நிறுத்தினாள். சிப்பாய்களும் ராணியின் உத்தரவுக்குக் கீழ் படிந்ததுடன், ஆங்கிலேயர் வசமிருந்த ஜான்ஸி

கோட்டையை மீண்டும் பழைய படியே ராணி லட்சுமிபாயிடம் ஒப்படைத்தனர். மீண்டும் ஜான்ஸி கோட்டை அரண்மனையில் ராணி லட்சுமிபாயின் அதிகாரம் புத்துயிர் பெற்று இதன் நினைவாக ஒருவிழாவும்கொண்டாடினர்.


1857 இல் நிகழ்ந்த சிப்பாய் கலகம் தொடக்கத்தில் வெகு தீவிரமாக இருந்தது. பின்னர் தளர் நடை போட்டுப் பின்னோக்கிப் "பிசுபிசு"க்கத் தொடங்கியது. காரணம் சமஸ்தான மன்னர்கள், ராணுவத்தினர் மற்றும் மக்களிடையே ஒற்றுமை சீர்குலைந்தது. தவிர மக்களும் "இது ஆங்கிலேயருக்கும் ராணுவத்தினருக்கும் ஏற்பட்ட பகைமைப் போர்! இதில் நமக்கு எந்த சம்பந்தமும் இல்லை" என்று வெட்டிப் பேச்சிலேயே இருந்ததோடு, சில கயவர்களின் துர்போதனை காரணமாகவே பிரிட்டிஷாரிடம் நட்பும், அவர்களை அண்டினால் தங்களுக்கு நல்ல பதவிகளும், பொருளும் கிடைக்குமென்ற நப்பாசையினால் பலர் ஆங்கிலேயர்களிடம் நற்பெயரை எடுக்கவே அவர்கள் சொல்படி நடக்கத் தொடங்கினர். இதன் காரணத்தினால் "முதலாவது சிப்பாய் கலகம்" தீவிரம் அடையாமல் மங்கிவிட்டது.

இந்தியரிடம் ஒற்றுமை குறைந்து தங்களை அண்டி வரவேற்பதை வெகு நுட்பமாக அறிந்த ஆங்கிலேயர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள வெகு தீவிரமாயினர். ஆங்கிலேயர்கள் தங்களை எதிர்க்கும் சிப்பாய்கள், மற்றும் புரட்சியாளர்களை வெகு எளிதில் அடக்கியே தங்களது திட்டங்களில் மேன் மேலும் வெற்றி அடைந்தனர். ஆங்கிலேய தளபதியானஸர். ஹியூரோஸ் என்பவன் ஒரு பெரும் படையோடு ஜான்ஸியை நோக்கிச் சென்றான். தனது படைகளுடன் எதிரிகளைத் தாக்கத் தயாராக இருந்த ஜான்ஸி ராணி தன் வீரப் படையினர்களிடம், "வீரர்களே! நம் பாரத மக்களுக்கு மானந்தான் பெரியது. இனி ஆங்கிலேயர்களிடம் சமாதானமோ, அல்லது நாம் பயந்து ஓடுவதோ கிடையாது! சுதந்தரமாக நாம் வாழவேண்டும். இல்லையேல் மாண்டு களத்திலேயே மடியவேண்டும். நாம் போருக்குத் தயார்!" என்று வீராவேசத்தோடு கர்ஜித்தாள். ஜான்ஸிராணியின் வீரப் பேச்சுகள் சிப்பாய்களை மேலும் விழிப்படையச் செய்துவிட்டன.

ஆங்கிலேயப் படைகள் ஜான்ஸிக்குள் நுழைந்தன. ராணியின் படைகளும் எதிரிகளைத் தாக்கத் தயாராயினர். 1858 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதி இரு தரப்பினருக்கும் கடும் போர் மூண்டது. ஆங்கிலேயரின் பீரங்கிப் படைகள் ஜான்ஸி கோட்டையின் மீது குண்டுகளைப் பொழிந்தன. பதிலுக்குக் கோட்டை மதில் சுவர்களின்மீது நிறுத்தப்பட்டிருந்த ராணியின் பீரங்கிப் படைகளும் சளைக்காமல் குண்டுமாரி பொழிந்தனர். தொடர்ந்து ஒன்பது நாட்கள் இரு தரப்பிலும் வெற்றி தோல்வியின்றி போர் நடந்துகொண்டிருந்தது. அன்றாடம் ஆங்கிலேயப் படையில் வீரர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வந்தன. இதற்குக் காரணம் நம் இந்தியர்களில் பலர் ஆங்கிலேயர்களிடம் பிரதி பலன்களை எதிர்பார்த்து அவர்களுக்கு உதவியதேயாகும். இதனை அறிந்த ராணி லட்சுமிபாய் தனது பால்ய சிநேகிதர்களான நானாசாகேப், ராவ் சாகேப்பிடம் உதவிகளை நாடினாள். அவர்களது சகோதர பாசத்தோடு சுமார் முப்பதாயிரம் வீரர்களைக் கொண்டு ஒரு படைக்குத் தாத்யாதபேயின் தலைமையில் உடனுக்குடன் ஜான்ஸிக்கு அனுப்பினார்.

தாத்யாதபேயின் தலைமையிலான படைகள் ஆங்கிலேயப் படைகளுடன் பலமாக மோதினர். இப்போரில் வெற்றியை அடைவது போல முன்னேறிய 'தபே'யின் படைகள் திடீரெனப் பின்வாங்கத் தொடங்கின. எப்போதும் போரிலே வெற்றிகளையே அடைந்த தளபதி, 'தபே'யின் போர்த்திறமை இப்போரில் எதிர்பாராத வகையில் தோற்றுவிட்டது. இதனால் போர் வீரர்கள் நம்பிக்கை இழந்த போது ராணி லட்சுமிபாய் கையில் வீரவாளுடன் வீரகோஷங்களோடு குதிரை மீதேறிக் களத்திற்குப் புகுந்தாள்.

மகாராணியே தங்களுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபடுவதைக் கண்ட ஜான்ஸி படை வீரர்கள் மிகுந்த பலத்தோடு மேலும் தீவிரமாகப் போராடினர். ராணி லட்சுமிபாய் தன் வாளினால் மின்னல் பாய்ச்சலில் ஆங்கிலேயப் படையினரைக் கொன்று குவித்தாள். ராணியின் குதிரைப் பாய்ச்சலைக் கண்டு ஆங்கிலேயர்கள் நடுங்கி நாலா பக்கங்களிலும் சிதறி ஓடினர். ஆங்கிலேயப் படையினரால் ராணியை எதிர்த்துப் பேர்ராட முடியாமல் ஓடி மறையலானார்கள். மிகுந்த உற்சாகத்தோடு ராணி லட்சுமிபாய் தனது படைகளுடன் ஜான்ஸி கோட்டைக்குத் திரும்பினாள். உடனே போரின் நிலைமையோடு தனது படைத் தலைவர்களை அழைத்துத் தீவிரமாக ஆலோசித்தாள். ஜான்ஸி எல்லைக்குள் புகுந்த ஆங்கிலேயப் படை மீண்டும் தாக்க வரலாமென்று பெரும் கவலையையும்



ராணி தெரிவித்து, வரும் ஆபத்தைத் தடுக்க யோசித்தாள்.

இதற்குள் ஆங்கிலப் படைத் தளபதியான லெப்டினட் பௌகர் தனது படைகளைத் திரட்டிக் கொண்டு ஜான்ஸி கோட்டையைச் சுற்றி நிற்க வைத்து கோட்டையினின்று எவருமே வெளியேறாத வகையில் பலத்த காவலாக நிறுத்தினான். ஜான்ஸி கோட்டையின் மீது காவலாக நின்ற சிப்பாய்கள், ஆங்கிலேயப் படைகளைக் கண்டதுமே இத்தகவலை கோட்டைக்குள்ளிருக்கும் ராணிக்கு அனுப்பினர்.

ராணி லட்சுமிபாய் ஆண் உடைகளைத் தரித்தாள். தனது ஐந்து வயதான மகன் ஆனந்தராவை முதுகில் வைத்து மூட்டையைப் போலக் கட்டிக்கொண்டு தனது வீரவாளுடன் குதிரையின் மீது ஒரே தாவாகத் தாவினாள். தனக்கு உதவியாகச் சில குதிரைப்படை வீரர்களுடன் கோட்டையின் வடக்கு வாயில் வழியாக அங்கு காவலாக நின்ற அத்தனை ஆங்கிலேயப் படைகளையும் ஏமாற்றி ஒரே நொடியில் பகிரங்கமாகவே வெளியேறி விட்டாள். ராணி லட்சுமிபாய் ஜான்ஸிக் கோட்டையினின்று வெளியேறிய செய்தி லெப்டினென்ட் பௌகருக்குத் தெரிந்ததுமே, உடனே அவனும் சில குதிரைப்படையோடு ராணியைப் பின் தொடர்ந்தான். தன்னைப் பின்தொடரும் லெப்டினென்ட் பௌகரையும் அவனது ஆட்களையும் ராணி தனது வாளால் கடும் போரிட்டாள். எதிர்த்து வந்த ஆங்கிலேயப் படையினரைத் தனது வாளால் வெட்டி வெட்டி வீழ்த்தி



மோகன நாடகம்

இளங்கம்பன்

பார்க்கப்பலநாள்தவித்திருந்தே - உன்றன்
பக்கம்வந்தால் நீயும் ஓடுகிறாய்
ஆர்க்கும்கடலென நானும்வந்தால் - நீயோ
அமைதியை எதிலும் நாடுகிறாய்

முத்தொடுகாணும் முகத்தொளியை - நன்
முகத்தொடு கொண்ட அழகுருவே
நத்தும்உன் மொழியை யார்க்களித்தாய் - உன்
நாட்டியநடையை எங்கொளித்தாய்

பேசத்தவித்தே உருகிநிற்பாய் - இன்று
பேசாமல் நிற்பதும் ஏன் அறியேன்
நேசத்துடிப்புள்ள உன்மனத்தில் - வந்து
நிற்கும் உணர்வினை நான் அறியேன்?

ஆடகப்பொன்னே! என் அஞ்சுகமே! - உனை
அள்ளிமகிழ்ந்தவன் கெஞ்சுவதோ?
நாடகந்தான் இதுநீண்டிடுமோ - என
நங்கையவளும் நகையுடனே

"நாணம்சுமந்திடும் பெண்மையது - கொள்ளும்
ஞால நடப்பினை யார் அறிவார்?
மோனம் பயின்றிடும் காதலிலே - இந்த
மோகன நாடகம் துவக்கம்" என்றாள்.

னாள். தன்னுடன் வந்த படையினரின் எண்ணிக்கை குறையத் தொடங்கவே பௌகர் பயந்து திசைமாறிப் பதுங்கி ராணி செல்லும் திசையை நுட்பமாக அறியலானான்.

தனது இதர ஆங்கிலேயப் படைத் தளபதி பிரிகேடியர் ஸ்மித், காப்டன் ஹெனேஜ், அவர்களோடு சதியாலோசனை செய்த லெப்டினென்ட் பௌகர், இனி ராணியை வாள் போரில் வெல்வது மிக சிரமமென்று பீரங்கிப் படைகளையும், துப்பாக்கிப் படைகளையும் கொண்டு தாக்கத் தயாராயினர். பதிலுக்கு ராணி லட்சுமிபாயும் தனது பீரங்கிப் படையைக் கொண்டு எதிர்த்தாக்குதலையும் நடத்தினாள். ஆங்கிலப்படையினர் ஜான்ஸிராணியைச் சுற்றி வளைத்தும், ராணியின் வாள்வீச்சிற்கு அவர்களால் எதிர்த்துப் போரிட முடியவில்லை. ராணியின் இணையற்ற வீர சாகசங்களைக் கண்டு ஆங்கிலேயர்கள் திகைத்தனர். எப்பக்கங்கள் திரும்பினாலும் ராணியின் உருவமும் அவளது வீர வாள்வீச்சுமே மின்னலைப்போலப் பளிச்சிடுவதோடு, அதனால் தலைகள் தரையில் உருண்ட ஆங்கிலேயரின் கோரக் கூச்சல்கள் பேரிடியாக ஒலித்தன. கடும் போரிலும் ராணியோ, அவளது படை வீரர்களோ சளைக்கவோ, தளர்ச்சியோ அடையவில்லை. ஆனால் எதிரிப்படையினர் குழிகளில் மறைந்திருந்து ராணியின் படையினரைத் தாக்கினர். எதிர்ப்பாராத விதமாக இத்தாக்குதலினால் ராணியின் படைகள் சேதமாயின. வீரர்களின் எண்ணிக்கைகளும் 'மளமள' வென்று குறையத் தொடங்கின. எதிரிகளிடமிருந்து இனி தப்புவது இயலாது, எனவே அவர்களிடம் சிக்காமல் வேறு உதவிப்படைகளுடன் போரிடத் தனது நண்பர்களிடம் அணுக முயன்றாள்.

திடீரென ஒரு துப்பாக்கிக் குண்டு ராணி லட்சுமிபாயின் முதுகிலுள்ள குழந்தையைத் தாக்கி அவள் முதுகுப்புறமாகப் பாய்ந்து ஊடுருவியது. குற்றுயிரான தனது குழந்தையோடு குதிரையைத் தட்டினாள். மிகுந்த பாய்ச்சலோடு ஓடிய குதிரை மேலும் தொடர்ந்து ஓடியிருப்பின் ராணி லட்சுமிபாயின் வீரம் மேலிட்டிருக்கும். குதிரையின் வேகத்தைச் சதி செய்து நிறுத்தியது போல வழியில் ஒரு பெரிய கால்வாயைக் கடக்க வேண்டிய நிர்பந்தம் குறிக்கிட்டது. ஓடிவந்த அந்தக் குதிரையும் கால்வாயிலுள்ள நீரைக் கண்டதும் அஞ்சி, மேலும் ஓடாமல் நின்றுவிட்டது. ராணி அதனை எவ்வளவு தட்டிக்கொடுத்தும் நீரில் இறங்காமல் பின்னோக்கியது. வெகு தூரத்திலிருந்து மறைந்திருந்த ஆங்கிலேயப் படையைச் சேர்ந்தவன், ராணியைக் குறி பார்த்துத் தனது வாளை வீசியடித்தான். அவனது குறி தப்பாமல் வந்த வேகத்தில் ராணியின் தலையின் இடது பக்கம் பலமாகத் தாக்கிப் பிளக்கச் செய்தது. பிளந்த மண்டையிலிருந்து குருதி சிறு அருவியைப் போலக் கொட்டியது. கண்கள் சுழன்றன. கையிலிருந்த வீர வாளையும் விடாமல் திரும்பிப் பார்த்தாள். எதிரிகள் சமீபத்தில் எவருமில்லை. இனி பிழைக்க மாட்டோம் என்ற இறுதி எண்ணத்தோடு தன்னுடன் இணையாக வந்த இந்தியச் சிப்பாயிடம், "சகோதரா! எனது உடல் நம் பகைவரான ஆங்கிலேயரிடம் சிக்கக்கூடாது. என்னை அருகேயுள்ள சிறு குடிசைக்குள் அழைத்துச் செல். இதுதான் உனது கடமை!" என அந்தச் சிப்பாயிடம் ஏதோ சமிக்ஞை செய்து கூறினாள் ஜான்ஸி நாட்டு மகாராணி, வீர மங்கை லட்சுமிபாய்!

குடிசைக்குள் மெதுவாக அழைத்துச் சென்றான் ராணி லட்சுமிபாயை. தனது முதுகிலிருந்த தன் அருமை மகன் ஆனந்தராவின் உடலைப் பார்த்தாள். அவன் தாயாருக்கு முன்பே வீர சொர்க்கம் சென்று தன் தாயாரின் வருகைக்காக எதிர்கொண்டு காத்திருந்தான். இறந்த மகனை தன் மார்போடு அணைத்து 'ஜெய் பவானி! ஜெய் பாரதமாதா!!' என கோஷித்ததுமே ஜான்ஸி ராணியின் உயிர் பிரிந்தது. அடுத்த கணமே அக்குடிசையை ராணியின் விருப்பப்படியே அந்தச் சிப்பாய் வலம் வந்து தீ மூட்டினான். இந்திய விடுதலைக்காக ஆங்கிலேயரிடம் கடும் போர் புரிந்த வீர மங்கை ஜான்ஸிராணி லட்சுமிபாயின் உடலை அக்கினி தனக்குள் அணைத்துக்கொண்டது. ஃ

மருபுடல்

ஜனகன்

சுஜாரிதாவுக்குக் காதல் சுகமாக இருந்தது; சுவையாக இருந்தது. தினேஷுக்காகக் காத்திருப்பதும், அவனைக் காக்க வைத்துக் கோபப்பட வைப்பதும், சீண்டிப் பார்த்துச் சின்னதாய் ஊடலை வளர்த்துக் கொள்வதும், விளக்கிச் சொல்ல முடியாத சந்தோஷத்தை அளித்தன. ஓட்டலில் உட்கார்ந்து சாப்பிடும்போது கிடைக்கும் அண்மைக்கு மனசு ஏங்கித் தவித்தது.

தினேஷ் ஒரு முழுமையான கனவான். புடவை சுரிதார் என்று மாறி மாறி உடை அணிந்து கொள்ளுவாள் சுஜா. ஹேர் ஸ்டைல் அவ்வப்போது மாறும். பாராட்டும்போது மிக மென்மையான குரலில் "ஹவ் கியூட் யு ஆர்?" என்பான். டிரஸ்ஸோ, 'மேக்அப்'போ 'சூட்' ஆகவில்லை என்றால் அவன் 'கண்டம்' செய்வதில்லை. பேசாமல் இருந்துவிடுவான். அவனிடம் சுஜாவுக்குப் பிடித்த விஷயம் இது.

அவனுக்குள் ஐக்கியமாகிவிட அவள் அவசரம் காட்டினாள். உரிமைப்படுத்திக் கொள்வதில் தயக்கமும் தாமதமும் காட்டினால், பின்னால் வருத்தம் ஏற்படக்கூடும்.

அண்ணனுக்கும், அக்காவிற்கும் திருமணம் முடிந்த பிறகுதான் தன்னைப் பற்றி வீட்டில் யோசிப்பார்கள் என்பது சுஜாவிற்குத் தெரியும். தினேஷ் வீட்டிலும் உடனடியாக இந்தக் காதலுக்கு அங்கீகாரம் கிடைக்காது என்பதும் தெரியும்.

உள்ளுணர்வுகள் மிகுந்த வேகத்துடன் செயல்பட்டன. அந்த வேகத்தில் உற்றம் சுற்றம் ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. உலகம் கைக்குள் அடங்கிக் கிடப்பதாக ஒரு நினைவு. தான் நிமிர்ந்து நிற்பதுபோல் ஒரு பிரமை.

இருவரின் சம்பளத்தைக் கூட்டினால் மாத வருவாய் ஐந்து இலக்கத்தை எட்டும். எனவே பணம் ஒரு பெரிய பிரச்னையாக குறுக்கே நிற்கவில்லை.

ரிஜிஸ்தர் ஆபீசில் பதிவுத் திருமணம். மூன்று நட்சத்திர ஓட்டலில் நண்பர்களுக்கு விருந்து. முருகன் கோயிலில் சுவாமி பெயருக்கு அர்ச்சனை. வாழ்க்கையை ஆரம்பித்து விட்டார்கள்.

மூன்றாண்டுகளுக்குக் குழந்தையைத் தள்ளிபோட இருவரும் முடிவு செய்தார்கள் எச்சரிக்கையுடன் இருந்தார்கள்.

வாழ்க்கை சுகமாக இருந்தது மற்ற எதுவும் ஞாபகத்திற்கு வரவில்லை.

எச்சரிக்கையையும் மீறி இயற்கை அவளை வீழ்த்திவிட்டது. அவள் அதிர்ந்து போனாள். தினேஷிடம் சொல்ல வெட்கமாக இருந்தது. டாக்டரிடம் போகக் கூச்சமாக இருந்தது. பதட்டம் நெஞ்சுக்குள் குடியேறியது.

தலையைப் பிடித்துக் கொண்டு குமட்டிக் குமட்டி வாந்தி எடுத்துக் கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. படித்துக் கொண்டிருந்த பேப்பரை அப்படியே கையில் பிடித்துக் கொண்டு, வாஷ் பேஸினுக்கருகில் போனான் தினேஷ். அவள் வேதனைப்படுவது தெரிந்தது. பார்வையை அவளிடமிருந்து திருப்பினான்.

மூன்று ஆண்டுகளுக்கு வேண்டாம் என இருவரும் பேசி முடிவு செய்து கொண்ட விஷயம். முன் ஜாக்கிரதையுடன்தான் இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு முறையாவது தங்களைத் தாங்களே எச்சரித்துக் கொள்ளவும் தவறவில்லை. இருந்தும் எங்கோ பிசகிவிட்டது. தவறு நடந்து விட்டது.

அவளிடம் பேச்சுக் கொடுக்காமல் சோபாவிற்குத் திரும்பி பேப்பரில் கவனம் வைத்தான். ஆனால் கவனம் ஒன்றவில்லை.



அவன் எதுவும் ஆறுதலாக ஒரு வார்த்தைகூடப் பேசாமல் போவதைப் பார்த்து அவள் மனசு கனத்தது.

முகத்தை அலம்பித் துடைத்துக் கொண்டு அவளும் சோபாவில் அவன்முன் போய் உட்கார்ந்தாள்.

"உடம்பு சரியில்லையா?"

தினேஷ் ஆதூரமாகக் கேட்டான். ஆனால் சுஜாரிதாவுக்கு அவன் இன்னும் பாசத்துடன் கேட்டிருக்க வேண்டும் போலத் தோன்றியது. உடனே கேட்காமல் தாமதமாகக் கேட்பதுபோல் பட்டது. பார்வையைத் தரைப் பக்கமாகத் தாழ்த்திக் கொண்டு மெதுவாகப் பேசினாள். "பீரியட் மிஸ் ஆயிடுத்து".

"ஓ... மை... காட்..." என்றான். முன்பே அவன் ஊகித்ததுதான். சிறிது நேர அமைதிக்குப்பின் பேசினாள்.

"தினேஷ்... நான் 'லோன்லி'யா ஃபீல் பண்றேன்".

"வாட் எபவுட் மீ அன்ட் மை கம்பெனி?"

"இட் ஈஸ் தேர் தினேஷ்... பட்... எனக்கு இப்ப அம்மாவை, சிஸ்டர்ஸை, மாமியாரை, நாத்த னாரை... இவங்க எல்லோரையும் பார்க்கணும்போலத் தோன்றது..."

"இது என்ன, திடீர்னு இப்படி யொரு ஃபீலிங்..."

"தெரியலை தினேஷ்... ஐ... ஃபீல் தினேஷ்... என் அம்மாவைப் பார்த் துட்டு வரலாம்னு இருக்கேன். உங்களுக்கு..."

"எனக்கு ஆட்சேபனை இல்லை. நீ போயிட்டு வா..."

ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு, அம்மாவைப் பார்க்கப் புறப்பட் டாள். எப்போதும்போல சகஜ மாக வீட்டிற்குள் நுழைந்தாள். நாற்காலியில் உட்கார்ந்தாள். "குடிக்கக் கொஞ்சம் ஜலம் தாம்மா..." அம்மா ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்தாள். மெது வாக, "சௌக்கியமா?" என்றாள்.

"சௌக்கியம்தாம்மா... உங் களையெல்லாம் பார்க்கணும் போலத் தோணித்து. அதான் வந்தேன். புறப்படட்டுமா...?"

"கொஞ்சம் இருடி" என்று சொல்லிவிட்டு, அம்மா குங்குமச் சிமிழுடன் வந்து நீட்டினாள்.

சுஜாரிதா புறப்பட்டு விட்டாள்.

வீட்டிற்குப் போன பிறகு தினேஷுக்குப் போன் செய்து பேசி னாள். "அம்மாவைப் பார்த்தேன். ஐ ஃபீல் பெட்டர்" என்றாள்.


ஆபீசிலிருந்து வந்த தினே ஷுக்குச் சுடச்சுட பஜ்ஜி போட்டுக் கொடுத்தாள்.

"மார்னிங் ஏன் நெர்வஸா யிட்டே...?"

"தெரியலை தினேஷ். பெரிய வங்களை மீறி 'மேரேஜ்' பண்ணிக் கிட்டோம். தாய்மையைத் தள்ளிப்



விவரங்கள் தேவை



எலுமிச்சைக் கிளையிலே
இரண்டொரு குருவிகள்
என்னென்னவோ பேசிச் சிரிக்கும் - அதில்
என் உளம் அப்படி லயிக்கும்! - அதை
வலுமிக்கக் கவிதையாய்
வடித்திட வேண்டுமே
வாசகம் தெரிந்திடத் துடிக்கும் - மனம்
வல்லமை ஏதென விழிக்கும்!

பக்கத்துக் கூரையில்
படபடக் காகத்தின்
பறையறை காதினில் மோதும் - கீரைப்
பாத்தியில் கோழிகள் ஓதும்! - ஒரு
அக்கறை ஊகத்தில்
ஆனந்தம் கொள்ளவே
ஆசை மனத்தினில் தாகம் - மொழி
அல்லவா முக்கியம் ஆகும்!

அரும்பிய நாள் முதல்
அடங்கிடும் நாள் வரை
ஆயிரம் மானிடக் கோபம் - பழி
ஆத்திரம், வெஞ்சினச் சாபம்! - இவை
விரும்புதல் இன்றியே
விருந்திடும் பறவைதம்
வித்தகம் என்மனம் நாடும் - இவ்
விவரங்கள் ஆர்தரக் கூடும்?

இளையவன்

போட நாம போட்ட திட்டம், அடிபட்டுப் போச்சு. நாளைக்கு நமக்கும் ஒரு குழந்தை பிறந்து நம்மை மாதிரி நடந்துகிட்டா என்ன செய்யறதுன்னு மனசுக்குள்ள ஒரு சிறு போராட்டம். பிறந்த வீட்டுக்குப் போனேன். அம்மா, "சௌக்கியமா"ன்னு ஒரு வார்த்தை கேட்டா... ரொம்ப திருப்தியா இருந்துச்சு. 'ஐ நீட் சம்படி'. உங்களோடுகூட, இன்னொரு துணை தேவைன்னு தோணுது. உங்க வீட்டுக்குப் போகலாமா, தினேஷ்?"

அவளுக்குள் ஒரு இனம் புரியாத அச்சம் புகுந்து கொண்டு விட்டது. கல்யாணத்திற்கு முன், காதலிக்கும்போது, தாய்மையைத் தள்ளிப் போட்டு விட முடியும் என்ற நம்பிக்கை இருந்தபோது அவளிடம் துணிச்சல் இருந்தது; தைரியம் இருந்தது. இப்போது இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. தினேஷுக்கு இது ஆச்சர்யமாக இருந்தது.

அப்பா, அம்மாவை மீறி சுஜாரிதாவைக் கல்யாணம் பண்ணிக் கூட்டிக் கொண்டு போய் தனிக் குடித்தனம் ஆரம்பித்த பிறகு, அவன் தன் வீட்டிற்குப் போய் வருவதுண்டு. தினேஷ் மீது அவர்களுக்கு அப்படியொன்றும் வெறுப்பில்லை. ஆனால் சுஜாரிதாவின் நட்பும், பாசமும், நெருக்கமும் அவனுக்கு அம்மா வேண்டும் அப்பாவைப் பார்க்க வேண்டும் என்றெல்லாம் யோசிக்கத் தூண்டவில்லை. சுஜாரிதாவிற்கு மட்டும் தாய்மை என்ற உணர்வு வந்தவுடன் மனிதர்கள் தேவை என்று ஏன் தோன்றிற்று என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை.

காதலிக்கும்போது இருந்த மகிழ்ச்சியும், துடுக்கும், வேகமும் இன்றைய சுஜாரிதாவிடம் இல்லை.

இத்துணை அன்னியோன்யமாகப் பழகியும் சுஜாரிதாவை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"உங்களுக்குக் குட்டி தினேஷ் வேண்டுமா, குட்டி சுஜாரிதா வேண்டுமா?" என்று கேட்டாள்.

"எனக்கு நீ வேண்டும்; நீ மட்டும்தான் வேண்டும்" என்று சொல்லலாமா என யோசித்தான்.

சுகம், சுவை இவை நிரந்தரமாக ஒரே இடத்தில் மையம் கொண்டிருப்பதில்லை போலும். காதலும், கல்யாணமும் நேற்றைய சுகங்கள், சுவைகள். ஆனால் இன்று?

கண்களை மூடி யோசித்தபோது, ஒரு குழந்தை கூடத்தில் வாயில் நீர் ஒழுகத் தவழ்ந்து கொண்டிருந்தது. வாரி எடுத்து, துடைத்து அணைத்தபோது, அதுவே அப்போதைய சுகமாகத் தெரிந்தது. தினேஷ் அப்படியே தூங்கிவிட்டான். ஃ

மெலிதாய்ச் சில சோகங்கள்...

பூஜையை முடித்துக் கொண்டு பூஜையறையை விட்டு வெளியே வந்தேன்.

மனம் நிறைவாய் இருந்தது.

ஏனோ தெரியவில்லை. இந்தச் சில மணித்துளிகள் மனத்திற்கு அளிக்கின்ற சுகங்கள் வேறு எப்போதும் கிடைப்பதில்லை. பூவை அள்ளிப் போடுவதும், சுலோகங்களைத் தியானிப்பதும் வெளிப்பார்வைக்குச் சாதாரண விஷயங்களாய்த் தெரிந்தாலும், உள்ளூர அவற்றில் ஏதோ இருக்கிறது. பௌதிக உடலைத் தாண்டி, சூட்சும மனத்தின் உணர்வு அடுக்குகளைப் பிளந்து, உள்ளே ஒலித்துக் கொண்டிருக்கும் ஜீவத்துடிப்பினை மீட்டி விடுகின்ற ஏதோ ஒன்று அவற்றில் இருக்கிறது. கற்பூரத்தைக் காட்டி, 'ஜோதிக்கு ஜோதியளிப்பவனே...' என்று மனத்தில் நினைத்துக் கொண்டே மணியடித்துச் சுற்றும்போது மனம் கசிகிறது. கண்களின் பார்வையை நீர்த்திரை மறைக்கிறது. மனத்தின் துக்கங்கள் நீரில் சோப்புக் கரைகிற மாதிரிச் சன்னமாய்க் கரைகின்றன.

அந்த நேரங்களில் சுற்றி யாரும் இருப்பதை நான் விரும்புவதில்லை. மனம் கசிந்து கனியத் தொடர்பு கொள்ளும்போது, தனிமையே தேவையாய் இருக்கிறது. இதெல்லாம் கூட்டமாய் இருந்து பந்து ஜனங்களுடன் உணரும் விஷயமல்ல. தனியாய், தன்னந்தனியாய், தன்னை மறந்து, தன்னின் சகலத்தையும் மறந்து, எல்லா வற்றுடனும் கரைகிற சுகானுபவம். பற்று இல்லாது பற்றுகிற பரமானந்தம். சொர்க்க சுகம்...

இடுப்பு வஸ்திரத்தை அவிழ்த்து முகத்தில் அழுத்திக் கொண்டேன். திரையிட்ட கண்ணீர்த்துளிகள் துணியில் படர்ந்தன.

"நம்ம ராஜு கடிதாசு போட்டிருக்கான். நாளைக்கு மறுநா வரானாம். மெட்ராஸ் வரைக்கும் ஆபீஸ் ஜோலியா வரானாம். அப்படியே உங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னு வரானாம். எழுதியிருக்கான்..."

சின்னப்பெண் மாதிரிச் சங்கரி கடிதத்தை எடுத்துக் கொண்டு ஓட்டமாய் ஓடிவருகிறாள். சந்தோஷம் உடம்பில் அதிர்கிறது.

கருப்பு மயிர் சிறு பான்மையாகிப் போய்ச் சணல் பழுப்பு நிறத்திலும் அவளது கூந்தல் ஒரு புது அழகில் ஒளிர்கிறது. முகம் நிறையப் பிரகாசம். மனம் நிறைய உற்சாகம். கண்களில் எப்போதும் சாந்தம், கனிவு. பேச்சில் எனக்குத் தெரிந்து கடுமை இருந்ததே இல்லை. கீழ்ஸ்தாயியில் வீணை மீட்டுகிற மாதிரிச் சன்னமாய்ச் சங்கீதக் குரல். இந்த அறுபது வயதிலும் சங்கரி அழகாய்த்தான் இருக்கிறாள். பெண்ணின் அழகு சரீரத்தில் இல்லை. வேறு எங்கேயோ இருக்கிறது. அது தெரியாமல் எங்கெங்கோ தேடியலைந்து, திசை மாறித் துவண்டு...

அழகு என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளவே எத்தனை வயது செலவழிக்க வேண்டியதாயிற்று! இந்த அழகில் ஆண்டவனைத் தேடிப் பிடித்து விடுகிறேன் பார் என்று அலைகிறவர்களை நினைத்தால் சிரிப்பாய்த்தான் வருகிறது.

இந்தச் சங்கரியைக் கையைப் பிடித்து என் வீட்டுக்கு அழைத்து வந்தபோது, அவளுக்குப் பதினைந்து வயது. அந்தக் காட்சி இன்னமும் மிகப் பசுமையாய் மனத்தில் பதிவாயிருக்கிறது. நூல்கண்டு மாதிரி 'பொசுபொசு' வென்று ஒன்பது கஜம் புடைவைக்குள் மரப்பாச்சி மாதிரி நின்று கொண்டிருந்தாள். நெற்றிச் சுட்டி, ஒட்டியாணம், கைப்புஜங்களில் ரவிக்கையைப் பிடித்துக் கொள்ள ஏதோ ஆபரணம் வளைசலாய். தட்டுத் தடுமாறிக் கொண்டு நடந்து வந்தது அப்படியே படமாய் மனத்தில் நிற்கிறது...

பெரிய படிப்புப் படிக்கிறவன், பெரிய வக்கீலிடம் ஜூனியராய் இருக்கிறவன் என்று எனக்கு அப்போதே பெரிய பெயர். சுற்றியிருக்கிற எல்லாமே எனக்குத் துச்சமாய்த் தெரிந்த வயது. சர்வ அலட்சியமாய் அவள் கையைப் பற்றிக்கொண்டு 'எனக்கு இவள் இணையே இல்லை' என்கிற தோரணையில் மணையில் அமர்ந்து கொண்டதும், மிகச் சாதாரணமாய் மாலைமாற்றிக் கொண்டதும், தாலிகட்டியதும் நலங்கின்போது சங்கரிக்குத் துளியும் விட்டுக்கொடுக்காது எல்லா விளையாட்டுகளிலும் அவளை வெற்றி கொண்டதும் அலையலையாய் நினைவுக்கு வருகின்றன,.

கண்களில் கண்ணீர் துளிர்க்க அவள் தேங்காயை விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொள்ள, பெரிய சாகச உணர்வுடன் புருஷபலம் அனைத்தையும் பிரயோகித்து அவள் கைகளில் விரல் நகரங்களால் ரத்தம் வருகிறாற்போல் ஓர் அழுத்து அழுத்தியதும் அவள் பிடியினைத் தளர்த்தி விட, வீராவேசமாய்த் தேங்காயைப் பிடுங்கிக் கொண்டு கெக்கலித்ததும் நினைவுக்கு வருகிறது.

'மளக்'கென்று அவள் அழுததும், "அழாதேடீ! புருஷாதான் ஜெயிக்கணும். அவரைப் பாத்துச் சிரி" :என்று யாரோ வயதான பெண்மணி சங்கரியைத் தேற்றியதும் இன்னமும் நன்றாக



நினைவிருக்கிறது. கண்களைத் துடைத்துக் கொண்டு இமைகளைச் சடசடத்து என்னைக் கனிவு பொங்கப் பார்த்துச் சிரித்ததும் நினைவில் சூர்யோதமாய் எழுகிறது.

பாவம் சங்கரி. சின்னப்பெண். அப்பா, அம்மாவின் போஷாக்கு நிழலில் சுகங்கண்டு வளர்ந்தவள். அருமையாய் ஆசையாய் வளர்க்கப் பட்டவள். அவளை ஜெயிக்கவிட்டிருந்தால்தான் என்ன? வெற்றியின் பெருமிதம் அந்த இளம் முகத்தில் மேலும் சந்தோஷ அழகுகளைப் பதித்திருக்குமே! அந்த அழகின் விகசிப்புக்கு இணை உண்டா என்ன? எனக்கு ஏன் விட்டுக் கொடுக்கவே தோன்றவில்லை?

தப்புதான். விட்டுக் கொடுக்காமல் அந்தச் சின்னப் பெண்ணைக் கண்கலங்க வைத்தது தப்புதான். இப்போது நினைத்து என்ன செய்வது? மனம் வருந்தி என்ன பிரயோஜனம்? இதெல்லாம் மீண்டும் வரக்கூடிய அனுபவங்களா என்ன, தவறுகளைச் சீர் செய்துவிட? ஆனது ஆனதுதான். இழந்த சந்தோஷங்கள். இழந்தவை தாம்.

'பாவம் சங்கரி...'

அவளை நிமிர்ந்து பார்க்கிறேன்.

கையில் கடிதத்துடன் உற்சாகம் பொங்க என்னையே பார்க்கிறாள். கடிதத்தைக் கையில் கொடுத்து விட்டுச் சந்தோஷ சங்கீதமாய் உள்ளே போகிறாள்.

"பிள்ளை வரான்ன உடனேயே கண்ணீர் பொங்கறது, அவருக்கு..." என்று சொல்லிக்கொண்டே போனவளைத் திரும்பிச் சற்று நேரம் பார்த்துவிட்டுக் கடிதத்தில் பார்வையைச் செலுத்தினேன்.

இது மட்டுமில்லை. இப்படிச் சின்னச் சின்னதாய் எத்தனையோ விஷயங்கள். ஒவ்வொன்றையும் இப்போது நினைத்துப் பார்க்கிற போது, மனத்தில் கழிவிரக்கம் மண்டுகிறது. 'தப்பு, தப்பு' என்று உள்ளிருந்து ஒரு குரல் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

கல்யாணம் முடிந்ததும் வீட்டுக்கு வந்தாள் சங்கரி. சின்னக் குழந்தை. குழந்தைதானே! பதினைந்து வயது ஒரு வயதில்



சேர்த்தியா? எவ்வளவு ஆசைகளுடன் வந்திருப்பாள்! அப்பா, அம்மா, அண்ணன், தம்பி ஆகியோரைவிட்டு, என்னை நம்பித் தானே என் வீட்டிற்கு வந்தாள்! அவளை லட்சியமே செய்வதில்லை நான், அப்போதெல்லாம். ஏதோ விளையாட்டுப் பொம்மையைக் கையாளுவது மாதிரி அவளை நடத்தியதெல்லாம் நினைவுக்கு வருகிறது. 'எனக்குத் தேவைப்படும்போது வரவேண்டும். மற்ற நேரங்களில் உன்னைப் பற்றி எனக்குக் கவலையில்லை' என்பது மாதிரியான தோரணையில் தானே அவளை நடத்தியிருக்கிறேன்!

'கோயிலுக்குப் போகலாமா?' என்று சன்னக் குரலில் கதவின் பின்புறமிருந்து கேட்பாள். பெரிய சட்டப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கும் நான், 'யாரு என்னையா கேட்டாய்?' என்கிற தினுசில் அவளைப் பார்ப்பேன். 'அம்மாவைக் கூட்டிண்டு போ' என்பேன். 'அம்மாவுக்கு வேறெ ஜோலியிருக்காம். உங்களோட போகச் சொன்னா' என்பாள். மெலிதான ஏமாற்றத்தின் சாயல் குரலில் தெரியும். 'பங்கஜாவைக் கூட்டிண்டு போயேன்' என்று கூறிப் 'பங்கஜா' என்று பெருங்குரலெடுத்து அழைப்பேன். பிறகு சங்கரியை லட்சியம் செய்யாமலேயே புத்தகத்தில் மனத்தைச் செலுத்தி விடுவேன். அப்புறம் சங்கரியின் நினைவும் மறந்து போகும். பங்கஜாவும் மனத்தை விட்டுப் போய் விடுவாள். அவள் கோயிலுக்குப் போனாளா என்று கவலைப்பட்டதும் இல்லை. பங்கஜா தன் தோழிகளுடன் குளத் தங்கரையில் விளையாடச் சென்றிருந்தாள் என்பது தெரியவரும். சங்கரி?

பாவம். என்னோடு வெளியில் செல்லவேண்டும் என்று ஆசை. 'அழகாய், வாட்டசாட்டமாய்ப் பெரிய படிப்புப் படிக்கிறவர் எனக்குரியவராக்கும்' என்று பிறருக்குக் காட்டிக் கொள்கிற ஆவல். நியாயம்தானே! அவள் ஆசைப்பட்டதில் என்ன தப்பு? அவள் உரிமையில்லையா அது? அதை நிறைவேற்றுவது கணவனின் கடமையில்லையா? நான் அவளுடன் சென்றிருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாள்? எவ்வளவு பெருமிதப்பட்டிருப்பாள்!

அப்புறம் குழந்தை பிறந்தது. அடுத்தடுத்துக் குழந்தைகள். வீட்டிற்கு வருகிறவர்கள் போகிறவர்கள் என்று கூட்டமாய் வீடு நிறைய ஜனங்கள். எனக்கும் தொழில் நிமித்தப் பயணங்கள். சந்திப்புகள். வெளியில் அவளை அழைத்துக் கொண்டு போனதேயில்லை என்று சொல்ல முடியாது. நிறையப் போயிருக்கிறோம். கையைப் பிடித்துக் கொண்டு ராஜு வருவான். வயிற்றிலோ, இடுப்பிலோ ஏதோ ஒன்று இருக்கும். கடமையை முன்னிட்டுச் சென்றிருக்கிறோம். அவ்வளவு தான்.

ஆனால் அந்த முதல் அழைப்பு, ஆரம்பகால உல்லாசம், அதன் எதிர்பார்ப்பு, அந்த வெட்கம் கலந்த ஆர்வம் இவையெல்லாம் அப்புறம் இருந்ததேயில்லை. இதெல்லாம் அந்தந்த வயதின் எதிர்பார்ப்புகள், அபிலாஷைகள், ஆர்வங்கள். நிறைவேறாவிடில் இழப்புதான். மீண்டும் அந்தக் கணங்கள், குதூகலங்கள் வருவதேயில்லை.

'தப்புதான்... போச்சு. விட்டாச்சு'

தலையைப் பலமாய் ஆட்டி விட்டேன் போலிருக்கிறது.

"என்ன வேண்டாங்கறேள்? ஒரு வாய் பாயசம் குடிங்கோ... கொழந்தை வரான்னு சேதி கேட்டதும் சந்தோஷம் தாங்கல்லே... பண்ணினேன். குடியுங்கோ. ஒரு மணி கழிச்சு, சாவகாசமா எலையைப் போடறேன்... சாப்பிடலாம்..."

என்னைக் குடிக்க வைத்துக் காலி டம்ளரை வாங்கிக் கொண்டு உற்சாகமாய் உள்ளே போகிறாள்.

உத்தமமான பெண். என் சந்தோஷம், என் சௌகர்யம், என் வெற்றி என்று எனக்காகவே தன் வாழ்வைச் செலவழிக்கிற

வள். என்னைத் தவிர வேறு பிரக்ஞையே இல்லாதவள். ஆனால் நான் அப்படி இருந்தேனா? இல்லையே! எத்தனையோ குறுக்கீடுகள், குதர்க்கங்கள். அவள் அழகாயில்லை என்று அழகைத் தேடி அங்கும் இங்கும் அலைந்திருக்கிறேன். இவளைக் கண்டு எரிச்சலடைந்திருக்கிறேன். கோபித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் இவள் ஒரு கணமும் என்னிடம் முகம் சுளித்ததில்லையே!

அதெல்லாம் தப்பு. நிறையத் தப்பு பண்ணியிருக்கிறேன். நான் செய்தது எல்லாம் நியாயமே இல்லை.

'ஏதோ ஓடியாச்சு... வயசு ஓடிப் போயாச்சு...' என்று எண்ணிக் கொண்டே ராஜுவின் கடிதத்தைப் படிப்பதற்காக வசதியாய்ப் பிரம்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டேன்.

ராஜு.

என் சீமந்த புத்ரன்.

கல்யாணமான ஒரே வருஷத்தில் ஜனனமானவன். குழந்தையின் அருமையை உணரவியலாத வயதில், உணரவேண்டிய அவசியம் ஏற்படும் முன்னரே பிறந்து விட்டவன். 'மெத்து மெத்து' என்று கைக்குக் காத்திரமாய் இருப்பான். சிரிக்கிறபோது மெலிதாய் வலது கன்னத்தில் குழி விழும். வயிற்றில் சிரிப்பு மூட்டினால் 'கடகட' வென்று சிரிப்பான். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் 'ராஜு, ராஜும்மா' என்று தூக்கிக் கொஞ்சுவார்கள். பகலில் பெரும்பாலும் பிறர் வீட்டில்தான் இருப்பான்.

குழந்தையைப் பார்த்துக் கொண்டே போவேனே தவிர, அதிகம் கொஞ்சியதில்லை. 'என்னடா பயலே' என்று யாரையோ கொஞ்சுகிற மாதிரி அலட்சியமாய்க் கூறிவிட்டுப் போவேன். இதையெல்லாம் பார்க்கிற மற்றவர்கள், என்னைப் பெரும் அறிவு ஜீவி என்று மானசீகமாய் மதிக்கிற தான பிரமையில் இருப்பேன்.

நான் சாப்பிட உட்கார்ந்தால், 'விசுக், விசுக்'கென்று நீந்திக் கொண்டு என்னிடம் வருவான் குழந்தை. பூரண சந்திரன் கைகால் முளைத்துத் தரையில் தவழ்ந்து வருகிற மாதிரி, அலைபோல் எம்பி எம்பி வருவான்.

"ஏய் சங்கரி! எங்கேடி போயிட்டே? இங்க பாரு, நீஞ்சி நீஞ்சிண்டு என் தட்டுகிட்ட வந்துட்டான். எடுக்கப்போறான்... டேய்! போடா தள்ளி!... போச்சு... ஒண்ணுக்குப் போய் அசிங்கம் பண்றான் பாரு... நான் சாப்பிட உக்காந்தா கொழந்தையை வரவிடாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? ஒருவாய் ரசிச்சுச் சாப்பிடவிடாமெ, உபத்ரவம்டீ ஒன்னோட..."

பெருங்குரலில் கூவிக்கொண்டே குழந்தையை அருகே வரவிடாமல் தடுத்தது நினைவுக்கு வருகிறது. முகம் சுண்டிப்போய்க் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போவாள் சங்கரி...

குழந்தை நீந்துவதும், தன் குஞ்சுக்கைகளால் தொட்டு இழுத்து விஷமம் செய்வதும், சொர்க்க சுகமில்லையா? சின்னக் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சுவது பேரின்பமில்லையா? அரும்பு

விரல்களால் அது தீண்டுவதும் வருடுவதும் சொல்லில் அடங்கும் சுகங்களா என்ன?

ஓரிரு வயது கடந்துவிட்டால் அந்தச் சுகத்தை அனுபவிக்க முடியுமா? நடக்கத் தொடங்கிய குழந்தை நீந்துமா? அல்லது ஓடத் தொடங்கிய குழந்தைதான் தவழுமா? இவையெல்லாம் இழந்தால் இழந்தவை தானே? மீண்டும் கிடைக்குமா? போனால் போனது தான். விட்டால் விட்டதுதான். தன் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சி மகிழும் சுகம், பிறர் குழந்தையைக் கொஞ்சினால்தான் கிட்டுமா?

'விட்டாச்சு... இழந்தாச்சு... அதையதை அனுபவிக்கறதுக்கும் குடுத்துவச்சிருக்க வேணும். நல்ல பசியெடுக்கறப்போ, வாய்க்கு ருசியாய்ச் சாப்பாடு கிடைக்கக் குடுத்து வச்சிருக்க வேண்டாமா?'

ஆயாசத்துடன் பிரம்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டு, பார்வையை மறைத்த கண்ணீரைச் சுண்டி எறிந்துவிட்டுக் கடிதத்தைப் படித்தேன்.


முத்து முத்தாய் எழுதியிருக்கிறான். கையெழுத்து அழகாய் இருக்கிறதென்று வருஷா வருஷம் பரிசு வாங்கியவனாயிற்றே, அவன்!

"அப்பா... எனக்கு பிரைஸ்" என்று உற்சாகமாய்க் கூறிக் கொண்டே என்னிடம் ஓடிவருவான். 'பலே... பலே... வெரிகுட்' என்று பாராட்டி, அவனைத் தட்டிக் கொடுத்துத் தழுவிக் கொஞ்சுவேன் என்று எதிர்பார்த்திருப்பான். நியாயமான எதிர்பார்ப்புதான் அது. ஆனாலும் எனக்கு அப்படியெல்லாம் பாராட்டத் தோன்றியதில்லை. பாராட்டியதுமில்லை.

"பிரைஸா? சரி... ஒரு வருஷம் வாங்கினாப் போறாது. வருஷா வருஷம் வாங்கணும். சரி. உள்ளே போ" என்று வியாபாரத்தனமாய்ப் பேசி அவன் அம்மாவிடம் அனுப்பி விடுவேன்.

"சரிப்பா..." என்று தளர்ந்த நடையுடன் அம்மாவிடம் செல்வதைக்கூடக் கவனிக்காமல், என் வேலையில் மூழ்கிப் போவேன்.

சின்னக் குழந்தை. உற்சாகமாய்த் தான் பரிசு வாங்கியதை அப்பாவிடம் கொண்டு வந்து காட்டுகிறது. அவனைப் பாராட்டிப் புகழ்ந்தால் என்ன? 'வெரிகுட்... வெரிகுட்...' என்று முதுகில் தட்டிச் சிறப்பித்திருந்தால் என்ன? எவ்வளவு சந்



தோஷப்பட்டிருப்பான்? எவ்வளவு பெருமைப்பட்டிருப்பான்? அதையெல்லாம் அந்தக் குழந்தைக்குக் கொடுக்காமல் விட்டுவிட்டேனே!

கேட்கச் சின்ன விஷயமாய்த் தோன்றினாலும் இவையெல்லாம் பெரிய சந்தோஷங்கள். உணரா விட்டால் பெரிய இழப்புகள்.

அதனால் அவன் குறைந்து போய்விடவில்லை. வருஷா வருஷம் பரிசு வாங்கினான். என்னிடம் கொண்டு வந்து காட்டுவான். ஆனால், அப்பா பாராட்டுவார். தட்டிக்கொடுப்பார் என்ற எதிர் பார்ப்புகள் இல்லாமல் சாதாரண மாய் இருக்கும். என்னிடமிருந்து பாராட்டுகளை எதிர்பார்க்கிற மனோநிலையை அவன் கடந்து போய்விட்டிருந்தான்.

சே! எவ்வளவு பெரிய இழப்பை அந்தக் குழந்தைக்கு நான் கொடுத்து விட்டிருக்கிறேன். தவறுதான். பெரிய தவறுதான். அப்புறம் பெரியவனானதும் பரிசு வாங்குவது அவனுக்கு வாடிக்கை யாகிப் போயிற்று. படிப்புக்கு, விளையாட்டிற்கு, பேச்சுப் போட் டிக்கு என்று விதவிதமாய் வாங்கினான். கண்ணாடி பீரோ நிறைய அடுக்கினான். வயதான பின்னர், பாராட்டுகளை அவன் எதிர்பார்க்கிறதேயில்லை.

இழப்புதான். இதெல்லாம் மறுபடியும் பெறமுடியாத இழப்பு கள்தாம். அந்தந்தப் பருவத்தில் அததற்கு என்று பிரத்யேக சுகம். மாவடு ஒரு ருசி. காய் ஒரு ருசி. கனி ஒரு ருசி. அந்தந்தப் பரு வத்தில் அதையதை அனுபவித்து விடவேண்டும். போனால் வருவ தில்லை.

இப்போது எல்லாம் புரிகிறது. தெரிகிறது. என்ன பிரயோஜனம்? இழந்தவைகளை மீண்டும் பெற முடியுமா?

இப்படி எத்தனையோ சம்ப வங்கள். ஒவ்வொன்றிலும் அத னதிலிருந்து பெறும் சுகத்தைப் பெற்றதில்லை நான். அளிக்க வேண்டிய சந்தோஷத்தையும் நான் அளித்ததில்லை. இப்படியே வயதாகிவிட்டது.

ராஜுவிற்கு அடுத்து மோகனா பிறந்தாள். பின்னர் சாரங்கன். அதன் பிறகு அபர்ணா. எல்லா ரிடமும் இப்படித்தான் நாட்கள் ஓட்டமாய் ஓடின.

சாதாரண வக்கீலாய்த் தொடங்கினேன். பிறகு சிறந்த கிரிமினல் வக்கீலாக மலர்ந்து, நான் தொட்டாலே வழக்கு வெற்றி என்று பெயரெடுத்தேன். நாட்டின் பல பகுதியிலிருந்தும் என்னைத் தேடிவந்தார்கள். உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றம் என்று



இயற்கைத் தாய்

மரு. பரமகுரு

இயற்கைத் தாயை நினைக்கின்றேன்! – அவள்
இருப்பதால் நானும் இருக்கின்றேன்!
உயிருக் கெல்லாம் அவள்மூலம் – இதை
உணர்த்தும் அவளின் அருட்கோலம்!
செயலைத் தாண்டி வளர்ப்பவளும் – என்
சிந்தனை தோன்ற அழைப்பவளும்
இயற்கைத் தாயே என்பதனால் – நான்
எண்ணி வணங்குவன் அன்பதனால்!

கதிரும் மதியும் அவள் விழிகள்! – ஒளி
காட்டிட அவைதாம் இல்லையெனில்
எதனைக் காணும் என் விழிகள்? – இரண்டும்
இருண்டு கிடக்கும் புண்குழிகள்!
நதியும் கடலும் வான்மழையும் – பூ
மகளை அணைக்க வில்லையெனில்
எதுதான் இங்கே உண்டாகும்? – அந்த
இயற்கையை என்மனம் கொண்டாடும்!

மன்னும் காலக் கனவானாள்; – என்
வாழ்வில் மூச்சாய் நனவானாள்;
சின்னஞ் சிறிய செவிப்புலனில் – சேதி
சேர்த்திடும் நாதக் கனியானாள்;
என்னைப் பெற்ற தாயானாள்; – உடல்
இயக்கும் கருணைத் தீயானாள்!
தன்னுள் என்னை வைத்தவளை. – அருள்
தாயை வணங்கி வாழ்த்துவனே!

உயர்ந்தேன். எல்லாத் திசைகளிலிருந்தும் வெற்றிமகள் என்னை வாரியெடுத்து அணைத்துக் கொண்டாள்.

என்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்து பிறரை மறந்து போனேன். மனைவியின் மென் மனதைப் புரிந்து கொள்ளவில்லை. மூத்தபிள்ளையின் அறிவுப்பிரகாசத்தைப் பாராட்டத் தெரிந்து கொள்ளவில்லை. மோகனாவின் இனிய சங்கீதத்தை அங்கீரிக்கத் தெரியாதவனாக இருந்தேன். அபர்ணாவின் நாட்டியத் திறமையை, சாரங்கனின் விளையாட்டுச் சூரத்தனத்தை என்று எதையுமே பூரணமாய் ரசித்ததில்லை. என் ரசனையால் அவர்களுக்கு நியாயமாய்க் கிடைக்க வேண்டிய சந்தோஷத்தை அளித்ததில்லை.

இப்படியே காலம் போய் விட்டது. 'நான், நான்' என்று என்னைப் பற்றியே நினைத்து, நினைத்துக் காலம் போய்விட்டது. ஆனாலும் அவர்கள் எல்லாரும் என்மீது 'அப்பா அப்பா' என்று அளப்பரிய பாசத்தை வைத்திருக்கிறார்கள்.

சாரங்கன் பெரிய டென்னிஸ் வீரன். உலகின் ஒவ்வொரு மூலைக்கும் சென்று வெற்றியைக் குவிக்கிறான். மோகனா அமெரிக்காவில் சந்தோஷமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். போன வருடம் ஒருமாத லீவில் இந்தியா வந்திருந்தாள். அழகாய்ச் சந்தன பொம்மை மாதிரிப் பெண் குழந்தை. அப்படியே அவளை உரித்து வைத்துப் பிறந்திருக்கிறது. அபர்ணா கனடாவில் இருக்கிறாள். நடனப்பள்ளி நடத்துகிறாள். உலகம் முழுவதும் அவள் மாணவிகள் இருக்கிறார்கள். ராஜு டில்லி அரசில் பெரிய அதிகாரி. காலைச் சிற்றுண்டியை வீட்டில் சாப்பிட்டுவிட்டு, சாப்பாட்டை ஜெனீவாவில் வைத்துக் கொள்கிற அளவுக்கு விமானத்தில் பறக்கிறான்.

'அப்பா... அப்பா' என்று எல்லோரும் என்மீது உயிராய் இருக்கிறார்கள். என்னால்தான் வாய் குளிர அவர்களை அழைக்க முடியவில்லை. மனம் குளிரப் பேச முடியவில்லை.

அறுபது வயதில் ஏதோ விஷக்காய்ச்சல். ஒரு மாதம் என்னைப்புரட்டிப் புரட்டி அடித்தது. உலகில் என்ன மருந்து உண்டோ அத்தனையையும் எனக்குக் கொடுத்தார்கள். காய்ச்சல் போயிற்று. அத்துடன் என் பேச்சும் போயிற்று. வலது கை விரல்களில் மெலிதாய் நடுக்கம். மரத்துப்போன உணர்வு. வாயைக் கோணிக் கொண்டு நான் பேச முயற்சிப்பதைக் கண்ணாடியில் பார்க்க எனக்கே பயமாயிருக்கிறது.

நாற்காலியில் தனிமையில் உட்கார்ந்து பொழுதைக் கழிக்கிறேன்.

"ரகு உன் கையெழுத்து முத்து முத்தா இருக்குடா..."

"அபர்ணா உன் டான்ஸ் பிரமாதம்..."

"மோகனா, உன் பாட்டுலே தேன் வழியறதும்மா..."

"சாரங்கா... உன் சர்வீஸ் டெட்லீயா இருக்குடா..."

கண்களால் கூற முயல்கிறேன். அவர்களுக்குப் புரிகிறதோ என்னவோ தெரியவில்லை. குழந்தைகள் என்மீது பாசத்தைப் பொழிகிறார்கள். சங்கரி தனது அன்பினால் என்னைத் திணறச் செய்கிறாள்.

இதோ, இலையை எடுத்துக் கொண்டு ஓடி வருகிறாள். 'நாழியாயிடுத்தா? பசிக்கிறதா?' என்று கேட்டுக் கொண்டே பரிமாறுகிறாள். நான் சாப்பிட்டு முடிகிற வரை ஒவ்வொன்றையும் கவனித்து என் தேவையைத் தாயினும் மேலாய் பரிவுடன் நிறைவேற்றுகிறாள். உத்தமமான பெண்.

'சங்கரி.. உன் சமையல் அற்புதம்... பாயசம் நாக்குலேயே நிக்கறது...',

நான் சொல்வது அவளுக்குப் புரிகிறதோ என்னவோ தெரியவில்லை.

பெண்ணின் ஸ்வரூபங்கள்

வாஸந்தி ...

சுபத்ராவுக்கு எதை நினைத்தாலும் அலுப்பாக இருந்தது. இந்த வீட்டில் இருந்த எல்லா ஜீவ ராசிகள் மீதும் கொல்லையிலிருந்த பசு மாட்டிலிருந்து வாசலில் வெயிலில் காய்ந்தபடி சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கும் மாமனார் சங்கர்தாஸ்வரை - ஆத்திரம் வந்தது. அது சாதாரண ஆத்திரம் இல்லை - கத்தினோம் கொட்டினோம் வடிகாலில் கரைத்தோம் என்பதற்கு -

இது ஒரு சொல்லத் தெரியாத ஊமை ஆத்திரம். வெடித்தால் அவளைப் பைத்தியக்காரி என்று பசுமாடுகூடச் சிரிக்கலாம். இந்த வீட்டிலே நடக்கிற எல்லா அசட்டுத் தனங்களுக்கும் அந்தக் கிழவர் தான் மூலகாரணம் என்று அவள் ரகசியமாகப் பசுவின் காதில் ஒரு நாள் சொன்னபோது அது அலட்சியமாக முகத்தைத் திருப்பிக் கொண்டது. பால் கறக்கச் சென்ற போது பாலை விடாமல் மடியில் பிடித்து வைத்துக் கொண்டது.

கிழவரின் ராசி அப்படி. கிராமம் முழுவதுமே அவர் காலில் வந்து விழும். இத்தனைக்கும் மனுஷனின் ஜேபியில் ஒரு நயா பைசா கிடையாது. காலில் விழுவது கிராம மக்கள் மட்டுமில்லை. அவருடைய மகன் மோகன்தாஸும் தான். பித்ருபக்தி என்றால் அந்த ஆளைத்தான் உதாரணமாகச் சொல்ல வேண்டும். க்ளினிக்குக்குப் போவதற்கு முன் வாசலில் அமர்ந்திருக்கும் தந்தையின் காலைத் தொடுவார். திரும்பியதும், அதே ஸ்தானத்தில் உட்கார்ந்திருக்கும் அப்பாவின் காலைத் தொட்டுச் சற்று நேரம் குசலம் விசாரித்துவிட்டே உள்ளே வருவார். யாரும் சங்கர்தாஸைக் கவனிக்காமல் தாண்டிக் கொண்டு சென்றுவிட முடியாது. அதற்காகவே அவர் அப்படி வாசல் முற்றத்தில் உட்கார்ந்திருக்கிறாரோ என்று சுபத்திராவுக்குத் தோன்றும். மோகன்தாஸைப் பின்பற்றி அநுபமாவும் பிரீத்தம்மும் கூடப் பள்ளிக்கும், கல்லூரிக்கும் போவதற்கு முன் வாசலில் அமர்ந்திருக்கும் தாத்தாவை வணங்கி விட்டுத்தான் போவார்கள்.

அட, பெரியவர்களிடம் மரியாதை காட்டுவது நல்லதுதான், இந்தக்காலத்துக் குழந்தைகள் இத்தனை பவ்யமாக இருப்பது விசேஷம்தான். யார் இல்லை என்றது? ஆனாலும், இந்தக் கிழவரின் தத்துவங்களில் மூளைச் சலவை ஆகிவிடக் கூடாதல்லவா?

நயா பைசாவுக்கு உதவாத அந்தத் தத்துவத்தால் என்ன லாபம் என்று எவரும் இந்த வீட்டில் யோசனை செய்வதில்லை. அப்படிப்பட்ட யோசனையே ஜனிக்காது என்பது இருக்கட்டும், அதை எடுத்துச் சொன்னால் சொல்பவரைச் சந்தேகிப்பார்கள். சேச்சே, எத்தனை நீசத்தனமான சிந்தனை என்று ஆகாசத்தில் அமர்ந்து கொள்வார்கள்.

இப்படி ஆகாசத்தில் மிதப்பதால்தான் பெட்டியும் ஜேபியும் காலி. இத்தனைக்கும் சாதாரணப் படிப்பு இல்லை. பட்டினத்து மருத்துவக் கல்லூரியில் ஐந்து வருஷம் தங்கி உபகாரச் சம்பளத்துடன் படித்துப் பட்டம் பெற்றவர், மோகன்தாஸ். இந்த ஊரில் இவரைவிட்டால் பெயர் சொல்லும் படியாக வேறு ஒரு டாக்டர் இல்லை.

சுபத்திராவின் அத்தை பெண்ணின் கணவரும் மீரட்டில் டாக்டர்தான் பங்களா, கார் என்கிற வசதியேற்பட்டுவிட்டது பத்தே வருஷத்தில். ஒன்பது வயதே ஆன பெண்ணிற்கு நகைகள் சேர்க்க ஆரம்பித்து விட்டாள்.

இங்கு அனுபமாவிற்குக் கல்யாண வயது வந்துவிட்டது அந்தக் கிழவருக்குக்கூடக் கண்ணில் படவில்லை. "படிக்கட்டும்!" அவளுடைய அப்பாவுக்கும் வேண்டாத பெருமை அடித்துக் கொள்வதில் குறைச்சல் இல்லை.

"அநுபமா சாதாரணப் பெண்ணில்லே. அசாதாரணமானவள். பெயருக்கு ஏற்ற மாதிரி. படிப்பில் அவளுக்கு எத்தனை நாட்டம் பார்! நகை நட்டு, கல்யாணம் கார்த்தி என்று என்னிடம் பேசாதே. அவள் படிக்கப் போகிறாள். டாக்டராவாள். என் க்ளினிக்கில் வேலை பார்ப்பாள்."

எத்தனை கோட்டைகள்! எல்லாம் கண்ணெதிரே பொல பொல வென்று உதிர்ந்து விட்டன. சரி, தொலையட்டும் நம் அதிர்ஷ்டம் அவ்வளவுதான் என்று இனிமேல் மேற்கொண்டு உருப்படியான வேலையைச் செய்யலாமோ இல்லையோ? அதுதான் இல்லை. கோர்ட்டு கச்சேரி என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பைத்தியக்காரத்தனத்தை எங்கே சென்று முறையிடுவது? கையிருப்பெல்லாம் கரைந்து கொண்டிருக்கிறது. மாதம் இருமுறை டில்லிக்குச் செல்ல வேண்டும். கோர்ட்டில்

அஜராக, அப்பாவும் பெண்ணு மாக, அவளுடைய வகுப்புக்கு மட்டம். அதோடு அந்த நாட்களில் மோகன்தாஸின் வரும்படி பூஜ்யம். இவர்களுடைய காரியமெல்லாம் உலக நடைமுறைக்குப் புறம்பானது.

"என்னுடைய உடம்பிலே யாருடைய ரத்தம் ஓடுதுன்னு நினைக்கிறே?" என்ற பீற்றல் வேறு.

எல்லாக் கோளாறுக்கும் அந்த ரத்தம்தான் காரணம் என்று சுபத்திராவுக்கு ஆத்திரப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

"யாருடைய ரத்தம் தெரியுமா?"

முன்பு அவளும் பிரமிப்புடன் கேட்பாள். வெற்று மார்புடன் வெயிலில் உட்கார்ந்திருக்கும் தருணங்களில் சங்கர்தாஸின் முதுகில் பளபளக்கும் தழும்புகளைப் பயபக்தியுடன் பார்ப்பாள்.

"ஏழை இந்தியன் உபயோகிக்கிற உப்புக்கு விலை ஏத்தினான் வெள்ளைக்காரன்னு பொங்கி எழுந்து நியாயம் கேட்டவருடைய பிள்ளைமா நான்! அப்பா ஏன் வெள்ளைக்காரனுடைய அடியை முதுகிலே சுமந்தார்? உப்பை வாங்கற வசதி இல்லையா அவருக்கு? இந்த மண்ணிலே பிறந்த அத்தனை பேருக்காகவும் வாங்கின அடி அது!"

முன்பு இதைக் கேட்கும் போதெல்லாம் உடம்பும் மனசும் சிலிர்த்துப் போகும். அவளுடைய திருமணப் பேச்சு அடிபட்ட காலத்தில் "சங்கர்தாஸின் மருமகளாகப் போகும் பாக்கியம் எனக்கு வேண்டும்" என்று ரகசியமாகப் பிரார்த்தித்தவள் அவள். நானும் ஒரு பைத்தியக்காரி என்று அவளுக்குத் தன்மீதே ஆத்திரம் வருகிறது இப்போது. காந்தி மகானுடன் உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டவர் என்ற பெயரும் அன்றைய தினத்தின் ஞாபகப் படுத்தலாக ஒரு பழுப்பேறிய புகைப்படத்தையும் தவிர வேறு எந்த லாபமும் மாமனாருக்குக் கிடைக்கவில்லை. சுதந்திரப் போரில் பங்கு கொண்ட சங்கர்தாஸின் பல நண்பர்களுக்குப் பெரிய பதவி கிடைத்திருக்கிறது. மந்திரிகளாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக மகா ஜபர்தஸ்துடன் இருக்கிறார்கள். கேவலம் ஓர் எம்.எல்.ஏ.வாகவாவது இவர் போயிருக்கக் கூடாதா?

"அரசியல் ரொம்ப நாற்றமெடுத்து விட்டது அம்மா" என்கிறார். "முன்பெல்லாம் காந்திக் குல்லாவைப் பார்த்தாலே மரியாதை தோன்றும். காந்திக் குல்லாவை அணிந்தவன் நேர்மையானவன், பொய் சொல்ல மாட்டான் என்று ஜனங்கள் நம்பினார்கள். இப்பொழுது குல்லாவை அணிந்தாலே சந்தேகப்படுகிறார்கள். உலகம் தலைகீழாகப் போய் விட்டது. அதில் நான் அந்நியன்."

இப்படிச் சொல்லிக் கொண்டே தான் அவர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபடி எல்லாவற்றையும் வேடிக்கை பார்க்கிறார் என்று சுபத்திரா நினைத்துக் கொண்டாள். இதுவும் ஒருவகைப் பிடிவாதம் என்று தோன்றிற்று. இதே குணம்தான் பிள்ளைக்கு, பேத்திக்கு. எல்லாம் ஒரே அச்சு. உலகம் தலைகீழாக இல்லை. இவர்கள் போக்குதான் விசித்திரம். சிரசைத் தரையில் பதித்துக் கைகளின் மேல் நிற்கிறார்கள். உலகம் தலைகீழாய்த் தெரியாமல் என்ன செய்யும்?

இல்லாவிட்டால் இப்படி கோர்ட்டு கச்சேரி என்று வேலை மெனக்கெட்டு அலைவார்களா? ஸ்தாபனத்தை எதிர்த்து யாருக்காவது வெற்றி கிட்டியிருக்கிறதா? சுபத்திராவின் உறவினர்களுக்கெல்லாம் இந்த விவகாரம் விளங்குவதுகூட இல்லை.

"எதுக்கு இந்த வீண் வம்பு? உன்னால் முடிந்தால் கொடு. முடியாவிட்டால் விலகி இரு. இதற்காகக் கோர்ட்டுக்குப் போவானேன்?" என்கிறார்கள்.

அவளும் பலமுறை மோகன் தாஸிடமும் அநுபமாவிடமும் சொல்லியாகி விட்டது. இதனால் வீண் அலைச்சலும் பணச் செலவையும் தவிர ஒரு லாபமும் இருக்கப் போவதில்லை என்று.

"ரொம்ப நன்றாயிருக்கே. இது அநியாயம். அதை எதிர்க்க வேண்டியது நம்ம கடமைம்மா!" என்று பெற்றவளுக்கு உபதேசம் செய்கிறாள் அநுபமா.

இவர்கள் இப்படிப் பேசப் பேச, அநுபமாவுக்கு டாக்டர் படிப்பு இல்லை என்று ஆனதோடு கல்யாணம் என்பதும் ஆகப் போவதில்லை என்று சுபத்திராவுக்குக் கலவரம் ஏற்பட்டது. அவர்கள் ஜனத்தில் வரதட்சணை வாங்காமல் எந்தப் பிள்ளை வீட்டிலும் இப்போது பெண் எடுப்பதில்லை. வாங்காவிட்டால் இளப்பம் என்கிற நிலைகூட வந்துவிட்டது. அவர்களுடைய சம்பந்தம் வேண்டாம் என்று முறைப்பதுடன் அப்பாவும் பெண்ணும் நிற்கமாட்டார்கள். கேட்பவரைக் கோர்ட்டுக்கு இழுத்துக் கொண்டு போய் விடுவார்கள்.

"எங்க உடம்பிலே எந்த ரத்தம் ஓடுகிறது தெரியுமா?"

ரத்தம், அஹ்! பிழைக்கத் தெரியாதவர்களின் பீற்றல் அல்லவா இது! தலைவிதி வேறு என்று இருக்கும்போது பீற்றலினால் என்ன பிரயோஜனம்? தலைவிதி என்று சொல்வதைத் தவிர சுபத்திராவுக்கு வேறு காரணம் சொல்லத் தெரியவில்லை. வகுப்பில் எப்பவும் முதலாக நிற்கும் அநுபமாவுக்கு ப்ளஸ் டூ பரிட்சையின் போது காய்ச்சல் வந்தது. காய்ச்சலுடனேயே எழுதிவிட்டு வந்தாள். பாதி நாட்கள் தாளை முடிக்கக்கூட முடியவில்லை. தொண்ணூற்றி ஐந்து சதவிகிதம் வரவேண்டியவளுக்கு அறுபத்தி ஐந்துதான் கிடைத்தது. மருத்துவ நுழைமுகப் பரிட்சைகளின்போது மறுபடி காய்ச்சல் வந்தது சோதனையைப் போல. எதிர்பார்த்தபடியே எந்தக் கல்லூரியிலும் இடம் கிடைக்கவில்லை. கொஞ்ச நாட்களுக்கு அநுபமா சோர்ந்திருந்தாள். பிறகு தெளிந்து விட்டாள். "பி.எஸ்ஸி., முடித்த பிறகு மறுபடி முயற்சி செய்யலாம்" என்று நம்பிக்கையுடன் வளைய வந்தாள்.

சுபத்ராவுக்கு இதெல்லாம் எதுவும் புரிவதில்லை. அநுபமா மருத்துவம் படிக்காததால் விசேஷ ஏமாற்றம் ஏதும் ஏற்படவில்லை. ஒரு விதத்தில் நல்லது என்றுகூடத் தோன்றிற்று. நல்ல வரன் ஏதாவது வந்தால் கல்யாணம் செய்வதற்கு தோது என்று தோன்றிற்று.

ஆனால் மீண்டும் விதி விளையாடிற்று. தெற்கே எந்த மூலையிலோ இருந்த ஒரு மருத்துவக் கல்லூரியின் விளம்பரத்தைக் கண்டதும் அநுபமாவின் ஆசை மீண்டும் துளிர்த்தது.

"விண்ணப்பித்துப் பார்க்கிறேனே, அதனால் என்ன

நஷ்டம்?" என்று அவள் தாளைப் பூர்த்தி செய்து பதிவுத் தபாலில் அனுப்பியபோது, இது ஒரு வேலை மெனக்கெட்ட வேலை என்றுதான் சுபத்திராவுக்குத் தோன்றிற்று.

ஆனால் அதிசயமாக அடுத்த இருபது நாட்களில் செய்தி வந்தது அநுபமாவுக்கு இடம் இருப்பதாக. அன்றைய தினம் இப்பவும் பசுமையாக நினைவு இருக்கிறது சுபத்திராவுக்கு. சனிக்கிழமை பகல் நேரம். மோகன்தாஸ் க்ளினிக்குக்குப் போய்விட்டார். வாசலில் அமர்ந்திருந்த தாத்தாவுக்கு அநுபமா செய்தித்தாளை வாசித்துக் காண்பித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் பெரியவர் சாப்பிட வந்து விடுவார் என்கிற யோசனையுடன் சுபத்திரா துளசிமாடத்தை வலம் வந்து நமஸ்கரித்தாள். நமஸ்கரித்து நிமிரும் சமயத்தில், அநுபமா, "அம்மா!" என்று உற்சாகமாக ஓடிவந்து கையில் வைத்திருந்த ஒரு கடிதத்தைப் படபடத்து, "கிடைச்சிட்டது கிடைச்சிட்டது!" என்று கூவியபடி அவளை அணைத்துக் கொண்டாள். அநுபமாவை இத்தனை உற்சாகமாகவும், சந்தோஷமாகவும் சமீப காலத்தில் சுபத்திரா பார்த்திருக்கவில்லை.

"அம்மா மெடிகல் காலேஜிலே சீட் கிடைச்சிட்டது! நான் டாக்டராகப் போறேன்மா!"

சுபத்திராவுக்கு அதிசயமாக இருந்தது. இந்தப் பெண்ணிற்கு இந்தத் தொழிலில் இருக்கும் ஈடுபாட்டுக்கும் அவளுள் ஓடும் ரத்தத்தக்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டும் என்று விநோதமாகத் தோன்றிற்று. இவள் சாதாரணப் பெண் இல்லைதான். நகை, உடை என்று இவள் ஆசை காட்டியதாக சுபத்திராவுக்கு நினைவேயில்லை. அனுபமாவின் குதியலையும் சந்தோஷத்தையும் காணக் காண மனசு நெகிழ்ந்து கண்களில் நீர் நிறைந்தது. பெண்ணின் சுயரூபத்தை முதன் முறையாக உணர்ந்ததுபோல.

"ஏம்மா உனக்குச் சந்தோஷமா இல்லே?"


"சந்தோஷம்தான்" என்றாள் சுபத்திரா கனிவுடன். "ஆனால் ரொம்ப தூரத்திலே இருக்கிற ஊர்! பாஷை அந்நியம், ஜனங்கள் அந்நியம்!"

"அந்நியமா? நம்ம தேசம்னா? எல்லாரும் இந்தியர்கள்னா."

முந்திக்கொண்டு பேசியது அநுபமாவின் தாத்தா. அவருடைய முகத்தில் புதிதாக ஒரு பளபளப்பு தெரிந்தது. சாதாரணமாக என்றோ நடந்த அந்த உப்பு சத்தியாக்கிரகத்தைப் பற்றியோ சுதந்தரப் போராட்டத்தைப் பற்றியோ பேசும்போதுதான் அப்படிப்பட்ட பிரகாசத்தை அவள் கண்டிருக்கிறாள்.

"வேற பாஷையானா என்ன, இந்திய பாஷைதானே! இவளை அந்நியம்னு நினைச்சுக் கூப்பிடுவானா? இந்த இடத்திலே நமக்கு இருக்கிற உரிமை எல்லா இந்திய ஊரிலேயும் உண்டு என்கிறதுக்கு நிரூபணம் இது! அங்கே போய் படிக்கட்டும். தடுக்காதே!"

சுபத்திரா பதில் சொல்லவில்லை. மாமனாருக்குச் சமதையாக எதிரில் நின்று பேசி அவளுக்குப் பழக்கமில்லை. ஆனால்



கன்னங் கருக்கழகி
கார்இருட்டுப் பேரழகி
தன்னந் தனிஅழகி
தாயாம் வெண்ணீற்றழகி

என்நெஞ் சகத்தழகி
எக்களிக்கும் வீறழகி
பொன்னம் சிலம்படிகள்
போற்றிஎனில் வெற்றிஅன்றே.

சாம்ப சிவத்தழகி
சங்கார மேட்டழகி
ஓம்பு தவத்தழகி
ஓங்காரப் பாட்டழகி

காம்பு மலர்அழகி
காயாம்பூ வான்அழகி
ஆம்பொன் சிலம்படிகள்
அஞ்சலிக்க வெற்றிஅன்றே.

மஞ்சள் நலத்தழகி
மங்கல வீட்டழகி
வஞ்சப் பகைஅழகி
வான்ஆர்ந்த பாழ்அழகி


செஞ்சொற் கவிஅழகி
சிற்றம் பலத்தழகி
கொஞ்சும் சிலம்பழகி
கூப்பிவிடின் வெற்றிஅன்றே.

மாலுக்(கு) இளைஅழகி
மாமாயப் பெண்அழகி
மூலக் கிளைஅழகி
மூவாத மூப்பழகி.

சூலக் கரத்தழகி
சுடுகாட்டுப் பேய்அழகி
காலக் கறுப்பழகி
கால்தொழவும் வெற்றிஅன்றே.

ஊழி நெருப்பழகி
ஓங்குபுயல் மூச்சழகி
தோளில் திசைஅழகி
தொடுவானக் காட்டழகி

பாழில் பரத்தழகி
பம்பரக் கூத்தாட்டழகி
காளி அன்னை சீரடிகள்
காட்சிஎனில் வெற்றிஅன்றே.



எத்தனை தூரம் பெண்ணை அனுப்புவது என்று எழும்பிய கவலையை அடக்க முடியவில்லை. அடுத்த நான்கு நாட்களிலேயே தந்தையும் மகளும்" பெட்டியும் படுக்கையுமாகக் கிளம்பியபோது கண் காணாத தேசத்துக்கு அனுப்புவது போலக் கலக்கம் ஏற்பட்டது.

"நான் சமாளிச்சுக்குவேன்மா, கவலைப்படாதே. படிப்பு ஒண்ணுதான் முக்கியம் எனக்கு. வேற எதுவும் இல்லே" என்று அனுபமா தைரியம் சொன்னபோது துருத்திக் கொண்டு வெடித்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்க வேண்டியிருந்தது. அவர்கள் போய்ச் சேர்ந்த விவரத்துக்குக் கடிதம் வரும் என்று எதிர்பார்த்து சுபத்திரா காத்திருந்தாள். கடிதம் வரவில்லை. அவர்களே வந்து விட்டார்கள். பெரிய சோகத்தை அனுபவித்து அடிபட்டவள்போல் வந்து நிற்கும் பெண்ணைக் கண்டு சுபத்திராவுக்குத் 'திக்' என்றது.

"என்ன அநு, திரும்பி வந்துட்டே?" என்றதும் அனுபமா சுபத்திராவின் தோளைப் பற்றிக் குலுங்கக் குலுங்க அழ ஆரம்பித்தாள். கேள்விக் குறியுடன் அங்கு வந்து நின்ற சங்கர்தாஸைப் பார்த்து மோகன்தாஸ் சோர்வுடன் சொன்னார்:

"அந்த இடம் நமக்குச் சரிப்படாது. ஐந்து லட்சம் கேட்கிறார்கள்" என்றார் ஏதோ பிள்ளை வீட்டாரைப் பற்றிப் பேசுவதுபோல.

"என்னது?" என்றார் சங்கர்தாஸ் நடுங்கும் குரலில். "லஞ்சமா?"

"லஞ்சம்னு அதுக்குப் பெயரில்லே. காபிடேஷன் ஃபீஸாம் - எல்லா காலேஜிலேயும் வாங்கற வழக்கம் என்கிறார்கள். ஆனா வெளியிலே இருந்து போகிற மாணவர்கள்கிட்டேந்துதான் அவர்கள் அதிகமா வாங்குவது."

"என்ன அநியாயம் இது!" என்று கிழவர் ஆத்திரப்பட்டார். "வித்யைக்கு லஞ்சமா? மற்ற மாநிலத்திலேந்து போனா என்ன, எல்லாரும் இந்தியர்கள்தானே?"

சுபத்திராவுக்கு அலுத்தது. இவரது பேச்சு இன்று காரணம் புரியாமல் ஆத்திரம் ஏற்படுத்திற்று.

"நான் அந்தக் கேள்வியைக் கேட்டதற்கு எங்களுக்குச் சட்ட சாஸனம் போதிக்க வந்தீர்களா என்று கேட்டார்கள்" என்றார் மோகன்தாஸ். "அந்த நிமிஷம் தீர்மானிச்சேன் இதைச் சும்மா விடக்கூடாதுன்னு தீர்மானிச்சேன். கோர்ட்டுக்குப் போகப் போகிறேன். சட்டத்தையே நியாயம் கேட்கப் போகிறேன்."

சுபத்திரா அதிர்ந்தாள். "ஐயையோ, கோர்ட்டுக்கா? எதுக்கு?" என்று பதைத்தாள்.

"நியாயம் கேட்கத்தான்" என்றார் மோகன்தாஸ் மறுபடி. "எப்ப ஸீட் கொடுக்கிறதாத் தீர்மானிச்சாங்களோ, அப்ப கட்டணத்திலே வேறுபாடு காண்பிக்கக்கூடாது. அந்த ஊர்க்காரங்க கட்டற பீஸ்தான் வெளிப்பேருக்கும் இருக்கணும். கோர்ட்டு அதைச் சொன்னாத்தான் அவங்களுக்குப் புத்தி வரும். அவங்க செய்யறது அநியாயம், பாரபட்சம் மட்டுமில்லே, கொள்ளை, சுரண்டல்!"

பெரியவர் அங்கு இல்லாவிட்டால் மோகன்தாஸ் பல கெட்ட வார்த்தைகள் சொல்லி இருப்பார் என்று சுபத்திரா நினைத்தாள்.


"அவங்க எப்படியோ போறாங்க!" என்றாள் சுபத்திரா கெஞ்சுவதுபோல. "நம்மால அந்தத் தொகையைக் கட்ட முடியாதுன்னா விட்டுருவோம், நம்ம பெண்ணுக்கு டாக்டருக்குப் படிக்க அதிர்ஷ்டமில்லேன்னு. கோர்ட்டுக்கும் கச்சேரிக்கும் எதுக்குங்க வம்பு?"

"வம்பு இல்லே இது. விவகாரம். எல்லாரும் வாயை மூடிக்கிட்டு இருக்கறதாலேதானே திமிர் பிடிச்சுக் கேட்கிறாங்க? பண வசதியுள்ள ஒரே வர்க்கம்தான் இந்தப் படிப்புப் படிக்க முடியும்னு இல்லே ஆயிரும்?"

மோகன்தாஸின் கோபத்தையும் ஏமாற்றத்தையும் சமாதானப்படுத்த முடியாது என்று தோன்றிற்று சுபத்திராவுக்கு.

"அப்ப இது ஜனநாயகம் இல்லே". அனுபமா முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தாள். சங்கர்தாஸ் அசாதாரண வேகத்துடன் அவளருகில் சென்று அவள் தோளைப் பற்றினார்.

"சீச்சீ, இத்தனை சீக்கிரம் இப்படிக் கலங்கலாமா குழந்தை?" என்றார் கண்டிப்புடன்.



"இது ஜனநாயகம்தான். எப்படி இல்லேன்னு ஒரே வார்த்தையிலே சொல்லிவிட்டே! நியாயம் கேட்கக் கோர்ட்டுக்குப் போகிற உரிமை இருக்கே உனக்கு! போ, கலங் காதே, நியாயம் கிடைக்கும். இந் தச் சுதந்தரம் உனக்கு எப்படிக் கிடைச்சுதுன்னு நினைச்சே?"

சித்தம் போக்கு சிவம் போக்கு என்கிற ரீதியில் ஆளுக்கு ஆள் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவது சுபத்திராவின் கலவரத்தை அதிகப்படுத்தியது. இந்தக் கிழவ ருக்கு இப்பவும் சமயம் வாய்த் தால் கொடியேந்தித் தெருவில் இறங்கத் தயக்கம் இருக்காது என்று தோன்றிற்று. கோர்ட்டு கேசு என்றால் எத்தனை செல வாகும், எத்தனை அலைச்சல் இருக்கும் என்கிற யோசனையெல் லாம் யாருக்கும் தோன்றவே இல்லை.

இரண்டு வருஷமாகிவிட்டது, உச்சநீதி மன்றத்துக்கே தாக்கல் கொடுத்து, ஒவ்வொரு முறையும் டில்லிக்குச் சென்று ஆஜராக வேண்டும். ஊரே பரிகாசமாகப் பேசுகிறது. 'லஞ்சம் கேட்பதும் கொடுப்பதும் மாமூலான விஷய மாகி விட்டது. இதற்கெல்லாம் கோர்ட்டுக்கு நியாயம் கேட்கப் போவானாய்யா,' என்கிறது மறை முகமாக. ஒரு நாள் இதைப்பற்றி மாமனார் காதுபட அவள் சொன்னபோது, "அதான் சொன் னேனே, ஜனங்கள் சுரணையற்றுப் போய்விட்டார்கள்" என்றார் சங்கர்

என்னைப் பார்க்கின்றேன்

பி.வி.கிரி

எழுத்தறிவில்லா மக்களுக்கெல்லாம்
எழுதக் கற்பித்தலில் - வாழ்வில்
அழுத்தமில்லா ஏழையருக்கு
ஆறுதல் கூறுதலில்...
என்னைப் பார்க்கின்றேன் - நான்
என்னைப் பார்க்கின்றேன்!

ஐயறிவுள்ள உயிர்களிடத்தில்
அன்பைக் காட்டுவதில் - நாளும்
செய்யுந்தொழிலில் தொய்வேஇன்றிச்
செயலைக் காட்டுவதில்...
என்னைப் பார்க்கின்றேன் - நான்
என்னைப் பார்க்கின்றேன்!

உண்மையுள்ள நண்பரிடத்தில்
உயிராய்ப் பழகுவதில் - என்றும்
நன்மை செய்யும் நல்லவருக்கு
நாயாய்ப் பணிசெய்வதில்...
என்னைப் பார்க்கின்றேன் - நான்
என்னைப் பார்க்கின்றேன்!

மனிதப்பண்பு மிக்கவரைத்தினம்
மதிக்கும் தன்மையினில் - நாளும்
புனிதம்மிக்க கோயில்கள்தம்மைப்
போற்றும் பக்தியினில்...
என்னைப் பார்க்கின்றேன் - நான்
என்னைப் பார்க்கின்றேன்!

ஏழைஎளிய மாணவருக்கு
இயன்றதை உதவுவதில் - மழலை
நாளும்படித்து மகிழுவதற்கு
நற்பா வழங்குவதில்...
என்னைப் பார்க்கின்றேன் - நான்
என்னைப் பார்க்கின்றேன்!

தாஸ். "உப்பு சத்தியாக்கிரகத்தின் மகத்துவம் இவர்களுக்குப் புரியாது. அது ஓர் அடையாளம்னு புரியாது".

அவளுக்கும் புரியவில்லை. இந்தக் கேசு எப்படியாவது முடிவடைந்தால் போதும் என்றிருந்தது அவளுக்கு. எப்படியும் தோற்றுத்தான் போகப்போகிறது. அது சீக்கிரம் தீர்ப்பானால் அலைச்சலாவது நிற்கும். இன்று காலை பஸ் பிடித்து மோகன் தாஸும் அநுபமாவும் டில்லிக்குப் போயிருக்கிறார்கள். இன்றைக்கு அநேகமாகத் தீர்ப்பாகிவிடும் என்று சுரத்தில்லாமல்தான் போனார்கள். அவர்கள் வீடு திரும்புவதற்கு இரவு எட்டு மணியாகும். இன்றைக்கு பாவம் எதுவும் சாப்பிட வேண்டியிருக்காது என்கிற பச்சாதாப உணர்வுடன் சுபத்திரா சமைத்து மூடி வைத்தாள். மாட்டுக் கொட்டிலுக்குச் சென்று மாட்டுக்குப் புண்ணாக்குக் கலவையை வைத்தபடி, "கஷ்ட வேளைன்னு வரும்போது புத்தி கெட்டுத்தான் போகும்" என்றாள் அதனிடம். "பெரியவர்னு வீட்டிலே ஒருத்தர் இருக்காரே, அவராவது புத்தி சொல்லக்கூடாதா? அவரே திசை திருப்பி விடறார்!" என்றாள் ரகசியக் குரலில். திமிர் பிடித்த மாடு முகத்தைத் திருப்பிக் கொண்டது.

வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் ஓசை கேட்டது. சுபத்திரா சோர்வுடன் எழுந்தாள். அநுபமாவுடைய அழுகையைச் சமாதானப்படுத்தனும் என்று முணுமுணுத்தபடி வாசல் முற்றத்துக்கு வந்தாள். இருட்டில் அவர்களுடைய முக பாவம் தெரியவில்லை. கையில் வைத்திருந்த பையைக் கீழே வைத்துவிட்டு அநுபமா விரைந்து வந்து சுபத்திராவை அணைத்துக் கொண்டாள். இதை எதிர்பார்த்திருந்த துயரத்துடன் சமாதானப் படுத்த சுபத்திரா யத்தனிக்கையில் அநுபமா,

"ஜெயிச்சுட்டம்மா!" என்றாள். சுபத்திராவுக்கு நம்ப முடியவில்லை.

"நிஜம்மாவா?"

மோகன்தாஸின் பிரகாசமான முகம் நிஜம் என்றது. அதற்குள் உள்ளேயிருந்து வந்த சங்கர் தாஸின் கால்களைத் தொட்டு வணங்கி, "உங்கள் ஆசியால் ஜெயித்துவிட்டோம்" என்றார்.

"நான் என்ன சொன்னேன் குழந்தை?" என்றார் சங்கர்தாஸ் பூரிப்புடன். "என்ன தீர்ப்பு சொல்லு?"

"அப்படிப்பட்ட கட்டணம் வாங்குவது இனிமே சட்டத்துக்கு விரோதம்னு தீர்ப்பாய்விட்டது. ஆனா அநுபமா அங்கே போய் படிக்க முடியாது. காலேஜைக் கோர்ட்டுக்கு இழுத்த பெண்ணுக்கு அங்கு இடமில்லையாம்!"

"ஐய்யே, பின்னே இதை எப்படி ஜெயம்னு சொல்றே?" என்றாள் சுபத்திரா ஏமாற்றத்துடன்.

"ஜெயம்தான்" என்றாள் அநுபமா தீர்க்கமாக. "நான் படிக்க முடியல்லேன்னா என்ன? மத்தவங்க படிக்கலாம்".

"யாருக்காக சண்டைபோட்டே கோர்ட்டு வரைக்கும் போய்?"

அநுபமா சிரித்தாள்.

"தாத்தா யாருக்காக உப்பு சத்யாகிரகத்திலே கலந்துகிட்டார்?"

மீண்டும் உப்பு சத்யாக்கிரகம். மீண்டும் பழைய கதை. ஆனால் அந்த மூவர் முகத்திலும் கண்களிலும் தெரிந்த பிரகாசத்தையும் சந்தோஷத்தையும் பார்க்கும்போது, சுபத்திராவுக்கும் சிரிப்பு வந்தது. இந்தப் பைத்தியக்காரக் கும்பலில் தான் மட்டும் வேற்று ஆளாக இருக்க முடியாது என்ற நினைப்பில்.

சதுர்புஜக் கண்ணன்

வண்ணச்சித்திரம்: வேணு
விளக்கம்: கன்யா

'பூர்ணாவதாரன்' என்றும் 'பகவான் ஸ்வயம்' என்றும் கூறப்படும் கண்ணன் தன்னை நாராயண னாகவே தெரிவித்துக் கொண்டுள்ள சந்தர்ப்பங்கள் பல. அவற்றில் ஓர் அம்சம் அவன் திருமாலைப் போலவே நான்கு திருக்கரங்கள் கொண்டது. (குருவா யூரப்பன் நாற்கரனாகவே இருப்பது குறிப்பிடத் தக்கது). ஏழு சந்தர்ப்பங்களில் அவன் இவ்வாறு சதுர்புஜனாகத் திகழ்ந்தானென்று ஸ்ரீமத் பாகவதத் தையும், மஹாபாரதத்தையும், செவிவழிக் கதை களையும் சேர்த்துப் பார்க்கும்போது தெரிகிறது.

ஒன்று : காரிருளில் காராக்கிருஹத்தில் அவ தரித்த போதே கண்ணன் நாற்கரனாக இருந்ததை பாகவதம் பகர்கிறது. "சதுர்புஜம் சங்க கதாத்யுதா யுதம்" என்று முதலிலும், சிறிது தள்ளி "சங்க சக்ர கதா பத்ம ச்ரியா ஜுஷ்டம் சதுர்புஜம்" என்றும் அவதார கட்டத்தில் காண்கிறோம்.

ஆதியில் ஒரு தவசித் தம்பதியருக்கு, "மும்முறை மகவாகப் பிறக்கிறேன்" என்று திருமால் வரமீந் திருந்தான். அத் தம்பதியரின் மூன்றாம் பிறப்புத்தான் தேவகி - வஸுதேவர். வரத்தின்படி வரதராஜன் அவர்களுக்கு மகவானதில் மூன்றாம் அவதாரமே ஸ்ரீ கிருஷ்ணாவதாரம். இதை அவதரித்தவுடனேயே அற்புத பாலகன் அன்னை தந்தையருக்கு அறிவிக் கவும் செய்கிறான். தான் திருமாலே என்று அவர்கள் தீர்மானமாக அறியும் பொருட்டே அவனது திவ்வி யாயுதங்களைத் தாங்கும் நான்கு கைகளோடு அவன் ஜனித்தது.

இதனை உறுதி செய்தபின் நான்கில் இரண்டினை மறைத்து மானுடமாக இரு கைகளே கொள்கிறான்.

இரண்டு : தானே கண்ணனின் பிரிய பத்தினி என்று செருக்குற்றவள் பாமை என்பதே பொதுக் கருத்து. ஆயின் பாகவதமோ ருக்மிணியை அப்படிக் காட்டும் நிகழ்ச்சியொன்று உண்டு.

மாயக் கண்ணன் அவளை நல்வழிப்படுத்த விரும்பி நயம்பட நாடகமாடினான். "ராஜபுத்ரி! எப்பேர்ப்பட்ட மஹா பெரிய வரன்களெல்லாம் உன் கைப்பிடிக்கக் காத்திருந்தனர்? அவ்வாறிருக்க, எங்கோ தாழ் நிலையிலுள்ள என்னை ஏன் நீ வரித்தாய்? எனக்குத் தெளிவான நடைமுறை உண்டா? உலக ரீதியை நான் வழுவறப் பின்பற்றுகிறேனா? அதோடு நாங்கள் ஏழை இடையர்கள். ஆக, பொருள், குலம், ஆளுமை ஆகிய யாவற்றிலும் உன்னுடைய உயர்வையும் என்னுடைய தாழ்வையும் நோக்கும்போது இந்த ஏற்றத் தாழ்வான தாம்பத்தியம் பொருந்தாது என்று உறுதியாகிறது.

"தீர்க்காலோசனை செய்யாமல் என்னை வரித்து விட்டாய் போலிருக்கிறது. அதனால் பரவாயில்லை. இப்போதுங்கூட நீ உன் விருப்பப்படி உனக்கேற்ற தோர் உயர்நிலை க்ஷத்திரியனைச் சென்றடையலாம்"

— என்றிப்படி கற்கண்டுக் குரலிலேயே கர்ண கடூரமாக இடி இடித்த கண்ணன் முத்தாய்ப்பாக ஓர் அணுகுண்டை வீசினான்! அவன் அவளைக் கவர்ந்து வந்து கடிமணம் செய்துகொண்டது அவ ளிடம் காதலால் அல்லவாம்! ருக்மிணியை மணக்க விரும்பிய சிசுபாலனும், சிசுபாலனுக்கே அவளை மணமுடிக்க விரும்பிய (ருக்மிணியின் சோதரனான) ருக்மியும் தன்னிடம் தீராப் பகை பூண்டிருந்ததால் அவர்களை எதிர்த்து வென்று, அவர்களது விருப் பத்தைத் தகர்ப்பதற்காகத்தான் கண்ணன் அவளைக் கவர்ந்து வந்ததேயொழிய அவளிடமிருந்த கவர்ச்சி யால் அல்லவாம்!

ருக்மிணி நல்லறிவு பெற்றாள். ஆனால் அது பேரதிர்ச்சி வைத்தியமாக இருந்தது! அப்படியே அழுது, துடித்து, நடு நடுங்கிப் புயலில் சாயும் வாழையாகத் தலைமுடி கலையப் பேதை மயங்கிச் சாய்ந்தாள்.

அவ்வளவுதான், அறிவூட்டிய ஆசாரியக் கண்ணன் பரிவின் உருவான பரந்தாமனே ஆனான்! ஆம், பரம புருஷனாக நாற்கரம் கொண்டுவிட்டான்! ஆனால் ஆழி முதலிய படைக்கலம் கொண்ட கரங்களாக அவை இருக்கவில்லை! அடைக்கலம் தந்து ஆதரிக்கவே யன்றோ இப்போது அவன் சதுர்புஜனானது? எனவே ஒரே சமயத்தில் மங்கை நல்லாளை ஒரு கையால் எடுத்து, ஒரு கையால் அணைத்து, ஒரு கையால் அவளது கேசத்தை முடித்து, ஒரு கையால் அவள் திருமுகத்தைத் தடவிக் கொடுக்கவே அவன் இப்போது நாற்கரனானது!

ஆராவமுதனின் அரவணைப்பில் அன்னை அயர்ச்சி நீங்கி மலர்ச்சியடைந்ததும், தான் படுத்தி வைத்த அத்தனை பாட்டையும் "இல்லற வாழ்வுக்கு இனிமையூட்டும் பரிஹாஸம்" என்று எளிதாகக் கள்ளக் கண்ணன் நியாயப்படுத்தியதும் பின் கதை.

மூன்று : பஞ்சவருக்காகப் பஞ்சுப் பாதம் நோகத் தூது சென்ற கண்ணன் அரசோச்சிய துரியோதனின் அரண்மனையில் அறுசுவை விருந்து அருந்தினா னில்லை. வெளிப்பகட்டைத் தள்ளி உள்ளன்பையே உகந்த அவன் துறவியென வாழ்ந்த விதுரனின் எளிய குடிலில் அவர் காய்ச்சியிருந்த கூழைக் குடிக்கவே அவாவிச் சென்றான். அப்போது அந்த பாகவ தோத்தமர் உற்ற பரவசநிலையைப் பௌராணிகர்கள் பலவிதமாக வர்ணிப்பார்கள். வாழைப் பழங்களை வெளியில் எறிந்து தோலையே அவர் அவனுக்குப் படைக்க, அவனும் அதனை அமுதமாகக் கருதி உட்கொண்டான் என்பார்கள்! இலையில் அவர்

வார்த்த நீர்த்த கூழ் நாற்புறமும் ஓடுவது கண்ட கண்ணன் சடேரென நாற்கரம் கொண்டு இலையின் நான்கு பக்கங்களையும் தூக்கி, அப்படியே உறிஞ்சிக் குடித்தான் என்று ஒரு வர்ணனை!

இன்னொரு வர்ணனை ரமண பகவான் வாய் மொழியில் வந்தது. அதன்படி இலைபோடக்கூட விதுரருக்கு வசதியில்லை. கலயத்திலிருந்து நேராகக் கண்ணனின் குழித்த இருகர கமலங்களிலேயே அவர் கூழை வார்த்திருக்கிறார். பால பருவத்தில் ஆயச் சிறுவருடன் எளிமையிலும் எளிமையாகக் கையால் ஏந்தி வாயால் உறிஞ்சிக் கூழுண்ட கண்ணன் இன்று ஞானி விதுரருடைய விருந்துத் தெய்வமாக வந்த போதும் அந்த விதமாகவே அமுது கொண்டான்! பேரன்புப் படையலாதலால் அக் கூழை அமுதமாக, அமுதத்திற்கும் மேலானதாக மதித்தான். தன் விரலிடுக்குகள் வழியாக அது துளிக்கூடச் சிந்தி வீணாகிவிடலாகாது எனக் கருதினான்.

அக் கருத்தே அவனைச் சதுர்புஜனாக்கிற்று! கூழை ஏற்கும் தன்னுடைய இயற்கையான இரு கரங்களுக்கு அடியில், சிந்தக்கூடிய துளிகளை ஏந்திக் கொள்ளவே மேலும் இரு கரம் கொண்டான்!

இங்கும் திவ்யாயுதங்கள் ஏந்தும் சதுர்புஜமல்ல. தான் மெய்யடியாரின் உள்ளன்பை அணுவளவும் தவறவிடாமல் கையேந்திப் பிச்சை கொள்பவன் என்று காட்டவே நாற்கரனாகியிருக்கிறான்!

நான்கு : மஹாபாரதத்தில் ஸ்ரீமத் பகவத் கீதையிலேயே விரியும் நாற்கரக் காட்சி. எத்தனை கரமோ, எத்தனை முகமோ, எவரும் கணக்கெடுக்க முடியாதபடி விச்வரூப தரிசனத்தை அர்ஜுனனுக்கு அச்சுதன் வழங்கியாயிற்று. அது விச்வநாச தரிசனமாகவும் இருந்ததால் வில் வீர விஜயனும் விலவிலத்தே விட்டான்! 'ஸ்வயம் க்ருத அனர்த்தம்' என்பதாக இது அர்ஜுனனே வலுவில் கேட்டுப் பெற்ற தரிசனம்! "கண்ணா! உயிர்களின் தோற்றமும் அழிவும் உன்னிடமிருந்தே என்று உன் வாயாலேயே உபதேசித்துவிட்டாய். எனவே இப்போது அப்படிப் பட்ட ஈச்வரனாக உன் உருவைக் காட்டி அருள்புரி!" என்று அவன் கேட்டு விட்டான். அவன் போர் புரிய மறுத்த போதிலும் தன் திட்டத்தில் அந்தப் போர் சங்கற்பிக்கப்பட்டு விட்டதென்பதை அவனுக்கு அழுத்தமாக உணர்விக்கச் சமயம் பார்த்திருந்த மாயக் கண்ணன் இதை நழுவ விடுவானா? 'ஈச்வர உருவம்' என்று அர்ஜுனன் சொன்னதை 'ருத்திர ரூபம்' என்று அர்த்தமாக்கிக் கொண்டு அப்படியே ஊழிக்கால உருத்திர தரிசனத்தைக் காட்டிவிட்டான்!

விதிர்விதிர்த்த விஜயன், "இவ்வுருவம் கண்டு ஆனந்தமும் காண்கிறேன், அச்சமும் காண்கிறேன்" என்று விச்வரூபனின் திக்குக்கு ஒரு நமஸ்காரம் செய்கிறான்! இனி உன்னுடைய அந்த உருவத்தையே காட்டு" என்று அவன் மானுடக் கண்ணனின் இயற்கை வடிவை வேண்டும்போது அதனை உந்திக் கொண்டு இன்னொரு விழைவும் முந்தி வருகிறது. 'தனது மானுட லீலா தெய்வமாக வருவதெனில் ஊழிக்கால உருத்தினராக மட்டும்தானா வரவேண்டும்? சதுர் புஜம் கொண்ட இன்னுருவ ஸௌம்ய நாராயணனாக அவன் வரலாகாதா?' என எண்ணுகிறான். அத் தகைய தரிசனத்தை வேண்டுகிறான். கண்ணனும் அக் கவினுருவைக் காட்டியருள்கிறான்.

ஐந்து : யுத்த தர்மத்தை மீறி அச்வத்தாமன் நள்ளிரவில் உறங்கும் துரௌபதி குமாரர்களையும், அவளுடைய சகோதரனையும் படுகொலை செய்து பழி தீர்த்தான். அதன் பின் கண்ணன் துணையில் அர்ஜுனன் அப் பாவியைத் துரத்திச் சென்று சிறை பிடித்துத் தர்மபுத்திரர் முன் கொண்டு வந்து நிறுத்துகிறான். அப்போது துரௌபதி அதிசயிக்கத் தக்க அருளெழுச்சி பெறுகிறாள். 'தான் பெற்றெடுத்த கண்மணிகளைக் கொன்ற அப்பாதகனைப் பதி லுக்குப் பதில் கொன்றால், அப்போது அவனது தாயும், பஞ்சவரின் தநுர்வேத ஆசானான துரோணரின் பத்தினியுமான கிருபி தன்னைப் போலத் தானே வயிறெரிவாள்?' - இப்படிக் கிருபியின் பால் கிருபை கொண்ட பாஞ்சாலி அந்தணனும் ஆசான் மகனுமான அச்வத்தாமனை வதைக்க வேண்டாமென வேண்டுகிறாள். அதனைத் தருமரும் மெச்சுகிறார். ஆனால் பீமஸேனனோ படுபாதகம் புரிந்த அச்வத் தாமனை வதைப்பதே சாஸ்திர நீதி என வாதாடு கிறான்.

அனைவரும் தீர்ப்புக்காகக் கண்ணனை நோக்கு கின்றனர்.

அப்போது ஐயன் சதுர்புஜம் கொண்டதாக பாகவதம் கூறும். சர்வலோகத்திற்குமான சாஸ்திர சட்டத்தை இயற்றிய இறைவனாகவே நின்று அவன், "நான் இயற்றிய சாஸ்திர விதி இப்படி!" என்று தீர்ப்பு வழங்கியதால் சதுர்புஜனாகியிருக்கிறான்!

ஆயினும் மாயக் கண்ணனாகவே ஒரு குழப்பமான தீர்ப்பு கூறுகிறான்! அச்வத்தாமனைக் கொல்லாமல் விடவும் தனது சாஸ்திரச் சட்டத்தில் இடம் உண்டு, கொல்வதற்கும் அநுமதி உண்டு என்கிறான்! அர்ஜுனனைப் பார்த்து, "இவ்விரண்டு விதிகளையும் நிறைவேற்று!" என்று ஒரே குழப்பலாகக் குழப்பு கிறான்!

நமக்குத்தான் குழப்பமேயன்றி அர்ஜுனன் சற்றும் குழம்பவில்லை. ஐயனின் திருவுள்ளமறிந்த அந்த அணுக்கத் தோழன் உடனே அச்வத்தாமனின் சிகையை, அதிலிருந்த சிகாமணியோடு சேர்த்து வாளால் அரிந்து, அவனை உயிர் பிழைத்தோட விடுகிறான்.

முடி மழிக்கப்படுவது உயிரை இழப்பதற்குச் சமம் என்று சாஸ்திர விதி உண்டு. அதைக் கருத்தில் கொண்டே அர்ஜுனன் அச்வத்தாமனை ஸ்தூலமாகக் கொல்லாமலும், சூட்சும சாஸ்திரப்படி 'கொன்றும்' எதிரெதிர் விதிகள் இரண்டினையும் நிறைவேற்றி விட்டான்!

ஆறு : பாரதப் போர் முடிந்த பிறகு மன்னரான தர்மர் தம்பியரும், தாரமும், தாமோதரனும் புடைசூழ பீஷ்மப் பிதாமஹரிடம் சென்று சகல தர்மங்களிலும் உபதேசம் பெறுகிறார். அம்புப் படுக்கையி லிருந்தவாறு அன்பு கனிய அறமுரைத்த பெரியவர், "எல்லா தர்மங்களிலும் பெரும் தர்மம் பகவந் நாமம் ஓதுவதே!" எனக்கூறி விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தையும் உபதேசிக்கிறார்.









அவர் உடல் உகுக்க விரும்பிய உத்தராயணமும் உதிக்கிறது. ஸஹஸ்ரநாமனே கண்ணனாகத் தம் முன் எழுந்தருளியிருக்கிறான் என்றுணர்ந்த பிதாமஹர் தாம் கண்மூடுகையில் அவன் சதுர்புஜனாகத் தரிசனம் சாதிக்க வேண்டுமென விரும்புகிறார். கண்ணனும் அவ்வாறே தோன்றி அவரைப் பரமபதத்தில் சேர்த்ததாக பாகவதம் புகலும்.

ஏழு : கண்ணன் தானுமே அவதாரம் முடித்துப் பரமபதம் திரும்புகையில் திருமாலுருவில் சதுர்புஜனாக இருந்ததாக . பாகவதம் காட்டுகிறது.

சரஸ்வதி நதி கடலில் கலக்கும் பிரபாஸ க்ஷேத்திரத்தில் யாதவர் அனைவரும் கூடுகின்றனர். முன்னே பெற்ற முனிவர்களின் சாபத்தால் அவர்களிடையே சண்டை மூண்டு, முற்றி, ஒருவரையொருவர் உலக்கைகளால் அடித்துக் கொண்டு மாள்கின்றனர். பலராமனும் யோக ஸமாதி மூலம் தேக வியோகமாகிறான்.

தன் திட்டப்படியே குலநாசமாகி பூபாரம் குறைந்ததோடு தானும் திருநாடு திரும்ப வேண்டியது தானென்று கண்ணன் எண்ணுகிறான். முனிவர் சாபத்தை மதித்துத் தனக்கும் உலக்கைத் தொடர்பாலேயே உலக வாழ்வு முடியவேண்டுமென்றும் திருவுளம் கொள்கிறான். அவதாரத் தொடக்கத்தில் போலவே இப்போதும் சதுர்புஜனாகத் திருமாலின் திருவடிவம் தாங்கி ஓர் அரச மரத்தடியே அமர்கிறான் - இடப் பாதத்தை வலத் தொடை மேல் வைத்து.

தொலைவிலிருந்து அப்பாதம் கண்ட ஒரு வேடன் அதை மானின் முகமென மயங்கி அம்பு எய்கிறான். அந்த அம்பு நுனியில் உலக்கையின் கூர்முனையே பொருத்தப்பட்டிருக்கிறது.

ராமாவதாரத்தில் வாலியை மறைவிலிருந்து அம்பெய்தி வதைத்தற்குக் கழுவாயாக இந்த அவதாரத்தில் தாம் அதே போல் மறைவிலிருந்து வந்த அம்படியால் தேகம் துறக்கக் கண்ணன் சங்கற்பித்திருந்ததாகப் பௌராணிகர்கள் கூறுவர்.

ஆக, அம்புஜ பாதத்தில் அம்பு படப் பூர்ணாவதாரம் பூர்த்தியாயிற்று. அவதாரத்தின் இறுதி இனிமையாக ஐயன் தம் மீது அம்பெய்த வேடனை விண்ணாட்டுக்கு விமானத்தில் அனுப்பி வைத்தான். அடுத்துத் தானும் வைகுந்தம் புகுந்தான்.

கண்ணன் உடலைச் சடலமாக உலகில் விட்டுச் செல்லவில்லை என்று பெரியோர் கூறுவர். மானுடமான உடலுக்குத்தான் சடலமாகும் நிலை உண்டென்றும், சதுர்புஜம் கொண்ட தேவ சரீரம் அப்படியே பரமபதம் செல்லவல்லது என்பதாலேயே கண்ணன் இறுதியில் அவ்வாறு உருக்கொண்டதென்றும் காரணம் காட்டுவர்.


கண்ணன் நான்கு கரம் கொண்ட ஏழு நிகழ்ச்சிகளில் முதல் நான்கினை ஓவியர் வினு வண்ணச் சித்திர மடலாக வழங்கி மகிழ்விக்கிறார்.


சதுர்புஜக்கண்ணன்-1



சதுர்புஜக் கண்ணன் - 2




சதுர்புஜக் கண்ணன்-3


சதுர்புஜக் கண்ணன்- 4

அவனே எங்கள் கவியரசன்

தாளத்தின் சத்தமும் மேளத்தின் சத்தமும்
வானத்தைத் தொட்டிட - இன்று
வார்த்தைகள் செத்தது புதுப்பாட்டிலே - இவன்
ஞானத்தைக் கட்டிய கானத்தின் மெட்டுகள் - மன
வீணையை மீட்டுது தமிழ் நாட்டிலே!

மரணக்கரையேறிக் கடந்து
காற்றாகிப் போனவன் பாட்டுச் சத்தம்
வாழ்க்கைக் கடலில் நடக்கும்
அலையாக எங்களைக் கூட்டி வைக்கும்.
அவன் - -
சித்தர்கள் தத்துவக் காட்டை
திறந்து நடந்தவன் - பதவிப்
பித்தர்கள் அரசியல் கூட்டில் தன்
சிறகை இழந்தவன்.


பிறர் பொய்களை
உண்மையாய் நம்பியவன் - தன்
உண்மையால் பொய்யரை
உயர்த்தியவன்.
அவன்
மணலுக்கு வெள்ளம்
கனலுக்கு எண்ணெய்
காற்றுக்குப் புல்லாங்குழல்

அவன் -
குருடர்கள் கண்ணில் இருந்த
கடைசி இருட்டிலும்
கவிதைச் சித்திரம் தீட்டியவன்

அவனுக்கு மறுவாரிசாய்
யாரையும் காட்ட முடியாது
மயில் தோகையில்
வான வில்லைக் காண முடியாது.

பெண்ணை என்னவென்று
பெயர் சொல்லி அழைப்பேன் - காதல்
பிருந்தாவனம் என்பேன்.

விண்ணை என்னவென்று
பெயர் சொல்லி அழைப்பேன்
வெளிச்சத்தின் தாய் வீடென்பேன்
மண்ணை என்னவென்று
பெயர் சொல்லி அழைப்பேன் - இது
மனித சத்திரம் என்பேன்.



கவியரசு நா. காமராசன்

புதுமையை என்னவென்று
பெயர் சொல்லி அழைப்பேன்
பழைமை உரத்தில் மலர்விட்ட
பாரிஜாதம் என்பேன்.

கவிதையை என்னவென்று
பெயர் சொல்லி அழைப்பேன்
கைக்குழந்தை முதல்
கண்கண்ட தெய்வங்கள் வரைக்கும்
கைவசப்படும்படி
தமிழிசையால் கட்டி வைத்த
கண்ணதாசன் என்றே நான்
கவிதைக்குப் பெயரிடுவேன்.

வாலியின் காஞ்சன மாலை

அக்னிசாட்சியாக நட்புறவு கொண்ட இராமனும் சுக்ரீவனும், வாலியை ஒழித்துக் கட்டுவதற்காகக் கிஷ்கிந்தை செல்கிறார்கள்.

மறைந்திருந்த இராமன், மிகவும் சக்திவாய்ந்த ஓர் அம்பினை வாலியை நோக்கி விடுகிறான். அது, வாலியின் மார்பில் பாய்ந்து அவனை வீழ்த்தியது.

இராமனை நேரில் கண்டதும், குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுகிறான், வாலி. 'விக்ரஹவான் தர்ம :' என்று, (அறமே மனித உரு எடுத்து வந்தாற் போன்றவன்) சிறப்பிக்கப்பட்ட இராமன், தன் வாதங்களைக் கூறியதும் வாலிக்குச் சமாதானம் ஏற்பட்டுவிடுகிறது.

ந தோஷம் ராகவே தத்யௌ தர்மேதிகதநிஸ்ச்சய : ।

ப்ரத்யுவாச ததோராமம் ப்ராஞ்ஜலிர் வானரேஸ்வர : ॥

யத்த்வமாத்த்த நரஸ்ரேஷ்ட்ட ததேவம் நாத்ர ஸம்சய : ॥

(IV-18 : 46,47)

என்றாலும், அம்பு தன் வேலையைச் செய்து கொண்டுதான் இருக்கிறது! 'விவிருத்தாசர : சரஸம் பீடிதோ ப்ருசம்' (IV - 22 : 24) என்கிறார், ஆதிகவி.

வாலி, தரையில் வீழ்ந்தான் - மார்பில் தைத்த பாணத்தின் வலிமையால். ராமபாணத்தால் மிகவும் துன்பப்பட்டான். பாணம், மெல்ல மெல்ல அவன் உயிரை வாங்கிக் கொண்டிருக்கிறது.

ராமனுடைய அம்பு, வாலியின் மார்பில் பட்ட உடனேயே அவனுடைய உயிர் போயிருக்க வேண்டாமா? ராமனுடைய பாணம், வாலியின் மார்பைத் துளைத்துக்கொண்டு, முதுகு வழியாக வெளியேறி, ராமனின் அம்பறாத்தூணியை ஏன் அடையவில்லை? யுத்தகாண்டத்தில், இராவணனின் மேல் விட்ட ராமபாணம் என்ன செய்தது?

பிபேத ஹ்ருதயம் தஸ்ய ராவணஸ்ய துராத்மன : ।

ராவணஸ்ய ஹரன் ப்ராணான் விவேச தரணீதலம் ॥

ஸ சரோ ராவணம் ஹத்வா ருதிரார்த்ரீ க்ருதச்சவி : ।

க்ருதகர்மா நிப்ருதவத் ஸ்வதூணீம் புனராகமத் ॥

(VI-111 : 18,19,20)

இராவணனுடைய உயிரை எடுத்துக்கொண்டு, பூமியில் பாய்ந்து மீண்டும் இராமனுடைய தோளிலே கிடந்த அம்பறாத்தூணியை வந்தடைந்ததாம்.

ஆனால், இராமபாணத்தால் அடிபட்டுக் கீழே விழுந்தாலும்கூட, வாலியின் தேசு குறையவில்லை.

பூமௌ நிபதிதஸ்யாபி தஸ்ய தேஹம் மஹாத்மன : ।

ந ஸ்ரீர்ஜஹாதி ந ப்ராணா ந தேஜோ ந பராக்ரம : ॥

சக்ரதத்தா வரா மாலா காஞ்சனீ வஜ்ரபூஷிதா ।

ததார ஹரிமுக்யஸ்ய ப்ராணாம்ஸ்தேஜ ஸ்ரியம் சஸா ॥

(IV-17 : 4,5)

இந்திரனால் கொடுக்கப்பட்ட காஞ்சனமாலை வாலியின் கழுத்தில் இருந்தது. அதன் சக்தியினால்தான், வாலியின் உயிர், தேசு, காந்தி முதலியன காப்பாற்றப்பட்டன.

வாலியின் தங்கமாலையைப் பற்றி மிக உயர்வான செய்திகளைக் கேட்கிறோம். அறம் தவறாத இராமன், நேரிடையாகச் சண்டைக்கு வராமல், மறைந்திருந்து பாணத்தை விட்டதற்குக் காரணம் கூட, இந்தக் காஞ்சனமாலை என்று வாதம் செய்யப்படுகிறது.

இந்த மாலை பற்றிய தகவல்களுக்கு வால்மீகி ராமாயணத்தில் - 'வாலிக்கு எதிரே யார் நின்றாலும், எதிராளியின் பலத்தில் பாதி, வாலிக்கு வந்துவிடும்' - ஒரு குறிப்பும் இல்லை!

ஸ்ரீமத் கோவிந்தராஜ யதிகள், தனது 'திலகம்' வியாக்யானத்தில், கிஷ்கிந்தா காண்டம் பதினோராவது ஸர்கம் முப்பத்தொன்பதாம் சுலோகமான,

"தமேவமுக்த்வா ஸம்க்ருத்த : மாலாமுத்க்ஷிப்ய காஞ்சனீம் ।

பித்ரா தத்தாம் மஹேந்த்ரேண யுத்தாய வ்யவதிஷ்ட்டத ॥"

என்பதற்கு விளக்கம் கூறுகையில்,

"ஏதத் காஞ்சனமாலாதாரணகாலே ய : புரோ

யுத்தாய ஆகச்சதி, தஸ்ய பலம் ஸர்வம்

தவைவ பவிஷ்யதீதி மஹேந்த்ரேண தத்தம்

இத்யர்த்த : ॥"

(நீ, இந்த மாலையை அணிந்து கொண்டிருக்கும்போது, உன்னோடு யுத்தம் செய்யக் கருதி யார் எதிரே வந்தாலும், அவருடைய ஆற்றல் முழுவதும் உன்னிடம் வந்து சேர்ந்து விடும்' என்று சொல்லி, இந்திரனால் கொடுக்கப்பட்டது என்று பொருள்) என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்த மாலைக்குச் சில அரிய சக்திகள் இருந்ததாக நம்பப்படுகிறது. இதை அணிந்திருந்தபோது, வாலிக்கு ஆற்றல் கூடிற்று என்றும் அவனுக்கு வெற்றியை ஈட்டித் தந்தது என்பதைத் தவிர, வேறு சிறப்பான சக்திகள் இருந்தாக எண்ணுவதற்கு இடமில்லை" என்று கனம் வி.எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தனது ராமாயணப் பேருரையில் கூறியுள்ளார்.

ஆமாம், இந்தக் காஞ்சனமாலை பற்றிய முதல் குறிப்பு எங்கே காணப்படுகிறது?...

வாலியின் பேராற்றலைப் பற்றி இராமனிடம் சுக்ரீவன் விவரிக்கும்போது, காஞ்சனமாலையைப் பற்றித் தப்பித் தவறிக்கூட ஒரு மூச்சு விடவில்லை!

மதங்க முனிவரின் சாபத்தைக் கேட்ட சில வானரர்கள், வாலியிடம் சென்று தெரிவிக்கிறார்கள் -

டி.எஸ். கோதண்டராமன்

'துந்துபியின் உடற்கொழுப்பினாலும் இரத்தத்தாலும் தனது ஆசிரமத்தின் புனிதம் கெட்டுவிட்டதால், இந்தச் செயலுக்குக் காரணமான வாலி, ரிச்யமூகத்துக்கு வந்தால், அவன் தலை சுக்கு நூறாகும்,' என்று.

இந்த நிகழ்ச்சியை விவரித்துக்கொண்டு வந்த சுக்ரீவன், 'சசம்ஸு:ர்வானரா : ஸர்வே வாலினே ஹேமமாலினே?',என்கிறான். 'தங்கமாலையையுடைய வாலியிடம் தெரிவித்தார்கள்' என்று, போகிற போக்கில் சொல்லிக்கொண்டு போனானே தவிர, சிறப்பித்துக் கூறவில்லை!

அப்புறம்தான், இராமனால் உறுதி கூறப்பட்டு, வாலியோடு யுத்தத்திற்குச் செல்கிறான், சுக்ரீவன்.

வாலியும் சுகரீவனும் துவந்தயுத்தம் செய்தபோது, இராமனுக்குச் சுக்ரீவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையாம்! சுக்ரீவனும் வாலியும் ஒரே அச்சில் வார்த்தாற்போல் இருந்தார்களாம்! இராமன் சொல்கிறான்.

அலங்காரேண வேஷேண ப்ரமாணேன கதேன ச ।

த்வம் ச ஸுக்ரீவ வாலீ ச ஸத்ருசௌ ஸ்த்த : பரஸ்பரம் ॥

ஸ்வரேண வர்ச்சஸா சைவ ப்ரேக்ஷிதேன ச வானர ।

விக்ரமேண ச வாக்யைஸ்ச்ச வ்யக்திம் வாம் நோபலக்ஷயே ॥

(IV-12 : 30,31)

அப்படியானால், அந்தச் சமயத்தில், வாலியின் கழுத்தில் காஞ்சனமாலை இல்லையா...?

கனம் சாஸ்திரியார் உரையில், 'இந்த மாலையை எப்போதும் அணிந்திருக்க வேண்டும்; குறிப்பாக, விரோதியுடன் யுத்தம் செய்யப் போகும்போது கட்டாயம் அணிந்திருக்க வேண்டும்' என்பதற்காகவே இந்திரன் கொடுத்தான் -என்கிறார்.

எப்போதுமே அணிந்திருக்க வேண்டிய மாலையை, விரோதியுடன் யுத்தம் செய்யத் தொடங்குமுன் கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டிய மாலையை, சுக்ரீவனுடன் சண்டை போட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வந்த காலத்தில், வாலி அணிந்திருக்க

வில்லை - என்று கொள்வது, எள்ளளவும் ஏற்றுக் கொள்ள இயலாத வாதம்.

இராமனுடைய கூற்று, நமக்கு ஏற்புடைத்தாக இல்லாமற் போகலாம். ஆனால், தர்மாத்மாவான அவனுடைய கருத்தை நாம் புரிந்துகொள்ள இயலாது தான்.

ஆனால், கிஷ்கிந்தா காண்டம் பதினான்காவது ஸர்கத்தில் இராமனே சொல்கிறான் இரண்டாவது முறையாக வாலியை யுத்தத்திற்கு அழைக்கும்படி சுக்ரீவனைத் தூண்டிவிடும் காலத்தில்!

"ஸபலாம் ச கரிஷ்யாமி ப்ரதிக்ஞாம் ஜஹி ஸம்ப்ரமம் ॥

ப்ரஸூதம் கலமம் க்ஷேத்ரே வர்ஷேணேவ சதக்ரது : ।

ததாஹ்வாண நிமித்தம் த்வம் வாலினோ ஹேமமாலின :॥"

முன்பு, துந்துபி வரலாற்றைக் கூறியபோது, சுக்ரீவன் சொல்லிய ஒரு சொல்லை நினைவிற் கொண்டு 'தங்கமாலையணிந்த வாலி' என்று இராமன் குறிப்பிடுகிறானா அல்லது சற்றுமுன் துவந்தயுத்தம் நடந்ததே, அப்போது தான் கண்ணால் கண்டதைக் கூறுகிறானா? என்பது, ஸ்ரீ இராமசந்திரமூர்த்திக்கே வெளிச்சம்!

இரண்டாவது முறை யுத்தத்திற்குப் புறப்பட்டு விட்டான் சுக்ரீவன் - அடையாளம் தெரியவேண்டும் என்பதற்காக, இலக்குவனால் அணிவிக்கப்பட்ட கஜபுஷ்பி மாலையுடன்.


வாலி?

ஸுக்ரீவ மேவாபி முகோ யயௌ யோத்தும் க்ருதக்ஷண : ॥

ஸ்லிஷ்டமுஷ்டிம் ஸமுத்யம்ய ஸம்ரப்ததரமாகத :।

ஸுக்ரீவோபி தமுத்திச்ய வாலினம் ஹேமமாலினம் ॥

(IV-16 : 17,18)



'வாலியின் கழுத்தில் காஞ்சனமாலை இருந்தது' என்பது உறுதியாகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே, முதல் தடவை யுத்தத்துக்கு வந்தபோதும் வாலியின் கழுத்தில் தங்கமாலை இருந்திருக்க வேண்டும் என்று கொள்வது பொருத்தமானதுதானே?

....

வாலியின் உடலிலிருந்து உயிர் பிரிந்து கொண்டிருக்கிற நேரம்.

தாரை வந்து, அழுது, புலம்பி, ஓய்ந்தாகிவிட்டது. மனச்சாந்தி பெற்ற வாலி, தன் மகன் அங்கதனை, சுக்ரீவனிடம் ஒப்படைத்தாகிவிட்டது.

"மம ப்ராணை: ப்ரியதரம் புத்ரம் புத்ரமிவெளரஸம் ।

மயா ஹீனமஹீனார்த்தம் ஸர்வத : பரிபாலய ॥"

(IV-22 :9)

என்று, வேண்டிக் கொண்டாகிவிட்டது. இனி, கண்ணை மூட வேண்டியதுதான்...

அப்போது, தன் கழுத்திலிருந்த காஞ்சனமாலையைக் கழற்றி,

இமாம் ச மாலாமாதத்ஸ்வ திவ்யாம் ஸுக்ரீவ காஞ்ச்சனீம் ।

உதாரா ஸ்ரீ : ஸ்த்திதா ஹ்யஸ்யாம் ஸம்ப்ர

ஜஹ்யான்ம்ருதே மயி ॥

(IV-22 : 16)


என்று கூறியபடி, மாலையைச் சுக்ரீவனிடம் கொடுக்கிறான் வாலி. சுக்ரீவன் மாலையைப் பெற்றுக் கொண்டானே தவிர, உடனேயோ அல்லது பின்னரோ, அதை அணிந்துகொண்டான் என்று வால்மீகி கூறவில்லை! இலங்கையில் யுத்தம் செய்யப் போனபோதுகூட, சுக்ரீவன், வெற்றியைத் தேடித் தரும் காஞ்சனமாலையை வெறும் ஆபரணமாகக் கூட அணிந்திருக்கவில்லையோ? - என்ற ஐயப்பாடு எழுகிறது. ஏன், பட்டாபிஷேகத்தின்போது அணிந்திருந்தால், வால்மீகி குறிப்பிட்டிருப்பாரே..?

சுக்ரீவன் கைக்கு மாறியபின் காஞ்சனமாலை பற்றிய தகவலே இல்லை என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

வால்மீகி ராமாயணத்தில், இன்னும் ஓர் இடத்தில் காஞ்சனமாலை பற்றிப் பேசப்படுகிறது.

வாலியின் உயிர் போய்விட்டது.

அருகிலிருந்த தாரை, அங்கதனை அணைத்துக் கொண்டு புலம்புகிறாள். 'அபிவாதய ராஜானம் பிதரம் புத்ர மானதம்' - தந்தையை வணங்கு என்கிறாள். அவன் எழுந்து, மரித்துவிட்ட தந்தையின் கால்களில் விழுந்து நமஸ்கரிக்கிறான். 'ப்ரபு, அங்கதன் நமஸ்கரிக்கிறான். தீர்காயுர்பவ, புத்ர - என்று வாய்திறந்து ஆசீர்வாதம் செய்யாமலிருக்கிறீர்களே...?''



யாதத்தா தேவராஜேன தவ துஷ்ட்டேன ஸம்யுகே I

சாதகும்பமயீம் மாலாம் தாம் தே பஸ்யாமி நேஹ கிம் II

(IV-23 : 28,29)

'உங்கள் கழுத்தில் பொன்மாலையைக் காண வில்லையே? ஒரு சண்டைக் காலத்தில், உங்கள் செயலால் மகிழ்ந்த தேவராஜனால் கொடுக்கப்பட்ட தல்லவா அது?'

தாரையின் கடைசிப் புலம்பலில் ஓர் அதிகப் படியான செய்தி நமக்குக் கிடைக்கிறது. எதற் காகவோ இந்திரன் அந்த மாலையைக் கொடுக்க வில்லை. ஏதோ ஒரு யுத்தத்தில் - யாருடனோ? எதற் காகவோ? எப்போதோ? வாலியின் சாகஸச் செயல் களால் மகிழ்ந்த இந்திரன், தன் மகனாகிய வாலிக்கு மனமுவந்து அளித்த பரிசு, அந்தக் காஞ்சனமாலை.

வால்மீகியில், இதற்குப்பின், பொன்மாலை பற்றி எதுவும் கூறப்படவில்லை.

உத்தரகாண்டத்தில், அறிஞர்களால் அங்கீ கரிக்கப்படாத சில ஸர்கங்கள் உள்ளன. "ப்ரக்ஷிப்தா : ஸர்கா :" என்று பதின்மூன்று ஸர்கங்கள், சில பதிப்பு களில் காணப்படுகின்றன.

அவ்விதம், பெரியோர்களால் ஏற்றுக் கொள்ளப் படாத பகுதியில், ஆறாவது ஸர்கமாக, 'வாலி – சுக்ரீவ உத்பத்தி :' என்பது காணப்படுகிறது.

அகஸ்தியர், ராமனுக்குக் கூறுகிறார் :

யோகத்தில் ஆழ்ந்திருந்த பிரும்மாவின் கண்களி லிருந்து வழிந்த நீர்த்துளி தரையில் விழுந்ததும் வானரமாயிற்று. ஏரியில் தன் உருவத்தைக் கண்டு, விரோதி என உண்ணி, அதை அடக்குவதற்காகக் குதித்தது. ஏரியிலிருந்து எழுந்தபோது, பேரழகு வாய்ந்த பெண் வானரமாக மாறியிருந்தது. தற் செயலாக அங்கே வந்த இந்திரனும் சூரியனும் மிக்க அழகியான வானர அணங்கிடம் மோகம் கொண்டனர். இருவர் மூலமாகவும் இரு ஆண்குட்டிகள் தோன்றின. இந்திரன் மூலம் தோன்றிய குட்டிக்கு வாலி என்று பெயர். உடனே, இந்திரன்,

"தத்வா து காஞ்சனீம் மாலாம் வானரேந்த்ரஸ்ய வாலின : I

அக்ஷய்யாம் குணஸம்பூர்ணாம் சக்ரஸ்து த்ரிதிவம் யயௌ II"

குறைவற்ற குணங்கள் (சக்திகள்) நிறைந்த பொன்மாலையை வாலிக்கு அளித்துவிட்டு, தேவ லோகம் சென்றான்.

இங்கேயும், யுத்தத்திற்கு வரும் எதிராளியின சக்தி முழுவதுமோ, பாதியோ, வாலிக்கு வந்துவிடும் - என்று சொல்லப்படவில்லை என்பது உணரலாகும்.

ஆனால், கம்பனின் காலத்தில் 'எதிராளியின் பாதி பலம் வாலிக்கு வந்துவிடும்' என்ற கருத்து ஆழமாக வேரூன்றியிருந்திருக்க வேண்டும்.

இந்தக் கருத்துப் பரவலாகப் பதிந்திருந்தாலும், விரோதியின் பாதி ஆற்றலைப் பெறுவதற்குக் காரணம், இந்திரன் கொடுத்த காஞ்சனமாலையே என்பது கூறப்படவில்லை. ஏன், காஞ்சனமாலையைப் பற்றிய குறிப்பையே கம்பனில் காணவில்லை.

கிஷ்கிந்தா காண்டம் அனுமப் படலத்தில், வாலி சுக்ரீவன் பகைமை பற்றி இராமனுக்கு அனுமன் கூறுகிறான். வாலியின் அளவு கடந்த ஆற்றலை கூறிக் கொண்டு வருகையில்,

கிட்டு வார்பொரக் கிடைக்கின் அன்னவர்

பட்ட நல்வலம் பாகம் எய்துவான்

எட்டு மாதிரத்து இறுதி நாளும்உற்று

அட்ட மூர்த்திதாள் பணியும் ஆணையான்

என்கிறான். சண்டை போடுவதற்கு என யாரேனும் வந்தால், 'அன்னவர் பட்ட நல்வலம் பாகம்' - அவரது பலத்தின் பாதிப்பாகத்தை வாலி அடைவான் - என்பது அனுமன் விளக்கம்.

....

கிஷ்கிந்தைக்குச் சென்று வாலியைப் போருக்கு அழைக்கும்படி சுக்ரீவனைத் தூண்டுகிறான், இராமன்.

சுக்ரீவனும் அவ்விதமே வாலியைச் சண்டைக்கு அழைக்கிறான். வாலியா அஞ்சுபவன்?

வந்தனென் வந்தனென் என்ற வாசகம்

இந்திரி முதல்திசை எட்டும் கேட்டன

சந்திரன் முதலிய தார கைக்குழாம்

சிந்தின மணிமுடிச் சிகரம் தீண்டவே.

(வாலிவதைப் படலம் : 254)

மிகுந்த சினத்தோடு வாலி புறப்படுகிறான். ஆனால், 'ஆயிடைத் தாரை என்று அமிழ்தில் தோன் றிய வேயுடைத் தோளினாள் இடை விலக்கினாள்? மனைவிக்குச் சமாதானம் கூறுமுகத்தான் வாலி, 'மூன்று உலகமும் ஒன்றாகச் சேர்ந்து வந்து என்னை எதிர்த்தாலும்', 'தோற்று அவை தொலையும்; சான் றுள; அன்னவை தையல் கேட்டியால்' – என்கிறான். என்ன சான்று?

பேதையர் எதிர்குவர் எனினும் பெற்றுடை

ஊதிய வரங்களும் உரமும் உள்ளதில்

பாதியும் என்னதால் பகைப்ப தெங்ஙனம்?


நீதுயர் ஒழிகென நின்று கூறினான் (வாலிவதை : 265)

"என்னை எதிர்க்கும் எண்ணத்தோடு ஒரு பேதை வருவானேயானால், அவன் எத்தனை வரங்கள் பெற்றிருக்கிறானோ, ஆற்றல் படைத்திருக்கிறானோ, அவற்றில் பாதி என்னைச் சேர்ந்துவிடும்! (இந்தச் செய்தி எல்லோரும் அறிந்ததுதானே?) ஆதலால், என்னை எதிர்ப்பவர் யார்? (எவருமிலர்!)" என்று தாரையிடம் கூறிவிட்டுச் செல்கிறான்.

இங்கேயும், வாலியின் சொல்லிலோ அன்றிக் கழுத்திலோ காஞ்சனமாலை காணப்பட வில்லை.

....

எல்லாப் புராணங்களிலும் இராமாயணக் கதை கூறப்பட்டிருக்கிறது. பிரும்மாண்ட புராணத்தில் காணப்படும் ராம சரிதத்தில், வாலியின் காஞ்சன மாலை பற்றிய குறிப்பும் வருகிறது. அங்குதான், பின்னால் வாலிவதத்தில் இராமனுக்கு ஏற்படக்கூடிய இழுக்கிலிருந்து காப்பாற்றும் முன் ஜாக்கிரதையாக, 'வாலியின் எதிரே நின்று போரிடுபவனின் சக்தியில் பாதி, வாலிக்குப் போய்விடும்' என்று காஞ்சன மாலையின் சிறப்பு கற்பிக்கப்பட்டிருக்கிறது! ௨௦



அட, கடவுளே!

ஜோதிர்லதா கிரிஜா

தேவநாதன் திடீரென்று தன்னைத் தாக்கிய திடுக்கிடலுடன் அவசரமாய்த் தலை திருப்பிப் பின்னால் பார்த்தான். ஓர் இளம் பெண்ணை ஓர் இளைஞன் பளார் பளாரென்று இரு கன்னங்களிலும் மாற்றி மாற்றி அறைந்து கொண்டிருந்தான். சிவப்பேறிய அவன் விழிகளும், தரை மீது, சரியாகப் பாவாது அதிர்ந்து கொண்டிருந்த கால்களும் அவன் குடித்திருந்ததைத் துல்லியமாக உணர்த்தின.

அது ஒரு பேருந்து நிறுத்தம். அங்கே ஆண்களும் பெண்களுமாய்க் கணிசமான எண்ணிக்கையில் பேருந்துக்காகக் காத்து நிற்பவர்களின் கூட்டம் இருந்தது. மொத்தக் கூட்டமும் அந்தப் பெண் அடிபடுவதையும் அவனிடமிருந்து தப்ப முயன்று கொண்டிருந்ததையும் வேடிக்கை பார்த்ததே தவிர, அதில் இருந்த எவரும் அந்தப் பெண்ணை அசுரத்தனமான அந்த ஆணின் பிடியிலிருந்து விடுவிக்க முயலவில்லை.

பெண்களில் அநேகமாக எல்லாருமே முகம் சுளித்து நின்றனர். ஆண்களிலும் சிலர் அதிர்ச்சியுற்றிருந்தனர். ஒரு பெண், "யாராவது போய் அந்தப் பெண்ணைக் காப்பாத்துங்களேன்" என்றாள்.

யார் அடிபடுவதையும் தேவநாதனால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அரக்கத்தனமாய் அந்தப் பெண்ணை அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருந்த அவனை நன்றாக நாலு சாத்துச் சாத்தி அந்தப் பெண்ணை விடுவிக்க அவன் ஏற்கெனவே செய்துவிட்ட முடிவை அந்தப் பெண்ணின் வேண்டுகோள் துரிதப்படுத்தியது.

அடிபட்டுக்கொண்டிருந்த பெண்ணுக்குப் பரிந்து பேசிய அந்தப் பெண்ணிடம் தன் கைப் பையைக் கொடுத்து விட்டு, ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தான்.

அந்த ஆளின் பின் புறமாய்ப் போய்ச் சட்டையின் கழுத்துப் பட்டியை ஆவேசத்துடன் பற்றி உலுக்கினான்.

"எதுக்குடா அவங்களை அடிக்கிறே? விட்றா... ராஸ்கல்" என்றவாறு கழுத்தில் குறுக்காகத் தன் கையால் ஒரு வெட்டு வெட்டினான். பெண்ணின் மீது அவன் கொண்டிருந்த பிடி தளர, அவன் ஆடிப் போய் இரண்டடி விலகிப் போய் மண் தரையில் மல்லாந்தான்.

கால்கள் பரப்பி முழங்கால்களுக்கு மேலே தூக்கிய வேட்டியுடன் விழுந்த் அவன் சுதாரித்துக்கொண்டு மிகச் சில விநாடிப் பொழுதுக்குள் எழுந்து கொண்டான். கைகளை மண்ணில் ஊன்றிக்கொண்டு எழுந்ததால் ஒட்டிக்கொண்ட புழுதியைத் தட்டாமலே தேவநாதனின் மீது பாய்ந்தான்.

''நீ யார்ரா கேக்குறதுக்கு? எம் பொஞ்சாதியை நான் அடிப்பேன், உதைப்பேன், மிதிப்பேன், வேற என்ன வேணுமினாலும் செய்வேன். நீ யாரு அதைக் கேக்க?" என்று கத்திக்கொண்டே அவன் பாய்ந்த வேகத்தைக் கண்டு அஞ்சியவர்களாய்ப் பக்கத்தில் நின்றிருந்த ஆண், பெண்களனைவரும் ஒதுங்கிக் கொண்டார்கள்.

அந்தத் தாக்குதலை எதிர்பார்த்தவனுக்குரிய கணிப்புடன் தேவநாதன் அவ்விளைஞன் தன்மீது மோதுவதை உறுதியான தன் கைகளின் ஓங்கிய வீச்சால் தவாததோடு மட்டுமல்லாமல், அவன் முகத்திலும் ஒரு குத்து விட்டான். மறுபடியும் விழப்போன இளைஞன் சமாளித்துக்கொண்டு தரையில் பின்புறமாக இரு கைகளையும் பரப்பி ஊன்றிக் கொண்டு உட்கார்ந்தான்.

இதற்குள் அடி பட்ட அந்தப் பெண் அங்கே வந்து நின்ற பேருந்தில் ஏறிக்கொண்டு காணாமற் போனாள்.

கை மண்ணைத் தட்டிக் கொண்டு எழுந்த அவன், "வீட்டுக்குத்தானேடி போறே? இரு, இரு. ராத்திரிக்கு இருக்கு உனக்கு வேட்டை" என்று உறுமிக் கொண்டே தேவநாதன் பக்கம் முறைப்பாகப் பார்த்துவிட்டு ஓர் ஆட்டோவைக் கைதட்டி நிறுத்தி அதில் ஏறிக்கொண்டு பயணம் ஆனான். மனைவி வீட்டுக்குப்

போய்ச் சேரும் முன்னர் இவன் போய்ச் சேர்ந்து விடுவான் அவளை அடிக்க என்று நினைத்துக்கொண்ட தேவநாதன் பெருமூச்சுடன் அந்தப் பெண்ணிடமிருந்து தன் கைப்பையை வாங்கிக் கொண்டான்.

"ரொம்ப தேங்க்ஸ்ங்க உங்களுக்கு. இப்படி யாராச்சும் தட்டிக் கேக்கனுங்க. யாருமே புருசன் - பொஞ்சாதி தகராறுல தலையிட மாட்டாங்கன்ற கொழுப்பிலதாங்க இவனுக என்ன வேணம்னாலும் செய்யறாங்க" என்று அவனது தலையீட்டுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தவாறு அவள் புன்னகை செய்தாள்.


"பார்த்தா படிச்சவனாட்டம் தெரியறான். அந்தப் பொண்ணும் படிச்ச பொண்ணு மாதிரிதான் தெரியுது" என்றான் தேவநாதன்.

இதற்குள் பேருந்து வர, அந்தப் பெண், "வரேங்க" என்று அவனிடம் சொல்லிக்கொண்டு அதில் தொற்றிக் கொண்டாள். மேலும் சிலர் அதில் ஏறிக்கொள்ள, பேருந்து நிறுத்தத்தில் கூட்டம் சற்றுக் குறைந்தது.

அப்போது தேவநாதனை நெருங்கி வந்த ஒரு சிறுவன், "நல்லா அடிச்சீங்க, சார், அந்தாளை. அவன் எங்களுக்குப் பக்கத்து வீட்லதான் இருக்கான். நிதமும் அந்த அக்காவுக்கு அடி, உதைதான். நல்லாக் குடிப்பான். ஒரு கவர்ன்மெண்ட் ஆபீஸ்ல க்ளார்க்கா இருக்கான். அந்த அக்கா இன்னொரு கம்பெனியில ஸ்டெனோவா இருக்குது" என்றான்.

அவன் அந்தச் சிறுவனைச் சற்றே தள்ளி அழைத்துப் போய், "எதுக்காகத் தினமும் அவன் அந்தப் பொண்ணை அடிக்கிறான்னு ஏதாவது தெரியுமா?" என்று மெதுவாக விசாரித்தான்.

"எங்கம்மா அன்னைக்கொரு நாள் எதிர்வீட்டு அம்மாகிட்ட சொல்லிட்டிருந்திச்சு - காரணமே இல்லாம சில சமயம் அடிப்பானாம். யாரோ ஒரு பொண்ணு



கூட அவன் சிநேகிதமா இருக்கானாம். அது பத்தி ரெண்டு பேத்துக்கும் அடிக்கடி சண்டை வருமாம்... அன்னிக்குக் கூட ஒருநாள் ரோட்ல வச்சுத்தான் அடிச்சான். யாருமே இந்த மெட்ராஸ்ல கண்டுக்க மாட்டாங்க. நமக்கென்ன வந்ததுன்னு வேடிக்கை தான் பார்ப்பாங்க. எனக்குத் தெரிஞ்சு நீங்க தான் சார், பஸ்ட்டு பஸ்ட்டு தலையிட்டதோட அந்த ஆளுக்கு அடியும் குடுத்தீங்க" என்று சிறுவன் சிரித்தான்.

தொடர்ந்து "ஆங்... இன்னொரு விசயம் இருக்கு, சார். இன்னைக்கு முதல் தேதி இல்லியா? ஒவ்வொரு முதல் தேதியன்னிக்கும் அந்த அக்காவுடைய அம்மா அவங்க ஆபிசுக்கு வந்து தன்னோட செலவுக்குன்னு இருநூறு ரூவா வாங்கிட்டுப் போகும். அது இந்தாளுக்குப் பிடிக்கல்லே. அது பத்திக் கேட்டிருப்பான், அது குடுத்தேன்னு சொல்லி இருக்கும். அதான் போட்டு அடிச்சுட்டான் – ரோடாச்சேன்னு கூடப் பார்க்காம..." என்று இன்னும் ஓர் அதிகப்படியான தகவலையும் சிறுவன் தெரிவித்தான்.

"அந்தப் பொண்ணுக்கு அப்பா இல்லியா?"

"இல்லே. அம்மா மட்டுந்தான். அது தனியா ஓர் ஒண்டுக் குடித்தனத்திலே அமிஞ்சிக்கரையில இருக்குது. இத்தனைக்கும் இவங்களுது லவ் மேரேஜ், சார். அம்மாவுக்கு யாரும் ஆதரவு இல்லாததால, அவங்களையும் தன்னோட வச்சுக்குவேன்னு கலியாணத்துக்கு முந்தியே அந்தாளுகிட்ட சொல்லிச் சம்மதம்கூட வாங்கி இருக்குது. அப்ப சரி சரின்னு தலையாட்டிட்டு, இப்பப் போட்டு அடிக்கிறான்... ஏன், சார்? அது சரி, அந்தப் பொண்ணுக்கு ஏன் பரிஞ்சுக்கிட்டுப் போனீங்க?"

"ஒரு கோவந்தான்... எங்கம்மாவை எங்கப்பா அடிப்பாரு. அப்ப நான் பத்து வயசுப் பையன். செயலத்துப் பார்த்துக்கிட்டு நிப்பேன். என்னால எதுவுமே செய்ய முடியலியேன்னு எம் மேலயே எனக்கு ஆத்திரம் ஆத்திரமா வரும்..." முன்பின் தெரியாத ஒரு பதினைந்து வயதுப் பையனிடம் இப்படியெல்லாம் பேசுகிறோமே என்கிற வியப்பில் தேவநாதன் சட்டென்று ஆழ்ந்து போய்ப் பேச்சை நிறுத்தினான்.

அதற்குப் பிறகு இருவரும் ஏதும் பேசிக் கொள்ளவில்லை. பையன், "நான் கடைக்குப் போயிட்டு வீட்டுக்குப் போகணும், சார். வர்றேன்..." என்று சில நொடிகளுக்குப் பின் விடைபெற்றுக்கொண்டு தன் வழியில் நடக்க தேவநாதன் பேருந்தின் வழித்தடத்தில் பார்வையைப் பதித்தான்.

...பேருந்தில் ஏறி அமர்ந்து வீட்டை அடைந்த பிறகும் அவனுக்கு அந்தப் பெண்ணைப் பற்றிய ஞாபகமாகவே இருந்தது.

முகம், கைகால் கழுவிக் கொண்டு காப்பி குடிக்க வந்தவனின் முகம் மலர்ச்சியற்றிருந்ததைப் பார்த்து, "ஏன், ஒரு மாதிரி இருக்கீங்க? ஆபீஸ்ல ஏதானுமா?" என்று கவலையாய் வினவிய மனைவியிடம் நடந்ததைச் சொல்லிவிட்டு அவன் காப்பியைக் குடித்தான்.



ஒளிவெள்ளத் திருநாள்

ஆற்றலரசு

தீபங்கள் ஒளிர்கின்ற நேரம் – இருள்
தீமைகள் மறைந்தோடி ஒளிர்கின்ற காலம்!
தாபங்கள் ஆகிடும் வெடிகள் – எங்கும்
துட்டரின் செயலாலே வீழ்ந்திடும் கொடிகள்!
புத்தாடை அணிகின்ற திருநாள் – இங்கு
புவியெங்கும் சுடராகி மின்னிடும் ஒருநாள்!
தித்திப்பைத் தருகின்ற நன்னாள் – இனி
திறமைகள் புவியாள வருகின்ற பொன்னாள்!

இருளான காலங்கள் ஓடும் – எங்கும்
இல்லாமை நிலைமாய்ந்து நலங்காணத் தேடும்!
அருளான நெஞ்சங்கள் பாடும் – பணி
ஆக்கங்கள் ஆலாகப் புவிமீது கூடும்!

"உங்களுக்கேன் இந்த வீண் வம்பெல்லாம்? தெருவில் அத்தினி பேரு இருந்தாங்கல்ல? அவங்கள்ள யாருக்கும் இல்லாத கரிசனம் உங்களுக்கு ஏன்? அவன் ஒரு முரடனாவோ, இல்லாட்டி உங்களைவிட அதிக பலசாலி யாவோ இருந்து எலும்பு முறிய அடிச்சுப் போட்டிருந்தான்னா? எதுக்கு இப்படி வம்பை விலைக்கு வாங்கறீங்க? அன்னைக்கும் இப்படித்தான். ஒரு கிழவியை அவ புருசன்காரன் அடிச்சான்னு சண்டைக்குப் போனீங்க. இதுலெல்லாம் நாம தலையிட்றதால அந்தப் பொண்ணோடெ பிரச்னை தீர்ந்துடுமா? தன்னோட பிரச்னையை அந்தப் பொண்ணேதான் தீர்த்துக்கணும்... ஒரு தாங்க்ஸ் கூடச் சொல்லாம ஓடிடிச்சில்ல அது?"

"அதில்ல, சாந்தி. அது ரொம்பக் குழம்பி இருந்திச்சு. எப்படி தெருவில நின்னு எனக்குத் தாங்க்ஸெல்லாம் சொல்லிக்கிட்டிருக்கும்? என் முகத்தைக் கூட அந்தப் பொண்ணு கவனிச்சிருக்காதுன்னுதான் நினைக்கிறேன். அழுதுக்கிட்டில்ல இருந்திச்சு? பாவம். தெருவில அடி வாங்கிட்டு அநாதையா நிக்கிறதுங்கிறது எம்புட்டுப் பெரிய அசிங்கம்? அவமானம்?... எங்கம்மா [illegible]படித்தானே நிக்கும்? எனக்கு [illegible]த்து வயசுதான் இருக்கும். எனக்கு உடம்பு முழுக்க எப்படித துடிக்கும் தெரியுமா? கதவு மூலையில கொடிக்கம்பு சாத்தி வச்சிருக்கும். அதை எடுத்து அவரு முதுகுப் பக்கமாய் போய் மண்டையில டணார்னு ஒரு போடு போடணும் போல இருக்கும். ஆனா, அந்த வயசுல அது சாத்தியமா? அதனால பாத்துக்கிட்டு, செயலத்து, கைகாலெல்லாம் நடுங்க நின்னுக்கிட்டிருப்பேன். பெரியவனானதும், அப்பாவை நல்லா அடிக்கணும்னு அப்ப நினைப்பேன். ஆனா என்கிட்ட அடி வாங்காம, எனக்குப் பதிமூணு வயசுலயே அவருசெத்துட்டாரு..."

சரோஜா சிறிது நேரம் மவுனமாக இருந்தாள். பிறகு சொன்னாள் : "இத பாருங்க, உங்க கோவம் எனக்குப் புரியுது. ஆனா, நீங்க இப்படி அடிக்கடி ஊர் வம்புல தலையிட்றதால ஆகப் போறது என்னங்கிறதையும் நீங்க யோசிக்கணும். அதனால அவங்களோட பிரச்னை தீர்ந்துடுமா? அவங்கவங்க பிரச்னைகளை அவங்கவங்கதான் தீர்த்துக்கணும். ஒரு சமயம் போல ஒரு சமயம் இருக்காது. அதனால உங்களுக்கேகூட ஆபத்தா முடியலாம். இல்லியா? எங்கண்ணன்கூட உங்கள மாதிரிதான். தெருவில யாராச்சும் குடுமியைப் பிடிச்சுக்கிட்டு நின்னாங்கன்னா இது போய் இடையில விழுந்து வாரும். தானும் நாலு அடி வாங்கிட்டு வந்து ரத்தம் ஒழுக நிக்கும்... அதுலயும் இந்த மெட்ராசு இருக்கே, படு மோசமான ஊரு. இந்த ஊர்ல நாம நியாயத்துக்குப் பரிஞ்சு குரல் கொடுக்கிறப்ப, நமக்கு ஆதரவா ஒரு பய கூடக் குரல் கொடுக்க மாட்டான். தனியாளா நின்னுதான் சமாளிக்க வேண்டி வரும். அதுக்காகத்தான் சொல்றேன். இனி இந்த சுபாவத்தை விட்றுங்க..."

தேவநாதன் பதில் சொல்லவில்லை. கண்களை மூடிக் கொண்டு கட்டிலில் ஏறிப் படுத்தான்...

... மறுநாள் பேருந்து நிறுத்தத்தில் நின்ற போது, முக வீக்கத்துடன் அந்தப் பெண் நின்றிருந்தாள். இவனைப் பார்த்ததும் பக்கத்தில் வந்து நின்று கண் கலங்கி, "ரொம்ப தேங்க்ஸ்ங்க உங்களுக்கு... எங்க வீட்டுக்காரரு முரடுங்க. இனி எப்பவாச்சும் இது மாதிரி ஆச்சுன்னா தலையிடாதீங்க" என்று அவசரமாய்ச் சொல்லிவிட்டு அப்பால் போய் நின்றுகொண்டு விட்டாள்.

சற்றுப்பொறுத்து வந்த பேருந்தில் ஏறிக்கொண்டாள். அவன் விரைவு கொண்டு நகர்ந்த அந்தப் பேருந்தின் பின்புறத்தையே வெறித்துப் பார்த்த படி நின்றான். சில நிமிடங்கள் கழித்து, "சார்" என்ற குரல் கேட்டுத் திரும்பினான். முந்திய நாள் அந்தப் பெண் பற்றிய விவரங்களை அவனுக்குத் தந்த பையன் நின்றிருந்தான்.

தேவநாதன் புன்னகை செய்தான். "அந்த அக்காவுக்கு நேத்து செம அடி, சார்... சார், உங்ககிட்ட ஒண்ணு சொல்லணுமே?"

"..............?"

"அந்தாளு அசிங்கமாப் பேசிகிட்டான் சார், உங்களைப் பத்தி. உங்களை அந்தக்காவோட கள்ளப் புருஷன்னு சொல்லிட்டான், சார்னா?"

தேவநாதன் எச்சில் விழுங்கினான். குரல் அடைத்துக் கொண்டது. கழுத்து நரம்புகள் புடைத்துக் கொண்டன. 'அட கடவுளே' என்று மனம் மெதுவாய் முனக, முகம் சிறுத்துப் போய் அவன் பேருந்து வழித்தடத்தில் கண்களைப் பதித்தான். ❀

வானம் பொழியும் கற்களும் ஊழிப்பாறைகளும்



செவ்வாயின் போபோஸ் துணைக்கோள்

“நட்சத்திரம் விழுதுடா... உடனே பச்சை மரத்தைப் பாரு..!” சின்ன வயசில் தாத்தாவும் பாட்டியும் சொன்னபோது மிரட்சியோடு பச்சைமரத்தைத் தேடிப் பார்த்த காலங்கள் இனி இல்லை. ‘விழுவது நட்சத்திரமல்ல’ என்பது இப்போது குழந்தைக்குக் கூடத் தெரியும்.

பல நேரங்களில் – குறிப்பாக ஆகஸ்ட் மாதத்தில்தான் நிறைய ‘நட்சத்திரங்கள்’ விழுவதைக் காண முடியும். ஒளிக்கீற்றாகச் சமயங்களில் ‘விஸ்’ஸென்ற ஓசையோடு இவை தரை நோக்கிப் பாய்ந்து வந்து பாதி வழியிலேயே மறைந்துபோகும். சில அரிதான நேரங்களில் இவை தரையில் விழுந்து தேடுகிறவர்களுக்குக் கிடைப்பதும் உண்டு.

பூரிக்கு மாவு பிசைந்து உருட்டியபிறகு ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் கோதுமை மாவுத் துகள்கள் நினைவுக்கு வருகிறதா? பிரபஞ்சம் உருவான காலத்தில், நம்முடைய சூரியனும் அதைச் சுற்றிச் சுழலும் பூமி உள்ளிட்ட ஒன்பது கோள்களும் உள்ளடங்கிய சூரிய மண்டலம் பிறந்த காலத்தில் அப்படிச் ‘சிதறிப்போய்ச்’ சுழன்று கொண்டிருக்கும் துகள்கள் தாம் இவை. ஒரு மில்லி மீட்டரில் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவான விட்டமுள்ளவை. பல மீட்டர்கள் குறுக்களவுள்ள துகள்கள் உண்டு. இவை புறவெளியை விட்டுப் பூமியின் ஈர்ப்பு விசையால் இழுக்கப்படும்போது காற்று மண்டல உராய்வால் தீப்பிழம்பாய் மாறுகின்றன. பெரும்பாலானவை வழியிலேயே ஆவியாகி மறைந்து விடுகின்றன. நூறு ஆண்டுகளுக்கு முன்பே (1879இல்) ஆர்.எஸ். பால் (R.S. Ball) என்பவர் கூறியுள்ளவாறு இவை பூமியின் துகள்களே என்றும் ஒரு கருத்து உண்டு. பூமியின் ‘சின்ன வயசில்’ எரிமலைகள் வெடித்துச் சிதறியபோது மிக உயரத்தில் தூக்கி எறியப்பட்டுச் சுழன்று வருகிற சிதறல்களே இவை என்பது பால் என்பவரின் கொள்கை.

முன்பெல்லாம் வால் நட்சத்திரங்களும் விண் கற்களும் ஒரே தோற்றங்கள்தாம் என்று கருதப்பட்டதுண்டு. விண்கற்கள் வால் நட்சத்திரங்களின் வால்புறத் தூசுகள் என்றும், காலாவதியாகிப் போய்ச் சிதறிய வால்நட்சத்திரத் துண்டுகள் என்றும்கூட அறிவியலாரால் கருதப்படுகிறது.

பூமியில் வந்து விழுந்த விண்கற்களைச் சேகரிப்பது அறிவியல் சிறப்பு வாய்ந்த ஒரு பழக்கம். உலகம் முழுவதிலும் விதம்விதமான இரண்டாயிரம் விண்கற்களுக்குமேல் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்மித்தோனியன் நிறுவனம், பிரிட்டிஷ் மியூசியம், சோவியத் அறிவியல் நிறுவனம், பாரிஸ் மியூசியம் போன்றவற்றில் மிக அதிகமான எண்ணிக்கையில் முறைப்படி இவற்றைப் பாதுகாத்து வருகிறார்கள். சென்னை, புதுக்கோட்டை மியூசியங்களிலும் சிறிய விண்கற்களைக் காணலாம்.

இஸ்லாமியர்கள் புனிதமாக, வழிபடுகிற மெக்காவிலுள்ள காபா நினைவுச் சின்னமான கரு நிறக்கல் ஒரு விண்வீழ்கல் என்று கருதப்படுகிறது. உலகில் உள்ள மிகப் பழைமையான விண்கல் இது என்கிற அளவிலும் சிறப்புடையது இது.

விண்கற்கள் - பூமியில் கிடைப்பதை இரண்டு வகையாகக் குறிப்பிடுவார்கள். கண் முன்னே ஒரு கல் எரிந்து தரை தொடும்போது கண்டுபிடித்தெடுப்பதை 'Fall' என்பார்கள். எப்போதோ தரையில் விழுந்து அதன் அமைப்பு, கனிமச்சேர்க்கை, வித்தியாசமான தோற்றம் இவற்றின் அடிப்படையில் விண்கல் என்ற இனம் கண்டுபிடிக்கப்படுவதை 'Find' என்பார்கள்.

அநேகமாக, ஒற்றைக் கல் விழும் காட்சியைப் பலரும் பார்த்திருப்பார்கள். சில அபூர்வமான நேரங்களில் மத்தாப்பூ சிதறுகிற மாதிரி பூப்பூவாய் ஒளிப்புள்ளிகள் வெடித்து விழுவதையும் காணலாம். விண்கல் தரையை நெருங்குகிறபோது தூள்தூளாக நொறுங்கி விழுவதால் ஏற்படும் இக்காட்சியை 'விண்கல் மழை' (Meteorite Shower) என்பார்கள்.

விண்கற்களுக்குப் பெயரிடுவதில் ஒரு சர்வதேச ஒழுங்கு உண்டு. விண்கல் கிடைத்த இடத்துக்கு அருகில் உள்ள அஞ்சல் நிலையத்தின் பெயராலேயே அது வழங்கப்படும்.

விண்கற்களின் வீழ்ச்சி என்பது பூமிக்கு மட்டும் உரியதன்று. சந்திரன்மீதும், செவ்வாய், சனி, வியாழன் போன்ற மற்ற கோள்களின் பரப்பிலும் இவை நாள்தோறும் விழுந்துகொண்டுதான் இருக்கின்றன. பூமியின்மீது ஆண்டுதோறும் இப்படி வந்து விழுந்து கொண்டிருக்கும் அண்ட வெளித் தூசின் எடையைச் சில ஆயிரம் டன்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

பொதுவாக, இந்த விண்கற்களின் வீழ்ச்சி என்பது அழகுணர்ச்சியின் பாற்பட்டுக் கண்டு களிக்க வேண்டிய தோற்றங்கள் தாம். இவற்றில் அஞ்சுவதற்குரிய அபாயம் ஏதும் இருப்பதில்லை.

எனினும் பூமித் தரையில் பள்ளங்களை உண்டுபண்ணக்கூடிய அளவுக்குப் பெரிய பெரிய ஒளிப்பாறைகளும் வந்து விழுவதுண்டு. அண்மைக் காலங்களில், சரியான பதிவுகளின்படி 1908 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் இப்படி ஒரு பாறை பூமியின்மீது வந்து விழுந்திருக்கிறது. சைபீரியாவில் கற்களால் நிரம்பியுள்ள தூங் குஸ்கா நதிப் பகுதியில் அது வெடித்து வீழ்ந்தது. பன்னிரண்டு மெகா டன் டி.என்.டி ஆற்றலோடு அது விழுந்தது என்கிறார்கள்.

அப்படி ஒரு 'வானப் பாறை' வந்து விழுந்தபோது ஏற்பட்ட விளைவுகள் என்ன தெரியுமா?

★ சுற்றுவட்டாரத்தில் பல பத்து மைல்கள் சுற்றளவுக்குப் பல காடுகள் அழிந்து தரைமட்டமாயின.

★ 650 கி.மீ.க்கு அப்பால் நின்றுகொண்டிருந்த குதிரைகள் அதிர்ச்சி தாங்காமல் கீழே விழுந்தன.

★ அனல்காற்றையும், புகைச் சூழலையும் தொடர்ந்து வானம் இருண்டுபோய் வெடிச்சத்தம் 650 கிலோ மீட்டர் தொலைவு வரை கேட்டது.

★ ஆசியா முழுவதும், ஐரோப்பா முதல் லண்டன் வரை கனமான காற்றழுத்தம் ஏற்பட்டது. உலகெங்கும் வெடிப்பின் அதிர்ச்சி அலைகளைக் கருவிகள் பதிவு செய்தன.

- இந்தப் 'பாறை வெடிப்பு' நல்ல காலமாக நடுவானில் நிகழ்ந்துள்ளது என்று கருதப்படுகிறது. இந்த 'அழல்பாறை' கூம்பு வடிவத்தில் நெருப்பாய் எரிந்து கொண்டு வந்ததைக் கண்டதாக, எண்பது கிலோ மீட்டர் தொலைவிலிருந்து பார்த்த கிராமவாசிகளின் சாட்சியம் கூறுகிறது. துரதிர்ஷ்டவசமாக நேரடியாக இந்த அழல்பாறை பூமிப் பரப்பின் மீதே வந்து வீழ்ந்திருந்தால் விளைவுகள் படுமோசமானதாய் இருந்திருக்கக் கூடும்.

இதுபோல் அவ்வப்போது பூமியை நோக்கி வரும் அழல் பாறைகள் பூமியை மிரட்டிவிட்டுத் தாக்காமல் திசைமாறிப் போவதும் உண்டு.

1972 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட எண்பது மீட்டர் குறுக்களவுள்ள சிறு பாறை ஒன்று வடக்கு யு.எஸ்., கனடாவுக்கு மேலே நெருப்பாய்ச் சுடர்விட்டுக்கொண்டு விரைந்தது. பகல் நேரத்திலேயே இந்த நெருப்புப் பந்து விண்ணில் பாய்ந்து மறைவதை ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்திருக்கிறார்கள். கடந்த ஜனவரி மாதம்கூட மிகச் சிறிய அழல் பாறை ஒன்று பூமிக்கும் சந்திரனுக்கும்



அரிசோனாவிலுள்ள 1220 மீட்டர் குறுக்களவுக்கான விண்கல் பள்ளம் (Meteor Crater)

இடைப்பட்ட தொலைவில், ஒன்பது மீட்டர் குறுக்களவுள்ளதாய்ப் பாய்ந்தோடியிருக்கிறது.

இந்த அழல்பாறைகளுக்கும், முன்பு சொன்ன விண்கற்களுக்கும் வேறுபாடு உண்டு. அச்சுறுத்தக் கூடிய அழல்பாறைகள் வியாழனுக்கும் செவ்வாய்க்கும் இடைப்பட்ட 'அஸ்ட்டிராய்டு பெல்ட்' என்னும் குட்டிக்கோள் வளையத்தைச் சேர்ந்தவை. பூமி சுழன்று வரும் பாதைக்குள் வருகிற 'அஸ்டிராய்டுகள்' என்னும் குட்டிக் கோள்கள் நமக்கு ஆபத்தானவை. இந்த வகையில் 184ஐக் கவனித்துப் பட்டியலிட்டிருக்கிறார்கள். இவற்றில் மிகப் பெரியவை என்று அப்போலோ, ஆதோனிஸ், இகாரஸ் ஆகிய குட்டிக் கோள்களைக் குறிப்பிடுகிறார்கள்.

ஹெர்மெஸ் என்று ஒரு குட்டிக் கோள் பூமியை நோக்கி வந்து மிரட்டிவிட்டுப் போனதைப் பற்றி அறிஞர்கள் ராபர்ட் ஜாஸ்ட்ரோவும் மால்கம் ஹெச். தாம்ஸனும் இப்படிக் கூறுகிறார்கள். "ஹெர்மெஸின் வருகைக்கு ஏறக்குறைய பூமி தப்பிப் பிழைத்து விட்டது. அது பூமியைத் தாக்குமானால், அதன் சக்தி பத்துலட்சம் ஹைட்ரஜன் குண்டுகளைப் போட்டதற்குச் சமமாக இருக்கும். இதன் விளைவால் பூமியிலுள்ள உயிரினங்களில் பெரும்பகுதி அழிந்துபோய் விடும். எதிர்காலத்தில் இந்த ஹெர்மெஸ் பூமியைத் தாக்கலாம்..."

இந்த எதிர்காலம் என்பது நாளையோ மறுநாளோ இல்லை என்கிற அளவில் நாம் திருப்தியுறலாம். விண்ணியலைப் பொருத்தவரை எல்லாமே ஐம்பதாயிரம், லட்சம் ஆண்டுகள்தாம். ஆகவே 'நாம்' கவலைப்பட ஒன்றுமில்லை.

அழல்பாறைகளில் மிகப்பெரிய வற்றை ஊழிக்காலப் பாறைகள் (Doomsday Rock) என்றே குறிப்பிடுவதுண்டு. ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வடக்கு அரிஸோனாவில் விழுந்த பாறை ஏற்படுத்தியுள்ள பள்ளம் இந்த வகையில் சுவாரஸ்யமானது. இதற்குப் பெயரே 'விண்கல் பள்ளம்' (Meteor Crater) என்பதாக வழங்கப்படுகிறது. பழைய இலக்கியங்களில் இதை கூன் மலைப்பள்ளம், பாரிஞ்சர் பள்ளம்,



ஹாலி வால்மீனும், கோடாகப் பாய்ந்து வரும் விண்கல்லும்

மௌண்ட் பள்ளம் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்களாம். இந்த விண்கல் பள்ளம் 1220 மீட்டர் அகலமும் 180 மீட்டர் ஆழமும் உள்ளது. உலகிலுள்ள விண்கல் பள்ளங்களிலேயே இதுதான் மிகப் பெரியது என்று மார்தட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் அண்மையில் நம் பாரதத்திலேயே ஒரு விண்கலப் பள்ளம் ஒன்று ஆராய்ச்சியாளர்களின் பார்வைக்குக் கிடைத்து விட்டது. அரிஸோனாவை விடக் கொஞ்சம் கூடுதல் விட்டமுடையது. மகாராஷ்டிராவில் லோனார் என்னுமிடத்தில் உள்ள இந்தப் பள்ளம் 1250 மீட்டர் குறுக்களவுடையது. வறண்ட காலங்களில் கூட இந்தப் பள்ளத்தில் ஒன்றரை மீட்டர் உயரம் நீர் தேங்கிக் கிடக்கும். பள்ளத்தின் மையத்தைச் சுற்றிலும் வேளாண் தொழில் நடைபெறுகிறது. சுற்றிலும் மரங்கள் வேறு. இப்படியெல்லாம் மேல்மண் புரட்டப்பட்டிருந்தாலும் ஆராய்ச்சியாளர்கள் இதை இனங் கண்டிருப்பது பிரமிக்கவைக்கும் செய்தி. அமெரிக்க நிலவியல் வல்லுநர்கள் வந்து லோனார் பள்ளத்தைப் பார்வையிட்டு உறுதி செய்திருக்கிறார்கள்.


. இப்படி விண்ணிலிருந்து விழுந்த பாறையின் உருகிய உலோகப் பகுதி, பூமிப் பரப்பைத் துளைத்துக்கொண்டு 'இந்த இடத்தில் புதைந்திருக்கிறது' என்பதைக் கூடக் கணித்துக்கூறிவிட்டார்கள். அதைத் தோண்டியெடுப்பதில் பெரும் செலவு ஏற்படக்கூடும் என்பதைவிட, அதனால் பெரும் பயன் ஏதும் இல்லை என்பதால்,' ஆராய்ச்சியோடு நின்றுவிட்டார்கள். லோனார் பள்ளம் இப்போதுதான் பிரபலமடையத் தொடங்கியுள்ளது.

லோனார், அரிஸோனாவுக்கு அடுத்து மூன்றாவது இடம் பெறுகிற பள்ளம் மேற்கு ஆஸ்திரேலியாவில் 'வுல்ஃப் க்ரீக்' என்னுமிடத்தில் உள்ளது. 850 மீட்டர் குறுக்களவுடையது.

இவைபோன்று பள்ளங்கள் ஏற்படக் காரணமான விண்கற்கள் - அல்லது பூமிப்பாதையில் குறுக்கிட்ட குட்டிக்கோள்கள் - ஊழிப்பாறைகள் என்றே கருதப்படலாம். இவை பூமியைத் தாக்கிய போது பெரும் உற்பாதங்கள் நிகழ்ந்திருக்கவேண்டும். பைபிளில் கூறப்படும் நோவாவின் காலம். அதில் வருணிக்கப்படும் உலக அழிவு - நம்முடைய இந்துப் புராணங்களில் கூறப்படும் பிரளய காலம், கண்ணன் ஒற்றை ஆலம் இலையில் குழந்தை வடிவில் படுத்துக் கொண்டிருந்தார் என்பது பற்றிய கதைகள் - இவை இந்த ஊழிப்பாறைகள் பூமியைத் தாக்கியபோது ஏற்பட்ட 'நிஜங்களாகவே'கூட இருக்கலாம். வரவர, அறிவியல் ஆராய்ச்சிகள் கூர்ந்து கவனிக்கப்படும்போது, மூட நம்பிக்கைகள் என்று ஒதுக்கப்பட்டு வந்த புராண இதிகாச கால நிகழ்ச்சிகளில்கூட உண்மை இழையோடுவதும் புலனாகிக் கொண்டிருக்கிறது.

பாரதத்தில் லோனார் விண்கல் பள்ளத்தைத் தவிர வேறு இல்லையா? நம்மவர்கள் இத்துறையில் மேலை நாட்டவர்கள் அளவுக்கு முனைந்ததாகத் தெரியவில்லை. எனினும் லோனார் ஒரு குறிப்பிடத்தக்க நம்பிக்கைக் கீற்றாக விளங்குகிறது.

நம்முடைய இந்துக் கோயில்களை ஒட்டி நிச்சயமாகத் தெப்பக் குளங்கள் உண்டு. புஷ்கரணி என்கிற பெயரில் மருத்துவப் பயன்களோடு கூடிய நீர்நிலைகள் உண்டு. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி என்று வற்றாத நதிகள் ஓடிக்கொண்டிருந்த இடங்களில் கூடத் திருக்குளங்கள் உண்டு. தெப்பத்திருவிழா என்றும் மைய மண்டபம் என்றும் நிறையவே



அஸ்டிராய்டு வளையத்திலிருந்து. சமயங்களில் இப்படிச் சிறு கோள்கள் (புள்ளிக்கோடு) பாதை மாறிக் கிளம்பிச் சூரியனைச் சுற்றிச் சுழல்வதுண்டு. ஆதோனிஸ், அப்போலோ, இக்காரஸ் போன்றவை இப்படிச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இவற்றால் பூமியோ, செவ்வாயோ தாக்கப்படவும் கூடும். அறுபத்தைந்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் இப்படிக் கிளம்பிய ஒரு குட்டிக் கோள் மோதிய போதுதான் பூமியில் மிகப் பெரிய சேதம் ஏற்பட்டு டைனோசாரஸ் போன்ற ஆதிகால உயிரினங்கள் பூண்டற்றுப் போயின. சராசரியாக ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது குட்டிக்கோள்களால் பூமி தாக்கப்படுகிறது என்கிறார்கள்.

அழகுகள் உண்டு. இவற்றுள் மிகச் சிலவேனும் லோனார் மாதிரி விண்கல் பள்ளங்களாய் இருந்து பின்னர் அவற்றின் அதீதமான முக்கியத்துவம் அறியப்பட்டுப் 'புஷ்கரணிகள்' என்று மாற்றம் பெற்றிருக்கலாமோ என்றுகூட ஐயுறத் தோன்றுகிறது.

பிற்காலத்தில் குளம் வெட்டுதல் என்பது ஓர் அறச் செயலாகக் கருதப்பட்டுச் செய்யப்பட்டிருந்தாலும், மிகப் பழங்காலம் முதலே இலக்கியங்களில் பேசப்படுகிற பொற்றாமரைக்குளம் போன்றவை. அறிவியல் ரீதியாக ஆராயப்பட வேண்டும்.

பூமியில் ஏற்படுகிற விண் பாறைப் பள்ளங்கள் இங்குள்ள புறச்சூழலின் மாற்றங்களால் நிறைய இடங்களில் மறைந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், அம்மைத்தழும்பு முகம்போன்ற விண்கற் பள்ளச் சுவடுகள், சந்திரனைப் போலவும் செவ்வாயைப் போலவும், புதனைப் போலவும் பூமியையும் மாற்றியிருக்கும்.

அழற்பாறைகள் என்று குறிப்பிட்டுள்ள Asteroids என்னும் சிறு கோள்களின் கூட்டம் சுவாரஸ்யமான அமைப்புடையது. சூரியனைச் சுற்றிய ஒன்பது கிரகங்களுக்கும் இடைப்பட்ட தொலைவு, ஒரு விதிப்படியே அமைந்துள்ளது. போட்ஸ் விதிகள் (Bode's Law) என்று இதைக் குறிப்பிடுவார்கள். அந்தக் கணக்கீட்டின்படி, சூரியனைச் சுற்றிச் சுழன்று வருகிற புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ. இந்த அமைப்பில் செவ்வாய்க்கும், வியாழனுக்கும் இடையே ஒரு கோள் அமைந்திருக்கவேண்டும். ஆனால் உண்மையில் அவ்வாறு ஏதும் இல்லை.

1800 ஆம் ஆண்டில் சிலி நாட்டு வானியலாரான ஜியஸெப்பே பியாஸ்ஸி என்பவர் டாரஸ் விண்மீன் கூட்டத்தைப் பல மணி நேரங்கள் செலவிட்டுக் கவனித்து வந்தார். அப்போது ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்துக்காக அவர் தொலை நோக்கி மூலம் வானைத் துருவியபோது எட்டாவது மாக்னிடியூட் அளவில் ஓர் ஒளிப்புள்ளி சிக்கியது. இதற்கு சிலிநாட்டின் காவல்தேவதையின் பெயரான 'செரஸ்' என்பதைச் சூட்டினார். அதன் தொலைவையும் 2.77 அஸ்ட்ரானமிகல் யூனிட் என்று பின்னால் காஸ் (Gauss) என்னும் இளம் கணிதவியலார் கணக்கிட்டுச் சொன்னார்.

[விண்வெளியைப் பற்றிப் படிக்கும்போது AU என்னும் அஸ்ட்ரானமிகல் யூனிட என்பதைப் பற்றி அறிந்திருக்கவேண்டும். சூரிய மையத்திலிருந்து நம்முடைய பூமி உள்ள தொலைவை ஓர் அஸ்ட்ரானமிகல் யூனிட் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தக் கணக்கீட்டின்படி, சூரிய மண்டலத்தின் கடைசிக்கோள் (?) என்று நம்பப்படுகிற புளூட்டோ 40 அஸ்ட்ரானமிகல் யூனிட் தொலைவில் உள்ளது. பூமிக்கும் சூரியனுக்குமிடையேயுள்ள தூரம் 1496 லட்சம் கி.மீ.]

'செரஸ்' காணப்பட்ட அதே தொலைவில் தொடர்ந்து பல ஒளிப்புள்ளிகளை இனம் கண்டறிந்தார்கள். அடுத்த ஆண்டில் வில்ஹெம் ஆல்பர்ஸ் என்பவர் 'பல்லாஸ்' சிறுகோளைக் கண்டறிந்தார். 1804 ஆம் ஆண்டில் 'ஜூனோ' சிறு கோளும், 1807இல் 'வெஸ்ட்டா' சிறு கோளும் கண்டறியப்பட்டன. 1890 ஆம் ஆண்டுக்குள் முன்னூறு சிறுகோள்கள் அதே தொலைவில் கண்டறியப்பட்டன. ஏறக்குறைய நாற்பதாயிரம் சிறு கோள்களைக் கவனித்ததாகப் பின்னால் குரோயன் வெல்டும், க்விபெர் என்பவரும் மதிப்பிட்டார்கள்.


சூரியனிலிருந்து 1.5 முதல் 5.2 அஸ்ட்ரானமிகல் யூனிட் எல்லைக்குள் ஒரு கோள் இருந்து என்ன காரணத்தாலோ சிதறிப் போய் இப்படித் துகள் வளையமாகச் சுழன்று கொண்டிருக்கலாம் என்கிறார்கள். பிரபஞ்சத்தில் சூரிய மண்டலம் பிறப்பெடுத்த போது வெடித்துச் சிதறிய 'துகள்கள்' தனித்தனியே பூமி என்றும் வியாழன் என்றும் சனி என்றும், தம்மருகில் கிடைத்த 'துகள்' களை ஈர்த்துக்கொண்டு உருவானபோது - அப்படி ஒன்று சேர 'மன'மில்லாமல் தனித் தனியாகவே ஒரு பாதையில் சுழன்று வருபவை என்றும் ஒரு கருத்து உண்டு.

பூமிப்பாதையில் குறுக்கிடுபவை போன்றே செவ்வாயின் பாதையிலும் குறுக்கிடுகிற குட்டிக் கோள்கள் உண்டு. அப்படிப்பட்ட ஒன்றுதான் செவ்வாயின் நிலாவான'போபோஸ்' என்றும் அதை ஈர்த்துத் தன்னைச் சுற்றிச் சுழல வைத்துவிட்டது செவ்வாய் என்றும் சொல்வார்கள்.

அதேபோல் வியாழனின் ஆறாவது நிலா முதல் பதினைந்தாவதாக உள்ள கடைசி (?) நிலாவரை இந்தக் குட்டிக்கோள் வளையத்திலிருந்து ஈர்க்கப்பட்டுச் சுழன்று வருபவை என்று கருதுகிறார்கள்.

வானம் ஒரு புதிர் என்று சுலபமாகச் சொல்லிவிடுவார்கள். ஆனால் அந்தப் புதிரை அவிழ்த்து அறிந்துகொள்ள முயலும் அறிவியலாரின் - வானியலாரின் ஆர்வத்துக்கு ஈடு ஏது. இணைதான் ஏது?

படங்கள் : நன்றி யு.எஸ்.ஸின் நாஸா அமைப்பு.



ஒரு டாகுமென்டரி படத்தில்

ஹெரான், திருமலை நாயக்கர்

கு. அசோகன்

மேடையில் பேன்ட் சட்டை அணிந்து ஒருவர், சிரித்த முகம் மாறாமல், கையில் வேல் (!) சகிதம் நின்றிருக்க, அவரை மற்றவர்கள் 'முருகா' என்றழைத்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். மேடையின் பின்புறத்திலோ, "அகத்தியரே சீக்கிரம் வந்து காபி சாப்பிட்டு விட்டுப் போங்க" என்று யாரிடமோ ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

மறுநாள் புதிதாக அரங்கேற இருந்த 'இடும்பன்' நாடகத்தின் கிராண்ட் ரிகர்சலை ஹெரான் குழுவினர் நடத்திக் கொண்டிருந்த போது கண்ட காட்சிகளே அவை. பின்னொரு நாளில் திரு. ஹெரான் ராமசாமி அவர்களின் இல்லத்தில் சந்தித்து, அவர்தம் நாடக மேடை அனுபவங்கள் பற்றிப் பேச்செடுத்தபோது,

"நடிகன் ஆகவேண்டும் என்ற ஆர்வத்தோடு அதற்காகத் திட்டமிட்டு மேடைக்கு வந்தவன் இல்லை நான். இப்போதோ, நடித்தால் தான் பிழைப்பு என்ற நிலைக்கு வந்தாயிற்று".

அது எப்படி?

பள்ளி மாணவனாக இருந்த போது, 'கண்ணகி', 'பராசக்தி' போன்ற சினிமா வசனங்களை மனப்பாடம் செய்து (அப்போதெல்லாம் பாட்டுப் புத்தகம் போல் வசனப் புத்தகமும் விற்கப் படுவதுண்டு) நண்பர்களிடையே நடித்துக் காட்டுவாராம். இதனால் அறிமுகம் உள்ள குடும்பங்களில், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில், இவரை வசனம் பேசி நடிக்கச் சொல்லி வற்

திருமலை நாயக்கர் – காட்சி





மாவீரன் அலெக்சாந்தர்

புறுத்தத் தொடங்கினார்கள். தனக்குக் குரல் வளம் இருப்பதாக அவர்கள் பாராட்டியபோது கிடைத்த உற்சாகம், நாடக மேடை நோக்கிய தன் பயணத்திற்கான பாதையைக் காட்டியதென்று இவர் குறிப்பிடுகிறார். 1954 இல் பத்தாம் வகுப்பில் (அன்றைய ஐந்தாம் படிவம்) படித்துக் கொண்டிருந்த போது சொந்த ஊரான தூத்துக்குடியில் ஒரு அமெச்சூர் குழு நடத்திய 'கட்டபொம்மன்' நாடகத்தில் 'எட்டப்பன்' வேடம் ஏற்கும் வாய்ப்பு கிடைத்தது. ஒத்திகை எல்லாம் செய்த பிறகு, மேடையேறும் வாய்ப்பு கிட்டாமல் போனது.

1960 இல் சென்னைக்கு வந்து, அங்குமிங்குமாகச் சில நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். பிறகு ஈ.ஆர். சகாதேவனின் குழுவில் சேர்ந்து, 'புலித்தேவன்' என்ற நாடகத்தில் 'கர்னல் ஹெரான்' என்ற ஆங்கிலேய கதாபாத்திரமாகத் தோன்றினார். நாடகாசிரியர் தமிழ்வாணனும், 'தினத்தந்தி'யை நிறுவிய சி.பா.ஆதித்தனாரும், திருநெல்வேலியில் அந்த நாடகத்தைப் பார்த்து, இவர் நடிப்பைப் பாராட்டி 'ஹெரான் ராமசாமி' என்றே குறிப்பிட்டுப் பேசினார்களாம். அதற்குப் பிறகும் தமிழ்வாணன் கடிதம் எழுதுகையில், அப்பெயரையே குறிப்பிடுவாராம். இப்படி வந்து நிலைத்ததுதான் 'ஹெரான்'பட்டம்.

1962 இல் பண்ணோடு பிறந்தது என்ற பெயரில், பூம்பூம் மாட்டுக்காரனின் எளிய வாழ்க்கையை சித்திரிக்கும் சமூக நாகடத்தை இவரே எழுதித் தயாரித்தார். மதுரை திருமாறன் அதையே 'உறவும் பகையும்' என்ற பெயரில் மாற்றங்களுடன் எழுதிக் கொடுத்தார்.

சகாதேவனின் நாடகக் குழு சரிவர இயங்காமல் நின்றுபோனதும், இவர் ஆர்.எஸ். மனோகரின் நாடகக்குழுவில் இணைந்தார். அதுவே இவருக்கு ஒரு திருப்புமுனை ஆனது. திறனை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்புகள் வந்தன. 'துரோணர்' நாடகத்தில் 'துரியோதனன்', 'சூரபத்மன்' நாடகத்தில் 'சுக்ராச்சாரியார்' போன்ற வேடங்களை மிகவும் ரசித்துச் செய்ததாகவும், பொதுமக்களின் பரவலான பாராட்டைப் பெற்றதாகவும் பெருமகிழ்ச்சியோடு நினைவு கொள்கிறார். சுமார் பதினொரு ஆண்டு காலம் மனோகரின் குழுவில் இடம் பெற்றதால் தமிழ் நாட்டில் மட்டுமின்றி, தமிழர் வாழும் பிற

சென்னை வானொலி நாடகப் பதிவில்





'நரகாசுரன்' – தொலைக்காட்சித் தொடர்

மாநிலத் தலைநகரங்களிலும் தான் பெயர் பெற முடிந்தது என்று பெருமைப்படுகிறார். "ரசிகர்களுக்கு என்னை அடையாளம் காட்டியவர் குருநாதர் மனோகர் தான்; அவர் அளித்த பயிற்சியே, இன்று நான் தனித்து நிற்கும் தகுதியைத் தந்தது" என்று நன்றி பாராட்டுகிறார்.

1972 வாக்கில் மனோகரின் ஆசியுடனே அவரிடமிருந்து விடை பெற்றார்; வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டிய குடும்பச் சூழ்நிலை, திறமைக்குச் சவால் விடும் வாய்ப்புகளை நாடும் கலைஞனின் மனநிலை, இவையே அன்றைய ஹெரானின் நிஜ நிலை. ஆறாண்டுக் காலம் தொடர்ந்து தேடலின் இடையே ஏவி.எம்.ராஜனின் நாடகக் குழுவிலும், நாகன் என்பவரின் லட்சுமி தியேட்டர் குழுவிலும் நடிக்கும் வாய்ப்புகள் வந்தன. லட்சுமி தியேட்டர் குழு நடத்திய 'ஆசார்ய ராவணா', 'கலியுகம் பிறந்தது', 'சத்திய ஹரிச்சந்திரா', 'தட்சயக்ஞம்' நாடகங்கள் ஒவ்வொன்றும் நூறு முறை அரங்கேறின. இந்த காலகட்டத்தில் மேடை நாடகங்கள் தவிர, கிருஷ்ணஸ்வாமி அசோஸியேட்ஸ், எஸ்.வி. ரமணனின் ஜெயஸ்ரீ பிக்சர்ஸ் ஆகிய நிறுவனங்கள் தயாரித்த பல டாகுமென்டரி படங்களிலும் நடிக்க முடிந்தது.

தான் விரும்பும் பாத்திரங்களில் நடிக்க வேண்டுமானால் தனிக் குழு தொடங்குவதை இனியும் தாமதிப்பதற்கில்லை என உணர்ந்தவராய், 1978 இல் 'ஹெரான் தியேட்டர்ஸ்' என்ற குழுவைத் தொடங்கினார். அன்று 'மாவீரன் அலெக்சாந்தரா'க ஆரம்பித்தவர், இன்று 'இடும்பனாக' இருக்கிறார். வால்மீகி, சனீஸ்வரன் (1,2), எமதர்மன், மகாகவி பாரதியார், பொய்யாமொழி, சாம்ராட் அசோகன், திருமழிசை ஆழ்வார், தானாசுரன் (கர்ணனின் முற்பிறவி), திருமலை நாயக்கர்,

'மூன்று முகம்' திரைப்படத்தில்



பிரும்மராட்சஸன், ஆகியோர் நடுவில் வந்தவர்கள். மாவீரன் அலெக்சாந்தராகவும், சனீஸ்வரனாகவும் திருமலை நாயக்கராகவும் ஒவ்வொரு வேடத்திலும் 300 முறை நடித்திருப்பார். ஒட்டுமொத்தமாக இதுவரை 5000 தடவைகள் மேடையேறியிருக்க வேண்டும்.

1981 இல் மதுரையில் நடந்த 5 ஆம் உலகத் தமிழ் மகாநாட்டில் 'கரிகால் பெருவளத்தான்' என்ற நாடகத்தை நான்கு முறை மேடையேற்றும் வாய்ப்பை அடைந்தார். 1982-83 இல் அதே மதுரையில் தொடர்ந்து நான்கு முறை திருமலை நாயக்கராக மேடையேறியதும் அப்போதைய மீனாட்சியம்மன் திருக்கோயில் தக்கார் திரு. வி.என். சிதம்பரம், தன்னைத் திருமலை நாயக்கர் வேடத்திலேயே ஆலயத்திற்கு வரவேற்று சரித்திர காலத்தில் அந்த மன்னனுக்கு அந்தக் கோயிலில் என்ன உரிமைகள் இருந்தனவோ அவற்றைப் போலவே சகல மரியாதைகளையும் தனக்குச் செய்ததும் எளிதில் மறக்க முடியுமா என்று கேட்கிறார்.

அந்த மதுரையிலேயே இந்த 1992 இல் புரட்சித் தலைவியின் தலைமையில் நடந்த அதிமுக வெற்றி மாநாட்டில் 'திருமலை நாயக்கர்' நாடகம் நடத்தியதையும், முதல்வரிடம் கேடயம் பெற்றதையும் பெருமிதம் பொங்க எடுத்துக் கூறுகிறார்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு தி.மு.க. ஆட்சி நடந்த போது கலைஞர் எழுதிய 'தென்பாண்டிச் சிங்கம்' நாடகத்தை இருபத்தைந்து முறை மேடையேற்றியதையும், 1989 இல் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் மான்ய உதவி பெற்று 'தீரன் சின்னமலை' நாடகம் நடத்தியதையும் சொல்லி, கட்சிக் கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்டுத் தனக்குக் கிடைத்து வரும் ஆதரவிற்காக அகமகிழ்வடைகிறார். 1980 இல் புரட்சித் தலைவரிடம் 'கலைமாமணி' விருது பெற்றதும், பிறகு தேவர் மன்றத்தின் சார்பில் சிறந்த நாடகத் தயாரிப்பாளருக்கான விருது பெற்றதும், 'விஸ்டம்' பத்திரிகையால் நாடகத்துறைக்குச் செய்த சேவைக்கென பரிசு பெற்றதும், பரிசுப் பட்டியலில்



ஹெரான் நாடகத்திற்குத் தலைமை வகித்த தமிழ்வாணன்

நீங்காத இடம் பெறும் சில நினைவுகள்.

ஒருமுறை ஈரோடில் நடக்க விருந்த நாடகத்திற்காக இவருடைய குழுவினர் எல்லோரும் காலையில் கோவை எக்ஸ்பிரஸில் புறப்பட்டுப் போனார்கள். வேறு அலுவல் காரணமாக அவர்களுடன் பிரயாணம் செய்ய முடியாத இவரிடம் எல்லோருடைய டிக்கெட்டுகளும் தங்கி விட்டன. ரயில்வே அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு தகவல் தந்தார். ஒரு பஸ்ஸைப் பிடித்து மாலையில் அங்கு போய்ச் சேர்ந்த போதுதான் தெரிந்தது, ஈரோடு ஸ்டேஷன் மாஸ்டருக்குத் தகவல் கிடைக்கவில்லை என்பதும், அதுவரை கிட்டத்தட்ட கைதிகளைப் போல் தன் குழுவினர் நடத்தப்பட்டனர் என்பதும். அந்த சங்கடத்தைச் சமாளித்ததே ஒரு சரித்திரம். மற்றொரு முறை சோ தயாரித்த ஒரு படப்பிடிப்பில் கலந்து கொள்ள ஜெய்ப்பூர் சென்று திரும்பும் போது பஞ்சாபில் லாரி ஸ்ட்ரைக்கினால் போக்குவரத்து தடைப்பட்டு, குறித்த நேரத்தில் டில்லி வந்து ரயிலைப் பிடிக்க முடியாமல் போகவே சென்னை ஐ.சி.எஃப் அரங்கில் 'வால்மீகி' நாடகம் நடத்த முடியாமல் போய்விட்டது.

இதையெல்லாம் தூக்கி அடிக்கிற நிகழ்ச்சி பம்பாயில் நடந்தது. தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் சண்முகனந்த சபையில் சனீஸ்வரன் நாடகம் தொடங்க ஆரம்ப மணி அடித்ததும், மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. அரங்கின் ஒலி-ஒளி அமைப்புத் தொழிலாளர்கள் தம் நெடுங்காலக் கோரிக்கைககள் நிறைவேறாமையால் திடீர் வேலைநிறுத்தம் செய்வ

மனோகரின் 'சாணக்கிய சபதம்' நாடகத்தில்



தாக அறிவித்தனர். சங்க நிர்வாகிகளின் வேண்டுகோளுக்குப் பலன் இல்லை. ஒரு வாரம் கழித்து, வேறு சில இடங்களில் நடத்திய பிறகு, அவர்களுக்காக ஒரு மைதானத்தில் நடத்திக் கொடுத்தார்கள், அவர்களின் விருப்பப்படி, 'சனிப்பெயர்ச்சி' என்ற பெயர் மாற்றத்துடன்.

பம்பாய் தவிர, ஹைதராபாத், பெங்களூர், திருவனந்தபுரம் போன்ற இடங்களுக்கும் சென்று நாடகம் நடத்தியுள்ளது, இவருடைய குழு. சரித்திர, புராண நாடகங்களுக்குப் பொதுமக்களிடையே அவ்வளவாக வரவேற்பு இல்லாதது பற்றிய பேச்சு வந்த போது, சரித்திரக் கதைகளுக்கு வாசகர்களின் வரவேற்பும் இப்படித்தானோ என்று கேள்வி எழுப்பியவர், "மக்களுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, நம் கலாசார மரபுகள் பற்றியெல்லாம் சொல்லிக் கொண்டுதான் இருக்க வேண்டும். உத்திகளை வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாம். காலம் காலமாக ஒரே மாதிரி காய்கறிகளைத்தான் சாப்



சகஸ்ரநாமத்தைக் கௌரவிக்கும் மகாகவி பாரதியார் (ஹெரான்)

1962 இல் சமூக நாடகத்தில் கதாநாயக வேடம்



தீரன் சின்னமலை





பள்ளி நல நிதிக்காக சனீஸ்வரன்

பிட்டுக் கொண்டிருக்கிறோம். அலுத்துப்போய் விட்டு விட்டோமா? பக்குவத்தை மாற்றி சமைப்பதில்லையா?" என்றார்.

பிறகு தொடர்ந்து "கலை, இலக்கியம் வளர்ப்பது பற்றிப் பேசுகிறோம்.



எமதர்மன் – காட்சி

முதலில் தாய் மொழியைச் சரியாக உச்சரிக்கத் தெரியவில்லையே பலருக்கும்? நாக்கை மடித்துப் பேசு, நுனி நாக்கால் பேசு என்று 'ள'கர 'ல'கர வித்தியாசங்களை இன்று சில நடிகர்களுக்குக்கூடக் கற்றுத் தர வேண்டியிருக்கிறதே? மாணவர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். ஆசிரியர்களுக்கே உச்சரிப்பில் தகராறு. முன்பெல்லாம் மணலில் எழுத வைத்து அனா, ஆவன்னா என்று ஓசையுடன் கற்பித்தார்களே, அந்தப் பயிற்சி முறை மறைந்துவிட்டதால் தான் இந்தக் குளறுபடி போலும். எங்கள் ஊர்ப்பக்கத்தில் உச்சரிப்புப் பயிற்சிக்காக 'மழைக் காலத்தில் மலையாளத்தில் மலைப் பழம் அழுகிக் குழுகுழுத்துக் கீழே விழும்' என்று சொல்ல வைப்பதுண்டு" என்றார் சிரித்துக் கொண்டே. வசனங்களைத் தெளிவாக உச்சரிப்பதில் வல்லவர் ஆயிற்றே!

"தொலைக்காட்சி நாடகங்களில் நடிப்புத் திறமை காட்ட வாய்ப்பு உண்டு" என்றவரிடம், "உங்கள் நாடகங்களை வீடியோ கேசட்டாக வெளியிடும் உத்தேசம் உண்டா?" என்று கேட்டோம். "எங்கள் நாடகங்களைத் தயாரிக்கும் செலவு அதிகம் என்பதால் ஏற்கனவே வீடியோ திருட்டால் தயக்கம் காட்டும் வீடியோ தயாரிப்பு நிறுவனங்கள் முன்வருவது சாத்தியமில்லை" என்றார்.


சுமார் அறுபது திரைப்படங்களில் நடித்திருப்பதுடன், சில தெலுங்கு, ஹிந்திப் படங்களின் தமிழ் 'டப்பிங்'கில் குரல் கொடுத்தும் இருக்கிறார். 'கண்ணன் ஒரு கைக்குழந்தை'யில் இவர் வில்லனாக நடித்தபோது, சத்யராஜ் சிறுவேடம் செய்தாராம். 'ரோசாப்பூ ரவிக்கைக்காரி', 'சித்ராபவுர்ணமி', 'ஜஸ்டிஸ் கோபிநாத்', 'கை கொடுக்கும் கை', 'தராசு', 'ஜானகி சபதம்' போன்ற படங்களிலும் ஓரளவு முக்கிய வேடங்கள் இவருக்குக் கிடைத்தன. ஆனால் பெரும்பாலும் போலீஸ் இன்ஸ்பெக்டர், ஜட்ஜ் போன்ற உதிரி ரோல்களே கிடைத்தது குறித்து அவருக்குக் குறைதான். ◦◦

கோடையில் வீழ்ந்த துளிகள்

அந்த இடத்துக்குப் புகலிடம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். புகல்-புகலிடம் என்ற இலக்கண சுத்தமான தமிழ்ச் சொற்கள் எதுவும் மாணிக்கத்தம்மாளுக்கு நன்றாகப் புரிந்து பதியும்படியான சூழலில் அவள் தன் 'மிகச் சிறப்பான' வாழ்நாட்களில் இருந்ததில்லை. விவசாயக் குடும்பம்; கட்டுக்கோப்புள்ள கிராமம். கேணிப்பாசனம், புஞ்செய், ஆடு கோழி என்று பசை காண இராப் பகல் ஆணும் பெண்ணும் உழைக்க வேண்டும். ஆனாலும் இவள் வீட்டில் இரண்டு நேரம் அரிசிச்சோறு உண்ணவும் வந்தவர்களுக்கெல்லாம் பங்கிட்டுக் கொள்ளவும் மனசும் வளமையும் இருந்தன. மூத்த பையன், பெண்களைக் கட்டிக் கொடுத்தபின், இவள் தகப்பனுக்கு மூன்றாம் குடியாக வாழ்க்கைப்பட்டவளுக்குப் பிறந்து அநாதையான தங்கச்சியைத் தன் புருசனுக்குக் கட்டி வைத்தாள். அவள் வயிற்றிலும் பிள்ளைகள் பிறந்தால் குடும்பத்துக்குச் சொத்துத்தானே, கூலிக்கு ஆள் வைக்க வேண்டாமே என்று நினைத்தாள். அவள் புருசன்தான் எப்படி இருப்பான்? அஞ்சு பிள்ளைகளுக்கு அப்பன், பேரப் பிள்ளைகள் பிறந்தாயிற்று என்று சொல்வார்களா? மங்காத்தாளைக் கட்டும்போதும் அவர் கருங்காலியைப் போல் காலும் கையுமாக இருந்தார். சல்லிக்கட்டு என்றால், தொடையைத் தட்டிக் கொண்டு முன்னே போய் நிற்பார்.



வீடு நிறைய சனம் வந்த வண்ணம் போன வண்ணமிருக்கும். காதுகளில் ஏழு பவுனுக்குத் தண்டட்டி சவடி போட்டிருந்தாள். தங்கைக்காரி வாயில்லாப பூச்சி. அவளுக்கும் அதே நகைகள் போட்டாள். அடுத்த வருசமே மணியாக வேலுவைப் பெற்றாள். பிறகு ஒரு பெண் பிறந்து இரண்டு வருசம் வளர்ந்தது தொண்டையடைப்பான் வந்து செத்துப் போயிற்று. மூன்றாவது பிள்ளையில், பாவி, பிழைக்காமலே வயிற்றுப் பிள்ளையுடன் போய்விட்டாள். மழை எப்போதுமில்லாமல் கொட்டிய இரவு. வயிற்றில் பிள்ளை மரித்து, சன்னி இழுப்பு வந்து விடியற்காலையில் மரித்தாள்.



வேலு... வேலுவைவிட ஒருவயசு மூத்தவன் ரத்தினம். இவள் பிள்ளை. அக்குடும்பத்தில் இவர்கள் இருவரும் படித்தவர்கள். மதுரையில் போய் படித்தார்கள். வேலு பட்டணம் போய்ப் படித்தான். படிப்பு... படிப்பு! அது என்ன படிப்பு?

காதுகளிலிருந்த நகை, ரோட்டோரத்து நிலம், எல்லாம் கைமாறிப் போய், சோற்றுக்கும் கையேந்தும் நிலைக்கு அது

ராஜம் கிருஷ்ணன்

கொண்டுவிட்டது. ஊர்ப் பிள்ளைகள், பெண்கள் எல்லோருமே எடுபட்டுப் போனார்கள். பச்சென்றிருந்த பூமி, நீரின்றி வறண்ட 'பாழ்' நிலங்களாக, தரிசாக, எங்கேனும் காணப்படும் எலும்பெடுத்த கால்நடைகளின் பெருமூச்சை ஏற்பவைகளாகப் போயிற்று.

வேலு கடைசி வருடம் படித்துக் கொண்டிருந்த போதுதான் அல்லியைக் கட்டினான். சுற்றி வளைத்தால் சொந்தமாகும் சாதி சனம்தான். அதுவும் பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்தபோது தான் பழக்கமாகித் தொடிசு வந்து, கொட்டாமல் முழக்காமல் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டதாக வந்து சொன்னார்கள். நல்ல வெளுப்பாக, தொங்கும் பின்னலில் பூ வைத்துக் கொண்டு, ஒரு சரிகைப் புடைவை உடுத்தி வேலுவுடன் வந்து கால்களைத் தொட்டுக் கும்பிட்டபோது, மாணிக்கம் மங்காவை நினைத்துக் கண்ணீருகுத்தாள். எல்லாம் கனவாயிற்று. வேலு சம்பாதித்து, வளமையை மீட்கப் போவதாக நினைத்தது நடக்கவில்லை. பட்டணத்தில் இருந்தபடியே மண்ணைத் தட்டிக் கொண்டு அவன் பெயர்ந்து போனான். பெண்சாதி இரண்டு வருடங்களுக்குப் பிறகு கையில் குழந்தையுடன் ஊர்விட்டுப் போனாள்.

இவள் வயிற்றில் பிறந்த ரத்தினம், மதுரையில் படித்தான். எட்டு வருசம், பத்து வருசம்... வேலை சீக்குப்பார்க்கும் டாக்டர். இவனும் டாக்டர் என்றார்கள். ஆனால் சீக்குப் பார்ப்பவனில்லையாம். எந்த டாக்டரிடமும் கை நீட்டாமல் அவர் பொக்கென்று ஒருநாள் பிற்பகல் பரமனடி போனார். இவள்...? பெற்ற பிள்ளை மருமகள் ஏசலுக்கும் பேசலுக்குமாக ஒரு வாய்ச் சோற்றுக்கும் துணிக்குமாக உயிர் வாழ்ந்தாள். ரத்தினமும் மதுரையில் கட்டிக் கொண்டான். ஆனால் வேதக்காரர்களாக மாறிய சாதி. இப்போது இரண்டு பேரும் எங்கோ ஆப்பிரிக்காவாம், அங்கே போய் விட்டார்கள். அவன் போகுமுன், இந்த இடத்தைப் பற்றி விசாரித்து, இங்கே கொண்டுவந்து சேர்த்தான். மாசாமாசம் பணம் வேலு கட்டுவானாம். சேர்க்கும் போது, கட்ட வேண்டிய மூவாயிரமோ என்னமோ ரத்தினம் கட்டியிருக்கிறான். இங்கே, காலை ஆறுமணிக்கு காபி, ஒன்பது மணிக்கு இட்டிலியோ ஏதுவோ ஒரு பலகாரம், பன்னிரண்டரைக்கு ஒரு சாப்பாடு, மதியம் மூன்று மணிக்கு டீ, ஆறு மணிக்கு இட்டிலியோ, தோசையோ ஒரு 'டிபன்' இருக்கும். பத்துப் பேரும் இவளைப் போல் வயதானவர்கள்; நலிந்த நடுத்தர வருக்கம். பொறாமையும் பொச்செரிப்பும், மட்டமான வார்த்தைகளுமாக மோதிக் கொள்ளும் நடைமுறை இப்போது பழகிவிட்டது இவளுக்கு. அவர்கள் யாரும் இவளைப்போல் உடலுழைத்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுமில்லை. மக்கள் இல்லாததனால் ஓய்வூதியத்தைக் கொடுத்து விட்டு இருக்கும் வாத்தியாரம்மா, மகனும் மகளும் இறந்து போனதனால் அநாதையான கிழவி, புருஷனே இல்லாமல் கன்னியாக இருந்து, வேலையில் ஒய்வு பெற்றவள், மருமகள் கொடுமை தாங்காமல் விலகி வந்தவள் என்று பல ரகங்கள். மாணிக்கத்தம்மாளுக்கு 'இங்கிலீசு' நாகரிகம் எதுவும் தெரியாது. எனவே அவர்கள் வாயில் இவள் அரைபட்டாள்.

"சுத்தப் பட்டிக்காட்டு சன்மம். நைட் லாம்ப் அணைச்சிடுன்னா முழிக்கிது!"

"அது நைட் லாம்பக் கண்டிச்சா என்ன? ஏதோ கருமம் வந்து தொலைஞ்சிருக்கு. நமக்குக் கீழ உட்கார முடியல. சிவகாமிகிட்ட வெஸ்டர்ன் டைப் கபோடு வைனோம். இது கீழெல்லாம் அசிங்கம் பண்ணிருக்கு!"

இந்தப் பேச்சுகள் மாணிக்கத்தம்மாளின் செவிகளில் விழாமல் இல்லை. ஆனால் இந்த இல்லத்தை மேற்பார்வை செய்ய வரும் சிவகாமி இவளிடம் மிகவும் பரிவு காட்டினாள். இவளுக்கு வாயில் பக்கம் வராந்தாவில் வலைத்திரை போட்டுத் தடுப்புச் செய்த இடம் தனியாக ஒதுக்கி இருக்கிறார்கள். அவர்கள் பேசுவார்கள், பாடுவார்கள், படிப்பார்கள். ரேடியோவைப் பெரிதாக வைப்பார்கள். ஆனால் மாணிக்கத்தம்மா, வாசலில் வந்து திண்ணையில் உட்கார்ந்து, பார்த்துக் கொண்டிருப்பாள். சற்று எட்ட பள்ளிக்கூடம் இருக்கிறது.

குஞ்சு குஞ்சாய், செண்டு செண்டாய், கொத்துக் கொத்தாய், சீருடை அணிந்த குழந்தைகள் போவார்கள். அம்மாமார்கள் புத்தகச் சுமைகளைத் தூக்கிச் செல்வார்கள்.

அப்போதெல்லாம், வேலுவும் ரத்தினமும் பள்ளிக்கூடம் சென்ற காட்சி நினைவில் உயிர்க்கும். மதுரையில் இருந்து வந்தால் மல்லிகைப் பூப்போல் இட்டிலி சுட்டு வைத்திருப்பாள். வெங்காயம் தாளித்து, கடலைச் சட்னி அரைத்துப் பரிமாறுவாள்.

"என்ன? மாணிக்கத்தம்மா? எப்படி இருக்கிறீங்க," சாப்பாடெல்லாம் ஆயிட்டுதா?"

அண்ணாமலை. அடுத்தாற் போலிருக்கும் வங்கியில் வேலையாக இருக்கிறான். செங்கல் பட்டில் குடும்பம் இருக்கிறதாம். ரயிலில் வந்து பொடி நடையாக இங்கே வந்து சேர, ஒன்றரை மணி ஆகுமாம். கல்பட்டி ஊர். ரத்தினத்துடன் மதுரையில் படித்தானாம். அவ்வப்போது வந்து பேசுவான்.

"வாப்பா. இப்படித் திண்ணையில இரு... நீ சாப்பிட்டியா?"

"ஆச்சி..." என்று உட்காருகிறான்.

"வேலு, ரத்தினம் யாரும் உங்களுக்குக் கடிதாசி எதும் எழுதுறாங்களாம்மா?"

அவளுக்குச் சிரிப்பு வருகிறது. "எழுதினா எனக்குப் படிக்கவா தெரியும்? பணமனுப்பிச்சித் தாராங்கல்ல அதுதான் சங்கதி. வேறு என்ன சங்கதி எனக்குத் தெரியணும்? தெரியும், இல்லாட்டி?"

"... அதான். மூணு மாசமா பணம் வரல்ல போல. டாலர் கட்டுனா இங்க உங்களுக்கு ரூபாயத் தரும் வங்கில ஒரு மோசடி நடந்திருக்கு. அதுனாலயோ என்னமோ, சிவகாமி அம்மா விசாரிச்சிட்டிருக்காங்க...

அவளுக்குச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் ஒரு பருக்கை குத்திட்டு நின்று, மூச்சு விடும் இயக்கத்தையே நிறுத்தி விட்டாற் போல் இருக்கிறது.

"அப்படீன்னா?..."

"அதாவது அவங்க டாலர் சம்பளம்தானே வாங்குவாங்க? நம்ம ரூபா இருபத்தஞ்சி குடுத்தா ஒரு டாலர். அவங்க பத்து டாலர் கட்டினா, இங்க உங்களுக்கு, இருநூத்தம்பது ரூபாய் கிடைக்கும். அப்படி மாத்தித்தர வங்கில மோசடி பண்ணி இழுத்து மூடிட்டாங்க. வேலு ரத்தினமெல்லாம் பணம் போட்டிருந்து முழுவிலும் போயிருக்கலாம்..."

அவள் உள்ளூற அதிர்ந்து குலுங்கிப் போகிறாள்.

"அப்படீன்னா, பணம் வராதா?"

"வரும், வராம இருக்கலாம். நம்ம நாடா? நம்ம கவர்மென்டா? பத்துக்கு அஞ்சுன்னாலும் குடுடான்னு கேட்க? கஜானாவக் காலி பண்ணினாலும் குடுத்தாகணுமில்ல? இல்லாட்டி ஒட்டுப் போயிடுமே? அவங்கள நாம எங்கேந்து கேக்க? புருசன் புள்ள் இல்லாத புருசன் வீட்டில அறுத்துப்போன மருமவ இருக்கிறாப்பல தானே?"

மாணிக்கத்தம்மாளுக்கு நாடி நரம்புகளே துண்டிக்கப்பட்டாற் போல் இருக்கிறது.

சிவகாமி சொல்லவேயில்லை. நடுவில் செத்துவிட்டால் என்று காப்புப்பணம் வாங்கி இருக்கிறார்களே, அதைக் கணக்கில் வைத்துக் கொள்வார்களோ? பிறகு... அதுவும் முடிந்ததும், ஊருக்கு அள்ளிப்போட்டு, இடிபட அனுப்பி வைப்பார்களோ?

அய்யனாரப்பா? மேல்மலை முருகா? இப்படி ஒரு விதியா? இந்தச் சேதியை மூட்டை கட்டிக் கொண்டு சொல்ல வந்த அண்ணாமலை, வெற்றிலைச் சாற்றை வாயில் தாண்டி உமிழ்ந்து விட்டுப் போகிறான்.

மாணிக்கத்தம்மாளுக்குச் சொல் எழவில்லை.

வங்கி முழுகிப் போயிற்றென்றால் எப்படி என்ன என்பது அவளுக்குப் புரியத்தானில்லை. ஐந்து பத்து சிறுவாடு ஐந்நூறு ஆயிரமாகும்போது, கடாக் குட்டியாகவும், கம்மலாகவும், காப்பாகவும் மாறுவதுதான் அவள் அறிந்தது. வெள்ளம் கரை புரண்டால் ஆடுமாடு வீடு முழுகும் தான். அப்படி வெள்ளம் கரை புரண்டுதான் அந்த டாலர் வங்கி, இவள் வாழ்வுக்கு உயிர் நாடியான வங்கி முழுகிவிட்டதா?

என்றுமில்லாத பயம் பிடித்துக் கொள்கிறது. ஆவணி போய்ப் புரட்டாசி வரும் காலப் புழுக்கம் மட்டுமில்லை. நிலை கெள்ளாத புழுக்கம். இவளுக்கென்று மூலையில் சிறு ஃபான் வைத்திருக்கிறாள். சிவகாமி. மிகப் பழையது. இரவெல்லாம் அதன் கடகட ஓசை



இயல்பான தூக்கத்தையே எழுப்பி விடும். தங்களுக்குத் தனி விசிறி இல்லாத மற்றவர்கள் இதைக் கூடப் பொறுக்காமல் பேசுவதுண்டு.

உண்மையில் மாணிக்கத்தம்மா, விசிறியைப் போடுவதற்கே மறந்து போவாள். படுத்ததும் உழைப்பினால் தூங்கியே பழகியவள். இங்கேயும், பிக்கல் பிடுங்கல், சொல்-பேச்சு வேதனைகள் இல்லாத நிம்மதியில் உறங்கித்தான் போகிறாள்.

"ஃபேன் இருக்கில்ல? போட்டுக்கிறது! நீ என்ன சிவகாமி அம்மாளுக்கு சொத்து சேக்குறியா?" என்று வேலைக்காரி ராக்கம்மா கூட அதட்டுவதுண்டு.

இப்போது அந்த விசிறியைப் போடுகிறாள். கரன்ட் இல்லை போல் இருக்கிறது. ஓடவில்லை.

சுவரோடு பலகையில் இருக்கும் தன் பெட்டியை, கழுத்தில் கிடக்கும் பவழமாலையில் வைத்துக் கொண்டிருக்கும் சாவியை எடுத்துத் திறக்கிறாள்.

ஒரு தடவை நனைத்த நூல் சேலைகள் இரண்டு. பழைய பூப்போட்ட சேலை ஒன்று. இரண்டு ரவிக்கைகள் - கடைசி காலத்தில் அவர் அணிந்திருந்த தங்கம் கட்டிய உருத்திராட்சம். பழைய மூக்குக் கண்ணாடி. ஐந்து வயசில் செத்துப்போன பேரப்பிள்ளை - செந்திலின் முடி கொடுக்குமுன் எடுத்த படம்... எல்லாவற்றுக்கும் அடியில் இருந்து புதுவெள்ளை மங்காத நீண்ட கவரை எடுக்கிறாள். அதற்குள் ஒரு வண்ண ஃபோட்டோ இருக்கிறது. இந்தப் படமும் ஐந்நூறு ரூபாயும், வேலுவின் சிநேகிதன் என்று ஒரு பையன் ஏழெட்டு மாசத்துக்கு முன் அவளிடம் கொண்டு வந்து கொடுத்தான்.

ஐந்நூறு ரூபாய் நோட்டு அப்படியே இருக்கிறது.

படம் .... வேலுவா அது?

அடையாளமே தெரியவில்லை. ஒரு காரில் சாய்ந்தாற்போல் இருக்கிறான். முகத்தில், முன் வாய்ப் பக்கம் மட்டும் கருப்பாகப் படர்ந்த தாடி. உடம்பு முழுதும் தலையணை வைத்துக் கட்டினாற்போல் சிவப்பாகச் சட்டையோ எதுவோ போட்டிருக்கிறான். தலையில் குழந்தைகளுக்குப் போடுவது போல் பனிக்குல்லா. அவன் சம்சாரம் அல்லியாவா இவள்? பொட்டில்லை, புடைவையில்லை, பின்னலில்லை. அவளும் இவனையேபோல் நிஜார் அணிந்து தலையணை போல் சட்டை போட்டுக் குல்லா வைத்திருக்கிறாள். மோவாயில், மீசைக் கருப்பு இல்லை. அதுதான் பெண் பிள்ளைக்கு அடையாளமாக இருக்கிறது. படத்தின் பின்னே இங்கிலீசில் ஏதோ எழுதியிருக்கிறது. தமிழில் எழுதினால் மட்டும் தெரியப் போகிறதா? ஆனால் இரண்டு எழுத்துகளுக்கும் பார்வையில் வித்தியாசம் தெரியும். இன்னொரு படத்தில் அவன் குழந்தை, கவுன் போட்டுக் கொண்டு வெள்ளைக்காரி போல் சிரிக்கிறாள்.

இருளப்பத்தேவர் பேத்தியா இவள்? துரைசானி போல் இருக்கிறாயே? அந்தக் காலத்தில் அவர்கள் கிராமப்பக்கம் வந்து போன கலெக்டர் துரை துரைசானியை அவள் மாட்டுக்குப் புல் சுமந்து வருகையிலே பார்த்து விட்டாள். புல்கட்டைப் போட்டு விட்டுக் கோயிலின் பின் எப்படி ஒளிந்து கொண்டாள்?... இப்போது நினைத்தால் சிரிப்பு வருகிறது. ஐந்நூறு ரூபாய் அவன் அனுப்பிய பணம்தான்.

அந்தச் சிநேகிதனுக்குத் தமிழில் ஒரு வாய் வார்த்தை பேசத் தெரியவில்லை. இவள் காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, சிவகாமியிடம் இங்கிலீசில் பேசிக் கொண்டு போனான்.

அந்தப் போட்டோவைப் பார்த்துவிட்டு இங்கே இந்தப் படை என்னவெல்லாம் பேசிற்று?

"இவளா உம் மருமவ?"

"ஆம்பிள பொம்பிளக்கி அங்க வித்தியாசம் கிடையாது. தெருவில வாரப்பியே 'முத்தி'க்கு வாங்களாம்! தூத்தேறி!"

"அவம்பாட்டுல காருல போவான்.. அவ பாட்டுல காருல போவா. ஏன்டின்னு கேட்டா, டிவோர்ஸ்தானாம்!"

"தாலி, பொட்டு, பூவுன்னெல்லாம் எதுக்கு வச்சிருக்காங்க!"

"மாணிக்கத்தம்மா உங்க பையன்தானா இவன்?..."

மயில் கழுத்து நிறச் சேலை அணிந்து, பெரிய தோடும், பொட்டுமாக அவனுடன் வந்த மருமகளை, அடர்ந்த முடியுடன், சினிமா ஹீரோ போல் வந்து கும்பிட்ட ரத்தினத்தையும், இந்தப் படத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தோல்வி அடைகிறாள்.

பணம்... ஐந்நூறு ரூபாய்... அதுதான் சாசுவதம்.

அவளை மண்ணில் இழுத்துப் பிடிக்கும் உயிர் நாடி அது. வங்கி முழுகிப் போய், எப்படிக் கஷ்டப்படுவார்களோ? ஒரு கால் வீடே வெள்ளம் வந்து முழுகியிருக்குமோ?

இங்கெல்லாம் வெள்ளம் வந்தால் அரசு சாப்பாட்டுப் பொட்டலம், துணி, ரூபாய் எல்லாம் கொடுக்கிறார்கள். அங்கே எப்படியோ? அண்ணாமலை சொன்னாப்போல் புருசன் இல்லாத புகுந்த வீடுபோல்...

"மாணிக்கத்தம்மா...?"

தென்றலின் இனிமையாய் ஒரு வாசனை இழைந்து வருகிறது. சிவகாமி இப்போது இந்த நேரத்தில்...

அவள் எழுந்து கதவு திறக்கு முன் கதவைத் தள்ளிக்கொண்டு... சிவகாமியுடன் நிற்பது... யார்? கன்னிகாஸ்திரீ கோயிலில் இருக்கும் தேவதையா?

சுருள் சுருளாகக் கருப்பு முடி திராட்சைக் குலைகள் போல் நெற்றி மறைய விழுகிறது. ரோஜாவாகச் சிவந்த கன்னம்.

"ஹாய்...? மாணிக்கத்தம்மா...!"

ஓடிவந்து, அதே நறுமணம் இவள் சுருங்கிய மேனியில் பொல்லென்று பரவ, கன்னத்தில் முத்தம் வைக்கிறது தேவதை.

"நான் ரோஜு..." புன்னகையுடன் கையை இறுகப் பற்றிக் கொள்கிறது.

கலியாணமான நாளில், இருட்டறைக்குள் புதுப்பாயில் அவள் மேனி இப்படிப் புதுமை கண்டதாக நினைவில்லை. அவன் போதைக்காகக் குடித்த கள்ளோ, சாராயமோ தான் இவள் சுவாசத்தைத் தழுவி இறுக்கும். இது என்ன வாசனை...! மெல்லிய

மேகத்தில் ஏற்றி ஆகாசத்தில் கொண்டு செல்வது போல் அல்லவா இருக்கிறது!

"என்னம்மா? திகைச்சுப் போயிட்டீங்களா? உங்க பேத்தி, மகனோட மக. காலமதான் ஃபோன் வந்திச்சு. அமெரிக்கா லேந்து, பார்த்தா, ரெண்டு மணிக்கே இவங்க இங்கே ஓட்டல் லேந்து ஃபோன் பண்ணுறாங்க..."

வெள்ளை உடுப்பணிந்த டிரைவர், பிளாஸ்டிக் பை நிறைந்த பழங்களையும், ஓர் அட்டைப் பெட்டியையும் கொண்டு வருகிறான். பெட்டியைக் கையில் வாங்கி, தேவதை திறக்கிறது.

ஆரஞ்சு வண்ணத்தில் பச்சைக் கிளி பார்டர் கட்டிய சேலை. வழுவழுவென்று தொட்டால் ஒட்டும் மினுமினுப்பு.

"இது உங்களுக்கு! கலர் புடிச்சிச்சா மாணிக்கத்தம்மா?"

அது 'இங்கிலீசில்' கேட்பது இவளுக்குப் புரிகிறது.

"நல்லா இருக்காத்தா, உங்கம்மாவும் அப்பனும் வரலியா?.."

"ஹ்ம், அம்மா அஸைன்மென்ட்ல, கனடா போயிருக்கா, அப்பா இன்னும் ஒரு வருஷம் கழிச்சி வருவாங்க..."

"நீ தனியாகவா வந்து இருக்கிற?"

அவள் சொன்ன பதில் முழுசும் புரியத்தானில்லை. என்றாலும், வயசுப் பெண்ணை நாடான நாட்டில் தனியாக...

"ஆமாம். என் ஃப்ரண்ட்ஸ்கூட வந்திருக்கிறாங்க. டெல்லில இருக்காங்க. நான் வந்து, இங்க ஃபாமிலி கன்டிஷன்ஸ் பற்றி ரிஸர்ச் பண்ண வந்திருக்கிறேன். ஆறு மாசம் சுற்றுவேன்..." அந்தச் சிரிப்புத்தான் புரிகிறது.

கழுத்தை வளைத்து இன்னும் ஒரு முத்தம் கொடுக்கும் தேவதை,

"மாணிக்கத்தம்மா, நான் உங்களை ஒரு கேள்வி கேட்கட்டுமா?" என்று பார்க்கிறது.

இந்த 'இங்கிலீசை' சிவகாமி எடுத்துச் சொல்கிறாள்.

"கேளேம்மா! கேளு..!"

சிரிப்பு, இந்த எழுபத்தெட்டு வயசிலும் உறுதியாக நிற்கும் பற்களைக் காட்டிக் கொண்டு பொங்குகிறது.

"உங்க புருசர்.... மிஸ்டர் இருளப்ப தேவருக்கு நீங்களே ரெண்டாம் கல்யாணம் பண்ணி வச்சிங்களாமே? நிஜம்தானா?"

சிவகாமி இதை மொழி பெயர்த்துக் கூறியபோது, மாணிக்கத்தம்மாளின் உடல் குலுங்குகிறது.

பாட்டன் பேரை இப்படியா கூச்சமில்லாம சொல்லுவது?

'சுருக்'கை மறைக்கச் சிரிக்கிறாள்.

"அந்தக் காலத்துல வழக்கந்தான் கண்ணு. என் தங்கச்சி, உன் பாட்டிக்கு யாரும் இல்ல. எந்த வூட்டிலேனும் போயி நிப்பானே, நம்ம வூட்டோட இருக்கட்டுமேன்னு கெட்டி வச்சேன். கண்ணு, அவ பெத்த பய்யன்தான் இப்ப இன்னிக்கி எனக்கு இம் புட்டும் குடுத்திருக்கிறே..."

"அதில்ல மாணிக்கத்தம்மா, தங்கச்சின்னாக்கூட, உங்க சொந்தத்தை அவளும் 'ஷேர்' பண்ணிக்க நிசமாவே முடிஞ்சிச்சா?"

இவள் பேச்சை, குட்டியாக ஒரு 'ரேடியோ' வைத்து அது பிடிப்பதைப் பார்க்கிறாள்.



எவன்தான் மனிதன்?

எட்டுசாண் உடம்புள்வந்த
இரகசியங்கள் அறிந்துகொண்டு
பட்டுப்படாம லேஇருப்பான் – அவனுடன்
பழகுங்கள்! அவன்தான் மனிதன்!

சொல்அருவிக் குள்ளிருந்தே
'மந்திரி'யையும் சுத்தம் செய்தே
வெல்கிறபோர் வீரன்போல்வான் – அந்த ஓர்
விந்தைசெய் பவனேமனிதன்!

இன்றைய பாரதத்தின்
எங்கோசெ(ல்)லும் அவலமெல்லாம்
தன்கண்ணால் பேர்த்துநின்றால் – நம்மை
தானாய்த்தொழும்! அவனே மனிதன்!!

வேதம்

"இதெல்லாம் இப்ப என்னாத்துக்கு கண்ணு? ரெண்டுக்கப்புறம் மூணும்கூட தொடிசு வச்சிருந்தாரு. ஆம்புளங்க... அதெல்லாம் இப்ப என்னாத்துக்கு! உனக்கு எப்ப கலியாணம் பண்ணப் போறாங்க. உன் அம்மாவும் அப்பாவும்? அங்கியே மாப்பிள பாத்திருக்கா? அங்கெல்லாம் நாப்பது அம்பது பவன்றாங்க. பொம்புளப் புள்ளங்க விசம் குடிச்சிச் சாவுதுங்க. நீ ராசாத்தி போல இருக்குற. துரைசானி... உனக்கு நூறு பவன் போட்டுல்ல கலியாணம் கட்டணும்?"

சிவகாமி இங்கிலீசில் சொல்ல, அது இடி இடி என்று சிரிக்கிறது. மாணிக்கத்தம்மாள் திருஷ்டி கழித்துச் சொடுக்குகிறாள்.

கல்யாணி தம்ளர் வட்டையில் தேநீர் கொண்டு வந்து வைக்கிறாள். கீழே அவளை ஒட்டி உட்கார்ந்து, தூக்கிக் குடிக்கிறது. சிரித்துச் சிரித்து ஓயவில்லை.

பொட்டென்று ஒரு தங்கக் கனவு முடிந்து போனாற்போல் இருக்கிறது. கழுத்தை வளைத்து மாறி மாறி முத்தம் கொடுத்துவிட்டு, வாசலில் அடைத்து நின்ற எல்லாருக்கும் டாடா சொல்லிவிட்டு, காரில் ஏறிக் கொண்டு போகிறது.

மாணிக்கத்தம்மாள் வெகுநேரம் தூணருகில் தானும் ஒரு தூண் போல் நிற்கிறாள்.

இவள் திரும்புவதற்குள், விசாலமும் கண்ணம்மாளும், அந்தப் பிளாஸ்டிக் பழப்பையைத் தூக்கிக் கொண்டு செல்ல இருப்பதைப் பார்த்து விடுகிறாள்.

பாய்ந்து பிடுங்குகிறாள். "ஏன்டி, அப்படி ஒரு பேராசையா? உங்களுக்காடி எம்பேத்தி கொண்டாந்து வச்சிது? ஏனிப்பிடி பெறத்தியார் சொத்துக்குப் பறக்கிறீங்க?– அப்படி ஒரு வவுறா?"

"அடக்குடீ கிழவி, உன் வாயை இம்புட்டுப் பழத்தையும் நீ தின்னா, பேதிபுடுங்கிட்டுச் சாவே! கொண்டாந்து குடுத்தா. இங்க வந்த பிறகு, முழுசா எல்லாருக்கும்தான் சொந்தம். பத்துப்பேரு, ராக்கம்மா, கலியாணி, பதிமூணு பேருக்கு.."

"ஆமாண்டி! பதினெட்டுப் பேருக்கு பங்கு வப்பீங்க!"

அதைப் பேய் போல் இழுத்துப் பறித்து மீட்கிறாள். தன் தடுப்பு அறைக்குள் சென்று கதவைச் சாத்துகிறாள்.

"பிசாசுங்க! இதுங்க கண்ணே புள்ள மேல பட்டுடும்..." பழங்களை வெளியில் எடுத்து மறைப்பாக வைக்கிறாள். பெரிய ஆப்பிள் நான்கு; கொத்தாகப் பன்னீர் திராட்சை; ஒரு டஜன் பெரிய புள்ளி வாழைப்பழம், சாத்துக்குடி அரை டஜன்...

இந்தப் பழங்களே எவ்வளவு விலை பெறும்? சேலை... பெட்டியில இருந்து அதை எடுத்துப் பிரித்து மேலே வைத்துக் கொள்கிறாள். இப்படி ஒரு சீலை அவள் உடுத்திருக்கிறாளா? பச்சைக் கிளிகள் கொத்துக் கொத்தாக எலுமிச்சைப் பழங்களுக்கு நடுவே உட்கார்ந்தாற்போல்நிறம்...

இறந்து போன புருசரை நினைக்கிறாள். கண்கள் பசைக்கின்றன. தங்கச்சி மங்காத்தாளை நினைக்கிறாள்.

"பாவி, கொடுப்பின இல்லாம போயிட்டியே? உம்பேத்திடீ... துரசானியா வந்து நிக்கிது..."

"என்ன, மாணிக்கத்தம்மா, கதவடச்சிட்டீங்க?.."

அண்ணாமலை. இவனுக்கு மூக்கில் வியர்த்துவிட்டது போலும்!

"வாய்யா, என்னமோ பாங்கு முழுகிடிச்சி, தத்தளிக்கிறா உம்பய்யன்னு சொன்னே, பொய்யிதான? இத பாரு. பேத்தி இப்பதா வந்து எல்லாம் குடுத்திட்டுப் போச்சி..."

"ஓ...? அதானா, காரு வந்திட்டுப் போச்சி? அது மட்டும் வந்திச்சா, கூட ஒரு வெள்ளகாரப்புள்ளயும் வந்திச்சா?"

மாணிக்கத்தம்மாள் விழித்துப் பார்க்கிறாள். "என்னாடா சொல்லற?"

அவன் பேச்சை மாற்றுகிறான். சட்டென்று குனிந்து பழம் ஒன்றை எடுத்து "பழம் ஒண்ணே கால் ரூபாயிருக்கும். ஆப்பிள் ஒண்ணு ஏழுக்குக் குறையாது. டெல்லிலேந்தே வாங்கி வந்திருக்கும்!"

அவள் ஓர் ஆப்பிளையும் பழத்தையும், சில திராட்சை மணிகளையும் ஒரு துண்டுக் காகிதம் தேடி வைத்துக் கொடுக்கிறாள். அவன் அங்கேயே உட்கார்ந்து பழத்தை உரித்துத் தின்னுகிறான்.

"இங்க இப்படிப் பழம் கிடையாது. டெல்லியிலேந்து வாங்கிட்டு வந்திருக்கும். அது மூணு மாசமா டெல்லில தானிருக்குதாம். நம்ம செந்திருமச்சானில்ல, அவந்தான் வந்து சொன்னாப்புல... கர்கான் ரோட்டுல, ஒரு வெள்ளக்காரன் ஃபிரன்டுகூட இருக்குது. ரிசர்ச் பண்ணுதாம். அவனக் கட்டிக்கிறாப்புல உத்தேசம் போல.. இல்லாட்டி என்ன, வுட்டுப் போட்டு, வேற ஆளு பாக்கும்..."

எழுந்து அவனை மொத்த வேண்டும் போல் இருக்கிறது.

"இந்தாய்யா, எந்திரி. எந்திரிச் சிப்போ! நீ எதுக்கு இங்கிட்டு வர்ற? மத்தவங்க பசுமையா இருந்தா பாக்க மாட்டீங்க!" அண்ணாமலை சிரிக்கிறான்.

"கோவிச்சிக்காதீங்க மாணிக் கத்தம்மா, நிசம் சொன்னா உங்களுக்குப் பொய்யா இருக்கு... அம்புட்டும் தோத்து, டாக்டருக்குப் படிக்க வச்சீங்க. மண்ணத் தட்டிட்டு அவங்க சொகம்னு ஓடிட் டாங்க. ஏதோ இன்னைக்கு ஒரு பொண்ணு, பழமும் துணியும் வாங்கிக் குடுத்திட்டுப் போனா. பணம்பணந்தே உங்களுக்கு நெஞ்சு வலி அது இதுன்னாலோ, இல்ல மூச்சு நின்னாலோ, அவுங்க யாரும் ஓடி வாரப் போறதில்ல. பழகின தோசம், ஊருமண் ணுன்னு, நாந்தே வருவ... தோள்ள தூக்கிக்கிட்டுப் போவ... இதாம்மா நெசம்..."

அண்ணாமலை போகிறான்.

மாணிக்கத்தம்மாவுக்குத் தலை சுற்றி ஒரே இருட்டாகப் போகிறது

சில விநாடிகள் ஒன்றும் புரிய வில்லை.

பிறகு மெல்ல மெல்ல இருள் விலகுகிறது; சுய உணர்வு வந்தாற் போல் பார்க்கிறாள்.

சேலை...பழங்கள்..

அவை அவளுக்குச் சொந்தமா?

வீடு நிறைய மக்கள்... காட்டி லும் கரையிலும் வீட்டிலும் அடுப் படியிலும் உழைத்தாள். காதி லிருக்கும் பொன்னைக் கழற்றிக் கொடுக்கும்போது, புருசர்தான் கலங்கினார்,

ஆனால் இன்று... கிணற்றடியில் கிடக்கும் உடைந்த சட்டிப்பானை ஓடாய்க் கிடக்கிறாள்.

அந்தப் பெண் 'பாட்டி' என்று அழைத்ததா? பேச்சுக்குப்பேச்சு அவள் பேரைச் சொல்லி அழைத் தது. உன் புருசர் இருளப்ப தேவர் என்றது. புருசன், பொண்சாதி, அத்தை, மாமன், எந்த உறவும் இல்லை. வெறும் பணம். இதன் மீது கோடையில் விழும் மழைத்துளி போன்ற உறவு...

"ஏ ராக்கம்மா! இங்க வாடீ! இந்தப் பழமெல்லாம் எடுத்திட்டுப் போயி எல்லாருக்கும் குடு!" சீலை, மூலைக்குப் போகிறது. மாணிக் கத்தம்மாளுக்கு ஒரு புதிய தெளிவு தெரிகிறது.

பாட்டுடைத் தலைவன்

ஞா. மாணிக்கவாசகன்

பாரதி பிறந்தான் புதுப்பாட்டுப் பிறந்தது
பாரதி பிறந்தான் தமிழ்வாட்டம் தவிர்ந்தது!
பாரதி க்குப்பின்னே தான்இந்த நாட்டில்
பாட்டுமொழி பாமரரின் வீட்டுமொழி ஆயிற்று.
அரசர் திருமுன்பு அந்தப் புரநிழலில்
அந்தாதி கலம்பகம் கோவை தூதென்று
செத்துச் சிறைப்பட் டிருந்ததமிழ்
புத்தம் புதுஉருக் கொண்டுவர லாயிற்று.

பாரதி க்குப்பின்னே தானிந்த நாட்டில்
பக்திப் பயிர்வளர்ந்து கொண்டி ருந்த கழனிகளில்
தேசா வேசச் செடிவளர லாயிற்று.
தியாக மென்னும் பூவிரிய லாயிற்று
தரித்திரம் தகராறு சோற்றுச் சண்டை
மனித சரித்திரமாய் வளர்ந்த மண்ணில்
"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு
வாழும் மனிதர்க் கெல்லாம்" - என்ற
புதிய சிந்தனை விதைகள் இவன்கவி.

அடி மையில் கிடந்துழலும் நாட்டை மீட்டு
விடுதலை ஒளிகாண வைப் பதற்கும்,
சமுதாய சீர்குலைந்து கிடக்கும் மக்கள்
சமதர்மப் புதுப்பாதை காண் பதற்கும்,
மொழியறிவு கல்விநலம் முற்றும் கெட்டு
முடை நாற்றம் அடிக்கும் வாழ்வைப்
புதுக்கருத்து மலர்கின்ற சோலை ஆக்கிப்
புதுவாழ்வு கால்கொள்ள வைப் பதற்கும்;

தானே தொண்டனுமாய் தமிழறிந்த புலவனுமாய்
தானைப் படைநடத்தும் தளபதி அறிஞனுமாய்
பாரதிப் புலவன் தோன்றி னான்தமிழ்ப்
பாட்டு புதிய பாதையைக் கண்டது!
அற்புதங்கள் செய்ததால் இவன்கவிஞனாகவில்லை
அறியாமை மூடஇருள் அப்பிக் கிடக்கின்ற
சமுதாயச் சீருயரப் பாடியதால் பாரதிப்
புலவன் தமிழ்ப் பாட்டுடைத் தலைவனானான்.



முதல்வரைச் சந்திக்கிறார் UNICEF நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஜேம்ஸ் பி. கிராண்ட் அவர்கள்.

'யூனிசெஃப்'பின் உலகளாவியப் பணிகள்

பத்மினி பட்டாபிராமன்

குருத்து விடும் சின்னஞ்சிறு பயிர்கள்; களிப்போடு களங்கமில்லாமல், உற்சாகத்தோடு வளைய வரும் உயிர்கள்; சின்னஞ்சிறு மூளை வளர வளர, ஆயிரம் கேள்விகளை எழுப்பி விடை தேடி, அன்னை தந்தையின் அரவணைப்பில் நாளை உலகை நம்பிக்கையுடன் சந்திக்கத் துடிப்புடன் வளரும் தளிர்கள்...

கருவாகி உருவாவது வரைதான் எல்லா மலர்களும் ஒன்று...

தோன்றும் நேரம் தொட்டு, தொடர்ந்து துன்பத்தையே சந்திக்கும் பிஞ்சுக் குழந்தைகள் உலகெங்கும் பரிதாபமான பார்வையுடன் நிற்கிறார்கள்...

உண்ண உணவின்றி லட்சக்கணக்கான மலர்கள் மண்ணில் உதிர்கின்றன...

தகுந்த சத்துணவு இல்லாமல், வாடிய பயிராய், நோய்களின் இருப்பிடமாய் மெலிந்து போய் லட்சக்கணக்கான குழந்தைகள்... இவர்களுக்குப் பாதுகாப்பில்லை... கல்வியில்லை...

போரையும் வன்முறையையும் அடிக்கடி சந்திக்கிறார்கள்... அந்நிய ஆதிக்கத்தின் அகதிகள் ஆக்கப்படுகிறார்கள். கவனிப்பாரின்றி விடப்பட்டு, கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்...

முடமாக ஏக்கத்தோடு வளைய வருகிறார்கள்... பெண் சிசுக்கள்



பெண் குழந்தைகளுக்குக் கல்வி.



தடுப்பூசி (Immunisation) திட்டத்தின் கீழ் Dr. எமி வாடனபே பிறந்த குழந்தையைப் பார்க்கிறார்.

கர்ப்பத்திலேயே கலைக்கப்படுகிறார்கள்.

தினசரி 40,000 குழந்தைகள் வரை உலகெங்கும் - உணவில்லாக் கொடுமையிலும் நோயிலும் மரிக்கிறார்கள்...

சைல்ட் லேபர் எனப்படும் குழந்தைகளை வேலை வாங்கும் அநீதியும் நடக்கிறது... சுகாதார மற்ற சூழலில் வளர்கிறார்கள்... இவர்களுக்குப் பாதுகாப்பு தரவும், குழந்தைகளின் அடிப்படை உரிமைகளை நிலைநாட்டவும் நாற்பதாண்டு காலமாகச் செயல்பட்டு வருகிறது UNICEF என்னும் சர்வதேச நிறுவனம். (United Nations Children's Fund) இதன் ஒவ்வொரு திட்டமும் அரசாங்கங்களின் மூலமாகவே செயல்படுத்தப்படுகின்றன.

சென்ற நூற்றாண்டில் நிறையப் போர்களைச் சந்தித்த உலகம் அடிப்படை மானுட பிரச்னைகளில் கவனம் செலுத்த முடியாமல் போயிற்று. இப்போதுதான், காலம் காலமாக இருந்து வரும் வறுமை, பிணி, அறியாமை ஆகியவற்றை நீக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. அதில் முக்கிய இடம் வகிப்பது நாளைய சமுதாயமாகிய இந்த இளம் தளிர்களைப் பேணுவது! UNICEF நிறுவனத்தின் சென்னைக் கிளைத் தலைவர் திருமதி கின்-ஸான்டி-ல்வின் (KHIN-SANDI-LWIN) அவர்களைச் சந்தித்தபோது, அந்த நிறுவனம் பற்றி விளக்கமாகக் குறிப்புகள் தந்து உதவினார்.

இரண்டாவது உலகப் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக 1946ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது United Nations International Children's Emergency Fund ஆக இருந்தது. காலப் போக்கில் உலகெங்கும் உள்ள, குறிப்பாக வளரும் நாடுகளில் உள்ள குழந்தைகள் நலம் காக்கும் முயற்சியில் ஈடுபட்டது. 'International', 'Emergency' ஆகியவை நீக்கப்பட்டாலும் UNICEF என்கிற பெயர் நிலைத்துவிட்டது. குழந்தை நலம் காக்கும் பணியில் 1965இல் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றது. 1979ஆம் ஆண்டு உலகக் குழந்தைகள் ஆண்டாக அனுசரிக்கப்பட்டபோது, இதைப்போன்ற ஐக்கிய தேச நிறுவனங்களின் "தலைமை நிறுவனம்" ஆயிற்று. குழந்தைநலம் பேணுவதில் 1989ஆம் ஆண்டு இந்திரா காந்தி விருது பெற்றது.


பொது ஜனத் தொடர்பு சாதனங்கள் மூலம் எளிய முறைகளை மக்களுக்குத் தெரியப்படுத்தி தினம் 20,000 குழந்தைகளின் உயிரைக் காக்கும் முயற்சிகளைச் சமீப காலமாகச் செயல்படுத்தி வருவது UNICEF.

UNICEF என்றதுமே அழகிய வண்ண வண்ண வாழ்த்து அட்டைகள் நம் நினைவுக்கு வருகின்றன. எப்போது இப்பணி துவங்கியது?

ஜித்கா சாம் கோவா என்னும் செக்கோஸ்லோவாகிய சிறுமி 1949இல் UNICEFக்கு நன்றி தெரிவித்து ஒரு வாழ்த்து மடல் அனுப்ப, அதுவே முதல் வாழ்த்து அட்டை ஆயிற்று.



சுகாதாரக் கல்வி.



மருத்துவர்களுக்கும், நர்ஸ்கள் அதிகாரிகளுக்கும் பயிற்சி அளித்து, மாநாடுகள் நடத்த உதவு கிறது.

உலகையே ஆட்டிப் படைக்கும் எய்ட்ஸுக்கு ஆளான பெண்கள் வயிற்றில் பிறந்து ஒரு பாவமும் அறியாமல் அந்நோய்க்கு இரை யாகும் குழந்தைகள் எத்தனை?

வெளிநாடுகளிலும், இந்தியா விலும், தமிழ் நாட்டிலும் எய்ட்ஸ் விழிப்புணர்ச்சிப் பணிகள் செய்து வருகிறது UNICEF.

தாயின் நலம் பேணுவதன் மூலம் நல்ல ஆரோக்கியமான குழந்தைகள் பிறக்க முடியும் என்பது இந்நிறுவனத்தின் திட மான நம்பிக்கை.


சத்துக் குறைவினால் ஏற்படும் நோய்களைத் தவிர்க்கத் தொலை நோக்குத் திட்டங்கள் வைத்திருக் கிறது. இரும்புச் சத்து, அயோ டின், விடமின் ஏ ஆகியவை குறைவதால் ஏற்படும் நோய்

அரசு, பொது நல நிறு வனங்கள், தனிநபர் மூலம் கிடைக் கும் வருமானத்தைப்போல உலக முழுவதும் வாழ்த்து அட்டைகள், காலண்டர்கள் விற்பனை மூலம் பணம் பெறுகிறது UNICEF. இந்த விற்பனை மூலம் கிடைக்கும் பணம் முழுவதும் குழந்தைகள் மற்றும் பெண்கள் நலத்திற்கே செலவிடப் படுகிறது.

சிறு குழந்தைகளின் உடல் நலம் பாதுகாத்தல், அடிப்படைக் கல்வி அளித்தல் இவை இந்நிறுவனத் தின் இரு கண்கள்.

Super Vaccines எனப்படும் அதிக வீரிய நோய்த் தடுப்பு ஊசி மருந்துகளைத் தயாரிக்கும் ஆராய்ச்சி மற்ற சுகாதார நிறு வனங்களுடன் இணைந்து ஸ்பான் சர் செய்கிறது UNICEF.

வயிற்றுப்போக்கு, சுவாசப் பைக் கோளாறுகள், போலியோ, எய்ட்ஸ் (மற்றும் பலவிதமான காசநோய், அம்மை, டெடனஸ் போன்ற உயிர்க் கொல்லி நோய் கள்) தாக்காதிருக்க நிதி திரட்டு தல், மற்றும் ஆராய்ச்சிப் பணி களில் ஈடுபட்டுள்ளது. தடுப்பூசி (Immunisation) முக்கியமான பணி. போலியோ, அம்மை ஆகிய வற்றை முற்றிலும் ஒழிக்கும் முயற்சிகள்.



குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி.



கிராமப்புறங்களில் நல்ல குடிநீர்.

களைத் தடுப்பது. தாய்ப்பாலின் முக்கியத்துவத்தையும், சுற்றுப் புறச் சுகாதாரத்தின் அவசியத்தையும் வலியுறுத்துவது இவையும் இவர்கள் பணிகளே...

அடுத்தபடியாக இளவயதிலேயே கல்வி அளிக்க வேண்டிய தன் அவசியத்தை உணர்த்தும் தொண்டு.

UNESCO போன்ற சர்வதேச நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் UNICEFஇன் பணிகள் தொடர்கின்றன.

உலகில் எழுத்தறிவு கிடைக்காத 100 மில்லியன் குழந்தைகளில் மூன்றில் இரண்டு பங்கு பெண் குழந்தைகள். சுமார் 70 நாடுகளில் அடிப்படைக் கல்விக்கான உதவிகளைத் திரட்டுவதில் முனைந்துள்ளது இந்நிறுவனம். பங்களாதேஷ், ஜிம்பாப்வே போன்ற நாடுகளில் பயிற்சி முகாம்கள் நடக்கின்றன. அடிப்படைக் கல்வியைக் குழந்தைகள் மட்டுமின்றி பெண்கள், முதியோர்க்கும் அளிக்க உதவி வருகிறது UNICEF. குறிப்பாக, பெண் குழந்தைகளின் கல்வி... நம் நாட்டில் பீஹாரில் 2.5 மில்லியன் பேருக்கு அடிப்படைக் கல்வி அளிக்கும் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. போரில் பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ள குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி தர உதவுகிறார்கள்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை ஆரம்பப் பள்ளிகளில் சேரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகம் என்றாலும் மூன்று நான்கு ஆண்டுகளுக்குள் படிப்பை நிறுத்தி விடும் போக்கு அதிகமாக உள்ளது.

எனவே குடிநீரின் சுத்தம், சுற்றுப்புறச் சூழல் இவற்றை இளம் வயதிலேயே கற்பிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. உலக வங்கியுடன் இணைந்து ஆப்பிரிக்க, ஆசிய, மத்திய அமெரிக்க நாடுகளிலும், இந்தியாவிலும் சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு உதவி வருகிறது UNICEF.

ஊட்டச்சத்துக் குறைவினால் ஊனமுறும் குழந்தைகளைக் காக்க, நோயைத் தடுத்தல், ஆரம்பத்திலேயே கண்டறிந்து குணமாக்குதல், விடமின் குறைபாடுகளைக் களைதல் இவை முக்கியமாகும். மற்ற சர்வதேசத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, அல்ஜீரியா, ஜோர்டான், மத்திய அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இந்தப் பணிகள் நடைபெறுகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை ICDS (Integrated Child Developemnt Services) மூலம் பால்வாடி போன்ற ஆரம்பக்கல்வி, சுகாதாரக்கல்வி வளர்ச்சிப் பணிகள் நடைபெறுகின்றன.

கிராமப்புறப் பெண்களின் திறமைகளை உணர்ந்து அவர்களது வருமானத்தை மேம்படுத்துதல், பெண்களுக்குச் சுற்றுப் புறச் சுகாதாரத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், தன்னம்பிக்கை இவற்றையும் UNICEF செய்கிறது.

மனித குலத்திற்குத் தேவையான மகத்தான உதவிகளை, உலகம் முழுவதும் இணைந்து செயலாற்றி வருகிறது UNICEF... ஃ

திருப்புட்குழி எனும் திருத்தலம்

சி. ஆர். கே.

பஞ்சவடியிலிருந்து சீதையை ராவணன் தூக்கிச் செல்கிறான். வழியில் இதைக் காணும் ஜடாயு, தன் வயோதிக நிலைமையையும் பொருட்படுத்தாமல், குறுக்கிட்டுத் தடுக்க முயற்சிக்கிறது. அதைத் தொடர்ந்த மோதலில் ராவணனின் வலிமையைச் சமாளிக்க முடியாமல் குற்றுயிராகிப் போய்க் கீழே விழுந்து வேதனைச் சுமையோடு ராமனின் வருகைக்காகக் காத்திருக்கிறது. ராமனுக்குச் செய்தியைத் தெரிவித்துப் பின் ஜடாயு உயிர் துறந்ததும் அதனுடைய இறுதிச் சடங்குகளை ராமன் நிறைவேற்றியதும் அனைவரும் அறிந்த நிகழ்ச்சிகள்.

இலக்கியமாகிவிட்ட நிகழ்ச்சி. சிற்பமாக வடிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி. ஒரு தலம் உருவாகக் காரணமாக அமைந்துவிட்ட நிகழ்ச்சி.

முதலாவதைப் படித்துச் சுவைக்காதவர்கள் மிகக்குறைவு.



ஜடாயு தீர்த்தம்



விஜயராகவப் பெருமாள் (மூலவர்)


இரண்டாவது இடம் பெற்றுள்ள ஊர் தஞ்சைக்கு அருகில் அமைந்துள்ள புள்ளமங்கை. இவ்வூர்க் கோயிலில் இடம் பெற்றுள்ளது தான் இந்நிகழ்ச்சியின் உச்ச கட்டத்தைப் பிரதிபலிக்கும் சிற்பம் - ஜடாயுவின் சிரம்மீது ராமன் தன் கரம் பதித்து ஆசீர்வதிக்கும் சிற்பம். மூன்றாவது திருப்புட்குழி எனும் திருத்தலம்.

புள் என்றால் பறவை. குழி என்பது அப்பறவைக்கு இறுதிச் சடங்குகளைச் செய்த குழி. இரண்டும் சேர்ந்து புனிதத்தைக் குறிக்கும் வகையில் திரு என்கிற இணைப்புடன் திருப்புட்குழி. காஞ்சிக்கு அருகில், சென்னை - ஆர்க்காடு நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தலம்.

நூற்றெட்டு திவ்ய தேசங்களுள் ஒன்று என்கிற சிறப்புப்

எனதன்னைக்கு ஒரு கடிதம்

கருணைக் கடலாம் அன்னைக்கு
என் கருத்தில் கலந்த சுவையினுக்கு
ஒரு கடிதம் எழுத விழைகின்றேன்
அதன் வடிவம் தந்திங்கு மகிழ்கின்றேன் -
எனதன்னையே!
என் இதயத்தின் ஆழங்களில்
இறுகி விட்ட தானெனும்
வக்கிரப் பாசிகளில் மூழ்கிய
அகந்தைப் பாறைகளை
உனதன்பெனும் வெள்ளத்தால்
மீண்டும் மீண்டும் மோதி,
வேருடன் பிடுங்கி உருட்டி,
அதன் அழுக்கையெல்லாம் நீக்கி,
உனதருட் ஜோதியிலே
உருக்கி, கரைத்து,
இருளையெல்லாம் விரட்டி,
எனக்குள் எங்கெங்கும்
நிறைந்தருள் செய்த இனிமையே,
என் தெய்வமே!
எவ்விதமாய் இதற்கு நன்றியுரைப்பேன்!
என் செய்து இதையீடு செய்வேன்!
இவ்வுலகில் உந்தன் உயர்பணிக்கு
ஒரு கருவியாக்குவாய் என்னை -
இப்பிறவியிலேயே இதையேற்க
இசைந்திடுவாயா எனதன்னையே!



ரேவதி சங்கரன்

கிறது. ஜடாயுவைத் தனது வலது தொடையில் கிடத்தித் தகனம் செய்தாராம் பகவான். அப்போது அக்காட்சியைக் காணப் பொறுக்காத ஸ்ரீதேவி பகவானின் இடது பக்கத்துக்குச் சென்றுவிட, என்றுமே பொறுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் பூதேவி இடப்பக்கமிருந்து வலப்பக்கம் சென்றுவிடுகிறாள். எனவே, மற்ற தலங்களைப் போலல்லாமல் இத்தலத்தில் பெருமாளின் வலப்பக்கத்தில் பூதேவியும் இடப்பக்கத்தில் ஸ்ரீதேவியும் காட்சியளித்து அருள் பாலிக்கிறார்கள். தாயாரின் சந்நிதியும் இடது பக்கத்தில்தான் உள்ளது.

மரகதவல்லித் தாயார், மிகுந்த வரப்பிரசாதி என்கிறார்கள். ஒவ்வொரு அமாவாசையின் போதும் பிள்ளைப்பேறு இல்லாத ஏராளமானோர் இத்தலத்துக்கு வருகிறார்கள். ஜடாயு தீர்த்தத்தில் மூழ்கி, வறுத்த பயறை மடியில் கட்டிக் கொண்டு தாயாரை வணங்குகிறார்கள். அவர்கள் வறுத்த பயறு முளைக்கும் அற்புதத்தைக் காண்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப் பயறு முளைக்கும் பாக்கியசாலிகளுக்குக் குழந்தை பிறப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த நம்பிக்கையின் விளைவாக இத்தலம் ஒரு பிரார்த்தனைத் தலமாகவும் ஆகியுள்ளது.

இக்கோயிலின் குதிரை வாகனம் நுணுக்கமான வேலைப்பாட்டுடன் கூடியது. வாகனம் மூன்று தனித்தனிப் பாகமாகச் செய்யப்பட்டுப் பின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளது. இத்தகையவொரு வித்தியாசமான கலைப்படைப்பைச் செய்த அந்தத் தச்சரின் சமாதிக்கு அந்தக் குதிரை வாகனத்திலேயே சென்று பகவான் அருள் பாலிக்கிறார் என்பது இத்தலத்தின் சிறப்பு அம்சம்.

இக்கோயிலில் உள்ள ஸ்ரீராமானுஜரின் சந்நிதியும் மிகவும் புராதனமானது.


தர்மம் செய்வது உயர்ந்த பண்பு. அதர்மத்தைத் தடுப்பது அதைவிட மேலானது. அத்தகைய பண்பின் உறைவிடமாகத் திகழ்ந்து அந்த முயற்சியில் உயிர் நீத்த ஜடாயுவை நாம் என்றென்றும் நினைவில் கொண்டிருக்க வகை செய்யும் திருத்தலம்தான் திருப்புட்குழி. இத்திருத்தலத்தில் இடம் பெற்றுள்ள கோயிலை நல்ல முறையில் சீர்படுத்தி அதற்குரிய சிறப்பை அது திரும்பவும் பெறச் செய்ய வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.



மெழுகு உருவங்கள் : டிமிலி, யூல் பிரின்னர், ஜேம்ஸ் டேவ்ன், எலிசபெத் டெய்லர், மார்லின் மன்ரோ, ஜாபி ஆர்ம்ஸ்ட்ராங்.

ஸான் அன்டோனியோ - சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு சொர்க்கம்.

ஜனார்த்தனன்



அலமோ தியாகிகள் நினைவுச்சின்னம்.

ஸான் அன்டோனியோ அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தின் தென்பகுதியில் 160 சதுர மைல் நிலப்பரப்பில் அமைந்துள்ள ஒரு பெரிய ஊர். பண்டைக் காலத்தில் அங்கு வசித்துவந்த சிவப்பிந்தியர்கள் இந்தஊருக்கு யுனாகுவானா என்று பெயரிட்டிருந்தனர். பின்னர் கடந்த 1691 ஆம் ஆண்டு ஃபாதர் மாஸனெட் என்ற பிரெஞ்சு மதபோதகர் புனித அந்தோனி விருந்து தினப் பண்டிகையன்று இந்த ஊருக்கு வந்ததையடுத்து அதற்கு ஸான் அன்டோனியோ என்ற பெயர் வந்ததாம். பின்னர் இப்பிராந்தியத்தில் ஸ்பெயின் நாட்டினர் பலர் குடியேற ஸ்பெயின் நாட்டு மன்னர் ஐந்தாவது ஃபிலிப் 1718 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஓர் ஊராக அதை உருவாக்கினார். ஆனால் அங்கே தொடர்ந்து சிவப்பு இந்தியர்களின் தொந்தரவும், தாக்குதலும் இருந்து வந்தன. இதன் காரணமாக அங்கு குடியேறியிருந்த ஸ்பெயின் மக்களுககுப் பாதுகாப்பாக இருந்த ஸ்பெயின் ராணுவப்பிரிவினர் அங்கு கோட்டை ஒன்றைக் கட்டி அதை இராணுவப் படைத்தளமாக மாற்றிக் கொண்டு தங்கியிருந்தனர்.


தொடர்ந்து 1821 ஆம ஆண்டு ஸ்பெயின் நாட்டிலிருந்து சுதந்திரம் பெற்றுப் பிரிந்த மெக்ஸிகோ நாட்டு இராணுவத்தின் ஒரு பிரிவு இக்கோட்டையில் தங்கிவந்தது. அவர்கள் அதற்கு அலமோ என்று பெயரிட்டிருந்தனர். அலமோ என்பது அப்பிராந்தியத்தில் அடர்த்தியாக வளர்ந்துவந்த ஒரு மரத்தின் பெயராகும். அச்சமயம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மற்ற பிராந்தியங்களிலிருந்து பலர் டெக்ஸாஸ் பிராந்தியத்தில் குடியேறியிருந்தனர். அவர்கள் ஸான் அன்டோனியோவிலிருந்த மெக்ஸிகன் இராணுவத்தின் கொடுங்கோன்மையைப் பொறுக்க முடியாது தவித்தனர். அவர்களில் ஆண், பெண் குழந்தைகள் உள்பட 183 பேர் 1836 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் தேதியன்று மெக்ஸிகன் இராணுவத்தை எதிர்த்து அலமோ கோட்டைக்குள் நுழைந்து கோட்டைவாயிலை மூடிக் கொண்டனர். இருந்தும் அவர்கள், நான்காயிரத்துக்கும் மேற்பட்ட மெக்ஸிகன் ராணுவத்தின் பீரங்கித் தாக்குதலை எதிர்த்து நிற்கமுடியாமல் தவித்தனர். கர்னல் வில்லியம் பாரெட் ட்ராவிஸ் என்ற அவர்களது



அலமோ கோட்டைக்குள் கிணறு.



காஃபி ஷாப் வெளியே நடனமாடும் காட்சி.




கோச்சு வண்டி.

த்லைவன், தம் இறுதி நிலைமையை அறிந்து தரையில் கோடு ஒன்றைக் கீறி, நாட்டின் சுதந்திரத்துக்காகப் போரிட்டுத் தம் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருப்பவர்களைக் கோட்டைத்தாண்டி வரச் சொன்னார். கடுமையான நிமோனியா ஜுரத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஜேம்ஸ் பௌவ்வி என்பவரை அவர் படுத்திருந்த கட்டிலோடு தூக்கிவர, அந்த 189 அமெரிக்கக் குடிமக்களும் கோட்டைத் தாண்டிவந்து துப்பாக்கி ஏந்தினர். அலமோ கோட்டை போர்க்களமாக மாறியது.

தொடர்ந்து நடந்த 13 நாள் போரில், மெக்ஸிகன் ராணுவத்தின் தளபதி ஸான்ட்டா அன்னா என்பவரது தலைமையில் கடைசி நாளன்று அலமோ கோட்டை வாசல் பீரங்கிகளால் தகர்க்கப்பட்டு அவரது ராணுவம் உள்ளே நுழைந்து, அங்கிருந்தவர்களைத் துப்பாக்கிகளால் அடித்தும், சுட்டும் கொடூரமாகக் கொன்றனர். அவர்களில் பெண்களும் மற்றும் குழந்தைகளுமாகப் பதினான்கு பேர் கோட்டையினுள் ஒரு மூலையிலிருந்த பாதுகாப்பான அறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டதால் உயிர் பிழைத்தனர். அவர்களது தலைவன் கர்னல் ட்ராவிஸ் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்தான். இப்படுகொலை நடந்த சில வாரங்களுக்குப்பின் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவத்தினர் தளபதி சாம் ஹௌஸ்டன் தலைமையில் மெக்ஸிகன் ராணுவத்தைத் தோற்கடித்துத் துரத்தினர். அலமோ அமெரிக்கக் குடிமக்கள் வசம் வந்தது. அச்சிறு அலமோ கோட்டை இன்றைக்கும் ஸான் அன்டோனியோ நகரில் டெக்ஸாஸ் மாநிலத்தின் சரித்திரப் பிரசித்தி பெற்ற சுதந்திரச் சின்னமாக விளங்குகிறது.

கல்லினால் கட்டப்பட்ட இரண்டு மாடிக் கட்டடமாக விளங்கும் அலமோ கோட்டையைப் பார்க்க நாள்தோறும் பல்லாயிரக் கணக்கில் சுற்றுலாப் பயணிகள் ஸான் அன்டோனியோவுக்கு வருகின்றனர். அலமோ கோட்டைக்குள் கடந்த நூற்றாண்டில் படுகொலைக்குள்ளானவர்கள் உபயோகித்த பல்வேறு ஆயுதங்களும், இராணுவ தளவாடங்களும், ஆடைகள் மற்றும் பல பொருள்கள் பழமை மாறாமல் வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் குடிக்க நீர் சுரந்து உதவிய கிணறும் இன்றைக்கும் அன்றைய சூழ்நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஸான் அன்டோனியோவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின்



அலமோ கோட்டையின் வெளித்தோற்றம்.



குதிரை இழுக்கும் ட்ராம் வண்டி.



நினைவைப் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு அழைத்துச்செல்ல அன்றையச் சூழ்நிலையை உருவாக்கும் வகையில் ஸான் அன்டோனியோவிலுள்ள வாகனங்கள் அமைந்து சுற்றுலாப்பயணிகள் இந்நகரைச் சுற்றிப் பார்க்க உதவுகின்றன. குதிரைகள் பூட்டிய பல வகைக் கோச்சு வண்டிகள், குதிரைகள், மெதுவாக இழுத்துச் செல்லும் ரயில்பெட்டி போன்ற வண்டிகள், மின்சாரத்தினால் இயங்கும் கதவுகளில்லாத "ட்ராம்" வண்டிகள் என அவை பலவிதம். மெதுவாக ஓடும் இவ்வாகனங்களின் இடையிடையே நவீன



பண்டைக்கால 'ட்ராம் வண்டி'.

கார்கள் வேகமாகச் செல்லும் போது பழையன கலந்த நவீன நாகரிகத்தைக் கண்டுகளிக்கும் மனமகிழ்ச்சி ஏற்படுகிறது. அலமோ கோட்டையின் வெளியே மரத்தடியில் நடைபாதைமீது நம் ஊர்ப் பெட்டிக் கடைகளைப் போன்று, பல வண்ண்க் குளிர் பானங்களைப் பயணிகளுக்கு விற்கும் பெண்கள் அநேகர். அலமோ கோட்டைக்கு வெளியே பலமாடிக் கட்டட நவீன ஹோட்டலின் அருகில் அக்கோட்டையில் படுகொலையில் உயிர் துறந்த சில தியாகிகளின் உருவங்கள் பொறித்த ஐம்பது அடி உயர ஞாபகார்த்தச் சின்னம் அமைந்துள்ளது.

அலமோ கோட்டைக்குள் நுழைந்து பண்டைக்காலப் பொருள்களைக் கண்டு ஸான் அன்டோனியோ நகரின் சரித்திரத்தில் சிறிது நேரம் மனம் திளைக்கவிட்டு வெளியே வந்தவுடன் எதிரே தென்படுவது ரிப்ளே'ஸ் ப்ளாஸா 'தியேட்டர் ஆஃப் வாக்ஸ்' என்ற தனிரக அருங்காட்சியகம். இந்த மியூசியத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட ஆளுயர மெழுகுப் பொம்மைகள் பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்துகின்றன. சரித்திரப் பிரசித்தி பெற்ற தலைவர்கள், பிரபல டைரக்டர் ஸெஸில் பி. டிமில்லி, யூல் ப்ரின்னர், ஜேம்ஸ் வெய்ன், மார்லின் மன்ரோ, எலிசபெத் டெய்லர் போன்ற புகழ்பெற்ற ஹாலிவுட் நடிக, நடிகைகள், லூயி ஆர்ம்ஸ்ட்ராங் போன்ற மேற்கத்திய இசைக்கலைஞர்கள் மற்றும் பார்ப்பவர்களை மெய் சிலிர்க்க வைக்கும் பயங்கரமான உருவங்கள் - இவ்வாறு பலவகையான மெழுகு உருவங்கள் ஒவ்வொன்றும் அவரவர்களது நடை உடை பாவனைகளுடன், அந்தந்தச்



உல்லாச மோட்டார் படகு.



சூழ்நிலையில் தத்ரூபமாகக் காட்சியளிக்கின்றன. குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ள இந்த மியூசியத்திற்குள் செல்ல நுழைவுக் கட்டணம் உண்டு.

மெழுகு உருவங்களைக் கண்டு களித்துவிட்டு மியூசியத்தின் வெளியே வந்தவுடன் அதன் அருகேயுள்ள படிக்கட்டுகளின் வழியாக இறங்கிச் சென்றால் அழகாக வளைந்து வளைந்து பெரிய வாய்க்கால் போல் நீர் சுழித்து ஓடும் ஸான் அன் டோனியோ நதியைக் காணலாம். இந்நதியின் சிமெண்ட் பூசப்பட்ட அழகான இருகரைகளிலும் நந்தவனங்களும், சோலைகளும், அதன்நடுவே பலதரப்பட்ட உணவகங்கள், காபி, தேநீர்க்கடைகள், 'நைட் கிளப்'கள், ஞாபகார்த்தப் பொருள்களை விற்கும் கடைகள், ஆடை அணிகலன் அங்காடிகள் ஆகப் பலவிதக் கடைகள் இயங்குகின்றன. அவையாவும் வண்ண மிகு அலங்கார விளக்குகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுப் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும்படி அமைந்து சுற்றுலாப் பயணிகளைத் தம் வசம் ஈர்க்கின்றன. உணவகங்களிலும், "காபி ஷாப்"களிலும் வருபவர்களை மகிழ்விக்க ஆங்காங்கே வாத்ய இசைக்குழுவினரும், பிரபல கார்ட்டூன் திரைப்படக்கலைஞர் வால்ட் டிஸ்னியின் படைப்புகளின் முகமூடிகளையும், உடலணிகளையும் அணிந்து வாத்திய இசைக்குத் தகுந்தபடி ஆடிப் பயணிகளுடன் கைகோத்துக் கலந்து, குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை யாவரையும் மனம் மகிழச் செய்கின்றனர்.

இங்குள்ள "காஃபி ஷாப்" ஒன்றில் காபி, டீ பற்றிய பல சுவையான தகவல்களைச் சுவர்களில் எழுதி மாட்டியுள்ளனர். உதாரணமாக : ஸ்வீடன் நாட்டு மன்னர் 1800 ஆம் ஆண்டுகளை ஒட்டி ஒரு சமயம் கொலைக் குற்றத்துக்காக ஓர் இரட்டையருக்கு ஆயுள்தண்டனை விதித்திருந்தாராம். சிறையில் அவர்களில் ஒருவருக்குத் தினமும் காபியும், மற்றவர்க்கு டீயும் கொடுக்கப்பட்டு வந்ததாம். டீ குடித்து வந்தவர்தான் தமது 85ஆவது வயதில், முதலில் இறந்தாராம். அன்று முதல் ஸ்வீடன் நாட்டு மக்கள் காபியையே அதிகமாகக் குடித்து வருகின்றனராம்.

சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரம் வளைந்து வளைந்து செல்லும் இந்நதியின் கரையோரமாக நடந்து சென்றும், நதியில் உல்லாச மோட்டார்ப் படகுகளில் பிரயாணம் செய்தும் அழகான இப் பிராந்தியத்தைக் கண்டு களிக்கலாம். ஒரு மாளிகையின் பெரிய பால்கனி போன்று அமைந்து உட்கார வசதியான உல்லாச இருக்கைகளுடன் கூடிய இப்படகுகளில் ஐம்பது பேருக்கு மேல் பயணம் செய்ய முடியும். பயணிகளுக்கு நதிக் கரைக் காட்சிகளை விவரமாக எடுத்துச்சொல்ல கையில் 'மைக்' ஏந்திய 'கைடுகள்' இப்படகில் உள்ளனர்.

இந்த ரம்மியமான சூழ்நிலையில் சிற்றுண்டியும் காபியும் அருந்திவிட்டு ஸான் அன் டோனியோ நகரின் மற்றொரு முனையில் 250 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள ஸீ வேர்ல்ட் (கடல் உலகம்) என்ற மாபெரும் விளையாட்டு அரங்குக்குச் சுற்றுலாப் பயணிகளுடன் நானும் சென்றேன். இந்தக் கடல் உலகத்தில் ஓர் அரங்கில் கடல் நீர் நிரப்பப்பட்ட பெரிய நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ளது. உயரே வெளிர்நீல வண்ணக் கண்ணாடியினாலான கூரை. இக்குளத்தைச் சுற்றிலும் விளையாட்டு 'ஸ்டேடியம்' போன்று படிக்கட்டுகள் அமைந்து சுமார் 4500 பேர் உட்கார வசதியாக நாற்காலிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஒருபுறம் வாத்ய கோஷ்டியினர் மேற்கத்திய இசை முழங்குகின்றனர். இந்த இசைக் கேற்றபடி நீந்தி, நீர்மட்டத்தின் மேல் துள்ளிக் குதிக்கும் கதாநாயகர்கள் ஒரு சிறு திமிங்கிலக் குடும்பமாகும்.

இந்தத் திமிங்கிலக் காட்சி அரங்குக்கு வெளியே சிறிது தூரத்தில் நீண்ட வட்ட வடிவமான பெரிய ஏரி ஒன்று உள்ளது. அதில் மிதந்து ஓடும் மோட்டார் படகுகளுடன் கட்டப்பட்டுள்ள நீண்ட கயிறுகளைப் பிடித்துக்கொண்டு காலில் வாட்டர் ஸ்கீ பலகையைப் பொருத்திக்கொண்டு பின்னணியில் வாத்ய இசை முழங்க, ஆண்,பெண் விளையாட்டு வீரர்கள் அநாயாசமாக நீரின் மேல் சறுக்கிப் பல வீர விளையாட்டுகளைச் செய்கின்றனர்.

இந்த ஏரியையடுத்து வெளியே உள்ள சில அரங்குகளில் உள்ள குளங்களில் டால்ஃபின் என்ற கடல்மீன்களும், ஸீல், ஆட்டர் என்ற நீர்வாழ் மிருகங்களும், பெங்குவின் பறவைகளும் பின்னணி இசைக்குத் தகுந்தபடி தரையிலும் நீரிலும் நீந்தி பலவிதக் கதைகளை நடித்துக் காட்டுகின்றன.

இக்கடல் உலகத்திலுள்ள மற்றோர் அரங்கில் சர்க்கஸ் காட்சி நடைபெறுகிறது.

கொடாக், பெப்ஸிகோலா போன்ற நிறுவனங்களின் ஆதரவுடன் இக்கடல் உலகத்தில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் யாவும் நாள்முழுவதும் நடைபெற்று இரவு பத்துமணி சுமாருக்கு முடிவடைந்தவுடன் பலவித நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்ட வீரர், வீராங்கனைகளோ ஸீல் போன்ற மிருகங்களுடன் வாத்ய இசையுடன் ஊர்வலமாக நடனமாடிக் கடல் உலகத்தின் சாலைகளில் சுற்றி வருகின்றனர்.


பின்னர் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் முத்தாய்ப்பாக அங்குள்ள ஏரிக்கரையில் வானத்தில் நடனமாடுவதுபோலத் தோன்றும் இசையுடன் கட்டிய பலவித வாணவேடிக்கைகளும், அந்த இசைக்குத் தகுந்தபடி நீரூற்றுக் குழாய்கள் வாரி இறைக்கும் நீர்த்திவலைகள், வண்ணவிளக்குகளின் ஒளியில் துள்ளிக்குதித்து நடனமாடுவது போலக் காட்சியளிக்கின்றன.

இம்மாபெரும் கடல் உலகத்தின் அரங்குகள் ஒவ்வொன்றுக்கும் நடந்து செல்ல இயலாதவர்களுக்கு உதவியாக சக்கர நாற்காலிகள் வைக்கப்பட்டுள்ளன. சிறு குழந்தைகளைச் சுமந்து செல்ல டால்ஃபின் மீன் போன்று அமைந்த தள்ளு வண்டிகளும் இங்கு ஏராளமாக உள்ளன. இங்கு நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளுக்குமாக நுழைவுக்கட்டணம் பதினெட்டு டாலர்கள்தாம்.

புது டில்லியில் உள்ள வெஸ்ட் என்ட் பகுதியில் ஓர் ஓவியக் கண்காட்சி. இரண்டு நாட்கள் கண்களுக்கு விருந்து. கடந்த ஆகஸ்ட் மாதம் இந்த ஓவியக் கண்காட்சிக்கு ஆயிரக் கணக்கான பார்வையாளர்கள் வந்திருந்து கண்டு களித்தனர்.

ஓவியர் - தமிழர் - திருமதி ஜெயா சந்திரசேகரன்.

தஞ்சாவூர் பாணி ஓவியத்தில் ஒரு புதுமையைப் புகுத்தி அதனைப் பலர் பார்வைக்கு வைத்துப் பாராட்டும் பெற்றிருக்கிறார் அவர். அத்தகைய ஓவியத்தில் தொழில் நுணுக்கம்தான் இதுவரை அதிகமாகப் புகழ் பெற்றிருக்கிறது. அதாவது, உலோகத் தகடுகள், சிறு கம்பிகள், முதலானவற்றைக் கொடுத்து உருக்கொடுக்கப்படும் உத்தி அதில் உண்டு. ஆனால் அதிலும் கலை நுணுக்கமும், இயல்பான ஓவிய அழகோடு 'பாவ'ங்களுக்கு முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டிருப்பதுதான் ஜெயாவின் தனிச் சிறப்பு.




புது டில்லி அத்தகைய ஓவியர்களின் சிறு சிறு அளவினதான படங்களைப் பார்த்து அதிசயித்தது. அதுவே, ஜெயா சமீபத்தில் செய்து முடித்திருந்த மிகப்பெரிய ராமாயண ஓவியத்தைப் பார்த்தால், திறந்த வாய் மூடியிருக்காது. நாலரை அடிக்கு நாலடி பரிமாணத்தில் ராமாயணத்தின் முக்கியமான 24 காட்சிகளுக்கு அவர் உயிர் கொடுத்திருக்கிறார்.

அவருக்கு ஒன்பது வயதாக இருக்கும்போது சென்னை பெரம்பூரில் 'காந்தி மகான் கதை' சொல்ல வந்தார் கொத்தமங்கலம் சுப்பு. அவர் கதை சொல்லிக்



ஓர் ஓவியரின் சமூகப்பணி

திருமதி ஜெயா சந்திரசேகர்





கொண்டிருக்கும்போதே, அவரை 'அப்படியே ஓவியமாக, ஒரு காகிதத்தில், பென்ஸிலால் வரைந்தார். கதை முடித்த அவரிடம் அந்த ஓவியத்தை ஜெயா காண்பித்த போது அவர் அப்படியே நெகிழ்ந்து போனார். சிறுமியின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டார். எப்பேர்ப்பட்ட ஆசீர்வாதம்!

பன்னிரண்டாவது வயதில், கிருஷ்ண பரமாத்மா கீதைப் புத்தகத்தை மூதறிஞர் ராஜாஜி அவர்களிடம் கொடுப்பதுபோல ஓர் ஓவியம் வரைந்து அவருக்கே அனுப்பி வைத்தார் ஜெயா. அப்போது ராஜாஜி அவர்கள் 'வியாசர் விருந்து' எழுதி முடித்து, புத்தகம் வெளியான சமயம். ஜெயா அனுப்பிய ஓவியத்தைப் பார்த்துப் பரவசப்பட்ட மூதறிஞர் நன்றியையும் பாராட்டையும் கடிதம் மூலமாகத் தெரிவித்தார்.

மனிதருள் மாணிக்கம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடன் ஜான்ஸி ராணியையும் இணைத்து ஓர் ஓவியம் வரைந்து அவருக்கே அனுப்பி வைத்தார் ஜெயா. இதற்கு ஒரு பாராட்டுக் கடிதம் அனுப்பியிருந்தார் நேரு அவர்கள். "இதில் சிறப்பு என்னவென்றால் கடித உறையில் தவறாக டைப் செய்யப்பட்டிருந்த என் முகவரியைத் தன் கைப்பட அவர் திருத்தியிருந்ததுதான்!" என்று பெருமையாகச் சொன்னதோடு அந்தக் கடிதம், உறையையும் காண்பித்தார் ஜெயா.

சங்கர்ஸ் வீக்லி பத்திரிகை சிறுவர்களுக்கான ஓவியப் போட்டி ஒன்றை சென்னையில் நடத்தியது. அறுநூறு சிறுவர்கள் பங்கேற்றனர். அவர்களில் ஜெயாவும் ஒருவர். அழைத்துச் சென்ற பாட்டி, 'உனக்கு பிரைஸ் கெடைக்குமா?' என்று சந்தேகத்தோடு கேட்டார். 'கிடைக்கும்' என்று தீர்மானமாகப் பதிலளித்தார் ஜெயா. ஆனாலும் கூட்ட அலையுடன், லேசான அவநம்பிக்கையும் தலை தூக்கவே கொஞ்சம் கொஞ்சமாக ஓவியப் போட்டி அரங்கத்தை விட்டு வெளியேறி வாசலில் போய் நின்று கொண்டார்.

முடிவுகள் வெளியாயின. அப்போதே தலைப்புக் கொடுத்து வரையும் ஓவியப் போட்டிக்கு

அப்போதே பரிசறிவிப்பு! "எனக்கு முதல் பரிசு! அவ்வளவு தான். உடனே அந்த வெள்ளத்தில் நீந்தி மேடையருகே போனேன். அங்கே முதலமைச்சர் காமராஜர் அவர்களிடம் பரிசை வாங்கினேன். அப்பப்பா! எவ்வளவு பெருமையாக இருந்தது!" என்று நினைவு கூர்கிறார் ஜெயா.

எதிராஜ் கல்லூரியில் இவர் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தபோது, கல்லூரிக்கு முக்கிய விருந்தினர்கள் வந்தால் அவர்களை 'ரங்கோலி' வண்ணக் கோலம் வரவேற்கும். அந்தக் கோலத்தை உருவாக்கியவர் ஜெயா தான். அவருடைய பேராசிரியை திருமதி சுசீல் சந்தர் மற்றும் கல்லூரி முதல்வர் மிஸ் மாத்யூஸ் இருவரும் தங்கள் மாணவி ஜெயாவை விருந்தினர்களுக்கு அறிமுகப்படுத்திப் பெருமைப் பட்டுக் கொள்வார்கள்.

பொதுவாகவே பெண்களுக்கு அவர்களுடைய லலித கலைகளுக்குத் திருமணம் ஒரு முற்றுப் புள்ளியாக அமைந்து விடும். ஆனால் ஜெயாவின் வாழ்வில் முற்றுப்புள்ளி, கமாவாகி, இன்றும் அவர் ஆற்றல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. கணவர் திரு சந்திரசேகர், பாரி நிறுவனத்தில் பொது மேலாளராகப் பணியாற்றுகிறார். அவர் தரும் ஆதரவு, மனைவிக்கு வெறுமே ஓவியக் கலையில் ஈடுபட உபகரணங்கள் வாங்கிக் கொடுப்பதோடு நின்று விடவில்லை; அந்த ஓவியங்களைக் கண்காட்சியாக அமைத்துப் பலரும் பாராட்டும் வண்ணம் ஏற்பாடுகளும் செய்து உதவுகிறார்.

சென்னையில் மட்டுமின்றி, வேலை இடம் மாற்றம் காரணமாக ராஜஸ்தான், கல்கத்தா போன்ற இடங்களுக்குச் சென்ற போதும் அங்கும் அவர் ஓவியப் புகழை ஓங்கச் செய்தார் சந்திரசேகரன். தான் பணிபுரியும் நிறுவனத்தின் மனமகிழ் மன்றம், மற்றும் கலாசார நிகழ்ச்சிகளில் ஜெயாவின் ஓவியத் திறமை பளிச்சிடச் செய்தார்.

சாக்பீஸில் உருவங்களைச் செதுக்கி, அவற்றிற்கு வண்ணம் தீட்டுவது, தூரிகை ஓவியம் வரைவது, கைவினைப் பொருட்களைச் செய்வது என்று பல




நுண்கலைகளில் பெரும் தேர்ச்சியும் பாராட்டும் பெற்று வந்த ஜெயா, சென்னைக்குத் திரும்பியதும் தஞ்சாவூர் பாணி ஓவியத்தில் நாட்டம் கொண்டார்.

காஞ்சி முனிவரைத் தன் தெய்வமாக எண்ணி வழிபடும் ஜெயா, தான் துணியில் வரைந்த தஞ்சாவூர் ஓவியத்தை அவரிடமே எடுத்துச் சென்று காண்பித்து, தன் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். அந்த ஓவியத் துணியைத் (படிக் முறையில் வரையப்பட்டது) தன் மீது அப்படியே போர்த்திக் கொண்டார், பெரியவர். "அந்தப் பாராட்டைவிட வேறு என்ன பாக்கியம் எனக்கு வேண்டும்?" கண்களில் நீர் மல்க, உடலே சிலிர்க்கக் கூறினார் ஜெயா. அந்த ஓவியத்தின் வண்ணக் கலவை முறையைப் பற்றிக் கேட்டார் மாமுனி. வேதியல் பொறியாளரான கணவர் சந்திரசேகரன், அந்த முறையை விளக்கிச் சொல்ல, மிகுந்த ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டார் அந்தப் பெருந்தகை!

தஞ்சாவூர் பாணி ஓவியம் வரைந்து மரச் சட்டங்களுக்குள் பொருத்தி அழகுக்கு அழகு செய்து, கண்காட்சியாக வைத்த போது அந்த ஓவியங்களை விலைக்கு வாங்கிக் கொள்ளப் பலர் முன் வந்தனர். உடனே ஜெயாவுக்கும் அவர் கணவருக்கும் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. 'பாராட்டும், புகழுரைகளும் சம்பாதிப்பது ஒரு பக்கம் இருக்கலாம்; இந்த ஓவியங்களை விற்பதனால் வரக் கூடிய தொகையை அப்படியே ஏன் தர்மகாரியங்களுக்குப் பயன் படுத்தக் கூடாது?'

உடனே காஞ்சிப் பெரியவர் ஜெயேந்திரரிடம் போய்த் தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தனர்



தம்பதியர். பெரியவர் அந்தக் கணமே ஆசீர்வாதம் வழங்கினார்.

அடுத்தடுத்து பல இடங்களில் ஜெயாவின் தஞ்சாவூர் பாணி ஓவியங்கள் கண்காட்சிகளாகப் பலர் கண்ணையும், கருத்தையும் கவர்ந்தன. ஸி.பி.ஆர். ஆர்ட் சென்டர், லலித கலா அகாடமி, சோழா ஷெராட்டன் (கலை நிபுணர் தோட்டா தரணியின் படைப்புகளுடன் இணைத்து இவர் ஓவியங்களும்), கர்நாடகாவிலுள்ள கர்நாடகா சித்ரகலா பரிஷத் புதுடில்லியில் அகில இந்திய நுண்கலை மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சி என்று இந்தியாவின் பல பாகங்களிலும் இவரது ஓவியங்கள் சிறப்புப் பெற்றுள்ளன.

காஞ்சிப் பெரியவர் ஜெயேந்திரரின் 'திருமாங்கல்யம் பேங்க்'குக்கு முதல் சுற்றாக 108 மாங்கல்ய தானம் செய்திருக்கிறார் ஜெயா. தம் ஓவியம் விற்றுக் கிடைத்த பணத்தை அப்படியே தர்ம காரியங்களுக்குச் செலவிட வேண்டும் என்ற உயரிய நோக்கம் தான் காரணம்.

"ரவி என்ற ஓவியக் கலைஞரிடம் இந்தத் தஞ்சாவூர் பாணி ஓவியத்தை நான் கற்றுக் கொண்டேன். இதே மாதிரி ஓவியக் கலைஞராகத் திகழும் திருமதி. சீதா சுப்பைய்யா அவர்களைப் பின்பற்றி ஆரம்பத்தில் சமூக சேவை இல்லங்களுக்குப் பண உதவி செய்தேன்".

இவருடைய சமீபத்திய படைப்பு - ராமாயணம். ஒருவருடமாக இந்த ஓவியத்தை நுணுக்கமாகத் தயாரித்திருக்கிறார். எத்தனையோ புத்தகங்கள், பெரியவர்களின் அறிவுரைகள், இந்த ஒரு பிரம்மாண்டமான ஓவியத்தைப் படைக்க இவருக்கு உதவியிருக்கின்றன. கர்நாடகத்தில் 'கணபத்யம்' டில்லியில் 'சக்தி தத்துவம்' மற்றும் 'ஊர்த்வ தாண்டவம்' முதலிய ஓவியங்கள் பரிசுகள் பெற்றிருக்கின்றன.

திருமதி ஜெயா சந்திரசேகரனின் ஓவியத் திறன் பார் அனைத்தும் போற்றும் நாள் வெகு தொலைவில் இல்லை. ⁂

படங்கள், பேட்டி : பிரபு சங்கர்

எதிரே: ராமாயணம் - தஞ்சாவூர் ஓவியம்

சமத்துவம்

பச்சைமால்

சமத்துவம்தான் சரித்திரத்தை இனிப டைக்கும்
சரித்திரம்தான் தலைமுறைக்குப் பாட மாகும்
அமைத்திடுவோம் சமத்துவத்தை என்று நாளும்
அறைகூவி அறைகூவி அலுத்து விட்டோம்
நமைநாமே சமத்துவத்தின் பங்காய்ச் செய்ய
சம்மதிக்க வில்லை யன்றோ? ஊராருக்கு
உபதேசம் செய்தென்ன பயன்வி ளையும்?
கல்வெந்து சோறாகும் காலம் உண்டோ?

உழைப்பவர்கள் எல்லாரும் ஏழை! உண்டு
கொழுப்பவர்கள் எல்லாரும் மேலோர் என்றால்
உழைப்பவர் யார்? தாய்மண்ணில் உயர்வு ஏது?
ஒப்பற்ற புதியயுகத் தோற்றம் ஏது?
உழைப்பவர்கள் வாழ்வினிலே உயர வேண்டும்
பொருளியலில் சமத்துவமே நிலவ வேண்டும்
அழைப்போம்நாம் வாழ்வியலில் சமத்து வத்தை
அதற்காகப் போராட அணிவ குப்போம்!

ஆணுக்குப் பெண்சமமாய் ஆக வில்லை
ஆக்கவில்லை ஆடவர்கள்! சுயந லத்தால்
வீணுக்கு வாய்பேசி அலுத்து விட்டோம்
வீட்டினிலே மாதர்தம்மைச் சிறையில் வைத்தோம்
காணுங்கள் வளர்ந்துவிட்ட தேச மெல்லாம்
கன்னியர்கள் விடுதலையால் வாழ்வு பெற்றார்...
நாணமில்லை நம்மவர்க்கு! நாட்டு யர்வு
நங்கையரின் உயர்வில்தான் முளைக்கும் பூக்கும்.

கதைகளிலே கவிதையிலே நாட கத்தில்
கவினூறும் தொலைக்காட்சிச் சாத னத்தில்
விதையாகக் காற்றில் வரும் வானொலியில்
விரைவாக மனங்கொள்ளும் திரைப்ப டத்தில்
உரைநடையில் உள்ளத்தைக் களவு செய்ய
ஒங்கிவரும் தெம்மாங்குப் பாட்டில் இந்தப்
புதுயுகத்தின் வித்துகளைத் தூவ வேண்டும்
பொற்காலம் மீண்டுமிங்கு தோன்றும் தோன்றும்!



★ பதினெட்டு திருக்கைகளுடன் ஊர்த்துவ தாண்டவர்

புதிய பார்வையில் சாரங்கபாணி கரணங்கள்

டாக்டர் இரா. கலைக்கோவன்

தஞ்சை, தில்லை, திருவண்ணாமலை, விருத்தாசலம் என்ற நான்கு பெரும் கோயில்களில் கரண வரிசைகளைக் காண முடிந்தாலும் அங்கெல்லாம் இல்லாத சிறப்புகள் பல சார்ங்கபாணி கரணங்களுக்குண்டு. தஞ்சையில் விமான உட்சுவரில் சிவபெருமான் ஆட, மற்ற மூன்று கோயில்களிலும் கோபுர உட்சுவரில் மகளிரின் கரணம். இங்கோ அழகாய்ப் புனைந்து, அவிநயம் காட்டி கரணம் நிகழ்த்துபவர் ஆடவர் வாரிசு. இவரைச் சிவபெருமான் என்றும், கண்ண பெருமான் என்றும் அறிஞர்கள் சிலர் அடையாளம் காட்டுகின்றனர். அதன் உண்மையை அறியும் முன் சார்ங்கபாணி கரணங்களை அறிமுகப் படுத்திக் கொள்வோம்.

சார்ங்கபாணி கோயில் நுழைவுக் கோபுரம் கபோதபந்த அதிட்டான வகையைச் சேர்ந்தது. துணைத் தளங்களின் மேல் எழுந்து நிற்கும் தாங்குத்தளத்தின் பட்டிகைக்கு மேலாக அரைத் தூண்களுக்கு இடையில் அழகாய்ப் பதிக்கப்பட்டுள்ள கரணச் சிற்பங்கள் இக்கோயிலைச் சேர்ந்தவையல்ல.

அழிந்துபோன கோயிலொன்றின் கலை வரலாற்று எச்சங்களாய்க் கோபுரக் கட்டுமானப் பணியின்போது பயன்படுத்திக் கொள்ளப்பட்டவை. பதிக்கப்பட்டுள்ள முறையும், எண் வரிசைகளும் மாறுபட்டிருக்கும் விதமும், சிற்ப அமைப்பும், அவற்றின் கீழிருக்கும் கிரந்த எழுத்தமைப்பின் காலமும், இவற்றுள் சிதறிய இரண்டு சிற்பங்கள் கும்பேசுவரர் கோயிலில் காணப்படும் அதிசயமும் இந்தக் கருத்துக்கு வலிவூட்டும் சான்றுகள். கோபுரக் கட்டுமானக் கலை முறையில் இருந்து பெரிதும் மாறுபட்டிருக்கும் இக்கரணச் சிற்பங்கள் முதலாம் இராசராசன் காலத்திற்கோ அல்லது அவருக்குச் சற்று பிற்பட்ட காலத்திற்கோ உரியவை என்பதை இவற்றின் சிற்ப அமைதியில் இருந்தும், இவற்றின் கீழுள்ள கிரந்தக்



★ கரணச் சிற்பம்





கல்வெட்டுகளின் எழுத்தமைப்பில் இருந்தும் தெளிவாய் உணரலாம்.

கோபுரத்தின் நான்கு திசைகளிலும் இக்கரணச் சிற்பங்கள்



பதிக்கப்பெற்றுள்ளன. கோபுரத்தின் வட, தென் பகுதிகள் மதில் சுவரால் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கிழக்குப் பட்டிகைக்கு மேல் நாற்பத்து நான்கு சிற்பங்களும், மேற்குப் பட்டிகைக்கு மேல் முப்பத்தெட்டு சிற்பங்களும் உள்ளன. தெற்கில் மதில் சுவருக்குக் கிழக்கே ஐந்து சிற்பங்களும், மேற்கில் பத்து சிற்பங்களும் இருக்க, வடக்கில் மதில் சுவருக்குக் கிழக்கே ஒன்பது சிற்பங்கள் உள்ளன. வடமேற்குப் பகுதி சிற்பங்கள் இன்றி வெறுமையாக உள்ளது. இந்த நூற்றி ஆறு சிற்பங்களுள் ஐந்து சிற்பங்கள் தவிர பிற, கரணச் சிற்பங்களாகவே தோன்றுகின்றன. சிவபெருமானின் ஊர்த்வ தாண்டவம், காளியின் தாண்டவம், சூத்ரதாரணம், தனிப்பூதம், ஒரு முதிய முனிவரும் இரண்டு இளைஞர்களுமாய் நிற்கும் தொகுதி என்னும் இந்த ஐந்து சிற்பங்களுள் இரண்டு கிழக்கிலும், இரண்டு மேற்கிலும், ஒன்று தென்கிழக்கிலும் உள்ளன. இவை தவிர்ந்த ஏனைய நூற்றியொரு சிற்பங்களுள் 96 சிற்பங்களையே கரண வகையின என்று டாக்டர் கபில வாத்ஸ்யாயனாவும், திரு. சிவராமமூர்த்தியும் தத்தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். ஐந்து சிற்பங்களை ஏன் கரண வகையினவாய் இவர்கள் கொள்ளவில்லை என்பதற்கு இரண்டு



அறிஞர்களுமே காரணங்கள் தரவில்லை.

இந்தச் சிற்பங்களுள் நான்கு தவிர ஏனைய நூற்றி இரண்டும் தனித்தனிப் பலகைகளில் செதுக்கப்பட்டுள்ளன. இப்படித் தனித் தனியாகச் செதுக்கப்பட்டவை சார்ங்கபாணி கோபுரத்தில் பதிக்கப்பெற்றபோது தனித்தும், சேர்த்தும் பொருத்தப்பட்டுள்ளன. நாற்பத்தைந்து சிற்பங்கள் தனித்தும், முப்பது சிற்பங்கள் இரண்டிரண்டாகவும், இருபத்தேழு சிற்பங்கள் மும்மூன்றாகவும் பதிக்கப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த நான்கு சிற்பங்கள் செதுக்கப்பட்ட காலத்திலேயே இரண்டிரண்டாக, இரண்டு தனிக் கற்பலகைகளில் செதுக்கப்பட்டுள்ளன. இந்த நூற்றி ஆறு சிற்பங்களுள் எட்டு மட்டும் சிதைந்துள்ளன. ஆனால் கரணத்தைக் குறிக்கும் கிரந்தக் கல்வெட்டு பல சிற்பங்களின் கீழ் அழிந்துள்ளது. இச்சிற்பங்களுள் ஒவ்வொன்றும் சராசரியாக 43-50 செ.மீ. அகலமும், 44-45 செ.மீ. உயரமும் உள்ளவை.

ஆடல் மேடையொன்றில் ஆடல் நிகழ்வது போலவே சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. ஆடுபவரின் பின்புறம் அரங்கத்தின் பின் திரையாய் சிற்பம் வடிக்கப்பட்ட பலகை இருக்க, அதன் மேற்புறம், திரையின் மேல் வளைவுகளாய் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பூச்சரங்கள் தொங்கும் மடிப்புகள் போல இந்த வளைவுகள் அழகுபடுத்தப்பட்டுள்ளன. ஆடலுக்குத் தேவையான இசையைத் தர பெரும்பாலான சிற்பங்களுடன் இரண்டு இசைவல்லாரும், சில சிற்பங்களுடன் ஓர் இசைக்கலைஞரும் காட்டப்பட்டுள்ளனர். பதினொரு சிற்பங்களுக்கே இசை கூட்ட யாருமே இல்லாத நிலை. இந்த இசைவாணர்கள் குள்ளச் சிறு பூதகணங்களாய்க் காட்டப்பட்டுள்ளனர். நான்கு இடங்களில் வேறுபட்ட வடிவங்களைப் பார்க்க முடிகிறது. நந்திகேசுவரரும் சிங்கமுகக் கணமொன்றும் வடமேற்கில் விளங்க, குரங்குமுகக் கணமொன்றும், சிங்கமுகக் கணமொன்றும் கிழக்கில் காணப்படுகின்றன.

இசைவாணர்கள் பொதுவாகப் பருத்த வயிறும், பிதுங்கிய விழிகளுமாய்ப் பனையோலைக் குண்



★ கரணச் சிற்பம்

டலங்களுடன் காட்டப்பட்டுள்ளனர். அரையாடை அனைவர்க்கும் உள்ளது. பெரும்பாலோர் நின்ற வண்ணமிருக்க, ஒரு சிலர் சாய்ந்தும், சரிந்தும், குனிந்தும், வளைந்தும் இசையெழுப்பக் காணலாம். மிகச் சிலர் இளைத்த வடிவினராய்ச் சிறு பிள்ளைகள் போல் காட்சி தருகின்றனர். பதித்தலில் நேர்ந்த தவறால் சில வடிவங்கள் சிதைந்து போயுள் ளன. சடாபாரம், சடா மண்டலம், சடாமகுடம் எனப் பல்வகைத் தலையமைப்புகள். ஒரு சில கணங்கள் ஆடுபவரைவிட அதிக மான மெய்ப்பாடுகளைக் காட்டி நம்மை மயக்கத்தில் ஆழ்த்து கின்றன. குறைந்த அணிகளும் உதரபந்தமும் சில வடிவங்க ளுக்கு உள்ளன. வடகிழக்குப் பூத மொன்று சன்ன வீரத்தோடு புன்னகை புரிய, அதே திரையி லுள்ள மற்றொன்று முப்புரி நூலோடு மகிழ்ந்து நிற்கிறது.

மேற்கில் நுழைவாயிலுக்கு அருகில் தனிப்பூத கணமொன்று காட்டப்பட்டுள்ளது. கைகளில் செண்டு தாளம். யாருக்கு வாசிக் கிறது என்பது நமக்குப் புரிந் தாலும் தனிப் பலகையில், தனித்தவொரு சிற்பமாய் இடம் பெற இப்பூதகணம் செய்த பேறு தான் நமக்கு விளங்கவில்லை. ஆனால் அதன் அழகைப் பார்க்கும் போது, அதுவும் காலை வெயிலின் கதிர்கள் பட்டு, அது மின்னும் போது, அதன் தனித்துவம் உள் ளங்கைக் கனியாய் உள்ளத்தில் பதிகிறது. எத்தனை அழகாய் உதடுகள்! எத்தனை இதமான சிரிப்பு! கால்களின் வளைவுகளில் 'எனக்கும் ஆடத்தெரியும்' என்ற அறிவிப்பு. கன்னக் கதுப்புகள் கடித்து விடலாமா என்று துடிக்க வைக்கின்றன. பூதகணத்தைக்கூட இத்தனை அழகாய் ஒருவர் வடிக்க முடியுமா? கழுகுமலைக் கணங்களையும், கயிலாசநாதர் கணங்களையும் சிற்பச் செறிவில் போட்டிக்கு அழைக்கும் பொல் லாத கல்பகக் கணம் இது.

இந்த இசைவாணர்களுள் பெரும்பாலோர் வகைவகையான முழவுகள், இடக்கை போன்ற தோற்கருவிகளையும், பல்வகைத் தாளங்களையும் இயக்கி ஆட லுக்குத் தாளம் தர, ஒரு சிலர் வீணையும், சங்கும் கொண்டு இசையெழுப்புகின்றனர். வீணை யேந்திய ஐவருள், நால்வர் வலப்புற இசைவாணர்களாக வும், ஒருவர் மட்டும் இடப்புற இசைவாணராகவும் இருக்க, நந்திகேசுவரர் ஐமுகக் குட முழவை நின்றபடி இயங்கிக் மகிழ்கிறார். மற்றோர் இடத்தில் புல்லாங்குழலின் நாதவெள்ளம்! ஒரு சில இசைவாணர்கள் இந் நாளைய இசை இயக்குநர்கள் போலக் கருவிகள் இன்றிக் கைகளை வெறுமனே உயர்த்திப் போற்றி மெய்ப்பாட்டில், இசை இயக்கம் செய்து காட்டுகின்றனர்.



கரணம் காட்டும் ஆடவர் வடிவத்தின் உயரம் பெரும்பாலும் அனைத்துச் சிற்பங்களிலும் 39 செ.மீ. –41 செ.மீ அளவுக்குள் அமைந்துள்ளது. சடாமகுடத்துடன் காணப்படும் இந்தக் கரணரை மகுடப் பூரிமம், மகர குண்ட லங்கள், வாகுவளையம், கண் டிகை, சரப்பளி, வீரச்சங்கிலி, தோள்வளை, கைவளைகள், சிங்க முக அரைக் கச்சு, குறங்கு செறி, தாள் செறி, நூபுரம், சிலம்பு, வீரக்கழல் எனப் பட்டியலாய் நீளும் அணிகளுள் பெரும்பான் மையன அழகு செய்கின்றன. வீரச் சங்கிலி ஒன்றையொன்று எதிர் கொள்ளும் இடத்தில் முதுகுப் புறத்தே அமையும் தூக்கம் என்னும் பதக்க வடிவம் சில சிற்பங்களில் மிக அழகாகக் காட்டப்பட்டுள்ளது. சில கரங்கள் உதரபந்தம் கொண்டிருக்க, ஒரே ஒரு கரணர் மட்டும் முப்புரி நூலராய்க் காட்சியளிக்கிறார். சில கரணர்கள், அசைவுகளுக் கேற்பச் சரிந்தும், பரந்தும், காணப்படும் மாலைகளுடன் காணப்படுகின்றன.

இரு பிரிவுகளாய் மகுடத்தின் கீழப் பிரிந்து தோள்களைத் தழுவிப் பக்கவாட்டில் கைப் புறத்தே சரிந்து தொங்கும் ஸ்கந்த மாலையின் அழகு சில சிற்பங் களில் கண் கொள்ளாக் காட்சியாய் அமைந்துள்ளது. இந்த மாலைச் சரிவுகளில் பல்வேறு பூக்களைத் தொகுத்தும், பொருத்தியும் சிற்பி கள் கூட்டியுள்ள அழகுப் பொலிவு

★ கரண ஆய்வில் கட்டுரையாசிரியர்

சொல்லுந்தரமன்று. பார்வையுள்ளோர் பார்த்துப் பார்த்துப் பூரிக்க வேண்டிய நுணுக்கமான அழகு இவை.

இக்கரணச் சிற்பங்களின் இடையாடை மிகுந்த கலை நயத்தோடு செதுக்கப்பட்டுள்ளது. பக்கவாட்டு முடிச்சுகள் சோழர் கலை முறைக்கே உரிய நளினச் செறிவுடன் காட்டப்பட, இடைத் தொங்கல்கள் பூவிரியாய் இறங்கி ஆடுவார் தம் அழகுக்கு அழகூட்டி அசையும் பாங்கில் ஆட்ட விரைவை எடுத்துரைக்கின்றன.


கரணங்களில் முக்கியமானவை மூன்று. ஒன்று காலசைவு. மற்றொன்று கையசைவு. மூன்றாவது உடல்நிலை. பரதரின் அட்டவணைப்படி காலசைவுகள் விண் சார்ந்தவை, மண் சார்ந்தவை என்று பிரியும். சாரங்கபாணி சிற்பங்களில் பார்வையாளர் தொகுதி மற்றும் தனிப் பூதகணம் தவிர்ந்த ஏனைய நூற்றி நான்கில் அறுபத்தெட்டு மண் கால்கள் காட்ட, முப்பத்தாறு விண் கால்கள் காட்டுகின்றன. பெரும்பாலான சிற்பங்கள் முன்புறம் காட்டிக் கரணம் நிகழ்த்த சில பக்க வாட்டைக் காட்டியும், சில பின்புறம் திரும்பியும் கரணம் காட்டுகின்றன.

இந்தக் கரணச் சிற்பங்கள் மிக அற்புதமாக வடிக்கப்பட்டுள்ளன. புன்னகை மாறாத இளம் உதடுகள், உருண்டை முகம், எடுப்பான நாசி, வில்லைப்போல் புருவங்கள், அழகாய்க் கண்கள், திரண்ட தோள்கள், பரந்த மார்பு, சரியான அளவில் இடையும் பின்புறமும், ஆடலில் உரமேறிய கால்கள் என அழகாய் அமையாத உடற்பகுதியே இல்லை என்னுமளவுக்குத் தேர்ந்த சிற்பிகளால் இவ்வடிவங்கள் தெரிந்து செய்யப்பட்டுள்ளன. சூசி, அக்ரதலசஞ்சாரம், அஞ்சிதம், உத்கட்டிதம், குஞ்சிதம் போன்ற பாத அமைப்புகள் இச்சிற்பங்களில் காட்டப்பட்டிருப்பது போல் தஞ்சையிலோ தில்லையிலோகூடக் காட்டப்படவில்லையென்றால், அது மிகையாகாது. தமிழகத்தில் உள்ள ஐந்து கரணக் கோயில்களில் அழகு, அங்கசுத்தம், கரணக்கோலம் இவற்றைக் கொண்டு பார்த்தால் சாரங்கபாணி சிற்பங்களுக்கே முதலிடம் தரவேண்டியிருக்கும்.

இங்குள்ள சிவபெருமானின் ஊர்த்வ தாண்டவச் சிற்பம் தன்னிகரில்லாத கலைப்புதையலாகும். இதை லலாட திலகமென்று சில அறிஞர்களும், காளிகா ஊர்த்வ தாண்டவமென்று டாக்டர் பத்மா சுப்ரமணியமும் தத்தம் நூல்களில் தவறாகக் குறித்துள்ளனர். பதினெட்டுக் கைகளுடன் ஊர்த்வ தாண்டவமாடும் சிவபெருமானை வலப்புறத்தே விஷ்ணுவும் நான்முகனும் வணங்கி வழிபடுகின்றனர்.

இந்தக் கரணச் சிற்பங்களுள் சிலவற்றின் பக்கத்தில் உள்ள அரைத்தூண்கள் சற்றே பெரிய அளவினவாய் அமைந்து, சிற்பிகள் தம் கைவண்ணம் காட்டிட இடம் தந்துள்ளன. சிவபெருமானின் பல்வேறு தோற்றங்களே பெரும்பாலான தூண்களில் இடம் பெற்றுள்ளன. பிச்சையேற்கும் பெம்மான், உமையை அணைத்தவர், உமா சிவர், ஆலமர் அண்ணல், நந்தி அண்மையர், யானையை அழித்தவர், கிரதார்ச்சுனர் எனப் பல தோற்றங்கள். பிச்சையேற்றவர் கோலமும், வீராசன ஆலமர்க் கோலமும் கண்ணில் நிற்கும் கவிதைகள். சில தூண்கள் ஆடற் சிற்பங்களைக் கொண்டுள்ளன. ஒரு தூணில் யானையொன்றின் மீது சிங்கம் பாய்ந்து கடித்துக் குதறும் காட்டுக் காட்சி. இந்தச் சிங்கத்தின் தோற்றம் தஞ்சை ராஜராஜீசுவரத்து இராசராசன் திருவாசலின் கிழக்கு முகச் சிற்பத் தொகுதியிலுள்ள சிங்கத்தின் தோற்றத்தை ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது. பிள்ளையாரும் யானைத் திருமகளும்கூட தூண் சிற்பங்களாய் இடம் பெற்றுள்ளனர்.

அமைப்பு முறை, இலக்கணக் கோட்பாட்டை அதிகம் மீறாத ஆடல் அசைவுகள், மெய்ப்பாட்டு முத்தாய்ப்பாய் முகத்தோற்றங்கள் என்ற இம்மூன்று சிறப்புகளாலும் சாரங்கபாணி கரணச் சிற்பங்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள கரண வரிசை சிற்பத் தொகுதிகளில் முதலிடத்தைப் பெறுகின்றன. இதைவிடப் பெரும் சிறப்பு இங்கு ஆடல் நிகழ்த்துபவராலும், அதைக் கண்டு நிற்பவராலும் இக்கோயில் வரிசைக்குக் கிடைத்துள்ளது.



போட்டோ: பணால் ஸ்.ராஜாராம் தஞ்சாவூர்

விரிந்து கிடக்குது உலகம்


வாருங்கள்!
உலகம் தன் கைகளை
விரித்துக்கிடக்கிறது…

இளைஞர்களே
நீங்கள்
சலவை செய்யவேண்டியது
சட்டையை மட்டுமல்ல
அறிவையுந்தான்…

போட்டும் முளைக்காத
விதைகளைப
பொறுக்காதீர்கள்
பதிய விதைகளைப்
போடுங்கள்…

நீங்கள் விரயமாக்கும்
நேரமும் வீரமும்
உங்கள் தலைவிதியை
மட்டுமல்ல
உலகத் தலைவிதியையே
மாற்றி விடுகிறது…

நீங்கள்
கண்ணாடிக்கு முன்
நிற்கும் நேரத்தை
கணக்கிட்டுப் பார்த்தால்
அதனுள் ஓர்
அணைகட்டும் நேரமே
அடங்கி இருக்கிறது…



நீலம் மதுமயன்

வாருங்கள்
உங்கள் ஆசைகளை
இளைப்பாற விட்டுவிட்டு
அவனியை வந்து பாருங்கள்...
சாப விமோசனங்கள்
இல்லை என்பதால்
அகலிகைக்குப் பின்
ஆளே இல்லை
என்றல்ல அர்த்தம் –
இராமர்கள் இல்லை...

மனுநீதிக் குறைவது
நீதி வழங்குபவர்கள்
இல்லை என்பதால் அல்ல
மணியடிக்கும்
பசுக்கள் இல்லாததால்...

போர்க்களத்தில்
புறமுதுகிட்டானோ என
புரட்டிப் பார்த்த வீரத்தாய்
இன்றும் இருக்கிறாள்...
ஆனால்
படுக்கையில் இருந்தல்லவா
அவனை
புரட்டி எழுப்புகின்றாள்...

வாருங்கள் இளைஞர்களே
உலகம் தன் கைகளை
விரித்துக் கிடக்கிறது.

திரு. சிவராமமூர்த்தி நடராசரைப் பற்றிய தன்னுடைய மிகப்பெரும் நூலில் சார்ங்கபாணி கரணங்களைக் கண்ணன் நிகழ்த்துவதாக எழுதித் தம் கூற்றுக்குச் சான்றாகக் குடந்தைக் கரணச் சிற்பங்களில் காணப்படும் வனமாலை போன்ற மாலையையும், மார்பணி ஒன்றையும் கட்டுகிறார். இந்த மார்பணியை அவர் சுவர்ண வைகாக்ஷகம் என்று குறிப்பிட்டு, இது இளவயதின் அணியென்றும், இது பாலசுப்ரமணியர், கிருஷ்ணர் படிமங்களில் அதிகம் காணப்படுவது என்றும் கூறுகிறார். வைகாக்ஷகம் என்பதற்குத் திரு. மோனியர் வில்லியம்ஸ் தோளிலிருந்து தொங்கவிடப்படும் ஒரு மாலை என்று பொருள் தருகிறார். திரு. சிவராமமூர்த்தி சுட்டும் மார்பணி உண்மையில் சன்னவீரமாகும். இதை ஏன் திரு. சிவராமமூர்த்தி வைகாக்ஷகமாகக் கொண்டார் என்பது புரியவில்லை. இங்கு ஆடும் வடிவங்களுள் பெரும்பான்மையன இந்த மார்பணியை அணிந்துள்ளன. இதன் அமைப்பு திரு. வை.கணபதி ஸ்தபதி தன் சிற்பச் செந்நூலில் விளக்கும் சன்னவீரத்தோடு மிகப் பொருந்துகிறது. சன்னவீரம் வீரத்தின் அடையாள அணியாகும். இதை இந்தக் கரணச் சிற்பங்கள் பெற்றிருப்பது முற்றிலும் பொருத்தமேயாகும். தாண்டவத்தில் இரண்டு பிரயோகங்களைக் குறிப்பதுண்டு. ஒன்று உத்ததப் பிரயோகம். இது சிவபெருமானுக்குரியது. மற்றொன்று சுகுமாரப் பிரயோகம். இது பார்வதிக்குரியது. சிவபெருமானுக்குரிய உத்ததப் பிரயோகம் வலிமை நிறைந்தது. சக்தி வாய்ந்த வீச்சுகளோடு கூடியது. இதை நிகழ்த்திக் காட்டுபவர் சன்னவீரத்தை ஓர் அணியாகக் கொள்வது இயல்பானதே. தஞ்சைக் கரணத்தொடரில்கூட சிவபெருமான் ஓரிரு இடங்களில் இந்த அணியுடன் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள நூற்றியொரு கரணச் சிற்பங்களுள் இருபது வடிவங்களில் மட்டுமே திரு. சிவராமமூர்த்தி வனமாலை என்று குறிப்பிடும் மாலை காணப்படுகிறது. இது பார்க்க வனமாலை போல காணப்படுகிறதே தவிர வனமாலையல்ல. வனமாலை முழங்கால்கள் வரை தொங்குவது போல அமைக்கப்படும். இந்த மாலைகளோ சில இடுப்பு வரையிலும், ஒன்றிரண்டு தொடைவரையிலும் காட்டப்பட்டுள்ளன. இருபதே சிற்பங்களில் காணப்படும் இம்மாலைகளைக் கொண்டு இந்த வடிவங்களைக் கண்ணன் என்று கொள்வது எப்படி நியாயமாகும்?

இக்கரணச் சிற்பங்கள் கண்ணனைச் சுட்டவில்லை என்பதற்கு மிகப் பெரும் சான்றுகளாய்ப் பூதகணங்களும், நந்திகேசுவரரும் நிற்கிறார்கள். கண்ணனின் ஆடலுக்கு நந்தி எப்படிக் குடமுழா வாசிப்பார்? மேலும் குடமுழா கைலாயத்துக்குரியது. எந்த வைணவ வடிவத்தோடும் அல்லது மரபுகளோடும் பேசப்படாதது. எல்லாவற்றையும்விடக் கரணங்களைச் சிவபெருமான் வழங்கியதாகத்தான் பரத சாத்திரமே பேசுகிறது. ஒருவேளை வைணவ ஆர்வலர் சிலர் இக்கரணங்களைக் கண்ணனுக்கு ஏற்றிக் காட்ட விரும்பி இவற்றைப் படைத்தனர் என்று கொள்ளலாம் என்றாலோ, இரண்டு விஷயங்கள் தடுக்கின்றன. ஒன்று இச்சிற்பங்கள் தோன்றிய காலகட்டம். சைவப் பெருவேந்தன் சிவபாதசேகரன் முதலாம் இராசராசன் தஞ்சையில் கரணக் கோவையை அந்தச் சிவபெருமானே ஆடுவதுபோல் அமைத்த காலத்தை ஒட்டியெழுந்த சார்ங்கபாணி சிற்பங்கள் கரணங்களைக் கண்ணனுக்குத் தாரை வார்த்துத் தந்திருக்க முடியாது. இரண்டாவது, இசைகூட்டும் பூதகணங்கள். கண்ணனுக்கு எப்படிப் பூதகணங்கள் இசை கூட்டும்? புராண வரலாறே இல்லையே!

டாக்டர் பத்மா சுப்ரமணியமும், டாக்டர் கபில வாத்ஸ்யாயனனும் இவ்வடிவங்களைச் சிவபெருமான் என்று கூறுகின்றனர். சான்றாக அவர்கள் காட்டுவது பூதகணங்களை. பூதகணங்களுள், நந்தியும் சிவ சார்புடையவை என்பதில் எள்ளத்தனையும் ஐயமில்லைதான். ஆனால் அதனாலேயே இங்கு ஆடுபவரை சிவபெருமான் என்று எப்படிச் சொல்ல முடியும்? நெற்றிக் கண்ணில்லை. ஆகம விரோதமாய் இரண்டே கைகள்.

இவர் சிவபெருமான்தான் என்பதற்குத் தோற்ற அமைதியில் எந்தச் சான்றுமில்லை. ஆகமங்கள், எந்த இசை வடிவமாக இருந்தாலும், தனியாக வடிக்கப்பெறும் போது அவை நான்கு கரங்களுடன்தான் அமையுமென்கின்றன. அதனால் தானே தஞ்சையில் கரணங்களைச் சிவபெருமான் நிகழ்த்துவதாகக் காட்ட விரும்பிய நித்த விநோதன் அங்கே ஒவ்வொரு வடிவத்திற்கும் நான்கு கைகளைத் தந்து சிவபெருமானுக்குரிய கருவிகளையும் அந்தக் கைகளில் வைத்து நம்மைக் காப்பாற்றியுள்ளார்.

இந்தக் கரணச் சிற்பங்க்ள் சைவச் சார்புடையவைதான். ஆனால் டாக்டர் பத்மாவும் டாக்டர் கபிலாவும் சொல்வது போல் இங்கு ஆடுபவர் சிவபெருமானில்லை. இச்சிற்பங்கள் தண்டுவைக் குறிக்கின்றன. நாட்டிய சாத்திரத்தில் சிவபெருமான் தண்டுவை அழைத்து பரதருக்கு அங்ககாரங்களைக் கற்றுத்தரச் சொன்னதாகவும், அதன்படி தண்டு தனக்குக் கற்றுத் தந்ததாகவும் பரதரே கூறுகிறார். மேலும் சிவபெருமான் கண்டுபிடித்துத் தமக்குச் சொன்ன ரேசகங்கள், அங்ககாரங்கள், பிந்திகளைக் கற்று அவற்றைக் கொண்டு இசையுடன் கூடிய ஆடலைத் தண்டு உருவாக்கியதாகவும், அதனாலேயே இவ்வாடல் தாண்டவம் என்று பெயர் பெற்றதாகவும், தண்டு தமக்குக் கற்றுத்தந்த அந்தச் செவ்விய ஆடலைத் தாம் கற்ற விதமாகவே இங்குச் செய்வதாகவும் பரதர் நாட்டிய சாத்திரத்தில் மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

சார்ங்கபாணி சிற்ப வரிசையில், கிழக்கு முகத்தின் வடபுறத்தில் நுழைவாசலில் இருந்து ஆறாவது சிற்பமாக மூன்று ஆடவர்கள் காட்டப்பட்டுள்ளனர். இவர்களுள் முதலாமவர் முதியவர். தாடி, மீசையும், பட்டாடையுமாய்க் காட்சியளிக்கும் இவரையடுத்து இளைஞர்களாய் இருவர். முதியவரின் வலக்கை கரணங்களை இரசித்துப் போற்றும் மெய்ப்பாட்டில் இடக்கை இடுப்பில். அவரை ஒட்டி நிற்கும் இளைஞர்களுள் ஒருவர் இடக்கையைக் கட்ய வலம்பிதமாய்க் கொண்டு வலக்கையைப் பதாக முத்திரையில் காட்டி நிற்கின்றார். பதாகத்திற்குள்ள விநியோகங்களில் 'இது, அது என உரைத்து' மகிழ்தலும் ஒன்றாகும். இந்த இளைஞர் தண்டுவின் ஆடல் அமைவுகளை இது, அது என இனம் கண்டு மகிழ்கிறார். மற்றோர் இளைஞர் இந்த அதிசயக் கரணங்களைக் கண்டு வியந்து போற்றி நிற்க, முதியவரோ பெரிதும் சிலாகித்துப் போற்றிப் பெருமகிழ்வில் மூழ்கியிருக்கிறார். இவர்களை டாக்டர் கபிலா கரண ஆசிரியர்களாகக் குறிப்பிடுகிறார். டாக்டர் பத்மா தன்னுடைய தொலைக்காட்சித் தொடரில் இச்சிற்பங்களைக் காட்டவேயில்லை. இவர்கள் கபிலா சொல்வதுபோல் கரண ஆசிரியர்களல்ல. சாட்சாத் பரதரும் அவருடைய பிள்ளைகளும் தான்.

நாட்டிய சாத்திரம் பரதர் ஆடலைத் தன் நூறு பிள்ளைகளுக்கும் கற்றுத் தந்ததாகக் கூறுகிறது. பிறகு நான்முகன் அறிவுரைப்படி நாட்டிய நிகழ்ச்சி சிவபெருமான் முன்னிலையில் நிகழ்கிறது. நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் நான்முகனிடம் ஆடல், அங்ககாரங்களாலும் கரணங்களாலும் அழகு பெறுவதாகக் கூறி அவற்றை நாட்டிய நிகழ்ச்சியின் பூர்வரங்கத்தில் சேர்த்துக் கொள்ளச் சொல்கிறார். நான்முகன் அங்ககாரங்களின் பயன்பாடு பற்றி சிவபெருமானிடம் கேட்க, சிவபெருமான் தண்டுவை அழைத்துப் பரதரிடம் அங்ககாரம் பற்றிப் பேசுமாறு பணிக்கிறார். தண்டு அந்த ஆணையைத் தலை மேல் ஏற்றுக் கற்றுத் தருகிறார். அதைத்தான் சார்ங்கபாணி கரணச் சிற்பங்கள் படம் பிடித்துள்ளன. தண்டுவின் கரண விளக்கங்களைப் பரதரும் அவருடைய பிள்ளைகளும் கண்டு மகிழ்ந்து கண்களில் நிறைப்பதைக் கிழக்கு முகத் தொகுதி காட்டுகிறது. தண்டுவின் ஆடலுக்கு இசைகூட்ட கயிலாயத்தில் பூதகணங்களையும், நந்தியையும் விட்டால் வேறு யார் வர முடியும்?

நாட்டிய சாத்திர மரபை நன்கறிந்த சோழச் சிற்பிகள் சற்றும் அதனின்று பிசகாமல் பரதரையும் காட்டி, தண்டுவையே கரண இயக்கங்களில் படம் பிடித்து அற்புதமான இலக்கியமாய் இந்தச் சிற்ப வரிசைகளைச் செதுக்கி வைத்தனர். இந்தக் கரணச் சிற்பங்களில் காளியையும் சிவபெருமானையும் அவர்கள் இடம்பெற வைத்ததுகூட உத்தத, சுகுமாரத் தாண்டவ மரபுகளையும், சிவச்சார்பையும் சுட்டிக் காட்டத் தான்.

சார்ங்கபாணி கோயிற் சிற்ப வரிசையில்தான் பரதர் முதன் முதலாக இடம் பெறுகிறார். மாமல்லை தர்மராசர் தளியின் இடையடுக்கில் இரண்டு உருவச் சிற்பத் தொகுதிகள் உள்ளன. இவை இரண்டிலும் சிவபெருமான் உள்ளார். ஒரு தொகுதியில், சிவபெருமானுடன் கட்டப் பெற்றிருக்கும் ஆண் வடிவம் தன் இடக் காலைத் தூக்கி விண்கால்நிலை காட்டுகிறது. இந்த வடிவத்தைத் தண்டு என்று அறிஞர்கள் அடையாளம் கண்டு எழுதியுள்ளனர். தம்மிடம் ஆடலைக் கற்ற தண்டு ஆட, அதைச் சிவபெருமான் சரிபார்ப்பதாக இத்தொகுதியை அறிஞர்கள் விளக்கியுள்ளனர். ஆனால் டாக்டர் பத்மா தன்னுடைய அண்மைக்காலத் தொலைக் காட்சித் தொடரில் சிவபெருமானுடன் காணப்படும் வடிவத்தைப் பரதர் என்று கூறியுள்ளார். பரதரின் ஆடலைச் சிவபெருமான் காண்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டிய சாத்திரத்தில் சிவபெருமானின் முன்னால் தாம் ஆடியதாகப் பரதர் குறிப்பிடவில்லை. பேச்சு நடப்பதே சிவபெருமானுக்கும், நான்முகனுக்கும் இடையில்தான். பிறகு சிவபெருமானுக்கும் தண்டுவுக்கும் இடையில் உரை நிகழ்கிறது. நாட்டிய சாத்திர நிகழ்வுகள் கொண்டு பார்க்கும்போது இச்சிற்பத் தொகுதியில் இருக்கும் ஆடல் வடிவத்தைத் தண்டு எனக் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

தர்மராசர் தளியிலுள்ள மற்றோர் சிற்பத் தொகுதியில் சிவபெருமானுடன் இருக்கும் ஆடவரைத் திரு. சிவராமமூர்த்தி தம்முடைய நூலொன்றில் அர்ச்சுனனாகவும், மற்றோர் நூலில் ஓரிடத்தில் பரதராகவும், வேறோர் இடத்தில் சண்டீசராகவும் அடை

யானம் காட்டுகிறார். டாக்டர் பத்மா இந்த வடிவத்தைத் தண்டு என்கிறார். திரு.கே.ஆர். சீனிவாசன் இந்த வடிவம் சண்டீசராக இருக்கலாம் என்று கூறுகிறார். இதுதான் பொருத்தமாகத் தோன்றுகிறது. சிவபெருமானின் வல முன் கையிலிருந்து தொங்கும் பரிவட்டம் இதை உறுதி செய்யும். இதனால் தர்மராசர் தளியில் எந்த இடத்திலும் பரதரின் வடிவமில்லை என்பது தெளிவாகிறது.

தமிழகத்துச் சிற்பக்கலை வரலாற்றில் சிவபெருமான் தண்டுவின் ஆடலைப் பார்க்கும் தர்மராசர் தளித் தொகுதியில்தான் நாட்டிய சாத்திரக் கல்வி மரபு அப்படியே பின்பற்றப்பட்டு முதன் முதலாக இடம்பெறுகிறது. நாட்டியக் கல்வி மரபின் இந்த இரண்டாம் நிலையைத் தர்மராசர் தளி தர, தொடர்ச்சி விடுபட்டு விடக் கூடாதென்று அதன் முதல் நிலையைத் தஞ்சையில் உருவாக்கினார் முதலாம் இராசராசன். அவரோ அல்லது அவருக்குப் பின்வந்த கலையார்வம் கொண்ட எந்தச் சோழ மன்னரோ நாட்டிய சாத்திர மரபின் அடுத்த நிலையை சார்ங்கபாணித் தொடரில் பின்பற்றினார். சிவபெருமான் தஞ்சையில் ஆடிக்காட்டியதைக் கற்ற தண்டு மாமல்லையில் அதைச் சிவபெருமானுக்கு ஆடிக்காட்டி, சரிபார்த்துக் கொண்டு, சார்ங்கபாணியில் பரதருக்குக் கற்றுத் தருகிறார். பரதர் அதைத் தன் பிள்ளைகளுக்கும், நான்முகன் அனுப்பிய பெண்களுக்கும் சொல்லித் தந்ததைக் கருத்தில் கொண்டே பின்னால் வந்த அனைத்துக் கரண வரிசைகளிலும் பெண்களை இடம்பெற வைத்தனர் மரபறிந்த சிற்பாசிரியர்கள். தில்லை, திருவண்ணாமலை, விருத்தாசலம், திருவதிகை, குடந்தை நாகேசுவரர், திருச்சி மதுரகாளியம்மன் என்று அனைத்துக் கோயில்களிலும் பெண்களே கரணக் காரிகைகளாய்க் காட்சி தருகின்றனர்.

நாட்டிய சாத்திர மரபுகளை அடியொட்டிய நிலையிலும், தண்டுவின் கரணக் கோலங்களைக் கொண்டிருக்கும் ஒரே சிற்ப வரிசை என்ற முறையிலும், தமிழகத்துச் சிற்பக்கலை வரலாற்றில் தனிச்சிறப்பு பெற்றுவிடும் சார்ங்கபாணி கோயிற் சிற்பங்கள் மற்றோர் மகுடத்தையும் சூட்டிக் கொள்கின்றன. ஆம்! நாட்டிய வேதத்தை நமக்குத் தந்த பரதரை, தமிழகத்துப் பழங்கோயில்களில் இங்கு மட்டுமே காண முடிகின்றது. அதுவும் அவரெழுதிய நாட்டிய சாத்திர மரபுப்படியே! அவர் படைத்த கரணங்களில் கண்ட படியே!

பரதரின் பெயரைச் சாளுவன் குப்பத்தில் கல்வெட்டாய்ப் பொறித்து நாட்டிய சாத்திரத்தின் கால நிர்ணயத்துக்குக் கை கொடுத்தார் ராஜசிம்மப் பல்லவர். அந்தப் பரதரையே சிற்பமாய் வடித்துச் சிறப்பைப் பெற்றதோ பெயர் தெரியாப் புகழ்ச் சோழர் ஒருவர். தண்டுவும், பரதரும் இடம் பெற்றதாலேயே இந்தக் கரணத் தொகுதிகள் அழியாப் புகழ் பெற்று விட்டன. சொல் இலக்கியத்துக்குக் கல் இலக்கியம் படைத்துவிட்ட சோழ நாட்டுச் சிற்பிகளின் செம்மாந்த திறனை என்னென்பது? எப்படி வியப்பது?

தொழில்... தர்மம்... தெய்வம்

நா. ராமச்சந்திரன்



ராஜு சாஸ்திரிகள் என்று அழைக்கப்படும் ராஜகோபால சாஸ்திரிகள் சோகமே உருவாகக் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்தார். அவருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. கடந்த ஒருவார காலமாகச் சுத்த பட்டினி என்று இல்லாவிட்டாலும் அரை வயிறுக் கஞ்சிதான். இப்படியே இன்னும் இரண்டு நாட்கள் போனால் சுத்தப் பட்டினிக்கு இறங்க வேண்டியதுதான். அவருடைய இருபது வருடத் தொழிலில் இம்மாதிரியொரு தேக்க நிலை வந்ததே இல்லை. கடவுள் சோதிக்கிறாரா? அல்லது வேறு என்னதான் காரணம்? ராஜு யோசனையில் ஆழ்ந்துபோனார்.

யாராவது இறந்து போனால் ஈமச் சடங்குகளுக்குள்ள அத்தனை காரியங்களையும் செய்து கொடுக்கும் தொழில் அவருடையது. மொத்தமாக இவ்வளவு 'ரேட்' என்று ஒன்று உண்டு. அதைக் கொடுத்துவிட்டால் சகல காரியங்களையும் கிரமப்படி செய்து முடித்துவிடுவார் ராஜு. தக்காருக்குத் தக்கபடி சிறிதும் பெரிதுமாக அந்த வேலைகளைச் செய்வதில் நிபுணத்வம் அவருடையது.

உள்ளே அவரது மனைவி ராஜம் உட்கார்ந்திருந்தாள். அடுப்படியில் பூனை தூங்கிக் கொண்டிருந்தது. ராஜு வாசலில் இருந்து உள்ளே வந்து கயிற்றுக் கட்டிலில் மறுபடியும் உட்கார்ந்த வண்ணம் மோவாயை உரசிக் கொண்டிருந்தார். ராஜம் அவருடைய சோகங்கலந்த முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

ராஜுவின் தகப்பனார் சாமா சாஸ்திரிகள் நான்கு வேதங்கள் படித்தவர். சூத்திரங்கள் எல்லாம் அவருக்கு அத்துபடி. பிரயோகங்களில் சூரப்புலி. லௌகிகம் தெரிந்தவர். அவர் வீட்டில் 'ஜே ஜே' என்று எப்போதும் கூட்டம் நிரம்பி வழியும். தொழில் தர்மத்தை நன்றாகச் செய்தார். கீர்த்தியோடு பணத்தையும் சம்பாதித்துக் கொண்டார். வீடு வாங்கினார், தோட்டம் வாங்கினார், நிலபுலன்கள் வாங்கினார். கிராமத்திலேயே நல்ல பெயரையும் வாங்கிக் கொண்டார்.

சாமா சாஸ்திரியின் ஒரே பிள்ளை ராஜு. அவனை வைதீகத்திற்கு விடக் கூடாது என்று பிடிவாதமாக இருந்தார். அவனை இரண்டு கிளாஸ் இங்கிலீஷ் படிக்கவைத்து காலேஜுக்கு அனுப்ப வேண்டும் என்பதுதான் அவர் கனவு. அதற்காகவே இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்கும் 'கான்வென்'டில் சேர்த்துத் தினமும் சைக்கிளில் அவனைப் பள்ளிக் கூடத்திற்குத் தானே கொண்டுவிட்டு வந்தார். சாமாவுக்குப் பணச் செலவுதான் மிச்சம்! ராஜுவுக்குப் படிப்பு என்னமோ ஏறவில்லை. மூன்று வருடங்கள் கான்வென்டில் மன்றாடிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டான். காவேரியில் குளிப்பதும், நன்றாகச் சாப்பிடுவதும், ஊர் சுற்றுவதும்தான் அவனுக்குப் பிடித்தமான தொழிலாக இருந்தது.

சாமா சாஸ்திரிகளுக்கு ராஜுவை என்ன செய்வதென்று தெரியவில்லை. வயதோ ஏறிக்கொண்டு போகிறது. பிள்ளை உதவாக்கரையாகப் போவதில் எந்தத் தகப்பனாருக்குத்தான் இஷ்டமாக இருக்கும்?

ஒரு நாள் தீவிரமாக யோசனை செய்து கொண்டிருந்தபோதுதான், பஞ்சு தீட்சதரைப் பற்றி அவருக்கு ஞாபகம் வந்தது. தீட்சதர் அல்லூர் கிராமத்தில் வேதபாடசாலலககுக் காப்பாளராக இருந்தார். 'ராஜுவை வேதம் படிக்க அல்லூருக்கு அனுப்பினால் என்ன?' என்று யோசனை செய்ய ஆரம்பித்தார் சாமா.

"டேய் ராஜு! இப்படியே காலத்தைக் கழித்து விடலாம் என்றா நினைத்துக் கொண்டிருக்கிறாய்...?" என்று ஒருநாள் ராஜுவைப் பார்த்துக் கேட்டார் சாமா.

மதமத என்று வளர்ந்திருந்தான் ராஜு. வயது பதினெட்டுதான் என்றாலும் உயரம் சற்று கூடத்தான். தலையில் கட்டுக்குடுமி. கழுத்தில் ஓர் உத்திராட்சக் கொட்டை. அதைச் சுற்றி ஒரு சிகப்புக் கயிறு. அப்பா சொல்லும் வார்த்தைகள் காதில் விழுந்தாலும் ராஜு பதில் பேசவில்லை. அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சாமா அவன் பதிலுக்காகக் காத்திருக்கவில்லை. அவர்வரை ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டார். ராஜுவுக்கு இனி வைதீகம்தான் என்ற முடிவுக்கு வந்தபோது, வாசலில் பால்கார அமிர்தம் கதவைத் தட்டிக் கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த

குவளையில் பால் நிரம்பியிருந்தது. சாஸ்திரிகளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. இதுவே நல்ல சகுனம் என்று ராஜுவை அல்லூர்ப் பாடசாலைக்கு அனுப்ப நாள் பார்க்க அலமாரியிலிருந்த பஞ்சாங்கத்தை எடுத்துவிட்டார்.

ஒரு நல்ல நாளில் ராஜுவை அழைத்துக் கொண்டு அல்லூர் போய்ச் சேர்ந்தார் சாமா.

நல்ல மத்தியான வேளை. வைகாசி மாதத்து வெயில் காய்ந்துக் கொண்டிருந்தது. பஞ்சு தீட்சதர். வீட்டு ரேழியில் போடப்பட்டிருந்த விசுப் பலகையில் சாய்ந்துக் கொண்டிருந்தார். பாதித் தூக்கம், பாதி விழிப்பு. வாசலில் காலடிச் சத்தம் கேட்டுக் கையிலிருந்த விசிறியுடன் எழுந்து ஒருக்களித்திருந்த வாசற் கதவை மெதுவாகத் திறந்தார் தீட்சதர்.

வாசலில் ராஜுவுடன் நின்றிருந்த சாமாவைப் பார்த்தவுடன் அவருக்குத் திகைப்பாக இருந்தது. சாமா சாஸ்திரிகளைப் பார்த்து வெகுகாலமாகி விட்டது. அவர்கள் இருவரும் திருவையாறில் ஒன்றாக அத்தியாயனம் செய்தவர்கள். சாமாவைப் பார்த்தவுடன் தீட்சதருக்கு ஒரே சந்தோஷம்.

"யாருடா சாமாவா? அடையாளமே தெரியலையே? வா வா உள்ளே வா..." என்று அன்பு ததும்ப அழைத்தார் தீட்சதர்.

சாமாவும் ராஜுவும் உள்ளே போனவுடன், சாமா, "ராஜு! தீட்சதருக்கு நமஸ்காரம் பண்ணு" என்று ராஜுவுக்குக் கட்டளையிட்டார். ராஜு தீட்சதருக்குச் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து விட்டு 'அபிவாதயே' சொன்னான்.

"உன் பிள்ளையா? என்ன பண்ணிண்டு இருக்கான்?" என்று கேட்டார் தீட்சதர்.

"என்ன பண்றான்? ஒண்ணும் பண்ணவில்லை. படிக்க வைத்துப் பார்த்தேன்... படிப்பு ஏறவில்லை. வைதீகத்திற்காகப் போகட்டும் என்று இங்கு அழைத்து வந்துவிட்டேன். அண்ணாவாள்! நீங்கள் தான் பெரிய மனசு பண்ணி இவனைச் சீடனாக ஏற்றுக்கொள்ள வேணும்..." சாமா நெகிழ்ந்து போனார். அவர் கண்களில் நீர்முட்டி நின்றன.

"ரொம்ப வயசாயிடுத்தே, இவன் இனிமே வேதம் படிச்சு சாஸ்திரம் படிச்சு எப்போ முன்னேறது? நெஞ்சிலே நிக்கற வயசு தாண்டிடுத்தே..."

"அண்ணா அப்படிச் சொல்லக் கூடாது. எனக்கு இருக்கிறது இவன் ஒருத்தன்தான். நெறிதவறிப் போகக் கூடாது என்று உங்களிடம் அழைத்து வந்து விட்டேன். நீங்கள் தட்டிக் கழித்துப் பேசக் கூடாது" என்று சாமா, தீட்சதரின் கைகள் இரண்டையும் இறுகப் பிடித்துக் கொண்டுவிட்டார்.

பிறகு இருவரும் வெகுநேரம் ஊர்க் கதைகள் பேசிக் கொண்டிருந்தார்கள். சாயங்காலம் சாமா ஊருக்குப் புறப்படுவதற்கு முன் ராஜுவுக்கு ஆயிரம் அறிவுரைகளைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார். கூண்டின் உள்ளே போகும் சர்க்கஸ் புலி போல் ராஜு தீட்சதர் வீட்டுக் காமிரா உள்ளுக்குள் போய்ப் புகுந்து கொண்டான்.

பரம்பரைக் குணம் ராஜுவை மட்டும் விட்டுவிட்டுப் போய்விடுமா? ஆங்கிலப் படிப்பில் மட்டும்தான் நிரட்சரகுட்சியாக இருந்தானேயொழிய வடமொழி அறிவு கொஞ்சம் அவனுக்கு இருந்தது. எனவே தீட்சதர் அவனைச் சோதித்துப் பார்த்தபோது பையனிடம் பொறி இருப்பதை அவர் உணர்ந்தார். மறு நாளே பாடங்களை ஆரம்பித்து விட்டார்.

வீட்டு வேலைகள் செய்வதிலும், குருவுக்கும் அவர் பத்தினிக்கும் பணிவிடைகள் செய்த நேரம் போக எஞ்சியுள்ள நேரங்களில் தீட்சதர் அவனுக்கு வேதங்களையும், பிரயோகங்களையும் சொல்லிக் கொடுப்பார். ராஜு மற்ற பிள்ளைகளைப் போல பாடசாலைக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. வீட்டிலேயே அவனுக்குப் பாடம். அங்கேயே அவனுக்கு வேலை!

அந்த வருடம் கோடை விடுமுறை. ராஜுவைத் திருவையாறு போக வேண்டாம் என்று தடுத்து விட்டார் தீட்சதர். ராஜுவும் வீட்டோடு வேலைகள் செய்து கொண்டும் வேத பாடங்களைப் படித்துக் கொண்டுமிருந்தான். ஒரு நாள் தீடசதர் வீடு மிக்க கலகலகப்பாய் இருந்தது. காமு பரக்க பரக்கக் காரியங்கள் செய்து கொண்டிருந்தாள். தீட்சதர் உள்ளுக்கும் வாசலுக்கும் புனுகுப் பூனையைப் போல் உலவிக் கொண்டிருந்தார். அடிக்கு ஒரு தடவை 'ஏன் இன்னும் வரவில்லை வண்டியென்ன லேட்டா?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

தீட்சதரின் பெண் விஜயம் அன்று ஊரிலிருந்து வரப்போகிறாள் என்பது ராஜுவுக்குத் தெரிந்துதான் இருந்தது. அவள் சென்னையில் விடுதியில் தங்கி காலேஜில் படித்துக் கொண்டிருந்தாள். இன்று அவள் அல்லூருக்கு வரப்போகிறாள். அவள் வரவுக்காகத் தான் காமு இந்தப் பரப்பு பரக்கிறாள்.

தீட்சதர் வீட்டு வாசலில் வண்டி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து அப்சரஸ் மாதிரி ஒரு பெண் பாவாடையும் தாவணியுமாகக் கீழே இறங்கினாள். அவள் இறங்கியவுடன் வண்டி பக்கத்து வீட்டில் போய் நின்றது. அதிலிருந்து வயதான ஒரு பெரியவர் இறங்கிக்கொண்டிருந்தார்.

விஜயம் உள்ளே நுழைந்தவுடன் காமு தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்துக் கொண்டே "ஏண்டி விஜயம் இவ்வளவு நாழி, வண்டி சரியான நேரத்தில் வரலையா?" கேட்டுக் கொண்டே பெண்ணை அணைத்துக்கொண்டாள்.

விஜயம் பதிலுக்குத் தன் வெண்முத்துப் பற்கள் வெளியே தெரிய கவீர் என்று சிரித்து விட்டு "யாரம்மா இந்தக் குரங்கு, வாசல் முருங்கை மரத்தின் கிளைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இளித்துக் கொண்டிருக்கிறது. யார் அது...?" சொல்லிவிட்டு முத்துக்கள் உதிர்வதைப் போல மறுபடியும் சிரித்தாள். தன்னைத்தான் குரங்கு என்று விஜயம் அழைக்கிறாள் என்று ராஜுவுக்குத் தெரிந்து விட்டது. முருங்கைக் காய்களைப் பறிக்கத்தான் ராஜு வாசலில் இருந்த அந்த மரத்தில் ஏறி இருந்தான். விஜயம் வண்டியிலிருந்து கீழே குதித்த போது, அவன் மரத்திலிருந்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். "மரத்தின் மீது ஏறுபவர்கள் எல்லோரும் குரங்காகி விடுவார்களா? பட்டணத்தில் படிக்கும் பெண்! பொய் சொல்லுவாளா?" என்று தன்னையே ஒரு தடவை பார்த்துக் கொண்டான். தனக்கு வால் நிச்சயமாக இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு, மரத்திலிருந்து கீழே இறங்கினான்.

விஜயம் ஊரிலிருந்து வந்த பிறகு வீடே களை கட்டிவிட்டது. கும்மிருட்டிலிருந்து நல்ல வெளிச்

சத்திற்கு வந்தது மாதிரி ஓர் உணர்வு ராஜுவுக்கு ஏற்பட்டது.

விஜயமும், ராஜுவும் சம வயது உடையவர்களாய்த் தான் இருப்பார்கள். இல்லாவிட்டால் விஜயம் இரண்டு மூன்று வயது குறைவாக இருப்பாள். அவளுக்குச் சற்று உருண்டையான முகம். கருகருவென்ற அடர்த்தியாக வளர்ந்திருந்தது கூந்தல். காதுகளுக்கு முன்னால் கேசம் நன்றாக இறங்கி இருந்தது, அவள் அழகைக் கூட்டிக் காட்டிற்று. பின் கழுத்தின் பளபளப்பும், பருவப் பொலிவும், அழுத்தமும், தோளின் சரிவும் அவளைக் கந்தர்வ தேசத்துப் பெண் என்று நிருபணம் செய்தது.



ராஜு விஜயத்தோடு பேச வேண்டும் என்று எவ்வளவோ ஆசைப்பட்டான். ஆனால் அவள் ஏனோ அவனுடன் பேசத் தயாராக இல்லை. அலுக்காமல் அவன் வேலைகளைச் செய்வதை மட்டும் அவள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது, ராஜுவுக்கு நன்றாகத் தெரிந்தது, எனவே எல்லா வேலைகளையும் உற்சாகத்தோடு செய்துக் கொண்டிருந்தான். ஒரு தடவை அவள் தன்னோடு பேசினால் போதும்! அன்று 'குரங்கு' என்று அழைத்தாள். இன்னொரு தடவை அப்படிச் சொன்னால் கூடப் போதும் என்று மனத்தில் ஏங்கிக் கொண்டிருந்தான்.


அன்று மதியச் சாப்பாடு ஆனவுடன் தீட்சதர், ராஜுவை ஒரு முக்கிய காரியமாகக் கம்பரசம் பேட்டைக்கு அனுப்பி வைத்தார். நல்ல வெயில் வேளை பஸ்ஸிற்காகக் காத்துக் கொண்டிருந்தான் ராஜு. பஸ் வருவதாக இல்லை. ராஜுவுக்குக் கால் கடுத்தது. நல்ல வேளையாகப் பேச்சுத் துணைக்குப் பாபு அங்கு வந்து சேர்ந்தான்.

"கம்பரசம்பேட்டைக்குப் போகிறேன். அங்கு ஸ்கந்தனைப் பார்த்து ஒரு சமாசாரம் சொல்ல வேண்டும்..." என்று பேச்சை ஆரம்பித்தான் ராஜு.

"நல்லவேளை நான் வந்தேன். ஸ்கந்தன் இப்போது ஊரில் இல்லை. பட்டணம் போயிருக்கிறான். வருவதற்கு ஒரு வாரமாகும். வெயிலில் அலையாமல் வீடுபோய்ச் சேர்" என்றான் பாபு.

ராஜுவுக்கு இந்தச் செய்தி தேனாக இனித்தது. இந்தப் பதைபதைக்கும் வெயிலில் கம்பரசம்பேட்டைக்குப் போவதில் அவனுக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லை. வீட்டிலிருந்தால் விஜயத்தையாவது பார்த்துக் கொண்டிருக்கலாம் என்ற ஒரு நப்பாசை. 'ஸ்கந்தன் ஊரில் இல்லை' என்பது தெரிந்தவுடன் திரும்பி வீட்டிற்கு ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தான்.

வீட்டு வாசற்பக்கம் வந்தபோது வீட்டுக் கதவு சாத்தப்பட்டிருந்தது. கதவை மெல்லத் தட்டினான். விஜயம்தான் வந்து கதவைத் திறந்தாள். வீட்டில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லைபோலத் தெரிந்தது. ராஜு உள்ளே சென்று பார்த்துவிட்டு, வெளித் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டான். வாசல் திண்ணையில் எவ்வளவு நேரம் சும்மா உட்கார்ந்திருக்க முடியும்? சாம வேதத்தைக் கொஞ்சம்



மணம் செய்யலாம் என்று எத்தனித்தபோது "ராஜு" என்று உள்ளே இருந்து குரல் வந்தது.

தம்பூராவின் ஜுவாலைச் சுண்டுவது போல இருந்தது ராஜுவுக்கு. மெல்ல கதவைத் திறந்து கொண்டு உள்ளே காலடியெடுத்து வைத்தான். விஜயம் விசுப் பலகையில் படுத்துக் கொண்டிருந்தாள். ராஜு அவள் கால் பக்கம் போய் நின்றான். அவன் உடல் பூராவும் நடுங்கிக் கொண்டிருந்தது.

"ராஜு! கொல்லைப் பக்கம் போனேனா கால் தவறி கீழே விழுந்துவிட்டேன். வலது கால் ரொம்ப வலிக்கிறது. அப்பாவிற்குப் பிடித்து விடுவதைப் போல கொஞ்சம் எனக்கும் பிடித்துவிடேன்..." என்று தன் வலது காலைத் தூக்கிப் பிடித்துக் கொண்டாள் விஜயம்.

ராஜுவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தான்...

"பயப்படாதே ராஜு. ஆபத்திற்குத் தோஷமில்லை. அப்பாவும் இல்லை, அம்மாவும் இல்லை. ராதா கல்யாணத்திற்குப் போயிருக்கிறார்கள். கால் ரொம்ப வலிக்கிறது.'ப்ளீஸ்' பிடித்துவிடேன்..."

ராஜு வாசற் கதவைத் தாளிட்டுவிட்டு வந்து விசுப்பலகையில் விஜயத்தின் கால் பக்கம் உட்கார்ந்து கொண்டான். அவள் உருண்டை முகமும், வகிடு அமைந்து முன் மயிர் நெற்றியில் வளைந்து வருகிற இசைவும், ஏதோ தாமரை மொக்கைப் பார்ப்பதைப் போல இருந்தது... ராஜுவின் கண்கள் சொக்கிப்போய் விஜயத்தின் கண்களை விழுங்கிக் கொண்டிருந்தான் அவன்.

"என்ன ராஜு பார்த்துண்டே இருக்கே... காலை ரொம்ப வலிக்கிறது..." சிணுங்கினாள் விஜயம்.

ராஜுவுக்குத் தைரியம் எங்கிருந்து வந்ததோ. அவள் இரண்டு கால்களையும் மெல்லத் தூக்கித் தன் மடிமீது சாய்த்துக் கொண்டான். கால் விரல்களைப் பட்டும் படாமல் நீவியும், பாதங்களைத் தடவியும், குதிகால்களை அழுத்தியும் பிடித்தபோது அவள் தசைகள் சிவப்பாக மாறி மறுபடியும் மஞ்சளாகக் காட்சியளித்து ரசவாதம் செய்தன. ஆடும் சதைகளை அமுக்கிப் பிடித்தபோது கட்டியிருந்த பாவாடை விலகிப் போனது. அதை விஜயம் கொஞ்சம்கூட லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. பட்டுத்துணிகளில் நகாசு வேலை செய்பவனின் மிருதுத் தன்மையையும் உறுதியையும் ராஜு தன் கைகளில் காட்டினான். அவள் உடல் துிவுதிவு என்று சிவந்து விட்டது. வியர்வை வெள்ளத்தில் மிதந்தது. நாடி நரம்புகள் எல்லாவற்றிலும் மின்சாரம் பாய்வது போல இருந்தது. "இன்னும் மேலே, ம்... ம்... இன்னும் மேலே" என்று கொஞ்சினாள் விஜயம்.

மெதுவாகக் கிள்ளியும், தேய்த்தும் பிடித்தும் அவன் சுகம் கண்டபோது விஜயம் 'ஹா' வென்று படுத்துக் கொண்டிருந்தாள். அவள் கால்களின் இரண்டு பாதங்கள் மட்டும் இப்போது தரையில் கிடந்தன. இடுப்பைச் சுற்றியிருந்தத் தாவணி இடம் வலம் என்று இராமல் தாருமாறுமாகச் சுருண்டு கிடந்தது.

அவளை அப்படியே அள்ளித் தூக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான் அவன்.

விஜயமும் அவனை மயங்கிய கண்களோடு பார்த்துக் கொண்டிருந்தாள். இப்போது அவள் கைகள் இரண்டும் அவன் கழுத்தின் மீது மாலையாக விழுந்திருந்தன. அதரங்கள் இரண்டும் அவனை வாவா என்றழைப்பதைப் போலத் துடிதுடித்துக் கொண்டிருந்தன.

"விஜயம்... விஜயம்..." என்று அவள் மீது அவன் சாய... அதரங்கள் கூடும் நேரம்..."ராஜுஊஊ..." என்று யாரோ அதட்டிக் கூப்பிடும் சத்தம் கேட்டது. ராஜு தலையைத் தூக்கிப் பார்த்தான். பக்கவாட்டில், ஜன்னல் கம்பிகளின் வழியாகத் தீட்சதர் அவனைக் கோபக் கனல் வீசும் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தார்.

ராஜு செய்வதொன்றுமறியாமல் திக்குமுக்காடினான். விஜயம் தன் பாவாடையும் மேலாக்கையும் சரிசெய்துகொண்டு உள்ளே ஓடிவிட்டாள். கைகளும் கால்களும் நடுநடுங்க ராஜு அவனையும் அறியாமல் நடந்து சென்று வாசற்கதவை மெதுவாகத் திறந்தான்.

வெகு வேகமாக உள்ளே வந்த தீட்சதர், ராஜுவின் அவிழ்ந்த குடுமியை அள்ளிப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கிவிட்டு "என்னடா செய்தே நீ? இனி நீ இங்கிருக்க லாயக்கில்லை உடனே கிளம்பு ஊருக்கு..." என்று அதட்டினார்.

வாயைத் திறக்காமல் சும்மா இருந்தான் ராஜு. "கிளம்புடா என்றால் மொரைத்தா பார்க்கிறாய்?" என்று சீறினார் தீட்சதர். மறுபடியும் குடுமியைப் பிடித்து உலுக்கு உலுக்கிவிட்டு ராஜுவைக் கீழே பிடித்துத் தள்ளினார். அந்த மிருக பலம் அவருக்கு எங்கிருந்துதான் வந்ததோ?

அடுத்த சில நிமிடங்களில் மளமளவென்று காரியங்கள் நடந்தன. தீட்சதரும் ராஜுவும் திருவையாறுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். திருவையாறு போகும் போது மாலை மணி ஆறு ஆகிவிட்டது. சாமா சாஸ்திரி அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். ராஜுவும் தீட்சதரும் வீடு நோக்கி வருவதைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனார்.

சாமா சாஸ்திரிகளிடம், தீட்சதர் இரண்டு வார்த்தைகள்தான் பேசினார். "சாமா உன் பிள்ளை உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்துவிட்டான். இனிமேல் இவனை அல்லூர் பக்கம் அனுப்பாதே. என்ன செய்தான் என்று நீயே கேட்டுத் தெரிந்து கொள்..." சாமா பதில் சொல்லும் வரை தீட்சதர் காத்திருக்க வில்லை. விடுவிடு வென்று வெளியே நடந்துவிட்டார்.

இந்த நிகழ்ச்சி நடந்த பிறகு சாமா சாஸ்திரிகள் அதிக நாள் உயிருடன் இருக்கவில்லை. ஒரே பிள்ளையைச் சரியாக வளர்க்காமல் போனோமே என்ற ஏக்கத்திலேயே அவர் ஆவி பிரிந்துவிட்டது. ராஜுவின் வாழ்க்கையும் காமா சோமா வென்றாகி விட்டது. ஜீவனத்திற்கு வழியொன்றும் தெரியாத நிலையில்தான் ராஜுவிற்குக் குப்பு சாஸ்திரியின் நட்பு கிடைத்தது. ஊரில் அவரை எம சாஸ்திரிகள் என்றுதான் அழைப்பார்கள். அவர் வருமிடம் எமன் வந்து போன இடமாக இருக்கும். ஈமச் சடங்குகள் எடுத்து நடத்தும் ஏஜெண்டு அவர். அவரிடம் உதவியாளனாகச் சென்ற ராஜு அந்தத் தொழிலை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டதோடுகூட அவர் மகள் ராஜத்தையும் கல்யாணம் செய்து கொண்டு விட்டான்.

⟶

ராஜுவிற்கு அல்லூர் வாழ்க்கை மிகப் பிடித்திருந்தது. எனவே தொழில் செய்ய அல்லூர் வந்துவிட்டான். விஜயத்திற்குக் கல்யாணமாகிப் பட்டணம் போய்விட்டாள். தீட்சதர் வீட்டில் இப்போது யாரோ குடியிருந்தார்கள். தீட்சதர் காலமும் ஆகிவிட்டது.

ராஜுவின் பிள்ளை ரகுநாதன் அப்பாவைப் போலில்லாமல் நன்கு படித்து முன்னுக்கு வந்தான். திருச்சியில் அவன் படிக்கும்போது, அவனுடன் கூடப் படிக்கும் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டான். இதைப் பற்றி அப்பாவிடம் சொன்னபோது அவர் துர்வாசராக மாறிவிட்டார். தந்தைக்கும் பிள்ளைக்கும் இதனால் தீராப்பகை ஏற்பட்டுவிட்டது. "நான் அவளைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்" என்று ரகு வீட்டை விட்டே ஓடிவிட்டான். பிறகு அவனைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

மனத்திரையில் படங்கள் ஓடிக்கொண்டிருந்தன. ராஜு எல்லாவற்றையும் யோசித்தவாறே திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். தலைமட்டும் யாராவது வருகிறார்களா? என்று இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டிருந்தது.

களைத்துப் போனார் ராஜு. அவருடைய நா உலர்ந்துவிட்டது. தண்ணீர் குடித்துத்தான் இன்று வயிறை நிரப்பிக் கொள்ளவேண்டும் என்ற தீர்மானத்துடன் உள்ளே திரும்ப எத்தனித்தபோது வீட்டு வாசலில் ஆட்டோ ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து பரபரக்க ஒரு வேதியர் கீழே இறங்கினார். இறங்கியதும் இறங்காததுமாக "ராஜு இருக்கையா? எங்கே வெளியில் போயிட்டயோ என்று பயந்தேன். ஏறு, ஏறு சீக்கிரம். திருச்சிக்குப் போகவேண்டும். அங்கு ஒருவர் காலமாகிவிட்டார். சாயந்தரத்திற்குள் தகனம் ஆகவேண்டும்..." அவசர அவசரமாக ராஜுவை அழைத்தார் அவர்.

போன ஜீவன் திரும்பி வந்ததுபோல் இருந்தது ராஜுவுக்கு. அச்சாரமாக அவரிடம் நூறு ரூபாய் வாங்கி அந்தப் பணத்தை மனைவியிடம் கொடுத்துவிட்டு மேல்துண்டோடு ஆட்டோவில் அவருடன் ஏறிக் கொண்டார் ராஜு. அல்லூரிலிருந்து திருச்சி எட்டு கிலோ மீட்டர்தான். ஆட்டோ சாலையில் பறந்து கொண்டிருந்தது.


"திருச்சிக்கு அவர் வந்து நான்கு நாள்கள்தான் ஆயிற்றாம். திடகாத்திரமாகத்தான் இருந்தாராம். ரத்த அழுத்தம் 'மாஸிவ் ஹார்ட் அடேக்' என்று சொன்னார்கள். காலையில் ஆவி பிரிந்துவிட்டது. நல்ல செல்வச் சீமானாகத்தான் இருப்பார்கள் போல் இருக்கிறது. மனைவியும் ஒரு பிள்ளையும்தான். பிள்ளைதான் கிரியைகள் செய்ய வேணும். வந்து தகவல் கொடுத்தார்கள். நான் உன்னைத்தேடி வந்தேன்..." மூச்சு விடாமல் பேசி முடித்தார் வேதியர்.

ஆட்டோ தில்லைநகர் தாண்டி, மெயின்கார்டுப் பக்கம் வந்துகொண்டிருந்தது. வேதியர் ராஜுவிடம் பத்து, நூறு ரூபாய் நோட்டுகளைக் கொடுத்து சாமான்கள் எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டு திருச்சி கன்டோன்மெண்டிலுள்ளவீட்டிற்கு வந்துவிடச் சொன்னார். மறக்காமல் ராஜுவிடம் கர்த்தாவின் விலாசத்தையும் கொடுத்தனுப்பினார்.

ராஜு சாஸ்திரிகள், அலைந்து திரிந்து சாமான்களையெல்லாம் சேகரித்துக் கொண்டார். இரண்டு மூங்கில் கொம்புகள், ஒரு பெரிய ஓலை, கயிறு, சட்டி

யாருக்காக?

மா. வரதராஜன்



மானிலத்தோர் செவிகேடப
மாந்தோப் புள்ளே எங்கேயோ
தேனிற் சுவைக்கும் குரலினிலே
சிலிர்க்கக் கூவும் பூங்குயிலே!
ஏனோ யாரும் கேட்காமல்
ஏகு கின்றார் வீதிவழி
ஆனால் அவரின் பொருட்டேயோ
அந்தக் குயில்தான் கூவுவதே!

வானக் கதிரோன் செங்கதிர்தான்
வந்து தொடுமப் போதினிலே
தானே குவிந்த தாமரைகள்
தங்க இதழ்கள் விண்டிடுமே!
ஏனோ யாரும் பார்க்காமல்
ஏகு கின்றார் வீதிவழி
ஆனால் அவரின் பொருட்டேயோ
அந்தக் கமலம் மலர்வதுவே!

வான மேடை எங்கணுமே
வாரி இறைத்த மலர்களெனும்
மீனி னங்கட் கிடையினிலே
வெண்பானிலவும் விரிந்துளதே!
ஏனோ யாரும் சுவைக்காமல்
ஏகு கின்றார் வீதிவழி
ஆனால் அவரின் பொருட்டேயோ
அப்பொன் மதியம் விளங்குவதே!



இத்யாதிகளை ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டு கண்டோன்மெண்டிற்கு விலாசம் தேடிப் போய்ச் சேர்ந்தார்.

வீட்டு வாசலில் அதிகக் கூட்டமில்லை. விம்மி விம்மி அழும் குரல் மட்டும் தீனமாகக் கேட்டது. மனைவி தலைவிரி கோலமாகத் தேம்பிக் கொண்டிருந்தாள். காலடிப் பக்கம் ஓர் யுவன் இறந்தவரின் கால்களைப் பிடித்துக் கொண்டு விசும்பிக் கொண்டிருந்தான். அவன்தான் பிள்ளையாக இருக்க வேண்டும். சுற்றி நாலைந்து பேர் இருந்தார்கள்.

பல்லக்குக் கட்ட மூங்கில் நீளத்தைச் சரியாக வெட்ட வேண்டுமென்று உள்ளே சென்று பார்த்தபோது ராஜு கண்ட காட்சி, அவரை அப்படியே உலுக்கி விட்டது. இறந்தவரின் முகத்தைப் பார்த்துவிட்டு "ரகு உனக்காடா இந்தக் கதி?" என்று வீறிட்டுக் கத்தி அப்படியே வேரற்ற மரம் போலக் கீழே சாய்ந்து விட்டார். இரண்டு நிமிடங்கள் பேச்சு மூச்சில்லை. எல்லோரும் ராஜுவின் பக்கம் திரும்பி என்ன செய்வது என்று அறியாமல் திக்பிரமை பிடித்து நின்றுவிட்டார்கள். ஒருவர் ஓடிச் சென்று அவர் முகத்தில் கொஞ்சம் தண்ணீர் தெளித்தார். ராஜு மெதுவாகக் கண்விழித்து பிரேதத்தைப் பார்த்து "ரகு, என் கண்ணே நீ எப்போடா வந்தே? உன்னை நான் இந்தக் கோலத்தில்தான் பார்க்கவேண்டுமா? உயிருடன் இருக்கும்போது நீ செய்யத் தவறிவிட்டதைச் செத்த பிறகு செய்தாயா?" என்று தலையில் 'மடேர் மடேரென்று' போட்டுக் கொண்டார். அவருடன் வந்த வேதியரைப் பார்த்து, "மாது இவன் என் பிள்ளைடா, இவன் பிரேத சமஸ்காரத்திற்குத்தானா நான் உன்னிடம் ரேட் பேசினேன்..." சொல்லிவிட்டு மறுபடியும் தலையில் அடித்துக் கொண்டார் ராஜு.

இதற்குள் பேரனும், நாட்டுப் பெண்ணும் ராஜுவை இன்னார் என்று தெரிந்து கொண்டுவிட்டார்கள். கதைகளையெல்லாம் சொல்லி அழுது தீர்த்தார்கள். அதற்குள் ராஜுவின் மனைவி ராஜமும் வந்து சேர்ந்தாள்.

சம்ஸ்காரங்கள் எல்லாம் முடிய அன்று வெகு நேரம் ஆகிவிட்டது. ராஜுவின் பிள்ளை அக்கரைச் சீமையில் நன்றாகச் சம்பாதித்துவிட்டு வந்திருக்கிறான் போலிருக்கிறது. செல்வச் செழிப்பு வீட்டில் தெரிந்தது. பத்துநாள் காரியங்கள் விதிவத்தாக நடந்தேறின.

கடைசிநாள், ராஜு கிராமத்திற்குப் புறப்படத் தயாரானார். துக்கம் தொண்டையை அடைத்தது. ராஜத்தை அழைத்துக் கொண்டிருந்தார்.

"எங்கே கிளம்புகிறீர்கள்? இனி உங்கள் இருவருக்கும் வீடு இதுதான்..." என்று கோல் போட்டுத் தடுத்தாள் நாட்டுப் பெண்.

"தாத்தா இந்த ஈனத் தொழிலை இனிமேல் நீங்கள் செய்யவேண்டாம். இங்கேயே இருந்துவிடுங்கள். அப்பா செய்யாததை நான் செய்கிறேன்" என்று கெஞ்சினான் பேரன்.

பேரனின் பேச்சு நறுக்கென்று தைத்தது ராஜுவுக்கு..." என்னடா சொன்னே... ஈனத்தொழிலா? நீ குழந்தே. உனக்கு ஒன்றும் தெரியாதுடா. உலகத்திலே எந்தத் தொழிலும் ஈனமில்லேடா. நாம் செய்யற எந்தத் தொழிலும் தெய்வம், அதைத் தர்மத்தோடு செய்ய வேண்டும்... தெரிஞ்சுக்கோ... நான் செய்யற இந்தத் தொழிலைவிட்டு என்னாலே பிரிஞ்சிருக்க முடியாது. என்னை விட்டுடு. நான் என் தொழிலைச் செய்து கொண்டு பிழைத்துப் போகிறேன். இந்தத் தொழிலை விட்டு விட்டு உன்னோடு தண்டச் சோறு சாப்பிடுவதற்கு நான் ஆளில்லை..." ஆவேசத்தோடு கத்தினார் ராஜு.

"மாமா... என் பிள்ளை சொன்னது அபசாரம். ஏதோ தெரியாமல் சொல்லிவிட்டான்... உங்கள் தொழிலை நீங்க நன்னாப் பண்ணுங்கோ... ஆனா இங்கேயே இருந்துண்டு பண்ணுங்கோ..." என்று கதறினாள் நாட்டுப்பெண்.

"தாத்தா நான் சொன்னது தப்பு... உலகத்திலே எந்தத் தொழிலும் ஈனமில்லை. தர்மத்தோடு செய்தால் அது தெய்வம்தான். உங்கள் வேலைகளில் நான் குறுக்கிடமாட்டேன். உங்க தொழிலுக்கு நான் அநுகூலமாக இருப்பேன். எங்களை அப்பா அநாதையாக ஆக்கிட்டார். நீங்களும் அநாதையாக ஆக்கிவிடாதீர்கள்" என்று ராஜுவின் கால்களைப் பிடித்துக் கொண்டு, "நீங்கள் இங்கிருக்கச் சம்மதித்தால்தான் உங்கள் கால்களை விடுவேன்..." என்று பிடிவாதமாகச் சொல்லிக் கதறினான் பேரன்.

ராஜுவின் கண்கள் குளமாயின. பேரனை மெள்ளத் தூக்கித் தன் தோள்களில் சாய்த்துக் கொண்டார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் பேரனின் முதுகு வழியாக வழிந்து முத்துக்களெனச் சிதறின.

திருவலஞ்சுழி கற்பகநாதர்

நுழைவாயில் :

சோறுடைய சோழநாடு, நுண்கலைகளின் சுவர்க்க பூமியாகும். ஓவியம், காவியம், சிற்பம், ஆடல், பாடல் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட கோயில்கள் நிரம்பிய கலைக் கருவூலங்களைச் சோழ நாடெங்கும் கண்டு களிக்கலாம்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவர் முதலிகள், தமிழகத்திலும் ஈழத்திலும் 274 கோயில்களைப் பாடிச் சிறப்பு செய்தனர். அக் கோயில்களுள் ஒன்று, திருவலஞ்சுழி கற்பக நாதர் கோயில் ஆகும்.

நன்செய் சூழ் தஞ்சை மாவட்டம், கும்பகோணம் நகரிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது, திருவலஞ்சுழி.

பெயர்க் காரணம் :

வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவிரி ஆறு. இவ்விடம் வரும்போது வலமாகச் சுழித்து ஓடுவதால், இவ்வூர் வலஞ்சுழி எனும் இயற்கையான அழகிய பெயரைப் பெற்றது. சிறப்பு கருதித் 'திரு' சேர்ந்து திருவலஞ்சுழி ஆயிற்று.

இவ்வூர்க் கோயிலில் உள்ள வெள்ளை விநாயகர், வலம் சுழித்த மூர்த்தியாக விளங்குவதால் இப் பெயர் வந்தது என்றும் கூறுவர். சக்திவனம், தட்சிணா வர்த்தம், திரிணாவர்த்தம் என்ற பிற்காலத் தல புராணப் பெயர்களும் இவ்வூருக்கு உண்டு.


தனிச் சிறப்புகள் :

மூவரும் தங்கள் தேவாரப் பாடல்களில் இவ்வூரையும் இங்கு உறையும் இறைவனையும் பாடுகின்றனர்.

என்ன புண்ணியஞ் செய்தனை
நெஞ்சமே! இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப்
பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும்
பாடியும் வழிபடும் அதனாலே



தாமரைக்கண்ணன்





— *என்று மெய்மறந்து பாடுகிறார், சீகாழிப் பிள்ளை யாரான திருஞானசம்பந்தர்.*

ஓதமார் கடலின் விடம் உண்டவன்
பூதநாயகன் பொற் கயிலைக் கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி ஈசனைப்
பாதம் ஏத்தப் பறையும் நம்பாவமே!

என்கிறார், திருநாவுக்கரசர்.

வணங்குதும் வாழி நெஞ்சே புணர்ந்துடன்
பொருகடல் முகந்து கருமுகில் கனம்நல்
படவர பொடுங்க மின்னிக் குடவரைப்
பொழிந்து கொழித்துஇழி அருவி குணக்கடல்
மருங்குங் காவிரி மடந்தை வார்புனல்
உடுத்த மணிநீர் வலஞ்சுழி
அணிநீர்க் கொன்றை அல்லது அடியே!

— *என்கிறார், நக்கீரதேவர்.*

வந்தஆறு அலைக்கும் வலஞ்சுழிவானவ, வானவர்தம்
அந்தார் மகுடத்து அடுத்தபைம் போது இலந் தேன் உழக்கிச்
செந்தா மரைச்செவ்விகாட்டுந் திருவடிக்குஞ் செல்லுமே
எந்தாய் அடித்தொண்டர் ஓடிப் பிடித்திட்ட இன்மலரே!

— *என்கிறார் கபிலர்.*

பார்மேவு கின்ற பலர்உருவர் பண்டரங்கர்
பார்மேவு கின்ற படுதலையர் - பார்மேல்

வலஞ்சுழியைச் சேர்வர் மலரடிகள் சேர்வர்
வலஞ்சுழியைச் சேர்வா ருவார்.

— என்பது, பரணர் கூற்று.

பரவாத தும்பி கருகாத வெங்கரி பண்பு ரண்டே
இருகாத சந்தி உருகாத மாதங்கம் இந்து நுதல்
நிரவாத சிந்துரம் பூசாக்களபம் நெடுஞ் சுனையில்
பிறவாத ஆம்பல் வலஞ்சுழிக்கோ வரப் பெற்றனளே.

— இது, காளமேகக் கவிஞன்.

'மகர குண்டல மீதே மோதவ...' எனத் தொடங்கி, 'தெளிய மந்திர கலாபா யோகிகள் அயல் விளங்கு சுவாமி காமரு திருவலஞ்சுழி வாழ்வே தேவர்கள் பெருமானே' என்று திருப்புகழ் பாடுகிறார், அருணகிரிநாதர்.

திருஞானசம்பந்தர், தம் அடியார் கூட்டத்துடன் அண்டை ஊர்களுக்குச் சென்று பாடிவிட்டுத் திருவலஞ்சுழிக்கு வந்து தங்கிய மேன்மையுடைய இடம் இது என்று சேக்கிழார் பூரிக்கிறார்.

ஏரண்ட முனிவர் என்பவர் முக்தி பெற்ற தலம், இது.

கற்பகநாதர் கோயில் :

ஐந்து நிலைகளைக் கொண்ட ராஜகோபுரத்துடன் கோயில் கிழக்கு நோக்கி அழகிய சூழலில் அமைந்துள்ளது.


மூன்று திருச்சுற்றுகளும் வெளியில் ஒரு வீதியும் உள்ளன. இராச கோபுரத்தை அடுத்து மண்டபமும் திருக்குளமும் இருக்கின்றன. இக்குளத்தை ஜடா தீர்த்தம் என்கின்றனர்.

இக்குளத்தில் குளித்து, காவிரியில் நீராடியபின் இறைவனை வழிபடுவதே முறையாகும்.

குளத்தையும் மண்டபத்தையும் கடந்ததும் கொடி மரம், நந்தி மண்டபம் வெள்ளைப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றைக் காணலாம்.

உள்சுற்றில் பல இலிங்கங்கள், நவசக்தி மூர்த்திகள், சோமாஸ்கந்தர், சண்முக சுப்பிரமணியர், இலட்சுமி, பலரால் வணங்கப்பெற்ற இலிங்கங்கள் முதலியவை உள்ளன.

கருவறைச் சுவரில் தட்சிணாமூர்த்தி, நடராசர், பிட்சாடனர் ஆகியவை இருக்கின்றனர். முறைப்படியான சண்டேசுரர் வடக்கில் உள்ளார்.



இக்கோயிலில் நவக்கிரகக் கோயில் இல்லை; சனீசுரர் மட்டுமே காணப்படுகிறார்.

மகாமண்டபத்தின் உள்ளே ஏரண்ட முனிவர் உள்ளார்.

கருவறையில் உள்ள இறைவன் சுயம்புமூர்த்தி. இவருக்குக் கற்பக நாதர், வலஞ்சுழி நாதர், கபர்த் தீசர் என்ற திருப்பெயர்கள் உண்டு.

வண்டுவாழ்குழலி நாச்சியார் கோயில் :

மூன்றாவது திருச்சுற்றின் தெற்கில் அம்பிகையின் கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. சுவாமியின் இடப் புறத்தில்தான் பெரும்பான்மையான இடங்களில் அம்மன் கோயில் இருக்கும். ஆனால், இங்கே சுவாமிக்கு வலப்புறம் இருப்பது தனிச்சிறப்பாகும்.

அம்பிகையின் பெயர், பெரியநாயகி என்று இப் போது வழங்குகிறது. ஆனால், இராசராசன் ஆட்சிக் கல்வெட்டு.

அம்பிகையை வண்டுவாழ்குழலி நாச்சியார் என்று அழகிய தமிழில் குறிப்பிடுகிறது.

அம்பிகைக் கோயில் உள்ளே எட்டுக் கைகளுடன் கொற்றவை உள்ளாள்.


வெள்ளைப் பிள்ளையார் கோயில் :

இத் தலத்தில் அரசர் முதல் ஆண்டிவரை எல்லா ரையும் கவர்ந்துள்ள கோயில், வெள்ளைப் பிள்ளை யார் கோயில். இது பெரிய மண்டபத்தில் அமைந் துள்ளது.

மண்டபம் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தது. மண்டபத் தூண்களில் சிற்ப நுணுக்கங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இங்குள்ள கல் பலகணிகளும் கல் குத்து விளக்குகளும் நாளெல்லாம் பார்த்துப் பார்த்து மகிழத்தக்கவை.

வெள்ளைப் பிள்ளையார் கடல் நுரையால் ஆனவர். அதனால் அபிடேகங்கள் கிடையா. பச்சைக் கற்பூரம் தூவி வழிபடுகின்றனர்.

'திருபாற்கடலைக் கடைந்தபோது தேவர்கள் விநாயகரை வழிபட மறந்ததால் அமுதம் கிடைக் காமற் போனது. இந்திரன், கடல் நுரையை எடுத்து விநாயகராகச் செய்து பூசித்தபின் அமுதம் கிடைத் தது. பின்னர், இந்திரன் இவ் விநாயகரோடு இங்கு வந்து கலந்துவிட்டுச் சிவபெருமானை வணங்கினான். திரும்ப விநாயகரை எடுக்க முடியாததால், அவன் அங்கேயே விநாயகரை பிரதிட்டை செய்துவிட்டுத் தேவலோகம் திரும்பிச் சென்றான். அவன் நினை வாக இப்போதும் ஒன்பதாம் நாள் விழா இந்திர பூசை யாக நடைபெறுகிறது' என்று தல புராணம் கூறுகிறது.



வெள்ளைப் பிள்ளையார் ஆனதால், வடமொழியில் 'சுவேத விநாயகர்' என்கின்றனர்.

இப்பிள்ளையார்மீது, முதலாம் இராசராச சோழன் (கி.பி. 985-1014) முதலாக அவன் குடும்பத்தினரும் மரபினரும் கொண்டிருந்த பக்தி அளவிடற்கு அரிது.

வலஞ்சுழி நாதர் கோயிலுக்குக் கொடுக்கப் பட்டுள்ள நன்கொடைகளைவிட நான்கு மடங்கு அதிகமாக வெள்ளைப் பிள்ளையாருக்கே அளிக்கப் பெற்றுள்ளது.

ஆவணி சதுர்த்தியை ஒன்பதாம் நாளாக வைத்து வாணி, கமலையுடன் விநாயகருக்குப் பெருந்திருவிழா நடைபெறுகிறது.

முதலாம் இராசராசன் குடும்பத்தினர் செய்த திருப்பணிகள் :

கோவிராஜகேசரி பன்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 25ஆவது (கி.பி. 1010) உடையார் ஸ்ரீராஜராஜதேவர் மகாதேவியார் தந்திவிடங்கி யாரான ஸ்ரீ உலோகமகாதேவியார் பிள்ளையார் க்ஷேத்திர பாலதேவருக்குக் கற்கோயில் எழுப்பினார்.

நம்பிராட்டியார் உலோகமாதேவியாரும் அவருடைய திருமகள்களான குந்தவைப் பிராட்டியாரும், நடுவில் பெண்பிள்ளை நங்கையாரும் பிள்ளையாருக்குப் பொன் ஆபரணங்கள் நிரம்ப அளித்தனர்.

பிள்ளையார் க்ஷேத்திரபாலர் கோயிலைக் கற்கோயிலாகக் கட்டிய பேரரசி உலோகமாதேவியார், குடிஞைக்கல்லால் (பொன் வெள்ளி எடையிடும் அளவைக் கல்) பொன் 106 கழஞ்சே முக்காலே அரைக்கால், துடர் ஒன்றினால் பொன் 32 கழஞ்சே முக்கால், பிள்ளையாரை வணங்கித் தொழுத பொற்பூக்கள் 2 கழஞ்சு முக்காலே அஞ்சுமா, நூறு காசு மாற்றீ பொன் 69 கழஞ்சு அரையே மா ஆகிய பொன் கொடுத்தான்.

முதலாம் இராசராசனின் மகளும் விமலாதித்தனின் மகாதேவியும் ஆன குந்தவைப் பிராட்டியார், இப் பிள்ளையாருக்குப் பொன் 222 கழஞ்சால் செய்த முகம் (அணிகலன்களின் அழகுக்காகவும் புடைப்புக்காவும் இரத்தினக் கற்கள் வைத்து இழைக் கப்படும் முகப்பு) ஒன்று, தகடு (பொற்றகடு) 12, பொன் 11இல் கள்ளப்பூ (கள்ளிப்பூ வடிவில் செய்யப் பட்ட பொற்பூவணி) 36, தவளை வாய் (தவளையின் வாய்போன்ற பொற்பூக்களால் அழகு செய்யப்பட்ட தொங்கல்) 1, சவக்கம் 1, சவக்கத்தில் தாலி மூன்றினால் படுகண் (மாலையாகச் செய்யப்பட்ட பொன் அணியின் இருமுனையின் ஒற்றில் அமைப்பரும் வளையம் போன்ற பகுதி) 27, கள்ளிப் பூ 30, முத்தில் கோத்த மாங்காய் 2, அரசிலை 1, தகட்டுக் குழை 4 ஆக பொன் 40 கழஞ்சும் திருமுடி ஒன்றினால் பொன் 182 கழஞ்சும் ஆகப் பொன் 22 கழஞ்சு... திருவரைபட்டிகை ஒன்றினால் தவளைவாய் 2, படுகண் 8, கள்ளிப்பூ 7, அரசிலை 1, கோக்குவாய் 1 உள்படப் பொன் 49 கழஞ்சே முக்காலே மஞ்சாடியும் இரண்டு மாவும்... ஆகிய பொன்கலன்களைக் கொடையாக அளித்தாள்.

அடுத்து முதலாம் இராசராசன் திருமகளும், குந்தவைக்கும் இராசேந்திரனுக்கும் இடையில் பிறந்தவருமான நடுவில் பெண்பிள்ளை நங்கையார் மாதேவடிகள் மிறுக்கன் வளையில் இரண்டினால் பொன் 40 கழஞ்சே ஏழு மஞ்சாடியும் குன்றியும், பொன் அரைக் கழஞ்சே அரைக்காலினால் செய்த பொற்பூ ஒன்றும் மற்றும் பலவும் கொடுத்தாள்.[1]

முதலாம் இராசேந்திரன் திலபர்வதம் புக்கருளி ஸ்ரீபாத புஷ்பம் அட்டித் தொழுதான்

முதலாம் இராசேந்திரனின் 3ஆவது ஆட்சி யாண்டில் திலபர்வதம் புக்கருளினான். மனிதன் புகத்தக்க ஒரு குடத்தில் எள் (திலம்) நிரப்பி, யாக வேதிகை செய்து பொன் முதலானவற்றை வேதியர்க்கு அளித்தல் திலபர்வதம் புக்கருளுதல் என்பர். இதன்பின் இராசேந்திரன் பொற்பூக்கள் பன்னிரண்டால் பிள்ளையாரின் திருவடிகளைப் பூசித்தான்.

அப்போது அவனுடைய அரசியான வளவன் மாதேவியும் உடனிருந்து, பொற்பூ ஒன்றினை அளித்தாள்.[2]

உலோக மாதேவியார் இரண்ய கர்ப்பம் புகுந்த செய்தி

முதலாம் இராசராசன் பிராட்டியார் உலோக மாதேவியார் அவனிநாராயணச் சதுர்வேதி மங்கலத்துத் திருவிசலூருடைய மகாதேவர் கோயிலில் இரண்ய கர்ப்பம் புக்கருளின செய்தி இக் கோயிலில் உள்ள கல்வெட்டால் அறிகிறோம்.

இரண்யம் - பொன். இரண்ய கர்ப்பம் என்பது, பொன்னால் மனிதன் புகத்தக்க ஒரு குடம் விதிப்படி செய்து யாக வேதிகையில் இருத்திப் பூசித்து அதில் தலைவன் புகுந்து கிழக்காக இருக்கும்போது கர்ப்ப தானம், சீமந்தம் முதலியன செய்து வலப்பக்கம் அருகும் அத்திப்பழமும் பிழிந்து பின் தலைவன் குடத்தினின்று எழுந்த பின்பு சாத கர்மம் முதலியவை செய்வித்து வேதியர்க்கு அமுது அளித்து 30 கழஞ்சிப் பெண் உரு செய்வித்துக் கோயிலுக்கு அதைத் தானமாக அளித்து குடத்தையும் மற்ற பொருள்களையும் வேதியர்க்குத் தானம் செய்தலாகும்.[3]

உலோகமாதேவி, திருவிசலூர் கோயிலில் இவ்வாறு செய்தபின் திருவலஞ்சுழி பிள்ளையாருக்குக் கொடையளித்துள்ளாள்.[4]

இராசராசன் பிறந்த நாள் நினைவு

முதலாம் இராசராசன் தனது 21ஆவது ஆட்சி ஆண்டில் திருவல்லத்தில் தங்கியிருந்தபோது தனது பிறந்த நாள் நினைவாகத் திருவலஞ்சுழிக் கோயிலில் உலோகமாதேவியார் வைத்த க்ஷேத்திர பால தேவர்க்கும் கணபதியார்க்கும் நிலக்கொடை அளிக்கப் பெற்றது.[5]

1. S.I.I. Vol VIII No 234., A.R. No 633/1902
2. S.I. I. No 236., A.R. No 633B/1902
3. தமிழ் லெக்சிகன், தொகுதி VI
4. S.I.I. Vol VIII No 237., A.R. No 633c/1902
5. S.I.I. Vol VIII No 223, A.R. No 624 A/1902

தேவரடியார் பெண்கள் வைத்த மூவர் சிலைகள்

இரண்டாம் இராசராசன் ஆட்சியில் (26.3.1158) திருவலஞ்சுழி உடையார் திருமடை விளாகத்தில் இருக்கும் தேவரடியார்களான ஆட்கொண்டான் தேவும் திருவும் உடையாள் என்பவளும் கிழக்கடைய நின்றாள் என்பவளும் கோயிலில் திருநாவுக்கரசர், திருவாத வூராளிகள் (மாணிக்கவாசகர்) திருக்கண்ணப்பர் ஆகிய மூவருடைய சிலைகளையும் எழுந்தருளுவித்து, அச்சிலைகளுக்கு நித்தப் படிக்கு நிலக் கொடை யளித்து நீர்வார்த்துக் கொடுத்தனர்.[6]

பெருமாள் நம்பியாளுடையான் விளக்கெரிக்க ஆடுகள் கொடை

இரண்டாம் ராஜாதிராஜன் ஆட்சியின்போது (10.8.1170) செயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க் கோட்டத்துச் சிறு குன்ற நாட்டுக் காரிகைக் குளத்தூர் குளத்துழான் பெருமான் நம்பியாளுடையானான செய தரப்பல்லவரையக் கோன், திருப்பள்ளியறைப் பெரிய நாச்சியாரின் முன்பு திருவிளக்கெரிய அஞ்சு நிலைத் தாரா குத்துவிளக்கு இரண்டுக்கு 192 ஆடுகளைக் கொடையாகக் கொடுத்தான்.

கல்வெட்டுகள்

இக் கோயிலில் 39 கல்வெட்டுகள் உள்ளன.

முதலாம் இராசராசன் (கி.பி. 985-1014), முதலாம் இராசேந்திரன் (1012-1044) விக்கிரம சோழன்(1118 35) முதலாம் இராசாதிராசன் (1018-1054) இரண்டாம் இராசராசன் (1146-1163), இரண்டாம் இராசாதிராசன் (1163-1178), மூன்றாம் குலோத்துங்கன் (1178-1218) மூன்றாம் இராசராசன் (1216-1256), கோப்பெருஞ் சிங்கன் (1264& 67) ஆகிய அரசர்கள் காலத்தில் கோயிலுக்கு அளிக்கப் பெற்ற நிலக் கொடைகள், திருப்பணிகளுக்கான கொடைகள், ஆடுகள் முதலான வற்றை அக்கல்வெட்டுகள் கூறுகின்றன.


நிறையுரை

சோழ நாட்டுக் கோயில்களுள், சோழ நாட்டு அரசர்களும் அரசியரும் ஏனையோரும் நேரில் பங்கு கொண்டு திருப்பணிகள் செய்து சிறப்பித்துள்ள திருவலஞ்சுழி நாதர் கோயிலை நாமும் வணங்கலாம்; நற்பேறு பெறலாம்.


---

6. A.R.No 628 - 1902


7. A.R. No 627 - 1902



லக்ஷ்மி ரமணன்



★ மணல் மேட்டில் பிரயாணம்



★ தண்ணீர்! தண்ணீர்!


பாலையில் பூக்கும் வசந்தம்

இயற்கை மனித இனத்துக் கென்றே அபார சௌந்தர்யங் களையும், சௌகரியங்களையும் அளித்துள்ளது.

உயர்ந்து நிற்கும் மலைகள், அவற்றின் உச்சியில் தோய்ந் திருக்கும் பனிப்படலம், உறைபனி, உருகிப் பெருகி ஓடும் நதிகள், அவற்றோடு இணையும் சிற் றாறுகள், அத்தனை தண்ணீரை யும் விழுங்கி ஜீரணித்து அலை பாயும் சாகரம், பசுமை தேங்கிக் கிடக்கும் காடுகள் இவை எல் லாமே அழகானவை. பாலைவன மும் அத்தனை சுந்தரமானது; அழகானது. இதன் மண் வளமை யானது. தண்ணீர் மட்டும் இருந்து விட்டால் எத்தனை பாலையாக இருக்கும் பிரதேசத்தையும் சோலையாக மாற்றிவிடலாம்!

ராஜஸ்தானம் என்றால் இதன் சரித்திரத்தை உருவாக்கிய அர சர்களைவிட, பாலைவனமும், ஒட் டகமும்தான் மக்களுக்கு ஞாபகம் வருகிறது. அதற்காக அவர் களைக் குற்றம் சொல்ல முடியாது. உலகில் உள்ள பெரிய பாலை வனங்களில் மூன்றாவது ஸ்தானத்தை வகிக்கும் தார் பாலைவனத்தின் மடியில் ராஜஸ் தான் மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பான 3.42 லட்சம் சதுர கிலோ மீட்டரில், கிட்டத்தட்ட 1.88 லட்சம் சதுர மைல்கள் பரவிக் கிடக்கிறது. அதாவது சுமார் அறு பது சதவிகிதம் பாலைவனம் என்றுசொல்லலாம்.

ஜெய்சல்மீர், பார்மீர், ஜோத்பூர், ஜாலோர் நாகோர், பாலி, கங்கா நகர், சூரு, சீக்கர் ஜீஞ்ஜீனு ஆகிய



★ கடுகு வயல்

ஜில்லாக்கள் இந்தப் பாலைவனப் பகுதியில் அடக்கம். ஆகாய மார்க்கத்திலிருந்து பார்க்கையில் இந்திய பாகிஸ்தான் எல்லையும், இரண்டு நாடுகளுமாகப் பகிர்ந்து கொள்ளும் பாலைவனப் பிரதேசமும் மணல் மகா சமுத்திரமாகத் தெரிகிறது.

மிக அதிக உஷ்ணம், அதிகமான குளிர் என்கிற ரக சீதோஷ்ண நிலை. அதிர்ஷ்டமிருந்தால் இப்பகுதிக்கு எட்டு முதல் முப்பது சென்டிமீட்டர் வரை மழை பெய்யலாம். குடிநீர் இங்கு வைடூர்யங்களைவிட அமூல்யமான சாதனம். ஒரு குடம் தண்ணீருக்காக, கிணற்றைத் தேடி மக்கள் பதினான்கு மைல்கள்வரைகூட நடக்க வேண்டிய தலை எழுத்துள்ள வரட்சிப் பிரதேசங்கள் இன்னமும் இந்தப் பகுதிகளில் இருப்பதை மறுக்க முடியாது. பல கிராமங்களில் குழந்தைகள் மழையையே பார்த்தது கிடையாதாம். அப்படிப்பட்டவர்களின் அறிவை விசாலப்படுத்த, பிகானீர் நகரத்தில் லால்கர் அரண்மனையில், மழை எப்படி உண்டாகிறது என்பதைச் சுவரோவியம் தீட்டி விளக்கி இருப்பதைக் காண நம் மனம் நெகிழ்கிறது.

கிணற்றைத் தேடிப் போவது இருக்கட்டும். அதில் நீரின் மட்டம் அதல பாதாளத்தில் பல நூறு மீட்டர்கள் ஆழத்தில் இருக்குமாம். ஒரு குடம் தண்ணீர் இழுக்க பெண்கள் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கிற அளவுக்குச் சிரமப்படவேண்டும் என்று யாரோ சொன்னார்கள். நாம் அதை நம்பலாம்!



★ கால்நடைகளுடன் நாடோடிக் குடும்பம்

படிக்கும்போதே நாவரண்டு தாகம் எடுக்கிறதல்லவா? தண்ணீர் கேட்காதீர்கள்! கேட்டால் குடிக்க இங்கே பால்தான் கிடைக்கும்! 'A bath is a luxury here!' என்று ஒரு பேராசிரியர் தன் கட்டுரையில் எழுதி இருந்தார். ஆமாம்... குடிக்கவே தண்ணீர் கிடைப்பது அரிது என்றால் குளிக்க எங்கே முடியும்?


உருக்கி எடுக்கும் உஷ்ணமும் குளிர்காலத்தில் நடுக்கிவிடும் குளிரும் இங்கேயுள்ள சீதோஷ்ண நிலை. கோடையில் மட்டுமின்றி எந்நேரமும் முகத்தில் மணலை அள்ளி வீசும் மணல் காற்று. அந்தக் காற்றில் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து தேய்ந்து காணாமல்போய் இடம் பெயர்ந்து விடும் மணல் குன்றுகள். பெரிய குன்றுகளை Sandunes என்கிறார்கள். சில சமயம் இவை 200 அடி உயரம் வரைகூட இருக்குமாம். சிறிய மணல் மேடுகளை Tibas என்கிறார்கள். மணல் காற்று மூடி சாலையை மறைத்துவிடுகையில் பிரயாணிகளுக்கு வந்த வழியும் தெரியாமல், போகிற வழியும் புரியாமல் திக்குமுக்காடிப் போவார்கள். சாலை வழியே பிரயாணம் செய்தால் பல மைல்கள் தூரத்திற்கு மனித சஞ்சாரமே இருக்காது. 'நாமே காணாமல் போய்க் கொண்டிருக்கிறோமோ' என்கிற பயத்தை அந்தத் தனிமை உண்டு பண்ணும். ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 96 பேர்கள்கூட வசிப்பதில்லை. ஆனால் இது மட்டுமே தார் பாலைவனத்தின் வரைபடமாகிவிடாது.



★ கால்வாயிலிருந்து வாய்க்காலில் வயலுக்கு ஓடும் தண்ணீர்

மேற்கு எல்லையில் இந்தப் பாலைவனத்தை இந்தியாவும் பாகிஸ்தானும் பகிர்ந்து கொள்ளுகின்றன. மனித சஞ்சாரமே இல்லாத மணல் பிரதேச எல்லைப்

புறத்தைப் பாதுகாப்பதும் அரசுக்குப் பெரிய பிரச்னைதான். கடத்தல்களையும், அத்துமீறின நுழைவாளர்களையும் தடுக்க எல்லைப்புறப் பாதுகாப்புப் படையினர் விழிப்புடன் கண்காணிப்பு நடத்துகிறார்கள். தற்போது பாதுகாக்க மிகவும் பிரச்னைக்குரிய இடங்களில் பிரம்மாண்ட இரும்புக் கம்பிகளால் பின்னப்பட்ட வேலியிட்டு வருகிறார்கள்.




★ ஜெய்சல்மீர் கோட்டை

தார் பாலைவனம் படர்ந்திருக்கும் எல்லா இடங்களிலுமே வரட்சி தாண்டவமாடுவதாக நாம் நினைத்துவிடக்கூடாது. Rann of Kutch (ரன் அஃப்கட்ச்)ன் மலைப் பாங்கான, மனித சஞ்சாரமற்ற பிரதேசமும், கோட்டைகளும், ஹவேலிகளும் கொண்ட ஜெய்சல்மீர் பிகானீர் நகரங்களும் இன்னும் கங்க் கால்வாயால் செழிப்பைப் பெற்றுள்ள கங்கா நகர் பகுதியும் இந்தப் பாலையின் பல முகங்கள்.

பாலைவனம் இங்கே எப்படி வந்தது என்கிற கேள்விக்கு இரண்டுவித பதில்கள் கிடைக்கின்றன. ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதி கடலுக்கடியில் இருந்திருக்கலாம் என்றும், நாளாவட்டத்தில் வங்கக் கடல் பின்வாங்கி வெகு தூரம் போய்விட அது விட்டுச் சென்ற மணல் பிரதேசம் சீதோஷ்ணத்தில் அடிபட்டு இப்படியாகிவிட்டது என்பதும் ஒரு சாரார் கூற்று.

பைராட் என்கிற விராடபுரியிலும் (மகாபாரத காலத்தில் பஞ்சபாண்டவர்கள் அக்ஞாத வாசம் செய்த இடமாம் இது!) பிகானீரிலுள்ளரங்க் மஹல்என்னும் இடத்திலும், காலி பங்கன் (கங்கா நகரில் உள்ளது) எனுமிடத்திலும் புதைபொருளாய்வாளர்கள் கண்டெடுத்த விவரங்களின்ப்டி முற்காலத்தில் பிகானீர், ஜோத்பூர் ஜெய்சல்மீர் பகுதிகளில் பரவியிருந்த நாகரிகம் ஹரப்பா நாகரிகத்தை ஒத்திருந்ததாகவும், இவ்விடங்களை இணைத்துப் பின்னிய நதிகளில் பெருக்கம் இருந்திருக்கலாம் என்றும், அவற்றில் ஒன்று சரஸ்வதி நதியாக இருந்திருக்கலாம் என்றும் அனுமானித்திருக்கிறார்கள். காலப் போக்கில் இயற்கையில் ஏற்பட்ட மாறுதல்களால் இந்நதிகள் மறைந்துவிட்டிருக்கலாம் என்றும், அவற்றைச் சார்ந்திருக்கக் கூடிய காடுகளை மக்கள் வீடு கட்டவும், எரிபொருளாகப் பயன்படுத்தவும் அழித்துவிட்டதால் மழை இன்றி, வரட்சி ஏற்பட்டுப் பாலைவனம் தோன்றியிருக்கலாம் என்பது இந்த ஆராய்ச்சியின் முடிவு. மகாபாரதத்தில் சரஸ்வதி நதியானது பாலைக்குள் புதையுண்டு மறைந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறதாம். நம் நாட்டில் பாலைவனப் பகுதி ராஜஸ்தானத்தில் இருப்பதால் சரஸ்வதி நதியும் இங்கே இருந்திருக்க வேண்டும் என்று எண்ணும்படி இருக்கிறது. இந்தப் பாலைவனத்தின் வயது சுமார் 20,000 ஆண்டுகள் இருக்கலாம் என்கிறார்கள்.



★ ஒட்டகக் கூட்டம்

கக்கர், லூனி என்கிற நதிகளும் கோட்னி என்கிற சிற்றாறும் தவிர இப்பகுதியில் வேறு நதிகள் கிடையாது. இந்நதிகளும் ஜீவ



★ மணல் மேட்டில் பிரயாணம்

நதிகளல்ல. மழைக் காலத்தில் உயிர்பெற்று அடுத்த பருவத்திலேயே ஜீவனற்றுப் போகும் இவை காட்டாறுகளைப் போலத்தான் பிரவகிக்கின்றன. இந்த ஆண்டு லூனி நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுப்பிரளயம் வந்தது கலியுக அதிசயங்களில் ஒன்று!

இப்பிராந்திய மக்களின் முக்கிய தொழில் கால்நடை வளர்ப்பும் விவசாயமும்தான். கிராமத்தை இங்கு தாணி (Dhani) என்கிறார்கள். ஒரு தாணியில் பத்து அல்லது பதினைந்து குடிசைகளே இருக்கும். இவை பார்ப்பதற்கு வெகு கச்சிதமாய், கொலுப்பொம்மைகள் மாதிரி அழகாய் இருக்கின்றன. ஒரு தாணிக்கும், இன்னொன்றுக்கும் இடையில் தூரம் முப்பது மைல் கூட இருக்கும்.

இங்குள்ள ஜனத்தொகையில் பெரும்பகுதியினர் நாடோடிகள். கிணறுகள் வற்றிக் கருமை படர்ந்து பசுமை தீர்ந்து போகும்போது இவர்கள் தங்கள் கால்நடைகளுடன் இன்னொரு அனுகூலப் பிரதேசத்திற்கு (அதாவது தண்ணீரும் பசுமையும் உள்ள இடம்) இடம்பெயருகிறார்கள்.


இவர்கள் வாழ்க்கை கடினங்கள் நிறைந்தது. நகர்ந்து கொண்டே இருக்கும் இவர்களுக்குத் தங்கள் குடும்பத்தாருடன் தொடர்பே அபூர்வமானது. தாங்க முடியாத வெப்பத்தைத் தவிர பொருளாதார ஸ்திரமின்மையும் இவர்கள் பிரச்னைகளின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவை. மின்சாரம், டெலிபோன் என்கிற நவீன வசதிகளை இவர்கள் அறியாதவர்கள். பள்ளிக்கூட வசதிகளும் இங்கில்லை. சில கிராமங்களுக்குச் செல்ல நேரடியான பாதை கிடையாது. ஒட்டகங்கள் மட்டுமே இங்கே கிடைக்கக்கூடிய வாகன வசதி! ஒட்டகங்களின் முதுகில் தோல்பைகளில் தண்ணீரைக் கிணற்றிலிருந்து எடுத்துச் சென்று சேகரித்து வைத்துக் கொள்வார்கள். ஒட்டகங்கள்தான் இங்கு நடமாடும் தபால் நிலையம்.

இந்த மணல் பிரதேசத்தில் எரிபொருளான எண்ணெய், எரிவாயுவும் புதையுண்டு கிடக்கலாம் என்று அனுமானிக்கப்பட்ட இடங்களில் டிரில்லிங் செய்து பார்த்துப் பரிசோதனை செய்து கொண்டிருக்கிறார்கள் ஓ.என்.ஜீ.ஸியினர். இவர்கள் பரிசோதனை வெற்றி பெற்றால் நம் எரிபொருள் தேவைகள் பெரும் அளவுக்குப் பூர்த்தி செய்யப்படும் என்பதை நினைத்து நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.


1907 ஆம் ஆண்டு சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி இந்தப் பாலைவனத்திலும் சுமார் 510 வகைகளில் புஷ்பிக்கும் செடிகள் இருப்பதை நாம் அறியலாம். இவற்றில் அநேகம் காட்டுப்புல் (Wildgrass), படர் செடிகள் (Shrubs), மற்றும் புதர் (Bushes) வகைகள். இதன் பிறகு இந்த மண்ணில் இன்னும் என்னென்ன விளையலாம் என்றறியப் பரிசோதனைகள் தொடர்ந்தன.

இந்தப் புல் புதர் வகைகளிலேயே தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தேடிப்பிடித்து அவற்றை உபயோகப்படுத்த மக்கள் பழகிக் கொண்டிருக்கிறார்கள்.

கேஜ்ரா (Khejra) என்கிற மர வகை ஒன்று. இதன் வேர்கள் பூமிக்குள் ஊடுருவும் தன்மை பெற்றவை. எத்தனை வேகமான மணல் காற்றிலும் இதன் இலைகள் உதிராதாம். இதன் இலைகள்



★ தாணியில் குடிசைகள்



★ பாலைவனப் புல் வரிசை

ஒட்டகத்தின் உணவு. இந்த மரம் எரிபொருளாகவும், குடிசைகளின் கூரைகளுக்கும் உபயோகப்படும். இதன் பழங்களை மக்கள் சாப்பிடுகிறார்கள். பாலவனம் பரவாமல் தடுக்கத்தற்போது இந்த மரங்களை நிறைய நடுகிறார்களாம்.

ரோஹிதா (Rohita) மரம் கதவுகள், Furniture செய்யவும் உதவும். இதன் பூக்கள் மஞ்சளாகவும் ஆரஞ்சு நிறத்திலும் பார்க்க அழகாக இருக்கும்.

கேர் (Kher) என்பது ஒருவித படர் செடி ரகம். மரம் அளவுக்கு உயரமாகவும் இவை வளருவதுண்டு. இதற்கு இலைகள் கிடையாது. ஆண்டொன்றுக்கு இரு முறை புஷ்பிக்கும். இதன் மலர்கள் சிகப்பாய் சின்னதாய் இருக்கும். இதன் காய்களை சாங்கடி என்கிற வேர் இனத்தோடு சேர்த்து மசாலாக்கறியும், ஊறுகாயும் தயாரிக்கிறார்கள். பழம் சுவையானதாம். தண்டுப்பகுதி ஆடுகளுக்கும், ஒட்டகங்களுக்கும் உணவாகிறது.

Phog (ஃபோக்) செடி புதர் வகையைச் சேர்ந்தது. முட்கள் இல்லாத இவை உலர்ந்த பின்னர் கூட ஒட்டகங்களுக்கு உணவு.

AK N AKRA (அக்ரா) என்னும் தாவரம் கடும் வெயிலிலும் உலர்ந்து போகாதாம். இதன் முளை மருந்தாகப் பயன்படும். இதன் காய் வெடித்து பருத்தியைப் போன்ற சாதனம் வெளிப்படுகிறது. இதைத் தலையணைக்குள் அடைக்கலாம்.

பாபுல், பன்வால் மரங்களில் சுரக்கும் பிசின் ஒட்டுவதற்குப் பயன்படும்.

Watermelon என்னும் தர்பூசணிக் கொடி இங்கே வளர்ந்து படர்வது இன்னுமொரு அதிசயம். தண்ணீரே இல்லாத பாலைவனத்தில் தண்ணீர்மயமான இப்பழம் மனித வர்க்கத்தின் தாகத்தைச் சாந்தப்படுத்த இறைவன் அளித்த வரப்பிரசாதம்.

கொஞ்சம் செழுமையுள்ள பகுதிகளில் மால்டா, சாத்துக்குடி, எலுமிச்சை, பீலு பழங்கள் பயிராகின்றன. Red blood malta என்னும் ஒருவித சாத்துக்குடி பழத்தை உரித்தால் உள்ளே சுளைகளில் சிகப்பு நிறம் புரையோடி இருக்கும்.

Lasoda' மரத்தை நட்டபிறகு ஒரு ஆண்டு வரைதான் இதற்குக் கொஞ்சம் தண்ணீர் தேவைப்படுமாம். பச்சைலசோடா ஊறுகாய் போட உபயோகமாகிறது.

கொஞ்சம் மழை பெய்தால்கூடப் போதும் தாவரவகைகள் இம்மண்ணில் தோன்றிவிடும். பாரூத் என்கிற புல் வகையின் விதைகளைப் பொடித்து மாவாக்கி மக்கள் பஞ்சகாலத்தில் சாப்பிடுவார்களாம். இங்குள்ள முட் புதர்களுக்கு, வளர, காற்றிலுள்ள ஈரப்பசையே போதுமானதாம்.

'பறவைகளுக்கும் இங்கே பஞ்சமில்லை. Indian Bustard பறவை ஜெய்சல்மீர் பகுதியில் குளிர்காலத்தில் நிறைய வெளிநாட்டுப் பார்வையாளர்களை ஈர்க்கிறதாம். சுயேச்சை ராஜ்யங்களாக இருந்த போது, இங்கே பறவைகளையும், மிருகங்களையும் வேட்டையாடுவது மன்னர்களின் பொழுது போக்காக இருந்தது. இப்போது இந்த இனங்களைக் காக்க வேட்டையாடுவதை அரசு தடை விதித்துள்ளது.

ரன் ஆஃப் கட்சில் காட்டுக் கழுதைகளும் பழுப்பு எலிகளும் அதிகமாம். மற்ற பகுதிகளில் மைனா, குருவி, புறா, ராபின், Bulbul, காகம் ஆகிய பறவைகளையும் காணலாம். குளிர் காலத்தில் வெளிநாடுகளிலிருந்து பறவைகள் அடைக்கலம் தேடி இங்கே வருகின்றனவாம். Grey Patridge, Tilod, Crane போன்றவை இதில் அடக்கம்.

Indian Bustardன் மாமிசம் மிகவும் ருசியானது என்று இதை வேட்டையாட முன்பெல்லாம் வெளிநாட்டு விருந்தினர்கள் வருவார்களாம்.

பாம்புகள், வெட்டுக்கிளிகள், தேள்கள் இவைகளும் இங்கே அதிகம். பாம்புகளிலேயே பல வகைகள் உண்டு. பீனா (Pina) என்கிற அபூர்வரகப்பாம்பு மனிதர்கள் தூங்குகையில் அவர்கள் சுவாசக் காற்றில் தன் சுவாசக் காற்றைக் கலந்து புதிய முறையில் கொல்லும். இப்பாம்புகளுக்கு வெங்காயம் பூண்டு வாசனை என்றால் பிடிக்காதாம். (ஆசாரப் பாம்புகள் போலும்!) அதனால் சாப்பாட்டில் வெங்காயம் பூண்டு சேர்த்து இங்கே சாப்பிடுகிறவர்கள் அதிகம்.

பாலைவனத்தின் மற்றொரு பிரச்னையான Locust invasion (வெட்டுக்கிளி படையெடுப்பு) இங்கும் உண்டு. மேற்கு ஆசியாவிலிருந்து வெட்டுக்கிளிப் படை கிளம்பி சிந்த் பாலைவனத்தை பாகிஸ்தான் பகுதியில் கடந்து



★ மணல் மேடுகள்

மே, ஜூன் மாதங்களில் இந்திய எல்லைக்குள் புகுந்து பயிர் பச்சைகளை அழிக்கின்றன. இதைத் தடுக்கவும், இவை முட்டையிட்டுப் போகாவண்ணம் நடவடிக்கை எடுக்கவும் மாநில அரசு ஒரு அலுவலகத்தை ஜோத்பூரில் நிறுவியுள்ளது.

இந்தப் பாலைவனத்துக்குப் பசுமையளிக்க ஏற்பட்ட திட்டம் தான் ராஜஸ்தான் கால்வாய் எனப்பட்ட 'இந்திரா காந்தி கால்வாய்த் திட்டம்'. பாலைவனத்துக்கு நீர்ப்பாசன வசதியளிக்கக் கால்வாய் வெட்டுவது என்பது அத்தனை சுலபமான வேலையல்ல. பிகானீரில் அதன் அரசரால் கட்டுவிக்கப்பட்ட கங் கால்வாய் தான் இதன் முன்னோடி. பிகானீர் சுயேச்சை ராஜ்யமாக இருந்த போது அதன் பிரதம பொறிஇயல் நிபுணராக (Chief Engineer) இருந்த திரு. கன்வர் செய்ன் என்பவர் பிகானீர் ராஜ்யத்துக்குத் தேவையான தண்ணீர் பற்றி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுகையில் 'சட்லெஜ், பியாஸ் நதிகளின் நீரை Harika என்னுமிடத்தில் தேக்கி கால்வாய் மூலம் ராஜஸ்தான் பாலைவனப் பகுதிகளுக்கு எடுத்து வந்து நீர்ப்பாசனத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாமே' என்று ஆலோசனை தெரிவித்தார். இதன்படி 1951-53 இல் கால்வாயின் வேலைகள் துவங்கின.

1952 இல் உலக வங்கியின் உதவியுடன் சிந்து நதியின் நீரின் பிரயோகத்துக்கான இந்திய - பாகிஸ்தான் நாடுகளின் தேவைகள் நிர்ணயிக்கப்பட்டு Indus water Treaty ஒன்று (ஒப்பந்தம்) இரு நாடுகளுக்குள் கையெழுத்தாயிற்று. இதன்படி ராவி, பியாஸ் நதிகளின் நீர் முழுவதையும் இந்தியா பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது தீர்மானமாயிற்று.

இந்தக் கால்வாயால் 13.58 லட்சம் ஹெக்டேர் நிலம் பயனடையும்.

இந்தக் கால்வாய் முக்கியமாய் தார் பாலைவனத்தில் பசுமை மலரச் செய்யப் பயன்படுகிறது. இந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்டபின் பருத்தி, நிலக்கடலை, கோதுமை, பருப்பு, கடுகு ஆகிய விளைச்சல்களை இம்மண் தந்துள்ளது. ஆயிரக்கணக்கான பாலைவனவாசிகளுக்கு வேலை வாய்ப்பை இத்திட்டம் தந்துள்ளது.

இதனால் பூகோள அமைப்பே மாறிப்போய் அங்கங்கே வசந்தம் பூக்கச் சிற்றூர்களும், மில்களும், தொழிற்சாலைகளும் தோன்றியுள்ளன. குடிநீர்ப் பிரச்னையும் கால்வாயைச் சார்ந்துள்ள பகுதிகளில் தீர்க்கப்பட்டுள்ளது.

திட்டக் கமிஷன் இந்தக் கால்வாயைக் கட்டும் வேலைகளுக்காக முதல் பகுதியில் ரூ. 110.20 கோடியும் இரண்டாவது அடுத்த பகுதிக்காக 89.12 கோடி ரூபாயும் ஒதுக்கியது.

ராஜஸ்தான் பிரதான கால்வாய் மட்டும் 189 கி.மீட்டர் நீளமுள்ளது. ஹரீக் (Harike) தேக்கத்திலிருந்து இதன் முழுநீளம் 393 கி.மீட்டர் எனப்படுகிறது.

1977 இல் மறுபடியும் இந்தத் திட்டத்தில் திருத்தங்கள் புகுத்தப்பட்டு, இதனால் அனுகூலம் பெறக்கூடிய இன்னும் சில புதிய பகுதிகளும் சேர்க்கப்பட்டன. இக்கால்வாயினால் ஜெய்சல்மீர், கங்காநகர், பிகானீர், ஜோத்பூர் மற்றும் பார்மீர் ஜில்லாக்கள் தண்ணீர் வசதி பெற்றுப் பயனடையுமாம்.


கால்வாயை அடுத்துள்ள மணல் பிரதேசங்களிலுள்ள மணல் கோடையில் வீசும் அதிகவேக மண் காற்றில் மேலே எழுந்து, கால்வாய்க்குள் படர்ந்து தண்ணீரின் ஓட்டத்தைத் தடைப்படுத்தலாம் என்று எதிர்பார்த்துக் காட்டிலாக்கா அதிகாரிகள் இங்கு மரங்களைப் பெரும் அளவில் நடுகிற afforestaton புரோக்ராமை மேற்கொண்டுள்ளனர். இதனால் மணலின் எழுச்சி தடுக்கப்படும்.

சமீபகாலமாக மக்களிடம் பரபரப்பாகப் பேசப்பட்ட விஷயம் பாலைவனத்தின் பரவல்தான். தார் பாலைவனம் நாளுக்கு நாள் பரவி ராஜஸ்தானின் மற்ற பகுதிகளையும் விழுங்கி டில்லிவரை நீண்டுவிடலாம் என்று பலர் பயப்பட்டார்கள். கவலையுடன் சர்ச்சித்தார்கள். இதன் பரவலைத் தடுக்க மிகவும் பெரிய அளவில் அங்கங்கே மரங்களை நடும் பணியை மாநில அரசு மேற்கொண்டுள்ளது. எனவே அந்தப் பயமும் அனுமானங்களும் இப்போது அடங்கி விட்டன.

இந்திரா கால்வாய் முழுதும் முடியும்போது இப்பாலைவனப் பகுதிகளில் எங்கும் பசுமையைப் பூக்கச் செய்து பாலைவனத்தின் வளர்ச்சியையும் பரவலையும் தடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இயற்கையை மனிதன் நினைத்தால் நிச்சயம் மாற்ற முடியும் என்பது இதனால் உறுதியாகிறது.



● செழிப்பான மஞ்சள்.



● காய்த்துக் குலுங்கும் இலவம் பஞ்சு மரம்.

நாடு வளம் காண நற்பணிகள்

எஸ்.எஸ். நாகராஜன்

● எள் வயலில் திரு. நல்லசாமி.






● வானளாவி வளர்ந்துள்ள தேக்கு மரங்கள்.

நமது நாட்டின் முதுகெலும்பு போன்றது வேளாண்மைத் தொழில். இதன் வளத்தில் நாட்டின் எதிர்காலம் அமைந்துள்ளதால் இதற்குத் தக்க கவனம் கொடுக்க வேண்டும். இந்த வளத்திற்கான பணிகளைப் பற்றித் தொழிலில் அனுபவமும், தேர்ச்சியும் பெற்றவரும் மக்களின் நன்மதிப்பினைப் பெற்றவரும் எடுத்துக் கூறினால் அதற்குத் தனி மதிப்பு உண்டு. பெரியார் மாவட்டம், ஈரோடு தாலுக்காவில் அமைந்துள்ளது அரச்சலூர். இப்பகுதியில் கீழ்பவானி பாசனம் இருப்பினும் இந்த ஊர் கடும் வறட்சிக்கு உட்பட்டதாகும். இந்த வறட்சிப் பகுதியில் ஒரு விவசாயப் பண்ணையை அமைத்து அதில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைப் புரிந்து வரும் திரு. செ.நல்லசாமி ஒரு விவசாயி மட்டுமல்ல. பல பட்டங்களைப் பெற்ற ஒரு வழக்கறிஞரும் ஆவார். இவரது கருத்துகளைத் தெரிந்து கொள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள், பத்திரிகை, தொலைக்காட்சி மற்றும் வானொலி நிருபர்கள் போன்றவர்கள் பலர் பண்ணைக்கு வருகின்றனர்.

இன்று விவசாயத்தில் Sustainable Agriculture, அதாவது தொடர்ந்து கட்டுபடியாகக்கூடிய தொழிலாக விவசாயம் இருந்து வருவதற்கான வழிமுறைகள் பற்றி விஞ்ஞானிகள் பேசியும், எழுதியும் வருகின்றனர். அரச்சலூர் பண்ணையில் இதுகுறித்துத் தெரிந்து கொள்ள வாய்ப்பு கிட்டுகின்றது. திரு. நல்லசாமி, தனது நிலத்திற்கு விடாமல் இயற்கை உரங்கள் இட்டு வருவதால் மஞ்சளின் அமோக மகசூல் எடுப்பதற்கு ரசாயன உரங்களை வாரிக் கொட்ட வேண்டிய அவசியமில்லை என்பதை, தான் சாகுபடி செய்துள்ள மஞ்சள் செடியிலுள்ள மகசூலினை நமக்குக் காட்டி இயற்கை உரங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். திரு. நல்லசாமி. பண்ணையில் எள் சாகுபடி செய்த நிலத்தில் மஞ்சள் அல்லது கடலை (Groundnut) சாகுபடி செய்யப் படுகின்றது. "எள் போட்ட இடத்தில் கொள்ளும் வராது" என்பார்களே - நீங்கள் எள் போட்ட இடத்தில் பணப்பயிர்களைச் சாகுபடி செய்கின்றீர்களே? இப் பயிர்களில் லாபம் குறைந்து விடாதா என்று கேட்டதற்குத் திரு. நல்லசாமி "எளைச்சவனுக்கு எள்ளு" என்பார்கள். நிலத்திற்கு இயற்கை உரங்கள் இட்டு நிலத்தைத் தெள்ளு புழுதியாக்கி, சாகுபடி காலத்தில் களையகற்றி, சீரிய பயிர் நிர்வாகம் செய்தால் எள் பயிரோடு நின்றுவிடாமல் அதைத் தொடர்ந்து சாகுபடி செய்யும் பயிர்களிலும் கணிசமான அளவு லாபம் கிட்டும் என்கிறார். கடும் வறட்சிப் பகுதியில் சாகுபடியில் ஈடுபட்டுள்ள இவருக்குப் பாசன நீர் பேரிலேயே கவனமாக உள்ளது. இவர் கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத்தின் தலைவராகவும் பணிபுரிந்து வருகிறார். பாசன நீர் அளித்து வரும் ஏரி, குளங்கள், குட்டைகள் இவைகளை ஆண்டுக்கு ஒருமுறை தவறாமல் பராமரிப்புச் செய்வது முக்கியம் என்கிறார். சேலம் மாவட்டத்தில் பூலான்சேரி என்ற கிராமத்தில் கிணற்றுப் பாசனத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. நாளடைவில் கிணறுகளில் நீர்வளம் குறைந்ததால் நெல் சாகுபடி நிறுத்தப்பட்டது. பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு இங்கு பல கசிவு நீர் குட்டைகள் வெட்டப்பட்டன. இதனால் கிணறுகளில்

● அப்பளம்போல் சிதறிக்கிடக்கும் தேக்குமர இலைகள்.



மீண்டும் நீர் ஊறத் துவங்கியது. உடனே நெல் சாகுபடியும் துவங்கியது. இதை எடுத்துக்கூறி கிராமங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் கசிவு நீர்க் குட்டைகள் (Percolation ponds) தோண்டப்பட வேண்டுமென்கிறார். தேசியத் தொலைநோக்குத் திட்டத்தின் கீழ் நதிகளின் இணைப்புத் திட்டங்களின் வெற்றிக்காக அரும்பாடுபட்டு வரும் இவர் இது குறித்துச் சமீபத்தில் ஒரு பெரிய கருத்தரங்கினையும் நடத்தியுள்ளார். கிராமங்களில் கறவை மாடுகளை, குறிப்பாக அதிக பால் கொடுக்கும் இனங்களை வளர்த்து வரும் விவசாயிகளுக்குப் பலன் இன்னும் சரிவரக் கிடைக்கத் துவங்கவில்லை. இதற்கிடையில் குறைந்த செலவில் பராமரிக்கப்பட்டு வந்த காங்கேயம் இனம் மறையத் துவங்கியுள்ளதால், இதன் இனம் அதிகரிக்க ஆவன செய்ய வேண்டுமென்கிறார். இவ்வரிய கருத்துகளைக் கூறும் திரு. நல்லசாமி தனது பண்ணையில் அதிசயிக்கத்தக்கப் பணியைப் பலவகை மரங்கள் நட்டுள்ளதன் மூலம் செய்துள்ளார். குறிப்பாகத் தேக்கு சாகுபடியின் முழு விவரங்களை இப்பண்ணையில் தெரிந்து கொள்ளலாம். தேக்கு குறித்து இக் கட்டுரையில் விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

பண்ணைப் பரப்பளவில் பத்தில் ஒரு பங்கு சாகுபடிக்காக ஒதுக்கியுள்ள இவரது பண்ணையில் நுழையும்போதே குளிர்சாதனம் பொருத்திய அறைக்குள் நுழைவது போன்றதொரு உணர்ச்சி ஏற்படுகிறது. இதோடு மரங்களில் அமர்ந்து இனிய குரல்களை எழுப்பிக் கொண்டிருக்கும் பறவைக் கூட்டங்கள் நம் கவனத்தை ஈர்க்கின்றன. பூமியே தெரியாதபடி பூமியை மூடிக் கொண்டிருக்கும் தேக்கு மர இலைகள் நடக்கும்போது அப்பளம் போல் நொறுங்குவது ஒரு விஷேச உணர்ச்சியை உண்டாக்குகின்றது. இந்தப் பண்ணையில் 10-11 வருட தேக்கு மரங்கள் வானளாவி உயர்ந்து வளர்ந்துள்ளன. ஆரம்பத்தில் ஏக்கரில் சுமார் 2000 மரங்கள் நடப்பட்டனவாம். தானாக மடிந்ததோடு மரங்களை அடர்த்திக் குறைப்பும் செய்யப்பட்டதாம். மரங்களின் பக்கக் கிளைகளை வெட்டி அவைகள் நேராக வளரும் முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் 4 1/2 அடி X 4 1/2 அடி இடை வெளியில் நட்ட 2000 மரங்கள் தற்போது 1000 மரங்களாகக் குறைந்துள்ளது. பண்ணையில் தேக்கு மரங்கள் 35 அடி உயரத்திற்கு வளர்ந்துள்ளன. ஆனால் அவைகளின் பருமனில் வேற்றுமை உள்ளது. 4 1/2 அங்குலம், 5 1/2 அங்குலம் மற்றும் 6 1/2 அங்குலம் விட்டம் உள்ள மரங்கள் உள்ளன. இம்மரங்களை உடனடியாக பூட்டுகளாக (Poles) விற்றால் கீழ்க்கண்ட வருமானம் கிடைக்கும்.

	ரூ. பை.
ரூ. 100/- மதிப்புள்ள மரங்கள் - 400 -	40000.00
ரூ. 200/- மதிப்புள்ள மரங்கள் - 400 -	80000.00
ரூ. 300/- மதிப்புள்ள மரங்கள் - 200 - (விட்டம் 6 1/2 அங்குலம்)	60000.00
மொத்த மதிப்பு ரூ.	180000.00

இந்தச் செயல் விளக்கத்தை விரும்பும் விவசாயிகள் அரச்சலூரில் நேரிடையாகப் பார்த்து மேலே கொடுக்கப்பட்ட மதிப்பு விவரம் சரியானதா என்பதைப் பரிசோதித்துக் கொள்ளலாம். ஒரு ஏக்கரில் தேக்குப் பண்ணை அமைக்க நிகரமாக ரூ. 10000/- செலவாகியுள்ளது. அதாவது ஆரம்ப முதலீடு (Initial investment) ரூ. 10000/- ஆகும். இந்த முதலீடு 10 மடங்கு அதிகரித்துள்ளது. பண்ணைக் காடு ஒரு சேமிப்பு ஆகும். பணம் வங்கியில் இருப்பதுபோல் இதன் வளர்ப்பு அமையும். தேக்கு நட்ட நிலத்தில் ஆரம்ப காலத்தில் ஊடுபயிர் சாகுபடி மூலம் கணிசமான லாபத்தினை அடையலாம். அடர்த்திக் குறைப்பு செய்யும் நோக்கத்தில் வெட்டிய மரங்களை விற்றும் வருவாய் பெறலாம். ஆகையால் 10 வருடங்களில் வருவாய் போக தேக்கு சாகுபடிக்கு ஆகும் செலவு ரூ.10000/- வரைதான் இருக்கும். தேக்கு சாகுபடி குறித்துக் கேட்ட கேள்விகளுக்குத் திரு. நல்லசாமி அளித்த பதில்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. சாகுபடிக்கு ஏற்ற மண் எது? ஏற்று வராத மண் எது?

★ மரங்கள செழித்து வளர ஏற்ற மண் வண்டல் மண் மற்றும் செம்மண் ஆகும். கரிசல், களிமண் நிலங்களில் வேர்களுக்கு நல்ல காற்று கிடைப்பது அரிதாகையால் அவ்வகை மண்ணில் வளர்ச்சி சீராக இருப்பதில்லை. களர், உவர் மண் வகைகளும் ஏற்றதல்ல. அதிக உரம்பிற்கும் தாங்காது. மண்ணில் வடிகால் வசதி இருப்பது மிகவும் முக்கியமானது.

2. தரமான கன்றுகளைப் பெறுவது எப்படி?

★ இதற்கு நாமே நர்சரி அமைப்பது நல்லது. தரமான தாய் மரங்களைக் கண்டறிந்து அவைகளில் விதைகளைச் சேமிக்க வேண்டும். மேடைப்பாத்தி அமைத்து அதில் மணல் பரப்ப வேண்டும். விதைகளை அதன்மீது பரப்பி நன்றாக அழுத்திவிட்டு விதைகள் பூமியில் புதையும்படிச் செய்ய வேண்டும். தினமும் மேடைப் பாத்திக்குப் பூவாளி கொண்டு நீர் தெளிக்க வேண்டும். விதைகள் 10-15 நாட்களில் முளைக்க ஆரம்பிக்கும். விதைப்பதற்கு முன் விதைகளை ஒரு வாரம் சாணிப்பாலில் நன்றாக ஊற வைக்க வேண்டும். இதனால் விதைகளின் மேல் உறை மிருதுவாகி விதைகள் விரைவில் முளைக்க ஏதுவாகும். நாற்றங்காலில் முதலில் முளைத்துச் செழித்து வரும் நாற்றுக்களாகத் தேர்வு செய்து ஏழு, எட்டு மாதங்களுக்குப் பிறகு நடவு செய்வது ஏற்றது. சிதம்பரம் பகுதிகளில் விதைகள் கிடைக்கின்றன. சமூக நலக்காடுகள் வளர்ப்புத்துறையினரும், வனத் துறையினரும் நாற்றுக்களை உற்பத்தி செய்து கொடுக்கிறார்கள். திரு. தெய்வக்கண்ணு, வி.கீரப் பாளையம், கொடுக்கன் பாளையம், கடலூர் தாலுக்கா அவர்கள் தரமான தேக்குக் கன்றுகளை வளர்த்து வருகிறார்கள். தேக்கு நட விரும்பும் விவசாயிகள் தரமான கன்றுகளைப் பெற முயற்சி எடுக்க வேண்டும். இதற்காக அலைவதில் தளர்ச்சியடையக் கூடாது. கன்றுகள் தரம், பருமன் பொருத்து 30 பைசாவிலிருந்து ரூ 1/- வரை விற்கிறார்கள்.

3. ஏக்கரில் எவ்வளவு கன்றுகள் நடலாம்?

★ ஏக்கரில் 4000 கன்றுகளையும் நடுகிறார்கள். எனது அனுபவத்தில் 4 1/2 அடி X 4 1/2 அடி இடைவெளியில் 2000 கன்றுகளை நட்டு படிப்படியாக அவைகளை வெட்டுவது சிறந்ததாகத் தோன்றுகிறது.

4. ரகங்கள் பல உள்ளனவா? வெண் தேக்கு எப்படி?

★ தேக்கில் இரண்டு ரகங்கள் உள்ளதாகச் சொல்லுகிறார்கள். ஒன்று சீக்கிரம் பூத்து விடுகிறது. மற்றது ஏழு ஆண்டுகள் ஆகியும் பூப்பதில்லை. வெண் தேக்கு, தேக்கிலிருந்து முழுமையாக மாறுபட்ட ரகம். தேக்கைவிடத் தரத்தில் குறைந்தது.

5. பாசனம் அவசியமா?

★ ஆரம்ப காலத்தில் பாசனம் அவசியம். ஆரம்பத்தில் வாரம் ஒரு முறையும் பின்பு 10 நாட்களுக்கு ஒருமுறையும் நீர் பாய்ச்சுதல் அவசியம். ஏறத்தாழ 2 ஆண்டுகளுக்குப் பின் பொழியும் மழை நீரைக் கொண்டே வாழும். இருந்தாலும் நீர் விட்டால் வளர்ச்சி துரிதமாக இருக்கும். நன்கு வளர்ந்த மரம் வறட்சியைத் தாங்கும்.

6. 10 வருடங்களில் நிகர செலவு என்னவாகும்?

★ ஏக்கருக்கு ரூ. 10,000/- செலவாகும். விவரம் கீழேத் தரப்பட்டுள்ளது.

முதல் ஆண்டுச் செலவு		ரூ.பை.
உழவு	–	250.00
பாத்தி பிடிக்க	–	100.00
2000 கன்றுகள்	–	2000.00
எடுத்துவர	–	50.00
கன்றுகள் நட	–	100.00
4 களை எடுக்க	–	400.00
பாசனம்	–	500.00
மொத்தம்		3400.00

பிறகு ஆண்டுச் செலவு :

தொழுவுரம்	–	300.00
பக்கக் கிளை வெட்ட	–	100.00
பாசனம்	–	500.00
களை	–	100.00
மொத்தம்		1000.00

9 வருடச் செலவு	–	9000.00
10 வருடச் செலவு (3400+9000)		-12400.00

ஊடுபயிர், மரங்கள் விற்பனையில்

	வரவு	2400.00
நிகரச் செலவு	ரூ.	10,000.00

★ சாகுபடியில் ஆரம்பத்தில் உழவு, உரம், நாற்று நடவு, களை இவைகளுக்குச் செலவு இருக்கும். மரம் வளர வளர களைகள் குறைந்து விடும். மரங்களை ஆரம்பத்தில் பார்ப்பதற்கு ரம்மியமாக இருக்கும். பாசன நீர் இருந்தால் பாசனச் செலவைத் தவிர வேறு இருக்காது. செயற்கை உரம், பயிர் பாதுகாப்பு தேவையில்லை. இதன் இலைகளே உரமாக அமையும். நிலத்தில் பரந்து கிடக்கும் இலைகள் நீர் ஆவியாவதைத் தடுக்கிறது. சாப்பாட்டு இலையாக இதன் இலையைப் பயன்படுத்தலாம்.

7. வியாபார பிரச்னை இருக்குமா?

★ நிச்சயமாக இருக்காது. தேக்கு கட்டட மரங்களில் ராஜா ஆகும். நமது தேசிய மரம். விலை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகிறது. இதை வாங்க வியாபாரிகள் விரும்பி வருவார்கள். பூட்டுகளாக (Poles) விற்பதும் நல்ல லாபம் தருகின்றது.

8. சாகுபடி எத்தகையது?

★ சாகுபடி ஒரு சேமிப்பு முயற்சியாகும். பணம் வங்கியில் வளர்ச்சி அடைவது போல் வளர்ச்சியும் அடையும். ரூ. 10,000/- முதலீடு இட்டால் 10 வருடங்கள் கழித்து 10 மடங்கு ஆதாயம் அடையலாம். பொறுமையாக இருந்து மரங்களை வெட்டினால் வருமானம் பல மடங்கு கூடுதலாகும். 10 ஏக்கர் உள்ள விவசாயி ஒரு ஏக்கரிலும், 5 ஏக்கர் உள்ள விவசாயி அரை ஏக்கரிலும் தேக்கு சாகுபடி செய்யலாம். வீடுகளின் முற்றங்களிலும், பள்ளி, தொழிற்சாலை, அலுவலகம் ஆகியவற்றின் முன்னும் பின்னும் நடலாம். நல்ல நிழல் தரும் மரம். பெரும் காற்றையும் தாங்க வல்லது. வீட்டில் குழந்தை பிறந்தால் பிறந்த நாளில் நினைவாக மரம் நடலாம். இறந்தவர் நினைவாகவும் மரம் நடலாம். திருமணத்தை நினைவூட்டும் வகையிலும் மரம் நடலாம். இவ்வாறு நடப்படும் மரம் எதிர்காலத்தில் பெரும் செல்வம் அளிக்கும் சேமிப்புக் களஞ்சியமாக அமையும்.

9. மரங்களை எப்போது விற்கலாம்?

★ 10 ஆண்டுகளில் பூட்டுகளாக (Poles) விற்கலாம். இவைகள் கூரை வீடுகள் அமைக்கப் பெரிதும் உதவும். 20 ஆண்டுகளுக்குப் பிறகு கட்டட மரங்களாக, பலகை தரும் மரங்களாக இம்மரங்கள் வளர்ச்சியடையும். மரங்களை வெட்டிப் பயன் அடைவது நமது பொறுமையையும், அவசியத்தையும் பொருத்து இருக்கும்.

10. சாகுபடிக்கு அரசு அனுமதி தேவையா?

★ அறுவடையின் போது "இந்த மரம் அரசு காடுகளில் வெட்டப்பட்டது அல்ல. எனது மரம் ....கிராமத்தில்......................சர்வேநம்பரில் வெட்டப்பட்டது" எனும் சான்றிதழைப் பெற்று விற்றுக் கொள்ளலாம்.


11. மரம் வளர்ப்பதற்கும், மழைக்கும் சம்பந்தம் உண்டா?

★ அண்மையில் இஸ்ரேலுக்குச் சென்றிருந்தேன். அங்கு சொல்லப்பட்ட கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1948 இல் அவர்கள் சுதந்திரம் பெற்றபோது அங்கு சராசரி மழை பொழிவு 250 மி.மீ. மட்டும் இருந்ததாகவும், அதற்குப் பின் காடுகளையும், மலைகளையும், மரங்களையும் காத்ததின் விளைவாய் ஆண்டுக்கு ஆண்டு மழை பொழிவு அதிகரித்துள்ளதாகவும் (தற்போது ஆண்டுக்கு சராசரி மழை பொழிவு 400 மி.மீ.) பாலைவனம் குறைந்து வருவதாகவும் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

12. மரங்களைப் பற்றித் தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

→

ஸ்ரீ அன்னை போற்றித் திரு அகவல்



அழகுமணி பழனிசாமி

அன்னையே போற்றி நெஞ்சில் அமிர்தமே போற்றி! எங்கள்
எண்ணங்கள் மீதமர்ந்து இயக்கிடும் இறைவீ! போற்றி!
மண்ணிதில் முளைத்த எங்கள் மனமதில் அமர்ந்து எம்மை
உன்வழி நடத்திச் செல்லும் உலகத்து மாதா போற்றி!

தலைதனில் நிலையாய் நின்று சஞ்சல மழிப்பாய் போற்றி!
மலையது சிரம் வீழ்ந்தாலும் மயங்கிடா 'தருள்க' போற்றி!
நிலைபெற உலகம்வாழ நீள்இரு கண்கள் அன்பைப்
பொழிந்திட அருள்வாய் போற்றி! பூமியைக் காப்பாய் போற்றி!

இருசெவிகளிலும் உன்றன் இசையது வழிக போற்றி!
பருநெற்றி மீது ஞானம் கொடிபடர்ந் துயர்க போற்றி!
புருவங்கள் நடுவில் நின்று புன்னகை புரிவாய் போற்றி!
பெருமைவாய் உன்னைப் பாடிப் பெருமகிழ் வடைக போற்றி!

நாக்கினிற் பிழைவராமல் நடத்திடும் தாயே போற்றி!
மூக்கினில் புனிதக் காற்றாய் உயிர் இழை நூற்பாய் போற்றி!
பார்த்திடும் விழியிரண்டில் பரவச அன்பைப் பாய்ச்சி
ஆர்த்திடு கவலைக் காட்டை அழித்திடும் அம்மா போற்றி!

கைகளில் உழைப்பைத் தேக்கிக் கவினுற வைப்பாய் போற்றி!
மெய்யினில் வியர்வை ஊற்றி மிகுதொழில் வளர்ப்பாய் போற்றி!
ஐயம் என்மேல் வராமல் அன்பினால் உலக மக்கள்
உய்யுமா றுயர்த்தி வாழ்த்தி ஒரு பொருள் உரைப்பாய் போற்றி!

நடந்திடும் இரண்டு கால்கள் நல்லதோர் பாதைதன்னில்
தொடர்ந்திட வலிமை நல்கித் துயர் இருள் துடைப்பாய் போற்றி!
விடந்தனை நான் உண்டாலும் மேனிக்குத் துயர் வராமல்
படிந்துனைப் போற்றி வாழும் பலமளித் தருள்வாய் போற்றி!

வையகம் தழைத்திருக்க மழை அருள் மாதா போற்றி!
பொய் புதர் அழித்து ஞானப்பூக்களை வளர்ப்பாய் போற்றி!
செய்தொழில் சிறந்து மக்கள் சீர்பெறச் செய்வாய் போற்றி!
உய்யுமா றொழுக்கம் ஓங்கி உயர்ந்திட அருள்வாய் போற்றி!


☆ சுட்டெரிக்கும் சூரியனின் வெப்பத்தைத் தான் தாங்கிக் கொண்டு தரணியெங்கும் தண்மையைத் தரும் தளிர் மரங்கள் மடிவதால் வறட்சி ஏற்படுகின்றது. பருவமழை பொய்த்து விடுவதால் உலகில் பாலைவனம் தோன்றுகின்றது. நாகரிகம் நாசமாகும் முன், இயற்கை வளம் வற்றி அழியும் முன், வறுமை வரும் முன் மரங்களை நட்டுக் காத்து வளமான வருங் காலம் வளர வழி வகுப்போம்.

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

— குறள்.

மரங்களை வளர்த்தால் காடுகளிலும், கழனிகளிலும் இயற்கைச் செல்வங்கள் செழித்து வளரும். கார்மேகங்கள் கவிழ்ந்து மழை வளம் பெருகும். மாநிலம் செழிக்கும். செல்வம் கொழிக்கும். தரணி தழைக்கும்.

"நமது நாட்டின் வேளாண்மை வளம் புதைக்கப் பட்டு வைக்கப்பட்டுள்ள வளமாக உள்ளது. இதை நம்பிக்கையோடும், கடுமையான உழைப்போடும் வெட்டி எடுக்க வேண்டியது நமது கடமை" என்கிறார் திரு. நல்லசாமி. கடுவிரைவில் பணம் ஈட்ட வேண்டுமென்று நினைப்பவர்களும், வெயிலையும், மழையையும் கண்டு விலகுபவர்களும் வேளாண்மைத் தொழிலில் ஏமாற்றம்தான் அடைவார்கள் என்கிறார். விவசாயத்தின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களும், வறட்சி சூழ்நிலையில் விவசாயம் செய்து வருபவர்களும் ஒரு முறையாவது அரச்சலூர் பண்ணைக்கு விஜயம் செய்து திரு. நல்லசாமியுடன் உரையாடல் செய்ய வேண்டும். ❀




பழனியின் குடிசைக்கெதிரே அந்த மொபெட் வந்து நின்றது.

அதை ஸ்டாண்டிட்டு நிறுத்திய காண்ட்ராக்டர் கந்தசாமி, "பழனி, பழனி" என்று உரத்தக் குரலில் கூப்பிட்டார்.

அஞ்சலை வெளியே வந்தாள்.

"வாங்க ஐயா, வாங்க!" கும்பிட்டு வரவேற்றாள்.

வெள்ளிக்கிழமை. அதனால் தலைக்குக் குளித்து உலரும் பொருட்டுக் கூந்தலைத் தோள் களில் பரத்தியிருந்தாள். மஞ்சள் முகம் மேலும் மஞ்சளில் வசீ



சொந்த வீடு

நீலவன்

கரித்தது. அகலப் பொட்டும், முத்து மூக்குத்தியும் பளீரிட்டன.

கிழிந்த ரவிக்கையும், நைந்த பாவாடையும் அணிந்து மூக்கில் ஒழுக, எண்ணெய்ப் பிசுபிசுப்புக் காணாத சிக்குப் பிடித்த எலி வால் சடை தொங்க, ஓடி ஓடிச் செங்கல் சுமப்பதும், இரும்புத் தட்டில் சிமெண்ட் கலவை தூக்குவதுமாய்ப் பல ஆண்டுகள் கந்தசாமியிடம் வேலை செய்தவள் அஞ்சலை.

'அவளா, இவள்?' தன்னுள் மென்றார் அவர்.

"உள்ளே வாங்க ஐயா!"

அஞ்சலையைக் கந்தசாமி பார்த்து ஒரு மாதத்திற்கு மேலாகிறது.

கடைசியாய் சாதாரண நூல் புடைவையில், பல்லிளித்த கவரிங் செயின் கழுத்தில் தொங்கப் பார்த்தது.

கல்யாணத்திற்குக்கூட அவர் ஊரில் இல்லை. கல்கத்தா போய் விட்டிருந்தார். அங்கே நிலக்கரிச் சுரங்கத்தில் பொறியாளனாய்ப் பணியாற்றும் அவருடைய மகனுக்கு ஒரு விபத்து. பார்க்கப் போனவர் ஒரு மாதமாய்த் திரும்பவேயில்லை.

"பழனி எங்கே போனான்?"

"குந்துங்க ஐயா!" தூசு தட்டி ஒரு மர ஸ்டூலைக் கொண்டு வந்து வெளியே போட்டாள், குடிசைக்குள் அவர் வரமாட்டார் என்பதால்.

"சின்னல்லாவரம் பொறாத் தோப்புல அவருக்கு இருவதுக்கு நாப்பத்தஞ்சி பிளாட் இருக்குதுங்களே..."

"ஆமா, ஆமா... அது அவன் நைனா சம்பாதிச்சுது. அதுக்கென்ன இப்ப?" கந்தசாமி உட்காரவேயில்லை.

"வேலி முள்ளு மானாவாரியா வளந்து கெடக்குதுங்க. அதெ வெட்டப் போய்க்கீறாரு. தோ... நானும் பொறப்படறேங்க..."

"கண்ணாலமானப்பறம் பழனி வேலைக்கே வர்றதில்லியாமே..."

"யாருங்க ஐயா சொன்னது? கிஸ்ணா நகர்ல நீங்க கல்கத்தா போம்போது வுட்டுட்டுப் போன பில்டிங் முடியறவரிக்கும் அவரும் நானும் வேலெ செஞ்சோம். அது முடிஞ்சிடுச்சி. நாலு நாளாத்தான் நாங்க வேலெக்கி வர்றதில்லே..."

"ஆங்... சத்துவாச்சாரில ஒரு புது பில்டிங் ஆரம்பிக்கணும்னு என் தம்பி உங்களைக் கூப்பிட்டானாமே!"

"கூப்புட்டாருங்க".

"என் பொறுப்பைத்தானே என் தம்பிகிட்டே வுட்டுட்டுப் போனேன் நான். ஏன் நீங்க வேலைக்குப் போகல?"

"......................"

"வாங்க ஐயா. ஓங்க மவன் சொகமா இருக்காருங்களா?" தலை முண்டாசை அவிழ்த்து வியர்வை வடியும் முகத்தைத் துடைத்தவாறு கந்தசாமிக்கு அருகில் வந்து நின்றான் பழனி.

"வா பழனி வா... மகனுக்குப் பரவாயில்லே. ஆமா... நீயும் உன் பொண்டாட்டியும் ஏன் வேலைக்கு வர்றதில்லையாம்?"

"இப்போதான் நீங்க கல்கத்தாவ்லேர்ந்து வந்தது தெரிஞ்சிது. ஐயா வூட்டுக்குத்தானே போறீங்க... போங்க... தோ ஓங்க பின்னாடியே நானும் அஞ்சலையும் வர்றோம். அங்க வந்து சொல்றம்..."

"அங்கே வந்து என்னத்தைச் சொல்லப் போறே? அதெ இங்கே தான்சொல்லேன்..."

"ஐயா... தோ வந்துடுறோம்... தயவு செஞ்சி போங்களேன்..." கைகளைக் கூப்பினான்.

முகம் சிவக்க, பதில் சொல்லாமல் மொபெட்டை ஸ்டார்ட் செய்தார் கந்தசாமி.

பழங்களும் இனிப்பும நிரம்பிய அந்த அகலமான எவர்சில்வர் தட்டைக் காண்ட்ராக்டர் கந்தசாமியின் காலடியில் வைத்துப் பழனியும் அஞ்சலையும் விழுந்து கும்பிட்டனர்.

"நாலுபேரு மெச்ச நல்லா வாழுங்க!" ஆசீர்வதித்தார் கந்தசாமி.

"இத்தினி காலமும் எங்களெ ஆதரிச்சீங்க. அதெ நாங்க எங்க உசுருங்க கீறவரிக்கும் மறக்க மாட்டோம்க... நீங்கதான் ஐயா எங்க வழிகாட்டி!"

"இந்தெ அனாதைங்களுக்கு நீங்கதாங்க ஒதவனும்".

அந்தத் தட்டைக் காலிசெய்து அதில் வெற்றிலைப் பாக்கு வைத்து - அவற்றின் மீதுஐந்நூறு ரூபாயை வைத்து அவர்களிடம் நீட்டினார் கந்தசாமி.

பழனியும் அஞ்சலையும் பவ்யமாய்க் கண்களில் ஆனந்தம் வழிய அதைப் பெற்றுக் கொண்டனர்.

"நாளைக்கு சத்துவாச்சாரியிலத்தான் உங்களுக்கு வேலை... வெள்ளெனப் புறப்பட்டுடுங்க!"

"ஆங்... ஆங்..."

"என்ன...? முன்பணம் ஏதாவது..."

"ஐய்யய்யோ... வேணாங்க ஐயா... எவ்ளோ நாளெக்கி ஓங்க கிட்டியே ஓழைக்கிறது? இனிமே கெடைக்கிற வேலெயெ நான் தனியாவே சின்ன காண்ட்ராக்ட் எடுத்து எம் பொஞ்சாதி இன்னும் ஒண்ணு ரெண்டு சித்தாளுங்களெ வெச்சிகிட்டு வேலை செய்லாம்னு முடிவு பண்ணிட்டேங்க!"

"பழனி என்ன சொல்றே நீ?"

"கண்ணாலத்தைப் பண்ணிக்கினோம் நாங்க. இனி முன்னுக்கு வர்றனும்னா பொறுப்பா ஒழைச்சாத்தானுங்களே!"

"அப்போ, எங்கிட்டே இனிமே நீங்க ரெண்டு பேரும் வேலை செய்ய மாட்டீங்க?"

"......................"

பழனி மேஸ்திரி சுறுசுறுப்பானவன். நேர்மையானவன். கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகாதவன். ஊதியத்திற்கேற்றவாறு உண்மையாய் உழைப்பவன்.

அஞ்சலையும் அவன் மாதிரியேதான்!

அதனால்தான் அவர்கள் செங்கல்லும் சிமெண்ட்டும்போல இணைந்துவிட்டார்கள்.

அஞ்சலைக்கு அப்பா, அம்மா இல்லை. வயதான கண்மண் தெரியாத ஆயா இருந்தாள். அவளும் தலையைப் போட்டுவிட்ட பின்னால் பறித்துத் தின்னும் ஆசையைப் பார்ப்போர்க்கு ஏற்படுத்தும் அழகுச் சித்தாளான அஞ்சலைக்குத் தன் பாதியைத் தாரை வார்த்தான் பழனி மேஸ்திரி.

அவனுக்கு மட்டும் யாரிருக்கிறார்கள்?

ஒன்றும் ஒன்றும் இரண்டாயின.

இரண்டும் ஒன்றும் மூன்றாவதில்தான் இப்போது அவர்களுக்குள் பிரச்னை!

"எனக்கு ரொம்ப வேண்டப்பட்ட ஒருத்தரு கச்சேரி தெருவில் இருக்கிறாரு. அவரோட பங்களாவில அவுட் ஹவுஸ் ஒண்ணு கட்டணும். ஆறு சதுரம் தேறும். என்னை வரச்சொல்லிக் காலைலகூட ஆளு அனுப்பிச்சாரு. அந்த காண்ட்ராக்டை உங்களுக்கு என்னோட பரிசா அதாவது கண்ணாலப் பரிசா தர்றேன். முதல் முதலா ஒரு பெரிய மனுஷரு வீடு கெடைச்சிருக்கு. நல்லா கட்டி நல்ல பேரை வாங்கணும்!" என்று நினைவலைகளில் சிக்கித் தன் எதிரே நின்றிருந்த பழனிக்கும் அஞ்சலைக்கும் பால்பாயசச் செய்தியைச் சொன்னார் கந்தசாமி.

"ஐயா... நீங்கதான் எங்க கண் கண்ட சாமி!" மீண்டும் பழனியும் அஞ்சலையும் கந்தசாமியின் காலடியில் விழுந்தனர்.

அவுட் ஹவுஸ் வேலையைத் தொடங்கி, எண்ணி எண்பத்தைந்தாம் நாள் முடித்துக் கொடுத்தான் பழனி.

குளிர்ந்து போனார் கந்தசாமிக்கு வேண்டப்பட்டவர். மலைத்துப் போனார் கந்தசாமி. சிறு குறை சொல்ல முடியாது. அவ்வளவு நேர்த்தியாய் முடித்திருந்தான் அவன்.

பின்னர் ஒன்றிரண்டு பழுது பார்க்கும் வேலைகள் கிடைத்தன.

"மச்சான்... இந்த வாடகைக் குடிசையிலே எத்தினி நாளக்கித் தான் நாம இருக்கறது? ரெண்டே ரெண்டு ரூம்ங்க போதும்... ஒரு மெத்தெ வூடு கட்டுவோம் மச்சான்..." ஒரு சரசமான பொழுதில் அருகம்புல்லாய் அடர்ந்திருந்த பழனியின் மார்பு முடியைத் தன் கைகளால் அளைந்தாள் அஞ்சலை.

"தோ பாரு அஞ்சலை... கண்ணாலமான புச்சுமாரியா நீ எங்கிட்டே நடந்துக்கிறெ.... இப்படி ராத்திரிலே என் மார்பைத் தடவியே தூங்க வெச்சிடுறே... கேட்டா...?"

"கேட்டா இன்னா...? தப்பா ஒண்ணும் நான் சொல்லலியே! ஊருக்கெல்லாம் மெத்தெ வூடு கட்ற இந்த கொல்று புடிக்கிற கை நமக்குனு. நம்ம புள்ளெ தவழ்ந்து வெளாட ஒரு மெத்தெ வூடெ சொந்தமா கட்டணும். இது தப்பா மச்சான்?" மீண்டும் அடர்ந்த அருகம்புற்களைத் தன் கைகளால் அளைந்தாள் அஞ்சலை.

"கடேசியா நீ இன்னாதான் முடிவு சேஞ்சே அஞ்சலெ?"

"மச்சான்... நான் பொட்டச்சி. என்னெ எப்டியாச்சும் அடக்கிக்குவேன். ஆனா நீ... ஆம்புளே... ஒன்னாலெ முடியாது. நீ படற கஸ்டம் எனக்குப் புரியுது..."

"புரியுதுல்லே... பின்னெ தாராளமா எசவா நடந்துக்க வேண்டியதுதானே!"

"சரி மச்சான்... இதோ இந்த ராத்ரிலிருந்தெ இந்த அஞ்சலெ எசவா நடந்துக்குவா. நீ எனக்கு ஒரு வாக்கு குடுக்கணும்... குடுப்பியா?"

தலைமாட்டில் கைக்கெட்டும் தூரத்தில் இருந்த கொல்றுவை, முத்துப்போல் ஒளி வீசும் சிம்னி விளக்கின் வெளிச்சத்தில் கண்டெடுத்துத் தன் மார்பின் மீது வைத்துக் கொண்டான் பழனி.

கொல்றுவை எதற்காக எடுத்தான் என்பது அஞ்சலைக்கு விளங்கியது.

அஞ்சலை தன்னிடம் என்ன கேட்கப் போகிறாள் என்பதும் பழனிக்கு விளங்கியது.

"மச்சான் நம்ப புள்ளெ நம்ப புது மெத்தெ வூட்லதான் பொறக்கணும். வாக்குக் குடுப்பியா மச்சான்?"

"தெரிஞ்சிதான், இந்தக் கொல்று மேல சத்யமா ஒன் ஆசையெ இந்தப் பழனி நெறவேத்துவான்னு சொல்ல இந்தக் கொல்ற இப்ப எடுத்தேன்..."

சிம்னி விளக்குத் திரி இறங்கி சிறு முத்தாகிக் கொண்டிருந்தது.

அவன் காதுகளில் விழும்படி மீண்டும் சொன்னாள் அஞ்சலை.

"மச்சான் நம்ப புள்ளெ நம்ப புது மெத்தெ வூட்லதான் பொறக்கணும். நம்ப புள்ளெ நம்ப புது மெத்தெ வூட்லதான் பொறக்கணும். நம்ப புள்ளெ நம்ப புது மெத்தை வூட்லதான் பொறக்கணும்."

"இந்தக் கொல்று மேல் சத்யமா ஒன் ஆசையெ இந்தப் பழனி நெறவேத்துவான் அஞ்சலெ..."

திரி இறங்கிச் சிறு முத்தாகிக் கொண்டிருந்த சிம்னி விளக்கு, பழனி சொல்லி முடித்தபோது தன் தொழிலை நிறுத்தியிருந்தது.

மாதங்கள் ஓடின.

அஞ்சலைக்கு இது மாதம்.

பழனி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்கூட அவனோடு வேலைக்குப் போவதை அவள் நிறுத்தவேயில்லை.

மார்பில் வயிறு முட்டியபோது கூட பழனியோடு கட்டட வேலை செய்தாள்.

சிறுகச் சிறுகச் சேர்த்து எப்படியோ நான்கு சதுர அளவுக்குச் சுவர்கள் எழுப்பியாயிற்று. வாசற் கால்கள், சன்னல்கள் வைத்தாயிற்று.

சவுக்கு மர முட்டுகளை நிறுத்தி மேல் பாகங்களில் குறுக்கு மரங்களைப் போட்டு, குச்சிகளைப் பரப்பி அவற்றின்மேல் தழைகளிட்டு, மண் தூவி, சிமெண்ட் கலவைப் பூசி, சாணத்தால் மெழுகிக் காய்ந்த பின், இரும்புக் கம்பிகளைக் குறுக்கும் நெடுக்குமாய்க் கட்டி ஜல்லிப்போட்டு மூட வேண்டியதுதான் பாக்கி.

திருக்காஞ்சிக் காமாட்சித் தாய்!

பூவை எஸ். ஆறுமுகம்

எடுப்பு

திருக்காஞ்சிப் பதியமர்ந்து உலகாளும் தாயே, காமாட்சி!
தர்மமும் சத்தியமும் புத்துயிர்பெறச் செய்த, காமாட்சித் தாயே!

தொடுப்பு

ஆதிமூலமாம் அருட்சிவனின் சக்திநாயகியே, அம்மை காமாட்சி!
அன்பு வாழ, அன்பினையே வாழ்த்தியருள், காமாட்சி அம்மையே!

முடிப்பு

உலகரங்கில் நல்லிணக்க நல்லமைதி நிலைபெற்று,
உண்மையாம் மனிதநேயம் மேம்படச்செய், தயாபரியே!
சீலமிகு அணிசேராஇயக்கம் பயன்பட்டுப் பயன்தந்து
சீர்மையுடன் நாடும்வீடும் திகழ்ந்திடச்செய், திரிசூலியே!

பாருக்குள்ளே நல்லநாடாம் அருமைப் பாரதத்தில்
பண்புடனே ஒருமைப்பாடு வளர்ந்துவாழச்செய், உமையவளே!
பெருமைசேர் பாரதத்தாய் மக்களெலாம் ஒன்றுபட்டுப்
பண்பழிக்கும் தீயசக்திகளைக் கருவறுக்கச்செய், மலைமகளே!

தேமதுரத் தமிழ்வாழ்த்தும் மூத்தகுடித் தமிழ்மண்ணில்
தமிழர்தம் உறவுரிமைகள் சீர்பெறச்செய், அன்னையே, காமாட்சி!
பாமணக்கும் தேசியத் தமிழுணர்வு நாமணக்க வளர்ந்தோங்கிப்
பூமணக்கப் பூதலத்தில் உயிர்வாழ்ந்திடச்செய், காமாட்சி அன்னையே!

அழுகை / வை. இறையன்பு



உன் முகத்தின் மீது
இருப்பது
உன் கை தான்
என்றாலும்
அதன்மீது கூட
எனக்குக்
கோபம் வருகிறது,
குற்றமில்லாதவளே

அப்புறம் மூன்று வாரங்கள் கழிந்து, தரையிலிருந்து முட்டுக் கொடுக்கப்பட்டிருக்கும் மரங்களையும், மேலேயுள்ள மரங்களையும், குச்சிகளையும் எடுத்துவிட்டு, சிமெண்ட் பூசி, சுண்ணாம்பு மற்றும் பெயிண்ட் அடித்துவிட்டால் சொந்த வீடு தயார்!

பணப் பற்றாக்குறை...

பேரனுக்குக் காது குத்தக் கல்கத்தாவுக்குப் போன கந்தசாமி இன்னும் திரும்பவேயில்லை.

அவருடைய தம்பியும் மற்றவர்களும் உதடுகளைப் பிதுக்கி விட்டனர்.

அகலக் கால்கள் விரித்தது தவறு என்பது இப்போதுதான் பழனிக்கு உறைத்தது.

நெற்றி வியர்வையை வழிக்காமல் பெருமூச்செறிந்தவாறு, "மச்சான்... என்னாலதான் நீ இம்மாங் கஷ்டப்படறே இல்லே. மச்சான் ஒன்னாலெ முடியலேன்னா..." பழனியின் திறந்த மார்பில் அடர்ந்திருந்த அருகம் புற்களை அளைந்தாள் அஞ்சலை.

அவள் வாயைப் பொத்திய பழனி, "அஞ்சலெ... ஒனக்கோ இது மாசம். பத்மா நர்சிங்ஹோம் டாக்டரம்மா இந்த வாரத்தில புள்ளெ பொறந்துடும்னு சொல்லிட்டாங்க..." என்று மேலே சொல்லாமல் கண்டத்திற்குள்ளேயே புதைத்துக் கொண்டான்.

"மச்சான்... இடி இடிக்கிறதும் புள்ளெ பொறக்கிறதும் எப்போன்னு யாராலியும் சொல்ல முடியாதுன்னுவாங்க பெரியவங்க..."

"அஞ்சலெ எப்டியும் ரெண்டொரு நாள்ல ஜல்லிப் போட்டுடுவேன்..."

"ஜல்லிப் போட்டுட்டாவே, அது தான் முடிட்டாவே அதுக்குப் பேரு வூடுதான். நம்ப சொந்த வூடு தான். மர முட்டுங்களுக்கு நடுவால கீற எடமே புள்ளெ பொறக்கத் தாராளமா போதும். என்... ச்சீ... நம்ப சொந்த வூட்லியே நம்ப புள்ளெ பொறப்பான், இன்னா மச்சான் சர்தானே நான் சொல்றது?"

"சர்தான் அஞ்சலெ... நம்ப சொந்த வூட்லியே நம்ப புள்ளெ பொறப்பான்..." நெற்றியில் முத்தமிட நெருங்கிய பழனிக்கு அவளது வயிறு இடித்தது.

சலங்கையாய் வயிறு மேலும் எழும்பக் கலகலவென்று சிரித்தாள் அவள்.

அவனும் சிரித்தான் அவளுக்காக. சிந்தனை, பணத்தை எப்படிப் புரட்டுவது என்பதில் குறியாயிருந்தது.

விடிந்தால் ஜல்லி போடும் வேலை.

அஞ்சலை குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

ஒருவாறு சுதாரித்து ஜல்லி போடத் தயாராகி விட்டார் தன் மச்சான் என்பதில் அவளுக்குக் கொள்ளாத பூரிப்பு.

எவ்வாறு சுதாரித்தான் என் பதை அவனும் அவளிடம் சொல்லவில்லை. பூரிப்பில் அவளும் கேட்கவில்லை.

இரண்டாம் ஜாமப் பொழுது வரை அவனிடம் நிறையவே பேசிக்கொண்டிருந்தாள்.

"ஜல்லி போட்டதும் நம்ப புள்ளெ அந்தச் சவுக்கு மர முட்டுங்களுக்கு நடுவுல பொறப்பான். அவுனுக்கு நம்ப கொல தெய்வம் முனியப்பன் பேரெ வெச்சி, மூங்கித் தொட்டில்ல போடப்போறது ஒயட வாஸ, பெயிண்ட் அடிச்ச சொந்த வூட்ல... இன்னா மச்சான் கம்முனு கீறே... சர்தானே!"

தலையசைத்தான் அவன்.

விடிந்தது; அவனைக் கண்கள் மூடச் செய்யாமலேயே!

அவளை எழுப்பினான்.

செங்கல் அடுப்பில் பானையில் கொதித்துக் கொண்டிருந்த வெந்நீரைக் குடிசையின் பின்னால் இருந்த ஓலைத் தடுப்பிற்குள் வைத்தான்.

அவள் உடம்புக்கு ஊற்றிக் கொண்டு வருவதற்குள் அவன் போகத் தயாரானான்.

ஊற்றிக்கொண்டு வந்தவள் புடைவை மாற்றி, பொட்டிட்டு, காமாட்சியம்மன் விளக்கேற்றிக் கும்பிட்டு, பழனியின் நெற்றியில் திருநீறும் குங்குமமும் இட்டாள்.

பழனி அஞ்சலையின் நெற்றியில் முயற்சித்து முத்திட்டான். அவள் வயிற்றைத் தடவினான்.

"பய்னி... கூலியாளுங்கல்லாம் வந்துட்டாங்க. சீக்கிரம் வாப்பா. அஞ்சலெ அவனெ வெளியே அனுப்புமா... பொழுது போறதுக்குள்ள ஜல்லி போட்டு முடிக்கணும்..." வெளியே இருந்து குரல் கொடுத்தார் பழனியின் அப்பாவுக்குத் தோஸ்தான அமாவாசை.

"தோ வந்துட்டேன் பெரிப்பா..." அவரைப் பழனி அப்படித்தான் அழைப்பான்.

குடிசைக்குள்ளிருந்து, "அப்பாடா..." என்று வயிற்றைப் பிடித்தவாறு வெளியே வந்தாள் அஞ்சலை.

பழனியும் வெளியே வந்தான்.

"ஏய்... கெய்வா... நானும் வர்றேன். ஜல்லி போடறதெ பாக்கணும்..."

"அஞ்சலெ... இந்த நெலயில நீ வர்றதா?"

"இன்னா நெல? சும்மா கிட கெய்வா..."

"அஞ்சலெ... நீ வாணாம். இங்கியே பத்திரமா இரு... ஜல்லி போட்டு முடிச்சதும் ஒனக்குச் சொல்லியனுப்புறேன்..."

"அஞ்சலெ... ஒன்னை பாத்துக்க தோ வந்துடுவா எம் பொஞ்சாதி... பத்திரம்... பத்திரம்..." அமாவாசைக் கிழவர் புறப்பட்டார்.

"நான் வர்றேன் அஞ்சலெ..."

"போய் வர்றேனு சொல்லு மச்சான்".

''வசதியானதோர் 'ஃபிளாட்' (Flat) வேண்டும்
பராசக்தி... நகரில் நல்லதோர்
'ஃபிளாட்' (Flat) வேண்டும்!
அங்கே தென்றல் வீச வேண்டும்,
நல்ல தண்ணீர் வசதி வேண்டும்.
மற்றும் அடக்க விலையும் வேண்டும்,
பராசக்தி!''



பாரதி இன்று சென்னையில் இருந்தால்...

இப்படித்தான் பாடியிருப்பார்.

உங்களுக்குப் பல ஆசைகள் உண்டு. அதில் உங்களுக்கென வீடு வேண்டும் என்ற ஆசை முக்கியமானது. அதை நிறைவேற்றுகிறோம்.

'ஸ்ரீராம் கேபிடல் டிரஸ்ட்' உங்களது வீடு வாங்கும் ஆசைக்கு உறுதியான உருவம் அளிக்கிறது.

20 ஃபிளாட்கள் (Flats) கொண்ட 'ஜெஜெ டெரஸ்ஸை' (J.J. Terrace) மைலாப்பூரில், ஜம்புலிங்கம் தெருவில் அமைத்துள்ளது.

50 ஃபிளாட்கள் (Flats) கொண்ட 'பாலாஜி டவரை' அசோக் நகரில் அமைத்துள்ளது.

பல அடுக்குமாடிக் கட்டடத்தை காற்று வசதியான சாந்தோமில் அமைக்க இருக்கிறது.

பெங்களூரில், R.T. நகரில், எல்லா வசதிகளும் கொண்ட மகத்தான உயர்தரக் குடியிருப்புத் திட்டத்தை ஏற்படுத்தப் போகிறது.

கிண்டியில் 'ஸ்ரீராம் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ்' என்னும் பெரிய திட்டத்தை உருவாக்கப் போகிறது.

எதிர்காலத்தில் நடுத்தர மக்கள் வசதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ பல நகரங்களில் நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகிறது ஸ்ரீராம்.

செவ்வாய் வார விடுமுறை.
ஞாயிறு காலை அலுவலகம் உண்டு.

மேற்கொண்டு விவரங்களுக்கு:

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் கேபிடல் டிரஸ்ட் (பி) லிட்

அபெக்ஸ் பிளாஸா (APEX PLAZA)
20, தியாகராயா ரோடு,
தி.நகர், சென்னை-17.
போன்: 445349/442141.

ஸ்ரீராமின் கைராசி — நல்ல வீடு பெற ராசி!

"போய் வர்றேன் அஞ்சலெ..."

"போய் வா மச்சான்... மறக்காம ஜல்லி போட்டதும் ஆளெ அனுப்பு..." பற்களெல்லாம் தெரிய வாய் திறந்து சிரித்துக் கைகளை அசைத்தவள், அடி வயிற்றில் சுருக்கென்று வலிக்க, பழனி அதை அறியக்கூடாது என்று பற்களைக் கடித்துக் கொண்டாள்.

ஜல்லிபோட்டாயிற்று.

"அமாவாசப் பெரிப்பா... அஞ்சலெக்கு ஜல்லி போட்டாச்சுன்னு சொல்லி அனுப்பிடு..." மேலேயிருந்து குரலெடுத்துச் சொன்னான், கொல்லும் கையுமாயிருந்த பழனி தெம்பு வியர்வை வழிய.

"தோ... நானே போறேன் பய்னி..." என்று சாரப் படிகளில் இறங்கினார் அமாவாசை.

அப்போது...

"பய்னி... அஞ்சலெ மோசம் பண்ணிட்டாடா... அஞ்சலெ மோசம் பண்ணிட்டாடா..." தலையில், வாயில், வயிற்றில் அடித்துக் கொண்டே ஓடிவந்தாள் அமாவாசையின் பெண்டாட்டி.

மெத்தை வீட்டின் மேலிருந்த பழனிக்குப் பூமி நழுவியது.

அமாவாசைக்குப் பாதாதிகேசம் ஜில்லிட்டது.

"நோவுதுன்னா... டாக்டரு அம்மா கிட்ட போவலாம்னேன். கேக்கல... சொந்த வூட்டுக்குத்தான் போவேன்னா. ரிக்சா கூட்டுனு வர்றதுக்குள்ள குடிசிக்கி வெளிய புள்ளெயப் பெத்துட்டா... போயும்சேந்துட்டா..." மடேர் மடேர் என்று அடித்துக்கொண்டு கதறியழுதாள் கிழவி.

ஆற்றுக்காரியம் முடிந்த மறு நாள் காலை –

அடமானம் வைத்து ஜல்லிப் போட ஒருவரிடம் தன் கணவன் பணம் வாங்கியதைக்கூட அறியாது சொந்த வீட்டில் பிரசவிக்கக் கனவு கண்ட அஞ்சலை, முட்டு மரங்கள் அகற்றப்பட்டுச் சுத்தம் செய்யப்பட்ட சொந்த வீட்டுக் கூடத்து மாடத்தில் மாலையிட்ட மங்கையாய் - படமாய் - தரிசனம் தருவதைக் காட்ட பச்சைக், குழந்தை முனியப்பனைக் கைகளிலேந்தி சொந்த வீட்டை நோக்கிப் போனான் பழனி. ⁂

நானும் இராமனைப் பாடுகிறேன்

ஆ. ஜோசப் ஸ்டாலின்

நேர்மைமிகு செயலதனைக் குறியாய்க் கொண்டு
நிறைவேற்றப் புறப்பட்டால் உதவி யாக
பேர்பெற்ற மனிதரல்ல, குரங்கும் கூட
பிரியாது வரக்கூடும்; துணையாய் நிற்கும்!
ஆறறிவு மனிதனல்ல, அதற்கும் கீழே
அஃறிணைகள் கூடஅதற்கு உதவக் கூடும்!
சாரத்தை இராமனது கதையில் கண்டு
சரியான பாதையினைத் தெளிந்து சொல்வோம்!

காளிதாசன் பாடியதும் ராம னைத்தான்
கம்பநாடன் பாடியதும் ராம னைத்தான்
வாளியென இலக்கியத்தின் கிணறி றைக்க
வாய்ப்பாக இருப்பதவன் சரித்தி ரந்தான்
தோழன் என ராமனைநாம் கொண்டு விட்டால்
தோழமையாய் அவனுடைய பண்பைக் கொண்டால்
வீழாது நம்வாழ்வு; விதியைக் கூட
வெல்லுகின்ற திறம்நமக்கு வந்து சேரும்!

ராமனிடம் நாம்கற்கும் பாட மாகும்
ராதாகிருஷ்ணன் சொன்ன வேதமாகும்
பாமரர்கள் முதலாகப் படித்தோர் ஈறாய்
படிப்பதவன் புகழைத்தான்! இமயம்கூட
மாமேருதான்! ஆனால்அ யோத்தி ராமன்
மகிமைக்கு முன்அதுவும் மட்ட மாகும்!
தாமரைபோல் நீருக்கு மேலாய் நீட்டும்
தன்மைஅந்த ராமனுக்கு! அவன்முதன்மை!

குகனைத்தான் சோதரனாய் ஏற்ற பண்பு
கூனிஅவள் மேல்கோபம் கொள்ளாப் பண்பு
மகனாக எல்லார்க்கும் விளங்கும் பண்பு
மான்விரட்டி, மனைவியினைப் பிரிந்த பின்னால்
மகராசன் ஆகும்வரை பொறுமை காட்டி
மாற்றனாம் இராவணனைக் கருணை யாலே
இன்றுசென்று நாளைவரப் பணித்த பண்பு
என்னென்று உரைப்பதிவன் உயிரே அன்பு!

லால்குடி ஜயராமன்



தியாகராஜரின் சிஷ்யர் லால்குடி ராம ஐயரின் கொள்ளுப் பேரன். லால்குடி இசைப் பரம்பரையின் புகழை உலகெங்கும் பரவச் செய்தவர். வயலின் வாசிப்பில் ஒரு சகாப்தம் படைத்திருப்பவர். "லால்குடி பாணி" என்று தன் முத்திரையைப் பதித்து நூற்றுக் கணக்கான இளம் வயலின் வித்வான்கள் அவருடைய பாணியைப் பின்பற்றும் ஏகலைவர்களாகச் செய்தவர். நான்கு தலைமுறை வித்வான்களுக்கு, நானாவிதமான பாணிகளுக்குப் பக்கவாத்தியம் வாசித்துள்ள பரந்த அனுபவம் இவருடையது. பக்கவாத்தியம் தவிரத் தனி வயலின் கச்சேரிகள், ஜுகல் - பந்திக் கச்சேரி, வயலின் - வேணு - வீணா கச்சேரிகள் என்று ஒவ்வொரு துறையிலும் தமது திறமையைத் தன்னிகரற்றுப் பிரகாசிக்கச் செய்தவர். வாய்ப்பாட்டுக் கச்சேரிகளும் செய்யும் அபூர்வக் கலைஞர்.

பத்மஸ்ரீ, சங்கீத நாடக அகாடமி விருது, கலைமாமணி, தமிழக அரசவைக் கலைஞர், திருமலை - திருப்பதி தேவஸ்தான ஆஸ்தான வித்வான், சங்கீத சூடாமணி என்று எண்ணற்ற பட்டங்களும், விருதுகளும் பெற்றவர். பிரபல வயலின் மேதை யெஹூதி மெனுஹின் 1965 இல் இவரது வாசிப்பைக் கேட்டு வியந்து பாராட்டி இவருக்குப் பரிசாக அளித்த இத்தாலிய வயலினில் கர்நாடக இசை வாசிப்பினால் உலகெங்கும் இந்திய இசையின் பெருமையை நிலைநாட்டியவர்.

வர்ணங்கள், தில்லானாக்கள், கிருதிகள் மற்றும் பரத நாட்டியத்துக்கேற்ற பத வர்ணங்கள், ஜதிஸ்வரம் முதலியவற்றை இயற்றியுள்ள வாக்கேயக்கார ராகவும் திகழ்கிறார்.

ஸுஜாதா விஜயராகவன்

காப்பீரா?

குடந்தை புகழேந்தி

செருப்புத் தைக்கும் தொழிலாளி
சிறுதொழில் செய்ய வழியுண்டு!
உருக்கிப் பொன்னைத் தொழில்செய்யும்
உழைப்பாளிக்கும் வழியுண்டு!

சிறுதொழில் செய்யும் பல்லானோர்
சேமமாய் வாழ வகையுண்டு!
குறுக்கு வழியில் பொருள்சேர்க்கும்
கொள்ளைக் காரரும் வாழ்ந்திடலாம்!

கள்ளத் தனமாய் நோட்டடிப்போர்
காலமெலாம் சுகம் கண்டிடலாம்!
எள்ளத் தனையும் உழைக்காத
எத்தரும் இங்கே வாழ்ந்திடலாம்!

புவியில் அனைவரும் வாழ்ந்திடவே
புதுப்புதுத் திட்டம் பலவுண்டு!

கவிஞன் என்ற ஓர்சீவன்
களித்து வாழ வழியில்லை!

வல்லான் வகுத்த வாய்க்காலாய்
வாழ்வது என்றும் நிலையில்லை!
எல்லாம் தெரிந்த கவிஞனுக்கு
ஏனோ வாழத் தெரியவில்லை.

எல்லாம் சரிதான் என்றாலும்
இங்கு கவிஞன் சாகின்றான்!
கல்லாய் நெஞ்சம் இறுகாமல்
கனிவாய் அவனைக் காப்பீரா?!

பரந்தாமனைப் பாடும் பதவர்ணம்

கண்ணால் காணக் கூடிய வர்ணங்களைப் போல் காதால் கேட்கக் கூடிய வர்ணங்களை உடையது கர்நாடக இசை. இந்த இசை மரபுக்கே உரித்தான ராகங்களுக்கும் நிறமுண்டு. அதாவது அவற்றுக்குரிய பாவம். கவிதையின் த்வனியைப் போல் ராகத்தின் பாவம் (உணர்ச்சி) கேட்பவரிடையே புதுப் புது அனுப வங்களைத் தோற்றுவிக்கும்.

காதலரின் ஊடல், பிரிவாற்றாமை, கூடல் என்ற பல்வேறு நிலைகளைச் சித்திரிக்கும் வடஇந்திய "ராகமாலா" சிற்றோவியங்கள் ராகங்களின் பெயரால் வழங்கப்படுகின்றன. அந்தக் காட்சியின் உணர்ச் சியை வெளிப்படுத்தும் ராகங்களே ஓவிய வடிவமாய் உருப் பெற்றதாகக் கூறுவது மரபு.

கர்நாடக இசை வழக்கில் "வர்ணம்" எனும் வடிவம் ஒரு ராகத்தின் எல்லைகளையும், வீச்சையும், அழகு களையும் பலப்படுத்துவதாய் அமைந்துள்ளது. பல் லவி, அனுபல்லவி, முக்தாயி ஸ்வரம், சரணம் (எத்துக்கடை பல்லவி), சரண (சிட்டை) ஸ்வரங்கள் என்ற அங்கங்கள் கொண்ட இந்த வடிவம், மூன்று ஸ்தாயிகளிலும், பல்வேறு கதிகளிலும், வகை வகை யான ஸ்வரச் சேர்க்கைகளின் மூலமும், அசைவுகள் மூலமும் ஒரு ராகத்தின் இலக்கணத்தை அறுதி யிட்டுத் தெளிவுபடுத்தும். இலக்கணப் பாடமாக அமையாமல் அழகுணர்வே தூக்கலாக மிளிரும் கச்சிதமான, அற்புதமானதொரு வடிவம் இது.

"வர்ணம்" என்ற சொல்லுக்கு "எழுத்துகள்" என்ற பொருளும்கொள்வதுண்டு.

"மாத்ருகா வர்ண ஸ்வரூபிணி"

என்று லலிதா ஸஹஸ்ரநாமமும்

"கசடதபாதி வர்ண"

என்று தீக்ஷிதரின் நவாவரணமும் அம்பிகையை வர்ணிப்பது இந்தப் பொருளில்தான். கர்நாடக இசைப் பயிற்சியின் ஆரம்பப் பாடங்களில் ஒன்றான வர்ணம் குரலைப் பண்படுத்தவும், ராகத்தின் உருவத்தைப் புரிந்து கொள்ளவும் பயன்படுவதால் வர்ணத்தை "அடிப்படை எழுத்துகள்" (alphabets) என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

ராக பாவத்துக்கு முக்கியத்துவம் தந்து குறைந்த சொற்களையும், அதிக அளவில் உயிரளபெடை ஓசை களையும் கொண்ட மத்திம கால கதியில் அமைந்த தான வர்ணமே முதலில் தோன்றியது. அதைத் தொடர்ந்து பாடல் சொற்களுக்கும் சமமான இடம் தந்த பத (சொல்) வர்ணங்கள் இயற்றப்பட்டன. இவை சவுக்க (இழுவலான) காலத்தில் அமைந்ததால் சௌக வர்ணம் என்றும், பின்னர் நாட்டியத்துக்காக இயற்றப் பட்டதால் ஆட்ட வர்ணம் என்றும் அழைக்கப்பட்டன. இத்தகைய பத வர்ணங்களின் அனைத்து ஸ்வரப் பகுதிகளுக்கும் பொருத்தமான சாகித்திய (பாடல்) வரிகள் உண்டு.

பாவமும், லயமும் சம அளவில் இருப்பதால் பத வர்ணங்கள் நாட்டியத்தில் அபிநயத்துக்கும், நிருத்தத்துக்கும் ஏற்றதொரு வடிவமெனக் கடந்த இருநூறு ஆண்டுக் காலமாகக் கையாளப்பட்டு வரு கின்றன. பொதுவாகப் பத வர்ணங்கள் காதல் வயப்பட்ட ஓர் இளம் நங்கையின் கூற்றாக விளங்கும். பாட்டுடைத் தலைவன் பாடல் பிறந்த ஊரில் கோயில் கொண்டுள்ள இறைவனாகவோ, அல்லது பாடலாசிரி யனின் புரவலனான மன்னனாகவோ, செல்வந்த னாகவோ இருப்பது வழக்கம்.

கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீக்ஷிதர், திருவாரூர்க் கோயிலில் கைங்கர்யம் செய்து வந்த கமலம் என்னும் தேவ தாசியின் வேண்டுகோளுக்கிணங்கி அக்கோயிலில் உறையும் தியாகேசப் பெருமானைக் குறித்து "ரூபமுஜூசி" என்ற தெலுங்கு மொழிப் பத வர்ணத் தைத் தோடி ராகத்தில் இயற்றினாராம்.

அவரது பிரதம சீடர்களான, தஞ்சை நால்வர் என்று அழைக்கப்படும் சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு சகோதரர்கள் நாட்டியத்துக் கேற்ற பல பத வர்ணங்களைத் தமிழிலும், தெலுங் கிலும் இயற்றி வழங்கியுள்ளனர். அவர்களது சம காலக் கலைஞர்களும், பின் வந்தோரும் மேலும் பல பத வர்ணங்களை உருவாக்கியுள்ளனர். ஓரிரண்டைத் தவிர எல்லாப் பத வர்ணங்களும் நாயிகா - நாயக பாவத்தில் அமைந்து சிருங்காரத்தை அடிப்படை யாகக் கொண்டவை.

பரதநாட்டியம் மறுமலர்ச்சி பெற்றுச் சிறந்து விளங்கும் இந்த நாளில் இசை விற்பன்னர்கள், நாட்டியாசாரியார்கள் பலரும் பத வர்ணங்கள் இயற்றி யுள்ளனர். இசையிலும், நாட்டியத்திலும் கையாளப் படும் மற்ற வடிவங்களைக் காட்டிலும் பத வர்ணம் இயற்றத் தனித் திறமை அவசியம். ராகபாவத்தை உணர்ந்தவராக இருந்தால் மட்டும் போதாது. லயப் பாகுபாடுகளிலும் முதிர்ந்த ஞானம் வேண்டும். கவியுள்ளமும், சொல்வளமும் ஒருங்கே அமைய வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டியத்தின் அசைவுகள், அபிநயம் முதலிய நுணுக்கங்களையும் அறிந்தால் அவற்றுக்கு ஏற்ற வண்ணம் இயற்ற உதவும்.

பல தான வர்ணங்களையும் தில்லானாக்களையும் இயற்றியுள்ள வயலின் மேதை லால்குடி ஜயராமன் நாட்டியத்துக்கேற்ற பத வர்ணங்களையும் இயற்றியுள் ளார் என்பது வரவேற்கத்தக்கது. இதுவரை கையா ளப்பட்ட ராகங்களைத் தவிர்த்து நீலாம்பரி, சாரு கேசி, சண்முகப்ரியா போன்ற ராகங்களில் அவர் இயற்றித் தந்திருப்பது ஒரு புதுமை. லயத்தில் அவருக்குரிய ஈடுபாடும், விசேஷமான தேர்ச்சியும் அவரது வர்ணங்களுக்கு அலாதியானதொரு மிடுக்கை அளிக்கின்றன. நிரடாமல், கரடுமுரடு தட்டாமல், ராக பாவத்தை ஒட்டியே நளினமாக, சொகுசாக ஆடி வரும் லயப் பின்னல்கள் தேர்ந்த கலைஞனின் கைவண்ணம் மறைத்த கைவண்ணம்.

ஏழுமலையான் புகழ் பாடும் இந்தப் பத வர்ணம் திருமால் மருகன் சண்முகனின் பிரியமான ராகத்தில்

பதவர்ணம்

ராகம் : சண்முகப்ரியா — இயற்றியவர் : லால்குடி ஜயராமன்

தாளம் : ஆதி

பல்லவி

தேவர் முனிவர் தொழும் பாதன் ஜெகந்நாதன்
தீன தயாளன் திருமகள் உறை மார்பன்

அநுபல்லவி

மாவலி வலிமையைத் தாளால் அளந்த திருமால்
ஸ்ரீவேங்கட கிரி செங்கமலக் கண்ணபெருமான்

முக்தாயி ஸ்வர ஸாஹித்யம்

திருமலை தன்னில் ஸதா கடலலைபோல்
(பக்தர்கள்)

திருமலைதன்னில் ஸதா கடலலைபோல் மதிமுகம்
தரிசித்து

"கோவிந்த வைகுந்தா ஆனந்தம் நீயே" என்றடியவர்
மகிழ (தேவர்
முனிவர்)

சரணம்

ஸ்ரீநிவாஸன் பெருமை சொல்லத் தரமோ!

சிட்டைஸ்வர ஸாஹித்யங்கள்

1. தெய்வம் யாவும் ஒன்றிணைந்து வந்த நம்
(ஸ்ரீநிவாஸன் பெருமை)

2. சங்கம் ஆழியுடன் அங்கை அபயம் தரத்
துங்க அலர்மேல் மங்கை மணவாளன்
(ஸ்ரீநிவாஸன் பெருமை)

3. கலியுகம் தனில் கருணாமூர்த்தி! துளபம் – மலர் –
மாணிக்க – வைடூர்ய – அலங்கார
கம்பீரன்! சௌந்தர்யன் சேவை காணப் பல கோடி
கண்கள் வேணும் (ஸ்ரீநிவாஸன் பெருமை)

4. அன்று பார்த்தன் தேரோட்டி அருள் கீதையுடன்
அறம் காத்து
மரம் ஏழுருவ சரம் எய்து தன் திறம் நாட்டிடும்
பரந்தாமன்!
அன்னை மகிழ பத்ம வல்லி தன்னை அன்பொடு
மணந்த வேங்கடரமணன்!
பக்தர் நேயன்! பத்ம நாபன்! நித்ய கல்யாண
(ஸ்ரீநிவாஸன் பெருமை)

அமைந்தது ஓர் அழகு. தமிழில் திருமலை வாசன் பேரில் இயற்றப்பட்ட முதல் பத வர்ணம் என்பது ஒரு சிறப்பு. சிருங்காரத்தைத் தவிர்த்து (பக்தி) இறை யுணர்வே உயிர்நாடியாக அமைந்தது இதன் தனித் தன்மை.

தேவரும் முனிவரும் தொழும் பாதத்தில் பணிந்து தொடங்கும் பல்லவி அந்தப் பாதத்தின் மகிமையை "மாவலி வலிமையை" அடக்கிய தாள் என்று அநு பல்லவியில் விவரிக்கிறது.

மலைகளாக வரும் இக வாழ்வின் இன்னல்களால் இடர்ப்படும் பக்தர் கூட்டம் உடலிலும், உள்ளத்திலும் வலி சுமந்து, ஏழுமலை கடந்து ஓயாத அலையாக வந்த வண்ணம் இருக்கின்றனர். அத்தனை துயரமும் அவன் தரிசனம் கிட்டிய கணத்தில் மறைந்து,

"கோவிந்த வைகுந்தா ஆனந்தம் நீயே" என்று மகிழ்கின்றனர்.

அத்தகைய "ஸ்ரீநிவாசன் பெருமை சொல்லத் தரமோ" என்கிறது சரணம். சிவனென்றும், திருமா லென்றும், முருகனென்றும், சக்தியென்றும் வெவ் வேறு கடவுள் வடிவங்களை வழிபடுவோர் அனை வரும் "இது எங்கள் தெய்வம்" என்று கொண்டாடும் வண்ணம் "தெய்வம் யாவும் ஒன்றிணைந்து வந்த" அருள் வடிவாம் ஸ்ரீநிவாசன்.

சரணத்தின் மூன்றாவது சிட்டஸ்வரம் ஸ்வர அலங்காரம் என்ற இலக்கணத்துக்கேற்பத் திகழும். "நிகரி" "சநித" என்ற இரு ஸ்வரச் சேர்க்கைகள் விதவிதமாக அணிசெய்யும் இந்த ஸ்வரத்தின் பாடல்வரியும் "துளப மலர் மாணிக்க வைடூர்ய அலங்கார கம்பீரன் சௌந்தர்யன் சேவை காணப் பல கோடி கண்கள் வேணும்" என்று இறைவனின் அலங்காரத்தை வருணிக்கிறது. கீழிருந்து மேல், மேலிருந்து கீழ், மீண்டும் பாதாதி கேசம் என்று உயர்ந்து, தணிந்து, உயரும் தீப ஆரத்தியை ஒட்டி ஸ்வரங்களும் அதேபோல் ஆரோஹண, அவ ரோஹண க்ரமத்தில் அமைந்துள்ளது மறைந்திருக்கும் சிறப்புகளில் ஒன்று.

"கிருஷ்ணா! ராமா! கோவிந்தா!" என்று கூவி வழி படும் பக்தியை நினைவுபடுத்துவதாய் அறம் காத்த கண்ணனையும், மறம் நாட்டிய இராமனையும், பத்மவல்லியை மணந்த கோவிந்தனையும் கூறி நித்ய கல்யாண ஸ்வரூபனாக ஸ்ரீநிவாசனை நம் இதயத்தில் நிறுத்துகிறது இந்த வர்ணம்.

பிற்காணும் படங்களில் இந்தப் பத வர்ணத்துக்கு அபிநயம் செய்பவர்கள் சுமித்ரா – சுநந்தா சகோ தரியர். நாட்டியம் வடிவமைத்துப் பயிற்றுவித்த அவர் களது குரு ராதா, 'குமாரி' கமலாவின் இளைய சகோதரி. தமக்கையுடனும், தனியாகவும் ஆடிப் புகழ் பெற்ற முன்னணிக் கலைஞர். நாட்டிய ஆசிரியை.

ஸ்வரக் கோவைகளின் அழகுகளையும், லயத்தின் நுணுக்கமான வேலைப்பாடுகளையும் உணர்த்தும் நிருத்தத்தைப் புகைப் படங்களால் எடுத்துக் காட்ட முடியாது. எனவே பாடல் வரிகளுக்குரிய அபிநயம் மட்டிலுமே படத் தொகுப்பாக வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பத வர்ணத்தின் பூரணமான அழகை நேரில் கேட்டும், கண்டும்தான் உணர முடியும்.

ஸுஜாதா விஜயராகவன்

வண்ணப்படக் கலைஞர் – வி.கே. ராஜாமணி
நாட்டிய வடிவமைப்பு – திருமதி ராதா
அபிநயம் செய்பவர்கள் – சுமித்ரா, சுநந்தா சகோதரியர்.

கலாக்ஷேத்ரா ஒரு காவியம்

கங்காராமமூர்த்தி

"எப்பொழுதெல்லாம் தர்மத்துக்கு நசிவு ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் தர்மத்தை நிலைநாட்ட நான் தோன்றுவேன்" என்று பகவான் கிருஷ்ணர் கீதையிலே கூறியிருக்கிறார். பாரதத்தின் தொன்மையான பரதக்கலை ஒளி மங்கியபோது அதற்குப் புத்தொளி தந்து பொலிவு பெறச் செய்ய சரஸ்வதியே மீண்டும் தோன்றியது போல, ருக்மணி தேவியின் நடனத்தைக் கண்ணுற்றவர்கள் வியந்து கூறினார்கள்.

தெய்வக் கலைகளான நடனமும் இசையும் ஒருசில குறிப்பிட்ட வகுப்பினருக்கே உரியதாகக் கருதப்பட்ட காலத்திலே, நற்குடியிலே பிறந்த நங்கை ருக்மணிதேவிக்கு நடனம் கற்க வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது. ரஷ்யாவின் தலைசிறந்த நடனமணி அன்னா பாவ்லோவ்னாவிடம் (1882-1931) மேலை நாட்டு நடனம் பயின்றவர் ருக்மணி தேவி. நம்முடைய புராதனமான கலையைப் பற்றி அவர் கேள்விப்பட்ட செய்தியெல்லாம், கலைக்குச் செய்யும் அவமதிப்பாகவே இருந்தன. பல கோணங்களிலிருந்து எழுந்த எதிர்ப்புகளையெல்லாம் எதிர்த்து நின்றார். நடனத்தைக் கற்கத் துவங்கினார். தியாசபிகல் சொஸைட்டியில் தமது நடனத்தை அரங்கேற்றினார். பீடும் பெருமையும் மிக்க தொன்மையான பரதக்கலைக்குப் புதுவாழ்வு தர ருக்மணிதேவி ஏற்படுத்திய ஸ்தாபனமே 55 ஆண்டுகளாகக் கலைச்சேவை புரிந்து வரும் உலகப் புகழ் பெற்ற கலாக்ஷேத்ரா.

கலாக்ஷேத்ராவின் பிரசிடெண்ட், டைரக்டராக இருப்பவர் திரு. கே.சங்கர மேனன் அவர்கள். திரு. ராஜாராம் கலைக்கல்லூரியின் பிரின்சிபாலாக இருக்கின்றார். திரு. ராஜாராம் அவர்களைச் சந்தித்துக் கலாக்ஷேத்ராவைப் பற்றிக் கேட்டோம்.

அகிலம் போற்றும் ஒரு கலைப்பள்ளிக்குப் பிரின்சிபாலாக இருக்கும் திரு. ராஜாராம் மிக எளிமையாகத் தோற்றமளித்த குடில் ஒன்றிலே அமைதியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

☆ ருக்மிணி தேவி அருண்டேல்



'கலாக்ஷேத்ரா என்றால் நாட்டியம் கற்றுக் கொடுக்கப் படுகின்ற பள்ளி என்றுதான் பலரும் நினைத்திருக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. கலாக்ஷேத்ரா என்ற ஒளிவிளக்கிற்கு ஐந்து முகங்கள் உண்டு. 1. நடனக்கலையைக் கற்பிக்கும் பள்ளி, 2. நுண்கலைக் கல்லூரி, 3. பெசண்ட் அருண்டேல் சீனியர் செகண்டரி பள்ளி, ஸ்டேட் போர்டு பள்ளி, 4. வீவிங் சென்டர், 5. சுவாமிநாதய்யர் நூலகம் - இந்த ஐந்து அங்கங்களும் எவ்விதமாகச் செயல் புரிகின்றன என்று பார்ப்போம் வாருங்கள்" - என்று அழைத்துச் சென்றார்.

1936 ஆம் வருடம் ஜனவரி மாதம் 6 ஆம் தேதி கலாக்ஷேத்ரா துவக்கப்பட்டது. பொதுப்படையாக எல்லாக் கலைகளும், சிறப்பாகப் பரதமும், உயர்த்தப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாக அமைந்தது. ருக்மணிதேவியின் இந்த முயற்சிக்குப் பக்கபலமாகவும் உற்றதுணையாகவும் திரு. பி.எஸ். சிவஸ்வாமி ஐயர், ரைட். ஹானரபிள் சீனிவாச சாஸ்திரி, திரு. டி.ஆர். வெங்கடராம சாஸ்திரி, திரு. சி.பி. ராமஸ்வாமி ஐயர் போன்றோர் இருந்தனர்.

'சதிர்' என்றும் 'சின்னமேளம்' என்றும் கூறப்பட்ட நாட்டியத்தை ருக்மணிதேவி 'பரத நாட்டியம்'

☆ ஜடாயு மோட்சம்



என்று கூறத் துவங்கினார். இன்று சர்வசாதாரணமாக, ஒரு பெண் விரும்பினால் நாட்டியம் கற்றுக் கொள்ள முடிகிறது. ஆட முடிகிறது என்றால் அதற்கு முன்னோடியாக இருந்தவர் ருக்மணி தேவியே!

"ருக்மணிதேவியை 'அத்தை' என்றுதான் இங்கேயுள்ள எல்லோருமே அழைக்கிறோம். கலாக்ஷேத்ரா துவங்கிய புதிதில, ருக்மணிதேவியின் சகோதரர் மகள் ராதா நாட்டியம் கற்க வந்தாள். அவள் அத்தை என்று கூப்பிட, அது மற்றவர்களுக்கும் பழக்கமாகிவிட்டது. அத்தை நடனம் கற்க விரும்பினாரே தவிர, அதைக் கற்பிக்க நட்டுவனார்கள் முன்வரவில்லை. அக்காலத்தில் புகழ்பெற்ற பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் ருக்மணி தேவி தமது விருப்பத்தைத் தெரிவித்தார். ஆனால் அவருக்கோ 'ஏதோ ஆசைப்படுகிறாள். முனைப்பாக ஆடமாட்டாள்' என்ற எண்ணம். முதலில் மறுத்தார். பின்பு கற்றுத்தர முன்வந்தார். ஆனால் அவரே வியக்குமளவு நடனக்கலையில் ருக்மணிதேவிக்கு ஆர்வமும், விடா முயற்சியும் இருந்தன. டிசம்பர் மாதம் 1935 ஆம் ஆண்டு ருக்மணிதேவியின் நடன அரங்கேற்றம் காண்போர் கண்டுகளிக்கும் வகையில் அமைந்தது. பத்திரிகைகள் எல்லாம் இந்தக் கலைப்புரட்சியை ஒரு மித்துப் பாராட்டி எழுதின".

கலாக்ஷேத்ரா என்னும் கலைக் கோயிலுக்குப் பிரதான தூண்களாக திரு.கே.சந்திரசேகரன், திரு.பி.வி. ராஜமன்னார், திரு. கே. ராமகோடீஸ்வர ராவ், டாக்டர். ஜேம்ஸ் கஸின்ஸ், திரு.கே. நாராயண மேனன், திரு. என். யஞ்னேஸ்வர சாஸ்திரி, திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி (ஆசிரியர் : கல்கி) ராவ் பகதூர் கிருஷ்ணசாமி ஐயர் ஆகியோர் விளங்கினார்கள்.

குரு தேவர் தாகூரின் சாந்தி நிகேதனைப் போல ருக்மணிதேவியின் கலாக்ஷேத்ராவும் வளரத் துவங்கியது; புகழ்பெற்றது. இது கல்லூரியல்ல; கலாசார ஸ்தாபனம் என்று ருக்மணிதேவி அடிக்கடி கூறுவாராம்!

இந்தக் கலாசார ஸ்தாபனத்தில் பாரம்பரியமான மரபு வழிகளின் வேர்களைப் பிரம்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் துணையோடு ஊன்றினார் என்று சொல்லலாம். 'அத்தை' பல விஷயங்களில் முன்னோடியாக இருந்திருக்கிறார். வெளி நாட்டவர் ஒருவரை மணந்து கொண்டார்; நடனம் கற்றார்; நாட்டிய நாடகம் என்ற ஒன்றிற்கும் பிள்ளையார் சுழி யிட்டார்.

☆ கர்ண பரம்பரை



நாட்டிய நாடகம் என்றதும் தி. ராஜாராம் அவர்கள் உற்சாகமாகக் கூறத் துவங்கினார்.

"டைகர் வரதாச்சாரியார் இசையமைத்த 'குமார சம்பவம்' காளிதாசனின் கற்பனைத் திறத்தையும் கலைவண்ணத்தையும் நாட்டியத்தில் கொண்டு வந்தது எனலாம். சிவன் – பார்வதி நடனத்தில் கதகளியும் பரதமும் இணைந்திருந்தன. குற்றாலக் குறவஞ்சிக்குத் திரு. சி. கிருஷ்ணமாச்சார்யா இசையமைத்திருந்தார். இந்த நாட்டிய நாடகத்தைக் குற்றாலத்திலேயே 'அத்தை' அரங்கேற்றினார்கள். இந்த நாட்டிய நாடகத்தைக் காண வந்திருந்த ரசிகமணி அவர்கள், "பல ஆண்டுகளாக நான் படித்து ரசிக்கும் குற்றாலக் குறவஞ்சியைக் கலாக்ஷேத்ரா குழுவினர் கண் முன்னால் நடத்திக் காட்டி என்னைப் பழந்தமிழ் நாட்டுக்கே கொண்டு போய்விட்டார்களே' என்று வாயாரப் பாராட்டினார். சீதா சுயம்வரம், பீஷ்மன், இராமாயணம் என்று 'அத்தை' தயாரித்தளித்த நாட்டிய நாடகங்கள் 26 ஆகும்.

கலைக்கு அரிய சேவை செய்த ருக்மணிதேவி, கலை சார்ந்த பலவற்றிலும் தம் பொற்கரங்களால் பணிகளைத் துவக்கினார். நுண்கலைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தினார். ஓவியப் பள்ளியொன்றும் துவக்கப்பட்டது. திரு. சின்ன ராஜு அவர்களின் மேற்பார்வையில் பல மாணவர்களும் மாணவிகளும் ஓவியம் கற்கின்றார்கள். 'மார்டன்' ஆர்ட் என்ற பெயரில் புரியாத ஓவியங்கள் வரைவதை விடுத்து, மரபு வழியிலான ஓவியங்களே இங்கு வரையப்படுகின்றன. அழகழகான கிருஷ்ணர், ராதையின் பல்வேறு நிலைகளை வண்ணமுறத் தீட்டி, பொன் ரேக்குகளால் அலங்கரித்திருந்தனர்.

அஸ்ஸாம் , வங்காளம் என்று வெளிமாநிலங்களில் இருந்தும் இங்கு ஓவியம் பயில வருகின்றனராம்.

ருக்மணிதேவியின் கணவர் திரு. ஜி.எஸ். அருண்டேல் சிறந்த கல்விமான். கல்விக்கண் திறக்கப்படுவதுதான் கலாசாரம் ஊன்ற முதற்படி என்று நினைத்தவர். கலாக்ஷேத்ராவுக்கு மாண்டிசோரி அம்மையாரை வரவழைத்து, ஒரு பள்ளியைத் துவக்கினார். அன்று அவரிட்ட வித்து ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடியுள்ளது.

திரு. ராமசாமி அவர்கள் தாம் பணியாற்றும் பெசண்ட் அருண்டேல் சீனியர் செகண்டரி பள்ளிக்கு அழைத்துச் சென்றார். பள்ளியின் தலைமையாசிரியையாகப் பதினைந்து ஆண்டுகளாகப் பணியாற்றுபவர் திருமதி. காமாட்சி அவர்கள். இனிய உள்ளம், குழந்தைகளிடம் நற்பண்புகளை, தேசப்பற்றை வளர்க்கும் சீரிய எண்ணம் உடையவர். நூற்றுக்கணக்கான சிறுவரும் சிறுமியரும் பயிலும் பள்ளி போலவே தோன்றாமல் அங்கே அமைதி அரசோச்சியதற்கு ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டும்! "பள்ளியில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு எந்தவிதமான நன்கொடைகளையும் கேட்பதில்லை" என்று தலைமையாசிரியை கூறிய செய்தி வியப்பளிப்பதாக இருந்தது!

'கதர்' என்ற ஒரு மந்திரச் சொல் நமது தேசத்தின் சுதந்தரத்துக்கு ஒரு திறவுகோலாக இருந்ததை ருக்மணிதேவி பூரணமாக உணர்ந்திருக்க வேண்டும். எனவே தான் கைத்தொழிலையும் வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டார். பண்டைக்காலத் தமிழகத்தின் கைதேர்ந்த நெசவினை அறிமுகம் செய்ய, புடைவைகள் உருவாயின. 1937 இல் துவங்கிய 'கலாக்ஷேத்ரா' நெசவுக் கூடத்தில், புடைவைகளுடன் 'கலம்காரி' என்ற புகழ் பெற்ற டிசைன்களுக்கான அச்சுகளும் ' உருவாக்கப்படுகின்றன.

☆ பாஞ்சாலி சபதத்தில் ஒரு காட்சி



☆ சூர்ப்பணகை பிரலாபம்



26 வகையான வெஜிடபிள் அச்சுகள் மூலம் அறியாத வண்ணங்களில் டிசைன்கள் உருவாக்கப்பட்டு, பலராலும் போற்றப்படுகின்ற ஒன்றாகத் திகழ்கிறது.


தமிழுக்கும் பழந்தமிழ் இலக்கியத்துக்கும் அறியாத சேவை செய்தவர் 'தமிழ்த்தாத்தா' என்று அழைக்கப்படுகின்ற திரு. உ.வே. சாமிநாதய்யர் அவர்கள். அவருடைய தமிழ்த் தொண்டும் பணியும் அவருக்குப் பின்பும் தொடர வேண்டுமென்று ஐயரவருடைய மகன் விருப்பம் தெரிவித்தார். எனவே ருக்மணிதேவி சாமிநாதய்யர் நூலகம் ஒன்றை 1943 ஆம் வருடம் கலாக்ஷேத்ராவில் நிறுவினார். அதன் பின்பு பல ஆராய்ச்சியாளர்களின் துணையோடு நூல்கள் பல வெளிவந்தன. நூலகத்தில் பல அரிய நூல்கள் காண்பதற்கரியவைகளாக கிட்டத்தட்ட பத்தாயிரம் நூல்கள் உள்ளனவாம்!

நூலகம் பற்றி அறிஞர் ஒருவர் எடுத்துரைத்தார்.

"அபிநய தர்பண், தக்கயாக பரணி, தமிழ்ப்பா மஞ்சரி, மஹா பாரத சூடாமணி, திருவாசக வியாக்யானம்" போன்ற நூல்கள், மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் இசை சம்பந்தமான சில நூல்கள் வெளிவர இருக்கின்றன.

"ருக்மணிதேவியின் காலத்திற்குப் பிறகு ஏதேனும் நாட்டிய நாடகங்கள் தயாரானதா என்பதைப் பற்றி..." என்று சந்தேகமாகக் கேட்டதும் - திரு. ராஜாராம் முறுவலித்தார்.

"அத்தை, தனக்குப் பின்னே நிறைய தலைசிறந்த கலைஞர்களை உருவாக்கி விட்டுத்தான் சென்றிருக்கிறார். திருமதி. சாரதா தயாரித்த 'முருகன் திருவருள்', ஜெயதேவரின் வாழ்க்கை பற்றிய நாட்டிய நாடகம், 'கர்ண சபதம்' முழுக்க முழுக்க பாரதியாரின் பாடல்களைக் கொண்டு திருமதி கிருஷ்ணவேணி லக்ஷ்மணன் தயாரித்த 'பாஞ்சாலி சபதம்' என்ற நான்கும் அத்தையின் காலத்திற்குப் பிறகு தயாரித்து அரங்கேறியவையாகும்".



பாஞ்சாலி சபதத்தைத் திருமதி. கிருஷ்ணவேணி லக்ஷ்மணன் வெகு அருமையாகத் தயாரித்திருந்ததைப் பத்திரிகைகள் பாராட்டி எழுதியிருந்தன. ருக்மணி தேவியின் கலைப்பற்றும் தூய மரபு காக்கும் சிந்தனையும் வழிவழியாகத் தொடர்கிறது என்பதற்கு இவை சான்றுகள் அல்லவா?

ருக்மணி தேவி ஒருமுறை கலாக்ஷேத்ராவைப் பற்றிக் கூறினார்:


"கலையை வளர்க்க, இன்று தூவப்படுகின்ற விதைகள் நாளை விருட்சங்களாகலாம். அதனை நாம் காண முடியாவிட்டாலும் நமக்குப் பின் வரும் தலைமுறையினர் இதன் நிழலில் பயன் பெறுவார்கள் அல்லவா?"


உண்மைதான். இயற்கையெழில் நர்த்தனம் புரியத் தெய்வீக நாதங்களுடன் பாரதத்தின் தொன்மையான கலைகளை உலகுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கும் கலாக்ஷேத்ரா ஒரு வாழும் காவியமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.



ஆன்மிகப் பரம்பரை

சக்தி உபாஸனை என்பது கூர்மையான கத்தியில் நடப்பதற்கு ஒப்பாகும். 'அஸிதாரா வ்ரதம்' என்று சொல்வார்கள். சக்தி வழிபாட்டில் மிக முக்கியமான விஷயம் எல்லாப் பெண்களையும் தாயைப் போலவும், சகோதரி களைப் போலவும் நினைக்க வேண்டும். மத விசாரணை கூடாது. இவற்றிற்கெல்லாம் மேல் எம்பெருமாட்டியான பராசக்தி யின் திருநாமம் மனத்தில் தியா னித்துக் கொண்டிருப்பதாகும். காளிதாஸன், அபிராமிபட்டர், ஸ்ரீபாஸ்கரராயர், ஸ்ரீவக்ஷ்மிதரர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் இந்த தவவேந்தர்கள் எல்லோரும் தமக்கென இல்லாமல் பிறர் நல னுக்காக அம்பிகை வழிபாட் டினைச் செவ்வனே செய்து அம்பிகையின் அருள் பாய்ச்சல் மூலம் அன்பர்களின் துயர் தீர்த்து ரட்சித்து ஆன்மா நல்வழியில் உய்வதற்கு அருளாளர்களாய்த் திகழ்ந்தனர். இந்த அருளாளர்





பரமஹம்ஸ ஸ்ரீமத்புவனேஸ்வரி ஸ்வாமிகள்

களின் வரிசையில் இன்று நம்மிடையே வாழ்ந்து, எளிமையோடு, ஜாதி மதம் பாராது, வேற்றுமைகள் பாராட்டாது, அறுபது ஆண்டுகளுக்கு மேல் ஸ்ரீபுவனேஸ்வரி உபாஸனையைச் செய்து உபாஸனை தவ வலிமையால் எண்ணற்ற அன்பர்களின் இதயத்தில் இடம் பெற்று நமக்கெல்லாம் ஸத்குருவாகவும் திகழ்ந்து வருபவர் ஸ்ரீபரத்வாஜ ஆச்ரம பீடாதிபதி பரமஹம்ஸ ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகள்.

தனது ஒன்பது வயதில் திருக்குற்றால நீர்வீழ்ச்சியில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தார் காசி விஸ்வநாதன். ஸ்ரீவித்யை உபாசனையின் விடிவெள்ளி - திருக்குற்றாலம் ஸ்ரீசித்தேஸ்வரி மடத்து பீடாதிபதி மௌன ஸ்வாமிகள் தம் விடியற்காலை ஜபம் செய்ய நடந்து செல்லும்போது காசி விஸ்வநாதன் ஸ்நானம் செய்வதையும், அவரது கண்களில் ஒளியையும் கண்டார். விஸ்வநாதன் அருகே சென்று சிரஸில் கை வைத்து, "என்னோடு வருகிறாயா?" எனக் கேட்க, இரண்டாவது அபிப்ராயத்திற்கு இடம் இல்லாமல் அந்த மகாதபஸ்வியான மௌன குருவின் பின்னால் தொடர்ந்தான் காசி விஸ்வநாதன்.

காசி விஸ்வநாதன் மௌன ஸ்வாமிகளின் பிரதம சீடர். தேவி ஆராதனை - உபாசனை, விஷக்கடி போக்குதல் - நோய் தீர்த்தல் இவற்றையெல்லாம் மௌன குருவே தாம் கற்றதை, தாம் மந்திர சித்தி பெற்றதை அப்படியே அருளுகிறார். மௌன ஸ்வாமிகள் சித்தி சமாதி அடைகிறார். அவருக்குப்பின் பீடாதிபதி பதவி வகித்த ஸ்ரீமத் விமலானந்த பாரதி ஸ்வாமிகளுடன் காசிக்கு யாத்திரை புறப்படுகிறார். காசியில் விமலானந்த பாரதி ஸ்வாமிக்குக் கடுஞ்ஜுரம் கண்டு படுத்த படுக்கையாய்க்கிடக்கிறார். அப்போது விமலானந்த பாரதி ஸ்வாமிகள், காசியில் பஞ்சகங்கா கட்டத்தில், பஞ்சகங்கா மடத்தில் காயத்ரீ, யாக்ஞவல்க்யர், தத்தாத்ரீயர், ஆதிசங்கரர் இந்த மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென பத்திரிகை அச்சடித்து விளம்பரம் செய்தாகிவிட்டது. ஸ்வாமிகளுக்கு எழுந்திருக்கவே முடியவில்லை. "விஸ்வநாதா நீ போய் இவற்றையெல்லாம் செய்" என ஆணையிடுகிறார்.

"குருவே, நானா?"

"ஒன்றும் பேசாதே, தேவியின் ஆக்ஞை".

குறித்த நேரத்தில் முறை தவறாமல் வேதவிதிப்படி அத்தனை மூர்த்தங்களுக்குரிய மந்திரங்களைத், திருத்தமாய்க் கூறி, ஆவாஹனம் செய்து பிரதிஷ்டை செய்கிறார் காசி விஸ்வநாதன். 'இது என்ன விந்தை? பதினான்கு வயதில் இத்தனை ஞானமா?' வியக்கின்றனர் பிரதிஷ்டை கண்ட அனைவரும். விமலானந்த பாரதி மகிழ்ச்சியுடன், "நீ ஸங்கல்பம் செய்தபடி காயத்ரீ ஜபத்தைக் கங்கை நதியில் முடித்துவிடு" என்றார். காயத்ரீ ஜபமும் - ஸ்ரீபுவனேஸ்வரி ஆராதனமும் காசி விஸ்வநாதனைப் பரமஹம்ஸ ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகளாய் மாற்றிய காலம் இதுதான்.

ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகள் பல அற்புதங்கள் நடத்தியிருக்கிறார்கள். பல உயிர்களின் ஊசலாட்டத்தை நிறுத்தியிருக்கிறார்கள். தமது தவ வலிமையால் எண்ணற்ற அன்பர்களின் பிணியைப் போக்கியிருக்கிறார்கள். உபாஸனையின் மந்த்ர மகிமையால் நண்பர்களின் குடும்பங்களில் பல அருளாடல்களை நிகழ்த்தி இன்னலைப் போக்கி இறையருளைத் தந்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் இருந்து, தொலைபேசி மூலம் பில்இமிங் என்பவர் புவனேஸ்வரி ஸ்வாமிகளிடம் தொடர்பு கொண்டு தஞ்சம் அடைகிறார். அவரது துயரம் என்ன? உயிருக்கு உயிராய் இருந்த மனைவியை ஒரு கடத்தல் கும்பல் கடத்திச் சென்று விட்டது. போலீசிலும், பத்திரிகையிலும் தெரிவித்தும் ஒரு பலனுமில்லை. "பயப்படவேண்டாம். நாளை உன் மனைவி பத்திரமாக வருவாள். அந்தக் கடத்தல் கும்பலின் மனம் மாறி அவர்களே உன்னிடத்தில் கொண்டு சேர்ப்பார்கள்".

பில்இமிங் உணவும் உறக்கமும் இன்றி நிமிடத்தை யுகமாய்க் கழிக்கிறார். மறுநாள் வந்தது. எந்தப் பாதிப்பும் இன்றி பத்திரமாய் வந்து சேருகிறாள் மனைவி. பில்இமிங் இன்று ஸ்வாமிகளின் திருவடிவாரத்தில் ஸேவை புரியும் பக்தன். ஸ்வாமிகளின் யோக மாயைக்கு இது ஓர் அத்தாட்சி. சாட்சி.

ஸ்ரீராமகிருஷ்ண பரத்வாஜ்

மதுரை மகாகாளிப்பட்டி ஸ்ரீபத்ர காளியம்மன் கும்பாபிஷேகம் நடக்கப் போகிறது. கோலாகலமாய் மாகாளிப்பட்டியே விழாக்கோலம் பூண்டது. லட்சக் கணக்கில் பக்தர்கள் கூடிவிட்டனர். புவனேஸ்வரி ஸ்வாமிகள் கும்பாபிஷேகம் செய்ய தனது மகன் ராமகிருஷ்ண பரத்வாஜோடு எழுந்தருளி விட்டார்.

மாகாளிப்பட்டி ஊரில் ஒரு சாரார், குடமுழுக்குச் செய்வதற்கு முன் ஆடும், கோழியும் பலி கொடுக்க வேண்டுமென மூன்று ஆடுகளையும் நூறு கோழிகளையும் அம்பிகை சந்நிதிக்கு முன் நிறுத்திவிட்டனர். ராமகிருஷ்ண பரத்வாஜ் பார்த்தார். "அம்பிகை படைத்த ஜீவராசிகளைக் கொன்று தேவிக்குப் பலியிடுவதா! இது என்ன அறிவீனம்? பலி கொடுக்கக் கூடாது" என்று வேண்டுகிறார். அவர்கள் கேட்பதாக இல்லை. "உனக்குத் தெரியாது சின்னசாமி, அம்மனுக்குப் பலி கொடுக்கவில்லையென்றால் கோபம் வந்துவிடும்" கூட்டத்திலிருந்து ஒருவர் கூறுகிறார்.

"அம்பிகை கேட்டாளா?" இந்தக் கேள்விக்கு அவர்கள் வாயிலிருந்து பதில் வரவில்லை. "இந்த உலகத்திலேயே மிக உயர்ந்த ஜீவ ராசி மனிதன்தான். அதனால்



ஆடு, கோழியைப் பலி கொடுப்பதைவிட என்னைப் பலியிடுங்கள். அம்பிகை மிகவும் திருப்தியடைவாள். உங்களுக்கும் காரியம் நிறைவேறும்" என்று கூறி பலி பீடத்திற்கு அருகில் போய் நின்றுவிட்டார்.

"சின்னசாமி, உன்னைப் பலி கொடுத்தால் உன்னைச் சுத்தி இருக்கிறவங்க சும்மா இருப்பாங்களா! போலீசிலே சொல்லிடுவாங்க, கோர்ட்டுக்குப் போவாங்க".

"அப்படி வாருங்கள் வழிக்கு. என்னைப் பலி கொடுத்தால் எனக்குப் போலீசும் கோர்ட்டும் வருகிறது. ஆடு, கோழிகளுக்குப் போலீசும் கோர்ட்டும் இல்லை, ஒரு சமுதாய சங்கமும் இதற்கு இல்லை. அதனால்தானே இப்படிச் செய்கிறீர்கள்? தேவி பலி கேட்க மாட்டாள். அவள் கேட்பது பக்தி மட்டுமே" என்று பரத்வாஜ் தெளிவோடு விளக்கம் கூற, கூட்டத்திலிருந்தவர்களில் பலர் இதை ஆமோதித்து, "இனி மேல் நாங்கள் பலி கொடுப்பதை நிறுத்தி விடுகிறோம்" என்று அதை அமலுக்கும் கொண்டு வந்தனர்.

இந்த இளம் ஞானியைப் பெற்ற புவனேஸ்வரி ஸ்வாமிகள் பரத்வாஜின் ஏழு வயதில் பராசக்தி பாலையின் உபதேசத்தை அருளி கோடிக்கணக்கில் மந்திர உரு ஏற்றச் செய்து, மந்திரோபாஸனையையும் யக்ஞ கர்மங்களையும் கற்றுத் தந்து, ஸ்ரீயோகமாயா புவனேஸ்வரி பீடத்திற்குத் தயார் படுத்தி அம்பிகையின் அருள் வீச்சைக் பெறும்படி சாதக உபாஸனையை நடத்த வாரிசினை உருவாக்கி வருவதில் நாம் மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைகிறோம்.

பரமஹம்ஸ ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகள் நிர்மாணித்துள்ள ஸ்ரீ பரத்வாஜ ஆசிரமத்தினைத் தரிசித்து ஸ்வாமிகளின் திருவடித் தாமரைகளில் பணிந்து உய்வோம். ஞானக்கன்று ஸ்ரீராமகிருஷ்ண பரத்வாஜின் அன்பைப் பெற்று குதூகலம் அடைவோம். இந்த ஆன்மிக இரத்தப் பரம்பரை தொடர்ந்து வளர்ந்து, பல திருப்பணிகளை நடத்திட இறைவியைப் போற்றிடுவோம்.

நீலோத்பலம்

அழயாக்கு நல்லான்

திருத்தலங்களில் தேர்ந்து அமைந்தது திருவாரூர்.

ஆரூரின் ஆலய அமைப்பு, பிரணவ சாதனையைப் பிழையறப் பேசும்; குண்டலினி யோகத்தின் குறிப் புணர்த்தும் ஸ்ரீவித்யை மந்திரங்களின் கருவறையைக் காட்டும்; அசபை என்கிற அந்தரங்க சாதனையை அழகுறச் சொல்லும்; அன்றி அத்தன் அருள்பெறச் சித்தரும் முனிவர் பலரும் கைக்கொண்ட பரியங்க யோகத்தைப் பரிந்துரைக்கும்.

ஆரூர் ஆலயத்தின் மூலவர் வன்மீகர். அருகே அன்னை சோமகுலாம்பிகை. இறைவன் சூரிய குலம். அம்பிகை சந்திர குலம்.





★ தேவி நீலோத்பலாம்பிகை



வன்மீகரின் வலப்பக்கத்தில் - தனிச் சந்நிதியில் தியாகராஜர் வீற்றிருக்கிறார். சிறப்புப் பூசைகள் எல்லாம் இவருக்கே. தியாகராஜத் திருமேனியை ஒட்டி அவரோடு பிரிதலின்றி கொண்டி என்கிற சக்தி. கருவறையில் தனியாக விடங்கர் என்கிற மரகதலிங்கம். இவரே அபிஷேக மூர்த்தி.

அடுத்த பிராகாரத்தில் - சிறு கோயிலில் உலகம்மை நீலோத்பலாம்பிகையாக அழகுறக் காட்சியளிக்கிறாள்.

கடைசிப் பிராகாரத்தில் வடகீழ் மூலையில் தனிக் கோயிலில் கமலாம்பிகை சுகாசனக் கோலத்தில் வீற்றிருக்கிறாள்.

இவர்களே ஆலயத்தின் பிரதான மூர்த்திகள். இனி இவ்வாலயம் காட்டும் யோக நெறிகளைக் காண்போம்.

இக்கோயிலின் இரண்டு தேவியரும் பூவைப் பெயராகக் கொண்டிருக்கிறார்கள். ஒருத்தி கமலத்தைக் கொண்டு கமலாம்பிகை. மற்றவள் அல்லியைக் கொண்டு நீலோத்பலாம்பிகை. இது ஏன்?

'திருமூலட்டானனே போற்றி போற்றி' என்கிறார் நாவுக்கரசர். சாதகன் உடம்பில் மூலாதாரமே திருமூலட்டானம். குண்டலினி யோகத்தில் அக்கினி கண்ட ஒளியைக் காணும்போது அதுவே திருவாரூர். இதய வழிபாட்டில் சூரிய ஒளியைக் காணும்போது அதுவே தில்லை. சாதகன் உள்ளுணர்வாலாய உடம்பில் பிரணவ யோகத்தால் சந்திர கண்ட ஒளியைக் காண்பான். அதுவே திருப்பெருந்துறை.

மூலாதாரம், இதயம், சிரசு என்ற இந்த மூன்று இடங்களிலும் அருளாறு பெருகுவதை உணர்த்துபவனே ஞானகுரு. மற்றவர் மந்திரம் முதலான தீட்சைகள் தருகிற போத குரு.

எனவே, ஆரூரே மூலாதாரம். அங்கு எழுந்தருளும் வன்மீகரே குண்டலினியாகிய சிவம்.

தியாகராஜர் இங்கு சோமாஸ்கந்தர் ஆனார். சக உமா ஸ்கந்தர் சோமா ஸ்கந்தர். மூலாதாரத்துக் குண்டலினி, மேல் நோக்கி எழுவதால் சிவசக்தியின் ஊடே ஸ்கந்தம் இருப்பதாய் உணர்தல் வேண்டும். கந்தன் எனில் ஒன்று சேரப்பெற்றவன் என்பதாம். இதைத் 'தந்தைக்கு முன்னே மகன் பிறந்தானே'



என்பான் திருமூலன். மூலாதாரம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, சகஸ்ராரம் என்கிற ஆறு சக்கர போதனத்தால் மாற்றமடைந்து வெளிப் பட்ட புருவ மத்திய ஒளிக் கீற்றுகளே ஆறுமுகக் கடவுள். முதுகின் இடப்புறத்தில் சுப்பிரமணிய நாடி ஆறு கிளைகளாக இருப்பதை யோக சாதனையில் அறிக.

குண்டலினியைக் குலாங்கனை என்றும் அது செல்லும் சுழுமுனைப் பாதையைக் குலபதம் அல்லது ராஜவீதி என்றும் கூறுவர். குண்டலினியானவள் மூலாதாரத்தில் குழந்தை போல் சப்திப்பதால் குமாரி. அனாகதத்தில் பக்குவப்பட்டதால் பருவப் பெண்ணான தருணி. சகஸ்ரகமலத்தில் கணவனாகிய கண்ணுதற் கடவுளோடு கூடியதால் பதிவிரதை. இவளே பிரணவ யோகத்தைப் பிழையறக் காட்டும் ஆரூர் எழுந்தருளிய கமலாம்பிகை.

தேரேறித் தியாகேசன் வீதி விடங்கராய்த் திருவீதி வலம் வருவார். கலபதம் என்கிற சுழுமுனைப் பாதையே ராஜவீதி. 'வின் பக்ஷிண : டங்கைதி இதி விடங்க:' என்பது விடங்கர் என்பதன் பதப் பிரிவு. அதாவது சுதந்தரப் பட்சியாகத் திரிகிறவன் என்று பொருள். பட்சியானது அம்சப் பறவை. அம்சமாவது அசபை என்கிற செபிக்காத மந்திரம். எனில், வீதி விடங்கன் தேர் வரல் தெருவாகிய ராஜவீதி அன்று. பிரணவ யோகியின் சுழுமுனைப் பாதையான ராஜ வீதியில் அசபையின் உந்துதலால் சிவசக்தியாகிய குண்டலினி உலாப் போதல் அது.

விடர் + அங்கம், விடங்கமானது. விடர் எனில் வெடிப்பு. பிளவில் வெளிப்பட்ட சுயம்பு என்று பொருள் காணலாம். பிளவென்றால் சலனப்பட்ட பிரம்மப் பிளவில் தோன்றிய அழகிய திருமேனி என்றுணர்க.

அசபை என்பது ஹம்ச மந்திரம். இதுவே தியாக ராச வித்தை. ஹம்ச என்கிற மந்திரத்தில் சிவம் அடர்ந்து காணப்படுகிறது. இதன் பொருள் நான் அவன். இதில் 'ஹ' என்பது ஆகாய பீஜம். 'ச' என்பது மூலாதாரத்தில் உள்ள சக்தி பீஜம். உடலின் அசைவுகள் யாவும் சக்தியின் ஆற்றல். அசைவினால் பெறப்படும் அறிவு சிவம். அறிவை முதலாகக் கொள்ள சக்தி தொடரும். அந்த உணர்வு சிரசுக்கு மேல் ஆகாயமாகும்போது ஆன்ம விளக்கு சுடர் விடுகிறது. ஆகாயம் எனில் சித்தாகாயம் என்றுணர்க. ஆக, பிரணவ வித்தையில் மூலாதாரத்தில் இருந்த சிவத்தைத் தொடர்ந்த சக்தி, சாதகனுக்கு இன்பம் அளித்து அவன் சிரசுக்கு மேல் தன்னுருவை இழந்த சூக்குமப்பரையானது என்பது கருத்து. இந்த சிவசக்தியின் ஊடே ஸ்கந்தம் உள்ளதைக் குண்டலினி மேல் முகம் கொள்வதால் அறிதல் வேண்டும். அதனால் ஆரூர் அண்ணல் சோமாஸ்கந்தரானார். ஹம்ச மந்திரத்தைச் சோகம் என்பர். 'பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில் ஆவிக்குள் மந்திரம் அங்குசமாமே' என்பது திருமூலன் வாக்கு. இம் மந்திரம் சாதகன் உடல் முழுதும் அலைபோல் இன்ப உணர்வாய் மோதும் அரிய ஆற்றல் மிக்கது.

இதுவே உயிராகிய யானையை (பிரணவம்)ச் செலுத்தும் அங்குசம் என்கிறார் திருமூலர். உணர் வற்றவனின் மூலாதாரத்தில் சுருண்டு கிடக்கும் பிரணவ சக்தியை ஹம்ச மந்திரம் அங்குசமாய் இயக்கி மேலெழுப்பும் என்பது இதன் பொருள்.

இதுதான் அலையில் ஆடும் அசபை நாயகன் ஆரூர் அண்ணல் தியாகேசன், மேலும் கீழுமாய் நடனமிட்டுச் சாதகனின் உள்ளுணர்வாலாய உடம்பில் உணர்த்தும் பிரணவ வித்தை. 'பூவுக்குள் மந்திரம்' என்றது மூலா தாரத்தின் அடித்தளமாகிய கமலம். கமலம் வெண் சிவப்பு. மூலாதார சிவசக்தியும் இந்நிறத்ததே. இங்கு இவ்வாலயத்தம்மன் கமலாம்பிகையின் பெயர் நுணுக்கம் அறிக.

உள்முகத் தியானத்தில் இடது கண் பார்வையைப் பூவலமாகக் குரு உணர்த்திய முறையில் செலுத்தினால் வலது கண்ணுக்கு மேலே ஒளிக்கீற்று தென்படும். அவ்வொளியே இடது கண்ணுக்கு மேலே ஈசான மூர்த்தியாக உத்திரகோச, மங்கைப் பகுதியில் வெளிப்படும். பின் நொடிப் போதில் வலமிருந்த சூரியனும் இடமிருந்த சந்திரனும் பிடரிக் கண்ணில் விளங்கிய அக்னியும் ஒருமித்து, சிரசின் மேல் வெளிப் படும். ஆரூர் யோகநாயகி கமலாம்பிகை ஈசான திக்கை நோக்கித் தவமிருத்தல், சாதகனின் ஈசான அனுபவத்தின் ஆழம் உணர்த்தல் பொருட்டே.

இதயத்தில் தியானிக்கும் நடராச வித்தையிலும் மேலானது மேற்சொன்னதே என்பதால் அம்பலத்தில் ஆடுகிறவன் அலையில் ஆடுகிற ஆரூரனுக்கு அடுத்த படியே.

இப்படி மூலாதாரத்தில் இருள் வசப்பட்டுக் கிடக் கும் குண்டலினியாகிய சிவசக்தியை எழுப்பும் வல் லமை அறியாத பக்தர்கள் அதிகாலை பள்ளியெழுச்சி பாடிப் பதவியை இழந்தனர். பதவி எனில் சாயுச்சிய பதவி.

அசபை மந்திரத்தின் உந்துதலால் குண்டலினியை எழுப்பி சிரசுக்கு மேல் விளங்கும் ஒளி மண்டபத்தில் சீவனின் நினைவைக் கலக்கச் செய்தலே சிவ யோகமாகிய பிரணவ வித்தை.

யோக வெற்றிக்கு இல்லற நெறி, துறவற நெறி இரண்டும் பொருந்தும். மது நாட்டமும், மாதுவின் கூடலும் மானுட இயற்கை. இதில் ஆகமம் வைத்த முடிச்சும் சித்தர்கள் வைத்துப் பாடிய சூதும் என்னவெனில், இரண்டிலும் இறைவனைத் துணை யாக்கிக் கொள் என்பதே. மது அருந்தி தியானிப்பதை பால் பிரண்டன் போன்ற அயல் நாட்டு யோக அறிஞர்கள் கண்டிப்பதில் ஓரளவு உண்மை யிருக்கிறது. இனி, ஸ்திரீ வித்தை என்பது பெண் ணோடு கூடும்போது, காமேஸ்வரன், காமேஸ்வரி தோற்றத்தையோ அல்லது அர்த்தநாரியையோ சாதகன் மனத்தில் கொண்டால் காமநிலை ஸ்கந்த நிலையாகி வாமதேவன் பூரித்து ஈசானர் வெளிப் படுவார். ஸ்திரீ வித்தை செய்பவன் உணவை இறைவனுக்கு அர்ப்பணித்து உண்டால் சிரசில் ஒளிப்பெருக்கம் உண்டாகும். இந்த யோகத்தில் விந்து நீக்கம் நிகழாது.

'உண்ணும்போது உயிரெழுத்தை மேலே வாங்கி
உறங்குகின்ற போதெல்லாம் அதுவேயாகும்;
பெண்ணின்பால் இந்திரியம் விடும் போதெல்லாம்
பேணிவலம் மேல் நோக்கி அவத்தில் நில்லு' – என்கிற அகத்தியர் பாடல் இது பற்றியதே. இந்த வித்தையைச்

செய்கிறவர்கள் மறலி கையில் அகப்படார்கள் என்கிறார் அகத்தியர். சுந்தரர் தம்பிரான் தோழன். தோழமை பாவம் என்பது எல்லாச் செயல்களிலும் இறைவனைத் துணை சேர்ப்பது. காமத்திலும் சிவத்தைச் சிந்திக்க வேண்டும்.

காமநிலை இருள்நிலை. சிவ சிந்தனையோடு பெண்ணைக் கூடினால் காமநிலை யோக நிலையாகப் பரிணாமம் பெறும். அதுபோழ்து இருள் கடிந்தருளிய இன்ப ஊர்தியில் காமேஸ்வரன் வெளிப்படுவதைச் சாதகன் உணர்வான். நஞ்சைப் போக்க நஞ்சையே மருந்தாக உண்ணல் ஒரு வழக்கம். காமத்தில் எல்லாம் மறந்து சுகம் காணல்போல, தேகத்தைக் கடந்த சிரசில் சுகம் காணல் எண்ணுமாப்போல.

விடங்கர் என்பது ஆண்குறி. 'கடம்பூர் புகுந்த விடங்கா போற்றி' எனில் யோனிப்பை புகுந்த என்பதாகும். திருவாரூர் தியாகேசன் திருமேனியோடு கொண்டி என்கிற பிரிவற்ற சக்தி உள்ளது. கொண்டி என்றால் அடங்காக் காமம் உடையவள் என்பது பொருள்.

கூடல் இன்பத்தில், இருளின் ஊடே மனக்கண்ணில் எதிர் பால் முகம் அறிவது போல, பரியங்க வித்தையில் தேகம் கடந்த சிரசில் சீவனுக்கு, சிவம் தலைப்பட்டு இன்பம் பெய்யும். இந்தச் சூட்சுமம் உணர்த்தவே ஆரூர் அண்ணல் உடல் மறைத்து முகம் காட்டினார். அவரோடு உறைந்தருளும் கொண்டியும் அவ்வாறே என்றுணர்க.

இந்த ஸ்திரீ வித்தையில் வெற்றி கண்டவர் சுந்தரர். இவருக்குக் கிடைத்த தீட்சையின் பெயரே வழங்கு பெயராய் ஆரூரன் எனவாயிற்று. 'திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' எனப் பாடிப் பரவினார். மூலாதாரத்தில் சிவசக்தி ஒளியைக் கண்டவர்களே திருவாரூரில் பிறந்தவர்கள்.

பிரணவ யோகமே சோடச கலா சந்திர ஞானம். இந்த யோகத்தில் சாதகனுக்குத் தோள்களுக்கு மேல் சந்திர மண்டல உதிப்பு அமையும். இதுவே சோம வட்டம். சந்திர தீபம் என்று பரிபாஷையில் பேசுவர். ஆரூரின் வன்மீகருக்கு அருகமர்ந்த அம்பிகையின் பெயர் சோமகுலாம்பிகை. எனில், சொல்லறு நிலையில் சந்திர தீப அறிவை ஞானகுரு வல்லவராயின் உணர்த்துவார்.

"குவளைக் கண்ணிக்கூறன் காண்க" என்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

இதில் குவளை என்றது நீலோற்பலம். கண்ணி என்பது தலையில் சூடும் பூமாலை.


சிரசின் மேலுள்ள நீலோற்பல ஒளியில் தானும் தனது சக்தியுமாகக் கலந்து விளங்குபவன் என்பது இதன் பொருள்.

கழுநீர் (செங்கழுநீர், நீலோத்பலம்) மாலையணிந்து தலைவனுக்குக் காதல் நோயைக் காட்டுவது போல மலபரிபாகம், இருவினை ஒப்பு ஆன்ம சாதனையில் சாதகனின் சிரசுக்கு மேல் வெளுப்பு, சிவப்பு, நீலம் கலந்த ஒளி மண்டலத்தின் ஊடே சிவம் வெளிப்பட்டு, சீவனைக் காதலிக்கும் குறிப்பு என்றறிக.

இந்தச் சாதனை சந்திர ஞானம் பற்றியதால் சந்திரன் உவக்கும் புஷ்பமான நீலோத்பலம் சாதனையின் எல்லைக்குக் குறியீடானது.

வாழ்க்கைச் சிந்தனைகள்

சீனி வீரப்பன்



சிந்தனை

சிந்தனைகள் எப்போதும் நல்லதாயின்
வந்தடையும் நற்பயன்கள் நம்மைத் தேடி

எண்ணம்

எண்ணம் விரிந்திட்டால் ஒன்று பத்தாகும்
இயங்கும் வாழ்க்கை வண்ண மலர்க் கொத்தாகும்

செயல்

பாலத்தைப் போலிணைக்கும் செயல்கள் எல்லாம்
பாசத்தை எடுத்துச் சொல்லும் நூல்களாகும்

அறிவு

அயராத நல்லுழைப்பால் அனைத்தும் கூடும்
அறிவொன்றே வாழ்க்கைக்கு பெருமை தேடும்

உழைப்பு

விருப்புடனே உழைப்பதிலே வெற்றி கூடும்
விளக்கைப் போல் ஒளிர்கின்ற வாழ்வமையும்

உறுதி

தளராத மன உறுதி தன்னைச் சூழ்ந்தால்
தரணியிலே சாதனைகள் தழைத்து ஓங்கும்

புகழ்

பொல்லாத கோபம் பொழுதெல்லாம் சோம்பல்
பொய் வார்த்தை பேசுதல் புகழ் என்றும் தராது

அடக்கம்

அலைபாய விடவேண்டாம் நெஞ்சம் தன்னை
அடக்க மொன்றே வெற்றிக்குத் தொடக்கமாகும்.

மணிவாசகப் பெருமான் பிரணவ யோகத்தில் வெற்றி கண்டவர். மணி வாசகம் என்றால் சிந்தாமணி உணர்வால் கிடைத்த பட்டறிவின் வாசகம். மந்திரத்திற்குச் சிந்தாமணி என்றொரு 'பொருளும் உண்டு. எனில், சிந்தையில் செபிக்காமல் செபிப்பது; அசபை. ஆதலால் மணிவாசகருக்கு இறைவனால் உபதேசிக்கப்பட்டது திருவைந்தெழுத்து மட்டுமா? அல்லது பஞ்சாட்சரத்தோடு சேர்ந்த அசபையுமா? என்பதை வல்லார் வாய்க் கேட்டறிக.

எனவே கட்டுரையில் கண்ட ரகசிய யோக வித்தைகளின் அடித்தளமான குளம் (மூலாதாரத்துக் கீழ்) வெளிர் சிவப்பானதால் கமலத்தின் பெயர் கொண்டு ஆரூரில் கமலாம்பிகையாகவும், சாதனையின் முடிவில் சிரசின் மேல் (அகுலம்) வெளிர் நீல ஒளியுணர்வில் சாதகன் சிவத்தை அறிவதால் நீலோத்பல மலரைப் பெயராகக் கொண்டு மற்றொரு அம்பிகையும் எழுந்தருளியிருக்கின்றனர். நீலோத்பலாம்பிகையே மிஸ்ர பிந்து. இவளே யோக முடிவு.

சாதனையில் சந்திர தீபம் உணர்ந்த ஆரூரில் வன்மீகருக்கு அருகமர்ந்தவள் சோமகுலாம்பிகை.

பரியங்க யோகம் உணர்த்தியதால் ஆரூர் அண்ணலுக்கு அருகே உறைந்தருளுபவள் கொண்டி எனப் பெயரேற்றாள்.

நீலோத்பலாம்பிகை வலது கரத்தில் மேற்சொன்ன மலரேந்தி, இடது கரத்தின் ஆள்காட்டி விரலால் சேடிப்பெண் தூக்கி வைத்திருக்கும் குழந்தையைத் தீண்டுவதுபோலக் காட்சியளிக்கிறாள். இது, ஆன்ம பரிபாலனம் செய்கிற அனுக்கிரக முத்திரை. குழந்தை மல (ஆணவம், கன்மம், மாயை)த்தில் அழுந்தியிருக்கும் ஆன்மா.

ஆரூர் அண்ணல் தியாகேசனுக்குத் தூதுவளைக் கீரையும் பாகற்காயும் பிடித்த நிவேதனம். அசபை வித்தையான பிரணவ யோகத்தில் சாதகனுக்குத் தலைசுற்றலோ மயக்கமோ நேர்வதுண்டு. அக்கால் பாகற்காய் பயன்படும். தூதுவளைக்கீரை வாசியை நேர்செய்யும் ஆற்றலுடையது. இந்தவாசி (மூச்சு)யை வரைப்படுத்தும் கலை ஆதலால் 'ஏற்றி இறக்கி இருகாலும் பூரித்துக் காற்றை அடக்கும் கணக்கறிதல்' என்பார் திருமூலர்.

திருவாரூர் கல்வெட்டு ஒன்றில் தேரோடும் வீதிக்கு, 'திருவடிப்போது நாறிய வீதி' என்கிற பெயர் குறிப்பிட்டுக் காணப்படுகிறது. சுந்தரர் பொருட்டுப் பரவையாரிடம் தூது சென்ற இறைவனின் திருவடி பட்ட வீதியாதலால் தேரோடும் வீதி 'நாறிய வீதி' ஆனது. யோகத்தில் குலபதம் என்கிற சுழுமுனைப் பாதையே ராஜவீதி. அசபையின் உந்துதலால் குண்டலினி உணர்வு முதுகுத் தண்டின் ஊடே செல்லும்போது சாதகனைச் சுற்றி ஒருவிதமான மணம் கமழும். மனச் செவிகளில் நாதம் கேட்கும். சிரசில் ஒளிப் பெருக்கம் உண்டாகும். இதை ஆகாய சம்பியம் என்பர். ஆதலால் 'திருவடிப்பேறு நாறிய வீதி' என்பதை யோக சாதனை செய்கிற வல்லார் வாய் கேட்டறிக.


ஆரூர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் கமலாம்பிகை, அசபை வித்தையான பிரணவ யோகத்திற்கு அரணாக அமைந்தவள்.

கமலாம்பிகை சுயம்பு. கோயில் கொண்டுள்ள வன்மீகரும் சுயம்பு. சுயம்பு ஆவது, சிற்பியின் கை படாதது. எனில், காமக்கலைத்தோற்றமான கமலாம்பிகை எந்த ஒரு விற்பனைச் சிற்பியின் கற்பனையும் அல்லள்.

காமம் என்பது சிவம், கலா என்பது சக்தி. சிவம் பிரகாச பிந்து. சக்தி விமர்ச பிந்து. இந்த விமர்ச பிந்துதான் சித்சக்தி.

இந்த சித்சக்தியைத்தான் கட்டுரையின் தொடக்கத்தில் அகுலம் என்று கண்டோம். பிரணவ சாதனையான குண்டலினி உணர்வில் இந்த சித்சக்தியால்தான் சாதகன் சிவத்தை உணர்கிறான். இந்த

தேடல்



புரியாத பாதையில் வெகுதூரம் ஓடினேன்
எல்லைதான் தெரியவில்லையே!
புகழ் என்னும் மேடையில் நான் கொஞ்சம் ஆடினேன்
போதைதான் தெளியவில்லையே!
அறியாத சிறுவனாய் அரையாடை உடுத்தி நான்
அலைந்த நாள் கவலையில்லையே!
அறிவென்னும் நெருப்பிலே எரிகின்றேன்! சாம்பலாய்
ஆகவும் மார்க்கம் இல்லையே!
நெறியோடு வாழ்ந்ததால் பூமியில் எனக்கிங்கு
நேர்ந்தது ஒன்றுமில்லையே!
நிழல்களே விலைபோகும் உலகினில் என்னுடைய
நிஜம் வாங்க யாருமில்லையே!
தெரியாததென்ன? நான் தெரிந்ததுதான் என்ன?
எதுவுமே தெரியவில்லையே!
ஜெயிக்காததென்ன? நான் ஜெயித்ததுதான் என்ன?
சின்னங்கள் ஏதுமில்லையே!

இல்லையே! இல்லையே! எனும்படி எனை இங்கு
இறைவன் நீ வைத்ததென்ன?
இலை போட்டு விருந்திட்டு
எதையும் நான் தீண்டாமல்
ஏகன்நீ தடுத்ததென்ன?
பள்ளியில் வந்துநான் படிக்கின்றேன்!
என்னை நீ
பாராமல் இருப்பதென்ன?
பரீட்சைகள் எத்தனை எழுதினேன்...
இன்னும் நான்
தேறாமல் இருப்பதென்ன?
கள்ளமும், கபடமும் கொண்டவர் தமை உந்தன்
கை நீட்டி அணைத்ததென்ன?
கலை ஞானக் கிறுக்கனை
கனிவான மனிதனைக்
கால் நீட்டித் தடுத்ததென்ன?
வல்லவன் உன்னுடன் நல்லவன் நானிங்கு
வாதாடி ஓய்ந்ததென்ன?
உள்ளவன் நீ இங்கு இல்லாதவன் போல
ஒளிந்த தன் மர்மம் என்ன?



மு.மேத்தா

சித்சக்தியே ஆதார நிலையாகிய கமலாம்பிகை. இவளின் உற்சவ மூர்த்தி மனோன்மணி பெயரால் கருத்து மேலும் விளங்கும். 'உன்மனயந்தே பிரசிவஹ' என்பது மனோன்மணியின் விளக்கம். இதைத்தான் 'வாயும் மனமும் கடந்த மனோன்மணி' என்பார் திருமூலர். யோக வெற்றி சித்தகாயத்தோடு தொடர் புடையது. ஆதலால் மனோன்மணியாகிய கமலாம் பிகையே சிற்பர வெளியின் தற்பர தேவதை.

இவளுக்குப் பைந்தவ வாசினி என்கிற பெயரும் உண்டு. பைந்தவமாவது புருவநடு. குண்டலினியாகிய அம்பிகை இங்கு ஒளிர்கின்ற போதுதான், உயிர் அஞ்ஞானமகன்று மெய்ஞ்ஞானத் தலைவனை உணர்கிறது. இந்த அருட்சக்தியான காமக்கலையே கமலாம் பிகை என்ற குண்டலினி.

இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்து,
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம் புரிந்தாளே -

என்பது தலைமைச் சித்தரின் தகவுடைய சான்று.

மேலும் 'போமாறவ் வாதாரப் பூங்கொடியாளே' என்ற அம்மையை விளக்குகின்றார். ஆதாரப் பூங்கொடியவாது, ஆதார சக்தியான கமலாம்பிகை என்றுணர்க.

காமம் அனைத்தும் முடிகின்ற கோடி (கடைசி) நிலமாக, அதாவது எல்லா விருப்புகளும் இறந்துபட்ட அத்வைதமாக அம்பிகை இருக்கின்றாள் என்று அனுமானிக்க.

காம துகா பல கமலே

காமகலே காமகோடி... என்கிற மூக பஞ்சசதியில் வருகிற வரிகளை இங்கு நினைத்தின்புறுக.

இவள் எழுந்தருளிய பீடமே 64 சக்தி பீடங்களுக்கும் ஆதார நிலையாகும். லலிதா சகஸ்ரநாமாவளி அனைத்தும் இவளொருத்திக்கே பொருந்தும். ஸ்ரீவித்யை என்கிற மந்திர சாத்திரத்தின் யந்திர நாயகி இவளே.

தியாகராஜ சந்நிதி வல்லபை கணபதியில் தொடங்கும். கமலாம்பிகை சந்நிதி உச்சிஷ்ட கணபதி யில் துவங்கும்.

ஸ்ரீவித்யை சாதனையில் அம்பிகையின் 32 உபாங்க தேவதைகளில் முதலாமவர், வல்லபை கணபதி. கடைசி தேவதை உச்சிஷ்ட கணபதி. 'உத்க்ருஷ்ட யச்சக்தி உச்சிஷ்டஹ' என்கிற நயம் அறிந்து சிந்திக்க வேண்டும்.

இந்த யோக சாதனை சந்திர ஞானம் பற்றியதால் சந்திரன் உவக்கும் புஷ்பமான நீலோத்பலம் சாதனை யின் எல்லைக்குக் குறியீடானது.

இந்த அரிய நீலோத்பல மலர் திருவாரூரில் மட்டுமே காணப்படுகிறது.

பாரில்லை நீரில்லை பங்கயம் ஒன்றுண்டு
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது
ஊரில்லை காணும் ஒளியது ஒன்றுண்டு
கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே

என்கிற திருமந்திரப் பாடல் நீலோத்பலத்தையே குறிக்கும்.

இதன் பொருள் -

ஐம்பூதங்களுள் பூவினுக்கு வேண்டப்படும் நிலமும் நீரும் இல்லை. ஆனால் இவைகளுக்கு அப்பால் ஒரு தாமரை உண்டு. அதுதான் திருவருள் தோற்றமாகிய ஆயிரம் இதழ் தாமரை என்ப. அம்மலருக்கு அரும்பும் இல்லை; வேரும் இல்லை. ஆனால் அது மலர்ந் துள்ளது - அங்கு ஊரும் இல்லை. கீழாகிய ஆதியும் மேலாகிய அந்தமும் இல்லாத கேள்வி என்று சொல்லப்படும் மெய்யுணர்வாகிய பூவாகும் அது. அஃதே நீலோத்பலம்.

ஃ

துறவு

தீபாவளிக்கு இன்னும் நாற்பத்தைந்து நாட்களே இருந்தன.

அதற்கு முன்னதாகவே 'கங்கா ஸ்நானம்' செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்ட இருந்தது. என் பக்கத்து வீட்டு நண்பர் - அவர் என் காரியாலய சக ஊழியராக இருந்தவரும்கூட - ராமசாமியும் அவர் மனைவி காமாட்சியும் கேதார்நாத் - பத்ரிநாத் யாத்திரை செய்யப் போவதாகவும், அதில் என்னையும், என் மனைவியையும் கலந்து கொள்ளும்படியும் அழைத்திருந்தார்கள். என் மனைவிக்கு உடல் நலம் இடம் கொடாததால் நான் மட்டும் யாத்திரை கோஷ்டியில் கலந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்து முன் பணமாக ரூ 700ஐ ராமசாமியிடம் தந்திருந்தேன்.

சென்னையிலிருந்து செப்டம்பர் 12-ஆம் தேதி புறப்பட்டு தீபாவளிக்குள் திரும்பி விடுவதாகத்தான் திட்டம். ஆனால் என் மனதில் வேறு ஒரு திட்டம் குடிகொண்டிருந்தது. யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்புகையில் ரிஷிகேசத்திலேயே நிரந்தரமாக ஓர் ஆசிரமத்தில் தங்கி, துறவி வாழ்க்கை மேற்கொள்ள நிச்சயித்திருந்தேன். ஒரு வருட 'ஓய்வு பெற்ற குடும்ப வாழ்க்கை' என்னை அத்தகைய முடிவுக்கு இழுத்துச் சென்றிருந்தது.

இரயில்வேயில் குமாஸ்தாவாகச் சேர்ந்து, படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று அதிகாரியாகி, பின் பம்பாய், கல்கத்தா, டில்லி, செகந்தராபாத், விஜயவாடா... என்று பந்தாடப்பட்டு, கடைசி இரு வருடங்கள் சென்னையில் பணியாற்றி, போன வருடம் தான் ஓய்வு பெற்றேன். விஜயவாடாவிலும், சென்னையிலும் ராமசாமி என்னுடைய துறையிலேயே அதிகாரியாகப் பணியாற்றினார். இரு குடும்பங்களுக்கும் எட்டு வருட நெருங்கிய பழக்கம்.

எனக்கு எட்டு மாதங்களுக்கு முன்பாக ஓய்வு பெற்ற ராமசாமி சைதாப்பேட்டையில் மனை வாங்கி வீடு கட்டினார்.

அவர் வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு மனை விற்பனைக்கு வரவே, என்னை அதை வாங்கச் செய்து, வீடு கட்டுவதிலும் உதவியாக இருந்தார். நான் ஓய்வு பெற்ற பின் ரயில்வே பங்களாவிலிருந்து நேராகச் சொந்த வீட்டுக்கே குடி போனேன்.

எனக்கு இரண்டு பிள்ளைகள், ஒரு பெண். பணியிலிருந்தபோதே மூவருக்கும் விவாகம் செய்து வைத்து விட்டேன். பையன்களுக்கும் சென்னையிலேயே உத்தியோகம். ஆளுக்கு ஒரு பிள்ளை - நாலு, இரண்டு வயதில். ஆக சொந்த வீட்டைக் கொஞ்சம் விசாலமாகவே கட்டி, 'கூட்டுக் குடும்பமாக' ஓய்வு பெற்ற வாழ்க்கையைத் தொடங்கினேன்.

மனைவி, மகன்கள், மருமகள்கள், பேரன்களோடு புது மனை புகுந்தபோது எங்களை வரவேற்ற ராமசாமி, "கொடுத்து வைத்தவர் ஐயா, நீர். பையன்களையும் உங்களோடேயே நிறுத்திக் கொண்டு, இரண்டு பேரப்பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டு ஒரே 'மஜா'தான் போங்கள். என்னைப் பாரும் - ஒரே பிள்ளை பணம் நிறையக் கிடைக்கிறதென்று எங்கேயோ துபாய்க்குப் போய்விட்டான், பெண்டாட்டியையும் கூட்டிக்கொண்டு. பெண்ணையாவது சென்னையில் கட்டிக் கொடுத்தேனா. ஹூம்! அவளும் எங்கேயோ ராஞ்சியில் இருக்கிறாள். உனக்கு நான், எனக்கு நீ என்று நாங்கள் இரண்டே பேர். என்ன வாழ்க்கை, உப்பு சப்பில்லாமல்?" என்று நீண்டதொரு வரவேற்புரையே நிகழ்த்தினார்.

"அதுதான் நாங்கள் வந்து விட்டோமே. இனி என்ன, உங்கள் குடும்ப அங்கத்தினர்களாக எங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டியதுதானே?" என்று சமாதானமாகச் சொல்லி வைத்தேன். என் மனைவியும், மருமகள்களும், பேரன்களும் என் வார்த்தைகளுக்கு முழுமதிப்பு தந்து, இரு வீடுகளையும் ஒரு வீடாக்கினார்கள். நாளில் பாதிநேரம் அவர்கள் அடுத்த வீட்டில்தான் இருப்பார்கள். அவர்கள் அங்கே போகாதபோது காமாட்சி மாமி எங்கள் வீட்டில் இருப்பாள்!

யார் கண் பட்டதோ தெரியவில்லை. என் வாழ்வில் நிம்மதி குறைந்து வந்தது. என் சொந்த சௌகரியங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டதாகத் தோன்றியது.


காலை எழுந்தவுடன் காப்பி கிடைக்காது. பிள்ளைகள் ஆபீசுக்குப் போகிறார்கள் என்று அவர்களுடைய தேவைகளையே முதலில் கவனிப்பார்கள்.

"என்ன, இன்னும் காப்பி ஆகவில்லையா?" என்று குரல் கொடுத்தால், "கொஞ்சம் பொறுங்கள். டிகாக்ஷன் இறங்கவில்லை. கண்ணனும், ரவியும் ஆபீசுக்குப் போக வேணடுமென்று அவர்களுக்குத் தந்து விட்டேன். வீட்டில் இருக்கிறவர்தானே?" என்று மனைவியிடமிருந்து பதில் வரும்.

குளிக்கப் போனால் அங்கேயும் லேசில் இடம் கிடைக்காது. மனைவி ஸ்நானம் செய்துவிட்டு சமையல் செய்ய வேண்டும். மருமகள்கள் குளித்துவிட்டு 'அம்மா'வுக்குக் கூடமாட ஒத்தாசை செய்ய வேண்டும். மகன்கள் 'இரண்டு செம்பு' விட்டுக் கொண்டு ஆபீசுக்குத் தயாராக வேண்டும். தொடர்ந்து பேரப் பிள்ளைகள் குளியலறையில் நுழைந்து 'லூட்டி' அடிப்பார்கள்! கடைசியில் எனக்கு இடம் கிடைக்கும்போது சரியான சூட்டில் வெந்நீர் கிடைக்காது. மேலும் தாமதித்தால் பசி வேளை தாண்டி விடும் என்று 'அரை குறை'யாகக் குளித்து விட்டு வருவேன்.

சௌகரியங்களில்தான் பின்னுக்குத் தள்ளப்பட்டேனே தவிர, வீட்டு வேலைகளில் முதல் இடம் பெற்றேன்.

"அப்பா! காப்பிப் பொடி தீர்ந்துவிட்டது. அரைத்துக் கொண்டு வரவேண்டும்" என்று உரிமையோடு ஒரு மருமகள் சொன்னால், "அப்படியே மிளகாய்ப் பொடி, கடலை மாவுகூட



அரைத்துக் கொண்டு வர வேண்டும்" என்று மற்ற மருமகள் ஞாபகப்படுத்துவாள்.

மாலை மூன்று மணியாகி விட்டால், "உங்களைத்தானே மாடியிலே துணிகள் உலர்ந்து விட்டிருக்குமே எடுத்துக் கொண்டு வந்து, மடித்து வைத்து விடுகிறீர்களா?" என்று மனைவி நினைவூட்டுவாள். பொழுது போக வேண்டுமே என்று என்றோ ஒரு நாள், துவைத்துக் காயப் போட்டிருந்த துணிகளை எடுத்து வந்து, மடித்து வைத்ததால் வந்த வினை. அதுவே என் அன்றாட வேலைகளில் ஒன்றாகிவிட்டது!

ஆபீசுக்குப் போகுமுன், "இந்தச் செக்கைப் பாங்கில் மாற்றி வந்து விடு அப்பா. ஒரு ஆயிரத்துக்குப் பத்து ரூபாய்களாக மீதி நூறு ரூபாயாக இருக்கட்டும்" என்று கூறி, ஒரு 'செக்'கை என் மடிமீது போட்டுவிட்டுப் போவான் பெரியவன் கண்ணன். "லாண்டரியில் 'அயர்ன்' பண்ண ஆறு பாண்ட், நாலு ஷர்ட் தந்திருக்கிறேன்ப்பா, வாங்கி வைத்து விடு, மறக்காமல்" என்று சின்னவன் ரவி சொல்லி விட்டு ஓடுவான்.

மாத ஆரம்பத்தில் மளிகைக் கடைக்குப் போய் சாமான் பட்டியலைத் தந்து, சாமான்களை அனுப்ப ஏற்பாடு செய்வது, மின்சார பில், டெலிபோன் பில், அவ்வப்போது இன்ஷியூரன்ஸ் பிரிமியம் ஆகியவற்றைக் கட்டுவது என் வேலைதான்.

இரயில்வே பங்களாவில் 'பங்களா ப்யூன்' இருந்தான். ஆபீஸில் கீழ்நிலை ஊழியர்கள் இருந்தார்கள் இம்மாதிரி வேலைகளைச் செய்ய. இங்கு நான்தான் எல்லாம். "நாள் பூராவும் என்ன வெட்டி முறிக்கிறீர்கள்? நம் வீட்டுக் காரியம்தானே, செய்தால் குறைந்தா போய் விடுவீர்கள்?" என்று மனைவி ஒரு வெட்டு வெட்டுவாள் - எதையாவது செய்யச் சற்று தயக்கம் காட்டினால்.

வளர்த்துவானேன்? ஒரு வருட 'ஓய்வு' காலத்தில் எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது.

"இப்படி விரட்டி விரட்டி வேலை வாங்கினால் ஒரு நாளைக்கு எங்கேயாவது இமய மலைக்குப் போய்விடப் போகிறேன். மிச்சம் மீதி வாழ்க்கையை அங்கேயே 'ஹாய்'யாகக் கழித்து விடுவேன்" என்று சிலசமயம் மனைவியிடம் தனிமையில் சொல்வேன்.

"போகும்போது சொல்லுங்கள். நானும் உங்கள்கூட வந்து விடுகிறேன்" என்று கேலி செய்வாள். அந்த மாதிரி சமயங்களில் எனக்கு நரசிம்ம யோகீந்திரரின் ஞாபகம் வரும்.

நான் மதனபள்ளியில் தனியாக இருந்து 'இண்டர்மீடியட்' வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது நான் இருந்த அறையில் என் சகமாணவன் நரசிம்மனும் வசித்து வந்தான். வாழ்க்கையில் அவ்வளவு ஈடுபாடு காட்டாமல் இருப்பான். துணிகளைக்கூடத் துவைக்கமாட்டான். அழுக்கு வேட்டி, சட்டையோடேயே கல்லூரிக்கு வருவான். தலையை வாரிக் கொள்ள மாட்டான்.

சாப்பாடும் அரைகுறைதான். சாதத்தை அளைந்து கொண்டே ஏதோ யோசனையிலிருப்பான். "ஏண்டா நரசிம்மா, சாப்பிடாமல் என்ன யோசனை?" என்று கடிந்து கொண்டால் அசடு வழியச் சிரிப்பான். "இதெல்லாம் என்ன வாழ்க்கை? புத்தர் மாதிரி வாழணும்" என்பான்.

"சித்தார்த்தரைப் போல் விவாகம் செய்து கொண்டு, ஒரு பிள்ளை பிறந்த பிறகு புத்தராகலாம். இப்போது ஒழுங்காகச் சாப்பிடு" என்று கோபித்துக் கொள்வேன்.

ஒரு வருடம் ஒன்றாக இருந்தோம். இரண்டாம் வருட 'இண்டர்' படிப்பின் இடையில் ஒரு நாள் காணாமல் போனான். எங்கே போனான் என்றே தெரியவில்லை. அவனுடைய பெற்றோர் அடித்துப் பிடித்துக் கொண்டு வந்து அவனுடைய உடைமைகளை எடுத்துப் போனார்கள் கண்ணீர் விட்டபடியே.

அதன்பிறகு இருபது ஆண்டுகள் கழிந்த பிறகு, ஒரு சமயம் நானும் சில நண்பர்களும் ஹரித்வார் - ரிஷிகேசம் போயிருந்தோம். ரிஷிகேசத்தில் ஒரு துறவி யாத்திரிகர்களுக்கு 'அன்னதான சேவை' செய்வதாகக் கேள்விப்பட்டு அவருடைய ஆசிரமத்துக்குப் போனோம்.

துறவியைக் கண்டபோது என் நினைவுகள் மதனபள்ளிக்குப் போயின. அவரை உற்று உற்றுப் பார்த்தபோது, புன்சிரிப்புடன், "என்னப்பா சுந்தர், என்னை எங்கேயோ பார்த்த ஞாபகமா?" என்று கேட்டார். திடுக்கிட்ட நான் விழித்தேன். "உன்னோடு படித்த நரசிம்மனை ஞாபகமிருக்கிறதா?" என்று தொடர்ந்தார்.

"ஆகா, நீங்கள் நரசிம்மனா!" என்று கூவினேன். "ஆம். அது என் பூர்வாசிரமப் பெயர். இப்போது நான் நரசிம்ம யோகீந்திரர்" என்று பதிலளித்தார். "மானிட சேவையே மாதவ சேவை என்று இந்த ஆசிரமத்தை நடத்தி வருகிறேன்" என்றும் கூறினார்.


நரசிம்ம யோகீந்திரர் ரிஷிகேசத்தில்தான் இருக்க வேண்டும். நானும் ஏன் சுந்தரயோகியாகி மானிட சேவை செய்யக் கூடாது, அவருடன் இணைந்து? 'சம்பளமில்லாத ஊழியனாக இந்த வீட்டுக்கு உழைப்பதைவிட அது மேலானது அல்லவா?' என்று எண்ணினேன்.

வெகு ரகசியமாக அவருக்குக் கடிதம் எழுதி, அவர் ரிஷிகேசத்தில் இருப்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டேன். சரியான நேரத்தில் ராமசாமி வந்து 'கேதார்நாத்-பத்ரிநாத்' யாத்திரைக்கு ஏற்பாடு செய்தார். யாத்திரையை முடித்துக் கொண்டு, வரும் வழியில் யோகீந்திரரின் ஆசிரமத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிட முடிவு செய்தேன்.

'அன்னதான சேவை'க்கு என் காணிக்கையாக ரூபாய் பத்தாயிரம் தனியாக எடுத்துக் கொண்டேன்.

என் உள்ளத்தில் இனம் தெரியாத உவகை. என் நண்பன் நரசிம்மனுக்கு 1949லேயே துறவறம் ஏற்கும் மனப்பக்குவம் இருந்தது. காலம் தாழ்ந்தாவது எனக்கு அந்தப் பக்குவம் வந்துள்ளதாக எண்ணி, யாத்திரா கோஷ்டியோடு புறப்பட்டேன்.

நாங்கள் யாத்திரை செய்த மயிர்க்கூச்செறியச் செய்யும் விவரங்கள் இந்தக் கதைக்கு அவசியம் இல்லை. யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்புகையில் ரிஷி



கேசத்தில் நரசிம்ம யோகீந்திரரின் ஆசிரமத்துக்குப் போனோம். எங்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார் சுவாமிஜி.

மற்றவர்களை லக்ஷ்மண் ஜூலா, கீதா பவனம் ஆகியவற்றைப் பார்த்துவிட்டு வரும்படி அனுப்பி விட்டு, தனிமையில் யோகீந் திரரைச் சந்திக்கப் போனேன். ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தவர் அதைக் கீழே வைத்துவிட்டு, "வாப்பா சுந்தர், மற்றவர்கள் எல்லாம் எங்கே?" என்றுகேட்டார்.

"சுற்றிப் பார்க்க அவர்களை அனுப்பிவிட்டு, உங்களைத் தனிமையில் சந்திக்கப் பின்தங்கி விட்டேன்" என்றேன்.

அதைக் கேட்டுச் சிரித்துவிட்டு, "நான் உன்னைக் கடைசியாகப் பார்த்து இருபத்தைந்து வருஷங்க ளாகிவிட்டன அல்லவா? முதலில் உன்னைப் பற்றி முழு விவரமும் சொல்" என்றார்.

நான் ரயில்வேயில் பணியாற்றி யதிலிருந்து குடும்ப விவரங்கள் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னேன்.


"இப்போது நீ தாத்தா ஆகி விட்டாயா, பேஷ்! பேரன்களோடு கொஞ்சிக் கொண்டே பொழுது போக்குகிறாயா? ஓய்வு காலத்தை மகிழ்ச்சியோடு நடத்திக் கொண்டு போகிறாய், இல்லையா?" என்று கேட்டார் புன்முறுவலுடன்.

"அதுதான் இல்லை, சுவாமி களே. வேலையிலிருந்து ஓய்வு பெற்றேனே தவிர, வேலை என்னை விடவில்லை. வீட்டுப் பணிகளை நிறையவே செய்ய வேண்டிய கட்டாயம். தவிர வேலையில் நான் இல்லை என்ற காரணத்தால் வீட்டில் எனக்கு மதிப்பு குறைந்துவிட்டது. வேலைக் குப் போகும் பையன்கள் மீதுதான் எல்லார் கவனமும் இருக்கிறது. வீட்டு வேலை செய்ய மட்டுமே நான் வேண்டியிருக்கிறது. நாள்பூராவும் யாருக்காகவாவது வேலை செய்ய வேண்டிய நிலைமையில் இருக் கிறேன். அதனால் வாழ்க்கைமேல் ஒரு வெறு.." என்று வார்த்தையை முடிக்குமுன் துறவி என் வாய்மீது கையை வைத்து, "அந்த வார்த்தை யைச் சொல்லாதே. ஆண்டவன் உனக்கு எல்லாம் தந்திருக்கிறார். ஆனால் அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்று உனக்குத் தெரியவில்லை என நினைக் கிறேன்" என்றார்.

"வீட்டுக்கு உழைப்பதற்குப் பதில் உங்களைப்போல் துறவியாகி மானிட சேவை செய்ய விரும்புகிறேன். உங்களுடனேயே தங்கி மாதவ சேவை செய்ய ஆசைப்படுகிறேன். அதற்கு உங்கள் அனுமதி வேண்டும்" என்றேன்.

'ஹோ ஹோ'வென்று அவர் சிரித்தார். பிறகு சொன்னார்: "துறவு கொள்வது அத்தனை எளிதில்லையப்பா. அது ஒரு மனநிலை. அதற்கு ஏகப்பட்ட பக்குவம் தேவை. நீ உன் உடல்நிலையை வைத்தே துறவறம் பூண நினைக்கிறாய். அது சரியில்லை. பணியில் இருந்தபோது கிடைத்த அதே சௌகரியங்கள் கிடைக்கவில்லை என்று சம்சாரத்தை உதறப் பார்க்கிறாய். உன் வீட்டில் உன்னை முன்னைப் போலவே உட்கார வைத்து, உபசாரம் செய்தால் துறவு பற்றி நினைப்பாயா?" என்று கேட்டு நிறுத்தினார்.

நான் பேசவில்லை. அவர் தொடர்ந்தார்: "உன் குடும்பத்தினர் உன்னை மதிக்கவில்லை என்று எண்ணுவது தவறு சுந்தர். உன்னிடம் உள்ள மரியாதை கலந்த பாசத்தினால்தான் உரிமை எடுத்துக் கொள்கிறார்கள். உன் பேரன் உன்மேல் விழுந்து புரண்டால் அதை மரியாதைக் குறைவாக எண்ணுவாயா?"



அவருடைய கூற்றில் இருந்த உண்மை சிறிது சிறிதாக எனக்கு விளங்கத் தொடங்கியது.

"குடும்பத்துக்கு உழைப்பதுகூட ஒரு சேவைதான். சில பெண்கள் வீட்டிலுள்ள குழந்தைகளைக்கூடக் கவனிக்காமல், அலங்காரம் செய்து கொண்டு சேரிகளுக்குப் போய் அங்குள்ள குழந்தைகளைக் குளிப்பாட்டி, சுற்றுப்புறத்தைச் சுத்தப்படுத்தி 'சமூக சேவை' செய்வதாகப் புகைப்படம்கூட எடுத்துக் கொள்வதாகக் கேள்விப்படுகிறேன். அதைப்போல் சம்சார பந்தங்களிலிருந்து விடுபட்டு, பின் மானிட சேவை செய்யலாம் என்பது சரியில்லை. சுவாமி அமிர்தானந்த மகராஜ் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?... 'கிரகஸ்தனாக வாழ்வது ஒரு நல்ல சந்நியாசியாக வாழ்வதைப் போலவே கடினமானது. இன்பத்தை - அதாவது சௌகரியங்களை அனுபவிக்க மட்டுமே ஏற்பட்டது அல்ல அது. தனது தியாக வாழ்க்கையின் மூலம் சமூகத்தை உயர்த்துவதற்காகவே ஏற்பட்டது அது' என்கிறார்."

அவர் மேலும் பேசுவதைக் கேட்கவே விரும்பினேன்.

"சகோதரனே! நீ இப்பொழுது செய்யும் வீட்டுப் பணிகளை நீயாகவே ஏற்றுச் செய்வதாக நினைத்தாலே போதும். உனக்குப் பரம திருப்தி ஏற்படும். அப்புறம் வெறுப்புக்கு இடமே இருக்காது. இல்லறத் தொண்டோடு சமூகத் தொண்டினையும் சிறிது சிறிதாகச் செய்ய ஆரம்பித்துவிட்டாயானால் உன் மனம் பக்குவம் அடைந்துவிடும். அப்புறம் துறவைப் பற்றி நினைக்கக்கூட நேரம் இருக்காது."

மிகவும் அப்பாவியாக இருந்த சக மாணவன் நரசிம்மனா இவ்வளவு உயர்ந்த தத்துவங்களை எளிய வார்த்தைகளில் சொல்லும் யோகி ஆகிவிட்டார்? பால்ய நண்பனாக இருந்தவர் இன்று என் குரு ஸ்தானத்தில் அமர்ந்திருப்பது கண்டு பெருமை அடைந்தேன். எழுந்து நின்றேன். நெடுஞ்சாண் கிடையாக விழுந்து அவரை நமஸ்காரம் செய்தேன்.

"நீங்கள் சொன்னது அவ்வளவும் சத்தியம். உங்கள் அருகாமை கிடைத்தது என் பாக்கியம். உங்கள் உபதேசப்படி நடக்க முயலுவேன்" என்றேன் நா தழுதழுக்க.

"ஆண்டவன் அருள்வாராக! உன் குடும்பத்தினரையும் அழைத்துக் கொண்டு ஒருமுறை வா" என்று ஆசி கூறி அனுப்பினார்.

இன்று என் இல்லத்தில் தீபாவளி, ரிஷிகேசத்திலிருந்து நான் கொண்டு வந்திருந்த கங்கா ஜலத்தையும் சேர்த்துக் கொண்டு வீட்டில் அனைவரும் தீபாவளி மங்கள ஸ்நானம் செய்து, புத்தாடை அணிந்து எனக்கு நமஸ்காரம் செய்தார்கள். குழந்தைகள் இருவரும் என் தோள்மீது உட்கார்ந்து என் தலைமயிரை அளைந்து கொண்டிருந்தார்கள்.


"டேய், தாத்தாவைத் தொந்தரவு செய்யாதே, இருபது முப்பது நாளா ஒரே அலைச்சல். நீ இப்படி வா?" என்று தன் பிள்ளையை என்னிடமிருந்து விலக்கினான் ரவி.

"பாவம் அப்பா! அந்த ஹிமாசலப் பனியிலும் குளிரிலும் எப்படித்தான் தாக்குப் பிடித்தாரோ... ஒரு மாதத்துக்கு அப்பா வேலையை எல்லாம் நாம்தான் செய்யணும்" என்றாள் என் சிறிய நாட்டுப்பெண்.

"சரியாகச் சொல்லிவிட்டாய், நளினி... ஒரு மாசம் என்ன கணக்கு? அப்பாவே எப்போது வேலை செய்யத் தயார் என்கிறாரோ, அப்போதுதான் அவர்.." என்று பெரிய மருமகள் ஒத்துப்பாடினாள்.

"யாத்திரா பலன் கைமேல் என்று சொல்வார்கள். உங்கள் பாடு வேட்டைதான், ஜமாயுங்கள்!" என்று கேலி செய்தாள் என் சகதர்மிணி, பட்சணத்தட்டை என்னிடம் நீட்டியபடி, 'துறவு' கிரகணம் என்னைவிட்டு நீங்கிப் போயிருந்தது.

'நாங்களும் வாழவேண்டும்'



நான் குப்பைத் தொட்டியில் கைவிடப்பட்டபோது என்னை சுற்றி இருந்த உலகம் உயிரோடுதான் இருந்தது, ஆனால் உணர்வுகள் மறுத்துப்போய். உதவும் கரங்களுக்கு மட்டும் எங்கிருந்து வந்தது துணிவு என்னை அள்ளி எடுத்து காப்பாற்ற...?

— திலகா, வயது 3

திலகா தனித்து இல்லை. இவளுடன் இவள் போல் இன்னும் 400 பேர் — பெற்றோர் அற்ற குழந்தைகள், மனநிலை பாதிக்கப் பட்டவர்கள், சாலையோரம் சாகக்கிடக்கும் முதியவர்கள், ஆகியோரை 'உதவும் கரங்கள்' உணர்ந்து, உணவு, உடை, உறைவிடம் அளித்து காப்பாற்றி வருகிறது.

இதில் உங்கள் பங்காய் ...

- பழைய துணிகள், புத்தகங்கள், மீதமான உணவு, மருந்துகள் ஆகியவை அளித்து உதவலாம்.
- செக்/டி.டி./எம்.ஓ./மூலம் பணம் அனுப்பலாம்.

எஸ். வித்யாகர்

உதவும் கரங்கள்

460, என்.எஸ்.கே. நகர், சென்னை-600 106

Ph: 426141, 4830321

நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு உண்டு.

EXELADS • UK 083 • 92

சமுதாயமும் சமயமும்

உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் இன்பத்தையே நாடுகின்றன. யாரும் எவரும், எங்கும் எப்பொழுதும் துன்பத்தைச் சந்திக்க விரும்புவதில்லை. ஆனால் உலகிடைத் துன்பம் இல்லாமல் இல்லை.

'துன்பமும் இன்பமும், இரவும் பகலும் போல;

'துன்பமும் இன்பமும், இருளும் ஒளியும் போல;

தீயதும் நல்லதும் பிறரால் தரமுடியாது. எல்லாம் நம் வினைப்பயன். இதனைப் பரந்து விரிந்த சமுதாயத்திற்கு உணர்த்துவது சமயமாகும்.

உடல் உறுதிக்கு, உடல் ஆக்கத்திற்கு, ஆக்கித் தருவது - சமைத்துத் தருவது சமையல். இது உடலை வளர்க்கிறது. உடல் மட்டும் வளர்ந்தால் போதுமா? உள்ளம் வளமாக அமைய வேண்டாமா? அதற்கே சமயம்.

சமுதாயம் - "ஆயம்" என்றால் கூட்டம்.

சம - ஒத்தது. ஒத்த தன்மை உடைய கூட்டம்தான் சமுதாயம். இன்றைய சமுதாயச் சூழலிலே நாம் ஒத்த தன்மை காண்பது பகலில் நட்சத்திரத்தைப் பார்ப்பது போலாகிறது. இனி இந்த உலகத்தை, அதிகாரத்தின் மூலமாக அடக்கிவிட முடியாத அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட நிலையில் அன்பின் மூலமாகத்தான், அன்பினை அஸ்திவாரமாகக் கொண்ட சமயத்தின் மூலமாகத்தான், ஒன்றாகப் பின்னிப் பிணைக்க முடியும்.

"இன்னும் 20 ஆண்டுகளில் மனிதன், படைப்பு கடவுளுக்குச் சவாலை விடக் கூடிய அளவில் வளர்ந்து விடுவான்" என மேலை நாட்டு விஞ்ஞானிகள் அண்மையில் கூறுகின்றனர். படைப்புக் கடவுளுக்குச் சவால் விடுவேன் என்றால் அவர்களே உயிர்களைப் படைப்போம் என்பதுதானே அதன் பொருள்? அப்படியானால் அதன் விளைவுகளைச் சந்திப்பது யார்? இதற்குரிய பதிலைச் சிந்திப்போம்.

கடவுளின் விருப்பமின்றி மனிதன் எதுவும் செய்ய முடியாது. மனிதனின் ஆற்றல் எல்லைக்கு உட்பட்டது. அவனது ஆற்றல்கூட ஆண்டவனால் அருளப்பட்டது தான். மனிதன் படைப்பதெல்லாம் இரண்டாம் தரப் பொருட்களே! கடவுளின் படைப்புகளுக்குக் காரணமுண்டு.

மனிதன் கடவுளின் ஊழியனே. விலங்குகளைப் போலன்றி, மனிதன் ஆன்ம உணர்வு உடையவன். மனிதன் கடவுளது கட்டளைகளை ஏற்று நடத்துகின்ற மானேஜர் போன்றவன். அவனுக்கும் சில பொறுப்புகள் உண்டு. கடவுளுக்கும் அவன் பதில் தரக் கடமைப்பட்டவன். அவன், கடவுளுக்கும், சமுதாயத்திற்கும், நம்பிக்கையுடையவனாக இருக்க வேண்டும்.

மனிதன், ஆத்மாவை நசிக்கச் செய்யும் தீய குணங்களிலிருந்து விடுதலை பெறக் கூக்குரலிடுகிறான். இறைவனை மையத்தில் வைக்காமல், மனிதன், தன்னை மையமாக நினைப்பதால் கெடுதல்கள் பல நிகழ்கின்றன.

பல துறைகளில் வியத்தகு முன்னேற்றம் பெற்ற போதிலும், சக மனிதர்களுக்கு இழைக்கும் கொடுமை காரணமாக மனிதன், கடவுள்முன் குற்றவாளி ஆகிறான்.


சாதனைகள் நிறைந்த இவ்வுலகம் இன்னும் இருட்டில் வழி தேடிக் கொண்டிருக்கின்றது. உண்மையான - வளமான வாழ்வு பெற ஏங்குகிறது. இந்நிலையில் இறைவனையும் இறையருட்கோட்பாடுகளைக் கொண்ட சமயத்தையும் சமுதாயம் முழுதும் பரப்புவது அவசியமாகிறது; அவசரமாகிறது.

அறிவியலும் தொழில் நுட்பமும் அண்மையில் மணந்து கொண்டன. அறிவியல் அறிவு, இயற்கையோடு இணைகின்றபோது, அது பெருத்த நன்மை அளிக்கின்றது. கடவுளின் விருப்பப்படி மனிதனது விருப்பமும் அமையும்போது, இயற்கை நன்முறையில் பயன்படுத்தப் பெறுகின்றது.

இது சுய ஏமாற்று யுகம். தொழில் நுட்பமும் அளவற்ற அறிவையும் ஆற்றலையும் பெற்று விட முடியுமென ஏமாறுகிறோம். ஒரு வகையான பழி உணர்வு மனிதனிடம் மேலோங்கி உள்ளது. அவனது ஆசைக்கு உட்படாத பொருள்கள் அழிக்கப்படுகின்றன. அல்லது முற்றிலும் மாற்றப் பெறுகின்றன. நசுக்கப்படுகின்றன. நமது அழியுந் தன்மையும், கால ஓட்டத்தை வெறுக்கும் உணர்வும், பழி வாங்கும் உணர்ச்சியாக வெளிவருகின்றன. இயற்கையின் ஒவ்வொரு பொருளும் தன்னாட்சி உரிமை உடையது. தனிப்பட்ட முறையில் மட்டுமின்றி, இனமென்ற முறையிலும், மனிதனுக்குப் பணிவு தேவை. படைப்பின்மீது மனிதனின் ஏக போக உரிமை நீங்கி, பிராணிகள் யாவும் குடியரசு போல வாழ வேண்டும்.

புதுக்கோட்டை திலகவதியார்
திருவருள் ஆதீனம்

அருள்திரு. டாக்டர் சாயிமாதா சிவபிருந்தா தேவி அன்னை



சமுதாயம், பழி உணர்ச்சியிலிருந்து பின்வாங்கிக் காவிய வாழ்க்கை நடத்த வேண்டும். மற்றோரிடமும், உலகிடமும், எரிச்சலற்ற நோக்குடன் பழகுவது காவிய வாழ்க்கையாகும்.

வாழ்க்கையை, முழுதும் யாராலும் விளக்க முடியாது. எந்த நுண்ணிய கருவியைக் கொண்டும் வாழ்க்கையின் மர்மத்தை அறிய முடிவதில்லை.

அறிவியல் முன்னேற்றம், மனிதனைப் பிரபஞ்சக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துள்ளது. ஆனால் 21ஆம் நூற்றாண்டில் இச் சமுதாயத்தின் வாழ்வு, மகிழ்ச்சியுடன் அமையுமா என்பது யோசிக்க வேண்டிய விஷயமாகிவிடும்.

மனித வாழ்க்கையின் வசதிகள் பெருகியுள்ளன. முன்பைவிட, உடல் உறுப்புகளை அதிக காலம் இயங்கச் செய்யும் முறைகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

படைப்புக் கடவுளோடு சவால் விடுவோம் என்று சொல்லக் கூடிய அளவிற்கு விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றிருந்தாலும், அது உண்மைக்கு முற்றிலும் புறம்பானதே.

விஞ்ஞானமும், தொழில் நுட்பமும், மனித வாழ்வை எவ்விதம் பாதிக்கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். ஒரு காலத்தில் மனித இனம் மடிந்து போனால் ஆட்சிக்கு வருவது யாராக இருக்க முடியும்?

ஏனெனில், வரம்பு மீறிய வளர்ச்சி முன்பிருந்த மாபெரும் இனங்கள் மடியக் காரணமாக அமைந்தது. இதனை, உபரி வளர்ச்சி என்கிறோம். கொம்பின் உபரி வளர்ச்சி, மான் இன அழிவிற்கு ஒரு காரணமானது. இயற்கையோடு இயைந்து உருப் பெறாத ஒரு படைப்பு, முழுமையுடையதாக அமையக் கூடிய சாத்யக் கூறுகள் கிடையாது என்பது இன்றைய விஞ்ஞானிகள் அறிந்து கொண்ட ஒன்றாகும்.

எண்ணற்ற பிரும்மாண்டமான கோளங்களிடையே இச்சிறு உலகம், இயற்கையின் ஆற்றலால் முறைப்படி சுழல்கிறது. இயற்கையை மனிதனால் மாற்ற முடியாது. இயற்கைக்கு மாறாகச் சென்றால் இயற்கை தண்டித்து விடும்.

தொழில் நுட்ப வளர்ச்சி, நம்மைப் புதிய நாகரிகத்திற்கு இட்டுச் செல்லுமென நம்புகிறோம். ஆனால் சமயத்தை அஸ்திவாரமாகக் கொள்ளாத தொழில் நுட்ப வளர்ச்சி மேன்மையுடையதாகாது.

"Religion without Science is Lame

Science without Religion is Blind"

"விஞ்ஞானம் கலவாத சமயம் நொண்டி

சமயம் கலவாத விஞ்ஞானம் குருடு"

என்ற தத்துவத்தையும் நாம் மறப்பதற்கில்லை.

சமுதாயத்திலே சரியான கல்வித் திட்டம் அமையாததால், அறியாமை பரவியுள்ளது.

அது, பேராசையுடன் கலந்து கொண்டு, ஆன்மீக உணர்வைத் தடுக்கிறது.

பணம், பதவிக்காகப் பாடுபடும் சுயநலம் மேலோங்கியுள்ளது. மக்கள், சிக்கல்களின் அம்சமாக அல்ல; தீர்வுகளின் அம்சமாக விளங்க வேண்டும். இதற்குச் சிறந்த முன்னுதாரணங்களை வைக்க வேண்டும்.

கருத்தொற்றுமை, நம்பிக்கை, வாழ்க்கையின் புனிதத்திற்கு மதிப்பு, பொறுப்புணர்வு, ஆகியவை தேவை. குடும்பம், வர்த்தகம், அரசு, ஆன்மீகம் இவற்றில் ஆக்கப் பூர்வ உறவு தேவை.

பொருத்தமான கல்வி முறை, புதிய கருத்துகளை யதார்த்த முறையில் அணுகும்முறை,இவை அவசியம்.

நமது வாழ்விற்கும் வேறு பிற உயிரினங்களுக்கும் பேரபாயமாக அணுப்போர் உள்ளது. வேண்டும் என்றும் தவறிப்போயும் இப் போர் நிகழக் கூடும். அமைதியாகச் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளும் பக்குவம் பெறுமுன் தொழில் நுட்பத்தில் முன்னேறி விட்டோம்.

சமயத்துறையில், உபதேசமும், வாழ்வும் முரண்பட்டுள்ளன. சிந்தித்துச் செயல்பட்டு உலகிற்கு ஆன்மீகவாதிகள் தக்க வழிகாட்டியாகத் தம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

போர்தான், தீர்வுக்கு வழி என்ற நிலை மாற, ஆட்சியாளர்கள், ஆன்மீக வாதிகளின் அருளுரைகளை அறிந்துணர வேண்டும்.

பணமானது மகிழ்ச்சி, சக்தி, சுதந்திரம், வெற்றி முதலியவற்றைத் தருகிறது. இயற்கையின் வளமனைத்தையும் இதனால் நாம் நுகரவே, அதனால் ஆணவம் அதிகரித்து, நாம்தாம் தலைசிறந்த உயிரினம் என்ற தவறான எண்ணங்களிலே ஊறிவிட்டோம்.

உலகமனைத்திற்கும் பொதுவான உணவு உற்பத்தியாகிறது. ஆனால், பாதி மக்கள் பட்டினி என்பது வெட்கத்திற்குரிய விஷயமாகிறது. உலகத்தைச் சுற்றி வருவதால் இந்த விஷயங்களை நம்மால் உணர முடிகிறது.

மூன்றாம் அணி நாடுகளில் தண்ணீர்க் கஷ்டம் தீர வழி செய்வதால், மருத்துவச் செலவைக் குறைக்கலாம். கலாசாரங்களிடையேயும் போதிய வகையில் பரிமாற்றங்கள் இல்லை.


கனிந்த இதயமும், மனிதாபிமானமும், ஆன்மீக உணர்வினால் உந்தப்பட்டுச் சரிவரப் பயன்பட்டால் அழிவைத் தடுக்கலாம்.

உலகு, ஒரே குடும்பமாக ஆவது, ஆன்மீக முதிர்ச்சியினால் மட்டுமே உண்டாக வேண்டும்.

அன்றன்று உலக காரியங்கள் நன்றாக நடைபெற, மனிதனுக்குச் சமய உணர்வு அவசியம் தேவை. தீபாவளி நன்னாளில் பரமாத்மா, ஜீவாத்மாக்களுக்கு உன்னத நோக்கை அளிப்பாராக!

ஃ

தீயைக் குளிப்பாட்டிய அன்னை சீதாபிராட்டி



சித்திரம், விளக்கம்: ஸி.ஏ.ராமசந்திரன்

சீதாபிராட்டி அசோக வனத்தில் பத்து மாதங்கள் தன் பதியைப் பிரிந்திருந்தது. இராவண வதத்திற்குப் பின்னர், இராமன் மக்களுக்காக அவளது தூய்மையை நிரூபிக்கத் தீ குளிக்கும்படிச் சொன்னதால் பிராட்டியின் அக்கினிப் பிரவேசம் ஏற்படுகிறது. நாம் இங்கு விளக்கப் போவது' 'சீதாயாரக்னேராகமனம்' – தீயிலிருந்து வெளிப்படும் பிராட்டியின் பரதத்துவ மேன்மையைப் பற்றியதாகும்.

தீயில் பொருளைப் போட்டாலும், பொருளில் தீயை வைத்தாலும் பொருள் பொசுங்கிவிடுகிறது. தங்கத்தைப் போட்டால் அதிலுள்ள மாசு நீக்கப்படுகிறது. இங்கு அக்கினிப் பிரவேசத்தில் சீதாபிராட்டி தீயினில் பொசுங்க வில்லை. தீதான் புனிதமடைகிறது.

மாசு அல்லது குற்றம் பிராட்டியிடம் என்றுமே இருந்ததில்லை. தீக்குளிக்கு முன்பும், தோஷமற்ற பரம பாவனிதான். தீயிலிருந்து வெளிவந்த பின்பும் பரிசுத்த மான பரிபூரணிதானவள்.

தோஷமற்ற பரிசுத்தத்தைப் பரமபாவனம் என்பர். பரமபாவனமே பரிபூரணத்தின் இலட்சணமாகும். இங்கு பிராட்டி பரம பாவனியாகவும், பரிபூரணியாகவும், பரம வைராக்கிய சீலியாயுமிருப்பதால் சுத்திகரிக்கும் அக் கினியையும் மேலும் சுத்தப்படுத்துபவளாயிருக்கிறாள். இதனால் பிராட்டி தீயைக் குளிப்பாட்டிப் புனிதமாக்கி மேன்மையடையச் செய்யும் அன்னையாகிறாள்.

ஒளி தருவது அக்கினி. இங்கு அக்கினியின் ஒளியினும் பேரொளியாம் பிரும்மதேஜசுடன், பாதிவ்ரத சொரு பிணியாகச் சீதாபிராட்டி தீயிலிருந்து வெளிவந்து ஸ்ரீராமனையடைகிறாள். இராகவன் பிரீதியுடனும் முழு மனதுடனும் பிராட்டியை ஏற்றுக்கொள்கிறான்.

சூரியனை மேகம் மறைப்பதாகத் தோன்றினாலும் கதிரவனின் நிஜஒளி துளியும் குறைவதில்லை. அசோக வனத்தில் மேகநாதனின் தந்தையால் பிராட்டி மறைக்கப் பட்டிருந்தாலும் அவளது புனிதத்தன்மை துளியும் குறையவேயில்லை. பார்ப்பவருக்கு மேகமறைப்பால் சூரிய ஒளி குறைந்திருப்பது போல் தெரியலாம். அதுபோல் பிராட்டி அசோகவனத்தில் மறைக்கப்பட்டிருந்ததால் அவ ளது தூய்மை குறைவுபட்டிருப்பதுபோல் தோன்றலாம். மாசு என்றுமே எவ்வகையிலும் அவளைத் தீண்டாது. கற்புச் சுடர் என்றும் சுடருக்கும் சுடராய்ப் பிரகாசிப்பதால்தான் தீச்சுடரும் அவளைச் சுடமுடியவில்லை.

நெருப்பின் சக்தி எத்தன்மையது என்பதையும் சற்று பார்ப்போம். ஒரு சமயம் தேவர் அசுரரை வெற்றிகண்ட போது, அக்கினி, வாயு, இந்திரன் முதலிய பெரும் முக்கிய தேவர்கள் தங்களது தெய்விக சக்தியினால்தான் அசுரரை வெற்றிகொண்டதாகக் கர்வம் கொண்டிருந்தனர். அச் சமயம் யட்ச வடிவில் ஓர் உருவத்தை அவர்கள் கண்டனர். அக்கினி யட்சனிடம் சென்று "நீ யார்?" என்றான். அதற்கு யட்சரூபம் "நீ யார்? உன் சக்தி எத்தகையது?" என்று கேட்டது. அக்கினி "நான் அக்கினி தேவன். என்னால் எதையும் எரித்துவிட முடியும்" என்றான். யட்சரூபம் ஒரு தருப்பைப் புல்லை அக்கினிமுன் போட்டு, "இதை நீ எரிப்பாயா?" என்றது. அக்கினி அலட்சியமாக அதை எரிக்கத் தன் சுடர் நாவால் தருப்பையைத் தாக்கினான். அக்கினியால் அப்புல்லை எரிக்கவே முடியவில்லை. பின் னர் வாயுதேவன் யட்சரூபத்திடம் வந்தபோது யட்சரூபம் வாயுவினிடம் "நீ யார்? உன் சக்தி என்ன?" என்றது. வாயு தன்னால் எதையும் அடித்துச் செல்ல முடியும் என, யட்சரூபம் ஒரு தருப்பைப் புல்லை வாயுவின் முன் போட்டு "இதனை நீ அடித்துச் செல்வாயோ?" என்றது.

வாயுவும் சூராவளியாய் அப்புல்லின்மீது பாய்ந்தும் புல் அசையவேயில்லை. தலைகுனிந்த வண்ணம் இந்திரனிடம் சென்றான். இந்திரனும் வந்திருப்பது யார் என்றறிய முன் வந்தபோது சக்திதேவி அவன் முன் தோன்றி "வந்திருப்பது யட்சவுருவில் பிரும்மமே. அதன் சக்தியால்தான் வாயு எதையும் அசைக்க முடிகிறது. அக்கினியால் எரிக்க முடி கிறது. எல்லாமே பிரும்மத்தின் சக்தியால்தான் நடை பெறுகின்றன. உங்களுக்குத் தனி சக்தி என்பது கிடையாது. பிரும்மம், நீங்கள் வெற்றி பெறவேண்டுமென நினைத்த தால்தான் உங்களால் அசுரர்களை வெல்ல முடிந்தது" எனச் சொல்லி மறைந்தாள். இதனால் அக்கினி எரிவதும், ஒளி கொடுப்பதும், சுடருக்குச் சுடராயும், ஒளிக்கு ஒளியாயு முள்ள இறைவனின் திருவருளால்தான் எனில் நாம் சாதிப்பதெல்லாம் கூட நமது தனிப்பட்ட சக்தியாலென்றில் லாமல் யாவும் இறையருளே என்பதாகக் கருதவேண்டும். பகவத் சங்கல்பத்தை உணருபவருக்கு விதியால் துன்ப மில்லை.

பரிசுத்தமான நீரால்தான் தேக அழுக்கினைப் போக்க முடியும். நீர் அழுக்குடையதாக இருப்பின் மாசைப் போக்க முடியாது. அதுபோல் தேவி என்றென்றும் எங்கும் மாசற்ற புனிதவதியாயிருப்பதால்தான் எல்லோருடைய தோஷங்களையும், பாபங்களையும் போக்கி அவர்களைத் தூய்மையாக்கித் திருவருள் புரிய முடிகிறது. இங்கு சீதாபிராட்டி தீயையும் தூய்மைப்படுத்தியதால் யாவ ராலும் போற்றி வணங்கத்தக்க தேவதேவியாயிருக்கிறாள் என்பது நிரூபணமாகிறது. மாசற்றவளை வணங்கினால் தான் நம் குற்றங்களும், பழையதும், புதியதுமான பாபங் களும் தீயின் தொடர்பாலேயே தூசு பொசுங்குவதுபோல் அற்றுப் போகின்றன.

பிராட்டியின் அவதார லீலையிலிருந்து மக்களுக்கு உயர்நலம் தரும் வழி உணர்த்தப்படுகிறது. இறைவனை அடைய பக்த சாதகர்கள் ஞானஅப்பியாசத்தினால் புனித மடைந்து, பற்றற்ற சுத்த வைராக்கியமுடன் இருப்பதே உத்தமம் என்று பிராட்டி தீயினின்று தீயைக் குளிப்பாட்டிய அன்னையாக வெளிவருவதிலிருந்து தெரியவருகிறது.

மண்ணில் பிராட்டி சிசு உருவினில் நுழைந்து, புதைந் தும் உயிருடனிருக்கிறாள். தீயினில் நுழைந்தும் உயிர் பிரியவில்லை எனில் பிராட்டி நித்தியமானவளன்றோ!

இராமனின் சத்தியவிரதமான தருமத்திற்கு ஏற்பத் தன் பாதிவிரதத்தைச் சகதருமசாரிணியாக இருந்து பங்க

மின்றி நடத்துகிறாள். அவள் நித்திய சொரூபிணியாதலின் எங்கும் எதிலும் தடையின்றி அறநெறியை வகித்து யாவருக்கும் வழிகாட்டுபவளாகச் சோபிக்கிறாள். 'சீதாயா : சரிதம் மஹாத்' என்றபடி சீதாபிராட்டியின் சரிதம் பெரிதிலும் பெரிது எனில் வேதங்களிலும் சிறந்தது என்பதாம்.

ஸ்ரீமத் பகவத்கீதை 9 அத்தியாயம் 15, 16 சுலோகார்த்தங்களின்படி பரமாத்மாவான ஸ்ரீராமனை உள்ளபடி அறியும் பிராட்டி தன்னைத் தன் நாதனின் ஆக்கினைக்கேத் அதாவது பகவானுக்கே சமர்ப்பணித்ததின் மூலம் அவளது அக்கினிப் பிரவேசம் அவளது ஞானயக்ஞமாகிவிடுகிறது.

"யக்ஞத்தீயே நான்" என்று 16ஆவது சுலோகம் தெரிவிப்பதால் வேள்வித்தீயே பரஞ்சோதியாம் பரம்பொருள் என்றாகிறது. வேள்வித் தீயிலிருந்து தன்னைத் தசரதகுமாரனாகக் காட்டிக் கொண்டவன் இராமன். இவன் அக்கினிக்கும் அக்கினிரசமான இராமனாக இருப்பவன். பிராட்டி தன் பதி இராமனுடன் சூரியனைப் பிரியாத ஒளிபோல் என்றுமிருப்பதால் ஞானயக்ஞத்தீயாகும் இராமாக்கினி பிராட்டியை எப்படி தரிசிக்க முடியும்?

வேதவாக்கான "ஓம் ஆப: ஜோதிரஸ: அம்ருதம் பிரஹ்ம' என்பதை ஒலியத்தில் மேலே காணலாம். ஆப : நீரையும், ஜோதி : தீயையும் ரச : சாரத்தையும், அம்ருதம் என்றுமுள்ளதையும், பிரம்ம சர்வேசுவரனாகும் ஸ்ரீமந் நாராயணனையும் குறிக்கின்றன. புருஷசூக்தம் - 'நாராயண பரஞ்ஜோதி:, நாராயண பரம்பிரம்ம' என்பதால் நாராயணனே சுடருக்கும் சுடராயுள்ளவனும் பிரும்மமுமானவன் என்றறியலாம். ஓமாப : - நீருக்குச் சாரமாயிருக்கும் அமிர்தமயமானவன் பிரும்மம் என்றும் 'ஜோதிரச :' - அக்கினி, ஆதித்திய ஜோதிகளுக்கும் பேரொளியாயிருக்கும் அமிர்தமயமான பரஞ்ஜோதி நாராயணனே, அவனே பிரும்மம் என்று உணர்த்துகிறது.

நீருக்கும், சுடருக்கும் ரசமாயிருப்பவன் நாராயணன். நாராயணனே ஜோதியானதால் நம்மாழ்வாரும் தம் முதற் பாசுரத்தில் "துயரறு சுடரடி தொழுதெழு மனனே" - நம் துயரை அறுக்கக் கூடிய தேவதேவனின் சுடரடிகளைத் தொழுது எழு மனமே' என்கிறார். உயர் காயத்திரீ மந்திரமும் "பர்கோ தேவஸ்ய தீமஹி தீயோ யோ ந: ப்ரசோதயாத்" என்பதில் 'நம் புத்தியைப் பிரகாசிக்கச் செய்யும் தேவனின் திவ்ய ஒளியைத் தியானிப்போமாக' என்கிறது.

பரம புருஷனான நாராயணன் தசரத யாகத் தீயிலிருந்து ஜோதிரஸமானதும், அமிர்தமயமானதுமான பாயச ரூபத்தில் இராமனாக அவதரித்தான். இங்கு திருமாலே இராமனாகையால் பிராட்டி தீயினுள் ஜோதி ரசமான அமிர்த ராமனோடு ஒன்றி விடுகிறாள். ஓமாப. எனும் பிரணவாகார ஜோதிரசமானப் புனித நீரால் தீயையும் புனிதப்படுத்தும் நீராட்டலை அன்னைப் பிராட்டி செய்து விடுகிறாள்.

ஸ்ரீதேவி விஷ்ணு வலமார்பினில் நித்தியவாசம் புரிவதால் நாராயணனே இராமனாகும்போது அவனது சத்திய ஒளியில் தானும் சீதா பிராட்டியாகக் கலந்தேயிருக்கிறாள்.

"ஓமாப: ஜோதிரச: அம்ருதம் பிரும்ம" என்பதன் மிகச் சுருக்கமான விளக்கம் இராமன் என்றே மறைபொருள் உணர்த்துகிறது. இராம ஜோதிரசத்தில் புகுந்துள்ள பிராட்டியை எச்சுடாராயினும் தாள்பணியத்தானே செய்யும். இவற்றினை நாமறிவதால் நாம் புனிதமாகி அன்னையின் திருவருள் பெற்றவராகிறோம். ⁰₀⁰

ஓம் தத்ஸத்

குமரா வயலூர் குமரன்


நாவண்ணா கந்தசுவாமி

இராகம் : காவடிச்சிந்து

மருத நிலத்திற்கொரு ஊரு - அந்த
ஆதிவய லூரைக் கூறு - இதில்
கோயில் கொண்டவன் யாரு? - மலர்
சிறுவாயிதழ் நறுந்தேன் கமழ் குறுமோகன தருசீர்நகை
கூர்வேலை ஆளுமொரு ஐயன் - குறவள்ளி
கூந்தலைக் கோதிடுந்திருக்"கையன்!" (மருத)

நிலத்தில் நீரிடை வாழை - ஆற்று
ஓரத்தில் பூமணம் தாழை - நன்செய்
வயலில் துள்ளுமாம் கயல்வாளை
குமரன் "ஞாயிறு" போலுமே - குளிர்த்
"திங்கள்" தேவானை யாகுமே! - வயிர
மார்பினில் "செவ்வாய்"க் கோலமே - வலது
மணிக்கை "புதன்" சிகைமுடி "குரு" இதழுமிரு "சுக்ரன்"
"ராகு" "சனி"க் கொடிக் "கேது" - நவக்
கோள்கள் துயர்செய் "யாது" (மருத)

கருணை அருணகிரி அத்தனே - முப்புரம்
எரித்த அப்பன் பித்தனே!
போகர் குருவான சித்தனே - நன்றாய்
ஜோதிமணி சிவயோகினி நாதமணி தலமாவது,
வேல வரே உறை கோயில் - தவத்தால்
கோல மதிள் கொண்ட வாயில்! (மருத)




அமுதசுரபி தீபாவளி மலர் '92 | தீயைக் குளிப்பாட்டிய அன்னை சீதாபிராட்டி | ஓவியம் : ஸி.ஏ. ராமசந்திரன்



காஞ்சிபுரம் பெருந்தேவி தாயார், வரதராஜப்பெருமாள்.

போட்டோ : டி. ஆர். சீனிவாசன்


1
2


3
4


5
6


7
8


9
10

திரையில் தாலாட்டு

சேயோன்

சித்திரம் : மாருதி

தூங்க வைப்பதற்கும், துயில் எழுப்புவதற்கும், ஆடிப்பாடிக் களிப்பதற்கும், அயர்வைப் போக்குவதற்கும் நம் முன்னோர் அழகு தமிழில் பாடிய பாடல்களே நாட்டுப்புறப் பாடல்கள்! இவை 'வாய்மொழி இலக்கியம்', 'எழுதா இலக்கியம்' என்றும் வழங்கப் படும்.

பாமரர்களுக்கே உரிய நாட்டுப் புறப் பாடல்களில், தலையாய தாயும், சாலச் சிறந்ததாயும், மணி முடியாகவும் விளங்குவன தாலாட்டுப் பாடல்கள்!

'தாலாட்டு' என்ற இப் பெயர் காரணம் பற்றி எழுந்த சொல்லாகும். 'தால்' என்ற சொல்லுக்கு 'நாக்கு' – என்று பொருள். தாய், 'லுலுலாயி, லுலுலாயி' என்று நாவினைச் சுழித்து ஆட்டிப் பாடுவதால்,

தால் + ஆட்டு – தாலாட்டு எனப் பெயர் பெற்றது. அதைத் தொடர்ந்து இசைக்கும் பாடல் தாலாட்டுப் பாடல் எனப்பட்டது. இதனை 'ஓராட்டு' என்றும் வழங்குவர். இடைக்கால இலக்கியங்கள் இத் தாலாட்டுப் பாடல்களைத் 'தாலாட்டு' என்றும், பிள்ளைத் தமிழ் பிரபந்தங்கள் 'தாலேலோ' என்றும் குறிப்பிடுகின்றன. தாலாட்டுப் பாடலின் இராகம் 'நீலாம்பரி' ஆகும். சொல்லோட்டத்தோடு அமையும் ஒலிமுறையே தாலாட்டின் உயிர்நாடி ஆகும்.

அன்று தொட்டு இன்றுவரை திரைப்படங்கள் தாய்மார்களைத் தாலாட்டுப் பாட வைத்துள்ளன. இல்லை, அவர்கள் மூலம் திரை இசைக் கவிஞர்கள் தம் தாலாட்டுப் பாடல்களை வெளிப்படுத்தியுள்ளனர். அவை பன்முறை கேட்டுப் பாடி மகிழத்தக்கன.



திரைப்படம் : கணவனே கண்கண்ட தெய்வம்

படம் – 1

பாடலாசிரியர் :

கண்ணாடி சீதாராமன்

"கணவன், மனைவி – இருவரின் கருத்தொருமித்த இல்லற வாழ்வின் அன்புப் பரிசுதான் குழந்தை. இருபாலாரின் அன்பில் மலர்ந்த நல்ல ரோஜாதான் குழந்தை. அதன் மழலைச் சிரிப்பு பெற்றோரை மகிழ்விக்கும்; மழலை மொழி பெற்றோரைப் பேருவகை கொள்ளச் செய்யும்; அவர்தம் இல்லற வாழ்வில் பெயரையும் புகழையும் நிலைநாட்டும்!" எனத் தாலாட்டிப் பாடும் தாய், மேலும் கூறுகிறாள்: 'சுகுமாரனே! உன்னைத் தங்கத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டிச் சீராட்டுவேன்; வெண்ணிலாக் காட்டுவேன். பால்சோறு ஊட்டி மகிழ்வேன். அப்படிச் செல்வச் செழிப்போடு உன்னைக் கொஞ்சி மகிழும் நாள் மிக விரைவில் வந்திடும். அதுவரைக்கும் காட்டில் கிடைக்கும் முல்லை மலரை உன் தலையில் சூட்டி மகிழ்வேன். அந்த மலர்களை மொய்க்கும் வண்டுகள் தேனை உனக்கு ஊட்டிவிடும். மான்களின் கூட்டம் உனக்கு வேடிக்கை காட்டும். இத்தனைக் காட்சிகளும் மகனே உனது நாட்டில்தான் நிகழ்கின்றன' – என்று தாலாட்டுப் பாடலில் கூறுகிறாள் தாய்.

"அன்பில் மலர்ந்த நல்ரோஜா
கண் வளராய் என் ராஜா!
என் வாழ்விலே ஒளி வீசவே
வந்தவனே கண் வளராய்!
ஆரிராரோ தாலோ தாலேலோ!
ஆரிராரோ தாலோ தாலேலோ!
தங்கத் தொட்டிலில் தாலாட்டியே
சுகுமாரனைச் சீராட்டியே
வெண்ணிலாக் காட்டியே
பாலன்னம் ஊட்டியே
கொஞ்சிடும் நாள் வந்திடுமே
(அன்பில்)
முல்லை மலர் மாலை சூட்டுவேன்
வண்டு தேனை வாயில் ஊட்டுமே
மான்களின் கூட்டமே
வேடிக்கை காட்டுமே
மன்னன் உந்தன் நாட்டிலே
(அன்பில்)

இப்படித் தாலாட்டும் தாய் அரசகுமாரி. தந்தை தடுத்தும், தந்தையின் வாக்கினைக் காப்பதற்காகக் குருபியை மணந்தவள் அவள். தந்தையின் சொல்லை மீறி அரச வாழ்வை உதறித் தள்ளி விட்டுக் கணவனுடன் காட்டில் தனிக் குடித்தனம் நடத்தும் நெஞ்சுரம் கொண்டவள் அவள்! எனவே தன் மகனுக்கு மீண்டும் நாட்டில் ஆட்சிப் பீடம் கிடைக்கும். அதனால் அவன் வாழ்வில் புது வளர்ச்சியும், மலர்ச்சியும் நிகழும். அதன் விளைவால் இவளது இல்லற வாழ்விலும் நற்பயன் கிடைக்கும் என்ற நம்பிக்கையை இந்தத் தாலாட்டுப் பாடலில் கூறுகிறாள் தாய். அந்தத் தாயைப் பாடவைத்த கவிஞரின் திறத்தை எப்படிப் பாராட்டினாலும் தகும்!

படம் – 2

பாடலாசிரியர் :

கவிஞர் கண்ணதாசன்

திரைப்படம் : பாசமலர்

கவிஞர் கண்ணதாசன் அண்ணன், தங்கையிடம் உள்ள நெருங்கிய பாசத்தையும், அவர்கள் இருவரும் திருமணம் காரணமாக வெவ்வேறிடத்தில் இருந்து கொண்டு குடும்பம் நடத்தினாலும் சிந்தனையில் ஒருமித்து விளங்குகின்றனர் என்பதையும் தாலாட்டுப் பாடல் வழி உணர்த்தியுள்ளார் மிக அற்புதமாக!

தங்கை : மலர்ந்தும் மலராத பாதி மலர்போல
வளரும் விழி வண்ணமே! –
வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே!

நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே!

வளர் பொதிகை மலை தோன்றி
மதுரை நகர்கண்டு பொலிந்த
தமிழ்மன்றமே!

அண்ணன் : மலர்ந்தும் மலராத
பாதி மலர்போல
வளரும் விழிவண்ணமே! - வந்து
விடிந்தும் விடியாத
காலைப் பொழுதாக விளைந்த
கலை அன்னமே!
நதியில் விளையாடி கொடியில்
தலைசீவி
நடந்த இளந்தென்றலே!
வளர்பொதிகை மலைதோன்றி
மதுரைநகர் கண்டு பொலிந்த
தமிழ் மன்றமே!

இப்படி வெவ்வேறிடத்தில் இருந்துகொண்டு ஒரே மாதிரித் தாலாட்டுப் பாடித் தத்தம் குழந்தையைத் தூங்க வைக்கும் அண்ணனும் தங்கையும், தம்மிரு குழந்தைகளும் வளர்ந்து பின்னர் மணந்து கொள்ள வேண்டும். அதற்குத் தொடக்கமாக அண்ணன் பாடுகிறான்;

"யானை படை கொண்டு சேனை
பலவென்று
ஆளப் பிறந்தாயடா! புவி ஆளப்
பிறந்தாயடா!
அத்தை மகளை மணங்கொண்டு
இளமை வழிகண்டு வாழப்
பிறந்தாயடா!

அதற்கு மறுமொழியாக அவனது தங்கை பாடுகிறாள்.

"தங்கக் கடிகாரம் வைரமணி
யாரம்
தந்து மணம் பேசுவார் - பொருள்
தந்து மணம் பேசுவார் - மாமன்
தங்கை மகளான மங்கை
உனக்காக
உலகை விலை பேசுவார்"

இப்படி வெவ்வேறிடத்திலிருந்து கொண்டு தாலாட்டுப் பாடும் அண்ணனும், தங்கையும் தாம் பிரிந்த சூழ்நிலையையும், அதற்கு முன் பாசத்துடன் வளர்ந்து சிறந்த அனுபவங்களையும் மீண்டும் நினைவுகூர்ந்து விட்டு நிறைவாகச் சொல்கின்றனர்.

தங்கை : "சிறகில் எனை மூடி
அருமை மகள்போல
வளர்த்த கதை சொல்லவா -
கனவில் நினையாத
காலம் இடைவந்து பிரித்த கதை
சொல்லவா?

அண்ணன் : "கண்ணின் மணி
போல
மணியில் நிழல்போல
கலந்து பிறந்தோமடா!
இந்த மண்ணும் கடல் வானும்
மறைந்து முடிந்தாலும்
மறக்க முடியாதடா! - உறவை
பிரிக்க முடியாதடா!

இருவரும் : அன்பே! ஆரிராரோ!
ஆரிராரோ!

அண்ணன் - தங்கையின் பாசத்தையும் அவர்களது ஆழ்ந்த பிணைப்பையும் தாலாட்டுப் பாடல் வழி உணர்த்திய கவியரசர் கண்ணதாசன் அவர்களைப் பன்முறைப் பாராட்டினாலும் தகும்.



படம் – 3

பாடலாசிரியர் : வாலி

திரைப்படம் : கற்பகம்

வானத்து நிலாவினை அனைவரும் பார்த்திருக்கிறோம். நிலா வளர்ந்து வருவதை வளர்பிறை என்றும் பின்னர் மெதுவாகத் தேய்வதைத் தேய்பிறை என்றும் கூறுகிறோம். வளர்பிறையில் மிகச் சிறப்புடையது மூன்றாம் பிறை. அதனைத் தொட்டிலாக வருணிக்கிறாள் ஒரு பெண். அந்த மூன்றாம் பிறையில் தொட்டிலைக் கட்டி, அதில் முல்லைப்பூ, மல்லிகைப்பூ இரண்டினையும் நிரப்பி பூ மெத்தையாக அமைத்துத் தன் குழந்தையை அதன்மேல் படுக்க வைத்து தூங்கச் செய்திருக்கிறாளாம். அது மட்டுமல்ல. குயில்கள் தமது இனிய குரலினால் பாடுகின்றனவாம். அந்தப் பாட்டினைக் கேட்டு அவளது மழலைக் குட்டி - அதான் மான்குட்டி கண் மூடித் தூங்குமாம்.

என்ன அருமையான கற்பனை!

"லுலாயி ஆரி ஆரி ஆரி ஆரி
ஆராரோ!
லுலாயி ஆரி ஆரி ஆரி ஆரி
ஆராரோ!
அத்தைமடி மெத்தையடி ஆடி
விளையாடம்மா!
ஆடும்வரை ஆடிவிட்டு அல்லி விழி
மூடம்மா!
(அத்தைமடி)
மூன்றாம் பிறையில் தொட்டில்
கட்டி
முல்லை மல்லிகை மெத்தையிட்டு
தேன்குயில் கூட்டம் பண்பாடும்
மான்குட்டி கேட்டுக் கண்மூடும் -
இந்த
மான்குட்டி கேட்டுக் கண்மூடும்!
(அத்தைமடி)
வேறோர் தெய்வத்தைப் போற்ற
வில்லை
வேறோர் தெய்வத்தை ஏற்க
வில்லை
அன்றோர் கோயிலை ஆக்கி
வைத்தேன்
அம்பிகையாய் உன்னைத் தூக்கி
வைத்தேன் - அதில்
அம்பிகையாய் உன்னைத் தூக்கி
வைத்தேன்.
(அத்தைமடி)

இப்பாடல் மூலம் குழந்தையைத் தாலாட்டும் பெண் அந்தக் குழந்தையின் அத்தை எனத் தெரிய வருகிறது. பெற்ற தாய்தான் தாலாட்டுப் பாடல் பாடவேண்டுமல்ல. அத்தை, பாட்டி முதலானோரும் பாடலாம். மழலை அன்பில் ஈடுபட்ட யாரும் தாலாட்டுப் பாடல் பாடலாம் என்பதைக் கவிஞர் வாலி மிக அற்புதமாக விளக்கியுள்ளார். அதோடு குழந்தையைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என்ற கருத்தையும் உணர்த்தியுள்ளார்.

படம் – 4

பாடலாசிரியர் : ஆலங்குடி சோமு

திரைப்படம் : பத்தாம் பசலி

வறுமையில் வாடும் ஒரு தந்தை தன் குழந்தையைத் தாலாட்டித்

தூங்க வைப்பதற்குத் தாலாட்டுப் பாடுகிறான். எப்படித் தெரியுமா? ஓலைக் குடிசையில் வசிக்கிற அந்த ஏழைத் தந்தை சொல்கிறான், 'முல்லைச் சரமாகவும், செல்லக் கிளியாகவும் விளங்குகின்ற என் அன்பு மகளே! கண் மூடித் தூங்கு. இந்த ஓலைக் குடிசையினுள் காற்றடிக்குது. கொட்டும் மழையின் நீர் இக் குடிசையினுள்ளும் புகுந்து ஒழுகுகிறது. இங்கே கட்டிலோ, மெத்தையோ கிடையாது. எந்த வசதியும் இல்லாத இந்தக் குடிசையில் உனக்கு எப்படித் தூக்கம் வரும்? இங்கு பணம் இல்லை; படிப்பு இல்லை. ஆனால் நான் உன்னிடம் செலுத்தும் அன்புக்கோ பஞ்சமில்லை. காலம் இந்தச் சூழ்நிலையில் உன்னை இங்கே பிறக்க வைத்த கணக்குப் புரியவில்லை.

ஒருவேளை நீ பிறக்காவிடில் நானும் உன் தாயும் வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் தூக்குப் போட்டு இறந்திருப்போம். அந்தத் தூக்குக் கயிற்றினைத் தொட்டில் கயிறாய் மாற்றுவதற்குத்தான் நீ இங்கு பிறந்தாயோ? அந்தத் தற்கொலையால் விளையும் பெருந்தூக்கத்திற்குத் தடை விதிப்பதற்காகத்தான் இங்கு பிறந்தாயோ? துன்பப்படும்போது அழாது சிரிக்கச் சொல்லி அதனைக் கண்டு இரசிப்பதற்காகத்தான் இங்கு பிறந்தாயோ? எனத் தந்தை தன் மகளைத் தாலாட்டும்போது கேட்கும் ஒவ்வொரு வினாவும் நம் நெஞ்சை உலுக்குகிறதல்லவா? இப்படி உள்ளங் குமுறிப் பாடும் தந்தைக்கு ஆறுதல் மொழியாகத் தாய் பாடலின் இறுதியில் பாடும் உத்தியைப் புகுத்திய கவிஞர் ஆலங்குடி சோமு அவர்களை என்னென்று பாராட்டுவது?

"வெள்ளை மனம் கொண்ட
பிள்ளை ஒண்ணு
வேடிக்கை காட்டுது
தூக்கமுன்னு
முல்லைச் சரமே! செல்லக்
கிளியே!
கண்மூடித் தூங்கம்மா! கண்
மூடித் தூங்கம்மா!
ஆராரோ ஆரிரோ ஆரிரோ
ஆரீராரோ
காத்தடிக்குது மழையும் கொட்டுது
ஓலைக் குடிசையிலே இங்குக்
கட்டிலுமில்லை
மெத்தையுமில்லை;
உனக்கும் தூக்கமில்லை
காசுமில்லை படிப்புமில்லை
அன்புக்குப் பஞ்சமில்லை .
உன்னைக்
காலம் இங்கே அனுப்பிவைத்த
கணக்கும் புரியவில்லை
(வெள்ளை மனம்)
தூக்குக் கயிற்றைத் தொட்டில்
கயிற்றாய் மாத்த வந்தாயோ? –
அந்தத்
தூக்கத்துக்குத் தடை விதிச்சு
பாக்க வந்தாயோ?
துன்பத்திலே சிரிப்பைச் சொல்லி
ரசிக்க வந்தாயோ?
தெய்வம் ஒண்ணு இருக்குதுன்னு
காட்ட வந்தாயோ?
தாய் : வெள்ளை மனம் கொண்ட
பிள்ளை ஒண்ணு
வேடிக்கை காட்டுது தூக்கமுன்னு
முல்லைச்சரமே செல்லக்கிளியே
கண்மூடித் தூங்கம்மா!
கண்மூடித் தூங்கம்மா?
ஆராரோ ஆரிரோ ஆரிரோ
ஆரீராரோ!

இந்தப் பாடல் மூலம் குழந்தை வெள்ளை உள்ளம் கொண்டது; குழந்தையே தெய்வம் என்பதை உணர்த்தியுள்ளார் கவிஞர். அதோடு,

"இடுக்கண் வருங்கால் நகுக
அதனையடுத்தூர்வது
அஃதொப்பது இல் –"

என்ற திருவள்ளுவரின் நீதிமொழியையும் இந்தப் பாடலில் சொல்லியிருப்பது கவிஞரின் ஆழ்ந்த படிப்பறிவை வெளிப்படுத்துகிறது. மேலும் பெண் குழந்தையைத் தாலாட்ட ஆண் மகனை அமைத்திருப்பதும் பொருத்தமாகப் படுகிறது. வறுமையை எண்ணிப் புலம்பும் தந்தைக்கு உற்ற துணையாய்த் தாய் விளங்க வேண்டும் என்பதையும் அந்த அற்புதக் காட்சியைக் காணவே தெய்வம் குழந்தை வடிவாய் வந்துள்ளது என்பதனையும் உய்த்துணரச் செய்த கவிஞரின் கவித்திறம் பெரிதும் ஏற்றிப் போற்றத்தக்கது.



படம் – 5
பாடலாசிரியர் :
புலமைப் பித்தன்
திரைப்படம் :
நீதிக்கு தலைவணங்கு

குழந்தைப் பருவம் மனிதப் பிறவியின் முதற் பருவம்; முதன்மையான பருவம்; வெள்ளை உள்ளம் கொண்ட தெய்வத்தன்மை மிக்க பருவம். எனவே பேசுந் தெய்வம் குழந்தை என நம் முன்னோர் கூறுவர். குழந்தையைப் பச்சைக்கிளி என வருணித்துத் தாலாட்டுப் பாடுகிறார் தந்தை. அந்தப் பச்சைக்கிளி தூங்குவதற்கென்று செவ்வந்திப் பூவில் தொட்டில் கட்டியிருக்கிறார். அதனுள் பட்டாடை போன்ற அன்னப் பறவைச் சிறகுகளை அடுக்கி வைத்திருக்கிறார். அதன்மேல் குழந்தையைப் படுக்க வைத்துத் தாலாட்டுகிறார்.

"இந்தப் பச்சைக் கிளிக்கொரு
செவ்வந்திப்பூவில்
தொட்டிலைக் கட்டி வைத்தேன் –
அதில்
பட்டுத் துகிலென அன்னச்
சிறகினை மெல்லென
இட்டு வைத்தேன் – நான் ஆராரோ
என்று தாலாட்ட இன்னும்
யார் யாரோ வந்து பாராட்ட!...
எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை
தான்
மண்ணில் பிறக்கையிலே! – பின்
நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பதிலே!
அன்னை வளர்ப்பதிலே!!
(நான் ஆராரோ)

தூக்க மருந்தினைப் போன்றவை
பெற்றவர் போற்றும் புகழுரைகள்
நோய் தீர்க்கும் மருந்தினைப்
போன்றவை
கற்றவர் கூறும் அறிவுரைகள்
(நான் ஆராரோ)
ஆறு கரையில் அடங்கி நடந்திடில்
காடு வளம் பெறலாம்! – தினம்
நல்ல நெறி கண்ட பிள்ளை வளர்ந்
திடில்
நாடும்நலம்பெறலாம்!
நாடும்நலம்பெறலாம்!
(நான் ஆராரோ)
பாதை தவறிய கால்கள் விரும்பிய
ஊர் சென்று சேர்வதில்லை – நல்ல
பண்பு தவறிய பிள்ளையைப் பெற்
றவர்
பேர் சொல்லி வாழ்வதில்லை!
பேர் சொல்லி வாழ்வதில்லை!!
(இந்தப் பச்சைக்)

இந்தத் தாலாட்டுப் பாடல் மூலம் கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள் இந்தச் சமுதாயம் வளமும் நலமும் பெற்றுச் சிறக்கக் குழந்தைகள் எத்தகைய பங்கினை வகிக்கக் கூடியவர்கள் என்பதை மிக அருமையாக விளக்கியுள்ளார். அதிலும் குறிப்பாகப் பெற்றவரின் பாராட்டுரைகள் தூக்க மருந்தினைப் போன்றவை என்றும் கற்றவர் கூறும் அறிவுரைகள் நோய் தீர்க்கும் மருந்துக்குச் சமமானவை என்றும் கூறியிருப்பது பன்முறை படித்து மகிழத்தக்கது.

ஆறு இரு கரைக்குள் அடங்கி நடந்தால் காடும் வளம் பெறும். அதுபோல் நல்ல நெறிகளில் பிள்ளைகள் வளர்ந்தால் நாடு நலம் பெறும் என்று சொல்லியிருப்பது சிறப்புடைத்து. மேலும் பாதை தவறிய பாதங்கள் தாம் விரும்பிய ஊரினைச் சென்று சேர்வதில்லை. அதேபோல் பண்பு கெட்ட பிள்ளைகள் நற்பெயர் எடுப்பதில்லை. எனவே தாலாட்டிச் சீராட்டி வளர்ப்பதோடு அமையாது நல்ல ஒழுக்கம் மிக்க முழு மனிதனாகக் குழந்தையை உருவாக்க வேண்டியது பெற்றோரின் கடமை என மிக நன்றாக, எளிய உவமை வழி உணர்த்திய கவிஞர் புலமைப்பித்தன் அவர்களைப் பன்முறைப் பாராட்டினாலும் தகும்.

படம் – 6

பாடலாசிரியர் : வைரமுத்து

திரைப்படம் : தண்ணீர் தண்ணீர்

'தண்ணி இல்லாக் காட்டுக்கு உன்னை மாற்றி விடுவார்கள்' – என்று அரசு அலுவலர்களுக்கிடையே நிகழும் உரையாடல் அனைவரும் அறிந்ததே. அத்தகைய தண்ணி இல்லாக் கிராமத்தில் உள்ள மக்களின் நிலை எப்படி இருக்கும்? அவர்கள் மழையைக் கேட்டு வானத்தைப் பார்த்து விம்மி ஏமாந்த நாட்கள் எத்தனையோ, அவர்தம் கண்ணீர் ஆறாகப் பெருகியதே ஒழிய மழைத் தண்ணீர் வந்தபாடில்லை. இத்தகைய சூழலில் வசிக்கும் ஒரு தாய் தன் குழந்தையைத் தாலாட்டித் தூங்க வைக்கிறாள்.

'எனது கண்போன்ற பூ மகனே! நான் தண்ணீர் இல்லாமல் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறேன். அது ஆறாகப் பெருகி உனது தொட்டிலை நனைக்கும் வரை – அதனால் உனது தூக்கம் கலையலாம். அது வரைக்கும் நீ தூங்கிவிடு. தண்ணீர் ஆறாக இவ்வூரில் வருவதற்கு மாறாக என் கண்ணீர் ஆறாகப் பெருகுவது உறுதி. அந்தக் கண்ணீர் உன் தூக்கம் கலைக்கும் வரை உறங்கு! ஊத்துமலைத் தண்ணீர் எப்படிச் சுத்தமாக இருக்குமோ அப்படிப் பளிங்கு போன்ற வெள்ளை உள்ளங்கொண்ட மகனே! என் உள்ளங்கை சர்க்கரையே! நான் பெற்ற தங்க ரதமே! என் இடுப்பில் வாசம் செய்யும் நந்தவனமே! – இவ்வூரில் எல்லாருக்கும் தண்ணீர் வழங்கும் உன் மாமன் அத் தண்ணீர் கிடைக்காமல் தூங்காமலிருக்கிறான். நீரில்லாக் கொடுமையால் வாடும் மக்கள் உண்ண உணவின்றி குடிக்க நீரின்றித் தவிக்கிறார்கள். வானத்தில் ஏகப்பட்ட மேகங்கள் உள்ளன. அவற்றிற்கோ மழை பொழிய மனமில்லை. மாறாக இரத்தத் துளியைச் சிந்துகிறது? மழை நீரைப் பிடிப்பதற்காக வைத்திருந்த பானையில் மழை நீர் விழவில்லை. மாறாக அதனருகில் நிற்கும் மங்கையரின் கண்ணீர்த் துளிகள் விழுந்து பொங்குகின்றன. வீட்டு விளக்கு எரிவதற்கு எண்ணெய் இல்லை. இந்தக் கிராமத்தில் அனைவரிடமும் மிஞ்சியிருப்பது கண்ணீர்தான் – " இதனை விளக்கும் தாலாட்டுப் பாடல் இதோ.

"கண்ணான பூமகனே! கண்ணு
றங்கு சூரியனே!
ஆத்தா அழுத கண்ணீர் ஆறாகப்
பெருகிவந்து
தொட்டில் நனைக்கும்வரை – உன்
தூக்கம் கலைக்கும் வரை
(கண்ணான)
ராரி ராரி ராரிரோ ஆரிரோ
லுலுயாயி ஆரீரரோ ஆரிரோ
ஊத்துமலைத் தண்ணீரே! – என்
உள்ளங்கை சர்க்கரையே! நீ
நான் பெத்த தங்கரதம்!
இடுப்பிலுள்ள நந்தவனம் – பாவப்
பட்ட
மாமன் இங்கு கண்ணுறக்கம்
கொள்ளவில்லை – சோகப்பட்ட
மக்களுக்கு சோறு தண்ணி செல்ல
வில்லை –
ஏகப்பட்ட
மேகமுண்டு மழை பொழிய உள்ள
மில்லை
(கண்ணான)
கால் முளைச்ச மல்லிகையே!
நான் கண்டெடுத்த ரோசாவே!
தேன் வைத்த அத்திப்பழம்!
முத்தம் தரும் முத்துச்சரம்!
தண்ணி தந்த மேகம் இன்று
இரத்தத் துளி சிந்துதடா
காத்திருந்த பானைக்குள்ளே
கண்ணீர்துளி பொங்குதடா!
வீட்டு விளக்கெரிவதற்கு கண்ணீர்!
எண்ணெய் இல்லையாடா!
(கண்ணான)

இந்தத் தாலாட்டுப் பாடல் மூலம் கவிஞர் வைரமுத்து அவர்கள் அந்தக் கிராமத்துத் தண்ணீர் பிரச்னையைக் கண்முன் நிறுத்திவிட்டார். 'கண்ணுறங்கு சூரியனே'! என அந்தத் தாய் பாடுகிறாள். அவ்வாறாயின் அவள் மகன் பெயர் சூரியனா? இல்லை. சுட்டெரிக்கும் சூரியன் கொஞ்ச நேரம் தூங்கினால் மழை வருமே என்ற

அந்தக் கிராமத்துப் பெண்ணின் நப்பாசையைத் தத்ரூபமாகப் படம்பிடித்து விட்டார் கவிஞர். மேலும் பாட்டின் இறுதியல், 'வீட்டு விளக்கெரிவதற்குக் கண்ணீர்' பாடல் ஒலிப்பது நின்றுவிடும். சிறிது இடைவெளிக்குப் பின் 'எண்ணெய் இல்லையடா' எனக் கூறுவாள். வீட்டு விளக்கு எரிவ தற்கு எண்ணெய் இல்லை எனச் சொல்லுவதற்கு முன் அவள் குழந்தையின் மீது ஓர் நீர்த்திவலை விழுகிறது. அது மழை நீரோ எனக் கருதி உற்றுப் பார்க்கிறாள். இல்லை. அவள் கண்ணிலிருந்து சொரிந்த கண்ணீர். எனவே சற்று இடைவெளிக்குப் பின் 'எண்ணெய் இல்லையடா' எனப் பாடுகிறாள். இந்தப் பாடல் மூலம் திரைஇசைக் கவிஞரும் ஒரு சமூகப்பிரக்ஞை மிக்கவனாக இருக்கவேண்டும். அதனைப் பாடல்வழி மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்னும் உண்மையை வெளிப்படுத்தியுள்ள கவியரசர் வைரமுத்துவைப் பல படப் பாராட்ட வேண்டும்.



படம் – 7

பாடலாசிரியர் :

கவிஞர் முத்துலிங்கம்

திரைப்படம் : முந்தானை முடிச்சு

ஒரு குடும்பத்தில் வாழும் கண வன் – மனைவி இருவரின் உறவு வலுப்பதற்கு, இல்லறம் மென் மேலும் சிறப்பதற்கு உறுதுணை யாய் விளங்குவது குழந்தைச் செல்வமே. குழந்தையைத் தாலாட் டும் தந்தையும் தாயும் தம் இரு வரிடம் எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளை எல்லாம் அந்தத் தாலாட்டுப் பாடலில் கூறுகின்றனர். வேற்றுமை நீங்கி ஒற்றுமைப்பட எத்தனிக்கின்றனர்.

முதலில், தாய் கூறுகிறாள்:

"சின்னஞ் சிறு கிளியே சித்திரப் பூவிழியே
அன்னை மனம் ஏங்கும் தந்தை மனம் தாங்கும்
நாடகம் ஏனடா நியாயத்தைக் கேளடா!
(சின்னஞ்சிறு)
சுகமே நினைத்து சுயம்வரம் தேடி
சுழல்மேல் தவிக்கும் துயரங்கள் கோடி
மழைநீர் மேகம் விழிகளில் மேவும்
இந்த நிலை மாறுமோ அன்பு வழிசேருமோ
கண்கலங்கிப் பாடும் எனது பாசம் உனக்கு வேஷமோ
வாழ்ந்தது போதுமடா வாழ்க்கை இனிமேல்
(சின்னஞ்சிறு)

அதற்குப் பதில் அளிப்பது போல் தந்தை பாடுகிறார்.

"உன்னை எண்ணி நாளும் உள்ளம் தடுமாறும்
வேதனை பாரடா வேடிக்கை தானடா
(சின்னஞ்சிறு)
மயிலே உனை நான் மயக்கவும் இல்லை
மனதால் என்றும் வெறுக்கவும் இல்லை
எனைநீ தேடி இணைந்தது பாவம்
எல்லாம் நீயே எழுதிய கோலம்
இந்த நிலை காணும்பொழுது நானும் அழுது வாடினேன்
காலத்தின் தீர்வுகளை யார் அறிவாரோ?

இப்படி இருவரும் தத்தம் மனக் குமுறல்களைத் தாலாட்டுப் பாடல் வழி வெளிப்படுத்திவிட்டு இணைந்து பாடுகின்றனர்.

தாய் : சின்னஞ்சிறு கிளியே, சித்திரப்பூ விழியே

தந்தை : உன்னை எண்ணி நாளும் உள்ளம் தடுமாறும்

தாய் : நாடகம்ஏனடா நியாயத்தைக் கேளடா

தந்தை : சின்னஞ்சிறு கிளியே

தாய் : சித்திரப் பூ விழியே"

ஆரிராரிரோ ஆரிராரிரோ ஆரிராரிரோ

இந்தத் தாலாட்டுப் பாடல் மூலம் பிரிந்திருந்த பெற்றோரை இணைக்க முற்படும் கவிஞரின் உளப்பாங்கு தெள்ளிதின் வெளிப் படும். எனவே தாலாட்டுப் பாடல் கணவன் – மனைவியரின் சிக்க லைத் தீர்க்கும் கருவியாகவும், அண்ணன் – தங்கை உறவை வளர்க்கும் கருவியாகவும் பயன் படும் என்பதை நன்கு அறியலாம். இந்தத் தாலாட்டுப் பாடலை உரை யாடல் போல் அமைத்து இருவரின் பிரச்னைகளையும் பகிர்ந்து கொள்ளச் செய்து, பின் தீர்வுக்கும் வழிவகுக்கும் கருத்தோவியமாகத் தீட்டிய திரைஇசைக் கவிஞர் முத்துலிங்கம் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

படம் – 8

பாடலாசிரியர் :

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

திரைப்படம் : பதிபக்தி

குழந்தைகளை மணிமிகு மலர்களோடு ஒப்பிட்டுப் பாடுவது கவிஞர்களின் கைவந்த கலை. ஏனெனில் மலர்கள் எவ்வித ஒளிவு மறைவுமின்றி அலர்ந்து சிரித்துப் பிறர் மனத்தையும் மகிழ் வுக்கும் திறமுடையன. அதே போல் குழந்தைகளின் மலர்ந்த முகம் எத்திறத்தாரையும் சிரிக்க வைக்கும் இயல்புடையது. குழந் தையைக் கண்மலர், செம்பவள வாய் மலர், சிந்திடும் மலர், மாணிக்க மலர் என வருணிக் கிறார் பட்டுக்கோட்டையின் வேந்தர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

"சின்னஞ் சிறு கண்மலர்
செம்பவள வாய் மலர்
சிந்திடும் மலரே ஆராரோ
வண்ணத் தமிழ் சோலையில்
மாணிக்க மாலையில்
ஆரிரரோ அன்பே ஆராரோ ..."

இப்படித் தாலாட்டுகிற தாய் மேலும் கூறுகிறாள். 'குண்டு மணிச்சரமே! குங்குமச் சிமிழ் போன்று இதழ் குவிந்து சிரிக்

கின்ற அன்புச் செல்வமே! அப்பா உன்னைப் பார்க்காமல் இருப்பதனால் ஏங்கி, ஏங்கி அழுகிறாயோ? என் மடியில் பாய்ந்தோடி வந்து படுத்துச் சாய்ந்தால்தான் தூக்கம் வருமோ? அப்பா தாமதமாக வந்தாலும் தவறாமல் உன்னை அள்ளி எடுத்து, அணைத்து மகிழ்ந்து உன் தாமரை மலர் போன்ற கன்னத்தில் முத்தங்கள் கொடுப்பார். எனவே அவர் வரும் வரை அயர்ந்து கண்ணுறங்கு.

ஒரு தாலாட்டுப் பாடல் மூலம் குழந்தையின் சிறப்புகளையும், குடும்பத்தின் நிலைகளையும் கூறுவதோடு நாட்டுச் சூழல்களையும் நன்கு விளக்கலாம் என்பதையும், கவிஞனின் நாடு குறித்த நற்கருத்துகளை அப்பாடல் வழித் தெரிவிக்கலாம் என்பதை கற்பனை நயத்தோடும், கவின் மிகு வளத்தோடும் நமக்குச் சொல்லியுள்ளார் சமூக சீர்திருத்தக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். பாடலைப் படியுங்களேன் - நன்கு விளங்கும்.

பாப்பா உன் அப்பாவைப்
பார்க்காத ஏக்கமோ?
பாய்ந்தே மடிதனில்
சாய்ந்தால்தான் தூக்கமோ?
தப்பாமல் வந்துன்னை
அள்ளியே அணைப்பார்!
தாமரைக் கன்னத்தில்
முத்தங்கள் விதைப்பார்!
குப்பைதனில் வாழும்
குண்டு மணிச்சரமே!
குங்குமச் சிமிழே!
ஆராரோ! (வண்ணத் தமிழ்)
ஏழை நம் நிலையை
எண்ணி நொந்தாயோ?
எதிர்கால வாழ்வில்
கவனம்கொண்டாயோ?
நாளைய உலகம்
நல்லோரின் கையில்
நாமும் அதில்
உயர்வோம் உண்மையில்.
மாடிமனை வேண்டாம்
கோடி செல்வம் வேண்டாம்
வளரும் பிறையே நீ போதும்
(வண்ணத்தமிழ்)

அன்புச் செல்வமே! இன்னும் தூங்காமல் எதையோ சிந்தித்துக் கொண்டிருக்கிறாயோ? அம்மாவும் அப்பாவும் ஏழைகளாய் வறுமையில் வாடுகின்றனரே என நினைத்து மனம் வருந்தி அழுகிறாயோ? இந்த ஏழ்மை தொடர்ந்து நீடித்தால் பெற்றோரின் எதிர்காலம் எப்படி இருக்குமோ? அதனால் உன் எதிர்காலமும் ஒளிமயமின்றிப் போகுமோ என நினைத்து அதிலே மிகுந்த கவனத்தைச் செலுத்த வேண்டும் எனக் கலங்குகிறாயோ? கவலைப் படாதே! எதிர்கால உலகம் நல்லவர்களால் ஆளப்படும். அதன் விளைவால் நாமும் நமது வாழ்க்கையில் உறுதியாக முன்னேறி உயர்வடைவோம். எங்களைப் பொறுத்தவரை மாடி வீடும் கோடி செல்வமும் தேவை இல்லை. அனைத்தும் நீயாக இருக்கின்றாய் எங்களுக்கு. வளர்பிறை போன்று நாளும் வளர்ந்து பௌர்ணமி நாளில் எப்படி நிலவு பளிச்சென்று தோன்றி உலகுக்கு ஒளி கொடுக்கின்றதோ அதே போல் நீயும் எதிர் காலத்தில் நம் குடும்பத்திற்கு ஒளி கொடுப்பதோடு இந்தக் குவலயம் பயனுறவும் வாழ வேண்டும். அதுவே எங்கள் மகிழ்ச்சி. அத்தகைய நிலையை நீ அடைய வேண்டுமெனில் இப்பொழுது எந்தக் கவலையுமின்றி உறங்க வேண்டும்" என்று கூறித் தன் மகனை உறங்க வைக்கிறாள் தாய். இல்லை அந்தத் தாயை அப்படிப் பாட வைக்கிறார் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.



படம் – 9

பாடலாசிரியர் :
கு.மா. பாலசுப்பிரமணியம்

திரைப்படம் : யானை வளர்த்த வானம்பாடி

பொதுவாகக் குழந்தைகளைத் தாலாட்டித் தூங்க வைக்கிறவர்கள் தாய், தந்தை, அத்தை, பாட்டி முதலானோர். காட்டில் கிடக்கும் ஓர் அனாதைக் குழந்தையை எடுத்து வளர்க்கிறது யானை. அதற்கு உறுதுணை புரிகின்றன குரங்கு, நாய் முதலானவை. குழந்தையை மரவுரியாலான தொட்டிலில் இட்டுத் தாலாட்டுகிறது யானை. இதோ பாடல்!

"கண்ணே! வண்ணப்
பசுங்கிளியே என்
கண்ணின் பாவையே
கண்ணுறங்காயே!
பொன்னே உன்னெழில்
புன்னகை
பூவே தாமரை
கண்ணுறங்காயே!
தேடாத செல்வத்தைப்
போலே நீவந்தாய்
சிந்தையில் இன்பமாய்
என்றும் நிறைந்தாய்
ஓடையின் நீரில் ஆடிடும்
மீன்போல் என்
உள்ளத்திலே
துள்ளி ஆடுகின்றாய்
வாடாத பூவாக
சூடாத முத்தாக
மாயம்காட்டிடும்
கண்மணியே!
காடும் கமழ்ந்திடும்
மல்லிகை நீயே!
கண்ணின் பாவையே
கண்ணுறங்காயே!
நாட்டு மனிதர்கள்
மூட்டிடும்தொல்லை
நம்பிக்கை மோசங்கள்
இங்கேதும் இல்லை
காட்டு விலங்கும்
வேடிக்கை காட்டும்
களங்கமில்லா
அன்புக்கு ஈடுமில்லை
நாட்டியம்ஆடிடும்
மாமயிலைக் கண்டு
கானம்பாடும்
குயிலும் உண்டு
காராம்பசு தந்த
பாலமுதுண்டு

கண்ணின் பாவையே
கண்ணுறங்காயே! (கண்ணே)

குழந்தையை வண்ணப் பசுங் கிளி, பொன், முத்து, தாமரை, கண்ணின் பாவை எனப் பல வகையில் வருணித்துப் பாடுகிறார் கவிஞர் கு.மா. பாலசுப்பிர மணியன். இல்லை! யானை பாடும் தாலாட்டுப் பாடலில் கூறியுள்ளார். நாட்டில் வாழும் மனிதர்களிடம் பொய்யும் புரட்டும் திருட்டும் நம்பிக்கை மோசமும் இருக்கும். ஆனால் காட்டில் அத்தகைய கொடுமைகள் கிடையாது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கல்நெஞ்சர்கள் கிடையாது. 'மாறாக பழுதில்லா அன்பு பாராட்டும் விலங்குகள் உண்டு. நாட்டியம் ஆடும் மயிலுண்டு, பாட்டுப் பாடி மகிழ வைக்கும் குயிலுண்டு. உடலுக்கு வலிமையை வழங்கும் பால் கிடைக்கும். அந்தப் பாலைக் குடித்து, குயிலின் இனிய பாடலைக் கேட்டு, மயிலின் ஆட்டத்தைப் பார்த்து மனமகிழ்ச்சியுடன் தூங்கு என்று குழந்தையை யானை தாலாட்டிப் பாடுவதாகப் பாடியுள்ள கவிஞர் கு.மா. பாலசுப்பிரமணியம் அவர்களைப் பன்முறைப் பாராட்டி மகிழலாம்.

படம் – 10

பாடலாசிரியர் : நா. காமராசன்

திரைப்படம் : இளவரசன்

குழந்தையை ஆனிப்பொன்னே! ஆசைக் கண்ணே! வானவில்லே! மாணிக்கமே! முத்தே! என வருணிக்கும் தாய் தன் குழந்தையைத் தெய்வம் எனப் போற்றுகிறாள். அதோடு அந்தத் தெய்வத்தைக் கருவில் ஏந்தியதால் தானே கோயிலாக ஆகும் பெருமையைப் பெற்றதாகவும் கூறுகிறாள். அவள் மேலும் சொல்கிறாள்.

ஆனிப் பொன்னே! ஆசைக் கண்ணே!
வானவில்லே! மாணிக்கமே!
பத்துத் திங்கள் கூடுகட்டி சிப்பி
பெத்த ஒத்தை முத்தே!
நாடகம் போல் தாலி கட்டி
ஊரறியத் தொட்டில் கட்டி
வாழவந்த பாத்திரம் நான்
ஏழை எந்தன் மேடையும் நீ
சிற்பம் உன்னைக் கர்ப்பந்தாங்கி
கற்பின் கோவில் ஆனேனே
முக்கடலில் முத்தெடுத்து
கட்டிய மாலை நீதானே!
(ஆனிப் பொன்னே)
அள்ளி வச்ச மாத்துப் பொன்னு!
அஞ்சு விரல் மோதிரமாம்
தந்தத்திலே நெத்திச் சுட்டி
தாழம்பூவில் காலணிகள்
பச்சை மஞ்சள் அள்ளிப்பூசி
பன்னீர் வைத்தேன் நீராட்ட
என்னுடலில் உன்னுயிரே
என்னுலகம் கண்ணே உன்முகமே!
(ஆனிப் பொன்னே)

"பத்து மாதங்களாகக் கூடு கட்டிக் காப்பாற்றிப் பெற்ற நன்முத்தே! ஒரு கடலில் மூழ்கி நல் முத்தெடுப்பதே கடினம். ஆனால் மூன்று கடல்களில் மூழ்கி முத்தெடுத்து அவற்றை முத்து மாலையாகத் தொடுத்தால் அது எப்படி ஒளிமிக்கதாகவும், அழகு கொஞ்சும் மாலையாகவும் விளங்குமோ அதுபோல் அழகுடன் தோன்றும் அருமை மகனே! உனது ஐந்து விரல்களில் மோதிரம் சூட்டி மகிழவும் தந்தத்தில் நெத்திச் சுட்டி அணிந்தும் தாழம் பூவினால் காலணிகள் பூட்டியும் உன்னைத் தாலாட்டி மகிழ்வேன். பச்சை மஞ்சள் கலந்த வாசனைப் பொடியைத் தடவி, பன்னீரால் உன்னை நீராட்டிச் சீராட்ட உள்ளேன். என்னுடலில் உன்னுயிரே உள்ளது. கண்ணே! உன் முகம்தான் என்னுடைய உலகம். ஏழைப் பெண்ணாகிய எனது ஆனந்தத்தின் மேடையே நீதான்" எனத் தாலாட்டித் தூங்க வைக்கிறாள்.

இப்படித் தாயைத் தாலாட்டிசைக்க வைத்துள்ள கவிஞர் நா. காமராசன் அவர்களை எப்படிப் பாராட்டினாலும் தகும்.

"சிற்பம் உன்னைக்
கர்ப்பந்தாங்கிக்
கற்பின் கோவில் ஆனேனே!"
"என்னுடலில் உன்னுயிரே!
என்னுலகம் கண்ணே
உன் முகமே!"

என்ற வரிகள் பன்முறை பாடி இரசிக்கத்தக்கன. என்ன அருமையான கற்பனை. குழந்தைத் தெய்வத்தைக் காக்கும் கோயில் தாய்தான் என்பதை எவ்வளவு அற்புதமாகச் சொல்லியிருக்கிறார். அதனால்தான் 'தாயிற் சிறந்த கோயிலுமில்லை' எனக் கவிஞர் பாடினாரோ? உவமையும் உருவகமும் பின்னிப் பிணைந்து கற்பனையின் உச்சமாய் விளங்கும் பெருமையைப் பெற்றுள்ளது இந்தத் தாலாட்டுப் பாடல்!

திரைப்படப் பாடல்களில் எண்ணிறந்த தாலாட்டுப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஈண்டு எடுத்துக்காட்டப்பட்டன சிலவே! அவை மூலம் தாலாட்டுப் பாடல்கள் குழந்தையின் குதூகலத்தையும், பெருமையையும் உலகுக்கு உணர்த்துகின்றன; கணவன்-மனைவி உறவை வலுப்படுத்துகின்றன, அண்ணன்-தங்கை சகோதரப் பாசத்தை வளர்க்கின்றன; சமூகப் பிரச்னைகளை வெளிப்படுத்தும் சாதனங்களாகத் திகழ்கின்றன. நீதிநெறிகளையும், வாழ்வியல் முறைகளையும் எடுத்துரைக்கின்றன. அவை சிறந்த கருத்தோவியங்களாக மட்டுமின்றி கலைஞர்களின் கற்பனை ஓவியங்களாகவும் மிளிர்கின்றன!



மாமனார் : பொன் வைக்கிற இடத்திலே பூவையாவது வைக்கணும்னு சொல்லுவார்கள். பூ... என்ன சரமாகவே ஒரு முழம் வாங்கி வந்து விட்டேன்.



ருத்ர வீணை

பின் (Bin)



தஞ்சை கலைக்கூடத்தில் பழங்கால அபூர்வ வாத்தியங்கள்





தந்த வயலின்




மயூர் சரோட்



மயூர் ஸ்வர் கத்

பஸந்த் ரங்க்

போட்டோ :
பாணால் ராஜாராம்,
தஞ்சை





சரஸ்வதி வீண

காதல், ஒரு தலைமுறை தாண்டி!



புஷ்பா தங்கதுரை

சுந்தரி சிவஞானம் படிகளில் மெள்ள ஏறினாள்.

முதல் மாடியில் இளைப்பாறி, மீண்டும் ஏறி, இரண்டாவது மாடி வருவதற்குள் வாயைத் திறந்து பெரிதாக இழைத்தாள்.

ஃப்ளாட் மணியை அடித்ததும் மாலதி திறந்தாள். — அம்மா! என்று ஆச்சரியத்துடன் கூவி அவளை உள்ளே அழைத்துப் போனாள்.

அம்மா உள்ளூரில்தான் இருக்கிறார். ஆனால் நகரத்தின் வெளிப் புறத்தில்! பஸ் ஏறி, இறங்கி அப்புறம் நடந்து... அங்கே போவதற்குள்....

மாலதி நகரத்துள் இருந்தாள். காலையில் கம்பெனி கார் அழைத்துச் சென்றது. மாலையில் கொண்டு வந்து விட்டுவிடும்.

இந்த சுகத்தை விட்டு நாட்டுப் புறத்தில் இரண்டு மணி நேரம் பிரயாணம் செய்து வீட்டை அடைந்து......

அப்பா வேறு கோபக்காரர். சிடுமூஞ்சி. அம்மாதான் அவரோடு இருக்க லாயக்கு!

நல்லவேளை! கம்பெனியில் மாலதிக்குக் கிடைத்திருக்கும் செக்ரட்டரி பதவி அவளைத் தனியாக இருப்பதற்கு எல்லாவித வசதிகளையும் செய்து கொடுத்திருந்தது

அம்மா வந்தது பிடிக்கவில்லை! அதுவும் இந்த இருட்டு வேளையில்! அதுவும் ஒரே மாதத்தில் இரண்டாம் முறையாக.

— அம்மா! இருந்தாலும் உனக்குத் தைரியந்தான். மணி இப்போ என்ன தெரியுமா? என்றாள் சுளீரென்று.

— ஆறரை!

— இருட்டியாச்சு! இந்த நேரத்தில் என்னைப் பார்க்க வரலாமா?

— இங்கே மூக்குக் கண்ணாடி வாங்க வந்தேன். அப்படியே உன்னைப் பார்த்துவிட்டுப் போலாம்னு...

அம்மா இரண்டு வாரத்தில் மெலிந்திருந்தாள். வயது 76. கைச் சதைகள் சுருக்கம் காட்டின! முகம் இரு ஓரத்திலும் ஒட்டி ஒடு தெரிந்தது.

— இந்தா! உனக்கு பர்ப்பி பிடிக்குமே! பண்ணிட்டு வந்தேன்! ரெண்டு நிமிஷம் ரெஸ்ட் எடுக்கறேன்! அப்புறம் இதோ போயிடுவேன்! அவர் காத்திட்டிருப்பாரே!

— இந்த வயசிலே நீ ரொம்ப அலட்டிக்கிறே! எப்படி வந்தே?

— பஸ்ஸிலே!

— கூட்டம் நெரிச்சிருக்குமே!

— அதனாலே என்ன?

— ஆட்டோவிலே வந்தா என்ன? நான் பணம்கொடுக்கமாட்டேனா...

— என் பென்ஷனுக்கு ஆட்டோ சார்ஜ் கொடுக்க முடியுமா?

அம்மா மெள்ள மெள்ள உட்கார்ந்தாள்.

— இந்தப்பாரு! என்று சொல்லி தனது கைப்பையைத் திறந்து அம்மா ஒரு காகிதத்தை எடுத்தாள். — இத நீயே வச்சுக்க! எனக்கு இப்போ பென்ஷன் நூறு ரூபாய்க் கூட்டிட்டாங்க! அரியர்ஸ் வேறே வந்திச்சு! இனிமே நீ எனக்கு நூறு ரூபாய் அனுப்ப வேண்டாம்!

மாலதியின் கண்கள் சுருங்கின!

அம்மா ஒரு டீச்சராக உழைத்து ஒரு குடும்பத்தைக் காப்பாற்றி... தங்கைகளைக் கரையேற்றி மச்சினிகளைக் கரையேற்றி... இப்போது வெறும் இலைச் சருகாய் போயிருக்கிறாள்!

கண்ணில் ஈரத்தைத் துடைத்தாள். — என்னம்மா இது? இதை நீயே வச்சுக்க! என்னவோ புதுசா இருக்கே! என்றாள் மாலதி தட்டுத் தடவிக் கொண்டு.

— நோ! நோ! மாலதி எனக்கு இது அதிகம்! இதை வச்சு என்ன செய்யப்போறேன். நீயே வச்சுக்க.

அம்மா ரொம்ப தன்னடக்கக்காரி! விடாப்பிடியாக செக்கை அவளிடம் கொடுத்தாள்.

— அம்மா! நீ இங்கே வந்தா அழுகைதான் வருது! நீ எப்படி தனியே ஒரு வீட்டிலே இருக்கிறே? அப்பா உன்னை மிரட்டாமல் உருட்டாமல் இருக்கிறாரா? இந்தக் கம்பெனி ஃப்ளாட் எவ்வளவு பெரிசு பார்! இங்கே வந்து என்னோட இருக்கலாமே! உங்க எல்லாருக்கும் நான் உழைச்சுச் சாப்பாடு போடுவேனே! இங்கே இப்போ சமையல்காரிகூட இருக்கிறா...

— எதுவும் வேணாம். இருக்கிற படியே நாம்ப இருந்துட்டாப் போதும். மன நிம்மதியோடு இருக்கலாம்! ஒருத்தருக்கு ஒருத்தர் சேர்ந்தா, நீ ஒண்ணு சொல்ல, உங்க அப்பா ஒண்ணு சொல்ல...

— ஒண்ணாத்தான் இல்லே! இந்தச் செக்கை வச்சுக்க! திருப்பித் தராதே! பாங்கிலே உன் பேரிலே போட்டுக்கிறதுதானே!

— ஐயோ! எனக்குத் தேவையே இல்லையே! மாலதி!

— இல்லேம்மா! எனக்குத் தெரியும். என் மேலே கோபந்தானே! பிரதாப் விஷயத்திலே உன் சொற்படி கேட்கலைன்னு...

— ஐயோ! அவரைப் பத்தி நான் ஏதாவது சொன்னேனா? இல்லையே! நீயா வீணா ஏன் கற்பனை பண்றே?

— அம்மா! இதிலே மறைவு எதுக்கு? உன் குணம் தெரியாதா. நான் பிரதாப்போட சிநேகமா இருக்கிறது உனக்குப் பிடிக்கலை.

— அப்படி இல்லை. நீ அப்புறம் கஷ்டப்படப் படாதேன்னு...

— திரும்பச் சொல்றேன்னு கோபித்துக் கொள்ளாதே! உனக்குப் பிரதாப்பைப் பிடிக்கலை. உன் பார்வையிலே அவர் ஒரு மோசமான ஆசாமி. ஏமாத்துக்காரன். என்னை அவர் நடுச்சந்தியிலே விட்டுடப் போறார்ன்னு...

— பிரதாப், மட்டுமில்லைமா! காதலிக்கிற யாருமே... என்று சொல்லி வார்த்தையை நிறுத்தினாள் தாயார்.

மாலதி திடுக்கிட்டுப் பார்க்க, அம்மா மேலே தொடர்ந்தாள்.

...நான் சொல்றேன் கேட்டுக்க, மாலதி! உண்மையிலே அந்த நாளிலே நான் டீச்சரா சேர்ந்த பிறகு உங்க அப்பாவோட அஞ்சு வருஷம் பழகினேன்.

அஞ்சு வருஷம் அவரும் டீச்சர்! நானும் டீச்சர்! ஒருத்தருக்கொருத்தரைப் பிடிச்சது. ஆனா ஒரு வார்த்தை லேசிலே பேசியிருப்போமா! அஞ்சு வருஷமா சிநேகம் பண்ணினோம்.

மாலதி குறுக்கிட்டாள். — அந்த நாளிலே உங்களுக்கு அத்தனை வருஷம் ஆகத்தான் செய்யும். ஆனால் இப்ப எல்லாம்... என்று இழுத்தாள்.

அம்மா ஓர் இரக்கப் புன்னகை காட்டினாள். — நான் வருஷக் கணக்கைப் பெருமையா காட்ட விரும்பலை! நாங்க அப்படிப் பழகினோம். ஒரே ப்ளேட்டிலே சாப்பிட்டோம்! ஒரே ப்ளேட்டிலே கை கழுவினோம். எனக்கு ஜுஸ் பிடிக்காட்டா அவருக்கும் பிடிக்காது! அவருக்குத் தலைவலின்னா எனக்குத் தலைவலி வரும்! அவர் தூங்காட்டா எனக்கு உறக்கம் வராது! அவர் சாப்பிடாட்டா, எனக்கு ஒரு பருக்கை உள்ளே இறங்காது! இது ஏதோ வாழ்க்கை. ஒப்பந்தம் செஞ்சுக்கிட்டோம்னு நினைக்காதே! சிநேகம்னா அப்படி ஒரு சிநேகம்!

ஒருத்தர் தும்மினா இன்னொருத்தர் தும்முவோம். புரிஞ்சதா?

மாலதி பாதி ரசனையோடு கேட்டாள்! இருந்தாலும் உள்ளே இனமில்லாத கோபம் வந்து கொண்டிருந்தது.

அம்மா தொடர்ந்தாள்.

— அப்புறம் உங்க அண்ணன் பிறந்தான். அப்புறம் நீ பொறந்தே! அந்த ரெண்டு வருஷத்துக்குள்ளே ஒரு மச்சினிச்சிக்குக் கல்யாணமும் ஆச்சு... ரெண்டே ரெண்டு வருஷந்தான்! அப்புறம் நாங்க எப்படி ஆயிட்டோம்... பார்த்தியா...

அம்மா சஸ்பென்ஸை விடாமல் மேலே சொல்லிக்கொண்டே போனாள்.

— ரெண்டு வருஷத்துக்கு அப்புறம் என்னாச்சு? எலியும் பூனையும் ஆயிட்டோம்! நான் என்ன செஞ்சாலும் அவருக்குப் பிடிக்காது. என்ன பேசினாலும் பிடிக்காது! இவ்வளவுக்கும் அவருக்கு நன்மையைத்தான் செய்வேன். அதுகூடப்பிடிக்காது! நாம் நல்லது செஞ்சாலும் தப்பு. அல்லது செஞ்சாலும் தப்பு! ஆச்சு வாழ்ந்தாச்சு! அம்பது வருஷமா காலத்தை ஓட்டியாச்சு! வீட்டிலே ஒரு சிரிப்பு வரணுமே! ஒரு கலகலப்பு வரணுமே! நீங்க குழந்தைகளாகச் சிரிச்சாத்தான் உண்டு! அதுவும் நீங்க பெரியவங்களாப் போனப்புறம் உங்களை உங்க அப்பா சிரிக்க விட்டாரா?... ஆச்சு! நீங்களும் போயாச்சு! இப்போ... நாங்க ரெண்டு பேரும் அந்த வீட்டிலே நடைப்பிணமா வாழறோம். நடைப்பிணம்! இதோ, இந்த மரக்கட்டைக்கும் எங்களுக்கும் வித்தியாசம் கிடையாது தெரிஞ்சுதா?

ஆசுவாசத்துடன் அவள் நிறுத்தினாள்.

— இந்தக் கதையெல்லாம் ஏம்மா சொல்லறே?

— சொல்றேன்! காதல் அஞ்சு வருஷத்துலே உற்பத்தியானாலும், சரி, அஞ்சு மாசத்திலே உற்பத்தியானாலும் சரி அம்பது நாள், அம்பதே நாள்லே கரைஞ்சு போயிடும்.

அழுத்தமாக ஒரு நிசப்தம் விழுந்தது. மாலதி அடிக்கடி அம்மாவைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

— நீ சொல்லிட்டே இல்லையா? என்று ஆரம்பித்தாள் மாலதி! நான் சொல்றதைக் கேட்டுக்க! ஏற்கனவே சொல்லியிருக்கேன்! நான் யாரையோ பஸ்ஸிலோ, பீச்சிலோ பார்த்து நொடியிலே லவ் பண்ணிட்டேன்னு நினைக்காதே! நாங்களும் நல்லாப் பழகினோம்... அவர் வித்தியாசமானவர். வாழ்க்கையில் அடிபட்டவர்! ஏற்கெனவே மணவாழ்க்கை வாழ்ந்தவர். என்னுடைய அருமை அவருக்குத் தெரியும்!

— பின்னே அவர் விவாகரத்து ஏன் கேட்கலை?

— அதான் சொல்றேனே! அந்த ஸ்டீல் ரோலிங் தொழிற்சாலை, அவர் மனைவி லதா பேரிலேதான் இருக்கு! வருமான வரி மாதிரி சீண்டறவங்களைத் தவிர்க்கத்தான் அதை அவள் பேரிலே போட்டார். இப்போ அதை அவகிட்டேருந்து வாங்கணுமே! கிராதகி ஆச்சே அவள்! கல்யாணம் பண்ணிட்ட நாளிலிருந்து ஒருநாள் அவருக்கு நிம்மதி கொடுக்கலை. அடங்காப் பிடாரி!

அம்மா பெருமூச்சு விட்டாள்.

— நீ அவளை நேரிலே பார்த்திருக்கியா, மாலதி!

— இல்லை, எனக்குப் பார்க்கவும் பிடிக்கலை! அவர் சொல்றது போதாதா?

அம்மாவின் கைகளை மாலதி வருடினாள் — நான், என்னமோ, குணமே இல்லதவரைக் காதலிச்சுட்டேன்னு நினைக்காதே! நானும் ஆறுமாசமா 'லவ்' பண்ணித்தான்....

— அப்புறந்தானே அவருக்கு மனைவி இருக்கிறது தெரிஞ்சது!.... என்று குத்திக் காட்டினாள் அம்மா.

— அதாம்மா! அந்தக் கொடூரக்காரி மட்டும் நல்லவளா இருந்தா அவர் என்னை லவ் பண்ணியே இருக்க மாட்டார் அம்மா... அதை நினைவிலே வச்சுக்கோ!

அம்மா பார்வை எங்கேயோ ஓடியிருந்தது. எழுந்தாள்.

— அவர் ரொம்ப நல்லவர் அம்மா! ரொம்ப ரொம்ப நல்லவர்!

அம்மா தன் பையைத் தூக்கினாள். — நேரம் ஆயிடுச்சு! நான் கிளம்பறேன். அவள் வார்த்தைகள் முடிந்து விட்டனபோல் தோன்றியது.

மாலதியும் எழுந்தாள். — இரு அம்மா! ஆபீஸ்லேர்ந்து இப்போதான் வந்தேன். உடம்பு முழுதும் ஒரே கசகசப்பு! குளிச்சுட்டு வரேன்! உன்னை பஸ் ஸ்டாண்டிலே கொண்டு விடறேன்.

— பரவாயில்லை மாலதி! நானே போயிடுவேன்.

— சொல்றதைக் கேளு அம்மா! இதோ ஒரு நொடியிலே வந்துட றேன்...

அம்மாவின் பதிலைக் கேட்கா மலே அவள் குளியலுக்கு ஓடி னாள்.

அம்மா அங்கும் இங்கும் உலா வினாள்.

ஒரு நிமிடம் ஓடியது.

ஃபோன் மணி அடித்தது. ரிசீவரை அம்மா எடுத்தாள்.

— மாலதி என்றது குரல்.

— யாரு? என்று அம்மா கேட்க விரும்பினாள். ஆனால் — யாரோடு அவளது குரல் நின்றது.

ஃபோன் குரல் அரை விநாடி நிற்கவில்லை. பரபரப்புடன் பேசி யது. ஆண் குரல்.

— கேட்டுக்க மாலதி! பதிலே பேசாதே! ஒரே ஒரு நிமிடந்தான் அவகாசம் இருக்கு. உன்கிட்டே நான் அவசரமா சொல்ல வேண் டியிருக்கு. அவள் செத்துப் போயிட்டா! என் மனைவி லதா! நேத்து ராத்திரி! ஒரு முக்கிய



விஷயம் மாலதி! நாம்ப சந்திச்சுப் பேசறோம்! சிநேகமா இருக்கிறோம் என்ற சங்கதி போலீசுக்குப் போயிருக்கு! அவங்க உன்னைத் தேடி எந்த நிமிஷமும் வருவாங்க! அப்போ நீ என்ன சொல்லணும் தெரியுமா? நேத்து ராத்திரி, உன்னோடு தான் நான் உன் ஃபிளாட்டிலே இருந்தேன். ராத்திரி முழுதும் உன்னோடுதான் பொழுதைக் கழிச்சேன்னு சொல்லணும்! தெரிஞ்சுதா, மாலதி!

அம்மாவுக்கு ஒரு ஹீனமான 'ஊனம்' வந்தது.

— இந்தா மாலதி! கலவரப் படாதே! தைரியம் அவசியம்! நான் சொன்னபடியே சொல்லு. பயப்படாதே! இதிலே கோட்டை விட்டே, நான் தூக்கிலே தொங்க வேண்டியதுதான்! கேட்டுக்கிட்டியா, போலீஸ் வந்தா, என்ன சொல்லணும்? நான் உன்னோடு உன் ஃப்ளாட்டிலே தான் நேத்து ராத்திரி இருந்தேன். புரிஞ்சுதா?

—ம்...

— இதுக்கு மேலே பேச வழியில்லை! நேரமில்லை! வச்சுடறேன்.

பட்டென்று மௌனமாகியது.

அம்மாவுக்குப் படபடப்பு அடங்கவில்லை. உயர் ரத்த அழுத்தம்.

பையைத் திறந்து ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டு, சமையலறை போய் ஒரு டம்ளர் தண்ணீர் எடுத்து அருந்தினாள்.

அவள் ஹாலுள் வந்ததும், மாலதி குளியல் கதவைத் திறந்து உள்ளே வந்தாள். மேலெல்லாம் ஈரம்!

— என்னம்மா! ஒரு மாதிரியா யிருக்கே!

— ஒண்ணுமில்லை! நீ உடனே டிரஸ் பண்ணிக்க!

அடுத்த அறையுள் மாலதி நுழைய அம்மா அவள் அருகே ஒரு நாற்காலியில் அமர்ந்தாள்.

— அம்மா! என்னம்மா!

மாலதி திடுக்கிட்டுக் கேட்டாள்.

— ஒண்ணுமில்லை! நீ பாத்ரூமிலே இருந்தப்போ ஃபோன் வந்திச்சு!

— யார் பேசினாங்க?

— பிரதாப் தான்?

பவுடரை டப்பென்று வைத்து, — என்ன சொன்னார் அம்மா? என்று படபடத்தாள் மாலதி.

— ... வந்து ... அவர் மனைவி இறந்துட்டாளாம்! நேத்து ராத்திரி!

— என்ன?

— ஆமாம் மாலதி! அவர் மனைவி செத்துட்டாளாம்! நீயும் அவரும் சிநேகம் என்கிறது போலீசுக்கு இப்போ தெரிய வந்திருக்காம்... போலீஸ் வந்து உன்னை விசாரிப்பாங்களாம்... நீ அவங்க கிட்டே...

வாக்கியம் அறுந்தது. அம்மா மெதுவாக விம்மினாள். மாலதி அவள் கையைப் பற்றிக் கொண்டாள்.

— சொல்லு அம்மா! என்ன சொன்னார்?

— ஐயோ! உன்னை இப்படி போலீசிலே இழுத்து...

மேலும் விம்மினாள் அவள்.

— அம்மா! பொறுமை இழக்க வைக்காதே! என்ன சொன்னார்? சொல்லு!

அம்மாவின் கைகளை இறுகப் பற்றினாள்.

— என்ன சொன்னார் அம்மா! சொல்லும்மா!

அம்மாவின் குலுங்கல் நின்றது! அவள் தன்னைத் திடப்படுத்துவது தெரிந்தது!

அவள் முகம் தீவிரமாக, மேலே பேசினாள்.

— போலீஸ் வந்து கேட்டா அவர் உன்னை இப்படிப் பதில் சொல்லச் சொன்னார்.

— எப்படி?

— நேத்து ராத்திரி அவர் உன் ஃப்ளாட்டுக்கு வரவும் இல்லை! உன்னோடு தங்கவும் இல்லை! இதைத் தான் சொல்லச் சொன்னார். தெரிஞ்சுதா?

மாலதி தலையை ஆட்டினாள்.

— மறந்துடாதே! மாலதி.

— இல்லை.

அப்போது ஃப்ளாட்டுக்கு வெளியே வராந்தாவில் கனத்த பூட்ஸ்கள் கேட்டன.

காக்கிச்சீருடையில் இருந்த ஒரு பருமனான கை நீண்டு சுவரில் இருந்த அழைப்பு மணியை அழுத்தியது.

டிங் டாங், டிங் டாங்.

உள்ளே அதன் ஓசை பலமாகக் கேட்டது.

மூன்றறிவு

மகா. சோமாஸ்கந்தமூர்த்தி

"நூல்களின் வழியினில் நுட்பங்கள் அறிந்ததே
நுழைபுலம் என்ப தாகும்;
நுண்ணிய கருத்தினை நூதன மாக்கிட
நுகர்ந்தது படிப்ப றிவாகும்!

கோள்களின் மாற்றமோ குறையறு செயலுமோ
கோடிடும் சிந்தை யாகும்;
குன்றாத நிலைக்கும் குறிக்கோளின் வலிமைக்கும்
குறிப்பது பட்ட றிவாகும்!

பாழ்மனப் போக்கினைப் பக்குவம் செய்திட
பணிவுமே தேவை யாகும்;
பார்த்ததை உணர்ந்ததை படித்ததைத் தேர்ந்திட
பண்பறிவே வலமு மாகும்;

வாழ்வினில் உயர்ந்திட வளமைகள் நினைத்திட
வடிவான மூன் றறிவாம்;
வழங்கிய முன்னோரின் வழிகளைப் போற்றிநாம்
வணங்குதல் நலமு மாமே!

டென்னிஸ் பரம்பரை

'குண்டுமணி'



தியாகராய நகர் லேடீஸ் கிளப் டென்னிஸ் மைதானம். ஓர் அதிசயிக்கத்தக்கக் காட்சி. மைதானத்தில் ஒரு பக்கம் நகைச்சுவை மன்னர் என்.எஸ். கிருஷ்ணனும் டீ.ஏ. மதுரமும் டென்னிஸ் மட்டைகளுடன் நின்றிருக்க, எதிர்ப்புறம் ராமநாதனும் அவரது புதல்வர் கிருஷ்ணனும் ஆடுகிறார்கள். இளைஞன் கிருஷ்ணன் அற்புதமாக 'ஷாட்' அடித்தால் அன்று அவனுக்கு 'அல்வா'க் கடையில் நிச்சயம் ஸ்வீட் கிடைக்கும். தியாகராய நகர் ராமகிருஷ்ணா மிஷன் பள்ளியில் பயின்று லயோலா கல்லூரியில் சேர்ந்ததும் பெட்ராம் பந்தயத்தில் முதல் வெற்றியைச் சம்பாதித்தான் இளைஞன் கிருஷ்ணன். தந்தை ராமநாதன் தம் இளவல் கிருஷ்ணனிடம் டென்னிஸ் வளர்ச்சிக்காகத் தம் பதவி உயர்வுகளையெல்லாம் தியாகம் செய்தார்! அவரது பொன்னான ஆசையை விம்பிள்டன் ஜூனியர் பந்தயத்தில வெற்றிபெற்று நிறைவேற்றினார் கிருஷ்ணன் 1954ஆம் வருஷம்! அதன் பிறகு கிருஷ்ணனின் டென்னிஸ் வாழ்க்கையில் பல அரிய வெற்றிகள் கிடைத்தன.

டென்னிஸ் கிருஷ்ணன் 'ஸ்போர்ட்ஸ்மன்ஷிப்புக்கும் பண்பாட்டுக்கும் பிரசித்தமானவர். சென்னையில் மெக்ஸிகோவைச் சேர்ந்த ஓசனாவுக்கும் டென்னிஸ் சாம்பியன் கிருஷ்ணனுக்கும் டேவிஸ் கோப்பைப் பந்தயம் நடந்து கொண்டிருந்தது! ஆட்டத்தில் கிருஷ்ணனின் பக்கம் வெற்றி திரும்பும் சமயம் ஆட்டத்தில் நடுவர் கிருஷ்ணனுக்கு எதிராக ஒரு தவறான தீர்ப்பை வழங்கிவிட்டார். டென்னிஸ் ரஸிகர்கள் ஹூங்காரம் செய்தனர். கிருஷ்ணன் பதற்றப்படாமல் மறுபடியும் ஆடுவதற்குப் பண்பாட்டோடு இணங்கியதைக் கண்டு டென்னிஸ் ரஸிகர்கள் பிரமித்தனர். கிருஷ்ணனின் அன்றைய மைதானப் பண்பாட்டை இன்னும் சொல்லிச் சொல்லி மகிழ்கிறார்கள். அன்று ஓசுனாவுடன் கிருஷ்ணன் பந்தயத்தில் தோற்றுப் போனாலும் பண்பாட்டில் வென்றது மிக அதிசயம்!

1960-61ஆம் ஆண்டில் 'டென்னிஸில் மெக்கா' என்று கருதப்படும் விம்பிள்டனில் கிருஷ்ணன் செமி ஃபைனல் வரை போராடியது ஓர் அரிய ரிகார்டு. இந்தியர் யாரும் சாதித்திராத சாதனை என்று எல்லோரும் குறிப்பிடுகிறார்கள். மேலும் 1966ஆம் ஆண்டு டென்னிஸ் மேதை கிருஷ்ணன் டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் சாலன்சு போட்டிக்கு எடுத்துச் சென்ற பெருமையைப் பெற்றார். கிருஷ்ணன் பிரேஸில் நாட்டு டென்னிஸ் மன்னர் தாமஸ் கோச்சை (Thomas Koch) ஐந்து செட்களில் வென்றது இமாலய சாதனை. கடைசியில் இந்தியா ஆஸ்திரேலியாக் குழுவுடன் தோற்றுப் போனாலும் இந்திய டென்னிஸ் ஆட்டக்காரர்களின் போராட்டம் என்றும் நினைவில் இருக்கும்படி செய்ததில் கிருஷ்ணனின் பங்கு அதிகம்.

சென்னை ஜிம்கானா கிளப் மைதானத்தில் லால், விஜய், ஆனந்த், முகர்ஜி டென்னிஸ் குழுவினர் காப்டன் கிருஷ்ணன் ஆரோகணித்து முன் செல்லப் பின் தொடர்கிறார்கள்.

"கிருஷ்ணன்! நீங்கள் டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் ஆடப் போவதில்லையா? நீங்கள் முன்பு ஒசுனாவோடு ஆடிய அற்புத ஆட்டம் கண்முன் நிற்கிறது."


"ஓ, ரொம்ப நன்றி. என்னுடைய டென்னிஸ் சகாப்தம் முடிந்து விட்டது! இனி இளைஞர்களின் காலம்!" என்று கூறிவிட்டு, விஜய், ஆனந்திடம், "என்ன? இன்று ஞாயிற்றுக்கிழமை ஆயிற்றே! சர்ச்சுக்குச் சென்று வெற்றிக்குப் பிரார்த்தனை செலுத்திவிட்டு வந்தீர்களா?" என்று வினவுகிறார்.

விஜயும் ஆனந்தும் மலர்ந்த முகத்துடன் தலையசைக்கிறார்கள். கிருஷ்ணன் தம் சகாப்தம் முடிந்து விட்டதாகக் கூறிவிட்டாலும், தம் பரம்பரையில் ஓர் அரிய டென்னிஸ் குருத்தை வளர்த்துத் தந்துவிட்டார்! டென்னிஸில் ரமேஷ் கிருஷ்ணனும், தம் தந்தையைப் போலவே 1979ஆம் ஆண்டில் விம்பிள்டன் ஜூனியர் சாம்பியன் விருதைச் சூடினார்! 1981ஆம் ஆண்டு அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில் டென்னிஸ் ஹீரோ மெக்கன்ரோவிடம் தோற்றுப் போனாலும் அவரது ஆட்டம் மெருகேறியது. 1986ஆம் ஆண்டு விம்பிள்டனில் ரமேஷ் கிருஷ்ணன் குவார்ட்டர் ஃபைனல் வரை வந்து ஆடியது சிறப்பான அம்சம். 1987ஆம் ஆண்டு ரமேஷின் ஸ்வீடன் நாட்டுக்கெதிரான டேவிஸ் போட்டிப் பந்தயம் அவரது பெருமையைக் கூட்டியது. செமி ஃபைனல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவில் வாளமகூரைத் தோல்வியுற வைத்தது மிகப் பெரிய சாதனை.

ரமேஷ் கிருஷ்ணன் எந்தவித 'Controversy'யிலும் மாட்டிக் கொள்ளாது பதினைந்து வருஷங்களில் சர்வதேச டென்னிஸ் அரங்கில் முன்னேறி வருகிறார்! பரம்பரைச் சொத்தான டென்னிஸைத் தாத்தா ராமநாதன், தந்தை கிருஷ்ணன் ரத்தத்தோடு பெற்றிருப்பதால் அவரது சாதனைகள் பெருகி வளர்கின்றன.

ரமேஷ் கிருஷ்ணனின் சகோதரி லக்ஷ்மியும் டென்னிஸ் ஆட்டத்தில் பல வெற்றிகளைக் குவித்திருக்கிறார்

கிருஷ்ணன் குடும்பத்தில் சகோதரி லக்ஷ்மியும் புதல்வி கௌரியும் குடும்பத்துக்குப் பெருமை சேர்த்தவர்கள்.




டென்னிஸ் கிருஷ்ணன்
ரமேஷ் கிருஷ்ணன்

வண்ணப்படம் – உத்ரா •329

மராட்டிய மாநிலத்தில்

கோடைக் குன்றுகள்



* மாத்தேரானிலுள்ள ஒரு மரப் பாயிண்ட்


'பெரிய பிரதேசம்' என்ற பொருள் கொண்ட 'மகா'ராஷ்டிரா மலைக் குன்றுகளால் சூழ்ந்த பூமி. மாவீரன் சிவாஜியின் வெற்றிகளுக்கெல்லாம் பாதை அமைத்துக் கொடுத்ததும், அக்குன்றுகள். அவைகள் ஊட்டிபோல் கொடைக்கானல் போல் சில சிறந்த கோடைவாசஸ்தலங்களாகவும் திகழ்கின்றன. அவற்றுள் சில பம்பாயின் பக்கத்திலே இருப்பதனால், எளிதில் அடையக்கூடிய வசதிகளைப் பெற்றுள்ளன.

மனம் கவர் மாத்தேரான்

பம்பாயின் மிக அருகிலேயே 104 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது, 'மாத்தேரான்'. கடல் மட்டத்திலிருந்து 803 மீட்டர் உயரத்திலுள்ள அது, 1880 ஆம் ஆண்டு அன்றைய கலெக்டராகப் பணியாற்றிய எம்.பி. மல்லட் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டதாம். அவர் அன்று கொடுத்த 'மாத்தேரான்' பெயரே நிலைத்துவிட்டது. 'மாத்தே' என்றால் நெற்றி; 'கான்' என்றால் காடு. காட்டை நோக்கி நெற்றி போல் சமவெளியாக அது இருந்ததால், இரண்டு சொற்றொடர்களும் சேர்ந்து, மருவி 'மாத்தேரான்' ஆகியதாம். அங்கு சந்தடியில்லாமல் உலாவுவதற்கேற்ற பல பாதைகளும், பசுமை போர்த்திய பல முனைகளும் காணப்படுகின்றன.

பம்பாய் சிடியிலிருந்து, மத்திய ரயில்வேயிலிருக்கும் 'நேரல்' ரயிலடியை அடைய இரண்டு மணி நேரமாகும். அங்கிருந்து 1.30 மணி நேர பொம்மை ரயில் பயணத்தில் (21 கிலோ மீட்டர்) மாத்தேரானைச் சேரலாம். அங்கு செல்ல டாக்ஸி

செம்பூரான்



* மலைப்பாதையில் ஓடிச்செல்லும் ஓர் இளவட்டம்

களும் நேரல் ஸ்டேஷனில் கிடைக்கின்றன. சுற்றிச் சுற்றி மேல் நோக்கிச் செல்லும் 11 கிலோ மீட்டர் மலைப் பாதையில் இள வட்டங்களும் - ஏன் 'குடுகுடு' கிழவர்களும்கூட உற்சாகத்தோடு நடந்து போவதைப் பார்த்தால், நாமும் டாக்ஸியிலிருந்து இறங்கி விடலாமா என்று தோன்றும்.

'மாத்தேரான்' ஏழு சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளது. அதனுள்ளே கார்கள் செல்ல அனுமதியில்லை. அதற்குப் பதிலாக ரிக்ஷாக்களும் குதிரைகளும் பயன்படுத்தப்படுகின்றன. அங்குள்ள 33 முனைகளில் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம். சிறிய 'சார்லேட்' ஏரி மிகவும் அழகு வாய்ந்தது. மாத்தேரானுக்குக் குடிநீர் அங்கிருந்துதான் கிடைக்கிறது. 'பேமாஸ்டர் பூங்கா' உலாவி மகிழ்வதற்கு உகந்தது. பாறைகள் சூழ்ந்துள்ள ஒரு மரக் குன்று முனை (ONE TREE POINT)யில் ஒரே ஒரு மரம் மட்டும் இருப்பது சிறப்பு அம்சம். 'எக்கோ' பாயிண்டில் எதிரொலி கேட்டு மகிழலாம். சூரிய அஸ்தமனத்தின் எழிலைக் காண 'ஸன் ஸெட்' பாயிண்டில் அந்தி மயங்கும் நேரத்தில் மக்கள் கூடுகின்றனர்.

மாத்தேரானில் அக்டோபரிலிருந்து மே மாதம் வரை நல்ல தொரு சீசனாகக் கருதப்படுகிறது. மே மாதத்தில் விளையாட்டுகளும், குதிரைப் போட்டிகளும், 'பாண்ட்' வாத்திய இசையும் நடைபெறுகின்றன. மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்தாலும் 'குஜராத்தி' மொழி அங்கு பரவலாகப் பேசப்படுகிறது. அங்குள்ள சந்தைகளில் பழங்குடி மக்களால் தயாரிக்கப்பட்ட தோல், மூங்கில் பொருட்களையும் வாங்கி வரலாம்.

மனத்திற்கினிய மகாபலேச்வர்

ஒரு காலத்தில் பம்பாய்ப் பிரஸிடென்ஸியின் கோடைகாலத் தலைநகராக விளங்கிய மகாபலேச்வர் புனேயிலிருந்து 120 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது; 1372 மீட்டர்கள் உயரமுள்ளது. அங்குள்ள 'ஆர்தர் சீட்' முனையிலிருந்து அடர்ந்த காடுடைய 'ஜோர்' பள்ளத்தாக்கின் காட்சி அழகிற்கு அழகு சேர்ப்பது. வழியிலுள்ள 'டைகர்,' நீர் ஊற்றில் புலிகள் நீர் அருந்த வருவதுண்டாம். எல்பின்ஸ்டன் முனையிலிருந்து சிவாஜி கட்டிய 'பிரதாப்கட்' கோட்டையையும், அதைச் சுற்றியுள்ள இயற்கை எழிலையும் பார்த்து மகிழலாம். அக்கோட்டையில்தான் சிவாஜி அப்ஸல்கானைத் தனது புலிநகங்களால் நெருக்கிக் கொன்றார். அவரது வெற்றியை நினைவுறுத்து முகமாகக் குதிரை மீது வீற்றிருக்கும் சிவாஜி சிலை அங்கு எழுப்பப்பட்டுள்ளது.

பிரதாப்கட்டில் புராதனக் கோயில்களும் காணப்படுகின்றன. அவற்றுள் 'பஞ்ச கங்கா' ஆலயம் பிரசித்தி பெற்றது. கிருஷ்ணா, கொய்னா, வென்னா, சாவித்திரி, காயத்திரி ஆகிய 5 நதிகள் அங்கே உற்பத்தி ஆவதால் அப்பெயர் பெற்றது. புதுமணத் தம்பதிகளும் காதலர்களும் சொர்க்கமாகக் கருதுவது 'வென்னா' ஏரி. அங்கு மனநிறைவோடு படகுச் சவாரியும் செய்யலாம். 'பம்பாய் பாயிண்டி' லிருந்து 'பம்பாய்' தெரியும் என்று நினைத்தால் ஏமாறுவீர்கள்! அது பம்பாய்க்குப் போகும் சாலையில் உள்ளது. அவ்வளவுதான். சைனாமான் நீர்வீழ்ச்சியில் ஒரு காலத்தில் சீனதேசத்துக் குற்றவாளிகள் பணிபுரிந்தனராம்.


மகாபலேச்வரிலிருந்து 19 மீட்டர்கள் தொலைவிலுள்ளது 'பஞ்ச்கனி'. 5 அழகிய குன்றுகளால் சூழப்பட்டது. பயிர்கள் வளமாகச் செழித்தோங்கும் பூமியினிடையே குக்கிராமங்கள் சிதறிக் கிடக்கும் அற்புதக் காட்சி உள்ளத்தைக் கவரும். மற்ற கோடை வாசஸ்



* 'சன்செட்' பாயிண்ட் - மகா பலேச்வர்



* அழகிய "வென்னா" ஏரியில் படகு சவாரி செய்யும் ஒரு தமிழ்க் குடும்பம்



* பஞ்சகனி

தலங்கள் போலல்லாமல் வருடந் தோறும் நல்ல சீதோஷ்ண நிலையையும் அது பெற்றிருக்கிறது. அதனால் பல பள்ளிகளும், அழகிய விடுதிகளும், தனியார் பங்களாக்களும் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட மாளிகைகளும் அதிகமாக உள்ளன. பம்பாயிலுள்ள பல செல்வந்தர்களின் குழந்தைகள் அங்குள்ள பள்ளிகளில் படிக்கின்றனர். தொல்பொருட்களும், சிறுதொழில் முறையில் தயாரிக்கப்பட்ட ஜாம், ஜல்லி, பழக் கூழ்களும், பழங்குடி மக்கள் அணியும் ஆபரணங்களும் அங்கு விற்கப்படுகின்றன.



* 'பிரதாப்கட்'டில் உள்ள சிவாஜி சிலை

லோனாவாலா, கண்டாலா

சென்னையிலிருந்து பம்பாய்க்கு ரயிலில் வருகிறவர்கள், புனே ஸ்டேஷனிலிருந்து காசட் வரைக்கும் உள்ள மலைப்பாதையில் பயணம் செய்யும்போது கிடைக்கின்ற இனிய அனுபவத்தை ஒருநாளும் மறக்க மாட்டார்கள். அப்பாதையில் பம்பாயிலிருந்து ஏறக்குறைய மூன்று மணி நேரப் பயணத்தில் லோனாவாலாவை அடைந்து விடலாம். அது கடல் மட்டத்திலிருந்து 596 மீட்டர் உயரத்திலுள்ளது. அங்கிருந்து வால்வன், புஷ்ஷி அணைக்கட்டுகளுக்கும் சென்று வரலாம். 'கண்டாலா' லோனாவாலாவிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. அங்குள்ள ராஜ்மாச்சி பாயிண்டிலிருந்து சிவாஜி கட்டிய கோட்டைகளிலொன்றின் அருமையான காட்சி தெரியும். முகத்திற்கு அழகு சேர்க்கும் மூக்கைப் போல எழில் சேர்க்கத் தவறாதது, அங்குள்ள 'டியூக் நோஸ்' முனை. கோடை காலத்தில் மட்டுமல்லாமல், மழைக் காலத்திலும் மக்கள் விரும்பி ரசிக்கும் இடம் லோனாவாலா. தவழ்ந்து செல்லும் மேகங்கள், அள்ளிச் சொரியும் நீர்வீழ்ச்சிகள் போன்று இயற்கை எழிலாகக் காட்சியளிக்கும் விந்தையைப் பார்க்கலாம். லோனாவாலா – கண்டாலாவிற்குப் புகழ் சேர்ப்பவை அங்குள்ள கர்லா, பாஜா, பெட்ஸா குகைகள் தாம். நமது சிற்பக் கலையின் மாண்பை விளக்கும் புத்தமதத்தைச் சார்ந்த அற்புதப் படைப்புகளை அங்கு காணலாம்.

பம்பாய் நகரை மட்டும் பார்த்து வரும் சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத்தை ஓரிரு நாட்கள் நீடித்து, அருகிலுள்ள மாத்தேரான், லோனாவாலா, காண்டாலாவோடு மகாபலேச்வருக்கும் சென்று வந்தால் அவர்களின் நோக்கம் முழு அளவில் நிறைவேறிய ஆனந்தத்தை அடைவார்கள். ಌ

திருத்தலப் பயணம்

திருக்கோட்டியூர்

குன்றக்குடி பெரிய பெருமாள்



★ ராமானுஜர்

மாயோன் என்னும் மணிவண்ணன், மணி வண்ணன் என்னும் திருமால், திருமால் என்னும் மாதவன், மாதவன் என்னும் கண்ணன், கண்ணன் என்னும் காக்கும் கடவுள் மண்ணகத்தே இற(ர)ங்கி வந்து, உயிர்க் குலத்திற்கு உயர்வளிக்கவென்றே திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ளான். ஞானச் செல்வர்களான ஆழ்வார் பெருமக்கள் பன்னிருவர். பெருமானின் எழுந்தருள் திருத்தலங்களைத் தேனினும் இனிய தமது தெய்வத் திருப்பாடல்களால் போற்றி வழிபட்டுள்ளனர். ஆழ்வார் பெருமக்களின் திருப்பாசு ரங்கள் பெற்ற திருத்தலங்கள் 'மங்களா சாசனம்' செய்யப் பெற்றதாகக் கருதப்பெறுகின்றன. மங்களா சாசனம் பெற்ற திருக்கோயில்கள் 'திவ்வியதேசங்கள்' என அழைக்கப் பெறுகின்றன.

அமுதத் தமிழ்ச் சுவையும், ஆன்மீகப் பெரும் பயனும் அளிக்கக் கூடிய ஆழ்வார்களின் தெய்வத் திருப்பாசுரங்கள் பெற்ற திவ்விய தேசங்கள் நூற்றெட்டு. அவைகளில் பதினெட்டுத் திருப்பதிகள் - சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டில் உள்ளன. 'ஈரொன்பதாம் பாண்டி' என இதனைக் குறிப்பிடுகின்றனர். தண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டி நாட்டில் உள்ள பதினெட்டுத் திருப்பதிகளில் - பேயாழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், திரு மழிசை ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய ஐம் பெரும் ஞானச் செல்வர்களின் அமுதப் பாசரங் களைப் பெற்ற பெருமைக்குரியது திருக்கோட்டியூர் திருப்பதி.

'திருக்கோட்டியூர்' என எண்ணியதுமே, உடையவர் இராமானுஜரின் உள்ளத்துள் ஒளி வீசிய பெருங் கருணை, நம் மனத்தகத்தே திருக்காட்சியாய் விரி கிறது! தெய்வக் காட்சியாய்த் தெரிகிறது!


திருக்கோட்டியூர் நம்பிகளிடம், திருவரங்கத்தி லிருந்து அயராது, தளராது, பதினெட்டு முறை நடையாய் நடந்து, 'பெரிய திருமந்திரம்' எனச் சிறப்பித்துக் கருதப்பெறும் அஷ்டாட்சரத்தின் அரிய உட்பொருளை உபதேசமாகப் பெற்றார் உடையவர் இராமானுஜர். பெறுதற்கரிய திருமந்திரச் செல்வத்தைப் பெற்றுக் கொண்ட இராமானுஜர், தாம் பெற்ற பேற்றினை, மக்கள் ' அனைவரும் பெற்றுய்ய வேண்டுமெனப் பெருங்கருணை கொண்டார். திருக்கோயிலின் அஷ்டாங்க விமானத்தை நோக்கி ஓடிச் சென்றார். அதன் தெற்குத் திருமதில் மீது ஏறி நின்றார். இன் வேற்றுமையின்றி ஊர் மக்கள் அனைவரையும், "ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்?" என உரக்கக் கூவி அழைத்தார். மக்கள் கூடி விட்டனர். உபதேச மந்திரத்தை ஊர் மக்கள் அறியுமாறு உரைத்து மகிழ்ந்தார் இராமானுஜர். கூடி நின்ற மக்கள் குதூகலித்தனர். உடையவரின் பெருங்கருணை இயல்பறிந்து உள்ளம் நெகிழ்ந்தனர்.

உபதேச மந்திரத்தை, அதன் உட்பொருளை இராமானுஜருக்கு அருளிய குருதேவர் திருக்கோட்டியூர் நம்பி, உடையவரின் செயல் அறிந்து 'குருத் துரோகம்' என்றெண்ணிக் கோபம் மிகக் கொண்டார்.

இராமானுஜரை அழைத்துவரச் செய்து, "உபதேசிக்கும்போதே இதனை ஒருவருக்கும் சொல்லாதே கொள்ளும் என்றல்லவா சொன்னேன்? தெருவிலே கூடி நின்றோருக்குக் கூறுகின்ற மந்திரமா திருவெட்டெழுத்து? என்ன காரியம் செய்து விட்டீர்?" ஆச்சாரி




பாரம்பரிய வண்ணச் சித்திரங்கள்



ஏகாதசிக் கொட்டகை

யனின் சொல்லை அவமதித்து விட்டீரே? ஐயோ! உமக்கு நரகமல்லவா சித்திக்கும்?" எனச் சினம் கொண்டு செப்பினார் திருக்கோட்டியூர் நம்பி.

உடையவர் இராமானுஜர் திருக்கோட்டியூர் நம்பிக்கு எதிரே, இரு கரம் கூப்பி அமைதியாகப் புன்னகைத்தார். "சுவாமி! ஆச்சாரியரின் அறவுரையை மீறிய அடியேன் ஒருவன்தானே நரகம் செல்வேன்! உபதேச மந்திரத்தை அறிந்த ஊர் மக்கள் அனைவருமே பரமபதப் பயனை அடைவார்களே? அடியேன் ஒருவன் தாழ்வு பெறுவதால், பலர் பெருவாழ்வுப் பயனைத் துய்ப்பார்களே!" என்றார் இராமானுஜர், கனிவோடு.



★ தெப்பக்குளம்


திருக்கோட்டியூர் நம்பியை உடையவரின் உள்ளார்ந்த கருணைச் சொற்கள் திகைப்படையச் செய்தன! பெருங்கருணைத் திருவுருவாய் இராமானுஜர் நம்பிக்குத் தோற்றமளித்தார்! "அடடா! எனக்கு இந்தப் பரந்த நோக்கம் பிறக்கவில்லையே? இராமானுஜரே! நீரே எம்பெருமான்! எம்பெருமானின் பெருங்கருணைப் பேரருள் உம்மிடமே நிறைந்துள்ளது!" என உடையவரை அரவணைத்துக் கண்ணீர் உகுத்தார் திருக்கோட்டியூர் நம்பி.

உயர்வு தாழ்வின்றி, மக்களாய்ப் பிறந்த அனைவருமே உபதேச மந்திரத்தை அறிந்து, உயர்நிலை கொள்வதற்குத் தகுதியானவர்களே என்பதை - இன்று நேற்றல்ல - எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் எடுத்



★ திருவண்ணன் சந்நிதி

தியம்பிய ஒரு புரட்சி மனத்தின் புனித மலர்ச்சிக்குக் களமாக அமைந்த திருத்தலம் திருக்கோட்டியூர்! உடையவர் இராமானுஜர் 'எம்பெருமானார்' என இறைப் பெரும்பதம் அடைந்த திருப்பதி! 'குற்றமின்றி, குணம் பெருக்கி, குருக்களுக்கு அனுகூலராய், செற்றம் ஒன்றுமில்லா வண் கையினார் வாழ் திருக்கோட்டியூர்' எனப் போற்றி உரைக்கும் பட்டர் பிரான் பெரியாழ்வார், திருக்கோட்டியூரில் எழுந்தருளியுள்ள தூமணி வண்ணனாம் மாதவனைத் தொழாதார், பெற்ற தாயர் வயிற்றினைப் பெருநோய் செய்வான் பிறந்தார்களே என அச்சுறுத்தவும் செய்கிறார்.



* அஷ்டாங்க விமானத்தின் தென்பகுதி



* பரம்பரை அறங்காவலர்
ராஜகுமாரி
ராஜலட்சுமி ரகுராஜ்

"குற்றமின்றிக் குணம் பெருக்கிக்
குருக்களுக்கனு கூலராய்
செற்றமொன்று மிலாதவண் கையி
னார்கள்வாழ் திருக்கோட்டியூர்
துற்றியேழுல குண்டதூமணி
வண்ணன் தன்னைத் தொழாதவர்
பெற்ற தாயர் வயிற்றினைப் பெரு
நோய் செய்வான் பிறந்தார்களே!"

பட்டர்பிரான் பெரியாழ்வாரின் இத் திருப்பாசுரத்தைப் படித்த பின்னும், நாம் திருக்கோட்டியூர் செல்லாமலும், அங்கே எழுந்தருளியுள்ள பெருமானை வணங்காமலும் இருக்க இயலுமா?

பெற்ற தாய் வயிற்றினைப் பெருநோய் செய்யப் பிறந்தவர்களா, நாம்?

இதோ... திருக்கோட்டியூரை நோக்கிப் புறப்பட்டு விட்டோம்!

திருக்கோயில் அமைப்பு

'தெண்பாண்டித் திருப்புத்தூர்' எனக் குறிப்பிடப் பெறுகின்ற பசும்பொன் தேவர் மாவட்டத் திருப்புத்தூரிலிருந்து, சிவகங்கை செல்லும் நெடுஞ் சாலையில் ஆறு கல் தொலைவில் உள்ளது திருக்கோட்டியூர்.

'வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்', 'செந்நெலார் வயல் சூழ் திருக்கோட்டியூர்', 'செங்கண்மால் திருக்கோட்டியூர்' என்றெல்லாம் ஆழ்வாரின் திருவாக்கால் போற்றிப் புகழப் பெற்ற திருத்தலத்தில், பேருந்தைவிட்டு இறங்கியதுமே, திருக்கோயிலின் பிரம்மாண்டமான திருமதில், நெடுஞ்சாலையை ஒட்டி நிமிர்ந்து நிற்பதைப் பார்க்க முடிகிறது. விண்ணை நோக்கிய திருக்கோயிலின் இராஜகோபுரமும், அஷ்டாங்க விமானமும் நம் கண்களுக்குத் தெய்வத் திருக்காட்சியாய்த் தோற்றம் தருகின்றன.


திருக்கு-ஒட்டி-ஊர் எனப் பிரித்து, பிறவியில் செய்த பாவங்களை நீக்கும் பெருமான் கோயில் கொண்டுள்ள திருத்தலம் என்றும், கோட்டம் என்றால் கோயில், திரு-கோட்டம்-ஊர், திருக்கோட்டியூர் ஆனது என்றும், கோஷ்டி என்றால் வித்துவான்கள் கூட்டமாகக் குழுமியிருக்கின்ற ஊர் என்பதால் திருக்கோஷ்டியூர் என்றெல்லாம் திருத்தலத்தின் திருப்பெயருக்கு விளக்கங்கள் சொல்லப் பெறுகின்றன. திருமால், நான்முகன், உருத்திரன், இந்திரன் முதலியவர்கள் கோஷ்டியாகக் கூடி, இரணியனை வதம் செய்ய ஆராய்ந்த இடமாகையால் திருக்கோஷ்டியூர் எனப் பெயர் பெற்றதாகப் புராண விளக்கமும் கூறப் பெறுகிறது.

திருக்கோயிலின் தலைவாசலில் பெருமிதத்துடன் ஓங்கி நிற்கும் இராஜகோபுரம் 85 அடி உயரமுள்ளது. அண்ணாந்து பார்த்து ஆச்சரியமடைகின்றோம். இராஜகோபுரத்தின் அடிவாரம் கிழமேல் 40 அடி, தென்வடல் 50 அடி திருவாசல் 10 அடி! இராஜகோபுரத்துத் திருவாசல் வழியே திருக்கோயிலுக்குள் சென்றவுடன், பிரம்மாண்டமான ஏகாதசிக் கொட்டகை நம்மைப் பிரமிக்க வைக்கிறது! கொட்டகைக்குத் தென்புறம் திருக்கோட்டியூர் நம்பிக்கும், உடையவர் எம்பெருமானார் இராமானுஜருக்கும் தனித்தனிச் சந்நிதிகள் உள்ளன. வரலாற்றில் வான்புகழ் கொண்ட வாலறிவினர் இருவரையும் சேவித்துக் கொள்கிறோம். பெருமானை வழிபடுவதற்கு முன்னதாகவே பெருமானின் பழ அடியார்களை வணங்குவது நமது சமயச் சம்பிரதாயம் காட்டும் சரியான முறைமை அல்லவா?

கொடிக்கம்பத்தையும், பலி பீடத்தையும் கடந்தவுடன் நமக்கொரு பேராச்சரியம் காத்திருக்கிறது! ஆமாம், நந்தி நம் கண்ணில் படுகிறது! நந்தி மட்டுமா? எதிரே உள்ள கர்ப்பக்கிரகத்தில் அருள்தரும் சரபேசர் சுயம்புலிங்க மூர்த்தியாய்க் காட்சி தருகிறார். உளி படாத திருமேனி! தாமே முளைத்து எழுந்தருளியவர்! சரபேசர் கர்ப்பக் கிரகம், பிள்ளையார், சுப்பிரமணியர், சனகாதி நால்வர் கொண்ட அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஆகிய சிவனார் திருக்கோயில். நமக்குப் பெரு வியப்பை அளிக்கிறது! மாதவன் மணிவண்ணனைச் சேவிக்கப் புறப்பட்ட நமக்கு, மகாதேவன் சிவபெருமான் நுழைவாயிலிலேயே காட்சி தருகின்றார்! பெருமாள் கோயிலில்



* நர்த்தன கிருஷ்ணன்



* நடுத்தளம் நின்ற திருக்கோலம்




பரமபதம் அமர்ந்த திருக்கோலம்

சிவன் சந்நிதி! அதுவும் கோயிலின் கொடிக் கம்பத்தைக் கடந்ததுமே! வியப்பை அளிக்கத்தானே செய்யும்? ஆனால் புராண வரலாறு அறிகிறபோது, வியப்பு நீர்த்துப் போய் விடுகிறது! இரணியனை வதம் செய்வதற்குப் பிரமனும், சிவனும், திருமாலும், இந்திரனும் கோஷ்டியாகக் குழுமி, கலந்துரையாடிய கவின்மிகு திருத்தலமல்லவா திருக்கோட்டியூர்?

எனவே சிவனுக்கெனக் கோயிலும், சந்நிதியும் கொண்டிருப்பதில் எவ்வித வியப்பும் இல்லைதானே? அருள்தரும் சரபேசரை வணங்கிய பின், விமானக் கட்டுமானத்தின் முன்னுள்ள மணி மண்டப முன் வாசலுக்குள் செல்கிறோம்.

விமானத்தைப் பற்றிய விளக்கத்தை நாம் இங்கே பெற்றுக் கொள்வது அவசியமாகிறது. ஏனெனில் திருக்கோட்டியூர் திருக்கோயிலில் அமைந்துள்ள அஷ்டாங்க விமானம் - தமிழன் கண்ட கட்டடக் கலையின் தனிக்காவியம் போல் திகழ்கிறது! மூன்று தளங்களைக் கொண்ட அஷ்டாங்க விமானம் கோயிற கலையின் முடிமணியாக விளங்குகிறது! அதிசய, அற்புத அஷ்டாங்க விமானத்தின் உயரம் 96 அடி! அதன் உச்சியிலுள்ள தங்கக் கலசம் 5 அடி உயரமும் $6\frac{3}{4}$ அடி சுற்றளவும் கொண்டதெனில் அதன் பேருருவை ஒருவாறு ஊகித்து அறியலாம். மூலைக்கு இரண்டாக நான்கு மூலைகளிலும் எட்டு விமானங்கள் அமைந்திருப்பதால், இது அஷ்டாங்க விமானம் எனப் பெயர் பெற்றுள்ளது. அஷ்டாட்சர திருமந்திரமாகிய 'ஓம் நமோ நாராயணாய' என்னும் திருவெட்டெழுத்தும் எட்டு விமானங்களாகவும், விமானத்தின் உச்சி பிரணவ மந்திரமாகவும் கொண்டு வடிவமைக்கப் பெற்ற பேரெழிலும், பேருருவும் படைத்த அஷ்டாங்க விமானத்தின் நிழல், நிலத்தில் விழாது உருவாக்கம் கொண்டுள்ளது. (இதனை முன் மாதிரியாகக் கொண்டே தஞ்சாவூர் பெரிய கோயில் விமானம் வடிவமைக்கப் பெற்றதாகச் செவி வழிச் செய்தி ஒன்று உண்டு.)

பொதுவாக எல்லாத் திருக்கோயில்களிலும் விமானத்தைக் காட்டிலும், இராஜகோபுரமே உயரமுள்ளதாக அமைக்கப் பெற்றிருக்கும். திருக்கோட்டியூர் திருக்கோயிலின் இராஜகோபுரம் 85 அடி உயரம். விமானமோ 96 அடி உயரமுள்ளது!



★ உபதேசிக்கும் உடையார் - பழைய புதிய சிலைகள்

இத்தகைய பெருவனப்பும், தனி அமைப்பும் கொண்ட திருக்கோட்டியூர் அஷ்டாங்க விமானம், ஒன்றின்மேல் ஒன்றாக மூன்று தளங்களை உடைய தாகக் கட்டப்பட்டுள்ளது.

சதுர்வேத சாராம்சமான 'ஓம் நமோ நாராயணாய' எனும் திருமந்திர எட்டெழுத்தின் அருமையை, 'ஓம்' 'நமோ' 'நாராயணாய' ஆகிய மூன்று பதங்களின் பெருமையை உணர்த்தும் உருவாக்கமாக எட்டுக் கோபுரங்கள், மூன்று தளங்கள் கொண்ட திருக் கோட்டியூர் விமான அமைப்பு – நினைந்து நெகிழ்ந்து மகிழக் கூடியது! திவ்விய தேசங்கள் நூற்றெட்டில்



★ தளங்களுக்குச் செல்லும் குறுகிய படி அமைப்பு

திருக்கோட்டியூர் விமானமே மிகமிக உயரமானதும், மிகமிகப் பெரியதானதும் ஆகும். இந்த அஷ்டாங்க விமானத்தைத் தரிசித்தால் நூற்றெட்டுத் திருப்பதி களின் விமானங்களைத் தரிசித்த புண்ணியம் வந்து சேருமெனச் சொல்லப்படுகிறது.

விமானக் கட்டுமானத்தின் அடிவாரத் தரைப் பரப்பில் உள்ள மணி மண்டபத்தினுள் நுழைந்ததுமே, நர்த்தன கிருஷ்ணன் காட்சி தருகின்றார். தெற்கே நரசிங்க மூர்த்தியும், வடக்கே இராமபிரானும் கோயில் கொண்டுள்ளனர். நரசிங்க மூர்த்தியின் திரு முன்புதான் உடையவர் இராமானுஜர் உபதேச மந்திரத்தைப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படு கிறது.

விமானத்திற்குத் தெற்கே தாயார் சந்நிதி உள்ளது. 'சீதேவி' என்றும், 'திருமாமகள்' என்றும் அழைக்கப் பெருகின்ற அன்னையைத் தரிசித்துச் சேவித்துக் கொள்கிறோம். வடக்கே ஆண்டாள் நாச்சியாருக்குத் தனிச் சந்நிதியும், சேனை முதலியார் சந்நிதி, சொர்க்கவாசல், யாக சாலை ஆகியவையும் உள்ளன.

நரசிங்க மூர்த்திக்கு அருகேயுள்ள படிக்கட்டில், முதல் தளத்தை நோக்கிச் செல்கின்றோம். முதல் தளத்தில் மூலவர் 'உரகமெல்லணையான்' எனும் திருநாமம் பெற்ற திருப்பாற்கடல்நாதன், அனந்த சயனத் திருக்கோலத்தில் பள்ளி கொண்டுள்ளார்.

திருவிழா நாயகர் (உற்சவர்) சௌமிய நாராயணன், மாதவன் எனத் திருப்பெயர்கள் பெற்றுள்ளார். திரு மஞ்சனமூர்த்தி 'தேவ தேவபிரான்' என அழைக்கப் பெறுகின்றார். நித்தியோத்ஸவரைப் பெரியாழ்வார் 'குளிர்ந்துறைகின்ற கோவிந்தன்' எனக் கூறி மகிழ்ந் துள்ளார். யாகபேரர் (வேள்வி மூர்த்தி) 'நரக நாசன்' எனும் திருப்பெயருடன் விளங்குகிறார். ஆக பஞ்ச பேரரும் முதல் தளத்தில் மூல மூர்த்தியுடன் எழுந்தருளி அருள் பாலிக்கின்றனர். பஞ்ச பேரருடன் காளிங்க நடன கிருஷ்ணனும், ஊஞ்சலில் சந்தான கிருஷ்ணனும் வீற்றிருப்பதைக் காண முடிகிறது. தெற்கே கதம்ப மாமுனிவரும், மேற்கே நான்முகனும், கலைமகளும் தேவர்களும், வடக்கே மதுகைடபர்களும் தேவேந்திரனும், புரூர்வ சக்கரவர்த்தியும் நிறைந்து காட்சி தருகின்றனர்.

"நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்
பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே!"

எனப் பாடுவார் பட்டர்பிரான் பெரியாழ்வார். இத் திருப்பாசுரத்தை நினைந்து நெகிழ்ந்தவாறு, குறுகிய படிக்கட்டுகளின் வழியே, விமானத்தின் இரண்டாம் தளத்தை அடைகின்றோம்.

நடுத்தளமாகிய இரண்டாம் தளத்தில் நின்ற திருக்கோலத்தில் பெருமாள் நிலமாமகள், திருமா மகளுடன் காட்சி அளிக்கின்றார். நடுத்தளம் 'இந்திர லோகம்' என அழைக்கப் பெறுகின்றது. இத் தளத்தில் மூலைக்கு இரண்டாக உள்ள எட்டு விமா னங்களின் உட்கூடு தெரிகிறது. மேல்தளம் அதாவது மூன்றாவது தளம் 'பரமபதம்' எனும் பெயர் பெற் றுள்ளது. இரண்டாம் தளத்திலிருந்து மேலே செல்லும் குறுகிய படிக்கட்டுகளில் ஏறி, பரமபதத்தை அடை கின்றோம். நம் எல்லோருக்குமே எத்தனை எளிமை யாகப் பரமபதம் கிட்டிவிட்டது! பரமபதமாகிய வைகுண்டத்தில் பெருமாள் இரு தேவியருடன் அமர்ந்த

திருக்கோலத்தில் காட்சியளிப்பதைக் கண்டு ஆனந்த மாகச் சேவிக்கிறோம். அமர்ந்து அருள்பாலிக்கும் பெருமானைச் சுற்றிலும் உள்ள மூன்று புறத்துச் சுவர்களிலும் வண்ணச் சித்திரங்கள் இடம் பெற் றுள்ளன. அவை நித்திய சூரிகள், முக்தியடைந் தவர்கள், ஆழ்வார்கள், தேவர்கள், முனிவர்கள், திருப்பாற்கடல், தசாவதாரக் காட்சிகள் எனப் பலப் பல ஓவியங்கள்.

மேல் தளம் உள் சுற்று, வெளிச் சுற்று என இரு சுற்றுகளைக் கொண்டதாக அமைக்கப் பெற்றுள்ளது. வெளிச் சுற்றின் தெற்குச் சிறு மதிலில் தெற்கே பார்த்த நிலையில் உடையவர் இராமானுஜரின் திரு மேனியைச் சிலை உருவாக எழுந்தருளச் செய்துள் ளனர். இங்கே நின்றுதான் ஊர் மக்கள் அனை வரையும் கூட்டி, உபதேச மந்திரத்தின் உட்பொருளை அனைவரும் அறியுமாறு அருளினாராம் எம்பெரு மானார் இராமானுஜர். உடையவரின் திருமேனி நம் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திழுக்கிறது. கண்மூடிக் கைகூப்புகின்றோம்.

தலையை முதுகுப்புறம் சாய்த்து, விமானத்தின் உச்சியில் பொருத்தியுள்ள தங்கக் கலசத்தைச் சேவிக்கிறோம். நூற்றெட்டுத் திருப்பதிகளின் விமா னக் கலசங்களைத் தரிசித்தது போன்ற நிறைவு நெஞ்சுள் இனிக்கிறது!

திருக்கோயிலின் முன்பு திருப்பாற்கடல், வட கிழக்கில் நடு மண்டபத்தோடு கூடிய தெப்பக்குளம், தென்மேற்கில் சிவகங்கை, வடக்கே காவடிக்குளம், நாற்புறமும் எண்ணற்ற கண்மாய்கள் அமைந்து, "தண்புனல் சூழ் திருக்கோட்டியூர்" என அருளிய திரு மங்கைப் பிரானின் திருவாக்கை இன்றும் மெய்ப்பிப் பதாய் உள்ளது.

திருக்கோட்டியூர்ப் புராணம்

மணிமுக்தா நதிக்கரையிலுள்ள திருக்கோட்டியூர்த் திருத்தலம், முற்காலத்தில் கதம்ப மாமுனிவரின் ஆசிரமமாக இருந்தது. இந்தப் பகுதியில் அசுரர் எவரும் நுழைந்துவிட முடியாது. அப்படி அவர்கள் நுழைவார்களெனில் அவர்களின் தலை சுக்கு நூறாகத் தெறித்து விழுமென்பது முனிவர் வழங்கிய சாபம்.

மூவுலகத்தையும் ஆண்ட அசுரன் இரணியன் நாளும் பொழுதும் தேவர்களைத் துன்புறுத்தி வந் தான். துயரம் பொறுக்காத தேவர்கள், இரணியனை வதம் செய்யுமாறு மும்மூர்த்திகளையும் வேண்டிப் பிரார்த்தித்தனர்.


இரணியாசுரன் பெற்றிருந்த வரமோ, அவனது மரணத்திற்குப் பேரரணாக அமைந்திருந்தது. மனி தனோ, தேவனோ, கடவுளோ வேறு மூவுலகத் திலுள்ள உயிருடை எவையாலும், எவ்விதக் கருவி யினாலும் தனக்குச் சாவு நேரக் கூடாதென்றும், பகலோ, இரவோ எந்த நேரத்திலும் தனக்கு மரணம் நேரக் கூடாதென்றும் வரம் பெற்றிருந்தான் இரணியன்.

இரணியனை அழித்தொழிக்கத் திருமால், சிவன், பிரமன், இந்திரன் முதலியோர் கருத்துக் கொண்டனர். எனவே 'இரணியனை எப்படி அழிக்கலாம்' எனத் திட்டமிடவும், தீர்மானிக்கவும் விரும்பினர். மும் மூர்த்திகளும், இந்திரன் முதலான தேவர்களும், இரணியனின் ஆளுகைக்கு உட்படாத பகுதியும், அசுரர் தலைகாட்ட முடியாத தபோவனமாகவும் திகழ்ந்த கதம்ப மாமுனிவரின் ஆசிரமப் பகுதியில் கோஷ்டி யாகக் கூடி ஆலோசிக்கலாமென முடிவு செய்து, மணிமுக்தா நதிக்கரைக்கு அனைவரும் எழுந் தருளினர்.

கோஷ்டியாக எழுந்தருளிக் குழுமியதால், கதம்ப மாமுனிவர் வாழ்ந்த ஆசிரமப் பகுதி 'கோஷ்டியூர்' எனக் கூறப் பெற்றுப் பின் 'திரு' எனும் மங்கலச் சொல்லை இணைத்துத் திருக்கோஷ்டியூர் என அழைக்கப்பெற்றது.

திருக்கோஷ்டியூரில் தீர்மானித்தவாறு திருமால் தேகத்தால் நரனாகவும், முகத்தால் சிங்கமாகவும் நரசிங்க வடிவம் பெற்றுத் தமது கூரிய நகங்களால் இரணியாசுரனைக் கிழித்து, அழித்து, ஒழித்தார்.

இரணிய வதத்திற்குப் பின், கதம்ப மாமுனிவர் பிரமனை அணுகி, "சுவாமி! நரசிங்கப் பெருமானாய் இரணியாசுரனின் உடல் கிழித்து, வதம் செய்த எம்



பெருமானின் திருமேனியை அடியேன் நாளும் தொழுது போற்றத் திருவருள் செய்ய வேணும்" என வேண்டிப் பிரார்த்தித்தார்.

பிரமன் முனிவரின் வேண்டுதலை ஏற்று, மயன் விசுவகர்மா ஆகிய தேவ தச்சர்களை அழைத்து, திருக்கோட்டியூரில் ஒரு திவ்வியமான அஷ்டாங்க விமானத்துடன் கூடிய திருக்கோயிலை எழுப்புமாறு

கட்டளை இட்டார். விமானம் மூன்று தளங்கள் கொண்டதாய், வடிவ வனப்புப் பெற்றுத் திகழ்ந்தது. எம்பெருமான் முதல் தளத்தில் ஆதிசேஷன் மேல் சயனித்து, 'உரகமெல்லணையான்' எனும் திருநாமம் கொண்டு அருள் பாலித்தார். கதம்ப மாமுனிவர், உலகெலாம் உணர்ந்து ஓதுவதற்குரிய பெருமானை நாளும் வழிபட்டு மகிழ்ந்திருந்தார்.

முனிவரின் நெகிழ்ந்த வழிபாட்டை நினைவில் கொண்ட இந்திரன், தேவலோகத்திலிருந்து சௌமிய நாராயணப் பெருமாளின் உற்சவத் திருமேனியை உவந்தளித்தான். சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் கதம்ப மாமுனிவர், எம்பெருமானைத் திருத்தேரில் எழுந்தருளச் செய்வித்து, விழாக் கொண் டாடினார். கதம்ப மாமுனிவரையும், அட்டாங்க விமானத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெரு மானையும் தரிசித்த புரூருவன் எனும் அரசன், முனிவரின் விருப்பத்திற்கிணங்கி, கங்கைக் கரையி லிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட பாகவத நன் மக்களை அழைத்து வந்து, திருக்கோட்டியூர் நகரை, திருவளர் பெருநகராய்ச் சீரமைத்தான்.

இரணிய வதத்தைச் சொல்ல வந்த கவிச் சக்கர வர்த்தி கம்பர், இரணியன் வாள் ஏந்தி நரசிங்கப் பிரானோடு போருக்கு எழுதலையும், நரசிங்கப் பிரான் இரணியனது மார்பைப் பிளத்தலையும், அச்சம் கொள்ளுமாறு வர்ணித்துள்ளார்.

"வாளொடு தோளும், கையும், மகுடமும், மலரோன் வைத்த
நீள் இருங் கனக முட்டை நெடுஞ்சுவர் தேய்ப்ப, நேமி
கோளொடும் திரிவது என்னக் குலமணி கொடும்பூண் மின்ன
தாள் இணை இரண்டும் பற்றிச் சுழற்றினன், தடக்கை ஒன்றால்"

என்றும்,

"மீ எழு குருதி பொங்க, வெயில் விரி வயிர மார்பு
நீ எழும் பிளந்து நீக்கி, தேவர்கள் இடுக்கண் தீர்த்தான்"

என்றும் பதிவாகியுள்ள கம்பரது சொல்லோவியங் களைத் திருக்கோட்டியூர் திருக்கோயிலில், ஒரு தேர்ந்த சிற்பி, கல்லோவியங்களாக வடிவமைத் துள்ளான். அவை வடக்கு வெளிப்பிராகாரத்தில், பரமபத வாசலின் இரு பக்கங்களிலும் வைக்கப் பட்டுள்ளன. பார்த்துப் பயங் கொள்ளத் தக்கவை! ஆமாம், அவைகளின் உருவ அமைப்பில் அத்தகைய பயங்கரத் தன்மையை ஊட்டியிருக்கிறான் சிற்பி. அற்புதமான கலை வடிவங்கள்! திருக்கோட்டியூர்ப் புராணத்திற்கு மையக் கருத்தாக விளங்கும் மணிச் சிற்பங்கள்!

திருக்கோயில் நிர்வாகம்

அரச சிந்தையும், தெய்வச் சிந்தையும் கொண்ட சிவகங்கை மன்னர்களின் ஆளுமைக்கும், நிர்வாகத் திற்கும் உட்பட்ட எண்பதுக்கும் மேற்பட்ட திருக் கோயில்களில் திருக்கோட்டியூர் திருக்கோயிலும் ஒன் றாக இருந்து வருகின்றது. பாண்டிய மன்னர்களால் திருக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பிற்கென ஏராள மான நிலங்களைப் பெற்றிருந்த சிவகங்கை சமஸ் தானம், ஜமீன் ஒழிப்புச் சட்டத்தால், நிலங்களை அரசுக்கு வழங்கியாக வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்த பின்னும், திருக்கோயிலின் நிர்வாகப் பராமரிப்பை இயன்றளவு அற உணர்வுடனும், அருள் உணர்வுடனும் ஆற்றி வருகின்றது.

சிவகங்கையிலுள்ள சமஸ்தான தேவஸ்தானப் பொறுப்பிலுள்ள திருக்கோட்டியூர் திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலராக ராஜகுமாரி ராஜலட்சுமி ரகுராஜ் வீற்றிருந்து வருகின்றார். முப்பது ஆண்டு களுக்கு முன், திருக்கோட்டியூர் திருக்கோயிலில் திருப்பணிகள் ஆற்றி, திருக்குட முழுக்கு நிகழ்ந் துள்ளது. அண்மையில் சிவகங்கை சமஸ்தானம், திருக்கோட்டியூர் திருக்கோயிலுக்குத் திருக்குட முழுக் குச் செய்விக்க, திருப்பணிக்குழு ஒன்றை அமைத் துள்ளது. பெருமக்களின் அருட் கொடைகளை ஆதார மாகக் கொண்டு, ஏறத்தாழ எழுபது லட்சத்துக்கான திருப்பணிகளைத் தொடங்கி உள்ளனர். இராஜ கோபுரம், அஷ்டாங்க விமானம், திருமதில் ஆகிய பெருந் திருப்பணிகள் அறச் செல்வர்கள் பலரின் தனிக் கொடைகளால் நாளும் நிகழ்ந்து வருகின்றன. ஞானச் செல்வர்களான ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்விய தேசங் களிலே சிறப்பிற்குரிய திருக்கோட்டியூர் திருக்கோயில் திருப்பணிக்குத் தங்கள் செல்வங்களை வழங்கித் தெய்வ நலம் பெறும் வாய்ப்பு ஆன்மீகப் பெருமக்க ளுக்கு இப்போது வாய்த்துள்ளது. வாய்ப்பும், பாக்கியமும் பெற்ற பெருமக்கள் திருப்பணிக்குக் கொடை வழங்கி, பேரும் புகழும் பெறுவதோடு, பெரும் புண்ணியத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். தெய்வத் திருவருள் நலமும் பெற்றுக் கொள்ளலாம். அரிய வாய்ப்பு! வாழ்வுக்கு உரிய பேறு!


பண்டைக் காலத்தில் திருக்கோயிலின் அன்றாடப் பராமரிப்புக்கும், வழிபாட்டிற்கும் அருட் செல்வர் களையும், அலுவலர்களையும் ஈடுபடுத்தியுள்ள அருமை – நமது திருக்கோயில்களுக்கே உரிய தனிப் பெருமை! திருக்கோட்டியூர் திருக்கோயிலில் நாள் வழிபாட்டு நிர்வாக இயக்க முறையைப் பதினான்கு பிரிவினர் மிகுந்த பய பக்தியுடன் ஆற்றி வருவதை அறிகிறபோது, நம் முன்னோர்களின் நிர்வாக அமைப் புச் சீர்மையை எண்ணிப் பெருமிதம் கொள்கிறோம்.

'திருக்கோட்டியூர் நம்பிகள்' என அழைக்கப் படுபவர் தீர்த்தக்காரராக உள்ளனர். 'நலந்திகழ் நாராயணப் பட்டர்' எனக் கூறுபவர் அர்ச்சகராகப் பணியாற்றுகின்றனர். 'பெரிய கோயில்நம்பி', 'நாரா யண நம்பி' 'திருக்கோட்டியூர்நம்பி', 'குலசேகர மாதவப் பட்டர்' ஆகிய நால்வகையினர் திருக்கோயில் ஸ்தானீக மாகக் கருதப் பெறுகின்றனர். வஸ்திரம், ஆபரணப் பொறுப்பில் உள்ளவர் 'அலங்கார நம்பி' என்றும், நகைப் பொறுப்புக்கு 'பண்டாரி' என்றும், திருமாலை கட்டிக் கட்டியம் கொண்டு வருபவர் 'தர்மகர்த்தா' என்றும் அழைக்கப் பெறுகின்றனர். 'முத்திரைக் கணக்கு', 'கோயில் கணக்கு', 'தானக் கர்ணம்' ஆகிய மூவகைப் பணியாளர்கள் திருக்கோயிலின் கணக்குப் பொறுப்பை, பொருள்கள் பொறுப்பை, செலவுகள் பொறுப்பை ஏற்றுள்ளனர். வெள்ளித் தீவட்டி பிடிக்க வும், மெய்க்காவல் செய்யவும் உள்ள வைராவி 'திரு வேலைக்காரர்' எனச் சொல்லப்படுகின்றார். இத் தனை பொறுப்புகளுக்கும் மேல், பெருமாளைப் போற் றிப் பரவ 'புலவர்' எனும் பணியாளரும் உள்ளனர்!

தெய்வப் பணி ஆற்றுபவர்களுக்குச் சூட்டியிருக்கும் திருப்பெயர்களும், பணிகளைப் பகுத்து அளித் திருக்கும் பான்மையும் எண்ணிப் பார்த்து மகிழத் தக்கதல்லவா?



நரசிங்கப்பிரான் - இரணிய வதம்



திருக்கோயில் திருவிழாக்கள்

பள்ளி கொண்டுள்ள திருக்கோட்டியூர் உரகமெல் லணையான், நரகநாசன், பன்னகமிருது சர்ப்பசாயிப் பெருமாளுக்குப் பன்னிரண்டு மாதங்களும் திருவிழாக் கொண்டாடப் பெறுகின்றது. தேர் உண்டு; தெப்பம் உண்டு; ஊஞ்சல் உண்டு; பல்லக்கு, யாளி, கருடன், யானை, குதிரை முதலிய வாகனங்கள் திருவிழாக் களில் இடம் பெறுவது உண்டு.

பெருமாளுக்குச் சித்திரையில் திருத்தேர். திருக் கோட்டியூர் நம்பிகளுக்கு வைகாசியிலும், கார்த்திகை யிலும் திருத்தேர். ஆண்டாள் நாச்சியாருக்கு ஆடிப் பூரத் தேர். ஆக ஆண்டில் நான்கு முறை திருத்தேர் தெருவுலா வருகின்றது.

சித்திரையில் பெருமாளுக்குப் பத்து நாள் திரு விழா. வைகாசியில் கஜேந்திர முக்தி விழா; நம்பி களுக்குப் பத்துநாள் திருநட்சத்திர விழா. ஆடி மாதம் ஆண்டாளுக்குப் பத்து நாள் விழா. ஆவணியில் திருப் பவித்திர கண்ணன் பிறப்பு விழா. புரட்டாசி நவ ராத்திரி விழா. ஐப்பசி மாதத்தில் ஊஞ்சல் விழா. கார்த்திகையில் கைசிகம் பெரிய தேர். மார்கழி பகல் பத்து, இராப் பத்து, திருப்பள்ளி எழுச்சி, தை மாதம் திருக் கல்யாணம், ஆண்டாளுக்குத் தைலக் காப்பு விழா. மாசி மாதத்து முழு நிலவில் தெப்பத் திருவிழா. பங்குனி மாதம் தாயாருக்குப் பத்து நாள் விழா.

பதினெட்டு வார்த்தைகள்

உடையவர் இராமானுஜரை உலகம் போற்றும் கருணையாளராக உருவாக்கிய பெருமைக்குரிய பேரறிவாளர் திருக்கோட்டியூர் நம்பிகள் ஆவார். எனினும் பெரிய திருமந்திரத்தை இராமானுஜருக்கு எளிமையாக, வந்த உடனேயே உபதேசித்து விட நம்பிகள் மனம் கொண்டாரில்லை. இராமானுஜரை திருவரங்கத்திலிருந்து திருக்கோட்டியூருக்குப் பதி னெட்டு முறை வருகை தருமாறு செய்வித்து, பரம வைணவப் பதமும், ஆன்மீகப் பக்குவமும் பெற்றுயர, ஒவ்வொரு முறையும் ஓர் உயரிய மெய்ப்பொருள் உணர்த்தும் அருட் கருத்தை நம்பிகள் அருளி இருக் கிறார்.

பதினெட்டு முறை வழங்கிய அந்தக் கருத்துகளை - 'திருக்கோட்டியூர் நம்பிகள் பதினெட்டு வார்த்தைகள்' எனக் கூறிப் போற்றி வருகின்றது வைணவ உலகம். அந்த மகா வாக்கியங்கள் மனத்தை அருள் வழியில் செலுத்தும் உந்து சக்திகளாகத் திகழ்கின்றன.

கல்வெட்டுச் செய்திகள்

திருக்கோட்டியூர் திருக்கோயிலில், மூன்று தளங் களைக் கொண்ட அஷ்டாங்க விமான அமைப்பே முதலில் உருவாக்கம் பெற்றிருக்க வேண்டும். பின்னர் தரைப் பரப்பில் மன்னர்கள் பலரால் மண்டபங்கள் எழுப்பப் பெற்று, தாயார், ஆண்டாள் முதலிய சந்நிதி கள் அமைக்கப் பெற்றிருக்கலாம். அஷ்டாங்க விமா னத்தின் சுவர்களில் கல்வெட்டுகள் காணப்பட இல்லை. அற்புத வடிவாக்கம் பெற்றுள்ள அஷ்டாங்க விமானத்தை உருவாக்கியவர் பற்றிய செய்தி கிடைக்க இல்லை. மயன், விசுவகர்மா ஆகிய தேவ சிற்பிகள் விமானத்தை அமைத்ததாகப் புராணச் செய்தியே உள்ளது.

மனிதநேயம்

மாஜூர் புகழேந்தி

வீசுகின்ற தென்றலுக்கு வேறுபாடு இல்லை
விளைநிலத்தைப் பசும்பொழிலைத் தீண்டுகின்ற கிள்ளை
காக்கவென்றும் காய்நிலத்துத் தாக்கவென்றும் இல்லை
காய்நிலவு கால்பரப்பக் காலம்தானே எல்லை.

பேசுகின்ற வாய்படைத்த மனிதனிங்கு தொல்லை
பிறர்நலத்தைச் சிந்திக்காத சுயநலத்தின் கொல்லை
ஏசுகின்ற சொல்லனைத்தும் இவன்தொடுக்கும் முல்லை
ஏய்த்தேனும் பிழைப்பவனை உடைக்கவேண்டும் பல்லை.

எல்லையென்று உதவுதற்கு என்னவுண்டு மண்ணில்
எங்கெல்லாம் அழுகுரலோ ஓடி உதவு உன்னில்
முல்லையென்று போற்றுவண்ணம் மனிதநேயம் மின்னும்
முகிலீக்கு! வாழ்பிறர்க்காய்ப் போற்றுமிந்த மண்ணும்!

தரைப் பரப்பு மண்டபச் சுவர்களில் பல கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. பெரும்பான்மையும் திருக்கோயிலுக்கு வழங்கிய அறக் கொடைகளே கல்வெட்டுச் செய்திகளாக உள்ளன. எனினும் பாண்டிய மன்னர்கள், சோழ வேந்தர்கள், விஜய நகர, நாயக்க மன்னர்களின் பெயர்கள் பல கல்வெட்டுகளில் காணப் படுகின்றன. பழமையான வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

ஆறு காலப் பூசனை

அதிகாலை 6 மணிக்கு 'கோட்டை வாசல்' எனச் சொல்லப் பெறுகின்ற இராஜகோபுரத்துப் பிரம்மாண்டமான கதவுகள் 'பாரா' எனும் காவலரால் திறக்கப்படுகிறது.

பட்டாச்சாரியாரும், ஸ்தானீகரும் திருக்கோயிலுக்குள் செல்கின்றனர். மூலஸ்தான முதல் தளத்திற்கு நேராகச் சென்ற பட்டாச்சாரியாரும், ஸ்தானீகரும், உரகமெல்லணையான் பள்ளி கொண்டுள்ள கர்ப்பக்கிரக மணிக் கதவங்களைத் திறக்கின்றனர்.

ஸ்தானீகர் தீபம் சரி செய்தவுடன் பட்டாச்சாரியார், தேவகாரியம் செய்து வேதம் பயின்று, மூவர் காரியமும் திருத்தும் முதல்வனை வழிபடுகின்றார்.

கறந்த பசுவின்பால், பெருமானுக்கு நைவேத்திய மாகிறது.

நாதனை நரசிங்கப் பெருமானை விஸ்வரூபமாகக் கண்டு தரிசிக்கும் பேறு பெறுகின்றோம். வாயினால் 'நமோ நாராயணாய' எனப் போற்றி, 'கேசவா, கோவிந்தா, புருடோத்தமா, என வணங்கி மகிழ்கின்றோம்.

தொடர்ந்து அடுத்த காலப் பூசை தொடங்குகிறது.

ஸ்தானீகம் பஞ்ச பாத்திரங்களில் (சுத்த தோயம், பாத்யம், அபிஷேகம், ஆசமனீயம், அர்க்கியம்) பூரித்தல் செய்து,பட்டாச்சாரியார் தூய்மைப்படுத்தியவுடன், உலக நலன்களுக்காகத் 'திருவாராதனம்' செய்யப் படுகின்றது. அபிஷேக மூர்த்தி 'தேவபிரான்' திருமஞ்சனம் செய்விக்கப் பெறுகிறார். ஆடை அணிவித்தல், ஆபரணம் சூட்டல், பூணூல் பொருத்துதல், உத்தரியம் போன்ற 32 உபசாரங்கள் துளசி மூலமாகப் பாவனை செய்து, பெருமானுக்கு அலங்கரிக் கப்படுகின்றன. நித்திய அனுசந்தானம் நிகழ்ந்ததும், திருக்கோட்டியூர் நம்பிகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் சாதித்தல், தூபம், தீபம், கடதீபம், சோடச உபசாரம் ஆகிய ஒவ்வொன்றையும் பட்டாச்சாரியார் எனும் அர்ச்சகர் பயபக்தியுடன் அர்ப்பணம் செய்வித்தவுடன், கடதீபம் கருடாழ்வாருக்கும், துவார பாலகருக்கும் காட்டப்படுகின்றது.

மந்திர புஷ்பம் செய்வித்துக் குறட்டில் சுத்தான்னம் தளிகையை அமுது செய்தபின், சாத்துமுறை தீர்த்த கோஷ்டி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை நிறைவு செய்கின்றது. சுற்றுக் கோயில், வெளியிலுள்ள அனுமார் கோயில் உட்பட அனைத்துத் தேவதைகளுக்கும் 'பலி' பூசை நிகழ்கிறது.

மூன்றாவது காலப் பூசை முற்பகல் 11 மணி அளவில் ஆரம்பம் ஆகின்றது. 'சம்பாக் காலம்' என இதனை அழைக்கின்றனர். ஏறத்தாழ அனைத்துச் செயல் முறைகளும் இரண்டாங் காலப் பூசனையில் நிகழ்ந்தவாறு சாதிக்கப் பெறுகின்றது. பரிசாரகர் சின்ன மணியை மூல ஸ்தானத்திலிருந்து முழக்கிக் கொண்டே சென்று, திருக்கோயிலின் மண்டப முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள பிரம்மாண்டமான மணியின் பலமிகுந்த கயிற்றைப் பிடித்து இழுத்து மணியோசை எழுப்புகிறார். 'ஓம் நமோ நாராயணாய' எனும் திருமா மந்திரம் மணியோசையாக எங்கும் பரவுகிறது. இந்த மணியை 'சம்பா மணி' என அழைக்கின்றனர்.

நான்காம் காலம் 'திருமாலைச் சம்பா'. பஞ்ச பாத்திரம் பூரித்து, திருமாலை சாத்தி, தளிகை அமுது செய்வித்துத் திருவாராதனம் நிகழ்கிறது.

'ராக்காலம்' என அழைக்கப் பெறுகின்ற ஐந்தாம் காலம் முன்னிரவு வேளையில் இரண்டாங் கால நடைமுறைகள் அனைத்தையும் நிகழாராதனமாகக் கொள்ளப் பெறுகின்றது. சுற்றுக் கோயில், திருக்கோயிலுக்கு வெளியே அருகிலுள்ள அனுமார் கோயில் உட்பட அனைத்துப் பரிவார தேவதைகளுக்கும் பலிபூசை செய்விக்கப் பெறுகின்றது.

அர்த்தசாமப் பூசையையும் சம்பாக் காலமென்றே அழைக்கின்றார்கள். இரண்டாங்கால நடைமுறைகள் நிகழ்விக்கப் பெறுகின்றன. பெருமாளுக்கு அமுது செய்விக்கும்போது, திரைபோட்டுக் கதவுகளைச் சாத்திவைத்து விடுகின்றனர். அர்த்த சாமச் சம்பாக் காலப் பூசனைகள் நிறைவுபெற்றதும், மூல ஸ்தானம் 'திருக்காப்பு' செய்விக்கப் பெற்று விடுகின்றது.

"திருக்கோட்டியூர் பெருமானைக் 'குளிர்ந்து உறைகின்ற கோவிந்தன்' எனப் பட்டர்பிரான் கூறுவார். பணிந்து வழிபடும் பக்தர்களுக்கு, குளிர்ந்து வாழ்கின்ற இன்பத்தைக் கொடுப்பது எங்கள் கோவிந்தனின் குணம்!" என மகிழ்ந்து வாழ்த்தி விடை அளிக்கின்றார், சௌமிய நாராயணப் பெருமாள் ஸ்ரீஎம் பெருமான் அறக்கட்டளைச் செயலாளர்.

"சொல்வதும் மாதவன்! சொல்ல வைப்பதும் மாதவன்!" எனக் கூறி வணங்கி விடை பெறுகின்றோம் நாம்.

ஆம், செயலாளர் பெயர் மாதவன்தான்!

போட்டோ : சுந்தரம் ஸ்டூடியோ, காரைக்குடி

ஓவியம் : கண்ணன், அரியக்குடி

ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி இயற்றிய நாராயண தீர்த்தர்


என். வி. ஆர். ஸ்வாமி

யாக்ஞ வல்கியர் காலத்திலிருந்தே இறைவனை இசை மூலம் பக்தியோடு வழிபடுவது என்பது ஓர் ஆன்மிகப் பயிற்சியாகக் கருதப்பட்டு வந்தது.

அத்வைத சந்நியாசிகளாயிருந்து கொண்டே பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து, நாதோபாசனை என்னும் இசை வழிபாட்டின் மூலம் கர்நாடக சங்கீதத்துக்கு மகத்தான தொண்டு செய்த மகான்களின் வரிசையில் அத்வைத சித்தர் சதாசிவ பிரும்மமும், நாராயண தீர்த்தரும் புரிந்த சாதனைகள் அநேகம். அவர்கள் இயற்றிய கிருதிகள் கர்நாடக இசை வரலாற்றின் பொன்னேடு எனலாம்.

சதாசிவ பிரும்மம், தியாகராஜர் – இருவரும் தமிழ் நாட்டில் பிறந்த தெலுங்கர்கள். நாராயண தீர்த்தர் தெலுங்கு தேசத்தவர்; தமிழ் நாட்டில் சித்தியடைந்தவர். விஜயநகர சாம்ராஜ்ய வீழ்ச்சிக்குப் பின், தஞ்சைத் தரணி தலையெடுத்து முதலில் தெலுங்கு நாயக்கர்வம்சத்திலும்,பிறகு மராட்டியர் ஆளுகையிலும் உட்பட்ட போது, இயல், இசை, நாடகம், நாட்டியம், சிற்பம், ஓவியம் போன்ற கலைத்துறையினரும் பேராதரவு பெற்று வந்தனர். கோதாவரி, கிருஷ்ணா நதிக்கரைகளில் வாழ்ந்து வந்தோர் பலர், அங்கிருந்து குடிபெயர்ந்து தஞ்சை நோக்கி வந்து காவிரியாற்றின் கரையோரக் கிராமங்களில் குடிபுகுந்தனர். நாராயண தீர்த்தர், அச்சுதப்ப நாயக்கர் (1561/1614) காலத்திற்குப் பிறகே தமிழ்நாட்டுக்கு வந்தவர்.

நாராயண தீர்த்தரின் காலம் கி.பி. 1660இல் இருந்து 1745 வரை எனலாம். ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் மாவட்டத்தில் மங்களகிரிக்கு அடுத்த 'காஸா' என்ற



* ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் (மூலவர்) – வரகூர்

ஊரில் தெலுங்கு பிராமண குலத்தில் பிறந்தவர். பூர்வீகப் பெயர் மாதவன் என்றும், கோவிந்த சாஸ்திரி என்றும் கூறப்படுகிறது. சிறு வயதிலிருந்தே தெலுங்கு, வடமொழி, சங்கீதம், நாட்டியம் எல்லாவற்றிலும் நன்கு தேர்ந்து விளங்கியவர். ஆறு சாஸ்திரங்களையும் கசடறக் கற்று உணர்ந்தவர். ஜயதேவரின் கீத-கோவிந்தத்தையும் நன்கு ஆராய்ந்து அறிந்தவர்.


சிறிது காலம் செல்லப்பள்ளி, முக்தியாலா ஆகிய சமஸ்தானங்களின் ஆதரவில் இருந்து வந்தார். பின்னர், வாசுதேவ சாஸ்திரி என்ற பண்டிதரிடம் கல்வி பயின்று, 12 ஆண்டுகள் வேத சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றார்.

தான் பிறந்த கிராமம் 'காஸா'விலிருந்து புறப்பட்டு, கிருஷ்ணா நதியின் தென் கரையிலுள்ள ஜிஞ்சுப்பள்ளி கிராமத்தில் நதியைக் கடக்கும்போது வெள்ளப் பெருக்கு எடுத்து சூழலில் அகப்பட்டுக் கொள்ளவே, கடவுளை வேண்டிக் கொண்டு தானாகவே ஆபத்சந்நியாசம் ஏற்றுத் துறவியானார். உடனே வெள்ளம் வடியவே, வடகரையில் வேதாத்திரி என்ற கிராமத்திலுள்ள நரசிம்மர் கோயிலை அடைந்து, அவர் மீது ஒரு கீர்த்தனை இயற்றினார். அங்கேயே இரண்டாண்டுகள் கடும் தவத்தில் ஆழ்ந்திருந்தார்.

'கங்கை அவரை அழைக்கவே, காசியை நோக்கிப் பயணமானார். ராமானந்த தீர்த்தர் என்ற மகானின் சீடராகி, தீட்சை பெற்று நாராயண தீர்த்தர் ஆனார்.

காசியிலிருந்து திரும்பிய அவர் கோதாவரி மாவட்டத்திலுள்ள குச்சிமஞ்சி என்ற கிராமத்தில் மூன்றாண்டுகள் தங்கி, பிறகு கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள வெள்ளத்தூரில் சில ஆண்டுகள் வசித்து வந்தார். வரும் வழியில் பூரி ஜகந்நாதரையும், சோபனாத்ரி, மங்களகிரி நரசிம்மரையும், ஸ்ரீகாகுளம் விஷ்ணுவையும், விஜயவாடா கனக துர்க்கையையும் தரிசித்து வந்தார்.





* வரகூர் ஸ்ரீவெங்கடேச பெருமாள் வெண்ணெய் தாழி

வடக்கிலிருந்து ஆந்திரப்பிரதேசம் வழியாகத் தெற்கு நோக்கி வந்து கொண்டிருக்கும்போது, ஒங்கோலுக்கு வடகிழக்குப் பகுதியிலுள்ள சிங்கர கொண்டா என்ற ஊரிலுள்ள ஒரு குகையில் தங்கி, சுமார் 12 ஆண்டுகள் தபசு மேற்கொண்டதாகத் தெரிகிறது.

திருத்தல யாத்திரை செய்து கொண்டு தெற்கு நோக்கி வந்தவர், திருப்பதியில் சில காலம் தங்கி ஸ்ரீ வெங்கடாசலபதியை வழிபட்டார். அங்கு அவருக்குக் கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது. ஒருநாள் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள், குரு சிவராமானந்த தீர்த்தரின் வடிவில் அவரது கனவில் தோன்றி, "எனது மற்றோர் இருப்பிடமான பூபதிராஜபுரம் சென்றால், அங்கு உனது வயிற்று நோய் நீங்கும்; உனது பிறவியின் பயனையும் நீ அடைவாய்" என்று கூறவே, திருமலையிலிருந்து புறப்பட்டுத் தென் தேசம் நோக்கி வந்தார் என்று சொல்லப்படுகிறது. கி.பி. 1701 வரை காசியில் தங்கி அதற்குப் பிறகுதான் அவர் தமிழ்நாடு வந்ததாகத் தெரிகிறது.

குணசேகரம் (குணசீலம்) என்ற க்ஷேத்திரத்தில் சில காலம் தங்கி ஸ்ரீநிவாசப் பெருமாளைத் தரிசித்து வந்தார்.

குடமுருட்டி ஆற்றின் கரையிலுள்ள நடுக்காவிரி என்னும் கிராமத்தை அடைந்து அவ்வூர் பிள்ளையார் கோயிலில் அன்றிரவு தங்கி யோகத்தில் அமர்ந்திருந்தார். அப்போது "நாளை காலை இங்கு தோன்றும் ஒரு பிராணியைப் பின் தொடர்ந்து அது காட்டுமிடத்தை அடைவாய்" என்று ஒரு அசரீரி வாக்கு கேட்டது. நிஷ்டையிலிருந்த அவர், பொழுது புலர்ந்ததும் கண் திறந்து பார்க்க, அவரது முன் ஒரு வெள்ளை வராகம் (பன்றி) நின்று கொண்டிருக்கக் கண்டார். அது மெதுவாக நகர்ந்து செல்லவே, நாராயண தீர்த்தரும் அதைப் பின் தொடர்ந்தார். நான்கு மைல் தூரத்திலுள்ள பூபதிராஜபுரம் என்ற கிராமத்தின் நடுவிலிருந்த ஒரு மணல் மேட்டுக்குள் புகுந்து மறைந்தது. திருமலையில் தான் கேட்டது நினைவுக்கு வரவே, மகாவிஷ்ணுவே இங்கு பன்றியாக வந்து மறைந்து விட்டார் என்பதை அறிந்து கொண்டார். அவரது வயிற்று வலியும் உடனே நீங்கியது. இவ்வூரில் 'வராகம்' (பன்றி) உட்சென்று மறைந்ததின் காரணமாகவே, பூபதிராஜபுரம் என்ற அவ்வூருக்கு 'வராகபுரி' எனவும், நாளடைவில் 'வரகூர்' எனவும் பெயர்கள் ஏற்படலாயிற்று.

அதன் பிறகு அவ்விடத்தில் ஏழு நாட்கள் நிஷ்டையிலிருந்து, எட்டாவது நாள் அவ்வூர் பக்தர்களின் உதவியுடன் அங்கிருந்த மணல் மேட்டை ஒரு சிறிய திருக்கோயிலாக அமைத்து அதில் ஸ்ரீ வெங்கடரமணரை எழுந்தருளச் செய்து, தினசரி பூஜையையும், கோகுலாஷ்டமி உற்சவத்தையும் நடத்திவந்தார்.

வடக்கே ஒரிஸா மாநிலத்திலுள்ள பூரியிலிருந்து தெற்கே வரகூர் வரை நடத்திய பயணத்தின்போது, தான் இயற்றிய ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியை வரகூரில் முடித்து ஸ்ரீ வெங்கடேசப் பெருமானுக்கு அர்ப்பணம் செய்தார்.

நாராயண தீர்த்தர் ஒவ்வொரு தரங்கம் பாடி முடித்ததும், அதை ஆமோதிப்பது போல் ஆஞ்சநேயர் தாளம் கொட்டி சமிக்ஞை செய்தாராம். இவரே இவ்வூர் கோயிலிலுள்ள அர்த்த மண்டபத்தில் "தாளங்கொட்டும் ஆஞ்சநேயர்" என்று எழுந்தருளியுள்ளார்.

வெங்கடாஜலபதியும் தீர்த்தருக்குக் கண்ணனாகத் தரிசனமளித்து அவருடைய பாட்டிற்குத் தக்கபடி கால் சலங்கை ஒலிக்கும்படி தாளமிட்டு தீர்த்தரைச் சந்தோஷப்படுத்தினார். கண்ணன்



* வரகூர் ஸ்ரீவெங்கடேச பெருமாள் கோயில்

திருஅவதாரம் முதல் ருக்மிணி பிராட்டி திருக்கல்யாணம் வரை பாடிய பின்னரும் மேலும் கதையை பாடத் தொடங்கினார். ஆனால் பகவானுடைய கால் சலங்கை தாள ஒலி நின்றுவிட்டது. அந்தக் குறிப்பால் பகவானுடைய அபிப்பிராயத்தை உணர்ந்து "கிருஷ்ணலீலா தரங்கிணி" என்ற மகா காவியத்தை மங்களம் பாடி முடித்து விட்டார்.

வடமொழியில் 'தரங்கிணி' என்ற சொல், அலைகளுடன் ஓடிச் செல்லும் ஆற்றைக் குறிப்பதாகும். ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலைகள் ஆகிற அலைகளை 12 பிரிவுகளுடன் இந்நூலானது அடைந்தமையால் "கிருஷ்ணலீலா தரங்கிணி" என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. "நாராயண தீர்த்தர் எனப்படும் மலையில் கண்ணனின் கருணை மழை பெய்தது. அம்மலையிலிருந்து கிருஷ்ண லீலா என்ற ஆறு தோன்றி பெருக்கெடுத்து ஓடி பக்தர்களாகிற வயல்களில் பக்திப் பயிர்களைச் செழிக்கச் செய்யட்டும்" என்று தரங்கிணி முடிவில் தீர்த்தர் கூறியிருக்கிறார்.

பன்னிரண்டு தரங்கங்கள் அடங்கிய ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி, சிறியதும் பெரியதுமான 153 பாட்டுகள் கொண்டது.

தரங்கிணி என்னும் இசை வகை, குண்டூர், கிருஷ்ணா, கோதாவரி ஜில்லா பஜனைகளில் நாட்டியமாக ஆடிப்பாடிக் களிப்பதுண்டு. இந்தத் தரங்கிணி நாடக அமைப்பு, ஆந்திர குச்சுப்புடி நடனத்துக்கும், மெலட்டூர் பாகவத மேளத்துக்கும் அடிப்படையாக அமைந்தது எனலாம்.

நாராயண தீர்த்தர் தமது இஷ்ட தேவதையான கிருஷ்ண பரமாத்மாவிடம் உள்ளத்தின் ஒருமைப்பாட்டிற்காகவே, சங்கீதத்தையும், நாட்டியத்தையும் இந்நூலில் சேர்த்துள்ளார். உபநிஷத் தத்துவங்களின் சாரங்களையெல்லாம் உட்கொண்ட இது, 12 தரங்கங்களைக் கொண்டது. பாடல்கள், கவிதைகள், உரைநடை, கத்யங்கள், வாசிப்பு விளக்கங்கள் ஆகியவை அடங்கியவை. வரகூர் பஜனை சம்பிரதாயம் இன்று நடக்கும் இடங்களிலெல்லாம் தரங்கிணி பாடல்களே முழங்கப்பட்டு வருகின்றன

வரகூரில் பஜனை சம்பிரதாயத்தை உருவாக்கி, ஆண்டு தோறும் கோகுலாஷ்டமி உற்சவத்தை இசையும், நடனமும் சேர்த்துப் பெரிய விழாவாகக் கொண்டாடி வரலானார் நாராயண தீர்த்தர்.

ஆண்டு தோறும் வரகூரில், கிருஷ்ண ஜயந்தி கர்ப்போத்ஸவமாகக் கொண்டாடப்படுகிறது. ருக்மிணி கல்யாணம், முத்துக் குத்துதல் முதலிய முறை நாராயண தீர்த்தர் ஆரம்பித்து வைத்த சம்பிரதாயமாகும். உரியடி, வழுக்கு மரம் ஏறுதல், இடையர் வேஷம் முதலிய கண்ணனுக்கு இஷ்டமான லீலைகளை உள் அமைத்து உற்சவ முறை ஏற்படுத்தியவரும் நாராயண தீர்த்தரே. இவர் ஆரம்பித்து வைத்த உரியடி, ஸ்ரீராமநவமி முதலிய உற்சவ சம்பிரதாயங்களை அக்காலத்திலிருந்த ஆனை பாகவதர், பரசுராம பாகவதர், பஞ்சநத பாகவதர் முதலியவர்கள் தரங்கங்களைப் பாடி பக்தியுடன் நடத்தி வந்தனர். இவர் இயற்றிய 12 தரங்கங்களும் அவரது சீடர்கள் மூலம் பிரபலமாயின.

இன்றும் வரகூரில் ஸ்ரீ கோகுலாஷ்டமி உற்சவத்தின் இரவில் கோஷ்டிகானத்தில் ஜயதேவரின்

கீதகோவிந்தம், நாராயண தீர்த்தரின் 12 தரங்கங்களில் ஒன்று அல்லது இரண்டு தரங்கங்கள், தினம் பாடுவது வரகூர் சம்பிரதாயத்தில் முக்கியமான பாகம்.

வரகூரைச் சேர்ந்த ஸ்ரீ நாராயண கவி என்னும் பெரியார் 1941 ஆம் ஆண்டு ஸ்ரீ கிருஷ்ண சிக்யோத்சவப் பிரபந்தம் என்ற வடமொழி காவியத்தைப் பிரசுரம் செய்தாராம்.

இவ்வூர் பக்தர்கள் இந்தியாவின் எந்தப் பகுதியில் வசித்து வந்தாலும் சரி, ஆண்டுதோறும் நடைபெறும் கோகுலாஷ்டமி சமயத்தில் தங்களது குடும்பத்துடன் இங்கு வந்து, உற்சவத்தில் கலந்து கொள்வது வழக்கமாய் இருந்து வருகிறது. அன்றைய தினம் பெரும்பாலான பக்தர்கள் கோயில் பிராகாரத்தில் அங்கப்பிரதட்சணம் செய்து வருவது மற்றொரு விசேஷம்.

வரகூரைச் சேர்ந்தவர்கள் வெளியூரில் வேலைக்குப் புதிதாகச் சேர்ந்தால், தங்களது முதல் மாதச் சம்பளத்தை இவ்வூர் ஸ்ரீ வெங்கடேச பெருமாளுக்குக் காணிக்கையாகக் கொடுத்து விடும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது.


நாராயண தீர்த்தர் சுமார் பத்தாண்டுக் காலம் வரகூரில் தங்கியிருந்த பிறகு, திருப்பூந்துருத்தி கிராமத்தில் ஒரு மாமரத்தடியில் தபஸ் செய்து வந்து அங்கேயே ஜீவசமாதி அடைந்தார்.

ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதம் சுக்ல பக்ஷ அஷ்டமி அன்று அவரது ஆராதனையைத் திருப்பூந்துருத்தியில் விமரிசையாகக் கொண்டாடி வருகிறார்கள்.

தஞ்சாவூர் – திருக்காட்டுப்பள்ளி பேருந்துப் பாதையில், 12 கிலோ மீட்டர் தொலைவில் திருக்காட்டுப்பள்ளியும், அங்கிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் வரகூரும் அமைந்துள்ளன.

எத்தனை நாட்கள் வாடுவது?

செய்தித் தாளைத் திறந்தால் எங்கும்
சிவப்புப் புள்ளிக் கோலங்கள்!
சித்திர வதைசெய் தப்பா விகளைச்
சிதைக்கும் கொடுமை ஓலங்கள்!
எய்தவன் இருக்க அம்புக ளைப்போய்
ஏசும் பொய்மை வாதங்கள்!
எடுப்பார் கையில் பிள்ளைகள் ஆகி
இழிந்த நிலையில் போதங்கள்!
எங்கே போகிற திந்நாடு?
என்று விடியும் நம்பாடு?






மதவெறி யாலும் மொழி வெறியாலும்
மனிதம் கருகிப் போகிறது!
வன்முறை களுக்கே அரசியல் ஏனோ
வளர்ப்புப் பண்ணை ஆகிறது!
பொதுநல மென்னும் போர்வைக் குள்ளே
புலியாய்ச் சீறும் சுயநலங்கள்!
போட்டியில் மூளும் கிளர்ச்சித் தீயில்
பொசுங்கிப் போகும் நம் வளங்கள்!
எத்தனை நாட்கள் வாடுவது?
எங்கே முடிவைத் தேடுவது?

நா. சீ. வரதராஜன்

கொள்கைப் பிடிப்பில் லாதவர் கூட்டம்
கூச்சல் போடும் கட்சிகளாய்!
கூலிக்காய்ச் சில பிறவிகள் மாட்டிக்
கொள்ளும் பறக்கும் பட்சிகளாய்!
கொள்ளை, கொலைகள், கொடுமைகள் ஆடும்
கூத்து மேடைகள் அங்கங்கே!
குடுமிச் சண்டையை விடுத்துத் தீமையைக்
கொய்யச் சேர்வதும் என்றிங்கே?
இதயம் படைத்தவர் ஒன்றாய்க் கிளர்ந்தால்
எரியும் இவற்றின் செல்வாக்கு!





ஆக்கள்

ரா. பாலகிருஷ்ணன்

மேசை மீது வைத்த காபி சுருள் சுருளாக ஆவி விட்டுக் கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாமல் அன்றைய நாளேட்டினைக் கையிலெடுத்துப் பிரித்தான், கேதாரி. கடைசிப் பக்கத்துக்கு முந்தின பக்கத்தில் அவன் பார்வை குத்திட்டு நின்றது. சனி, ஞாயிறு நாட்களில் கேதாரி அந்த ஆங்கில நாளிதழின் அந்தப் பக்கத்தினைத்தான் ஊன்றிப் பார்ப்பது வழக்கம். வித்யாவுக்கும் இதெல்லாம் புதிதல்ல. சகித்துக் கொள்ளப் பழக்கப்பட்டு விட்டாள்.

"காபி ஆறிப்போயிடும். அதைக் குடிச்சிட்டு அப்புறம்..." – சொல்லி முடிப்பதற்குள் வாசலில் செருப்புச் சத்தம். எட்டிப் பார்த்தாள். சிவகடாட்சம் வந்து கொண்டிருந்தான். கையில் மு.வ.வின் திருக்குறள் தெளிவுரை அளவுக்குக் கைக்கு அடக்கமான அந்தப் புத்தகம். ஓசையெழாமல் பற்களை நறநறத்துக் கொண்டாள்.

"கேதாரி..." உரக்கவே அழைத்தவாறு வாயிற்படியருகில் செருப்பைக் கழற்றினான், சிவா.

உள்ளே வந்த வித்யா தணிந்த குரலில், "இருக்கிற பொடியைப் போட்டு காபி கலந்து வச்சிருக்கேன். குழந்தைகளுக்கு டீதான். அதைக் குடிச்சுடுங்கோ. உங்க ஃபிரண்டு வந்து உட்கார்ந்ததும் இன்னொரு காபிக்கு ஆர்டர் கொடுத்தா ஏமாந்து போக வேண்டியிருக்கும்" என்று எச்சரித்துவிட்டுச் சமையலறைக்குத் திரும்பினாள்.

'பொழுது எப்போடாப்பா விடியும்னு காத்துண்டு இருந்திருக்கான், பாவி! கையிலே எப்பவும் அந்தக் குட்டிப் புத்தகம்! கந்த சஷ்டி கவசம் கையில இருந்தாலாவது போற வழிக்குப் புண்ணியம். தான் கெட்டதுமில்லாம இந்தக் குடியையும்னா சேர்த்துக் கெடுக்கறான்?' – வித்யா பெண்புலியாக மனதுக்குள் சீறினாள். கேதாரி உற்சாகமாக அவனை வரவேற்றான். "வா, சிவா! உன்னைத்தான் எதிர்பார்த்திட்டு இருந்தேன்".

"இதுக்கு நீதான் காரணம். போன வாரம் நான் எவ்வளவோ முட்டிண்டேன். கேட்டியா...? அந்த 'மார்னிங் டிலைட்' மேலே இருபது ரூபாயாவது ஆடு, இருபது விலை கொடுக்கும்னு தலை, தலையா அடிச்சிண்டேன். என் கையிலே இருந்ததையெல்லாம் திரட்டி 'மார்னிங் டிலைட்' மேலே ஆடினேன். கனிசமா வந்துது.

வித்யாவுக்கு எரிச்சல் மண்டியது. 'சிவாவாம், சிவா! பேருக்குப் பொருத்தமில்லாத நடவடிக்கை! சிவகடாட்சம்னு பேர் வச்சதுக்குப் பதிலா அசுவ கடாட்சம்னு வச்சிருக்கலாம்' என்று அவனைச் சபித்தவாறே கத்தரிக்காய்களின் பாவாடையைச் சரக், சரக்கென்று அரிவாள்மணையில் சீவித் தள்ளினாள்.

பூபதி படுக்கையில் புரண்டு நெளிந்தான். கைக்குழந்தை ரம்யா தூளியில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

உள்ளே கேதாரியும் சிவாவும் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்தது சமையலறையில் தெளிவாகக் கேட்டது.

"கேதாரி! இன்னிக்கு 'டாப் டக்கர்' தூள் கிளப்பிடும் பாரேன்... போட்டுட்டு இருக்கிற சட்டையைக் கூடக் கழற்றி 'டாப் டக்கர்' மேலே ஆடலாம். எனக்கு நேத்து சாயங்காலமாத்தான் 'இன்ஃபர்மேஷன்' கிடைச்சிது. அதுக்கு அப்புறம் சிரமப்பட்டு அலைஞ்சு திரிஞ்சு எப்படியோ ஒரு ஐம்பது ரூபா புரட்டிட்டேன்... உன் விஷயம் எப்படி?" – குரலில் உற்சாகம் பீறிடக் கேட்டான், சிவா.

"சைக்கிள் பின் சக்கரம் பங்க்சர்... ஒட்டினாத்தான் திங்கட்கிழமை ஆபீசுக்கே போக முடியும்... மாசக் கடைசி வேற... யாரையும் போய்க் கேட்கிறது சரியில்லே... நீ இந்த அளவுக்கு உறுதியாச் சொல்றபோது, என் பர்ஸ் வறண்டு கிடக்கிறதை நினைச்சா..." கேதாரி அலுத்துக் கொண்டான்.

ஃயில நூறு ரூபா வச்சிட்டு மீதியெல்லாம் வீட்டில கொடுத்திட்டேன். அவளுக்கு வாயெல்லாம் பல்லு! நீ 'மூவி ஸ்டார்' மேலே ஆடினே – என் பேச்சைக் கேட்காம. என்ன ஆச்சு?" – என்று இடித்துக் காட்டினான் கேதாரி.

"பழங்கதையைப் பேசி என்னப்பா, புண்ணியம்? இப்ப... எனக்கும் சேர்த்து உன்னால ஏதாவது புரட்ட முடியுமா, பாரேன்?" – என்று குழைந்தான் கேதாரி.

பூபதி படுக்கையை விட்டு எழுந்தான். பிரஷ்ஷைக் கையில் வைத்துக் கொண்டு, "ஏம்மா! டூத் பேஸ்ட் இல்லையே? நேத்து அப்பா வாங்கிட்டு வரல்லியா?" என்றான்.

"உங்கப்பா ஒவ்வொண்ணாப் பார்த்துப் பார்த்துத்தான் வாங்கிட்டு வருவார்!" – முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டு, "இந்தா! கொஞ்சம் பல்பொடி இருக்கு. தேய்ச்சுட்டு வா. டீ தரேன்" என்றாள் வித்யா.

"டீயா.... ஏன், காபி இல்லே?"

"காபிப் பொடி தீர்ந்து போச்சு. உங்கப்பா கிட்டப் போய்ச் சொல்லு!" எரிச்சலுடன் சொன்னாள்.

சிவகடாட்சத்துடன் அப்பா காலை வேளையில் பேசிக் கொண்டிருக்கிறார் என்றால், எதற்காகவும் குறுக்கிட்டுப் பேசக் கூடாது என்பது பூபதிக்கும் தெரியும்.

சிவா எழுந்தவாறே கேதாரியிடம் சொன்னான். "நான் பன்னிரண்டு மணி வரைக்கும் வீட்டி

லேயே காத்திட்டு இருக்கேன். நீ வந்து சேரு... பணத்தோட".

சிவகடாட்சம் வெளியேறின பிறகுதான் கேதாரி இயல்பு நிலைக்குத் திரும்பினான். அப்படியும் அன்று பிற்பகல் கிண்டியில் நிகழவிருக்கும் குதிரைப் பந்தயங்களின் நினைவிலிருந்து அவனால் முற்றும் விடுபட முடியவில்லை. இன்னும் ஐந்துமணி நேரத்துக்குள் எப்படி ஐம்பது ரூபாய் புரட்டுவது என்பதுதான் அவன் கவலை. அட, ஐம்பது இல்லாவிட்டாலும் நாற்பது, முப்பதாவது கிடைத்தால்கூடப் போதும். 'டாப் டக்கர்' மீது கேதாரிக்கும் உள்ளூர ஒரு நம்பிக்கை. சிவாவும் அதை உறுதி செய்வது போல் பேசி விட்டுப் போனதால் அது மேலும் வலுப்பெற்றது. கையில் ஒரு சிறு தொகை இருந்து அதை சிவாவிடம் கொடுத்தனுப்பினால் மாலையில் அவன் திரும்பி வந்து கனக மழையாகக் கொட்டுவானே என்று ஏங்கினான். அவன் வட்டாரத்து நண்பர்கள் எல்லாருடைய சார்பாகவும் சிவாதான் வழக்கமாகக் கிண்டி போய் விளையாடுவான். அவரவர் ஜெயித்த பணத்தை ஒழுங்காகக் கொண்டு வந்து கொடுப்பான். அந்த வகையில் சிவாவுக்கு நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர்தான்.

குளித்துச் சாப்பிட்டு, பங்க்சர் ஆகிப்போன சைக்கிளைத் தள்ளிக் கொண்டு கேதாரி வெளியே புறப்படும் சமயம் வித்யா அவனிடம் வேகமாக வந்து நின்றாள்.

"என்ன...?"

"ரம்யாவுக்குப் பால் பவுடர் ஆயிட்டுது. காலம்பறவே இருக்கிறதைத் திரட்டிப் போட்டுக் கரைச்சுக் கொடுத்தேன். சாயந்திரம் கொடுக்க ஒரு ஸ்பூன்கூட இல்லே. பாண்டி பஜார் பக்கம் போனா, ஒரு டின் வாங்கிட்டு வாங்க" என்று நினைவூட்டினாள் வித்யா.

"பணம்...? இன்னிக்கு என்ன தேதி? வழக்கமா மளிகை சாமான் வாங்கற மளிகைக் கடையிலே கணக்கிலே எழுதிட்டு நீயே வாங்கிக் கொள்ளேன்..."

"நேத்தே கேட்டுட்டேன். ஸ்டாக் தீர்ந்து போச்சாம். இனிமே முதல் தேதிக்கு அப்புறந்தான் 'சப்ளை' வருமாம்".

"மளிகைக் கடைக்காரனுக்குக் கூட மாசக் கடைசியெல்லாம் உண்டா என்ன? நம்ம வீட்டுக் காத்து அங்கேயும் வீசுது போலிருக்கு!" - சிரித்தான் கேதாரி.

"நீங்க என்ன செய்வீங்களோ தெரியாது. சாயந்திரம் பால் பவுடர் டின் வேணும். போன தடவை இப்படித்தான் பால் டின் காலியானதும் ஒருவேளைக்குப் பசும் பால் வாங்கிக் கொடுத்தேன். குழந்தைக்கு ஒத்துக்காம பேதி ஆக ஆரம்பிச்சு... டாக்டர்கிட்ட எடுத்துக் கொண்டு போனதிலே நாற்பது ரூபா செலவாயிட்டுது. அந்தப் பணத்துக்கு ஒரு டின் பால் பவுடரே வாங்கியிருக்கலாம்னு நீங்கதானே சொன்னீங்க? குறைஞ்சது இன்னும் ஆறு மாசத்துக்காவது குழந்தைக்குப் பவுடர் பால்தான் கொடுக்கணும்னு டாக்டர் சொன்னாரே..."

"நினைவிருக்கு. இப்ப... பணத்துக்கு என்ன செய்யறது?" என்று சைக்கிளின் மீது சாய்ந்து யோசித்தான், கேதாரி.

"ஒரு நிமிஷம் இருங்க. வீட்டுக்கார மாமிகிட்ட கேட்டுப் பார்க்கிறேன்..." என்று சொல்லிவிட்டு மாடிப்படி ஏறிச் சென்றாள் வித்யா. அடர்த்தியாக வளர்ந்திருந்த குரோட்டன் செடியின் கீழ் கைப்பிடிச்சுவரின் பக்கம் உட்கார்ந்து, மடியில் முடிந்து வைத்திருந்த ஐம்பது ரூபாய் நோட்டை வெளியே எடுத்தாள். எழுந்து கீழே படியிறங்குமுன் கேதாரிக்குக் கேட்கும்படி, "சரி மாமி! முதல் தேதிக்கு இன்னும் மூணு நாள் தானே? வாடகைப் பணத்தோடு இதையும் சேர்த்துக் கொடுத்துடறேன். தாங்க்ஸ், மாமி!" என்று சொல்லியவாறே கேதாரி நின்ற இடத்துக்கு வந்தாள். நோட்டை அவனிடம் நீட்டினாள்.

"மறந்துடாதிங்க! பணம் பத்திரம்" என்று எச்சரித்து விட்டுத் திரும்பினாள். வீட்டுக்கார அம்மாளிடம் கடனாக வாங்கி வந்து கொடுத்ததுபோல அவள் நடித்தது அவளுக்கே சிரிப்பூட்டியது. குடும்பச் செலவுக்கெனக் கேதாரி கொடுத்த பணத்தில் மிச்சம் பிடித்ததுதான் அது. உண்மையைச் சொன்னால், சிறுவாடு பிடித்துச் சேமிக்கிறாயா என்றெல்லாம் கேட்டுத் துளைத்து விடுவான். ஏன் வீண் வம்பு?

கேதாரி சைக்கிள் கடை வாசலில் 'ஸ்டாண்டு' போட்டு சைக்கிளை நிறுத்திய சமயம் சிவகடாட்சம் அங்கு பிரசன்னமானான்.

"என்ன கேதாரி? பணம் ஏதாவது தோது பண்ணினியா? ஏழு பேர் பணம் கொடுத்துட்டாங்க. வில்லியம், பாண்டு, நான் மூணு பேருந்தான் போறோம். அவங்க ரெண்டு பேரும் மாம்பலம் ஸ்டேஷன்ல எனக்காகக் காத்திட்டு இருப்பாங்க. உன் சேதி என்னன்னு தெரிஞ்சுக்கிட்டுப் போகலாமேன்னு நினைச்சேன். உன்னை இங்கே பார்க்க முடிஞ்சதும் நல்லதாப் போச்சு. என்ன சொல்லுறே...?" என்று அவசரப்படுத்தினான், சிவா.

கேதாரி உதட்டைப் பிதுக்கினான்.

"பத்து இருபது கூடவா உன்னால புரட்ட முடியல்லே?"

"ஸர்ச் மீ... சிவா! இந்த மாதிரி வாய்ப்புக் கிடைக்கிறப்ப, கையில பணம் இருந்தா விட்டுடுவேனா? எனக்குக் கொடுப்பினை இல்லே. அவ்வளவுதான். பால் பவுடர் டின் வாங்கிட்டு வரச்சொல்லி வித்யா பணம் கொடுத்து அனுப்பினா. சைக்கிளுக்குப் பங்க்சர் ஒட்டிட்டு, பால் பவுடர் வாங்கிட்டு வீட்டுக்குத் திரும்பணும். நீ போயிட்டு வா, சிவா! குட்லக்! ஆல் த பெஸ்ட்" என்று வலது கையை உயர்த்தினான் கேதாரி.

புறப்படவிருந்த சிவகடாட்சம் ஏதோ பொறி தட்டினாற்போல நின்றான். "நா ஒண்ணு சொல்றேன், கேட்பியா... கேதாரி? தப்பா நெனைச்சுக்க மாட்டியே?"

"சொல்லு".

"நீ சாப்பிட்டாச்சு, இல்லியா?"

"ஆயிட்டுது".

"பால் பவுடர் எத்தனை மணிக்கு வாங்கிட்டு நீ வீடு திரும்பணும்".

"ஆறு, ஆறரைக்கு வாங்கிட்டுப் போனாப் போதும். ஏன்?"

"நாங்க கூட ஒவ்வொருத்தரும் இன்னிக்கு ஐம்பது ரூபாய்க்குத்தான் ஆடப்போறோம். மூணாவது ரேஸ் முடிஞ்சதும் நம்ம ஒவ்வொருத்தர் கையிலேயும் இரண்

டாயிரத்துக்குக் குறையாம வந்து விழுந்துடும்! நீ சரியா நாலரை மணிக்குப் பால் டின்னோட வீட்டு வாசல்லே டாக்சியில் போய் இறங்கிடலாம். இப்ப என்கூடக் கிளம்பி வர்றியா? நான் வற்புறுத்தல்லே. என் மேல நம்பிக்கை இருந்தா... கிளம்பி வா" என்று உற்சாகமாய்ப் பேசினான், சிவா.

கேதாரி ஒரு கணம் தான் சிந்தித்தான். மூணாவது ரேஸ் முடிந்ததும் கையில் ஒரு பொற்கிழியே இருக்கும்! அரிய வாய்ப்பு. 'டாப் டக்கர்' வெற்றி உறுதி. அப்படியே ஒருகால் அது காலை வாரி விட்டாலும், உடன் வரும் மற்ற நண்பர்களில் யாராவது ஒருவராவது ஐம்பது ரூபாய் கடன் கொடுத்து உதவாமலா போய்விடுவார்கள்? அல்லது மற்ற பந்தயங்களில் சிறு தொகையாவது ஜெயிக்காமலா போய்விடுவோம்? - இப்படி ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய் சிவாவுடன் மாம்பலம் ஸ்டேஷனை நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

இரவு ஒன்பது மணிக்கு மேல் வீடு திரும்பியபோது கேதாரி ரொம்பவும் நொந்து போயிருந்தான். கையிலிருந்த பால் பவுடர் டின், அன்றையப் பிற்பகலில் அவனுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை நினைவூட்டி வருத்தியது.

'டாப் டக்கர்' ஏழாவது குதிரையாக - கடைசியாக வந்த குதிரைக்கு முந்தியதாக - வந்து சேர்ந்தபோது அவனுடைய இதயம் சில துடிப்புகளை இழந்தது. செய்யக்கூடாத பெரிய குற்றத்தைச் செய்து விட்டதாக உணர்ந்தான்.

"என்ன, சிவா! இப்படி ஆயிட்டுதே...?" என்றான் தலையில் கையை வைத்துக் கொண்டு.

"கவலைப்படாதே, கேதாரி! தோற்கிற குதிரையாடா இது? அந்த ஜாக்கி வேணும்னே இழுத்துப் பிடிச்சிருக்கான், படவா!" என்றான் சிவா.

"அப்படித்தான் நானும் நினைக்கிறேன். அவன் மட்டும் ஒழுங்கா வந்திருந்தா... ஒரு 'டபிள் ஈவெண்ட்'லே அடிக்கிற பணத்தை இந்த ஒரு ரேஸ்லே ஜெயிச்சிருக்கலாம்... ஆரம்பத்திலே எப்படி வந்தது பார்த்தியா...?" என்றான் பாண்டு ஆற்றாமையுடன்.

கேதாரியைப் பொறுத்தமட்டில், பணம் தொலைந்ததுகூடப் பெரிதாகத் தோன்றவில்லை. பால் பவுடருக்கு என்ன செய்வது? வெறுங்கையோடு வீடு திரும்பி வித்யாவின் முகத்தில் எப்படி விழிப்பது? குழந்தைக்குப் பால் பவுடர் வாங்கவென்று அவள் கடன் வாங்கிக் கொடுத்த பணத்தை இப்படிக் கரியாக்கி விட்டோமே என்று புழுங்கினான். பாண்டுதான் கேதாரியை வளசரவாக்கம் அழைத்துச் சென்று அவனுக்குத் தன் கணக்கில் ஒரு பால் பவுடர் டின் வாங்கிக் கொடுத்தான். அந்தக் கணத்தில்தான் கேதாரிக்குப் போன உயிர் திரும்ப வந்தது.

பாண்டுவின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டு தன்



மாங்கனியா? மாக்கனியா?



கா. வேழவேந்தன்

இனிப்போடு புளிப்பினையும் இழைத்தே வந்த
ஈடில்லா ஒருகனியே! பழுக்கும் போதே
தனித்தங்க நிறமெடுத்துத் தகத கக்கும்
சத்தான நறுங்கனியே! தூரக் கண்டும்
நுனிநாக்கில் சுவைநீரை ஓட வைக்கும்
நுட்பமிகு அருங்கனியே! காதல் இன்ப
மனைவிஇதழ் மட்டுந்தான் உனக்கே ஈடாம்!
'மாங்கனி'யா? 'மாக்கனி' நீ! மறுப்பார் உண்டா?

எத்தனையோ கனிகளிங்கே விளையும்; ஆனால்
எழிலார்ந்த மாங்கனியே! மேலை நாட்டார்
மெத்த உன்னை விரும்புவதேன்? மாட்சியோடு
விமானத்தில் பறக்கின்ற மேன்மை பெற்றாய்!
'தித்திக்கும் மழலையதன் பிஞ்சுக் கன்னம்
தீங்கனியே உன்னைப்போல் இனிக்கும்' என்றே
முத்திரைகள் பதிக்கின்றார் கவிஞர்! ஆம், ஆம்
மொத்தத்தில் சித்திரைப் பெண் 'சீ'ரே நீதான்!

நன்றிப் பெருக்கை வெளியிட்டு விட்டுக் கேதாரி வீட்டை அணுகிய பொழுது...

தெரு விளக்குகள் எதுவுமே எரியவில்லை. பெட்ரோமாக்ஸ் விளக்கு வைத்த சோன்பப்டி வண்டி ஒன்று தெருக்கோடியில் வந்து கொண்டிருந்தது. தெருக் கோடியில் படுத்துக் கிடக்கும் கறுப்பு நாய் குரைத்துக் கொண்டே அந்த வண்டியோடு வந்து கொண்டிருந்தது. தெருவுக்கே அந்த நாய் காவல் தெய்வம்.

தயங்கித் தயங்கி கேதாரி வீட்டுக் கதவருகில் வந்ததும் கதவில் பூட்டு தூங்கிக் கொண்டிருந்தது. நாலடி பின்னால் வந்தான். மாடியில் வீட்டுச் சொந்தக்காரர் சாய்வு நாற்காலியில் படுத்தவாறு "... இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் கிடைக்கப் பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே..." என்ற அப்பர் தேவாரத்தை டிரான்சிஸ்டரில் கேட்டுக்கொண்டிருந்தார்.

"சார்..." கேதாரி அழைத்தான்.

"கேதாரியா...? உங்க குழந்தை ரம்யாவுக்குக் கொஞ்சம் உடம்பு சுகமில்லே. நான்தான் வித்யாவை அழைச்சிட்டுப் போய் 'டே-நைட்' கிளினிக்லே சேர்த்துட்டு வந்தேன். டிரிப்ஸ் கொடுத்திருக்கா. காலையிலே அழைச்சிட்டு வந்திடலாம். ஒண்ணும் பயமில்லே. வீட்டுச் சாவி வேணுமா? ஏதாவது சாப்பிடறேளா...?" என்று கேட்டார்.

"நான் கிளினிக்குக்குப் போறேன். பசியில்லே, தாங்க்ஸ்..." என்று சொல்லியவாறே பால் பவுடர் டின்னை அவர் வீட்டில் வைத்துவிட்டுப் புறப் பட்டான்.

பெருமூச்சு விட்டவாறு மாடிப் படியேறி ரம்யா படுத்திருந்த கட்டிலருகே சென்றான். வித்யா குழந்தையின் கால் மாட்டில் ஸ்டூல் மீது அமர்ந்திருந்தாள். கேதாரி வந்ததும் எழுந்தாள். அருகிலிருந்த பெஞ்சில் வீட்டுக்காரரின் பன்னிரண்டு வயதுப் பேரன் - துணைக்கு வந்தவன் படுத்திருந்தான். சலனமற்றுத் தூங்கும் ரம்யாவையே வைத்த விழி வாங்காமல் பார்த்தான். பார்வையை விலக்கினால் அதைத் தன் மனைவி மீதுதான் பதிக்க வேண்டும். அவளை ஏறெடுத்துப் பார்க்கும் துணிச்சல் அவனுக்கு அப்போது இல்லை. என்ன பேசுவது என்றும் தோன்றவில்லை. தான் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்பதா? சாதாரணத் தவறா அது? மனிதத் தன்மையே இல்லாத அரக்கனாகத் தன்னை உணர்ந்தான்.


வீட்டுச் சொந்தக்காரரும் வெளியே சென்றிருப்பாரேயானால் கைக்குழந்தையை வைத்துக் கொண்டு எப்படித் தவித்துப் போயிருப்பாள் வித்யா? கையிலும் செலவுக்குப் பணமில்லாமல்?

வித்யா அந்த மௌனத்தைக் கலைத்தாள். "காலையிலேர்ந்தே ரம்யா உடம்பு சாதாரணமா இல்லே... நீங்க வெளில புறப்பட்டுப் போனதும் உடம்பு சுட்டுது. மறுபடியும் வயித்துப் போக்கு... வீட்டுக்காரர்தான் 'இப்படியே வச்சுக்காதே. ராத்திரி உடம்பு அதிகமாயிட்டா என்ன பண்ணுவே?'ன்னு சொல்லி அவரே ஆட்டோவிலே கூட்டிட்டு வந்தார். ஆஸ்பத்திரிக்கும் அவர்தான் பணம் கட்டினார். பொழுது விடிஞ்சதும் 'டிஸ்சார்ஜ்' பண்ணிடறதா டாக்டர் சொன்னார். இப்போ உடம்பு சாதாரணமா இருக்கு. பயமில்லே" என்று நிறுத்தினாள். அவன் எங்கே போயிருந்தான், என்ன செய்தான் - எதுவுமே கேட்கவில்லை அவள். அதுவே அவனுக்குப் பெரிய தண்டனையாகத் தோன்றியது.

அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். ஸ்மசான வைராக்கியமல்ல அது. அவனுள் இருந்த அரக்கனை வெளியேற்றி விட்டான். ஆயிரம் சத்தியங்களை விடவும் உறுதியானது அந்த மௌனம். அது வித்யாவுக்கும் விளங்கிற்று.

பொன்விழாக்கண்ட புகழ்மிக்க 'ராம்கோ'

குன்றக்குடி பெரிய பெருமாள்



பெருந்தகை அமரர் பி.ஏ.சி. ராமசாமி ராஜா

ஆடையை வரிந்து கட்டிக் கொண்டு, அருள்பாலிக்க ஓடி வருமாம் தெய்வம்!

யாருக்கு?

'குடி செய்வல் என்னும் ஒருவர்க்கு!'

ஆம், குடி மக்களை மேன்மைப் படுத்தும் செயலைக் குறிக்கோளாகக் கொண்ட ஒருவரின், செய்யும் காரியங்கள் அனைத்திற்கும் தெய்வத் திருவருள் தானே வந்து அமையும் என்கிறார் திருவள்ளுவர்.

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்

மடிதற்றுத் தான்முந் துறும்."

திருவள்ளுவரின் இந்தத் திருவாக்கை மெய்ப்பிக்கும் உருவாக்கங்களே – 'ராம்கோ' நிறுவனங்களின் தொழில் ஆக்கங்கள்! நிலைபெற்றோங்கும் வளர்முகப் பெருக்கங்கள்!

இராஜபாளையத்தில் பெருமை பெற்றிருந்த ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த பெருமகனார் ஒருவர், சுற்றுச் சூழலைச் சற்றே எண்ணிப் பார்த்தார்.

விவசாயத்தைத் தவிர, வேறு தொழில் அறியாத மக்கள் வாழும் பகுதி. வான் மழையை நம்பித்தான் வேளாண்மை செய்தாக வேண்டும். வானம் பொழியவில்லையெனில் மக்களின் வாழ்வு நலியத் தொடங்கிவிடும். வருடந்தோறும் வானின் கருணை அந்தப் பகுதிக்கு வழக்கமாகக் கிடைப்பதுமில்லை. எனவே அடிக்கடி வறட்சியின் நிழலில், வறுமையின் பிடியில் மக்கள் வாழ்ந்தாக வேண்டிய நிர்ப்பந்த நிலை நிலைத்த தன்மையாய் அந்தப் பகுதியில் நின்று கொண்டிருந்தது. மக்கள் உழைத்துப் பிழைக்க மனம் கொண்டவர்கள்தான்; எனினும், உழைப்பதற்குக் 'களம்' வேண்டுமே?

இத்தகைய சுற்றுச் சூழல் அந்தப் பெருமகனாரின் இரக்கம் மிகுந்த இதயத்துள் கருணை ஊற்றைப் பெருக்கெடுக்கச் செய்தது.


களத்தை உருவாக்க வேண்டும். மக்களின் கவலையை நீக்க வேண்டும். வெறும் நிலத்தை மட்டும் நம்பி வாழும் வேதனையைப் போக்கியாக வேண்டும். வேறு தொழிலுக்கு மக்களின் உழைப்புச் சக்தியைப் பயன்படுத்தவும் வேண்டும்... எனவே என்ன செய்ய வேண்டும்?


சிந்தித்தார் அந்தப் பெருமகனார், செயலில் இறங்க மனம் கொண்டார். எனினும் திட்டமும், திருவருளும் இன்றித் தீவிரம் காட்டக் கூடாதெனத் தீர்மானித்தார்.

ஏனெனில் அந்தப் பெருமகனார் கடவுள் நம்பிக்கை கொண்ட பக்திமான்! அன்றாடம், பறக்கும் கருடனைத் தரிசித்துப் பரந்தாமனின் கருணையை நினைந்து உருகும் இயல்புகொண்ட



பி.ஏ.சி.ஆர். திருவுருவச் சிலை





இறையன்பர் அவர்! எனவே ஆழ்ந்து, ஆய்ந்து, அநுபவச் செறிவுடன் ஒரு முடிவுக்கு வர ஆவல் கொண்டார்.

"பக்தி உடையார் காரியத்தில்
பதறார்! மிகுந்த பொறுமையுடன்
வித்துமுளைக்கும் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்"

எனும் மகாகவி பாரதியின் வைர வரிகளுக்குத் தமது வாழ்வையே வடிவப்படுத்திக் காட்டிய பெருமகனார் அல்லவா அந்தப் பெருந்தகை?

வறட்சிப் பகுதியே ஆயினும், வானம் பார்த்த பூமியே ஆயினும் வருடந்தோறும் பருத்தியை விளைவித்து, இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பிக் கொண்டிருந்த இராம நாதபுரம் மாவட்டத்து இராஜபாளையம் பகுதியின் இயல்பை ஒரு நாள் நினைந்துப்பார்த்தார் அப்பெருமகனார். அவர் நெஞ்சத்துள் ஒரு கருத்துப் பிறந்தது.

"ஏன்? பருத்தியை மூலப் பொருளாகக் கொண்ட ஒரு நூற்பாலையை உருவாக்கினால் என்ன?"

இந்தக் கருத்து தம் மனத்தில் உதயமாகப் பரந்தாமனின் திருவருளே காரணமெனக் கருதவும் செய்தார் அப் பெருமகனார்!



'ராம்கோ' சிமிண்ட் ஆலை ராமசாமி ராஜாநகர்

நூற்பாலைத் துறையில் நுட்பமும் திட்பமும் பெற்றுத் திகழ்ந்த இங்கிலாந்துக்குச் சென்று, அதன் நுணுக்கத்தை அறிய ஆவல் கொண்டார். எனவே தமது நாற்பத்தோராவது வயதில் அப் பெருமகனார், இதயத்துள் ஒரு கோட்பாட்டுடன் இங்கிலாந்துக்குப் பயணப் பட்டார்.

இங்கிலாந்துக்குச் சென்ற அப்பெரு மகனார் – 'பி.ஏ.சி.ஆர்' என மக்களால் பெரிதும் அன்பாக அழைக்கப் பெற்ற, பெருந்தகை பி.ஏ.சி. இராம சாமி ராஜா ஆவார்.

1935ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்று திரும்பிய பெருந்தகை இராம சாமி ராஜா, இராஜபாளையத்தில் ஒரு நூற்பாலையை உருவாக்கம் செய்யத் திட்டமிட்டார். உறவினர்களையும், உள்ளார்ந்த நண்பர்களையும் ஆலை உருவாக்கப் பணியில் ஆர்வம் கொள்ளச் செய்து, நிறுவனத்திலும் பங்குப் பணி ஆற்றிடுமாறு, 'பப்ளிக் லிமிடெட் கம்பெனி'யாக நிறுவன அமைப்பை வடிவமைத்து, 24.12.1936இல் தமது கனவையும், கனிவையும் நனவாக்கி மகிழ்ந்தார். பிறந்த நகரின் பெயர், விளக்கம் பெற்றுப் பெரும் புகழடைய வேண்டுமெனும் பேரார்வத்தில், பெருந்தகை பி.ஏ.சி.ஆர். நூற்பாலைக்கு "இராஜபாளையம் மில்ஸ் லிமிடெட்" எனப் பெயர் சூட்டிப் பேரானந்தம் கொண்டார்.

நம்பிக்கையற்றுச் சோம்பிக் கிடந்த தம் பகுதி குடிமக்களுக்கு உழைக்கக் களமும், ஊதியம் பெறத் தொழிலும் அளிக்கக் கொடுத்து வைத்த பேற்றினை நினைந்து நினைந்து நெகிழ்ந்தார் பெருந்தகை பி.ஏ.சி. இராமசாமி ராஜா. இத்தகைய பேற்றினை அருளிய இறைவனது பெருங்கருணையை எண்ணி உருகினார்; உருகிப் போற்றினார்.

இராஜபாளையம் நூற்பாலை

விவசாயத்தைத் தவிர, வேறு தொழில் அறியாத பகுதியில் நூற்பாலைக்கு மூலதனம் சேர்க்கும் முயற்சி, சற்றுக் கடினமாகத்தானே இருந்திருக்க முடியும்? என்றாலும் பெருந்தகை இராம சாமி ராஜாவின் வாக்கும், நோக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்கு மென்ற நம்பிக்கையிலும், பெருந்தகை பி.ஏ.சி.ஆரின் சகோதரரும், விடு

தலைப் போராட்ட வீரரும், மக்களிடையே மரியாதைக்குரியவராக விளங்கியவருமாகிய பி.எஸ். குமாரசாமி ராஜாவின் செல்வாக்கிலும் 562 பங்குதாரர்களைக் கொண்ட ஏறத்தாழ ஐந்து லட்ச ரூபாய் மூலதனம் திரட்டப்பட்டது. 1938ஆம் ஆண்டின் உதய காலத்தில் ஆலைக்கு வேண்டிய இயந்திரங்கள் அனைத்தும் வரத் தொடங்கின. 12,300 கதிர்கள் நிறுவப்பட்ட இராஜபாளையம் நூற்பாலையின் உற்பத்தியை, கோயம்புத்தூர் தொழில் அதிபர், பி.எஸ்.ஜி. ரெங்கசாமி நாயுடு, தமது கைராசிக் கரங்களால் 1938 மே மாதத்தில் தொடங்கி வைத்தார். அன்றைய மாநிலத் தொழில், தொழிலாளர் நல அமைச்சராக வீற்றிருந்த வி.வி.கிரி முறையாக ஆலையை 5.9.1938இல் தொடங்கி வைத்து வாழ்த்தினார்.

'இராஜபாளையம் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் வரலாற்றில் 1957 ஒரு புதிய அத்தியாயத்தைப் பிறப்பித்தது. தொடங்கியபோது பெற்றிருந்த கதிர்களைப் போல மும்மடங்கு கதிர்கள் நிர்மாணிக்கப்பெற்று இயங்கத் தொடங்கின. மாதமொரு வளர்ச்சியும், ஆண்டொரு முன்னேற்றமும் அடைந்து, வந்த நூற்பாலை, தற்பொழுது 39552 கதிர்களும், 624 O.E. ரோட்டர்களும்கொண்டு இயங்கி வருகிறது.

கூடுதலாகக் கதிர்களை நிர்மாணிப்பதற்குப் பதிலாக, நவீன இயந்திரங்களைப் பொருத்தி, உற்பத்தித் திறனை உயர்த்தி, தரமான நூலை உற்பத்தி செய்வது லாபகரமாக இருக்குமெனத் தீர்மானித்து, 1959ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து முப்பது ஆண்டுகளில் ரூ 10 கோடி முதலீட்டில், இந்த ஆலையின் அனைத்துப் பிரிவுகளும் நவீனப்படுத்தப் பெற்றுள்ளன. கதிர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படாமலேயே உற்பத்தி கணிசமாகக் கூடி, ஆலை மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. ஆரம்ப கால மூலதனமான ஐந்து லட்சத்துக்கு மேல், கூடுதலாக எவ்வித மூலதனமும் பெறாமலே, ரிசர்வ் நிதியிலிருந்தும், நீண்ட காலக் கடன்கள் மூலமுமே ஆலையின் முன்னேற்றம் அமைக்கப் பெற்றுள்ளதை அறிகிறபோது வியந்து போகிறோம்!

'ராம்கோ' நிறுவனங்களின் வளர்முகப் பெருக்கங்களுக்கு மூலமாகவும்



சிருங்கேரி மகாசந்நிதானம்

முதலாகவும் திகழ்கின்ற இராஜபாளையம் நூற்பாலை வரலாற்றுச் சிறப்புமிக்க லாபத்தை ஈட்டியிருப்பதோடு, பணியாற்றும் தொழிலாளர்களின் தொடர்ந்த இணக்கத்தையும், பங்கு முதலீடு செய்துள்ள பொதுமக்களின் நன்னம்பிக்கையையும் பெற்று விளங்குகிறது. இத்தகைய ஈட்டலும், இணக்கமும், நம்பிக்கையும் ராம்கோ நிறுவனங்களுக்கு ஏறத்தாழ 200 கோடி பெறுமானமுள்ள சொத்தை, ஆயிரக்கணக்கான



தருமபுரம் மகாசந்நிதானம்

தொழிலாளர்களை, பல்லாயிரம் பங்குதார்களை வழங்கியிருப்பதோடு, பதினைந்து வகையான ஆலைகளைத் தமிழகத்தில் மட்டுமின்றி, ஆந்திர, கர்நாடக, மத்திய மாநிலங்களில் நிறுவி, மக்களின் வாழ்விற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் மகத்தான பணியாற்றும் மாபெரும் வாய்ப்பை அளித்துள்ளன!

பரம்பொருளின் பரிபூரணமான பெருங் கருணையையும், திருவருளையும் பெற்றிருந்த பெருந்தகை பி.ஏ.சி.ஆர். உருவாக்கிய முதல் நிறுவனத்தில் அருளாளர்களும் முதலீடு செய்துள்ளனர். ஆம், சிருங்கேரி பீடாதிபதிகள், தருமபுரம் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் ஆகிய ஞானச் செல்வர்களும் இந் நிறுவனத்தில் பங்குதாரர்களாக உள்ள அரிய செய்தியை அறிகிறபோது, ஆச்சரியத்தால் நம் புருவங்கள் உயர்கின்றன!

ராமராஜு சர்ஜிகல் காட்டன் மில்ஸ்

பெருந்தகை பி.ஏ.சி. இராமசாமி ராஜாவின் மாப்பிள்ளை என்.கே. ராமராஜு தொடங்கிய சர்ஜிகல் காட்டன் ஆலையை, தொடங்கியவர் மறைந்ததால், 1939இல் ஏற்று நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

பஞ்சைச் சுத்தம் செய்து, சில மருந்துப் பொருள்களைச் சேர்த்து, நீராவியின் உதவியால் தூய்மையாக்கி, மருத்துவத் துறைக்குப் பயன்படும் வகையில் பஞ்சை உருவாக்குகின்றனர். அத்துடன் காயங்களுக்குக் கட்டுப் போடும் துணிகளும் உற்பத்தி செய்யப் பெறுகின்றன. ஜிப்சம் என்னும் ஒரு பொருள் உப்பு உற்பத்தியின்போது கிடைக்கும். அதைத் தகுந்த விகிதத்தில், பொடியாக்கிச் சுண்ணாம்புடன் கலந்து, இங்கே 'பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ்' தயாரிக்கப் பெறுகிறது.

கை கால் முறிவுக்குக் கட்டுப் போடுவதற்கும், பல் வைத்தியத்திற்கும் இவ்வகைத் தயாரிப்பு பயன்படுகின்றது. ராமராஜு காட்டன் மில்ஸ் உற்பத்தி செய்யும் மருத்துவப் பொருள்கள், நம் நாட்டு மருத்துவ நிலையங்



இராஜபாளையம் ஆலை



'ராம்கோ' சின்மயா வித்யாலயா இராஜபாளையம்

களுக்கு அனுப்பி வைப்பதோடு, அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் பெறுகின்றன. இத்தகைய உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் நவீனத் தொழிலகம் ஒன்றை இராஜபாளையம் அருகில் உள்ள பெருமாள்பட்டியில் ராம்கோ அமைத்துள்ளது.

மல், லாங் கிளாத், காடா இவற்றைத் தயாரிக்கும் இராஜபாளையத்தில் உள்ள ஜெயராம் மில், நூற்பாலையாகிய சுதர்சனம் மில், ஸ்ரீவிஷ்ணு சங்கர் மில் ஆகிய ஆலைகளும் 'ராம்கோ'வைச் சார்ந்தனவே.

கௌரி மெட்டல் ஹவுஸ்

1952ஆம் ஆண்டு ஜப்பானுக்குச் சென்று வந்த பெருந்தகை பி.ஏ. சி.ஆர். ஒரு புதுவகையான தொழிலை இராஜபாளையத்தில் தொடங்கினார். 'திருகாணிகள்' எனச் சொல்லப்படுகின்ற ஸ்குரு ஆணிகள், கௌரி மெட்டல் ஹவுஸில் தயாரிக்கத் திட்டமிட்டு, ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்கினார்.

ஆணிக்கான இரும்புக் கம்பிகளை வரவழைத்து, கம்பியை ஆணியின் அளவுக்கு ஏற்றவாறு வெட்டி, ஆணியின் தலைப்பகுதியை உருவாக்கி, பிறகு தலைப் பகுதியில் ஸ்குரு டிரைவர் வைத்துத் திருகுவதற்கு ஏற்றார்போல பள்ளம் அமைத்து, திருகாணிக்கான மரைகள் உருவாக்கி ஆணித் தயாரிப்பு நடக்கிறது. எல்லாம் இயந்திரங்களே செய்கின்றன. தயாரித்த ஆணிகள் தென்னிந்திய அளவில் பரவலாக விற்பனைக்கு அனுப்பப் பெறுகின்றன.

கௌரி மெட்டல் நிறுவனத்தைப் போல, இராஜபாளையத்தில் பல ஆணித் தயாரிப்பு நிறுவனங்கள் 'கிடுகிடு' வென உருவாகின. ஆனால் அவை யனைத்தும் கொஞ்ச நாள்களில் 'மடமட'வெனச் சரிந்து போயின! விற்பனையைப் பெரிதாக்கி, தரத்தைக் குறைவாக்கினால் எந்த நிறுவனமும் நீடு நிலைக்க முடியாதென்பதற்கு அவை எடுத்துக் காட்டுகள் ஆயின எனக் கூறப்படுகிறது.

வாழ்ந்த இல்லத்துக்கு 'ராம மந்திரம்' எனப் பெயர் சூட்டிப் பேரருள் பெற்றிருந்த பெருந்தகை பி.ஏ.சி.ஆர். தாம் வடிவமைத்த நிறுவனங்கள் அனைத்திற்கும் தரம் 'தாரகமந்திரம்' என்பதை நிலைநாட்டிப் பெருமை பெற்றார்!

மூன்றரை லட்ச ரூபாய் முதலீட்டில் தொடங்கப் பெற்ற இந்த நிறுவனம், இன்று பல லட்ச ரூபாய் மதிப்பீட்டில், ஆண்டுதோறும் வளர்முகமாகி, தழைத்துப் பல்வேறு நிறுவனங்களாகக் கிளைத்து, நூற்றுக் கணக்கான தொழிலாளிகளின் வேடந்தாங்கலாய் விளங்கி வருகின்றது!

மெட்ராஸ் சிமிண்ட்ஸ்

'ராம்கோ'வின் வரலாற்றில் 1957ஆம் ஆண்டை, மணிமுடி சூட்டிக் கொண்ட மாபெரும் காலகட்டம் என வர்ணித்து மகிழலாம். ராம்கோவின் நிறுவனங்கள் அனைத்தும் சீரிய நிர்வாகப் பொறுப்புடன், சிறப்பாக வளர்ந்து வருவதையும், ஆண்டுதோறும் பங்குதாரர்களுக்கு அளித்து வரும் கணிசமான டிவிடெண்ட் தொகையையும் எண்ணிப் பார்த்த மக்கள், குறிப்பாக மற்ற ராம்கோ நிறுவனங்களின் பங்குதாரர், சிமிண்ட் தொழிலகத்திற்குத் தேவைப்பட்ட 50 லட்ச ரூபாய் பங்குத் தொகையை, 'நான் முந்தி, நீ முந்தி' என நம்பிக்கையோடு வழங்கினர்.

சிருங்கேரி பீடாதிபதிகளும், தருமபுரம் ஆதினகர்த்தரும் நிறுவனத்தின் மூலதனத்தில் கணிசமாகப் பங்கேற்று, முயற்சிக்கு அருளாசி வழங்கியது அரிய நன் நிமித்தமாக அமைந்தது. தமிழக அரசு, தனியார் துறையில் தொடங்கிய நிறுவனத்திற்கு முதன் முதலாகப் பங்குத் தொகையாக 10 லட்சம் வழங்கியது! இந்தியத் தொழிலியல் நிதி நிறுவனத்திலிருந்து நெடுங்காலக் கடன்தொகை பெற்று, ஒன்றேகால் கோடி முதலீட்டில் மிகுந்த பொலிவோடும், புகழோடும் சிமிண்ட் ஆலையை, விருதுநகருக்கு அருகேயுள்ள 'துலுக்கப்பட்டி' எனச் சொல்லப்பட்ட ராமசாமி ராஜா நகரில், நிறுவினார் பெருந்தகை பி.ஏ.சி.ஆர்.

அருப்புக்கோட்டை, சாத்தூர் பகுதியில், சிமிண்ட் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருளான சுண்ணாம்புக்கல் வெகுவாகப் புதைந்து கிடப்பதைக் கருதிப் பார்த்து, அந்தப் பகுதிக்கு அருகாமையில் அமைக்கப் பெற்ற மெட்ராஸ் சிமிண்ட் நிறுவனம், நாளொன்றுக்கு 200 டன் உற்பத்தியை நோக்கமாகக் கொண்டு 1961இல் உற்பத்தியைத் தொடங்கியது. அன்றைய தமிழக முதல்வர் காமராஜ் தொடங்கி வைக்க, தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் தலைமை வகிக்க, தொடக்க விழா சிறப்பாக நிகழ்ந்தது.


சிமிண்ட் நிறுவனத்தை உருவாக்க நிறுவனருக்கு, ஊக்கமும் உற்சாகமும் ஊட்டியவர் முன்னாள் தமிழக முதல்

வரும், நிறுவனரின் சகோதரருமாகிய பி.எஸ். குமாரசுவாமி ராஜா எனும் செய்தி குறிப்பிடத்தக்கது.

சிமிண்ட் நிறுவனம் வளர்முக வரலாற்றைத் தொடங்கி ஓராண்டுக் காலத்தில் அதாவது 1962ஆம் ஆண்டு, பெருந்தகை பி.ஏ.சி.ஆர், தாம் இமைப்பொழுதும் நீங்காது வழிபட்டு வந்த பரந்தாமனின் திருப்பாதங்களை அடைந்து, அமரர் ஆனார்.

'ராம்கோ' நிறுவனர் அமரர் பி.ஏ.சி. இராமசாமி ராஜா நிர்வகித்து வந்த அனைத்துத் தொழிலகங்களின் நிர்வாகப் பெரும் பொறுப்பை, அப் பெருமகனாரின் ஒரே புதல்வர் பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜா ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜாவுக்கு வயது இருபத்தேழுதான்! எனினும், பெருந்தகை பி.ஏ.சி.ஆர். தம்மைப் போலவே தெய்வ நம்பிக்கையை மனதிலும், திறமான செயலூக்கத்தை அறிவிலும், தெளிவான நடைமுறைப் பண்பாட்டை உணர்விலும் தமது புதல்வருக்குத் திட்டமிட்டுப் பயிற்சி அளித்து வைத்திருந்த பான்மையால், இளமையான வயதிலேயே, வலிமையான நிறுவனங்களின் நிர்வாகத்தை மிக எளிமையாக நிர்வகிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார் 'பி.ஆர்.ஆர். என அன்பாகக் குறிப்பிடப் பெறும் பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜா!

அதி நவீன ஆலையில் பஞ்சு சுத்திகரிப்பு



மனிதனின் முதல் தேவையான உணவை உற்பத்தி செய்யும் வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்த அமரர் பி.ஏ.சி.ஆர், மனிதனின் இரண்டாவது தேவையான உடையை உற்பத்தி செய்வதற்கு ஆதாரமான ஆலைகளை ஏற்படுத்தி, மனிதனின் மூன்றாவது தேவையான இல்லங்களை உருவாக்க அடிப்படையான சிமிண்ட் உற்பத்திக்கும் வழிவகை காட்டி, வாழ்வாங்கு வாழ்ந்து அமரர் ஆனார். அப் பெருந்தகை எண்ணியவை அனைத்தும் இனிமை ஆயின! எடுத்த காரியங்கள் அனைத்தும் பெருமை ஆயின! ஏனெனில் அப் பெருமகனார் குடிமக்கள் மேன்மையைக்

'ராம்கோ' சிமிண்ட் நவீன ஆலை
ஆந்திர மாநிலம் ஜெயந்திபுரம்





மாக்சியில் 'ராம்கோ'வின் அதி அற்புத ஆஸ்பெஸ்டாஸ் ஆலை

குறிக்கோளாகக் கொண்டிருந்தார். எனவே தெய்வத்தின் திருவருள் எளிமையாக வந்தடைந்தது! திரும்பிய பக்கமெல்லாம் உதவியும், உழைப்பும், உயர்ந்த செயலூக்கத்திற்கு ஆதாரமான மக்களின் நிறைந்த பேரன்பும் தேடியும் வந்தன! ஓடியும் வந்தன! வரலாற்றில் வாழ்வாங்கு வாழ்ந்து, வணங்கத்தக்க தெய்வம் ஆனார்!

தமது தந்தையார் உருவாக்கித் தந்த சிமிண்ட் நிறுவனத்தைத் தரத்தாலும், உற்பத்தித் திறத்தாலும் இந்தியாவின் தென் மாநிலங்களில் பிரபலப்படுத்தி, விற்பனையில் சரித்திரம் படைத்தார் ராம்கோ சேர்மன் பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜா. சிமிண்ட் தயாரிப்பில் சுற்றுவட்டார மக்களுக்கு, எவ்விதமான தீமையும், நேர்ந்துவிடக் கூடாதென்ற தன் நோக்கில், மிக விலையுயர்ந்த 'எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரெஸிபிடேடர்' எனும் கருவி, ஆலையின் சூளைப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் தொழிற்சாலை இயங்கும்போது, கரும்புகையை இங்கே காண முடியாது! சுற்றுச் சூழல் கெட்டுப் போவதில்லை. உற்பத்தியில் நூதன முறையைக் கையாண்டு, சுற்றுப் புறத்தைத் தூய்மை கெடாமல் பாதுகாத்து, நீண்ட நாள் உறுதியை நிலைப்படுத்தி வழங்கும் போர்ட்லண்ட் சிமிண்டை இந்தத் தொழிலகம் உற்பத்தி செய்து அனுப்புகிறது. சேர்மன் பி.ஆர். ஆரின் கவனிப்பும், கண்காணிப்பும் மெட்ராஸ் சிமிண்ட் நிறுவனத்தை, நாளொரு வளர்ச்சியில், பொழுதொரு முயற்சியில், ராம்கோவின் பேராற்றல் வாய்ந்த பெருமைக்குரிய பிரபல நிறுவனமாக புகழ் மணக்கச் செய்துள்ளன!

தொடக்க காலத்தின் உற்பத்தியைப் போல மூன்று மடங்கு உற்பத்திப் பெருக்கத்தையும், பல கோடி மதிப்புள்ள சொத்தையும், பல்லாயிரம் தொழிலாளர் பணியாற்றும் தகுதியையும், வாங்கிப் பயன்படுத்துவோரின் நன்னம்பிக்கையையும், விற்பனையில் நாளுக்கு நாள் உயர்வையும் பெற்று, மெட்ராஸ் சிமிண்ட் நிறுவனம் - தென்னகத்தின் தொழில் துறையில் ஒரு மன்னராகத் திகழ்ந்து வருகிறது! சிமிண்ட் அரவையில் மிகு நவீனம் கொண்ட காம்பிடான் மில்லில் தயாராகும் மெட்ராஸ் சிமிண்ட் நிறுவனத்தின் தயரிப்பு வாடிக்கையாளர் மத்தியில் வளர்முக வரவேற்பைப் பெற்றுள்ளது.

மூலப் பொருளான சுண்ணாம்புக் கல் கணிசமான அளவில் கிடைப்பதால், ஆந்திர மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டத்தைச் சார்ந்த ஜெயந்திபுரத்தில் அதி நவீனத் தொழில் நுட்ப உத்திகள் புகுத்தப்பெற்ற புதிய சிமிண்ட் ஆலை, மெட்ராஸ் சிமிண்ட் லிமிடெட் நிறுவனம் கொண்டாடிய வெள்ளிவிழா ஆண்டில் - 1986 - டிசம்பரில் ராம்கோவின் மற்றுமொரு தொழிலகமாகி உற்பத்தியைத்தொடங்கியது.

சேர்மன் பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜாவின் புதல்வரும், பெருந்தகை பி.ஏ.சி. இராமசாமி ராஜாவின் பேரருமாகிய பி.ஆர். வெங்கட்ராம ராஜா ஜெயந்திபுரம் ஆலைத்திட்டம் வேகமாக மலர்ச்சி பெறத் தீவிரமாகப் பங்கெடுத்துப் பணியாற்றினார். ஆலை நிர்மாணத் திட்டத்தில் பி.ஆர். வெங்கட்ராம ராஜா எடுத்துக் கொண்ட தனி அக்கறை, எதிர்பார்த்ததற்கு முன்னமேயே ஜெயந்திபுரம் சிமிண்ட் ஆலை, உற்பத்தியைத் தொடங்கக் காரணமாக அமைந்தது. மிகுந்த நவீனமான தொழில் நுட்பங்களை ஜெயந்திபுரம் ஆலையில் புகுத்தியிருப்பதன் மூலம், நாட்டின் தொழில் முன்னேற்றத்தில், ஒரு நவீன யுகம் மலர, 'ராம்கோ' தன் பங்குப்பணியை ஆற்றியிருப்பதாகவே கருதலாம்.

சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ்

கனடா, ஆஸ்திரேலியா, ரஷ்யா முதலிய பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற கல்நார் இழைகளைத் தகுந்த விகிதத்தில் சிமிண்டுடன் சேர்த்து, அதிக அளவு தண்ணீர் ஊற்றி அரைத்து உருவாக்கும் சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் தொழிலக உற்பத்திப் பொருள்கள் வீட்டுக்கும், தொழிற்சாலைகளுக்கும் ஏற்றவை. நீர்க் கசிவு ஏற்படுவதில்லை; துரு பிடிப்பதில்லை; நெருப்புக்கு உடன்படுவதுமில்லை!

போர்ட்லண்ட் சிமிண்டுடன் கல்நாரைச் சேர்த்து உருவாக்கும் ஆஸ்பெஸ்டாஸ் மத்தியகிழக்கு நாடுகள், துபாய், அபுதாபி, குவைத், சௌதி அரேபியா, பஹ்ரெயின், ஏடன், டான்ஸானியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இந்தியாவின் தென் மாநிலங்கள் சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் உற்பத்தித் தயாரிப்புகளை விரும்பி வாங்குகின்றன.

1965ஆம் ஆண்டு அரக்கோணத்தில் தொடங்கப் பெற்ற சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் நிறுவனம், பெருந்தகை பி.ஏ.சி.ஆர். வாழ்ந்த காலத்திலேயே திட்டமிடப் பட்டதெனினும், அவரது மறைவுக்குப் பின், அப்பெருமகனாரின் போதனைகளையும் சாதனைகளையும் நினைவில் கொண்டு, அவரது புதல்வர்



இணக்கமான சூழ்நிலையில் இயங்கும் ஆலை


ராம்கோ சேர்மன் பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜா 25 லட்ச பங்கு முதலையும், நெடுங்காலக் கடன் தொகையினையும் கொண்ட முதலீட்டில் நிறுவனத்தைத் தொடங்கினார். ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகள், பைப்புகள் முதலிய உற்பத்திப் பொருள்களின் தயாரிப்பு 36000 டன் குறியீட்டுடன் அமைக்கப் பெற்ற இந்தத் தொழிலகம் 1967இல் உற்பத்தியைத் தொடங்கி, மூன்றே ஆண்டுகளில் பங்குதாரர்களுக்கு டிவிடெண்ட் வழங்கக் கூடிய வல்லமையைப் பெற்றது.

ஆஸ்பெஸ்டாஸ் ஷீட், அமைப்புகள் உற்பத்தியில் ராம்கோவின் வல்லமை மிகுந்த கரம் இந்திய நாட்டின் மத்தியப் பிரதேச 'மாக்சி' எனும் திருநகரில் தனது சக்தியை வெளிப்படுத்தி வருகின்றது. ஆம், அதி நவீன ஆஸ்பெஸ்டாஸ் ஆலை மாக்சியில் உலகக் கவனத்தைக் கவர்ந்து வருகிறது.

ஸ்பின்னர்ஸ் & ஸ்பின்டெக்ஸ்ட்

இரண்டு நூற்பாலைகள். இவை போல் இந்திய நாட்டின் தென் மாநிலங்களில் எவையும் இல்லவே இல்லை! இங்கே - அதிசயமான கட்டுப்பாட்டுடன், அற்புதமான தரத்துடன், அபூர்வமான இயந்திர சாதனங்களைக் கொண்டு நூல் உற்பத்தி ஆகின்றது! நூலென்றால் நிட்டிங் நெசவுகளுக்குப் பயன்படும் கோம்ப்டு (COMBED) நூல்! உலகச் சந்தைக்கு ஏற்ற நூல்! உற்பத்தியாகும் அனைத்தையுமே (100%) பத்து ஆண்டுகளுக்குக் கட்டாயமாக வெளிநாட்டுக்குத்தான் ஏற்றுமதி செய்தாக வேண்டும். உள்நாட்டில் விற்பனை செய்யக் கூடாது. இத்தகைய சிக்கலான விதிமுறைகளை ஏற்றுக் கொள்வதற்காகச் சில சலுகைகளை அரசாங்கம் வழங்குகிறது. துறைமுக வரிகள் ஏற்றுமதிக்கோ, இறக்குமதிக்கோ வசூலிப்பதில்லை. வருமான வரி கிடையாது.

இத்தகைய சலுகைகள் பலவற்றை அரசாங்கம் அளிக்க முன்வரினும், இத்துறையில் இறங்கிடப் பல தொழில் அதிபர்கள் அச்சம் கொண்டிருந்த போது, ராம்கோ சேர்மன் பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜா, தமது தந்தையார் அளித்த சீரிய போதனைகளையும், செயலூக்கத்தையும் மனதில் கொண்டு, துணிந்து இத் தொழில் நிறுவனங்களை இராஜபாளையத்தில் 1992 ஜனவரி



யில் நிறுவி, ஏறத்தாழ பத்தே மாதங்களில் பல கோடிகளுக்கு உற்பத்தியான உயர்தர நூலை, ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி வைத்து, தொழில் வரலாற்றில் தொழத் தக்க பாராட்டுதலைப் பெற்றுள்ளார்! இதனைச் 'சரித்திரச் சாதனை' என தொழில் அதிபர்கள் மதிப்பிட்டு மகிழ்ந்துள்ளனர். இல்லையா பின்னே?

'ராம்கோ'வின் வளர்முக வாணிகத்தில் உலகளாவிய பெருமையை ஈட்டித் தந்துள்ள இந்த இரண்டு ஆலைகளும், சேர்மன் பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜாவின் துணிச்சலையும், தொழிலாற்றலையும் எடுத்தியம்பும் சாதனைச் சின்னங்களாக ஒளிருகின்றன!

எலக்ட்ரானிக் டிவிசனை ராம்கோ இண்டஸ்ட்ரீஸ் தொடங்கி உள்ளது. கம்ப்யூட்டர் மூலமாகப் பல்வேறு நூதனச் சாதனைகளை நிகழ்த்தி வரும் இந்த டிவிசனின் இதயமாக அமைந்து, அதன் நடைமுறை வளர் முகங்களுக்கெல்லாம், தமது அரிய நேரங்களை அர்ப்பணித்து வருகின்றார் இயக்குநர் பி.ஆர். வெங்கட்ராமராஜா. கெமிகல் இன்ஜினியரிங்கில் பி.டெக். பட்டம் பெற்று, அமெரிக்காவில் நிர்வாக இயலில் மேற்படிப்புப்பட்டம் பெற்றுள்ள பி.ஆர். வெங்கட்ராம ராஜா ராம்கோவின் எலக்ட்ரானிக் துறையைப் பல நாடுகளும், நிறுவனங்களும் நாடி வருமாறு செய்யும் முயற்சியில் நாளும் உழைத்து வருகின்றார்.

புகழ்மிக்க ராம்கோ

நிறுவனர் பெருந்தகை பி.ஏ.சி. இராமசாமி ராஜா, பொது நன்மைகளுக்காகத் தம் அரிய பொழுதுகளை அர்ப்பணித்தவர். மக்களுக்குத் தொண்டாற்றுகிற வாய்ப்பை எப்போதும் மகிழ்ச்சியாக ஏற்கும் இயல்பு கொண்டவர் அப் பெருமகனார். இராஜபாளையம் பஞ்சாயத்துத் தலைவராகவும், முதல் நகரவை சேர்மனாகவும் வீற்றிருந்த காலங்களில், நகருக்கும், நகர மக்களுக்கும் ஆற்றியுள்ள அரிய சேவைகள் ஏராளம். நகரும், தாம் வாழும் பகுதியும், நாடும், நலமும் வளமும் பெற்றோங்க நாளும் தொண்டாற்றிய பெருந்தகை அவர். பல்வேறு நிறுவனங்களைத் தொழிலாக மட்டும் உருவாக்காமல், சமுதாயப் பணியாகவே எண்ணி நிறுவினார். அப் பெருந்தகையின் நோக்கம் ஆக்கம் பெற்று, இராஜபாளையம் பகுதி தொழில் துறையில் மிகு செழுமை பெற்றுள்ளது. அப் பெருமகனார் தொடங்கி வைத்த நிறுவனங்கள் ஒருநாளும் முடங்கிக் கிடந்ததில்லை! கதவடைப்பும் நிகழ்ந்ததில்லை! வேலை நிறுத்தப்பட்டதுமில்லை! நிறகப்பட்டதுமில்லை! தொழிலாளர்களுக்குத் தோழமை உணர்வுடன் பரிவு காட்டும் பாங்கு, பெருந்தகை பி.ஏ.சி. ஆரின் உணர்வோடு ஒட்டிக்கிடந்த பெருங் குணம்! எனவே தமது நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலன்களைத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்தினார். நிறுவனங்களின் வளர்ச்சியில் மட்டுமின்றி, பணியாற்றும் தொழிலாளியின் வாழ்வைச் செம்மைப் படுத்தும் சீரிய முயற்சியிலும் 'ராம்கோ' புகழ்மிக்க நிறுவனமாகப் போற்றப் பெறுகின்றது.

அறுபத்தெட்டு ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்த அமரர் பி.ஏ.சி. ஆரின் திருவுருவச் சிலையை, தொழிலாளர்கள் மிகுந்த நன்றியுடனும் தகுந்த வாஞ்சையுடனும் நிதி திரட்டி, இராஜபாளையம் நகரில், அப் பெருமகனார் வாழ்ந்திருந்த ராம மந்திரத்திற்கு அருகே அமைத்து, அகம் நெகிழத் தொழுது வழிபட்டனர்!

கம்பீரமும், கருணையும், கனிவும் மிக்க அந்தத் திருவுருவச் சிலையின் திருமுகத்தைச் சற்றே உற்று நோக்கினால், இராஜபாளையம் பகுதியின் வளர்ச்சியை எண்ணிப் பெருமிதம் கொள்வதுபோல் தோன்றும்!

புகழ்மிக்க 'ராம்கோ' நிறுவனங்களின் அறச் சார்புடைய அமைப்புகள் (Charity Trusts) கல்வி வளர்ச்சிக்காக மக்களுக்கு ஆற்றி வரும் சேவைகளும், தொழில் நிறவனங்களில் தொழிலாளர்களின் வள வாழ்வுக்குச் செய்து வரும் நலப் பணிகளும் – தனிக் கட்டுரையாக இடம் பெறத் தக்க இதிகாசங்கள்!

ం°


திராவிட (தமிழ்) எழுத்தாலான தமிழ் நாட்டு மிகப் பழைய கல்வெட்டுகள்

தமிழ்நாடு மிக உயர்ந்த பழைமையான நாகரிகத்தைக் கொண்ட நாடு. வரலாற்று முற்காலத்தைச் சார்ந்த பழைய கற்காலக் கருவிகள், சிறு கற்கருவிகள், இரும்பு உபயோகப்படுத்தப்பட்ட (கி.மு. 8 ஆவது நூற்றாண்டு) காலக் கருவிகள், வரலாற்று ஆரம்ப காலத்தைச் சேர்ந்த பெருங்கல் புதைகுழிகள் போன்ற புதைபொருள் துறையினரால் ஆராய்ந்தறியப்பட்ட சின்னங்கள் தமிழகத்தின் தொன்மையான நாகரிகத்தை உணர்த்துகின்றன. வரலாற்று ஆரம்ப காலமான கி.மு. 3 ஆவது நூற்றாண்டிலிருந்தே தமிழகம் தனக்கே உரிய தமிழ் மொழி, தன் நாட்டிலேயே தொன்று தொட்டு பிறந்து வளர்ந்து அரசோச்சிய பாண்டிய, சோழர் போன்ற அரச பரம்பரைகளைக் கொண்டது போன்ற விவரங்கள் தெரியக் கிடைக்கின்றன. தொல்காப்பியம் தமிழின் இலக்கணத்தைப் பற்றிக் கூறும் நூல். சுமார் கி.மு. 200 ஆவது ஆண்டைச் சேர்ந்ததென தமிழ்மொழி வல்லுநர்கள் கருதுகிறார்கள். மௌரியச் சக்கரவர்த்தியான அசோகனின் (கி.மு. மூன்றாவது நூற்றாண்டு) கல்வெட்டுகள் இரண்டில் சோழ, பாண்டியர்களைத் தன் இராஜ்ஜியத்துக்கு அண்டையிலுள்ளவர்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. அசோகர் கல்வெட்டின் பிராமி லிபியில் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட வாசகமாவது:

ஸர்வத விஜிதம்ஹி தேவாநாம்பியஸ பியதஸிநோ ராக்ஞோ ஏவமபி ப்ரசம்தேஸ" யதா சோடா பாடா ஸதியபுதோ கேதலபுதோ ஆதாம்பபம்ணீ. (E. Hultzoch, Asokan Edicts No. II) இந்தக் கல்வெட்டு எழுதப்பட்ட ஆண்டு கி.மு. 257-256 ஆகும்.

இவ்வித வரலாற்றுத் தொன்மை வாய்ந்த தமிழகத்தில் பண்டைக் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் ஒரு சிலவே காணக்கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து விளக்கம் அளித்தவர்கள் 1905-20 ஆவது ஆண்டுகளில் மத்திய சர்க்கார் தொல்பொருள் ஆய்வுத்துறையின் கல்வெட்டு இலாகாவை நடத்தி வந்த பெரும் புலமை வாய்ந்த திருவாளர்கள் H.கிருஷ்ண சாஸ்திரியும், K.V.சுப்ரமண்ய அய்யருமாவர். இந்தக் கல்வெட்டுகள்

பேராசிரியர் பி.ஆர்.சீனிவாசன்




● மாங்குளம் (அரிட்டாபட்டி)
மதுரை ஜில்லா
கி.மு. 2வது நூற்றாண்டு

மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற ஜில்லாக்களில் உள்ள சில ஊர்களின் அருகே இருக்கும் குன்றுகளின் இயற்கைக் குகைகளின் மேல்புறத்திலோ, அல்லது தரை மட்டத்தில் படுக்கை போன்று செதுக்கப்பட்ட இடங்களிலோ பொறிக்கப் பட்டிருக்கின்றன. இவை எழுதப்பட்டுள்ள எழுத்துகள் அசோகர் மற்றும் அவருக்குப் பிற்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளில் காணப்படும் பிராமி என்ற (லிபி) எழுத்தமைதியைப் போல் இருப்பதால் மேலே குறிப்பிட்ட இருபெரும் கல்வெட்டு நிபுணர் களும், இந்த லிபியும் பிராமி லிபிதான் என்று தீர் மானித்தனர். இருப்பினும் அந்த நிபுணர்கள் இந்தத் தமிழகத்துக் கல்வெட்டுகள் தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன என்று கண்டனர். அதுமட்டுமின்றி இந்த அரும்பெரும் உண்மையை உலகத்துக்கும் அறி வித்தனர். திரு K.V சுப்ரமண்ய அய்யர் இக்கல்வெட்டு களை நுணுக்கமாக ஆராய்ந்து உண்மையை அறிந்து அவரது விளக்கவுரையுடன் ஒரு கட்டுரை எழுதி அதை 1924 ஆம் ஆண்டு நடந்த அகில இந்திய ஓரியண்டல் மாநாட்டில் பிரகடனம் செய்தார்.

1924 ஆம் ஆண்டுக்குப் பிறகு அண்மைக் காலத்தில் பெரியார், கோயம்புத்தூர், தென்னார்க்காடு மாவட்டங் களில் உள்ள சில ஊர்களிலும் இம்மாதிரி பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ் வகைக் கல்வெட்டுகள் எல்லாவற்றையும் ஒருமிக்க ஆராயச் சிலர் சமீபகாலத்தில் முற்பட்டு அவர்களது ஆராய்ச்சி முடிவுகளைப் பலப்பல இடங்களில் அவ்வப்போது பிரசாரம் செய்து வருகின்றனர். இவர்களில் ஒருசிலர் தாம்தான் இக்கல்வெட்டுகள் தமிழ் மொழியில் எழுதப்பட்டனவாக முதலில் கண்டறிந்தோம் என்று சொல்வதாக நினைக்கி றோம். இக்கல்வெட்டுகள் தமிழில் எழுதப்பட்டவை என்று ஏற்கெனவே திரு. சுப்ரமண்ய அய்யரால் அறியப்பட்டது என்று நாம் மேலே கூறியது தற் காலத்து ஆராய்ச்சியாளர்களின் கூற்றைப் பொய் யாக்கும். இந்த தற்காலப் புலவர்கள் இன்னுமொரு விஷயத்தையும் விடாமல் அடிக்கடி பிரசாரம் செய்து வருகின்றனர். அதாவது இக்கல்வெட்டுகள் எழுதப்பட்டிருக்கும் எழுத்தை இவர்கள் தமிழ்-பிராமி என விடாப் பிடியாகக் கூறி, எப்படி இல்லாத ஒரு விஷயத்தை அடிக்கடி சொல்வதால் அது இருப்பது போன்ற பிரமையை மக்களிடையே சிலர் ஏற்படுத்தி உண்மையை மறைத்துக் குழப்பத்தை உண்டு பண்ணு வார்களோ அம்மாதிரியே தமிழ்-பிராமி என்ற ஒன்று இல்லாத எழுத்தமைதி இருக்கிறது என்று பிரசாரம் செய்வதும் உண்மைக்குப் புறம்பாக உள்ளதாகும். இதை ஓர் எளிய உதாரணத்தால் விளக்கலாம். நம் நாட்டின் வடக்கே ஹிந்தி, குஜராத்தி, மராட்டி, ராஜஸ்தானி, சம்ஸ்கிருதம் போன்ற மொழிகள் வழக்கில் இருக்கின்றன. இந்த மொழிகளுக்கென்று தனித்தனி எழுத்தமைதி ஒன்று இல்லை. இம் மொழிகள் எல்லாம் தேவநாகரி அல்லது நாகரி என்ற பொது லிபியிலேயே எழுதப்படுகின்றன. இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விஷயமாவது இந்த பொது லிபியை, ஹிந்தி - நாகரி, குஜராத்தி - நாகரி, மராட்டி - நாகரி, சம்ஸ்கிருத - நாகரி என்று ஒருவரும் ஒருகாலும் சொல்வதில்லை. இதுபோலவே மேற்கத்திய நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ஜர்மனி போன்ற நாடுகளில் வழங்கும் மொழிகள் இங்கிலீஷ், பிரெஞ்சு, ஜர்மன் போன்றவையாம். இம்மொழிகளை எழுதும் லிபியோ ரோமன் லிபியாகும். இங்கு கவனிக்க வேண்டியது இந்தப் பொது லிபியான ரோமன் லிபியை, இங்கிலீஷ் - ரோமன், பிரெஞ்சு - ரோமன், ஜர்மன் - ரோமன் என்று அந்தந்த தேசத்து மொழியுடன் சேர்த்து ஒருவரும் கூறுவதில்லை. அசோக சக்கரவர்த்தியின் கல் வெட்டுகளும், அவருக்குப் பிற்காலத்தில் சில நூற்றாண்டுகள் வரையிலான கல்வெட்டுகளும் பிராகிருத மொழியில் பிராமி லிபியில் எழுதப்பட் டுள்ளன. கல்வெட்டு இலாகாவாலும் மற்ற கல் வெட்டு வல்லுநர்களாலும் இந்தப் பிராமி லிபியைப் பிராகிருத - பிராமி என்று ஒரு பொழுதும் கூறப்பட வில்லை. மேற்கூறியதிலிருந்து நாம் இங்கு கூறும் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகள் எழுதப்பட்டிருக்கும் லிபியை, தமிழ் - பிராமி என்று கூறுவது எவ்வளவு சரியில்லாதது என்பது எளிதில் புரியும்.

இதனால் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகள் எழுதப் பட்டிருக்கும் லிபியை எந்தப் பெயரில் அழைப்பது என்பது நோக்க வேண்டியுள்ளது. கல்வெட்டியல் நிபுணர்களான கிருஷ்ண சாஸ்திரி, சுப்ரமண்ய அய்யர் ஆகியோர் சொல்லியபடி இந்த லிபியைப் பிராமி லிபி என்று சொல்லுவது அவ்வளவு சரியானதாகத் தெரிய வில்லை. ஏனெனில் இந்தப் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகள் எழுதப்பட்டுள்ள லிபியில், அசோகச் சக்கரவர்த்திக் காலம் மற்றும் அவர் காலத்துக்குப் பிற்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் எழுதியிருக் கும் பிராமி லிபியிலுள்ள க,ச,ட,த,ப போன்ற சப் தங்களுடைய வர்க்க சப்தங்களுக்கென உள்ள எழுத்து கள் காணப்படவில்லை. ஆனால் 'ஸ' மற்றும் தர்மம் என்ற வடமொழிச் சொல்லின் முதல் எழுத்தான 'த' என்ற சப்தத்துக்கான எழுத்துகள் மட்டும் காணப் படுகின்றன. தவிர நம் கல்வெட்டுகள் எழுதப் பட்டுள்ள லிபியில் தமிழ் மொழிக்கே உரித்தான சப்தங்களான 'ழ', 'ள', 'ற', 'ன' போன்றவற்றிற்கு எனத் தனி எழுத்துகள் இருப்பது குறிப்பாக நோக்கத் தக்கது. இதனால் இந்த லிபிக்கு ஒரு தனிப்பெயர் இருந்ததாகக் கொள்வதே விஞ்ஞான பூர்வமாகச் சரியெனப்படுகிறது.

தொல்காப்பியத்தைப் பற்றி ஏற்கெனவே சொன் னோம். இந்தத் தமிழிலக்கண நூலில் எழுத்ததிகாரம் இருக்கிறது. இதில் ஒரு லிபியிலுள்ள எழுத்தமைதி விளக்கப்பட்டிருக்கிறது. இந்த எழுத்துகள் தமிழ் மொழியிலுள்ள சப்தங்களைச் சேர்ந்ததாக உள்ளது. ஆனால் இந்த லிபியின் பெயர் இந்நூலில் குறிப்பிடப் படவில்லை. தமிழிலக்கண நூலில் கூறப்படும் எழுத்துகள் தமிழ் லிபியைச்சேர்ந்தனவாகவேஇருக்க முடியும். இதனால் இதன் பெயரைத் தொல்காப்பியர் சொல்லாமல் விட்டிருக்கக்கூடும் என்று ஊகிக்க லாம். இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று கூற விரும்பு கிறோம். ஸம்ஸ்கிருதத்தின் இலக்கணத்தை எழுதிய முனிவர் பாணினி, தனது அஷ்டாத்யாயி என்ற நூலில் 'அ', 'க' போன்ற சப்தங்கள் எப்படி எங்கு இருந்து உற்பத்தியாகின்றன என்று கூறியுள்ளாரே தவிர, ஒரு லிபியின் எழுத்தமைதியைப் பற்றிக் கூறவில்லை. இதிலிருந்து அவர் காலத்திலேயே ஸம்ஸ்கிருத மொழி



● வேலாயுதம் பாளையம் (புகழூர்க்கருகில்) திருச்சிராப்பள்ளி மாவட்டம் — கி.பி. முதல் நூற்றாண்டு ஆரம்ப காலம்

பல லிபிகளில் எழுதப்பட்டு வந்ததோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

இம்மாதிரி பண்டைத் தமிழ் நாட்டில் வழக்கிலிருந்த தமிழ் மொழிக்கென தனி லிபி ஒன்று இருந்திருக்க வேண்டும் என்பதைச் சில பிராகிருத, ஸம்ஸ்கிருத மொழியிலான நூல்களிலிருந்து அறிய முடிகிறது. உதாரணமாக ஸம்ஸ்கிருத மொழியிலான லலிதவிஸ்த்தரம் என்ற ஒரு பௌத்த நூலில் புத்தபிரான் பல மொழிகள், கலைகள் கற்றதுடன் பல லிபிகளையும் கற்றார் என்று கூறப்பட்டுள்ளது. இந்த நூல் கி.பி. 2 ஆவது நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இதில் கொடுக்கப்பட்ட லிபி பட்டியலில், பிராமி, கரோஷ்டி, ஸங்க லிபி முதலியவற்றுடன் திராவிடி என்ற பெயருள்ள லிபி ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி அறியாத மக்கள் தொன்றுதொட்டு இம்மொழியைத் திரமிளம், திரவிடம் என்று பலவகையாகக் கூறிவந்துள்ளனர். அக்காலத்து தமிழரல்லாதார், பண்டைத்தமிழர்கள் எழுதி வந்த லிபியையும் திரவிடி, அல்லது திராவிடி என்றுதான் அழைத்திருக்கக்கூடும். இப்படிப்பட்ட பழந்தமிழ் லிபியையே, மேலே குறிப்பிட்ட லலிதவிஸ்த்தரத்தில் திராவிடி என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அந்நூலின் காலமான கி.பி. 2 ஆவது நூற்றாண்டிலேயே இந்த திராவிடி லிபி புகழ் வாய்ந்ததாக இருந்தது தெரிய வருகிறது. ஆகையால் நாம் இங்கு விவரிக்கும் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகள் எழுதப்பட்டிருக்கும் லிபியைத் திராவிடி என்று கூறுவதே சாலப் பொருத்தமாகும். வேறு விதமான பெயரால் இந்த லிபியை அழைப்பது, பிரசாரம் செய்வது சரியல்ல என்பது மேற்கூறியவற்றிலிருந்து நன்கு புலப்படும்.

நாம் இங்கு கவனித்து வரும் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகளில் மதுரை ஜில்லாவைச் சேர்ந்த மாங்குளம் என்ற ஊரிலுள்ள மலைக்குகையில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டுகளே மிகப்பழைமையானவை. இதன் எழுத்தமைதியை வைத்து இதன் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கொள்ளலாம். இவையே தமிழகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டுகளிலேயே மிகப் பழைமையானவை. இதற்கு முந்திய காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் ஏதும் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. இதேபோல் பண்டைத் தமிழ் அதாவது திராவிடி லிபியில் எழுதப்பட்ட பிற்காலத் தமிழ்க் கல்வெட்டுகள் ஈரோடுக்கு அருகிலுள்ள அரச்சலூரை அடுத்த மலைக்குகையின் தரைமேல் செதுக்கப்பட்ட படுக்கையில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை சுமார் கி.பி. 200 ஆவது ஆண்டைச் சேர்ந்தவையாகும். திராவிடி லிபியில் எழுதப்பட்ட பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகளில் இவையே காலத்தால் பிற்பட்டவை. இவற்றிற்குப் பின், வளர்ந்த தமிழ், வட்டெழுத்து லிபிகளில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் 4 ஆவது நூற்றாண்டு முதல் அதிகத் தொகையில் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன.

நாம் விளக்கி வரும் மிகப்பழைய தமிழ் கல்வெட்டுகள் இரண்டு மூன்றில் சங்ககால அரசர்கள் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று மதுரை ஜில்லா மாங்குளம் அதாவது அரிட்டாபட்டி என்ற கிராமத்தினருகில் உள்ள குன்றிலிருக்கும் குகையில் செதுக்கப்பட்டுள்ள ஒரு படுக்கை போன்ற பாகத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டின் படம் (No.1) இங்கு கொடுக்கப் பட்டுள்ளது. இதன் எழுத்தமைதியை வைத்து இதன் காலம் கி.மு. மூன்றாவது நூற்றாண்டு எனலாம். ஆகையால் இதில் வரும் பெயர்கள் மற்றும் பொருள்கள் அக்காலத்தைச் சேர்ந்தவை எனக் கூற முடிகிறது. இதன் வாசகமும் பொருளும் கீழே கண்டபடி: படத்தில் உள்ள எழுத்துகள்படி வாசகமாவது:

காணிய நாந்தா ஸிரியகு அன்
தாமாம இத நெடி ணசாழி
யான ஸாலாகான

இளஞ்சாடி கான
தாநதைய சாடி கான
செயா பாளிய

இதை நாம் இப்பொழுது படிக்க வேண்டிய முறையாவது :

காணிய் நந்த - சிரியகுவன் தமம்
இது நெடி ஞ்சழியன் ஸாலகன்
இளஞ்சாடி கன் தந்தை செய்
பாழிய்.

இதன் பொருள் :

இது (அதாவது கல்படுக்கை)
காணி - நந்தன் மகன் ஸிரி -
யகுவனின் தர்மம். இந்தப் படுக்கை
(பாழி) நெடுஞ்சழியன் மைத்துனன்
இளஞ்சாடிகனின் தந்தை
சாடிகனால் செய்யப்பட்டது.

இதில் வரும் நெடிஞ்சழியன் என்னும் பெயர் சங்க நூல்களில் வரும் ஒரு அரசனது பெயரைப்போல் உள்ளது. ஆனால் இந்தக் கல்வெட்டில் இந்தப் பெயருடன் அரசனைக் குறிக்கும் ஒரு அடைமொழியும் கொடுக்கப் பெறாததால், இந்த நெடிஞ்சழியன் ஒரு சாதாரண மனிதனைக் குறிக்கிறது என்றே கூறவேண்டியுள்ளது. ஏனெனில் இம்மாதிரிப் பெயரை அரச வம்சத்தினர் மட்டுமின்றி சாதாரண மனிதர்களும் வைத்துக் கொள்ளலாம். இந்த நெடிஞ்சழியன் கொஞ்சம் செல்வந்தனாக இருந்தான் என்று கருத இடமிருக்கிறது. இது இவன் செய்வித்த தர்ம காரியத்தில் இருந்து தெரிய வருகிறது.

இரண்டாவது கல்வெட்டு திருச்சிராப்பள்ளியில்லாவிலுள்ள புகழூருக்கு அருகிலுள்ள வேலாயுதம் பாளையம் என்ற கிராமத்துக்கு அருகாண்மையிலிருக்கும் ஆறு நாட்டார் மலையிலுள்ள குகைகளின் தரை மேல் படுக்கைகள் போல் செதுக்கப்பட்ட இடங்களில் ஒன்றின் மேல் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் படம் (No:2) இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது. இதனால் இதைச் சரியாகப் படிக்க முடியவில்லை. இதிலுள்ள எழுத்தமைதியை வைத்து இதன் காலம் சுமார் கி.பி. முதல் நூற்றாண்டின் ஆரம்பம் எனக் கூறலாம். கல்வெட்டில் உள்ளபடி இதன் வாசகமாவது :

வரி 1. து.மு.மண... யா... செரு.... றயெ...
வரி 2. ... கோ ஆ.... வலிரும புறமகன....
வரி 3. கடுஙகோன மகன கடுங்கோன ளிஙகடுங
வரி 4. கோ இளங கோ ஆகி ... பிதா கல...

மேற்குறித்த வாசகத்தை நாம் இப்பொழுது வாசிக்க வேண்டிய முறை :

வரி 1. து.மு. மண ... யா... செங்... றயெ...
வரி 2. ... கோஆ... லலிரும்புறை மகன் (பொ...)
வரி 3. கடுங்கோன் மகன் கடுங்கோன் (இ)ளங்கடுங்
வரி 4. கோ இளங்கோ ஆகி... பித கல்

இதன் பொருளை நன்றாக அறிய முடியவில்லை. இருப்பினும் இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் விஷயம்: சேரல் இரும்புறை மகன் கடுங்கோனின் மகன் கடுங்கோன் இளங்கடுங்கோன் என்பவன் இளங்கோ ஆகிச் செய்வித்த கல் என்பதாகும். இதில் வரும் பெயர்களை நாம் சங்க நூல்களில் காண்கிறோம். 'கோ' என்ற சொல் அரசன் என்பதைக் குறிப்பதால், இந்தக் கல்வெட்டு மூலம் மூன்று தலைமுறை அரசர்களை அறிய முடிகிறது. இவர்கள் அக்காலத்தில் கரூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசர்கள் எனக் கொள்ளலாம்.

இன்னும் பல அரிய விஷயங்களை நாம் இப் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. அவற்றில் ஒரு முக்கியமானதை மட்டும் இப்போது கூறி நிறுத்துவோம். அது என்னவெனில், மேலே நாம் கூறியபடி, இக்கல்வெட்டுகளில் பெரும்பாலானவை, மலைகளில் உள்ள இயற்கைக் குகைகளின் தரையில் செதுக்கப்பட்ட படுக்கைகள் போன்ற இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு சிறப்பு அம்சம் இந்தப் படுக்கைகள் மெருகு ஏற்றப்பட்டு வழவழப்பாகச் செய்யப்பட்டிருப்பதாகும். இப்படிச் செய்வதனால் இதில் படுப்பவர்கள் உடல் வருத்தப்படாமல் இருக்கும். இந்த விதமாகக் கருங்கல்லை வழவழப்பாகச் செய்வது அந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் வழக்கிலிருந்ததற்கு இப்படுக்கைகள் எடுத்துக்காட்டாக உள்ளன. இந்தச் சமயத்தில் இந்த நுண்ணிய வேலைப்பாடு இந்தியாவில் வேறு எங்காவது அக்காலத்தில் வழக்கிலிருந்ததா என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம். முதலில் நாம் குறிப்பிட்ட மௌரிய அசோகச் சக்கரவர்த்தியின் கல்வெட்டுகளில் சில தனித்தூண்களின் மேல் பொறிக்கப்பட்டுள்ளன. அத்தூண்கள் காசிக்கு அருகே உள்ள சுனார் என்ற இடத்தில் இருக்கும் மண்பாறையில் இருந்து பெயர்த்து எடுக்கப்பட்டன. இவற்றின் மேல் கல்வெட்டுகள் பொறிப்பதற்கு முன், இவை மெருகேற்றப்பட்டன. இது தவிர, ஒவ்வொரு தூண்களின் உச்சியிலும் ஒரு விலங்கின் உருவச்சிலை வைக்கப்பட்டது. இச்சிலையும் மெருகு எற்றப்பட்டு, வழவழப்பாகச் செய்யப்பட்டுள்ளது. இம்மாதிரி கல்லை மெருகேற்றும் கலையை அசோகரது சிற்பிகள் மெசொபொடேமிய சிற்பிகள் மூலம் அறிந்திருக்கலாம் என்று நுண்கலை வரலாற்றறிஞர்கள் ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள். ஆனால் தென்னிந்தியாவின் தென்பாகத்தில் உள்ள பாண்டிய நாட்டில் கி.மு. 3 ஆவது, 2 ஆவது நூற்றாண்டுகளிலே செய்யப்பட்ட மேற்கூறிய படுக்கைகளின் வழவழுப்பான செயல்பாட்டிலிருந்து இந்த நுண்ணிய வேலைப்பாடு அக்காலத் தமிழகச் சிற்பிகள் அல்லது கல் தச்சர்களிடம் வழக்கிலிருந்தது கவனிக்கத்தக்க விஷயமாகும். ✤

மௌனக் கனவுகள்

நிர்மலா சுரேஷ்



நெஞ்சுக்குள் உன்னை வைத்துக்
கண்துயில முயலும் வேளை,
கரை கடக்கும் கனவுகளில்,
காந்த மின்னல்களில்
குங்குமப்பூ கூடு கட்டி
கிளியிரண்டு குடியேறும்;
பாதரசம் பூப்பூக்க
பால்வீதி சிலிர்த்திருக்கும்;
மகரந்த விரிப்புகள்
மஞ்சள் குளித்திருக்கும்;
பவளப் படகுகளில்
முத்தங்கள் சஞ்சரிக்கும் ;
ஏணிகளும் குழலாகி
ஏழுசுரம் பாடி நிற்கும்;
வானவில்லை மரத்தில் கட்டி
வசந்தங்கள் ஊஞ்சலாடும்;
இந்திர சாகசத்தை வீழ்த்தி
மலர்கணைகள் வெல்லும்;
ஆடிக் காவிரியில்
பௌர்ணமிகள் நீந்தி வரும்;
விண்ணுக்கும் மண்ணுக்கும்
இடையிலொரு பாலம் எழும்;
பறக்கும் கம்பளங்கள்
காதற் பல்லக்கு ஆகும்;
தொட்டாற் சிணுங்கிச் செடியில்
மனோரஞ்சிதம் அரும்பும்;
தூரத்துப் பச்சையெல்லாம்
வீட்டுத் துளசிமாடமாகி விடும்;
நான்கு விழிப் பார்வைக்குள்ளே
பிரபஞ்சம் தனை இழக்கும்;
இதயத் துடிப்புகளே
திருப்பாவை இயற்றி விடும்!

"தாத்தா, கொள்ளுப் பாட்டியைப் பார்த்தா ஆந்தை மாதிரி இருக்கு. ஆந்தைக்கு இங்கிலீஷ்லே என்ன பேரு.."

"ஔல்."

பாச்சா, பத்திரிகையிலிருந்து கண்களை எடுக்காமலேயே சொல்கிறார்.

பத்து வயசுப் பேரன் சித்தார்த் இரு கைகளையும் கொட்டிக் கொண்டு குதிக்கிறான்.

"ஹைய்யா...அவுல்...அவுல்..."

கூடத்துச் சுவரோரமாய் போடப்பட்டிருந்த மர பெஞ்சில், முழங்கால்களைச் சேர்த்து மார்புக் கூட்டோடு கட்டியபடி அமர்ந்திருந்த கிழவிக்கு, கண் பார்வையில் இருந்த தெளிவு, செவிகளில் இல்லை. அதற்காக டமாரச் செவிடும் இல்லை.

கொஞ்சம் உரக்கப் பேச வேண்டும்.

சிறுவன் என்ன சொல்கிறான் என்பது புரியாவிட்டாலும், தன்னைப் பார்த்துதான் குழந்தை உற்சாகமாய் குதிக்கிறான் என்பது புரிகிறது அவளுக்கு. பொக்கை வாய் திறந்து சிரிக்கிறாள்.


"இங்கே வாடா கண்ணு..."

சிறுவன் அருகில் வராமல் - இன்னும் கொஞ்சம் எட்டிப் போய் நின்று; குதிக்கிறான்.

"அவுல்...அவுல்.."

இந்த முறை சற்று இரைந்து -

"என்னது, அவுட்டா... எங்கேடா... அடியே யாரு அங்கே... குழந்தை தனியா நின்னு அவுட்டு



காலச் சுமைதாங்கி

அனுராதா ரமணன்

வாணம் வைக்கிறாப்பல இருக்கு... சித்த கவனி.."

"ஆமா. அவுட்டு. எங்கே, நான் கூட அவுட்டாயிடுவேன்போல இருக்கு... எல்லாருடைய ஆயுசையும் சேர்த்து வச்சு நீ இரு..."

பாச்சா, கையிலிருந்த செய்தித்தாளை விட்டெறிந்து விட்டு எழுந்திருக்க - பக்கத்திலேயே பெண் வயிற்றுப் பேத்திக்கு மருதோன்றி அரைத்து இட்டுக் கொண்டிருந்த அலமேலு, கணவனைப் பார்த்து அதட்டுகிறாள்.

"கல்யாணமும், பண்டிகையும் வர்ற சமயத்துல என்ன பேச்சு இது?"

"பின்னே பாரேன். உபயோகமா இருந்த வரைக்கும் ரெண்டு பொண்களும் மாத்தி மாத்தி வச்சுட்டு இருந்தாளுங்க. இப்ப பேரிச்சம்பழக்காரனுக்குப் போடற நசுங்கின அலுமினியக் குண்டான் மாதிரி ஆனதுக்கு அப்புறம் நிரந்தரமா இங்கே கொண்டு வந்து தள்ளியாச்சு."

மகனின் முக பாவத்திலிருந்து, தன்னைப் பற்றி மனைவியிடம் என்னமோ கோபமாய்ச் சொல்கிறான் என்பது நன்றாகப் புரிகிறது செல்லத்துக்கு.

கோலி குண்டு மாதிரி கண்கள் பளபளக்க எல்லாரையும் பார்த்தபடி அமர்ந்திருக்கிறாள்.

வீடு கொள்ளாத கும்பல். பாச்சா என்கிற பார்த்தசாரதியே சென்ற வருடத்தை விடவும் - இந்த தீபாவளிக்கு தளர்ந்து போய் விட்டார்.

சும்மாவா? அவருக்கே இந்த தை வந்தால் எழுபத்தியொன்று முடியப் போகிறதே!


அப்படியானால் அவரைச் சீமந்த புத்திரனாகப் பெற்றெடுத்த செல்லத்துக்கு?

பேரன், பேத்திகளில் யாராவது, போகிற போக்கில் கிழவியிடம் இப்படியொரு கேள்வியைக் கேட்டு விட்டுப் போய் விடுவார்கள்;

"பாட்டி, உங்களுக்கு என்ன வயசாறது..."

அவ்வளவுதான். பிரபவ - விபவ என்று ஆரம்பித்து அறுபது வருடங்களின் பெயரையும் சொல்லி முடித்து, இரண்டாவது ரவுண்டு வருவதற்குள் காக்கா மாதிரி உட்கார்ந்த இடத்திலேயே தூங்கி விடுவாள் செல்லம்.

"எண்பத்தியொம்பது வயசா! இத்தனை வயசு எதுக்காக இருக்கணும்?"



செல்லத்தைப் பார்த்துக் குடும்பமே பெருமூச்சு விடும்.

செல்லத்துக்குக் காதுதான் மந்தமே தவிர - மூளை மந்தமில்லை. என்ன செய்ய? அவளும் ஒவ்வொரு ராத்திரி படுக்கும் போதும்; 'பகவானே - ஊருக்கெல்லாம் நல்ல பொழுதாய் விடிகிற நாளையப் பொழுது - என் வரையில் விடியாமலேயே போகட்டுமே' என்று மானசீகமாய் பிரார்த்திக்கிறாள்.

அவளும்தான் காலச் சுழற்சியில் எத்தனை பார்த்து விட்டாள்! எத்தனை பேருக்குச் சரீரத்தில் தெம்பு இருக்கிற வரையில் அலுக்காமல் செய்திருக்கிறாள்!

நேற்று பூத்த பூவும், பிஞ்சும் காற்றோடு பறக்க - இந்தச் சருகு மட்டும் இத்தனை புயலுக்குப் பின்னும் ஆடாமல், அசையாமல் இருப்பது அதிசயம்தான்.

பாச்சாவுக்கு இன்னும் கொஞ்ச நாள் போனால் தனக்கே எந்தப் பிள்ளை செய்வான் என்று புரியவில்லை.

பணம் இருக்கிறது. அதனால் - அவருக்குக் குடும்பத்தில் மரியாதையும் இருக்கிறது.

பாச்சாவின் பெரிய பிள்ளை அமெரிக்காவில் இருக்கிறான். போன வருஷமே பாச்சா, மனைவியுடன் பிள்ளையைப் பார்க்கும் சாக்கில் அமெரிக்கா போய் வர ஆசைப்பட்டார்.

எங்கே, இங்கேதான் காலில் கல்லைக் கட்டி விட்டாற் போல செல்லம் இருக்கிறாளே!

இதோ - இப்பொழுது தீபாவளிக்கு, பெரியவன் சின்னவன் இரண்டு பேருமே குடும்பத்தோடு வருகிறார்கள். பெரியவனின் பெண்ணுக்குத் தீபாவளி முடிந்த கையோடு கலியாணம் நிச்சயமாகி இருக்கிறது.

"சனியனை எங்கேயாவது கொஞ்ச நாளைக்குத் தொலைச்சுத் தலை முழுகலாம்னா முடியறதா பாரேன்!"

அலமேலுவின் குரலுக்கு மைக் வேண்டாம். மேலும், மாமியாரின் காதில் விழ வேண்டும் என்றே சத்தம் போட்டுச் சொல்கிறாள்.

செல்லத்துக்குக் கண் கலங்கி விட்டது. அடி வயிற்றிலிருந்து ரோஷம் கொப்புளித்துக் கொண்டு வருகிறது.

'நான் என்ன கேட்கிறேன்? சாதம்கூட சாப்பிடறதில்லே. ஜீரணமாக மாட்டேங்கறது. ரெண்டு வேளை கஞ்சி. அப்பப்போ தொண்டைக்கு இதமா வென்னீர், மத்தபடி நானே குளிச்சுக்கறேன். வயசான கோளாறு. பாத்ரூம் வரைக்கும் எழுந்து போறதுக்குள்ளே புடைவையை நனைச்சுக்கறேன். அதையும் நானேதானே துவைச்சு உலர்த்திக்கிறேன்!'

எழுபது வயசு வரையில் ரத்தக் கொதிப்புக்கென்றும், மார்புச் சளிக்கென்றும் ஏதோ ஓரிரண்டு மாத்திரைகளைப் போட்டுக் கொண்டிருந்தவள் - நாளடைவில் அதையும் நிறுத்தி விட்டாள்.

'ஏன் நிறுத்திட்டே? வாங்கித் தரட்டுமா?' என்று பாச்சாவோ, மற்ற இரண்டு பெண்களுமோ ஒரு நாளும்கேட்டதில்லை.

ஆனால் பெண்கள் மாத்திரம் - வந்து போகும் போதெல்லாம் அம்மாவுக்கு உறைக்கிறாற் போல நாலு வார்த்தை சொல்லாமல் போகமாட்டார்கள்.

அதுவும் இளையவள் கல்பகமாவது அம்மாவுக்கு அறிவுரை சொல்வது போலச் சொல்வாள். பெரியவள் மீனாட்சிக்கு எல்லாமே 'படபடா'தான்.

"அம்மா, மன்னி சொல்றா, சொல்றான்னா ஏன் சொல்ல மாட்டா? அவளுக்கும் ரெண்டு மாட்டுப் பொண் வந்தாச்சு. அக்கடான்னு போய், மாமியாரா லட்சணமா எங்கேயும் உட்கார முடியலே. எப்பவும் நீயொரு கால் கட்டு. அந்த வெறுப்புல வார்த்தை வெடிக்கத்தான் செய்யும். இதோ பாரு... எனக்கே அறுபத்திரண்டு வயசாகப் போறது. காடராட் ஆபரேஷன் செஞ்சுக்கணும். வீட்டுலயானா உன் மாப்பிள்ளைக்கு இன்னமும் அந்தக் காலம்னு நினைப்பு. காபியிலேயிருந்து, மருந்து மாத்திரை வரைக்கும் நான் சின்னக் குழந்தை மாதிரி ஓடி ஓடிச் செய்ய வேண்டியிருக்கு. இதையெல்லாம் பார்க்கறச்சே, பாச்சாவுக்கும் அவன் பெண்டாட்டிக்கும் கோயில் கட்டிக் கும்பிடலாம்."

அவள் சொல்லி முடிப்பதற்குள்ளேயே மீனாட்சி எகிறிக் குதிப்பாள்.

முக ஜாடையிலிருந்து, சுபாவம் வரையில் எல்லாமே, அவளும் பாச்சாவும் தங்கள் அப்பாவை அப்படியே உரித்து வைத்திருந்தனர்.

"இந்தாடி கப்பு. நீ என்ன நீ குழந்தைக்குச் சொல்ற மாதிரி, உட்கார்ந்து சொல்லிட்டிருக்கே? வயசாகல்லையா? அம்மா, இதப் பாரு கடுப்போ, துடுப்போ, இத்தனை வயசுக்கு மேல நீ இங்கே தான் இருந்தாகணும். எங்களை மாத்திரம் அங்கே யார் தாங்கறதா நினைச்சிட்டிருக்கே? உன் பெரிய பேரன் விச்சு பெண்டாட்டி, நான் நின்ன எடத்துல நிற்க மாட்டேங்கறா. 'மாமியார் மண்டையப் போட்டா - பால் பாயசம் வச்சு சாப்பிடுவேன். அன்னிக்குத்தான் எனக்குத் தீபாவளி'யின்னு வேலைக்காரி கிட்ட சொல்லிண்டிருக்கா. உனக்கு இங்கே இன்னமும் நடக்கறதேயின்னு சந்தோஷப்படு..."

செல்லம் அப்படியே கோழிக் குஞ்சு போல, அமுங்கி உட்கார்ந்து விடுவாள்.

'வயசாக ஆக என்ன பேச்சு பேசறதுகள் இதுகள்...'

செல்லத்துக்கு இன்னமும் தனது பிரசவத்திலிருந்து, இவர்களை வளர்த்து ஆளாக்கியது வரையில் ஞாபகத்தில் இருக்கிறது.

பதினெட்டு வயசில் பாச்சா பிறந்தான். குடும்பத்துக்கே அதிசயமாய் ஆண் குழந்தை... செல்லத்தின் கணவர் மகாதேவன் - அவர் பெயரைத்தான் பாச்சாவின் பேரனுக்கு வைத்திருக்கிறது. மாமியாரைக் கிழம், ஜடாயு, சனியன் என்று நாமகரணமிட்டு அழைக்கும் அலமேலுவுக்கு மாமனாரின் பெயரை மண்டையிலடித்தாற் போலக் கூப்பிடத் தயக்கமாக இருந்ததால் 'சித்தார்த்' என்று கூப்பிடுகிறார்கள் - அந்த மகாதேவன் சாதாரண குமாஸ்தா வேலையில் இருந்தாலும் குழந்தையின் இடுப்புக்குத் தங்க அரைஞாணும், கழுத்துக்குச் சங்கிலியுமாய் இழைக்கத்தான் செய்தார்.

இந்தப் பாச்சாவுக்கும் குழந்தையில் அம்மாவின் மீது கொள்ளை பிரியம். யாராவது குழந்தையைச் சீண்ட வேண்டுமென்றால் 'இதோ பாரு, உங்க அம்மா முதுகுல நாலு சாத்து சாத்தப் போறேன்...!' - என்று கையை ஓங்கினால் போதும் 'ஓ'வென அலறுவான்.

இப்பொழுது தன் குழந்தைகள் வந்தால் காலை வீசி நடமாட முடியாமல் பெஞ்சு இடிக்கிறதாம். போதாக் குறைக்கு, உட்கார்ந்திருக்கும் இடத்திலேயே அம்மாவின் சுவாதீனத்தில் இல்லாமலேயே இயற்கை உபாதைகளும் நேர்ந்து விடுவதால் கூடமே நாற்றமெடுத்துப் போய் விட்டதாம்.

அலமேலு அவ்வப்போது முணுமுணுத்துக் கொண்டே ஃபெனாயில் கரைத்த தண்ணீர் பக்கெட்டையும், துடைக்கும் துணியையும் கொண்டு வந்து 'டொக்'கென வைத்து விட்டுப் போவாள். செல்லமே, தேரை மாதிரி மெள்ள சுவரைப் பிடித்தபடி எழுந்து, தானே துடைத்து...

'ஈசுவரா... இந்தக் கையாலே எத்தனை குழந்தைகளுக்குச் செஞ்சிருக்கேன். என்னை ஏன் இப்படி சித்ரவதை செய்யறே!'

பாச்சாவுக்கு, தன் பெண்டாட்டி அலமேலு நாற்பத்தி மூன்றாம் வயசில் கர்ப்பப்பை கோளாறு வந்தபோது, உதிரப்போக்கு கட்டுக்கடங்காமல் கட்டிலில் கிழித்த நாராகக் கிடந்த போது - செல்லம் தன் பூஜை, ஆசாரத்தை எல்லாம் மூட்டைக் கட்டி வைத்து விட்டு, அவளைக் குளிப்பாட்டுவதிலிருந்து சோறூட்டுவது வரையில் எல்லாம் செய்யவில்லையா? அப்பொழுது இந்த அம்மா காபிக்கு சர்க்கரை போல, குழம்புக்கு உப்பு போல வேண்டியிருக்கவில்லையா?

பாச்சா என்கிற பார்த்த சாரதிக்கு அடுத்து மீனாட்சி. அவளுக்கு அப்புறம் கல்பகம், அபயம்.

மீனாட்சிக்குப் பதினெட்டு வயசில் கல்யாணம். கல்பகத்துக்கு அப்பொழுது வயசு பதினைந்து. வரன் வந்து கொண்டிருந்தது. அதே சமயத்தில் கல்லூரியில் எம்.ஏ. படித்துக் கொண்டிருந்த பாச்சாவுக்கும் கல்யாண மார்க்கெட்டில் மவுசு அதிகமாக இருந்த நேரம்.

"கப்புவுக்கு ஓர் அசமுடையானைப் பார்த்து முடிச்சிட்டு - அப்புறமாத்தான் பிள்ளையோட ஜாதகத்தையே கையில எடுக்கப் போறேன்."

இப்படிச் சொல்லிக் கொண்டிருந்த மகாதேவனின் மண்டையிலடித்தாற்போல - தன் நாற்பத்திரண்டாவது வயசில் நாலாவதாக ஒரு பெண்ணைப் பெற்றெடுத்தாள் செல்லம். அவள்தான் அபயம்.

மீனாட்சியின் புகுந்த வீட்டார் எல்லாம் கை கொட்டித்தான், சிரித்தார்கள்.

செல்லத்துக்கு இப்பொழுது நினைத்தாலும் அன்று பெரியவர்கள் பேசிய வார்த்தைகளும், தாலிகட்டிய கணவனும், பெற்ற குழந்தைகளுமே, 'என்னமோ தப்பு செய்து விட்டாற் போல' அவளைப் பார்த்த பார்வைகளும், கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பாச்சா, அம்மாவுக்குக் குழந்தை பிறந்த செய்தி கேட்டு ஒரு வருஷம் போல வீட்டுப் பக்கமே வராமல் இருந்ததும், அப்படியே அவன் வந்தபோது - அவனது முகத்தை ஏறிட்டுப் பார்க்கக் கூசிய மகாதேவன் தூணையும், விட்டத்தையும் பார்த்துக் கொண்டு பேசியதும், இத்தனை வயசுக்கும் மறக்கவில்லை.

அபயமும், மீனாட்சியின் பிள்ளையும் அநேகமாய் ஒரே வயசு.

இன்றைக்கு அவள் உயிரோடு இருந்தால் நாற்பத்திரண்டு வயசு இருக்கும். உயரத்திலும், நிறத்திலும் மட்டுமல்ல, பேச்சிலும், படிப்பிலும்கூட அலாதி சமர்த்துதான்.

ஸ்கூல் ஃபைனலை முடித்ததும், குழந்தை படிப்பை மேலே தொடர ஆசைப்பட்டாள்.

'அதெல்லாம் நம்ம குடும்ப வழக்கமில்லை' என்று மகாதேவன், அவளை வீட்டிலேயே முடக்கிப் போட்டார். ஜாதகக் கட்டை எடுத்துக் கொண்டு ஓடியாட உடம்பில் தெம்பில்லை. எல்லாவற்றுக்கும் - எல்லாவற்றுக்கும் என்றால் பஸ் பிடித்து மயிலாப்பூரிலிருந்து, மாம்பலம் போக வேண்டுமென்றால்கூட, சில் லறைக்கு மகனை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலை.

பாச்சாவுக்கு அப்பொழுது பத்திலும், எட்டிலும் பிள்ளைகள். ஆறிலும் நாலிலும் பெண்கள். அடுத்தடுத்துப் பெண்டாட்டியின் பிரசவத்தைக் கவனிக்கவும், சவலைக் குழந்தைகளுக்கு மருந்தும், டானிக்குமாய் வாங்கித் தரவுமே சம்பளப் பற்றாக்குறை.

ஒருநாள் மகாதேவன், அபயத்தின் திருமணத்தைப் பற்றிப் பேச்செடுக்க - ஏற்கனவே ஏதோ எரிச்சலில் இருந்த பாச்சா, தந்தையிடம் 'சுள்'ளென எரிந்து விழ...

"கல்யாணம், கல்யாணம்னா காசுக்கு எங்கே போறது? இங்கே என்ன கொட்டியா வச்சுக்கிடக்கு?"

"அதுக்காகப் பார்த்தா - வயசு ஏறிண்டே போறது இல்லையா பாச்சா. பதினெட்டு வயசுக்கு மேல நம்ம குடும்பத்துல பொண்களைக் கலியாணம் செஞ்சு கொடுக்காம வீட்டோட வச்சுக்கற வழக்கமில்லே..."

"ஆமா... பெரிய வழக்கம்... அம்பது வயசுக்குப் பொண்ணைப் பெத்துக்கறது மட்டும் நம்ம குடும்பத்துல வழக்கமா? யாருக்கு நம்ம குடும்பத்துல இப்படிப் பொறந்திருக்கு? அது எப்படி வழக்கமில்லையோ - அது மாதிரி இதையும் கொஞ்சம் மாத்திக்கலாம். தோஷமில்லை."

அவ்வளவுதான். தரையோடு வைத்துத் தேய்த்தாற்போலக் குன்றிப் போய் விட்டார் மகாதேவன். அபயம் டைப் கிளாசுக்குப் போனாள். தையல் வகுப்புக்குப் போனாள். பெற்றவர் எதையுமே கண்டு கொள்ளவில்லை. இந்தப் பேச்சு வார்த்தை நடந்து சரியாய் நாலே மாதத்தில் கண்ணை மூடி விட்டார் மனிதர்.

'அந்த ஒரு சொல் தாங்கலையே அவருக்கு? நான் தினமும் எத்தனை வார்த்தைகளை வாங்கிக் கட்டிக்கிறேன்! என்ன ரோஷமில்லாத ஜென்மம் நான்!'

செல்லத்தின் தலையில் மகாதேவன் கல்லைத் தூக்கிப் போட்டார் என்றால் - அபயம் இடியையே இறக்கினாள்.

வீட்டில் யார் பேச்சைத் தாங்க முடியாமல் போனதோ - இல்லை - முன்னதாகவே திட்டம் போட்டு வைத்திருந்தாளோ - வீட்டை விட்டு ஓடிப் போய் விட்டாள் அபயம்.

பெற்ற பாவத்துக்குச் செல்லம் தான் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுதாள். பாச்சா -

என்னோட மூணாவது தங்கை செத்துப் போயிட்டா' - என்றே சொல்ல ஆரம்பித்து விட்டார்.

அப்புறம்தான் தெரிந்தது. அபயம் டைப்ரைட்டிங் கிளாஸில் தன்னுடன் படித்த வின்செண்ட்டுடன் ஓடியது.

ஒருநாள் இருவரும் செல்லத்தைத் தேடி வந்தபோது வாசலிலேயே விரட்டி விட்டு விட்டார் பாச்சா.

'அந்த அபயம் ஒருத்திக்குத்தான் நான் என் கையாலே பிரசவம் பார்க்கலே. ஏதோ ஒரு பிள்ளையும் பொண்ணும் இருக்குன்னு எப்பவோ மீனாட்சி சொன்னா...'

அபயத்தை நினைத்தாலே கண்கள் குளமாகி விடும் கிழவிக்கு. மீனாட்சிகூட, 'வெடுக்'கெனக் கேட்டாள்.

"என்ன, உன் செல்லப் பொண் ஞாபகமாக்கும்."

தொண்டைக் குழியில் துக்கம் இம்சிக்க - தலையை ஆட்டுவாள் செல்லம்.

அதற்குப் பின் - இந்தக் குடும்பத்தில்தான் எத்தனை மாறுதல்கள்...

ஓர் அபயத்தை வாசலோடு நிறுத்தி வைத்து விரட்டிவிட முடிந்த பார்த்தசாரதியினால் - தனது இரண்டாவது மகன் பார்ஸிப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு வந்து நின்றபோது ஒன்றும் செய்ய முடியவில்லையே! ஊரையெல்லாம் அழைத்து, உட்லண்ட்ஸ்ஸில் வரவேற்பு கொடுத்தார். இரண்டாவது பெண் முதலியார் பையனைக் காதலிப்பதாகச் சொன்னபோது - சம்பந்தியாக வரப் போகிறவரை வீட்டுக்கு வரவழைத்துப் பேசி, கல்யாணத்தை டில்லியிலேயே வைத்துக் கொண்டார்.

பாச்சாவின் குடும்பத்தில் மட்டும்தான் என்றில்லை... மீனாட்சியின் இரண்டாவது மகள் கணவனை விவாகரத்து செய்து விட்டு, வேறு ஒருவனை மணந்தபோது - பெரியவராய் லட்சணமாய் இருந்து நடத்திக் கொடுத்தார். கல்பகத்தின் கடைசிப் பையன் - அமெரிக்காவில் தன்னை விடவும் ஆறு வயசு மூத்த அமெரிக்கப் பெண்ணை மணந்து, ஒரு பிள்ளையையும் பெற்ற பின் தன் பெற்றோருக்கு விஷயத்தைத் தெரிவிக்கப் பயந்து மாமாவிடம்தான் போனில் பேசினான்.

"அப்படியா! கங்கிராட்ஸ் கங்கிராட்ஸ். நீ எதுக்கும் பயப்படாதேடா கண்ணா. நீ என்ன பண்றே. குழந்தையோட நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து இருக்கற மாதிரி ஒரு போட்டோ எடுத்து அனுப்பிடு. நான் உங்க அம்மா, அப்பாவைக் கன்வின்ஸ் பண்ணறேன்."

இன்று குடும்பத்தில் உள்ள சின்னஞ் சிறுசுகளுக்கெல்லாம் சிறந்த ஆலோசகராக இருக்கும் மனிதர் அன்று தன் தங்கையின் விஷயத்தில் எத்தனை சாதாரணமாக சராசரிக்கும் கீழே நடந்து கொண்டார்?

இதேபோல ஒரு புரட்டாசி மாதத்தில்தான் அபயம் இறந்து விட்டதாகத் தந்தி வந்தது.

என்னமோ, 'சமையல் காஸ் தீர்ந்து போச்சு' என்கிற விஷயத்தைச் சொல்கிற மாதிரி - அலமேலு தந்தியைப் படித்துச் சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

செல்லம்தான் - தன் வயிற்றில் அவளுக்கு இடம் கொடுத்த பாசத்தின் விளைவாக மாலை மாலையாய்க் கண்ணீர் விட்டாள்.

"தந்தி வந்திருக்கு. இங்கே திருச்சியிலதான் போல இருக்கு. நமக்காகப் போட்டு வச்சிருப்பாளோ? நான் வேணா..."

பாச்சா, தாயை முறைத்துப் பார்த்தார்.

"நாங்கள்ளாம் அவளை எப்பவோ தொலைச்சுத் தலை முழுகியாச்சு. உனக்கு வேணும்னா தாராளமாப் போ. என்னிக்கோ, அம்மா அண்ணன்னு இருந்த எல்லா பந்தங்களையும் உதறிட்டு ஓடினவளைப் போய்ப் பார்த்துக் கட்டிட்டு அழணும்னா அழு. ஆனா மறுபடியும் இந்த வீட்டுப் படியேறக் கூடாது. நான் ஒரு பிள்ளை இருக்கறதையே மறந்துடலாம்."

இன்றைக்கும்கூட எப்பொழுதாவது நினைத்துக் கொண்டால் - மென்னியை இறுகப் பிடிப்பது போல துக்கம் அழுத்தும் செல்லத்துக்கு.

'இதோ... ரெண்டு வேளை கஞ்சி. இவங்க கட்டிட்டுப் போட்ட பழம் புடைவை. இந்தப் பெஞ்சு மூலை. இதுதான் சாசுவதம்னு உன்னை வந்து பார்க்காமலேயே இருந்துட்டேனேடி நான்...'

அன்று அம்மா - செத்துப் போன மகளைப் பார்க்கப் போனால் மறுபடியும் சேர்த்துக் கொள்ள மாட்டேன் என்று நிபந்தனை போட்ட பாச்சா - இன்று அதே அம்மாவை வாசற்படியை விட்டு இறக்குவது எப்படி என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்.

பிள்ளைகள் குடும்பத்துடன் வரும் முன் கூடம் காலியாக வேண்டும்.

"பேசாம 'விஷ்ராந்தி'யில சேர்த்துடுங்க.."

"அது கொஞ்சம்... பொண் பிள்ளை இல்லாத அநாதைன்னா சரி... நாங்க மூணு பேர் - ஒரு பிள்ளை - ரெண்டு பொண்ணு இங்கேயே இருக்கோமே..."

"அதனாலே என்ன... உங்களுக்கும், உங்க தங்கைகளுக்குமே வயசாகல்லையா... இப்படியே யோசிச்சிட்டிருந்தா நமக்கே ஏதாவது, ஓல்டு ஏஜ் ஹோமைத் தேடிப் போக வேண்டிய காலம் வந்துடும்... வந்தாச்சு..."

அலமேலு விரட்டினாள். பாச்சா, இருக்கிற முதியோர் இல்லத்தை எல்லாம் பார்வையிட்டு விட்டு வருகிறார். எது அம்மாவுக்கு வசதியாக இருக்கும் என்பதற்காக அல்ல... எது அதிகமாய் செலவை இழுத்து விடாமல் இருக்கும் என்கிற தேடல்..

"சொல்லுங்கோ... நானே ரிடையர் ஆயாச்சு. கவர்ன்மெண்ட் உத்தியோகமில்லே... பென்ஷன் கூடக் கிடையாதுன்னு சொல்லுங்கோ... எங்க பொழப்பே பிள்ளைகள் அனுப்பற பணத்துலதான் இருக்குன்னு சொல்லுங்கோ..."

நாலரை கிரவுண்டில் பங்களாவும் மாருதி காரும், பாங்கில் ரொக்கமுமாய் - எந்த விதத்திலும் வேலை என்பதையே அறியாத அலமேலு - எங்கே, கணவன் இன்னும் சில நாட்களில் கண்ணை மூடப் போகிற கிழத்துக்காக லட்சக்கணக்கில் செலவழித்து விடப் போகிறாரோ என்கிற கவலையில் புலம்புகிறாள்.

"அம்மாவுக்காக எவ்வளவோ செய்யலாம் மன்னி... ஆதியில எத்தனையோ செஞ்சும் இருக்கேன்... அவருக்குத் தெரிஞ்சு பாதி... தெரியாமல் பாதி... இப்ப எங்கே, நாமளே நம்ம கீழ்க் கிளைய நம்பி இருக்க வேண்டியிருக்கு."

— இது மீனாட்சி.

"உனக்கு நினைவிருக்கோ? அம்மாவுக்கு அம்பத்தஞ்சு வயசுல முதுகுல ஒரு கட்டி வந்து, நர்ஸிங் ஹோம்லே சேர்த்து - அப்பவே ஐயாயிரம் ரூபா ஆச்சு. அப்ப பாச்சாவுக்கும் நேரம் சரியில்லே. என் அகத்துக்காரர்தான் -சமயத்துக்கு உதவாத நகை எதுக்குன்னு என் ரெட்டை வடம் சங்கிலி, மூங்கில் வளையல் எல்லாத்தையும் கொண்டு போய்... அப்ப போனது தான். மறுபடியும் செஞ்சுக்கக் கையே வரல்லே... இங்கேதான் சாண் ஏறினா முழம் சறுக்கறதே..."

செல்லத்துக்குக் காது கேட்காத தைரியத்தில் கல்பகம் சரடு விடுகிறாள்.

உண்மையில் அபயத்துக்காக மூன்று பவுனில் ஒரு சங்கிலியும், உடைந்த தங்கக் காப்பு ஒன்றையும் செல்லம் பத்திரப்படுத்தி வைத்திருந்தாள். அதைத்தான் தன் வைத்தியச் செலவுக்காகத் தந்தாள். அதை எடுத்துச் செலவழித்து விட்டு - இப்பொழுது...

எல்லாப் பேச்சுமே செல்லத்தின் எதிரில்தான். அவள் ஒவ்வொரு முகத்தையும் கவலையுடன் கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

இவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்?

"அம்மாவை ஆசிரமத்துல சேர்க்கப் போற விஷயத்தை அவளுக்குத் தெரிவிச்சுட்டியா அண்ணா?"

"மூச்... இப்பவே சொன்னா - பெரீசா அழுது ரகளை பண்ண ஆரம்பிச்சிடுவா..."

"அப்ப கிளம்பறச்சே எங்கே கிளம்பறோம்னு கேட்பாளே?"

"அந்தச் சமயத்துக்குச் சொல்லிக்கலாம்..."

செல்லம், குழந்தை சித்தார்த்தை அருகில் அழைக்கிறாள்.

கூடத்தில் யாருமில்லை என்பதை உறுதி செய்து கொண்டு, தளர்ந்த குரலில் கேட்கிறாள்.

"தாத்தா... அத்தைப் பாட்டி எல்லாரும் என்னடா பேசிக்கறா?"

"உன்னைக் கொண்டு போய் ஹாஸ்டல்லே சேர்க்கப் போறா..."

"ஆங்...?"

"ஹாஸ்டல்... ஹாஸ்டல்... ரொம்பவும் படுத்தறவங்களைத் தான் ஹாஸ்டல்லே சேர்ப்பாங்க... நீ என்ன தப்பு பண்ணினே?"

சிறுவன் அபிநயத்தோடு, இரைந்து கேட்கிறான்.

'ஹாஸ்டலா... அப்படின்னா என்ன? ஒருவேளை ஆஸ்பத்திரியத்தான் அப்படிச் சொல்றானோ குழந்தை! இப்ப ஒண்ணும் மோசமாயிடல்லியே நான்? எப்பவும் போலத்தானே... என்ன தப்பு செஞ்சேன்னு கேட்கறதே குழந்தை! என்ன செஞ்சேன்? பொறக்கும் போதே மடி நிறைய ஆயுசைக் கட்டிச் சுமந்துண்டு பொறந்ததைத் தவிர என்ன செஞ்சேன்...'

→

இரவு முழுக்கத் தூங்கவில்லை செல்லம்.

மறுநாள் காலை எட்டு மணிக்கே மீனாட்சியும், கல்பகமும் வந்து விட்டார்கள். அலமேலு என்றுமில்லாத திருநாளாய் மாமியார் குளிக்க வெந்நீர் விளாவி வைக்கிறாள்.

"ஒரு விள்ளல் இட்லிய வேணா - பாலுலே நனைச்சுத் தரவா?"

அலமேலுவின் உபசரிப்பு, செல்லத்துக்கு வியப்பை அதிகரிக்கச் செய்வதாய்...

"ஏன், எனக்கு எப்பவும் கஞ்சி தானே! அதுவும் பன்னெண்டு மணிக்கு!"

குளித்து விட்டு வந்து, திருநீறை நடுங்கும் விரல்களால் எடுத்துப் பூசியபடி - கையில் துளசி மணி மாலையுடன் பெஞ்சு மூலையில் மடங்கி உட்காருகிறாள்.

முன்பெல்லாம் சுவாமி அலமாரி எதிரில் இரண்டு மணி நேரம் போல உட்கார்ந்து ராம ஜபம் செய்வாள் செல்லம். அலமேலு அப்பொழுதெல்லாம் - 'கண்ணை மூடிட்டு சுவாமி முன்னாலே உட்கார்ந்தாத்தான் பக்தியாக்கும்... இங்கே சாகப் பொழுதிருந்தாலும், வேகப் பொழுதில்லை நமக்கெல்லாம்.' - இப்படி இடித்திருக்கிறாள்.

இப்பொழுது செல்லம் விட்ட சுவாமி அலமாரி இடத்தை அலமேலு பிடித்திருக்கிறாள். மணி பன்னிரண்டைத் தாண்டும் வரையில் எழுந்து வர மாட்டாள். பசி தாங்காமல், செல்லமே குழந்தைகளை அழைத்து - 'கொள்ளுப் பாட்டிக்கு மம்மு வேணும்னு சின்ன பாட்டிகிட்ட கேளுடா,' என்று தூதனுப்பினால் எரிச்சல் மண்ட எழுந்து வருவாள்.

"ஒரு நிமிஷம் கண்ணை மூடி, சுவாமி முன்னாலே உட்காரக்கூட இந்த வீட்டுல எனக்கு உரிமையில்லையே... எப்பப் பாரு... 'பசி பசி'ன்னு... யாரை முழுங்கி ஏப்பம் விடறதுக்கு இப்படிப் பசிக்கறதோ தெரியலே..."

இந்த வார்த்தைகள் காதில் விழும்போது... செல்லத்துக்கு வயிறு நிரம்பி விட்டாற்போல - தொண்டையில் எதிர்த்து வரும்...

தாயாரின் பக்கத்தில் தயங்கியபடி வந்து அமருகிறார் பாச்சா.

"அம்மா..."

செல்லம், இன்னமும் வியப்பு மேலிட மகனையே உற்றுப் பார்க்கிறாள்.

'என் குழந்தை... எப்படி இத்தனை தளர்ந்துட்டான்!'

உள்ளே ஊற்றாய் பாச நதி.

"அம்மா..."

"சொல்லு - காதுல விழறது..."

"நாளைக்கு அமெரிக்காவுல இருந்து நம்ம சீனு வர்றான்... நாளன்னிக்குச் சிங்கப்பூர்லேயிருந்து குமாரும் வர்றான்..."

"குழந்தைகளும் வர்றாப்பலயா?"

"ஆமா. சீனு பொண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு..."

"அப்படியா!"

செல்லத்தின் முகத்தில் சந்தோஷ வெளிச்சம். தன் மகன் வயிற்றுப் பேரனின் பெண்ணுக்குக் கல்யாணம் என்றால் நெஞ்சு பூரிக்காதா?

"குழந்தையில கறுப்பா துளியூண்டுக்குக் கிடப்பா. உன் பெண்டாட்டிக்குக் குழந்தையத் தூக்கக் கூடப் பயம். தலையே நிக்கலையேன்னு சீனு பெண்டாட்டி அழுவா. நான்தான் வேப்பெண்ணெயத் தடவி - முழு வாழையிலையில குழந்தையப் போட்டு - இளம் வெயில் உடம்புல படற மாதிரி கிடத்துவேன். இப்ப அதுக்குக் கல்யாணமா?"

கிழவிக்கு வாய் கொள்ளாத சிரிப்பு.

சீனு பெண்ணுக்கு மாத்திரமா செய்திருக்கிறாள்? குமாரின் பார்ஸி பெண்டாட்டி தலைச்சனைச் சுமந்திருந்தபோது ஆனாலும் மசக்கை படுத்தியதால் - அவளுக்குச் சமைத்துப் போட பம்பாய் போகவில்லையா?

"பாட்டி... அவளுக்கு ஹோட்டல்லேயிருந்து, 'நான் வெஜ்', வாங்கிண்டு வந்துடறேன். நீங்க மொத்தமா ஒரு சாதமும், சாம்பாரும் செஞ்சிடுங்கோ... போதும்..."

செல்லம் அவர்களுக்குப் பரிமாறி விட்டு - குமுட்டி அடுப்பில் தனியாய் கொதித்துக் கொண்டிருக்கும் கஞ்சியைக் குடிப்பாள்.

அது மட்டுமா? ஒரு பேத்தியின் படிப்புக்காகப் பெங்களூரில் சமைத்துப் போட்டு, இன்னொரு பேரன் மனைவி காலை ஒடித்துக் கொண்டு கிடந்தாள் என்று ஹைதராபாத்துக்கு ஓடி - நடுவில் கல்பகத்தின் கணவருக்கு அறுபதாம் கல்யாணம் என்று இங்கே வந்திருந்து - பருப்புப் பொடி, சாம்பார்ப் பொடி, வத்தல், வடகம் என்று டின் டின்னாய்ச் செய்து உலகம் முழுக்கப் பரவியிருக்கும் தன் ரத்தத்தின் ரத்தங்களுக்கு அனுப்பி...

கால் பந்தாட்ட மைதானத்தில் உதை படும் பந்தாய்... இன்று காற்றுப் போய், கிழிந்த பந்தாக இருந்தாலும் - கொள்ளுப் பேத்தியின் கல்யாணப் பேச்சே இந்தப் பந்தை ஆனந்தத்தில் விம்ம வைக்கிறதே!

பாச்சா மென்று விழுங்கி, பெஞ்சில் தாளம் போட்டபடியே சொல்கிறார்.

"அதைத்தான் சொல்ல வந்தேன். ஒரு ரெண்டு மாசத்துக்கு வீடு நிறைய ஜனங்க வந்துண்டும் - போயிண்டும்... உன்னால நிம்மதியா ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது. அதனாலே..."

"என்ன தயக்கம்? 'பட்'டுனு மட்டைக்கு ரெண்டு கீத்தாப் பேசவே தெரியாது உங்களுக்கு... நான் சொல்றேன்..."

அலமேலு, மாமியாருக்கு உற்சாகமூட்டும் குரலில் சொல்கிறாள்.

"அதனால, உங்களுக்காக ஓர் ஆஸ்ரமத்துல இடம் பார்த்து வச்சிருக்கு. ரெண்டே மாசம். ஓடற ஓட்டம். அங்கேயும் பணத்தைப் பணம்னு பார்க்காம நிறையக் கொடுத்திருக்கார் உங்க பிள்ளை. இதே மாதிரி கஞ்சி. சாயந்திரமாச்சுன்னா சினிமா, பஜனை எல்லாம் உண்டு..."

"ஆனா, உங்களையெல்லாம் பார்க்க முடியாதா?"

செல்லத்தின் குரலில் பயம் தெளிவாய்...

'என்ன கஷ்டம் இது? இத்தனை வயசு வரைக்கும் கொப்பும் கிளையுமாய் விரிந்து பரவிய ஆலமரம் போல இருக்கிற என்னை - அடிமரத்தை வெட்டி எடுக்கறாப்பல எங்கேயோ எடுத்துச் செல்கிறார்களாமே...

'திடீரெனப் பிராணன் போனால் கங்கா ஜலம் விட, பாச்சா அருகில் இருக்க மாட்டானா? அப்புறம் என்ன பிள்ளை? அணிப் பிள்ளை... தென்னம் பிள்ளை...

'அய்யோ... மீனாட்சி, கல்பகம்... உங்க ரெண்டு பேருக்கும் எத்தனை செஞ்சிருக்கேண்டி நான்... பெத்தவ கணக்குப் பார்க்கக் கூடாது. என் வயித்துல பொறந்ததைத் தரையில போட்டுட்டு, உன் குழந்தைய ராத்திரி முழுக்கத் தூளியில போட்டு ஆட்டியிருக்கேனே.. எனக்கு ஒரு எடமில்லையாடியம்மா உங்க வீட்டுல?

'அலமேலு... உன்னை என்னிக்காவது நாட்டுப் பொண்ணா நடத்தியிருக்கேனா? தாயில்லாத உனக்கு தாய்க்குத் தாயா இருந்து ஆறு பிரசவம் பார்த் -'

வாசற்பக்கம் நிழலாடுகிறது.

"வந்தாச்சு... வந்தாச்சு... ஹோம்லேயிருந்து அழைச்சிட்டுப் போகவேன் வந்தாச்சு..."

அலமேலு பரபரப்புடன் வாயிலைப் பார்க்கிறாள்.

கறுப்பாய், உயரமாய், பருமனாய், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் போல முறுக்கிய நரைத்த மீசையுமாய், முகம் முழுக்கப் புன்னகையாய்...

அவர் பின்னாலேயே இளம் தம்பதி... கையில் பூப்பந்து போல டர்க்கி டவலால் மூடிய சின்னஞ்சிறு குழந்தை...

"நான், உள்ளே வரலாமா?"

வந்தவர், பாச்சாவை நோக்கி நட்புடன் கரத்தை நீட்டுகிறார்.

"ஐயாம் வின்சென்ட்... இவன் என் பையன் மகாதேவ் வின்சென்ட்... அவ என் மருமக ஸ்டெல்லா பூங்கொடி. குழந்தை என் பேத்தி... இன்னும் பேர் வைக்கலே... பாட்டி பேரைத்தான் வைக்கலாம்னு..."

வந்தவர் 'மளமள'வெனப் பேசிக் கொண்டே போக, அலமேலு தன்னையுமறியாமல் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட -

"தாங்க்ஸ்..."

வின்சென்ட் நாற்காலியில் அமர - அவர் மகனும், மருமகளும் செல்லம் அமர்ந்திருந்த பெஞ்சிலேயே உட்காருகிறார்கள்.

"பாப்பாவைப் பாட்டி மடியில விடும்மா..."

வின்சென்ட் கூற, அலமேலு சத்தமாய் சொல்கிறாள்.

"அபயத்துப் பிள்ளை... நாட்டுப் பொண்... குழந்தை மடியில விடணுமாம்."

செல்லத்தின் கோலி குண்டு விழிகள் சமுத்திர விளிம்பில் மிதக்கும் தேசல் நிலா போலக் கண்ணீரில் மிதக்கிறது.

மடிப்பரப்பில் கிடத்தப்பட்ட ரோஜா மொட்டு போன்ற குழந்தையின் முகத்தில், என்றைக்கோ தன்னை விட்டுப்போன மகளின் முகச் சாயலைத் தேடி....

"அபயத்துப் பேத்தியா? அவ இருந்தா எத்தனை சந்தோஷப் படுவாடியம்மா... பாச்சா குழந்தைகளையே தூக்கிண்டு அலைவானே..."

வாய் பாட்டுக்கு எதையெதையோ புலம்புகிறது.

"சார்..."

வாசலில் மீண்டும் குரல்...

இப்பொழுது ஆசிரமத்தி லிருந்து வண்டியும், கூடவே இரண்டு சிப்பந்திகளும்...

"என்னது... அம்மாவுக்கு உடம்பு சுகமில்லையா? நம்ம மகாதேவ்கூட டாக்டர்தான்.எம்.டி..."

வின்சென்ட் கவலையுடன் எந்த வித அருவருப்புமின்றி, செல்லத்தின் முகத்தைத் தொட்டுத் திருப்புகிறார்.

சுருங்கிய அந்த முகத்தையே சதுப்பு நிலமாக்கியபடி கண்ணீர்.

"நீங்க... உங்க பேரென்ன."

"ஜான் வின்சென்ட்மா..."

"காதுல விழலலே. எனக்குக் காது சித்த கேட்காது. காதுதான் கேட்காதே தவிர - மனசு, ஞாபக சக்தி இதுல எல்லாம் ஒரு குறைச்சலும் இல்லே... இதோ இவன் என் மூத்த பிள்ளை. ஒரு வயசுல அம்மை போட்டு மாபாரதமாக் கிடந்தான்... இவனுக்காக இன்னி வரைக்கும் ஒவ்வொரு ஞாயித்துக் கிழமையும் பச்சைத் தண்ணி பல்லுல படாம விரதமிருக்கேன். அவா ரெண்டு பேரும் என் பொண்கள். ஒவ்வொரு பிரசவத்துக்கும் அவாளோட சேர்ந்து நானும் அழுதிருக்கேன். சிரிச்சிருக்கேன். நேத்திக்குப் பொறந்த பேரக் குழந்தையக்கூட நான் மறக்கலே... எல்லாம் என் ரத்தம்..."

கிழவி துக்கம் தாளாமல் வாய்விட்டழுகிறாள்.

"இத்தனை பேருக்கும் என் வயித்துல எடம் தந்தேன். மடியிலயும், தோள்லேயும் எடம் தந்தேன்... எனக்கு இந்த வீட்டுல உட்கார எடமில்லையாம். எங்கேயோ கொண்டு விடப் போறாங்களாம். எனக்குப் பயமாயிருக்குப்பா... என்னைச் சுத்தி, என் கண்ணெதிரே என்னோட உடம்புல இருந்து பொறந்த ஜீவன்களை விட்டுட்டு... எங்கேயோ போறதுன்னா..."

செல்லம் மடியிலிருந்த குழந்தையை மிகுந்த சிரமத்துடன் எடுத்து, முகத்துடன் முகம் பதித்துத் தேம்புகிறாள்.

"என்னை, என் அபயத்தோட சேர்த்து அழைச்சிண்டு போயிடுங்களேன். உங்க வீட்டுல ஒரு மூலை... கண்ணெதிரே குழந்தையைப் போட்டு வச்சு, வேளைக்கு ஒரு தம்ளர் கஞ்சி..."

"போதும்மா..."

வின்சென்ட் கலங்கிய கண்களுடன் மகனைப் பார்கிறார். அவனோ, தன் தந்தையின் குறிப்பறிந்து, குழந்தையை வாங்கி மனைவியிடம் கொடுத்துவிட்டு, தன் பாட்டியை அப்படியே பத்து வயதுச் சிறுமியைத் தூக்குவது போலத் தூக்கிக் கொண்டு நடக்கிறான்.

வின்சென்ட் புன்னகை மாறாது பாச்சாவின் கரத்தைப் பிடித்து நட்புடன் அமுக்கி, குலுக்குகிறார்.

"இதுல தப்பு ஒண்ணுமேயில்லே. இத்தனை நாள் உங்க பொறுப்புல இருந்த மாதிரி - இனிமே என் பொறுப்புல... எனக்கும் அந்தக் கடமை இருக்குன்னு நினைக்கிறேன் நான்... உங்க தங்கச்சி என் வீட்டுக்கு வந்தப்ப - என்னை வளர்த்த பாட்டி இருந்தாங்க. நான் ஆளானதே அவங்களாலேதான். கிட்டத்தட்ட அபயம் செத்துப் போறதுக்கு ரெண்டு வருஷம் முந்திவரைக்கும் இருந்தாங்க. அவங்களோட தொண்ணூத்து மூணாவது வயசுலதான் போனாங்க. அபயம் ஒரு நாள் கூட முகம் சுளிச்சதே இல்லே...' எங்க அம்மாவா இருந்தா செய்ய மாட்டேனா'ன்னு சொல்லுவா... இன்னிக்கு என் மருமகளும் அப்படியே செய்வாங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு. என்ன பூங்கொடி..."

அவள் புன்னகையுடன் முதன் முறையாய் வாய் திறக்கிறாள்.

"எனக்கு இனிமே ரெண்டு குழந்தை..."

ஓடோடி வந்தேன் கண்ணா!

இயற்றியவர் : அம்புஜம் கிருஷ்ணா

ராகம் : தர்மவதி　　　　　　　　தாளம் : ஆதி

இசை : மதுரை டி. என். சேஷகோபாலன்

பல்லவி

ஓடோடி வந்தேன் கண்ணா - நான்
உனக்கும் எனக்குமுள்ள உறவின்று அறிந்து　　(ஓடோடி)


அனுபல்லவி

கோடானு கோடித்தவம் செய்து உனைக் காண
கோவிந்தா என்றழைத்து ப்ருந்தாவனத்திடை　　(ஓடோடி)

சரணம்

குழலூதும் எழில் காணவே - கூடும்
கோபியர்கள் முகம் நாணவே - காதல்
விழியுன்றன் முகம் நாடவே - முறுவல்
இதழோரம் சுழித் தோடவே - ஜகந்
நாதன் இசை பாட நங்கை ஜதிபோட
கால காலமெல்லாம் சுருதியும் லயமுமென
வேதப் பொருள் உன்னில் ஒன்றி உறைந்திடவே
போதம் மிகுகாதல் பொன்னடி தனில் கொண்டு　　(ஓடோடி)

[கீதமாலா - தொகுப்பு 3-விருந்து]



இசையும் லயமும்

அம்புஜம் கிருஷ்ணா

விழிக்கும், பார்வைக்கும் உள்ள உறவு என்ன?

இசைக்கும், லயத்துக்கும் உள்ள உறவு என்ன?

உயிருக்கும், உடலுக்கும் உள்ள உறவு என்ன?

ஜீவாத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் உள்ள உறவு அதுதானோ!

அந்த உறவை இன்றுதான் புரிந்து கொண்டாளாம் தலைவி. கண்ணனுக்கும் தனக்கும் உள்ள உறவு பிரிக்க முடியாதது, பிரிவென்பது இல்லாதது, பிறவி பிறவியாகத் தொடர்வது என்று புரிந்து கொண்ட கணமே ஒடோடி வருகிறாள் பிருந்தாவனம் தேடி. "கோவிந்தா" என்று கூவி அழைத்த வாறே ஆனந்த மயமாக, உணர்ச்சி மயமாக ஒடி வருகிறாள்.

அங்கு அவள் காணும் காட்சியை வர்ணிக்கிறாள். கண்ணன் குழலிசையால் ஈர்க்கப்பட்டு தன்னிலை மறந்து வந்து நிற்கிறார்கள் கோபியர். ஒரு கண் மை எழுதிய கையோடு ஒருத்தி, அரைகுறையாகச் சுற்றிய சேலையோடு இன்னொருத்தி என்று வந்து



சூழ்ந்து கண்ணன் குழல் ஊதும் அழகைப் பருகுகிறார்கள். அவர்களது காதல் விழிகள் கண்ணன் முகத்தில் லயிக்க அந்தப் பொல்லாத மாயவன் இதழோரம் முறுவல் நெளிந்தோடுகிறதாம், அவர்களது தோற்றம் கண்டு. தம் நிலை உணர்ந்த கோபியர் முகம் நாணுகிறதாம். பாகவதம் காட்டும் அழகிய காட்சி இது.

இந்த அற்புதமான சூழ்நிலையில் நாதன் இசை பாட நங்கை ஜதி போடும் அந்தக் களியாட்டமே மதுரபக்தியின் சிகரமான பரமானந்த நிலை.

இராமன் பேரிலும், கண்ணன் பேரிலும் பற்பல இசைப் பாடல்கள் தமிழில் இயற்றிய சாகித்யகர்த்தா அம்புஜம் கிருஷ்ணாவின் பக்தி ததும்பும் பாடல்களில் இதுவும் ஒன்று. இதற்கு தர்மவதி ராகத்தில் இசை அமைத்திருப்பவர் மதுரை டி.என். சேஷகோபாலன். இசைக் கலைஞர்களும், நாட்டியக் கலைஞர்களும் விரும்பிக் கையாளும் பாடல் இது. ❖

ஸுஜாதா விஜயராகவன்

மயிலம் திருமுருகன் திருக்கோயில்

தாமரை கோப்பெருந்தேவி

நுழை வாயில்

தமிழகத்திலுள்ள திருமடங்கள், திருக்கோயில்களைக் கட்டிக் காத்து வருவதில் தலைசிறந்து விளங்குகின்றன; சங்கத் தமிழை வளர்ப்பதிலும் சமயத்தை வளர்ப்பதிலும் முன் மாதிரிகளாகத் திகழ்கின்றன; மக்களுக்குச் சேவை செய்யும் சமுதாயக் கூடங்களாக இலங்குகின்றன!

அத்தகைய சிறப்பு வாய்ந்த திருமடங்களுள் ஒன்று, மயிலம் பொம்மபுர ஆதீனம்.

இருப்பிடம்

தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனத்திலிருந்து கூட்டேரிப்பட்டு வழியாகப் புதுச்சேரிக்குச் செல்லும் பஸ் வழியில் மயிலம் உள்ளது. ஐந்தாறு கிலோ மீட்டர் தூரத்திலிருந்து பார்த்தாலே மயிலம் மலைமீது குடிகொண்டிருக்கும் முருகர் கோயிலின் கோபுரம் நம் கண்ணையும் கருத்தையும் கவரும்.

சென்னை, செஞ்சி, விழுப்புரம், புதுச்சேரி முதலான இடங்களிலிருந்து அடிக்கடி பஸ் வசதி உண்டு.

மயிலம் – பெயர்க்காரணம்

ஆனை மலை, நாகமலை முதலான ஊர்ப்பெயர்கள் மலையின் வடிவத்தைக் கொண்டே வழங்குகின்றன. அதைப் போலவே, மயில் வடிவத்தில் இம் மலை அமைந்துள்ளதால், இவ்வூருக்கு மயிலம் என்ற பெயர் வந்தது. தவம் செய்யும் மயிலைப்போல்



இந்த மலை இருப்பது மேலும் சிறப்புக்கு உரியது.

பாடல் பெற்ற தலம்

அருணகிரி நாதர், சிவப்பிரகாச சுவாமிகள், வேலைய சுவாமிகள், திருவாமாத்தூர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் முதலியோர் இத் தலத்து முருகனைப் பாடியுள்ளனர்.

பாவேந்தர் பாரதிதாசனார், 'மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது' என்னும் இசைப் பாடல் (சிறு) நூலை எழுதியுள்ளார்.

மயிலம் மலையில் மூன்று மாமணிக்கோயில்கள்

மலைமீது அமைக்கப்பட்டுள்ளதால், கோயிலின் ராஜகோபுரம் விண்ணளாவிய தோற்றத்துடன் காணப் பெறுகிறது.

தெற்கு வாயில் வழியாகச் சென்றால் திருச்சுற்றை அடைகிறோம். திருச்சுற்றுக்கு உள்ளாக மூன்று அழகிய கோயில்கள்.

முதலில், விநாயகர் கோயில்.


அடுத்தது, பாலசித்தர் கோயில்.

தல வரலாற்றில் பாலசித்தரின் முற்பிறவி கூறப்படுகிறது.

கயிலை மலையில் உமையம்மை, சங்குகன்னர் என்கிற சிவகணத் தலைவரைக் காவலுக்கு நிறுத்தி விட்டுத் திருக்குளத்தில் நீராடிக் கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த சிவபெருமானை சங்குகன்னர் தடுத்து நிறுத்தாமல் அஞ்சி இருந்துவிட்டார். சிவபெருமான் மீண்டு வந்து சங்குகன்னரைக் கண்டு சினந்து, 'நீ உலகிடைப் பிறவாயாக' என்று சாபம் இட்டார். சங்குகன்னர் தம் தவறுக்கு வருந்தி பிராயச்சித்தம் வேண்ட, பெருமான், 'நீ ஒரு வயிற்றில் பிறவாது உலகில் தோன்றி சமயம் காத்து, முருகப் பெருமான் அருளால் மீளுக!' என்று பணித்தார்.

அதன்படி, பாண்டிச்சேரியை அடுத்த பொம்மபுரக் கடற்கரையில் சங்குகன்னர் பாலன் உருவில் சடைமுடி தரித்துக் கல்லாடை பூண்டு இலிங்கதாரணமும் திருநீறும் உருத்திராக்கமும் தரித்துப் 'பாலசித்தர்' என்னும் திருப்பெயருடன் தவமும் சித்துகளும் இயற்றினார்.

பின், பெருமுக்கல் முதலான மலைகளில் தவம் புரிந்து, மயில மலைக்கு வந்து முருகப் பெருமானை எண்ணித் தவம் மேற்கொண்டார். முருகன், பாலசித்



தருக்குக் காட்சி அளிக்க, பால சித்தர் முருகனிடம், 'வள்ளி தெய்வயானையை மணந்த திருக் கோலத்துடன் தாங்கள் இம் மலையில் என்றென்றும் காட்சிதர வேண்டும் என்றும், எம் மரபினர் இத் திருமடத்தை நடத்தி வர வேண்டும் என்றும், எம் மரபினர் சிவஞான பாலய தேசிகர் என்ற திருப்பெயரைத் தொடர்ந்து பெற்று வருதல் வேண்டும் என்றும்' வேண் டினார். திருமுருகனும் அவ்வாறே அருளாசி வழங்கினர்.

இக்கோயிலுக்கு மூலகாரண மான பாலசித்தர் ஜீவ சமாதி அடைந்தார்கள். அதுவே, பால சித்தர் கோயில். இக் கோயிலில் நாகலிங்கம், வள்ளி தெய்வயானை யுடன் சுப்பிரமணியர் திருவுருவங் கள் உள்ளன.

பெரும்பாலும் முருகர் கரு வறைக்குத் தெற்கே சித்தர்களின் சமாதியிருக்கும். பழநியில் போகர் சமாதியும், மருதமலையில் அடிய வர் சமாதியும் இருப்பதுபோல், இங்கே 'பாலசித்தரின்' ஜீவ சமாதி உள்ளது.

அடுத்து இருப்பது, முருகர் திருக்கோயில், வள்ளி தெய்வ யானையுடன் முருகர் நின்ற திருக் கோலத்தில் அருள்பாலிக்கிறார்.

தேவேந்திரன் முருகனுக்கு மயில் வாகனமாக வந்ததால், மயில் நேர்முகமாக இருக்கும்; தெய்வயானையின் சீதனமாக வந்த கலாப மயிலின் முகம் தெற்குப் பார்த்து இருக்கும்; இங்கே சூர பதுமன் மயிலாக அமைந்ததால், மயிலின் முகம் வடக்கு நோக்கி உள்ளது. இது ஒரு தனிச் சிறப் பாகும்.

வீர சைவ மடம்

வீர சைவ மடங்களில் முருகன் வழிபாடே இன்றியமையாதது. திருப்போரூர், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடம் போன்றவற்றை எடுத்துக் காட்டாகச் சொல்லலாம். கன்னடத்தில் உள்ள லிங்காயத் தார், இலிங்கத்தை மட்டுமே வழி படுவர். முருகப் பெருமான் தமிழ்த் தெய்வம்; குறிஞ்சி நிலக்கடவுள். முருகன் நெற்றியில் இலிங்கப் பெருமான் அமைய, மயிலம் பொம்மபுரம் ஆதீனத்தில் இஷ்ட லிங்கப் பெருமானை ஆத்மார்த்த மாக வழிபடுகின்றனர்.

ராஜகோபுரம்

தற்போதுள்ள ராஜகோபுரத்தை ஏறத்தாழ 110 ஆண்டுகளுக்கு முன்பு 15ஆவது பட்டம் கட்டினார். கோபுரத்தின் மூன்றாவது மாடத் தில் முருகனின் 16 திருவுருவக் காட்சிகளும், மடத்தின் வரலாறும் சுதைச் சிற்பங்களாகக் காட்சி அளிக்கின்றன.

மயிலம் பொம்மபுர ஆதீனம்

முருகர் கோயிலை உருவாக்கிய பாலசித்தருக்குப் பின், இரண் டாவது பட்டம் பெற்ற சிவஞான பாலய சுவாமிகள் தாமாகவே அக்கினியாகி சமாதி அடைந்தார். அவருடைய பஸ்பம் வெள்ளிப் பேழையில் பொம்மபுரத்தில் வைக்கப் பெற்றுள்ளது.

மயிலம் முருகர் கோயில், மயிலம் பொம்மபுரம் ஆதீனத்தில் உள்ளது. பாலசித்தரின் திருவுளப் பாங்கின்படி வீரசைவர் மர பினரே, பட்டம் ஏற்றவுடன் 'சிவ ஞான பாலய தேசிகர்' என்ற பட்டப் பெயர் வழங்கி ஆதீனத்தை நடத்தி வருகின்றனர்.

புதிதாகக் கட்டப்பட்டு வரும் மகாமண்டபத் தூண்களில் 17,18 ஆம் பீடாதிபதிகளின் திருவுருவங் கள் உள்ளன.

தற்போது 19ஆம் பட்டம் ஆதீனத்தை நடத்தி வருகிறார்கள்.

கல்விப் பணியும் சமயப் பணியும்

திருமடங்கள நடத்தும் தமிழ்க் கல்லூரிகளில் முதலாவதாகத் தொடங்கப்பெற்றது, மயிலம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி. 18ஆம் பட்டம் 1938ஆம் ஆண்டு மக்கள் நலனுக் காக இதைத் தொடங்கி வைத் தார்கள். கல்லூரியில் ஆண் களுடன் பெண்களும் கற்கின்றனர்.

இக் கல்லூரியில் பயின்ற வர்கள், தமிழகத்தில் தலைசிறந்த நிலையில் உள்ளனர்.

எனது முத்தமிழ் அனுபவங்கள்

வானதி திருநாவுக்கரசு

நாதஸ்வர சக்கரவர்த்தி டி.என். ராஜரத்தினம் பிள்ளை

சிறு வயதிலிருந்தே கர்நாடக இசையில் ஈடுபாடு கொண்ட எனக்கு நாதஸ்வரச் சக்கரவர்த்தி டி.என். ராஜரத்தினம் அவர்களின் கச்சேரி என்றால் அலாதிப் பிரியம். அவருடைய கச்சேரி எங்கே நடைபெறுகிறது என்றாலும் ஓடிப் போய் அங்கே நின்று கொள்வேன். அவர் வாசிப்பு அத்தனை சுகம். ஆனால் அவருக்கு 'மூட்' வர வேண்டும். 'மூட்' வராவிட்டால் ரசிகர்கள் பாடு தொல்லைதான். அவர் நாதசுரத்தைக் கையில் எடுப்பார். சீவாளியைச் சீர் செய்வார். வாசிப்பதுபோல் இருக்கும்.



ஆனால் சில நேரம் வாசிக்காமலேயே அப்படியே வைத்து விடுவார். சரி இன்றைக்குக் கச்சேரி அவ்வளவுதான் என்று ரசிகர்கள் கொஞ்சம் அப்படி இப்படி நகர்வார்கள்.

அந்த நேரம் பார்த்து காற்றில் சுகமான நாதம் மிதந்து வந்து நம்மைத் தொட்டு இழுக்கும்! கூட்டுக்குத் திரும்புகிற தேனீக்கள் மாதிரி கலைந்த ரசிகர்கள் விழுந்தடித்துக் கொண்டு வந்து அமர்ந்து அவர் நாதஸ்வரத்தை ரசிப்பார்கள். நானும் மெய்மறந்து விடுவேன்.

இப்படி சுநாதத்தைப் பொழியும் நாதஸ்வரச் சக்கரவர்த்தி ஒரு நாள் இன்னொரு நாதஸ்வர வித்வான் வாசிப்பில் லயித்து அப்படியே உட்கார்ந்து ரசித்ததை நான் நேரில் பார்த்து அனுபவித்தது மிகச் சுவாரஸ்யமான விஷயம்.

கலைவாணர் என்.எஸ்.கே. வீட்டில் நடைபெற்ற ஒரு திருமணத்திற்கான மாப்பிள்ளை அழைப்பு. பிரபல நடிகர்களும் இசைமேதைகளும் நாதஸ்வர வித்வான்களும் எழுத்தாளர்களும் நிரம்பிய கூட்டம். மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் தியாகராயநகர் பனகல் பூங்கா அருகில் வந்துகொண்டிருக்கிறது. காருகுறிச்சி அருணாசலம் நாதஸ்வரம் வாசித்துக்கொண்டே வருகிறார். ஆங்காங்கே சற்று நின்று வாசித்துக் கொண்டு வருகிற அந்தக் காலத்துச் சம்பிரதாயப்படி வாசித்தார்.

ஒரு கட்டத்தில் காருகுறிச்சியின வாசிப்பு என்ன செய்ததோ தெரியாது. "அப்படியே வாசி!" என்று தெரு என்றும் பாராமல் திடீரென காருகுறிச்சியின் முன்னால் உட்கார்ந்து விட்டார் ராஜரத்தினம் பிள்ளை. தியாகராயநகர் பாண்டி பஜாரில் இரண்டு புறமும் பஸ்களும் கார்களும் ஒன்றன்பின் ஒன்றாக நிற்க வேண்டியதாகி விட்டது. ஊர்வலம் நகர்ந்தால் தானே பாதை கிடைக்கும். ஒரே டிராஃபிக் 'ஜாம்'. டி.என்.ஆர். அவர்கள் விடுகிற வழியாய் இல்லை. வாசிக்கிறவரும் கேட்கிறவரும் சுற்றுச் சூழலை மறந்து போய் ரசிக்கிற மனநிலை. எல்லோருக்கும் வியப்பு.

யார் யாரோ போய்ச் சொல்லிப் பார்த்தார்கள். கலைவாணர் சொல்லிப் பார்த்தார். "பிள்ளைவாள் ஊர்வலம் நகரட்டும்... மண்டபத்துக்குப் போய் வேண்டிய மட்டும் வாசிக்கச் சொல்லிக் கேட்கலாம். டிராஃபிக் ஜாம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. தேனாம்பேட்டைவரை பஸ் பிளாக் ஆகி நிற்கிறது" என்று சொல்லிப் பார்த்தார்கள்.


"சும்மா இருங்கய்யா! டிராஃபிக்காவது ஜாமாவது இன்றைக்கு எவ்வளவு சுகமா தம்பியிடமிருந்து நாதம் விழுகிறது ... விடுங்கய்யா அவன் இங்கேயே நின்று வாசிக்கட்டும்" என்று அடம் பிடித்தார். அந்த நேரம் தொடர்ந்து அரைமணி நேரம் போக்குவரத்து இடைஞ்சலையும் பொருட்படுத்தாமல், தான் பெரிய வித்வான் என்பதையும் மறந்து தெருவிலேயே உட்கார்ந்து கேட்டு, ரசித்துப் பாராட்டிய பெருள்ளத்தை இப்போது நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது.

....

இசைப் பேரறிஞர் மதுரை சோமு

ஒருநாள் இசைப் பேரறிஞர் மதுரை சோமு எங்கள் பதிப்பகத்துக்கு வந்தார். வந்தவர் அங்கிருந்த சாமி படங்களை எல்லாம் பார்த்துவிட்டுப் பலத்த குரலில் பாட ஆரம்பித்துவிட்டார். இதைக் கேட்டு பதிப்பக வாசலிலிருந்து மக்கள் ஒவ்வொருவராகப் பதிப்பகத்தினுள் வர ஆரம்பித்து விட்டார்கள்.

"என்ன சோமு அண்ணா! இவ்வளவு அற்புதமாகப் பாடுகிறீர்



களே? எப்படி இதைக் கற்றுக் கொண்டீர்கள்? அதைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டேன்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்? எல்லாம் குரு போட்ட பிச்சை. என் குரு சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை. அவர் மயிலாப்பூர் குளத்தருகில் குடியிருந்தார். நான் தினம் காலையில் அங்கு போக வேண்டும். போனவுடன் பாட்டு சொல்லிக் கொடுக்க மாட்டார். அவர் வீட்டு அம்மா சொல்லும் வேலைகளை எல்லாம் செய்ய வேண்டும். கூஜா முதற்கொண்டு கழுவி வைக்க வேண்டும். குருவின் வேஷ்டி சட்டை துண்டு முதற்கொண்டு குளத்தில் கொண்டு போய் துவைத்துக் கொண்டு வர வேண்டும்.

மத்தியானம் 3 மணிக்குத்தான் என்னைக் கூப்பிடுவார். கூப்பிட்டு "இன்னைக்கு எத்தனை உருப்படி?" என்று கேட்பார். "அம்மா 4.5 உருப்படி போட்டார்கள். அத்தனையும் துவைத்துக் கொடுத்துவிட்டேன் ஐயா!" என்பேன். அப்புறம்தான் பாட்டில் ஓர் உருப்படி கற்றுக் கொடுப்பார். அப்படிக் கற்றதாக்கும் என் பாட்டு!" என்று சொன்னார். எனக்கு அழுகையே வந்து விட்டது. "குருவுக்குத் தொண்டு செய்து உருப்படியாகக் கற்றதால்தான் குவலயம் போற்றும் இசைப் பேரறிஞராகத் திகழ்கிறீர்கள்!" என்று சொன்னேன். மதுரை சோமு அப்படியே என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டார்.

முத்தமிழ்க் கலா வித்வரத்தினம் டி.கே. சண்முகம்

பள்ளிக்கூடத்தில் படித்த காலம். நானும் தமிழ்வாணனும், சைக்கிளை வாடகைக்கு எடுத்துக்கொண்டு 'டபுள்ஸ்' போய் காரைக்குடியில் 'பில்கணன்' நாடகம் பார்த்த நினைவு வருகிறது. அப்பாவிடம் கெஞ்சி நாலணா வாங்கிக் கொண்டு, முண்டியடித்துக்கொண்டு டிக்கெட் வாங்கித் தரையில் அமர்ந்து பார்த்த நாடகம்.

பில்கணீயன் நாடகம் நடத்தியவர் அவ்வை டி.கே. சண்முகம் குழுவினர்தான். அப்போது அவர் மீது ஏற்பட்ட பிரியம், மோகம், நேசம் நாளும் வளர்ந்து கொண்டே வந்தது. இன்று நெஞ்சில் படமாகவே பதிந்துவிட்டார் முத்தமிழ்க் கலா வித்வரத்தினம் அவ்வை சண்முகம் அவர்கள். அவர் நடிகர் மட்டுமல்ல. முத்தமிழிலும் வல்லவர். கதைகள், கட்டுரைகள், பாடல்கள் யாவும் அற்புதமாக எழுதுவார். எல்லா வற்றையும்விடச் சிறந்த ரசிகர்.

கூட்டங்களில் பாடுகிற பழக்கம் எனக்கு உண்டு. ஒருநாள் எங்கள் புத்தக வெளியீட்டு விழாக் கூட்டத்தில் நான் பாடிய 'ராசிப் பாட்டைக் கேட்டு, ஒன்ஸ்மோர் கேட்டு ரசித்துப் பாராட்டியதையும் அப்படியே மேடையில் வந்து



என்னைக் கட்டிப் பிடித்துத் தழுவிப் பாராட்டியதையும் என்னால் என்றைக்கும் மறக்க முடியாது.

அவரும் அவருடைய சகோதரர் டி.கே. பகவதியும் சேர்ந்தே எந்தக் கூட்டத்துக்கும் போவார்கள். பார்வையாளராக முதல் வரிசையில் அமர்ந்து ரசித்த எத்தனையோ நிகழ்ச்சிகள் என் நினைவுக்கு வருகின்றன. கையைத் தூக்கி 'ஆஹா... ஒஹோ, பேஷ், பேஷ்' போட்டுப் பேச்சாளரின் குரலையும் மீறி இவர்கள் குரல்கள் ஒலிக்கும்.

அவ்வையார் நாடகத்தை ஏழெட்டு முறை பார்த்திருக்கிறேன்.

எட்ட இருந்தே பார்த்துப் பழகிய அவ்வையுடன் நெருங்கிப் பழகுகிற வாய்ப்புகள் எனக்கு நிறையவே கிடைத்தன.

அவருடைய மணிவிழா வெளியீடாக 'எனது நாடக வாழ்க்கை' நூலைப் பெரிதாக எழுதித் தரக்கேட்டுக் கொண்டேன். அந்த நூல் தயாரானபோது மிகப் பெரிய அதிசயம் ஒன்றைப் பார்த்த பிரமிப்பே எனக்கு ஏற்பட்டது. விதம் விதமாக, சிறியது பெரியது, கனமானது, நீளமானது என்று ஆண்டுக்கணக்காக அவர் எழுதி வைத்திருந்த டைரிகளைப் பார்த்து அப்படியே அசந்து போனேன். ஒவ்வோர் ஊரிலும், நாடகங்கள் நடந்தபோது நடைபெற்ற சின்னஞ் சிறு நிகழ்ச்சிகள் உட்பட ஒன்று விடாமல் அப்படியே குறித்து வைத்திருந்த நேர்த்தி வியக்கத்தக்கது. அவருடைய டைரியை மட்டும் பாதுகாத்து வைக்கவில்லை. அழகான நூலகமே அவர் வீட்டில் வைத்திருந்தார். எந்த இலக்கியமானாலும் பார்வைக்குத் தேவை என்றால அவ்வை சண்முகம் வீட்டு நூலகத்தில் துணிந்து போய்க் கேட்கலாம்.

இவ்வளவு நூல்களைக் காசு கொடுத்து வாங்கிச் சேர்த்து வைத்திருக்கும் அவ்வை சண்முகம் அவர்களிடம் சுவாரசியமான முறையில் விவாதிக்கவும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

தன் பணம் என்றால் தாராளமாகச் செலவிடுகிற அவ்வை பொதுக் காரியம் என்றால் படு சிக்கனம்.

இதுவா என்னிலை

கவிஞர் நெய்தற்கிழான்

ஆதவன் குடதிசை அணங்கை அடைந்தான்
எங்கும் இருள்; என் மனம் சோர்ந்தது
கணத்தில் என் மனம் கவர்ந்திடும் வெண்ணிலா
தண்ணொளி பரப்பிக் கண்கவர் அழகில்

குணதிசை எழுந்தான். குதித்துச் சென்றேன்
கோலஞ் செய்திடும் சோலைப் பக்கம்
மின்னல் போன்று பளிச்சென் றின்பம்
என்னுள் பாய்ந்திட காரணம் நோக்கினேன்

எதிரிலோர் மங்கை; வயது பதினாறு
ஒருபால் அச்சம்; தயங்கி நின்றேன்
இருப்பினும் 'யாரென இயம்புக' என்றேன்
'அடடா இதுவா என்னிலை!' என்றாள்'

கன்னல் மொழியாள் கன்னிப் பெண்ணாள்
சென்று மறைந்தாள் சிந்தனை செய்தேன்
என்றனுள் உணர்வு எழுந்திடப் பார்வையில்
மறைந்தவள் தமிழ்த்தாய் என்பதை உணர்ந்தேன்

குறைவிலா இன்பம் கொண்டேன் ஆங்கே
இருப்பினும் என்னுள் ஏனோ புழுக்கம்
இறுக்க மாகவே இதுவா என்னிலை
அரற்றினேன். அரண்டு விழித்தேன். கனாதான்.

பறந்து போகும் உசுரு

கொ.மா. கோதண்டம்

ஆத்தோர ஆலமரம்
அந்திசா யிரநேரம்
பாத்துவாடி சின்னப்பொண்ணே
பழகிநாம பேசிடலாம்

வாத்து நடையழகி
வாழைமர காலழகி
காத்தாடும் இடையழகி
கருத்தமேக மயிரழகி

எலிப்பல்லு பல்லுக்காரி
எலந்தப்பழச் சொல்லுக்காரி
உயிரின் துடிப்பில்
பிறப்பதில்லையா

உனக்கும் என்போல்
துடிக்கவில்லையா?

இந்த
மெழுகுவத்தி அணைவதற்குள்
சொல்லிவிடு பெண்ணே!

நல்வார்த்தை சொன்னால்
நானிருந்து வாழ்வேன்

இல்லை
மெழுகுவத்தி அணைவதற்குள்
நான் அணைந்து போவேன்.

பாரதியார் சங்கம் நடத்துகிற விழாவுக்காக ஒருசமயம் எங்கள் பதிப்பகத்துக்கு வந்திருந்தார். "மாலை போடுவதற்குப் பதில் பேச்சாளர்களுக்கு நல்ல புத்தகங் களை வாங்கித் தரப்போகிறோம்" என்றார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.


பில் போடப் போனபோது "வேண்டாம் புத்தகங்களை நன்கொடையாகக் கொடுத்து விடுங்கள்" என்றார். நான் மறுத் தேன். "விழாவில் மாலை போடு வது என்றால் எந்தப் பூக்கடைக் காரர் உங்களுக்கு இனாமாக மாலை தருவார்? புத்தகங்களை மட்டும் ஏன் இலவசமாகக் கேட் கிறீர்கள்? விழாவுக்கு நன்கொடை தருவது என்பது வேறு. அதைத் தருகிறேன். புத்தகங்களுக்கு பணம் கொடுங்கள்" என்றேன்.

"ஆமாம்! நீங்கள் சொல்வது நியாயம்தான்" என்று சிரித்துக் கொண்டே சொல்லிப் பணத்தை எடுத்துக் கொடுத்தார். இன்னும் ஒரு நிகழ்ச்சி. சிவசங்கரி எழுதிய 'புதுமையான அனுபவங்கள்' என் னும் நூல் வெளியீட்டு விழா நடத்தினோம். வாரியார் சுவாமி கள் உட்படப் பலர் கலந்து கொண் டார்கள். அவ்வை சண்முகமும் அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தார். ஆசிரியையை வாழ்த்தி ஒரு பாட்டுப் பாடுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். சாதாரணமாகப் பாடுவார் என்றுதான் நான் எதிர் பார்த்தேன். ஆனால் அவரே உச்ச ஸ்தாயியில் பெரிய குரலெடுத்து உணர்ச்சிவசப்பட்டு 'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி' என்ற பாடலை ஓங்கிப் பாடினார். எனக்குப் பயமாகப் போய்விட்டது. அவர் உடல் நலமின்றி இருந்த நேரம் அது. "என்ன அண்ணாச்சி சாதாரணமாகப் பாடியிருக்க லாமே?" என்றேன்.

அதற்கு அவர் "எதைச் செய் தாலும் உண்மையாக, உற்சாக மாகச் செய்ய வேண்டும். தொழில் செய்யும்போது உடம்பைப் பற்றி யெல்லாம் கவலைப்படவே கூடாது. சிரமபட்டுத்தான் பாடினேன். பாடும்போது உயிர் போக வேண்டு மென்றிருந்தால் போகட்டுமே! அதைப் பற்றி நான் கவலைப் படுவது கிடையாது" என்றார். எனக்கு மெய் சிலிர்த்தது.

முத்தமிழிலும் அவர் ஒளி விளக்காகவே திகழ்ந்தார். அவ ருடைய தயாரிப்பில் பல நடி கர்கள், கவிஞர்கள், கதாசிரியர் கள், நிர்வாகிகள் உருவானார்கள்.

தமிழ்நாடு எத்தனையோ விதங் களில் பெருமை பெற்றிருக்கிறது. அவ்வை சண்முகம் போன்ற ஒரு பண்பாடுடைய அருமையான கலை ஞரையும் தமிழ்நாடு பெற்றிருந்தது என்று என்றைக்கும் உலகம் போற்றும். ••



கண்ணாடி முகங்கள்

முற்றத்தில் விழுந்து, இருள் அடர்ந்திருந்த கூடத்தில் லேசாகப் பிரதிபலித்திருந்த நிலவின் பரம ரகசியக் கூற்று ஒன்று அவனுக்குப் பிடிபட்டது.

ஆளைச் சொக்குப்படுத்தும் அந்த நிலவு அவனுடைய முற்றத்தில் மட்டுமல்ல, ஊரிலும் - இந்த உலகம் எங்கும் - வியாபித்திருந்தது என்னவோ உண்மை தான். வாசற் கதவைத் திறந்தால் உடனே திருஷ்டிக்கு உட்படுவது பாதி அழிந்த செம்மண் நெளிவுகளோடும் வெண்மையான இழைகளோடும் தளிர் விட்டோடிய கோலம் மட்டுமல்ல; தலையைக் கொஞ்சம் நிமிர்த்தினால் இயற்கை பொழியும் அந்த வெண் பூச்சு அவனுடைய பசுமையான தோட்டத்தை அழியாத கோலமாக்கி இருப்பதையும் பார்க்கலாம். இந்த நிலவுக்குப் பரம சக்தி, எல்லோருடைய கனவையும் வளர்க்கும் பண்ணையாகத்தான் இது இருக்கிறது. உலகத்தின் பகிரங்க ரகசியம் இந்த நிலவு - ஆனால் அவனுக்கோ...

சுவரில் மாட்டி இருந்த சிறு கண்ணாடி காற்றில் கொஞ்சம் அசைந்தது; அவன் பார்த்தான்.

அவனை அறியாமல் எழுந்தான். கண்ணாடியை நோக்கி முன்னேறினான். பாதரஸம் குறைந்திருந்த வெளிறிய கண்ணாடி அது. அதில் தன்னுடைய முகத்தைப் பார்த்தான் அவன். அவன் முகம் அதில் தெரியவில்லை.

தீராத சந்தேகம் உதித்து விட்டது. ஆணியில் மாட்டியிருந்த கண்ணாடியைச் சரக்கென்று எடுத்தான். வேகமாக முற்றத்தின் நடுவுக்கு வந்து முகத்தை அதில் பார்த்தான்...

"ஏ புள்ளே, ஒன்னைத்தானே!..." என்று கூவினான்.

நடு ஜாமத்தின் பேரமைதியைப் பிளந்து சென்ற அந்த ஒலி, வீட்டில் கணநேரம் பிரமாதமாக, பயங்கரமாக ரீங்கரித்தது.

கூடத்தை அடுத்திருநத அறையில் படுத்திருந்த வள்ளியாத்தாள் திடுக்கிட்டு விழித்தாள். பக்கத்துப் படுக்கையைப் பார்த்தாள். அது காலியாயிருந்தது. அவள் மனமும் உடலும் பதறின. அவளை எழுப்பியது நிச்சயமாக அவளுடைய கணவனுடைய குரல் தான். இந்த வேளையில் எங்கேயிருந்து கத்துகிறான்?

கூடத்துக்கு வந்த வள்ளியாத்தாள் அப்படியே நின்று விட்டாள்! எதற்காக இந்நள்ளிரவில் அவன் அப்படிக் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருந்தான்? அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. வேகமாக அவன் அருகில் வந்தாள்.

கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டு அசைவற்று நின்று கொண்டிருந்த கணவனுடைய முகத்தை உற்று நோக்கினாள். இமை ஓரங்கள் படபட வென்று துடிப்பதைக் கண்டாள். தன்னால் தீர்மானிக்க முடியாத மாறுதல் - நாலு வருஷங்களாக 'அவனோடு அவனாக' இருந்த அவள் முன்னே பின்னே காணாத, விவரிக்க முடியாத மாறுதல் - வள்ளியாத்தாளுக்கு நன்றாகப் புலப்பட்டது.

பாமர நெஞ்சுதான். இருந்தாலும் கொண்ட பதட்டத்தையெல்லாம் கணத்திலே அடக்கி விட்டாள். அந்தச் சமயத்தில் பொறுமை மிகவும் அவசியம் என்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது.

"கண்ணாடியிலே என்னா பாக்கிறீங்க? ரா வேளையிலே இப்படியெல்லாம் செய்யறது நல்லா இல்லீங்களே... வாங்க, படுக்கப் போகலாம். பனி கொட்டுதே!..." என்று அவனுடைய வலக் கரத்தைப் பிடித்தவாறு சொன்னாள்.

"ஓ... நீயா?..." என்று அவளை நோக்கி நிமிர்ந்தான் அவன்.

"...ம்...வாங்க,போகலாம்...".

"இரு புள்ளே!... இந்தக் கண்ணாடியப் பாரு!..." - கொஞ்சம் அதிகார தோரணையில்தான் அமைந்திருந்தது அவனுடைய குரல். அவனுடைய இரண்டு விழிகளையும் வள்ளியாத்தாள் பார்த்தாள். அவை சிவந்து சுழன்று கொண்டிருந்தன.

"வாங்க அத்தான்... உங்களுக்கு உடம்பு சரியில்லே போலிருக்கு..." என்றாள் அவள்.

"ஒடம்புக்கு என்ன வந்திருச்சு புள்ளே, நீ யொண்ணு!... இதுலே பாரேன்!"

கண்ணாடியை வாங்கி அதிலே தன் முகத்தைப் பார்த்தாள் வள்ளியாத்தாள்.

"என்ன தெரியுது புள்ளே...?"

"மொகந் தெரியுது, அத்தான்!... என்ன அத்தான், கேலியா பண்றீங்க?" என்று அவன் மேலே சாயப் போனாள் அவள்.

"ஏ.... நகந்து நில்லு! சும்மா வெளையாடாதே! என்னா தெரியுது?... ஓம் மொகமா தெரியுது?"

வள்ளியாத்தாளை ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் உலுப்பத் தொடங்கின. தன் கணவனுக்கு ஏற்பட்ட சித்தப்பிரமையைப் பற்றி உலகம் எல்லாம் பேசுவதாக அவள் மானசக் காட்சி காண ஆரம்பித்தாள். நிதானம் தவறினாள்.

"ஐயோ! என்னா எளவுக்காக இந்த மாதிரியெல்லாம் பண்றீங்க? இந்தச் சனியன்லே எம்மொகந் தானே, உங்க வள்ளியாத்தா மொகந்தானே தெரியுது?" என்று சொல்லியவாறு அவன் கையைப் பிடித்துக் கூடத்துப் பக்கம் இழுத்தாள்.

இழுத்த கையைச் சேர்த்து இழுத்த வண்ணம் அவன் சிரித்தான்.

"இங்கே வா புள்ளே, வா! நான் சொல்லுதேன்... நெலாவிலே, கண்ணாடியிலே பார்த்தாக்கெ எம் மொகமா தெரியுது? கூந்தலச் செருகி வெச்சிக்கிட்டு, அளகான

க. பஞ்சாபகேசன்

பொட்டு இட்டுக்கிட்டு சொக்குகிற பொண்ணுன்னா தென்படுது...?" என்றான் அவன்.

அவன் மட்டில் நிலவின் ரகசியத்தைக் கண்டுவிட்டான். 'நிலவில், கண்ணாடியில் எல்லாப் புருஷர்களுடைய முகங்களும் பெண் முகங்களாகத்தான் தெரியும்' என்பது பிரமையா?

வள்ளியாத்தாளுக்கு வயிற்றில் தீமூண்டதுபோல் இருந்தது.

வீட்டு முன்புறத்தில் இருந்த தோட்டத்துப் பூங்காற்றைப் பற்றிய நினைவு வரவில்லை; கொல்லைப் புறத்துப் புளியமரத்து வாடை வீசினதாக நினைத்தாள்.

அவளுடைய கையை விட்டு விட்டு, சோர்வு சூழ, கூடத்து மேடையில் அமர்ந்து முற்றத்தில் காலைத் தொங்கப் போட்டுக் கொண்டான் அவன். தலையில் கைகளை ஊன்றிக் கொண்டான்.

வள்ளியாத்தாளுக்கு நிலைமை யில் கொஞ்சம் தெளிவு ஏற் பட்டிருந்தாற் போலிருந்தது. அவன் அருகில் போய் ஆசையாக உட்கார்ந்தாள்.

"அத்தான்..." என்று அவன் தலையை வருடினாள்.

அவளுடைய கைகளை எடுத்துவிட்டு மீண்டும் தலையோடு காலாக அவளைப் பார்த்தான் அவன். பிறகு வேகமாக எழுந்து போய்க் கூடத்தை அடுத்திருந்த படுக்கை அறைக்குப் போய்ப் படுத்துக் கொண்டான். வள்ளியாத் தாள் கண்ணாடியுடன் அவனைத் தொடர்ந்து வந்து அறைக்குள் நுழைந்தாள். படுத்தாள்.

அவளுக்குத் தூக்கமே வர வில்லை. சீதை, நளாயினி, சாவித் திரி ஆகியவர்களுடைய எண்ணம் அவளுக்கு உண்டாகியது. அவ ளுடைய நெஞ்சம் விம்மிதமுற்று, அந்த உயிர்த் தெய்வங்களை எல்லாம் கோடானு கோடி முறை அஞ்சலி செய்தது.

அவளுக்கு அத்தானின் தொடர்பு இன்று நேற்று ஏற்பட்ட தொடர்பு அல்ல; அல்லது கல்யாண தினத்திலிருந்து ஆரம்பித்ததும் அல்ல. ஜன்ம ஜன்மங்களுக்கும் அவளைத் தொடர்ந்து அவன். இனியும் ஜன்மாக்கள் எல்லா வற்றிலும் தொடர்வான் என்பதில் தெய்வமே தனக்கு ஒரு தனிப்பட்ட சலுகை அளித்திருப்பாக அவ ளுக்கு அசாத்தியமான பெருமை. தெய்வமே கொடுத்திருந்த இந்தப் பெருமைக்கு ஒரு பங்கம் ஏற் படுவதென்றால் அதற்குத் தன் மனதில் ஏதாயினும் களங்கம் இருக்க வேண்டும் என்று அவள் திடமாக நம்ப ஆரம்பித்தாள்.

படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள் வள்ளியாத்தாள். அயர்ந்த நித்திரையிலிருந்த கண வனைப் பார்த்தாள்.

வள்ளியாத்தாள் கண்களில் நீர் சுரந்தது. "ஐயையோ! நான் என்னா செய்வேன்? ஒண்ணும் தோணலியே! எனக்கும் பைத்தியம் புடிச்சிடுமோ?" என்று அவள் படபடத்தாள்.

மனம் ஆண்டவன் அடியைத் தொட்டு, "ஐயா பகவானே! உங்கள் அண்டையில் என் உயிரும் என் அத்தான் உயிரும் வந்து சேரும் வரை, என் அத்தானைக் கண் ணிலே உள்ள கருமணியைப்போல வைத்துக் காப்பேன். சாவித்திரி யம்மாவுடைய தைரியத்தை எனக்குத் தரவேணும் சாமீ!" என்று வேண்டிக்கொண்டது.

எந்த இடத்தில் அவள் தவறி விட்டாள்? அவளுடைய கணவ னுக்கு நேர்ந்திருக்கிற விபத் துக்கு எந்த வகையில் அவள் காரணமாயிருந்தாள்? அவள் இழைத்த குற்றம் என்ன?

வள்ளியாத்தாள் எழுந்தாள். நேரே கூடத்துக்கு வந்தாள். நிலவு இன்னும் பிரகாசமாக இருந்த தாகப் பட்டது அவளுக்கு. வாசற் கதவைத் திறந்தாள். வெளிப்புற மாகத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, ஜில்லிட்டிருந்த தெருவில் வேக மாக நடக்க ஆரம்பித்தாள்.

பின்னிரவு ஆரம்பித்திருந்தது. லேசான பனிப் படலத்தோடு பின்னிக் கொண்டு வெள்ளியை உருக்கி ஓடவிட்டது போலிருந்த நிலவில் அந்தத் துப்புரவான கிராமப்பாதை ராஜ பாட்டையாக விளங்கியது. அவன் பக்கத்தில் இல்லாவிட்டால் நிலவின் சக்தி ஒன்றும் வள்ளியாத்தாளிடம் செல் லாது. கணவன் வரவுக்கு முன் னால் கன்னி வயதின் நெட்டுயிர்ப்பு வேண்டுமானால் நிலா மலர்ந் திருக்கும் இரவில் வெளிப்படலாம். அதுகூட அவளிடம் இருந்தது கிடையாது. வள்ளியாத்தாள், 'கன்னி வயது என்பதை நான் கண்டதேயில்லை' என்ற சாதனையின் உச்சத்தில் இருந் தாள் - ஆகவே இப்போது நிலவு என்பது அவளைப் பொறுத்த வரையில் மங்கிய வெயில்தான்.

பாதையை ஒட்டியிருந்த தாமரைக் குளக்கரையைத் தாண் டும்போது அவளுடைய வேகமான நடை கொஞ்சம் தளர்ந்தது. திடீரென்று நிலவின் சிந்தை அவள் நெஞ்சத்தில் தோன்றியது - பழைய சம்பவம் ஒன்றினோடு ஊடாடியது.

சித்திரா பௌர்ணமியொன் றில் அதே குளக்கரையில் அவன் வள்ளியாத்தாள் கைகளைப் பற்றிக்கொண்டு சொன்னான்: "வள்ளி! நீ கண்ணாடிப் பொண்ணு. இந்த நெலாலே ஒம் மொகத்திலே நான் எம் மொகத் தெத்தான் பார்க்கிறேன்... ஒங் கண்ணிலே நான்தான் தெரிய றேன்... ஓம் மனசிலே நான்தான் தெரியறேன்..." என்று காலமெல் லாம் அவனுடைய அழியாத கண்ணாடியான அவள் - அவ னுடைய முகத்தோடு அகமும் பிரதிபலிக்கும்படியான கண் ணாடியான அவள் - இப்பொழுது அவனைப் பைத்தியமாக்கி விடு வதா?

வள்ளியாத்தாள் அந்தக் குளக்கரையைத் தாண்டுவதற்காக நடையை முடுக்கினாள். பாதை யில் கிழக்கு நோக்கி ஒரு திருப்பம். காத்தாளம்மன் கோயில் வாயி லுக்கு வள்ளியாத்தாள் வந்து விட்டாள்.

மெல்லிய அகல் விளக்கின் ஒளியில் காத்தாள் அவளுக்குத் தெரிந்தாள்.

முந்தின நாள் கிருத்திகை வெள்ளியாக இருந்தது. எத் தனையோ பேர் காத்தாளம் மைக்குப் புஷ்பச் சரங்களைச் சொரிந்திருந்தார்கள். அவளைக் கவர்ந்த ஜவந்திச் சரத்தை காத் தாளம்மையின் புனிதமான கழுத்தி லிருந்து எடுத்தாள் வள்ளியாத் தாள்.

காத்தாளம்மையின் பெயர் சொல்லிக் கொண்டு அதைச் சூட்டிக்கொண்டாள்.


"அம்மா காத்தா! இந்தச் செவந்தியின் மஞ்சள் சாட்சியாகச் சொல்றேன். இந்த நிமிசத்திலிருந்து உம் மனசும் எம் மனசும் என் அத்தான் மனசோடு ஐக்கியமாகிப் போகணும்! புடிச்சா மூணு பேருக்குமே பைத்தியம் புடிக்கணும்!... ஒம் மேலே நம்பிக்கை வெச்சு இந்தப் பெரிய சோதனையெ முடிவு காணப் போறேன்!"

இவ்வளவுதான் வள்ளியாத்தாள் சொன்னாள். அவள் இதயத்தில் சுழன்று கொண்டிருந்த நினைவுகளோ - இலட்சியங்களோ - ஆயிரமாயிரம். அவ்வளவுக்கும் அவளால் வார்த்தைகளினாலே விரிவுரை நிகழ்த்த முடியவில்லை. அவை தெளிவாகவும் ஒன்றன் பின் ஒன்றாகவும் அவள் நெஞ்சத்தில் தோன்றவில்லை. மேலெழுந்தவாரியாகப் பார்க்கப் போனால் அவளுடைய மனதின் வழியே அவனுடைய மனதின் வருகையைத்தான் அவள் காத்தாளம்மையிடம் வேண்டிக் கொண்டாள். தெய்வத்தின் நியாயமான தீர்ப்புக்கு அன்றைய இரவு விடிகிற வரைக்கும்தான் அவகாசம் கொடுத்திருந்தாள். நம்பிக்கை, அழியாத உருவமாக அவளுடைய மனதில் பதிந்திருந்தது.

திரும்பி வெகு வேகமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் வள்ளியாத்தாள்.

நடுவில் குளக்கரை. அவள் மனம் கொஞ்சம்போது சலித்தது. ஆனால் திடம் அவளுக்குச் சமாதானத்தை உடனே அளித்து விட்டது. "அத்தானுக்கு உயிர்க் கண்ணாடி நான்தான். - நேற்றா, இன்றா, நாளையா? - என்றைக்குமேதான்!. அவளைத் தொடர்ந்து வந்த நிழலைக்கூட அகற்றி விடலாம் - அவனை அகற்றிவிட முடியாது. விடுவிடுவென்று நடந்தாள்.

வீட்டுக் கதவைத் திறந்து உட்புறம் தாழிட்டாள். இருளடர்ந்த கூடத்துக்கு வந்தாள். ஆச்சரியத்தால் மலைத்து நின்றுவிட்டாள். முற்றத்தின் ஓரத்தில், கூடத்து மேடையில் உட்கார்ந்து கொண்டு கால்களை நிலவில் தோய விட்டுக் கொண்டிருந்தான் அவன்.



"அத்தான்!"

"வள்ளியாத்தா! வந்திட்டியா? எங்கே போயிட்டியோன்னு பயந்திட்டேன் புள்ளே!" என்று அவன் வெகு பரிவாகச் சொன்னான்.

துள்ளிக் கொண்டு அவன் அருகில் போனாள் வள்ளியாத்தாள். பின்னிரவு நிலவு இன்னும் பிரகாசமாகியிருந்தது.

வள்ளியத்தாளால் பேச முடியவில்லை.

"என்ன புள்ளே, ரொம்பப் பயந்திட்டியோ? ராவு ஜீரணம் சரியாயில்லே! அது என்னமோ ஒரு கிறக்கம்... அதெ மறந்துடு வள்ளி..." என்றான் அவன் மிகவும் சன்னமானதும் ஆனால் அழுத்தமானதுமான குரலில்.

அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு, மறுபடியும், "அத்தான்" என்றாள். துல்லியமான நிலவில், அவளுடைய பட்டுப் போன்ற அதரங்களில் தெறித்து விழுந்த கண்ணீரை வெகு நன்றாகப் பார்த்துக் கொண்டே எழுந்தான் அவன்.

"வள்ளி... எங்கே போனாய்? கோயிலுக்கா? இதுக்காவ கோயிலுக்கு ஓடணுமா?"

"அத்தான்... காத்தாளம்மைக்கு நாளை பொங்கல் படைக்கணும். அத்தான்... அத்தான்..." என்று அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, மனதின் ஆனந்தத்தையெல்லாம் கண்ணீராக வெளிப்படுத்தினாள் வள்ளியாத்தாள்.

நிலவின் ரகசியத்தைத் தொட்ட அவன், அதை உணராமல் அதை மறந்து, வள்ளியாத்தாளையும் அதை மறக்கும்படி செய்ய முனைந்தான்.

"இங்கே வா புள்ளே" என்று அவளை அணைத்தபடி கூடத்தைக் கடந்து உள்ளே சென்றான்.

அந்த நிலவு எதிர்பார்த்துக் காத்திருந்தது.

ஆமாம். விடியற்காலையை எதிர்பார்த்துத்தான்.

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் !


When you come to the Rock City, Tiruchirapalli,

A warm welcome awaits you at

Abbirami Hotels.

For a change, be with us
for Economy and Convenience,
Experience your stay at
Abbirami Hotels.
Our rich hospitality and service
would want you to stay
with us forever.

Phone : 31635 - 29819



Abbirami
HOTELS (P) LTD
10, MacDonald's Road, Tiruchirapalli-620 001.

Come and Experience it yourself
(VASANTA BHAVAN A/C. DELUXE RESTAURANT WITH SOUTH INDIAN, NORTH INDIAN, CUISINE.)

Phone : 40001 (10 Lines) Tel : VASANTHAM

நேரிலேயே காணலாம்!
சிறந்த சேவை!
மிகுந்த சுகம்!

அபிராமி ஹோட்டல்

(வசந்தபவன் ஸ்தாபனத்தைச் சார்ந்தது.)

வியாபார துறையினருக்கும் உல்லாசப் பிரயாணிகளுக்கும் மிகச் சிறந்த தங்குமிடம். நகரப் பேருந்து நிலையத்திற்கு அடுத்தும், ரயில் நிலையம் அருகிலும் உள்ளது. குளியல் அறை வசதியோடு கூடிய ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அறைகள். (டி.வி. காட்சிகளைக் கண்டு களிக்கலாம்).

மிகப்பணிவன்புடன் கூடிய சேவை. ருசி மிகுந்த சைவ உணவு வகைகள். சௌகரியமாக சாமான்கள் வாங்க வசதியாக கடைகள் உள்ளன. கார்களை நிறுத்த அதிகமான இடவசதி.

ஐஸ்வரியா கல்யாண மண்டபம்

குளு குளு வசதியுடன் கூடிய சிறிய 'கான்ஃபரன்ஸ்' ஹால், லிஃப்ட் வசதி, சங்கீதத்தைக் கேட்டு ரசிக்க வசதிகள் உள்ளன.

10, மெக்டெனால்ட் ரோடு,
பஸ் ஸ்டாண்ட் எதிரில்,
திருச்சி - 1.

போன் : 40001 (10 Lines)

- நல்ல உயர்தரமான உணவு !
- நல்ல சுத்தம், சுகாதாரம் !!
- நல்ல உபசரிப்பு !!!
- வாடிக்கையாளர்களுக்கு நல்ல சேவை !!!!
- நல்ல உயர்தரமான ஸ்வீட் வகையறா !!!!!

இவைகள் நாங்கள் எல்லோருக்கும் செய்யும் சேவை.
இதுவே எங்களது இலட்சியம்

வஸந்தபவன் A/C.

ரெஸ்டாரெண்ட்

24, N. S. B. ரோடு, திருச்சி-2. ★ எக்மோர், சென்னை-3.

- நாககந்திரம்

என் முதல் பேச்சு

பா. நமசிவாயம் எம்.ஏ.

நான் என் பன்னிரண்டாவது வயதில் பேசத் தொடங்கிவிட்டேன். அதுவரை ஊமை என்றோ என் தந்தை திருச்செந்தூர் முருகப் பெருமான் திருக்கோயிலில் விரத மிருந்து அமுது வேண்டி - அதாவது குமரகுருபரரின் வரலாறு மாதிரி - நான் பேசத் தொடங்கினேன் என்றோ யாரும் வீணாகக் கற்பனை செய்து அவசியமில்லாமல் சிரமப்பட வேண்டாம். பன்னிரண்டாம் வயதில் நான் எட்டாம் வகுப்பு படிக்கிறபோது பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு முதன் முதலாக மேடையில் பேசத் தொடங்கினேன். நான் படித்ததோ நெல்லை இந்து கல்லூரி உயர்நிலைப் பள்ளியில். மகாகவி பாரதியார் எந்தப் பள்ளியில் படித்தாரோ அதே பள்ளி. அன்றையப் பேச்சுப் போட்டியின் தலைப்பும் பாரதியாரைப் பற்றியதுதான். நெல்லை மாவட்ட அளவில் நடை பெற்ற போட்டி. இதில் நான் கலந்து கொள்வேன் என்று கனவுகூடக் கண்டதில்லை. எங்கள் பள்ளியின் சார்பாகப் பேச வேண்டிய மாணவனின் பாட்டி போட்டிக்கு மூன்று தினங்களுக்கு முன்னால் திடீரென்று போய்ச் சேர்ந்து விட்டாள். அவளது மரணம் என் பேச்சுலக வாழ்க்கையின் ஜனனமாகுமென்று யார் கண்டது?

தலைமையாசிரியர் என்னைக் கூப்பிட்டு, "நீதான் நம் பள்ளியின் சார்பாகப் போட்டியில் கலந்து கொள்ளப் போகிறாய்" என்று சொன்னவுடன் எனக்குச் சர்வ நாடியும் அடங்கி விட்டது.

"சார்! எனக்கு மேடையேறிப் பழக்கமில்லை. தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்" என்று எவ்வளவோ கெஞ்சினேன்.

தலைமையாசிரியர் விடவில்லை. "நீ ஒன்றும் கவலைப்படாதே! உன்னால் முடியும் தம்பி" என்ற பாணியில் என்னை உற்சாகப் படுத்தினார்.

ஏதோ பலி பீடத்துக்கு இழுத்துச் செல்லப்படும் ஆட்டைக் கோயில் பூசாரி தட்டிக் கொடுக்கும் நினைவுகள் என்னை ஆட்டிப் படைத்தன. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

"உடனே தமிழாசிரியரைப் போய்ப்பார்" இது தலைமையாசிரியரின் கட்டளை.

தமிழாசிரியர் என் கையில் ஆறு பக்கத்துக்கு என் பேச்சை எழுதி வைத்திருந்தார். என் கையில் கொடுத்தார். பாராமல் படித்தேன். இரண்டு தினங்கள் நடக்கும் போதும் சாப்பிடும் போதும் என் உள் மனம் அந்த ஆறு பக்கங்களையே முற்றுகையிட்டுக் கொண்டிருந்தது.

வாராதிருக்கக் கூடாதா என்று எண்ணிய அந்த நாள் வந்து விட்டது. தடபுடலான ஏற்பாடுகள். மண்டபம் நிரம்பி வழிகிறது. எனக்கோ பயம். முகத்தில் அசடு வழிகிறது என்பதை நானே உணர்கிறேன். ஓர் ஆசிரியர் என்னிடம் வந்து கையிலிருந்த பேனாவை நீட்டி, "அடுத்து நீதான் பேச வேண்டும்" என்றார். உரலில் தலை கொடுத்து விட்டோம். உலக்கைக்குத் தப்ப முடியுமா?

மேடையிலே ஏறிவிட்டேன். முன்னாலே மூன்று பேர் உட்கார்ந்து கொண்டு மதிப்பெண்கள் போடுகிறார்கள். அவர்கள் நீதிபதிகளாம். நான் குற்றவாளியைப் போல் நிற்பதால் அவர்கள் நீதிபதிகளா? அட ஆண்டவனே! இப்படி ஒரு சோதனையா? உள்ளே நடுக்கம். வெளியே காட்டிக் கொள்ளாமல் சமாளித்துக் கொண்டு பேசிக் கொண்டே வந்தேன். ஐந்தாவது பக்கத்தில் நிற்கிறேன். என் ஆசிரியர், பாரதியார் பற்றி ஆறு பக்கம் எழுதிக் கொடுத்துள்ளாரே!

பாரதியார் மரணப்படுக்கையில் இருக்கிறார். இதுதான் ஐந்தாவது பக்கத்தில் உள்ளது. நான் அழுதுவிட்டேன். அடக்க அடக்க அழுகை மேலும் பொங்கிக் கொண்டு வருகிறது. அழுது கொண்டே ஒரு வழியாகப் பேசி முடித்துவிட்டேன்.

மூன்று நடுவர்களில் மூத்தவர் போட்டியின் முடிவைச் சொல்வதற்காக எழுந்து நின்றார். எனக்கு முடிவைப் பற்றியெல்லாம் கவலையில்லை. எப்படியோ அந்த ஆறு நிமிடங்களை மேடையில் நின்று பேசிக் கழித்தேனே! அதுவே போதும் என்ற நினைப்பில் ஒரு மணி நேரம் கடந்த பிறகும் உள்குடு



எழுக என் நாடே!

புலவர் வரத கோவிந்தராசன் எம்.ஏ.,

எழுகயென் நாடே வெற்றி
எழுச்சிப் பண் பாடிக் கொண்டே

எழுகதிர் கிழக்கு வானில்
எழுந்தனன், இருளின் ஆட்சி
ஒழிந்தது, உயிர்க்கு லங்கள்
உவகையால் வாழ்த்துப் பாடித்
தொழுதன, தீமை யெங்கும்
தொலைந்தது, வேற்று மைப்பேய்
விழுந்தது, ஒற்றுமையாய்
விளங்கினர் நாட்டோர் என்று (எழுகயென்)

அறிவினில் மூத்தோர் நாடே
ஆன்றோர்கள் மிகுந்த நாடே
குறியெதிர்ப்பை நோக்கா தீயும்
கொடையாளர் மலிந்த நாடே
நெறியினில் வழுவாச் சான்றோர்
நிருபித்த புனித நாடே
வறியவர் உடையோர் என்னும்
வரலாறு ஒழிந்த தென்றே (எழுகயென்)

அழுகையை விரட்டிப் போக்கி
ஆர்வத்தை உளத்தில் தேக்கி
விழுதென ஊன்றிக் காலை
வெற்றியின் உச்சி நோக்கிப்
பழுதிலாப் புதிய தாமோர்
பாரத நாட்டை ஆக்கி
எழுதுவோம் புதிய அத்தி
யாயத்தை இன்றே என்றே (எழுகயென்)

தாய்நாடே நீஉயர்ந்தால்
தழைப்பதுன் மக்களன்றோ!
தாய்நாடே நீசிதைந்தால்
தவிப்பதுன் சேய்க ளன்றோ!
ஓய்வேது உறக்க மேதுன்
உறுபுகழ் ஓங்கச் செய்ய
ஆயிரம் வேள்விக் கேநான்
ஆகுதி ஆவேன் தாயே! (எழுகயென்)

தணியாமல் உள்ளே நிலவிய படபடப்புக் குறையாமல் நடுவரின் தீர்ப்பைக் கேட்டுக் கொண்டிருந்தேன். நடுவர் பேசினார்.

"இந்தப் பேச்சுப் போட்டி மகாகவி பாரதியின் நினைவு நாளையொட்டி நடத்தப்பட்டதென்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். இந்த மாவட்டத்திலிருந்து முப்பது மாணவர்கள் கலந்து கொண்டார்கள். எல்லாச் சிறுவர்களுமே நன்றாகவே பேசினார்கள். என்றாலும் ஒரு பையன் பாரதியார் மரணப்படுக்கையில் கிடந்து மரணத்தோடு போராடிய காட்சியை எடுத்துச் சொல்லும் போது பேச்சோடு ஒன்றி அவலமே உருவமாக நின்று அழுது கொண்டே பேசியது எங்களை எல்லாம் நெகிழச் செய்துவிட்டது. அவனுக்கே முதற்பரிசு" என்றார். அவன் வேறு யாருமில்லை. நான்தான்.

முடிவை அறிவித்தவுடன் என் நண்பர்கள் ஓடிவந்து என்னை ஒரே தூக்காகத் தூக்கினார்கள். மாலை மரியாதைகள் நடைபெற்றன.

ஆனால் உண்மையான ரகசியத்தை என் உயிர் நண்பன் ஒருவனிடம் மட்டும் சொன்னேன். அதுவும் இதனை வேறு யாரிடமும் சொல்லி விடாதே என்று சத்தியம் வாங்கிக் கொண்டு சொன்னேன்.

"டேய்! நான் அழுததற்காக எனக்கு இப்பரிசைத் தந்துவிட்டார்கள். ஆனால் நான் அழுதது ஏன் தெரியுமா? மேடை அச்சத்தால் பயந்துபோய் என்னையும் அறியாமல் நான் அழுதேன். ஏதோ பொருத்தமாக அந்த நேரத்தில் மகாகவி பாரதியார் சாவோடு போராடும் சந்தர்ப்பம் வந்து அமைந்தது. நம் தமிழாசிரியர் ஐந்தாவது பக்கத்தில் பாரதியாரும் அவர் துணைவியாரும் மகிழ்ச்சியாகக் கடையத்தில் ஒரு சோலையில் குலவி இருந்தார்கள் என்று எழுதிக் கொடுத்திருந்தால் அதனையும் அழுது கொண்டுதான் சொல்லியிருப்பேன். அப்படி ஒரு வேளை அவர் எழுதியிருந்தால் நடுவர் "கணவனும் மனைவியும் மகிழ்ச்சியோடு வாழ்வதை அழுது கொண்டே சொல்லும் இவனுக்கா பரிசு?" என்று என்னை ஒதுக்கியிருப்பார்கள். எல்லாம் விதியின் விளையாட்டு" என்றேன்.

என் பன்னிரண்டாம் வயதில் சற்றும் எதிர்பாராத விதமாக மேடையில் முதன் முதலில் பேசத் தொடங்கிய நான் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து பேசி வருகிறேன். அதிலும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பல இலக்கிய மேடைகள் என்னை அன்புடன் அழைக்கின்றன. பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டேனே தவிர மேடைப் பேச்சிலிருந்து ஓய்வு பெற அன்பர்களின் அனுமதி கிடைக்கவில்லை.

இப்பொழுது நினைத்தாலும் வியப்பாக உள்ளது. என் வாழ்க்கைப் பாதையை எப்படியெல்லாம் என் தமிழாசிரியர், தலைமை ஆசிரியர் என் நண்பர்கள் மாற்றி விட்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக எனக்கு உரிய நேரத்தில் வந்து உதவிய அழுகையை நினைத்தால் சிரிப்பு வருகிறது. மகாகவி பாரதியார் - அவர் படித்த பள்ளி மாணவன் என்பதாலோ என்னவோ - மரண வேதனையை அனுபவித்துக் கருணையோடு ஒரு சிறுவனை இலக்கியப் பேச்சுலகத்துக்கு இழுத்துவிட்டாரா? புரியவில்லை.

நான் பேசிய முதல் பேச்சை இன்று நினைக்கும்போது "ஆருயிர் முறைவழிப் படூஉம்" என்ற கணியன் பூங்குன்றனாரின் வாழ்வியல் தத்துவம் எவ்வளவு உண்மையானது என்பது எனக்கு நன்றாகவே புரிகிறது.

ஃ